# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படியான ஆறாவது
சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்

1978, மார்ச், 6, 7, 8, 9, 10-ஆம் நாட்கள்

(தொகுதி XIV—எண்கள் 1 முதல் 5)

© தமிழ் நாடு அரசு
1978

சட்டமன்றப் பேரவைத் துறை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009
1]

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் அட்டவணை

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் படியான ஆறுவது**
**சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்**

*1978, மார்ச், 6, 7, 8, 9, 10-ஆம் நாட்கள்*

(தொகுதி XIV—எண்கள் 1 முதல் 5)

©
தமிழ் நாடு அரசு
1978

சட்டமன்றப் பேரவைத் துறை
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை-600 009
1]

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்.

---

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது
சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர்.

---

*1978 மார்ச் 6, 7, 8, 9, 10 ஆம் நாட்கள்.*

(தொகுதி 14—எண்கள் 1 முதல் 5).

**உள்ளடக்கம்**

**திங்கட்கிழமை, 1978, மார்ச் 6.**

---


| | பக்கங்கள். |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. .. .. .. | i—vi |
| (ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. | vii |
| (iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர் பட்டியல் .. .. .. | viii—xvi |
| 1. வினாக்கள்—விடைகள் .. .. .. | 1—36 |
| 2. தகவல் கோரல்— | |
| முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும் இலாக்காக்கள் தொடர்பான கேள்விகள் எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து. | 37—41 |
| 3. அமைச்சரின் அறிக்கை— | |
| மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதம் குறித்து .. .. | 42—4 |

| வெள்ளிக்கிழமை, 1978, மார்ச் 10 | பக்கங்கள். |
| --- | --- |
| 1. வினாக்கள்—விடைகள் .. .. .. | 889—927 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) பெரியார் அஞ்சல்தலை வெளியிடுவதில் தாமதம் குறித்து .. .. .. | 928—930 |
| (ஆ) வினா விடை நேரம் முடிந்தவுடன் எதிர் கட்சித் தலைவர் எழுப்பிய பிரச்சினை குறித்து .. .. .. .. | 929—930 |
| 3. அறிவிப்பு— | |
| பேரவை அலுவல் குறித்து .. .. | 930—931 |
| 4. 1978-79ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். | 931—939 |
| (அ) கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன .. | 941–1047 |
| (ஆ) கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. | |
| 5. ஒழுங்கு பிரச்சினை— | |
| கோட்டை நுழைவாயில்களில் நிறுத்தப் பட்டிருக்கும் வெளி மாநில காவலர் உறுப்பினர்களைத் தடுத்ததாகக் கூறப் படுவது குறித்து .. .. .. | 940—941 |
| 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 1048 |


## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையை (Index) பயன் படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப்பெறுகின்றன. துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக் காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க. ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ. தீ.) என்று போடுவது ஒத்தி வைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே இவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் ''சட்ட முன்வடிவு'' என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், உள்ளாட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)' 'உள்ளாட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத் தலைப்பின் கீழ் கொடுக்கப் பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் ''தலைவர்'' என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்றுள்ளது.

| | | |
| --- | --- | --- |
| அ | : | அறிக்கை. |
| அறிவி. | : | அறிவிப்பு. |
| அ.வி. | : | அரைமணி விவாதம். |
| கு.வி. | : | குறுகிய கால விவாதம். |

பக்கங்கள்

## புதன்கிழமை, 1978, மார்ச் 8.


1. வினாக்கள்—விடைகள் .. .. .. 445—4

2. தகவல் கோரல்—
   அரசிதழ் பதிவில்லா ஊழியர்களின் வேலை நிறுத்தம் குறித்து .. .. .. 485—49

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—
   இராமநாதபுரம் மாவட்டத்தில் பதவி இறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்களை மீண்டும் தமிழாசிரியர் பதவி புரிய வேண்டி தலைமைச் செயலகத்திற்கு முன்பு நடக்கவிருக்கும் உண்ணா நோன்பு குறித்து .. .. .. .. 491—49

4. அமைச்சரின் அறிக்கைகள்—
   (அ) 9-1-1978ஆம் நாளன்று ஒரு துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சரின் திருத்த அறிக்கை .. .. .. .. 49
   (ஆ) அரசிதழ் பதிவில்லா ஊழியர்களின் கோரிக்கைகளை அமைச்சரவை பரிசீலிக்க இருப்பது குறித்து பொதுப் பணித் துறை அமைச்சரின் அறிக்கை 575

5. கவன ஈர்ப்பு—
   முதுகுளத்தூர் தாலுகா, சாயல்குடி கிராமம், காந்தி நகர், வி. வி. ஆர். காலனியில் வீடுகள் தீப்பற்றி எரிந்ததால் ஏற்பட்ட சேதம் குறித்து .. .. .. 492—94

6. 1978-79ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—
   (அ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் .. ..
   (ஆ) கோரிக்கை எண் 20—வேளாண்மை ..
   (இ) கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு ..
   } 494—575

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 576




பக்கங்கள்.

## வியாழக்கிழமை, 1978, மார்ச் 9.


1. வினாக்கள்—விடைகள் .. .. .. 627—668

2. தகவல் கோரல்—
   கவன ஈர்ப்பு அறிவிப்பு எடுத்துக்கொள்ளப் படாதது குறித்து .. .. .. 668—669

3. கவன ஈர்ப்பு—
   ஏற்றுமதி செய்யும் பருத்தித் துணியின் அளவினை நிர்ணயித்து பிறப்பிக்கப்பட்ட ஆணையும், அதன் விளைவுகளும் குறித்து. 669—671

4. அரசினர் தீர்மானம்—
   தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு தேர்தல் .. .. .. .. 671—672

5. அறிவிப்பு—
   தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு தேர்தல் .. .. .. .. 672—673

6. 1978-79ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்— (தொடர்ச்சி)
   (அ) கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் ..
   (ஆ) கோரிக்கை எண் 33—வீட்டுவசதி ..
   (இ) கோரிக்கை எண் 49—பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு ..
   } 673—770

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் .. 770

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu*

## THIRU PRABHUDAS PATWARI.

*Members of the Council of Ministers.*

1. THE HON. THIRU M. G. RAMACHANDRAN (Chief Minister).—Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption, Industries, Bhoodan & Gramdan, Ex-Servicemen, Mines & Minerals and Rural Industries Project.

2. THE HON. THIRU K. MANOHARAN (Minister fc Finance).—Finance, Planning, Commerical Taxes and Excise Revenue and Legislature.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister fo Public Works).—Public Works, Minor Irrigation including Specia Minor Irrigation Pogramme Works, Iron & Steel Control anc Electricity.

4. THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR (Minister for Law).—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on money lending, Legislation on Chits and Registration of Companies.

5. THE HON. THIRU G. R. EDMUND (Minister for Food).—Food, Food Production, Co-operation, Fisheries, Registration, Forest including Cinchona, Youth Service Corps and Price Control.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN (Minister for Information and Tourism).—Information and Publicity, Film Technology. Tourism and Tourism Development Corporation and Cinematograph Act.

7. THE HON. THIRU C. ARANGANAYAGAM (Minister for Education).—Education including Technical Education, Official Language and Employment & Training.

8. THE HON. THIRU K. KALIMUTHU (Minister for Local Administration).—Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness.

9. THE HON. THIRU S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply & Drainage Board and Town Planning.

10. THE HON. THIRU P. SOUNDARAPANDIAN (Minister for Harijan Welfare).—Harijan Welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes and Bonded Labour.

11. THE HON. THIRU C. PONNAIYAN (Minister for Transport).—Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

12. THE HON. SELVI P. T. SARASWATHI (Minister for Social Welfare).—Social Welfare including Women and Children's Welfare, Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indian Overseas and Refugees, Evacuees and Correctional Administration.

13. THE HON. THIRU P. KOLANDAIVELU (Minister for Agriculture).—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering Wing, Milk, Dairy Development Corporation and Operation Flood Project.

14. THE HON. THIRU K. RAJA MOHAMMED (Minister for Handlooms and Textiles).—Accommodation Control, News Print Control, Agro-Service Co-operative Societies at Block, District and Apex Level including Federation, Wakfs, Textiles, Yarn, Handloom and Khadi and Village Industries.



## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

**பேரவைத் தலைவர்.**

**மாண்புமிகு திரு. முனு ஆதி.**

பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

**மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.**

1. திரு. கே. பண்ணை சேதுராம்.
2. திரு. ஆர். முத்தையா.
3. திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா.
4. திரு. கே. கே. முத்தையா.

**சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.**

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

**துணைச் செயலாளர்.**

திரு. த. இராதாகிருஷ்ணன்.

**குழு அலுவலர்.**

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஹானர்ஸ்).

**சார்புச் செயலாளர்கள்.**

திரு. வி. சீதாராமன், பி.காம்.
திரு. பி.எம். பத்மனுபன் நம்பியார், பி.ஏ.
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.

**விவாதப் பதிப்பாளர்.**

திரு. கே. சுந்தரராசன்.

**தலைமை நிருபர்.**

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

**எஸ்டேட் அதிகாரி.**

திரு. கே. பாலகுரு. பி.ஏ.

| | | |
|---|---|---|
| பொ. வி. | : | பொது விவாதம். |
| ஆ. உ. | : | ஆளுநர் உரை. |
| உ. பி. | : | உரிமைப் பிரச்சினை. |
| ஒ. பி. | : | ஒழுங்குப் பிரச்சினை. |
| க. ஈ. | : | கவன ஈர்ப்பு. |
| க. ஈ. அ. | : | கவன ஈர்ப்பு அறிக்கை. |
| ச. அ. நி. | : | சட்ட முன்வடிவின் அறிமுகநிலை. |
| ச. ஆ. நி. | : | சட்ட முன்வடிவின் ஆய்வு. நிலை—இந்நிலையில், (1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பெறும் தீர்மானம், (2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம். (3) சுற்றுக்கு அனுப்பப்பெறுவதற்கான திருத்தம். (4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கான தீர்மானம். (5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன. |
| ச. பிரி. ஆ. | : | சட்ட முன்வடிவு—பிரிவுவாரியாக ஆய்தல். |
| ச. பே. | : | சட்டமன்றப் பேரவை. |
| ச. மே. | : | சட்டமன்ற மேலவை. |
| த. கோ. | : | தகவல் கோரல். |
| த. வி. | : | தன்னிலை விளக்கம். |
| தீ. | : | தீர்மானம். |
| உ. தீ. | : | உரிமைத் தீர்மானம். |
| ஒ. தீ. | : | ஒத்திவைப்புத் தீர்மானம். |
| த. தீ. | : | தனித் தீர்மானம். |
| து. மா. கோ. | : | துணை மானியக் கோரிக்கை. |
| மி. மா. கோ. | : | மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை. |
| பே. அ. | : | பேரவையின் அலுவல். |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆளுகைப் பணியாளர், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், தேர்தல்கள், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, நலவாழ்வு, மருந்துகள், அறநிலையத் துறை, இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், பூமிதானம்—கிராமதானம், முன்னாள் இராணுவத்தினர், சுரங்கம்-கனிவளம், ஊரகத் தொழில் நிறுவனத் திட்டங்கள்.

2. மாண்புமிகு திரு. கி. மனோகரன் (நிதித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—நிதி, திட்டம், வணிகவரிகள், ஆயத்துறை, வருவாய், சட்டமன்றம்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணி, சிறப்புச் சிறு பாசனத் திட்ட வேலை உட்பட்ட சிறு பாசனங்கள், இரும்பு—எஃகுக் கட்டுப்பாடு, மின்சாரம்.

4. மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் (சட்டத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 55 காமலி, திரு டி.கே. .. | மயிலாப்பூர். |
| 56 கா[illegible]மாணிக்கம் அம்பலம், திரு. கரு.[illegible]. | திருவாடானை. |
| 57 கருணாகிரி முத்தையா, திரு. க. | மருங்காபுரி. |
| 58 கருணாநிதி, திரு. மு. .. | அண்ணா நகர், சென்னை. |
| 59 கருணாநிதி, திரு. [illegible] மு. மு. .. | திருவாரூர் (செ.வ.) |
| 60 கருணாமூர்த்தி, திரு. [illegible]. .. | ஜெயங்கொண்டான். |
| 61 கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. | ஆலங்குளம். |
| 62 [illegible], திரு. [illegible]. .. | [illegible]. |
| 63 [illegible], திரு. [illegible]. | தொட்டியம். |
| 64 காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்). | திருப்பரங்குன்றம். |
| 65 காளியப்பன், திரு. [illegible]. .. | காரைக்குடி. |
| 66 காளியப்பன், திரு. இரா. .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 67 கிட்டப்பா, திரு. என். .. | [illegible]. |
| 68 கிட்டு, திரு. ப.கோ. .. | பல்லடம். |
| 69 கிருஷ்ணன், திரு. பி.எம். .. | பாலக்கோடு. |
| 70 கிருஷ்ணன், திரு. [illegible]. .. | கன்னியாகுமரி. |
| 71 கிருஷ்ணன், திரு. நா. .. | ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.) |
| 72 கிருஷ்ணன், திரு. பி. .. | விழுப்புரம். |
| 73 கிருஷ்ணன், திரு. [illegible]. .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 74 குப்புசாமி, திரு. என். .. | பெரம்பூர். |
| 75 குருசாமி, திரு. ப. .. .. | ஆண்டிபட்டி (செ.வ.) |
| 76 குழந்தைவேலு, மாண்புமிகு திரு ப. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 77 கோதண்டராமன், திரு. வி.கே. | குடியாத்தம். |
| 78 கோதண்டராமன் என்கிற முசிறி புத்தன், திரு. பி. | முசிறி. |
| 79 கோபாலன், திரு. சோ. .. | உதகமண்டலம். |
| 80 கோவிந்தராசன், திரு. ஓ. .. | நெல்லிக்குப்பம். |
| 81 கோவிந்தன், புலவர் கா. .. | செய்யாறு. |
| 82 கோவேந்தன், திரு. பு.பெ. .. | பேராவூரணி. |
| 83 சங்கரய்யா, திரு. என். .. | மதுரை கிழக்கு. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 84 சண்முகம், திரு. கா.ந. .. | லால்குடி. |
| 85 சண்முகம், திரு. ப. உ. .. | திருவண்ணாமலை. |
| 86 சண்முகம், திரு. ஆர். .. | திருத்தணி. |
| 87 சண்முகம், திரு. கூத்தகுடி, ச. | திருப்பத்தூர். |
| 88 சதாசிவம், திரு. செ. .. | அரவக்குறிச்சி. |
| 89 சந்திரசேகரன், திரு. ஆர். .. | கம்பம். |
| 90 சந்திரன், திரு. ப. .. .. | பேரணாம்பட்டூர். |
| 91 சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ. | தியாகராயநகர், சென்னை. |
| 92 சமரசம், டாக்டர். கே. .. | காவேரிப்பட்டிணம். |
| 93 சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி.. (அமைச்சர்). | திருமங்கலம். |
| 94 சவுந்திரராஜன், திரு. ரெ.வீ. | பாபநாசம். |
| 95 சாதிக் பாட்சா, திரு. எஸ்.ஜே. | ஆயிரம்விளக்கு, சென்னை. |
| 96 சாது செல்வராஜ், திரு. கோ. | ஸ்ரீவைகுண்டம். |
| 97 சாமிக்கண்ணு, திரு. தா. .. | செங்கம் (செ.வ.). |
| 98 சிகாமணி, திரு. பொ. .. | திருவொற்றியூர். |
| 99 சிவசாமி, திரு. செ. .. .. | இளையாங்குடி. |
| 100 சிவபெருமான், திரு. மு. .. | ஓமலூர். |
| 101 சின்னசாமி, திரு. வ. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 102 சின்னசாமி, திரு. வி.கொ. .. | பவானிசாகர். |
| 103 சின்னய்யா, திரு. வீ. .. | குளத்தூர் (செ.வ.) |
| 104 சின்னராசு, திரு. க.இரா. | திருவெண்ணெய்நல்லூர் |
| 105 சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ. | குளித்தலை |
| 106 சுந்தரம், திரு. ப. .. .. | திருப்பத்தூர். |
| 107 சுந்தரம், திரு. மு. .. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 108 சுந்தரராஜன், திரு. மு. .. | விருதுநகர். |
| 109 சுந்தரராஜ், திரு. நா. .. | திருமயம். |
| 110 சுப்பராயன், திரு. என். .. | பனைமரத்துப்பட்டி. |
| 111 சுப்பிரமணியம், டாக்டர், திரு. சு. | உத்திரமேரூர். |
| 112 சுப்பிரமணியம், திரு. கே.ஜே. | போளூர். |
| 113 சுப்பிரமணியம், திரு. ஆர்.சி. | கடலாடி. |

5. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீன் வளம், ஆவணப் பதிவுத் துறை, சிங்கோனு உள்பட வனங்கள், இளைஞர் அணி விலைக்கட்டுப்பாடு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி விளம்பரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்ப வியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், சமுதாய வளர்ச்சி.

9. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு.



10. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அரிசன நலம், பிற்பட்ட வகுப்பினர், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

11. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்கு வரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறை முகங்கள்.

12. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

13. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியல் பிரிவு, பால், பால் வள நிறுவனம், பால் பெருக்குத் திட்டம்.

14. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (கைத்தறி ஆலைத் துணிகள் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—இடவசதிக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, கூட்டமைப்பு உள்ளிட்ட வட்டார மாவட்ட தலைமை இடம் சார்ந்த வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், வக்ப், நெசவு, நூல், கைத்தறி, கதர், கிராமத் தொழில்கள்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 114 சுப்பிரமணியம், திரு. டி. | ஆண்டிமடம். |
| 115 சுப்பிரமணியன், திரு. ஓ. | சிவகங்கை |
| 116 சுப்பிரமணியன், திரு. மா. | சின்னசேலம். |
| 117 சுப்பிரமணியன், திரு. வ.மு. | மானாமதுரை (செ.வ.) |
| 118 சுப்பிரவேலு, திரு. கே. | சீர்காழி (செ.வ.). |
| 119 சுப்பு, திரு. க. | வில்லிவாக்கம். |
| 120 சுப்புலட்சுமி, மாண்புமிகு திருமதி | மொடக்குறிச்சி. |
| 121 சுப்பையா, திரு. ச. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 122 சுவாமிநாஸ், திரு. அ. | பத்மநாபபுரம். |
| 123 செங்கோடன், திரு. கா. | கபிலமலை. |
| 124 செங்கோட்டையன், திரு. கு.அ. | சத்தியமங்கலம். |
| 125 செல்லப்பன், திரு. ஏ. | வலங்கைமான் (செ.வ.) |
| 126 செல்வராசன், திரு. அ. | துறைமுகம், சென்னை. |
| 127 செல்வராஜ், திரு. சீனி. | சமயநல்லூர் (செ.வ.). |
| 128 செல்வராஜ், திரு. மு. | குறிஞ்சிப்பாடி. |
| 129 சொக்கலிங்கம், திரு. கெ. | திருப்போரூர் (செ.வ.). |
| 130 சோமசுந்தரம், திரு. ஒ.ப. | பொள்ளாச்சி. |
| 131 சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்). | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 132 சௌந்திரராசன், திரு. கே. | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 சௌந்திரராஜன், திரு. மு.ரா. | பவானி. |
| 134 சௌந்திரராஜன், மாண்புமிகு திரு. திருச்சி ஆர். | ஸ்ரீரங்கம். |
| 135 ஞானசிகாமணி, திரு. தே. | விளவங்கோடு. |
| 136 தங்கவேலு கவுண்டர், திரு. பொ. | மேலமலையனூர். |
| 137 தங்கவேல், திரு. ர.ச. | வால்பாறை (செ.வ.) |
| 138 தண்டபாணி, திரு. பா.க.சு. | காங்கேயம். |
| 139 தமிழரசன், திரு. இ. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 140 தனசேகரன், திரு. ந. | தூத்துக்குடி. |
| 141 தனபால், திரு. ப. | சங்கரி (செ.வ.). |
| 142 தனுஷ்கோடி, திரு. கோ. | ராஜபாளையம் (செ.வ.). |



| தொடர் எண்ணும்; உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 143 தாமரைக்கனி, திரு. இரா. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 144 திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத் தலைவர்). | அறந்தாங்கி. |
| 145 திருவேங்கடம், திரு. பே.சு. | கலசப்பாக்கம். |
| 146 துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்கத் தலைமைக் கொறடா). | திருவோணம். |
| 147 துரைசாமி, திரு. ப. | ராசிபுரம். |
| 148 துரை முத்துசாமி, திரு. | சங்கரபுரம். |
| 149 துரை முருகன், திரு. | இராணிப்பேட்டை. |
| 150 துரைராஜ், திரு. சு.ம. | பொன்னேரி (செ.வ.) |
| 151 துலுக்காணம், திரு. வ. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 152 தைலப்பன், திரு. டி.எம். | ஒரத்தநாடு. |
| 153 நடராசன், திரு. ஆ. | பேரூர். |
| 154 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 155 நல்லதம்பி, திரு. தீ.சு. | பார்க்டவுன், சென்னை. |
| 156 நாச்சிமுத்து, திரு. க. | பொங்கலூர். |
| 157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கொ. பொ. | மேட்டூர். |
| 158 நாராயணன், திரு. ரா. | தாரமங்கலம். |
| 159 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 160 பண்ணை சேதுராம், திரு. கே. | பெரியகுளம். |
| 161 பரமசிவன், திரு. அ.ம. | மேலூர். |
| 162 பரமசிவம், திரு. மொ. | வானூர் (செ.வ.). |
| 163 பழனிச்சாமி, திரு. சு. | மேட்டுப்பாளையம். |
| 164 பழனிச்சாமி, திரு. சொ.ந. | அவிநாசி (செ.வ.). |
| 165 பழனிமுத்து, திரு. சி. | ஆத்தூர். |
| 166 பழனியப்பன், திரு. அ.ப. | ஒட்டன்சத்திரம். |
| 167 பழனிவேல், திரு. என். | பழனி (செ.வ.) |
| 168 பாண்டியன், திரு. பி.எச். | சேரன்மாதேவி. |
| 169 பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர். |
| 170 பாலகுருவா ரெட்டியார், திரு. வெ. | சோழவந்தான். |

உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட
பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அண்ணமலை, திரு. எம். .. | ஹரூர் (செ.வ.). |
| 2 | அப்துல் ரஜாக், திரு. கே.எம். | ஆலந்தூர். |
| 3 | அப்துல் லத்தீப், திரு. கி. .. | கடலூர். |
| 4 | அப்புனு கவுண்டர், திரு. கா. | பெண்ணகரம். |
| 5 | அமிர்த ராஜ், திரு. இரா. .. | திருச்செந்தூர். |
| 6 | அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி. |
| 7 | அய்யாச்சாமி, திரு. ரா. .. | தாராபுரம் (செ.வ.). |
| 8 | அரங்கசாமி, திரு. க. .. | குன்னூர் (செ.வ.). |
| 9 | அரங்கநாதன், திரு. அ.க. | வேலூர். |
| 10 | அரங்கநாதன், திரு. மு. .. | திருவல்லிக்கேணி. |
| 11 | அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | கோயம்புத்தூர் (மேற்கு). |
| 12 | அருணசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வா.). |
| 13 | அர்சுனன், திரு. வீ. .. | ஆரணி. |
| 14 | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி. |
| 15 | அன்பழகன், திரு. கா. | புரசவாக்கம். |
| 16 | அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி |
| 17 | ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 18 | ஆதிசுவாமி, திரு. இரா. .. | குளச்சல். |
| 19 | ஆறுமுகம், திரு. சி. .. | மதுராந்தகம். |
| 20 | ஆறுமுகம், திரு. எச். ஜி. .. | பர்கூர். |
| 21 | ஆறுமுகம், திரு. இல. .. | திருநாவலூர். |
| 22 | ஆறுமுகம், திரு. எம். .. | சேலம்-2. |
| 23 | ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர். |
| 24 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 25 | இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர். | திண்டிவனம். |
| 26 | இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி. |
| 27 | இராதா, திரு. எஸ். ஆர். .. | கும்பகோணம். |
| 28 | இராமசாமி, திரு. க.ந.க. .. | கோபிச்செட்டிபாளையம். |
| 29 | இராமசாமி, திரு. எஸ்.ஜே. | சோளிங்கர். |

ix

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 30 | இரமசாமி, திரு. எஸ்.வி. .. | பெரம்பலூர் (செ.வ.). |
| 31 | இராமசாமி, திரு. டி. .. | இராமநாதபுரம். |
| 32 | இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 33 | இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம்.ஜி. (முதலமைச்சர்) | அருப்புக்கோட்டை. |
| 34 | இராமச்சந்திரன், திரு. என். | செஞ்சி. |
| 35 | இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 36 | இராமச்சந்திர ரெட்டி, திரு. என். | ஹோசூர். |
| 37 | இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர். |
| 38 | இராஜாராம் நாயுடு, திரு. தே. இரா. | தல்லி. |
| 39 | இளங்கோவன், திரு. கோ. .. | திருவையாறு. |
| 40 | ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம். |
| 41 | உக்கிரபாண்டியன், திரு. கா. | பரமக்குடி (செ.வ.) |
| 42 | உச்சி, திரு. கே. .. .. | கூடலூர். |
| 43 | உத்திராபதி, திரு. பொ. .. | திருத்துறைப்பூண்டி (செ. வ.). |
| 44 | உமாநாத், திரு. ரா. .. | நாகப்பட்டிணம். |
| 45 | உய்யக்கொண்டான், திரு. கே. ஜே. | ஆற்காடு. |
| 46 | எட்மண்ட், மாண்புமிகு திரு. க.உரொ. (அமைச்சர்). | திருநெல்வேலி. |
| 47 | எத்திராஜ், திரு. கி. .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 48 | ஏகாம்பர ரெட்டி, திரு. .. | பள்ளிப்பேட். |
| 49 | ஐசரி வேலன், திரு. .. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 50 | கணேசன், திரு. இ. .. .. | எடப்பாடி. |
| 51 | கணேசன், திரு. எஸ். .. | பூம்புகார். |
| 52 | கண்ணன், திரு. ம. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 53 | கந்தசாமி, திரு. கே. .. | ஆண்டிப்பட்டி. |
| 54 | கந்தசாமி, திரு. கா.வே. .. | இணைத்துக்கடவு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 171 பாலன், திரு. சு. | பெரம்பூர் (செ.வ.). |
| 172 பாலாஜி, திரு. க. | காஞ்சீபுரம். |
| 173 பானுச்சாமி, திரு. அ. | நிலக்கோட்டை, (செ.வ.). |
| 174 புருஷோத்தமன், திரு. து. | சைதாப்பேட்டை சென்னை. |
| 175 புஷ்பராஜு, திரு. த. | ஆலங்குடி. |
| 176 பெரியசாமி, திரு. மொ. | மங்களூர் (செ.வ.). |
| 177 பெரியசாமி, திரு. ரா. | உப்பிலியாபுரம். |
| 178 பெரியசாமி, திரு. டி.பி.மு. | மதுரை மேற்கு. |
| 179 பெருமாள், திரு. என். | வரகூர் (செ.வ.) |
| 180 பெருமாள், திரு. ரா.கு. | விளாத்திகுளம். |
| 181 பொன்னுசாமி, டாக்டர் ஏ. | பெருந்துறை. |
| 182 பொன்னுரங்கம் திரு. ப. | இராயபுரம். |
| 183 பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்). | திருச்செங்கோடு. |
| 184 மணிமாறன், திரு. மா. | நன்னிலம் (செ.வ.). |
| 185 மணிமாறன், திரு. ஆர். | திருப்பூர். |
| 186 மணிமுடி, திரு. எஸ். | எழும்பூர், சென்னை (செ.வ.). |
| 187 மருதாசலம், திரு. க. | தொண்டாமுத்தூர். |
| 188 மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்). | பாளையங்கோட்டை. |
| 189 மாணிக்கம், திரு. பி. | திருச்சிராப்பள்ளி-1. |
| 190 மார்க்கபந்து, திரு. ரா. | அணைக்கட்டு. |
| 191 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் | (நியமன உறுப்பினர்). |
| 192 மாரிமுத்து, திரு. ஏ.ஆர். | பட்டுக்கோட்டை. |
| 193 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 194 முத்துசாமி, திரு. பா.க.சி. | தர்மபுரி. |
| 195 முத்துசாமி, திரு. சு. | ஈரோடு. |
| 196 முத்துசாமி கரையாளர், திரு. சு. | தென்காசி. |
| 197 முத்தையா, திரு. இரா. | சேடப்பட்டி. |
| 198 முருகேசன், திரு. கூ. சு. | திருவரம்பூர். |
| 199 முனிசாமி, திரு. பொ. | வந்தவாசி (செவ). |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 200 முனிரத்தினம், திரு. எஸ். | கும்மிடிபூண்டி. |
| 201 முனு ஆதி, திரு. மாண்புமிகு (பேரவைத் தலைவர்). | தாம்பரம், சென்னை. |
| 202 மூக்கையா தேவர், திரு. பி.கே. | உசிலம்பட்டி. |
| 203 யூசுப், திரு. யா.சை.மு. | ராதாபுரம். |
| 204 ரகுமான்கான், திரு. ஏ. | சேப்பாக்கம், சென்னை. |
| 205 ரகுராமன், திரு. வி. | புவனகிரி. |
| 206 ரகோத்தமன், திரு. கோ. | முகையூர். |
| 207 ரமணி, திரு. கு. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 208 ரசாக், திரு. எம்.எம்.ஏ. | கடையநல்லூர். |
| 209 ராமசாமி, திரு. கோ. | சிவகாசி. |
| 210 ராமசாமி, திரு. து. | வெள்ளக்கோயில். |
| 211 ராமதாஸ், திரு. பி. | போடிநாயக்கனூர். |
| 212 ராமநாதன், திரு. சி. | விருத்தாசலம். |
| 213 ராமலிங்கம், திரு. இ. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.). |
| 214 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டைமான், திரு. | புதுக்கோட்டை. |
| 215 ராஜு, திரு. செ.மெ. | தலைவாசல் (செ.வ.). |
| 216 ராஜு, திரு. வி.கே. | அரக்கோணம் (செ.வ.). |
| 217 லட்சுமிநாராயணன், திரு. என். | மதுரை மத்திய தொகுதி. |
| 218 லத்தீப், திரு. எம்.ஏ. | வாணியம்பாடி. |
| 219 வடிவேலு, திரு. கே. | கரூர். |
| 220 வரதராஜன், திரு. என். | திண்டுக்கல். |
| 221 வரதராஜன், திரு. சௌ.வே. | சேலம்-1. |
| 222 வாசன், திரு. சீ.மு. | வேடசந்தூர். |
| 223 வின்சென்ட், திரு. மி. | நாகர்கோயில். |
| 224 விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர். |
| 225 வேங்கா கவுண்டர், திரு. பி. | வீரபாண்டி. |
| 226 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு திரு. ரா. | சிங்காநல்லூர். |
| 227 வெள்ளைச்சாமி, திரு. ஆ. | ஆத்தூர். |
| 228 வேணுகோபால், திரு. த. | தண்டராம்பட்டு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
| --- | --- |
| (1) | (2) |
| 229 வேலுச்சாமி, திரு. ஒ.சோ. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 230 ஜகதீசன், திரு. ஆனூர். .. | செங்கல்பட்டு. |
| 231 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி. |
| 232 ஜெபமணி, திரு. ரா. .. | சாத்தான்குளம். |
| 233 ஜெயராமன், திரு. வே.இரா. | தேனி. |
| 234 ஜெயவேலு, திரு. எம்.ஏ. | காட்பாடி. |
| 235 ஜேம்ஸ் திரு. ஜே. .. .. | திருவட்டாறு. |

## பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

| | |
| --- | --- |
| 1 மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார். | அமைச்சர். |
| 2 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். | அமைச்சர். |
| 3 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். | அமைச்சர். |
| 4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. | அமைச்சர். |
| **5 திரு. வி. பி. இராமன் .. ..** | **தலைமைவழக்கறிஞர்** |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

———

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறுவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்

1978, மார்ச் 6, 7, 8, 9, 10 ஆம் நாட்கள்.

(தொகுதி 14—எண்கள் 1 முதல் 5)


பக்கங்கள்

அ

**அஞ்சல் தலை—**

பெரியார் (த.கோ.).. .. .. .. 928— 929

**அண்ணாமலை திரு. எம்.—**

பாலிடெக்னிக், தர்மபுரியில் துவக்கம் செய்தல் குறிப்பு .. .. .. .. 653— 654

வரவு-செலவுத்திட்டம், 1978—79, வாக்கெடுப்பு:

கால்நடை வளர்ப்பு .. 251

சமூக நலன் ..

**அப்துல் லத்தீப், திரு. கி—**

வரவு-செலவுத் திட்டம், 1978—79, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள்

வேளாண்மை } 561—562

வேளாண்மை குறித்த மூலதனச்செலவு

**அம்பிகாபதி, திரு. மு—**

அரசு ஊழியர்கள், வேலைநிறுத்தம் (த.கோ.) .. 486

அ—தொடர்ச்சி.

**அம்பிகாபதி, திரு. மு—தொடர்ச்சி.**

நெல், அரவை மில், 'அல்லர்' பொருத்துதல் .. 895

புயலால் மரணமடைந்தோர், உதவித்தொகை .. 451

பூச்சி மருந்து, தொழிற்சாலை, மன்னார்குடி அருகில், 907

மரமேறும் தொழிலாளர்கள், காதி போர்டு மூலம் செய்யும் செலவு... .. .. .. 925—927

மீனவர்கள், தகராறுகள்.. .. .. .. 645—649

மூவாநல்லூர் குடிநீர் திட்டம் .. .. 217—218

வரவு-செலவுத் திட்டம், 1978—79, வாக்கெடுப்பு:

கால்நடை வளர்ப்பு<br>சமூக நலன் } 249

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்<br>வீட்டுவசதி<br>பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச்செலவு } 674, 701—709

**அய்யாசாமி, திரு. ரா—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள்<br>வேளாண்மை<br>வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 529—530

**அரங்கசாமி, திரு. க—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்<br>வீட்டுவசதி .. .. ..<br>பொதுச்சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. } 674



அ—தொடர்ச்சி

**அரங்கநாதன், திரு. மு.—**

கள்ளச் சாராய விற்பனையாளரிடையே ஏற்பட்ட சச்சரவு .. .. 244—246

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன .. .. 1010, 1043

நகர்ப்பகுதி மேம்பாடு .. .. 575

**அரசு அலுவலர்கள்—**

கோரிக்கை, பரிசீலனை, (அ.) .. .. 892—893

தொழில்நுட்ப உதவியாளர், சம்பளம் .. .. 485—491

வேலை நிறுத்தம் (த.கோ.) .. .. 219

**அரிசனங்கள்—**

மணக்குடியில் நலத்துறை பள்ளி.. .. .. 908—910

**அலுவலகங்கள்—**

பத்திரப் பதிவு அலுவலகங்கள், வசதிகள், .. 487

**அழகர்சாமி, திரு. சோ.—**

அரசு ஊழியர்கள், வேலை நிறுத்தம் (த.கோ.) 46—47, 61—65, 71

அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம்.(ஒ.தீ.) .. 58—59

[illegible] தீர்மான அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களை எந்த வரிசையில் பேச அழைப்பது என்பது குறித்து (ஒ.பி.) .. .. 108, 109

**அழகர்சாமி, திரு. சோ.—தொடர்ச்சி**

கூலி, குறைந்த பட்ச கூலி, கைத்தறி நெசவாளர்களுக்கு .. .. 9?0—921

வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு:

கால்நடை வளர்ப்பு .. ..<br>சமூக நலன் .. .. 251

அ—தொடர்ச்சி பக்கங்கள்

**அன்பழகன், திரு. க.—**

கேள்விகள், முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும் இலாக்காக்கள் தொடர்பானவை, (த.கோ.) 38, 40

ஆ

**ஆசிரியர்கள்—**

தமிழாசிரியர்கள் உண்ணாவிரதம் (ராமநாதபுரம் மாவட்டம்) (ஓ.தீ.) .. .. .. 491—492

தமிழ் ஆசிரியர்கள் கோரிக்கை குறித்து அறிக்கை.. 242—243

தனியார் பள்ளியில் பணியாற்றுவோருக்கு மருத்துவ வசதி .. .. .. 211

பட்டதாரி ஆசிரியர்கள், பணி நிரந்தரம் .. 652—653

பொறியியல் ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளிகள், தேர்வு நிலை .. .. .. 19

வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள், வட ஆற்காடு .. .. .. .. 463

**ஆண்டி அம்பலம், திரு. மெ.—**

பாசன வசதி, வலையங்குளம், வட்டாரம், மதுரை மாவட்டம் .. .. .. 892

**ஆலயங்கள்—**

திருப்பணி, வரதராஜப்பெருமாள் ஆலயம், காஞ்சி .. .. .. 889—891

**ஆறுமுகம், திரு. எம்.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

கால்நடை வளர்ப்பு சமூக நலன் .. .. 251, 273—277



பக்கங்கள்

ஆ—தொடர்ச்சி

**ஆறுமுகம், திரு. எஸ். ஜி.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. .. .. 329—331

**ஆறுமுகம், திரு. சி.—**

உறுப்பினர்கள், பாதுகாப்பு (ஓ. பி.) .. .. 940

**ஆறுமுகம், திரு. மு.—**

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன, நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. 932, 934, 967—973

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வீட்டு வசதி .. .. .., பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு .. 674, 677

**ஆனூர் ஜெகதீசன், திரு.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

பால் வழங்கு திட்டங்கள் .. .. .., வேளாண்மை .. .., வேளாண்மை குறித்த மூலதனச்செலவு 552—555

இ

**இராகவானந்தம், திரு. எஸ்.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

கைத்தறியும் நெசவுத் தொழிலும் கதர் .. 131

சமுதாயநல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன. நகர்ப்பகுதி மேம்பாடு .. .. . 1024, 1032

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வீட்டு வசதி .. .. .., பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு .. 673, 674, 676, 677, 743, 744—768

பக்கங்கள்

இ—தொடர்ச்சி

இராசமாணிக்கம், திரு. இரெ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. 935—939, 941—944

இராசரத்தினம், திரு. து.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன. நகர்ப்பகுதி மேம்பாடு .. .. 984—988

இராதா, திரு. எஸ். ஆர்.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

பால் வழங்கு திட்டங்கள் .. ..
வேளாண்மை .. .. ..
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. .. 499, 524

இராமச்சந்திரன் திரு. எம். ஜி.—

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ. தீ.) .. .. 69, 85, 89, 110

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வீட்டுவசதி .. ..
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு .. .. 744, 745, 765—766

இராமச்சந்திரன், திரு. ச.—

அரசு ஊழியர்கள், கோரிக்கை பரிசீலனை, விதி 82-ன் கீழ் அறிக்கை .. .. .. 575

கள்ளச் சாராய விற்பனையாளரிடையே ஏற்பட்ட சச்சரவு (க. ஈ. அ.) .. .. 244—246

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு . 1020



பக்கங்கள்

இ—தொடர்ச்சி

இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந.—

ஊராட்சி ஒன்றியங்கள், பிரித்தமைத்தல் .. 655—657
பேருந்து, வந்தவாசி-கள்ளக்குறிச்சி .. 923—924

இராமசாமி, திரு. எஸ். ஜே.—

உடல் ஊனமுற்றோர், வேலை வாய்ப்பகங்களில், பதிவு செய்தோர் விவரம் .. .. 466

ஊராட்சி ஒன்றியங்கள், பிரித்தமைத்தல் .. 655—657
டிராக்டர்கள், கடன் .. .. .. 13—18

லாரிகள் போக்கு வரத்து விதிகளை மீறியதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை .. .. 227—232

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

கால்நடை வளர்ப்பு சமூக நலன் .. .. 264—267

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. 1007—1010

விற்பனை வரிக்கு பதில் எக்சைஸ் தீர்வை .. 455

இராமலிங்கம், திரு. ஏ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. .. .. 377

இராமலிங்கம், திரு. செ.—

ஆடுதுறையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி .. 210—211

இளங்கோவன், திரு. சோ.—

பட்டதாரி ஆசிரியர்கள், பணி நிரந்தரம் .. 652—653

இராஜா முகமது, திரு. கே.—

கேள்விகள், முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும் இலாக்காக்கள் தொடர்பானவை, (ந. கே), .. 39, 40—41

பக்கங்கள்

இ—தொடர்ச்சி


இராஜா முகமது, திரு. கே.—தொடர்ச்சி

துணிகள், ஏற்றுமதிக் கட்டுப்பாடும் தொழிலாளர் பாதிப்பும் (க. ஈ. அ.) .. 670—671

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

கைத்தறியும் நெசவுத் தொழிலும் கதர் .. 112—112, 147—154

ஈ

ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—

தொழில்நுட்ப உதவியாளர், சம்பளம் .. 892—893

மணிமுத்தாறு அணை பராமரிப்பு ஊழியர் குடியிருப்புகள், மராமத்து .. .. 632—633

மணி முத்தாறு பாசனத் திட்டம் .. .. 461

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

கைத்தறியும் நெசவுத் தொழிலும் கதர் .. .. .. } 113, 124—131

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. } 958—964

உ

உச்சி திரு. கே.—

மருத்துவமனைக் கட்டிடம், தானேரி .. .. 627—628

உணவு தானியங்கள்—

அரிசி ஆலைகள், 'ஷெல்லர் டைப்' அரவை முறை, 895—901

கையிருப்பு விவரங்கள் .. .. .. 636—645

நெல், அரைவை மில், 'ஹல்லர்' பொருத்துதல், 895




பக்கங்கள்.

உ—தொடர்ச்சி.


உணவு தானியங்கள்—தொடர்ச்சி.

நெல், கொள் முதல் விலை .. .. .. 635—636

உணவு விடுதிகள்—

உணவுப் பண்டங்கள், விலை .. .. 901—906

உத்திராபதி திரு. பொ.—

வரவு செலவுத் திட்டம், 1977—78, வாக்கெடுப்பு:

கால் நடை வளர்ப்பு சமூக நலம் } 277—282

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு } 934

உமர்நாத் திரு. ரா.—

கல்லூரிகள், செமஸ்டர் திட்டம், .. .. 914—916

குடிநீர்க் கட்டணம், திருச்சிராப்பள்ளி நகராட்சி, 23—24

சுற்றுலாவிடுதி, நாகப்பட்டினம் .. .. 650—651

பிஷப் ஹிபர் உயர்நிலைப்பள்ளி, புத்தூர், செயல் படாமை, .. .. .. 19—20

வரவு செலவுத் திட்டம், 1978—79, வாக்கெடுப்பு:

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டுவசதி .. .. } 747, 749, 765

பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு .. .. }

உரிமைப் பிரச்னை—

பார்க்க—தலைவர் .. .. ..

உள்ளாட்சிகள்—

ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம், பிரித்தமைத்தல் 657

உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், பிரித்தமைத்தல் .. .. .. 657

பக்கங்கள்.

**உள்ளாட்சிகள்—தொடர்ச்சி.**

உள்ளாட்சி ஒன்றியங்கள், பிரித்தமைத்தல் .. 655—657

ஊராட்சிகள் பிரித்தமைத்தல் .. 211—216

கிணத்துக்கடவு, பொள்ளாச்சி வடக்கு ஒன்றியங்கள், இணைத்துப் பிரித்தல் .. 657—661

பூந்தோட்டம் ஊராட்சி, பிரித்தல் .. 216—217

வெள்ளியக்குடி ஊராட்சி—பிரித்தல் .. 217

ஏ

**ஏடுகள்—**

பேரவை முன் வைக்கப்பெற்றவை .. 372—373, 576—625, 770, 1048

ஒ

**ஒத்திவைப்புத் தீர்மானம்—**

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் .. 46—57, 61—111

பதவி இறக்கம் செய்யப்பட்ட (ராமநாதபுரம் மாவட்ட) தமிழாசிரியர்கள் உண்ணாவிரதம். 491—492

**ஒழுங்குப் பிரச்னை—**

உறுப்பினர்கள், பாதுகாப்பு .. 940—941

ஒத்தி வைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களை எந்த வரிசையில் பேச அழைப்பது என்பது குறித்து. .. 58—60

ஓ

**ஓய்வூதியம்—**

புலவர்களுக்கு நிதி உதவி திட்டம். .. 465



பக்கங்கள்.

க

**கடன்கள்—**

டிராக்டர்களுக்கு .. 13—18

பம்புசெட்டுகள், வசூல் நிறுத்துதல், .. 10—13

மாநாடு, கடன் நிவாரண மாநாடு தீர்மானங்கள் .. 18

**கணேசன் திரு. எஸ்.—**

அரசு மருத்துவமனை, பொறையார், விரிவு படுத்துதல் .. 628—629

கூலி, குறைந்த பட்ச கூலி, கைத்தறி நெசவாளர்களுக்கு .. 920—921

கைதிகள், வெளி மாநிலத்தவர்கள். .. 9—10

சினிமா டிக்கட் விற்பனை, தண்டனை. .. 449

டாக்ஸிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் சென்னை விவரம் .. 479

தூக்கு தண்டனை, ஆயுள் தண்டனை, விவரங்கள், 6—9

பால், தானியங்கி பால் விற்பனை நிலையங்கள், சென்னை .. 28—36

புயல் வெள்ளம் பாதிப்பு, உதவித்தொகை, .. 454

பேருந்து பயணிகள் எண்ணிக்கை எடுக்க கம்ப்யூட்டர்கள் .. 232—235

மூடப்பட்ட பஞ்சாலைகள், விவரம் .. 482

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. 318—325, 327—328

விசை சாயச்சாலை—துவங்கல் .. 239—242

**கந்தசாமி திரு. கா. வே.—**

கிணத்துக்கடவு, பொள்ளாச்சி வடக்கு ஒன்றியங்கள் இணைத்துப் பிரித்தல் .. 657—661

பக்கங்கள்:

க—தொடர்ச்சி.

**கந்தசாமி திரு கே.—**

அரிசன பின்தங்கியோர் மாணவ விடுதி, அசைவ உணவு .. .. .. 445

அலுவலர்கள். அரசிதழ் பதிவு பெருத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ. தீ.) .. 87

ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், பிரித்தமைத்தல் .. .. .. 657

உறுப்பினர்கள், பாதுகாப்பு (ஒ. பி.) .. 940

வரவு-செலவுத் திட்டம். 1978-79 வாக்கெடுப்பு:

கால்நடை வளர்ப்பு / சமூக நலன் .. .. .. } 299--302

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. 1010—1016, 1041

தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் / வீட்டுவசதி / பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 721—724

**கரியமாணிக்கம் அம்பலம் திரு கரு. ராம.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. 999--1004

**கருணாநிதி திரு தாழை. மு.—**

கலப்புத் திருமணங்கள், சலுகைகள் .. 661—663

புலவர்களுக்கு நிதியுதவித் திட்டம் .. 465

**கருணாநிதி திரு. மு.—**

அஞ்சல் தலை, பெரியார் (த. கோ.) .. 928

அரசு ஊழியர்கள், வேலை நிறுத்தம் (த. கோ.) 490—491

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெருத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ. தீ.) 76—77, 102, 109



பக்கங்கள்

க—தொடர்ச்சி.

**கருணாநிதி திரு. மு.—தொடர்ச்சி**

ஒத்தி வைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களை எந்த வரிசையில் பேச அழைப்பது என்பது குறித்து (ஒ. பி.) 59, 60

கேள்விகள், முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும் இலாக்காக்கள் தொடர்பானவை (த. கோ.) 37, 39--41

**கருணாமூர்த்தி திரு. வெ.—**

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :

பால் வழங்கு திட்டங்கள் / வேளாண்மை / வேளாண்மை குறித்த மூலதன செலவு } 505—508

**கலியமூர்த்தி திரு. துரை—**

தானே இயங்கும் நீரூற்றுகள், சிதம்பரம் வட்டம் 666—667

**கல்லூரிகள்—**

செமஸ்டர் திட்டம். .. .. .. 914—916

**கவன ஈர்ப்புகள்—**

கள்ளச் சாராய விற்பனையாளரிடையே ஏற்பட்ட சச்சரவு .. .. .. 244—246

தீ விபத்து, காந்தி நகர் வி. வி. ஆர் காலனி (முதுகுளத்தூர்) .. .. .. 492—494

துணிகள், ஏற்றுமதிக் கட்டுப்பாடும் தொழிலாளர் பாதிப்பும் .. .. .. 669—671

**காளிமுத்து, திரு. கா.—**

துணை வினாவிற்கு அளிக்கப் பெற்ற விடைக்கு திருத்தம் (அறி) .. .. .. 493

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. 931, 933, 934—935, 936, 937, 979, 1008, 1034—1045

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

காளியப்பன் திரு. இரா—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
தொழிலாளர் நலனும் தொழுற்சாலைகளும் வீட்டுவசதி
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 691— 693

காளியப்பன் திரு. பொ.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. 945—948

கிட்டப்பா திரு. என்.—

ஆட்டோ ரிக்ஷாக்கள், மீட்டர்களில் முறைகேடுகள். .. .. .. 480
ஆலயம், திருப்பணி, வரதராஜப் பெருமாள் ஆலயம், காஞ்சி .. .. .. 889—891
உயர்நிலைப் பள்ளி, திருமங்கலம், மாயூரம் தாலூக்கா. புதிய கட்டடம், .. 913—914
ஊராட்சி ஒன்றியங்கள், பிரித்தமைத்தல் 655—657
ஏலகிரி மலை, கோடை வாசஸ்தலமாக்குதல் 650
கடுவங்குடி சாலை பகுதி, மதகு சீரமைப்பு 665—666
பர்மா அகதிகள், தஞ்சை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரிவோர், கோரிக்கை, 924—925
பால் விற்பனை, சென்னை நகர், நடமாடும் ஊர்தி .. .. .. 28
பாலம், ராஜன் வாய்க்கால் பாலம், மாயூரம் ஒன்றியம் .. .. .. 923
பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள், அரசு விழா 462
புதிய உயர்நிலைப்பள்ளி துவங்க விண்ணப்பங்கள். 201—208
பூம்புகார் பகுதி தொல்பொருள் ஆய்வு. .. 20—22
மணக்குடியில் அரிசன நலத்துறை பள்ளி .. 219
விற்பனை வரிக்குப் பதில் எக்சைஸ் தீர்வை .. 455



பக்கங்கள்.

க—தொடர்ச்சி.

கிருஷ்ணன், திரு. பி—

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
கால் நடை வளர்ப்பு .. .. ..
சமூக நலன் .. .. .. .. } 271—273

கிருஷ்ணன் திரு. பி. எம்.—

வரவுசெலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
பால் வழங்கு திட்டங்கள் .. ..
வேளாண்மை .. .. .. ..
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 546—549

கிருஷ்ணன் திரு. ரா.—

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம், (ஒ.தீ.) .. 46—47
பொறியாளர் தேர்வு, மின்சார வாரியம் .. 894
போக்குவரத்து, தனியார் துறை தொழிலாளர்க்கு வேலைவாய்ப்பு .. .. .. .. 664—665
மின் விளக்கின்மை தொழிலாளர் குடியிருப்புகள், மாஞ்சோலை எஸ்டேட் .. 476
வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு :
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. 933—934

குடிநீர்—

கட்டணம், திருச்சிராப்பள்ளி நகராட்சி .. 23—24
குழாய்கள், ஊராட்சிகள், செப்பனிடல் .. 922
சென்னைத் திட்டம், ஐ. நா. நிபுணர்கள் அறிக்கை 469
மூவாநல்லூருக்கு திட்டம் .. .. .. 217—218

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

**குழந்தைவேலு திரு. ப—**

நில மேம்பாட்டு வாரியம், உறுப்பினர் தேர்தல் (அ.தி.) .. .. .. .. .. 671—672

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
பால் வழங்கு திட்டங்கள். } 494,
வேளாண்மை } 495—496
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 518,
562—574

**குற்றங்கள்—**

கைதிகள், வெளிமாநிலத்தவர்கள் .. .. 9—10

திருட்டுக் குற்றங்கள் (சென்னைநகர்) .. 629—631

தூக்குத்தண்டனை, ஆயுள் தண்டனை, விவரங்கள். 6—9

**கூத்தகுடி சண்முகம் திரு. ச—**

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம்(ஓ.தி.) .. .. 46—47

**கைத்தறி—**

கூலி, குறைந்தபட்ச கூலி, கைத்தறி நெசவாளர்களுக்கு .. .. .. .. .. 920—921

**கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன் திரு. பி.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79., வாக்கெடுப்பு:
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் }
வீட்டுவசதி } 709—712
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு .. }

**கோதண்டராமன் திரு. வி. கே—**

இன்ஜினீரிங் கல்லூரி, பாலிடெக்னிக், மாணவர்கள் தேர்வு, .. .. .. .. .. 910—913

உணவுப் பொருட்கள், கையிருப்பு விவரங்கள் .. 636—645

குடியாத்தம், பரதராமில் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் .. .. .. .. .. 208—209



பக்கங்கள்

க—தொடர்ச்சி

**கோதண்டராமன் திரு. வி. கே.—தொடர்ச்சி**

தூக்குத் தண்டனை, ஆயுள் தண்டனை, விவரங்கள். 6—9

நூல் விலைகளில் வேறுபாடுகள் .. .. .. 483

மின்வாரியம், விஜிலன்ஸ் இலாகாவின் குற்றக் கண்டுபிடிப்புப்பணி .. .. .. 458

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
கால்நடைவளர்ப்பு } 249
சமூக நலன் } 932

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. ..

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் }
வீட்டுவசதி } 673
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு }

**கோவிந்தராசன் திரு. சி—**

தொழில் தகராறு, டி. வி. எஸ். நிறுவனம்,(பாடி) 477

வரவு செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் }
வீட்டுவசதி } 693—702
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு }

**கோவேந்தன் திரு. மு. ரெ—**

வரவு-செலவுத்திட்டம், 1978—79, வாக்கெடுப்பு:
சமுதாய நலவளர்ச்சித் திட்டங்கள் முதலியன } 953—958
நகர்ப்பகுதி மேம்பாடு }

ச


**சங்கரய்யாதிரு. என்—**

அரசு ஊழியர்கள், வேலை நிறுத்தம், (த. கோ.) .. 485

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெருத அலுவலர்கள், வேலை நிறுத்தம். (ஓ. தீ.) .. .. 46—47, 49—57, 77—78, 82, 110

கேள்விகள், முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும் இலாக்காக்கள் தொடர்பானவை (த.கோ.) .. 39—40

**சண்முகம் திரு. கா. ந—**

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 555—587

**சண்முகம் திரு. ப. உ—**

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டுவசதி
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 734—744

**சதாசிவம் திரு. செ—**

ஊழியர்கள், தென் சென்னை மின் வழங்கு நிறுவனம், முறைப்படுத்துதல் .. .. .. 893—894

**சந்திரன் திரு. ப—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள்
நகர்ப்பகுதி மேம்பாடு .. } 1004—1007

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 675






ச—தொடர்ச்சி


**சந்திரன் ஜெயபால் திரு. இரா—**

அரிசன பின்தங்கியோர் மாணவ விடுதி, அசைவ உணவு .. 445

**சமரசம் டாக்டர் கே—**

உணவு விடுதிகள், உணவுப் பண்டங்கள், விலை, 901—906

தருமபுரி மாவட்டத்தில் இ. எஸ். ஐ. மருத்துவமனை .. 218

பாலிடெக்னிக், தர்மபுரியில் துவக்கும் செயற்குறிப்பு .. 653—654

மின் இணைப்பு, புதிய பம்பு செட்டுகளுக்கு விதியைத் தளர்த்தல், தர்மபுரி மாவட்டம் 4

**சமூக நலம்—**

கலப்புத் திருமணங்கள், சலுகைகள் .. 661—663

**சரஸ்வதி செல்வி பி. டி—**

வரவு-செலவுத் திட்டம், 1978 79, வாக்கெடுப்பு:

கால்நடை வளர்ப்பு
சமூக நலன் } 248, 250, 252—253, 263, 302—315

**சவுந்திரராஜன் திரு. ரெ. வீ—**

தீயணைப்பு நிலையங்கள், பாபநாசம் தஞ்சை .. 450

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு
சமூக நலன் } 249, 250, 112, 113

கைத்தறியும் நெசவுத் தொழிலும்
கதர்
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலிய
நகர்ப்பகுதி மேம்பாடு } 933

பக்கங்கள்

ச—தொடர்ச்சி

சவுந்திரராஜன் திரு. ரெ. மீ தொடர்ச்சி

செய்தி, சுற்றுலா திரைப்படத் தொழில் நுட்பவியல் .. 317

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 673, 675, 676

சாதிக் பாட்சா திரு. எஸ். ஜே—

சப்-மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம், பண்ருட்டி. மாஜிஸ்ட்ரேட் இல்லாமை, .. 895

சென்னை குடிநீர் திட்டம் ஐ. நா. நிபுணர்கள் அறிக்கை .. 469

தூக்குத் தண்டனை, ஆயுள் தண்டனை, விவரங்கள், 6—9

நிலக்கடலை ஆய்வு நிலையம், பொள்ளாச்சி, மாற்றுதல் .. 668—669

மொழிப் பிரச்னை, பிரதமரிடமிருந்து கடிதம், 916—919

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சமுதாய நலவளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு } 1020, 1024—1034, 1041

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டுவசதி பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 75

சாமிக்கண்ணு. திரு. தா—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள் வேளாண்மை வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 539—540



பக்கங்கள்

ச—தொடர்ச்சி

சாலைகள்—

கடுவங்குடி பகுதி சாலை, மதகு சீரமைப்பு 665—666

சிகாமணி திரு. பொ—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 686—688

சிவசாமி, திரு. செ—

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம், (ஒ. தீ.) .. 46—47

உணவு விடுதிகள், உணவுப் பண்டங்கள், விலை .. 901—906

பொறியியல் ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளிகள் தேர்வு நிலை, .. 19

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு } 932, 975—980

செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. 344—346

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 675

சின்னசாமி, திரு. வி. கொ—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள் வேளாண்மை வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 540—542

பக்கங்கள்

ச—தொடர்ச்சி

சின்னசேலம் சுப்பிரமணியன் திரு. மா—

துரித கால வண்டி, கள்ளக்குறிச்சி-சென்னை .. 24—26

சீனி செல்வராஜ், திரு—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. 557 559

சீனிவாச ரெட்டியார் திரு. போ. எ—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலிய
நகர்ப்பகுதி மேம்பாடு 988—990

சுந்தரம் திரு. ப—

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவ செலவு 211

சுந்தரம் திரு. மு—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
சமுதாய நல வளர்ச்சி திட்டங்கள் முதலியன
நகர்ப்பகுதி மேம்பாடு .. 949—953

சுந்தரராஜ் திரு. நா—

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெருத அலுவலர்கள், வேலை நிறுத்தம், (ஒ. தீ.) .. 46—47

ஒத்தி வைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களை எந்த வரிசையில் பேச அழைப்பது என்பது குறித்து (ஒ. பி.) .. 60

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன
நகர்ப்பகுதி மேம்பாடு .. 932

செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. 332 336

[illegible], கோனுபேட் கிராமம், திருமயம் [illegible] .. 891—892



பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சுப்பிரமணியம், திரு. ஆர். சி—

தீ விபத்து, காந்தி நகர் (முதுகுளத்தூர்) (க.ஈ.) .. 493, 493—494

வரவு-செலவுத் திட்டம். 1978-79, வாக்கெடுப்பு:
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன
நகர்ப்பகுதி மேம்பாடு. .. 981—984

சுப்பிரமணியம், திரு. பாக்கூர் சு—

உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், பிரித்தமைத்தல் .. 657

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
கைத்தறியும் நெசவுத் தொழிலும்
கதர் .. 118—124

சுப்பிரமணியம், திரு. ஒ—

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெருத அலுவலர்கள், வேலை நிறுத்தம். (ஒ.தீ) .. 46—47

சுப்பு, திரு. க—

அலுவலர்கள். அரசிதழ் பதிவு பெருத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ.தீ( 46—47, 84—89, 104

உள்ளாட்சித் துறை அமைச்சர் உதவியாளர் பஸ் பாஸைத் தவருகப் பயன்படுத்தியது பற்றி அமைச்சர் அளித்த தகவல் குறித்து (உ.பி.) .. 349—354

சுவாமிதாஸ், திரு. அ

வரவு-செலவுத் திட்டம். 1978—79, வாக்கெடுப்பு :
கால்நடை வளர்ப்பு
சமுக நலம் 249

செய்தி, சுற்றுலா திரைப்படத் தொழில் நுட்பவியல் .. .. .. 340—344

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

சுற்றுலா—

ஏலகிரி மலை கோடை வாசத்தலமாக்குதல் .. 650

பிச்சாவரம், சிதம்பரம் வட்டம் .. 463

விடுதிகட்டுதல், நாகப்பட்டிணம் .. 650—651

செங்கோட்டையன், திரு அ—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை, குறித்த மூலதனச் செலவு } 508—511

செங்கோடன் திரு. கா—

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள்முதலியன
நகர்ப்பகுதி மேம்பாடு } 990—994

செம்மலை, திரு. செ—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
கைத்தறியும் நெசவுத் தொழிலும்
கதர் } 143—147

செல்லப்பா திரு. அ—

மின்வாரிய ஊழியர்கள் இடமாற்ற விண்ணப்பம் 457

செல்வராசன், திரு. அ—

அலுவலகங்கள், பத்திரப் பதிவு அலுவலகங்கள்,
வசதிகள் .. 908—910

சௌந்தரராஜன், திரு. திருச்சி, ஆர்—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 527



பக்கங்கள்

த

தகவல் கோரல்—

அஞ்சல் தலை, பெரியார். .. 928—929

அரசு ஊழியர்கள், வேலை நிறுத்தம் .. 485—491

கவன ஈர்ப்பு, எடுத்துக்கொள்ளப் பெறாதது
குறித்து. .. 668—669

கேள்விகள், முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும்
இலாக்காக்கள் தொடர்பானவை, .. 37—41

தமிழாசிரியர் கோரிக்கை குறித்து அறிக்கை 242—243

42-வது விதியின் கீழ் கொடுத்த அறிவிப்பு
குறித்து .. 246—248

பேரவையின் அலுவல். .. 929—930

தங்கவேல் திரு. ர. ச—

வரவு-செலவுத் திட்டம் 1978-79, வாக்கெடுப்பு:
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
வீட்டுவசதி
பொதுச் சுகாதாரம், துப்புரவு குடிநீர்
வழங்கல்குறித்து மூலதனச் செலவு } 703—704

தண்டபானி திரு. ரா. கா, சு—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 529—530

தலைவர்—

அறிவிப்புகள்—

நிலமேம்பாட்டு வாரியம், உறுப்பினர் தேர்தல் 672—673

பேரவையின் அலுவல் .. 930

ஜெர்மன் டெமாக்ரடிக் ரிபப்ளிக்கைச் சார்ந்த
பாராளுமன்றக் குழு, பேரவை நடவடிக்
கைகளைக் கவனித்தல் .. 111

த—தொடர்ச்சி.

தலைவர் —தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

உரிமைப் பிரச்சினைகள்—

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் மீது—

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் மீதான
உரிமைப் பிரச்சினையின் மீது 28-2-1978
அன்று தலைவர் அளித்த தீர்ப்பையும்
அப்பத்திரிகை முதலில் எழுதிய கடிதத்
தையும் முழுமையாக வெளி
யிடாமல் சில பகுதிகளை வேண்டு
மென்றே விட்டுவிட்டிருப்பது அவை
உரிமையை மீறிய செயலாகும் என்று
கூறி இப்பத்திரிகையின் மீது ஓர் உரி
மைப்பிரச்சினை எழுப்பப்பெற்றபோது
தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார்:

"தவருன செய்தி ஒன்றினை வெளி
யிட்டு, அது தவறு என்று சுட்டிக்
காட்டப்பட்டு, தீர்ப்பு வழங்கியபின்,
அத்தீர்ப்பையும் அம்மாதிரித் தவருக
வெளிட்டதற்கான வருத்தத்தையும்
முதலில் வெளியிட்ட செய்திக்கு எவ்
வளவு முக்கியத்துவம் கொடுத்து வெளி
யிடப்பட்டதோ அதே அளவு முக்கியத்
துவம் கொடுத்து வெளியிட
வேண்டும். இதுதான் மரபு. எனவே
'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் இவ்வாறு
செய்யாதது தவருனது.

ஆயினும் 2-3-1978 தேதியிட்ட இதழில்
எனதுதீர்ப்பையுமஅப்பத்திரிகைமுதலில்
எழுதிய கடிதத்தையும் முழுவதுமாக
வெளியிட்டுள்ளார்கள். எனவே, இப்
பிரச்சினையை இத்துடன் விட்டு விட
லாம். இனி இவ்வாறு நிகழா
வண்ணம் அப்பத்திரிகை எச்சரிக்கை
யுடன் நடந்துகொள்ள வேண்டும்."



த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்-தொடர்ச்சி—

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் 'தினமன'
'அண்ணு' மீது—தொடர்ச்சி,

இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, அண்ணு
நாளிதழ்கள் மீது— பேரவையில் நிதி
யமைச்சர் 23-2-1978 அன்று ஆற்றிய
உரையையும் பொதுப்பணித்துறை
அமைச்சர் 25—2—1978 அன்று படித்
ததையும் முழுமையாக வெளியிடாதது
குறித்து 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' 'தின
மணி', 'அண்ணு' ஆகிய நாளேடுகளின்
மீது உரிமைப் பிரச்சினைகள் 27—2—
1978 அன்று அவையில் எழுப்பப்பெற்ற
போது சம்பந்தப்பட்ட பத்திரிகை
களிடமிருந்து விளக்கம் பெற்றபின்
தீர்ப்புரைப்பதாகத் தலைவர் தெரிவித்
திருந்தார்.

இதன்மீது தலைவர் தீர்ப்பளிக்கும்
போது சம்பந்தப்பட்ட பத்திரிகைகள்,
இட நெருக்கடி காரணமாக மற்ற
பகுதிகளையும் வெளியிடவில்லை என்றும்
தவருன தகவலைத் தரவேண்டுமென்ற
எண்ணமோ, உள்நோக்கமோ தங்களுக்கு
இல்லையென்றும் பதில் தெரிவித்
துள்ளன என்று கூறி, பின் வருமாறு
தீர்ப்புரைத்தார்:

"பத்திரிகைகள், நடவடிக்கைக் குறிப்பு
களை முழுவதும் வெளியிட முடியாது
என்பதையும், ஆனல் மையக் கருத்துக்
கள் மாருமல் கூடியவரை எல்லா
நிகழ்ச்சிகளும் வெளியிடப்படுவதுதான்
நல்லது என்றும் ஏற்கனவே தீர்ப்பளித்
துள்ளேன், அதை மீண்டும் வலி
யுறுத்தி, அவை நிகழ்ச்சிகளை
வெளியிடும்போது இம்மாதிரித் தவறு
கள் நேராவண்ணம் பார்த்துக்கொள்
வது அவசியமென்றும், இட நெருக்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, அண்ணா நாளிதழ்கள் மீது—தொடர்ச்சி.

கடியைக் காரணம் காட்டி ஒரு சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுவிட்டு அதை யொட்டிய பகுதிகளை வெளியிடாது இருப்பது சிலசமயங்களில் தவறான கருத்துக்களை ஏற்படுத்தக் கூடும் என்பதால், இனிமேல் இம்மாதிரி நிகழாவண்ணம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

இவைமீது மேல் நடவடிக்கை ஏதும் தேவையில்லை.''

உள்ளாட்சித்துறை அமைச்சரின் உதவியாளர் பஸ் பாஸைத் தவருக உபயோகித்ததாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டு பற்றி உள்ளாட்சித்துறை அமைச்சர் அவைக்குத் தவருன தகவல் அளித்ததாக உரிமைப் பிரச்சினை ஒன்றினை 1978 மார்ச் 7 ஆம் தேதி ஓர் உறுப்பினர் கொண்டுவந்தார்.

''தவருக நடந்திருக்கலாம் என்ற ஐயத்தின் அடிப்படையில் இந்த உரிமை மீறல் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த உரிமைப்பிரச்சினையைத் தள்ளுபடி செய்கிறேன்'' என்று தலைவர் தீர்ப்பளித்தார். 349—354

தினத்தந்தி, மாலைமுரசு நாளிதழ்கள் மீது—

பேரவையில் நிதியமைச்சர் 23—2—1978 அன்று ஆற்றிய உரையையும், பொதுப் பணித்துறை அமைச்சர் 25—2—1978 அன்று படித்ததையும் முழுமையாக வெளியிடாதது குறித்து 'தினத்தந்தி', 'மாலைமுரசு' ஆகிய நாளிதழ்களின் மீது உரிமைப் பிரச்சினைகள் 27—2—1978



தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

தினத்தந்தி, மாலைமுரசு நாளிதழ்கள் மீது—

அன்று கொண்டு வரப்பெற்றபோது சம்பந்தப்பட்ட பத்திரிகை ஆசிரியர்களின் விளக்கம் பெற்றுத் தீர்ப்புரைப்பதாகத் தலைவர் தெரிவித்திருந்தார்.

இவைமீது தலைவர் தீர்ப்புரைக்கையில் சம்பந்தப்பட்ட பத்திரிகைகள் தங்கள் பதிலில் இனிமேல் கவனமாக இருப்பதாகவும், விடப்பெற்ற பகுதிகளுடன் சேர்த்து முழுப் பகுதியையும் மீண்டும் 1—3—1978 அன்று வெளியிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளதால், இனி இம்மாதிரி நிகழாவண்ணம் இப்பத்திரிகைகள் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று எச்சரித்து, மேல் நடவடிக்கை ஏதும் தேவையில்லை என்று தீர்ப்புரைத்தார். .. .. 43—44

த்திவைப்புத் தீர்மானம்—

அரசிதழ் பதிவு பெருத அலுவலர்கள் வேலை நிறுத்தம் குறித்து—

முதலமைச்சரின் விளக்கத்திற்குப்பின் இசைவு மறுக்கப்பெற்றது. .. 46—47, 110

ழுங்குப் பிரச்சினைகள்—

ஒத்திவைப்பத் தீர்மானம், பேசும் உறுப்பினர்களின் வரிசை முறை—

ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களைப் பேச அழைக்கும் வரிசை முறைபற்றி ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப்பி ஓர் உறுப்பினர் விளக்கம் கோரியபோது, ஒரே கட்சியைச் சேர்ந்த உறுப்பினரும் தலைவரும் அறிவிப்புகள் கொடுத்திருக்கும்போது, உறுப்பினரின் அறிவிப்பு

பக்கங்கள்.

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்சினைகள்—

ஒத்திவைப்புத் தீர்மானம், பேசும் உறுப்பினர்களின் வரிசை முறை—

முதலில் கொடுக்கப்பெற்றிருந்தால் பேசும் உரிமை உறுப்பினருக்குத்தானே தவிர கட்சித் தலைவருக்குக் கிடையாது.

ஆயினும் அவ்வுறுப்பினர் தாம் பேசவில்லையென்றும் தம் கட்சித் தலைவர் பேசட்டும் என்றும் சொல்லி விட்டால் கட்சித் தலைவருக்கு வாய்ப்பு அளிக்கப் பெறும்.

ஒத்திவைப்புத் தீர்மான அறிப்புகள் எந்த நேரத்திலே கொடுத்தாலும் நேரத்தைக் குறிப்பிட்டு கையொப்பம் இடப்பெறும். .. 58,59,60

ஒழுங்குப் பிரச்சினை சட்டமன்ற விதி முறைகளுக்கு மாருக ஏதாவது நடைபெற்ருல் மட்டும் எழுப்ப வேண்டும். .. 691

நுழைவு அனுமதி—

கோட்டைக்குள் வர உறுப்பினர்களுக்கு எந்தத் தடையும் இல்லை. உறுப்பினர்களுக்கு எல்லாவிதமான பாதுகாப்பும் உண்டு. உறுப்பினர்களுடன் கூட வருபவர்கள் அனுமதி பெற்றுத்தான் வரவேண்டும். .. 940, 941

மானியக் கோரிக்கைகள்—

முன்பே பேரவையில் வைக்கப்பெற்றுள்ள அறிக்கையில் இருப்பதையே அமைச்சர் தம் பதிலுரையில் படித்து நேரத்தை வீணுக்க வேண்டுமா என ஒரு உறுப்பினர் ஆட்சேபணை எழுப்பியபோது, தலைவர் அளித்த குறிப்புரையாவது:
''அறிக்கையில் ஒன்றிரண்டு இருக்கும், இருக்காது, அறிக்கையில் இல்லாததைக் கூட அமைச்சர் இனிமேல் படிக்கலாம். அதனால், இதில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றும் இல்லை.'' .. 752—753



பக்கங்கள்:

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

வினாக்கள் நேரம்—

கேள்வி நேரத்தில் கேள்வியை ஒட்டி ஒழுங்குப் பிரச்சினை எழுப்பலாம். வேறு ஒரு பிரச்சினை மீது கொண்டுவரக் கூடாது. .. 921

தகவல் கோரல்—

அரசுத் பதிவில்லா ஊழியர்களின் வேலை நிறுத்தம் குறித்து கொடுக்கப்பெற்றுள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றிய அறிவிப்பு குறித்து உறுப்பினர்கள் பேச முற்பட்டபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது:

''இன்று காலையில்தான் தீர்மானம் கொடுக்கப் பெற்றுள்ளது; அது ஆய்வில் உள்ளது, அது பற்றிப் பேசக் கூடாது.'' 486

வினாக்கள்-விடைகள்—

முதலமைச்சர் அவைக்கு வராதது பற்றியும், அவர் பதிலளிக்கவேண்டிய வினாக்கள் எடுத்துக்கொள்ளப் பெறாதது குறித்தும் தகவல் கோரியபோது தலைவர், பின்வருமாறு தீர்ப்புரைத்தார்:

''முதலமைச்சர் இங்கே வரவேண்டுமென்றோ வரக்கூடாது என்றோ நான் கட்டாயப்படுத்த முடியாது.

முதலமைச்சருக்குச் சார்ந்த கேள்விகள் தயாராக இருக்குமானால் உடனே அவருடன் கலந்து நடவடிக்கை எடுக்க நான் முனைகிறேன்.'' .. 4

பக்கங்கள்.

த—தொடர்ச்சி.


தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறைகள்:

வெட்டுப் பிரேரணை—

கொடுக்கப்பெற்றுள்ள வெட்டுப்பிரேரணைகளில் எதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று எழுதிக்கொடுத்தால்தான், அதன்மீது அவ்வுறுப்பினர் பேச அழைக்கப்படுகின்றார் என்றும், எழுதிக் கொடுக்காவிட்டாலும் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்றும் ஓர் உறுப்பினர் கோரியபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது :

''உறுப்பினர்கள் எழுதிக்கொடுத்தால்தான் பரிசீலனை செய்ய முடியும், எழுதிக் கொடுக்காததைப்பற்றி எடுத்துக் கொள்ள முடியாது'' .. 496

விவாதம்—

ஒத்திவைப்புத் தீர்மானம்—

அமைச்சர் விளக்கம் தந்ததற்குப் பின்னர் உறுப்பினர்கள் மீண்டும் பேசுவதற்கு அனுமதி கிடையாது. .. 107, 108

இசைவு அளிப்பதற்கு முன்—

அவையை ஏன் ஒத்திவைக்கவேண்டும் என்பதைப்பற்றி மட்டும் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். .. 63

சுருக்கமாகப் பேசுதல் வேண்டும். .. 71-72




பக்கங்கள்

த—தொடர்ச்சி.


தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

இசைவு அளிப்பதற்கு முன்—தொடர்ச்சி.

பத்திரிக்கையில் வந்த தகவலை வைத்துப் பேசுவது சரியல்ல.

அதன்மீது இங்கே விவாதம் நடத்தத் தேவையில்லை. .. 68—69

மற்றவர்கள் பேசியதற்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை. சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து ஏன் இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்பதற்கான காரணத்தை மட்டும் சொன்னால் போதும். .. 82

மற்றவர்கள் பேசியதுபற்றி விமர்சனம் செய்தல் கூடாது—

ஒத்திவைப்புத்தீர்மான அறிவிப்பின்மீது பேசும்போது அவர் அதைச் சொல்லியிருக்கக்கூடாது, இவர் இதைச் சொல்லியிருக்கக்கூடாது என்று எடுத்துச் சொல்வதும் மற்றொருவர் பேசியதற்குப் பதில், விளக்கம் என்று எல்லாம் சொல்வதும் சரியல்ல .. .. .. 63,64

ஒரு தீர்மானம் கொடுத்துவிட்டு, ஒழுங்குப் பிரச்சினை என்ற முறையில் அதைப்பற்றி எழுப்புவது கூடாது .. .. .. 981

நேரம் ஒதுக்குதல்—

ஆளும் கட்சியை எதிர்த்துப் பேசினாலும் ஆதரித்துப் பேசினாலும் நேரத்தை மேயாட்டி சீக்கிரமாக முடிக்க வேண்டுமென்று சொல்வது கட்சிக் கண்ணோட்டத்தோடு சொல்வதல்ல .. 77

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

பேசும் முறை—

தலைவர் அனுமதியின்றி பேசுதல் கூடாது. 930

மரபு—

பொதுவாக மேலவையில் நடைபெறும் ஒரு சம்பவத்தைப்பற்றி பேரவையில் எழுப்புவதில்லை. மேலவையில் எது நடந்தாலும் அந்நிகழ்ச்சிகள், விவாதங்களைப் பற்றிப் பேரவையில் பேசக் கூடாது என்பது நம்முடைய மரபு .. 38,40

வினாக்கள்—விடைகள்

துணை வினாக்கள்

உறுப்பினரொருவர் நீண்ட கேள்வியாகப் போட்டிருப்பதால், தாமும் நீளமாகப் பதில் சொல்ல வேண்டியிருக்கின்றது என்று ஓர் அமைச்சர் கூறியபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது:

''அமைச்சர்களுடைய திறமை சுருக்கமாகச் சொல்வதில்தான் இருக்கிறது. அமைச்சர்கள் சுருக்கமாக விடையளித்தல் வேண்டும்,'' .. .. .. 899

ஓர் உறுப்பினர் எழுப்பிய பிரச்சினைக்கு இன்னொரு உறுப்பினர் பதில் சொல்லுதல் கூடாது .. .. .. 649

கேட்கப்பெறுகின்ற கேள்வி மூலக் கேள்விக்கு ஒட்டியதாக இருத்தல் வேண்டும் .. .. .. 890

சுருக்கமாக இருக்க வேண்டும். .. 658,898

தனித்தனியாக கேள்வி கேட்டால்தான் அமைச்சர் பதில் சொல்ல முடியும். எல்லாவற்றையும் ஒன்றாகக் கேட்டால் [illegible] வைத்துக்கொள்ள முடியாது .. .. .. 637







தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி.

துணை வினாக்கள்—தொடர்ச்சி.

துணை வினாவிற்கான பதில் அமைச்சர்களிடமிருந்து முறையாக வருவதில்லையென்று ஓர் உறுப்பினர் கூறியபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது:

''அமைச்சர்களைத் தாங்கள் அப்படிக் கட்டாயப்படுத்த முடியாது'' .. 900

பதிலளிக்கும் முறை—

ஒரு துணை வினாவிற்கு அமைச்சர் நீண்ட விடை அளித்த போது தலைவர் குறிப்புரைத்ததாவது:

''இவ்வளவு நீண்ட விவரங்களை எதிர் காலத்தில் அமைச்சர்கள் மேஜை மீது வைத்துவிடுவது நலம்''. .. 22

பதில்கள் கேள்வியை ஒட்டியனவாக இருத்தல்வேண்டும் .. .. 921

பேரவைத் தலைவர் ஓர் கேள்வியை அனுமதித்தபிறகு, ''பொதுநலனுக்கு ஒவ்வாது என்பதால் இவ்வினாவிற்கு பதிலளிக்க இயலாது'' என சம்பந்தப்பட்ட அமைச்சர் விடையளிக்காமலிருப்பது சரிதானா என்கிற பிரச்சினை அவையில் எழுப்பப் பெற்றபோது ''நான் அதை அனுமதித்தேன். 'A Minister to whom a question or a supplementary question is put may decline to answer it on the ground that to answer it would be against public interest' என்பதாக விதி 39-இல் உள்ளது. ..

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி.

துணை வினாக்கள்—தொடர்ச்சி.

பதிலளிக்கும் முறை—தொடர்ச்சி.

அதற்கான விடையை வெளிப்படுத்துவது பொது நலனுக்கு உகந்தது அல்ல என்று அரசு கருதினால் அதனை வெளியிடாமல் இருக்க அவர்களுக்கு உரிமையிருக்கிறது. இதில் பிரச்சினை எதுவும் இல்லை'' என்று தலைவர் குறிப்புரைத்தார். .. .. .. .. 917—918

தனுஷ்கோடி. திரு. கோ.

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
- பால் வழங்கு திட்டங்கள்
- வேளாண்மை
- வேளாண்மை குறித்த மூலதனச்செலவு } 559—561

திருவேங்கடம் திரு. பெ, சு.:—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
- சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. } 931—932
- விவசாய பம்பு செட்டுகளுக்கு இணைப்பு சான்றிதழ், .. .. .. .. .. 1—4

திரைப்படம்—

சினிமா டிக்கட் விற்பனை, தண்டனை — — 449

தீண்டாமை—

ஒழிப்புக் குழு அமைத்தல்— .. — — 220—227

தீயணைப்புப் படை —

நிலையம் பாபநாசம், தஞ்சை — — 451



பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தீர்மானங்கள்—

நில மேம்பாட்டு வாரியம், உறுப்பினர் தேர்தல் (தீ.) .. .. .. .. .. 671—672

துணிகள்—

ஏற்றுமதிக் கட்டுப்பாடும், தொழிலாளர் பாதிப்பும் (க.ச.) .. .. .. .. 669—671

துரை கலியமூர்த்தி திரு.—

குடிநீர்க்குழாய்கள், ஊராட்சிகள், செப்பனிடல், 922

[illegible]லாமையம், பிச்சாவரம், சிதம்பரம் வட்டம். 463

தூக்குத் தண்டனை, ஆயுள் தண்டனை, விவரங்கள், 6—9

நெல், கொள்முதல் விலை .. .. .. 635—636

பால் பண்ணை, மாதவரம் பால் பண்ணை, விவரங்கள் .. .. .. .. .. 27—28

பூந்தோட்டம் ஊராட்சியைப் பிரித்தல் .. 216—217

பேருந்து நிலையம், சிதம்பரம், கடன் .. 23

வெள்ளியக்குடி ஊராட்சி பிரித்தல் .. 217

துரை கோவிந்தராசன், திரு.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
- பால் வழங்கு திட்டங்கள்
- வேளாண்மை } 511—518
- வேளாண்மை குறித்த மூலதனச் செலவு 527

துரை முத்துசாமி. திரு.—

உணவு விடுதிகள், உணவுப் பண்டங்கள், விலை.. 901—906

ஊராட்சிகளை பிரித்தமைத்தல் .. .. 211—216

பேரவையில் அலுவல். (த.தோ.) .. .. 929,930

பக்கங்கள்

த—தொடர்ச்சி.


**துரை முருகன். திரு.—**

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ.தீ.) .. 101

வரவு—செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. 937

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி .. .. பொதுச் சுகாதாரம், துப்பரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு 673,677 686,753

**தேசியத் தலைவர்கள் —**

பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள், அரசு விழா 462

**தொல்பொருள் ஆய்வு—**

பூம்புகார் பகுதி. 20—22

**தொழிலாளர்கள்—**

தருமபுரி மாவட்டத்தில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை 218

தொழில் தகராறுகள், டி.வி.எஸ். நிறுவனம் (பாடி) .. .. .. 477

பர்மா அகதிகள். தஞ்சை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரிவோர், கோரிக்கை .. 924—925

மரமேறும் தொழிலாளர்கள், காதி போர்டு மூலம் செய்யும் செலவு, .. .. .. 925—927

மின்வாரிய தற்காலிகத் தொழிலாளர்கள், நிரந்தரமாக்கப் பெறுதல் .. .. .. .. 633—635

மின் விளக்கின்மை, தொழிலாளர் குடியிருப்புகள், மாஞ்சோலை எஸ்டேட். .. .. .. 476




பக்கங்கள்

த—தொடர்ச்சி.


**தொழிற்சாலைகள்—**

பூச்சி மருந்து, மன்னார்குடி அருகில், .. 907

மூடப்பட்ட பஞ்சாலைகள், விவரம். .. 482

துறையூர் கந்தசாரி சர்க்கரை ஆலை .. 237—238

விசை சாயச்சாலை,-துவங்கல் .. .. 239—242


ந


**நடராசன் திரு. ஆ—**

மூடப்பட்ட பஞ்சாலைகள் விவரம் .. .. 482

வீட்டு வசதி, மாவுத்தம்பதி மலை சாதியினருக்கு. 663—664

**நிதி ஒதுக்கீடுகள்—**

வரவு—செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

கதர் .. .. .. 112—153

கால்நடை வளர்ப்பு .. .. .. 248—348 354—371

கைத்தறியும், நெசவுத் தொழிலும் .. 112—153

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன- நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. 931—939 941—1047

சமூக நலன், .. .. .. 248—348 354—371

செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. .. .. 316—371

தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் .. 673—770

பக்கங்கள்

ந—தொடர்ச்சி.

**நிதி அலுவல்கள்—தொடர்ச்சி.**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

பால் வழங்கு திட்டங்கள் .. .. 494—575

பொதுச் சுகாதாரம், துப்பரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச்செலவு .. .. 673—770

வீட்டு வசதி .. .. 673—770

வேளாண்மை .. .. .. 494—575

வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. 494—575

**நிலக்கடலை—**

ஆய்வு நிலையம், பொள்ளாச்சி, மாற்றுதல் .. 667—668

**நீர்ப்பாசனம்—**

அணைகள்—

குடகனாறு-உடைப்பு .. .. .. 196—201

ஆலத்துறை திட்டம் .. .. .. 193—194

சாத்தனூர் அணை, இடது புற மேல் மட்டக் கால்வாய்த் திட்டம் .. .. .. 631—632

தானே இயங்கும் நீருற்றுகள், சிதம்பரம் வட்டம் பச்சையாறு திட்டம் .. .. .. 666—667

மணிமுத்தாறு திட்டம் .. .. .. 194—196

வளையங்குளம் வட்டாரம், மதுரை மாவட்டம், 461

**நீதிமன்றங்கள்—**

சப்-மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம், பண்ருட்டி, மாஜிஸ்ட்ரேட் இல்லாமை .. .. 892

**நூல்கள்—**

விலைகளில் வேறுபாடுகள் .. .. .. 895

**நூலகங்கள்—**

அவசரநிலை காலத்தில் அகற்றப்பெற்ற நூல்கள் .. 483

654—655





பக்கங்கள்

ப

**பண்ணை சேதுராம் திரு. கே.—**

பாண்டியன் போக்குவரத்துக் கழகம், மதுரை மாவட்டம், விவரங்கள், .. .. 26—27

**பரமசிவன், திரு. அ. மா.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு

பால் வழங்கு திட்டங்கள் .. ..
வேளாண்மை .. ..
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. } 544—546

**பழனிச்சாமி திரு. க.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்
வீட்டு வசதி
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 724—726

**பழனிச்சாமி, திரு. சொ. ந.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

கால் கடை வளர்ப்பு .. .. ..
சமூக நலன் .. .. .. } 293—295

**பழனிமுத்து, திரு. சி.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
வீட்டு வசதி
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 688—691

**பழனியப்பன், திரு. அ. ப.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

கால்நடை வளர்ப்பு .. .. ..
சமூக நலன் .. .. } 261—264

பக்கங்கள்

ப—தொடர்ச்சி


**பள்ளிகளும் கல்லூரிகளும்—**

ஆடுதுறையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி .. 210—211

உயர்நிலைப் பள்ளி, திருமங்கலம், மாயூரம் தாலூகா, புதிய கட்டடம், .. .. 913—914

குடியாத்தம், பரதராமில் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் .. .. 208—209

பாலிடெக்னிக், தர்மபுரியில் துவக்கும் செயற் குறிப்பு .. .. .. 653—654

பிஷப் ஹிபர் உயர்நிலைப் பள்ளி, புத்தூர் செயல்படாமை, .. .. 19—20

புதிய உயர்நிலைப் பள்ளி துவங்க விண்ணப்பங்கள் 201—208

**பாரதிதாசன்—**

பாவேந்தர் பிறந்தநாள், அரசு விழா .. 462

**பால்—**

தானியங்கி பால் விற்பனை நிலையங்கள், சென்னை, 28—36

மாதவரம் பால் பண்ணை, விவரங்கள், 27—28

விற்பனை, சென்னை நகர், நடமாடும் ஊர்தி, .. 28

**பாலகிருஷ்ணன், திரு. சோ.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

கைத்தறியும் நெசவுத் தொழிலும் .. } 114—11

கதர் .. .. .. }

**பாலகுரு, திரு. வெ.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. 973—97

**பாலம்—**

ராஜன் வாய்க்கால் பாலம், மாயூரம் ஒன்றியம், 92




பக்கங்கள்

ப—தொடர்ச்சி.


**பாலன், திரு. க.—**

தீண்டாமை ஒழிப்புக் குழு .. .. .. 220—227

வரவு-செலவுத் திட்டம் 1978-79, வாக்கெடுப்பு:

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு } 933

தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் வீட்டுவசதி } 726—729,

பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு }

**புயல்—**

புயல் வெள்ளம், பாதிப்பு, உதவித்தொகை .. 454

புயலால் மரணமடைந்தோர், உதவித்தொகை .. 451

**புருஷோத்தமன், திரு. து.—**

திருட்டுக் குற்றங்கள், சென்னை நகர் .. .. 629—631

**புஷ்பராஜு, திரு. த.—**

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஓ.தீ.) .. .. 46—47

**பெரியசாமி, திரு. டி. பி. எம்.—**

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஓ.தீ.) .. .. 111

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

கைத்தறியும் நெசவுத் தொழிலும் .. .. } 131—136

கதர் .. .. .. .. }

பால் வழங்கு திட்டங்கள் .. .. } 535—539

வேளாண்மை .. .. .. }

வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. }

**பெரியசாமி, திரு. மொ.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள் .. .. } 543—544

வேளாண்மை .. .. .. }

வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. }

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.


பெரியசாமி திரு. ரா.—

துறையூர் கந்தசாரி சர்க்கரை ஆலை .. .. 237—238

பெருமாள், திரு. நா.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டுவசதி } 718—721
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு }

பெருமாள், திரு. ரா. கு.—

வரவு-செலவுத் திட்டம், 1978 79, வாக்கெடுப்பு:
பால் வழங்கு திட்டங்கள் .. .. }
வேளாண்மை .. .. .. } 530—534
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. }

பொன்னுரங்கம், திரு. ப.—

நூலகங்கள், அவசரநிலை காலத்தில் அகற்றப் பெற்ற நூல்கள் .. .. .. .. 654—655

போக்குவரத்து—

அரசுடைமையாக்குதல், தனியார் துறை தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு .. .. 664—665
ஆட்டோ ரிக்ஷாக்கள் மீட்டர்களில் முறைகேடுகள் 480
டாக்ஸிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள், சென்னை விவரம் .. .. .. .. .. 479
துரிதகால வண்டி, கள்ளக்குறிச்சி-சென்னை .. 24—26
பாண்டியன் போக்குவரத்துக் கழகம், மதுரை மாவட்டம். விவரங்கள் .. .. .. 26—27
பேருந்து நிலையம், சிதம்பரம், கடன் .. .. 23
பேருந்து பயணிகள் எண்ணிக்கை எடுக்க கம்யூட்டர்கள் .. .. .. .. .. 232—235
பேருந்து, வந்தவாசி-கள்ளக்குறிச்சி .. .. 923—924
மாற்றுப்பாதை அமைத்தல், நெடுஞ்சாலை எண் 47 (கோவை) .. .. .. .. .. 481
லாரிகள், விதிகளை மீறியதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை .. .. .. .. .. 227—232




பக்கங்கள்

ம


மணிமாறன், திரு. மா.— .. .. 635—636

நெல் கொள்முதல் விலை
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
கால்நடை வளர்ப்பு .. .. .. } 253—259
சமூக நலன் .. }

மருத்துவ மனைகள்—

அரசு மருத்துவ மனை, பொறையார் விரிவுபடுத்துதல் .. .. .. .. 628—629
கட்டட வேலை, தூனேரி .. .. .. 627—628
தருமபுரி மாவட்டத்தில் இ. எஸ். ஐ. .. 210
மருந்தகம், ஜோலார்பேட் கிராமம், திருமயம் .. .. 891—892

முருகேசன், திரு. கி.— .. 928—929

அஞ்சல் தலை. பெரியார் (த. கோ.)
அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ. தீ.) .. .. 67, 68, 71, 77, 106
கடிதம், சமூக நலத்துறை அமைச்சர் எழுதியது (அ.) .. .. .. .. 42—43
தீ விபத்து, காந்தி நகர், வி. வி. ஆர். காலனி (முதுகுளத்தூர்) (க. ஈ. அ.) .. .. 493

மாணவர்கள்— .. 910—917

தேர்வு, இன்ஜினீரிங் கல்லூரி பாலிடெக்னிக் 489

மார்க்கபந்து, திரு. ரா.—

அரசு ஊழியர்கள், வேலை நிறுத்தம் (த. கோ.) .. 46—47
அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ. தீ.) .. .. 80—84
.. 196—201
குடகனாறு அணை, உடைப்பு .. .. 636
நெல் கொள்முதல் விலை
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
கால்நடை வளர்ப்பு .. .. } 250, 251, 295—299
சமூக நலன் }

ம—தொடர்ச்சி.


**மார்க்கபந்து, திரு. ரா.—தொடர்ச்சி.**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—தொடர்ச்சி.

கைத்தறியும் நெசவுத் தொழிலும் .. ..
கதர் .. .. .. .. .. .. 136—139

பால் வழங்கு திட்டங்கள் .. .. .. 494, 495,
வேளாண்மை.. .. .. .. 496,
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு 499—505

வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள், வடாற்காடு .. .. .. .. .. 464

**மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.—**

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ.தீ.) .. .. .. 46—49

ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களை எந்த வரிசையில் பேச அழைப்பது என்பது குறித்து (ஓ.பி.) .. 60, 110

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்
வீட்டுவசதி
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. 729—734

**மின்சாரம்—**

இணைப்பு, பம்பு செட்டுகளுக்கு, சாத்தான்குளம் யூனியன் .. .. .. .. .. 5—6

இணைப்பு, புதிய பம்பு செட்டுகளுக்கு, விதியைத் தளர்த்தல், தர்மபுரி மாவட்டம் .. .. 4

மின் வாரிய ஊழியர்கள் இடமாற்ற விண்ணப்பம் 437

விவசாய பம்புசெட்டுகளுக்கு இணைப்பு, சான்றிதழ் 1—4

**மீனளம்—**

மீனவர்கள், தகராறுகள் .. .. .. 645—649

**முத்துசாமி, திரு. துரை—**

வண்ணார்ப்பு, எடுத்துக் கொள்வது குறித்து (த.கோ.) .. .. .. .. .. [illegible]






ம—தொடர்ச்சி.


**முருகேசன், திரு. கூ. ச.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
கால்நடை வளர்ப்பு .. .. .. 282—287
சமூக நலன் ..

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் .. 676
வீட்டுவசதி .. ..
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு

**மொழிகள்—**

மொழிப் பிரச்சினை, பிரதமரிடமிருந்து கடிதம் .. 916—919

ய

**யூசப், திரு. யா. சை. மூ.—** .. .. 193—194

[illegible] நீர்ப்பாசன திட்டம் .. .. 194—196

[illegible]யாறு திட்டம் ..

[illegible]செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
கால்நடை வளர்ப்பு .. .. .. 259—261
சமூகநலன் ..

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலி யன நகர்ப்பகுதி மேம்பாடு 996—999

ர

**ரகுமான்கான், திரு. ஏ.—**

உள்ளாட்சித்துறை அமைச்சர் உதவியாளர் பஸ் பாஸைத் தவறாகப் பயன்படுத்தியது குறித்து அமைச்சர் அளித்த தகவல் குறித்து (உ.பி) 349—354

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு 1045

**ரசாக், திரு. மு. மு. அ.—**

பச்சையாறு திட்டம் .. .. .. .. 194—196

பக்கங்கள்.

ர—தொடர்ச்சி.

ரமணி, திரு. கு.—

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள் வேலை நிறுத்தம், (ஒ. தீ.) .. .. 46—47

உணவு விடுதிகள், உணவுப் பண்டங்கள், விலை .. 901—906

மின் வாரிய தற்காலிகத் தொழிலாளர்கள், நிரந்தரமாக்கப் பெறுதல் 633—635

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
வீட்டு வசதி
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. } 675, 764

ராமசாமி, திரு. து.—

அரசு ஊழியர்கள், வேலை நிறுத்தம் (த. கோ.) 488—489

ல

லத்தீப், திரு. எம். ஏ.—

அரசு ஊழியர்கள், வேலை நிறுத்தம் (த. கோ.) .. 489—490

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ. தீ.) .. .. 46—47, 72—76, 78—80, 111

துணிகள், ஏற்றுமதிக் கட்டுப்பாடும் தொழிலாளர் பாதிப்பும் (க.ஈ.) .. .. .. .. 669—670, 671

42-வது விதியின்கீழ் கொடுத்த அறிவிப்பு (த.கோ.) 246—248

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

கால்நடை வளர்ப்பு .. .. .. } 250, 252
சமூக நலன் .. .. .. } 287—293

கைத்தறியும் நெசவுத் தொழிலும்
கதர் } 114, 140—143



பக்கங்கள்

ல—தொடர்ச்சி.

லத்தீப், திரு. எம். ஏ.—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—தொடர்ச்சி.

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன ..
நகர்ப்பகுதி மேம்பாடு .. } 933, 934, 1017—1024, 1032, 1042

செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. .. .. } 318

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
வீட்டு வசதி
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 674, 676

பால் வழங்கு திட்டங்கள் .. ..
வேளாண்மை ..
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. } 496, 519—529

வ

[illegible], திரு. கே.—

[illegible]-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள் .. ..
வேளாண்மை .. ..
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. } 549—552

வரதராஜன், திரு. என்.—

உணவு விடுதிகள், உணவுப் பண்டங்கள், விலை, 901—906

மாநாடு கடன் நிவாரண, தீர்மானங்கள். .. 18

வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு:

கால்நடை வளர்ப்பு .. .. .. } 267—271

சமூக நலன் ..
செய்தி, சுற்றுலா, திரைப் படத்தொழில் நுட்பவியல் .. .. } 317, 336—340

வரதராஜன், திரு. சௌ. வே.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன
நகர்ப்பகுதி மேம்பாடு } 964—967

வ—தொடர்ச்சி

பக்கங்கள்

**வரிகள்—**

விற்பனை வரிக்குப் பதில் எக்சைஸ் தீர்வை .. 455

**வாரியங்கள்—**

மின் வாரியம்:—

ஊழியர்கள், தென் சென்னை மின் வழங்கு நிறுவனம், முறைப்படுத்துதல் .. .. 893—894

பொறியாளர் தேர்வு 894

விஜிலன்ஸ், இலாகாவில் குற்றக் கண்டு பிடிப்புப் பணி. .. .. .. .. 408

நில மேம்பாட்டு வாரியம், உறுப்பினர் தேர்தல் (தீ.) .. .. .. .. 671—672

**விடுதிகள்—**

அரிசன பின் தங்கியோர் மாணவர், அசைவ உணவு, .. .. .. .. 445

**விவசாயம்—**

நிலக்கடலை ஆய்வு நிலையம், பொள்ளாச்சி, மாற்றுதல் .. .. .. 668—669

பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு, சான்றிதழ் 1—96

**வின்சென்ட், திரு. மீ.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு: செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் சட்டங்கள் .. .. .. 346—348, 633

**வீட்டு வசதி—**

மணிமுத்தாறு அணை பராமரிப்பு ஊழியர் குடியிருப்புகள், மராமத்து .. .. 632—633

மலைசாதியினருக்கு வீடுகள், மாவுத்தம்பதி .. 663—664



பக்கங்கள்

வ—தொடர்ச்சி

**வீரப்பன், திரு. ஆர். எம்.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு: செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. .. .. .. 316—317, 318, 354—371

**வெங்கிடு சாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.—**

...ற்றுப் பாதை அமைத்தல். நெடுஞ்சாலை எண். 47. (கோவை.) .. 481

**...ல், திரு. த.—**

...ரிசி ஆலைகள், ' ...லர் டைப் ' அரவை முறை 895—901

...த்தனூர் அணை, இடதுபுற மேல் மட்டக் கால்வாய்த் திட்டம். .. .. .. 631—632

... செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
...ல்நடை வளர்ப்பு, .. .. ..
...மூக நலன். .. .. .. .. } 248

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு. .. .. 994—996

**வேலை வாய்ப்பகங்கள்—**

பதிவு செய்துள்ள உடல் ஊனமுற்றோர் விவரம். .. .. .. .. 466

ஜ

**ஜெபமணி, திரு. ரா.—**

பம்பு செட்டுகள், கடன் வசூல், நிறுத்துதல், .. 10—13

மின் இணைப்பு, பம்பு செட்டுகளுக்கு, சாத்தான் குளம் யூனியன், .. .. .. 5—6

ஜ—தொடர்ச்சி


| | | பக்கங்கள் |
|---|---|---|
| ஜேம்ஸ், திரு. ஜே.— | | |
| | அரசு ஊழியர்கள், வேலை நிறுத்தம் (த. கோ.) | 487—488 |
| | அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம், (ஒ. தீ.) .. | 46—47 |
| | ஒத்தி வைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களை எந்த வரிசையில் பேச அழைப்பது என்பது குறித்து (ஒ.பி.) | 65—70, 71 |
| | கேள்விகள், முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும் இலாகாக்கள் தொடர்பானவை, (த.கோ.) .. | [illegible]8, 107[illegible] |
| | வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு: | 37—38 |
| | தொழிலாளர் நானும் தொழிற்சாலைகளும் .. வீட்டு வசதி .. .. .. பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு .. | [illegible]8, 713—71[illegible] |


---

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

---

### திங்கட்கிழமை, 1978 மார்ச்சு 6

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு

* 401 வினா—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத்திற்குப் புதியதாக மின்இணைப்பு கோரும் விவசாயிகளை மின்சார வாரியம், நிலநீர் பொறியாளர்களிடம் சான்றிதழ் பெற்று வர கட்டாயப்படுத்துவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவசாயிகளின் நன்மை கருதி அம்முறை ரத்து செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) மற்றும் (ஆ): தற்சமயம் அம்முறை அமுலில் இல்லை.

**திரு. த. வேணுகோபால்:** பேரவைத் தலைவரவர்களே, சாத்தனூர் பகுதியில் எப்போதும் நீர்ப் பற்றாக்குறை என்பது இல்லை. ஆகவே, அப் பகுதியிலாவது அந்த நிலத்தடிநீர் சான்றிதழ் இல்லாமல் மின்சாரம் அளிக்க அரசு ஆவன செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவரவர்களே, இவ்வாண்டு மின்சாரம் தர இருக்கின்ற 35,000 பம்ப்செட்டுகளுக்கும் அத்தகைய நிலத்தடி நீர் சான்றிதழ்கள் வேண்டுமென்று வற்புறுத்தப்படமாட்டாது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட கிணறுகளுக்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப் பட்டிருந்தால் மின்னிணைப்பு கிடைக்கும். 'சாங்ஷன்' ஆகாமல் இருந்தால் கொடுக்க இயலாது.

புலவர் கா. கோவிந்தன்: அப்படிப்பட்ட விவசாயிகள் 1969 ஆம் ஆண்டிலேயே கடன் வாங்கியும், இன்னும் மின்னிணைப்புக் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக் காவது உடனடியாக மின்னிணைப்பு கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அம்மாதிரி இருந்தால் அதை அரசு பரிசீலிக்கும்.

### தூக்கு தண்டனையை நீக்குதல்.

* 404 வினா—திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா, திரு. துரை ரவிமூர்த்தி, திரு. எஸ். கணேசன், திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தூக்கு தண்டனையை ஒழிக்கும் யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

(ஆ) தமிழ்நாடு சிறைகளில் உள்ள ஆயுள் தண்டனைக் குற்றவாளிகளின் எண்ணிக்கை என்ன?

(இ) ஆயுள் தண்டனைக் காலம் என்பது எத்தனை ஆண்டுகள்?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR:

(*a*) No.

(*b*) There are 2,653 life prisoners confined in Tamil Nadu as on 5—11—1977.

(*c*) 20 years.

திரு. எஸ். கணேசன், தலைவரவர்களே, இந்த ஆயுள் தண்டனை என்பது மற்ற மாநிலங்களில் 7 ஆண்டு, 8 ஆண்டு என்று இருப் பதாகச் சொல்லப்படுகிறது. பொதுவாகவே, ஆயுள் தண்டனை பெற்று, சிறைச் சாலைகளில் இருக்கிற குற்றவாளிகள் 4 அல்லது 5 ஆண்டுக் காலத்தில் நேர்மையாளர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்



களாகவும் மாறிவிடுகிறார்கள். எனவே, இந்த அரசு அதைப் பரிசீலனை செய்து, 20 ஆண்டு என்று இருப்பதை குறைக்க நடவடிக்கை எடுக்குமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Regarding the period of imprisonment which is taken into consideration by the neighbouring States, this Government has no information. But so far as the policy of this Government is concerned, it is mainly dependent on the attitude of the Centre also. But normally when a man completes 10 years of actual imprisonment excluding remissions, this Government always considers their eligibility and claim for release on the recommendation of the Advisory Board.

(முற்பகல் 9-10)

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் தலைவரவர்களே, சட்டங்கள் கடுமையாக இருந்தால்தான் சட்டம் ஒழுங்கு (Law and Order) காப்பாற்றப்படும் என்பதும், பொதுமக்கள் அச்சமின்றி நிம்மதியாக வாழ்வார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா? அது உண்மையா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: We believe in this theory of proportionate punishment to the heinous character of the offence.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, இப்போது கொலைக் கைதிகளுக்குத்தான் தூக்குத் தண்டனை விதிக்கப்படு கிறது. அதேமாதிரி கலப்படம் செய்கின்ற சமூகவிரோத செயல்களைப் புரிபவர்களுக்கும் இவ்வாறு தூக்குதண்டனை விதிக்க சட்டம் கொண்டுவரப்படுமா? ட்ரான்ஸ்போர்ட்டேஷன் ஃபார் லைப் என்ற பழைய சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: I think this transportation for life has been given up a long time back, and in its place, imprisonment for life has been substituted. I do not think that the modern approach to criminal law would warrant transporting prisoners to the Andamans, or transportation for life will be countenanced by any section of this House.

செய்து, புதிதாக தற்போது ஆய்வு செய்து, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மனுதாரர்களுக்கு மின்சாரம் வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, சாங்ஷன் செய்வதிலே தில்லுமுல்லுகள் நடந்ததாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். தில்லுமுல்லுகள் நடந்தன என்பதற்கு எந்தவிதமான ரிகார்டும் கிடையாது.

* 402 Q.— Dr. K. SAMARASAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government propose to relax the existing procedure that power supply to new pump-sets are prohibited for wells situated within a distance of 400 feet in Dharmapuri district where adequate vround water is available ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** கூட்டுறவு நிலவள வங்கி, கிராமப்புற மின் வசதிக் கழகம் ஆகியவையின் உதவியோடு மின் இணைப்பு வழங்கும் திட்டங்கள், இந்தக் கட்டுப்பாட்டிற்கு உட்படுகின்றன. மற்ற திட்டங்களின் கீழ் இணைப்பு வழங்குவதற்கு தற்போது இம்முறை அமுலில் இல்லை.

**டாக்டர் கே. சமரசம்:** தலைவரவர்களே தர்மபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால் மட்டுமல்ல; அங்கே 3 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள்தான் அதிகமாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால் மின் இணைப்பு கொடுப்பதில் இப்போதிருக்கின்ற விதியைத் தளர்த்தி, அத்தனை பேர்களுக்கும் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் 20,550 மனுக்கள் வந்திருக்கின்றன. அதிலே அனுமதி கொடுக்கப்பெற்றவை திட்டத்தின்படி 3,500 தான். ஆகையால் அங்கே தேவை அதிகமாகும். அதேநேரத்தில் 'சாங்ஷன்' ஆனது 3,500 என்ற காரணத்தால் பல மனுதாரர்களுக்கு மின்சாரம் வழங்க முடியவில்லை. இதற்குத் தனியாகத் திட்டம் போடுவதற்கில்லை.



* 403 வினா—திரு. ர. ஜெபமணி: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சாத்தான்குளம் யூனியனில் உள்ள விவசாயிகளின் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கிடைக்காமல் உள்ளது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) மற்றும் (ஆ): மின் இணைப்பு வழங்க அரசு நிலுவையில் உள்ள மனுக்களுக்கு ஒரு முன்னுரிமைப் பட்டியல் தயாரித்துள்ளது. இந்த வழிமுறைக்கு ஏற்ப மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

**திரு. ர. ஜெபமணி:** சட்டப்பேரவைத் தலைவரவர்களே, திருச்செந்தூர் தாலுகா பின்தங்கிய தாலுகாவாக இருக்கிறது. அந்தத் தாலுகாவில் சாத்தான்குளம் மிகவும் பின்தங்கியது. அந்த யூனியனுக்கு மட்டும் மின்னிணைப்பு கிடையாது என்று அரசாங்கம் அறிவித்திருப்பதாக அதிகாரிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதனால் அங்கே இருக்கிற விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதனால் என்ன காரணம் என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, சாத்தான்குளம் ஒன்றியத்தில் 1,159 மனுக்கள் வந்திருக்கின்றன. 496 அவற்றில் 35 மனுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. மனுக்கள் ஆதாயமற்றது என்ற காரணத்தால் நிராகரிக்கப் பட்டன. மீதம் 628 மனுக்கள் பற்றி மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**புலவர் கா. கோவிந்தன்:** தலைவரவர்களே, நிலவள வங்கிகள் கடன் கொடுக்கின்ற நேரத்தில், அந்தக் கடனைக்கொண்டு கிணறு வெட்டி, ஆயில் எஞ்சின் அல்லது மின்சார மோட்டார் வைத்திருந்தால், அவர்கள் பாதிக்கப்படாத வகையில் அவர்களுக்காவது மின்சார இணைப்புக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. என். பழனிவேல்:** பேரவைத் தலைவரவர்களே, ஆயுள் தண்டனை 20 ஆண்டுகாலம் என்று இருப்பதால் அவர்களை ஒரு வருடத்திற்கு ஒரு மாதமாவது பரோலில் விடக்கூடிய முறையில் ஏதாவது இப்போது இந்த அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: I think at least this Government has been fairly liberal in granting parole. The suggestion that every year the life imprisonment prisoners, that is what we call the lifers, may be given the benefit of parole, will be considered by this Government on merits.

**திரு. எஸ். ஆர். இராதா:** பேரவைத் தலைவரவர்களே, ஆயுள் தண்டனை மிக நீண்ட ஆண்டுகளாக இருக்கிறது. அவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாவதற்கும் அன்றாட மக்கள் பிரச்சினையில் இணைந்து கொள்வதற்கும் அவர்களைப் பரோலில் விடவேண்டியது அவர்களுடைய அடிப்படை உரிமையாக இருக்கிறது. வெளியே அவர்கள் அப்படி வருவதன் காரணமாக திருந்துவதற்கும் ஒழுக்கம் உள்ளவர்களாக மாறுவதற்கும் ஒரு பாச உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படுவதற்கும் வழிவகையாக இருக்கிறது. ஆகவே அந்த ஆண்டுக்கு ஒரு முறை என்பதை 6 மாதங்களுக்கு ஒரு முறை அவர்களை அனுப்பி, மக்களோடு பழக விட்டு அவர்கள் தவறு செய்கின்றார்களா என்பதைப் பார்த்து அவர்கள் சிறை வாழ்க்கையிலே திருந்துவதற்கு இந்த அரசு வழிவகைகள் காண முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: The principle behind punishment is—let us all remember—the prisoner has committed a very serious offence, particularly the lifers. You must also try to view it from the standpoint of the family which lose its breadwinner. If 'X' is murdered and 'X' is the breadwinner, the entire family becomes destitute or decrepit practically. Therefore, viewing from that standpoint, there is some amount of validity in the theory of punishment. Whether parole must be granted every six months, is a matter which will be considered on merits again.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, 1976-ஆம் ஆண்டு அட்வைசரி போர்டால் பரிந்துரை செய்யப்பட்ட ஆயுட்கால தண்டனைக் கைதிகள் பற்றிய நிலைகள் கவர்னர் ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் ஒத்தி வைக்கப்பட்டு இருப்பதாகவும் அது மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றும் ஆயுட் கால கைதிகள் குறைபட்டுக்கொள்கிறார்கள், இது அரசுக்குத் தெரியுமா? அது பற்றி அரசு ஏதேனும் ஆவன செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: A separate question may be put. Government needs notice.





### வெளி மாநில கைதிகள்.

*405 வினா—**திரு. எஸ். கணேசன்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமது மாநிலத்தின் உள்ள சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டுள்ள வெளி மாநிலத்தைச் சேர்ந்த கைதிகளின் எண்ணிக்கை என்ன?

(ஆ) அவர்கள் எந்தெந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR:

(a) 26.

| | | |
|---|---|---|
| (b) | Andhra Pradesh ... ... ... | 4 |
| | Kerala ... ... ... ... | 3 |
| | Karnataka ... ... ... ... | 3 |
| | Maharashtra ... ... ... | 3 |
| | Madhya Pradesh ... ... ... | 4 |
| | West Bengal ... ... ... ... | 2 |
| | Pondicherry ... ... ... ... | 7 |
| | | 26 |

**திரு. எஸ். கணேசன்:** வேறு மாநிலங்களிலிருந்து இங்கேயுள்ள இந்த மாநிலத்தில் சிறைச்சாலைகளில் இருக்கக்கூடிய கைதிகள் அந்தந்த மாநில அரசுகள் கேட்டுக் குற்றம் புரிந்தவர்களா அல்லது இந்த மாநிலத்தில் காவலில் வைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்களா? அப்படியானால் அவர்களுக்காகும் செலவுகளை அந்தந்த மாநில அரசு ஈடுசெய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : [1978 மார்ச் 6
ஆண்டுகளுக்கு முன்பாகவே பேரவைத் தலைவரவர்களே, 5
கொண்டு அதற்கான மனுவை பம்ப் செட் வாங்கி வைத்துக்
பின்பும், இன்று வரையிலும் மின்சார இலாகாவிற்குப் போட்ட
சர்ட்டிபிகேட் இல்லை என்பதால் நிலத்தடி நீர் கிளியரன்ஸ்
கிறார்கள். ஆகவே, அதை மின்சார இணைப்புத்தர மறுக்
எடுக்கப்படுமா? நீக்குவதற்கு ஏதாவது முயற்சி

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :
மின்சார வாரியம் ஏற்கனவே தலைவரவர்களே,
களுக்கு மின்சாரம் சாங்ஷன் செய்யப்பட்ட மனுக்
இருக்கிறது. வழங்கவேண்டுமென்று அரசு உத்தரவிட்டு
மோட்டாரை அவர்கள் மின்சார வாரியத்திற்கு மனு போடாமல்
அவர்களுடைய மட்டும் வாங்கி வைத்துக்கொண்டு இருந்தால், அது
இஷ்டமே தவிர வேறு அல்ல.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, மனுக்களைப் போட்டு
இருப்பவர்களுக்குக் கூட கொடுக்கமாட்டேன் என்று சொல்
கிறார்கள். ஆகவே ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக
மனுப்போட்டவர்களுக்காவது கொடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மனு
போட்டவர்களுக்கு எல்லாம் தர இயலாது. சாங்ஷன் ஆகியிருப்
பவர்களுக்கு மட்டும் தான் தர முடியும்.

திரு. கா. கந்தசாமி: தலைவரவர்களே, நிலத்தடி நீர் சான்றிதழ்
கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்னும் வரவில்லை
வரவில்லை என்று சொல்கிறார்கள். சாங்ஷன் செய்யப்பட்ட
கிணறுகளுக்குக் கூட அந்த சர்டிபிகேட் கொடுத்தால் தான்
அவர்கள் மின்சார சப்ளை செய்ய முடியும் என்று சொல்கிறார்கள்.
இன்னும் அந்த நிலத்தடி நீர் சான்றிதழ் கோவை
மாவட்டத்திற்குப் போய்ச்சேரவில்லையா? அரசு அதற்கான
உத்தரவை மின்சார வாரியத்திற்கு அனுப்பவில்லையா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே,
கோவை மாவட்டமானாலும் சரி, அது வேறு எந்த மாவட்ட
மானாலும் சரி, சாங்ஷன் ஆகி இருக்குமானால் அப்படி சாங்ஷன்
செய்யப்பட்ட பம்ப்செட்டுகளுக்கு அந்த நிலத்தடி நீர் சான்றிதழ்
தேவை இல்லை என்று மின்சார வாரியத்திற்கு அரசு சொல்லி



இருக்கிறது. அதற்கான உத்தரவு பிறப்பித்து இருக்கிறது.
ஆகவே கோவை மாவட்டத்தில் அத்தகைய குறை இருக்குமானால்
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சரின் கவனத்திற்குக்
கொண்டு வரலாம்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, அப்படி சாங்ஷன்
செய்யப்பட்ட கேஸ்கள் மிக சொற்பமாக இருக்கின்றன. சாங்ஷன்
ஆகாத, மனு போட்டவர்கள்—நிலவள வங்கி மூலமாக கடன்
பெற்று கிணறு வெட்டி, பம்ப்செட் வாங்கி வைத்து இருப்பவர்கள்
ஏராளமான பேர் இருக்கிறார்கள். அவர்கள் மின்சார இலாகா
விற்கு மனுப் போட்டு விட்டு நீண்ட நாட்களாகக் காத்துக்கொண்டு
இருக்கிறார்கள். சென்ற ஆண்டு 35,000 கிணறுகளுக்கு மின்
இணைப்பு கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அது பூராவும்
இன்னும் கொடுக்கப்படவில்லை. இந்த ஆண்டும் அப்படி
கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. இந்த ஆண்டு எல்லா
இடங்களிலும் தண்ணீர் பற்றுக்குறை இல்லாமல் இருப்பதால்
அந்த விதியைக் கொஞ்சம் தளர்த்தி விவசாயம் பாதிக்காத
அளவிற்கு மின் இணைப்புகளைத் தருவதற்கு, அந்த நிலத்தடி நீர்
சான்றிதழ் தேவை என்ற விதியைத் தளர்த்தி, விரைவாக
நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே,
மின்சாரம் கோரி மனுப் போட்டவர்கள் 2¼ லட்சம். ஆனால்
சாங்ஷன் செய்யப்பட்ட மனுக்கள் 80,000. நாம் இந்த ஆண்டு
தர இருப்பது 35 000. ஆகவே தான், சாங்ஷன் செய்யப்பட்ட
வர்களுக்கு முதலிலே மின் வசதி கொடுத்து விட்டு, பிறகு
மற்றவை குறித்து அரசு முடிவு எடுக்கும்.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே,
ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2¼ லட்சம் மனுக்கள்
வந்து இருப்பதாகவும், அதிலே 80,000 பேருக்குத்தான் சாங்ஷன்
செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் இந்த ஆண்டு 35,000 சாங்ஷன்
செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்கள். ஆனால் அப்படி
சாங்ஷன் செய்யப்பட்டதிலே கடந்த காலத்தில் பல
இடையூறுகள் நடந்த காரணத்தாலே அவற்றை மறுபரிசீலனை

[1978 மார்ச் 6

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Most of these prisoners are confined in the jails in the State for the offences committed inside the State. If their nativity—as the word used is nativity—place of birth is in the other State and if the offence is committed inside the State, they are confined in our State. If the other State Government is willing to take them, we are prepared to send them back. That is only on reciprocal basis, please remember.

MR. SPEAKER: Thiru Sivaswamy.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: On a point of further explanation to the supplementary question put by the Hon. Member Thiru Ganesan. Some years back you must have read in the newspapers there was one Sarala Sella *alias* Chandra—Car Mohini—she came from Karnataka. But the Car Mohini is confined in the jail in Tamil Nadu State because the offence was committed inside Tamil Nadu.

**திரு. செ. சிவசாமி:** அவசரநிலை காலத்தில் மதிப்பிற்குரிய ஷேக் அப்துல்லா அவர்கள் நம் மாநிலத்தில் சிறைவைக்கப் பட்டதாகத் தெரிகிறது. அவர்கள் எந்தச் சிறையில் இருந் தார்கள், எவ்வளவு காலம் இருந்தார்கள், எவ்வளவு செலவாயிற்று என்று சொல்லப்படுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Government needs notice.

**பம்புசெட்டுகளுக்குக் கடன் உதவி.**

*406 வினா—**திரு. ர. ஜெபமணி:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கிடைக்கும் வரை அரசு கடன் வசூலை நிறுத்திவைக்க உத்தேசமுண்டா?

(ஆ) அந்த இடைக்காலத்துக்கு வட்டி இல்லாமல் வசூலிக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு க. உரா. எட்மண்ட்:** (அ) இல்லை. இருந் போதிலும், மின் இணைப்புக் கிடைக்காத புதிய கிணறும் பம் செட்டும் சேர்ந்த அல்லது கிணற்றை ஆழப்படுத்தவும் பம் செட்டும் சேர்ந்த க... தவணையை செலுத்த கடன்



1978 மார்ச் 6]

வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு ஆண்டு காலச் சலுகை அனுமதிக்கப்படுகிறது. மின் இணைப்பு முற்றுப்பெறாத தவிர்க்க முடியாத இனங்களில் கடன் தவணை செலுத்த அதிகப்பட்சமாக 23 மாதங்கள் அனுமதிக்கப்படுகின்றது. கடன் பம்புசெட்டுக்கு மட்டுமானால் சலுகை காலம் அனுமதிக்கப்படுவதில்லை.

(ஆ) இல்லை.

**திரு. ர. ஜெபமணி:** சபாநாயகர் அவர்களே, விவசாயிகள் கிணறு வெட்டிவிட்டு தண்ணீர் இல்லாமல் அவர்கள் கரன்ட் கேட்கவில்லை. தண்ணீர் நிறைய இருந்தாலும் கொடுப்பதில்லை என்பது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும். ஆனால் அரசாங்கத்திலிருந்து கிணறுகள் வெட்டுவதற்கு கடன் கொடுத்திருக்கிறார்கள். பம்ப்செட்ஸ் வைக்கவும் கடன் கொடுத் திருக்கிறார்கள். ஆனால் கரன்ட் கொடுக்காமல், அந்தக் கடனை வசூலிப்பதில் அதைக் கொஞ்சம் தள்ளி வைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்களேதவிர வட்டியோடு சேர்த்து நன்றாக வசூலித்து விடுகிறார்கள். தவறு அரசாங்கத்தினுடையதே தவிர கிணறு வெட்டியவர்கள் தவறு அல்ல. மின் இணைப்பு கேட்டால் நிலத்தடி நீர். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பெரியவர், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. ர. ஜெபமணி:** ஆகவே நிலத்தடி நீர் இல்லையென்று சொல்லக்கூடியவர்கள் ஆயில் என்ஜின் வைத்து தண்ணீர் எடுப்பவர் களுக்கு அனுமதி கொடுக்கிறார்கள். அப்படி ஆயில் என்ஜின் வைக்கமுடியாதவர்களுக்கு கரன்ட் கொடுப்பதுவரை கடன் வசூல் செய்வதை ஒத்திவைக்க வேண்டும், வட்டியை நீக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குப் பதில் சொல்லி விட்டேன். வட்டியை நீக்க முடியாது என்று நான் ஏற்கனவே

**திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, பம்பு செட் வாங்குவதற்கு லோன் வழங்கப்படுகிறது, கிணறு வெட்டு வதற்கும் லோன் வழங்கப்படுகிறது. இந்த இரண்டும் சேர்த்து.

[1978 மார்ச் 6

ஒரு வருடத்திற்கு 2000 ரூபாய் வரை தவணை வருகிறது. மகசூல் கிடைப்பதற்கு முன்பு கூட இந்தத் தவணையைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால் கடன் பெற்று தொழிற் சாலையை ஏற்படுத்தி தொழிற்சாலை இயங்க ஆரம்பித்து உற்பத்தி செய்த பின்தான் தவணை கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுத்த பின்தான் கடன் தவணை வசூலிக்கப்படும் என்பதை அரசு ஒத்துக்கொள்ளலாம். அரசாங்கம் ஏன் இதில் பிடிவாதமாக இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** கடன் வசூலை ஒத்தி வைக்கலாம் அதாவது கடன் தவணையை ஒத்திவைக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இதில் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றிருப்பதற்கு காரணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல் அவகாசம் கொடுத்தால் கூட்டுறவுத் துறைக்கு அதிக ... ஏற்படும் என்பது தான்.

**திரு. கே. கந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இவ்விதம் ஒத்திவைக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் கடன் வழங்குகின்ற உலகவங்கி இதற்கு ஒத்துக்கொள்ள மாட்டோம் என்று சொல்வதுதான் என்று சொல்கிறார்கள். நமது அரசு இப்போது நம்மிடமுள்ள நடைமுறை சிக்கலை எடுத்துச்சொல்லி, மின் இணைப்பு வரும்வரையிலும், விவசாயிகளுக்கு வருமானம் கிடையாது. கம்மலைக்கூட கடன் தவணைக்காக பிடுங்கிக்கொண்டுபோய்விடுகிறார்கள். இவ்விதம் விவசாயிகள் எந்தவிதமான வருமானமும் இல்லாத நிலைமையிலும் கடன் தவணைக்காக நிர்பந்திக்கப்படுவதை நாம் அறிவோம். கொடுத்த கடனுக்குத் தவணைக்கடன், அதோடு வட்டி, வட்டிக்குமேல் வட்டி இப்படி வசூலித்துக்கொண்டிருப்பது முறை தானா? பொதுவாக எங்கு பார்த்தாலும் போராட்டங்கள் நடைபெறுகின்றன, அப்படி போராட்டம் நடைபெறும்போது மைனாரிட்டிகளாக இருக்கின்ற ...ர்களுக்கு அவர்களுடைய கோரிக்கைகள் ஏற்கப்படுகின்றன ...ரசு அவற்றுக்கு ஒத்துக்கொள்ளவும் செய்கிறது. அதே போல் ...ந்த நாட்டில் மெஜாரிட்டியாக இருக்கும் ஏழை விவசாயிகளுக்கு



1978 மார்ச் 6]

பாதுகாப்பு தருகின்ற முறையில், அரசு கருணை கூர்ந்து இவர்களுடைய கோரிக்கையையும் கவனிக்குமா? உலக வங்கியிடம் ...ர்கள் போடுகின்ற நியந்தனைகளைத் தளர்த்திக்கொடுக்க முயற்சி எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** உலக வங்கியோடு பேசி இதற்கான முயற்சிகள் எடுக்க அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### டிராக்டர்கள் வாங்கக் கடன்கள்

*407 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976-ம் ஆண்டில் உலக வங்கி, தமிழ்நாடு நிலவள வங்கியின் மூலம் டிராக்டர்களுக்கு கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் எத்தனை டிராக்டர்களுக்கு எத்தனை விவசாயிகளுக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

(ஆ) இதற்கு வசூலிக்கப்படும் வட்டி விகிதம் எவ்வளவு?

(இ) வட்டி விகிதத்தைக் குறைக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** (அ) 1976 ஆம் ஆண்டு முதல் 1977 அக்டோபர் முடிய உலக வங்கித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவளவங்கியின் மூலம் 1601 டிராக்டர்கள் வாங்க, 1601 விவசாயிகளுக்கு ரூ. 835 இலட்சம் அளவில் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இதற்கு வசூலிக்கப்படும் வட்டி விகிதம் 9½ சதவிகிதம்.

(இ) வட்டி விகிதத்தைக் குறைக்க உத்தேசமில்லை.

**திரு. எஸ். ஜே. இராமசாமி:** தலைவர் அவர்களே, இந்த டிராக்டர்கள் வழங்குவதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.. வெளி நாட்டிலிருந்து தயாராகின்ற டிராக்டர்களையும், உள்நாட்டில் தயாராகின்ற டிராக்டர்களையும் நாம் வாங்கி வழங்குகிறோம். இதில் உள்நாட்டில் தயாராகின்ற டிராக்டர்களின் விலை 10 ஆயிரம் ரூபாய் 12 ஆயிரம் ரூபாய்

விலை குறைவாக இருக்கிறது. இப்படிப்பட்ட வித்தியாசத்தைப் போக்குவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா? இந்த வித்தியாசத்தைப் போக்குவதற்கு எக்ஸைஸ் ட்யூட்டியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

இரண்டாவது நான் கேட்க விரும்புவது, உலக வங்கியிட மிருந்து 9½ சதவிகிதம் வட்டிக்கு கடன் வாங்கி விவசாயிகளுக்கு வழங்கப்படும்போது 12½ சதவிகிதம் வட்டி என்று விதிக்கிறார்கள்; இதைக்க குறைப்பதற்கும் என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படுகின்ற டிராக்டர்களுக்கும், உள்நாட்டில் தயாராகின்ற டிராக்டர்களுக்கும் விலை வித்தியாசம் இருப்பது உண்மைதான். இந்த வேறுபாட்டை நீக்குவது என்பது இயலாத காரியம். 12½ சதவிகிதம் வட்டி வாங்குவது என்பது பற்றி விசாரிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் லட்சக்கணக்கான விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வேலை தேடிக் கொடுக்கவேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த கவலையுடன் செயலாற்றி வருகிறார்கள். அதே சமயத்தில் அதிகமான டிராக்டர்களை வரவழைத்து விவசாயத்தில் ஈடுபடுத்து வதால், விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு இருக்கின்ற வேலைவாய்ப்புக் குறைந்துவிடும் என்பதை அரசு உணருமா? இப்படி இவர்களின் மனித சக்தியைக் குறைக்கின்ற அளவில், இயந்திரங்களைக் கொண்டுவந்து கிராமப்புறங்களில் புகுத்துவதை அரசு மறுபரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டிலிருந்து டிராக்டர்கள் வாங்க வேண்டிய நிலைமை ஏற்படுவதற்கு காரணம், உள்நாட்டிலிருந்து டிராக்டர்கள் வாங்கி விவசாயிகளுக்கு வழங்கும்போது, இதன் எண்ணிக்கை போதுமான அளவுக்கு இல்லாமல் இருக்கின்ற காரணத்தால், சில நேரங்களில் வெளிநாட்டிலிருந்து தயாரிக்கப்படுகின்ற டிராக்டர்கள் தருவிக்கப்படுகின்றன. மற்றும், டிராக்டர்கள் வாங்குவதற்கு கடன் கொடுப்பது உலக வங்கி என்பதை நாம் மறந்து விடக் கூடாது.



**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, உள்ளபடியே உங்கள் பாதுகாப்பு இப்போது வேண்டியிருக்கிறது. என்னுடைய கேள்வி வேறு; அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் வேறு. நான் வேலை இழப்பு ஏற்படுகிறது என்று சொன்னேனே தவிர, நான் டிராக்டர்களுக்கு விரோதியல்ல. இன்றையதினம் இதன் காரணமாக வேலை இழப்பு ஏற்படுகின்றது என்பது தெரியும். மேன் பவர் அதாவது மனித சக்தியை உபயோகப் படுத்துவது என்பதுதான் இந்த அரசின் கொள்கை என்று தெரிவித்திருப்பதன் காரணத்தினாலே, அதை உபயோகிப்பதற்கு முதலிடம் கொடுத்து, இப்போது டிராக்டர்களை நிறுத்திவிட்டு, இந்த ஆட்களுக்கு வேலை கொடுப்பதற்கு முதலிடம் கொடுக்கின்ற முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய யோசனை இந்த அரசின் பரிசீலனையில் இப்போது இல்லை.

**புலவர் கா. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, நில வள வங்கிகளில் இப்போது டில்லர், டிராக்டர் போன்றவைகளுக்குத் தான் கடன் கொடுக்கிறார்கள். புதிய கிணறுகள் வெட்டு வதற்கோ, பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கோ இப்போது கடன் கொடுப்பதில்லை. இன்றைக்கு இந்த நிலைமை இருக்கின்ற காரணத்தினாலே, டிராக்டர், டில்லர்களை திரு. எஸ். ஜே. இராமசாமி போன்ற பெரிய விவசாயிகள்தான் பயன்படுத்தி இதனால் பயனடைகிறார்கள். எனவே, புதிய கிணறுகள் வெட்டுவதன் மூலம், பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதன் மூலம் ஏழை விவசாயிகள் பயனடைவார்கள். ஆகவே, இந்தக் கொள்கை மாற்றத்தை இந்த அரசு செய்து, ஏழை விவசாயி களுக்கு உதவுகின்ற வகையிலே கடன் கிடைக்கின்ற அளவுக்கு வழி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கிணறுகள் வெட்டுவதற்கும், பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் இப்போது கடன் வழங்குவதில்லை; டில்லர், டிராக்டர்கள் வாங்குவதற்குத்தான் கடன் வழங்கப்

படுவதாக மாண்புமிகு உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் வினாவை எழுப்பியிருக்கிறார்கள். புதிய கிணறுகள் தோண்டு வதற்கும் பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் கடன் வழங்குவதை இந்த அரசு நிறுத்திவைக்கவில்லை. இதற்கு முந்திய அரசுதான் அத்தகைய கடன் வழங்குவதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். காரணம், ஏற்கனவே அப்படித் தோண்டப் பட்ட கிணறுகளுக்கு, ஏற்கனவே அமைக்கப்பட்ட பம்பு செட்டு களுக்கு மின்சார இணைப்புக் கிடைக்காத காரணத்தினால், மேலும் இது தேவையில்லை என்று கருதி அந்த நேரத்திலே, அந்த எண்ணத்திலே நிறுத்தியிருக்கிறார்கள்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 1,600 டிராக்டர்கள் விவசாயிகளுக்குக் கொடுக்கப் பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலே பெரும்பகுதி கொஞ்சம் பெரிய விவசாயிகளுக்குத்தான் கிடைத் திருந்தாலும், சில மத்தியதர விவசாயிகளும் வாங்கியிருக்கிறார் கள். தவிர, இதைத் திருப்பிக் கட்டும் தவணை 7 ஆண்டுகள், 10 ஆண்டுகள் என்று போட்டிருப்பதால், அதிகத் தொகை கட்ட வேண்டியிருக்கிறது. அப்படி அதிகத் தொகையைத் திருப்பிக் கட்ட முடியாமல், இன்றைக்கு அவர்கள் ஜப்தி செய்யப்பட்டு, கடன் வழங்கியவர்களே இந்த டிராக்டர்களைத் திருப்பி எடுத்துச் செல்கிறார்கள். ஆகவே, இந்தத் தவணைக் காலத்தை நீட்டிப் பதற்கும், இன்றைக்கு சிறுசிறு விவசாயிகள் கூட்டாகச் சேர்ந்து டிராக்டர் வேண்டுமென்று கேட்டால், அவர்களுக்குக் கொடுப் பதற்கும் இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் :** பேரவைத் தலைவர் அவர்களே, தவணை முறையை மாற்றியமைப்பது விஷயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதை இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். சிறுசிறு விவசாயிகள் மொத்தமாகச் சேர்ந்து, டிராக்டர் வாங்குவது அவர்களுக்கு நல்லதாக இருக்கும் என்கிற நல்லதொரு யோசனையையும் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதையும் இந்த அரசு நிச்சய மாகப் பரிசீலித்து, அதன்மேல் உரிய நடவடிக்கையை எடுக்கும் என்ற உறுதிமொழியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.



**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, புதிய கிணறுகள் வெட்டுவதற்கும், பழைய கிணறுகளை ஆழப்படுத்து வதற்கும் கடன் வழங்குவதை சென்ற அரசு நிறுத்திவிட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உலக வங்கியின் கட்டாயத்தின் பேரில் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அந்த அரசு செய்தது என்ற காரணத்தைப் பார்க்காமல், இப்போது இருக்கின்ற நிலைமையில் 50, 60, 100 ஏக்கர்கள் வைத்திருக்கின்ற பெரிய விவசாயிகள்தான் பயனடைகிறார்கள், 2, 3 ஏக்கர்கள் நிலங்கள் வைத்திருக்கக்கூடிய சிறு விவசாயிகள் பயனடைய முடியவில்லை. ஆகவே, இந்த அரசு ஏழை விவசாயி கள் பயனடைகின்ற முறையிலே புதிய கிணறுகளை வெட்டு வதற்கும், பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் கடன் வழங்க, இதை மாற்றியமைப்பதற்கு முன்வருமா? என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே, எந்தவிதமான பழியையும் முந்திய அரசின்மேல் சுமத்துகின்ற அளவிலே நான் பதிலளிக்கவில்லை. இருக்கின்ற நிலைமையை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் எடுத்துச் சொல்வதற்காகத்தான் பதில் சொன்னேன். மாண்புமிகு உறுப் பினர் அவர்களுக்கும் தெரியும். பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்திலே, 35,000 பம்பு செட்டு களுக்கு இந்த ஆண்டில் மின் இணைப்புக் கொடுப்பதற்கு இந்த அரசு முடிவு எடுத்திருக்கின்றது என்றும், ஏற்கனவே லட்சக் கணக்கான விவசாயிகள் மின் இணைப்பு வேண்டுமென்று விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள். எனவே, இதை நல்லமுறையிலே அமைக்க வேண்டுமென்ற இந்த அடிப்படையிலேதான், இப்போது எல்லாவற்றுக்கும் கடன்வசதி கொடுப்பது என்பது, பல்வேறு சந்தர்ப்பங்களில் மின் இணைப்புக் கொடுக்கப்படாத நேரத்திலே இந்தக் கடனை வசூலிக்கின்றார்கள், அதற்கான வட்டித் தொகையை போடுகின்றார்கள் என்கிற காரணத்தினாலேதான், இந்த அளவுக்கு நிறுத்தி வைக்கப்பட்டு, இப்பேர்ப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்துவிட்டதற்குப் பின்னால், மேலும் புதிய கிணறுகள் வெட்டுவதற்கும், பழைய

[1978 மார்ச் 6

கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் கடன் கொடுப்பதற்கு உண்டான நடவடிக்கைகளை இந்தத் துறை நிச்சயம் பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**கடன் நிவாரண மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

* 408 வினு—திரு. என். வரதராஜன்: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் 25—9—1977 தேதி நடைபெற்ற மதுரை மாவட்ட கடன் நிவாரண மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அரசுக்குக் கிடைத்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அவைமீது அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) ஆம்.

(ஆ) பேரவையின் முன் அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 9.30]

திரு. எம். அண்ணுமலை : கிணறுகள் வெட்டுவதற்கு நிலவள வங்கி அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் போன்ற ஸ்தாபனங்களில் கடன் வாங்கிக் கிணறு வெட்டியும் சதுப்பு செட் ஆகவும், கடின முறையாகவும் தண்ணீரற்றும் உபயோகமற்ற தண்ணீராகவும் உள்ள நிலையில் அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்ய அரசுக்கு மனுக்கள் வந்தனவா ? அதன் பேரில் அதுபற்றி அரசு பரிசீலித்ததா .

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: கிணறுகளுக்கு வழங்கப்பட்ட கடன்களைத் தள்ளிவைக்க வேண்டும் அல்லது ரத்து செய்ய வேண்டுமென்று ஏராளமான மனுக்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அரசு ஏற்கனவே முடிவு எடுத்துத் தன்னுடைய முடிவை அறிவித்திருக்கிறது.

---

* 154—158-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



1978 மார்ச் 6]

**உயர்நிலைப் பள்ளிகளில் பொறியியல் ஆசிரியர்கள்.**

* 409 வினு—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள பொறியியல் ஆசிரியர்களுக்கு ( Engineering Instructors ) இன்னும் தேர்வு நிலைத் தகுதிகள் வழங்கப்படாமை குறித்து கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) இக்கோரிக்கையின்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) இக்கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளவேண்டியதில்லை என அரசாணை எண். 333 கல்வி, நாள் 14—2—77-ல் ஆணை வெளியிடப்பட்டது. அவ்வாசாணையினை மீண்டும் மறுபரிசீலனை செய்து தேர்வுநிலை அளிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். அக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. சிவசாமி : உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள பொறியியல் ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலைத் தகுதிகள் வழங்கப்படாமல் நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. அது சம்பந்தமாகப் பல தடவைகள் மந்திரி அவர்களிடத்திலும், டைரக்டர் அவர்களிடத்திலும் நேரடியாகச் சொல்லியும்கூட இன்று வரை அது சம்பந்தமாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. அது பற்றி எப்போது முடிவு எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அந்தப் பரிசீலனை முடிந்தவுடன் முடிவு அறிவிக்கப்படும்.

**பிஷப் ஹீபர் உயர்நிலைப்பள்ளி, புத்தூர்**

* 410 வினு—திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி, புத்தூரில் இருக்கும் பிஷப் ஹீபர் உயர்நிலைப்பள்ளி செயல்படாமல் இருக்கிறதா ?

(ஆ) ஆம் என்ருல், எத்தனை காலம்?

(இ) இதனுல் பாதிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) 31-10-77 முதல் 15-1-78 வரை இப்பள்ளி செயற்படாமலிருந்தது.

(இ) 1,800.

## பூம்புகர் பகுதியில் தொல்பெருள் ஆய்வு.

*411 வினு—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித்துறை பூம்புகார் பகுதியில் இதுவரையில் ஆராய்ந்து கண்டறிந்தவற்றை அரசுக்கு அறிவித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மத்திய தொல் பொருள் ஆராய்ச்சித்துறை பூம்புகார் பகுதியில் நடத்திய ஆய்வு குறித்து அரசுக்கு எவ்விதத் தகவலும் அனுப்பவில்லை.

(ஆ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: மத்திய தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்தினர் பூம்புகாரில் அத்தகைய முயற்சியை மேற்கொண்டிருக்கிருர்கள். ஐம்பெருங் காப்பியங்களான சிலப்பதிகாரம் மணிமேகலை போன்றவற்றில் கூறப்பட்டுள்ளபடி பூம்புகார் பகுதியில் நகர அமைப்பு இருந்தது என்பது பற்றியெல்லாம் தெரிய வருகிறது. அத்தகைய தடயங்கள் அகப்பட்டுள்ளன என்ருல் அதுபற்றி இனியேனும் அரசு அறிந்து கொள்ள முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மத்திய அரசின் தென் வட்ட தொல்பொருள் ஆய்வுத் துறை காவிரிப்பூம்பட்டினத்துக்கு அருகிலுள்ள காவிரி டெல்டா பகுதியில் 40 முக்கிய இடங்களைத் தேர்ந்தெடுத்திருந்தபோதிலும், சென்ற 1963 ஆம் ஆண்டிலிருந்து



1973-ஆம் ஆண்டு வரையிலான இடைப்பட்ட காலத்தில் கீழையூர், வானகிரி, பல்லவனேஸ்வரம் ஆகிய இடங்களில் மட்டும் ஆய்வு செய்தது. அவ்வாய்வில் கண்டுப்பிடிக்கப்பட்ட முக்கியப்பொருள்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

1. நடுவில் தண்ணீர் செல்வதற்கான வசதியோடு கட்டப்பட்டிருக்கும் ஒரு கட்டடப்பகுதி, கீழையூர், கண்டுபிடிக்கப்பட்டது. இதன் அருகில் இரு வரிசைகளில் மரத் தூண்கள் நடப்பட்டிருந்தன. அவற்றின் அடிப் பகுதிகள் கிடைத்துள்ளன. இவைகளைக் கொண்டு பார்க்கையில் பொருள்கள் ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் படகுகள் வந்து செல்லும் துறைமுகப் பகுதியாக அது இருக்கலாம் எனத் தெரிகிறது.

2. வானகிரியிலும் ஒரு கட்டடப்பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. அது குளத்துக்கு நீர் வரும் வழியில் அமைக்கப்பட்டிருந்த மதகாகக் தெரிகிறது. அதன் இரு பக்கங்களிலும் அரை வட்டச் சுவர் காணப்படுகிறது. அச்சுவர்கள் குளத்தின் மண்கரையோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்ததாக இருக்கலாம். இக்குளத்து நீர் பாசனத்திற்காகவும் குடி நீருக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இப்பகுதியில் மிகப் பெரும் அளவு மணல் படிந்திருப்பதைப் பார்க்கையில் காவிரியாற்றிலிருந்து இக்குளத்துக்கு நீர் இக்கட்டடப் பகுதியின் வழியாக வந்திருக்கலாம் என்று தெரிகிறது.

3. பல்லவனேஸ்வரம் பகுதியில் புத்த விஹாரம் ஒன்று இருந்தது என்பதை அகழ்வாயவு புலப்படுத்தியது. புத்த ஸ்தூபாவின் உடைபாடுகளும் ஆயசா தூணின் சிதறல்களும் கூடக் கண்டுபிடிக்கப்பட்டன. 1.7 மீட்டர் கனமுள்ள சுவர்கள் செங்கல், சுதை வேலைப்பாடுகளினுல் அழகுபடுத்தப்பட்டன.

யோக நிலையிலுள்ள புத்தரின் செப்புத் திருமேனியும் சுதையால் செய்யப்பட்டுள்ள துவாரபாலகரின் தலைப்பகுதியும் முற்காலச் சோழர்களைச் சார்ந்த சதுரக் காசுகளை வார்ப்பிப்பதற்கான சுடுமண் அச்சும் இங்கு கிடைத்திருப்பது இவ்விஹாரம் கி.பி. 4 ஆம் நூற்ருண்டிலிருந்து 6 ஆம் நூற்ருண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்காக முக்கிய சான்றுகளாக அமைகின்றன.

கறுப்பு, சிவப்பு பானை ஓடுகள், ரௌலட்டட் ஓடுகள் ஆகியவை களோடு சதுரக்காசுகளும் இங்கு கிடைத்திருப்பது கி.பி. முதல் ஐந்து நூற்றாண்டுகளில் காவிரிப் பூம்பட்டினம் சிறந்த ஒரு துறைமுகமாக விளங்கியிருந்தது என்பதைத் தெரிவிக்கிறது.

இப்பொழுது சிறு பகுதி வெளிக்கொணரப்பட்டிருக்கும் கட்டடத்தின் முழுப்பகுதியையும் அறிவதற்கும் முழுமையாக மறைந்திருக்கும் மற்ற முக்கியப் பொருட்களை வெளிக்கொணர்வதற்கும் மேற்கூறப்பட்ட இடங்களிலும் காவிரிப் பூம்பட்டினத்துக்கு அருகிலுள்ள வேறு சில இடங்களிலும் மேலும் அகழ்வாய்வு செய்வது மிகவும் தேவைப்படுகிறது. மேலும் அகழ்வாய்வினைத் தொடர்வதற்குரிய இடங்கள் தனியார்வசம் உள்ள படியால் அவற்றை வாங்குவதில் காலதாமதம் ஆகிறது.

இது சம்பந்தமாக மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்கும் தஞ்சை மாவட்ட ஆட்சியருக்கும் 1973 முதல் கடிதப் போக்குவரத்து நடந்து வந்துள்ளது. மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறை அகழ்வாய்விற்காகத் தெரிந்தெடுத்த இடத்தில் தற்போது மக்களால் வழிபடும் கோவில்களும், குளங்களும் இருக்கின்றன.

இம்மாதிரி இடங்களை நில ஆர்ஜிதம் செய்யலாகாது என அதற்குரிய விதிகளில் உள்ளன. ஆதலின் அவைகளை விட்டுவிட வேண்டுமென்று மாவட்ட வருவாய் அலுவலர் மத்திய தொல்பொருள் துறைக்கு கூறியுள்ளார். தவிரவும் அவ்விடத்தில் வீடு கட்டிக் குடியிருப்பவர்களை வேறு எவ்விடத்திலாவது குடியமர்த்த வேண்டுமென்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இது பொதுக் காரியமாதலால் மாநில அரசே இம்மாதிரிக் குடியமர்த்தும் வேலையை எடுத்துக் கொண்டால் நலமென தஞ்சை மாவட்ட ஆட்சியருக்கு மத்தியத் தொல்பொருள் துறை தெரிவித்துள்ளது. இவ் விஷயத்தை மாநில அரசே துரிதப்படுத்தி முடித்துக் கொடுக்குமாறு மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறை 24-12-77-ல் இத்துறையைக் கேட்டுக் கொண்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு நீண்ட விவரங்களை எதிர்காலத்தில் அமைச்சர்கள் மேஜைமீது வைத்துவிட்டால் நலம் என்று கருதுகிறேன்.





### சிதம்பரத்தில் பேருந்து நிலையம்

* வினா 412 **திரு. துரை கலியமூர்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்தில் பேருந்து நிலையம் கட்ட அரசு கடன் வழங்கியுள்ளதா?

(ஆ) இதுவரை கொடுக்கப்பட்டது எவ்வளவு?

(இ) கொடுப்பதாக உத்தேசிக்கப்பட்டது எவ்வளவு?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) ஆம்.

(ஆ) ரூ. 3,24,000.

(இ) மதிப்பீட்டுத் தொகையான ரூ. 10,65,000-ல் நகராட்சி நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 3,66,000-ம் அரசு வழங்கிய கடன் ரூ. 3,24,000-ம் போக மீதித்தொகையான ரூ. 3,75,000 அளிக்குமாறு நகராட்சி கோரியுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

### *Tap rates in Tiruchirappalli.*

* *Q.* 413.—THIRU R. UMANATH: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any representation regarding raising drinking water tap rates by the Tiruchirappalli Municipality from April 1977 has been received; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) ஆம்.

(ஆ) திருச்சிராப்பள்ளி நகராட்சியின் நிதி நிலையைக் கருதி பழைய வீதத்திலேயே தண்ணீர் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

**திரு. எஸ். ஆர். இராதா:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தண்ணீர் கட்டணத்தை பழைய நிலையில் வைத்துக்கொள்வது குறித்து உள்ளபடியே நன்றியைச் செலுத்த வேண்டும். ஆனால் சில நகராட்சிகளிலே வியாபார ரீதியிலே தண்ணீர் கட்டணத்தை உயர்த்த அரசு உத்திரவிட்டு இருக்கிறது, கும்பகோணம்

நகராட்சிக்குக் கூட அப்படிப்பட்ட உத்திரவு வந்திருக்கிறது. ஆகவே, அதை மறுபரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, அது பற்றிய விவரக் குறிப்பு இல்லை, தெரிந்து சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க வினாக்கள் 414-ம் 415-ம் தள்ளிவைக்கப்படுகின்றன.

### கள்ளக்குறிச்சி—சென்னை விரைவுப் பேருந்துப்பணி.

*வினா **திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி—சென்னைக்கு சங்கராபுரம், திருக்கோயிலூர், விழுப்புரம் வழியாகத் துரிதகால வண்டி விடும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால், விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. துரை முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, குறுகிய தூரத்தை உடைய திருவண்ணாமலை, பாண்டிச்சேரிக்கு எல்லாம் துரித வண்டிகள் விடப்பட்டிருக்கின்றன. ஆனால் 250 கிலோ மீட்டர்கள் தூரமுள்ள கள்ளக்குறிச்சிக்கு—அங்கே கூட்டுறவு சர்க்கரை ஆலை இருக்கிறது. செப்புத் தொழிற்சாலை இருக்கிறது. வியாபாரிகள் அதிகமாக சென்னைக்கு வந்துபோகிறார்கள், பொதுமக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையான இதை ஏற்றுக்கொள்ள அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி ஒரு முனிசிபாலிட்டியாகக் கூட இல்லை. அது பேரூராட்சியாக மட்டுமே இருக்கிறது. அடிக்கடி கள்ளக்குறிச்சி வழியாக சென்னையிலிருந்தும், சென்னை



நோக்கியும் 12 விரைவு வண்டிகள் செல்கின்றன. கள்ளக்குறிச்சியிலிருந்து 38 மைல் தூரத்திலுள்ள உளுந்தூர்பேட்டை வழியாக அண்ணா போக்குவரத்துக் கழக, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக மற்ற மாவட்டப் பேருந்துகள் செல்கின்றன. எனவே விரைவுப் பேருந்து கள்ளக்குறிச்சி வரை விடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

**திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்:** பேரவைத் தலைவரவர்களே, கள்ளக்குறிச்சி வழியாக எத்தனை பேருந்துகள் வந்தாலும் அங்கே பயணிகளுக்கு இடம் கிடைப்பதில்லை. ஆகவே, தற்சமயம் அதிகாலை 4 மணியிலிருந்து திண்டிவனம் வரையிலும் வரும் பேருந்தை சென்னை வரை நீட்டிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவரவர்களே, அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**திரு. துரை முத்துசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் 12 வண்டிகள் வருவதாகச் சொன்னார்கள், அது உண்மையல்ல. 4 வண்டிகள்தான், இரவு 10½ மணிக்கும், 11½ மணிக்கும், 12½ மணிக்கும் என்று வருகின்றன. இரவு நேரத்தில் எனக்கேகூட டிக்கெட் கிடைக்காமல் இரண்டாவது வண்டியில்தான் வந்தேன். தினம் நூறு பேர்களுக்குமேல் காத்துக்கொண்டிருக்கிறார்கள். உளுந்தூர்பேட்டையில் லைட்னிங் வண்டிகள்மட்டும்தான் நிற்கின்றன, மற்ற வண்டிகளில் இடம் கிடைப்பதில்லை. ஆகவே, இதைப் பரிசீலனை செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன்னையன்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள்தான் தவறான தகவலைக் கூறுகிறார்கள். நான்கு வழித்தடங்கள் எண்கள் உள்ளன, ஆனால் பேருந்துகள் ஓடுவது, சென்னை—சேலம் நோக்கி இரண்டு பேருந்துகளும், சென்னை—கோவை நோக்கி ஒரு பேருந்தும், சென்னை—கோவை நோக்கி இரண்டு பேருந்துகளும், சென்னை—சேலம் ஒரு பேருந்தும் ஆக ஆறு பேருந்துகள் சென்னையிலிருந்து

செல்கின்றன, சென்னை நோக்கி ஆறு பேருந்துகள் வருகின்றன. ஆகமொத்தம் 12 பேருந்துகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகம்.

* வினா 417 திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் மதுரை மாவட்டத்தில் எத்தனை பஸ்கள் ஓடுகின்றன ? அதன்மூலம் தினசரி வருமானம் எவ்வளவு ?

(ஆ) மதுரை மாவட்டத்தில் ஓடும் பேருந்துகள் இதுவரை ஓடியிருக்கும் சராசரி வருடங்கள் எவ்வளவு ?

(இ) 1974-75, 1975-76-ல் எத்தனை பஸ்கள் பயனற்றதாக ஒதுக்கப்பட்டன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மதுரை மாவட்டத்தில் 476 பேருந்துகளை ஓட்டியது. அதன்மூலம் கிடைக்கும் சராசரி வருமானம் சுமார் ரூ. 2,79,000.

(ஆ) மதுரை மாவட்டத்தில் ஓடும் பேருந்துகள் இதுவரை சராசரியாக 5 வருடங்கள் ஓடியிருக்கின்றன.

(இ) 1974-75-ல் 29 பேருந்துகளும், 1975-76-ல் 18 பேருந்துகளும் பயனற்றதாக ஒதுக்கப்பட்டன.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, டி. வி. எஸ். கம்பெனியிலிருந்து இந்த பஸ்களை அரசு தேசியமயமாக்கி எடுத்துக்கொண்ட நேரத்தில் எத்தனை வண்டிகள் பயனற்றவையாக இருந்தன, அந்தப் பயனற்ற வண்டிகளுக்கு அரசு பணம் கொடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, பயனற்ற வண்டிகளை எடுத்துக்கொள்வதில் பயனேதும் இல்லாத காரணத்தால் அப்படிப்பட்ட வண்டிகள் எதும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.



திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, பொது மக்களுடைய போக்குவரத்து அன்றாடம் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. இந்த நிலையில் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் நகரப் பேருந்துகளை ஒவ்வொரு ஊருக்கும் அதிகப்படுத்தும் உத்தேசத்தில் இப்பொழுது ஏதேனும் திட்டமிடப் பட்டிருக்கிறதா? அப்படியிருந்தால் மதுரை மாவட்டத்தில் எந்தெந்த ஊர்களுக்குப் பஸ் விடுவதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, நகரப் பேருந்துகளையும், மொபசல் பேருந்துகளையும் மிகைப் படுத்தத் திட்டம் உள்ளது. விரைவில் அதுபற்றிப் பரிசீலித்து அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, பி. ஆர். சி.யில் மாணவர்களுக்குப் பஸ் பாஸ் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? அப்படியென்றால் ஏன் காலதாமதம் ஏற்படுகிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாநகரில் ஏற்கனவே சலுகைக் கட்டண வசதி இருந்து வருகிறது. மேற்கொண்டு பரிசீலனை எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வினா எண். 418.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மூன்று கேள்விகளையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி.

மாதவரம் பால்பண்ணை.

* வினா 418 திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம் பால் பண்ணையில் லைசென்ஸ்தாரர் எத்தனை பேர் உள்ளார்கள் ?

(ஆ) எவ்வளவு மாடுகள் உள்ளன ?

(இ) என்ன விலைக்கு லைசென்ஸ்தாரரிடம் பால் வாங்கப்படுகிறது ?

(ஈ) என்ன விலைக்கு விற்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) மாதவரம் பால் பண்ணையில் தற்சமயம் 39 உரிமக்காரர்கள் உள்ளனர்.

(ஆ) இவர்களுடைய 461 மாடுகளும் 261 இளங்கன்றுகளும் தற்சமயம் உள்ளன.

(இ) கொழுப்புச்சத்து, கொழுப்புச்சத்து அல்லாத மற்ற திடப்பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் பாலின் விலை நிர்ணயிக்கப்பட்டு, பால்வள நிறுவனத்தாரால் உரிமக்காரர்களிடமிருந்து பால் வாங்கப்படுகிறது.

(ஈ) தரப்படுத்தப்பட்ட பால் சென்னை நகரில் பால் அட்டை வைத்திருப்போருக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ. 2.00 வீதம் விநியோகம் செய்யப்படுகிறது. பாலிதின் பையில் அடைத்த பால் லிட்டருக்கு ரூ. 2.10 வீதம் விற்கப்படுகிறது.

## சென்னை நகரில் பால் வழங்கல்.

* வினா 419 **திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நடமாடும் வான் மூலமாக தானாக இயங்கும் விற்பனை முறையில் சென்னை நகரில் பால் விற்பனை செய்யும் திட்டம் சோதனை முறையில் நடத்திப்பார்க்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து முடிவெடுக்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் சோதனை முறையில் நடத்திப் பார்க்கப்படவில்லை.

தற்சமயம் தானியங்கி இயந்திரமில்லாத நான்கு நடமாடும் பால் விற்பனை ஊர்திகள் மூலம், சென்னை நகரத்தில் பாலும், பால்பண்ணை உற்பத்திப் பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன.

* Q. 420.—THIRU S. GANESAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Dairy Development Corporation has opened automatic milk supply booths in Madras ;

(*b*) the cost of its installations; and

(*c*) whether public opinion is against this?



**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு தானியங்கி பால் விற்பனை நிலையத்தையும் நிறுவுவது உட்பட அதற்கு ஆகும் செலவு 1 இலட்சம் ரூபாய்.

(இ) இம்முறையில் பால் விற்பனை செய்வதற்கெதிராக சில புகார்கள் பெறப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிட்டப்பா. . .

**திரு. என். கிட்டப்பா:** இல்லை.

**திரு. எஸ். கணேசன்:** பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் சென்னையிலே எந்தெந்த இடங்களிலே நிறுவப்பட்டிருக்கின்றன? இது அடிக்கடி பழுதுபட்டு விடுவதாகச் சொல்லப் படுகிறது. பழுதுபட்டால், உடனடியாக அதைச் சரிபார்க்கின்ற நிபுணர்கள் அருகாமையில் இல்லையென்ற குறைபாடு இருக்கிறது. அதைக் களைய அரசு முன்வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் 8 இடங்களில் தானியங்கி பால் விற்பனை நிலையங்களிருக்கின்றன. அதிலே, ஏற்படுகிற கோளாறுகளை அவ்வப்பொழுது அரசு கவனித்து நடவடிக்கை எடுப்பதன் மூலமாகச் சரி செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. அரங்கநாதன்:** பேரவைத் தலைவரவர்களே, மாதவரம் பால் பண்ணையிலிருந்து வருகின்ற இந்தப் பாலேடு, பால் பவுடரும் கலக்கப்பட்டு, சென்னை நகரிலே பாட்டில்களிலே விற்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா ?

இரண்டாவதாக, பாட்டில்களின் மேலேயுள்ள கவர்கள் சரியாக இல்லாத காரணத்தாலே, பால் பங்குகளிலே உள்ளவர்களாலேயே, அந்த பாட்டில் பால்களுடன், வேறு பாலோ, நீரோ, கலக்கப்பட்டு விற்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவரவர்களே, பாலிலே, ஸ்கிம் பவடர் என்கின்ற பவுடர் பால்வள நிறுவனத்காலே கலக்கப்படுகிறது. அந்த பவுடர் கலக்கப்படுவதன்

மூலமாகத்தான் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பாலை 'பாஸ்டரைஸ்' செய்து, நீர்த்த வெண்ணெயும், பால் பவுடரும் கலந்து, இன்று சப்ளை செய்யப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், பாட்டில்களின் மேலே போடுகின்ற அடைப்பான்கள், சில நேரங்களிலே, மேலே பிய்ந்து, வெளியே வருகின்ற நேரங்களெல்லாம் உண்டு. அந்த நேரங்களில், அவை சரி செய்யப்படுகின்றன. மேலும், அவற்றை நிரந்தரமாக எடுக்கமுடியாத அளவிலும், தண்ணீரையோ, வேறு பாலையோ கலக்க முடியாத அளவிற்குப்பிய்க்க முடியாத அடைப்பான்களை, புதிய முறையிலே போடலாமா என்ற ஆலோசனையை அரசு ஆராய்ந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, 3 கேள்வியும் ஒன்றாக எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கொஞ்சம் தாராளமாக அனுமதியுங்கள். மாதவரம் பால் பண்ணையிலே இருக்கிற லைசென்ஸ்தார்கள் எண்ணிக்கையைப் பற்றிச் சொன்னார்கள். இந்த லைசன்ஸ்தார்கள் எண்ணிக்கை முன்னால் இருந்ததைவிட, இப்பொழுது ரொம்பக் குறைந்து விட்டதென்பது உண்மை. காரணம், விலைப்பற்றாக்குறை.

பாலில், 8 சதவிகிதத்துக்கு மேல் கொழுப்பு அடிக்க முடியாது. அவர்களிடம் மாதவரம் பால் பண்ணையிலே, பால் வாங்கும்போது, கொடுக்கப்படும் விலை, கொழுப்புச் சத்து, 7.8 சதவிகிதம், 8 சதவிகிதம் இருந்தால், அதற்கு, ரூ. 1.40, ரூ. 1.50 க்கு மேல் கொடுப்பதில்லை. அதில், பவுடரையும், மற்றவற்றையும் சேர்த்து, கொழுப்புச் சத்து 4.5 சதவிகிதம் இருக்குமானால், அது ரூ. 2.10 க்கு விற்கப்படுகிறது. அவர்கள், பாலை வாங்குகிற விலையும் குறைவு. அதை விற்கும் விலையும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, இதில், அதிகமான மார்ஜின் இருக்கிறது. பால் உற்பத்தி செய்கிறவர்களுக்கு நியாமான அதிக விலை கிடைக்கவில்லை. பாலை வாங்கிச் சாப்பிடுபவர்களுக்குக் குறைந்த விலையில் பால் விற்கப்படவில்லை.

ஆகவே, அரசாங்கம், பால் உற்பத்தி செய்கிறவர்களுக்கு இன்னும் கூடுதல் விலை கொடுக்கவும், பால் வாங்கிச் சாப்பிடுபவர்களுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்யவும் என்ன திட்டம் வைத்து இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, உரிமதாரர்களுடைய முதலிலேயிருந்த லைசன்ஸ்தாரர்களுடைய, எண்ணிக்கைக் குறைந்திருக்கிறது என்பது ஓரளவிற்கு உண்மை தான். நிறுவனம் கொடுக்கக் கூடிய விலை கட்டுப்படியாகவில்லை யென்று பலபேர் குறிப்பிட்டுக்கொண்டிருக் கிறார்கள். அதே நேரத்தில், இங்கே நாம் விற்கக்கூடிய பாலினுடைய விலை, மற்ற மாநிலங்களைக் காட்டிலும், தமிழகத்திலே, குறைவான விலைக்குத் தான் விற்றுக்கொண்டிருக்கிறோம். மேலும், வாங்கக்கூடிய பாலுக்குக் கொழுப்புச் சத்தின் அடிப்படையில்தான் ஒரு கிலோவிற்கு ரூ. 22 என்ற அடிப்படையில் தான் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனாலும், அதை அதிகமாகக் கொடுக்க வேண்டு மென்பதற்காக, இப்பொழுது ரூ .23 கொடுக்கலாமா என்பது யோசிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், உரிமைதார்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் ஆலோசனையை இந்த அரசு ஆராய்ந்து வருகிறது. அப்படிச் செய்கிற நேரத்தில், பாலை அதிகமாக சென்னைக்கும் மற்றுமுள்ள இடங்களுக்கும் பெற்று எல்லா மக்களுக்கும் கொடுத்து வருவதற் கான திட்டதை ஏற்படுத்துகிற நிலையை அரசு வகுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிட்டப்பா. . . .

திரு. என். கிட்டப்பா: நான் கேள்வி கேட்கும்பொழுது தாங்கள் அனுமதி மறுக்கிறீர்கள். நான் கேட்காதபொழுது வேண்டுமென்றே இப்படி கூப்பிடுகிறீர்கள். இப்படி வேண்டு மென்றே கேள்வி கேட்காதபொழுது கூப்பிட்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலிலே, தாங்கள் வேண்டா மென்று விட்டு விட்டதால், திரு. கணேசனைக் கூப்பிட்டேன். தாங்கள்தான் மூலக் கேள்வி போட்டீர்கள். உங்களைக் கூப் பிட்டேன், நீங்கள் இல்லையென்று சொன்னதால் கணேசனைக் கூப்பிட்டேன்.

இப்பொழுது கையைத் தூக்கியதால்தான் கூப்பிட்டேன்.

[1978 மார்ச் 6

**திரு. என். கிட்டப்பா:** நான் இப்பொழுது கையைத் தூக்க வில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து பேரவைத் தலைவர் மேல் இவ்வாறு குற்றம் சொல்லாதீர்கள். நான், மூலக் கேள்வி கேட்டவர் என்பதால், உங்களை முதலிலே கூப்பிட்டேன். நீங்கள் இல்லையென்று சொல்லிவிட்டீர்கள். பிறகுதான், கணேசனைக் கூப்பிட்டேன். பிறகு நீங்கள் கையைத் தூக்கினீர்கள். நான், அதற்குள் அரங்கநாதனைக் கூப்பிட்டேன் என்பதற்காக, கையிலிருந்தவற்றை வீசி எறிந்துவிட்டு, அங்கே (வேறிடத்தில்) போய் உட்கார்ந்தீர்கள். பிறகு வந்து கையைத் தூக்கினீர்கள். ஆகவேதான் கூப்பிட்டேன்.

**திரு. என். கிட்டப்பா :** தன்னிலை விளக்கம். நான், வீசி எறிந்து விட்டேன் என்று சொல்கிறீர்கள். நான் சபையிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புலவர் அவர்களைச் சாட்சி சொல்லச் சொல்லுங்கள். நீங்கள் விசிறி அடித்துவிட்டுப் போக வில்லையென்று புலவர் அவர்களைச் சொல்லச் சொல்லுங்கள். நீங்கள் வீசி எறிந்ததை அவர்கள் பார்த்துக்கொண்டுதானிருந்தார்கள்.

**திரு. க. அன்பழகன்:** அது அந்த நினைவோடு செய்கிற காரியம் அல்ல. அவர், எங்கோ போகிற நிலையில் அப்படி கையிலிருந் ததைப் போட்டுவிட்டுப் போயிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புலவர் அவர்களுக்குத் தெரியும், அவர் எப்பொழுது வீசி எறிந்துவிட்டுப் போனார் என்பது. முதலிலே, நான் அவருடைய பெயரைக் குறிப்பிட்டேன்; அவர் இல்லையென்று சொன்னதால், நான் கணேசன் அவர்களைக் கூப்பிட்டேன். பிறகு கையைத் தூக்கினார், அதற்குள் அரங்கநாதனைக் கூப்பிட்டேன் என்பதால், கையிலிருந்ததை வீசி எறிந்துவிட்டுச் சென்றார் அதைப் புலவரும் பார்த்தார். பிறகு வந்து கையைத் தூக்கினார்கள். ஆகவே, அவரைக் கூப்பிட்டேன் தாங்கள் இப்படி பேசுவது சரியல்ல.



1978 மார்ச் 6]

(முற்பகல் 9.50)

**திரு. எஸ். ஜே. இராமசாமி:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, சென்னை நகரிலே அதிகமாக பால் வந்துகொண்டிருப்பதாகவும், அதற்காக அங்கே கிராமங் களிலே உள்ளவர்கள் சென்னைக்கு வந்து போகிறார்கள் என்றும் சொன்னார்கள். நான் கேட்கும் கேள்வியின் நோக்கம் கிராமங் களிலேயே பால் பற்றாக்குறை இருக்கிறதே, அதற்கு என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். இதற்கு நீங்கள்தான் விளக்கம் அளிக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, இன்று போடப்பட்டிருக்கிற கேள்விகள் எல்லாம் பொதுவாக பால் பண்ணையைப் பொறுத்துதான். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிராமங்களிலே பால் குறைவாகக் கிடைக் கிறது என்கிற காரணத்தைச் சொன்னார்கள். அதற்காக சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டங்கள் கீழ் கறவை மாடுகள் வாங்குவதற்கான கடன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. எங்கெங்கே பால் குறைவாக இருக்கிறதோ, அங்கே இருக்கக் கூடிய சிறு விவசாயிகள், அவர்களுக்கு உபதொழிலாக கறவை மாடுகளைக் கடனைப் பெற்று பால் பெருக்கத்தை அதிகப்படுத் தலாம் என்று உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***திரு.மு. அரங்கநாதன்:** தலைவர் அவர்களே, தனியார் வெளியிலே பால் கறந்து விற்கிறார்கள். இப்படி விற்பவர்கள் அந்தப் பாலிலே பால் பவுடரைக் கலந்து விற்றால், கலப்படப் பால் என்று மைகயிலே அவர்களின் மீது சானிடரி இன்ஸ்பெக் டர்கள், வழக்குப் போடுகிறார்கள். தண்டனையும் விதிக்கிறார்கள். ஆயிரம் ரூபாய் வரைகூட அபராதம் விதிக்கிறார்கள். அப்படியி ருக்கும்போது அரசு இப்படிப் பாலில் பால் பவுடரைக் கலக் கிறதே அவர்கள் மீது யார் வழக்குப் போடுவது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே இந்தப் பவுடர் வேறு. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொல்லக் கூடிய பால் பவுடர் வேறாக இருக்கலாம். இது எங்கும் பவுடர். மீதியாக இருக்கக்கூடிய பாலை இயந்திரங்களில் மூலமாக பவுட ராக ஆக்கி, அதைப் பாலிலே கலந்து வைப்பதன் மூலமாக எந்த

விதமான சுகாதாரக் கெடுதலும் இல்லை என்று தெரிந்த பின்னாலே
தான் அது விற்கப்படுகிறது என்பதை அவர்களுக்குத் தெரிவித்து
கொள்கிறேன். ஆகவே வெளியிலே இருப்பவர்கள் கலப்படம்
செய்தால் கண்டிப்பாக தண்டனை உண்டு என்பதையும் அவர்
களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சீ. மு. வாசன் :** தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே
பால் கறந்து விற்பதையே வேலையாகக் கொண்டவர்கள் இருக்கி
றார்கள். அப்பகுதி மக்களுக்கு அரசின் நிர்ணய விலை குறைவாக
இருக்கிறது. ஒரு கிலோ கொழுப்புச் சத்துக்கு 21 ரூபாய்
கொடுக்கப்படுகிறது. அதை 26 ரூபாயாக கொடுத்தால் வசதி
யாக இருக்கும். அதனைச் செய்ய இயலுமா என்று அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய கருத்து
அரசின் கவனத்தில் உள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்
கிறேன்.

**திரு. எஸ். கணேசன்:** தலைவர் அவர்களே, இந்தத் தானியங்கி
பால் விற்பனை நிலையங்கள் சென்னையில் 8 இடங்களில் இருப்ப
தாகச் சொன்னார்கள். எந்தெந்த இடங்களில் இந்தத் தானியங்கி
பால் விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. இந்தத் திட்டத்தை
விரிவு படுத்தும் நோக்கம் அரசுக்கு இருக்கிறதா, இந்தத்
திட்டத்திற்காக மத்திய அரசின் உதவி ஏதேனும் இருக்கிறதா
என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே,
தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் 8 இடங்களில் இருக்
கின்றன. அவை திருவல்லிக்கேணி, பட்டினப்பாக்கம், பெசன்ட்
நகர், அசோக் நகர், டிரஸ்ட்புரம், சித்திரக்குளம், ராஜா
அண்ணாமலைபுரம், அருணாசல ஆசாரித் தெரு, திருவல்லிக்கேணி
ஆகிய இடங்களில் இயங்கிக் கொண்டு வருகின்றன. மேலும்
இந்த பால் நிலையங்கள் இந்தியன் டெய்ரி கார்ப்பரேஷன்
மூலமாக நடத்தப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்
கிறேன்.





**திரு. க. மருதாசலம்:** தலைவரவர்களே, கிராமங்களில் இது
போன்ற பால் சொசைடி நிறுவனங்களை வைத்து இருப்பவர்கள்,
அதிலே 20—30 பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்றால்
அவர்கள் அந்த சொசைடிக்கு ஒரு உறுப்பினரின் வீட்டில் இருந்து
10 லிட்டர் பால் கோருகிறார்கள் என்றால் அவர்கள் 1 லிட்டரை
மட்டும் சொசைடிக்குக் கொடுத்துவிட்டு, 9 லிட்டர் பாலை வெளியி
லேயே விற்று விடுகிறார்கள். அப்படி சொசைடியில் உறுப்பின
ராக இருந்து பெரும்பாலும் வெளியிலே விற்கும் நோக்கில்
அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, இது
வரையிலும் அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியது போல்,
கடனை அரசாங்கத்தில் இருந்து பெற்று, கறவை மாடுகளை
வாங்கி, பால் பண்ணைக்கு அல்லது பால் நிறுவனங்களுக்கு
அந்தப் பாலைக் கொடுக்காமல் இருப்பது தவறு. அப்படி
தவறு செய்கிறார்கள் என்றால், அவர்களுக்குத் தகுந்த
யோசனையை மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் சொல்ல
லாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. மார்க்கபந்து :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள்
பதில் சொல்கிறபோது, அரசாங்க பால் பண்ணையில் சிறிது
கலப்படம் செய்வதாகச் சொன்னார்கள்.
It is not injurious to health என்ற வகையில் செய்வ
தாகச் சொன்னார்கள். ஆனால், செக்ஷன் 16, புட் அடல்டரேஷன்
ஆக்டிலே— non-injurious substance என்று சொல்லி
கலப்படம் செய்தால் கூட, அதற்காக குறைந்த பட்சம் அபராதம்
ரூ. 1,000 வரையிலும், என்றும், தண்டனை 6 மாதம் என்றும்
இருக்கிறது. அந்த வகையில் even if it is non-injurious to health
என்று விளக்கங்கள் சொல்லப்பட்டு, தண்டனை கொடுத்து இருக்
கிறார்கள். அரசாங்கத்தின் பால் பண்ணைக்கு இதில் இருந்து
விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது என்று அந்த ஆக்டிலே
சொல்லப்படவில்லை. அப்படி இல்லை என்பதால், ஒரே மாதிரி
யாக அந்தச் சட்டத்தை அரசாங்கப் பால் பண்ணைகளுக்கும்
பயன்படுத்தப்படுமா ?

[1978 மார்ச் 6

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது சரியாக இல்லை. ஏனெனில் கலப்படம் என்கிற வார்த்தைக்கும், அவர் சொல்கிற கலப்படத்திற்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. இங்கே பால் வள நிறுவனத்தின் சார்பாக கலப்படம் என்று சொல்கிறபோது, அங்கே பால் பவுடரோடு, நீர்த்த வெண்ணெயைக் கலப்படம் செய்து, மக்களுக்கு நல்ல பால் வழங்கவேண்டும் என்ற நோக்கத்தோடு செய்யப்படுகிறது. ஆனால் வெளியிலே இருப்பவர்கள் பாலிலே தண்ணீரையும், தண்ணீரிலே பாலும் கலப்படம் செய்கிறார்கள். அது சரியாக இருக்காது. மேலும் தேவையான அளவிற்கு வேண்டிய கொழுப்புச் சத்து அதிலே இல்லாமல் போய் விடுகிறது. வேண்டிய அளவு கொழுப்புச் சத்து, புரதச் சத்து சேர்க்கப்படவேண்டும், மக்களுக்கு அப்படிப்பட்ட பால் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அந்த பாஸ்சுரைசேஷன் செய்யப் படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. சதாசிவம்:** பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே பாலில் இயற்கையாக இருக்கக்கூடிய கொழுப்புச் சத்தை எடுத்து விட்டு, மறுபடியும் அதில் பவுடர் பால் சேர்ப்பது வேலை இல்லாத வேலை இல்லையா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, நமக்கு வேண்டிய கொழுப்புச் சத்து 4.5 சதவிகிதம். அது இருந்தால் போதும். ஆனால் இயற்கையாகக் கிடைக்கும் பாலில் எருமைப் பலாக இருந்தால் அதிகக் கொழுப்புச் சத்தும், பசும்பாலாக இருந்தால் குறைவான கொழுப்புச் சத்தும் இருக்கிறது. ஆகவே, ஒரு மனிதனுக்குத் தேவையான அளவு கொழுப்புச் சத்து கிடைக்க வேண்டும் என்ற காரணத்திற்காக பாலை பதப்படுத்தி அதே நோக்கில் நல்ல முறையில் நவீனமான முறையில் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்ற அளவிலே தான் அது கொடுக்கப் படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]



1978 மார்ச் 6]

## 2. தகவல் கோரல்.

**முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும் இலாக்காக்கள் தொடர்பான கேள்விகள் எடுத்துக்கொள்ளப்படாதது குறித்து.**

***திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவரவர்களே, இந்த அவை தொடங்கி, அதனுடைய கூட்டங்கள் 12-வது நாளாக இன்று நடைபெறுகிறது. அமைச்சர்களுக்குத் தாங்கள் கேள்விகளைப் பகிர்ந்து கொடுத்து, அவர்கள் பதில் அளித்து வருகின்றார்கள். ஆனால்—அன்றைக்கே அந்த பிரச்னையை நான் எடுத்தேனே—முதலமைச்சர் அவர்கள் 4-5 இலாக்காக்களுக்கு பொறுப்பேற்றுக் கொண்டு இருக்கிறார்—உள் துறை, மருத்துவத் துறை, பொதுத் துறை, அறநிலையத் துறை, தொழில் துறை ஆகிய மிக முக்கியமான இலாக்காக்களை அவர்கள் ஏற்று இருக்கிறார்கள். அதற்கான கேள்வி ஒன்று கூட இந்த 12 நாட்களாக இந்த அவையில் இடம் பெறாதது வருந்தத்தக்கது.

முதலமைச்சர் அவர்களே, குறிப்பிட்டு இருக்கிறார், ஒரு மணி நேரத்திற்கு ரூ. 3,500 செலவாகிறது என்று. ஆனால் அந்தக் கணக்கைச் சொன்ன முதலமைச்சர் இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்க இங்கே வராமல் இருப்பதும், அவைத்தலைவர் அவர்கள் முதலமைச்சருக்கு கேள்விகள் பகிர்ந்து கொடுக்காமல் இருப்பதும் வருந்தத்தக்க ஒன்றாக இருக்கிறது.

ஆகவே, அதற்கு இந்த அவையின் மரபுப்படி எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எப்போது கேள்விகள் தங்களால் பகிர்ந்தளிக்கப்படும் முதலமைச்சர் அவர்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வருவாரா? வரமாட்டாரா என்பதற்கு நான் தங்களிடம் விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, இன்னொன்றையும் நான் கூற விரும்புகிறேன். கவுன்சில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது முதலமைச்சர் வரவில்லையே என்று ஒரு அங்கத்தினர் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் இராஜா முகமது அவர்கள் பேரவை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இங்கே வரவில்லை

என்று கூறினார்கள். அவர்கள் அப்படிக் கூறும்போது முதலமைச்சர் இந்த அவையிலும் இல்லை. ஆகவே, இம்மாதிரியான நிலைமை சரிதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் மேலவையிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளைப்பற்றி இங்கே கூறக் கூடாது. அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். எது என்றாலும் அங்கு நடந்த விவாதங்களைப் பற்றி இங்கே கூறக் கூடாது.

**திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, தாங்கள் தீர்ப்புக் கூறும்போது அந்த அவையிலே நடைபெற்ற எதுபற்றியும் இந்த அவையிலே எழுப்பக் கூடாது என்று சொன்னீர்கள். ஆனால் இந்த அவையைப்பற்றி அந்த அவையிலே கூறும்போது அந்த அவையைப்பற்றி இங்கே கூறுவது ஒன்றும் தவறாகிவிட முடியாது என்பது என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேலவையில் எது நடந் தாலும் அதுபற்றி இங்கு பேசக் கூடாது என்பது நம்முடைய மரபு.

**திரு. க. அன்பழகன்:** அது தவறு. எப்போது இந்த அவையைப் பற்றி அங்கே கூறுவது சரி என்று ஏற்றுக்கொள்ளப் படுகிறதோ அப்போது அந்த அவையைப்பற்றி இங்கே குறிப் பிடுவதும் தவறாகாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியரே தவறு என்று சொன்னால் எப்படி? உங்களுக்கு நன்றாகத் தெரியும் விதி முறைகளைப்பற்றி.

**திரு. க. அன்பழகன்:** நான் மேல்சபையில் 6 ஆண்டுகள் இருந்திருக்கிறேன்; இந்த அவையில் 11 ஆண்டுகள் இருந்திருக் கிறேன். மேல்சபையில் நடைபெறும் விவாதத்தைப்பற்றி இங்கே குறிப்பிடுவது பொருத்தமல்ல. ஆனால் அமைச்சர் அளிக்கும் ஒரு தகவலைப்பற்றிக் கேட்பது தவறாகாது. அதுவும் ஒரு அமைச்சரைப்பற்றி அந்த அவையில் தகவல் கேட்டார்கள்; அந்த அமைச்சர் இந்த அவையிலே இருப்பதாக அங்கே சொல்லப்



பட்டது. ஆனால் அந்த நேரத்தில் அந்த அமைச்சர் இங்கேயும் இல்லையே, அது சரிதானா என்று ஜேம்ஸ் கேட்டார்கள். அதற்குத் தீர்ப்பு தரவேண்டியது தங்களுடைய கடமையாகும்.

(திரு. சங்கரய்யா, திரு. ஜேம்ஸ், மாண்புமிகு இராஜா முகமது ஆகியோர் எழுந்தார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். முதலில் அமைச்சர் விளக்கம் அளிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** தலைவரவர்களே, மேலவையில் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் ஏன் முதலமைச்சர் கேள்விக்குப் பதிலளிக்க வரவில்லை என்று கேட்டபோது இப்போது பேரவையும் மேலவையும் ஏக காலத்தில் நடைபெற்றுக்கொண்டி ருக்கின்றன. எனவே, முதலமைச்சர் இரண்டு அவைகளுக்கும் ஒரே நேரத்தில் வர முடியாது; ஆனால் இப்போது மேலவைக்கு வரமுடியவில்லை; முக்கியமான கேள்விகளை நாங்கள் எடுத்து அனுப்புகிறோம்; அவர்கள் வந்து பதில் சொல்வார்கள் என்று நான் அங்கே தெரிவித்தேன். இந்த அவையிலே முதலமைச்சர் இருக்கிறார் என்று அப்போது நான் சொல்லவில்லை.

**திரு. மு. கருணாநிதி:** பேரவையும் மேலவையும் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது முதலமைச்சர் இரண்டு அவைகளுக்கும் வரக் கூடாது என்று ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** மேலவையும் பேரவையும் ஏககாலத்தில் நடந்துகொண்டிருந்தால், ஏதாவது ஒரு அவையில் இருக்கலாம்; அல்லது இல்லாமலும் இருக்கலாம் ஏக காலத்தில் இரண்டு அவைகளிலும் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா:** தலைவரவர்களே, இங்கே பல தடவைகள் அமைச்சர்கள் பதில் சொல்லும்போது மேலவையிலே ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன் என்று குறிப்பிடுகின் றார்கள். ஆகவே, இதில் பல பிரச்சினைகள் வருகின்றன. இங்கே பேசியதை அங்கே பேசலாம் என்று வரும்போது, அங்கே பேசியதை இங்கே பேசலாம் என்று வருகிறது. இப்போது இரண்

## 44 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'மாலைமுரசு', 'தினமணி', 'அண்ணா' மற்றும் 'தினத்தந்தி' ஆகிய நாளேடுகள் மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்னைகள் மீதான பேரவைத் தலைவர் தீர்ப்பு

[பேரவைத் தலைவர்] [1978 மார்ச் 6

திரு. செஞ்சி இராமச்சந்திரன் அண்ணா நாளிதழ் மீதும் உரிமை மீறல் குறித்த பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். நிதி அமைச்சர் 23—2—1978-ல் பேரவையில் ஆற்றிய உரையின் பகுதியை 25—2—1978 அன்று பேரவையில் பொதுப்பணித்துறை அமைச்சர் படித்ததை முழுவதுமாக இப்பத்திரிகைகள் செய்தியை வெளியிடாதது உள்நோக்கத்துடன் மக்களுக்குத் தவறான தகவலைத் தந்து மக்களைத் திசை திருப்புவதாக அமைந்துள்ளது என்று உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். பத்திரிகைகளுக்கு விளக்கம் கேட்டு, பின்னர் எனது தீர்ப்பை அளிப்பதாக நான் தெரிவித்திருந்தேன்.

இதேமாதிரி தினத்தந்தி நாளிதழ் மீது இதே காரணத்திற்காக திரு. உச்சி கவுடர் அவர்களும் ஒரு அறிவிப்பைப் பின்னர் கொடுத்திருந்தார். அதையும் இவற்றுடன் இணைத்து மேலே குறிப்பிட்டுள்ள எல்லா பத்திரிகைகளுக்கும் விளக்கம் கேட்டு எழுதப்பட்டது.

(முற்பகல் 10-10)

அவைகளிடமிருந்து விளக்கங்கள் வந்துள்ளன. இவற்றில், தினத்தந்தி, மாலைமுரசு இரண்டு பத்திரிகைகளும் இனிமேல் கவனமாக இருப்பதாகத் தெரிவித்தும், விடப்பெற்ற பகுதிகளுடன் சேர்த்து முழுப் பகுதியையும் மீண்டும் 1—3—1978 அன்று வெளியிட்டுள்ளதாகவும் பதில் அனுப்பியுள்ளன. எனவே, அப்பத்திரிகைகளை இனி இம்மாதிரி நிகழாவண்ணம் கவனத்துடன் நடந்து கொள்ளும்படி தெரிவித்துக்கொள்கிறேன்.

இடநெருக்கடி காரணமாக, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பேசியது முழுவதையும் அது சம்பந்தப்பட்ட மற்ற பகுதிகளையும் கூடத் தாங்கள் வெளியிடவில்லை என்றும், எனவே ஒரு பகுதியை மறைத்து வெளியிட்டு, அதன் மூலம் மக்களுக்குத் தவறான தகவலைத் தரவேண்டும் என்ற எண்ணம் இல்லை என்றும் உள்நோக்கம் எதுவும் இல்லை என்றும் அண்ணா, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி ஆகிய நாளிதழ்கள் தெரிவித்துள்ளன



1978 மார்ச் 6] [பேரவைத் தலைவர்]

பத்திரிகைகள், நடவடிக்கைக் குறிப்புகளை முழுவதும் வெளியிட முடியாது என்பதையும் ஆனால் மையக் கருத்துக்கள் மாறாமல் கூடியவரை எல்லா நிகழ்ச்சிகளும் வெளியிடப்படுவது தான் நல்லது என்றும் ஏற்கனவே தீர்ப்பளித்துள்ளேன். அதை மீண்டும் வலியுறுத்தி, அவைநிகழ்ச்சிகளை வெளியிடும்போது இம்மாதிரி தவறுகள் நேராவண்ணம் பார்த்துக்கொள்வது அவசியம் என்றும், இடநெருக்கடியைக் காரணம் காட்டி ஒரு சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டு விட்டு அதையொட்டிய பகுதிகளை வெளியிடாது இருப்பது சில சமயங்களில் தவறான கருத்துக்களை ஏற்படுத்தக் கூடும் என்பதால் இனிமேல் இம்மாதிரி நிகழா வண்ணம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, அவை உரிமை குறித்து எழுப்பப்பட்ட பிரச்சினைகளில் மேல் நடவடிக்கை எதும் தேவையில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

### (ஆ) 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை மீதான பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1—3—1978 அன்று திரு. ஆர். உமாநாத் அவர்கள் பேரவையில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் மீது ஒரு உரிமை மீறல் குறித்த பிரச்சினையை கொண்டு வந்தார். அப்பத்திரிகை 15—2—1978 அன்று வெளியிட்ட ஒரு செய்தி குறித்துப் பேரவையில் 23—2—1978 அன்று திரு. உமாநாத் அவர்கள் ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்பினார். அதற்கு நான் 28—2—1978 அன்று எனது தீர்ப்பை அளித்தேன். 1—3—1978 அன்று இது குறித்து இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்ட செய்தியில் எனது தீர்ப்பு முழுவதும் வெளியிடப்பெறவில்லை என்றும் அப்பத்திரிகை எழுதிய கடிதத்தின் வருத்தம் தெரிவிக்கும் பகுதியும், இனி இவ்விதம் நிகழாது என்று உறுதி அளித்தப் பகுதியும் எனது தீர்ப்பில் நான் கொடுத்த எச்சரிக்கைப் பகுதியும் விடுபட்டுள்ளன என்றும், இது வேண்டுமென்றே செய்யப்பட்டது என்றும், எனவே இது அவை உரிமையை மீறிய செயல் என்றும் திரு. உமாநாத் குறிப்பிட்டார்.

சபைகளும் ஒரே நேரத்தில் நடைபெறுவதால் இந்தப் பிரச்னை வந்திருக்கிறது. ஆகவே, இதை மேலும் பெரிதாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**. நானும் 16 ஆண்டுகள் உறுப்பினராக இருந்திருக்கிறேன். இரண்டு அவைகளும் ஒரே நேரத்தில் நடைபெறுவதால், முதலமைச்சர் வரவில்லையே என்று அங்கே கேட்டபோது, அமைச்சர் அதற்கு என்ன சொன்னார் என்பதற்கு விளக்கம் அளித்தார்கள். பொதுவாக மேலவையில் நடைபெறும் ஒரு சம்பவத்தைப்பற்றி இந்த அவையில் எழுப்பு வதில்லை. முதலமைச்சர் ஏன் வரவில்லை என்று அங்கே கேட்ட போது அவர் இந்த அவையிலே இருக்கிறார் என்று சொன்னதாக திரு. ஜேம்ஸ் குறிப்பிட்டார்கள். ஆனால் அமைச்சரவர்கள் இங்கே இருக்கிறார் என்று சொல்லவில்லை என்று தெரிவித்தார்கள்.

**திரு. க. அன்பழகன்**: தலைவரவர்களே, அந்த அவையிலே கேட்கும்போது இந்த அவையிலே இருந்தார்கள் என்று சொன்னதாக நாங்கள் அறிந்தோம். ஆனால் அமைச்சரவர்கள் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்கிறார்கள். ஆக, இரண்டு அவைகளும் ஒரே நேரத்தில் நடந்துகொண்டிருப்பதால், அதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு, அங்கே கேட்டால் இங்கே இருக்கிறார்; இங்கே கேட்டால் அங்கே இருக்கிறார் என்று சொல்லி தப்பித்துக்கொள்ள முடியாது. இரண்டு அவைகளும் ஒரே நேரத்தில் நடப்பதால் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமலும் இருக்க முடியாது. ஆக, இரண்டு அவைகளிலும் இல்லாமல், உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் இருப்பதால், அதுபற்றி இங்கே கேட்க உரிமை படைத்தவர் களாக இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது**: தலைவரவர்களே, இரண்டு அவைகளும் ஒரே நேரத்தில் நடைபெறுவதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு, அந்த அவையிலே கேட்டால் இங்கே இருக்கிறார்; இந்த அவையிலே கேட்டால் அங்கே இருக்கிறார்; என்று சொல்வதாக மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் அவர்கள்



அவர்கள் கூறியது சரியல்ல. அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பி லிருந்து எடுத்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு' என்று குறிப்பிடுவது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: முதலமைச்சர் அவர்கள் இங்கே வந்து, அவர்களுடைய நிகழ்ச்சிகளுக்குத் தடங்கல் இல்லாமல் நடத்தித் தரவேண்டுமென்று எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். முதலமைச்சர் இங்கே வரவேண்டுமென்றோ வரக்கூடாது என்றோ நான் கட்டாயப் படுத்த முடியாது. ஆனால் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் முதலமைச்சர் சம்பந்தப்பட்ட கேள்விகள் தேங்கிக் கிடக்கின்றன; இந்த அவையிலே அவர் சம்பந்தப்பட்ட கேள்விகளையும் கொண்டுவந்து ஏன் பதில் சொல்ல அழைக்கக் கூடாது என்று கேட்டார்கள். முதலமைச்சர் அங்கே இருக்கவில்லை; அல்லது இங்கே இருக்கவில்லை என்று கேட்பதும் சரியல்ல; இருக்க வேண்டுமென்று நான் சொல்வதும் சரியல்ல.

* **திரு. மு. கருணாநிதி**: தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும். ஏன் முதலமைச்சரை அழைக்கக் கூடாது என்று நான் கேட்க வில்லை. பொதுவாக கேள்விகளை அமைச்சருக்குப் பகிர்ந்து அளிக் கின்ற அதிகாரத்தைத் தங்கள் பெற்றிருக்கிறீர்கள். ஒரு நாளாவது முதலமைச்சருக்குப் பகிர்ந்து அளித்து ஒரு கேள்வி கூட அளிக்க வில்லை. முதலமைச்சர் நான்கு இலாக்காக்களுக்கு பொறுப்புள்ள வராக உள்ளார். ஒருவேளை ஒரு கேள்வி கூட இருக்க வில்லையா என்று கேட்டால் நிச்சயமாக அப்படி இருக்க முடியாது. ஏராளமான கேள்விகள் முதலமைச்சரது இலாக்காக்கள் மீது போடப்பட்டுள்ளன. அதைத் தாங்கள் பகிர்ந்தளிக்க வேண்டும். அதற்கு முதலமைச்சர் இங்கே பதிலளிக்க வேண்டும் என்பதைத் தான் இங்கே சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கோரிக்கை அவைக்கு தேவையானதும் அவசிய மானதும் ஆன ஒன்றாகும். முதலமைச்சருக்கு சார்ந்த கேள்விகள் தயாராக இருக்குமானால் உடனே அவருடன் கலந்து நடவடிக்கை எடுக்க நான் முனைகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (3) அமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதம் குறித்து.**

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தங்களின் அனுமதியோடு இந்த கடிதத்தை இந்த அவைக்கு படிக்க விரும்புகிறேன். இந்தக் கடிதம் எழுதியது சமூக நலத்துறை அமைச்சர் மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி அவர்களாவர். இதை அவர் தமிழக முதல்வர் அவர்களுக்கு எழுதி இருக்கிறார்.

வணக்கத்திற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு,

வணக்கம்.

கடந்த 1—3—1978 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற நிதிநிலை அறிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்கள் என்மீது சாட்டிய குற்றச்சாட்டினைப் பற்றி என்னுடைய விளக்கத்தைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் பயன்படுத்துகிற அரசாங்க கார் டி. எம். வி. 7575 ரிப்பேர் வேலைகளுக்காகவோ சர்வீசுக்காகவோ ஒர்க் ஷாப்பிற்குச் செல்லுகிறபோது நான் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற இலாகாவைச் சேர்ந்த கார்களை நான் பயன்படுத்துவது வழக்கம்.

அதுபோல் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்ட நாளன்று என்னுடைய கார் ஒர்க்ஷாப்பிற்குச் சென்றிருந்தால் என்னுடைய உபயோகத்திற்கு என் சம்பந்தப்பட்ட இலாகாவிலிருந்து டி. எம். பி. 1144 வந்திருந்தது.

அன்று நான் அரசாங்க அலுவல் காரணமாக வீட்டிலேயே இருக்க நேர்ந்தது. அந்த நாளன்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படாமல் எனது தாயார் அவர்கள் அந்தக் காரைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். என்னுடைய தாயார் வயதான காரணத்தினால் அவர்கள் வெளியிலே செல்லும்பொழுது





பாதுகாப்பு அதிகாரிகளில் ஒருவர், எங்கள் குடும்பத்திற்கு ஏற்கனவே அறிமுகமானவர் என்ற முறையில் தாயாரோடு அவர் வேலை நேரங்கள் இல்லாத போதும் கூட உதவிக்குச் செல்வது வழக்கம்.

இந்த முறையில்தான் எதிர்க் கட்சித் தலைவர் குறிப்பிட்ட நாளன்று என்னு தாயாரும், பாதுகாப்பு அதிகாரியும் சென்றிருக்கிறார்கள். இதுதான் அந்தச் சிம்பவம் நடைபெற்றதற்குப் பின்னணி என்றாலும், நான் பயன்படுத்துகிற இந்தக் காரை என் தாயார் உபயோகப்படுத்த உரிமை இருக்கிறதென்றாலும், நான் விரும்பாத ஒரு இடத்திற்கு அந்தக் காரை எடுத்துச் சென்றது வருந்தத்தக்க நிகழ்ச்சி என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இதுபற்றிய செய்தி எனக்குத் தெரிந்தவுடன் என்னுடைய தாயாரையும், பாதுகாப்பு அதிகாரியையும் இனி வருங்காலத்தில் இப்படிப்பட்ட சம்புவங்கள் நடைபெறக் கூடாதென்று உண்மையாகக் கண்டித்திருக்கிறேன்.

எனவே, என்னுடைய கவனத்திற்கு அப்பாற்பட்டு நடந்து விட்ட இந்த நிகழ்ச்சிக்கு என்னுடைய வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இனிமேல் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எனக்குத் தெரியாமல் கூட நடைபெறாது என்பதற்கு உறுதி கூறுகிறேன்.

தங்கள் தாழ்மையுள்ள,

(ஒப்பம்) பி. டி. சரஸ்வதி.

## (4) உரிமைப் பிரச்னைகள்.

**(அ) 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'மாலை முரசு', 'தினமணி', 'அண்ணா' மற்றும் 'தினத்தந்தி' ஆகிய நாளேடுகள் மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்னைகள் மீதான பேரவைத் தலைவர் தீர்ப்பு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 27—2—1978 அன்று பேரவையில் திரு. சாதிக் பாட்சா அவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் மீதும், திரு. து. புருஷோத்தமன் அவர்கள் மாலை முரசு நாளிதழ் மீதும், திரு. ஏ. ரகுமான்கான் தினமணி நாளிதழ் மீதும்,

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1978 மார்ச் 6

அப்படி வற்புறுத்தியதின் பேரில் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடந்தது. அதில் அந்த பேச்சுவார்த்தையில் என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியாது. அரசு தரப்பில் கூறப்பட்டது. அவர்களின் குறைகளை எல்லாம் கேட்டோம். இன்னும் சில நாட்களில் அதிகாரிகளோடு கலந்து, அமைச்சரவையில் கலந்து எங்களுடைய முடிவை தெரிவிக்கின்றோம் என்று அரசு தரப்பில் சொல்லப்பட்டது. அவர்கள் தரப்பில் என்ன சொல்லப்பட்டது என்றால், எங்களுடைய குறைகளை அரசு உதாசீனம் செய்து விட்டது. பேச்சு வார்த்தை முடிந்துவிட்டது, ஆகவே நாங்கள் தொடர்ந்து போராட்டத்தை நடத்துகிறோம் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஆகவே, எங்களைப் பொறுத்தவரையில் எதிர்க்கட்சிகள் கூறியவாறு அவர்களோடு அரசு பேச்சுவார்த்தை நடத்திய பிறகு, இன்னின்ன விஷயங்களை பேசினோம் என்று சொல்லியிருப்பார்களேயானால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் அவர்களே ஒரு அறிவிப்பை செய்துவிட்டார்கள். பின்னால் போராட்டத்தை அவர்கள் துவங்கியபின், பிரதிநிதிகள் சென்று அவர்களைப் பார்த்து பேசிய போது, அரசோடு பேசி இதற்கு முடிவு செய்ய வேண்டும் என்றும், அதுவும் இன்னின்ன தேதிக்குள் அரசு தெரிவிக்க வேண்டும் என்றும் சொல்லியிருந்தார்கள். அப்படி ஏன் ஒரு 'அல்டிமேட்டம்' கொடுக்க வேண்டும். அரசு இதைப்பற்றி பார்த்து முடிவு செய்ய வேண்டும் என்று விட்டிருக்கக் கூடாதா? என்று நாங்கள் அவர்களுக்கு அறிவுரை சொன்னோம்.

ஆனால் அவர்களுடைய நியாயத்தையும் நாம் புறக்கணித்துவிட முடியாது. அவர்களுடைய கோரிக்கையிலும் நியாயம் இருக்கிறது. இன்றைக்கு மத்திய சர்க்காரில் கொடுக்கப்படுகின்ற ஊதியம் தங்களுக்கும் தரப்படவேண்டும் என்று கேட்க தங்களுக்கு உரிமை இருக்கிறது. அதே நேரத்தில் அரசு தரப்பில் பல சங்கடங்கள் இருக்கலாம். அதை உணர்ந்தாலும் பக்கத்தில் வேலை செய்கின்ற மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு கொடுக்கப்படுகின்ற சலுகை தங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கூறுவதில் தவறு கிடையாது.



1978 மார்ச் 6] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இருந்தாலும், நமக்கிருக்கின்ற பொருளாதார நெருக்கடிகள், நம்முடைய நிதி வசதி, இவைகளைப்பற்றியும் பேசித் தீர்ப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அதைத் தான் நாங்கள் வற்புறுத்துகின்றோம். அதேபோன்று அரசு ஊழியர்களும் தொடர்ந்து போராட்டத்தை நடத்திக்கொண்டிருப்பது உசிதம் அல்ல. அவர்களும் போராட்டத்தை ஒத்தி வைத்து அரசோடு பேச்சுவார்த்தை நடத்த மீண்டும் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்கட்சித் தலைவர்களுடைய கூட்டம் ஒன்றைக் கூட்டினார்கள். கோட்டையில் இரண்டு நாட்களுக்கு முன்னால் நடந்தது. நாங்கள் கலந்து கொண்டோம். அரசு தரப்பில் தங்களுக்கு இன்னின்ன விதங்களில் சங்கடங்கள் இருக்கின்றன என்று எடுத்துக்கூறினார்கள். ஊழியர்களும் தங்கள் குறைகளை தெரிவித்தார்கள். அதே நேரத்தில் அரசாங்கத்தினுடைய நிலைமை என்ன என்பதை பட்டவர்த்தனமாக, நிதிநிலை போக்குவரத்து என்ன என்பதையெல்லாம் எடுத்துச்சொன்னார்கள். அது எப்படியிருந்தபோதிலும், இதற்கு ஒரு முடிவு எடுத்தாக வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்துகின்றோம். ஆகவே, அரசு இதற்கான முடிவை எடுத்து இப்படிப்பட்ட போராட்டத்தை தவிர்க்க வேண்டும். ஆகவே இதைப் பற்றி விவாதித்து, முடிவு எடுக்க, அவையில் இதைப்பற்றி விவாதிப்பதற்கு அரசின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

* திரு. என் சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, அரசிதழ் பதிவு இல்லாத ஊழியர்கள் சம்பந்தமான இன்றைக்கு விவாதிப்பதற்காக இந்த அவையை ஒத்திவைப்பதற்கான காரணங்கள் என்ன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நேற்றைய முன்தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நடத்தினார்கள். இந்தக் கூட்டத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் கலந்து கொண்டு, என் கட்சியின் சார்பிலே அரசு ஊழியர்களுடைய பிரச்னையைத் தீர்ப்பதற்கு பின்வருமாறு யோசனைகளை நான் பலமாக வற்புறுத்தினேன்.

[பேரவைத் தலைவர்] [1978 மார்ச் 6

இம்மாதிரி தீர்ப்பின் முக்கிய பகுதிகளை வெளியிடாததும் அவர்களே எழுதிய கடிதத்தின் பகுதிகளை மறைத்து செய்தி வெளியிட்டதும் தவறான செயலாகும். தவறான செய்தி ஒன்றினை வெளியிட்டு அது தவறு என்று சுட்டிக்காட்டப்பட்டு தீர்ப்பு வழங்கியபின், அத்தீர்ப்பையும் அம்மாதிரி தவறாக வெளியிட்டதற்கான வருத்தத்தையும் முதலில் வெளியிட்ட செய்திக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டதோ அதே அளவு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்படவேண்டும். இதுதான் மரபு. எனவே, இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் இவ்வாறு செய்யாதது தவறானது.

ஆயினும், 2-3-1978 தேதியிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் எனது முந்திய தீர்ப்பையும் தாங்கள் முதலில் எழுதிய கடிதத்தையும் முழுவதுமாக வெளியிட்டுள்ளார்கள். எனவே, இப்பிரச்சினையை இத்துடன் விட்டுவிடலாம் என்று கருதுகிறேன். இனி இவ்வாறு நிகழாவண்ணம் அப்பத்திரிகை எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானம்.

**திரு. துரை முத்துசாமி:** பாயின்ட் ஆப் ஆர்டர். இன்று 6 தேதி ஆகியும் என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இன்னும் எங்களது சம்பளத்தை வாங்கவில்லை. மேலும் பொது மக்களும் அவதிப்படுகிறார்கள். காவரையறையின்றி என்.ஜி.ஓ. க்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இன்னும் சம்பளம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்பதை பேரவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(5) ஒத்திவைப்பு தீர்மானம்.

**(அ) அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள் வேலை நிறுத்தம் குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்துவருவது குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை



1978 மார்ச் 6] [பேரவைத் தலைவர்]

ஒத்திவைக்க வேண்டுமென்று திரு. க. சுப்பு, திரு. ஏ. ஆர் மாரிமுத்து, திரு. ஓ. சுப்பிரமணியம், திரு. புஷ்பராஜ், திரு. நா. சுந்தரராஜ், திரு. என். சங்கரய்யா, திரு. கு. ரமணி, திரு. ஆர். கிருஷ்ணன், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. சோ. அழகர்சாமி, திரு. கூத்தக்குடி ச. சண்முகம், திரு. செ. சிவசாமி, திரு. எம். ஏ. லத்தீப், திரு. ரா. மார்க்கபந்து ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். இந்த வேலைநிறுத்தம் நீடிக்கப்படக்கூடாது என்பது என்னுடைய கருத்து. வேலை நிறுத்தத்தை நாங்கள் தூண்டிவிடவில்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் அவர்களுக்கு தொழிற்சங்க உரிமை இருப்பதின் காரணமாக, அவர்களுக்கு இருக்கின்ற குறைபாடுகளை போக்கிக் கொள்வதற்கு வேலைநிறுத்தம் செய்வதின் மூலமாக அவர்களுடைய கோரிக்கையைச் சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமையை நாம் பறிக்க முடியாது.

இருந்தாலும் என்னைப் பொறுத்த வரையிலும் அரசு தரப்பில் சொல்லப்படுகின்ற காரணங்களையும், ஊழியர்கள் சொல்லுகின்ற குறைகளையும் கேட்டு பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும், இந்தப் போராட்டம் தொடரக் கூடாது. போராட்டத்தை திரும்பப் பெறவேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது. எங்களுடைய கருத்தும் அதுதான்.

அரசு ஊழியர்களை நாங்கள் பார்த்தபோது, போராட்டத்தை தொடர்ந்து நடத்தக்கூடாது. அரசோடு பேசி ஒரு முடிவுக்கு வருவதுதான் நல்லது என்று கூறியிருக்கின்றோம். அதுதான் எங்களுடைய கருத்தும் கூட, அவர்கள் முன்னால் போராட்டத்தை ஆரம்பித்த போது, இந்த அவையில் அது பற்றி பேசப்பட்டது. அவையில் எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும், அரசு அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தவேண்டும் என்று வற்புறுத்தியிருக்கிறார்கள்.

[திரு. என். சங்கரய்யா] [1978 மார்ச் 6

அதாவது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட்டிலே குறிப்பிட்டிருப்பதுபோல் 200 ரூபாய்க்கு கீழே சம்பளம் பெறக் கூடியவர்களுக்கு 25 ரூபாயும், 200-க்கு மேலே சம்பளம் வாங்கக் கூடியவர்களுக்கு 15 ரூபாயும் நான்-ரெகரிங்காக ஒரே ஒரு மாதத்திற்கு மட்டும் கொடுப்பதென்றும் தொடர்ந்து வராமல் இருக்கக்கூடிய இந்தப் பணத்தை, இந்த அரசாங்கம் நிர்ணயித்திருக்கும் சம்பளக் கமிஷன் அதனுடைய முடிவுகளை நிர்ணயித்து, இந்த அரசுக்கு ஒரு அறிக்கையை வெளியிடும் வரையில் இந்த அரசாங்கம் அவர்களுக்கு மாதந்தோறும் இதை 15 ரூபாய், 25 ரூபாய், 200 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கக்கூடியவர்களுக்கும், 200 ரூபாய்க்கு கீழே சம்பளம் வாங்கக் கூடியவர்களுக்கும் தொடர்ந்து கொடுத்து வரவேண்டும். அவ்வாறு கொடுத்துவந்தால் அதிலே பிரச்னை இல்லை. காரணம், 1—4—1978 முதல் இந்தச் சம்பளக் கமிஷனின் தீர்ப்புகளை இந்த அரசாங்கம் நிறைவேற்றும் என்று ஏற்கனவே நிதி அமைச்சர் அவர்களால் வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் கூறினேன்.

அப்போது அவர்கள் கேட்டார்கள். ஒருவேளை இந்தச் சம்பளக் குழு இந்த அளவிற்கு அவர்களுக்கு உதவி கொடுக்க வேண்டாம் என்றால், அவர்களுக்கு அதிகப்படியான நிதியை கொடுப்பதாகிவிடுமே என்று அவர்கள் சொன்னபோது, நான் சொன்னேன் அப்படியானால் பரவாயில்லை, நம்முடைய மாகாண அரசாங்கமே அதை அவர்களுக்கு மானியமாகக் கொடுத்து விடலாம் என்று இன்றைக்கு ஜூன் மாதத்திற்குள் சம்பளக் குழுவின் அறிவிப்புகள் வந்துவிடும். ஆகவே, இதற்கிடையிலே நாட்கள் அதிகமில்லை. ஆகவே, இந்த 15, 25 ரூபாய்களை இந்த அரசு உதவித்தொகையாக மாதந்தோறும் இடைக்கால நிவாரணமாக அவர்களுக்குக் கொடுப்பது பொருத்தமாக இருக்கும், இதை சம்பளக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கின்றவரையிலே அமுல் செய்யப்பட வேண்டுமென்று நான் பலமாக வற்புறுத்தினேன்.

அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு மத்திய சர்க்கார் ஊழியர்களின் சம்பளத்திற்கு ஏற்றவாறு இவர்களின் சம்பளமும் இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் பார்த்தால் தமிழக அரசிலே இருக்கக்கூடிய 300 ரூபாய்க்கு கீழே சம்பளம் வாங்கக் கூடியவர்களுக்கும், மத்திய அரசாங்கத்திலே 300 ரூபாய்க்கு கீழே சம்பளம் வாங்கக் கூடியவர்களுக்கும் இடையிலே சுமார் 35



1978 மார்ச் 6] [திரு. என். சங்கரய்யா]

ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. அதற்கு மேலே சம்பளம் வாங்கக் கூடியவர்களுக்கு 50 ரூபாய்வரை வித்தியாசம் இருக்கிறது. இப்படி மத்திய அரசாங்கத்திலே உள்ளவர்களுக்கும், மாநில அரசாங்கத்திலே உள்ளவர்களுக்கும் எந்தவிதத்திலும் வித்தியாசம் இருக்கக் கூடாது. அவர்கள் செய்யக்கூடிய பணி ஒன்றாக இருக்கிறது. ஆகவே, ஒரேமாதிரியான சம்பளம், மத்திய அரசாங்கத்திலே கொடுக்கப்படுகின்ற சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று நான் வற்புறுத்தினேன்.

அதைப்போல், அரசாங்கத்திலே வேலை செய்யக்கூடிய பெண்கள் தங்கள் வீடுகளிலே வேலைசெய்துவிட்டு, அலுவலகம் வருவதற்கு கொஞ்சம் கஷ்டமாக இருக்கின்றது, இப்போதுள்ள வேலைநேரம் சரியல்ல, காலை 10½ மணி முதல் மாலை 5 மணி வரை தமிழகம் பூராவிலும் ஒரே சீரான நேரத்தை அமைத்துத் தரவேண்டும் என்று அவர்கள் சொன்ன கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்தினேன்.

அதோடு மட்டுமல்ல. அவர்களுடைய பிராவிடென்ட் பண்டு நிதியிலே ஏற்கனவே இருந்ததைப்போல், அவர்களுடைய வீட்டிலே மருத்துவ செலவுக்காக அல்லது அவர்களுடைய திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் வந்தால் கடன் பெறுவதற்கான வசதி முன்பு எப்படியிருந்ததோ, அதைபோல் இருக்க புதிய உத்தரவை ரத்துசெய்ய அரசாங்கம் முன்வர வேண்டுமென்றும் முன்பிருந்த நிலைமைக்கு உடனடியாக வர வேண்டுமென்றும் நான் வற்புறுத்தினேன்.

அது மட்டுமல்லாமல், கட்டாய ஓய்வுத் திட்டத்தின்கீழ் 700 பேர்களை இந்த அவசர காலத்திலே வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களின் ஒரு பகுதிக்கு மட்டும் விசாரணை நடைபெற்று மீண்டும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இது போல் இல்லாமல், மற்றவர்கள் அனைவரையும் வேலையில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், இந்தக் கட்டாய ஓய்வளிக்கும் திட்டத்தை, இந்தக் கொள்கையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், எங்கள் கட்சி ஆளுகின்ற மேற்கு வங்காளத்திலும், கேரளாவிலும் இந்த கட்டாய ஓய்வுத் திட்டத்தின்

[திரு. என். சங்கரய்யா] [1978 மார்ச் 6

கீழ் வேலை இழந்தவர்கள் அத்தனை பேர்களையும் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொண்டார்கள். அதைப் போல் இந்த மாநில அரசாங்கமும் இப்படி கட்டாயமாக ஓய்வு பெறச் செய்தவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் பலமாக வற்புறுத்தினேன்.

அதேபோல், அவர்கள் ஓய்வு பெறுகின்ற காலத்தில் இன்றைக்கு வாழ்நாள் பூராவும் இந்த அரசாங்கத்திற்காக பாடுபடுகின்றவர் களுக்கு 10,000 ரூபாய் கொடுப்பதற்கான திட்டத்தை இந்த அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென்பதாகும். இதுவும் நியாய மாகும். இப்படி இந்த அரசாங்கத்திற்காக ஒருவர் வாழ்நாள் பூராவும் பணியாற்றுகின்றவர்களுக்கு இந்த அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் நான் வற்புறுத்தி, அதற்கான திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

அந்தக் கோரிக்கைகளை நாங்கள் வற்புறுத்தி அதை அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென்று சொன்னோம். இன்றைக்கும் நான் அதைத்தான் கூற விரும்புகிறேன். நிலைமை என்னவாக இருந் தாலும் சரி, அரசாங்கம் இந்தக் கோரிக்கைகளைப் பற்றிப் பரிசீலனை செய்து உடனடியாக அறிவிக்க அரசாங்கம் முன்வர வேண்டு மென்று கூறுகிறேன். நண்பர் சிவ இளங்கோ சார்ந்த என். ஜி. ஓ. ஸ்தாபனத்தினரும், பாதனைச் சார்ந்த என்.ஜி.ஓ. ஸ்தாபனத் தினரும், ஏனைய ஸ்தாபனங்களும் இதுபோன்ற கோரிக்கைகளைத் தந்து வற்புறுத்தியிருக்கிறார்கள். நாங்கள் இதுபற்றிக் கூறியபோது முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்—ஏற்கனவே கொண்டு வந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்போது வெளி நடப்புச் செய்ய முற்பட்டீர்கள், அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று. நீங்கள் சொன்ன உறுதியின்பேரில் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்துவார்கள்; ஆகவே, அவர்களை விடுதலை செய்யுங்கள் என்று சொன்னதன் அடிப்படையில் அவர்களை விடுதலை செய்த பிறகு அவர்கள் இப்படி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கேட்டார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரை அந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த நண்பர்கள் எங்களிடம் வந்து அதிகார பூர்வமாகப் பேசினார்கள். திரு. சிவ இளங்கோ அவர்களும், சுப சீதாராமன் அவர்களும் வந்து ஆலோசனை நடத்தினார்கள். 'நீங்கள் தனி ஸ்தாபனம், உங்களுக்குத் தேவையான ஏவை



1978 மார்ச் 6] [திரு. என். சங்கரய்யா]

நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று சொன்னோம். முதலமைச்சர் அவர்களோடு நடந்த பேச்சு வார்த்தை அரை மணி நேரத்தில் முடிந்து விட்டது, அரை மணி நேரத்தில் எங்களை அனுப்பிவிட்டார்கள் என்று அவர்கள் சொன்னார்கள்.

முதலமைச்சர் அவர்கள் மறு நாள் வேறு பல சங்கங்களோடு பேச்சு வார்த்தை நடத்தி யிருக்கிறார். உங்களுக்கும் முதலமைச் சருக்கும் இடையே என்ன நடந்தது? நீங்கள் பேச்சு வார்த்தை யின்போது என்ன கேட்டீர்கள்? எதைக் கொடுக்க அவர்கள் மறுத்தார்கள்? அதைத் தமிழக மக்கள் மத்தியில் வையுங்கள். நீங்கள் இன்று இரண்டு பிரிவாக இயங்கிக் கொண்டிருக்கிறீர்கள், இரண்டு பேரும் ஒன்றாகச் சேர்ந்து அரசாங்கத்திடம் கோரிக்கை யைக் கொடுத்து சிறிது அவகாசம் கொடுங்கள். அப்படிக் கொடுத்து அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அதற்கு பிறகு தொழிற்சங்க ரீதியில் நடவடிக்கை எடுப்பதில் தவறு இல்லை.

கைது செய்யப்பட்ட நூற்றுக் கணக்கானவர்களை விடுதலை செய்யவேண்டுமென்று நாங்கள் கோரி விடுதலை செய்யப்பட்ட தற்கு பிறகு மறுநாளே மறியல் செய்ய வேண்டுமென்று நீங்கள் செல்லுவது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்குச் சரியாகப் படவில்லை என்று கூறினோம். அதுதான் என்.ஜி.ஓ.க்கள் நலனைப் பாதுகாக்கவும் சரியாக இருக்கும். அவர்கள் மற்றவர்களையும் கூட்டி வைத்துப் பேசுவதாகச் சொல்லிப் போனார்கள்.

மறுநாள் காலையில் வந்தார்கள், நீங்கள் அனைவரும் சொல்லுகிற யோசனையைக் கேட்டுக் கொள்கிறோம்; மறியல் நடைபெறும் என்று கூடியுள்ள ஊழியர்கள் சேப்பாக்கத்தில் காத்துக் கொண் டிருக்கிறார்கள். சர்வ கட்சிப் பிரதிநிதிகளும் எங்கள் கோரிக் கையை சட்டமன்றத்தில் வற்புறுத்துவதாக உறுதி அளித்தால் அவர்கள் திருப்திப் படுவார்கள்; நாங்கள் மாற்று வழியில் இயக்கத்தை நடத்துவது பற்றி யோசிக்க முடியும் என்று சொன்னார்கள். அப்போது எங்கள் கட்சியின் சார்பில் நாங்கள் வற்புறுத்தியது—நாங்கள் வருகிறோம்; ஆனால் நாங்கள் வந்தால் எங்களுக்குத் தெரியாமல், எங்களுடைய உடன்பாடு இல்லாமல் நீங்கள் போராட்டத் திட்டத்தை அறிவிக்கக்கூடாது. அதற்கு

[திரு. என். சங்கரய்யா] [1978 மார்ச் 6

நாங்கள் ஆதரவு கொடுத்ததாக எங்கள்மீது குற்றம் சுமத்தக் கூடாது என்று சொன்னேன். அப்படிச் செய்ய மாட்டோம் என்று நண்பர் சுப. சித்தாராமன் அவர்கள் உறுதி அளித்தார்கள். மற்றக் கட்சியைச் சார்ந்தவர்களும் அதே போலத்தான் கேட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அப்படித்தான் என்னிடம் கேட்டார்கள். சங்கரய்யாவைக் கேட்காமல் பதில் சொல்ல மாட்டேன் என்று தான் அவர்களிடம் சொல்லிவிட்டதாக எதிர்க் கட்சித் தலைவர் கூறினர் என்றார்கள். நீங்கள் அனுப்பினால் நாங்களும் எங்கள் கட்சியின் சார்பாக பிரதிநிதியை அனுப்பு கிறோம் என்றார்கள்.

அந்த வகையில் எங்கள் கட்சியின் சார்பாக திரு. ரமணி அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. சாதிக் பாட்சா அவர்களும், மற்றும் காங்கிரஸ் கட்சி, ஜனதா கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பாக பிரதிநிதிகள் அங்கு சென்று, உங்களுடைய கோரிக்கையைப் பற்றிச் சட்ட மன்றத்தில் தொடர்ந்து எடுத்துச் சொல்லுவோம் என்று அங்கே பேசினார்கள்.

கடைசியில் என்ன நடந்தது? நண்பர் சாதிக் பாட்சா அவர்கள் பேசி முடிந்த பிறகு, திரு. ரமணி அவர்கள் பேசி முடித்த பிறகு திடீரென்று அவர்கள் அறிவித்தார்கள்—2-ம் தேதி பார்த்து விட்டு 3 ஆம் தேதி முதல் மறியலில் ஈடுபடுவோம் என்று சொன்னார்கள். அது அங்கு சென்றிருந்த ரமணி அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது. எங்களைக் கேட்காமலே நீங்கள் இப்படி போராட்ட திட்டத்தை அறிவித்தால், “நாங்கள் அதற்குப் பொறுப்பு எப்படி ஏற்க முடியும்?” என்று வருத்தத்தோடு சொல்லிவிட்டு வந்தார்கள்.

மூன்றும் தேதியிலிருந்து மறியல் என்று அறிவித்து விட்டு, மறுபடியும் எங்களிடம் வந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு பிரதிநிதியை 2-ம் தேதி நடைபெறும் பொதுக் கூட்டத்திற்கு அனுப்ப வேண்டுமென்று வந்து கேட்டார்கள். மற்றவர்களைக் கலந்து கொண்டு பதில் சொல்வதாகக் கூறினோம். நண்பர் பாதனும் நீங்களும் ஒன்றாகச் சேர்ந்து ஒற்றுமையை ஏற்படுத்திக் கொண்டு, கூட்டத்தை நடத்தினால் அதிலே வந்து பேசுகிறோம் என்று சொன்னோம். 3 ஆம் தேதி மறியலைத்



1978 மார்ச் 6] [திரு. என். சங்கரய்யா]

தொடங்கக்கூடாது, அரசாங்கத்திற்கு ஓரளவு அவகாசம் அளிக்க
வேண்டும்; அரசாங்கம் உங்கள் கோரிக்கையை இறுதியாக
நிராகரித்து விட்டார்கள் என்றால் அதற்குப் பிறகு முழு
நிலைமையையும் பொதுமக்கள் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.
அதற்கு முன்கூட்டியே திட்டமிட்டு இப்படிப் போராட்டம்
நடத்துவது சரியாக இராது. மூன்றும் தேதி நடைபெறும்
மறியலை ஆதாரித்துப் பேசவேண்டுமென்று சொல்லி ஏற்கனவே
ஏற்பட்ட நிலையை ப்ரிசிபிடேட் செய்யாதீர்கள். நாங்கள்
சொன்னதை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை, மறியல் செய்ய,
திட்டமிட்டு விட்டீர்கள், ஆகவே, நாங்கள் கலந்து கொள்ள
இயலாது என்று தெரிவித்தோம்.

(முற்பகல் 10-30)

முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் வற்புறுத்தி
நாங்கள் விடுதலை செய்தோம் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சித்
தலைவர் கலைஞர் கருணாநிதி, நாங்கள், இந்திய கம்யூனிஸ்ட்
கட்சியைச் சேர்ந்தவர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்,
ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் மறியல்
போராட்டம் வேண்டாம் என்று சொன்னது அரசாங்கத்திற்குத்
தெரியும், சுப்பு அவர்கள் கூட என்னிடம் சொன்னார்கள்,
என்னைப் பேசுவதற்கு அவர்கள் கூப்பிட்டார்கள். ஆனால் கலைஞர்
கருணாநிதி அவர்கள் போகவேண்டாம் என்று சொல்லிவிட்டார்
என்றும் ஆனால் ரகுமான்கானுக்கு விஷயம் தெரியாது அவரை
அழைத்துப் போய்விட்டார்கள் என்றும் சொன்னார். ஆகவே,
எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்ன நிலைமையை எடுத்தார்கள்
என்பது தெரியும். அவர்கள் வேலைநிறுத்தத்தை வைத்துக்
கொண்டிருக்கிறார்கள், இந்த வேலை நிறுத்தத்தைப் பற்றி
உங்களுடைய நிலை என்ன என்று முதல் அமைச்சர் அவர்கள்
கேட்டார்கள். எங்களுடைய கட்சித் தலைமையைக் கேட்டுக்
கொண்டு தான் நாங்கள் சொல்லமுடியும் என்று சொல்லிவிட்டோம்.

அந்தக் கூட்டம் முடிந்தபிறகு பத்திரிகை நிருபார்கள் எங்களைச்
சூழ்ந்துகொண்டார்கள். புலவர் கோவிந்தன், நான், மாரிமுத்து,
நந்தசாமி, மார்க்கபந்து, ஜேம்ஸ் எல்லோரும் சொன்னோம்,
அவர்களுடைய கோரிக்கைகளை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டு

மென்று. என்ன என்ன கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியுமோ அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சரிடம் வற்புறுத்தினோம் என்றும் சொன்னோம்.

பிறகு அவர்கள் மறியல் பற்றி என்ன நிலைமை என்று கேட்டார்கள். மறியல் இன்றைக்கு நீங்கள் செய்யவேண்டாம். என்றைக்கும் வேண்டாம் என்று சொல்லவில்லை. இன்றைக்கு வேண்டாம் என்று சொன்னோம். இது தான் எங்கள் நிலை என்று சொன்னோம்.

பிறகு அவர்கள் ஸ்ட்ரைக்கைப்பற்றிக் கேட்டார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸிலே, சரியாகப் போட்டிருக்கிறார்கள். ஸ்ட்ரைக்கைப்பற்றி என்.ஜி.ஓ. தலைவர்கள் ஆலோசனை எங்களிடம் கேட்கவில்லை, மறியல் பற்றிக் கேட்டார்கள், ஒத்திவையுங்கள் என்று சொன்னோம் என்று தான் குறிப்பிட்டோம். மறியலை ஒத்திவையுங்கள், முதலமைச்சர் என்ன அறிவிக்கிறார் என்று பார்த்துச் செய்யுங்கள் என்று சொன்னோம். ஸ்ட்ரைக்கைப் பொறுத்தவரை 'It is for them to decide' என்றுதான் சொன்னேன்.

அப்படியானால், பத்திரிகை நிருபர்கள் கேட்டார்கள், வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்கவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர்கள் கேட்பீர்களா என்று ஏற்கனவே மறியல் வேண்டாம் இப்போது என்று சொல்லியிருக்கிறோம். அதுதான் எங்கள் நிலை என்றேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அரசாங்கம் இதை அனுதாபத்தோடு பார்த்து, அவர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்களே என்று பார்க்க வேண்டாம்.

என்.ஜி.ஓக்கள் 7½ லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு வேறு சங்கங்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பாதன் தலைமையில் உள்ள சங்கத்தினர் 3 ஆம் தேதி விடுப்பு எடுக்கும் வேலை நிறுத்தத்தை நடத்தாமல் அரசாங்கத்தின் அறிவிப்பை எதிர்பார்த்து ஒத்திவைத்திருக்கிறார்கள். அதைப் போலே ரெவின்யூ ஆபீஸர்ஸ் சங்கம், தலைமைச் செயலகச் சங்கம் போன்ற





வர்கள் எல்லாம் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இவர்கள் வேலைநிறுத்தம் செய்வதைப் பார்க்காமல் அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் நேற்று ஒரு கூட்டத்திலே பேசும் போது கூறியிருக்கிறார்கள், போலீஸாரை விட்டு கைது செய்ய மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். எங்களுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை ஊழியர்கள் கோரிக்கைகளை வலியுறுத்துகிற போது அடக்கு முறைகளைக் கொண்டு அடக்குவது பயன்தராது என்பது தான்.

நேற்றைக்கு முதலமைச்சர் அவர்கள் பேசியதுபற்றி, அது ஆட்சேபகரமான பகுதி என்று பலர் என்னிடத்திலே சொன்னார்கள். நானே மக்களிடம் சென்று பிரச்சினைகளை பற்றி சொல்வேன் என்று அவர் சொன்னதாக, மாநிலத்திலே உள்ள வர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக கிளர்ச்சி செய்வது என்ற நிலை உண்டு. ஆனால் முதலமைச்சர் அவர்கள் அவைகளைப்பற்றி கவனித்து கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் மக்களைத் திரட்டி இந்தக் கிளர்ச்சிக்கு பதில் சொல்ல வேண்டுமென்று முறையிலே எடுக்கக்கூடிய நிலை சரியானதல்ல. பல சிக்கல்கள் இன்றைக்கு இருந்தாலும்கூட, தேர்தல் காலத்திலே கொடுத்த வாக்குறுதிப்படி, செயல்பட வேண்டுமென்ற முறையில் அவர்கள் வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்காமல் நீங்கள் அறிவிப்புக் கொடுங்கள், எந்த நேரத்திலேயும் அவர்களுடைய கோரிக்கை களைப்பற்றி பேச்சுவார்த்தைகளின் மூலம் பேசித் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். அதனால் இந்தச் சபையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைக் கூறிக்கொண்டு, அமர்கிறேன்.

[1978 மார்ச் 6

## (6) ஒழுங்குப் பிரச்னை.

### ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களை எந்த வரிசையில் பேச அழைப்பது என்பது குறித்து.

**திரு. சோ. அழகர்சாமி :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். இந்தச் சபை நடவடிக்கைகள் சம்பந்தமாகத்தான் பாயிண்ட் ஆஃப் ஆர்டர். ஒத்தி வைப்புத் தீர்மானம் சம்பந்தமாக நாங்கள் கொடுக்கும்பொழுது, யார் முதலிலே கொடுத்தார்கள், யார் இரண்டாவதாகக் கொடுத்தார்கள் என்ற வரிசையில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்படுகிறதா அல்லது இதிலேயும் பெரிய கட்சி என்று பார்த்து அந்தக் கட்சி வரிசையில் வாய்ப்பு கொடுக்கப் படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏது எதை யார் யார் எப்பொழுது கொடுத்தார்கள் என்று மணிக்கணக்கைப் பார்த்தால், இன்றைக்குக் கொடுத்தவர்களில் திரு. சுப்புதான் முதலில் கொடுத்திருக்கிறார்கள். ஒரேநாளில் சுப்புவைத் தவிர, காலையிலே இரண்டு பேர் கொடுத்தார்கள் மீதி 4-ஆம் தேதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே முதலிலே கொடுத்தவர்களுக்கு முதலிலே வேண்டுமென்று போடச் சொன்னால் முதலிலே கொடுத்தவர்களுக்குத்தான் போட வேண்டும். அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் கட்சியின் அடிப்படையிலே எல்லோரும் கொடுத்திருப்பதால் எதிர்க்கட்சி. அடுத்த எதிர்க்கட்சி என்று வரிசைக் கிரமமாகத்தான் இருக்கிறதே தவிர முன்னால் கொடுத்தவர்களுக்கு முன்னால் தாருங்கள் என்றால் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஜேம்ஸ் அவர்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அவர் பேச வேண்டுமென்றால் பேசட்டும், எனக்கு ஆட்சேபணை இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவர்களே, எனக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களும் பல விவரங்களைச் சொன்னார்கள்.



1978 மார்ச் 6] [திரு. சோ. அழகர்சாமி]

இந்த ஸ்டிரைக் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே பெரும்பகுதி இடங்களில் நடந்து, அரசு ஊழியர்கள் அத்தனைபேரும் இந்த வேலை நிறுத்தத்தில் பங்குகொண்டு, பெரும்பகுதி அலுவலகங்கள் நேற்றைக்கு முன்தினம், அதாவது சனிக்கிழமையன்று காலியாக இருந்தது. எங்களுடைய கோயில்பட்டியில், நான்போய் இரண்டு மூன்று நாட்களாகிவிட்டது, அங்கு தமிழக அரசின் எல்லா அலுவலகங்களும் மூடப்பட்டிருந்தன, அதனால் பெரும்பகுதி வேறு பல வேலைகள் முடங்கக்கூடிய நிலை ஏற்பட்டு விட்டது. இதிலே நான் சொல்லிக் கொள்ள விரும்புவது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அழகர்சாமி அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பினார்கள். நான் எதிர்க்கட்சித் தலைவரவர்களைக் கூடக் கேட்டுக்கொள்கிறேன். அழகர்சாமி அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் முதலிலே கொடுத் தார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், பிறகு அழகர்சாமி கொடுத்தார்களேயானால் அந்த உரிமையை அந்த உறுப்பினர் களுக்குத்தான் தர வேண்டியிருக்குமே தவிர கட்சித் தலைவருக்குக் கொடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** அதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** மற்ற கட்சித் தலைவர் களுடைய அபிப்பிராயத்தையும் கூறினால் நான் ஏற்றுக்கொள் கிறேன்.

**திரு. மு கருணாநிதி :** தலைவரவர்களே, ஒரே கட்சியிலே உள்ள கட்சித் தலைவரும், உறுப்பினர்களும் கொடுக்கும்பொழுது உறுப்பினர்கள் முதலிலே கொடுத்திருந்து, ஆனால் உறுப்பினர், தலைவர் பேசுவார் என்று அனுமதி கொடுத்தால் உறுப்பினரை நிறுத்திவிட்டுத் தலைவர் பேசுவதற்கு அனுமதிப்பீர்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் கடைப்பிடிக்க வேண்டிய முறை, அழகர்சாமியின் கட்சிக்காரர்கள் 8-50 மணிக்குக் கொடுத்து, அழகர்சாமி அவர்கள் 8-55 மணிக்குக் கொடுத்தால் 8-50 மணிக்குக் கொடுத்தவரைத்தான் அனுமதிப் பேன். அவர் கேட்கின்ற கோரிக்கை முதலிலே கொடுத்தவருக்கு

முதலிலே கொடுக்க வேண்டுமென்பது. ஆகவே, நான் கட்சித் தலைவர், முதலிலே கொடுக்க வேண்டுமென்றால் அதை அனுமதிக்க

**திரு. மு. கருணாநிதி:** அது தப்பு. 8-50 மணிக்குக் கொடுத்த உறுப்பினர் தங்கள் கட்சித் தலைவர் பேசுவார், நான் பேசவில்லை என்று சொல்லிவிட்டால் அதற்குப்பிறகு கட்சித் தலைவருக்கு அனுமதி தருவீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படித் தந்துதான் ஆக வேண்டும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவரவர்களே. இதுவரையி லேயும் அனுசரித்துக்கொண்டு வருவது, ஒரு கட்சியைச் சார்ந்த மூன்று பேர்கள், இரண்டு பேர்கள் கொடுத்திருந்தால் அதில் யாராவது ஒருவர் பேசுவதற்கு அனுமதி கொடுத்தீர்கள். அப்படி யிருக்கும்பொழுது அந்த உறுப்பினர், கட்சித் தலைவர் பேச வேண்டுமென்று சொன்னால் கட்சித் தலைவருக்குக் கொடுப்பீர்கள் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே கொடுப்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் என்று வைத்துக்கொள்ளுங் கள், அவரைத்தான் முதலில் போடுவேன், அப்படித்தான் திரு. அழகர்சாமி அவர்களின் கோரிக்கை இருக்கிறது.

**திரு. நா. சுந்தரராஜ்:** தலைவரவர்களே, உங்களிடம் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கும்பொழுது நேரம் போட வேண்டுமா, யார் முதலிலே கொடுத்தார்கள் என்று தெரிவதற்கு நேரம் போட வேண்டுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொண்டு வந்து தரும்பொழுது நானே குறித்துவிட்டு கையெழுத்துப்போடுவேன் இதுவரையில் நேரம் போடுவது இல்லை. ஆனால் இப்பொழுது அவர்களே எழுப்பிவிட்ட காரணத்தால் நான் எச்சரிக்கையாக இருக்கவேண்டியதாக இருக்கிறது. உறுப்பினர்கள் எந்த நேரத்திலே கொடுத்தாலும் நேரத்தைக் குறிப்பிட்டு கையொப்பம் இடுவேன்





## (5) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

**திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசு ஊழியர்களுடைய வேலைநிறுத்தம் சம்பந்தமாக, போராட்டம் சம்பந்தமாக அவர்களுடைய கோரிக்கையின் நியாயத்தைப் பற்றி அத்தனை எதிர்க்கட்சிகளும் ஒப்புக் கொள்கிறார்கள், ஆளுங்கட்சியிலே உள்ள பலரும் ஒப்புக்கொள்ள வார்கள் என்று நான் கருதுகிறேன். நியாயமான பல கோரிக்கை கள் இருக்கின்றன.

(முற்பகல் 10-40)

ஆனால், எல்லா கோரிக்கைகளும் என்று சொல்லவில்லை யென்றாலும்கூட, பிரதானமாக, வேலை நேரத்திலே உள்ள சிரமத்தைப் பார்க்கவேண்டும். கணவனும் மனைவியும் வேலை செய்கிறார்கள் என்றால், ஒருவர் 9 மணிக்கு, ஒருவர் 10.00 மணிக்கு, ஒருவர் 10.30 மணிக்குப் போக வேண்டுமென்றால், அது சிரமம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

அதேபோல், ரிட்டையர்மெண்ட் ஏஜ். சென்டரல் கவர்ன் மெண்டில் வேலை செய்பவர்களுக்கு அந்த ஏஜ் 58, இந்த அரசின்கீழ் வேலை செய்பவருக்கு ரிட்டையர்மெண்ட் ஏஜ் 55.

அதேபோல், கம்பல்சரி ரிட்டையர்மெண்ட். ஒருவர் பிடிக்க வில்லையென்றால், வீட்டுக்கு அனுப்புகிறார்கள். அதில் எவ்வளவு தவறுகள் நடந்தன என்பது எல்லோருக்கும் தெரியும்.

இன்னொன்று, மாதாமாதம் ரூ. 15 கட்டினால், ரிட்டையர் ஆகும் போது ரூ. 10,000 கொடுப்போம் என்று சொன்னார்கள். ஆனால், இன்னொரு திட்டம் இருக்கிறது, பணியிலிருக்கும்போதே திடீரென்று இறந்து விட்டால் ரூ. 10,000 கொடுப்போம் என்பது. 4 நாள் கழித்து ரிட்டையர் ஆனால் அவருக்கு ரூ. 10,000 வராது என்பதற்காக, ரிட்டையர் ஆவதற்கு 4 நாளைக்கு முன்னால், கணவனை மனைவி கொன்றதை—ரூ. 10,000-த்திற்காக—பற்றிய செய்தி பத்திரிகையிலே எல்லாம் வந்திருக்கிறது. ஆகவே, இறக்காமல் பணியிலிருந்து ரிட்டையர் ஆனாலும், ரூ. 10,000 வேண்டுமென்று கேட்கிறார்கள்.

[திரு. சோ. அழகர்சாமி] [1978 மார்ச் 6

மாதாமாதம் ரூ. 10 கட்டினால், பாங்கிலே ரூ. 20,000 கிடைக்கிறது என்றெல்லாம் இங்கே சொல்லப்பட்டது.

அதே போல், பிராவிடென்ட் பண்டிலிருந்து திரும்பக் கொடுப்பதிலே என்ன கஷ்டம்? அவன் கட்டிய பணம். அவன் அவசரத்திற்குக் கேட்கிறான். கடன் கொடுத்தால், திரும்பக் கட்டுகிறான்.

அதே போல், விட்டில் வேலை செய்கிற ஆட்களுக்கு, ரூ. 15, ரூ. 25 பொங்கல் இனாம் கொடுப்பதுபோல், இருக்கிற ஊழியர்களுக்கு ஒரு மாதத்திற்கு மட்டும் ரூ. 15, ரூ. 25 கொடுப்பது என்கிற முறை எனக்கு விளங்கவில்லை. சிறு இடைக்கால நிவாரணம் என்று ரூ. 15, ரூ. 25 என்று அறிவித்திருக்கிறார்கள். அதை, பே கமிஷன் ரிப்போர்ட் வந்து அமுலாகும் வரை என்று சொல்லியிருந்தால் என்ன? ரிப்போர்ட் எப்பொழுது வரும் என்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்டபொழுதுதான் ஜூன் மாதம் வரும் என்று சொன்னார்கள்.

அதே மாதிரி, பஞ்சப்படியிலே சீலிங். மத்திய சர்க்காருடைய பஞ்சப்படி எல்லா மாநிலங்களிலும்—பல மாநிலங்களிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கு கொடுக்கப்படவில்லை. இப்படி ஒரு நெருக்கடி. இதனால், அரசு ஊழியர்களுடைய வாழ்க்கையிலே நெருக்கடி. இவற்றைப்பெற வேண்டுமென்று அவர்கள் சங்கம் முடிவுசெய்கிறது; அவர்கள் போராடுகிறார்கள்.

இப்படிப்பட்ட நேரத்தில், தொழிலாளர்களும், விவசாயிகளும், அரசு ஊழியர்களும் யார் போராடினாலும், அரசின் அணுகுமுறை எப்படி இருக்கவேண்டும்? அரசின் அணுகுமுறையில் ஒன்றை நான் ஆட்சேபிக்கிறேன். முதலமைச்சர் பேசியது பத்திரிகையிலே வந்திருக்கிறது. வேலை நிறுத்தக்காரர்களை போலீஸ்காரர்கள் கைது செய்ய மாட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார். இதை மகிழ்ச்சிக்குரிய சங்கரய்யா அவர்கள் வரவேற்கிறார்கள். ஆனால், அடுத்துச் சொல்லும்போது, லா அன்ட் ஆர்டர் என்று வரும்போது, மக்களே நிலைமைகளைச் சமாளிப்பார்கள் என்று சொல்லியிருக்கிறார். என்ன அர்த்தம் இதற்கு? கட்சி ஆட்களுக்கும் அவர்களுக்கும் தகராறு, சண்டை



1978 மார்ச் 6] [திரு. சோ. அழகர்சாமி]

மூட்டிவிடுவோம் என்றுதான் அர்த்தம். அதே மாதிரிதான் மாணவர் போராட்டத்திலே, பல்லவன் போராட்டத்திலே சொன்னார்கள். போராட்டம் நடத்துபவரைக் கூப்பிட்டுப் பேசுங்கள், சட்டத்தை மீறினால் நடவடிக்கை எடுங்கள்; சட்டப்படி நியாயமான நடவடிக்கை எடுங்கள்; நிலைமைகளைப் பொறுத்து நடவடிக்கை எடுங்கள்.

இப்பொழுதே, எல்லா ஜில்லாக்களிலும் ஆபீஸ்கள் மூடப்பட்டுள்ளன. மேற்கொண்டு சுமுகமான நிலையை உருவாக்கி மக்களுக்கு நன்மை செய்வதற்குப் பதிலாக, சண்டை மூட்டி விடுகிற மாதிரி, முதலமைச்சர் சொல்லலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்பட்ட பிறகு இவைகளையெல்லாம் பேசலாம். உங்களுடைய கருத்து என்ன, கட்சியின் கருத்து என்ன, அரசு செய்ய வேண்டியது என்ன என்பது பற்றி கருத்து சொல்லுங்கள். இப்பொழுது சுருக்கமாக ஏன் ஒத்தி வைக்க வேண்டுமென்பதுபற்றி மட்டும் சொல்லுங்கள்.

**திரு. சோ. அழகர்சாமி:** அவையின் இதர அலுவல்களை ஒத்திவையுங்கள். எல்லோரும் பேசுவார்கள், ஆளுங்கட்சிக் காரர்களும் பேசட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சங்கரய்யா அவர்கள் இதை சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்றுதான் கருத்துக்களைச் சொன்னார்கள். நீங்கள் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்கக் கூடிய வழிமுறைகளைச் சொல்ல வேண்டும், உங்கள் கொள்கைகளைச் சொல்லவேண்டும். அவர்கள் இதைச் சொல்லியிருக்கக் கூடாது, இவர்கள் இதைச் சொல்லியிருக்கக் கூடாது என்று எடுத்துச் சொல்வது சரியல்ல.

**திரு. சோ. அழகர்சாமி:** முதல்வர் சொல்லியிருக்கிறார். அதைப்பற்றி கருத்தே சொல்லக் கூடாதா? நாங்கள் சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்பதிலே முழு ஒத்துழைப்பு தரத் தயார். முதல்வர் பேசியது இதில் சரியல்ல என்பதுதான் எங்கள் கருத்து.

ஊழியர்களது கோரிக்கைகள் நியாயமான கோரிக்கைகள். ரூ. 50 கேட்கிருர்கள், இடைக்கால நிவாரணமாக. அந்தத் தொகை எவ்வளவு என்பதிலே வித்தியாசம் இருக்லாம். ஆனுல், கோரிக்கைகள் நியாயமானவை. ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களைக் கேட்டாலும், நியாயமான கோரிக்கைகள் என்று ஒத்துக் கொள்வார்கள். நாங்கள் சொன்னேம், அவர்களைக் கைது பண்ணியிருக்க வேண்டாம், கூப்பிட்டுப் பேசியிருக்கலாம் என்று.

அவர்கள் என்ன சொல்லி இருக்கிருர்கள், நேரம் வேண்டுமென்று கேட்டோம்; முதலமைச்சரைப் பார்க்க முடியவில்லை. நீண்ட நாட்களாகக் கேட்டு வருகிறேம், நியாயமான கோரிக்கைகளைப் பேச சந்தர்ப்பம் அளிக்கவில்லை என்று சொல்கிருர்கள். 10, 15 கோரிக்கைகள் வைத்திருக்கிருர்கள். அதிலே. இத்தனை கோரிக்கைகளை ஏற்றுக் கொள்கிறேம், இவை, இவை பற்றி, அடுத்த ஒரு வாரத்திலே, அல்லது இரண்டு வாரத்திலே, காபினெட் கூடி முடிவு எடுப்போம் என்று அரசுத் தரப்பில் சொல்லவில்லையென்பதுதான் என்னுடைய கருத்து. எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையிலும், ஒன்றிரண்டைத் தவிர, மற்றவை எல்லாம் நியாயமான கோரிக்கைகள்தான், நாங்கள் ஆதரிக்கிறேம்.

சங்கங்கள் இரண்டு இருக்கின்றன. அவர்களுக்கு இருக்கிற வித்தியாசத்தை நாம் பயன்படுத்தி அவர்களுக்குள் ஒரு பிளவு உண்டுபண்ணவேண்டிய தேவையில்லை. அவர்கள் எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் கவலையில்லை. வேறு மாநிலங்களில் அதிகம் தருகிறார்கள். மத்திய சர்க்காரில் ஓய்வு பெறும் வயது 58, இங்கே 55. அவர்களுக்கு அதிக ஊதியம், இங்கே குறைந்த ஊதியம் என்றிருக்கிறது. நாட்டிலே 50 சதவிகிதம் பட்டினியாக இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படியானுல் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக 500 ரூபாய் சம்பளம் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினைக்கு வாருங்கள். அவர் பேசியது அதற்கு உங்கள் பதில் இப்படி விளக்கம் எல்லாம் சொன்னுல் என்ன அர்த்தம்.





**திரு. சோ. அழகர்சாமி:** ஆகவே அரசாங்கம் அணுகு முறையிலே சரியாக இருந்து, அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய வகையிலே, அனுதாபமாக அவர்களுக்கு செய்யக்கூடிய நடைமுறையைக் கடைபிடிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நியாயமான கோரிக்கைகளை எல்லாம் ஒத்துக் கொண்டு அவர்களுடைய வேலைநிறுத்தத்தை வாபஸ் பெறவேண்டும் என்று அறிவிப்புக் கொடுத்து, சுமுகமான முறையிலே, அவர்களுக்கு ஆதரவாக நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி கொடுக்கக்கூடிய முறையிலே நடந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அவர்களுக்கு என்ன சந்தேகம் வருகிறது என்ருல், இந்த 15 ரூபாய் ஒரு மாதத்திற்குத்தானு, பே கமிஷன் அறிக்கை வந்ததற்குப் பின்னுலே கிடைக்குமா என்று அச்சப்படுகிருர்கள். எனவே, அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய முறையிலே, அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இது பற்றி அரசாங்கத்திற்கு பல்வேறு கருத்துக்கள் இருக்கலாம், அதைப் பூரணமாக பரிசீலித்து நியாயம் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதை விவாதிப்பதற்காக இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே கூற வேண்டிய பல கருத்துக்களை இங்கே கூறிவிட்டார்கள். அதையே மீண்டும் கூற நான் விரும்பவில்லை. ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் கூறுகிறேன்.

இந்த என்.ஜி.ஓ.-க்களின் போராட்டம் எந்த அளவுக்கு பொது மக்களுக்கும், அரசாங்கத்திற்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை அரசாங்கம் நன்ருக உணர்ந்திருக்கிறது. அவர்கள் கோரிக்கையை முன் வைத்துப் போராட்டம் நடத்துகிருர்கள். அது சரியா, இல்லையா என்ற பிரச்சினைக்குப் போகாமல், இந்தப் போராட்டத்திற்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்யவேண்டும்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 மார்ச் 6

ஏற்கனவே நாங்கள் முதலமைச்சரோடு பேசும்போது ஒன்றை எடுத்துக் கூறினோம். அதாவது, ஏற்கனவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே பேசும்போது பரிசீலனையில் இருக்கிறது என்ற இரண்டு கோரிக்கைகளைக் கூறினார்கள். அதாவது பிராவிடண்ட் பண்டு நிதியிலிருந்து கடன் வாங்கும் விதியைத் தளர்த்துதல், பணி நேரத்தை மாற்றி அமைப்பது ஆகிய இரண்டு கோரிக்கைகளும் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே இவற்றை இந்த மன்றத்திலே அறிவித்துவிடலாம். அதனால் அரசாங்கத்திற்கு எந்த பொருளாதாரச் சிக்கலும் ஏற்படப்போவதில்லை.

அடுத்து, நான்-ரெக்கரிங் என்று சொல்லி, ஒரு சலுகையை அளித்திருக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு 15 ரூபாய், 25 ரூபாய் என்று நீங்கள் வழங்க இருப்பதை, கமிஷன் அறிக்கை வருவது வரையிலும் இதனை, நீடித்துக் கொடுப்பது என்றும் கமிஷன் அறிக்கை வந்த பிறகு கமிஷன் அறிக்கையை ஒட்டி பேச்சு வார்த்தை நடத்தினால் நலமாக இருக்கும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். இதனை முதலமைச்சரோடு பேசுகிறபோதும், அனைத்துக் கட்சிக் கூட்டத்திலேயும் நாங்கள் கூறினோம்.

அதோடு, முதலமைச்சர் ஒன்றைச் சொன்னார். இப்போது இருக்கிற சங்கம், போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிற ஒரு சங்கம் இந்தச் சங்கத்தோடு நாங்கள் பேச்சு வார்த்தை நடத்த மாட்டோம் என்று கூறுகின்ற நிலை வரவேற்கத்தக்கது அல்ல. அனைத்து சங்கங்களை அழைத்துப் பேசினால் சுமுகமான நிலைமை ஏற்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு அழகர்சாமி அவர்கள் கூறியது போல், நேற்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் கூறியதை நான் கேட்டேன், பத்திரிகையில் பார்த்தேன் * * * என்ற கருத்துப்பட கூறியிருக்கிறார் கள். இது ஒரு முதலமைச்சர்—4½ கோடி மக்களின் முதலமைச்சராக இருக்கும் அந்தப் பெரிய பதவிக்கு உகந்ததா என்பதை மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரவர்களே, நீங்கள்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1978 மார்ச் 6] [திரு. ஜே. ஜேம்ஸ்]

நன்றாக சிந்திக்கவேண்டும். இதனால் இந்த மாநிலத்தில் என்னென்ன விளைவுகள் ஏற்படும், இது நல்லதாக இருக்குமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

* * * * * * * * * * *

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் துணைத் தலைவா வர்களே, பேரவையை ஒத்தி வைத்து அது பற்றி விவாதிக்க வேண்டுமென்று கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீது நண்பர் ஜேம்ஸ் போன்றவர்கள் பேசும்போது, * * என்ற பகிரங்கமான, அடிப்படை அற்ற, முறைகேடான ஒரு குற்றச் சாட்டை இந்தச் சபையில் வைத்து இருக்கிறார்கள். அருள் கூர்ந்து நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அருமை நண்பர் ஜேம்ஸ் போன்றவர்கள் பேசும்போது, தயவுசெய்து வார்த் தைகளை கொஞ்சம் ஜாக்கிரதையாக பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்.ஜி.ஓ.-க்கள் இந்த ஆட்சியின் அஸ்திவாரம் என்று நம்புகிறது இந்த அரசு. அப்படியிருக்க முதலமைச்சருக்குக் களங்கம் கற்பிக்கும் முறையில், முதலமைச்சர் அப்படிப்பட்ட எண்ணத்தோடு பேசி இருக்கிறார் என்று உறுதியோடு அறுதியிட்டு அவர் பேசுவதைத் தயவுசெய்து மாற்றிக்கொள்ள வேண்டுமென்று நான் ஜேம்ஸ் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அப்படிப் பேசியதைக் குறிப்பேட்டில் இருந்து எடுக்குமாறும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் பொதுக்கூட்டத்தில் பேசினார்கள். அது பத்திரிகையில் வந்து இருக்கிறது. அதை நான் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதலமைச்சரின் பேச்சின் மீது ஒத்திவைப்புத் தீர்மானம் கிடையாது. நீங்கள் என்.ஜி.ஓ.-வினரின் போராட்டத்திற்கான நியாயங்களை விளக்கிச் சொல்லி, அதைப்பற்றி விவாதிக்க சபையை ஒத்திவைக்க வேண்டு

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மென்று சொல்ல வேண்டுமே தவிர முதலமைச்சர் பேசிய பேச்சையோ அல்லது அதன் பேரில் விவாதமோ நடத்துவது சரியல்ல. அதற்காக இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வரப்படவும் இல்லை என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** நான் ஏற்கனவே கேட்டுக் கொண்டபடி அவை குறிப்பேட்டில் இடம் பெறக்கூடாது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** நான் சொல்வதைக் கேட்டு விட்டு நீங்கள் நீக்க வேண்டும். * * * * என்னுடைய கருத்தைக் கூற எனக்கு அனுமதி அளிக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்.ஜி.ஓ. சம்பந்தப்பட்ட பிரச்சினையைக் குறித்து நேற்றைதினம் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியிருக்கிறார். அதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** * * * * என்று சொன்ன வார்த்தை சரியல்ல.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அவர் சொல்வது போல் * * என்னுடைய கருத்தைக் கூற அனுமதி வேண்டும் என்று தான் கேட்டேன். அதில் தவறு இல்லை. என்னுடைய கருத்தை கேட்டு விட்டு, பிறகு நீக்கிவிட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். என்.ஜி.ஓ.-க்கள் அந்த வேண்டுகோளுக்கும் எதிர்க்கட்சித் தலைவரின் ஆலோசனை களுக்கும் இணங்காவிட்டால், வேலை நிறுத்தக்காரர்களை என்.ஜி.ஓ-வினரைத்தான் அவர் குறிப்பிடுகிறார்கள். (. . . .)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பத்திரிகையில் வந்த தகவலை வைத்துப் பேசக்கூடாது. அமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்தில் பேசியிருந்தால் சொல்லுங்கள். வெளியிலே பேசிய பேச்சு பத்திரிக்கையில் வந்து இருக்கிறது என்று சொல்லி பேசக்கூடாது. சில பத்திரிக்கையில் தவறாகப் போடலாம். சில அப்படியே அவர் பேசியதைப் போடலாம். சில அதைத் திரித்தும்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



போடலாம். ஆகவே, பத்திரிகையில் வருவதை வைத்துப் பேசுவது சரியல்ல. அதன் மீது இங்கே விவாதம் நடத்தத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, தாங்கள் தீர்ப்புக் கொடுப்ப தைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் என்னுடைய கருத்தையும் கேட்டுவிட்டு தங்களுடையத் தீர்ப்பைக் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய கருத்தையும் கேட்டு விட்டு, முழுவதையும் எடுத்துவிடுவதாக இருந்தாலும் பரவாயில்லை. முதலமைச்சரவர்களும் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் மறுக் கவில்லை. அவர்கள் பொதுக்கூட்டத்தில் பேசியதை இங்கே குறிப்பிடுகிறேன். தங்கள் அனுமதியோடு படிக்கிறேன். அரசாங்கத்தினுடையவும் எதிர்க்கட்சித் தலைவர்களுடையவும் வேண்டுகோளுக்கிணங்க என்.ஜி.ஓ. வினர் வேலை நிறுத்தத்தை கைவிடாவிட்டால் மக்களிடம் தாமே வேண்டுகோள் விடுக்கப் போவதாகவும்—அதோடு நானும் காதால் கேட்டேன்—நானே நேரடியாக இறங்குவேன் என்று சொன்னார்கள்; அது பத்திரிகையில் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பத்திரிகையில் வரவில்லை; நான் காதால் கேட்டேன் என்றெல்லாம் சொல்வது நல்லதல்ல.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** துணைத் தலைவர வர்களே, நீங்கள் பின்னால் குறிப்பிலிருந்து நீக்குவதாக இருந் தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் அது எந்தப் பத்திரிகை என்பதைக் குறிப்பிட்டு, அவர் சொல்வதைச் சொல்லட்டும், கேட்போம். அதற்குப் பிறகு அது தேவையா இல்லையா என்பதைப்பற்றி நீங்கள் முடிவெடுக்கலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** துணைத் தலைவரவர்களே, 6—3—1978 தேதியிட்ட தினமணி பத்திரிகையில் வந்திருக்கிறது. அதோடு நானும் என் காதால் கேட்டேன். வேலை நிறுத்தத்தைச் சமாளிக்க மக்களிடம் தானே வேண்டுகோள் விடுக்கப்போவ தாகவும், அதன் மூலம் மக்கள் அவர்களைப் பார்த்துக்கொள்வார்கள் என்றும் முதலமைச்சர் பேசியிருக்கிறார்கள். (குறுக்கீடு—

[திரு ஜே. ஜேம்ஸ்] [1976 மார்ச் 6

பத்திரிகையைச் சரியாகப் படியுங்கள்) தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பத்திரிகையில் இருப்பதை திரும்பவும் படிக்கிறேன்.

"என்.ஜி.ஓ.-வினர் எதிர்க்கட்சித் தலைவர்களின் ஆலோசனைக்கு இணங்காவிட்டால், வேலைநிறுத்தம் செய்கிறவர்களை சமாளிக்க மக்களிடம் தாமே வேண்டுகோள் விடுக்கப் போவதாகவும் இதன் விளைவாக மக்கள் அவர்களுக்கு எதிராக திரும்பிவிடுவார்கள என்றும் எச்சரித்தார்". ஆக, நான் கேட்பது என்னவென்றால் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுவது என்று சொல்வது, பொதுமக்கள் எந்த சர்ச்சைக்கும் வம்புக்கும் போக மாட்டார்கள். அதுமட்டுமல்ல. இம்மாதிரி ஒரு நிலை எடுப்பது சரியா?

இரண்டு சங்கங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று இப்போது போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் சங்கம். இன்னொன்று போராட்டம் நடத்தாத சங்கம். போராட்டம் நடத்தும் சங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம், போராட்டம் நடத்தாமல் இருக்கின்ற சங்கத்தோடுதான் பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று சொல்வதும் சரிதானா?

என்.ஜி.ஓ. வினருக்காக அவர்கள் நடத்தும் போராட்டம் இது. இரண்டு அல்லது 3 சங்கங்கள் இருக்கின்றன என்றால் அத்தனைச் சங்கங்களையும் ஒன்றாகச் சேர்த்து வைத்து, அவர்களோடு அலோசனை செய்து பேச்சு வார்த்தை நடத்தி, தீர்வு காண்பது தான் சரியாக இருக்கும்; நாட்டுக்கும் நல்லது என்.ஜி.ஓ. வினருக்கும் நல்லது; பொது மக்களுக்கும் நல்லது. இந்தக் கருத்தை போலும் தெளிவாக வலியுறுத்த இந்த மன்றத்தின் இதா அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவரவர்களே, திரு. ஜேம்ஸ் அவர்கள் * * *என்று இங்கே பேசியிருக்கிறார்கள். அதை சபைக் குறிப்பிலிருந்து நீக்கி விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* மாண்புமிகு போவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1978 மார்ச் 6] * * * அதைத் தான்

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே,

* * * என்று குறிப்பிட்டேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சொன்னதை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அவர்கள் பேசியதை நானும் கேட்டேன். * * * என்ற கருத்தில் சொன்னார்கள் என்று (குறுக்கிடு) அதைத் இங்கே குறிப்பிடுவதாகச் சொன்னார்கள். தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பேசும்போது * * என்று முதலமைச்சர் கூறினார் என்ற கருத்தில் இங்கே குறிப்பிட்டதை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

அடுத்து, திரு. லத்தீப் அவர்கள். (திரு. லத்தீப் பேச எழுந்தார்.)

திரு. சோ. அழகர்சாமி: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். இங்கே விதி 42-ன் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்த வர்கள்தான் அதுபற்றி கருத்துத் தெரிவிக்கலாம். ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்காதவர்களும் அதில் பேசலாமா? லத்தீப் அவர்கள் பெயர் இடம்பெறவில்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. லத்தீப் அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள் அவர்கள் பெயரும் வாசிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அவர் களுடைய கருத்தையும் இங்கே தெரிவிக்கலாம்.

(முற்பகல் 11-00)

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் துணைத் தலைவரவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்து சபையை ஒத்தி வைப்பதற்கு முன் தான் ஒத்தி வைக்காமலேயே ஒத்தி வைத்தது மாதிரியே அதிக

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நேரம் எடுத்துக்கொண்டு எல்லோரும் எல்லாக் கருத்துகளையும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒத்தி வைக்காமலேயே ஒத்தி வைத்தால் என்ன பேச வேண்டுமோ அதையெல்லாம் பேசிக் கொண்டிருந்தால் மத்தியானம் வரைக்கும் ஆகும். ஆதலால் சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** இந்தக் கருத்தை முதலிலேயே சொல்லியிருந்தால் நன்றாக இருக்கும். நான் எழுந்திருக்கும்போது சொல்லி இருக்க வேண்டியதில்லை.

துணைத் தலைவரவர்களே, இது மிக முக்கியமான ஒரு பிரச்சினை. இதன் விளைவாக அரசு இதழ் பதிவு பெறாத அரசு ஊழியர்கள் தொடர்ந்து செய்து வருகின்ற இந்த வேலை நிறுத்தத்தின் காரணமாகவும் கிளர்ச்சிகளின் காரணமாகவும் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பாரதூரமான விளைவுகளைப் பற்றி ஆராய இந்த அவைக்கு உரிமையும் கடமையும் இருக்கின்றதென்ற காரணத்தினால் இதை உடனடியாக விரிவாக விவாதிக்க வேண்டுமென்றுதான் இந்தத் தீர்மானத்தை நான் கொண்டு வந்திருக்கிறேன்.

அரசு ஊழியர்கள் தங்களுடைய கோரிக்கையை எடுத்து வைப்பதும் கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால் ஒரு சில சமயங்களில் அவர்கள் கிளர்ச்சிகள் செய்வதும் ஏதோ நாட்டில் நடைபெறாத ஒரு நிகழ்ச்சியல்ல. நடைபெற்று வந்திருக்கிறது. ஆனால் எந்த வகையில் எந்தச் சூழ்நிலையில் நடைபெறுகின்றன என்பதை நாம் ஆராயும்போது இன்று நடைபெறுகின்ற இந்த போராட்டத்திற்கு அவர்கள் கூறுகின்ற காரணங்கள் அல்லது கோரிக்கைகள்தான் அடிப்படையாக அமைந்துள்ளனவா அல்லது வேறு சில காரணங்களும் இதோடு இணைந்திருக்கின்றதா என்ற ஐயப்பாடுகளை நாட்டு மக்களிடம் நிச்சயமாக ஏற்படுத்தி விட்டிருக்கிறது, என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கனவே இந்த அவையிலே ஒத்திவைப்புத் தீர்மானம் வந்திருக்கிறது. அதன் மீது நாம் எல்லாம் பேசி இருக்கிறோம். அரசு தரப்பில் உறுதிமொழிகள் தரப்பட்டிருக்கின்றன. அவர்கள்





விடுதலை செய்யப்பட வேண்டும், விடுதலை செய்யப்பட்டு அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தப்பட வேண்டுமென்று எதிர் தரப்பிலே சொல்லப்பட்ட கோரிக்கைகளை அரசு உடனே ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்தது. ஆனால் என்ன பேச்சு வார்த்தை இவர்கள் செய்தார்கள் என்று நாம் பார்க்கும்போது அவர்கள் முதலமைச்சரைச் சந்தித்தார்கள். அவர்களுடைய வீட்டிலேயே சென்று சந்தித்து இருக்கிறார்கள். அந்த இயக்கத்தின் தலைவராக இருக்கக்கூடியவரோடு முதலமைச்சருடைய பேச்சுவார்த்தையின் விளைவாக உங்களுடைய இந்தக் கோரிக்கைகளை அரசு ஆராய்ச்சி செய்து அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பிறகு தெரிவிக்கிறோம் என்று சொன்ன அதே நேரத்தில் வெளியே வந்த உடனே பக்கத்திலே இருந்த நிருபர்களை அழைத்து வந்து மற்ற தோழர்களுடைய கருத்துக்களைக்கூட கலந்துகொள்ளாமல் இதிலே தான் விஷயம் இருக்கிறது மற்ற தங்களுடைய தோழர்களைக் கூட கலந்து கொள்ளாமல் உடனடி போராட்டம் நடக்கும் என்று சொல்வது அவ்வளவு பொறுப்புள்ள காரியம் அல்ல என்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு எத்தனை ஆஸ்பத்திரிகளில், மருத்துவமனைகளில் நோயாளிகள் கவனிக்கப்படாமல் இன்றைக்கு அவர்கள் எல்லாம் உதாசீனப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பெருத்த கஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னையிலுள்ள பொது மருத்துவமனையில் இந்த வேலை நிறுத்தத்தின் காரணமாக நோயாளிகள் பெருத்த பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பத்திரிகைகளில் நாம் பார்க்கும்போது இந்தமாதிரியான செயல்கள் எல்லாம் மனிதாபிமானமுள்ள செயல்தானா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதை இந்தச் சபை ஆராய வேண்டும். அதுவும் சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும்போது பல்வேறு காரணங்களுக்காக உறுப்பினர்கள் கோரிக்கைகளை வலியுறுத்திச் சொல்லும்போது அதற்கான தகவலைச் சேமிக்க வேண்டிய நிலைமை. அந்த வேலைகள் எல்லாம் அரசுக்கு இருக்கும் போது அந்தக் காரியத்தை எல்லாம் செம்மையாகச் செய்யும் அடித்தளமாக இருக்கும் இந்த அங்கத்தினர்கள் இன்றைக்கு

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 6

இத்தகைய முறையிலே ஈடுபட்டிருப்பது பொறுப்புள்ளசெயல் என்று நாடு கருதாது என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு இன்னொன்றை நான் மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கிளர்ச்சிகள் செய்யும்போது நாகரீகமான முறையில் செய்ய வேண்டும். தலையிலே கர்சீப்புகளைக் கட்டிக்கொண்டு ஆபீஸ்களுக்குச் சென்று அதன் கதவுகளை மிக வேகமாக அடித்து அநாகரீகமான வார்த்தைகளை நாம் திருப்பிச் சொல்ல முடியாத வார்த்தைகளை அவர்கள் அங்கே பயன்படுத்தி நம்முடைய பொது வாழ்க்கைக்கே களங்கம் ஏற்படுத்தும் வகையில் அவர்கள் நடந்து கொண்டிருப்பது அவர்களுக்கும் நல்லதல்ல. அவர்கள் வாழ்கின்ற சமுதாயத்துக்கும் நல்லதல்ல. அதைப் பார்த்துக்கொண்டு இந்தச் சபை வேறு காரணங்களுக்காக, அரசியல் காரணங்களுக்காக அவர்கள் ஏதாவது கடுமையான நடவடிக்கை எடுத்தால் என்ன ஆகுமோ, ஆட்சிக்கு ஆபத்து ஏற்படுமோ என்று கருதி மெத்தனமாக இருப்பதால் அவர்களுக்கு இத்தகைய காரியங்களைச் செய்வதற்கு மேலும் மேலும் விட்டுக்கொடுப்பது அவ்வளவு நல்ல செயல் அல்ல என்பதை இந்த ஆட்சிக்கு உணர்த்துவது என் கடமை என்று நான் கருதுகிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் கூட பத்திரிகையில் பார்த்தேன். எதிர்க்கட்சித் தலைவர்களுடைய ஆலோசனைக்கு அவர்கள் இணங்காவிட்டால் இதைத்தான் கவனமாகப் பார்க்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர்களது ஆலோசனைகளுக்கு செவிமடுக்காவிட்டால் நாட்டிலே இருக்கிற நிலையை உத்தேசித்து அவர்கள் செயல்படத் தவறினால் நான் மக்களைச் சந்திப்பேன் என்றுதான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கிற நாலரைக் கோடி மக்களின் ஒப்புதலைப் பெற்று நாட்டில் ஒரு ஆட்சி நடந்து கொண்டிருக்கும் போது அதன் நாயகராக இருக்கிற முதல் அமைச்சர் அவர்கள், எதிர்கட்சித் தலைவர்கள் சொல்லியும் கேளாது தவறுகள் செய்வார்களானால் மக்கள் பிரதிநிதிகளாக இங்கு வீற்றியிருக்கக்கூடியவர்கள் விஷயங்களை சரியான முறையில் ஆராய்ந்து ஒரு முடிவு எடுக்கா



1978 மார்ச் 6] [திரு. எம். ஏ. லத்தீப்]

விட்டால் மக்களைச் சந்திக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. (ஆரவாரம்) மக்களைச் சந்திக்க வேண்டும், அது அவர்களுடைய கடமை. அதைத்தான் அவர்கள் சொல்லியிருக் கிறார்களே தவிர மக்களைத் தூண்டிவிட்டு அவர்களைத் தாக்க வேண்டும் என்று ஒரு முதல் அமைச்சர் சொல்வார்கள் என்று நீங்கள் ஏன் நினைத்துப் பார்க்க வேண்டும்? அது தவறு. அப்படியெல்லாம் சொல்லக்கூடாது.

மக்களைச் சந்திக்கிறேன் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். மக்களைச் சந்தித்து, இவ்வளவு நிதிதான் இருக்கிறது, இவ்வளவு நிர்வாகத்திற்காக செலவிடப்படுகிறது, மக்களுக்குத் தேவையான அன்றாட முன்னேற்றத் திட்டங்களை குறைத்துக் கொண்டு இதைச் செய்ய வேண்டியிருக்கிறது என்று மக்களிடம் தகவல் சொல்வது தவறு அல்ல. மாநில நிதிநிலை இப்படியிருக்கிறது, 20 அல்லது 25 கோடி ரூபாய்தான் மிச்சப்படுகிறது, மிச்சமுள்ளதெல்லாம் பணியாளர்களின் செலவிற்காகச் செலவு செய்யப்படுகிறது, மத்திய அரசிடமிருந்து கிடைக்கக் கூடிய 300 கோடி ரூபாயை மானியத்தை வைத்துக்கொண்டுதான் நாம் பிற காரியங்களை நடத்த வேண்டி இருக்கிறது என்று சொல்வதில் தவறு என்ன இருக்கிறது?

நான் கூட மக்கள் பிரதிநிதிதான். நான் எல்லா அமைச்சர்களிடமும் கேட்கிறேன். எங்கள் ஊருக்கு குடிநீர் திட்டம் வேண்டும், எங்களுக்கு பாலங்கள் அமைத்துத் தரவேண்டும், நெடுஞ்சாலை வேண்டும், எங்கள் ஊரில் ஆஸ்பத்திரிகள் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம் எங்கள் தொகுதி மக்கள் சார்பாக.

அப்படிக் கேட்கும்போது அதுகுறித்து உள்ள நிலையை எடுத்துச் சொல்ல வேண்டும், அதை நாங்கள் தொகுதி மக்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. எங்களுக்கு இன்னின்ன கஷ்டங்கள் உள்ளன, எங்களது தற்போதைய நிதிநிலையில் உங்களுக்குச் செய்ய முடியாது, மற்றவர்களுக்கு செய்ய வேண்டியிருக்கிறது என்று மக்களுக்கு விளக்க வேண்டிய ஒரு பொறுப்பு முதல் அமைச்சர் அவர்களுக்கு உண்டு. அதைச் செய்யாவிட்டால் அவர்கள் பொறுப்பிலிருந்து தம்மை தட்டிக்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 6

கழித்துக் கொள்கிருர்களே தவிர, மக்களிடம் உள்ள நிலைமைகளை எடுத்துச் சொல்ல வேண்டியது முதல் அமைச்சர் அவர்களின் பொறுப்பாகும்.

**திரு. மு. கருணாநிதி :** ஒரு ஐயப்பாடு. மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் மத்திய அரசு மாநில அரசுக்கு 300 கோடி ரூபாய் மானியம் கொடுப்பதாகச் சொன்னுர்கள். எந்த நிதிநிலை அறிக்கையில் அப்படி குறிப்பிடப்பட்டுள்ளது?

**திரு. எம். ஏ. லத்தீப்:** எந்த நிதிநிலை அறிக்கையையும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இருக்கிற சூழ்நிலையை, பல்வேறு வகைகளில் கிடைக்கிற மானியங்களை வைத்துக்கொண்டுதான் சொல்கிறேனே தவிர எந்த நிதிநிலை அறிக்கை என்ருல் முன்னுள் நிதி அமைச்சராக நான் இருந்ததும் இல்லை இந்நாள் நிதி அமைச்சராகவும் நான் இருக்கவும் இல்லை. மக்களின் பிரதிநிதி என்ற முறையில்தான் சொல்கிறேன்.

என் முன்னேற்றத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட வில்லை என்று கேட்கும்போது, என் தொகுதியில் இவை எல்லாம் தேவை என்று சொல்லும்போது முதல் அமைச்சர் அவர்கள், நான் என்ன செய்ய முடியும், எங்களால் கொடுக்க முடியவில்லை, சட்டியில் இவ்வளவுதான் இருக்கிறது, நான் என்ன செய்ய முடியும், எங்களால் கொடுக்க முடியவில்லை, அவர்களுக்கு கொடுத்து விட்டேன் என்று எனக்கு விளக்கம் அளிக்கவேண்டிய கடமை முதல் அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது, என் தொகுதி மக்களுக்கு விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிருர்கள்.

அதேபோல் தமிழ்நாட்டிலுள்ள 234 தொகுதியில் உள்ள ஏழை பாழைகளாக இருக்கிற மக்களுக்கு விளக்கம் அளிக்கும் கடமை அவர்களுக்கு நிச்சயமாக உண்டு. அதைச் செய்யாவிட்டால் அவர்கள் கடமையிலிருந்து தவறியவராவார்கள்.

**திரு. மு. கருணாநிதி:** பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையில் சபாநாயகர் அவர்கள் குறை கூறுவதாக கருதிக் கொள்ளக்கூடாது. ஆளும் கட்சியின் போக்கை எதிர்த்துப் பேசுகிற உறுப்பினர்களை எல்லாம் அடிக்கடி மணி அடித்து உட்கார வைப்பதும் ஆளுகிற



1978 மார்ச் 6] [திரு. மு. கருணாநிதி]

பாக்கில் பேசுபவர்களுக்கு எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் வழங்குவது என்ற ஒரு முறையை வகுத்திருப்பது இது நீதியாகுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யார் அப்படிச் செய் தார்கள்?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** அழகர்சாமி அவர்கள் பேசும் போது எவ்வளவு நேரம் பேசினுர் என்பதும், சங்கரய்யா அவர்கள் பேசும்போது எவ்வளவு அதிக நேரம் பேசினுர்கள் என்பதும்— யாரும் தடுக்கவில்லை, எல்லோரும் கேட்டுக்கொண்டுதான் இருந் தார்கள், எதிர்கட்சித் தலைவர் உட்பட தெரியும் அதற்குப் பிறகும் எப்படி இப்படிக்கேட்கிருர் என்று புரியவில்லை.

**திரு. மு. கருணாநிதி:** பொதுமக்கள் பார்த்துக்கொள்வார்கள் என்ற பிரச்னைபற்றி முதல் அமைச்சர் அவர்கள் கூறியதை சங்கரய்யா அவர்கள் சாங்கோபாங்கமாக பேசும்போது தடுக்கப் படவில்லை. அதேவிஷயத்தை அழகர்சாமி அவர்கள் பேசியபோது மேலே பேசக்கூடாது என்று தடுக்கப்பட்டார்.

**திரு. சோ. அழகர்சாமி:** சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள் என்று தலைவர் குறிப்பிட்டார். அது சரி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆளும்கட்சியை எதிர்த்துப்பேசினுலும் ஆதரித்துப் பேசினுலும் நேரத்தையொட்டி சீக்கிரமாக முடியுங்கள் என்று சொல்வது கட்சிக்கண்ணோட்டத் தோடு சொல்வது அல்ல. அப்படி நானும் சொல்லவில்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் சொல்லமாட்டார்கள். பிஸினஸ் அட்வைஸரிக் கமிட்டியில் டிஸைட் செய்யுங்கள். இவ்வளவு நேரம்தான் ஒரு கட்சிக்கு ஒதுக்க வேண்டும் என்று முடிவு செய்யுங்கள்.

(முற்பகல் 11.10)

**திரு. என். சங்கரையா :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னைக் குறிப்பிட்டதால் சொல்லுகிறேன், மார்க்ஸிஸ்ட் கட்சியைப் பொறுத்தளவில், எந்த ஒரு பிரச்சினையையும் அதன் தன்மையைப் பார்த்து, அதற்குத் தகுந்தபடி தான் எந்த ஒரு

[திரு. என் சங்கரய்யா] [1978 மார்ச்சு 6

நிலையையும் எடுக்கும் என்பதையும், முதலமைச்சர் அவர்கள் பேசியதைப்பற்றி குறிப்பிடும்போது, அதைப்பற்றிய தவறான ஒரு ஞானமும், அபிப்பிராயமும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதைப் பற்றித்தான் சொன்னேன், இதில் எதுவும் ஆட்சேபிக்கக் கூடியதில்லை என்று கருதுகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** இப்பக்கத்திலுள்ளவர்களை ஆதரித்தோ அல்லது அப்பக்கத்திலுள்ளவர்களை ஆதரித்தோ பேசவேண்டிய கட்டாயம் எனக்கில்லை. தமிழ்நாட்டு மக்களை ஆதரித்துத்தான் இதைப் பேசுகின்றேன். (ஆளும்கட்சி தரப்பிலிருந்து கைதட்டல். . . ) எதை ஆதரிக்கவேண்டும், எதை ஆட்சேபிக்கவேண்டும் என்பது எனக்குத் தெரியும். நான் எந்த முறையில் பேசுவேன் என்பதையும் எல்லோரும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் நான் எப்படிப் பேசுவேன் என்பதும் தெரிந்தது தான். அப்படி நான் எந்த நிலையில் எப்படி பேசுவேண் என்பதை நன்கு தெரிந்தவர்கள் இப்படிச் சொல்வதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் அப்படி பேச வேண்டிய அவசியமில்லை.

நான் சொல்ல விரும்புவது, இந்த அவையின் சார்பாக சொல்லிக்கொள்ள விரும்புவது, அரசு ஊழியர்களுக்கு எதிரானவர்கள் நாங்கள் என்று ஏன் நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்? அவர்களும் தமிழ் நாட்டு மக்கள் தான், அவர்கள் இன்றைக்கு ஏழரை லட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கும் சேர்ந்து தான் இந்த ஆட்சி நடைபெறுகிறது. அவர்களுக்கு எதிராக பேசுகிறோம் என்று ஏன் நினைத்துக் கொள்ளவேண்டும்? கட்சிக்காரர்களைக் கொண்டு இவர்களை அடக்குவார்கள் என்ற எண்ணம் ஏன் வரவேண்டும்? அப்படிப்பட்ட எண்ணம் வருவதே தவறு என்று கூட சொல்வேன்.

ஆகவே, தயவு செய்து வேலைக்கு வராமல் இருக்கும் ஊழியர்களை கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து வேலைக்கு திரும்புங்கள்.... அரசோடு உங்களுடைய குறைகளைப் பற்றி பேசுங்கள். . . . . பேசி ஒரு முடிவுக்கு வாருங்கள். வேலைக்கு உடனடியாக திரும்புங்கள். . .



1978 மார்ச்சு 6] [எம். ஏ. லத்தீப்]

Come to the table. We will discuss across the table along with the other Leaders of the Opposition Parties. They have also got equal responsibility.

[மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை.]

இதில் எல்லோருக்கும் பொறுப்பு உண்டு. இந்த விஷயத்தில் அவர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. எதிர்க்கட்சியிலுள்ளவர் களுக்கும் பொறுப்பு இருக்கிறது. அரசுக்கும் பொறுப்பு இருக் கிறது. ஆகவே, ஊழியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வேலைக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் கோரிக்கைகளைப் பொறுத்தவரையில், கட்டாய ஓய்வு பற்றி பேசுகிறார்கள். அதில் போடப்பட்ட உத்தரவை மாற்றுங்கள் என்று கேட்பதாகத் தெரிகிறது. இதை அரசாங்கம் பரிசீலிக்கலாம், ஃபைனான்ஷியல் கமிட்மென்ட் இல்லாத இப்படிப் பட்ட விஷயங்களில் எல்லாம் அரசு முடிவு எடுக்கலாம். அதேபோன்று வேலை நேரத்தை மாற்றவேண்டும் என்று சொல்கிறார்கள். இதில் அரசுக்கு எந்தவிதமான கஷ்டமும் இராது என்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட அறிவிப்புகளை எல்லாம் அரசு செய்துவிட்டு, பிறகு மற்றக் காரியங்களை எல்லாம் அரசின் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்வது நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்தக் காரியங்களை எல்லாம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புவதின் காரணம், அரசு அமைத்துள்ள சம்பளக் கமிஷன் முடிவுக்கு முன்னாலேயே இதைப்பற்றி சொல்ல வேண்டும் என்று நாம் ஏன் வற்புறுத்த வேண்டும்? சம்பளக் கமிஷனின் முடிவு வேறுவிதமாக இருக்கும் என்று நாம் எதற்காக அப்படி நினைக்க வேண்டும்? சம்பளக் கமிஷனின் முடிவு இப்படித்தான் இருக்கும் என்று ஏன் நாம் சந்தேகிக்க வேண்டும்? அப்படி சந்தேகிப்பது நல்ல நிர்வாகத்தின் அல்லது நல்ல வாழ்க்கையின் அடிப்படையாக அமையாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள் கிறேன். இதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியதுபோல், நியாயமான முடிவு ஏற்படாவிட்டால், தமிழ்நாட்டு மக்களின் சார்பில், இந்த நிலைமைகளை எண்ணிப் பார்த்து,

தமிழ்நாட்டு மக்கள் அவர்களை சந்திக்காமல், தங்களைத்தானே சந்தித்துக் கொண்டு தீர்ப்பை வழங்குவார்கள் என்பதைச் சொல்லிக்கொண்டு (ஆளும்கட்சி தரப்பில் ஆரவாரம்) இதைப் பற்றி விரிவாக சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* **திரு. ரா. மார்க்கபந்து :** தலைவர் அவர்களே, நேற்றைய தினமும் நேற்றைய முன்தினமும் நடைபெற்ற கூட்டத்தில், எதிர்க்கட்சித் தலைவர்கள் அழைக்கப்பட்டதில், உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக நானும் கலந்து கொண்டேன். அங்கே ஒருமனதாக எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு மாறாக கருத்துக்கள் இங்கே கூறப்பட்டு வருகின்றன என்பதைப் பார்த்து நான் சில விவரங்களைப்பற்றி சந்தேகிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறேன் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நேற்றைய முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில், நான்-கெஸட்டட் ஆபீசர்கள் சார்பில் வெளியிட்ட ஒரு பத்திரிகைக் குறிப்பைப் பார்த்தேன். அதில் மூன்று கோரிக்கைகளை சொல்லியிருந்தார்கள். வேலை நேரத்தை மாற்ற வேண்டும், பிராவிடன்ட் பண்டிலிருந்து பணம் பெறுவதற்கு இருக்கின்ற விதிமுறைகளை தளர்த்தவேண்டும் என்றும், மூன்று ஆண்டுகளுக்குப் பின்னாலும் ஒருவரை இடமாற்றம் செய்யக்கூடாது என்றும் மூன்று முக்கிய கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொள்ளவில்லையே என்ற குறிப்பை அதில் சொல்லியிருந்தார்கள். நேற்றைய கூட்டத்தில் சொன்னார்கள். தாய்மார்களின் வேண்டுகோளுக்கு இணங்கி வேலை நேரத்தை மாற்றி அமைக்கவிருக்கிறோம் என்றும், பிராவிடன்ட் பண்டிலிருந்து கடன் பெறுவதற்கான விதிகளை தளர்த்தியிருக்கிறோம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இன்னொரு கோரிக்கையைப் பொறுத்தவரையில் அதில் இரு சங்கடம் என்னவென்று சொன்னால் மூன்று ஆண்டுகளாக ஒரே இடத்தில் பணியாற்றுகின்ற அரசாங்க ஊழியர்களை மாற்றாமல் இருந்தால் . . . .





'They can have a vested interest in that area' என்கின்ற முறையிலே, இந்த அரசாங்கம் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றுவது என்பதுதான் சரியானது என்கின்ற கருத்திலேதான் அந்தக் கோரிக்கையை கவனிக்க வேண்டும் என்று கோரினார்கள். அதற்கு அங்கேயிருந்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்களும் கூட, இந்தக் கோரிக்கையை அந்த அளவிலே சிந்திக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

அப்படிச் சொல்கின்றபோது நீங்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்ததை நாங்கள் விரும்பவில்லை. காரணம், நாங்கள் இந்த அரசாங்கத்திற்கு ஒரு வாக்குறுதி கொடுத்து, கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். மறியலை நிறுத்தி, பேச்சுவார்த்தைகள் மூலம் இதற்கு முடிவு காணலாம் என்பதற்கு நாங்கள் ஒத்துழைப்பு தந்திருக்கிறோம். கலைஞர் அவர்கள்கூட, என்.ஜி. ஓக்களைச் சேர்ந்தவர்களோடும் பேசுகின்றபோது, நீங்கள் கையாளுகின்ற முறை சரியல்ல என்று கருத்து தெரிவிக்கப்பட்டதாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கலந்துகொண்ட புலவர் கோவிந்தன் அவர்கள் அறிவித்தார்கள்.

இவர்கள் கடைப்பிடிக்கின்ற முறை சரியல்ல, முறையானதல்ல என்பது எல்லாக் கட்சிக்காரர்களும் ஒத்துக்கொண்ட கருத்தாகும். ஆனால், மாறான கருத்துக்கள், தவறான கருத்துக்கள் ஏன் இங்கே தெரிவிக்கப்படுகின்றன என்பதைப்பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்.ஜி.ஓ.க்களுக்கு பே கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினர் அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறார்கள். அந்த அறிக்கை வந்தபிறகு, அவர்கள் குறிப்பிட்டுள்ள வாக்குறுதிகளை இந்த அரசு கொடுப்பதாக, அதுவும் 1-4-1978 தேதியிலிருந்து கொடுப்பதாகவும், இப்படி ஒரு ரீட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். இந்த நேரத்திலே மறியல் என்றும் சொல்லப்பட்டது. இப்போது கொடுக்கின்ற இந்த

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 மார்ச்சு 6

15 ரூபாய், 25 ரூபாய் என்பதை நீங்கள் அப்படியே வைத்துக் கொள்ளுங்கள். அதோடு திரு. சங்கரய்யா அவர்கள்கூட சொன்னுர்கள். மேலும் 10 ரூபாய் போட்டுக் கொடுக்கலாம், என்று சொன்னுர்கள்.

திரு. என். சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். அவர்கள் சொன்னதுபோல், மேலும் 10 ரூபாய் போட்டுக் கொடுக்கவேண்டு மென்று நான் சொல்லவில்லை, இப்போது 25 ரூபாய் 15 ரூபாய் என்று ஒரு மாத காலத்திற்கு, இடைக்கால நிவாரணமாகக் கொடுக்கப்படுகின்ற தொகையை ஊதியக் கமிஷன் அறிக்கை வரும்வரையில் கொடுக்கவேண்டுமென்றுதான் தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மார்க்கபந்து அவர்கள் இங்கே பேசியவர்களுக்குப் பதில் சொல்லவேண்டிய அவசிய மில்லை. சபையின் இதர நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட வேண்டியதற்கான காரணத்தை மட்டும் சொன்னல் போதும்.

திரு. ரா. மார்க்கபந்து: இப்போது நியமிக்கப்பட்டுள்ள பே கமிஷன் தன்னுடைய அறிக்கையைக் கொடுக்கும்போது இப்போதுள்ள தொகைக்கும் குறைவாகக் கொடுக்கக்கூடியதா இருக்குமாஞல், அதிகப்படியாக கொடுத்திருக்கும் தொகை திருப்பி வாங்கவேண்டிய நிலை வருமே? அதே நேரத்திலே பே கமிஷன் குறைவாக நிர்ணயம் செய்யுமானல், இப்படிக் குறைத்துக் கொடுக்கவேண்டும் என்கின்ற நிலைமையில், எப்படியும் நாம் இன்னொரு போராட்டத்தை எதிர்காலத்தில் சந்திக்க முடியாது என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது?

அதே நேரத்தில், மற்றொரு கருத்தையும் சொன்னேம். இப்போது வேலைநிறுத்திலே 7½ லட்சம் என்.ஜி.ஓ.க்கள் இந்தப் போராட்டத்திலே கலந்து கொள்கிருர்கள் என்று சொன்னல், அவர்கள் இந்த நாட்டிலே உள்ள நிலையையும் பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒருவேளை சோற்றுக்குக்கூட வழியில்லாமல் வாடுகின்ற பட்டதாரிகள், பி.யு.சி. படித்தவர்கள், எஸ்.எஸ்.எல்.சி படித்தவர்கள் தங்களுடைய பெயர்களை 1963-ஆம் ஆண்டிலே யிருந்தும் அதற்கு முன்னலிருந்தும் எம்ப்ளாய்மெண்ட்



1978 மார்ச்சு 6] [திரு. ரா. மார்க்கபந்து]

எக்ஸ்சேஞ்சிலே பதிவு செய்துவிட்டு, இன்றைக்கு நாட்டிலே உள்ள 5 கோடி மக்களிலே பெரும்பான்மையினர் பசியால் வாடிக் கொண்டு, எரிமலையின் உச்சியிலே உட்கார்ந்து கொண்டிருக்கின்ற நிலைமையைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமென்றும், இவர்களுடைய பிரச்னைகளை எப்படி சமாளிக்கப் போகிறீர்கள், எப்படி சரிப் படுத்தப் போகிறீர்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்திலே, வேண்டுமென்றல் உயர் படிப்பு படித்தவர் களுக்கு தமிழகத்திலே இதற்குமேல் படித்தவர்களுக்கு வேலை இல்லை என்ற ஒரு உத்திரவினை இந்தத் தமிழக அரசு அறிவித்து விடத் தயாராக இருக்கிறதென்றல், என்.ஜி.ஓ.க்களுக்கு அதிக ஊதியம் கொடுங்கள் என்று சொல்லிக்கொள்வதிலே எனக்கு ஆட்சேபணையில்லை.

(முற்பகல் 11-20)

பரிசீலனை செய்கிருேம் என்று சொன்னுர்கள்; பரிசீலனை செய்த பிறகு ஒரு முடிவுக்கு வருவோம் என்று உறுதியளித்துவிட்ட பிறகு எதிர்க்கட்சித் தலைவர்கள் கொடுத்த வாக்குறுதியை மீறித்தான் அவர்கள் போராட்டத் திட்டத்தை அறிவிக்கிருர்கள். நாங்கள் இப்படித் தான் செய்வோம் என்று சொன்னல், அரசுத் தரப்பில் கொடுக்கப் படுகிற வாக்குறுதி, எதிர்க்கட்சித் தலைவர்கள் சார்பில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் ஆகியவற்றை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டு நாங்கள் நினைப்பதைச் செய்வோம் என்று என்.ஜி.ஓ. வினர் இறங்குவார்களாஞல் நாட்டில் மற்றத் தொழில்களில் இருப்பவர்கள் இதுபோன்ற நிலைமையில் ஈடுபட மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? அதே போன்று

போலீஸ் இலாகா எசன்ஷியல் சர்வீஸ்; எசன்ஷியல் சர்வீஸ் எலக்ட்ரிசிடி போர்டு, ஹாஸ்பிடல் எலக்ரிசிடி டிப்பார்ட்மெண்ட், ஆஸ்பத்திரி வரிசையில் வரலாம். வேலை செய்து கொண்டிருந்தவர்களை களுக்கெல்லாம் சென்று ஆபத்தான நிலைமையை எல்லாம் வெளியே இழுத்துவரக்கூடிய ஏற்றுக்கொள்ளத்தான் உருவாக்கினுர்கள். இதை எல்லாம் ஒதுக்கியிருக்கிருேமோ, வேண்டுமா? எந்த அளவுக்கு நிதிநிலை மூன்றுவது பே அந்த அளவுக்கு அவர்களுக்குத் தரப்படும். அந்த அறிக்கை கமிஷன் அறிக்கை தரப்பட இருக்கிறது. முன்னலேயே தாங்கள் செயலாற்றுவதற்கு தரப்பட்டு

நினைத்ததைத் சாதிக்கவேண்டுமென்ற நினைப்பு இருக்குமானால், நாட்டிலே போராட்டங்களை அன்றாடம் சந்திக்க வேண்டிய கட்டாய நிலைமைக்குத் தள்ளப்படுவோம் என்பதைக் கூறி இதைப் பற்றி விரிவாக விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை மிகவும் சிக்கலான பிரச்சினை என்பதை மன்றத்தில் இருக்கும் அனைவரும் அறிவார்கள். இது நமது அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை. இதிலே இந்த அரசுக்கு இருக்க வேண்டிய அக்கறையை விட மற்றவர்களுக்கு நிச்சயமாக அதிகமான அக்கறை இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அரசாங்க ஊழியர்களை எப்படி கவனிக்க வேண்டும், அவர்கள் குறையை எப்படிப் போக்கவேண்டும், எவ்வாறு அணுகவேண்டும் என்பதை அரசாங்கந்தான் முறையாகக் கவனித்துத் தீர்க்க வேண்டுமே தவிர வேறு யாரும் தீர்க்க முடியாது.

இந்த மன்றத்தில் இருக்கும் அத்தனை எதிர்க்கட்சிகளும் ஆளும் கட்சிக்கு எதிராக எழுப்பப்படுகின்ற பிரச்சினை என்று கருதாமல் ஆளும் கட்சியின் சங்கடத்தையும் உணர்ந்து பொறுப்போடு அரசு ஊழியர்களுடைய பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்பதிலே அக்கறை காட்டிற்று. அதைத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசும்போது, எதிர்க் கட்சிகள் சொன்னதைக்கூடக் கேட்காமல் அவர்கள் தூக்கி எறிந்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அரசு ஊழியர்கள் ஆளும் கட்சியிலும் இல்லை, எதிர்க்கட்சியிலும் இல்லை. அவர்கள் அரசாங்க ஊழியர்கள். அரசாங்கமே அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு அவகாசம் வேண்டுமென்று கூறியதைக் கேட்கவில்லை என்றால் நாங்கள் சொல்வதை அவர்கள் எப்படிக் கேட்க முடியும்? முதலமைச்சர் சொல்வதையே கேட்கவில்லை என்றால் அவர்கள் வேறு யார் சொன்னாலும் கேட்க மாட்டார்கள்.

இதிலே எதிர்க்கட்சி, ஆளும் கட்சி என்ற பிரச்னை இல்லை. அரசு ஊழியர்கள் கோரிக்கை நியாயமானதா இல்லையா என்பது தான் பிரச்னை. அரசாங்கத்திற்கு அதிகச் செலவு இருக்கிறது





இல்லையென்று சொல்லவில்லை. அரசாங்கமே இல்லாவிட்டால் செலவும் இல்லை. கம்யூனிஸ்ட் ஃபார்ம் ஆப் கவர்ன்மெண்ட் என்று இருந்தால் சர்க்கார் ஊழியர்கள் என்று தனியாக இருக்காது, செலவும் இருக்காது. அதுவரை செலவாகிக் கொண்டு தான் இருக்கும். நிர்வாகச் செலவு ஆகிக் கொண்டுதான் இருக்கும். அதுவரை இரண்டுபேரும் இருந்துதான் ஆக வேண்டும். செலவு வேண்டாம் என்றால் நாம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்படிப்பட்ட நிலைமை எல்லாம் இருக்கிற காரணத்தால் நாம் நிதானத்தோடு பிரச்னையை அணுகவேண்டும். யார் ஆட்சியில் இருக்கிறார்கள் என்பது பிரச்சினை அல்ல.

என். ஜி. ஓ. வினர் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். முதலமைச்சருடைய பேச்சு சிக்கலை உருவாக்கியிருக்கிறது. சட்டப் பேரவையில் நிதியமைச்சர் அவர்கள் ஏப்ரல் 1-ஆம் தேதியிலிருந்து சம்பளக் குழுவின் அறிக்கை அமல்நடத்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் பேசும்போது—ஜனவரியிலிருந்து நாங்கள் கொடுப்போம் என்று சொல்லுகிறோம்; ஆனால் அவர்கள் நாங்கள் பதவி ஏற்ற மாதத்திலிருந்து, ஜூலை மாதத்திலிருந்து தரவேண்டுமென்று கேட்கிறார்கள் என்று பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பத்திரிகையில் அந்தச் செய்தி வந்திருக்கிறது என்பதை தயவுசெய்து கூறவேண்டும்.

**திரு. க. சுப்பு:** முதலமைச்சருடைய 'நீதியின் குரல்' பத்திரிகை. அவருக்கு தெரிந்த பத்திரிகை; மாவீரனுடைய பத்திரிகை. அந்தப் பத்திரிகையில் வந்ததுதான் சரியான பத்திரிகை. அந்தப் பத்திரிகையில் வந்ததுதான் சரியான ஆதாரமாக இருக்கிறது. இல்லையென்றால் மறுக்கலாம். ஆனால் முதலமைச்சர் அப்படி ஒரு செய்தி வந்திருக்கிறது. முதலமைச்சர் அப்படி ஒரு சொல்லைச் சொல்லும்போது அதனால் எந்த வாயிலிருந்து ஒரு சொல்லைச் சொல்லும்போது அதனால் எந்த அளவுக்கு நிலைமைகள் ஏற்படும் என்பதை அறிந்து யோசித்துச் சொல்லவேண்டும். நாங்கள் என்ன வேண்டுமென்றாலும் சொல்லலாம். பொறுப்பிலுள்ளவர்கள் எந்த அளவுக்குச் சொல்ல வேண்டுமென்று யோசித்துச் சொல்லவேண்டும்.

[திரு. க. சுப்பு] [1978 மார்ச் 6

பல்லவன் போக்குவரத்து ஊழியர்கள் போராட்டம் நடந்த போது, மின் வாரிய ஊழியர்கள் போராட்டம் நடந்தபோது அருப்புக்கோட்டை பகுதியில் முதலமைச்சர் அவர்கள் 'பொது மக்கள் பார்த்துக் கொள்வார்கள்' என்று சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் நல்லெண்ணத்தில் சொல்லியிருக்கலாம். எந்தப் பொதுமக்கள் அவர்களைப் பார்த்துக் கொள்வார்கள்? முதலமைச்சர் வாயிலிருந்து ஒரு வார்த்தை வருமானால் அவருடைய வார்த்தையைக் காப்பாற்ற வேண்டுமென்று துடிக்கக் கூடியவர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். முதலமைச்சர் தெரிவித்துவிட்டார், நாம் சும்மா இருக்கக்கூடாது என்று துடிக்கிறார்கள். நியாயத்தைக் கோரி போராட்டத்தை அவர்கள் நடத்துகிறபோது அவர்களை அடக்குவதற்கு—நாம் நினைக்கா விட்டாலும் அவர்களைத் தூண்டி விடுவதாகப் பேசியிருக்கிறார்கள் சைக்கிள் செயினை வைத்து அடிக்கக் கூடிய அளவிற்கு, அடித்து உதட்டை இரண்டாகப் பிளக்கக்கூடிய அளவுக்கு பொதுமக்கள் யாரும் முன்வரமாட்டார்கள்.

முதலமைச்சர் ஒன்றைச் சொன்னால் அவருடைய வார்த்தைக்கு மரியாதை கொடுக்கவேண்டுமென்று நினைக்கிற பெரியவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பெரியவர்கள் கையிலே எடுத்துக்கொள் வார்கள் சட்டத்தை. அப்படி வருமானால் நிலைமை மிகப் பெரிய ஆபத்தாகிவிடும். பொது மக்களை நானே சந்திக்கிறேன் என்று சொல்கிறார். அப்படியானால் என். ஜி. ஓ. க்கள் பொதுமக்கள் இல்லையா? அவர்களும் பொதுமக்கள் தான். முதலமைச்சர் அவர்க ளுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்கிறாரா இல்லையா என்றால் அது வேறு விவகாரம். ஆனால் பொது மக்களை விட்டு பார்த்துக் கொள்ளச் சொல்கிறேன் என்று சொன்னால், அப்படிச் சொல்லி முதலமைச்சரே தெருவிலே இறங்கிவிட்டால், பிறகு அரசாங்கம் எதற்கு? நிர்வாக இயந்திரம் வேறு, அரசாங்க ஊழியர்கள் வேறா? இரண்டும் ஒன்றாகத்தானே இருக்கவேண்டும், இரண்டிற் குள்ளே பிரிவினை என்று வந்துவிட்டால் அது அவ்வளவு சரியாக இருக்காது.

மக்கள் நம்பிக்கையைப் பெறமுடியும் என்று சொல்கிறார்கள். ஊழியர்களின் நம்பிக்கையை எப்படிப் பெறமுடியும்? நம் முடைய ஊழியர்களிடத்திலேயே நமக்கு நம்பிக்கை



[illegible] மார்ச் 6] [திரு. க. சுப்பு]

[illegible] யாரிடத்திலே நாம் நம்பிக்கையைப் பெறப்போ [illegible] அந்தச் சங்கத்தின் பிரதிநிதிகளை, சிறையின் கதவுகள் [illegible] பட்டவுடன் முதலமைச்சர் அவர்களுடைய வீட்டுக்கு [illegible] தார்கள், அங்கே போனார்கள், போகவில்லையா? [illegible] களிடம் அங்கீகாரத்தை ரத்து செய்வோம் என்று சொன்ன [illegible] சொன்னார்கள். ஆனால் முதலமைச்சர் ஏதோ [illegible] திலே சொல்லியிருக்கலாம், திருத்திக் கொள்வார், நீங்கள் [illegible] பேசுங்கள் என்றுதான் நாங்கள் எல்லாம் சொன்னோம்.

அவர்கள் 63, 73 சங்கங்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். [illegible] சங்கரய்யா அவர்கள் கூடச் சொன்னார்கள். நாங்கள் எல்லாம் சொல்லியும் கூட அவர்கள் கேட்கவில்லை, அவர்களுடைய தலைவர்கள் சொல்லியே அவர்கள் கேட்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. சிவ இளங்கோ அல்ல. பாரதன் அல்ல, யார் சொன்னாலும் கேட்கவில்லை. சிவ இளங்கோ அவர்களே அவர் களுடைய கோரிக்கைக்கு விரோதமாக வந்தால் கூட சிவ இளங்கோ இருக்கமாட்டார், ஆனால் அந்தப் போராட்டம் இருக்கும். எங்களுடைய தலைவர் கூடச் சொன்னார்கள், யாரையும் கேட்காமல் போராட்டம் நடத்துகிறீர்கள், எங்களையும் மீறி வந்தால் என்ன செய்வது? உங்களையும் மீறி வந்து விட்டபோது எங்களை என் மீறாது? எல்லாவற்றையும் மீறக்கூடிய நிலைமைகள் வந்துவிடும். அவர்கள் நியாயமான கோரிக்கைகளை வைப்பதாகச் சொல் கிறார்கள். திரு. கபாலி அவர்களுடைய தொகுதியில் பட்டினப் பாக்கத்தில் அவர்கள் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் சோடா பாட்டில் வீசி தாக்கப்பட்டிருக்கிறது என்பது யாருக்கும் தெரியா விட்டாலும் அரசாங்கத்திற்குத் தெரியும். . . . .

திரு. கே. கந்தசாமி: பாயின்ட் ஆப் ஆர்டர், சார். முக்கிய மான பிரச்னை. போராட்டத்தை அவர்கள் தொடர்ந்து நடத்து வதற்குரிய காரணங்கள் இருக்கின்றன, அரசின் சார்பிலே கொடுக்கப்பட்ட உறுதியையும், எதிர்க்கட்சிகள் சார்பிலே தெரிவிக்கப்பட்ட உறுதிமொழியையும் மீறி யாரையும் கேட்காமல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்களே, யார் சொல்லியும் கேட்காமல் அவர்களுடைய கோரிக்கையை வைத்து தைரியமாகச் செய்வதானால் அது பாதுகாப்பற்ற நிலைக்குக் கொண்டுபோய்விடலாம் என்று நினைக்கிறார்களா? அதையும் உறுப்பினர் அவர்கள் ஆதரிக்கிறார்களா? இப்படிப்பட்ட நிலைமை நாட்டுக்குத் தேவையா?

[1978 மார்ச் 6

திரு. க. சுப்பு: இது ஒழுங்குமுறைக்குள் வராது என்பதால் நான் அதற்குள் போக விரும்பவில்லை. இந்தப் பிரச்சினைபற்றி முதலமைச்சருடைய பேச்சு பெரிய பரபரப்பையும் அச்சத்தையும் திகிலையும் ஏற்படுத்தியிருக்கிறது. அவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடத்தியபோது சோடாபாட்டில்கள் அடிக்கப்பட்டு—அந்த பெரிய மனிதர் யார் தெரியுமா? வைத்தி என்பவர், போலீஸார் அவரை கைது செய்யவில்லை, அவரோ பெரிய மனிதர், கைது செய்தால் போலீஸ்காரர் அந்த ஊரிலே இருக்கமாட்டார். சோடாபாட்டில் வைத்துக் கொண்டு என்.ஜி.ஓ. பிரச்னையைத் தீர்க்கமுடியும் என்ற முடிவுக்கு அரசாங்கம் வருமானல் நான் அதைப்பற்றி மேலும் பேசத் தயாராக இல்லை.

(முற்பகல் 11.30)

அதற்குப்பிறகு நம்முடைய ஊழியர்களின் கோரிக்கைகளைப் பற்றிப் பேசுவதில் என்ன கௌரவப் பிரச்னை வந்து விட்டது? இதில் கௌரவப் பிரச்னை வேண்டியதில்லை. இது உங்களுடைய ஊழியர்களுக்கும் உங்களுக்கும் இடையே உள்ள பிரச்னை, அது தெருவுக்கு வந்தால்தான் அகௌரவம். அப்படி தெருவுக்கு வராமல் நீங்கள் அவர்களை அழைத்துப் பேச வேண்டும்.

மகாராஷ்டிராவிலும், கேரளாவிலும்—கஷ்டமான நிலையிலுள்ள மாநிலம்—அவர்கள் கொடுப்பதைக்கூட நாம் கொடுக்க முடியவில்லையென்றால் நாம் என்ன அவர்களைவிட மட்டமா? அந்த முதலமைச்சர்களைவிட நம்முடைய முதலமைச்சர் மட்டமா? மற்ற முதலமைச்சர்களைவிட நம்முடைய முதலமைச்சர் மட்டமாக இருக்கக்கூடாது என்று நினைக்கிறேன். ஏனென்றால், இவர் புரட்சித் தலைவர், அந்தப் புரட்சித் தலைவர் பொதுமக்களைக் கொண்டு பதம் பார்க்கக்கூடாது. அண்டை மாநிலங்களில் அள்ளிக் கொடுப்பதைப்போலக் கொடுக்க முடியாவிட்டாலும், இடைக்கால நிவாரணமாக அளிக்காமல், அன்பளிப்பைப்போல் 25 ரூபாயும், 15 ரூபாயும் வாங்கி கொள்ளுங்கள் என்று சொன்னல் அவர்கள் எப்படி வாங்கிக் கொள்வார்கள்?

அவர்கள் சென்ட்ரல் டி. ஏ. வேண்டுமென்று கேட்கிறார்கள். சென்ட்ரல் கவர்ன்மென்ட் ஊழியரும் ஒரே ஊரிலேதான் இருக்கிறார், இவர்களும் ஒரே ஊரிலேதான் இருக்கிறார்கள்; இவர்



78 மார்ச் 6] [திரு. க. சுப்பு]

களுக்கும் அவர்களுக்கும் இடையில் வேறுபாடு இருக்கக்கூடாது என்று நினைக்கும் கொள்கையளவில் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இதைப் பற்றிப் பேசித் தீர்ப்பதில் என்ன கடினம் இருக்கிறது?

இந்தப் போராட்டத்தை எந்தக் கட்சியும் தூண்டிவிட்டு விடவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இவர்களுக்குப் பரிந்து பேசுகிறார்கள் என்பதால் அவர்கள் தூண்டிவிடுகிறார்கள் என்று அர்த்தம் இல்லை. இப்படிப்பட்ட பரிபுணர்ச்சி உங்களிடம் வந்தாக வேண்டும். அப்படி வந்தால்தான் நல்லது, நாட்டுக்கும் நல்லது, நிர்வாகத்திற்கும் நல்லது. அந்தப் பரிவுணர்ச்சி வர வேண்டும். அது வராவிட்டால் பிரச்னையைத் தீர்க்க முடியாது.

இந்தப் பிரச்னையைத் தீர்க்கவில்லையென்றால் பொதுமக்கள் தான் பாதிக்கப்படுவார்கள். ஆபீஸ்களில் 80 சதவிகிதத்திற்கு மேல் வரவில்லை என்றால் யாரை வைத்து வேலை பார்ப்பது? பெரிய அதிகாரிகள்தான் வந்திருக்கிறார்கள். அவர்களும்கூட விட்டு வைத்தால்தான் வருவார்கள், இல்லாவிட்டால் அவர்களையும் பொதுமக்கள் பார்த்துக் கொள்வார்கள். ஆகவே, நான் கேட்டுக் கொள்வது, இப்படிப்பட்ட நிலைமைகளை வளரவிடாமல், அவர்களை மீண்டும் அழைத்துப் பேசி, அவர்களது நியாயமான கோரிக்கைகளைப்பற்றி பேச முன்வரவேண்டும். ஆகவே, அதைப்பற்றி விவாதிக்க குறைந்தபட்சம் இந்தச் சபையின் அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, நான் கொஞ்சம் தாமதப்பட்டு வந்து விட்டாலும், இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களாக இருக்கின்ற பலர் சில உண்மைகளையும், தாங்கள் என்ன நினைக்கின்றார்களோ அவர்களுடைய கருத்துக்களையும் எடுத்துச் சொன்னதாக நான் அறிந்தேன். இங்கே மதிப்பிற்குரிய மாண்புமிகு ஜேம்ஸ் அவர்களும், மாண்புமிகு சுப்பு அவர்களும் பேசியவற்றையும் நான் நேரில் கேட்கின்ற வாய்ப்பினைப் பெற்றேன். மாண்புமிகு சுப்பு அவர்கள் என் சார்பிலே பேசிய

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச்சு 6

தற்காக முதலில் அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். நான் எதைச் சொல்லவேண்டுமோ அதில் பெரும்பகுதியை அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்பது எனக்கு மனத் திருப்தியாக இருக்கிறது.

ஆனால் ஒன்று, அவர் எந்தப் பத்திரிகையிலேயிருந்து படித்துக்காண்பிக்கிறார் என்று நான் கேட்டதிலேயிருந்தே அவர் குறிப்பிட்ட அந்தப் பத்திரிகைக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை என்பதையும், அந்தப் பத்திரிகையை நான் படிக்கவில்லை என்பதையும் அவர் புரிந்து கொண்டிருப்பார் என்று நான் கருதுகிறேன்.

தினமணியிலே வந்திருக்கின்ற செய்தியை இங்கே படித்துக் காண்பித்தார்கள். ஒரு மணி நேரம் பேசுகின்ற ஒருவருடைய பேச்சை இரண்டு காலங்களிலே பூர்த்தி செய்து முழுமையாக வெளியிட்டு விட்முடியுமென்று இங்கேயிருக்கின்ற யாரும் நம்ப மாட்டார்கள் என்று நான் நிச்சயமாக, உறுதியாக எதிர் பார்க்கிறேன்.

நிலைமைகளை ஆதியிலிருந்து சொல்ல வேண்டிய கட்டாயத் திற்கு ஆளாக்கப்பட்டிருப்பதால், இங்கே எதிர்க்கட்சிகளைச் சார்ந்த தலைவர்கள், நண்பர்கள் சொல்லியிருந்தாலும் நான் சொல்வதையும் கொஞ்சம் பொறுமையோடு கேட்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்கள் இடைக்கால நிவாரணம் வேண்டுமென்று கேட்டு அதற்காக அவர்கள் நடவடிக்கையிலே இறங்கினார்கள் என்கின்ற நிலைமையில் கைது செய்யப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டு, கைது செய்யப்பட்டார்கள் என்பதும், அவர்கள் விடுதலை செய்யப்பெற்று அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா போன்றவர்கள் வற்புறுத்தினார்கள் என்பதும் தெரியும்.

அதற்கேற்ப நான் அன்றே இந்த மாமன்றத்தில் ஒரு கேள்வி யைத் திருப்பிக் கேட்டேன். மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா போன்றவர்கள்—அவர்களுடைய வார்த்தையை நம்பி நான்



1978 மார்ச்சு 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

விடுதலை செய்ய உத்தரவிட்டால் வெளியே வருகின்றவர்கள் மீண்டும் வேலைநிறுத்தம், மறியல் போன்றவைகளில் ஈடுபட மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தைத் தர முடியுமா என்று கேட்டபொழுது, எங்கள் வார்த்தையை அவர்கள் ஏற்றுக்கொள் வார்கள் என்ற நம்பிக்கையிருக்கிறது என்று அவர் சொன்னதை இங்கே நான் நினைவுபடுத்த முதலில் விரும்புகிறேன்.

அதற்கேற்ப நாங்கள் விடுதலை செய்தோம். அவர்கள் பேச்சு வார்த்தைக்கு வந்தார்கள். எனது வீட்டிற்கு வரவில்லை, எனது அலுவலகத்திற்கு வந்தார்கள் என்பதைத் தயவுசெய்து தெரிந்து கொள்ள வேண்டும். அங்கே, தலைமைச் செயலர் அவர்கள் இருந்தார்கள்; ஹோம் டிபார்ட்மெண்ட்டைச் சேர்ந்த செயலர் இருந்தார்; நிதித் துறைச் செயலர் இருந்தார். அவர்களுக்கு முன்பாக பேச்சுவார்த்தை நடந்தது.

கோரிக்கையைப் பற்றி நாங்கள் பேச்சுவார்த்தை நடத்துவது என்று நான் ஒப்புக்கொண்டவுடன், பரதன் என்ற பெயருடைய தலைவருடைய ஒரு பிரிவு என்று சொன்னாலும் சரி, ஒரு அமைப்பு என்று சொன்னாலும் சரி, அவர்கள் சொன்னார்கள், எங்களையும் நீங்கள் கலந்து பேசவேண்டும்; எங்களுடைய கோரிக்கைகளையும் நீங்கள் மதித்து, அவைபற்றி விவாதிப்பதற்கு வாய்ப்பு தர வேண்டுமென்றார்கள். அவர்களுக்கும் அன்றையதினமே நாங்கள் நேரத்தை ஒதுக்கிவைத்தோம்.

அதே சமயத்தில், முத்தாலிங்கம் என்ற பெயருள்ள— செங்கற்பட்டு, காஞ்சிபுரம் போன்ற இடங்களிலேயுள்ள அரசிதழ் பதிவுபெறாத சங்கத்தைச் சேர்ந்த—அவர்கள் நாங்களும் பேசுவதற்கு வாய்ப்பு வேண்டுமென்று கேட்டார்கள். அதையும் ஏற்றுக் கொண்டு அன்றையதினமே பேசுவதாக இருந்தது.

ஆனால், குறிப்பிட்ட நேரத்திற்கு மேலும் நண்பர் சிவ இளங்கோவிடம், அவர்கள் நண்பர்களிடம், பேச வேண்டியிருந்த தால், பேச்சு நீண்டு கொண்டே சென்றது. கடைசியாக, அவர்கள் கேட்ட கேள்வி, எத்தனை நாளைக்குள் உங்கள் பதில் கிடைக்கும் என்று கேட்டார்கள். ஏன் அவர்கள் இப்படிக் கேட்டார்கள் என்றால், நான் சொன்னேன், உங்கள் கோரிக்கையை, பரதன் தலைமையிலே இருக்கிற நண்பர்களுடைய கோரிக்கையை,

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச்சு 6

முத்தாலிங்கம் போன்ற நண்பர்களுடைய கோரிக்கையை ஒன்றாக வைத்து, பரிசீலித்து, நிதித் துறைச் செயலாளரிடம் அதைப்பற்றி விரிவாக விவாதித்து, எந்த அளவிற்கு நிதிநிலைமை அனுமதிக்கப் படுகிறதோ, அனுமதிக்கிறதோ, அதற்கேற்ப அதைப்பற்றி அமைச்சரவை கூடி, அங்கே முடிவு செய்து, நாங்கள் உங்களுக்குத் தெரிவிக்கின்றோம் என்று சொன்னோம். அப்பொழுதுதான், எத்தனை நாளைக்குள் என்று கேட்டார்கள். நாங்கள் இத்தனை நாளைக்குள் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது; எவ்வளவு விரைவாகத் துரிதமாகச் செய்ய முடியுமோ, அந்தக் கடமையுணர்வோடு நாங்கள் செய்கிறோம். அதற்கான முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம் என்று உறுதி கூறினோம்.

அவர்கள், அதற்குப் பிறகு எழுந்து செல்லும்போது, நான் அவர்களிடம் சொன்னேன், கீழே நண்பர்கள் காத்திருக்கிறார்கள்; இங்கே நேரம் ஆகிவிட்டதால், அவர்களை இன்றையதினம் சந்திக்க முடியாது. அவர்கள் என்ன நினைப்பார்களோ தெரியாது என்றுகூறிவிட்டுத்தான், அவர்களே, அவர்கள் விருப்பப்படி பேச்சை முடித்துவிட்டு, அங்கேயிருந்து சென்றார் கள். நாங்களும் மரியாதையுடன் அனுப்பி வைத்தோம்.

ஆனால், சிவ. இளங்கோவுடன் நண்பர்கள் பலர் வந்தார்கள் நான் வைத்திருக்கின்ற அலுவலகத்திற்கு அன்றுவது வீட்டில் என்று கருதுகிறேன், அங்கேகூடி, ஏறத்தாழ 1½ மணிநேரம் பேசி, பேச்சு முறிந்துவிட்டது என்று பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்தார்கள். மறுநாள், எனக்கு அது கிடைத்தது. நாங்கள் அமைச்சரவையிலே வைத்து, முடிவை எவ்வளவு துரித மாக, விரைவாக தெரிவிக்க முடியுமோ அவ்வளவு விரைவாகத் தெரிவிக்கின்றோம் என்ற உறுதியை நாங்கள் அளித்த பிறகு, அதைக் கேட்டுக்கொண்டு சென்ற சிவ. இளங்கோ போன்ற நண்பர் கள், பேச்சு முறிந்து விட்டது என்று எந்த அடிப்படையில் கருத்தை வெளியிட்டார்கள் என்பதை இன்னும் என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை.

அதைப் போலவே, கீழே காத்துக்கொண்டிருந்த பரத அவர்களை நான் கேட்டுக்கொண்டேன். தவறாக நினைக் வேண்டாம். வியட்நாமியக் கலைக் குழு நிகழ்ச்சி ஒன்றில் நா



[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

8 மார்ச்சு 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

...க்கும் பொறுப்பின் காரணமாக பங்கேற்க வேண்டியுள்ள ...ன்றும், ஆகவே, நாளை சந்திக்கிறேனென்றும் தெரிவித் ...ன்.

(முற்பகல் 11.40)

மறுநாள் அவர்கள் வந்து சந்தித்தார்கள். அவர்களும் ...றத்தாழ இதைப்போல சில கோரிக்கைகளை வைத்தார்கள். ...வர்களுக்கும் நாங்கள் சிவ. இளங்கோவிற்கு எப்படி பதில் ...சான்னோமோ அதை மாற்றாமல், அலட்சியப்படுத்தாமல் வெவ் ...வறு வகையில், வெவ்வேறு கருத்தை வைத்து நாங்கள் ...வனித்தோம் என்ற நிலை இல்லாமல், ஒரே சம நிலையில் ...வர்களையும் வைத்து அவர்களுடைய கேள்விகளுக்கும் பதில் ...ந்து, எவ்வளவு விரைவில் நாங்கள் முடிவு தரமுடியுமோ, ...ங்கள் எண்ணத்தை வெளியிடமுடியுமோ, அவ்வளவு விரைவில், ...அமைச்சரவையைக் கூட்டி அதை வெளியிடுகிறோம் என்று ...சான்னோம். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு சென்றார்கள். ஆனால் அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவில்லை.

ஆனால் மறுநாள் பேச்சு வார்த்தை முறிந்துவிட்டது என்று ...சொன்ன பிறகு, சட்டசபையை நோக்கி ஊர்வலம் வருவது என்கிற நிலைமையை உருவாக்கத் தயாராகி விட்டார்கள் என்பதை நாம் அறிந்தோம்.

...கடமையை ஆற்றுவதற்காக தடை ...துறையினர் ...விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை மீறி அவர்கள் ஊர்வலம் நடத்த முன்வந்த போது, அவர்களிலே குறிப்பிட்டவர்களைக் ...கைது செய்து அழைத்துச் சென்று, உடனடியாக விடுதலை செய்து அனுப்பி விட்டார்கள் என்பதையும், மற்ற யாரையும் எந்தத் துன்பத்திற்கும் ஆளாக்காமல் திருப்பி அனுப்பினார்கள் என்பதையும் இங்கே குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

இங்கே விவாதித்தவர்கள் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அரசு ஏன் மறுத்துவிட்டது, அரசு ஏன் பதில் சொல்லக்கூடாது என்று கேட்டார்கள். அரசு பதில் சொல் வதற்கு எங்களுக்கு நாட்கள் தேவை என்று சொன்னதை யாராவது கேட்டுக்கொண்டார்களா, ஏற்றுக்கொண்டார்களா,

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச்சு 6

ஏன் அவர்கள் அதை மறுத்து உண்மைக்கு மாருக, பேச்சு வார்த்தை முறிந்துவிட்டது என்று நண்பர் சிவ. இளங்கோ எப்படி வெளியிட்டார்கள் என்பதை தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களைக் கேட்க வேண்டும் என்று இப்போது கூட நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே இருக்கிற அனைத்துக்கட்சித் தலைவர்களும் எதிர்க் கட்சித் தலைவர்களும் நேற்றைக்கு முன்தினம் இந்த விவரத்தை சொன்னபோது நான் சொன்னேன், இங்கே எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கலைஞர் அவர்கள், சிவ. இளங்கோ, அவரைப் பார்க்கவந்தபோது, யாரைக் கேட்டுக்கொண்டு இந்தப் போராட்டத்தைத் துவக்கினீர்கள் என்று கடிந்து கொண்டார்கள் என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பொதுக்கூட்டத்திலே போய் பேசியதையும் கண்டித்தார் என்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டசபைக் கட்சியின் சார்பாக இங்கே வந்து கலந்து கொண்ட மாண்புமிகு உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள் அந்தக் கூட்டத்தில் வெளிப்படுத்தியதையும் இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப்பட்ட நிலைமை இருந்தது.

அதே சமயத்தில் மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா அவர்களை நான் கேட்டேன், நீங்கள் இதற்கு என்ன பதில் சொல்கிறீர்கள் என்று. ஒரு பகுதியினர் நான் சொன்ன வார்த்தையை நம்பி, எவ்வளவு விரைவில் நாங்கள் அமைச்சரவையைக் கூட்டி கருத்தைச் சொல்ல இருக்கிறேமோ அதைத் தெரிந்து கொள்ள அவர்கள் காத்திருக்கிறார்கள். அதே சமயத்தில் சிவ. இளங்கோ அவர்கள் மட்டும் பேச்சுவார்த்தை முறிந்து விட்டது என்று சொல்லி, போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். எங்களுக்கு அவகாசம் தரவேண்டும், அல்லது நாங்கள் அலட்சியபடுத்தியதை உறுதிப்படுத்தக்கூடிய ஆதாரம் அவர்களிடம் இருந்து ஆக வேண்டும். இது இரண்டும் அவர்கள் சொல்லவில்லை.

அதுமட்டுமல்ல. அவர்கள் மரியாதைக்குரிய தலைவர்களால் கண்டிக்கப்பட்டிருந்தும் அவர்கள் அந்த வேலை நிறுத்தத்தை தொடர்ந்திருக்கிறார்கள் என்பதை இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.



1978 மார்ச்சு 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அதைவிட தினமணியைப் படித்துக் காட்டிய மாண்புமிகு ஜேம்ஸ் அவர்கள் நேற்றைய முன்தினம் நடந்த கூட்டத்தில் ஒரு செய்தியை வெளியிட்டார்கள். சர்வ கட்சிக் கூட்டம் என்று சொல்லி என்னை ஏமாற்றி அழைத்துச் சென்று விட்டார்கள். போராட்டத்தை தொடங்கியது தவறு, நீங்கள் போராட்டத்திலே ஈடுபடக் கூடாது என்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள், நேற்றைய முன்தினம் நடந்த அனைத்துக் கட்சியினர் கூட்டத்தில் கருத்தை வெளியிட்டார் என்பதை இங்கே நான் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

தினமணியிலே வந்த செய்திக்கு நான் பின்னாலே பதில் சொல்கிறேன் என்றாலும், ஒன்றை நான் இப்போதும் கேட்க விரும்புகிறேன். பேச்சு வார்த்தை நடத்துவது, இதிலே நிதி பற்றிய பிரச்சினை இருக்கிறது. ஆயிரக்கணக்கான ரூபாயைச் செலவழித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், பட்ஜெட் இங்கே தாக்கல் செய்து ஒவ்வொரு பிரிவுக்கும் நிதி ஒதுக்கித் தர வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுடைய அனுமதியைக் கேட்கின்ற நேரத்தில், எங்களுக்கு இவ்வளவு இடைக்கால நிவாரணம், அதுவும் ஜூலை மாதம் 1 ஆம் தேதியிலிருந்து தரப் படவேண்டும் என்று கேட்கிற நிலை உருவாக்கப்படுமானால், இதற்காக எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்பட வேண்டும் என்பதையும், எதிலிருந்து எதை நீக்கி எதை ஒதுக்குவது என்பது பற்றியும், திட்டம் போடப்பட்டிருக்கிற எந்த செலவிலிருந்து குறைத்து அதைத் தீர்க்க மாற்றி அமைப்பது என்பதையும் பற்றியும், சிந்திக்க வேண்டியிருக்கிறது என்கிற மிகப் பெரிய தேவையும், கடமையும், பொறுப்பும் இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை.

அப்படிப்பட்ட நிலையில் அவர்களிடம் யாரோ பேச மறுத்ததைப் போலவும், அரசு விரும்பாததைப் போலவும் வேண்டுமென்றே அவர்களை அலட்சியப்படுத்துவது போலவும் ஒரு பேச்சை, கருத்தை, ஒரு நிலைமையை நாட்டில் உருவாக்குவது எப்படி நாகரீகமான அரசியலுக்கு ஒத்ததாக இருக்கும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 6

இன்றைன்றையும் வற்புறுத்திக் கூறுகிறேன். சி.பி.ஐ. சார்ந்த கூத்தக்குடி சண்முகம் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். நாங்கள் அனைவரும் அந்த வேலை நிறுத்தத்தையும் அந்த மறியலையும், போராட்டத்தையும் ஆதரிக்கத் தயாராக இல்லை, அவர்கள் செய்வது தவறு என்று சொன்னார்கள்.

நான் திரும்பக் கேட்டேன், பத்திரிக்கை நிருபர்கள் வெளியில் இருக்கிறார்கள், கேட்டால் சொல்வீர்களா என்று கேட்டேன், நிச்சயமாக சொல்வேன் என்றார்கள். திரு. சங்கரய்யா அவர் களும் சொன்னார்கள். எங்கள் நண்பர்களைக் கேட்டுக்கொண்டு கருத்து தெரிவிக்கிறேன் என்று, ஆனால் எங்கள் வார்த்தையை மீறி அவர்கள் நடக்கிறார்கள், நாங்கள் சொன்னதை அவர்கள் கேட்கவில்லை என்று அவர்கள் சொன்னதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். ஜேம்ஸ் அவர்களும் அதையேதான் சொன்னார்கள்.

இப்படிப்பட்ட நிலைமையில், அங்கே அனைத்துக் கட்சித் தலைவர்களும் கருத்து வெளியிட்டுவிட்ட பிறகு, இந்த அரசின் நோக்கத்தைதப்பற்றி நீங்கள் நன்றாக உணர்ந்து கொண்டாக வேண்டும். நாங்கள் எடுத்த செயல்முறையை முடித்து விடவில்லை, இதுதான் எங்கள் முடிவு என்று நாங்கள் தெரிவித்து விடவில்லை. இதைவிட எங்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று கூறிவிடவில்லை, அல்லது இதுதான் செய்ய முடியும் என்று நான் சொல்லிவிடவில்லை. நாங்கள் பரிசீலித்துக்கொண்டு இருக்கிறோம் என்றும், நிதித்துறைச் செயலாளர் இரண்டு நாட்களில் வெளிநாடுகள் செல்ல இருக்கிறார் என்றும், அதற்குள் நாங்கள் அவர்களிடமிருந்து அதற்கான வழிமுறைகள் தெரிந்து, அதை அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து விவாதித்து, இந்தச் சட்டமன்றத்தில் அதை நாங்கள் உங்களிடத்தில் சொல்லி, அதற்குப் பிறகு வெளியிடுகிறோம் என்று சொல்லி இருக்கிறோம்.

இப்படி நிலைமைகள் இருக்கிறபோது, ஒரு பகுதியினர் மறியல் செய்வது என்றபோது, அதுபற்றி நான் குறிப்பிட்டுச் சொன்னேன், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு கலந்துகொள்ள நான் அந்தப் பக்கம் வந்துகொண்டு இருந்தேன்



[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

978 மார்ச் 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

...என்னை அவமானப்படுத்த ...ன் மனம் புண்படும்படியாகவோ, என்னை அவமானப்படுத்த வார்த்தைகளை உபயோகிக்கவில்லை. ...வேண்டும் என்றோ அவர்கள் வார்த்தைகளை உபயோகிக்கவில்லை. முறை தவறி அவர்கள் ஒரு சொல்கூட அப்படிச் சொல்லவில்லை நின்று அவர்கள் நடக்கவில்லை. அப்படிப்பட்டவர்கள் அங்கே இருந்தார்கள். நான் அது பிரச்சினையை முறையிட்டுக்கொண்டு இருந்தார்கள். நான் அது குறித்து பேச விரும்பவில்லை.

ஆனால் அதே சமயத்தில் சிவ. இளங்கோ அவர்கள் மருத்துவ மனைக்குச் சென்று, சமையல் செய்து கொண்டிருந்தவர்களை வெளியே வா என்று அழைத்துக்கொண்டு வந்து இருக்கிறார்கள். அங்கே சுத்தம் செய்யும் தொழிலாளர் தோழர்களை வெளியே அழைத்துக்கொண்டு வந்து இருக்கிறார்கள். நோயாளிகள் காப்பாற்றப்பட வேண்டும் என்று அங்கே அனுமதிக்கப்பட்டு இருக்கும் நேரத்தில், உயிருக்கு ஆபத்து உண்டாக்கும் நடவடிக் கையில் அவர்கள் ஈடுபடுகிறபோது அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க முடியுமா என்று கேட்டேன். அரசு அதை தடை செய்ய வேண்டி வரும். அவர்களைத் தடை செய்ய வேண்டி வரும் என்பதைச் சொல்லி, அதற்கு ஏற்ப நீங்கள் ஏதாவது வழி சொல்லுங்கள் என்று சொன்னபோது, சங்கரய்யா போன்றவர்கள் சொன்னார்கள். நாங்கள் மீண்டும் அவர்களோடு பேசுகிறோம். நிலைமையை எடுத்துச் சொல்கிறோம் என்றார்கள். மதிப்பிற்குரிய மாண்புமிகு புலவர் கோவிந்தன் சொன்னார்கள், நாங்கள் பேசு கிறோம், நாங்கள் எல்லாம் பேசிப் பார்க்கிறோம். பேசியபிறகு அவர்கள் மாற்றம் அடைகிறார்களா என்று பார்ப்போம். எங்கள் தலைவர்கூட கண்டித்து இருக்கிறார் என்றெல்லாம் சொன்னார்கள்.

அதற்குப் பிறகு, நான் வருத்தத்தோடு சொல்கிறேன், நிலைமைகள் ஆங்காங்கு மாறுபடுகிற அளவிற்கு சில பத்திரிக்கை யில் செய்திகள் வந்தன. சி.பி.ஐ. அவர்களுக்கு ஆதரவு தரப்போகிறார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அதற்கு ஆதரவு தருகிறார் என்றும், இப்படி சிலர் சிவ. இளங்கோ போராட்டத் திற்கு ஆதரவு தருவதாக செய்தி வந்து இருக்கிறது. அப்படி செய்திகள் வருகிறபோது எங்களைப் போன்ற பொறுப்பில் இருக்கின்றவர்கள் போலீசை அனுப்பி அவர்களை தடை செய்வது என்பதைவிட மக்கள் எங்களுக்கு எந்த அளவிற்கு

ஒத்துழைப்புத் தருகிறார்கள் என்று நாங்கள் தெரிந்து
கொள்வதற்கு, அந்த மக்களுக்காக இந்த அரசு எந்தத்
திட்டங்களை வகுத்துக்கொண்டு இருக்கிறது என்பதையும், எந்த
எண்ணத்தையும் மக்களிடம் சொல்லி வாக்குகளை பெற்று
நாங்கள் ஆட்சிக்கு வந்து இருக்கிறோமோ, அந்த எண்ணத்
திற்குச் சாதகமாக மற்றவர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும்
என்று கேட்டுக்கொள்வதும் எனது கடமை என்ற நிலையிலே
நான் சொல்லும்போது சொன்னேன்.

அவர்கள் மறியல் செய்யப்போவதாகச் சொல்கிறார்கள்.

(முற்பகல் 11.50)

அப்படிப்பட்ட நிலைமையெல்லாம் இந்த ஆட்சியிலே இருக்கு
மானால், நான் சொன்னேன், "போலீசைப் பயன்படுத்தப்
போவதில்லை; மக்களிடம் உண்மையைச் சொல்லி, நானும் அங்கே
கலந்து, மக்களுடன் சேர்ந்து, நீங்கள் இப்படிச் செய்வது
கூடாது; இது சரியல்ல; நாங்கள் எந்த ஏழை மக்களுக்காக—
இந்தச் சம்பள உயர்வு கொடுப்பதன் மூலம் எந்த ஏழை மக்களுக்
காக நல்ல திட்டங்களை தீட்ட நிதி ஒதுக்கியிருக்கிறோமோ, அந்த
ஏழை மக்களைச் சந்தித்து, நிலைமையை எடுத்துச் சொல்லி,
சமாளிப்போமே தவிர, போலீசை பயன்படுத்த
மாட்டேன்" என்று சொல்வதை பத்திரிகைகளில்
காணலாம். ஏப்ரல் 1-ந்தேதி முதல் சம்பள உயர்வு கிடைக்கும்
என்று சொன்னது ஜூலை 1-ந்தேதி கொடுப்போம் என்று
திருத்தி போட்டிருக்கிறார்கள். இதைப்போன்ற செய்திகளை
மட்டும் மனதிலே வைத்துக்கொண்டு இந்த ஒத்திவைப்புத்
தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பதை என்னால்
புரிந்துகொள்ள முடிகிறது.

நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். இன்று மட்டுமல்ல.
தேர்தலுக்கு முன்பும் கூறியிருக்கிறேன். நாங்கள் ஆட்சிக்கு
வந்தால் எங்களைத் தொல்லைக்கு ஆளாக்கினால், எங்களுக்கு
நெருக்கடியை ஏற்படுத்தினால் நாங்கள் மக்கள் முன்னால்
வருவோம்; இது மக்கள் கட்சி என்று சொன்னேன். அந்த
எண்ணத்திலே வார்த்தை மாறியிருக்கலாமே தவிர எண்ணம்
அதேதான்; பேராசிரியர் அன்று அவர்கள் தெரிவித்த அதே
எண்ணம்தான் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.
அண்ணா அவர்கள் ஒருமுறை சொன்னார்கள். என்னைப்பற்றி





எனக்குக் கவலையில்லை. இப்படிப்பட்ட சோதனைகள் வரும்
போது மக்களைச் சந்திப்பேன்; மக்களிடம் சொல்வேன் என்று
சொன்னார்கள். அதைத்தான் நானும் சொல்கிறேன். ஏழை
எளிய மக்களுடைய நிலைமைகளை வாய்ப்பும் வசதியும்
உள்ளவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

நேற்றைதினம் பேசும்போது ஒன்றைச் சொன்னேன்.
முன்னால் இருந்த மக்களிடம் சொன்னேன். முன்னாலே
இருந்தவர்கள் நாற்காலிகளில் அமர்ந்திருந்தார்கள். அவர்களைப்
பார்த்துச் சொன்னேன். நீங்கள் நாற்காலிகளிலே, முன்னால்
வந்து அமர்ந்திருக்கிறீர்கள்; உங்களுக்குப் பின்னாலே அவ்வளவு
பேர் நின்றுகொண்டிருக்கிறார்களே, அவர்களுக்கு ஒரு
பெஞ்சாவது போட வேண்டாமா? இல்லை என்றால் பாயாவது
விரித்துப்போட வேண்டாமா அதைப்பற்றி சிறிதும் கவலைப்
படாமல் "சோபா போட வேண்டும், திண்டுகளைப் போட
வேண்டும்" என்று நீங்கள் கேட்டால் அது எப்படி நியாயமாக
இருக்கும் என்று ஒரு உதாரணத்திற்காக அங்கே எனக்கு
முன்னால் இருந்த மக்களை வைத்துப் பேசினேன். அதைத்தான்
இன்றும் சொல்கிறேன்.

நாற்பது 40 ரூபாய் சம்பளம் வாங்க முடியாத ஏழை எளிய
மக்களுக்கு திட்டம் தீட்ட வேண்டுமென்று சொல்லுகிறபோது,
ஓரளவுக்கு சம்பளம் பெற்றுக்கொண்டிருக்கும்போது ஓரளவுக்கு
வாய்ப்பு வசதியோடு இருக்கும்போது அவர்களைப்பற்றி கவலை
யில்லை; எங்களைக் கவனியுங்கள் என்று மேலும் மேலும்
வற்புறுத்தினால், அதுவும் எதிர்க்கட்சித் தலைவர்கள் இப்படிப்
பட்ட பிரச்சினைகளையும் நீங்கள் கவனிக்க வேண்டுமென்று
சொல்லும்போது அவர்களை மதித்து, நீங்கள் எல்லோரும்
உங்களைச் சேர்ந்தது இந்த ஆட்சி என்று கருத்தில் வைத்திருப்
பதனால் வேலை நிறுத்தம் வேண்டாம்; எங்கள் முடிவை விரைவில்
எடுப்போம். இப்போதும் சொல்கிறேன்; பேச்சுவார்த்தைக்கு
இப்போது இடமில்லை. பேச்சு நடந்து ஒரு எல்லைக்கு
போய்க்கொண்டிருக்கிறது. முடிவு எடுக்க வேண்டிய
பொறுப்பு எங்கள் கையிலே இருக்கிறது. அதற்கு அமைச்
சரவையைக் கூட்டி, நிதித் துறைச் செயலாளரைக் கலந்து,

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச்சு 6

என்னென்ன செய்வது என்பதை அறிவிக்க வேண்டும். அந்தப் பொறுப்பு எங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதற்கிடையில் போராட்டம் எதற்காக?

மீண்டும் சொல்கிறேன். நாங்கள் அலட்சியப்படுத்தியிருக்க வேண்டும்; பேச மறுத்திருக்க வேண்டும்; அல்லது அதைப் பற்றி விவாதிக்க நாங்கள் தயாராக இல்லை என்று சொல்லியிருக்க வேண்டும்; அல்லது நியாயமான முடிவை எடுப்பதற்கு என்னென்ன முயற்சி எடுக்க வேண்டுமோ அதை எடுக்காமல் இருக்க வேண்டும்; இவை எதுவுமே இல்லை. அப்படி இருக்கும் போது நாங்கள் கூறியதையும் ஏற்றுக்கொள்ளாமல், எதிர்க் கட்சி தலைவர்கள் பேச்சுக்கும் மரியாதைக் கொடுக்காமல், கடமையைச் செய்யமாட்டோம் என்று சொல்லி, போராட்டத்தில் இறங்குவது சரியா?

அதுவும் எல்லோரும் போராட்டத்தில் இறங்கவில்லை. ஒரு சாரார் மட்டும், திரு. சிவ. இளங்கோவும் அவரைச் சேர்ந்த மற்றவர்களும் மட்டுமே இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபடு கிறார்கள் என்பதை—என் இவர்கள் இந்த ஒரு சாரார் மட்டும் மறியல் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அந்த நேரத்திலே நான் என்ன செய்யவேண்டும்? அத்தனை என். ஜி. ஓ. க்களையும் குற்றவாளிகள் என்று சொல்லமுடியாது. ஒரு பகுதியினர் வேலை செய்ய மறுக்கவில்லை. கடமையைச் செய்கிறார்கள். ஒரு பிரிவினர் நாங்கள் மறியல் செய்வோம், நாங்கள் வேலைநிறுத்தம் செய்வோம் என்று சொல்கிறார்கள். அப்படியானல் எங்களுடைய நிலை என்ன? யாரைக் கைது செய்வது, யாரை வேண்டாமென்று மறுப்பது? யார் மேல் நாங்கள் பழி சுமத்துவது? அந்தப் பொறுப்பிலிருக்கிற அத்தனை ஊழியர்களும் எங்களுக்கு எதிராக இருக்கிறார்கள் என்று சொல்வதற்கு இப்போது வழி இல்லை. அவர்கள் அத்தனை பேர்களும் எங்களுக்கு எதிராக இந்த அரசுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்திவிட்டார்கள் என்று சொல்வதற்கு இப்போது காரணம் இல்லை, ஆதாரம் இல்லை.



1978 மார்ச்சு 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அந்நிலையில் நான் அத்தனை பேர்களையும் சந்திக்க முடியாது, அத்தனை பேர்களின் ஒருமித்த கருத்தைப் பெறவும் முடியாது. நாங்கள் எண்ணுவது நம்புவது ஒரு சாரார் ஒத்துழைக் கிறார்கள், எங்கள் வார்த்தையை நம்பி காத்திருக்கிறார்கள். ஒருசாரார் பேச்சு முறிந்துவிட்டது என்று பொய் சொல்லி [illegible] அந்த வார்த்தையை இங்கே [illegible]ச்சரித்தே [illegible] அவர்கள் [illegible]மைக்குப் புறம்பாக என்று சொல்லலாம் [illegible] நான் சொல்லித் [illegible] பொய் சொன்னார்கள் என்ற வார்த்தையை [illegible] தீரவேண்டியிருக்கிறது.

திரு. துரை முருகன் : பாயின்ட் ஆப் ஆர்டர். மன்னிக்க [illegible] வார்த்தையை [illegible] நம் [illegible] வேண்டும். முதலமைச்சர் அவர்கள் நான் அந்த [illegible] என்று சொல்வ[illegible] உச்சரித்தே தீர வேண்டும் என்று [illegible] உச்சரித்தே தீருவேன் என்று [illegible] ஒவ்வாத வார்த்தையை [illegible] சொல்வது நியாயம் அல்ல. அப்படியானல் அமைச்சர் அவர்கள் [illegible] மற்றவர்களும் அப்படிச் சொல்ல முன்வருவார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : இங்கிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் பொய் சொன்னார்கள் என்று சொல்வதுதான் தவறு. என்னிடம் பேசிவிட்டு, இங்கே எங்களிடம் ஒரு செய்தியைச் சொல்லிவிட்டு அதற்குப்பிறகு பத்திரிக்கைகளுக்கு பேச்சு முறிந்துவிட்டது என்று சொல்வது உண்மைக்கு மாறுபட்டதாகும் என்று சொல்லியேயாக வேண்டும். இங்குள்ள மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் சொல்வதை பொய் என்று சொன்னால் அது தவறு, அதை நான் சொல்லக் கூடாது. யாரும் உபயோகிக்கக்கூடாதுதான். ஆனால் பொறுப்பில் உள்ளவர்கள் என்ற நிலையிலிருந்து தங்களை தாங்களே இறக்கிக்கொண்டு தந்த மரியாதையை அவர்கள் தூக்கியெறிந்துவிட்டு, நாங்கள் கொடுத்த மரியாதையை, அவர்களுக்கு காபி முதற்கொண்டு கொடுத்தோமே அதையெல்லாம் சாப்பிட்டுவிட்டு, எங்களைக் கவனிக்கவே இல்லை, எங்களை அலட்சியப்படுத்தி விட்டார்கள், உட்காரக்கூட அனுமதிக்கவில்லை என்று வெளியே போய் சொன்னால், மக்கள் மத்தியில் பேசுவது என்று சொன்னால் எங்களைப் போன்றவர்கள் அரசு பலத்தை, அரசு அதிகாரத்தை வைத்துக்கொண்டு

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச்சு 6

சந்திப்பதா அல்லது அவர்களுடைய பாணியில் அவர்கள் எப்படி மக்களைச் சந்திக்கிறார்களோ அதற்கு மாறாக எங்களுடைய பாணியில்—நாங்களும் அரசியல் கட்சிதான்—எங்கள் கட்சித் தோழர்களையும் நண்பர்களையும் வைத்துக்கொண்டு, நாங்கள் எந்த ஏழை மக்களுக்காக திட்டம் தீட்டவேண்டுமென்று விரும்புகிறோமோ அவர்களிடம் போய் உண்மையை எடுத்துச் சொல்லி நீங்கள் எங்களுக்கு சாதகமாக இருங்கள். உங்களது எண்ணத்தை நீங்கள் அவர்களிடம் வலியுறுத்தி வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறும்படிச் செய்யுங்கள் என்று கேட்பேன் என்று சொல்வது பலாத்காரத்தைத் தூண்டிவிடுவதாகாது.

ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். சைக்கிள் செயினுக்குச் சொந்தக்காரர்கள் நிச்சயமாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்தவர்கள் அல்ல என்பதை தயவு செய்து எல்லோரும் நம்ப வேண்டும். அதற்கு யார் சொந்தக்காரர்களோ அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமே தவிர அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சைக்கிள் செயினை உருவாக்கியவர்கள் அல்ல.

**திரு. மு. கருணாநிதி:** திண்டுக்கல் தேர்தல் நடைபெற்றபோது இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற காதர் ஷா அவர்கள் அந்தேர்தலின்போது சைக்கிள் செயினால் அடிப்பட்டு மருத்துவ மனையில் இருந்தார்கள். அவரைச் சென்று நானும் மதுரை முத்து அவர்களும் பார்த்தோம். அவர்கள் முதுகு புலிக்கோடுபோல் சைக்கிள் செயினால் அடிப்பட்டிருந்தது. இப்போது அவர் அ.தி.மு.க.வில் இருக்கிறார், அப்போது தி.மு.க.வில் இருந்தார்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் எந்தக் கட்சியையும் குறிப்பிடாதிருக்கும்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு என் இவ்வளவு அக்கறை வந்திருக்கிறது என்று புரியவில்லை. நான் பொதுவாகச் சொன்னேன். எங்களுக்குச் சொந்தமானதல்ல என்றுதான் சொன்னேனே தவிர எந்தக் கட்சிக்கு சொந்தம் என்று நான் இங்கே குறிப்பிடவில்லை.



1978 மார்ச்சு 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இங்கு மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இருக்கிறார். இம்மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவரது முதுகைப் பார்த்தால் சட்டையை அவிழ்த்துப் பார்த்தால் தெரியும் சைக்கிள் செயின் அடையாளம். காதர் ஷா பற்றிச் சொன்னார்கள், இனிமேல்தான் சோதித்துப் பார்க்க வேண்டும்.

ஒன்று சொல்ல விரும்புகிறேன். பிரச்சினைகளைபற்றி பேச்சு வார்த்தை முறிந்துவிடவில்லை, நாங்கள் பேச்சு வார்த்தையில் இறங்கமாட்டோம் என்று ஒதுக்கிவிடவில்லை.

(நண்பகல் 12.00)

நாங்கள் சொன்னவைகளுக்கு மாறாக, பே. இளங்கோ ...வர்கள் அவசரப்பட்டு இப்படிப்பட்ட கருத்துக்களை சொல்லும் ...பாது, அதற்கு வேறுவகையில் கடுமையான நடவடிக்கைகளை ...ாங்கள் எடுப்போம் என்று நாங்கள் இதுவரை கூறவில்லை.

ஆனால் அவர்கள் மக்களிடம் சென்று தவறாக செய்திகளை ...சொல்லும்போது, அவர்கள் சொல்லுகின்ற கருத்துக்கள் தவறு என்றும், இதுதான் உண்மை என்றும், எங்களை நம்பி ஓட்டுப் போட்டு அனுப்பி வைத்திருக்கின்ற அந்த ஏழை மக்கள், அவர்களுடைய உடுக்க உடை இல்லாத நிலைமை, மேல் ஆடை இல்லாத நிலையில் உள்ள தாய்மார்கள் இவர்களை எல்லாம் நாம் பார்த்தாக வேண்டும் என்று முன்பே சொல்லியிருக்கிறேன், அப்படிப்பட்டவர்களை அழைத்துக்கொண்டு, எங்களைப் பாருங்கள், எங்களையும் உங்களைப்போல் வாழ வழி செய்யுங்கள், அதற்குரிய வாய்ப்பை தாருங்கள் என்று கேட்பதற்காக செல்வோம் என்று சொன்னதை, ஏதோ அகங்காரமாக சொன்னேன் என்று தவறாக உண்மைக்கு மாறாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதே தவிர, நான் ஏற்கனவே கூறியது மாதிரி அவர்களிடம் சென்று கேட்பதற்குத்தான் இப்படிப்பட்ட மக்களை அழைத்துச் சென்று சந்திப்பேன் என்று சொன்னேனே தவிர வேறு நிலைமை அல்ல என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. சுப்பு :** முதலமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கம்
கேட்டுக்கொள்வது நல்லது என்று கருதுகிறேன். அதாவது
தாய்மார்கள் மிகவும் வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள்
என்றும், மேல் ஆடைகூட இல்லாமல் எத்தனையோ தாய்மார்கள்
இருந்து கொண்டிருக்கிறார்கள் என்றும், இதற்கெல்லாம்
என்.ஜி.ஓ.க்கள் தான் காரணம் என்ற முறையில் சொன்னார்கள்.
அப்படியென்றால் இவர்களுக்கு சம்பளமே கொடுக்க வேண்டாம்
என்று முடிவு செய்துவிடுவோம் என்று வைத்துக்கொள்ளுங்கள்.
அப்படியென்றால்கூட நாட்டி லுள்ள வறுமையை அறவே ஒழித்து
விட முடியுமா, அப்படி ஒழித்துவிட முடியும் என்பதை
முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதை
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு
உறுப்பினர் சுப்பு அவர்கள் மிக அழகாக திறமையாக வாதத்தை
எடுத்து வைக்கிறார்கள். அந்த நிலைமை இருக்குமானால்,
அவர்களுடைய கட்சி ஆட்சியில் இருந்த நேரத்தில் என்.ஜி.ஓ.க்
கள் வேலை நிறுத்தம் நடைபெற்றபோது. கைது செய்தவர்களை
விடுதலை செய்வதற்கு, தங்களுடைய வேலை நிறுத்தத்தை வாபஸ்
பெற்ற பின்னால்தான் விடுதலைப்பற்றி முடிவு செய்ய முடியும்
என்று கூறியதை எல்லாம் நான் குறிப்பிட்டு காண்பிக்க
முடியும். இப்படிப்பட்ட கேள்விகள் மூலமாக நம்முடைய
பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது. அந்த அளவுக்கு
இப்படிப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு
நான் இளிச்சவாயனும் அல்ல, புரியாதவனும் அல்ல. அமரர்
அண்ணா அவர்களுடைய கொள்கைகளை நிறைவேற்ற
முன் வந்திருக்கிற இந்த அரசுக்கு இடையூறுகள் இருக்கின்றன
என்று சொன்னால், அது இன்று மட்டுமல்ல, அன்றைக்கு அமரர்
அண்ணா அவர்கள் எந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு
முதலமைச்சராக வந்தாரோ—அப்போதே அந்த ஆறு மாதங்
களுக்குள் எவ்வளவோ தொல்லைகள் தரப்பட்டன என்பதை
நான் நன்றாக அறிந்தவன், என்பதை சுப்பு அவர்கள் நன்றாக
கவனத்தில் கொள்ள வேண்டும்.





எதிர்க்கட்சித்
அது மட்டுமல்ல, என் முன்னால் இருக்கின்ற முதலமைச்சராக
தலைவர் கருணாநிதி அவர்கள் அன்றைக்கு இருந்தன, எப்படிப்
வந்த நேரத்தில் எப்படிப்பட்ட தொல்லைகள் நான் நன்கு
பட்ட சங்கடங்கள் தரப்பட்டன என்பதையும் வேண்டும்.
அறிந்தவன் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்ள

உடுக்க துணி இல்லை என்று சொல்வது, மேல் ஆடை இல்லாமல்
வயது முதிர்ந்த தாய்மார்கள் இந்த நாட்டில் இல்லை என்று
மாண்புமிகு சுப்பு அவர்கள் கூற மாட்டார்கள் என்பதையும்
அதை அவர்கள் ஒத்துக்கொள்ள முடியாது என்று சொல்ல
மாட்டார்கள் என்பதும் நிச்சயமாகத் தெரியும். சம்பளம்
கொடுப்பதை எடுத்துக்கொண்டால், எத்தனை வேண்டுமானாலும்
சம்பளம் வாங்கட்டும், லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான
ரூபாய்களை சம்பளமாக வாங்கட்டும் எவ்வளவு புகழ் வேண்டு
மானாலும் பெற்றுக்கொள்ளட்டும், அதில் எங்களுக்கு பொறாமை
யில்லை.

யார்
எங்களுடைய நிலைமை, இருப்பதை எப்படி எப்படி,
யாருக்குப் பிரித்துக் கொடுப்பது, எப்படி பிரித்துக்கொண்டு
செயல்படுவது பிற்பட்ட நிலைமையில் இருக்கின்ற கிராமப்
புறங்களுக்கு எப்படியெல்லாம் நன்மைகளை செய்வது, கிராமங்
களுக்கு என்று இருக்கின்ற, அவைகளை எல்லாம் மேம்படுத்த
வேண்டும் என்று இருக்கின்ற பணத்திலிருந்து குறைத்துக்கொள்ள
முடியுமா—அப்படிப்பட்ட நிலைமை வரக்கூடாது என்றாலும்,
அப்படி வாராமல் பார்த்துக் கொள்ள முடியுமா என்பதை
யெல்லாம் சிந்தித்துப் பார்ப்பதற்கும், அவற்றைப்பற்றி
பரிசீலனை செய்வதற்கும் நிதித்துறை செயலாளரிடம் தொடர்பு
கொண்டு இருக்கிறோம் என்பதை எல்லாம் அனைத்து கட்சித்
தலைவர்கள் கூட்டத்தில் எடுத்து சொன்னோம்.

நடத்திக்
இப்போதும் அவர்களோடு பேச்சுவார்த்தை கோரிக்
கொண்டிருப்பது முறிந்துவிடவில்லை. அவர்களுடைய வரவில்லை.
கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற முடிவுக்கு சொல்லுகிற
இவ்வளவுதான் கொடுக்க முடியும் என்று நாங்கள் செய்துகொண்டி
அளவுக்கு இன்னும் வந்துவிடவில்லை. பரிசீலனை அரசின்
ருக்கிறோம். அதை அமைச்சரவையில் வைத்து இந்த

பண நெருக்கடி இந்த அளவுக்கு இருக்கிறது என்பதைப்பற்றி யெல்லாம் விவாதித்து, எந்த அளவுக்கு செய்ய முடியும் என்பதை முடிவு செய்து, விரைவில் இந்த சட்டமன்றத்தில் வெளியிட முடியும் என்பதைத் தெரிவித்து—நேற்றும் வேண்டு கோள் விடுத்தேன்.

நேற்று இரண்டு கருத்துக்களைச் சொன்னேன், வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக்கொண்டு, எங்களுடைய முடிவுகளை தெரிவிக்க—அதைத் தெரிந்து கொள்ள சில நாட்கள் பொறுத்துக்கொள்ளுங்கள்—என்று வேண்டுகோள் விடுத்தேன்.

அவர்கள் வீட்டில் இருக்கின்ற தாய்மார்களுக்கும் நான் வேண்டுகோள் விடுத்தேன். உங்களைப்போன்ற பெண்கள், தாய்மார்கள் கிராமப்புறங்களிலே இருக்கின்றார்கள் என்பதையும் தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். இப்போதுள்ள நிலைமையில் அவர்களுக்கும் உதவி செய்கின்ற முறையில், அரசின் நடவடிக் கைகளுக்கு உறுதுணையாக இருக்கின்ற அளவில், அரசிதழ் பதிவு பெறு அதிகாரிகள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று தயவு செய்து நீங்களும் கேட்டுக்கொள்கிற வகையில் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்ளுங்கள். இந்த வேண்டுகோள்கள், அப்படி நான் தெரிவித்த கருத்துக்கள் பத்திரிக்கைகளிலே வரவில்லை.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** வந்திருந்தால் மகிழ்ச்சி. நான் அவைகளைப் படிக்கவில்லை. இதையெல்லாம் நான் சொல்லும்போது, வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக் கொண்டு, கொஞ்ச நாள் பொறுத்துக்கொள்ளுங்கள் என்றேன். என் வேண்டுகோளை, அறிவிப்பை அவர்கள் கவனிக்கவில்லை என்றாலும், அதைப்பற்றிச் சொல்வதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏன் மனம் வரவில்லை என்பதுதான் எனக்குத் தெரியவில்லை.

இங்கே அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் பேசினார்கள். அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கை தவறு, நாங்கள் கேட்டோம். அவர்கள் ஒத்துழைக்கவில்லை, வேலை நிறுத்தம் செய்யாதீர்கள் என்று நாங்கள் சொல்லியும் அவர்கள் கேட்க



வில்லை, ஏற்றுக்கொள்ளவில்லை, மறியல் செய்தார்கள் என்று சொல்லியவர்கள் எல்லாம், நாங்கள் எவ்வளவு கேட்டுக் கொண்டும் அவர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள் என்று சொன்ன ஜேம்ஸ் அவர்கள், ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து, அதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று சொல்வது ஏன் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை; அந்தச் சூழ்நிலை ஏன் உருவாக்கப்பட்டது என்பதுதான் எனக்குத் தெரியவில்லை.

கடைசியாக நான் சொல்லிக் கொள்கிறேன். தமிழக அரசு, அரசிதழ் பதிவுபெறாத ஊழியர்கள் என்று அழைக்கப்படுகின்ற அதிகாரிகளை அலட்சியப்படுத்தவில்லை என்பதையும், அவர்களுக்கு எங்களால் என்ன செய்யமுடியுமோ, எதைச் செய்ய முடியுமோ எப்படிச் செய்ய முடியுமோ, அதை வெளியிடுவதிலேதான் மகிழ்ச்சியும், மன நிம்மதியும் தரும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக நான் சம்பந்தப்பட்ட துறைகளோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறேன் என்ப தையும், எவ்வளவு விரைவிலே இந்தச் செய்தியைச் சொல்ல முடியுமோ, அவ்வளவு விரைவிலே சொல்ல விரும்புகிறேன் என்ப தையும் நான் தெரிவித்துக்கொள்வதோடு, இந்தப் பேச்சுவார்த்தை முடிந்து விட்டது என்பதல்ல, அவர்கள் சொன்ன கோரிக்கைகள் என்னிடம் இருக்கின்றன, அது சம்பந்தமாக தொடர்பு வைத்திருக்கிறோம் என்பதைக் கூறிக் கொள்கிறேன். ஆகவே, இதற்காக ஒரு நெருக்கடி நிலை ஏற்படுத்தி, நெருக்கடி என்று சொல்லி, மற்ற அலுவல்களை தடைப்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பாயின்ட் ஆப் ஆர்டர், என்னைப்பற்றிச் சொல்லியிருப்பதால் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானத் திற்குப் பிறகு, நான் ஏற்கனவே சொல்லியிருப்பதுபோல் இதற்கு அனுமதி அளிக்க முடியாது. ஜேம்ஸ், தயவுசெய்து என்னுடன் ஒத்துழையுங்கள், மறுபடியும் பேச அனுமதிக்க மாட்டேன், தயவுசெய்து அமருங்கள்.

[1978 மார்ச் 6

**திரு. ஜே. ஜேம்ஸ்:** முதலமைச்சர் சொன்ன பதிலுக்கு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். என்.ஜி.ஓ.க்களைத் தூண்டுகிற. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தற்போது நீங்கள் பேசுவதற்கில்லை. அவர் சொன்னபோதே, பதில் சொல்லியிருக்க வேண்டும். சொல்லி முடித்தபிறகு, பேசக் கூடாது. அதற்கு நான் அனுமதிக்க மாட்டேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** விளக்கம் திருப்தியில்லாமையால், நாங்கள் வெளியேறுகிறோம்.

(ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

(மாண்புமிகு திரு. எம். ஜி. இராமசந்திரன் எழுந்திருந்தார்.)

**திரு. சோ. அழகர்சாமி:** நாங்களும் வெளிநடப்பு . . .

* * * * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல் அமைச்சர் அவர்கள் பேசுவதற்கு நின்று கொண்டிருக்கும்போது, நீங்களும் நின்று கொண்டிருந்தால் எப்படி? நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** ஜேம்ஸ் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லியிருப்பேன். 'மக்களை சந்திப்பேன்' என்று சொன்னதற்குக் காரணம், அரசிதழ் பதிவு பெருத ஊழியர்களில் ஒரு பகுதியினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவில்லை. ஒரு பகுதியினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருக்கிருர்கள். அந்த வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டவர்கள், இங்கே மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா போன்ற தலைவர்கள் கொடுத்த வாக்குறுதிக்கு அவர்கள் கட்டுப்படவில்லை. ஆகவே, அவர்கள் பொய்யான செய்தியை, தவருன செய்தியை மக்களுக்குச் சொல்லும்போது, நாங்களும் பத்திரிக்கையிலே அறிக்கை விடுவது என்பது மட்டும் எங்கள் வேலையில்லை. நாங்களும் ஒரு அரசியல் கட்சி என்கின்ற நிலைமையிலே மக்களிடம் சென்று உண்மைகளை

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1978 மார்ச் 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

எடுத்துச் சொல்ல வேண்டியது எங்களுடைய கடமை என்ற கருத்திலேதான் சொன்னேன், அதுதான் பொருள் என்பதை நான் தெளிவுபடுத்துகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, ஜேம்ஸ் அவர்கள் சொன்ன அதே காரணத்திற்காக நாங்களும் வெளி யேறுகிறோம் என்று சொல்ல ஆரம்பித்த நேரத்திலே, ஆளும் கட்சி பக்கத்திலேயிருந்து. * * என்ற குரல் வந்தது, அதைச் சட்டமன்றத்திலே நீங்கள் அனுமதிக்கின்றீர்களா? அது சரியா? இந்த சட்ட

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** மன்றத்தில் அப்படி எங்கள் தரப்பிலே பேசியிருந்தால், அதற்காக நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பில் **மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நடவடிக்கைக் அப்படி அந்த வார்த்தை ஏறியிருந்தால், அதை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, என்.ஜி.ஓ. கிளர்ச்சியை 'மக்களை வைத்துச் சந்திப்பேன்' என்ற பொருளில் சொன்னதாக முதல் அமைச்சர் அவர்கள் இன்றைக்கு விளக்கம் அளித்தாலும் நேற்று அவர்கள் பேசிய பேச்சை எப்படி ஜேம்ஸ் அவர்கள் கேட்டார்களோ, அதைப் போலவே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலரும் கேட்டிருக்கிருர்கள். அங்கு பேசும்போது, நான் வீதிக்கு வருவேன், மக்களை வைத்துச் சந்திப்பேன் என்ற வகையில் போலீஸ் துணை நாடாமலேயே அவர்கள் சந்திப்பதாகப் பேசி யிருக்கிருர்கள்.

[பிற்பகல் 12-10]

இப்போது விளக்கங்கள் மாருக இருந்தாலும் நேற்றுப் பேசிய பேச்சு பிரச்சினையைத் தீர்க்க உதவுவதாக இல்லை; மேலும் கிளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில்தான் உள்ளது என்ற வகையில் எங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கிற வகையில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தால் இதற்கு இசைவு மறுக்கப் படுகிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் சம்பந்தமாக ஒரு அறிவிப்பைச் செய்தார்கள். இந்த அறிவிப்பை எங்கள் தரப்பில் மேலும் வலியுறுத்தி மிக விரைவில் தீர்வு காண வேண்டு மென்று வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்லுகிறேன்—இந்த அரசு இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்க்க விரும்புகிறது; அந்த முறையில் கண்டிப்பாக அந்தக் கடமையைச் செய்யும் என்பதை நான் இங்கே மாண்புமிகு உறுப்பினர், எதிர்க் கட்சியைச் சார்ந்த தலைவர் மாரிமுத்து அவர்களுக்கு கூறிக் கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா :** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக, விரைவில் அரசாங்கம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு இருக்கின்ற அத்தனை பேர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்—அந்த வாக்குறுதியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சங்கரய்யா அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது மற்றவர்களுக்கும் பொருத்தமுடையது என்று கருதுகிறேன். நிச்சயமாக அரசு தன் கடமையைச் செய்யும், விரைவில் முடிவு காண விரும்புகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



**திரு. எம். ஏ. லத்தீப் :** இந்த மாதிரியான பிரச்சினையில் பரிகாரம் கொடுக்கும் வகையில் அரசு தீர்க்கும்போது நம்முடைய தமிழகத்தின் ஒட்டுமொத்தமான நன்மைகளை, மக்களின் நன்மைகளை உத்தேசித்து அதன் விளைவுகளுக்கேற்ப முடிவுகளை எடுக்க வேண்டுமென்றும், எல்லோருக்கும், நிவாரணம் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோர் கருத்தும் ஒன்று தான். ஒரு கட்சித் தலைவர் எழுந்து சொன்னால் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் சொல்ல வேண்டுமென்றில்லை. திரு. பெரியசாமி, நீங்களும் சொல்லுங்கள்.

**திரு. டி. பி. மு. பெரியசாமி:** தலைவர் அவர்களே. முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புக் கொடுக்கும்போது கிராமப் புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் எண்ணக் குமுறல்கள் எரிமலையாக வெடிப்பதாக அமைந்து விடாமல் அந்த எண்ணக் குமுறல்களை அடக்க ஏதுவாக அவர்களுடைய அறிவிப்பு அமைய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

### (7) அறிவிப்பு

**ஜெர்மன் டெமாக்ரடிக் ரிபப்ளிக்கைச் சார்ந்த பாராளுமன்றக்** குழு பேரவைக்கு வருகை தந்திருப்பது குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஜெர்மன் டெமாக்ரடிக் ரிபப்ளிக்கைச் சார்ந்த பாராளுமன்றக் குழு அந்நாட்டுப் பேரவைத் தலைவர் தலைமையில் வந்திருக்கிறார்கள். இப்போது அவர்கள் பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து பேரவையின் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்பேரவையின் சார்பாக நான் அவர்களை வரவேற்கிறேன். ஆரவாரம்.

I have to make an important announcement:

A Parliamentary Delegation from the German Democratic Republic, led by the Speaker, is now watching the Proceedings of this House from the Speaker's Gallery. On behalf of this House and myself I extend a warm welcome to them. (cheers)

[1978 மார்ச் 6

## (8) 1978-79-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

### (அ) கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும்

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,15,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 496—த. வேணுகோபால் இருக்கையில் இல்லை.

**திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு சலுகைகள் வழங்குவது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,15,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 506—திரு. பொ. விஜயராகவன்—இருக்கையில் இல்லை.

THIRU M. A. LATHEEF: Sir, to discuss about the need to start a Spinning Mill at Ambur or at Vaniambadi.

I move:—

"That a sum of Rs. 4,15,00,000 under Demand No. 26-Handloom and Textiles be reduced by Rs. 100."

### (ஆ) கோரிக்கை எண் 27—கதர்

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :



1978 மார்ச் 6] [திரு. கே. இராஜா முகமது]

"மானியக் கோரிக்கை எண் 27-கதர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,02,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்:** தலைவர் அவர்களே
பண்டிகைக் காலங்களில், கைத்தறித் துணிகளைக் கடனுக்கு
வழங்கி, பணத்தை வசூலிக்க சில உத்திரவாதங்கள் ஏற்பாடு
செய்வதுபோல் கதர் துணியை உற்பத்தி செய்கின்ற அனைத்து
நிறுவன துணிகளையும் பாகுபாடின்றி, கடன் விற்பனை செய்யவும்,
வசூலிக்கவும் அரசு ஏற்பாடு செய்யாததைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின்கீழ்
ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,02,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்:** தலைவர் அவர்களே, தற்
காலத்துக்கு ஏற்றவாறு மக்களைக் கவரும் வண்ணம் கதர்
துணிகள் உற்பத்தி செய்வது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண்: 27—கதர் என்ற தலைப்பின்
கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,02,51,000-இல் ரூ. 100 குறைக்க
வேண்டும்' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும்
வெட்டுத்தீர்மானங்களும் பேரவை முன் வைக்கப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பேரவைத் தலைவர்
அவர்களே, நம்முன் கதரையும், நெசவுத் தொழிலையும் பற்றிய
கொள்கை விளக்கக் குறிப்புகளும்* கதர் கிராமத் தொழில்
வாரியம் பற்றிய கொள்கை விளக்கங்களும் நிதிநிலை செயல்
பாடுகள் பற்றிய விளக்கங்களும்* மாண்புமிகு உறுப்பினர்
களுடைய மேலான பார்வைக்காக வைக்கப்படுகின்றன.

* 159–192 ம் பக்கங்களில் இணைப்புகள் II, III ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

[1978 மார்ச் 6

மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான ஆலோசனைகளை வழங்கியதற்குப் பிறகு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று கைத்தறி மானியத்தில் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கைத்தறித் தொழில் என்பது தமிழகத்தில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக மிகப் பெரும்பாலோர் ஈடுபட்டிருக்கிற ஒரு தொழில் ஆகும். இந்தத் தொழிலில் கிட்டத்தட்ட தமிழ்நாட்டில் 30 லட்சம் பேர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களுக்குச் சரியான பாதுகாப்பு இது வரையில் இந்த அரசால் ஏற்படுத்தப்படவில்லை.

நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பீடித் தொழிலாளர்களுக்காக 1966 ஆம் ஆண்டில் அப்போது இருந்த காங்கிரஸ் அரசாங்கம் ஒரு சட்டத்தைப் போட்டு, அந்தத் தொழிலாளர்களுக்கு என்ன என்ன நன்மைகளை ஏற்படுத்த வேண்டுமோ அவைகளைக் கிடைக்கச் செய்தது. அதுபோன்ற பாதுகாப்புச் சட்டத்தை கைத்தறி தொழிலாளர்களுக்கும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இம்மாதிரி ஒரு சட்டம் வருவதின் மூலமாக கைத்தறித் தொழிலாளர்களுக்கு உரிய அந்தஸ்து கிடைக்கச் செய்யும். அதன் மூலம் வேலைப் பாதுகாப்பு அவர்களுக்குக் கிடைக்கும். அது போன்று அவர்களுக்கு ஏற்படுத்துவதால் குற்றங்குறைகள் ஏற்பட்டால் அவர்கள் லேபர் கோர்ட்டுகளுக்குச் செல்கின்ற உரிமையை வழங்க முடியும். விடுமுறைகள் அவர்களுக்கு ஒழுங்காகக் கிடைக்கும். இ. எஸ். ஐ. போனஸ், பிராவிடண்ட் பண்ட் போன்ற வசதிகளும் அவர்களுக்குக் கிடைக்கும். ஆகவே 1966 ஆம் ஆண்டுச் சட்டத்தைப்போல இவர்களுக்கும் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் சில நன்மைகள் ஏற்படுகின்றன என்பதை மறுக்கமுடியாது. ஆனால் அதே நேரத்திலே இன்னும் அவர்களுக்கு ஏராளமான குறைகள் இருக்கின்றன. அவைகளையும் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1978 மார்ச் 6] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

கூட்டுறவுச் சங்கங்களுக்கு உற்பத்தி அடிப்படையில் மூன்றில்
ஒரு பங்கு என்று கடன் வழங்கப்படுகிறது, அதை இரண்டில் ஒரு
பங்காக உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அதுபோன்று நெசவு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரவேண்டிய
ரிபேட் தொகையை உடனடியாக பட்டுவாடா செய்வதற்கு ஆணை
யிடவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அந்த ரிபேட்
தொகையை அது அனுமதிக்கப்பட்ட 3 மாதங்களுக்குள் வழங்க
ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெசவு கூட்டுறவுச் சங்கங்களுக்கு என்று தனியே மாவட்ட
அளவில் ஒரு மத்திய கூட்டுறவு வங்கியை ஏற்படுத்த வேண்டும்.
இன்றுள்ள மாவட்ட மத்திய வங்கிக்கு இருக்கக்கூடிய அலுவல்
களில் கூட்டுறவு நெசவுப் பிரச்னையைக் கவனிப்பது ஒரு பெரிய
பிரச்னையாக இருக்கிறது. ஆகவே, தனியாக மாவட்ட அளவிலே
மத்திய கூட்டுறவு வங்கியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு குறைந்த விலையில் மூலப்பொருட்
களை அளிக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

கைத்தறி உற்பத்திக்குத் தேவையான சாய மருந்துகளுக்கு
விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்து, ஸ்டேபிள் ஃபைபர் செயற்கை பட்டிலிருந்து
தயாரிக்கப்படும் சேலை ரகங்களை விசைத்தறி உற்பத்தி செய்யக்
கூடாது என்று தடை கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். ஏற்கெனவே இந்தக் கோரிக்கை நாடு முழுவதும்
உள்ள கைத்தறியாளர்களிடம் ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்தி
யிருக்கிறது. நெசவு கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல்
செய்யும் தனியார்களிடமிருந்து கொள்முதல் செய்யும்போது ஒரு
மாதத்திற்குள் அந்தப் பணத்தைப் பட்டுவாடா செய்ய ஏற்பாடு
களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1978 மார்ச் 6

கோவை நெசவாளர்களில் ஒருவர் தீக்குளிக்கப் போவதாக அறிவித்தார். அவர்மீது வழக்கு போடப்பட்டது. அவர்கள் எதற்காகப் போராடினார்களோ அந்தப் போராட்டம் வெற்றி பெற்றாலும்கூட அவர்மீது போடப்பட்ட வழக்கு இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. இது மாதிரி நிலைமைகளை மாற்ற வேண்டும், அவர்கள்மீது உள்ள வழக்கை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீவிர வளர்ச்சித் திட்டம் என்று பலயிடங்களில் அறிவித்திருக்கிறார்கள். பரமக்குடியிலும் தீவிர வளர்ச்சித் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். 600-க்கும் மேற்பட்ட கைத்தறிகள் இயங்குகின்றன. கிட்டத்தட்ட அந்த ஊரின் ஜனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு, அதாவது 30,000-க்கும் மேற்பட்ட மக்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே பரமக்குடியில் தீவிர வளர்ச்சித் திட்டத்தை அல்லது ஏற்றுமதி மையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அருப்புகோட்டையில் ஒரு டிசைன் சென்டர் ஏற்படுத்த வேண்டும். எங்கள் தொகுதியான முதுகுளத்தூர் தாலுக்காவில் நூற்பாலை என்பதே கிடையாது. இந்த மாநிலத்தில் ஒரு தாலுக்காவில் நூற்பாலை இல்லாத தாலுக்கா என்றால் அது முதுக்குளத்தூராகத்தான் இருக்க வேண்டும். ஆகவே, முதுகுளத்தூரில் நூற்பாலையை கூட்டறவுத் துறையிலே ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கைகளை யெல்லாம் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் :** பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி, கதர் கிராமத் தொழில்கள் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திலே கலந்து கொள்கின்ற நல்ல வாய்ப்பினை எனக்கு அளித்தமைக்கு முதற்கண் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது நாட்டிலே, மிகப் பெரிய குடிசைத் தொழிலாக கருதப்படுவது கைத்தறி நெசவுத் தொழிலாகும். வேளாண்மைக்கு அடுத்தபடியாக இந்தத் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்க



1978 மார்ச் 6]

[திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்]

வேண்டுமென்பதை இந்த அரசு தன்னுடைய கடமையாகக் கருதி, இந்த அளவுக்கு இந்த மானியக் கோரிக்கையிலே பல நல்ல திட்டங்களை அளித்து, நெசவாளர், தொழிலாளர் பயன்பெறத் தக்க வகையிலே, இதைத் துரிதமாக்க, இந்தத் துறையினை விரிவு படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் கடந்த நேரங்களில்லாத வகையிலே, நமது புரட்சித் தலைவர் அரசு தனியாக ஒரு அமைச்சரை இந்த இலாகாவிற்கு ஒதுக்கி, நெசவாளர்களுக்கென்று செயல்பட்டு வருவதை நல்ல உள்ளம் படைத்தவர்கள் பாராட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை.

நாட்டின் மொத்த கைத்தறி உற்பத்தியிலே நாலில் ஒரு பங்கைத் தமிழ்நாடு உற்பத்தி செய்கிறது. அடுத்தவரும் ஆண்டுகளில், கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிரளிப்பதும், கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல் கிடைக்க வகை செய்வதும், புதுவகை வடிவமைப்புகளையும் பாலிஸ்டர் துணிகள் உட்பட புதுவகைத் தாரிகளை அறிமுகப் படுத்துவதும் கைத்தறி துணிகளின் விற்பனையைப் பெருமளவில் உயர்த்தும் பொருட்டு ‘கோ-ஆப்டெக்ஸ்’ விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கையை உயர்த்துவதும், தனியார் துறையைச் சேர்ந்த நெசவாளர்களின் பயனுக்காகத் திட்டங்களைத் தீட்டுவதும், நெசவாளர் வேலைப் பாதுகாப்பு, ஊதியம் முதலியவை தொடர்பாக அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சட்டங்கள் இயற்றுதல் முதலியவை பாராட்டுக்கு உட்பட்டதாகக் கருதப்பட வேண்டும்.

1978-79-வது ஆண்டில் 30,000 கூடுதல் கைத்தறிகளை, கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரத் திட்டமிடப் பட்டுள்ளது. சொந்தத் தறியில்லாத 2,000 நெசவாளர்களுக்காக 20 தொழிலியல் சங்கங்களை அமைக்க இந்த அரசு இந்த மானியக் கோரிக்கையிலே திட்டம் இட்டிருப்பது பாராட்டத்தக்க ஒன்றாக இருக்கிறது. இதிலே நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

பெருவாக, கிராமங்கள் கைத்தறி துணிகளை ஆதரிக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. கிராமப்புற மக்கள் சுலபமாக வாங்கி உடுத்தும் வண்ணம் கிராமத்திலே நடைபெறுகிற சந்தைகளிலே

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1978 மார்ச் 6

(பிற்பகல் 12-20)

மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்களில் தீபாவளி, பொங்கல் போன்ற விசேஷ காலங்களிலே மட்டும் கொள்முதல் செய்யும் நடைமுறையை மாற்றி ஆண்டு முழுவதும் சரக்குத் தேக்கம் இல்லாமல் அவ்வப்போது கொள்முதல் செய்ய ஆணையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கு இப்பொழுது 500 ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதையும் ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போதிய இட வசதியின்றி இன்று அவதியுறும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் அவல நிலையைப் போக்க அலுவலகம் மற்றும் கிட்டங்கி கட்ட குறைந்த வட்டியில் நீண்ட கால மானியம் வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை நடத்துபவர்கள் முழு நேர அலுவலர்களாக இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு ஏற்கனவே ஓரளவு கௌரவ ஊதியமாகக் கொடுத்து வந்தார்கள். இதை இடையிலே நிறுத்தி விட்டார்கள். மீண்டும் அதைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையிலே உள்ளவர்களுக்கு சில சலுகைகளைக் கொடுக்கிறார்கள். தனியார் துறையைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 30 இலட்சம் கைத்தறியாளர்கள் இருக்கும் நிலையில், 30,000 பேர் உள்ள இந்தக் கூட்டுறவுத் துறையிலே உள்ளவர்கள் பயன் அடைகிறார்கள். மற்றவர்கள் அத்தனை பேரும் தனியார் துறையிலே இருப்பவர்கள். அவர்கள் பல துன்பங்களுக்கும், துயரங்களுக்கும் ஆளாகிறார்கள். எனவே, அவர்களுக்கும் இந்த வசதிகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக, சாதாரண சேலைகளுக்குக் கூலி 2 ரூபாய் 25 காசுகள் கூட்டுறவுத் துறையிலே கொடுக்கிறார்கள். ஆனால் தனியார்கள் ஒன்றரை ரூபாய்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.



1978 மார்ச் 6] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

தனியார் கைத்தறித் தொழிலாளர்களுக்கும் இதுபோன்ற வசதிகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் தகராறுகள் ஏற்படுகின்றபொழுது கைத்தறித் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் தலையிடுவது ஒரு சிக்கலான பிரச்சினை. தொழிலாளர்களையும் அவர்கள் சமாளிக்க வேண்டும், அதே நேரத்தில் முதலாளிகளினுடைய பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க வேண்டும். இந்த நேரத்தில் தொழிலாளர் துறையும் அதிலே தலையிட்டு அந்தக் கைத்தறித் தொழிலாளர்களின் பிரச்னைகளில் நேரடியாகத் தலையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பலயிடங்களில் கைத்தறியாளர்கள்மீது வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. அருப்புக்கோட்டையில் கடந்த நான்கைந்து மாதங்களுக்கு முன்பு பெரிய போராட்டம் நடந்தது, கூலிக் குறைப்பு ஏற்பட்ட நேரத்தில் ஏற்பட்ட போராட்டத்தில் பல கைத்தறித் தொழிலாளர்கள் மீது வழக்குகள் போடப்பட்டன. பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றவர்களும் அங்கேயிருந்து அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தும்கூட வழக்குகள் வாபஸ் பெறப்படவில்லை. அவர்கள் இன்னும் அருப்புக்கோட்டையிலிருந்து 13 மைல் தொலைவில் உள்ள விருதுநகருக்கு பல ஏழை எளியவர்கள் கோர்ட்டுக்குச் செல்வதாகத் தகவல் வந்திருக்கிறது. எனவே, உடனடியாக அவர்கள்மீதுள்ள அத்தனை வழக்குகளையும் வாபஸ் பெற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கோவையிலேயும்கூட கடந்த அக்டோபர், நவம்பர் மாதங்களில் வேலை முறையை மாற்ற முதலாளிகள் முயற்சித்தார்கள். அதாவது சட்டத்திற்கு உட்படாத வகையில் கைத்தறி முதலாளிகள், கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களிடத்தில் நூலைக் கொடுத்து, அவர்களுடைய உற்பத்தியை வாங்குவதில், நூலை விற்பதைப் போலவும், அவர்களிடமிருந்து உற்பத்தி செய்யும் சேலை முதலியவற்றை விலைக்கு வாங்குவதைப்போலவும் பாவனை செய்த நேரத்தில் தொழிலாளர்கள் ஆவேசம் கொண்டு போராட்டம் நடத்தினார்கள். அந்த நேரத்தில் திருப்பூர்

[திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்] [1978 மார்ச் 6

முக்கியமாக கிராமங்களிலே நடைபெறுகிற திருவிழாக்கள் நேரங்களிலே, லார்திகளின் மூலம் கைத்தறி துணிகளை அந்தக் கிராம மக்களுக்கு எடுத்துச் சென்று விற்கக்கூடிய வகையில், அவர்கள் சுலபமாக வாங்கக்கூடிய அளவிலே, அதைச் செயலாக்க வேண்டும், அமுலாக்க வேண்டும், அதற்கான லார்திகளைப் பெருக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இலட்சக்கணக்கான மக்கள் ஈடுபட்டு இத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், புது விற்பனை நிலையங்களைத் திறக்குவதும், புதிய டிசைன்களைக் கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொள்வதும், பாலிஸ்டர் போன்ற ரகங்களை அறிமுகம் செய்வதும், அவற்றை மேலும் விரிவு செய்ய இந்த மானியக் கோரிக்கையில் வகை செய்திருப்பதும் ஆகியவற்றையெல்லாம், அரசியல் காழ்ப்புணர்ச்சியற்றவர்கள் நிச்சயமாகப் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள்.

கைத்தறி தொழில் மேலும் சிறப்படைய இந்த மானியக் கோரிக்கையிலே வழிவகை செய்யப்பட்டிருப்பது மிகச் சாலச் சிறந்ததாக வரவேற்கப்படும் என்பதில் ஐயம் இல்லை. என்னுடைய தொகுதியில் இருக்கிற சில குறைபாடுகளை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமையாகும் என்று நான் கருதுகிறேன்.

என்னுடைய தொகுதியிலே, ஏறத்தாழ 18 கிராமங்கள் அதிக அளவில் நெசவாளர்கள் வாழ்கிற பகுதியாகும். அதிலே, சாயம் தோய்க்கும் தொழிலிலும், டையிங் செய்யும் தொழிலிலும் சுமார் ஆயிரம் பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

குறிப்பாக அதிலே ஈடுபட்டிருக்கிற கமலா டையிங் மில்ஸ் என்ற ஒரு மில் இருக்கிறது. அங்கே வேலை செய்கிற தொழிலாளர்கள், 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் வேலை செய்தாலும், முதலாளிக்கு ஏற்பாயில்லை என்று கருதப்படுகிற காரணத்தாலே, அவர்கள் அந்த வேலையிலிருந்து நீக்கப்பட்டு, தெருவிலே நின்று வறுமையிலே வாடுகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சாயத் தொழிற்சாலையிலே



[திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்]

978 மார்ச் 6] [திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்] நிரந்தரக் கூலி அந்தத் தொழிலாளர்கள் ஊதியக் குறைவாலே, நிலையிலே ஒரு நாளைக்கு ரூ. 4, ரூ. 5 கூடப் பெற முடியாத தொழிலிலே அபாயகரமான, அருவருக்கத்தக்க அந்தத் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அரசு, ஒதேனும் வழிவகை காண நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்கள் அதிகமாக வாழ்கிற அந்த ஐயம்பேட்டையிலே 100 தறிகளை வைத்து, அந்த நெசவாளர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12-30]

ஜனதா துணி என்று சொல்லப்படுகிற மலிவு விலைத் துணித் திட்டம் ஏற்கனவே அமுல் படுத்தப்பட்டிருந்தாலும், இந்த அரசு அதை விரிவுபடுத்தி பல்வேறு திட்டங்களை அமுல் படுத்தியிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை]

இதற்கு மேலாக புயல் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட நெசவாளர்களுக்கு நிவாரணம் அளிக்க ஏறத்தாழ 22 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அவர்களுக்கு ஆதரவு தர முன்வந்திருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும். இதையெல்லாம் நிச்சயமாக மாற்றுக் கட்சியினர் மோடி மஸ்தான் வேலையாக கருத மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். மந்திரத்திலே மாங்காய் காய்க்கும் என்று சொல்லி, மக்களுடைய வரிப் பணத்தை ஏப்பம் விட்டது அன்றைய ஆட்சியாளர்களாக இருக்கலாம்.

ஆனால் இன்றைய அரசு, புரட்சித் தலைவர் தலைமையிலே இருக்கிற அரசு சொன்னதைச் செய்யும், செய்வதைச் சொல்லும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வீடுகளை இழந்த நெசவாளர்களுக்கு 500 ரூபாய் கொடுக்கிறார்கள். 200 ரூபாய் கடனாகவும், 300 ரூபாய் மானியமாகவும், தறிகளை இழந்தவர்களுக்கு ஏறத்தாழ 125 ரூபாய் மட்டும் வழங்க இந்த அரசால் ஆணைப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

[திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்] [1978 மார்ச் 6

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், நெசவாளர்கள் வீட்டு வசதித் திட்டம், 1962 ஆம் ஆண்டிலே துவக்கப்பட்டு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதை, இந்த அரசு தகுந்த முறையிலே மாற்றி, கிராம வீட்டு வசதித் திட்டத்தையும் இதனோடு இணைத்து, மாற்றி அமைக்கப்பட்ட திட்டத்தை 1978-79 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்போவது, புரட்சித் தலைவர் அவர்களின் நல்ல உள்ளத்தின் பிரதிபலிப்பு ஆகும். இதற்கு மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நெசவாளத் தொழிலாளர்கள், அவர்கள் செய்கிற தொழிலின் காரணமாக காசநோய்க்கு ஆளாகிறார்கள். அந்த நோயின் தன்மையை உணர்ந்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கிற வகையிலே, அவர்களைப் பரிசோதித்து அவர்கள் தக்க முறையிலே வாழ வேண்டும் முறையிலே இந்த அரசு வழி வகைகள் செய்து இருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

நெசவாளர் வாழ்கின்ற அந்தப் பகுதியிலே ஊர்திகளின் மூலமாகச் சென்று அவர்களுக்கு நன்மைகள் பல செய்திருப்பதை நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சுமார் 20 லட்சம் ரூபாய் இதற்கு நிதி ஒதுக்கி இருப்பதைக் கருத்திலே கொள்ள வேண்டும்.

நெசவாளர்களுக்கு ஏராளமான பணம் ஒதுக்க வேண்டும் என்று இந்த அரசு கருதினாலும், இருக்கிற நிதி நிலைமையை ஆதாரமாகக் கொண்டு, இந்த அளவுக்கு செயல்படுத்தி வந்திருப்பதை நல்லம் உள்ளம் படைத்தவர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

என்னுடைய அய்யம்பேட்டை தொகுதி நெசவாளர்கள் அதிகமாக வாழ்கிற பகுதியாகும். அண்ணா அவர்கள் வாழ்ந்த நேரத்திலே கால்கோள் செய்யப்பட்டு இன்னும் கட்டப்படாமல் இருக்கிற இந்த மருத்துவமனைக் கட்டடத்தை கட்டி முடித்து, காசநோய்ப் பிரிவையும் திறந்து, நெசவாளர்கள் அதிகமாக வாழ்கிற இந்தப் பகுதியில் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1978 மார்ச் 6] [திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்]

கதர் விற்பனை பெரும் அளவு ஊக்கப்படுத்தப் பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். பெரும்பான்மையான கதர் விற்பனையை ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக நாம் செய்ய வேண்டியிருக்கிறது. அந்தக் கடன்களை வசூலிப்பதற்கு அந்நகராட்சியில் உள்ள அலுவலர்களையே நாம் உபயோகிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்தக் கடன்களை வசூல் செய்வதற்கு தனியாக ஒரு அதிகாரியை அல்லது அலுவலரை நியமிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பனைவெல்லத் தொழில், மிக நம்முடைய தமிழ்நாட்டில் பனைவெல்லத் தொழில், மிக சிறப்பான தொழில். அதிலிருந்து தயாரிக்கப்படும் அத்தனை தொழில்களும் நமக்கு வருவாய் ஈட்டித்தருகின்ற தொழிலாக அமைந்துள்ளது.

இந்த 1978-79-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 2,30,000 பேருக்கு வேலை வாய்ப்பை இந்தத் துறை தருகிறது என்ற புள்ளி விவரத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, அந்த பனை ஓலைத் தொழிலில் அவர்கள் உற்பத்தி செய்கின்ற அந்த ஓலைப் போன்ற பொருள்கள் நமக்குச் சிறப்பாக பயன் பெறுகிற வகையில் இந்த அரசு சிறப்பான முறையைக் கொண்டு வந்து இருப்பதை நாம் அனைவரும் பாராட்டுகிறோம்.

அதே நேரத்தில் அச்சரப்பாக்கம் தொகுதி, இடைக்கழி நாடு பகுதியில் பனைமரம் ஏராளமாக இருப்பதால் அங்கே ஏதாவது ஒரு தொழிலை அமைத்து அதன் மூலமாக அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இத்தகைய ஒரு சிறந்த நிதிநிலை அறிக்கையை அளித்து, இத்தகைய ஒரு சிறப்பான மானியக் கோரிக்கையை வைத்து, இந்த கிராம மக்களுக்கு, நெசவாளர்களுக்கு, கைத்தறி நெசவாளர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் மானியக் கோரிக்கையாக இருக்கிறது என்று கூறி, கைத்தறி வளர்ச்சிக்கும், நெசவுத் தொழிலுக்கும் இந்த மானியக்

[திரு. பாக்கர் சு. சுப்பிரமணியம்] [1978 மார்ச் 6

கோரிக்கை ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கும் என்று கூறி, என் பாராட்டைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம், நன்றி.

* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மானியத்திலே மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையைத் தெளிவுபடுத்த நான் இங்கே விழைகிறேன்.

தமிழ் நாட்டில் துணி உற்பத்தியைப் பொறுத்தவரையில், 3 விதமான உற்பத்தி முறைகள் இருக்கின்றன. மில்லில் உற்பத்தி, விசைத்தறி உற்பத்தி, கைத்தறி உற்பத்தி என்று மூன்று நிலைகள் இருக்கின்றன. இதிலே கைத்தறியைப் பொறுத்தவரையில் மொத்தமாக 36 லட்சம் தறிகள் இந்தியாவில் இருக்கின்றன.

அவற்றில் 6 லட்சத்திற்கும் அதிகமான தறிகள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. சுமார் 35 இலட்சம் குடும்பங்கள் வேலை செய்கின்றனர். ஆகவே, இந்த கைத்தறி ஒரு மிகப் பெரிய தொழிலாக வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க உதவியாக உள்ள தொழிலாக இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, அந்தத் தொழிலைப் பாதுகாப்பதற்காக ஒரு சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

1966-ம் ஆண்டில் ஒவ்வொரு நபரும் 18¾ கெஜத்திற்கும் மேலாக துணி உபயோகித்துக்கொண்டு இருந்தனர். இன்று மக்களுக்கு வாங்கும் சக்தி குறைந்தது காரணமாக அவர்களுக்குப் போதிய அளவிற்கு வருமானம் இன்மை காரணமாக, 13 கெஜம் துணிதான் உபயோகிக்கிறார்கள் என்பதை மத்திய அரசாங்கம் அறிவித்து இருக்கிறது. அந்த அளவிற்கு மக்களின் வாங்கும் சக்தி குறைந்து இருப்பதால் அதனால் ஏற்படக்கூடிய நிலைமையையும் அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொண்டு, ஏற்கனவே சில துணி வகைகளுக்கு ரிபேட் கொடுக்கப் படுவதுபோல், அனைத்து கைத்தறித் துணி வகைகளுக்கும் ரிபேட் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1978 மார்ச் 6] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

அந்த ரிபேட் கொடுப்பதிலும் பல்வேறு விதமான பாகுபாடு இருப்பதாக அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

பண்டிகை காலங்களில் சில துணி ரகங்களுக்கு 10 பைசா ரிபேட்டும், சில துணி ரகங்களுக்கு 5 பைசா ரிபேட்டும், சிலவற்றிற்கு எந்தவிதமான ரிபேட்டும் இல்லாமல் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, அந்த நிலையை மாற்றி, எல்லா விதமான துணிகளுக்கும்—மொத்த விற்பனைக்கும், சில்லரை விற்பனைக்கும்—20 பைசா ரிபேட் கொடுத்து அந்த துணித் தேக்கத்தைத் தவிர்க்க இந்த அரசு முன் வரவேண்டும்.

இன்றைக்கு தமிழகத்தில் இருக்கும் நிலையை எடுத்துக் கொண்டால், பல கோடி ரூபாய் உற்பத்தி செய்யப்பட்ட துணிகள் தேங்கிக்கிடக்கின்றன. சமீபத்தில் மதுரையில் கிருஷ்ணாபுரம் பகுதியில்—கிட்டத்தட்ட 3,000 கைத்தறி நெசவாளர்கள் வாழும் பகுதியில்—35 லட்சம் ரூபாய்க்கும் அதிகமான அளவிற்கு அந்த கூட்டுறவுச் சங்கத்தில் கோடம் பாக்க ரகத் துணி தேக்கத்தின் காரணமாக அங்கே இருக்கும் நெசவாளர்களுக்கு வேலை இல்லாத நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் தனியார் துறையிலும் இந்தக் கோடம்பாக்கம் ரகம் உற்பத்தி செய்கிறார்கள். அங்கே தேக்கம் இல்லாத அளவிற்கு கோ-ஆப்டெக்ஸ் வாங்குகிறார்கள். ஆனால் கூட்டுறவுத் துறையில் இருக்கும் அந்தச் சங்கத்தில் தேக்கம் இருக்கிறபோது, தனியார் துறையில் வாங்குகிறீர்களே என்று கேட்டால், எங்களுக்கு அந்தத் துணி தேவை இல்லை என்று கூறுகிறார்கள். இதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சம்பந்தப்பட்ட கோ-ஆப்டெக்ஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து, கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டம் குறைக்கப்படுவதற்காக உறுதுணையாக இருக்கும் தொழிலை நசிக்கச் செய்துவிடாமல், அதற்கென மேலும் குறிப்பிட்ட சில ரகங்களையும் ஒதுக்கித் தந்து, கைத்தறிக்கென ஒதுக்கி இருக்கும் ரகங்களை விசைத்

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1978 மார்ச் 6

தறியில் தயாரிக்காமல் இருக்கச் செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டு, மற்றவர்கள் யாரும் அந்த ரகங்களை தயார் செய்யக்கூடாது என்று சொல்வதோடு மட்டுமல்லாமல், அப்படிச் செய்கிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஹைகோர்ட்டும் கூட கடும் நடவடிக்கை எடுக்கக் கூறியுள்ளது. அந்த நிலையையே அரசும் கொண்டு இருக்கிறது என்பதைக் கொள்கை அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது என்பதற்கு நன்றி—மத்திய அரசு உத்தரவு தெளிவில்லாமல் இருப்பதால் நடவடிக்கை எடுக்க தவறிவிடாமல் இருப்பதற்காக இந்த மாதிரியான விஷயங்களை மத்திய அரசுக்குத் தெளிவுபடுத்த சுட்டிக்காட்டி, தெளிவுபடுத்தி, ஒதுக்கீடு செய்யப்பட்ட ரகங்களை கைத்தறி மூலம்தான் உற்பத்தி செய்ய வேண்டும் என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அதைப்போல நூல் விநியோகத்தைப் பார்த்தால், கூட்டுறவு மில் அல்லது தேசிய பஞ்சாலைகளிலிருந்து விநியோகம் செய்யும் நூல் விலை தனியார் மில்களிலிருந்து வாங்கப்படும் நூல் விலையைவிட அதிகமாக இருக்கிறது. ஆகவே, கைத்தறிக்கு சப்ளை செய்யப்படும் நூல் விலையைக் குறைப்ப தோடு தாராளமாக நூலை வழங்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட வேண்டும்.

மார்க்கெட்டைப் பொறுத்தமட்டில், இப்போது பெருமளவில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தேக்கத்தை குறைக்க பண்டிகைக் காலங்களில் விற்பனை செய்யும் ஜவுளிக்கு ரிபேட் கொடுப்பதைப்போல மற்ற காலங்களிலும் ரிபேட் கொடுக்க அரசாங்கம் மானியம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மார்க்கெட்டைப் பற்றி இன்றுகூட மத்திய அமைச்சர் மோகன் தாரியா அவர்கள் கூறியிருக்கிறார்கள். இடைத் தரகர்கள் ஒழிக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே, கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தியாகும்



1978 மார்ச் 6] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

துணியை கொள்முதல் செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கமே செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஏற்கெனவே தேங்கி இருக்கிற சரக்குகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட கைத்தறிக் கூட்டுறவு வங்கிகள் ஏற்படுத்தி, அவை மூலம் இருக்கின்ற ஸ்டாக்குக்கு ஏற்றபடி கடன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். சேலம் மாவட்டத்தில் ஒரு மாவட்ட கூட்டுறவு வங்கி வைத்திருக் கிறார்கள். ஒரு சொசைட்டியில் எவ்வளவு ஸ்டாக் தேங்கி யிருக்கிறது, அதற்கு எவ்வளவு ரிபேட் கிடைக்கும் என்பதைக் கணக்கிட்டு, அதற்கேற்ற வகையில் குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்து உதவுகிறார்கள். அதைபோல எல்லா மாவட்டங் களிலும் மாவட்ட கூட்டுறவு வங்கிகள் அமைத்து உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கடன், கூட்டுறவு கைத்தறி சங்கங்களுக்கு 4 சதவிகிதம் வட்டிக்குக் கடன் கொடுத்து உதவி செய்ய வேண்டும்.

ஏற்கெனவே கிருஷ்ணாபுரம் சொசைட்டியிலிருந்து ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் குறிப்பை இந்த நேரத்தில் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சில இடங்களில் அடக்க விலையிலிருந்து 41 சதவிகிதம் லாபம் கூட்டி வைத்து விற்பனை செய்வதால் விலை ஜாஸ்தி ஆகி, அதனால் தேக்கம் ஏற்படுகிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தவறு ஏற்படாமல் இருக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நூல் விலை ஏறிவிட்டது; மார்க்கெட் போதுமான அளவுக்கு இல்லை; நூல் கிடைக்கவில்லை என்று ஏதாவது காரணம் சொல்லி, நெசவுத் தொழிலாளர்களின் கூலியை வெட்டுகிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டும். நெசவாளர் களுக்கு ஏற்கெனவே, எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டும்; குறைந்தபட்சம் கூலி எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று பரிந்துரை செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு அறிக்கையும் கொடுத்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1978 மார்ச் 6

ஆனால் அந்த அறிக்கையின் விவரம் என்ன என்பது தெரியவில்லை. அந்த அறிக்கையை உடனடியாக வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, குறைந்தபட்சம் கூலிக்கு உத்தரவாதம் அளித்து, அரசாங்கம் சட்டமியற்ற வேண்டும்.

நெசவாளர்களுடைய குழந்தைகளுக்கு இலவச கல்வியும், புத்தகங்களும் நோட்டுகளும் இலவசமாக அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

குடியிருப்பு இல்லாத ஏழை நெசவாளர்களுக்கு நல்ல வகையிலே குடியிருப்பு காலனி அமைத்து, 50 சதவிகிதம் அரசு மானியமாகவும் 50 சதவிகிதம் கடனாகவும் வீடு கட்ட வழங்க வேண்டும். கடனை பல சுலபமான நீண்டகால தவணைகளில் வசூல் செய்துகொள்ளும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பாவு ஆற்றும் நெசவாளர்களுக்கு புதிதாக ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அதாவது வார்ப்பின் பாவு முறையை மில் துணிகளில் புகுத்தி, கைத்தறிக்கு பாவு ஆற்றும் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காத புதிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் கைத்தறித் துணிக்கு வார்ப்பின் பாவு நூலைப் பயன்படுத்தக்கூடாது என்று சட்டம் கொண்டுவர வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டிலிருந்து பட்டிமார்பு துணி ஏற்றுமதிக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. அதன்மூலம் அந்நியச் செலாவணி கிடைக்கும் வாய்ப்பு இருந்தது. முன்பெல்லாம் அரசாங்கம் இதற்கு 30 சதவிகிதம் மானியம் கொடுத்து ஊக்குவித்து வந்தது, சமீபத்தில் அந்த 30 சதவிகிதம் மானியத்தை 12½ சதவிகிதம் ஆக குறைத்துவிட்டார்கள். அதனால் அந்தத் தொழிலில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. அது அந்நியச் செலாவணி ஈட்டுகின்ற ஒரு தொழிலாக இருப்பதால் பட்டிமார்பு துணி உற்பத்திக்கு முன்பு போலவே 30 சதவிகிதம் மானியம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 மார்ச் 6] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

கடைசியாக மாநில கூட்டுறவுச் சங்கத்தைப் பற்றி சொல்ல விரும்புகிறேன். அந்தச் சங்கங்களிலே ஸ்பெஷல் ஆபீசர்கள் தான் நிர்வாகப் பொறுப்பிலே இருக்கக்கூடிய நிலையிலே நடந்து கொண்டிருக்கிறது. அவர்களை எல்லாம் மாற்றி முன்பு எப்படி போர்டு அமைக்கப்பட்டு நடத்தப்பட்டதோ அதேபோல் உடனடியாக அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதோடு முந்தைய காலங்களிலே பல கூட்டுறவு நிர்வாகிகள் மீது, கூட்டுறவுச் சங்கங்கள்மீது பல கேஸ்கள் இருக்கின்றன. உதாரணமாக கடையநல்லூர் (நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தது) கேஸ்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் 8 வருடம், 10 வருடம் கூட கழிந்துவிட்டது. அப்படியிருந்தும் எந்த விதமான வழக்கும் நடைபெறவில்லை. தொடர்ந்து புலனாய்வு என்ற பெயரால் காலம் கடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட வழக்குகளை எல்லாம் உடனடியாக பரிசீலனை செய்து அரசாங்கம் அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் பெற்றுக் கொண்டு அந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை, பிரதிநிதிகளைக் கொண்டு நடத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விசைத்தறியின் பிரச்சினையைப் பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். டர்க்கி துணிகளுக்கு 5 விசைத் தறிகள், வேஷ்டி, சேலை நெய்யும் தறிகளுக்கு 10 விசைத் தறிகள் என்று இருந்தால் அதற்கு பாக்டரி சட்டமும், தொழிலாளர் சட்டங்களும் பொருந்துமென அறிவிக்கவும். அப்படி அறிவித்தால்தான் எல்லாவிதமான பாதுகாப்பும் தொழிலாளர்களுக்கு கிடைக்க முடியும். ஈ.எஸ்.ஐ., பிராவிடண்ட் பண்ட் போன்ற வசதிகளை எல்லாம் அவர்களுக்குச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுப் பஞ்சாலையைப் பற்றி சில விஷயங்கள் சொல்ல விரும்புகிறேன். ஒரு புறத்தில் தேசீய பஞ்சாலை நம்முடைய மேற்பார்வையில் இருக்கிறது. கூட்டுறவுப் பஞ்சாலை நம் மேற்பார்வையில் இருக்கிறது. அங்கே சிலோனிலே இருந்து

பர்மாவிலே இருந்து வந்திருக்கக்கூடிய அகதிகளுக்கு வேலை கொடுக்கக்கூடிய திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. இது ஒரு நல்ல திட்டம். வரவேற்க வேண்டிய திட்டம். ஆனால் அவர்கள் என்ன வேலை செய்கிறார்களோ அந்த வேலைக்குரிய ஊதியம் சமவேலைக்கு சமசம்பளம் என்று அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு அதற்கு பதிலாக தினக் கூலி என்ற பெயரால் சம்பளத்தை நிர்ணயிக்கிறார்கள். பல வருடங்களாக வேலை பார்ப்பவர்களுக்குக் கூட தினம் 5 ரூபாய் 6 ரூபாய் என்று மிகவும் குறைந்த கூலி கொடுக்கிறார்கள். அதே வேலையை செய்யக் கூடிய பெர்மெனன்ட் தொழிலாளர் களுக்கு 22 ரூபாய், 23 ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது. இப் படிப்பட்ட முறை சரியல்ல என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த தொழிலாளிகூட 10, 15 ஆண்டு களுக்கு மேலாக வேலை செய்தும் இன்னும் தினக்கூலியாகவே அவர்களை வைத்துக்கொண்டு 5 ரூபாய், 6 ரூபாய், 7 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். இந்த அளவுக்குமேல் கூலி கொடுப்பதில்லை. காலி ஸ்தானங்கள் ஏற்பட்டாலும் அவர்களைப் பதிவு செய்யவில்லை. அந்த முறை அகற்றப்பட்டு உடனடியாக அவர்களுக்கும் வேலைக் குரிய முழுச் சம்பளமும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காலி ஸ்தானங்கள் நிரப்பப்பட வேண்டும். தொழில் ஸ்தாபனங்கள் லாபத்தில் ஓடவில்லை என்ற காரணத்தைக் காட்டி நிறுத்தி வைக்கக்கூடிய முறையில் பாக்டரி சட்டத்தை மீறுகிறார்கள்.

தேசிய பஞ்சாலைகளில் ஓவர்டைம் வேலை வாங்குகிறார்கள். நம்முடைய சட்டப்படி டபிள் சம்பளம் கொடுக்க வேண்டும். அப்படி ஓவர்டைமாக ஒரு மணி நேரம் வேலை செய்தால் சாதாரணமாக என்ன சம்பளம் கொடுக்கப்படுகிறதோ அதே சம்பளம்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக சட்டத்தை மீறுகிற முதலாளிகளை கண்டிக்க வேண்டிய அரசாங்கமே இப்படிப்பட்ட முறையை கையாண்டால், சர்க்காருடைய நிர்வாகத்திலேயே இந்தமாதிரி செய்தால் நாமும் ஏன் செய்யக்கூடாது என்று மில் முதலாளிகளும்



சட்டத்தை மீறிவிட முயல்வார்கள். ஆகவே நாமும் சட்டத்தை மீறவேண்டாம். முதலாளிகள் மீறுவதையும் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து சீக்கிரம் முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவரவர்களே, தொழில் துறை சட்டங்கள் எங்கெங்கு மீறப்படுகின்றன என்ற தகவலை இன்று மாலையே தனியாக எழுதி கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோரணம்:** அமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி. எழுதிக் கொடுக்கிறேன்.

கடைசியாக கதர்த் துணிபற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். என்.ஜி.ஜி.ஓ.-க்களுக்கு கைத்தறித் துணி வாங்குவதற்கு கடன் சலுகை வழங்கப்படுவது போல் மற்ற தொழிலாளர்களுக்கும் அனைத்துக் கதர் ஸ்தாபனங்களுக்கும் கதர் துணிகள் வாங்குவதற்கும் சலுகை கொடுத்து அதன் விற்பனையை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று கட்டடம் கட்டுவதற்கும் அவர்களுக்கு மானியம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு இவ்வளவு நேரம் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

**திரு. டி. பி. மு. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி—கதர் மானியக் கோரிக்கைகள் மீது இந்திய தேசிய பார்வேர்ட் ப்ளாக் கட்சி சார்பாக என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைய தினம் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் சார்பாக அறிவிக்கப்பட்டிருக்கிற அறிக்கையையும், நிதி அறிவிப்புகளிலும் பார்க்கிறபோது நாட்டில் வாழ்கிற 40 லட்சத்திற்கு மேலான நெசவாளர்களின் உள்ளக்குமுறலை

[திரு. டி. பி. மு. பெரியசாமி] [1978 மார்ச் 6

நல்ல முறையில் புரிந்துகொண்டு ஆக்கபூர்வமான அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு இந்திய தேசிய பார்வேட் ப்ளாக் கட்சி சார்பாக நன்றியையும் வரவேற்பையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றியையும் வரவேற்பையும் தெரிவிக்கிற அதே நேரத்தில் என் கட்சி சார்பாக சில கருத்துக்களை சொல்ல ஆசைப் படுகிறேன். கைத்தறி துறையில் பணியாற்றுகிற, பாடுபடுகிற 40 லட்சம் மக்கள் பிரச்சினைபற்றி விவாதிக்கிற இந்த நேரத்தில் 7½ லட்சம் மக்களுக்காக இன்று வெளிநடப்பு செய்திருக்கக் கூடிய பிரதான எதிர்க்கட்சிகள் இல்லாமலிருப்பது வருந்தக் கூடிய ஒரு சூழ்நிலையாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏன் நான் இதைக் கூறுகிறேன் என்றால் எந்தக் கைத்தறி நெசவாளர்களுக்காக அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தோளிலே கைத்தறித் துணியை சுமந்துகொண்டு தெருத்தெருவாக சுற்றியலைந்து கைத்தறி நெசவாளர்களின் துயரைத் துடைக்க வேண்டும் என்று பாடுபட்டார்களோ அந்த அண்ணாவின் பெயரைச் சொல்லி இன்றைக்கு பிரதான எதிர்கட்சியாக இருக்கக்கூடியவர்களும் மற்றவர்களும் வெளிநடப்பு செய்திருப்பது வேதனைக்குரிய விஷயமாகும் என்றாலும், இருக்கிற ஒருசில எதிர்க்கட்சி உறுப்பினர்களாவது ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை இந்த மன்றத்தில் எடுத்து வைத்திருக்கும் காட்சியைப் பார்க்கிறபோது மனநிறைவு பெறுகிறேன்.

அந்த 40 லட்சம் மக்கள் இன்று எப்படி வாழ்கிறார்கள் என்றால், அந்த கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் வாழக்கூடிய பகுதிக்குச் சென்று பார்த்தால் அவர்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்கிறார்களா என்றால் சமுதாயத்தின் அடித்தளக் கோட்டிற்குக் கீழேதான் வாழ்கிறார்கள் என்றுதான் சொல்ல தோன்றுகிறது.

அந்த 40 லட்சம் மக்களின் நல்வாழ்விற்காக தமிழக அரசு முன்வந்து பல ஆக்கப்பூர்வமான அறிவிப்புகளை அறிவித்திருக்கும் நேரத்தில் கைத்தறி விற்பனை நிலையங்கள் கிளைகள் இன்னும்



1978 மார்ச் 6] [திரு. டி. பி. மு. பெரியசாமி]

அதிகப்படுத்தப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை இந்திய தேசிய பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பில் விடுக்க விரும்பு கிறேன்.

அப்படி கைத்தறி விற்பனை நிலையங்கள் கிளைகளை அதிகப் படுத்துகிற அதே நேரத்தில் அங்குள்ள துணிகளும் பிற பொருள்களும் நல்ல தரமானவையாக இருக்கும்படிச் செய்ய வேண்டியது கைத்தறித் துறையின் கடமையாகும். கூட்டுறவு மில்களில் வாங்கும் நூல் தரமாக இல்லாததன் காரணமாக கைத்தறியில் தரமான துணிகளை வெளியிட முடியவில்லை என்ற கருத்தினை கைத்தறி விற்பனை நிலையங்களில் பணியாற்றுகிற நபர்கள் சொல்கிறார்கள்.

எனவே கூட்டுறவு மில்களில் வாங்கும் நூல் தரமானவையாக இருக்கும் வகையில் ஆக்கபூர்வமான உத்தரவுகளை உடனடியாக இடவேண்டும் என்று விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் இயங்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்யும் அதிகாரங்களை கிளை விற்பனை நிலையங் களுக்குக் கொடுப்பதன் மூலம் எப்போது விலைவாசி குறைந் திருக்கிறதோ அப்போது வாங்கி வைத்துக் கொள்ளலாம், விலையைக் குறைத்து மக்களுக்குக் கொடுக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. தனியார் துறையில் உற்பத்தி செய்கிற பொருள்கள் மிகவும் குறைவான விலையில் கிடைக்கிறது. ஆனால் கூட்டுறவுத் துறையில் உற்பத்தி செய்யப்படுகிற துணிகளின் விலை சிறிது அதிகமாக இருப்பதன் காரணமாக இன்று நாட்டிலுள்ள ஏழை எளியவர்கள் கைத்தறி துணியை வாங்க ஆசைப்பட்டாலுங்கூட வாங்க முடியாததொரு சூழ்நிலை ஏற்படுகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விற்பனை சங்ககங்களைப் பொறுத்தவரையில் பிரதம சங்கங்களுக்கு 9 சதவிகிதம் என்று லாபம் வைக்கப்படுகிறது. விற்பனை குறைந்திருக்கிறதா என்று பார்த்தால், கூட்டுறவு சங்க விற்பனை நிலையங்களில் அதிகமாக லாபம் இல்லாததின் காரணமாக அதிகமான துணிகள் விற்பனையாகாமல் ஆங்காங்கு

[திரு. டி. பி. மு. பெரியசாமி] [1978 மார்ச் 6

தேங்கிக் கிடக்கின்ற நிலைமையில் தேக்கநிலை அடைந்திருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு சில ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் மற்ற துறைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு ஊக்க போனஸ் போன்றவைகள் கொடுப்பதன் மூலமாக தொழில் அபிவிருத்தி செய்கின்ற பல வழிமுறைகளை நாம் காண்கிறோம்.

அதேபோல் கைத்தறி கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கும் ஊக்கம் அளிக்கின்ற வகையில், விற்பனையை அதிகப்படுத்தி போனஸ் போன்றவற்றை அங்கு பணியாற்றுபவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கின்ற நிலைமையை மாற்றி தேக்க நிலைமையையும் போக்க வேண்டும் என்று இந்த அரசை விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அரசே ரா-மெட்டீரியல்ஸ் கொடுத்தால் நல்ல முறையில், கைத்தறிகளால் நல்ல தரமான துணிகளை உற்பத்தி செய்ய முடியும் என்று எல்லா கூட்டுறவு சங்கங்களிலிருந்தும் சொல்கிறார்கள். அதற்கு வேண்டிய ரசாயன பொருட்களும், மூலப் பொருட்களும் கிடைப்பதற்கான உத்தரவாதத்துடன் அவர்களுக்கு இப்பொருட்களை வழங்க வேண்டும் என்று இந்திய தேசிய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படும் நூல், நல்ல தரமான நூல்களாக—அதிகமாக வழங்க வேண்டும் என்று சொல்லும்போது, கூட்டுறவு அதிகாரிகள் சொல்வது என்னவென்றால், எங்களிடம் தரப்படுகின்ற பஞ்சைதான் கூட்டுறவு மில்களுக்கு கொடுக்க முடிகிறது, அதிலிருந்து கிடைப்பதை தான் நாங்கள் விற்பனை செய்ய முடிகிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். இப்படியில்லாமல் காலக்கிரமத்தில் கொள்முதல் செய்வதற்கும், அதற்கு வேண்டிய அளவுக்கு கூட்டுறவு ஆலைகளுக்கு போதுமான அதிகாரத்தை கொடுத்து, நல்ல



ார்ச் 6] [திரு. டி. பி. மு. பெரியசாமி]

பஞ்சுகளை வாங்கிவைத்து, தரமான நூல்களை உற்பத்தி செய்து கூட்டுறவு சங்கங்களுக்கு கொடுப்பதன் மூலமாக நல்ல தரமான துணி கிடைப்பதற்கு வழிவகை ஏற்படும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவு சூப்பர் மார்க்கெட் போன்றவற்றில், கூட்டுறவு சங்கங்களில் கொள்முதல் செய்யாமல், தனிப்பட்ட கம்பெனிகளில் கொள்முதல் செய்வதாக தெரிகிறது. இனிமேலாவது அப்படி இல்லாமல், சூப்பர் மார்க்கெட்டில் துணிகளை எல்லாம் கூட்டுறவு சங்கங்களிலேயே கட்டாயமாக ஆணை பிறப்பித்து, வாங்க வேண்டும் என்று சொல்லப்பட்டால் கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்வுக்கு உதவியாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையைப் பொறுத்தமட்டில், அவர்களுடைய வாழ்க்கை வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருக்கிறது. இந்த நாடு சுதந்திரம் பெற்று 30 ஆண்டுகள் ஆகியும், இந்தத் தொழிலாளர்கள், எட்டு மணி நேரம், பத்து மணி நேரம் வேலை பார்த்தும்கூட, மூன்று ரூபாய் இரண்டரை ரூபாய் என்று சம்பளம் கொடுக்கக்கூடிய அவலநிலையில் கைத்தறி நெசவாளர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டுறவு சங்கங்களில் போதுமான அளவுக்கு வேலையில்லாத காரணத்தால், நெசவாளர்கள் மாஸ்டர் வீவர்களிடம் சென்று வேலைக்குப் போகவேண்டியிருக்கிறது. அவர்களிடம் அதாவது தனியார் துறையிடம் இருக்கின்ற ஆட்களிடத்தில் வேலைக்குச் சென்று, எட்டு மணி நேரம் அதற்கும் மேலும் வேலை செய்து விட்டு இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் என்று சம்பளம் பெறுகிறார்கள். காலை 8 மணிக்குச் சென்றால் இரவு 8 மணி வரையிலும் வேலைக்குச் சென்று மூன்று ரூபாய் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு, வீட்டுக்குச் சென்றால் அவர்களுடைய மனைவி மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். கைத்தறி நெசவாளர்களுடைய குறைகளைப் போக்க வேண்டும் என்று பாடுபட்ட அமரர் அண்ணா அவர்களுடைய கொள்கை களைக் கொண்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்

[திரு. டி. பி. மு. பெரியசாமி] [1978 மார்ச் 6

கழக அரசு இதற்காக கங்கணம் கட்டிக்கொண்டு, பொறுப் பேற்றுக் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

***திரு. ரா. மார்க்கபந்து:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கைத்தறி நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற நெசவாளர்களுடைய பிரச்னை எந்தக் காலத்திலும் தீர்க்க முடியாத பிரச்னையாக இருந்துகொண்டு வந்திருக்கிறது. இந்தப் ரச்னைகளிலே அவர்களுக்கு பாதுகாப்புத் தருவதற்கு, அவர் ளுடைய துயரைத் துடைப்பதற்கு ஏற்கனவே ஒரு குழு மைக்கப்பட்டது. இதுவரைக்கும் அந்தக் குழுவின் பரிந் ரைகள் வைக்கப்படவில்லை. உடனடியாக அந்தப் பரிந்துரை ளை வைக்குமாறு இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, குறைந்தபட்ச கூலி நிர்ணயம் என்பது ற்றவர்களுக்கு கொடுப்பதுபோல், இவர்களுக்கும் தந்தாக வண்டும். இவர்களுடைய துயரைத் துடைக்க வேண்டுமென்று சொன்னால், இந்தக் கைத்தறித் தொழிலிலே ஈடுபட்டிருக் ன்றவர்களுக்கு என்று தனியாக, இந்த வகையான துணியைத் நான் அவர்கள் நெய்ய வேண்டும் என்ற உத்தரவாதத்தை அளித்து, அதை மில்கள் தயாரிக்கக் கூடாது என்ற ஒரு தடையை விதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே, மாஸ்டர் வீவர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் அதிகமான லாபத்தைச் சம்பாதிக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். இவர்கள் இடைத் தரகர்கள்போல் இருந்துகொண்டு, உழைக்கின்ற நெசவாளர்களுக்கு போதிய ஊதியம் கிடைக்காமல் இருக்கின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே, இந்த இடைத் தரகர்கள் என்று சொல்லக்கூடிய மாஸ்டர் வீவர்கள் சிஸ்டத்தை நாம் ஒழித்தாக வேண்டும். இதை ஒழிக்க வேண்டுமென்று சொன்னால், எந்தெந்த மாவட்டங் களில், எந்தெந்தப் பகுதிகளிலே நெசவாளர்கள் நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றார்களோ, அந்தப் பகுதிகளில்



1978 மார்ச் 6] [திரு. ரா. மார்க்கபந்து]

ஒரு தனியாக கூட்டுறவு சொசைடிகள் அமைக்கப்பட்டு, அதிலே
அவர்கள் சேர்க்கப்பட வேண்டுமென்கிற ஒரு உத்திரவாதத்தை
நாம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அப்படிச் சொல்கின்றபோதுகூட, இந்தக் கைத்தறியை
கட்டாயமாக அணிய வேண்டுமென்று ஒரு உறுதியை நாம்
ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் வாயலே பேசிக் கொண்டிருந்
தால் மட்டும் போதாது. இவைகளைச் செயல்படுத்துவதாக
இருக்க வேண்டும்.

அரசாங்கத்திலே உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள்.
கல்லூரிகளிலே படிக்கின்றவர்கள் இருக்கிறார்கள். பள்ளிக்
கூடத்திலே யூனிபாரம் அணிவது என்ற முறையை வைத்திருக்
கிறோம். அதே நேரத்திலே ஆஸ்பத்திரிகளிலும்கூட யூனிபாரம்
அணிவது என்று வைத்திருக்கிறோம். டிரான்ஸ்போர்ட் இலாகாவி
லேயும் யூனிபாரம் அணிவது என்று வைத்திருக்கிறோம்.
இப்படி அரசாங்க உத்தியோகத்திலே பல்வேறு
பகுதிகளுக்கு, அதிலே பணியாற்றுகின்றவர்களுக்கு யூனிபாரம்
அணிவது என்ற ஏற்பாடுகள் இருக்கிறது. ஆகவே, இவர்களு
டைய குறையைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னால், வாரத்தில்
ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களுக்கு இந்த கைத்தறித்
துணியைப் பயன்படுத்த வேண்டுமென்று ஒரு உத்திரவாதத்தை
இந்த அரசு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
இப்போதெல்லாம் தனித்தனியாக அந்தந்தத் துறைகளிலே
வேலை செய்கின்றவர்களுக்குத் தனியாக பாதுகாப்புச் சட்டம்
கொடுக்கப்பட வேண்டுமென்று ஒரு கூப்பாடு, கூச்சல் இருந்து
கொண்டிருக்கிறது. நான் ஏற்கனவே முன்னாலே சொல்லியபடி,
மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இப்படித்
தனித்தனியாக ஒவ்வொரு துறைக்கும் போடாமல்,
அனைவருக்கும் பொருந்தும்படியாக, 'Comprehensive legislation to
safeguard the interest of all the people' என்கின்ற முறையிலே
ஒரு காம்ப்ரிஹென்சிவ் லெஜிஸ்லேஷன் போட்டு, அவர்களுக்கு
உத்திரவாதம் அளிக்கின்ற ஒரு லெஜிஸ் லேஷனை அமைக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'Shops and Establishment,
Act' என்பதில் குறிப்பிட்ட வயதிற்கு குறைவாக இருக்கக்கூடிய
சிறுவர்களைப் பயன்படுத்தக்கூடாது என்று சட்டம் இருக்கிறது.

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 மார்ச் 6

ஆனால், இந்த நெசவுத் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்கள், குழந்தைகளை ஒரு வருஷம், இரண்டு வருஷமானாலும்கூட, இந்தத் தொழிலிலே ஈடுபடுத்தக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அதைப் போக்குகின்ற வகையிலே, இந்த 'ஷாப்ஸ் அண்டு எஸ்டாப்ளிஷ்மென்டு' ஆக்டில் சொல்லியபடி இந்தச் சட்டத்தை, சட்டத்திலுள்ள விதிமுறையை இதிலேயும் அமுலாக்க வேண்டும்.

அதே நேரத்திலே, இந்தக் கைத்தறித் துணியின் தரத்தை உயர்த்துவதற்கு, ஒரு சூபர்வைசரி ஆபீசரைப் போடுவதன் மூலமாக கைத்தறித் துணியை சிறப்பான நிலைக்கு எடுத்துச் செல்லக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படுமென்பதை நான் கூறி கொள்ள ஆசைப்படுகிறேன். அதே நேரத்திலே, ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் போன்றவைகள், நெசவாளர்கள் உற்பத்திச் செய்யக்கூடிய அந்தப் பொருள்களை எல்லாம் அரசாங்கமே விலைக்கு வாங்கி, நெசவாளர்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலைக்கு வாங்கி விற்பது என்ற ஒரு உத்திரவாதத்தை ஏற்றுக்கொண்டால் சரியாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

அதேபோன்று, வேலையில்லாத பட்டதாரிகள் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு 'மொபைல் சேல்ஸ் டிப்போ' என்று, அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற வகையிலே அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். Propaganda for propaganda purposes and for effective sales, என்கின்ற வகையிலே இவர்களைப் பயன்படுத்திக் கொண்டாலும், அது சரியாக இருக்குமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, நூல்கள் கொடுக்கின்றபோது 'சப்சிடைஸ்ட் ரேட்' என்கின்ற முறையிலே குறைந்த விலைக்கு நூல்கள் தருவதும், இந்த நெசவுத் தொழிலுக்கு வேண்டிய உபகரணங்களை குறைந்த விலையில் மானியமாகவும், மற்றும் நீண்டகால கடன் அடிப்படையில் கொடுப்பதும் நல்லது, சரியாக இருக்குமென்றும் நான் சொல்லிக்கொள்ள விரும்பு [illegible]



1978 மார்ச் 6] [திரு. ரா. மார்க்கபந்து]

அவர்
இப்படிப்பட்ட முறைகளைக் கையாள்வது மூலமாக அவர்களுடைய துயரைத் தீர்க்கலாம். அரிசன மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறோமே அதே முறையில் வீவர்களுக்கும் வீடுகளைக் கட்டி கொடுத்து வீவர்ஸ் காலனி என்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் வாங்கிய கடன்களை வசூலிப்பதில் கெடுபிடி இருப்பதாக அறிகிறோம். ரெவின்யூ ரெகவரி ஆக்டின் கீழ் கெடுபிடி செய்து வசூலிப்பதைத் தள்ளி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஓரிரு இடங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஜெயம்கொண்டம், கல்லத்தூர், சின்னகாந்தபுரம், சீனிப் பாளையம், உக்கடை, உதயநத்தம், மாத்தூர், ஆண்டிமடம், பொன்பரப்பி ஆகிய இடங்களில் பெருவாரியாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் ரேஷன் பெற மிகவும் கடஷ்ப்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால் அந்தப் பகுதியில் உடனடியாக நியாயவிலைக் கடைகளைத் திறந்து அவர்களுக்கு உதவி செய்து கொடுக்கும் வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் ஆந்திர மாநிலத்திற்குச் சென்றிருந்தபோது அந்த மாநிலத்து அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விரைவில் கதர் கைத்தறிபற்றி ஒரு மாநாடு கூட்ட இருக்கிறோம்; தமிழகத்தைச் சார்ந்த அமைச்சர்கள் கலந்து கொள்ளுகிறார்கள்; சிறப்பான முடிவுகளை எல்லாம் எடுக்க இருக்கிறோம் என்று சொன்னார்கள். தமிழகத்தின் சார்பாக அமைச்சர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள்; இந்த அரசின் கொள்கையாக என்பதை இந்த அவையில் வைத்தால் நாம் சிறந்த பணிகளை நெசவாள மக்களுக்குச் செய்தோம் என்ற நிலைமை தமிழக மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் அமையும் என்று நான் சார்ந்துள்ள உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

[1978 மார்ச் 6

**திரு. எம். ஏ. லத்தீப் :** துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உழவுத் தொழிலுக்குப் பிறகு மிக முக்கியமான தொழிலாக ஆண்டாண்டு காலமாக இருந்து வருவது நெசவுத் தொழிலாகும். இந்த நெசவுத் தொழிலைக் குறித்த இந்த மானியத்தில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு மத்திய அரசாங்கம் எடுத்திருக்கிற சில முடிவு களின் காரணமாக தமிழகத்தினுடைய பொருளாதாரத்தின் அடிப்படைக்கு அந்த அடிப்படை ஆக்கத்தையும், ஊக்கத்தை யும் அளிக்கக்கூடிய இந்த மிக முக்கியமான தொழிலுக்கு ஒரு மாபெரும் அபாயத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று இந்த அவையிலே சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

கடந்த 14-2-78 அன்று கோட்டா சிஸ்டம் என்ற பெயரிலே நம்முடைய காட்டன் டெக்ஸ்டைல் எக்ஸ்போர்ட் ப்ரொமோஷன் கவுன்சில் சார்பில் டிரேட் கன்ட்ரோல் ஆர்டர் என்ற பெயரால் இப்போது இருக்கிற நிலைமைகளை அடிப்படையாக மாற்றும் வகையில், குறிப்பாக நெசவுத் தொழிலுக்கு மிகப் பெரிய பாதகம் ஏற்படும் வகையில் அவர்கள் சில முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி, என்னுடைய அச்சத்தை, கவலையை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதுவரை ஏற்றுமதிக்கான குறியீடுகள் இம்போர்ட் மெட் கூட்சுக்காக ஆலைகளில் நெய்யப்படுகிற துணிகளுக்கும், காட்டன் டெக்ஸ்டைல், ஹாண்ட்லூம் டெக்ஸ்டைல் இந்த இரண்டுக்கும் என்று ஒரு குறியீடு இருந்தது. இப்போது நெசவுத் தொழிலில் உற்பத்தி செய்கிற துணிகளுக்கு ஏற்றுமதிக் குறியீட்டை 20 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறார்கள். காட்டன் டெக்ஸ்டைல் மில் மேட் கூட்சுக்கு 50 சதவிகிதம்.

கைத்தறிக்கு 50 சதவிகிதம் என்ற ஆணையைப் பிறப்பித்திருக் கிறார்கள். இதுவரை ஹாண்ட்லூமுக்கு 70 சதவிகிதம் மில் மேட் கூட்சுக்கு 30 சதவிகிதம் என்று இருந்தது. இப்போது நிலைமை மாறுவதால் 20 சதவிகிதம் கைத்தறி துணிகளுக்கு ஏற்றுமதி வாய்ப்பு குறைகிறது. அப்படிக் குறையுமானல்



1978 மார்ச் 6] [திரு. எம். ஏ. லத்தீப்]

தமிழ் நாட்டில் இன்றைக்கு வேலை செய்து வருகிற லட்சக்கணக் கான நெசவுத் தொழிலாளர்கள், தையற்காரர்கள், அவர்களோடு தொடர்பு கொண்டுள்ள மற்றத் தொழிலாளர்கள் பாதிக்கப்படக் கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. இது சாதாரணமாக வடபுலத்தில் இருக்கிற மற்றக் கைத்தறியாளர்களுக்குச் சாதகமாக அமைந்திருந்தால் நாம் கவலைப்பட்டிருக்க மாட்டோம்.

(பிற்பகல் 1.10)

ஆனல் மில்லுக்கு உதவுகின்ற வகையில் இப்படிப்பட்ட முடிவை எடுத்திருப்பது நாட்டிலே நிதர்சமான நிலைமைகளை மத்திய அரசாங்கம் கவனிக்காமல் செய்திருக்கிறதோ என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நாட்டிலே இந்தத் தொழில் முக்கியமான தொழில், தமிழகத்திலே மிக முக்கியமாக இருக்கக்கூடிய இந்தத் தொழிலுக்கு நட்டத்தை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருவது இன்றைக்கு மத்திய அரசாங்கத்தினுடைய சடங்காக, வழக்க மாக இருக்கிறது.

ஏதோ ஒரு பெரிய லாபி வடபுலத்திலே இருந்துகொண்டு, வேலை செய்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு இருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு அந்த லாபி ஏதோ ஒன்றைச் செய்யச் சொல்கிறது என்றல் அதைச் செய்வது என்ற முறையிலே இத்தகைய முடிவுகளைச் செய்வார்களேயானல் இந்த நாட்டினுடைய பொருளாதாரம் மிகப் பெரிய விளைவுகளைச் சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு வற்புறுத்திச் சொல்லி இந்த நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எக்ஸ்போர்ட் குறியீடுகளை நிர்ணயிக்கின்ற அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் இருந்தாலும்கூட தமிழ் நாட்டிலே உள்ள தொழிலாளர்கள் நலனைக் கருதி நம்முடைய அரசாங்கத்தோடு மத்திய அரசாங்கம் தொடர்புகொண்டு ஆலோசனைகளைக் கேட்டுத்தான் செய்ய வேண்டுமே தவிர ஏதோ ஒரு தலைப்பட்சமாக முடிவு செய்து ஏற்படுகின்ற விளைவுகளை மாநில

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 6

அரசாங்கம் சமாளித்துக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே முடிவு ஆகுமானால் அப்படி அங்கே இருக்கின்றவர்கள் சொல்கின்ற காரணத்தினாலே தமிழ் நாட்டிலே எதிர்காலத்திற்குப் பாதகம் ஏற்படக்கூடிய வகையிலே மத்திய அரசாங்கம் நடந்துகொண்டால் இந்த நாட்டினுடைய ஒருமைப்பாட்டிற்கு சவாலாக அது அமையும் என்பதை மத்திய அரசாங்கம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த வகையில் நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி இந்த ஆர்டரை வாபஸ் பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நேரம் இல்லை எனக்குத் தெரியும், சீக்கிரம் முடித்துக்கொள்கிறேன்.

இந்த கடையநல்லூர் விவகாரத்திலே இத்தனை ஆண்டுகளாக வழக்கு நடைபெற வேண்டுமா, ரிசர்வ் வங்கியே அது தேவையில்லை இப்படிப்பட்ட முறையில் அதிகமான செலவில் வழக்கை நடத்திக்கொண்டிருக்க வேண்டியதில்லை, ஏதோ நடந்துவிட்டது என்பதற்காக 15 லட்சம் ரூபாய்வரை செலவு செய்து வழக்கை நடத்திக்கொண்டு, ஒவ்வொரு மாதமும் அந்த ஏழை நெசவாளர்களை கோர்ட்டிற்கு வரவழைத்துக் கொண்டிருப்பதால் பயனில்லை என்று ரிசர்வ் வங்கியே கருத்துச் சொல்லியிருக்கும் போது, காவல்துறையினர் அந்த வழக்கை வாபஸ் பெறாமல் தேவையில்லாத கால தாமதம் செய்கிறது என்ற காரணத்தால் நல்ல விளைவுகள் ஏற்படவில்லை என்பதை அரசாங்கம் கவனித்து உடனடியாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய முறையிலே அந்த வழக்கு கோர்டிலே இருந்தாலும்சரி அல்லது டிபார்ட்மெண்டல் என்குயரி இருந்தாலும் சரி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும், உடனடியாக வழக்கை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஏதோ ஒரு பகுதியில் மட்டும் கவனம் செலுத்தாமல் என்னுடைய வட ஆற்காடு மாவட்டத்திலே கைகோளர்கள் என்ற சமுதாயத்தினர் இந்தத் தொழிலில் அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்கள், அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் வந்து பார்க்கலாம், அங்கே நெசவு தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்பாலோர் இந்த கைக்கோலர் சமுதாயத்தைச்



1978 மார்ச் 6] [திரு. எம். ஏ. லத்தீப்]

சேர்ந்தவர்கள், அந்தப் பகுதிக்கு சில நடவடிக்கைகளை எடுத்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விரிவாகப் பேசுவதற்கு நேரம் இல்லையென்றாலும், துணைத் தலைவர் அவர்கள் இந்த அளவிற்காவது அனுமதித்ததற்காக நன்றியைக் கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கன்னிப் பேச்சை கைத்தறி மானியத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்ததற்காக நான் என்து நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் துறை என்றாலே அதிலே பயன்படுத்துகின்ற நூலைப்போல் சிக்கலானது என்று கருதி, முந்தைய அரசுகள் அந்தச் சிக்கலிலே ஒருவேளை சிக்கிக்கொண்டால் மீளமுடியாது என்று பயந்தும் அதில் அதிக அக்கறை காட்டாமலும் ஒதுங்கியும் இருந்துவந்தன என்பதை நாம் நன்கு அறிவோம். ஆனால் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற வகையிலும், அவருடைய கனவுகளை நனவாக்குகின்ற வகையிலும் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் செயல்படுகின்ற இந்த அரசு அதற்கென்று ஒரு தனி அமைச்சரை நியமித்து செயல்பட்டு வருவதை சிலர் பாராட்ட மறுத்தாலும் நல்ல உள்ளம் படைத்தவர்கள் இன்று வாழ்த்திக் கொண்டு இருக்கிறார்கள்.

நாட்டினுடைய மொத்த கைத்தறி உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கு தமிழ் நாடு உற்பத்தி செய்து வருகின்றது என்பதைக் கருத்திற்கொண்டு, கைத்தறித் துறைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து இந்த நிதிநிலை அறிக்கை மாண்புமிகு நிதியமைச்சரவர்களால் தயாரிக்கப்பட்டிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

நலிந்துபோன இந்தத் துறையை ஊக்குவிக்கும் வகையில் கைத்தறித் துணியின் உற்பத்தியைப் பெருக்கும் அளவிற்கு சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு நான்கு கோடி ரூபாய்க்கு உற்பத்தியைக் கூடுதலாக்கியிருப்பது இந்த அரசின் மிகப்பெரிய சாதனையாகும்.

[திரு. செ. செம்மலை] [1978 மார்ச் 6

உற்பத்தியைப் பெருக்கிவிட்டு விற்பனைக்கு வழி என்னவென்று கையைப் பிசைந்து கொண்டு இராமல் தற்பொழுது கழக அரசு ஏற்றுமதிக் கொள்கையில் கொண்டுள்ள முயற்சி மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்கள் இந்த ஏற்றுமதிக் கொள்கையை ஒரு அறைகூவலாகவே ஏற்றுக் கொண்டு, இதிலே நேரடியாகத் தலையிட்டு, வெளிநாடுகளுக்கு கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்வதிலே மிகுந்த அக்கறை காட்டியுள்ளார்கள். அதற்காக நான் இந்த நேரத்திலே அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதன் மூலம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் ரூபாய் ஐந்து கோடிக்கான ஏற்றுமதி விற்பனையை எய்த இயலும் என்ற செய்தி நெசவாளர் பெருங்குடி மக்களுக்கு இனிப்பான செய்தியாகும். வெளிநர்டுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற காரணத்தால் நல்ல தரமுள்ள துணிகளை தயாரிக்க அதிகரித்துவரும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நவீன முறையில் சாயமேற்றும் வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருட்டு நவீன சாயத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியிருக்கின்ற முயற்சி வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

நெசவுத் தொழில் ஒரு புராதன குடிசைத் தொழில் என்றாலும் அதை நவீனப்படுத்தி உற்பத்தியையும் விற்பனையையும் பெருக்கி அதன்மூலம் எண்ணற்ற நெசவாளர்களை இன்றைக்கு வாழ வைத்த இந்த அரசை நெசவாளர் பெருங்குடி மக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 1962 ஆம் ஆண்டு நிறுத்திவைக்கப்பட்ட நெசவாளர் வீட்டு வசதித் திட்டம் 15 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தக் கழக அரசின் முயற்சியினால் இந்தத் திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இதனால் வீட்டு வசதியில்லாத ஏழை நெசவாளர் பெருங்குடி மக்களுக்கு நிறைய வீடுகள் கிடைக்கின்ற நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது.



1978 மார்ச் 6] [திரு. செ. செம்மலை]

அடுத்தபடியாக செய்கின்ற தொழிலைத் தெய்வமாகக் கொண்டு, அப்படி செய்கின்ற தொழிலாலேயே நோய்க்கு ஆளாக்கப்பட்டு வந்த நெசவாளர்களுக்கு நடமாடும் மருத்துவ மனையை ஏற்படுத்தி அவர்களை நோயினின்றும் காப்பாற்றுகின்ற வகையிலே வழிவகை செய்திருக்கிறது.

மேலும் நெசவாளர் சேமிப்பு பாதுகாப்புத் திட்டத்தில், ஒரு நெசவாளர் 55 வயது அடைவதற்கு முன்பு இறக்க நேரிட்டால் அவருடைய வாரிசுக்கு அவரது கணக்கில் சேர்த்து வைக்கப்பட்ட தொகையோடு ரூபாய் 500 ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தால் கொடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கக்கூடியது. நெசவாளர்களை அனுதாபத்தோடு பார்க்கின்ற இந்த அரசு இந்தத் தொகையை, அதாவது 500 ரூபாய் என்ற நிலையை மாற்றி ஒரு கணிசமான தொகையாக 1,500 ரூபாய் அல்லது 2,000 ரூபாய் என்ற அளவிலே அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்களை நெசவாளர் பெருங்குடி மக்களின் சார்பில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1977 பிப்ரவரியிலிருந்து 1978 பிப்ரவரி வரை இந்த ஓராண்டு இடைவெளிக்குள் இந்த அரசு சுமார் 17,000 தொழிலாளர்கள் பணிபுரியும் 14 ஆலைகளைத் திறந்திருப்பதும், நலிவுற்ற 9 ஆலைகளுக்கு இதுவரை ரூபாய் 437 இலட்சம் வங்கிக் கடனுக்கு உத்திரவாதம் அளித்துள்ளதும் இந்த அரசு நெசவாளர் பிரச்னைகளை அணுகும் முறையையும், அதிலுள்ள ஆர்வத்தையும் காட்டுகிறது.

மேலும் மாஸ்டர் வீவர்ஸ் என்று சொல்லப்படும் தறி முதலாளிகளிடம் சிக்கியுள்ள ஏழை நெசவாளர்களுக்குப் புனர்வாழ்வுத் திட்டமாக சொந்தத் தறியில்லாத நெசவாளர்களுக்கு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பது உள்ளபடியே வரவேற்கத்தங்க ஒன்றாகும்.

[திரு. செ. செம்மலை] [1978 மார்ச் 6

இந்தக் கருத்தைச் சொல்லும்பொழுது என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் தறியற்ற ஏழைகள் பலர் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட என்னுடைய தொகுதியில் ஒரு மையமான இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கம் அமைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆக, இவ்வளவு நன்மைகளையும் செய்த இந்த அரசு, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் இயங்கும் இந்த அரசு, நெசவாளர் வாழ்க்கையைப் பொறுத்தவரையில் இந்த அரசினுடைய காலம் ஒரு பொற்காலம் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-20)

அதேபோல், கிராமத் தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்து, கிராமத்தில் தொழில் வளர்ந்தால் கிராமப் பொருளாதாரம் உயர்கிறது; பொருளாதாரம் உயர்வதன்மூலம் வாங்கும் சக்தி (பர்சேசிங் பவர்) உயர்கிறது; வாங்கும் சக்தி உயர்வதன்மூலம் பொருளாதார நெருக்கடி தவிர்க்கப்படுகிறது என்பதை உணர்ந்து, மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையிலான இந்த அரசு நிதிநிலை அறிக்கையைத் தயாரித் துள்ளதை இந்த நேரத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன். கிராமப் பொருளாதாரத்தை உருவாக்க வேண்டிய தற்போதைய நிலையில் கிராமத் தொழில்களை, தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின்மூலம் நடத்தியும், திட்டங் களுக்குக் கடன்களை அரசு வழங்கி வருவதும் பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

மொத்தத்தில், இந்த நிதிநிலை அறிக்கை நாம் வாழுகின்ற இந்த சகாப்தத்தின் உரிமைச் சாசனம் ஆகும். ஏனெனில், மானியக் கோரிக்கைகள் அனைத்துமே அமைதியான சமூகப் புரட்சியை உண்டாக்கத் திட்டங்களை தன்னகத்தே அடக்கி வைத்திருக்கின்ற அத்தியாயங்கள் ஆகும்.



1978 மார்ச் 6] [திரு. செ. செம்மலை]

கொறுத்தவரை கைத்தறி மானியக் கோரிக்கையைப் பல்வேறு பிரச்னைகளையும் மானியக் கோரிக்கையில் அடக்கி, அதைத் தீர்வுகாண அரசு எடுத்திருக்கின்ற முயற்சிகளைத் தெளிவாகவும், மதி நுட்பத்துடனும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கிறார். அதற்காக நான் நெசவாளர்களின் சார்பாக, பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

* மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, கைத்தறி, நெசவுத் தொழில் கதர், கிராமத் தொழில்பற்றிய கொள்கை விளக்கத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை இந்தப் பேரவையிலே தெரிவித்திருக்கிறார்கள்.

இங்கே பல்வேறு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்து அவற்றின்மீது அவர்கள் தங்களுடைய கருத்துக்களை வலியுறுத்தி, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக் கிறார்கள். அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றி யறிதலையும் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிற முயற்சியிலே பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்ன மைக்கு, என்னுடைய நன்றியையும் பாராட்டுகளையும் நான் தெரி வித்துக் கொள்ளுகிறேன்.

இங்கே வலியுறுத்திப் பேசிய அனைத்து உறுப்பினர்களும் நெசவுத் தொழிலிலே இன்று நிலவிவருகிற பொதுப்படையான சிக்கல் குறித்து தங்களுடைய கருத்துக்களை எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய கருத்துக்களை தனிமைப் படுத்தி, அவர்களுடைய பெயர்களைச் சுட்டி, அந்தக் கருத்துக் களுக்குப் பதிலாக நான் சொல்ல விரும்பாமல், ஒட்டுமொத்தமாக இந்தத் தொழிலில் இப்பொழுது ஏற்பட்டிருக்கிற பிரச்னைகள் என்ன? இவற்றைத் தீர்ப்பதிலே, தமிழக அரசு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையிலே, என்னென்ன திட்டங்களைத் தயார் செய்து இன்றைக்கு நடை

[திரு. கே. இராஜா முகமது] [1978 மார்ச் 6

முறைப்படுத்துகிறது என்பதை மிகவும் சுருக்கமாகச் சொல்லி, மானியக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே வலியுறுத்திய அத்தனை உறுப்பினர்களும், குறைந்த பட்சக் கூலியை நெசவாளர்களுக்குக் கொடுக்கச் சட்டம் இயற்ற வேண்டுமென்ற ஒரு கருத்தை இங்கே வலியுறுத்தியிருக்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது எல்லாம், இங்கே நெசவாளர்களுக்கு நாம் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக, நியாயமான கூலிகளைக் கொடுத்து வருகிறோம். அதே நேரத்தில், தனியார் துறையில், வேலை பார்க்கிற நெசவாளர் களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலே கொடுக்கிற கூலி கொடுப்ப தில்லை. எனவே, அங்கே குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்கக்கூடிய சட்டத்தை இந்த அரசு பரிசிலனை செய்துவருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுறவுத் துறையிலே உற்பத்தியாகிற துணிகளைப் பொதுவாகக் கொள்முதல் செய்கி காலம், ஒவ்வொரு குறிப்பிட்ட பண்டிகைகளை ஒட்டி வருவதனால் இடைப்பட்ட காலங்களிலே நிரந்தரமான தேக்கங்கள் ஏற்படுவதை இங்கே மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாட கூட்டுறவு சங்கங்களை அமைக்கின்றபொழுது அந்தச் சங்க களுக்கு எப்படிப்பட்ட பிரச்னைகள் எல்லாம் வரும் என் தெரிந்துதான், அந்தச் சங்கங்களுக்குக் கூட்டுறவு உற்பத் விற்பனைச் சங்கம் என்று பெயரைக் கொடுத்திருக்கிறோ தனியார் துறையிலே உற்பத்தி செய்கிறார்கள். உடனுக்குட விற்பனை செய்கிறார்கள்.

அதேபோல், கூட்டுறவுச் சங்கத்திலே ஏன் விற்பனை ஆகவில்லை யென்று கேட்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், இந்த விற்பனைத் தேக்கத்திற்கு உள்ளாகிற கூட்டுறவுச் சங்கங்களில், அந்தச் சங்கங்களை நடத்திச் செல்கிற தலைவர்களும், இயக்குநர்களும் பெருமளவு துணை நின்று, அச்சங்கங்கள் உற்பத்தி செய்கிற துணியில் 50 சதவீதத்தை விற்பனை செய்வதில், அவர்கள் பங்கு



1978 மார்ச் 6] [திரு. கே. இராஜா முகமது]

பெற வேண்டும். அப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் ஒட்டுமொத்தமாக கூட்டுறவுச் சங்கங்களில் தலைவர்களையும், நிர்வாக இயக்குநர் களையும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறோம்.

அதைப்போல இங்கே அதிகமான விற்பனை நிலையங்களை உருவாக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தார்கள். கொள்கை விளக்க அறிக்கையிலே தெளிவாக குறிப்பிடப்பட்டிருக் கிறது. மேலும் 100 கடைகளை, கோ ஆப்டெக்ஸ் மூலமாகத் திறப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

ஏற்கனவே சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு துணி விற்பனையிலே மிகப் பெரிய மாறுதலை ஏற்படுத்தியிருக்கிறோம். எந்த ஆண்டும் எந்த அரசும் சாதிக்காத முறையில் கூட்டுறவுத் துறையின் மூலம், குறிப்பாக கோ ஆப்டெக்ஸ் மூலம், வெளி நாடுகளுக்கு நாமே நேரடியாக ஏற்றுமதி செய்கிற முயற்சியிலே, மிகப் பெரிய வெற்றியை ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதற்கு முன்பு இப்படிப் பட்ட ஏற்றுமதியை சில லட்சம் ரூபாய்க்குத்தான் செய்து வந்தார்கள். அப்படிச் செய்துவந்த நிலைமையை மாற்றி இன்றைக்கு 2 கோடி ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்பினை இந்த கோ ஆப்டெக்ஸ் பெற்றிருக்கிறது. இந்த ஏற்றுமதியிலே நாம் மிகப் பெரிய வளர்ச்சியினைப் பெறும்போது, இந்தத் துணித் தேக்கங்கள் அவ்வளவாக இராது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்வேறு பகுதிகளில் நம்முடைய விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. இதனை நாம் அதிகமான அளவுக்கு துணிகளைக் கொள்முதல் செய்ததைப்போல, விற்பனையையும் விரிவுபடுத்து வதற்கு இன்றைக்குப் பல்வேறு திட்டங்களை இந்த அரசு எடுத்து வருகிறது, செயல்படுத்துகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதிலே முதற்கட்டமாக 800-க்கு மேற்பட்ட சாதாரண கடை நிலை ஊழியர்களாக இருந்தாலும் சரி, ஊழியர்களாக இரு தாலும் சரி, விற்பனையாளர்களாக இருந்தாலும் சரி, அல்ல

[திரு. கே. இராஜா முகமது] [1978 மார்ச் 6

மார்கெட்டிங் ஆபிசராக இருந்தாலும் சரி, அத்தனை பேருக்குமே எப்படி இந்த துணிகளை விற்பனை செய்ய வேண்டும், எப்படி நிர்வகிக்க வேண்டும் வாங்க வருபவர்கள் நம்மிடையே வாங்கி செல்கிற அளவுக்கு எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்ற பயிற்சியை, கூட்டுறவு பயிற்சி நிலையம் மூலமாக பயிற்சி கொடுக்கிற பெரிய திட்டத்தை இன்றைக்குச் செயல்படுத்துகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் குறிப்பிட்டதைப் போல, 1962-வது ஆண்டிலே அறிமுகப்படுத்தப்பட்ட நெசவாளர் வீட்டு வசதித் திட்டம், இடைக்காலத்திலே நிறுத்தி வைக்கப்பட்டு கைவிடப்பட்டு இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவர் அரசு நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டுகிற திட்டத்தை, கிராம வளர்ச்சித் திட்டத்துடன் இணைத்து, அவர்களுக்கும் வீடுகள் கட்டுகிற ஒரு பெரிய திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

அதைப் போலவே, பல்வேறு சமூகநல பாதுகாப்புத் திட்டங்களை இன்றைக்கு இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

உதாரணத்திற்கு ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு காசநோயால் பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர்கள், பெரும் பகுதியினர் 70 சதவிகிதத்தினருக்கு மேற்பட்டவர்கள் நெசவுத் தொழிலிலே ஈடுபட்டவர்கள் என்பதை புள்ளிவிவரங்களிலே கண்டறிந்து, எங்கு எங்கு நெசவாளர்கள் பெருமளவு இருக்கிறார்களோ அந்தப் பகுதிகளுக்கு நேரடியாக நடமாடும் மருத்துவ ஊர்திகளை அனுப்பி அவர்களைப் பரிசோதனை செய்து, அவர்களுக்கு இலவச சிகிச்சை அளிப்பதற்காக, நடமாடும் மருத்துவமனைகளை நெசவாளர்களிடம் நேரடியாக அனுப்பிவைக்கின்ற ஒரு பெரும் திட்டத்தை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

அதைப்போல நெசவாளர்களின் வேறு சில பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு ஆயுள் காப்புறுதி கழகத்தின் மூலமாக அந்தத் தொகையை உயர்த்தவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அதையும் கருத்தில் கொண்டு அதற்கான திட்டங்களை நாம் செயல்படுத்தி வருகிறோம்.



1978 மார்ச் 6] [திரு. கே. இராஜா முகமது]

வெட்டுத்தீர்மானங்களை நான் ஒரு முறை பார்த்தேன். ஒன்றைத் தெளிவு படுத்தியிருக்கிறீர்கள். அரசு பல்வேறு துறைகளின் மூலமாக உற்பத்தி செய்யக்கூடிய கதர், கைத்தறி கிராமப் பொருள்களை அரசே வாங்கி விற்கவேண்டும் என்று கேட்டிருக்கிறீர்கள்.

ஏற்கனவே நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேசுகின்ற போதும் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். இந்த அரசு பல்வேறு துறைகளின்மூலமாக, இலாகாகள் மூலமாக அங்கே உற்பத்தி செய்கிற பொருள்களை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த மானியத்தின் மீது வாக்கெடுப்பு முடியும் வரை, சபையின் அனுமதியோடு நேரத்தை நீட்டிக்கிறேன்.

(பிற்பகல் 1-30)

**(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)**

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** இந்த அரசு ஒரு மிகப்பெரிய வாங்கும் நிறுவனமாக—லார்ஜஸ்ட் கன்ஸ்யூமராக மாறி—பல்வேறு துறைகளிலே உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை வாங்கி பாதுகாப்பு அளிக்கும் என்ற முறையில் நான் கூறிக்கொள்கிறேன். நம்முடைய துறைகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் கைத்தறித் துணியாக இருந்தாலும் சரி, கதர்த் துணியாக இருந்தாலும் சரி, கிராமப்பொருள்களாக இருந்தாலும் சரி அவைகளையெல்லாம் அரசாங்கத்தின் பல்வேறு இலாகாகள் மூலமாக தேவைப்படுகின்றவற்றை வாங்கி அந்தத் தொழிலுக்கு ஒரு பெரிய பாதுகாப்பை அளிக்கும் என்ற செய்தியை — இங்கே செய்தி என்று கூற முடியாது — அதை ஒரு உரிமைச்சாசனம் என்று சொல்லலாம் — அதை கொள்கை விளக்கமாக அறிவித்துச் சொல்லி, அதை மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

சொர்ணம் அவர்கள் பேசுகின்றபோது, சேலத்தில் இருக்கும் கூட்டுறவு மத்திய வங்கி துணிக்கொள்முதலை செய்தபின்னும், கூட்டுறவு மத்திய வங்கி துணிக்கொள்முதலை செய்தபின்னும், கடன் வசதி

[திரு. கே. இராஜா முகமது] [1978 மார்ச் 6

தருகிறார்கள். அது பல்வேறு மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் குறிப்பிட்டதுபோல், எல்லா மாவட்டங்களுக்கும் அந்த முறையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுத்து நிறைவேற்றும் என்று சொல்லிக்கொண்டு, இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகுதான் நசிந்து கிடக்கும் இந்தத் தொழிலுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மட்டுமன்றி ஒவ்வொரு துறையிலும் இருக்கும் பல்வேறு பிரச்னைகளைத் தீர்த்திருக்கிறது என்று எடுத்துக்கூறி, இங்கே கொடுக்கப்பட்டு இருக்கும் வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்று, இந்த மானியக்கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. அடுத்து, மானியக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் ரெ. வீ. சவுந்திரராஜன், எம். ஏ. லத்தீப் ஆகியவர்கள் மானியக்கோரிக்கை எண் 26-க்கு வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக்கோரிக்கை எண்: 26 — 'கைத்தறியும், நெசவுத் தொழிலும்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,15,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

மானியக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திருவாளர்கள் ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரெ. வீ. சவுந்தரராஜன் ஆகியவர்கள் மானியக் கோரிக்கை எண் 27-க்கு கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.



1978 மார்ச் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,02,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.34 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

இணைப்பு—I.

[..18..ம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினு எண். 408-க்கான விடையைக் காண்க.]

| வரிசை எண்ணும், தீர்மானமும். (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை. (2) |
|---|---|
| 1 ஒரு ஆண்டு நிகர வருமானம் ரூபாய் 5,000 வரை உள்ள கிராமப்புற மக்களும், அதே அளவு வருமானமுள்ள நகர்ப்புற மக்களும் தனியார்களிடம் பெற்றுள்ள கடன்கள் பூராவும் ரத்துச் செய்யப்பட வேண்டும். அதோடு மேற்கண்டவர்கள் ஈட்டுக் கடையில் பொருள்களை (நகைகள், பத்திரங்கள்) அடகு வைத்து வாங்கியுள்ள கடன்கள் முழுவதையும்ரத்துச் செய்து, அடகு வைத்துள்ள பொருள்களை இலவசமாகத் திருப்பிக்கொடுத்துவிட வேண்டும். | தீர்மானங்கள் உரிய நேரத்தில் அரசின் கருத்தில் கொள்ளப்படும். |
| 2 ஒரு ஆண்டு நிகர வருமானம் ரூ. 5,000-க்கு மேலே உள்ளவர்கள் பெற்றிருக்கும் கடனுக்கு இதுவரை அவர்கள் செலுத்தியிருக்கும் வட்டியை அசலுக்கு வரவு வைத்துக் கொண்டு, மீதி வரும் அசலின் பாதியை ரத்துச் செய்துவிட்டு பாக்கியுள்ள கடனை 10 ஆண்டு சம தவணையில் பெற்றுக் கொள்ள வேண்டும். | -டி- |



| | |
|---|---|
| 3 கூட்டுறவு, நிலவள வங்கி, தேசவுடைமையாக்கப்பட்ட வங்கி, அரசு ஆகியவைகளிடம் கிணறுகள் வெட்ட கடன் வாங்கி கிணறுகள் வெட்டியபின் தண்ணீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் கிணறுகள் வெட்டுவதற்கு வாங்கியுள்ள கடன்கள் முழுவதையும் ரத்துச் செய்ய வேண்டும். | நிலவள வங்கியின் கடன் வாங்கி கிணறுகள் வெட்டிய பின் தண்ணீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் பயனற்ற கிணறுகளுக்கான நிதியிலிருந்து உதவ அரசு விதிகளை அங்கீகரித்து அமுல்படுத்தி வருகிறது. |
| 4 வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விதை, உரம், பூச்சி மருந்து போன்றவைகளுக்காகவும் விவசாயச் செலவிற்காகவும் வாங்கியுள்ள கூட்டுறவு அரசு கடன்கள் முழுவதையும் ரத்து செய்ய வேண்டும். | வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொடுக்கப்பட்ட குறுகிய கால கடன், 36 பைசாவும் அதற்குக் குறைவாகவும் அணாவாரி அறிவிக்கப்பட்டிருக்கும் இடங்களில் மத்திய கால கடனுக மாற்றம் செய்யப்பட்டு வசூலிக்கப்படுகிறது. கடன்களை தள்ளுபடி செய்ய சட்டத்தில் விதிகள் இல்லை. |
| 5 1386-ம் பசலிவரை உள்ள குத்தகை, வார பாக்கிகள் முழுவதும் ரத்துச் செய்யப்பட வேண்டும். | இந்தத் தீர்மானம் அரசு வருவாய்த் துறை சம்பந்தப்பட்டதாதலால் அந்தத் துறைக்கு அனுப்பப்பட்டு அதன் பரிசீலனையில் இருந்து வருகிறது. |
| 6 கூட்டுறவுத்துறையிலுள்ள பிணைக் கடன்களையும் தனியார் துறையிலுள்ள மோசடிக் கடன்கள் முழுவதையும் கிராம அளவில் மக்கள் கமிட்டி அமைத்து கண்டுபிடித்து ரத்துச் செய்ய வேண்டும். | இந்தத் தீர்மானத்தின் நகல் கூட்டுறவுப் பதிவாளரின் அறிக்கைக்காக அவருக்கு அனுப்பப்பட்டு பதில் எதிர்பார்க்கப்படுகிறது. |

| வரிசை எண்ணும் தீர்மானமும் (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை (2) |
| --- | --- |
| 7 கூட்டுறவுச் சங்கங்கள், நிலவள வங்கிகள் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள், அரசு நிறுவனங்கள் ஆகிய பல்வேறு ஸ்தாபனங்களின் கீழ் விவசாயிகளுக்கு தனித்தனியே கடன்கள் வழங்கும் முறை மாற்றப்பட்டு ஒரே அமைப்பின் கீழ் உரிய காலத்தில் தேவையான கடனை விவசாயிகளுக்கும், குத்தகை வார விவசாயிகளுக்கும், விவசாய தொழிலாளர்கள், பண்ணை ஆட்கள், பருவகாரர்கள் (நீர்பாய்ச்சிகள்) கிராமக் கைவினைஞர்கள் ஆகிய அனைவருக்கும் ஆண்டு 1-க்கு ரூ. 100-க்கு 6½ சதவிகித வட்டிக்கு கடன் கொடுக்க வேண்டும். இவர்களுக்கு கடன் கொடுப்பதற்கு சொத்து ஜாமீன் கோரக் கூடாது. | குறுகிய கால கடன் மற்றும் மத்திய கால கடன் நீண்ட கால கடன்களுக்கான தனித்தனி அமைப்புகளும், இதர அரசு நிறுவனங்கள் மற்றும் அரசுடைமை வங்கிகளும் தற்போது கடன்கள் வழங்கி வருகின்றன. இந்த வழிகளில் கடன்கள் வழங்கும் முறைகளும் விதிகளும் திருப்திகரமான முறையில் இயங்கி வருவதால், இந்த அமைப்புகளை ஒருங்கிணைக்கும் அவசியம் ஏதும் இல்லை. மற்றபடி குறுகிய கால மத்திய கால கடன்கள் இப்போதும் குறிப்பிட்ட அளவுக்கு வழங்கப்படுகின்றன. வட்டி விகிதங்கள் இந்திய சேம வங்கியின் வட்டி விகிதங்களையொட்டியே அமைந்திருக்கின்றன. அவைகளைக் குறைக்க வழியில்லை. |
| 8 கூட்டுறவு கிராம நாணயச் சங்கங்களில் ஆண்டு முழுவதும் குடும்பச் செலவு, திருமணம், மரணம் ஆகிய சடங்குகளுக்கு தேவையானபோது கடன் கொடுக்க வேண்டும். அத்துடன் நகைகள், பாத்திரங்கள் அடமானம் வைத்து கடன் வாங்க வசதி செய்து கொடுக்க வேண்டும். | இப்போதுள்ள விதிகளின்படி கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் அங்கத்தினர்களுக்கு அவர்கள் சொந்த பொறுப்பில் திருமணம் மற்றும் மருத்துவச் செலவிற்கு ரூ. 250-க்கு மேற்படாமலும் ஈமச் சடங்குகளுக்கு ரூ. 75-க்கு மேற்படாமலும் கடன்கள் வழங்கி வருகின்றன. ரூ. 2,000-க்கு மேற்படாமல் தங்கநகை மற்றும் வெள்ளி பாத்திரங்களின் அடகின் பேரில் கடன்கள் வழங்கப்படுகின்றன. |



| வரிசை எண்ணும் தீர்மானமும் (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை (2) |
| --- | --- |
| 9 கூட்டுறவு ஸ்தாபனங்களில் கொடுக்கும் கடன்களுக்கு அபராத வட்டி விதித்து வசூலிக்கும் முறை ரத்து செய்யப்பட வேண்டும். | கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்கள் குறித்த தவணையில் கடனைத் திருப்பிச் செலுத்தாவிட்டால் அபராத வட்டி விதிக்கப்படுகிறது. அபராத வட்டி வசூலிக்காவிட்டால், கடனைத் திருப்பச் செலுத்துவதில் அவ்வளவு அக்கறை இருக்காது. சங்கத்தின் நிதி நிலைமை பாதிக்கப்படும். எனவே இந்தத் தீர்மானத்தை ஏற்க இயலாது. |
| 10 கூட்டுறவு கடன் பாக்கிகளை வசூலிக்க உற்பத்தி கருவிகள், மாடுகள், இஞ்சின் மோட்டார் பம்புசெட், நிலம், வீடு போன்றவைகளை ஜப்தி செய்வதை தடை செய்ய வேண்டும். | ஜப்தி செய்வது, அதில் கடைப் பிடிக்க வேண்டிய விதி முறைகள் பற்றி தமிழ் நாடு கூட்டுறவு சட்ட விதிகளில் (விதிகள் 59–83) குறிப்பிடப்பட்டிருக்கிறது. |
| 11 கூட்டுறவு நாணய சங்கங்கள் மூலம் கொடுக்கும் கடன்களுக்குக குறுகியகால கடன் என்பது மூன்று ஆண்டு என்றும், நீண்டகால கடன் என்பது பத்து ஆண்டு என்றும் கடனுக்காக காலக்கெடு நிச்சயிக்க வேண்டும். | உழவர்கள் தமது விவசாயத்தின் மகசூலிலிருந்து கடனைத் திருப்பச் செலுத்தும் வசதிக்காகவே குறுகிய காலக் கடன் என்று வழங்கப்படுகிறது. சாதாரணமாக ஒரு ஆண்டுக்குள் பயிர்விளைந்து மகசூல் பெறக் கூடுமாதலால் பயிர்க்கடன் போன்ற குறுகிய கால கடன்களுக்கு திருப்பித்தர ஒரு ஆண்டு என்ற அவகாசம் போதுமானதே. நீண்டகாலக் கடன் என்பது என்ன காரியத்திற்காகக் கடன் பெறப்படுகிறது என்பதைப் பொறுத்து ஏழு ஆண்டு முதல் பதினைந்து ஆண்டு வரை திரும்பச் செலுத்த அவகாசமளிப்பதாகும். இந்த விதி முறைகளை மாறுதல் செய்யத் தேவையில்லை. |

| வரிசை எண் (1) | தீர்மானம். (2) | எடுக்கப்பட்ட நடவடிக்கை. (3) |
|---|---|---|
| 12 | தன் சொந்தப் பணத்தை வட்டிக்குக் கொடுத்து வாங்கும் நபர்களைக் கூட்டுறவு வங்கி ஸ்தாபனங்களில் உறுப்பினர்களாக சேர்க்கக்கூடாது. | கூட்டுறவு சங்கப் பதிவாளரின் குறிப்புரைகள் கோரப்பட்டு அவை எதிர்பார்க்கப் படுகின்றன. |
| 13 | அடகுக் கடைக்காரர்களுக்கு தேசவுடைமை யாக்கப்பட்ட வங்கிகளிலும், கூட்டுறவு வங்கிகளிலும் நகை அடமானம் வைத்து கடன் வாங்க அனுமதிக்கக்கூடாது. | கூட்டுறவு சங்கப் பதிவாளரின் குறிப்புரைகள் கோரப்பட்டு அவை எதிர்பார்க்கப் படுகின்றன. |
| 14 | கூட்டுறவுத் துறை நிர்வாகப் பொறுப்பின் ஏழை, மத்திய தர விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு 75 சதவிகித இடம் வழங்க வேண்டும். | கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் குறிப்புரைகள் கோரப்பட்டு அவை எதிர்பார்க்கப் படுகின்றன. |
| 15 | கைத்தறித் தொழிலாளர்கள், சிறுவர்த்தகர்கள், தொழிலதிபர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள், ஆலைத் தொழிலாளர்கள், தினக் கூலித் தொழிலாளர்கள் அனைவருக்கும் தேவையான கடன்களை அரசுடமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் கொடுத்து உதவ வேண்டுமென்று மத்திய மாநில அரசுகளை இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது. | தீர்மானம் பொதுப்படையாக உள்ளது. |



## இணைப்பு II,

[113-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### மானியக் கோரிக்கை எண் 26.

### கைத்தறி—பஞ்சாலைத் தொழில்.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

### 1. முன்னுரை.

நமது நாட்டின் மிகப் பெரிய குடிசைத் தொழில் கைத்தறி நெசவுத் தொழிலேயாகும். பருத்தித் துணிக்கான தேவையில் மூன்றில் ஒரு பங்கு கைத்தறி துணி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படுகின்றது. தொழில்களில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக மிகப் பெரிய அளவில் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது கைத்தறித் தொழிலே. துணி உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெருமளவு மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற கைத்தறித் துறை படிப்படியாக வளர்ச்சி பெறச் செய்வது மத்திய அரசு அறிவித்துள்ள புதிய தொழிற்கொள்கையின் குறிக்கோளில் முக்கிய அம்சமாகும்.

2. இந்திய நாட்டில் உள்ள கைத்தறிகளின் மொத்த எண்ணிக்கை 35.63 இலட்சம், அவற்றில் 5.56 இலட்சம் தறிகள் தமிழ்நாட்டில் உள்ளன. ஆக, நாட்டிலுள்ள தறிகளின் மொத்த எண்ணிக்கையில் 1/6 பங்கு தறிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன; அதே சமயம், நாட்டின் மொத்த கைத்தறித் துணி உற்பத்தி அளவு 230 கோடி மீட்டர்; இதில் தமிழ்நாட்டில் மொத்த உற்பத்தியளவு 60 கோடி மீட்டர் ஆகும். அதாவது நாலில் ஒரு பங்கு தமிழ்நாடு உற்பத்தி செய்கின்றது. கைத்தறித் தொழிலை ஊக்குவிப்பதற்காக கீழ்க்காணும் குறிக்கோள்களுடன் புதிய திட்டங்களை அரசு வகுத்துள்ளது:—

அடுத்த சில ஆண்டுகளில் முக்கியமாகக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிரளிக்கும் திட்டத்தின் மூலமும், அதிக அளவில் விற்பனை வசதிகளை ஏற்படுத்தித் தருதல் வாயிலாகவும் கைத்தறி உற்பத்தியில் கூட்டுறவுத் துறையின் பங்கை உயர்த்துதல்;

கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல் எப்போதும் வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்தித் திறனை விரிவுபடுத்துதல் ;

புதுவகை வடிவமைப்புகளையும் ( Designs ) பாலிஸ்டர் துணிகள் உட்பட புதுவகைத் துணிகளையும் அறிமுகப்படுத்துவதன் மூலம் உற்பத்தியைப் பல்வகைப்படுத்துதல் ;

கைத்தறித் துணிகளின் விற்பனையைப் பெருமளவில் உயர்த்தும் பொருட்டு 'கோ-ஆப்டெக்ஸ்' விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கையை உயர்த்துதல் ;

தனியார் துறையைச் சேர்ந்த நெசவாளர்களின் பயனுக்காகத் திட்டங்களை நிறுவுதல் ;

வேலைப் பாதுகாப்பு, ஊதியம் முதலியவை தொடர்பாக நெசவாளர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கத்தக்க சட்டத்தை இயற்றுதல் முதலியன.

1977-78 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களின்கீழ் எய்திய சாதனைகள், 1978-79 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் ஆகியவற்றின் விவரங்கள் கீழ்க்காணும் பகுதிகளில் விளக்கப்பட்டுள்ளன.

1976-77 ஆம் ஆண்டில் தனியார் துறையைச் சேர்ந்த 37,416 நெசவாளர்கள், புதிதாக அமைக்கப்பட்ட 120 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும், ஏற்கனவே உள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். தவிரவும், சொந்தத்தில் தறி வைத்திராத 300 நெசவாளர்களுக்காக 3 நெசவாளர் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. 1976-77 ஆம் ஆண்டின் இறுதி வரை காஞ்சிபுரத்திலும் ஈரோட்டிலும் அமைந்த இரண்டு கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்கள் மூலமாகவும் கரூரில் அமைந்துள்ள ஏற்றுமதிக்கான கைத்தறி உற்பத்தித் திட்டம் மூலமாகவும் மொத்தமாக 2,000 நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. 1977-78 ஆம் ஆண்டில் மேற்கொண்டும்



30,000 நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். தமக்கென்று சொந்தத் தறியில்லாத 1,600 நெசவாளர்களுக்கென்று 16 நெசவாளர் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கக் கருதப்பட்டுள்ளன. 1976-77-ல் தொடங்கப்பட்ட மூன்று கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்கள் ஏற்றுமதிக்கான கைத்தறி உற்பத்தித் திட்டம் மூலம் மேலும் 2,500 தறிகள் சேர்க்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. நடப்பாண்டில், சேலம், மதுரை ஆகிய இடங்களில் மேலும் 2 கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்களும், குறிஞ்சிப்பாடியில் ஏற்றுமதிக்கான உற்பத்தித் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மதுரை, சேலம் ஆகிய இடங்களில் ஒவ்வோரிடத்திலும் 5,000 தறிகளும், குறிஞ்சிப்பாடியில் 1,000 தறிகளும் கொண்டதாக இறுதியில் அமையும். 1978-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் இப்புதிய திட்டங்களில் 2,000 தறிகள் சேர்க்கப்படும்.

1978-79 ஆம் ஆண்டில் மேலும் 30,000 கூடுதல் கைத்தறிகளை கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் சொந்தத் தறியில்லாத 2,000 நெசவாளர்களுக்காக 20 தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்படும். 1978-79 ஆம் ஆண்டின் இறுதியில் 6 கைத்தறி மும்முர வளர்ச்சித் திட்டங்கள் ஏற்றுமதிக்கான உற்பத்தித் திட்டங்கள் ஆகியவற்றின் கீழ் வரும் தறிகளின் எண்ணிக்கை 13,300 ஆக உயரும்.

## 2. மூலப்பொருட்கள் வழங்குதல்.

### (1) கூட்டுறவு நூற்பாலைகள்.

மாநிலத்தில் தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பாலையின் இரண்டாவது ஆலை உட்பட 13 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றின் மொத்த நிறுவப்பட்ட திறன் சுமார் 2 இலட்சம் கதிர்கள் ஆகும். கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவைப்படும் பலதரப்பட்ட ரக நூல்களை இந்த ஆலைகள் மாதந்தோறும் சுமார் 5,000 பேல் அளவிற்கு உற்பத்தி செய்கின்றன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தலைமை அமைப்பாக இருக்கும் தமிழ்நாடு கைத்தறி

[1978 மார்ச் 6

நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்), நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் விநியோகம் செய்யும் பொருட்டு, நெசவாளர்கள் இருக்கும் முக்கியமான பகுதிகளில், 18 நூல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. 1978-79 ஆம் ஆண்டில், குடியாத்தம், கரூர் ஆகிய இடங்களில் நூல் விற்பனை நிலையங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மேற்படி 13 கூட்டுறவு நூற்பாலைகளில் ஏழு ஆலைகள் ஒவ்வொன்றும் அவற்றின் நிறுவுத்திறனை 25,000 கதிர்களாக ஏற்கனவே விரிவுபடுத்தியுள்ளன. ஏனைய நூற்பாலைகளும் அவற்றின் நிறுவுத்திறனை விரிவுபடுத்தி வருகின்றன. இவ்வாறு எல்லா கூட்டுறவு நூற்பாலைகளின் விரிவுபடுத்தும் திட்டங்கள் முடிவு பெற்றவுடன், அவற்றின் கதிர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்திலிருந்து 3 இலட்சமாக உயரும். இக்கூட்டுறவு நூற்பாலைகள் தற்போது, திங்கள் ஒன்றுக்கு சுமார் 5,000 பேல்கள் உற்பத்தி செய்கின்றன. விரிவாக்கத் திட்டம் முடிவுற்றதும், இவற்றின் உற்பத்தி திங்கள் ஒன்றுக்கு சுமார் 8,500 பேல்களாக உயரும். கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர்களுக்குத் தேவைப்படும் நூலின் அளவு தோராயமாக திங்கள் ஒன்றுக்கு 9,000 பேல்களாக உயருமாதலால் இந்த அதிகத் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு இக்கூட்டுறவு நெசவாலைகளை விரிவுபடுத்துவதன் மூலமும், நவீனமயமாக்குவதன் வாயிலாகவும் எதிர்பார்க்கப்படும் கூடுதல் உற்பத்தி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளை நிறைவு செய்யப் போதுமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கூட்டுறவு ஆலைகளில் பயன்படுத்தப்படும் பருத்தி, உற்பத்தியாகும் நூல் ஆகியவற்றின் தரத்தைச் சோதனை செய்யும் பொருட்டு ஒரு மத்திய ஆய்வுக் கூடம் ரூ. 8.25 இலட்சம் திட்டச் செலவில் சேலத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது. இந்த ஆய்வுக் கூடம் செயல்படத் தொடங்கியவுடன் தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள் யாவும் அவை உற்பத்தி செய்யும் நூல், பஞ்சு இவற்றின் தரத்தை சோதனை செய்ய இந்த ஆய்வுக் கூடத்தைப் பயன்படுத்திக் கொள்ளும்.



1978 மார்ச் 6]

கூட்டுறவு நூற்பாலைகளை நிர்வகிக்கும் பணியில், பஞ்சு வாங்குவதே மிக முக்கியமான பணியாக இருந்துவருவதால், இந்த ஆலைகளுக்குத் தேவைப்படும் பஞ்சினை உரிய காலத்தில் வாங்க, தகுந்த ஓர் அமைப்பை ஏற்படுத்துவது பற்றியும் அரசு ஆய்வு செய்து வருகிறது. இதனால் இந்த ஆலைகள் வாங்கும் மூலப்பொருள்களுக்கான செலவு குறையும். தரமான பஞ்சும் கிடைக்கும்.

(2) செயற்கை பட்டுநூல் விநியோகம்.

சேலம், மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் சில கைத்தறிகளில் சேலைகள் உற்பத்தி செய்ய பருத்தி நூலுக்கு அடுத்தபடியாக செயற்கைப்பட்டு நூல் பரந்த அளவில் பயன்படுத்தப்படுகிறது. இந்த நாட்டில் செயற்கைப் பட்டுநூல் உற்பத்தி செய்யும் எட்டு நூற்பாளர்களும், நெசவாளர்களும் சேர்ந்து அவர்களாகவே செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, பல்வேறு இடங்களில் உற்பத்தியாகும் செயற்கைப்பட்டு நூலின் மொத்த அளவில், ஒப்பந்தத்தில் ஒப்புக்கொண்ட அளவு செயற்கைபட்டு நூலைப் பல்வேறு இடங்களில் உள்ள நெசவாளர்களுக்கு வழங்கும் வகையில் அந்தந்தப் பகுதிகளிலுள்ள மண்டலக் குழுக்களுக்கு பம்பாயில் உள்ள மத்திய கமிட்டி ஒதுக்கீடு செய்கிறது. இந்த ஏற்பாட்டின் கீழ் உண்மையான நெசவாளர்கள் முறையான விலைகளில் செயற்கைப்பட்டு நூல்களைப் பெறவில்லையாதலால் இம்முறையைக் குறை கூறி ஏராளமான புகார்கள் வந்தன. மத்திய அரசிடம் மாநில அரசு பலமுறை முறையிட்டுக் கொண்ட பிறகு, கைத்தறி வளர்ச்சி ஆணையாளர் இதில் தலையிட்டு நூல் விநியோகிக்கும் பணியை மாநிலக் கைத்தறி துணை இயக்குநருக்கு மாற்ற ஏற்பாடு செய்தார். செயற்கைபட்டுநூல் விநியோகம் செய்வதைக் கவனிக்க சேலத்தில் தேவையான பணியாளர்களுடன் செயற்கைபட்டுநூல் பிரிவு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மண்டலக் குழுவினால் அனுப்பப்பட்ட நெசவாளர்கள் விண்ணப்பங்களிலும் பின்னர் கைத்தறி துறைக்கு நேரடியாக வந்த விண்ணப்பங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளபடி செயற்கைபட்டுநூல் தேவையின் உண்மைத் தன்மையை கண்டறியும் நோக்கத்தோடு, தறிகள் இருக்குமிடத்திற்கு

நேரடியாகச் சென்று பார்ப்பதன் மூலம் விண்ணப்பங்கள் முழுவதும் சரிபார்க்கப்பட்டு ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் தேவைப்படக் கூடிய செயற்கைபட்டுநூல் எவ்வளவு என்று சரியாக முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தேவைகள் நிர்ணயிக்கப்பட்டதன் அடிப்படையில், தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட அளவு, விண்ணப்பதாரர்களுக்கு சரிசம விதத்தில் இப்பிரிவினால் விநியோகிக்கப்பட்டு வருகிறது. 1976 ஆம் ஆண்டு விலை உயர்வோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது வெளி அங்காடியில் செயற்கைபட்டுநூலுக்கான விலையும் குறைந்து விட்டது.

**(3) தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் கைத்தறி துணிகளை விற்பனை செய்தல்.**

"கோ-ஆப்டெக்ஸ்" என்று புகழ்பெற்ற தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தலைமைச் சங்கமாகும். எல்லா நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன. அரசின் பங்கு மூலதனமான ரூ. 2.14 கோடி யுடன் கோ-ஆப்டெக்ஸின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 2.63 கோடியாகும். இயல்பான வரம்பின்கீழ், ரூ. 500 இலட்சம் ரொக்கக் கடன் பெற கோ-ஆப்டெக்ஸ் நிறு வனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்துடன் பண்டிகை காலங்களில் பொதுமக்களின் அதிகபட்சத் தேவை களுக்கேற்ப, சிறப்புக்கடன் வரம்பின்கீழ் ரூ. 250 இலட்சம் பெறவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இச் சங்கத்தின் முக்கிய நோக்கம் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான மூலப்பொருட்களைப் பெற்று விநியோகிப்பதாகும்.

"கோ-ஆப்டெக்ஸ்" 18 நூல் கிடங்குகளை நடத்துகிறது. கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்த நூல்களைப் பெற்று, இவற்றின் மூலம் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் பகிர்ந்தளிக்கின்றன. இது தமிழ்நாட்டில் 226 சில்லறை கிளை விற்பனைப் பிரிவுகளையும் பிற மாநிலங்களில் 106 விற்பனைப் பிரிவு களையும் கொண்டுள்ளது. இவை தவிர, கமிஷன் ஏஜன்சி அடிப்படையில் கைத்தறித் துணிகளை விற்பதற்கு, நாட்டின் பல்வேறு பகுதிகளில் 200 தனியார் வணிகர்களை 'கோ-ஆப்டெக்ஸ்' நியமித்துள்ளது.



1977 ஆம் ஆண்டில் "கோ-ஆப்டெக்ஸ்" தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து 20 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்து, 23 கோடி மதிப்புள்ள துணிகளை விற்பனை செய்துள்ளது. 1978 ஆம் ஆண்டில், கைத்தறித் துணி விற்பனையை 25 கோடியாக உயர்த்தமுடியும் என நம்பப்படு கிறது. இதைக் கருத்தில்கொண்டு, "கோ-ஆப்டெக்ஸ்" கீழ்க் கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது :—

(அ) மாநிலத் தலைநகரங்களிலும், தமிழ்நாட்டிலும், பிற மாநிலங்களிலும் முக்கிய நகரங்களிலும் ரூ. 133 இலட்சம் செலவில் 100 புதிய விற்பனை நிலையங்களைத் திறத்தல், மேற் சொன்ன திட்டத்தின் கீழ், 40 புதிய விற்பனை நிலையங்கள் ஏற்கெனவே திறக்கப்பட்டுள்ளன. புதிதாக விற்பனை நிலையங்கள் திறப்பதைத் தவிர முக்கிய நகரங்களில் தற்போது இருக்கும் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தும் பணியையும் மேற்கொள்கிறது. இதுவரை 14 விற்பனை நிலையங்கள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன. 1976-77 ஆம் ஆண்டில், இத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மத்திய அரசும் மாநில அரசும் ரூ. 20 இலட்சம் நிதியுதவி வழங்கியுள்ளன. நடப் பாண்டில், இத்திட்டத்திற்காக ரூ. 50 இலட்சம் நிதியுதவி அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்தியாவிலுள்ள ஏற்றுமதியாளர்களின் வணிகத் தகவல் தேவைகளைக் கவனிப்பதற்கும் அயல்நாடுகளுக்கு கைத் தறித் துணியை நேரடியாக ஏற்றுமதி செய்யும் பணியை மேற் கொள்ளவும் ஏற்றுமதிப் பிரிவு ஒன்றை "கோ-ஆப்டெக்ஸ்" அமைத்துள்ளது. 1977 ஜூலை, ஆகஸ்ட் மாதத்தில், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு தூதுக்குழு ஒன்றினை "கோ-ஆப்டெக்ஸ்" அனுப்பியது. இத் தூதுக்குழு, சுமார் ரூ. 1 கோடி மதிப்புள்ள சட்டைத் துணிகள், துண்டுகள், கைலிகள் முதலியவற்றை ஏற்றுமதி செய்ய கேட்பு ஆணைகளைப் பெற்று வந்தது. இவைகளை நிறைவேற்றி வருகிறது. நாளடைவில் ஏற்றுமதி ரகத் துணிவகைகளை உற்பத்தி செய்வதற்காகக் கூட்டுறவு அமைப்பில் உள்ள கைத் தறிகளை "கோ-ஆப்டெக்ஸ்" மாற்றி வருகிறது. அதன் மூலம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் சுமார் ரூ. 5 கோடிக்கான ஏற்றுமதி

விற்பனையை படிப்படியாக எய்த இயலும் என்று நம்பப்படுகிறது. இந்த நோக்கங்களை எய்த, "கோ-ஆப்டெக்ஸ்" வெளிநாடுகளில் கிளைகளைத் திறக்கத் திட்டமிட்டுள்ளது.

(இ) புதிய 'டிசைன்களைக்' கண்டுபிடிக்கவும், தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள், உள்நாட்டு, ஏற்றுமதித் தேவைகளை நிறைவு செய்வதற்காகத் தங்களின் உற்பத்திப் பொருள்களைப் பன்மடங்காக்க உதவுவதற்கும், "கோ-ஆப்டெக்ஸ்" மாநில அரசிடமிருந்து பெற்ற ரூ. 3.5 இலட்சம் நிதியுதவியைக்கொண்டு மதுரையில் வடிவமைப்பு நிலையம் ஒன்றை அமைத்துள்ளது. தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, பூப்போடும் பெட்டி (Jacquards) போன்ற மேம்படுத்தப்பட்ட தேவைக் கருவிகளையும் "கோ-ஆப்டெக்ஸ்" அளித்து வருகிறது.

(ஈ) "பாலிஸ்டர்" கைத்தறி சேலைகள், சட்டைகள் ஆகியவற்றின் உற்பத்திக்கான ஏற்பாடு செய்துள்ளது. இவை அங்காடியில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ரகத் துணிகள் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெறத் தொடங்கியுள்ளன.

(உ) தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து உற்பத்திப் பொருள்கள் கொள்முதல் செய்வதை அதிகரிப்பதற்கும், விற்பனை வசதியைச் செய்து கொடுப்பதற்கும், போதுமான அளவிற்குக் கடன் பெற அதன் பங்கு மூலதனத்தை வலுப்படுத்திக் கொள்வதற்காகத் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பங்கு மூலதனத் தொகையாக ரூ. 20 இலட்சம் நிதியுதவி பெற்றுள்ளது.

(ஊ) நடப்பாண்டில், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதியுதவி பெற்று, ஆயத்த ஆடை தயாரிப்புத் தொழிற் பிரிவுகளை நிறுவ "கோ-ஆப்டெக்ஸ்" நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. இத்திட்டத்திற்காக ரூபாய் 17.73 இலட்சம் முதலீடு செய்யப்பட்டு, சென்னை, மதுரை, திருச்சி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் 125 தையல் இயந்திரங்களுடன் 3 தொழிற் பிரிவுகள் நிறுவப்பட்டு வருகின்றன.

**(1) ஈரோட்டிலுள்ள, தமிழ்நாடு கூட்டுறவு துணி செய்முறைக்கு உட்படுத்தும் பிரிவில் துணிகளைச் செய்முறைப்படுத்துதல் (Processing)**

பல ஆண்டுகளாகத் தமிழ்நாடு, கைத்தறித் துணி உற்பத்தியில் முதலிடம் வகித்து வந்துள்ள போதிலும் செய்முறைப்



படுத்தும் வசதிகள் குறிப்பாக அச்சிடும் வசதி, இம்மாநிலத்தில் போதிய அளவிற்கு மேம்பாடு அடையவில்லை. இந்தக் குறையைப் போக்க, தமிழ்நாட்டில் செய்முறைப்படுத்தும் வசதிகளை ஏற்படுத்த வலியுறுத்தப்பட்டு வருகிறது. நல்ல முறையில் தயாரிக்கப்பட்ட துணிக்கு கிராக்கி இருப்பதை அறிந்து அந்தந்தத் தேவையை நிறைவு செய்யும் வகையில் கைத்தறித் தொழில் மேம்படுத்தப்பட வேண்டும். இந்த ஏற்பாடுகளினால், கைத்தறித்துறை, 50 இலட்சம் மீட்டர் கைத்தறித் துணி, முழுமை பெற்றதாக வழங்கப்பட இயலும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதில், குறிப்பாக, அச்சிடப்பட்ட புடவைகளும், சட்டைகளும், மெருகூட்டப்பட்ட, சாயமிடப்பட்ட துணிகளும் அடங்கும். கதர் துணிகளை நேர்த்தியுடையதாக்குவதற்கும், அச்சிடுவதற்கும், இந்த செய்முறைப்படுத்தும் வசதிகள், கதர் தொழிலுக்கும் பயனுடையதாயிருக்கும். கைத்தறித் துறையில் உற்பத்தியைப் பெருக்க இந்த, அச்சிடப்பட்ட, நேர்த்தியான துணிகள் பெரிதும் உதவியாயிருக்கும்.

ஈரோட்டிலுள்ள, தமிழ்நாடு கூட்டுறவுத் துணி செய்முறைப்படுத்தும் ஆலை, துணி சலவை செய்தல், பளபளப்பாக்குதல், மெருகேற்றுதல், முதலியவற்றிற்கு நவீன இயந்திரங்களைப் பெற்றுள்ளது. துணிகளுக்குச் சாயமிடும் வசதிகளுடன் இந்த ஆலையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வசதிகளும் உள்ளன :—

| | |
|---|---|
| (1) சலவை செய்தல், வேலை நிறைவு செய்தல். | ஒரு மாதத்திற்கு 5 இலட்சம் மீட்டர். |
| (2) மெருகேற்றுதல். | ஒரு மாதத்திற்கு 2.5 இலட்சம் மீட்டர். |
| (3) முன் கூட்டியே சுருங்கச் செய்தல் (Evasetting) | ஒரு மாதத்திற்கு 2.5 இலட்சம் மீட்டர். |

இந்த சாயத் தொழிற்சாலை சமீபத்தில் நவீனப்படுத்தப்பட்டுள்ளது. நூல் சிட்டம், சாயப் பொறி ஒன்றுடன் இதனால், இதன் சாயமிடும் திறன், ஒரு நாளைக்குத் தயார் பத்து பேல்களுக்கு அதிகரித்துள்ளது. இந்த ஆலையின் பல்வேறு பிரிவுகளின் திறன்களையும் ஒன்றுக்கொன்று இசைவாக

இயங்கும் வகையில், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் ரூ. 22.50 இலட்சம் செலவில் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுது, இந்த ஆலை, திரைச் சீலைகளில் அச்சடிப்பதற்கென (Screen Prin.ing) தனிப்பிரிவு ஒன்றினையும் துவக்கியுள்ளது.

அதிகரித்துவரும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நவீன முறையில் சாயமேற்றும் வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு கூட்டுறவு துணி செய்முறைப் படுத்தும் ஆலை, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலுள்ள முக்கிய இடங்களில் ரூ. 60 இலட்சம் செலவில், 5 நவீன சாயத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு தேவையான நிதியுதவியினை தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய தென்மாவட்டங்களிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் செய்முறைப் படுத்தும் வசதிகளின் தேவைகளைக் கவனிப்பதற்காக ரூ. 22 இலட்சம் செலவில் மதுரையில் கூட்டுறவுத் துறையில் துணி செய்முறைப்படுத்தும் பிரிவு ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. ஈரோட்டில் ஏற்கனவே யுள்ள செய்முறைப் பிரிவும், மதுரை மாவட்டத்தில் தகுதியான இடத்தில் அமைக்கப்படவிருக்கும் செய்முறைப் பிரிவும், ஆக இரண்டு பிரிவுகள் உள்ளதால், கைத்தறித் துணிகள் செய்முறைப் படுத்தப்படுவதற்கும், வேலை நிறைவுபெறுவதற்கும், பம்பாய்க்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை. இதனால் காலம், உழைப்பு, செலவு பெருமளவில் சேமிக்கப்படுகிறது.

(5). கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள்.

மத்திய அரசு இரண்டு ஏற்றுமதி ரக உற்பத்தித் திட்டங்களையும், இரண்டு கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்களையும் இரண்டு தொழிற் பிரிவுகளுடன் நிறுவ அனுமதி அளித்துள்ளது. இத்திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு.



| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | சேர்க்கப் படவேண்டிய தறிகளின் எண்ணிக்கை. | திட்டத்தின் மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்). | சேர்க்கப் பட்ட தறிகளின் எண்ணிக்கை. | மாத உற்பத்தி அளவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், கரூர். | 1,000 | 40 | 400 | 5.00 |
| 2. கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம், காஞ்சீபுரம் தொழிற் பிரிவு. | 5,000 | 79 | 1,700 | 6.00 |
| 3. கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம், ஈரோடு தொழிற் பிரிவு. | 5,000 | 106 | 1,100 | 11.00 |
| 4. ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், குறிஞ்சிப்பாடி. | 1,000 | 32 | 100 | 0.75 |
| 5. கைத்தறி தீவிர வளர்ச்சிக் கூட்டுறவுத் திட்டம், மதுரை தொழிற் பிரிவு. | 5,000 | 120 | 250 | 1.50 |
| 6. கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம், சேலம் தொழிற் பிரிவு. | 5,000 | 86 | 180 | 1.50 |

[1978 மார்ச் 6

மேற்கூறிய திட்டங்களில் குறியிட்டளவாகக் குறிக்கப்பட்ட தறிகளைச் சேர்த்து அவற்றின் மொத்த தறிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்தத் திட்டங்களின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதில் பெரும் பிரச்சனையுள்ளது. உற்பத்தியின் ஒரு பகுதியை ஏஜெண்டுகள் மூலம் விற்பனை செய்வதற்காகத். திட்ட இயக்குநர்கள் தக்கநடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். மேலும், தமிழ்நாடு கைத்தறி நிதி வர்த்தகக் கழகம் மேற்படி கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு இம்மாநிலத்திலும், இதர மாநிலங்களிலும் 9 விற்பனை நிலையங்களை அமைத்துள்ளது. "கோ—ஆப்டெக்ஸ்" கைத்தறி—கை வினைப் பொருள் ஏற்றுமதிக் கழகம், தனியார் ஏற்றுமதியாளர்கள் சிலரிடமிருந்தும் பெற்ற தனிப்பட்ட ஆர்டர்களின் பேரில், அவர்களுக்குத் தேவைப்படக் கூடிய பொருள்களை உற்பத்தி செய்து வழங்கவும் இத்திட்டங்கள் நடவடிக்கை எடுக்கின்றன.

(6) மலிவு விலைத் துணித் திட்டம்

ஜனதா துணி என்று சொல்லப்படும் மலிவு விலைத் துணி திட்டத்தின்கீழ் வேட்டி, புடவைகள் தொடக்கத்தில் 1,000 தறிகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்டன. இவை, 1976-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ஆம் நாளன்று, முதல் விற்பனைச் செய்யப்பட்டன. இதன் பின்னர், தறிகளின் எண்ணிக்கை படிப்படியாக உயர்த்தப்பட்டு தற்சமயம் 15,000 தறிகள் மலிவு விலை வேட்டி, புடவைகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. இதுவரை, சுமார் 10.00 மில்லியன் மீட்டர் மலிவு விலைத் திட்டத்தின் கீழ் வேட்டிகள், புடவைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

மலிவு விலை வேட்டிகள் மற்றும் புடவைகள் விற்பனை இம்மாநிலத்திலும், வெளியிலும் உள்ள கோ-ஆப்டெக்சின் சில்லரை விற்பனை நிலையங்கள் மூலம் செய்யப்பட்டு வருகிறது. விற்பனை செய்யப்படும் மலிவுவிலை துணியின் சதுர மீட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் என்ற வீதத்தில் மத்திய அரசு, இதுவரை 75 இலட்சம் ரூபாய் உதவித் தொகை அளித்துள்ளது.



1978 மார்ச் 6]

60-ம் நம்பர் துணிகள் மற்றும் லுங்கிகள் தற்சமயம் இந்த மலிவுவிலை ரகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. மலிவுவிலை வேட்டிகள், புடவைகள், லுங்கிகள் உற்பத்தியை இம்மாநிலத்தில் மேன்மேலும் அதிகரிக்கத் தேவையான எல்லா நடவடிக்கைகளையும் கோ-ஆப்டெக்ஸ் மேற்கொண்டுள்ளது.

7. கைத்தறி ஒதுக்கீட்டுத் திட்டம் :

தற்பொழுது அமுலில் இருக்கும் கைத்தறி ஒதுக்கீட்டு திட்ட ஆணைகளைச் செயல்படுத்துவதில் பல தடங்கல்கள் இருப்பினும், விசைத் தறிகளின் மூலம் ஒதுக்கீட்டு ஆணைகள் மீறப்படுவது குறித்துக் கண்டுபிடித்து அவற்றுக் கெதிராக கிரிமினல் வழக்கு தொடர்வதற்கு கைத்தறி துணி நூல் இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 486 இனங்களில் 1940 விசைத் தறிகள் பயன்படுத்தப் பட்டு வந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டு, 165 இனங்கள் குறித்து வழக்குத் தொடரப்பட்டது. 114 இனங்களில் தண்டனை அளிக்கப்பட்டது. தற்சமயம் அமுலில் இருக்கும் மத்திய அரசின் ஒதுக்கீட்டு ஆணைகள் தெளிவாகயில்லை. ஆகையினால், விசைத்தறிகள் மூலம் இந்த ஆணைகள் மீறப்படுவது குறித்து திறம்பட நடவடிக்கைகள் எடுக்க இயல வில்லை. நமது அரசு, இதனை, மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றது. இதன் மீதான மத்திய அரசின் ஆணை எதிர்பார்க்கப்படுகிறது.

8. வெள்ள நிவாரணம் அளித்தல் :

தமிழ்நாட்டில் அண்மையில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளம் காரணமாக சுமார் 5,000 நெசவாளர்கள் தங்க ளுடைய வீடு, தறிகள் மற்றும் மூலப் பொருட்களை இழந் துள்ளார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக மாநில அரசு ரூ. 22 இலட்சம் வழங்கியுள்ளது. வீடு இழந்த நெசவாளர்களுக்கு ரூ. 500 வீதம் (ரூ. 300 கடனாகவும், ரூ. 200 மானியமாகவும்) வழங்கவும், தறிகள் இழந்தவர்களுக்கு ரூ. 125 வீதம் மானியம் வழங்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெச வாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக மத்திய அரசு அளித்துள்ள ரூ. 50 இலட்சத்திலிருந்து சுமார் ரூ. 20 இலட்சம் செலவில், வெள்ளத்தால் தறிகளை இழந்து பாதிக்கப்பட்டுள்ள நெசவாளர்களின் பயனுக்காக 10 தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் (Industrial

Weavers' Co-operative Societies) அமைக்கத் திட்டமிடப்
பட்டுள்ளது.

### 9. நெசவாளர்கள் நலன்

கூட்டுறவுத் துறையின் நெசவாளர்களின் பயனுக்
காக, தற்போது சேமிப்பு—பாதுகாப்புத் திட்டம் ஒன்று
செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ்
நெசவாளர்களின் ஊதியத்தில் 6 சதவீதத் தொகையை
இத்திட்டத்தில் செலுத்தினால் 6 சதவீதத் தொகையை
இத்திட்டத்தில் செலுத்தினால் அரசு 3 சதவீதத் தொகை
செலுத்துகிறது. இத்தொகைகளுக்கு 7 சதவீத வட்டி
அனுமதிக்கப்படுகிறது. இத்தொகையும் அதற்கான வட்டி
யும் இத்திட்டத்தின் கீழ் வரும் நெசவாளர்களின் நிதிக்
கணக்கில் சேர்ந்து வரும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக
தொகுதி கூட்டுறுதித் திட்டத்தின் கீழும் நெசவாளர்கள்
சேர்க்கப்பட்டுள்ளனர். நெசவாளர் ஒருவர் இறந்துவிட்
டால் அவரது கணக்கில் இந்நிதியில் சேர்ந்து வந்துள்ள
தொகையோடு 500 ரூபாயும் ஆயுள் கூட்டுறுதிக் கழகத்தால்
இறந்துவிட்ட அந்நெசவாளரின் சட்டப்படிக்கான வாரிசுக்
குக் கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தற்போது
57,000 நெசவாளர்கள் உள்ளனர். இந்த கூட்டுறுதித்
திட்டத்தின் கீழ் அதிகமான அளவுக்கு நெசவாளர்களைச்
சேர்ப்பதன் மூலம் இத்திட்டத்தை மேலும் பிரபலமாக
ஆக்குவதற்கான யோசனைக் குறிப்புகள் அரசின் ஆய்வில்
உள்ளன.

நெசவாளர்கள் வீட்டு வசதித் திட்டம் 1962-ஆம்
ஆண்டிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.
அத்திட்டத்தைத் தகுந்த முறையில் மாற்றியமைத்தும்,
கிராம வீட்டு வசதித் திட்டத்தை அதனுடன்
இணைத்தும் அத்திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கத் திட்ட
மிடப்பட்டுள்ளது. மாற்றியமைக்கப்பட்ட வீட்டு வசதித்
திட்டம் 1978—79 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்
படும். நெசவாளர்களுக்கு எலும்புருக்கி நோய் முதலி
யவை கண்டுள்ளனவா என்பதைக் கண்டறியப் பெருமளவில்
மருத்துவச் சோதனையிடுவதை மேற்கொள்வதற்காக, இயல்
மருத்துவப் பிரிவுகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
இப்பிரிவுகள் நெசவாளர்கள் அதிகமாக உள்ள இடங்
களுக்குச் சென்று நெசவாளர்களுக்கு மருத்துவச் சோதனை



யிடுதலை மேற்கொள்ளும். நோய் கண்டுள்ள நெசவாளர்
களுக்கு மருந்துகள் முதலியவற்றை வழங்குவதற்கான ஏற்
பாடுகள் சுமார் 20 இலட்சம் ரூபாய் செலவில் செய்யப்படும்.

### 10. தமிழ்நாடு கைத்தறி நிதி வர்த்தகக் கழகம்.

கூட்டுறவுத் துறையின் கீழ் வராத கைத்தறி நெசவாளர்
களுக்கு நிதியுதவி செய்யும் நோக்கோடு அமைக்கப்பட்ட
தமிழ்நாடு கைத்தறி நிதி வர்த்தகக் கழகத்திடம், மத்திய
அரசு பொறுப்பேற்கும் தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள்,
ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட திட்டங்களும் ஒப்படைக்
கப்பட்டுள்ளன. 1977 ஆம் ஆண்டில், இக்கழகம்
93.39 இலட்சம் ரூபாய் கடன் வழங்கியுள்ளது. வெவ்வேறு
வட்டி வீதத் திட்டத்தை இக்கழகம் மேற்கொண்டுள்ளது.
இத்திட்டத்தின்படி 1,000 ரூபாய் வரையிலான கடனுக்கு
12½ சதவீத வட்டியும், 5,000 ரூபாய் வரையிலான கடனுக்கு
13½ சதவீத வட்டியும் விதிக்கப்படுகிறது. இத்திட்டங்
களின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை
செய்வதற்கும், ஏற்றுமதி செய்யத்தக்க துணி ரகங்களை
வடக்கேயுள்ள ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கவும் இக்
கழகம் பல விற்பனைக் கூடங்களை அமைத்துள்ளது. 1977
ஆம் ஆண்டில், 91.17 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கைத்தறி
துணி இக்கழகத்தால் விற்பனை செய்யப்பட்டது.

1976 ஆம் ஆண்டில், தேய்மானத்திற்காக 88,000 ரூபாயை
ஒதுக்கிய பிறகு, தமிழ்நாடு கைத்தறி நிதி வர்த்தகக்
கழகத்திற்கு 68,000 ரூபாய் இழப்பு ஏற்பட்டது. 1977 ஆம்
ஆண்டிற்கான தணிக்கை விரைவில் முடிக்கப்படும்.

### 11. தமிழ்நாடு பொன் இழை ( Zari ) ஆலை.

தமிழ்நாடு பொன் இழை ஆலை 1971 ஆம் ஆண்டு
டிசம்பர் திங்களில் காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்டது.
பட்டு நெசவாளர்களுக்குத் தேவைப்படும் முக்கிய மூலப்
பொருளான பொன் இழையை உற்பத்தி செய்வதற்காகவே
இந்த ஆலை ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆலையின் பங்கு
மூலதனத்திற்கு, அரசு இதுவரை 7 இலட்சம் ரூபாய் முதலீடு
செய்துள்ளது. இப்பிரிவின் தற்போதைய உற்பத்தித்
திறன் ஆண்டு ஒன்றுக்கு 8,500 மார்க்கு பொன் இழையாகும்.
இந்தப் பிரிவு இந்திய அரசிடமிருந்து தங்க ஒதுக்கீட்டைப்
பெற்று வருகிறது.

உற்பத்தி செய்யப்படும் பொன் இழை முழுவதும் 'கோ-ஆப்டெக்ஸ்' மூலம் முக்கியமாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி இழையை ஒழுங்காகப் பெறும் பொருட்டு, இத் தொழிற் பிரிவு தமிழ்நாடு தொழிற் முதலீட்டுக் கழகத்திடமிருந்து பெற்ற ரூ. 9.00 இலட்சம் கடனுதவியுடனும், கோயம்புத்தூர் திருவாளர்கள் டெக்ஸ்டூல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடனும் வெள்ளி இழைத் தயாரிப்பு பிரிவு ஒன்றை நிறுவியுள்ளது. ஐந்து தட்டையாக்கும் இயந்திரங்களில் (Flattening Machines) உள்ள உருளைகளில் சில குறைபாடுகள் இருந்ததால் இப்பிரிவு இயந்திரங்களின் முழு நிறுவுத் திறனையும் பயன்படுத்த இயலவில்லை. எனவே 10 தட்டைப்படுத்தும் இயந்திரங்களில் 5 இயந்திரங்கள், 20 நூற்பு இயந்திரங்களில் 10 இயந்திரங்கள் மட்டுமே தற்போது செயல்படுகின்றன. இப்பிரிவு, மாதந்தோறும் சுமார் 200 மார்க்கு பொன் இழையைத் தற்போது உற்பத்தி செய்து வருகிறது. இக்குறையைப் போக்குவதற்கும் முழு நிறுவத்திறனைப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. நிர்வாகப் பணியாளர்களைக் குறைத்தல், ஏனைய நிர்வாகச் செலவுகளில் சிக்கன முறையைக் கொண்டுவருதல் ஆகியவற்றின் மூலம் இக்கழகத்தின் நிர்வாகச்செலவைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது.

(12). மூடப்பட்ட பஞ்சாலைகளை மீண்டும் திறத்தல்.

பஞ்சாலைத் தொழிலில் தொடர்ந்து ஏற்பட்ட மந்த நிலையின் காரணமாக, மாநிலத்தில் உள்ள பெரும் பாலான பஞ்சாலைகள் மிகவும் மோசமான நிதி இடர்ப் பாட்டில் உள்ளன. ஒரு சில ஆலைகள் மூடப்பட்டன. மூடப்பட்ட, நலிவுற்ற பஞ்சாலைகளின் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்வதற்கும், அப்பஞ்சாலைகளுக்கு மீண்டும் புத்துயிர் அளிப்பதற்குத் தேவையான வழி வகைகளைத் தெரிவிக்கவும், மாநில அரசு, டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களின் தலைமையில் 1976, ஜூலையில் மாநில அளவிலான குழு ஒன்றை அமைத்தது. மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட ஆலைகளின் நிலைமையை மதிப்பிடுவதற்காக, மத்திய அரசும், டாப்பாய் கூடுதல் பஞ்சாலை ஆணையாளர் தலைமையில் இது போன்ற ஒரு குழுவை அமைத்தது. மாநில அளவிலான குழுவும், மத்தியக் குழுவும் 38 ஆலைகளின் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்து பொருத்தமான பரிவுரைகளைச்



செய்துள்ளன. பெரும்பாலான பரிவுரைகள், பிரச்சினைகளை உடனடியாக தீர்த்து வைப்பது பற்றியவையாகும். எனவே, பஞ்சாலைகளின் நிதிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவற்றிற்கு நிதியுதவி அளித்து உதவுமாறு நிதியுதவி வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

1976, 1977 ஆம் ஆண்டுகளில், நிதி இடர்ப்பாடுகள், நிர்வாகக் குறைபாடுகள் முதலிய காரணங்களால் 17 பஞ்சாலைகள் மூடப்பட்டன. நடைமுதல் மூலதனத்திற்காக வங்கி கடன்களைப் பெறுவதற்கு உத்திரவாதம் அளித்தல், தொழில்கள் (மேம்பாடு முறைப்படுத்தல்) சட்டத்தின் கீழ் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் ஆலைகளின் நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளுதல் போன்ற அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகளினால் சுமார் 17,000 தொழிலாளர்கள் பணி புரியும் 14 ஆலைகள், 1977 பிப்ரவரி திங்களிருந்து 1978 பிப்ரவரி வரை மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. நலிவுற்ற 9 ஆலைகளுக்கு இதுவரையில் அரசு ரூ. 437 இலட்சம் வங்கிக் கடனுக்கு உத்தரவாதம் அளித்துள்ளது; ரூ. 30 இலட்சம் கடன் அளித்துள்ளது. நலிவுற்ற இந்தப் பஞ்சாலைகளை கடையீடின்றி நடத்துவதற்காக, ஏழு பஞ்சாலைகளை நிவாரண உதவி பெறும் நிறுவனங்களாக அரசு அறிவித்துள்ளது. இவ்வாறாக, தனித்தியங்கக் கூடிய, மூடப்பட்ட ஆலைகள் அனைத்தும், அரசு உத்திரவாத உதவியுடன் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. அரசு நியமிக்கும் இயக்குநர் மூலமாக, இவ்வாலைகள் செயல்பட்டு வருவதை அரசு கூர்ந்து கண்காணித்து வருகிறது. இந்த இயக்குநர், கொள்முதல் விற்பனை அலுவல்களைக் கட்டுப்படுத்துகிறார். நலிந்த ஆலைகளுக்கு நீண்ட கால அடிப்படையில் முக்கியமாக கடந்த காலத்தில் சேர்ந்து வந்த கடன்களையும், அவற்றின் மீதான கடும் வட்டியையும் குறைப்பதன் மூலம் அவற்றிற்குப் புத்துயிரளிக்க அவசியமான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது. இப்பிரச்சினை குறித்து ஆய்ந்து, இத்தகைய ஆலைகளுக்கு நீண்ட கால அடிப்படையில் புத்துயிர் ஊட்டுவதற்கான திட்டத்தை, தொழி

நுட்ப வகையிலான வழிவகைகளைப் பரிந்துரைக்க இந்திய
ரிசர்வ் வங்கி, தென்னிந்திய துணி ஆலை ஆராய்ச்சிக்
கழகம் (SITRA) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்
கழகம் (TIIC) ஆகியவற்றின் பிரதிநிதிகள் கொண்ட
குழு ஒன்று நியமிக்கப்பட்டு உள்ளது.

### 13. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம்.

சென்னையிலுள்ள, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம்,
1969 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில், தமிழ்நாடு அரசு
முழு உரிமை பெற்ற நிறுவனமாக சட்டப்படி இணைக்கப்
பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம், மூடப்பட்ட
நலிந்த பஞ்சாலை நிறுவனங்களை எடுத்துக் கொள்வதும்,
வேலையினின்று வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களுக்கு
மீண்டும் வேலை வாய்ப்பளிப்பதுவும் ஆகும். புதிதாக
இயந்திரங்களை வாங்குவதற்கும், ஏற்கெனவே உள்ள
இயந்திரங்களைப் புதுப்பிப்பதற்கும் தேவையான நிதி
யுதவி அளிப்பதும், நடைமுறை மூலதனத்துக்குத் தொடக்க
நிதியுதவி அளிப்பதும் இக்கழகத்தின் பிற நோக்கங்
களாகும்.

இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம்
ரூ. 500 இலட்சமாகும். இதன் செலுத்தப்பட்ட பங்கு
மூலதனம் ரூ. 90 இலட்சமாகும். இது முழுவதும்
தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டது. இத்துடன், நவீனப்
படுத்துவதற்கும், நடைமுறை மூலதனத் தொடக்கச்
செலவிற்கும் பயன்படுத்தும் பொருட்டு "அரசு எடுத்துக்
கொண்ட ஆலைகளுக்கு" கடன் வழங்குவதற்காக, கழகத்
திற்கு கடனாக ரூ. 188.90 இலட்சம் தமிழ்நாடு அரசு
வழங்கியது. இத்தொகையில் தற்போது ரூ. 173.50
இலட்சம் நிலுவையாக உள்ளது.

முதலில், இக்கழகத்திடம் 14 நலிந்த ஆலைகளின்
நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. இவையாவும் 1974 ஆம்
ஆண்டில் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவற்றின் நிர்வாகம்
கோயம்புத்தூர் தேசிய பஞ்சாலைக் கழகத்தினால் (தமிழ்
நாடு & புதுச்சேரி) மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்
விளைவாக 1975, 76 ஆம் ஆண்டுகளில் இக்கழகம் ஆற்ற
வேண்டிய அலுவல் எதுவுமில்லை. நாட்டுடைமையாக்கப்
படுவதற்கு முன்னர், இந்த ஆலைகளுக்குக் கடன் வழங்கப்
பட்ட தொகை வட்டியுடன், கோயம்புத்தூரிலுள்ள
தேசிய பஞ்சாலைக் கழகத்தினால் (தமிழ்நாடு & புதுச்சேரி)
எற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.



தொழில் (மேம்பாடு—முறைப்படுத்தல்) சட்டத்தின்
கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட புதுக்கோட்டையிலுள்ள
காவேரி நூற்பு நெசவு ஆலை, இராமநாதபுரம் மாவட்டம்,
முத்தனேந்தலில் உள்ள சோமசுந்தரம் சூப்பர் நூற்பாலை
ஆகியவற்றின் நிர்வாகம் முறையே 4—1—1977,
6—12—1977 அன்றிலிருந்து தமிழ்நாடு பஞ்சாலைக்
கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புத்துயிரூட்டு
முடிவாக, கைத்தறித் தொழிலுக்கு இயங்கவல்லதாக
வதும் அதனை, மேலும் தனித்து மக்களின்
செய்வதும், தற்சார்புடையதாக்குவதும், மாறுதல்
விருப்பத்திற்கேற்ற துணி ரகங்களில் ஏற்படுகிற கொள்
களை அது உணரச் செய்வதும், நமது கைத்தறிக் கொள்
கையின் நோக்கமாகும். வேலைக்கு அமர்த்தப்படுபவர்கள்,
வேலை வாய்ப்புக்களின் பரவலான தன்மை ஆகியவற்றைப்
பொறுத்தவரையில், கைத்தறித்துறை, வேளாண்மைத்
துறைக்கு அடுத்ததாக, அதிக அளவில் வேலைவாய்ப்பு அளிக்
கும் துறையாகும் என்பதை அரசு உணர்ந்துள்ளது. ஏற்
கெனவே அனுமதிக்கப்பட்ட பல்வேறு திட்டங்கள் இந்த
அடிப்படையில் அமைந்துள்ளன.

## இணைப்பு III

(... ...113 ...ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க)

## மானியக் கோரிக்கை எண் 27

### தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
### கொள்கை விளக்கக் குறிப்பு.

1946 ஆம் ஆண்டில கதர் திட்டத்தை மேற்கொண்ட
முதல் மாநில அரசு தமிழ்நாடு அரசாகும். சர்வோதய
சங்கத்திலிருந்து மாற்றப்பட்ட கிட்டத்தட்ட 1,800 நூற்
பாளர்கள், 500 கதர் நெசவாளர்களைக் கொண்டு தீவிர
கதர் திட்டம் தொடங்கப்பட்டது. 1956-ல் கதர் துறை
என்று தனியாக ஒரு துறை அமைக்கப்பட்டது. தேசீய
அளவில், கதர், கிராமத் தொழில்கள் வளர்ச்சியின் முக்கியத்
துவமும் அவசியமும், உணரப்பட்டதால் இந்திய அரசு
1956-ல் கார்வே குழுவை அமைத்தபோது இதற்குச் சிறப்
பிடம் அளிக்கப்பட்டது. அக்குழுவின் பரிவுரையின்படி,
திட்ட ஆணைக்குழு இத்துறையின் வளர்ச்சிக்குப் பெருமளவு

நிதி ஒதுக்கீடு செய்தது. இத்திட்டம், அனைத்திந்திய கதர்-கிராமத் தொழில் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது இந்த வாரியம் ஆலோசனை வழங்கும் அமைப்பாக இருந்தது. ஆலோசனை வாரியத்திற்கு குறைந்த அதிகாரங்கள் இருந்ததை உணர்ந்து கொண்டும், கதர்-கிராமத் தொழில்கள் விரைவில் வளர வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தும் இந்திய அரசு, 1957-ல் கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு என்றழைக்கப்படுகிற சட்டப்படியான ஆணைக்குழு ஒன்றை அமைத்தது. நாட்டு அளவில் ஆலோசனைக்குழு எதிர்நோக்கிய பிரச்சினைகளை மாநில அரசுகள் உணர்ந்து, கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு அறிவுரையின்படியும் பரிவுரையின்படியும், கதர்-கிராமத் தொழில் வளர்ச்சிக்காகச் சட்டப்படியான வாரியங்களை அமைத்தன. தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியச் சட்டம் 1959-ல் நிறைவேற்றப்பட்டது. முன்னர், கதர் துறையாலும் தொழில் வணிகத்துறையாலும் மேற்கொள்ளப்பட்ட கதர்-கிராமத் தொழில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 1960 எப்ரல் திங்களில் தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் அமைக்கப்பட்டது.

2. பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பது உட்பட கதர்-கிராமத் தொழில் உற்பத்தி, வளர்ச்சிக்கான திட்டங்களைத் தயாரிப்பது வாரியத்தின் முக்கிய அலுவல்களாகும். இதனைத் தவிர, கதர்-கிராம தொழில் ஆணைக்குழு வழங்கிய ஆலோசனையின் அடிப்படையில், இதற்குத் தொடர்பான பொருட்கள் அனைத்தையும் இயன்றவரையில் இவ்வாரியம் கவனிக்கிறது. கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழுவின் ஆட்சி வரம்புக்கு வரும் தொழில்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

(1) கதர்.

(2) சிறு தானியங்களையும், பருப்பு வகைகளையும் செயல்முறைப்படுத்துதல்.

(3) கிராம செக்கு எண்ணெய்.

(4) கிராமத் தோல் தொழில்.

(5) தீப்பெட்டித் தொழில் (குடிசைத் தொழில்).

(6) கரும்பு வெல்லம், கண்டசாரி தயாரித்தல்.

(7) பனைவெல்லம் தயாரித்தல், பிற பனைப் பொருட்களை தயாரித்தல்.





(8) சமையலுக்கு உதவாத எண்ணெய், சோப்பு.

(9) கையால் தயாரிக்கப்பட்ட தாள்.

(10) தேனீ வளர்த்தல்.

(11) கிராம மட்பாண்டத் தொழில்.

(12) நார்.

(13) தச்சுத்தொழிலும், கருமார் தொழிலும்.

(14) சுண்ணாம்பு தயாரித்தல்.

(15) உரம், மீத்தேன் வாயு தயாரித்தலும், பயன்படுத்தலும்.

(16) மருந்துக்காக வனச்செடிகளையும், பழங்களையும் சேகரித்தல்.

(17) பழங்களைப் பதப்படுத்தல், பாதுகாத்தல்.

(18) பிரம்பும், மூங்கிலும்.

(19) அலுமினிய வீட்டு சாமான்களை தயாரித்தல்.

(20) ' கத்தா ' தயாரித்தல்.

(21) மரப்பிசினையும், ரெசினையும் தயாரித்தல்.

(22) அவலரக்கு (Shellac).

3. கதர் ஆணைக்குழுவிடமிருந்து நிதியுதவியைப் பெறாமல், மாநில அரசு அனுமதித்துள்ள கீழ்க்காணும் தொழில்களுக்கும் கூடுதலாக வாரியம் உதவிசெய்து வருகிறது:—

1. அகர்பத்தி.
2. சிகைக்காய்தூள்.
3. பற்பொடி.
4. நீலகிரித் தைலம்.

4. இத்திட்டங்களை வாரியம், துறைப்பிரிவுகள் மூலமும் கூட்டுறவுச் சங்கங்கள், தனிப்பட்ட கைத்திறப் பணியாளர்கள் மூலமும் செயற்படுத்துகிறது.

### கதர்.

5. துறைப் பிரிவுகள் மூலமும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் கதர் உற்பத்தி செய்யப்படுகிறது. வாரியம் கச்சாப் பட்டிலிருந்து கதர் பட்டுத் துணியையும் உற்பத்தி

செய்கிறது. கிஸான் நூல், அம்பர் நூல் ஆகியவற்றை வாரியம் வாலாயமான நூற்போரிடமிருந்து வாங்குகிறது. கிராம நூற்பு நிலையங்களில், உற்பத்தியை ஒட்டி ஊதியம் வழங்கும் அடிப்படையில் வாரியம் நூலை உற்பத்தி செய்கிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நூல் நெசவாளர்களுக்கு கதர் துணி நெய்வதற்கு வழங்கப் படுகிறது. இம்மாநிலத்தில் 305 கிராம நூற்பு நிலையங்கள் உள்ளன. இவை 6 கதிர் இராட்டை கொண்டு நூல் உற்பத்தி செய்கின்றன. 1977–78-ம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தி இலக்கு 325·25 லட்சம் சிட்டங்களாகும். 1977 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ம் நாள் முடிய வாரியம் 246·59 லட்சம் சிட்டங்கள் நூலை உற்பத்தி செய்துள்ளது. தற்போது கிராம நூற்பு நிலையங் கள் மூலம் 9,760 நூற்போருக்கு வேலை கிடைக்கிறது. இந்த நூற்பு நிலையங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 2·50 முதல் ரூ. 3·00 வரை ஊதியம் கிடைக்கிறது.

6. ஆயத்த உடைகளையும் வாரியம் தயாரித்து வருகிறது இத்துணிகளைப் பொது மக்கள் மிகவும் விரும்பி வாங்குகின் றனர். 17·23 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இவ்வகைத் துணிகள் 1977–78-ம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் (அதாவது1977-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரையில்) தயாரிக்கப்பட்டன. அதே காலத்தில் 25·99 இலட் சம் ரூபாய் மதிப்புள்ள உடைகள் விற்கப்பட்டன. 1978–79-ம் ஆண்டிற்கான தயாரிப்பு இலக்கு 25 இலட்சம் ரூபாயாகும். மேலும் பண்டிகைக் காலத்தில் பொது மக்கள் வாங்கும் பொருட்டு 98·44 லட்சம் மதிப்புள்ள பூப்போட்ட கதர்த் துணிகளையும் வாரியம் விற்பனைக்கு வெளியிட்டதில் ரூ. 63·2[illegible] லட்சம் மதிப்புள்ள கதர்த்துணிகள் 1977-ம் ஆண்டு காந்தி ஜெயந்தி, தீபாவளி மற்றும் பக்ரீத் பண்டிகைக் காலங்களில் விற்பனை செய்யப்பட்டது.

7. இம்மாநிலம் முழுவதும் பரந்து அமைந்துள்ள 155 விற்பனைப் பிரிவுகள் மூலம் துணிகளை இவ்வாரியம் விற்பனை செய்து வருகிறது. இதில் 4 கதர் விற்பனை முக்கிய நிலையங் களும் அடங்கும். இந்நான்கு நிலையங்களில் இரண்டு நிலையங் கள் சென்னையிலும் திருச்சியில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும் உள்ளன. 1976–77-ம் ஆண்டில் 405·55 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கதர்த்துணிகள் விற்பனையாயின. கதர்த் துணிகள் விற்பனை 30–11–1977-ம் நாள் வரையில் 524·4[illegible] இலட்சம் ரூபாயாகும். இந்த விற்பனை 1977–78-ம் நிதியாண்



டின் இறுதியில் 578 இலட்சம் ரூபாயை எட்டும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. 1977–78-ம் ஆண்டுக்கான உற்பத்தி 525 இலட்சம் ரூபாயாகும். 1978–79-ம் ஆண்டில் இந்த உற்பத்தி 575 இலட்சம் ரூபாயை அடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. 1978–79-ம் ஆண்டிற்கான விற்பனை இலக்கு 600 இலட்சம் ரூபாயாகும்.

மாநில அரசால் அளிக்கப்பட்ட சிறப்புத் தள்ளுபடி :

8. வாரியத்தினாலும், தமிழ்நாட்டிலுள்ள சான்றளிக்கப் பட்ட ஏனைய கதர் நிலையங்களாலும் விற்பனை செய்யப்பட்ட கதர் துணிகளுக்கு 1976–77-ம் ஆண்டில் தீபாவளிக் காலத் தில் அரசு 5 சதவீத சிறப்புத் தள்ளுபடி வழங்கியது. காந்தி ஜெயந்தி, தீபாவளி, பொங்கல் ஆகிய காலங்களில் வாரியத் தால் விற்பனை செய்யப்பட்ட கதர் துணிகளுக்கு 10 சத வீதத் தள்ளுபடியையும் ஏனைய சான்றளிக்கப்பட்ட கதர் நிலையங் களால் விற்பனை செய்யப்பட்ட கதர் துணிகளுக்கு 5 சத வீதத் தள்ளுபடியையும் 1977–78-ம் ஆண்டில் மாநில அரசு வழங்கியது. அரசு அளித்த உயர் தள்ளுபடியாலும், கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அளித்த உயர் தள்ளுபடி யாலும், துணிகளை வாங்குவோருக்கு பருத்திக் கதர் துணி களுக்கு 30 சதவீதத் தள்ளுபடியையும், பட்டு கதர் துணி களுக்கு 15 சதவீதத் தள்ளுபடியையும், கம்பள கதர் துணி களுக்கு 20 சதவீதத் தள்ளுபடியையும், வாரியத்தால் அளிக்க முடிந்தது. உயர் தள்ளுபடி அளித்ததன் விளைவாகக் கதர் துணிகள் விற்பனை மேற்குறிப்பிட்டபடி கணிசமான அள விற்கு அதிகரித்தது.

9. கதருக்கான சிறப்புத் திட்டத்தின் கீழ், 1977–78-ம் ஆண்டில், அரசு 2·00 இலட்சம் ரூபாய் (1·50 இலட்சம் ரூபாய் மானியம், 0·50 இலட்சம் ரூபாய் கடன்) வழங்கியது. தறி ஒன்றுக்கு 50 ரூபாய்க்கு அதிகப்படாமல் பண்ணை, விழுது கள் ஆகியவற்றை கதர் நெசவாளர்கள் வாங்குவதற்கு நிதி யுதவி செய்ய இத்திட்டம் வகை செய்தது. இத்தொகை யில் 75 சதவீதம் உதவித் தொகையாகவும், எஞ்சியுள்ள 25 சதவீதம் கடனாகவும் அளிக்கப்படும். இத்திட்டத்தால், 4,000 தறிகள் பயனடையும்.

10. நூற்போர், நெசவாளர்கள், சிட்டத்தில் நூலைச் சுற்றுவோர்கள், சாயம் போடுபவர்கள், வெளுப்பவர்கள். தையற்காரர்கள் முதலியவர்கள் போன்ற ஏறத்தாழ அரை

இலட்சம் பேருக்கு (பகுதி நேர, முழு நேர) கதர் திட்டங்கள் வேலை வாய்ப்பளிக்கின்றன. 1977-78-ம் ஆண்டில் 200 இலட்சம் ரூபாய் ஊதியமாக வழங்கப்படும். [1978 மார்ச் 6

கிராமத் தொழில்கள்.

11. கிராம ஏழ்மை நிலையைப் போக்கவும், உள்ளூரில் கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களையும், ஆட்படை ஊற்றத்தையும் பயன்படுத்தவும், நுகர்வோர்களது தேவைகளுக்கு, குறிப்பாக கிராமப் பகுதியிலுள்ளவர்களின் தேவைகளுக்குப் பொருட்களை வழங்க வகை செய்யும் வண்ணம் கிராமத் தொழில்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, வளமான கிராமப் பொருளாதாரத்தை உருவாக்க வேண்டிய தற்போதைய நிலையில், பல்வேறு கிராமத் தொழில் திட்டங்களைச் செயல்படுத்துவதில் வாரியம் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது.

12. கீழ்க்காணும் கிராமத் தொழில்களை, துறையின் பிரிவுகள், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் வாரியம் நடத்தி வருகிறது:—

1. பனை வெல்லம்.
2. கைக்குத்தல் அரிசி (தானியங்களையும் பருப்பு வகைகளையும் பதப்படுத்துதல்).
3. நாட்டு செக்கு எண்ணெய்.
4. நாட்டுத் தோல்.
5. மட்பாண்டங்கள், செங்கற்கள், ஓடுகள்.
6. சுண்ணாம்பு.
7. தேனீ வளர்த்தல்.
8. தச்சு-கருமார் தொழில்.
9. பழங்களைப் பதப்படுத்துதலும் பாதுகாத்த
10. கையால் செய்யப்பட்ட காகிதம்.
11. குடிசைத் தொழில் தீப்பெட்டி.
12. வெல்லம், கண்டசாரி சர்க்கரை.
13. சமையலுக்கல்லாத எண்ணெய், சோப்பு.
14. நார் தொழில்.
15. கிராமப் பொருட்கள் விற்பனை நிலையம்
16. பிரம்பு, மூங்கில்.



1978 மார்ச் 6]

முன்புகுறிப்பிட்டது போல, கதர், கிராமத் தொழில் வாரியம், தனிப்பட்ட தொழில் கைவினைஞர்களுக்கும் ஆதரவு தருகிறது.

13. கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழுவிடமிருந்து கிடைக்கப்பெறும் நிதியுதவியின் அளவைக் கொண்டு மாநில அளவில் கிராமத் தொழில்கள் திட்டம் முடிவு செய்யப்படுகிறது. சிறப்புத் திட்டங்கள் சிலவற்றிற்கு குறுகிய காலக் கடன்களையும் மாநில அரசு வழங்குகிறது.

பனைவெல்லத் தொழில்

14. வாரியம் மேற்கொண்டுள்ள கிராமத் தொழில்களில் பனை வெல்லம் தயாரிக்கும் தொழில் பெருந் தொழிலாகும். தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இத்தொழில் நடைபெற்று வருகின்றது. 31-3-1977 ஆம் நாளிலுள்ளபடி மாநில அளவில் மாநிலப் பனைவெல்லம் கூட்டுறவுக் கூட்டமைப்பு ஒன்றும், மாவட்ட அளவில் பனை வெல்ல மாவட்டக் கூட்டுறவு கூட்டமைப்புகள் எட்டும், பனைவெல்ல தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் 958-ம் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வந்தன.

15. 31-12-1977-ஆம் நாள் நிலவரப்படி இத்தொழிலில் உற்பத்தி செய்த பொருட்களின் மதிப்பும், விற்பனை செய்த பொருட்களின் மதிப்பும் முறையே ரூ. 293·33 இலட்சமும் ரூ. 306·58 இலட்சமும் ஆகும். 2,20,000 தொழிலாளர்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் ஈட்டிய ஊதியம் ரூ. 96·80 இலட்சமாகும். உற்பத்திச் செலவில் பெரும்பகுதி பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஊதியமாக வழங்கப்படுகின்றது. உழைப்பையே நோக்கமாகக் கொண்ட இத்தொழில் ஏராளமான பேருக்கு வேலைவாய்ப்பு அளித்து, அவர்களுக்கு ஊதியம் அளித்து வருகிறது என்பது தெரியவரும். 1978-79-ஆம் ஆண்டில் இத்துறையில் உற்பத்தி மற்றும் விற்பனை இலக்குகள் முறையே ரூ. 960 இலட்சங்கள், ரூ. 1050 இலட்சங்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1978-79-ல்இத்திட்டங்களின் மூலம் சுமார் 2,30,000பேருக்கு வேலைவாய்ப்பளிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

16. மேலும், பனைநார், பனையோலைத் தொப்பிகள், கழித்தாள் கூடைகள், புருசுகள், பொருள்களைக் கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் கூடைகள் போன்ற பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் இத்தொழில்கள் அந்நிய செலாவணியை ஈட்டி வருகின்றன.

[1978 மார்ச் 6

''பாம்கோலா''

17. தமிழ்நாடு மாநிலப் பனைவெல்லக் கூட்டமைப்பு தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் வழிகாட்டு முறையின்கீழ் உள்ளது. இந்தக் கூட்டமைப்பு ''பாம் கோலா'' ''பாம் ஆரஞ்சு'' என்கின்ற வணிகக் குறியீட்டுப் பெயர்களில் பானங்களைத் தயாரித்து, அவற்றை குறிப்பிட்ட அளவில் விற்பனையும் செய்கின்றது. 1977 வேளாண்மைப் பொருட் காட்சி (Agro Exhibition, 1977) டில்லியில் நடைபெற்ற பொழுது, எந்தப் பொருளையும் தரத்தை நோக்கிப் பிரித்தறிந்து நாடுகின்ற டில்லி வாழ் மக்களாகிய வாடிக்கையாளர்கள் இந்தப் பானங்களை விரும்பி வாங்கிப் பருகினர். சென்னையிலுள்ள சில நட்சத்திக ஓட்டல்களில்கூட, இந்த பானங்கள் பாராட்டுப்பெற்றுள்ளன. இப்போது (அமெரிக்கத் தயாரிப்பான) ''கோகோ கோலா'' இந்தியச் சந்தைகளிலிருந்து மறைந்துவிட்டபடியாலும், அதற்குப் பதிலாகச் சந்தைகளில் விற்பனைக்கு வெளியிடப்பட்டுள்ள இந்தியப் பானமாகிய ''77'' இன்னும் எல்லா இடங்களிலும் உள்ள சந்தைகளில் தனக்குரிய இடத்தைப் பிடிக்கவில்லையாதலாலும், ''பாம் கோலாவுக்கு'' வாடிக்கையாளரிடமிருந்து நல்ல ஆதரவு கிடைக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பனஞ்சர்க்கரையிலிருந்து ''பாம் கோலா'' பானம் தயாரிக்கப்படுகிறது. எனவே இந்த பானத்தின் உற்பத்தி அதிகரித்தால், அதன்மூலம் மறைமுகமாக அதிக அளவில் பனை வெல்லத்தைப் பயன்படுத்துகின்ற வேலை வாய்ப்புக்கள் பெருகும்; இதனால் பனைமரத்திலிருந்து பதநீரை இறக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் அதனைச் சார்ந்த மற்ற தொழிலாளர்களுக்கும், ஆதரவு கிடைக்கும். இதைத் தவிர, பனை வெல்ல உற்பத்தியாலும், பானம் தயாரிப்பிலும் அதனைப் புட்டியில் அடைக்கும் தொழிலிலும் கூடுதலான வேலை வாய்ப்புக்கள் உருவாகும்.

சென்னையில், ஒரு வேலை முறை நேரத்தில் (shift) ,500 புட்டிகளில் பானத்தை அடைக்கும் திறனுடைய தொழிற்சாலை யொன்றை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு விரும்பியவாறு டில்லியில் இதேபோன்று இன்னொரு தொழிற்சாலை நிறுவப்படும்.



1978 மார்ச் 6]

(கிராமத் தொழில்) எண்ணெய் எடுக்கும் தொழில்

18. எண்ணெய் எடுக்கும் தொழில், வாரியத்தின் நிதி
உதவியுடன், முக்கியமாகத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பெரிய
மூலம் செயற்படுத்தப்படுகின்ற மற்றுமொரு இத் துறையின்
கிராமத் தொழில் ஆகும். திருப்பூரில் வருகின்றது.
தொழிற்சாலையொன்று செயல்பட்டு சங்கங்களும் கூட்டமைப்பு
எண்ணெய் உற்பத்திக் கூட்டுறவுச் இவை யாவும் வாரியத்தின் கட்டுப்
களும் 55 உள்ளன.
பாட்டின்கீழ் உள்ளன.

19. 1977ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள்
வரையில் இத்தொழிலின்கீழ் ஏற்பட்ட உற்பத்தி, விற்பனை
ஆகியவற்றின் மதிப்பு முறையே ரூ. 120·85 இலட்சம்,
ரூ. 115·48 இலட்சம் ஆகும். 409 பேருக்கு வேலை வாய்ப்பு
அளிக்கப்பட்டது; அவர்களுக்கு ஊதியமாக ரூ. 4·2
இலட்சம் கொடுக்கப்பட்டது. 1978-79-ம் ஆண்டுக்கான
உற்பத்தி இலக்கு ரூ. 375·00 இலட்சம் என்று நிர்ணயிக்கப்
பட்டுள்ளது. 1978-79-ம் ஆண்டில் இத்துறையின்கீழ் 1,816
பேர்களுக்கு முழுநேர வேலையும் மற்றும் 1,020 பேர்களுக்கு
பகுதி நேர வேலையும் வழங்கமுடியும் என்று கருதப்
படுகின்றது.

கையால் செய்யப்பட்ட தாள்

20. தற்போது கையால் தாள் செய்வதற்காக வாரி
யத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 7 துறைப் பிரிவுகளும், 4 சங்கங்
களும் உள்ளன. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம்
நாள் நிலவரப்படி கையால் செய்யப்பட்ட தாளின் மதிப்பு
ரூ. 9·43 இலட்சமாகும்; விற்கப்பட்ட தாளின் மதிப்பு
ரூ. 8·55 இலட்சமாகும். 365 பேருக்கு வேலை வாய்ப்பு
அளிக்கப்பட்டது. அவர்களுக்கு ஊதியமாக ரூ. 3·05
இலட்சம் கிடைத்துள்ளது. 1978-79 ஆம் ஆண்டுக்கு உற்
பத்தி இலக்கு ரூ. 18 இலட்சங்களாகும்.

முட்டை வைக்கும் தட்டுகள் செய்தல்

21. முட்டை வைக்கும் குழித் தட்டுக்களை வழங்கு
வதில், கோழி வளர்ப்பவர்களும் சிறு வணிகர்களும் நன்கு
அமைந்த ஆலைத்துறையினரையே நம்பியிருக்கவேண்டிய
நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு
கதர்-கிராமத்தொழில் வாரியம், தமிழ்நாடு கோழி-வளர்ப்பு

நிறுவனம் ஏற்று குழித்தட்டுகளைத் தயாரிப்பதில் முழு வெற்றி அமைந்துள்ளது. இயந்திரத்தால் உற்பத்தி செய்யப்பட்டு இப்போது அங்காடியில் விற்பனையாகும் பொருட்களுடன் இப்பொருட்கள் போட்டியிலைகளில் விற்கப்பட முடியும். இவற்றிற்கு பெங்களூர் முதலிய இடங்களிலும் பெருந்தேவை இருக்கிறது. வெளிமாநிலங்களிருந்து உற்பத்திசெய்து அனுப்புபவர்கள், தவறுமல் தொடர்ந்து பொருட்களை அனுப்பாமையால், பிறமாநிலங்களில் இப்பொருட்களுக்கு அதிகத் தேவை ஏற்படுகின்றது. கதர் கிராமத் தொழில்களின் கீழ் உள்ள கையால் செய்யப்படும் தாள் தொழில் பிரிவுக்கு முட்டைத் தட்டுக்கள் உற்பத்தி செய்யும் பணியை ஒதுக்குமாறு இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

22. 1977-78ஆம் ஆண்டு இறுதியில் எல்லா கிராமத் தொழில்களிலும் மொத்தமாக 192 துறையினரால் நேரடியாக நடத்தப்படும் பிரிவுகளும், 3,298 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் 1,293 தனிப்பட்ட தொழில் பிரிவுகளும் இருக்கும். கிராமத் தொழிலில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் மதிப்பு ரூ. 1,610 இலட்சமாகவும், அவற்றின் மொத்த விற்பனை அளவு ரூ. 1,785 இலட்சமாகவும் இருக்கும். 2·54 இலட்சம் பேர்களுக்கு ஊதியமாக ரூ. 620 இலட்சம் வழங்கப்படும்.

**கிராம/குடிசைத்தொழில் துறையினருக்கென/சில உற்பத்திப் பொருள்களை ஒதுக்கி வைத்தல்.**

23. கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பின்மையால் பொருளாதார நிலையில் நலிவுற்றவர்களின் நிலையை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்துடன், கூடுதலாக 43 இனங்களை குடிசை/கிராமத் தொழில் துறையினருக்கென ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு பரிவுரை செய்தது. சிறு தொழில்கள், குடிசை/கிராமத் தொழில் துறையினர் உற்பத்தி செய்வதற்கென்று, 504 நுகர்வோர் பொருட்கள் ஒதுக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. கதர் கிராமத் தொழில் வளர்ச்சிக்கும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் உயர்வுக்கும் இது வழி வகுக்கும்.



**பழங்குடியினர் முன்னேற்ற மும்முரத்திட்டம்**

24. பழங்குடியினர் பகுதிகளை தீவிரமாக மேம்படுத்தும் ஒரு திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்படி 9 மலைப் பகுதிகளில் ஒவ்வொரு பழங்குடியினருக்கும் 10 தேனீ கூடுகள் என்ற வீதத்தில் 400 பழங்குடியினருக்கு 4,000 தேனீ கூடுகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலைப் பகுதியில் 100 விழுக்காடு உதவித் தொகை என்ற முறையில் தேனீ கூடுகள் வழங்கப்படும். மற்ற பகுதிகளில் இந்த உதவித் தொகை 50 விழுக்காடு அளவுக்கு வரையறுக்கப்படும். இத்திட்டத்திற்காக அரசு 1977–78-ஆம் ஆண்டில் ரூ. 1·75 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. ஜவ்வாது, கல்ராயன், சித்தேரி மலைப் பகுதிகளில் உள்ள 340 பழங்குடியினருக்கு 1,700 தேன் கூடுகள் வழங்கிய வகையில் வாரியத்திற்கு 1976–77-ஆம் ஆண்டில் ரூ. 77,900 செலவு ஏற்பட்டது. 1977–78-ல் இந்தத் தொகையையும் அரசு ஏற்றுக்கொள்ளும். ஜவ்வாது மலையில் ரூ. 45,000 செலவில் தேனீ இல்லம் அமைப்பதற்காகவும், 20 இளநிலை தேனீ வளர்ப்பு களப்பணியாளர்களைக் கொண்ட மேற்பார்வைப் பணியாளர் செலவுக்காக ரூ. 89,000 தொகைக்கும், அரசு 1978–79-ஆம் ஆண்டில் ரூ. 1·34 இலட்சம் மானியத்தை ஒதுக்கியுள்ளது.

**மலைப்பகுதி முன்னேற்றத் திட்டம்**

25. மலைப் பகுதி முன்னேற்றத் திட்டத்தின்கீழ், 1975–76-ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின் கீழ் ரூ. 7 இலட்சத்தை (50 விழுக்காடு மானியமாகவும் 50 விழுக்காடு கடனாகவும்) வாரியம் பெற்றுக் கொண்டது.

இத்திட்டத்தின்கீழ் நீலகிரி பகுதியில் மக்களுக்கு அதிக வருமானம் அளிக்கக் கீழ்க்கண்ட பொருட்களை ஏற்கனவே வாரியம் வழங்கியுள்ளது.

| | எண்ணிக்கை. | தொகை. ரூ |
|---|---|---|
| 1. தேன் கூடுகள் வினியோகம் | 2,000 | 2,00,000 |
| 2. யூகலிப்டஸ் தைலம் வடிப்பதற்கான இயந்திரங்களை வழங்குதல். | 145 | 1,45,000 |

1977-78-ம் ஆண்டில் பழங்குடியினர், சிறு விவசாயிகள் போன்ற 100 பேர்கட்கு 1,000 தேன் கூடுகளையும் 50 யூகலிப்டஸ் தைலம் வடிப்பதற்கான இயந்திரங்களையும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு 1977–78-ல் ரூ. 1.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1978–79-ம் ஆண் டில் மொத்தம் ரூ. 2.05 லட்சம் செலவில் 1,500 தேன் கூடு களையும் 55 யூகலிப்டஸ் தைலம் வடிப்பதற்கான இயந்திரங் களையும் வழங்க வாரியம் உத்தேசித்துள்ளது.

### வறட்சி நிவாரணத் திட்டம்

26. பனைத் தொழிலின் கீழ், கீழ்க்கண்ட திட்டங்களுக் காக திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சி நிவாரண திட் டத்தின்கீழ் ரூ. 5.57 இலட்சம் (ரூ. 1.27 இலட்சம் மானியம், ரூ. 4.30 இலட்சம் கடன்) 1976-77-ல் அரசு உதவி அளித்தது. இவை, 1977-78-ல் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

| | உதவித் தொகை. ரூபாய் |
|---|---|
| 1. 4 இலட்சம் பனை விதை விநியோகம் .. | 40,000 |
| 2. 20 பனை நார்த் தொழில் பயிற்சி நிலையங் கள் ஆரம்பித்தல் .. .. .. | 2,67,000 |
| 3. 50 பனை ஓலை பொருட்கள் உற்பத்தி நிலை யங்கள் ஆரம்பித்தல் .. .. .. | 2,50,000 |
| மொத்தம் .. | 5,57,000 |

### வறட்சிப் பாங்கான பகுதிகள் திட்டம்

27. தருமபுரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் வறட்சி நிவாரணப் பணிக்கென 1977–78-ம் ஆண்டில் மாநில அரசு மேலும் முறையே ரூ. 4.24 லட்சம், ரூ. 9.58 லட்சம் வழங்கியுள்ளது. இந்த உதவி பனைத் தொழிலில் ஈடுபட் டுள்ள தொழிலாளர்களுக்கு நிதி உதவி அளிக்கவும் பனை ஓலை முடையும் நிலையங்கள் நிறுவுவதற்கும் 5 இலட்சம் பனை விதைகளை நடவும் பயன் படுத்திக் கொள்ளப்படும்.



### புயல் வெள்ள நிவாரணத் திட்டத்தின்கீழ் (1977) உதவித்தொகை

28. அண்மையில் ஏற்பட்ட புயல், வெள்ளத்தால் மாநிலத்தின்பல்வேறு மாவட்டங்களில் குறிப்பாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, திருநெல்வேலி மாவட்டங்களில் சொத்துக்கும், உயிருக்கும் அதிக நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தாலும் புயலாலும் சேதமடைந்த கட்டிடங்களை புதுப்பித்துக் கட்டவும், கருவிகளையும் சாத னங்களையும் பழுது பார்க்கவும், தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்திற்கு ரூ. 9.09 இலட்சம் மானியமாகவும், ரூ. 0.65 இலட்சம் கடனாகவும் அரசு அனுமதித்துள்ளது, வாரியத்தின் அதிகார வரம்பின்கீழ் வரும் பல்வேறு வகை கைவினைஞர்களுக்கு உதவியும் அளித்துள்ளது. வாரியத்தின் அதிகார வரம்பின்கீழ் சுமார் 2,800 பேர் இந்த நிவாரணத் திட்டத்ினால் பயனடைந்தனர்.

### திக்கற்ற விதவைகள் மறுவாழ்வு திட்டம்.

29. இவ்வாண்டில் விதவைகள் மறுவாழ்வுக்கென ரூ. 2.79 இலட்சம் வாரியத்திற்கு அரசு மானியமாக வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 279 திக்கற்ற விதவை களை கிராமப் பஞ்சாலை நிலையங்களில் வாரியம் சேர்த் துள்ளது. இவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 மதிப் புள்ள 6 கதிர்கொண்ட புது மாதிரி இராட்டைகள், கருவிகள் ஆகியவற்றை வழங்கக் கருதப்பட்டுள்ளது.

### வாரியத்தின் நிதி

30. அரசின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின் அடிப் படையில் தனிப்பட்ட இரண்டு தலைப்புகளின்கீழ் [அதாவது (1) கதர் நிதி, (2) கிராமத் தொழில் நிதி] தமிழ்நாடு கதர்- கிராமத் தொழில் வாரியம் தனது வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டை தயாரிக்கிறது.

31. இந்திய அரசு ஏற்பளித்தவாறு ஒப்புக் கொள்ளப் பட்ட திட்டத்தின் அடிப்படையில், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தேவைப்படும் நிதி உதவியை அகில இந்திய கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு தனது நிதி உதவி

அளிக்கும் அடிப்படையின்படி வாரியத்திற்கு அளிக்கிறது. வணிக முறையல்லா நடவடிக்கைகள் குறித்து வரவுக்கும் செலவுக்குமிடையே உள்ள நிகர செலவு வேறுபாட்டுத் தொகையை தமிழ்நாடு அரசு கொடுக்கிறது.

### வாரியத்தின் நிதி நிலை

32. 1977–78-ல் இறுதியாக ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின்படி கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு கீழ்க்கண்ட தொகையை ஒதுக்கியுள்ளது :—

| | மானியம். | கடன். |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| கதர் .. .. .. .. | 0.51 | 98.30 |
| கிராமத் தொழில்கள் .. .. | 17.70 | 82.50* |

1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி அன்றுள்ளவாறு, வாரியத்திற்குச் சேர வேண்டிய நிகர செலவு மானியம் குறித்து கீழ்க்கண்ட தொகைகளை மாநில அரசு வழங்கியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. கதர் நிதி .. .. .. .. | 14.50 |
| 2. தணிக்கைக் கட்டணங்கள் .. .. | 12.50 |
| 3. கிராமத் தொழில் நிதி .. .. .. | 18.00 |
| மொத்தம் | 45.00 |

* இதில் வங்கிக் கடன் ரூ. 6 இலட்சம் அடங்கும்.



கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு வழங்கும் மானியங் களும், கடன்களும், வாரியத்தின் வளர்ந்து வரும் தேவைக் குப் போதுமானவையாக இல்லாததால், தனது திட்டத் தைச் செயல்படுத்துவதற்கு வாரியம் மாநில அரசையும் மத்திய அரசையும் உதவி கேட்க வேண்டியுள்ளது. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவிற்கு போதுமான நிதிகளை ஒதுக்குமாறு இந்த அரசு இந்திய அரசுக்குக் கடிதம் எழுதி யுள்ளது. அப்போதுதான் கதர்-கிராமத் தொழில் திட்டங் களைச் செயல்படுத்த மாநில வாரியங்களுக்கு அதிக தொகைகளை ஆணைக்குழு வழங்க முடியும். இது குறித்து அவசியமானவற்றைச் செய்வதாக இந்திய அரசு உறுதி யளித்துள்ளது.

## கோரிக்கை எண் 27, கதர், 1978-79.

### 321. கிராமத் தொழில்களும், சிறு தொழில்களும்.

(ரூபாய்களில்.)

கதர்த் தொழில்கள் :

I திட்டத்தில் சேராதவை—

| | |
|---|---|
| AA. தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தின் கதர் வளர்ச்சிக்குரிய உதவி மானியங்கள். | 19,00,000 |
| AB. தணிக்கைக் கட்டணத்தைச் செலுத்துவதற்கென தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு அளிக்கப்படும் மானியங்கள், உதவி மானியங்கள் .. .. | 12,50,000 |
| AD. கிராமத் தொழில்கள் நிதிக்கென தமிழ் நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு அளிக்கப்படும் மானியங்கள், உதவி மானியங்கள் .. .. .. .. | 26,00,000 |

I. மாநிலத் திட்டம்— 1978 மார்ச் 6

| | | |
|---|---|---|
| JB. கதர் நெசவாளர்களுக்கு துணைக் கருவிகள் வழங்குவதற்கென தமிழ் நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு அளிக்கப்படும் மானியங்கள், உதவி மானியங்கள். | (ரூபாய்களில்) 1,000 |
| JC. கதர் விற்பனைத் தள்ளுபடிக்கான உதவி மானியங்கள் | .. .. | 40,00,000 |
| JA. பழங்குடியினருக்கு தேனீ கூடுகள் வழங்குவதற்கென அளிக்கப்படும் மானியங்கள் | .. .. | 5,00,000 |

VI மத்தியத் துறை—

| | | |
|---|---|---|
| XA. நீலகிரி மாவட்டத்தில் தேனீ வளர்ப்பை வளப்படுத்துவதற்கென தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு அளிக்கப்படும் மானியங்கள், உதவி மானியங்கள். | | .. |
| மொத்தம் | .. | 1,02,51,000 |

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

### செவ்வாய்கிழமை, 1978 மார்ச் 7.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### ஆலத்துறை பாசனத் திட்டம்

*421 வினா—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், நான்குநேரி வட்டத்திலுள்ள ஆலத்துறை ஆறு நீர்ப்பாசனத் திட்ட வேலை முடிவடையும் தருவாயிலேயே நீண்டகாலமாக இருக்கின்றதா?

(ஆ) இத்திட்டம் நிறைவுபெற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) மற்றும் (ஆ) ஆலத்துறையாறு திட்டத்தில் கால்வாய் முடியும் இடத்திலுள்ள டிராப் (drop) மற்றும் பாதுகாப்பு வேலைகள் தவிர மற்ற எல்லா வேலைகளும் முடிவடைந்துவிட்டன. கால மழையினாலும், அண்மையில் இயங்குகின்ற இராணுவ பயிற்சி முகாமினாலும் இந்த வேலை தடைப்பட்டுள்ளது. தண்ணீர் செல்வதற்கு இந்த முடிவடையாத வேலைகளால் எந்த தடையும் கிடையாது.

[1978 மார்ச் 7

திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆலத்துறை நீர்ப்பாசனத் திட்டம் ஏற்கெனவே நிறைவேற்றப் பட்டு திறக்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சா வர்கள் சொன்னதைப் போல அங்கு அடிக்கடி இராணுவ முகாம் இடுகின்ற காரணத்தால் வேலை தடைப் பட்டிருந்தது உண்மை. இப்போது மலைப் பகுதி வேலை முடிந்து, ஆற்றுப் பகுதி வேலை மட்டும் பாக்கி இருக்கிறது. இந்த நோக்கில் வேலையை முடிக்கின்ற அந்தத் திட்டத்தை உடனடியாக மேற்கொண்டு, தண்ணீர் பயன்படுத்துவதை ரெகுலேட் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

## பச்சையாறு திட்டம்

* வினு—திரு. யா. சை. மு. யூசப், திரு. மு. மு. அ. ரசாக்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், நான்குநேரி வட்டத்திலுள்ள பச்சையாறு திட்டத்திற்கு 1975 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப் பட்டும் வேலை தொடரப்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் நிறைவேற அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் மறு பரிசீலனை செய்யப்படுகிறது. மேலும் கூடன்குளம் அருகே ஓர் அணு மின் நிலையம் அமைக்க இவ்வரசு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது. அணு மின் நிலையத்திற்கான தண்ணீரையும் வழங்குவதற்கு பச்சையாறு திட்டத்தை மாற்றியமைக்க விரிவான ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.



1978 மார்ச் 7]

திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவரவர்களே, கூடன்குளம் அருகே அமைக்கப்பட இருக்கிற அணுமின் நிலையத்திற்கும் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கும் பச்சையாறு திட்டத்திற்கும் என்ன சம்பந்தம் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அணுமின் நிலையத்திற்குத் தண்ணீர் தேவை. பச்சையாறு மூலம் கிடைக்கும் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது யோசனை.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, கூடன்குளத்தில் ஒரு அணுமின் நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் திட்டம் இந்த தமிழ் நாடு அரசால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதா ? அது எத்தனையாவது பிரையாரிட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மத்திய அரசைப் பொறுத்தவரை, தென் பிராந்தியத்தில் எங்கெங்கே அணுமின் நிலையம் அமைக்கலாம் என்று இடத்தை தேர்வு செய்தபோது தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் கூடன்குளம் பகுதியில் அமைக்கலாம் என்று தெரிவித்து இருக்கிறோம். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் இந்தத் திட்டம் ஒரு உருக்கொள்ளவில்லை.

திரு. மு. அம்பிகாபதி: துணைத் தலைவரவர்களே, நீர்த் தட்டுப்பாடு பிருந்திருக்கிற இந்த நோக்கில் அணுமின் நிலையம் அமைப்பது என்பது வரவேற்கத்தக்கது. இந்த அணுமின் நிலையம் எத்தனை கோடி ரூபாய்க்கான திட்டம்? இத்திட்டம் முடிவடைய எத்தனை ஆண்டு ஆகும் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மூலக் கேள்வி பச்சையாறு திட்டத்தைப் பற்றியது.

திரு. மு. ஜான் வின்சென்ட்: தலைவரவர்களே, முன்னாள் காங்கிரஸ் அரசில் பச்சையாறுத் திட்டம் கொண்டு வரப்பட்டு, 1974-75 ஆம் ஆண்டில் அன்றைய முதலமைச்சர் கருணாநிதி அவர்களால் அடிக்கல் நாட்டப் பெற்று, 225 லட்சம் ரூபாய்

செலவில் போடப்பட்டத் திட்டம் இது. இத்திட்டம் நிறைவேற்றப்
பட்டால் 11,835 எக்கர் நிலம் பயன்படும். ஆகையால் இத்திட்டம்
இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே,
28—2—1975 அன்று சில திட்டங்களை ஆராயமலே கொள்கை
யளவில் எற்றுக்கொள்கிறோம் என்று அன்றைய அரசு
அறிவித்தது. அப்படி அறிவித்ததில் இது ஒரு திட்டம். இந்தத்
திட்டத்தின் மதிப்பு 464 லட்சம் ரூபாய். இதன் மூலம் புதிதாக
பலன்பெறும் நிலம் 260 ஏக்கர்தான். மேலும் அதுபற்றிய
குறிப்பில் என்ன இருக்கிறது என்றால், 10,203 ஏக்கர்
இத்திட்டத்தின் மூலம் நீர் உறுதிப்படும். எற்கெனவே பாசன
வசதி பெறும் பகுதி உறுதிப்படும். 10,203 ஏக்கர் நிலம் பாசன
நீரால் உறுதிப்படுமா என்பது குறித்து மேலும் ஆராயப்பட
வேண்டுமென்று வருவாய் வாரியம் ஒரு பிரச்சினையை எழுப்பி
இருக்கிறது. ஆக, புதிதாக பாசனம் பெறும் நிலம் 260 ஏக்கர்
தான். 10,203 ஏக்கர் நீர் உறுதிப்படுவதற்கும் 260 ஏக்கர் பாசன
வசதி பெறுவதற்கும் போதுமான தண்ணீர் வருமா என்பது
குறித்து மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று வருவாய் வாரியம்
திருப்பி அனுப்பி இருக்கிறது. அப்படி மறு ஆய்வு செய்யும்
போது, கூடன்குளத்தில் அணுமின் நிலயம் அமைக்கும் திட்டம்
இருப்பதால் அதற்குத் தேவையான தண்ணீர் கிடைக்கக்கூடிய
வாய்ப்புகள் பற்றியும் சேர்த்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று
கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

## குடகனறு அணை

* 423 வினா—திரு. ரா. மார்க்கபந்து, திரு. கு. ரமணி :
மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினவுக்கு விடையளிப்பாரா—

குடகனறு அணை உடைப்பு பற்றி விசாரிக்க அமைக்கப்பட்ட
நீதி விசாரணைக் கமிஷன் பணிகள் எந்த நிலையில் உள்ளன ?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இக்குழு இப்போது
தொழில் நுட்ப விவரங்களை பரிசீலனை செய்து வருகிறது.
இக்குழுவின் அறிக்கை மார்ச் 1978-ல் அரசுக்கு கிடைக்குமென்று
எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. கு. ரமணி :** பேரவைத் துணைத் தலைவரவர்களே,
குடகனறு அணை உடைந்து மக்களுக்கு பெரும் நாசத்தை
ஏற்படுத்தியுள்ள அந்த இடத்தில் விசாரணை முடிந்து அந்த அணை
மறுபடியும் கட்டப்படுமா ? அது உறுதிதானு ? அந்த அணை
கட்டப்பட்டபோது அதிலே வேலை பார்த்த தொழிலாளர்கள்
மார்ச் மாதத்திலே இருந்து அத்தனை பேரும் வேலையில்லாமல்
இருக்கிறார்கள் என்று சொல்லப்படுவது உண்மையா ? அந்த அணை
நிச்சயமாக கட்டப்படுமா ? அதிலே வேலை பார்த்த தொழிலாளர்
களுக்கு மீண்டும் தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில்
சீக்கிரத்தில் வேலை கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே,
இந்தக் குடகனறு அணைத் திட்டம் அண்மையிலே பெய்த
மழையில் அடித்துக் கொண்டு செல்லப்பட்டு விட்டது. இந்த
அழிவுக்கு என்ன காரணம் என்பதைப் பற்றி ஆராய்வதற்கு ஒரு
குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவுக்கு எவ்வாறு
ஆராய வேண்டுமென்று டெர்ம்ஸ் ஆஃப் ரெபரன்ஸ்
கொடுத்திருக்கிறோம். அந்தக் குடகனறு அணை கட்டப்பட்டதில்
அந்த டிசைன் சரியா ? திட்டமிடப்பட்டது சரியா ? என்பதும்
இரண்டாவதாக திட்டமிட்டபடி அதாவது 'Whether the execution
is according to the design' நிறைவேற்றப்பட்டிருக்கிறதா ?
என்பதும் மூன்றாவதாக ஏற்பட்டிருக்கிற உடைப்புக்கள் அல்லது
சேதங்கள் ஆகியவற்றிற்கு இந்த டிசைன் காரணமா அல்லது
செயல்முறை காரணமா என்பதும் நான்காவதாக அதைப்
பராமரிக்க இருந்த அதிகாரிகளின் கவனக் குறைவு காரணமா
என்பதும் ஐந்தாவதாக திட்டம் இனிமேலும் இருக்க வேண்டுமா,
அவ்வாறு இருக்க வேண்டுமென்றால் என்ன காரியங்களைச் செய்ய
வேண்டும் என்பதும் ஆகிய இவ்வெல்லா பரிந்துரை விவரங்
களையும் கேட்டு அனுப்பியிருக்கிறோம். அதற்கான அறிக்கை

கொடுத்த பிறகுதான் முடிவு செய்ய முடியும். அவர்கள் அறிக்கைக்குப் பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது நல்லதல்ல என்று தெரிவதாக இருந்தால் மேலும் 3, 4 கோடி ரூபாயை நாம் வீணாக்குகின்ற நிலையில் இல்லை.

**திரு. கு. ரமணி:** தலைவரவர்களே, சரியான ஆய்வுக்குப் பிறகு அரசு என்ன முடிவுக்கு வருகிறதோ அதை நாங்கள் வரவேற்போம். ஆனால் ஒரு பாவமுமறியாத தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போய் அவர்கள் கஷ்டப்படுவதால் அவர்களுக்கு பக்கத்திலே இருக்கக் கூடிய வைகை பகுதிகளிலே அவர்களுக்கு உடனே வேலை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா? என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. வீ. சவுந்திரராஜன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, குடகனாறு அணைத் திட்டம் எப்போது கட்டப்பட்டது? அதற்கு செலவான தொகை எவ்வளவு? இதற்கு முன்பு அந்த அணைக்குத் தண்ணீர் வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, எஸ்டிமேட் போடப்பட்டது, அதாவது திட்டமிடப்பட்ட மதிப்பீடு 212 லட்ச ரூபாய். அது கட்டி முடிக்கப்பட்ட தேதி என்னிடத்தில் இல்லை. ஆனால் கட்டி முடிந்த வரையில் அங்கு தண்ணீர் வந்ததாக அந்தப் பகுதி மக்கள் நான் அங்கு சென்ற போது தெரிவிக்கவில்லை. தண்ணீர் வந்ததும் ஒரு முறைதான் அடித்துக் கொண்டு போனதும் ஒரு முறைதான்.



[முற்பகல் 9-10]

**திரு. எஸ். ஜே. இராமசாமி:** குடகனாறு அணை உடைந்து போனது சமீபத்தில் பெய்த பெருமழை காரணமாக என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். அந்த விசாரணைக் குழுவில் யார் யார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? அதில் சட்டமன்ற உறுப்பினர்கள் யாராவது இடம் பெற்றிருக்கிறார்களா? இல்லையானால் அப்படி இடம் பெறுவதற்கு அமைச்சர் அவர்கள் வகை செய்ய முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** சட்டமன்ற உறுப்பினர்களை இந்தச் சிக்கலில் மாட்டி வைப்பது சட்டமன்ற உறுப்பினர்களுக்கே நல்லதல்ல. அதோடு மட்டுமல்லாமல், மாநில அரசின் பொறியாளரையேகூட நாம் வைத்து விசாரித்திருக்கலாம். இருந்தாலும் அவர்கள் அரசாங்கத்திற்கு சாதகமாக அறிக்கை கொடுத்து விட்டார்கள் என்ற புகார் வந்தாலும் வரலாம் என்ற அடிப்படையில் மத்திய அரசினிடத்தில் எழுதிக் கேட்டு மத்திய அரசினுடைய நீர் ஆய்வுக் குழு உறுப்பினர் திரு. ஏ. என். ஹார்கௌலி, அவர்கள் தலைவராகவும் ஏற்கனவே நம் மாநிலத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர் திரு. வி. ஆர். எஸ். பாண்டியன் அவர்கள் உறுப்பினராகவும், திரு. ஏ. எம். சுவாமிநாதன், ஐ.ஏ.எஸ். அரசு இணைச் செயலாளர் அவர்கள் செயலாளராகவும் நியமிக்கப்பட்டு இம்மூவரும் அதுபற்றி ஆராய்ந்து அறிக்கை தருவார்கள்.

**திரு. செ. சிவசாமி:** கடந்த பெருமழையில் குடகனாறு உடையாவிட்டாலும் வேடசெந்தூர் அழிந்து போயிருக்கும் என்று சொல்லப்பட்டது. அப்படி வேடசெந்தூர் அழிந்து போயிருக்கும் என்று தெரிந்தும் கூட அந்த இடத்தில் ஏன் அந்த அணையைக் கட்டினார்கள். மீண்டும் அந்த இடத்தில் அணை கட்ட உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அதுபற்றித்தான் அந்தக் குழு தீவிரமாக ஆராய்ந்து நமக்குத் தெரிவிக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த அணையைக் கட்டுவதற்கு பொறுப்பாக இருந்த அதிகாரிகள் இப்போது வேலையில் இருக்கிறார்களா? இந்த விசாரணை நடத்துகிறபோது During the pendency of the Enquiry whether this Government is likely to take any action on those officers?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, we should await the report from the Committee before proceeding against any officer.

திரு. செ. சதாசிவம்: இந்த அணை உடைப்பு சம்பந்தமாக வந்த என்குயரிக் குழுவினிடம் சாட்சி சொன்னவர்களில் நானும் ஒருவன். அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய பெரும்பாலான மக்களின் எண்ணம் அந்த அணையை மீண்டும் கட்ட வேண்டும் என்பது தான். ஆகவே, அரசாங்கம் அதை நிச்சயமாகப் பரிசீலித்து அந்த அணையைக் கட்டுவதோடு அது மீண்டும் உடையாத அளவிலும், அதில் அதிகமான அளவிற்கு தண்ணீர் கொள்ளக்கூடிய அளவிற்கும் திருத்தியமைத்து கீழ்ப்பகுதியிலுள்ள வரண்ட பகுதியிலுள்ள மக்களுக்கு வாழ்வளிக்க வழிவகை செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாட்சி சொன்னதற்கு நன்றி. அதை முதலில் தொழில் நுட்ப விசாரணையாகத்தான் போட்டோம். பிறகு அதை பகிரங்க விசாரணையாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை வந்த பிறகு அதைப் பற்றி பத்திரிகைகளில் விளம்பரம் போட்டு பொதுமக்களைக் கேட்டு கருத்துக்களை அறிந்திருக்கிறார்கள். அந்த அணையை எவ்வாறு அமைக்கலாம், எந்த இடத்தில் அமைக்கலாம், எந்த வகையில் எவ்வளவு செலவில் அமைக்கலாம் என்பதை விரிவாக ஆராய்ந்து வல்லுநர் குழு அறிக்கை அளித்த பிறகுதான் எந்த முடிவும் எடுக்க முடியும்.

திரு. மு. அரங்கநாதன்: இந்த அணையைக் கட்ட வேண்டுமென்று அந்தப் பகுதிவாழ் மக்கள் பெரும்பாலோர் அந்த இடத்தில் அந்த அணை வேண்டுமென்று வேண்டுகோள் செய்திருக்கிறார்கள். அப்படி வேண்டுகோள் செய்ததற்குப் பின்னால் அந்த அணை கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்



பட்டனவா? அந்த இடத்தில் அந்த அணை தேவை என்று பொறியாளர் அனுமதி பெறப்பட்டுள்ளதா? பெற்று அதன் அடிப்படையில் அது கட்டப்பட்டதா அல்லது கடந்த கால அரசு நேரடியாக எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்ற நோக்கோடு அது கட்டப்பட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த அணையைப் பொறுத்தவரையில், இந்த அணை கட்டப்பட்ட இடத்திலுள்ளவர்கள் இந்த அணையினால் எங்களுக்கு பயன் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அதன் மூலம் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பகுதிகளுக்குதான் பாசன வசதி கிடைக்கிறது என்பது அவர்களுடைய குறை. ஆகவே இதைப் பற்றியெல்லாம் இந்த தொழில் நுட்ப குழு ஆராய்ந்து தகவல் தந்த பிறகு தான் இதன் மீது முடிவு எடுக்க முடியும். முன்னால் இருந்த அரசு எந்த அடிப்படையில் இந்த அணையைக் கட்டியது என்பதும் இந்தக் குழுவின் அறிக்கையின் மூலம் தான் விபரங்கள் கிடைக்கும்.

## புதிய உயர்நிலைப் பள்ளிகள்.

*424 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்புக் கல்வியாண்டில் தமிழ்நாட்டில் புதிய உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தத் தனியார்களிடமிருந்து எத்தனை விண்ணப்பங்கள் வந்தன?

(ஆ) எத்தனை விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப் பட்டது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 19.

(ஆ) 7.

திரு. கோ. இளங்கோவன்: துணைத் தலைவர் அவர்களே, வசதியும் வாய்ப்பும் உள்ள தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் மேல் உயர்நிலை பள்ளிகளை அமைக்க அவை முன் வரவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட பள்ளிகளுக்கு அரசு

அறிவுரை கூற முன்வருமா ? இல்லையென்றால் ஊராட்சி ஒன்றியம்
ஒவ்வொன்றுக்கும் அரசு உயர்நிலைப் பள்ளியைக் கொண்டு வர
அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : இதற்கு தனிக் கேள்வி
போடவும்.

**திரு. வி. கே. கோதண்டராமன்** : ஸார், தனியார் பள்ளிகளை
எல்லாம் அரசே ஏற்றெடுத்து நடத்த வேண்டும் என்று
சொல்லுகின்ற இந்த நேரத்தில் தனியார் பள்ளிகளை
துவங்குவதற்கு இன்னும் அனுமதி வழங்கிக் கொண்டிருப்பது
இந்த சர்க்காரின் தொடர்ந்து இருக்கும் கொள்கையா ? இப்படி
தனியார் பள்ளிகளுக்கு அனுமதி வழங்குவதற்குப் பதிலாக அரசே
உயர்தர பாடசாலைகளை ஆரம்பிக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : தலைவர் அவர்களே,
அரசின் நிதிநிலைக்கு ஏற்ப புதிய உயர்நிலை பள்ளிகளை
துவங்குவதற்கு அனுமதி வழங்குகின்றோம். இந்தப் பிரச்னையை
அந்த முறையில் தான் அணுகி வருகின்றோம்.

**திரு. மி. வின்சென்ட்** : புதிய உயர்நிலைப் பள்ளிகளில்
எத்தனை மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் ? உயர்நிலைப்
பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு எத்தனை விண்ணப்பங்கள் வந்தன.
எத்தனை விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : தலைவர் அவர்களே,
புதிய உயர்நிலைப் பள்ளி ஆரம்பிப்பதற்கு சில நிபந்தனைகள்
இருக்கின்றன. இதற்கென்று வருகின்ற விண்ணப்பங்களுக்கு
அனுமதி வழங்குகின்ற விஷயத்தில் நாம் நம்முடைய நிதி
ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு தான் புதிய உயர்நிலைப்
பள்ளிகளை துவங்குவதற்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி
வழங்கப்படுகிறது.

**திரு. துரை முருகன்** : தலைவர் அவர்களே, இப்போது அரசின்
சார்பில் எத்தனை புதிய உயர்நிலைப் பள்ளிகள் துவங்கப்
பட்டிருக்கின்றன என்பதையும், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப்
பின் எத்தனை உயர்நிலைப் பள்ளிகளை துவக்கியிருக்கிறார்கள்
என்பதையும் அறிவிப்பார்களா ?



**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : தலைவர் அவர்களே,
இதில் மூலக் கேள்வி, 'நடப்பு கல்வியாண்டில் தமிழ் நாட்டில்
புதிய உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தத் தனியார்களிடமிருந்து
எத்தனை விண்ணப்பங்கள் வந்தன. என்பதும் எத்தனை
விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது ?' என்பதும்.
இதற்கு நான் பதிலில் அனுமதி வழங்கப்பட்டது. 7 என்று
சொன்னேன்.

**திரு. ஆர். விஜயரகுநாத தொண்டமான்** : உதவி சபாநாயகர்
அவர்களே, இந்த தனியார் பள்ளிகளில்தான் அதிகமாக
ஊழல்கள் நடைபெறுகின்றன. ஆகவே தனியார் பள்ளிகளுக்கு
அனுமதி கொடுக்கும்போது, இப்படிப்பட்டவர்கள் நல்லவர்களா
அல்லவா என்று பார்த்து அனுமதி கொடுக்கப்படுமா ? அப்படி
கொடுப்பதால் ஊழல்கள் நடைபெற முடியாமல் பார்த்துக்
கொள்ள முடியும் என்பதால், அப்படி ஒரு கொள்கையை அரசு
ஏற்றுக் கொண்டு செயலாற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : அறிவு வளர்ந்திருக்கின்ற
நிலையில் ஊழல்கள் நடந்ததற்குப் பின்னால்தான் கண்டுபிடிக்க
முடிகிறதே தவிர; முன்னால் கண்டுபிடிக்க முடிவதில்லை என்பதை
தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி** : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது,
நிதிநிலைக்கு ஏற்ப அரசு தனியார் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கி
வருகிறது என்று சொன்னார்கள். இப்போது தனியார் பள்ளிகளாக
இருந்தாலும், அரசு பள்ளிகளாக இருந்தாலும் அரசுதான்
பணம் செலவு செய்து வருகிறது. முன்னால் மூன்றில் இரண்டு
பங்கு என்றிருந்தது, இப்போது முழுமையாகவும் அரசே செலவு
செய்து வருகிறது. இப்படி பல கிராண்டுகளை கொடுத்து
வருகிறோம். இந்த நிலையில் தனியார் பள்ளிகளில் பல ஊழல்கள்
நடைபெற்று வருவதாகவும் தகவல்கள் வருகின்றன. ஆகவே
இதைத் தவிர்ப்பதற்கு—தனியார்கள் மூலமாக பள்ளிகள் நடத்த

[1978 மார்ச் 7

அனுமதி வேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில் தனியார்களிடத்தில் அவைகளை விடாமல் அரசே இவைகளை எல்லாம் ஏற்றெடுத்து நடத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.20]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, தனியார் துறையிலே பள்ளிகள் ஆரம்பிக்கப்படுகின்றபோது, முழுமையான செலவையும் அரசு ஏற்பதில்லை. பல்வேறு செலவுகளை அவர்கள் செய்கின்றார்கள். ஆனால் தனியார் துறையில் ஆரம்பிக்கப்படுகின்ற பள்ளிகளுக்கு அனுமதி தரக்கூடாதென்று பேசப்படுகின்ற இந்த நேரத்தில், நம்முடைய அனுமதியைப் பெறாமலேயே சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்தவர்கள் பள்ளிகள் ஆரம்பிக்கலாம் என்ற ஒரு நிலைமை இருந்து வருகிறதென்பதையும், அப்படி ஆரம்பித்ததற்குப் பின்னாலே இந்த அரசின் அனுமதி பெற்றுக் கொள்ள முடியும் என்ற நிலைமை இருந்து வருகிறது என்பதையும், இதுபோன்றதைத் தவிர்க்கப்பட வேண்டுமானால் நாம் அரசியல் சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டுமென்றும், அதற்கான முயற்சிகளில் ஈடுபடுமாறு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படித் தனியார் பள்ளிகளுக்கு அனுமதி தருகின்ற நேரத்தில், இந்த உயர்நிலைப் பள்ளிக்குத் தேவையான கட்டிட வசதியோ, விளையாட்டு மைதான வசதியோ அல்லது வேறு வகையான வசதிகளோ ஏற்படுத்திய பின்னால்தான் அனுமதி தரப்படுகின்றதா? அல்லது ஏற்படுத்தப்படும் என்ற நம்பிக்கையில் அனுமதி தரப்படுகின்றதா? ஆனால் பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளிலே கட்டட வசதியில்லாமல், விளையாட்டு மைதான வசதி இல்லாமல் இருக்கின்றன. எனவே, இந்த வசதிகள் அனைத்தையும் ஏற்படுத்தியதற்குப் பின்னர் அனுமதி வழங்கப்படுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



[1]978 மார்ச் 7]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளுக்கு சில குறிப்பிட்ட குறைந்தபட்ச வசதி இருந்தால்தான் அனுமதி தர வேண்டுமென்ற நிலை இருக்கிறது. ஆனால், உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களின் தேவைகளையும் நாம் பார்க்கிறோம். ஆகவே, இந்தத் தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற நிலைமையில், சில வசதிகளைப் பற்றிய நிபந்தனைகளைத் தளர்த்தி, தனியார் பள்ளிகளுக்கு அரசு அனுமதி வழங்கிக் கொண்டு வருகிறது.

**திரு. சொ. ந. பழனிச்சாமி :** மாண்புமிகு உதவித் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளிலே ஊழல்கள் நடக்கின்றது என்று எங்கள் கட்சியைச் சேர்ந்த தொண்டமான் அவர்கள் சொன்னார்கள். அதிலும் குறிப்பாகக் கூற வேண்டுமென்றால், இந்த மதிய உணவுத் திட்டத்திலே ஏழை மக்களுக்கு அளிக்கப்படுகின்ற இந்த உணவிலே கல்லையும், புழுவையும் கலந்த ஒரு அரிசியைச் சமைத்துப் போடுகின்றார்கள் என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதைப் பற்றி இந்த அரசு கவனித்து ஆவன செய்யுமா என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, எந்த இடத்திலே நடைபெறுகின்றது என்பதைக் குறிப்பாகத் தெரிவிப்பார்களானால், அதுபற்றிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு நலமாக இருக்கும். ஏதோ ஒரு இடத்தில் நடைபெறுகின்ற குற்றத்தை வைத்து, எல்லோருடைய தலையிலும் அதைச் சுமத்துவது முறையாகாது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. அ. சுவாமிதாஸ் :** தலைவர் அவர்களே, ஒட்டு மொத்தமாகத் தனியார் பள்ளிகளிலே ஊழல்கள் நடப்பதாக இங்கே சட்ட மன்றத்திலே புகார்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே, தனியார் பள்ளிகளில், அதுவும் மைனாரிட்டியார் நடத்துகின்ற பள்ளிகளிலே, மிஷினரிப் பள்ளிகள் தமிழ்நாட்டிலே முன்மாதிரிப் பள்ளிகளாகச் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. அப்படிச் செயல்படுகின்ற

[திரு. அ. சுவாமிநாஸ்] [1978 மார்ச் 7

அவர்கள், முன்னுரிமையில் தாங்களாகவே இந்த ஆண்டில் ஏறத்தாழ 50-க்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகளை அவர்கள் துவக்கியிருக்கிறார்கள். அரசு இந்த எல்லா உயர்நிலைப் பள்ளிகளுக்கும் அனுமதி வழங்கவில்லை. ஆனால், தேர்விலே மாணவர்கள் கலந்து கொள்ள அனுமதி வழங்கியிருக்கிறது. ஆகவே, இந்தத் தனியார் பள்ளிகளின் நன்மையைக் கருதி எல்லாப் பள்ளிகளுக்கும் இந்த ஆண்டு அனுமதி வழங்குவதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, முறைப்படி அரசு பரிசிலனை செய்து அதற்கான அனுமதியை வழங்கும்.

**திரு. ஆர். மணிமாறன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் துறைப் பள்ளிகளுக்கு அரசு அனுமதி வழங்கும்போது, இந்த உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்துவதற்கு என்ன என்ன வரையறையை, முறைகளைப் பின்பற்றி அனுமதி அளிக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, கட்டிட வசதி, இட வசதி போன்ற வசதிகளும், இன்னும் பல்வேறு நிபந்தனைகளும் இருக்கின்றன. அதைத் தெரிந்து கொள்வதற்குத் தனியாக கேள்வி போட்டால், அந்த விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

**திரு. மு. அரங்கநாதன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியப் பெருமக்களுக்கு, எல்லா ஆசிரியர் களுக்கும் நிர்ணயிக்கப்படுகின்ற ஊதிய விகிதங்கள் சரியான முறையிலே வழங்கப்படுவதில்லை என்று பொதுவாகப் புகார்கள் இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அவர்களுக்கு வழங்கப் படுகின்ற ஊதியத்தை நேரடியாக வழங்குவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முறைகேடுகள் நடந்தால், நேரடியாக வழங்குவதற்கான சாத்தியக் கூறுகளை இந்த அரசு ஆராயும்.



1978 மார்ச் 7]

**திரு. எச். ஜி. ஆறுமுகம் :** உயர்நிலைப் பள்ளிகள் பல, ஆரம்பப் பள்ளிகள் இருக்கும் கட்டடங்களிலேயே இருந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியில் உள்ள ஒரு ஆரம்பப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்பட்டு கட்டடம் கட்ட ஆரம்பிக்கப்பட்டு பாதியிலேயே நின்று கொண்டிருக்கிறது. அந்த உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** புதிய பள்ளிக்கூடம் துவக்குகின்றபோது, கட்டடங்கள் கட்டித் தருகின்ற பொறுப்பையும், இடவசதி செய்து தருகின்ற பொறுப்பையும், பல்வேறு வசதிகள் செய்து தரும் பொறுப்பையும் கட்டடக் குழுவினர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற முறையில் புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதுவுமல்லாமல் எல்லாப் பள்ளிக் கட்டடங்களையும் கட்டுகின்ற அளவுக்கு அரசு நிதிநிலைமை இல்லை என்பதையும், கடந்த பல்லாண்டு காலமாக இப்பேர்ப்பட்ட முறை தான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய தொகுதியில் பள்ளிக்கூடம் கட்டுவதற்கான முயற்சியில் கொஞ்சம் தீவிரமாக ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** பள்ளிக்கூடங்களுக்காக அவர்கள் அமைத்திருக்கிற கட்டடக் குழுவின் சார்பில் சில கட்டடங்களைக் கட்ட நிதி வசூலித்து பாதியில், முக்காலில் நின்று விடுகிறது. அதற்கு மேல் கிராமப் பகுதிகளில் நிதி வசூலிக்க முடியாத நிலைமையில் அந்தக் கட்டடங்கள் பாதியில் நிற்கின்றன. இந்த நிலைமையில் 20 பள்ளிக் கட்டடங்களாவது நின்று போயிருக்கும். அத்தகைய கட்டடங்களைப் பொறுத்தவரை அரசு தனியாக உத்தரவிட்டு நிதி உதவி, அந்தக் கட்டடங்களைக் கட்டி முடித்துப் பயன்படுத்திக் கொள்ள முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** புதிய கட்டடங்களுக்கு நிதி ஒதுக்குகின்றபோது இதுபோன்ற பள்ளிகளுக்கு ஒரு முன்னுரிமை தரலாம்.

திரு. இரா. அருணாசலம் : தனியார் பள்ளிகளில் ஊழல் நடப்பதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. குறிப்பாக, ஆசிரியர்களுக்கு அந்தந்தப் பள்ளிகளின் மேலாளர்கள் ஊதியத்தைக் கொடுக்கும்போது ஒரு பகுதியைப் பிடித்துக் கொண்டு அக்விடன்சில் முழுத் தொகையும் போட்டு கையெழுத்து வாங்குகிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அந்த மாதிரிக் குறைகள் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா ? அப்படி வந்திருந்தால் அவற்றைப் பற்றி அரசு கவனித்து நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அத்தகைய பள்ளிகளில் நேரடியாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபடும். ஆயினும் இதுபோன்ற நுணுக்கங்களை எல்லாம் இங்கே பேசுவதன் மூலமாக தெரியாதவர்களுக்கும் சொல்லிக் கொடுக்கும் முறையை நாம் உருவாக்க வேண்டாம்.

### பரதராமியில் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்.

* 425 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பரதராமியில் உயர்தரப் பாடசாலைக் கட்டடம் கட்டுவதற்காக 2½ ஏக்கர் நிலம் வாங்கப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) கட்டடம் கட்டும் வேலை தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) பரதராமி கிராமத்தில் ஸ. எண். 251-ல் 2.85 ஏக்கரும் ஸ. எண். 263/1-ல் 0.65 ஏக்கரும் ஆகிய 3½ ஏக்கர் பட்டா நிலங்கள்



பள்ளிக் கட்டடக் திரு. பாலகிருஷ்ணன் என்பவரிடமிருந்து 21—2—61 அன்று குழுவால் கிரயம் கொடுத்து வாங்கப்பட்டு விற்பனை சாசனம் பதிவு செய்யப்பட்டது.

(இ) இப்பள்ளிக் கட்டிடம் கட்டும் வேலை எதுவும் நிலுவையில் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : பல ஆண்டுகள் ஆகியும் இருக்கக் ஆந்திரா பார்டரில் இருக்கக்கூடிய மிகவும் பின்தங்கி கூடிய ஒரு பிரதேசத்தில் இருக்கக்கூடிய அந்தப் பாடசாலைக் கட்டடத்திற்காக வேண்டி 3½ ஏக்கர் நிலத்தைக் கொடுத்த நற்குப் பிறகும் அரசு அவர்கள் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்து அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு முன்வராத காரணத்தால்தான் அந்த வேலை இப்போது அப்படியே ஸ்தம்பித்து நிற்கிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, முன் கேள்விக்கு அமைச்சர் பதில் கூறியது போல் இதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு உடனடியாகக் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆறு வகுப்பறைகள் கொண்ட கூரைக் கட்டிடத்தை மாற்றி ஆறு வகுப்பறைகள் கொண்ட நிரந்தரக் கட்டடம் கட்டும் நிலை குறித்து மாவட்ட அளவில் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : பரிசீலனை இன்னும் எத்தனை வருஷ காலம் நடைபெறும் ? இப்போதே பத்து பன்னிரண்டு வகுப்புகள் வெளியிலே மரத்தடியில் நடத்தப்பட்டு வருகிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, உடனடியாகக் கட்டடம் கட்டி அங்கே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு நல்லது செய்ய உடனடி ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எதுவுமே விரைவில் நடைபெற வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது. ஆனால் பரிசீலனை என்று சொல்லுகிறபோது அதற்குத் தேவையான நேரத்தை எடுத்துக் கொள்வதில் நியாயம் இருக்கிறது. அந்த அளவுக்குக் காலத்தைத்தான் எடுத்துக் கொள்வார்கள்.

### ஆடுதுறையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி

* 426 வினா—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், ஆடுதுறையில் பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[முற்பகல் 9-30]

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆடுதுறை பேரூராட்சியில் நீண்ட நாட்களாக ஒரு உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று அங்கே இருக்கின்ற பெரும்பகுதி மக்கள் விருப்பம் தெரிவித்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்து பல்வேறு கோரிக்கைகளை அனுப்பியிருக்கிறார்கள். அதைச் சுற்றிலும் இருக்கிற கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் ஆடுதுறையிலே ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அவசியமாக ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி வருவதால் அப்படிப்பட்ட ஒரு உயர்நிலைப் பள்ளியை துவக்குவதற்கு அரசு இனிமேலாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட கோரிக்கை வரும்பொழுது பரிசீலிக்கப்படும்.

திரு. ரா. வீ. சவுந்திரராஜன்: தஞ்சை மாவட்டத்தில் பாபநாசம் பகுதியில் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி ஆடுதுறையைப் பற்றியது, உட்காருங்கள்.

திரு. ரா. வீ. சவுந்திரராஜன்: கேள்வி பெண்கள் உயர்நிலைப் பள்ளியைப் பற்றியிருப்பதால். . .



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பெண்கள் உயர்நிலைப் பள்ளியைப் பற்றியதாக இருந்தாலும் ஆடுதுறையைப் பற்றித் தான் கேட்கப்பட்டிருக்கிறது, பாபநாசத்தைப் பற்றி அல்ல, உட்காருங்கள்.

### தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவ வசதி

* 427 வினா—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு பள்ளிக்கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் இலவச சிகிச்சையளிக்கும் திட்டத்தினை, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர், ஆசிரியரல்லாதோர் மற்றும் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தோர் இவர்கள் அரசு மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகளில் இலவச மருத்துவ வசதி பெற தேவையான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. கோ. இளங்கோவன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த வசதி தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

### பஞ்சாயத்துக்களைப் பிரித்தமைத்தல்.

* 428 வினா—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேர்தலுக்கு முன்பாக பஞ்சாயத்துக்களை பிரிக்கும் உத்தேசமுண்டா?

(ஆ) ஆம் என்றால் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) ஆம். 28—2—78-க்குள் இந்த வேலை முடிவு பெற வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் படி ஊராட்சிகளைப் பிரிக்கும் அதிகாரம் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ளது. 23—2—78 முடிய 215 கருத்துருக்கள் பெறப்பட்டன. அவற்றை ஆய்வு செய்து 163 ஊராட்சிகளைப் பிரித்து ஆணையிட்டுள்ளார். 18 கருத்துருக்கள் பல்வேறு காரணங்களால் நிராகரிக்கப்பட்டன. 34 கருத்துருக்கள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிவு செய்ய இயலாது என்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

**திரு. துரை முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த காலக் கெடுவை இன்னும் நீட்டுவதற்கு உத்தேசம் உண்டா? பஞ்சாயத்துக்களைப் பிரிப்பதிலே ஆங்கே செல்வாக்குப் பயன்படுத்தியவர்களுக்குத் தான் பஞ்சாயத்துக்கள் பிரிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே எல்லா தகுதிகளையும் பெற்றிருக்கின்ற பஞ்சாயத்துக்கள் கூட பிரிக்கப் படவில்லை என்ற குறைபாடு இருக்கிறது, அது நீக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** புதிதாகப் பிரிக்கப்பட்ட ஊராட்சிகளில் வார்டுகளைப் பிரிப்பதற்கும் வாக்காளர்கள் பட்டியலைத் தயாரிப்பதற்கும் இதுபோன்ற காரியங்களுக்காக 3½ மாதங்கள் தேவைப்படுகிறது. ஆகவே தேர்தல் வருவதற்குள் இவைகளையெல்லாம் பிரிக்க முடியாது, எனவே காலக் கெடுவை நீட்டிக்க வேண்டியதில்லை என்று அரசு கருதுகிறது. விதிகளின் படி தான் ஊரக வளர்ச்சி இயக்குநர் ஊராட்சிகளைப் பிரிப்பதைப் பற்றி முடிவு செய்கிறார்.

**திரு. ரா. மார்க்கபந்து :** துணைத் தலைவர் அவர்களே, சில பஞ்சாயத்துக்களை பிரிக்கின்றபோது 2, 3 ரெவின்யூ கிராமங்கள் இருந்தால் ஒரு ரெவின்யூ கிராமத்திலே உள்ள சில சர்வே நம்பர்களை வேறு கிராமத்தோடு சேர்த்துவிட்டு பிரிக்கின்ற முறை இருக்கிறது, அதைப் பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா? அப்படி இருக்கின்றவற்றை மாற்றி மறுபடியும்





அந்தந்த சர்வே நம்பர்களை அந்த அந்த ரெவின்யூ கிராமங்களோடு சேர்த்து பஞ்சாயத்துக்களைப் பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா? இன்னொரு கேள்வி. கால வரையறையை நீட்டிக்கும் உத்தேசம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். முறையாக பஞ்சாயத்துக்களில் தீர்மானம் போட்டு கலெக்டர்களுக்கு அனுப்பியும்கூட இந்தப் பட்டியலில் அந்தப் பஞ்சாயத்துக்கள் இடம் பெறவில்லை. ஆகவே அவைகளை எல்லாம் பிரிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** திரு. மார்க்கபந்து அவர்கள் முதலிலே கேட்ட கேள்விக்கு பதில், மாவட்ட ஆட்சித் தலைவர் எந்த வகையிலே பரிசிலனை செய்ய வேண்டுமென்று சொல்கிறாரோ அந்த வகையிலே அதை ஏற்று அதிலே சிக்கல் இல்லாத அளவிற்குத்தான் பிரிக்கப்படுகிறது. காலக் கெடுவை நீட்டித்துக் கொண்டே போனால் அது முடிவற்ற கதையாக இருக்கும். ஆகவே குறிப்பிட்ட காலத்திற்குள் அதை முடிவு செய்வதுதான் நல்லது.

**திரு. என். பழனிவேல் :** பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கக் கூடிய அமைப்பிலே பழனி வட்டம் ஆயக்குடி பேரூராட்சியை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று அந்தப் பேரூராட்சி தீர்மானம் போட்டு அனுப்பியிருந்தது. அது தற்போது எந்த நிலையிலுள்ளது என்பதோடு தொப்பம்பட்டியில் 40-க்கும் மேற்பட்ட பஞ்சாயத்துக்கள் அமைந்திருக்கின்றன; அதையும் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று அந்தப் பகுதியில் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது என்று என்னிடத்தில் கூறினார்கள். அதையும் பிரிக்க பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, 374 ஊராட்சி ஒன்றியங்களும், 12,000-க்கும் மேற்பட்ட ஊராட்சி களும் இருக்கின்றன. எனவே, குறிப்பிட்ட ஒரு ஊராட்சி

ஒன்றியத்தைப் பற்றியோ, ஊராட்சியைப் பற்றியோ மாண்புமிகு உறுப்பினர்கள் தகவல் தெரிய விரும்பினால் தனியாகக் கேள்வி போடுவதுதான் நல்லது.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் எத்தனை ஊராட்சிகளைப் பிரித்திருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்பதோடு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கேள்வியைப் பொதுவாகக் கேட்க வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்தைப் பற்றியும் தனியாகக் கேட்க வேண்டும் என்றால் அதற்குத் தனிக் கேள்விதான் போட வேண்டும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை ஊராட்சிகள் பிரிக்கப்பட்டன? பல பஞ்சாயத்துக்களைப் பிரிப்பதற்கு, அமைச்சரவர்கள் சொன்னார்கள் பிப்ரவரி 28 ஆம் தேதிக்குள் என்று, அதை இன்னும் கொஞ்சம் நீட்டித்துக் கொடுக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் ஏறக்குறைய 30 ஊராட்சிகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன என்று கருதுகிறேன். காலக் கெடுவை நீட்டிப்பது தேர்தலைத் தள்ளிப் போடக் கூடிய சூழ்நிலைக்குக் கொண்டு வந்துவிடும். குறிப்பிட்ட காலத்திற்கு முன்னாலே முடிப்பதுதான் நல்லது.

**திரு. துரை முருகன்:** சார், அமைச்சரவர்கள் பதில் அளிக்கும் நேரத்தில் மூன்றரை மாதங்களுக்குள் முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியென்றால் மூன்றரை மாதங்களில் தேர்தல் வரும் என்று அறிவிக்கிறாரா அமைச்சர்? அப்படி தேதி நிர்ணயிக்கப்பட்டு விட்டதா? அப்படியென்றால் எந்தத் தேதி?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** கேள்வி, ஊராட்சிகளைப் பிரிப்பது பற்றியது.



**திரு. துரை முருகன்:** ஊராட்சி மன்றத் தேர்தலைப் பற்றித் நான் கேட்கிறேன்.

**திரு. ஏ. சுவாமிநாதன்:** தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய பரிந்துரையின் மேல் ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமென்று கருதினால் ஊராட்சி மன்றங்களை மாறுதல் செய்யலாம் என்று தெரிவித்தார்கள். அண்மையில் நடந்த கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்தில் கூட இது குறித்து நாங்கள் கேள்வி கேட்டபொழுது நாங்கள் அரசுக்கு கன்னியாகுமரி மாவட்ட பஞ்சாயத்துப் பிரிவினை பற்றி விண்ணப்பித்திருக்கிறோம். கூடிய சீக்கிரம் அரசு முடிவெடுக்கும் என்று ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக ஊராட்சி அமைப்புகளைச் சீர்திருத்தி அமைக்க வேண்டிய நிலை இருப்பது உறுப்பினருக்குத் தெரியும் என்று கருதுகிறேன். இதுபற்றிய கருத்தை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெற்று இதுபற்றி முடிவு செய்ய அரசு காத்திருக்கிறது.

**திரு. கே. பண்ணை சேதுராம்:** தலைவரவர்களே, சில பஞ்சாயத்துக்களை உண்மையிலேயே பிரிக்க வேண்டிய நியாயமான காரணங்கள் இருக்கின்றன. ஆகவே, பிப்ரவரி 28 ஆம் தேதிக்குள் முடிவு பெற வேண்டுமென்று கொடுக்க வேண்டிய உத்தரவுகளெல்லாம் கொடுத்துவிட்டதால், நியாயமாகப் பிரிக்கப்பட வேண்டிய பஞ்சாயத்துக்கள் பிரிக்கப் படாமல் இருப்பதால், இன்னும் ஒரு மாதம் நீட்டித்து, மார்ச் 31 ஆம் தேதி வரையில் காலக் கெடுவை நீட்டித்து, பஞ்சாயத்துக்களைப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, பிரிக்கப்பட வேண்டிய அளவில் பல ஊராட்சிகள் பிரிக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே, காலக் கெடுவை நீட்டிப்பதாக உத்தேசமில்லை.

[1978 மார்ச் 7

**திரு. அ. ராமசாமி :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஊராட்சிகளைப் பிரிக்கின்ற நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்தை அறிந்து பிரிப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத்தினுடைய கருத்தையும் அறிந்து பிரிக்கப்படுகின்றதா அல்லது அதன் கருத்தை அறியாமலேயே மாவட்ட ஆட்சித் தலைவருடைய சிபாரிசின் மேல் செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, ஊராட்சி மன்றத்தின் கருத்தின் மீதும், வட்டார வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கருத்தின் மீதும் மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்கிறார்.

**திரு. ப. சந்திரன் :** தலைவரவர்களே, ஊராட்சிகளுக்குக் காலவரம்பு அறிவிக்கப்பட்டு அந்தக் காலவரம்பு கடந்து விட்டது. இருந்தாலும் அந்தக் காலவரம்பிற்குள்ளாக மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசோடு அந்த மனுக்கள் இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் அந்த மனுக்களையாவது பரிசீலித்து பிரிப்பதற்கு வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு வந்து சேர்ந்திருக்கிற கோரிக்கைகள் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

*429 வினு—**திரு. துரை கலியமூர்த்தி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சிதம்பரம் வட்டம், கீரபாளையம் ஒன்றியம் பூந்தோட்டம் ஊராட்சியினை பூந்தோட்டம்—வாகூர் என இரண்டாகப் பிரிக்க கீரபாளையம் ஒன்றியம் மூலம் கோரப் பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும் ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) ஆம். பூந்தோட்டம் ஊராட்சியை பூந்தோட்டம்—வாகூர் என இரு ஊராட்சிகளாகப் பிரித்து 25—10—1977 இல் ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆணை பிறப்பித்துள்ளார்.



78 மார்ச் 7]

(ஆ) பிரிவினை செய்யப்பட்ட இரு ஊராட்சிகளும், டைபெறவிருக்கும் ஊராட்சிகளின் சாதாரணத் தேர்தல் நாள் தல் நடைமுறைக்கு வரும்.

**திரு. துரை கலியமூர்த்தி :** தலைவரவர்களே, வருகிற ஊராட்சி ன்றியத் தேர்தலில் கலந்து கொள்ள வாய்ப்பு அளிக்கப்படுமா ன்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, வாய்ப்பு ளிக்கப்படும்.

*430 வினு—**திரு. துரை கலியமூர்த்தி :** மாண்புமிகு ள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு டையளிப்பாரா :—

(அ) தென்னுற்காடு மாவட்டத்திலுள்ள வெள்ளியக்குடி பஞ்சாயத்தை வெள்ளியக்குடி, வடபாக்கம் என இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) பஞ்சாயத்துக்களைப் பிரிக்கும் அதிகாரம் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு வழங்கப் பட்டிருக்கிறது. அதன்படி வெள்ளியக்குடி ஊராட்சியை வெள்ளியக்குடி, வடபாக்கம் என இரண்டு பஞ்சாயத்துக்களாகப் பிரித்து 25—10—1977 இல் ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆணை பிறப்பித்துள்ளார்.

(ஆ) இவ்விரு ஊராட்சிகளும் சாதாரண பஞ்சாயத்து தேர்தல் நாள் முதல் நடைமுறைக்கு வரும்.

## மூவாநல்லூர் குடிநீர் திட்டம்

*431 வினு—**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மன்னார்குடி தாலுக்கா மூவாநல்லூரில் குடிதண்ணீர் திட்டம் அமுலாக்கப்பட்டு விட்டதா ?

(ஆ) வீதிகளுக்கு குழாய் இணைப்புக் கொடுப்பதில் சிக்கல் ஏதும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) ஆம்.

(ஆ) இல்லை.

(இ) வினா எழ இடமில்லை.

(முற்பகல் 9-40)

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுதந்திரம் வந்து 30 வருஷத்திற்குப் பிறகு குடி நீர் வழங்குவதற்கான திட்டங்களை நாம் தீட்டியிருக்கிறோம். இந்தக் குடி நீர் திட்டத்தை மூவாநல்லூர் கிராமத்திற்கு விரைவிலே நிறைவேற்றி, குடி நீர் கிடைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, மூவாநல்லூரில், ஊராட்சி ஒன்றியத்தால் அமைக்கப்பட்ட 6 கை அழுத்த குழாய்களும் (Hand Pumps) 4 திறந்த வெளி கிணறுகளும் உள்ளன. அதோடு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் உள்ளது. அதிலுள்ள நீர் இரு பொதுக் குழாய்கள் மூலமாக ஊருக்கு வழங்கப்பட்டு வருகின்றது. அதோடு, அரிசன மக்கள் வாழும் இடத்திலே ஒரு கையழுத்தக் குழாய் 1976-77 இல் பொருத்தப்பட்டு, நன்றாக இயங்கி வருகிறது. மேலும், ஒரு தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டியினை அரிசன காலனியில் அமைக்கும் பணி, அரிசன நலத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி, இறைவை நிலையம் முதலியவை அமைக்கப்பட்டும் விட்டன. இறைவை இயந்திரம் பொருத்தி மின் இணைப்பு பெறும் பணி எஞ்சியுள்ளது. அது முடிவு பெற்றவுடன் குடிநீர் நிரம்பக் கிடைக்கும்.

## E.S.I. Hospital for Dharmapuri district.

*432 Q.—Dr. K. SAMARASAM: Will the Hon. the Minister for Labour be pleased to state whether there is any proposal with the Government to open an E.S.I. Hospital in Dharmapuri district?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இல்லை.



## மணக்குடியில் நலத்துறைப் பள்ளி

*433 திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம் 'மணக்குடி' பஞ்சாயத்தில் தாழ்த்தப்பட்டோருக்கென தனிப் பள்ளி ஒன்று இயங்கி வருகின்றதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாயூரம் ஒன்றியம் 'மணக்குடி' பஞ்சாயத்தில் தாழ்த்தப்பட்டோருக்கென தனிப் பள்ளி ஒன்று இயங்கி வருகின்றது.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளியில் பல்வேறு குறைகள் இருப்பதாகவும், அது சிறப்பாகச் செயல்படுவதற்குப் பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. அந்த வகையில் அப்படிப்பட்ட அந்த தாழ்த்தப்பட்டோர் பள்ளியைச் சிறப்பான முறையில் நடத்துவதற்கு நம்முடைய அமைச்சரவர்கள் தனிக் கவனம் செலுத்தி, அந்தப் பள்ளியைச் சீர்படுத்துவதற்கு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, தற்பொழுது இருக்கிற பள்ளிக் கட்டிடம் பழுதடைந்திருக்கிறது. அது தெரிந்த பிறகு, ரூ. 1,800 செலவில், அதைத் திருத்தியமைப்பதற்கு ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளிக் கட்டப்பட்ட இடத்தில் ஏற்கனவே உள்ள ஒரு குழாய்க்கிணறு குடி தண்ணீருக்காகப் பயன் படுத்தப்பட்டு வருகிறது.

[1978 மார்ச் 7

## தீண்டாமை ஒழிப்புக் குழு

*434 திரு. சு. பாலன் : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறை D.I.G. தலைமையில் தீண்டாமை ஒழிப்பு உயர்மட்டக் குழு ஏதேனும் அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதற்கு தலைவர் யார் ?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, திருத்தப்பட்ட குடி உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 9—11—1976 முதற்கொண்டு செயலுக்கு வந்தது. காவல் துறை டி.ஐ.ஜி. தலைமையில் தீண்டாமை ஒழிப்பு உயர்மட்டக் குழு இம்மாநிலத்தில் ஏதும் அமைக்கப்படவில்லை. இச்சட்டம் கண்டிப்பாக செயற்படுத்தப்படுகிறதா என்பதைக் கவனிக்க காவல் துறை டி.ஐ.ஜி. பதவித் தரத்தில் ஒரு காவல் துறை அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு. சி. மாணிக்கம் :** தலைவரவர்களே, தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கை எடுக்கும்பொழுது புகார் தரப்பட்டதும் போலீஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து விடுகிறார்கள். அந்த மனு மீது பல நேரங்களில் பரிசீலனை கூட நடப்பதில்லை. எனவே, மாவட்ட அளவில் அரிசன மக்கள் மீது பற்று வைத்துள்ளவர்களைக் கொண்டு குழு அமைத்துத் தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, இந்தத் தீண்டாமையை ஒழிப்பதற்குத்தான் ஒவ்வொரு மாவட்ட அளவிலேயும் ஒரு ரோந்துப்படை, அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனிப்பட்ட குழு அமைப்பதைவிட, ஒவ்வொரு பகுதியிலும் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களும், மக்களும் எங்கெங்கே தீண்டாமைக் கொடுமை இருக்கிறதோ, அங்கங்கே அதை ஒழிப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. சு. பாலன் :** தலைவர் அவர்களே, முந்தைய அரசு ஒரு [illegible] ஏற்பாடு செய்வதற்கு ஏதேனும் [illegible] தெரிவித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



1978 மார்ச் 7]

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்தத் தீண்டாமை சட்டத்தை செயல்படுத்துவதில் அரசுக்கு ஆலோசனை கூற, மாநில அளவில், மாநில காவல் துறைத் துணைத் தலைவர் உட்பட, அரசு அலுவலர்களும், அலுவலர்கள் அல்லாதவர்களும் சேர்ந்த, ஒரு உயர்மட்டக் குழு குடியுரிமைப் பாதுகாப்பிற்காக ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கிறது.

**திரு. துரை முருகன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியோடு சம்பந்தப்படாவிட்டாலும் ஒரு ஒழுங்குப் பிரச்சினையாகவே கேட்கிறேன். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் ஒழுங்குப் பிரச்சினை இல்லை.

**திரு. துரை முருகன் :** இது ஒரு முக்கியமான விஷயம். என்னவென்று கேட்டால், இன்று காலைப் பத்திரிகையிலே மாண்புமிகு அரிசன நல அமைச்சர் மருத்துவ மனையிலே அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி வந்திருக்கிறது. இங்கே வந்து பார்த்தால் அமைச்சர் அவர்கள் கேள்விக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார், பொதுமக்கள் மிகுந்த பரபரப்பு அடைந்து, ஆஸ்பத்திரியை நோக்கி சென்று கொண்டே இருக்கிறார்கள். ஆகவே நன்றாக இருக்கிற அமைச்சர் அவர்களை— அவர் நல்ல அமைச்சர்—மருத்துவ மனையிலே சேர்த்திருக்கிறார்கள் என்று தவறான தகவலை பத்திரிகைகள் பிரசுரித்திருக்கின்றன. எனவே இது குறித்து ஒரு ஸ்டேட்மென்ட் கொடுப்பார்களா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஆஸ்பத்திரியில்தான் இருந்தார், இப்போது நலமாக இருக்கிறார். உங்களுக்குப் பதில் சொல்வதற்கென்றே வந்திருக்கிறார்.

**திரு. க. மருதாசலம் :** துணைத் தலைவர் அவர்களே, தீண்டாமையை ஒழிப்பதற்கு அரசு ஏதேனும் தனித் திட்டம் தீட்டி செயல்படுத்த இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, தீண்டாமைக் கொடுமைகளை அறவே ஒழிக்க வேண்டும் என்று தான் மத்திய சர்க்காரும் ஒரு காலவரையறையை

நிர்ணயித்து அதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளது. இதேபோல மாநில அரசும் மத்திய அரசு இடுகிற கட்டளையைத் துரிதமாக நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பல செயல் திட்டங்களை விரைவிலே வகுத்து, நடைமுறைப்படுத்தி இருக்கிறது.

**திரு. இ. கா. ராமலிங்கம் :** தலைவர் அவர்களே, தீண்டாமை ஒழிக்க வேறு வழிகளின் மூலம் தீவிரப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே இதைத் தீவிரமாகத் தான் கடந்த காலத்தில் இருந்த அரசும் இந்த அரசும் செயல்படுத்தி வருகிறது

**திருமதி சுப்புலட்சுமி :** தலைவர் அவர்களே, ரோந்து படை செயல்பட்டு வருவதாகக் கூறினார்கள். அது தற்பொழுது எந்தெந்த மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டிலிருந்து கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, தென்னார்க்காடு, மதுரை ஆகிய 6 மாவட்டங்களில் இந்த ரோந்துப் படை செயல்பட்டு வருகின்றது.

**திரு. எம். ஏ. ஜெயவேலு :** தலைவர் அவர்களே, தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் காலனிகளில் மட்டும்தான் நடத்தப்படுகிறது. இது மற்ற இடங்களிலும், ஊர்களிலும் நடத்தப்படுமா ?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, காலனிகளிலே மட்டும் அல்ல, பொதுவாக எல்லா இடங்களிலும் நடத்தப்படுகிறது.

**திரு. ஏ. செல்லப்பன் :** தலைவர் அவர்களே, தீண்டாமை ஒழிப்பு காவல் துறையில் பொதுவாக ஆட்களை எடுக்கும்போது தாழ்த்தப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா ? இதுவரையில் அப்படி எத்தனை தாழ்த்தப்பட்ட - காவல் துறை அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** கேள்வி தீண்டாமை ஒழிப்பது பற்றி. காவல் துறையினரை நியமிப்பது பற்றி அல்ல.

**திரு. மு. கருணாநிதி :** துணைத் தலைவர் அவர்களே, தீண்டாமையை ஒழிப்பது என்கின்ற அடிப்படையிலேதான் கடந்த காலத்தில் தமிழக அரசு, அர்ச்சகர்கள் சட்டம் ஒன்றினை நிறைவேற்றி, அது சுப்ரீம் கோர்ட்டு உத்தரவினால் முடக்கப்பட்டு கிடக்கிறது. அந்தச் சட்டம் மீண்டும் உலவ வேண்டுமேயானால், நடைமுறைக்கு வரவேண்டுமேயானால், அரசியல் சட்டத்தில் திருத்தம் தேவை. அதை ஏற்கனவே இருந்த கழக அரசு பலமுறை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, வலியுறுத்தி வந்திருக்கிறது. அப்படி இந்த அரசும் வலியுறுத்துமா. தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு ?

(முற்பகல் 9-50)

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** அந்த நல்ல நோக்கம் இந்த அரசுக்கு இருக்கிறது.

**திரு. மு. அம்பிகாபதி :** துணைத் தலைவரவர்களே, தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடத்துவதாலும், தாழ்த்தப்பட்ட மக்களை அர்ச்சகர்களாக்குவதினாலும் தீண்டாமையை ஒழித்துவிட முடியும் என்று இந்த அரசு கருதுகிறதா ? கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய நிலங்களை சொந்தமாக்கி, அவர்களுக்குப் பட்டா கொடுத்து, வேலைக்கு உத்தரவாதம் செய்யாமல் தீண்டாமையை ஒழிப்போம் என்று மாநாடு போடுவதாலும் கோயில் அர்ச்சகர்களாக்குவதாலும் தீண்டாமையை ஒழித்துவிட முடியுமா ? கோவில்களில்தான் ஜாதி வித்தியாசமும் தீண்டாமையும் வளர்க்கப்படுகிறது என்பது இந்த அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே. தீண்டாமையை ஒழிப்பதற்கு எவ்வளவுதான் சட்டங்கள் போட்டாலும் என்னதான் அரசு திட்டங்கள் தீட்டினாலும்

நாட்டிலே இருக்கிற ஒவ்வொருவருக்கும் மனமாற்றம் தேவை. அந்த மனமாற்றத்தை ஏற்படுத்தி, ஊக்குவிக்க முதலில் நல்ல எண்ணம் தேவை. அதை உருவாக்க அரசு முயற்சி செய்கிறது.

**திரு. மு. கருணாநிதி:** ஜாதியை வேரோடு களைய வேண்டும்; அறவே அகற்ற வேண்டும் என்று தமிழகத்திலே பிரச்சாரம் செய்து செயல்பட்ட தந்தை பெரியார் அவர்கள் கூட ஆலயங்களிலே அர்ச்சகர்களாக அனைவரும் ஆக வேண்டுமென்ற தகுதி பெற வேண்டும் என்பதற்காக போராட்டத்தை நடத்தத் தயாராக இருந்தார்கள். அவர்கள் மறைகின்ற வரையில் அந்த உணர்ச்சியோடு செயல்பட்டு வந்தார்கள். கோயில்களில் அர்ச்சகர்களாக ஆக்கப்படுவதால் தீண்டத் தகாத மக்கள் அல்லது தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறிவிடுவார்கள் என்று பொருளல்ல. அவர்களுடைய உரிமை காக்கப்படுகிறது; அதற்குப் பாதுகாப்பு அளித்தோம் என்று பொருள். அந்த வகையில்தான் இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்தி அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று கேட்டேன். அமைச்சரவர்கள் அந்த நல்ல நோக்கம் இருக்கிறது என்று சொன்னார்கள். அது மத்திய அரசுக்கு வலியுறுத்தி எழுதப்படுமா என்று கேட்டதற்குப் பதில் சொல்லவில்லை. அந்தப் பதிலை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, அந்த நல்ல நோக்கம் இந்த அரசுக்கு இருக்கிறது என்று ஏற்கெனவே நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, அதற்குரிய நடவடிக்கையை எடுக்க இந்த அரசு முயற்சி எடுக்கும்.

**திரு. வீ. சின்னய்யா:** தலைவரவர்களே, தீண்டாமையை ஒழித்திடும் திட்டம் பற்றி இங்கே சொன்னார்கள். தாழ்த்தப்பட்டவர்களிலேயே தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்களே, அது இந்த அரசுக்குத் தெரியுமா? இந்தச் சட்டம் அவர்களுக்கும் பொருந்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** அந்த வேறுபாடு இருப்பது அரசுக்கும் தெரியும். சட்டம் அவர்களுக்கும் பொருந்தும்.





**திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்:** துணைத் தலைவரவர்களே, தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்ற இத்திட்டம் நீண்ட நாட்களாக அரசின் கவனத்தில் இருந்தாலும் 'இன்டீரியர்' என்று சொல்லக்கூடிய மிக உள்ளடங்கிய கிராமப்புறங்களில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்னமும் தாழ்வு மனப்பான்மை இருக்கிறதே, அதைப் போக்க 'டு எஜுகேட் தெம்' பக்குவம் பெற வேண்டிய நிலைக்கு ஆவன செய்ய இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, ஏற்கெனவே நான் பதில் அளித்தபோது கூட அரசாங்கம் மட்டும் முயற்சி செய்தால் போதாது என்று சொன்னேன். ஆங்காங்கே இருக்கிற ஒவ்வொருவரும் கடமை உணர்வோடு இதில் முயற்சி எடுத்தால்தான் இந்த நிலையைப் போக்க முடியும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்களை போன்றவர்கள் தீவிரமாகப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. மார்க்கபந்து:** தலைவரவர்களே, சென்ற கூட்டத் தொடரிலேயே பஞ்சாயத்துச் சட்டத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தோம். இப்போது பஞ்சாயத்துத் தேர்தல், முனிசிப்பல் தேர்தல் வரப்போகிறது. அப்படி தேர்தல்கள் வரக் கூடிய காலத்தில் போட்டியிட விரும்புகின்ற சில செல்வாக்குப் படைத்தவர்கள் வேண்டுமென்றே உண்மைக்குப் புறம்பாக எதிர்த்து நிற்பவர்கள் மீது வழக்குகளைப் போட்டு, அவர்களை தேர்தலில் போட்டியிட முடியாமல் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா? இப்போது செல்வாக்குப் படைத்தவர்கள் ஆதிக்கம் மேலோங்கி நிற்கிறது என்பதால் இதைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** அப்படி ஒரு கொடுமையான நோக்கோடு நடைபெறும் என்கிற அச்சம் தேவையில்லை.

**திரு. பொ. உத்திராபதி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, சுதந்திரம் பெற்று 32 ஆண்டுகளாகியும் தீண்டாமை என்பது மத்தியிலே எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி அல்லது மாநிலத்திலே எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி தீண்டாமை

ஒழிப்பது எங்கள் பிரதான கடமை என்றுதான் கூறி வந்திருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தில் 20 ஆண்டு காலம் காங்கிரஸ் ஆட்சி புரிந்தபோதும், 9 ஆண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி புரிந்தபோதும் அவர்கள் இதே கருத்தைத்தான் கூறி வந்தார்கள். இன்றைய ஆட்சியும் அதே வாக்குறுதி தான் கொடுத்து வருகிறார்கள்.

நான் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாவது மத்திய அரசை எதிர்பார்க்காமல் தமிழக சட்டமன்றம் ஒரு தீர்மானம் கொண்டு வந்தால் இங்கே இருக்கக் கூடிய அத்தனை பேரும் ஆதரிப்பார்கள் என்ற அந்த அடிப்படையில் மத்திய சர்க்கரை எதிர்பார்க்காமல் இந்தத் தீண்டாமை ஒழிப்புக்கு ஒரு சட்டம் கொண்டுவரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** இந்தத் தீண்டாமை கொடுமை அகில இந்திய அளவில் இருந்து வருகிற ஒன்றாகும். ஏற்கனவே இருந்த சட்டம் கொஞ்சம் கடுமையாக ஆக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு தான் சட்டங்கள் போடப் பட்டாலும் அல்லது கடுமையான தண்டனை வழங்கப்பட்டாலும் கிராமப் பகுதிகளில் தீண்டாமை இன்னும் வேர் ஊன்றிப் பரவிக் கொண்டுதான் இருக்கிறது. ஆகவேதான் சொன்னேன். மக்கள் மத்தியில் மனமாற்றம் தேவை என்று.

**திரு. ஆர். விஜயரெகுநாத தொண்டமான் :** மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தீண்டாமை ஒழிப்பது பற்றி பேசும்போது இப்போது ஹரிஜன் காலனி கட்டிக் கொடுக்கிறார்கள். அதைப் பார்த்தால் ஊருக்கு வெளியே தனியாக ஹரிஜன் காலனி என்று கட்டிக் கொடுக்கிறார்கள். மற்ற ஜாதிக்காரர்கள் அதிலே இல்லாததுபோல் தோன்றுகிறது. இப்படி நாம் அவர்களுக்கென்று தனியாக ஒதுக்கி ஒதுக்கி வீடுகள் கட்டிக் கொடுக்கும்போது இந்தத் தீண்டாமை ஒழிப்பது என்பது இந்தத் தலைமுறையிலேயே அதைக் கொண்டு வர முடியாது. அதனால் அரசாங்கம் இனிமேலாவது அந்த ஹரிஜன் காலனிகளைக் கட்டிக் கொடுக்கும்போது ஊருக்குள்ளேயே மற்ற ஜாதிக்காரர்கள் இருக்கக்கூடிய இடத்திலேயே கட்டிக் கொடுத்து எல்லோரும் ஒன்றாக வாழக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** அரசாங்கம் ஹரிஜன மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க திட்டமிடுகிற நேரத்திலே பொதுவான இடத்தில் இடம் இருக்கிறதா என்று பார்க்கிறோம். அங்கே இடம் இல்லை என்றால் தான் வேறு இடத்திலே வீடு கட்டுகிற பணி செயல்படுத்தப்படுகிறது. முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் கூட இந்த முறைதான் இருந்துவந்தது.

**போக்குவரத்து விதிகளின் கீழ் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட லாரிகள்.**

* 435 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974 முதல் இன்று வரை சென்னை நகரில் பாரங்கள் ஏற்றி வரும் லாரிகளுள் விதிமுறைகள் சரிவர பின்பற்றப்படாத காரணத்தால் போலீஸ் நடவடிக்கை எடுக்கப்பட்ட லாரிகள் எத்தனை ?

(ஆ) எத்தனை லாரி உரிமையாளர் அல்லது டிரைவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டன ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) 1974 முதல் 30—9—1977 வரை சென்னை நகரில் 786 பாரங்கள் ஏற்றி வரும் லாரிகள் மீது, விதிமுறைகள் சரிவர பின்பற்றப்படாத காரணத்தால், போக்குவரத்துக் காவலர்களால் (போலீஸ்) நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(ஆ) 786 லாரி உரிமையாளர்கள் மீதும், 786 டிரைவர்கள் மீதும் வழக்குகள் போடப்பட்டன.

**திரு. எஸ். ஜே. இராமசாமி :** தலைவரவர்களே, இந்த பாரங்கள் ஏற்றி வரக்கூடிய லாரிகள் போலீஸ்காரர்களால் தடுக்கப்பட்டு மறிக்கப்படுகிற நேரத்திலே அந்தப் போலீஸ்காரர்கள் வழியிலே பல தவறுகளுக்கு உள்ளாகிறார்கள். அந்த அதிக பாரம் ஏற்றி

வரக்கூடிய டிரைவர்களின் பாட்டை எல்லாம் பிடுங்கி வைத்துக் கொள்ளக் கூடிய நிலைமை இருக்கிறது. இதைப் போக்குவதற்கு அவர்களுக்கு ஏதாவது ஸ்டிரிக்ட் ஆக ஒரு ஆணையை இந்த அரசு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதிக பாரம் ஏற்றி வருகின்ற லாரி உரிமையாளர்கள் மீதும் டிரைவர்கள் மீதும் காவல் துறை நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு வழக்கு முடிந்த பிறகு மாவட்ட போக்குவரத்து அதிகாரிகள் லாரியின் பெர்மிட்டை சஸ்பெண்ட் செய்கிறார்கள். காவல் துறை அதிகாரிகள் தவறு செய்வதாக தனிப்பட்ட புகார்கள் ஏதேனும் வந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 10-00)

**திரு. சி. ஆறுமுகம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, வெளி மாவட்டங்களில் இருந்து லாரிகளில் பாரம் ஏற்றிக் கொண்டு சென்னை நகரத்திற்குள் வருவதற்கு பயப்படுகிறார்கள். காரணம், சென்னை நகர டிராபிக் போலீஸ் அத்தனை பேரும் மோட்டார் சைகிள் வைத்துக் கொண்டு கிண்டிக்கு அருகாமையிலேயே அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமானத்தை மாமூல் மூலமாக வசூல் செய்து விடுகிறார்கள். ஆகவே, அதைத் தடுக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதிக பளுவை ஏற்றிக் கொண்டு லாரிகளில் வருபவர்கள் காவல் துறையினரைக் கண்டு பயப்படத் தேவையில்லை. அஞ்சுபவர்கள் தவறு செய்கிறார்கள் என்று பொருள். காவல் துறை அதிகாரிகள் தவறு செய்கிற லாரிகள் மீதும் ஓட்டுநர்கள் மீதும் தான் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கிறார்கள். ஊழல் இருக்கிறது என்று சொன்னால் கண்டிப்பாக காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வப்போது எடுக்கப்பட்டும் வருகின்றது.



**திரு. கே. சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறுகிறபோது தவறு செய்கிறவர்கள் தான் அஞ்சுகிறார்கள் என்று பொருள்பட சொன்னார்கள். தவறு செய்பவர்கள் மட்டும் அஞ்சுகிறார்கள் என்பது அல்ல. நியாயமாக இருப்பவர்கள் கூட அஞ்ச வேண்டி யிருக்கிறது. காரணம் ஒரு காவல் துறை அதிகாரி ஒரு லாரியை நிறுத்தி, 3—4 மணி நேரம் நிற்க வைத்து விட்டால், அதன் காரணமாக அவர்களுடைய தொழில் பாதிக்கப்படுகிறது; அடுத்த நாள் அவர்கள் ஏற்றிச் செல்வதற்கு பாரம் கிடைப்பது போய்விடும் சூழ்நிலை இருக்கிறது. அதற்குப் பிறகு அவர்கள் காவல் நிலையத்திற்கு அவர்களை அழைத்துச் சென்று வழக்கு எதுவும் போடவில்லையென்று சொல்லி திருப்பி அனுப்பிவிடலாம். ஆனால், இப்படி 4—5 மணி நேரம் நிறுத்தி வைத்த காரணத்தால் அவர்களுக்கு ஏற்படும் தாமதத்தால் விளையும் பாதகத்தைக் கருத்தில் கொண்டு அஞ்சுகிறார்கள். அது அமைச்சருக்குத் தெரியுமா? அப்படி என்றால் அப்படிப்பட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது தகுந்த முறையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவரவர்களே, முன்னாலே நான் குறிப்பிடும்போது 786 லாரிகள் மீது, தவறு செய்கிறார்கள். என்று வழக்குப் போடப்பட்டது என்று சொன்னேன். காவல் துறையினர் நடவடிக்கை எடுக்காமல், வழக்கு பதிவு செய்யாமல் இருந்தால், லாரி உரிமையாளர்கள் தவறு செய்யப்படுவதைத் தடுக்க முடியாது என்பதால் மாண்புமிகு உறுப்பினர் கூறிய யோசனையை பரிசீலிக்க முடியாது என்று கூறிக் கொள்கிறேன். காவல் துறை அதிகாரிகள் ஆங்காங்கு அந்த லாரி உரிமையாளர்களை தடுத்து நிறுத்தி, லஞ்சம் பெறுகிறார்கள் என்ற தகவல் வரும்போது, அரசு கண்டிப்பான நடவடிக்கை எடுத்து வரும் என்பதை கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டித்துக் கொள்கிறேன்.

[1978 மார்ச் 7

**திரு. க. அன்பழகன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, லாரிகள் புறப்படுகிற இடத்தில் இருந்து சென்னைக்கு வந்து சேருகிறவரையில், வழியில் எந்த விதமான செக்கிங்கும் இல்லாமல் கடைசியில் சென்னையில் செக்கிங் இருப்பதால் தப்பித்துக் கொள்வதற்கு ஏதாவது செய்யலாம் என்ற எண்ணம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, லாரிகள் புறப்படும் பகுதியில் கோயம்புத்தூர், திருச்சி, மதுரை போன்ற இடங்களில் இப்படிப்பட்ட செக்கிங் செய்யும் முறையில், அதை சீர்திருத்தி அமைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே இம்முறை சீர்திருத்தம் செய்யப்பட்டு, அந்தந்த மாவட்டங்களில் இந்தக் கண்காணிப்பு இப்போது நடந்து வருகிறது.

**திரு. எம். ஏ. லத்தீப்:** துணைத் தலைவரவர்களே, அதிகபட்ச பளு நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறதா ? அப்படியானால், அது எவ்வளவு ? இப்படி அதிக பட்ச பளுவை ஏற்றிக் கொண்டு வருபவர்கள் மீது மட்டும் நடவடிக்கை எடுக்காமல், அதிக பருமனுக—வைக்கோல் போன்றவற்றை ஏற்றிக் கொண்டு வருபவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி பெரிய பருமனுக வைக்கோலை அவர்கள் ஏற்றிக் கொண்டு வருவதால் அது சாலையை அடைத்துக் கொண்டு, பின்னால் வருவது என்ன என்று தெரியாத அளவிற்கு இருப்பதால், விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே, பெரிய அளவில் வைக்கோல் போன்றவற்றை ஏற்றிக் கொண்டு செல்கிற லாரிகள், மாட்டு வண்டிகள் மீது நடவடிக்கை எடுத்து அவற்றைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவரவர்களே, அதிக பட்ச பளு என்பது 15 டன். அதற்கு மேல் ஏற்றிக் கொண்டு வருபவர்கள் மீது தான் நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைக்கோல் ஏற்றிக் கொண்டு வருகின்ற வண்டிகளைப் பற்றிக் கூறினார்கள், அதுபற்றி நல்ல யோசனை செய்து பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கப்படும்.



1978 மார்ச் 7]

**திரு. இரா. தாமரைக்கனி:** துணைத் தலைவரவர்களே, போக்குவரத்துக் கழகங்களை அரசே நடத்தி வருவது மாதிரி, இந்த லாரி மூலம் நல்ல வருமானம் இருப்பதால், அதையும் அரசே ஏற்று நடத்த முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே தமிழக அரசின் போக்குவரத்துக் கழகம் லாரிகளையும் அரசுப் பொறுப்பில் நடத்தி வருகிறது. தனியாக அதற்கென ஒரு போக்குவரத்துக் கழகத்தையும் அமைத்து அது நடத்தப்பட்டு வருகிறது. அதை மேலும் விரிவுபடுத்தும் எண்ணத்துடன் அரசு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஆறுமுகம்:** துணைத் தலைவரவர்களே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, வைக்கோல் போன்ற கால்நடைகளுக்குத் தேவையான பொருள்களை லாரிகளில் ஏற்றிச் செல்வதை தடை செய்ய பரிசீலிக்கப்படும் என்று கூறினார்கள். அப்படியானால், கால்நடைகளுக்குத் தேவையான வைக்கோல் போன்ற அத்தியாவசியமான பொருள்களை எந்த வகையில் கொண்டு செல்வது என்பதற்கான மாற்று யோசனையை அரசு வழங்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, வைக்கோலை மாட்டு வண்டிகளில், லாரிகளில் ஏற்றிச் செல்வதை தடை செய்யப் போவதாகக் கூறவில்லை. பாரம் அதிகமாக ஏற்றிச் செல்வதால் ஏற்படுகின்ற விபத்துகளைத் தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் கோரினார்கள். எனவே அது ஒழுங்குபடுத்தப்படும் என்று கூறினேன்.

**திரு. பி. எச். பாண்டியன்:** சென்னை நகரில் அண்ணா சாலை, சென்ட்ரல் ரெயில்வே ஸ்டேஷன் அருகில் சினிமா விளம்பரங்கள், போஸ்டர்ஸ், அதிகமாக ஒட்டப்பட்டு அல்லது வைக்கப்பட்டிருப்பதன் காரணமாக வாகனங்களை ஓட்டுபவர்கள் தங்களுடைய மன நிலை மாறி போக்குவரத்து விதிகளை மீறுகிற நிலை தனக்கே தெரியாமல் ஏற்படுகிறது. எனவே அதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஓட்டுநர்கள்தான் மனக்கட்டுப்பாட்டை மேற்கொள்ள வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

## பேருந்துப் பயணிகள் கணக்கெடுப்பு.

*436 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேருந்துகளில் பயணம் புரியும் பயணிகளின் நெருக்கடியைப் போக்கவும், வசதியை பெருக்கவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் கம்ப்யூட்டர்களின் மூலம் பிரயாணிகளின் கணக்கை எடுத்து பேருந்துகளை அதற்கேற்ப அதிகப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். கணேசன்: அவ்வப்போது பொது மக்களின் தேவைகளை அறிந்து பேருந்துகள் அதிகப்படுத்தப்பட்டு வந்தாலும்கூட இந்தப் பேருந்துகளில் இடம் கிடைப்பது என்பது அரிதாக இருக்கிறது. எனவே பரீட்சார்த்தமாக கம்ப்யூட்டர் முறையை எங்கேயாவது சோதனை செய்து பார்க்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: நடைமுறையில் அந்தந்த வழித் தடங்களில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பேருந்துகள் மிகையாக விடப்பட வேண்டுமா வேண்டாமா என்பதைப் பரிசீலனை செய்து பார்ப்பது தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. கம்ப்யூட்டர் திட்டம் மூலம் செய்ய வேண்டும் என்றால், நாட்டுடைமையாக்கப் பட்ட இடங்களில் பணிபுரியும் பொறிஞர்கள் ஒரு வட்ட பேருந்துகள் இப்போது 51 சதவிகிதம் இருக்கின்றன. அ றைக்குறைய 75 சதவிகிதம் அளவை எட்டும்போது கம்ப்யூட்டர்



மூலம் பயணிகளின் அளவைப் பொறுத்து பேருந்துகளை மிகைப்படுத்துவது பற்றிப் பரிசீலிக்கலாம் என்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது.

திரு. ஏ. செல்லப்பன்: தற்போது நகரப் பேருந்துகளில் அதிகபட்சமாக எவ்வளவு பேர்கள் பயணம் செய்ய அனுமதிக்கப் படுகிறார்கள்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: ஸ்டான்டிங் பாஸஞ்சேர்ஸ் 25 பேர்களை ஏற்றிக்கொண்டு செல்ல அனுமதி இருக்கிறது. இருந்தாலும், சென்னை நகரில் பயணிகள் காலை நேரத்திலும் மாலை நேரத்திலும் அதிகமாகப் பயணம் செய்ய வேண்டிய கட்டாயத் தேவை இருக்கிற காரணத்தால் அந்த விதிமுறை அவ்வளவு கட்டாயமாக அமலில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கடந்த ஒரு தொடர் கூட்டத்தில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு இனிய அறிவிப்பைச் செய்தார்கள். சிறிய கிராமங்களுக்கு சிறிய பஸ்களை விடுவதற்கு அந்தக் கிராமத்திலுள்ள வசதி படைத்த பெருமக்கள் யாராவது சாலைகள் அமைத்துக்கொள்ள முன்வருவார்களேயானால் அவர்களுக்கு பஸ் ரூட் வழங்கப்படும். சிறிய கிராமங்களுக்கு பஸ் வசதி செய்யப்படும். அதற்கான ஒரு திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். எட்டு மாதங்களாகி விட்டன. அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டுவிட்டதா? என்ன நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: கிராமப்புறத்தில் உள்ள வசதி படைத்தவர்கள் அந்தச் சாலையைப் போட முன்வர வேண்டும் என்று நான் கூறவில்லை. வசதி படைத்தவர்கள், பணம் உள்ளவர்கள் நல்ல மனம் படைத்து முன்வருவார்களானால் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்ற நோக்கோடு அந்த அறிவிப்பு செய்யப்பட்டது. அந்தத் திட்டத்தின் செயற்குறிப்பு தயார் நிலையில் இருக்கிறது. அதோடு போக்குவரத்துக் கழகங்கள்,

வாரியங்கள் கூட சில கிராமங்களில் சாலைகள் அமைத்துப் பேருந்துகள் விடுவதற்கு முன்வந்திருக்கின்றன. அவை நடைமுறைக்கு வர இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** இந்தப் பேருந்துகளில் பயணிகளின் நெருக்கடியைப் போக்குவதற்காக மனிதர்கள் கணக்கு எடுக்க முடியாது என்று கூறி கம்ப்யூட்டர் மூலம் கணக்கு எடுக்க வேண்டும் என்று கணேசன் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். கம்ப்யூட்டர் மூலம் கணக்கெடுத்தாலும் சரி அல்லது மனித சக்தியைப் பயன்படுத்திக் கணக்கெடுத்தாலும் சரி, முதலில் இந்த நெருக்கடியைப் போக்குவதற்காகத் தனியார் பேருந்துகளில் இவ்வளவு பேர்களைத்தான் ஏற்ற வேண்டும் என்ற அளவு இல்லாமல் பஸ்ஸுக்கு மேலே எல்லாம் ஏற்றிக் கொண்டு போகிற நிலை இருக்கிறது. அதை உடனடியாகத் தடுத்து நிறுத்தி பஸ் என்றால் இவ்வளவு பேர்கள் தான் ஏற வேண்டும் என்ற கட்டுப்பாட்டைக் கொண்டு வந்து ஒழுங்குபடுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மொபசல் பஸ்ஸில் இவ்வளவு பேர்களைத்தான் ஏற்ற வேண்டும் என்ற விதிமுறை ஏற்கனவே அமலில் இருந்து வருகிறது. எங்கெங்கு பேருந்துகள் அதிகமாக விடப்பட வேண்டுமோ அந்தப் பகுதிகளில் தேவையின் அடிப்படையில் பேருந்துகள் அவ்வப்போது விடப்பட்டு வருகின்றன.

**திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் :** தற்போது தனியார் பஸ்களில் எல்லாம் அதிகமான பயணிகளை ஏற்றிச் செல்கிறார்கள். அந்தப் பயணிகள் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா? அதைக் குறைத்து பஸ் உரிமையாளர்கள் கணக்குக் காட்டுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பயணிகளை மிகுதியாக ஏற்றிச் செல்கிற அக்கறையை பேருந்துகளை அவ்வப்போது அந்தந்த மாவட்ட போக்குவரத்துத் துறை அதிகாரிகள் கவனித்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அப்படிப்



பயணிகளை அதிகமாக ஏற்றிக் கொண்டு வரும்போது நடவடிக்கை எடுத்துத் தண்டனைக்கும் ஆளாக்கப்படுகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.10]

**திரு. க. மருதாசலம் :** தலைவர் அவர்களே, சென்னை போன்ற நகரங்களில் ஓடிக் கொண்டிருக்கிற பேருந்துகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏறினால் கூட, நின்று கொண்டுதான் போக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வெளியூர்களில் செல்லுகின்ற பஸ்களில் அனுமதிக்கப்பட்டிருப்பது போல் இதிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னால் அமரக்கூடிய வகையில் ஒன்றிரண்டு சீட்டுகள் தர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற யோசனையை நடைமுறைப்படுத்துவதில் மிக்க சிரமம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆழ்குழாய்க் கிணறுகள்.

* 437 வினா—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால் அம்மாவட்டத்தில் உள்ள கண்மாய்களில் விவசாயத் துறையின் மூலம் மின் இணைப்புடன் கூடிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அம்மாவட்டத்தில் கண்மாய்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கத் திட்டம் தற்பொழுது அரசிடம் எதுவும் இல்லை.

* 438 வினா—திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப் புறங்களில் உள்ள குளங்களில் விவசாயப் பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கவும் மின்சார மோட்டார்கள் மூலம் விவசாயிகள் விவசாயம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** இல்லை.

**திரு. நா. சுந்தரராஜ்:** புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. ஆகவே, அங்கே ஆழ்கிணறுகள் மூலம் நிரம்பத் தண்ணீரை கொண்டு வர முடியும் என்று திட்டக் கமிஷன் மூலம் பரிசீலனை செய்தபோது விவரம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இதன் மூலமாக முன்னேற்றம் அடைய ஆழ் குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுத்தால் நிச்சயமாக ஐந்தாண்டுக் காலத்தில் நல்ல முன்னேற்றம் காணக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

**திரு. நா. சுந்தரராஜ்:** தலைவர் அவர்களே, தற்போது அந்தப் பகுதியில் குழாய்க் கிணறுகள் அமைக்கின்ற முறையில் பெரிய கிணறுகள் தோண்டப்பட்டு இருக்கின்றன. 40 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாய் செலவுசெய்து இந்தக் கிணறுகள் வெட்டப் பட்டிருக்கின்றன. ஆனால், இவற்றுக்கு மின் இணைப்பு இல்லாத காரணத்தால், வெறுமனே சும்மா இருக்கின்றன. ஆகவே, இதற்கு மின் இணைப்புக் கொடுத்து அங்குள்ள விவசாயிகளுக்கு இருக்கின்ற தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். கண்மாய்களில் குழாய்க் கிணறுகள் மூலம் நீர் எடுத்துப் பாசன வசதிக்குக் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பு எதுவும் இந்த அரசிடம் தற்போது இல்லை என்பதைச் சொன்னேன். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லுகின்றார்கள், அங்கே பெரிய ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன என்று. அந்த குழாய்க் கிணறுகள் குடிநீர்—வடிகால் வாரியத்தின் மூலமாகத் தோண்டப் பட்டிருக்கின்றன. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால்



எல்லா இடத்திலும் குடிநீர் வழங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, இப்படிப்பட்ட குழாய்க் கிணறுகள் வெட்டப் படுகின்றன. இதன் மூலம் குடிதண்ணீர் தட்டுப்பாடு தீர்ந்து கொண்டு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. த. புஷ்பராஜ்:** அவைத் தலைவர் அவர்களே, வருகின்ற ஆண்டில் ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் கூட்டுறவு முறையில் பொதுப் பாசனத் திட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட இருக்கிறது. அதைப்போல் பின்தங்கிய மாவட்டமாக இருக்கின்ற புதுக்கோட்டைப் பகுதியிலும் கூட்டுறவு முறையில் பொதுப் பாசனத் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

### துறையூர் கந்தசாரி சர்க்கரை ஆலை

* 130 வினா—திரு. ரா. பெரியசாமி: மாண்புமிகு கைத்தறி, பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூரில் இயங்கிவந்த கந்தசாரி சர்க்கரை ஆலை மூடியிருப்பதற்குக் காரணம் என்ன?

(ஆ) இந்தத் தொழிற்சாலையைத் திறக்க அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது:** ஒரு விவர அறிக்கை * சட்டப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

---

* 374-375-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

**திரு. கோ. இளங்கோவன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் அந்த ஆலை விரைவில் மூடப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆலையில் வேலை செய்த தொழிலாளர்கள் எத்தனை பேர்? அவர்களுக்கு மாற்றுத் திட்டம் அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** 3-4-1976 முடிய 42 பேர்கள் இருந்தார்கள். இப்போது 15 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களாகவே மாற்றுவேலை பார்த்துக்கொண்டதால், தொழிலாளர் பிரச்னை இங்கு எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. ஜெயவேலு :** தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகளில் சர்க்கரைக்காகக் கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர்களிலே பயிர்செய்து, இப்போது கரும்பு தேங்கிக் கிடக்கின்றது. எனவே, இத்தகைய கந்தசாரி சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி கொடுப்பதன் மூலம், இந்த நிலைமையை மாற்ற முடியுமென்று நான் நினைக்கிறேன். எனவே, அத்தகைய கந்தசாரி சர்க்கரை ஆலைகளுக்கு லைசன்சுகள் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே கந்தசாரி சர்க்கரை ஆலைகளை வெற்றிகரமாக நடத்த முடியாது என்று விவர அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆலையிலே ஒரு சிறு ரிப்போ என்றாலும், வட மாநிலத்திலே இருந்து ஆட்கள் வந்துதான் ச செய்ய முடியும் என்கின்ற நிலையிருக்கிறது. எனவே, கந்தசா சர்க்கரை ஆலைகளை வட மாநிலத்தில் வெற்றிகரமாகச் செய படுத்த முடியும். அதைத் தமிழ் நாட்டிலே லாபகரமாக நடத் முடியாது என்ற காரணத்தினால், இந்த நடவடிக்கை மேற்கொள் எடுக்க முடியாமல் இருக்கிறது.





### விசைச் சாயச்சாலை.

*140 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நமது மாநிலத்தில் ஒரு விசைச் சாயச்சாலை தொடங்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனின், அது எந்த மாவட்டத்தில் நிறுவப்படும் ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** (அ) ஆம்.

(ஆ) மூன்று விசைச் சாயச்சாலைகள் வட ஆற்காடு, செங்கற்பட்டு கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் நிறுவத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளது. மேலும் ஐந்து நவீன சாயச்சாலைகளை சேலம், கோவை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை ஆகிய மாவட்டங்களில் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. எஸ். கணேசன் :** தலைவர் அவர்களே, இந்த பவர் டையிங் பாக்டரியிலே செயல்படுத்தப்படும் துணிகள் தரமுள்ளவைகளாக இருக்கின்றனவா ? அப்படிப்பட்ட துணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா ? வெளி நாடுகளிலே அதற்கு மார்க்கெட் எப்படியிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செமி ஆட்டோமேடிக் டையிங் யூனிட் என்று சொல்லப்படுகின்ற இந்த நவீனப்படுத்தப் பட்ட சாயத் தொழிற்சாலையை நிறுவியதன் நோக்கமே, கைத்தறித் துணிகள் காலப்போக்கிலே வெளுத்து விடுகின்றன என்று புகார் வரக்கூடாது. அதிலே குறை ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தில்தான் இந்த அரசு, கைத்தறி நெசவாளர்கள் இருக்கும்படியான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படிப்பட்ட நவீன சாயத் தொழிற்சாலைகளை

[1978 மார்ச் 7

நிறுவுவதற்கான திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. அதன் காரணமாக, இன்றைக்கு மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்ற துணிகள் தரமுள்ளவைகளாக இருக்கின்றன. குறுகிய காலத்திற்குள் 6, 7 மாதங்களுக்குள் இந்த அரசு 2 கோடி ரூபாய்க்கு மேல் ஏற்றுமதி செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் உறையூர் பகுதியில் நெய்யப்படுகின்ற புடவைகள் உலகப் புகழ் பெற்று விளங்குகின்றன. ஆகவே, இப்படிப்பட்ட புது டையிங் பாக்டரியை அங்கே நிறுவினால், அங்கிருக்கக்கூடிய நெசவாளர்கள் பயனடைவார்கள். எனவே, விரைவிலே அத்தகைய பாக்டரி ஒன்றை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தகைய நவீன சாயத் தொழிற்சாலையை அந்தந்தப் பகுதிகளிலே நிறுவுவதன் மூலம் அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள் அத்தனையும் இந்தச் சாயத் தொழிற்சாலையிலே தங்களுடைய நூலைச் சாயப்படுத்திக் கொள்ள வேண்டும். உறையூரிலே மிகச் சிறந்த சேலைகள் நெய்யப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். திருச்சியிலே இந்த நவீன சாயத் தொழிற்சாலை நிறுவப்பட இருக்கிறது. அது விரைவிலே செயல்படும். எனவே, அந்தப் பயனை உறையூர் மக்களும் பெறமுடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, இந்தப் புதிய சாயத் தொழிற்சாலையை கைத்தறி, பட்டுக்குப் பெயர்போன காஞ்சிபுரம் நகரிலே அமைப்பதற்கு இந்த அரசுக்கு ஏதாவது உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய விடையிலேயே செங்கற்பட்டு மாவட்டத்தையும், அதிலே இணைத்திருக்கிறேன். செங்கற்பட்டு



1978 மார்ச் 7]

மாவட்டம் வருகின்றபோது, காஞ்சிபுரத்தை மறந்துவிட முடியாது. எனவே, நிச்சயம் அத்தகைய கருத்தைச் செயல்படுத்த வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். மணிமாறன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விசைச் சாயச் சாலையைப் பல்வேறு மாவட்டங்களிலே தொடங்க ஏற்பாடு செய்ய இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதை எப்போது ஏற்படுத்த இருக்கின்றார்கள் ? அந்தத் தொழிற்சாலைகளை எந்தெந்த மாவட்டங்களில் அமைக்க அரசு உத்தேசித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன் ?

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** நவீன சாயச் சாலைகளை எங்கெங்கு அமைக்கிறோமோ அங்கெல்லாம் பிரிண்ட் போடக் கூடிய தொழில்களை இணைத்து அமைப்பதன் மூலமாக நெசவாளர்களுக்கு நன்மை கிடைக்குமென்று இந்த அரசு கருதுகிறது. அந்த அடிப்படையில் ஏற்கெனவே ரோட்டில் நாம் இந்த முயற்சியில் பெரிதும் ஈடுபட்டு இருக்கிறோம். அது வெற்றிகரமாகச் செயல்பட ஆரம்பித்தால், வேறு சில இடங்களிலும் இதனை விரிவுபடுத்தும் முயற்சியில் இந்த அரசு ஈடுபடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். கணேசன் :** சேலைகளில் மிகுந்த பிரசித்தி பெற்றது கொரநாட்டுச் சேலை. எனவே, மாயூரத்தில் இருக்கும் கொரநாட்டில் பவர் டையிங் பாக்டரியை அமைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** நவீன சாயச் சாலைகளை நிறுவுவதற்குக் குறைந்தபட்சம் பத்தாயிரம் உறுப்பினர்கள் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கவேண்டும்; அதைப் போல் நூற்பாலைகளில் இருந்து எடுத்து வருகின்ற நூல்கள் சாயச் சாலைகளுக்குப் பொருந்துவனவாகப் பக்கத்தில் தயாரிக்கப்படுவதாக இருக்கவேண்டும். மூன்றாவது தண்ணீர் வசதி நிரம்ப இருக்க வேண்டும். இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டுதான் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்ற இடங்களைத் தேர்ந்தெடுத்து நவீன சாயச் சாலைகளை நிறுவ வேண்டுமென்ற திட்டத்தைத் தயாரித்து வருகிறோம்.

[1978 மார்ச் 7

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்து கிற சாயச் சாலைகளில் தனியார் சாயச் சாலைகளைவிட அதிக் சாயக் கூலி இருப்பதால், நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கச் சாயச் சாலைகளில்தான் சாயம் போட வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருப்பதால் அவர்களுடைய ப்ரொடக்ஷன் காஸ்ட் அதிகமாகிறது. ஆகவே, இப்படிப்பட்ட குறைகளைப் போக்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** இது நவீன சாயத் தொழிற்சாலை. நவீனப்படுத்துகிறபோது இந்தக் குறைபாடுகள் இருக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினுக்கள்—விடைகள் முடிவுறறன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

## (2) தகவல் கோரல்.

### (அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழாசிரியர் கோரிக்கை பற்றி அமைச்சர் அறிக்கை அளிப்பது குறித்து.

**திரு. க. சுப்பு :** ஏற்கனவே நான், இராமநாதபுரம் மாவட்டத் தில் 13 தமிழாசிரியர்களை பணிக்குத் திரும்பவும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற கோரிக்கைபற்றி நான் 57-வது விதியில் ஒரு நோட்டீஸ் கொடுத்தேன் ; 42வது விதியிலும் ஒரு நோட்டீஸ் பெண்டிங் ஆக இருக்கிறது. இதற்கிடையே சாதகமான ஒரு முடிவை அரசு எடுத்து அது பத்திரிகையில் வந்திருக்கிறது. சட்ட மன்றத்தில் சொல்லாமல் பத்திரிகையில் வந்திருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்திருப்பார்களானுல் அவர்களுடைய உண்ணுவிரதம் கூட நீடித்திருக்காது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதி 82ன் கீழாவது ஒரு ஸ்டேட்மெண்டை அளிக்க முன்வருவார்களா ?



1978 மார்ச் 7]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தப் பிரச்சினை மேற்
சபையில் எழுப்பப்பட்டபோது அப்போதே சொல்லியிருக்கிறேன்.
அங்கு சொன்னதுகூட எல்லோருக்கும் சேரும் என்று தயவு
செய்து ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** நேற்றையதினம் இரு அவைகளைப் பற்றி
யும் ஒரு விவாதம் நடந்தது. மேல்சபையில் சொன்னது இந்தச்
சபைக்குச் சொன்னதாக ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று
அமைச்சர் சொல்வது பொருத்தந்தானு ? தங்கள் தீர்ப்பு தேவை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே,
ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று ஒரு ரிக்வஸ்ட் ஆகப் பண்ணி
னேன். அவ்வளவுதான்.

**திரு. க. சுப்பு :** பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது.
வெட்டுத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது 42-வது விதியின்
கீழ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது ; 57-வது விதியின்கீழ்
போன செஷனின்போதே நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.
ஆகவே, இதுபற்றித் தெளிவாக அறிக்கை வைக்க அரசு முன்
வருமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு கல்வி
அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக விளக்கம் அளிக்குமாறு
கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பிறகு நான் அதை
வைக்கிறேன்.

**திரு. க. சுப்பு :** மேலவையில் அறிவிக்கப்பட்டு விட்டது என்று
சொல்லுகிருர்கள். அப்படியானுல் இன்னும் அவர்களுக்கு டைம்
கொடுக்க வேண்டுமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அறிக்கை வைக்
கிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதற்கு
மேல் அந்தப் பிரச்சினை பற்றிப் பேச வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அங்கே பரிசீலனை
செய்யப்படும் என்று சொன்னேன். முடிவு எடுத்து இப்போது
வந்திருப்பதாக அவர்கள் கூறுகிருர்கள். விவரம் என்னிடத்தில்
இல்லாததால் அதை வைக்கிறேன் என்று கூறுகிறேன்.

(3) கவன ஈர்ப்பு.

பாரதிதாசன் நகர் மாயாண்டி காலனி, ரோட்டரி நகர் பகுதியிலே கள்ளச் சாராய விற்பனையாளரிடையே ஏற்பட்ட சச்சரவால் அப்பகுதி மக்கள் பாதிப்பு குறித்து.

**திரு. மு. அரங்கநாதன்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 22—2—78 ஆம் தேதியிட்ட ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நான் கொடுத்தேன். சென்னை திருவல்லிக்கேணி தொகுதியைச் சார்ந்த பாரதிதாசன் நகர். . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : Mr. Deputy Speaker, Sir, under Rule 41, the hon. Member can only read the Notice he has given, but he is making a speech.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : நீங்கள் அதுபற்றிப் பேசக்கூடாது. நிகழ்ச்சிநிரலில் உள்ள உங்கள் அறிவிப்பைப் படியுங்கள்.

**திரு. மு. அரங்கநாதன்** : தலைவர் அவர்களே, 'சென்னை திருவல்லிக்கேணி தொகுதியைச் சார்ந்த பாரதிதாசன் நகரில் உள்ள மாயாண்டி காலனி மக்களும், ஐஸ்ஹவுஸ் ரோட்டரி நகர்ப் பகுதி மக்களும், 19—2—1978 ஆம் தேதி இரவு 1.45 மணிக்கு அப்பகுதியைச் சேர்ந்த சாராய விற்பனையாளர்களிடையே ஏற்பட்ட சண்டை காரணமாக, குடும்பம் குடும்பமாக வீட்டை விட்டு வெளியேறி இ-2 காவல் நிலையத்திற்குச் சென்று பாதுகாப்புத் தேடி அடைக்கலம் புகவேண்டியிருந்த நிலை குறித்து' மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எட்வர்ட் எலியட்ஸ் ரோடுக்கும் லாயிட்ஸ் ரோடுக்கும் இடையில் மாயாண்டி காலனியும் ரோட்டரி நகரும் அருகருகே அமைந்துள்ளன. மாயாண்டி காலனியைச் சேர்ந்த ஆதி திராவிடர்களுக்கும் ரோட்டரி நகரைச் சேர்ந்த தெலுங்கு பேசும் ஒட்டர் இனத்தவர்களுக்கும் இடையே ஏற்கனவே மனக்கசப்பு இருந்து வந்திருக்கின்றது. 17—2—1978 அன்று போலீசார் நடத்திய சாராயவேட்டையில், ரோட்டரி நகரைச் சேர்ந்த, கள்ளச்சாராயம் விற்கும் நான்கு பேரிடமிருந்து 400 லிட்டர்



கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, எட்டுமுறை தண்டனை பெற்ற குப்பன் என்ற கள்ளச்சாராய விற்பனையாளருக்கும், ரோட்டரி நகரைச் சேர்ந்த சிலருக்கும், மாயாண்டி காலனியைச் சேர்ந்த சிலருக்கும் சிறிய தகராறு ஏற்பட்டது. மாயாண்டி காலனியைச் சேர்ந்தவர்கள்தான் காவல் துறையினருக்கு தகவல் கொடுத்திருப்பர் என்று குப்பன் சந்தேகப்பட்டதால் நடந்த இந்தத் தகராறில் குப்பனுக்கும் ஆறுமுகம் என்பவருக்கும் காயம் ஏற்பட்டது. இது சம்பந்தமாக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, தகராறு செய்தது குப்பன்தான் என்று தெரிய வந்ததால் வழக்கு கைவிடப்பட்டது. அதற்குப் பிறகு, அதே இரவு, நகர துணைக் காவல் கண்காணிப்பாளர், சட்டமும் ஒழுங்கும் (தெற்கு), ரோட்டரி நகர் பகுதியில் சாராய வேட்டை நடத்தி, 140 லிட்டர் சாராயம் கைப்பற்றப்பட்டு, தாஸ், தாமல், சண்முகம், கணேசன், கொலம்மாள், சித்திரை ஆகியோர் உட்பட 14 பேர்கள் கைது செய்யப்பட்டனர். அன்றைய தினமே அப்பகுதியில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இன்னும் தொடர்ந்து போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு வருகின்றது. இரு சாராருக்குமிடையே ஒரு சமரசம் ஏற்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாயாண்டி காலனியைச் சேர்ந்த சித்திரை என்பவரும் பலமுறை போலீசாரால் குற்றம் சாட்டப்பட்டவர். கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால், இந்த இரண்டு காலனிகளைச் சேர்ந்த, கள்ளச் சாராயத் தொழிலில் ஈடுபடுபவர்கள், கட்டுப்பாட்டின்கீழ் வைக்கப்பட்டுள்ளனர். 1978 ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி ஆகிய மாதங்களில் மட்டும் இந்தப் பகுதியில் சுமார் எழுபது வழக்குகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

**திரு. மு. அரங்கநாதன்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாராய சம்பந்தப்பட்ட வழக்குகள் தொடரப்பட்டது பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் அளித்தார்கள். நன்றி. ஆனால் ஏற்கனவே, அந்தப் பகுதியில் இரண்டு சாரார்களுக்கும் தகராறு இருந்தது என்று போலீஸ் தரப்பில் சொல்லப்படுகிற தவறான தகவலை இங்கே நிதியமைச்சர் படித்துக் காட்டினார்கள். இது தவறான தகவல். சாராய விற்பனையிலே ஏற்பட்ட தகராறில்

246 பாரதிதாசன் நகர் மாயாண்டி காலனி, ரோட்டரி நகர் பகுதியிலே கள்ளச் சாராய விற்பனையாளரிடையே ஏற்பட்ட சச்சரவால் அப்பகுதி மக்கள் பாதிப்பு குறித்து

[திரு. மு. அரங்கநாதன்] [1978 மார்ச் 7

அவர்களுக்குள்ளே அடிதடி ஏற்பட்டு அந்த இரண்டு சாராய விற்பனைக் கோஷ்டி சண்டைகளின் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டு இரவு 1-30 மணிக்கு என் வீட்டிற்கு ஓடி வந்தார்கள், அதற்குப் பிறகு நான் அவர்களை காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தேன், காவல் துறையினரும் அவர்களுக்குப் பாதுகாப்பு தரவேண்டுமென்று சொன்னேன். இதிலே சம்பந்தமில்லாதவர்கள் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள்மீது வழக்குத் தொடர்வதில் எனக்கு ஆட்சேபனையில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி கேளுங்கள், பதிலுரை சொல்லக்கூடாது.

**திரு. மு. அரங்கநாதன் :** ஆனால் தொடர்ந்து லாயிட்ஸ் சாலை பக்கம் சாராயத் தொல்லைகள் இருந்து வருகின்றன, அமைச்சர் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுப்பார்களா ?

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** ஏற்கனவே எனது அறிக்கையில் அதை நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன்.

**திரு. ரா. மார்க்கபந்து :** தலைவரவர்களே, நேற்றைய தினம் 42-வது விதியின்கீழே ஒரு நோட்டீஸ் கொடுத்தேன். அதை சட்டை செய்யாத காரணத்தால். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தாங்கள் கொடுத்தேன் என்று சொன்னது, ஆய்வில் இருக்கிறது. எனவே அதைப் பற்றி பேரவைத் தலைவருடைய அறையில் வந்து கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## (2) தகவல் கோரல் (தொடர்ச்சி)

### (ஆ) 42-வது விதியின் கீழ் கொடுத்த அறிவிப்பு குறித்து

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, ஒரு முக்கியமான பிரச்னையைப்பற்றி 42-வது விதியின்கீழ் ஒரு நோட்டீஸ் கொடுத்திருந்தேன், மானியம் வரும்போது அதைப்பற்றிப் பேசிக் கொள்ளலாம் என்று பதில் கொடுத்து எனக்குத் தபால் எழுதப்



1978 மார்ச் 7] [திரு. எம். ஏ. லத்தீப்]

பட்டிருக்கிறது. மானியம் வரும்வரையில் காத்துக்கொண்டிருக்க வேண்டிய நிலையிருந்தால் 42-இன்கீழ் கொடுத்திருக்கமாட்டேன். அவசரமும், அவசியமும் இருக்கிறது என்பதால்தான் 42-வது விதியின்கீழ் கொடுக்கிறேனே தவிர, மானியம் வருகிறபொழுது பேசிக்கொள்ளலாம் என்றால், அதுவரையில் காத்துக்கொண்டிருக்கக்கூடிய பிரச்னை இல்லை இது. எனவே இப்படிப்பட்ட பதிலைக் கொடுத்து திருப்பி அனுப்ப வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் 42-வது விதியின்கீழே கொடுக்கும்பொழுது, பேரவைத் தலைவர் அதன் முக்கியத்துவத்தைப் பொறுத்து பதில் எழுதுவதற்கு உரிமையிருக்கிறது. ஆகவே, அந்த விதத்தில் முடித்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, தயவு செய்து அதை விட்டுவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** எங்களுக்கு அதனால் உரிமையில்லாமல் போகிறது. எங்களுடைய உரிமையை நிலைநாட்ட முடியாமல் போகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்களுக்கு உள்ள உரிமையைப் போல் அவருக்கும் உரிமை இருக்கிறது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** என்னுடைய உரிமை போகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்களுக்குள்ள உரிமையை ஒட்டி நீங்கள் கொடுக்கிறீர்கள். அவருடைய உரிமையையொட்டி, அதை நிராகரிப்பது அல்லது ஏற்றுக்கொள்வது என்று முடிவு செய்கிறார்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** அவசியம், அவசரம் என்பதால்தான் கொடுக்கிறோம். காரணம் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதை அறையிலே அவருடன் டிஸ்கஸ் செய்யுங்கள்.

[1978 மார்ச் 7

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதைப்போலவே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 42-வது விதியின்கீழ் கொடுத்துள்ளதுதானே, அது ஆய்வில் இருக்கிறது. அதைப் பற்றி அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. மு. அரங்கநாதன் : சென்னை நகரத்திலே காலரா நோய் பரவுவது குறித்து. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள்.

(4) 1978-79 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,87,59,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, கால்நடை வளர்ப்பை அபிவிருத்தி செய்யும் வகையில் தகுதிக்கேற்ப அரசாங்கத்தில் கடன் வழங்க வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க—

"மானிய கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,87,59,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



1978 மார்ச் 7]

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நல்ல கோழி இனம், செம்மறி ஆடு இனம், பன்றி இனம் ஆகியவைகளின் பெருக்கங்களின் முக்கியத்துவம் பற்றி விவாதிக்க—

"மானிய கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,87,59,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், மூன்று கிலோ மீட்டர் தூரத்துக்கு ஒரு கால்நடை உதவியாளர் வீதம் நியமிக்கப்பட வேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,87,59,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, கால்நடைகளுக்குத் தேவையான தீனிகளை அரசாங்கமே ஆலை அமைத்து உற்பத்தி செய்து கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக கால்நடை வளர்ப்பவர்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யாதது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,87,59,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, மன்னார்குடி பகுதியில், கால்நடை மருந்தகங்களை சீர்படுத்தவும், அதிகரிக்கவும் வேண்டியது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,87,59,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru R. MARGABANDU : Sir to discuss about the importance of formation of sheep rearing and cattle rearing societies I move

"That the allotment of Rs. 11,87,59,000 under Demand, No. 22, Animal Husbandry-be reduced by Rs. 100

Thiru M.A. LATHEEF : Sir, to discuss about the need to institute effective preventive measures to contain cattle diseases in Naickaneri Hill Village in Madanoor Union, I move.

"That the allotment of Rs. 11,87,59,000 under Demand No. 22--Animal Husbandry-be reduced by Rs. 100

(ஆ) கோரிக்கை எண். 30—சமூக நலன்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப் பின்கீழ் ரூ. 4,92,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**திரு. சு. பாலன் :** தலைவரவர்களே, பேணுவார் அற்ற முதியோர்களை ஓரிடத்தே வைத்து பேணத்தக்க முதியோர் இல்லங்களை நிறுவ வேண்டியதன் தேவையைச் சுட்டிக்காட்டி விவாதிக்க—

"மானிய கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,92,13,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ரெ. வி. சவுந்திரராஜன் :** தலைவரவர்களே, இளம் விதவைகளுக்கும், கணவனால் கைவிடப்பட்ட இளம் பெண்களுக்கும் சில வேலைகளுக்கும், மற்றும் சில வேலைகளுக்குப் பயிற்சிகள் அளிக்க தேர்ந்தெடுக்கும்போதும், இவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—



"மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,92,13,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. எம். அண்ணாமலை :** தலைவரவர்களே, விதவைப் பெண்களுக்கு தொழில் உத்தியோகத் துறையில் உத்திரவாத உதவியளிக்கவும், விதவை ஊதியத்தையும் முதியோர் ஊதியத்தையும் உயர்த்தவும், ஊனமுற்றோர் ஊதியம், தொழில் வாய்ப்பும் தகுதி உள்ள அனைவருக்கும் கிடைக்க வகை காணுவது பற்றியும் விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,92,13,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru M. ARUMUGAM : Sir, to discuss the need to take steps to organise homes for the children of employed mothers during office honrs and to finance such organisation in doing so, I move

'That the allotment of Rs. 4,92,13,000 under Demand No. 30, Social Welfare-be reduced by Rs. 100,

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவரவர்களே, தகுதியுள்ள அனைவருக்கும் முதியோர் பென்ஷன் கிடைக்க உரிய நிதி ஒதுக்கீடு செய்யாதது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,92,13,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru R. MARGABANDU : Sir, to discuss about the economical measures to be taken to improve the status, both social and economical, for women and widows, I move.

'That the allotment of Rs. 4,92,13,000 under Demand No. 30 Social Welfare-be reduced by Rs. 100.

Thiru M. A. LATHEEF : Sir, to discuss about the need to lower the age limit from 40 to 25 for the purposes of widows pension scheme I move

'That the allotment of Rs. 4,92,13,000 under Demand No. 30, Social Welfare-be reduced by Rs. 100

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. கால்நடை பராமரிப்பு, சமூக நலத் துறை ஆகிய இந்த மானியக் கோரிக்கைகளுக்கு 2 மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 12-30 மணிக்கு மானியக் கோரிக்கை எண் 47 எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரவர்கள் ஏதாவது மூன்னுரை அளிக்க விரும்பினால், அளிக்கலாம்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி* :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, கால்நடை பராமரிப்பு இலாகா சம்பந்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகமும்* சமூக நலப் பணி பற்றிய ஆக்கப் பணிகள் குறித்த குறிப்புகள் விளக்கப் புத்தகமும்* ஏற்கனவே அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் தலைமையின்கீழ் இயங்கி வருகிற இந்த அரசின் திட்டங்களும், ஆக்கப் பணிகள் பற்றிய தகவல்களும் இவற்றில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவற்றை உறுப்பினர்கள் படித்துப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நான் உளமாரக் கருதுகிறேன். எனவே, கால்நடை பராமரிப்புச் சம்பந்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பு சமூக நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு ஆகியவற்றை நான் இந்த அவையிலே படித்துக் கூறியதாக எடுத்துக் கொண்டு, அவையின் நடவடிக்கைக் குறிப்பேட்டிலே ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். இவை குறித்து, மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் தெரிந்து கொண்டு எனது பதிலுரையை ஆற்றுகிறேன் என்று கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

---

*376-403 404-428-ம் பக்கங்களில் இணைப்பு III. II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.



**திரு. மா. மணிமாறன் :** துணைத் தலைவரவர்களே, கால்நடை பராமரிப்பு, சமூகநலன் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது எங்கள் கட்சி உறுப்பினர்கள் கொண்டு வந்த வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து நான் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பாயின்ட் ஆப் ஆர்டர். இன்றையதினம் இன்னொரு அமைச்சருடைய மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. அது எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும் என்று இப்பொழுது அறிவித்தால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் முதலிலே அதைச் சொல்லிவிட்டேன். இப்பொழுது அவையின் முன்னுள்ள மானியக் கோரிக்கைகள்மீது இரண்டு மணி நேரம் விவாதம் நடக்கும். 12-30 மணிக்குச் சுற்றுலாத் துறையின்மீது விவாதம் தொடங்கும்.

*** திரு. மா. மணிமாறன் :** தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தைக் கணக்கில் கொண்டு பார்த்தால், இந்திய துணைக் கண்டத்துப் புள்ளிவிவரங்களைக் காணும்போது, ஒருசில அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இங்கு வருவாய் அதிகம் என்று சொல்லமாட்டார்கள். ரூ. 40-க்கும் கீழே வருமானம் பெறுபவர்கள் 50 சதவீதத்துக்கும் மேலே இருப்பதை நம்மாலே பார்க்க முடிகிறது. அப்படிப்பட்ட நிலையிலேயிருக்கிற பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் உருவாக்குவதற்குக் கால்நடைப் பராமரிப்புத் திட்டம் சாலச்சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

[திரு. மா. மணிமாறன்] [1978 மார்ச் 7

(முற்பகல் 10.40)

கால்நடை பராமரிப்புத் திட்டம் வெற்றிகரமாக முடியுமானால் பல பிரச்சினைகளை ஈடுகட்ட முடியும். பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவியாக இருக்கும். அதே போல உணவுத் துறையிலே ஒரு மாற்றத்தைக் காணமுடியும். ஏழை எளியவர்கள் இன்றைக்கு நல்ல சத்துணவு கிடைக்காமல் இடர்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறங்களிலேகூட பாலை சிறிய அளவிலே தான் உற்பத்தி செய்ய முடிகிறது. மற்றவர்கள் அதைப் பணம் கொடுத்துத்தான் வாங்கி உட்கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. கிராமப்புறங்களிலே பசுவோ, அல்லது கறவை மாடுகளோ வளர்த்து வருகிறவர்கள் தங்களுக்குத் தேவையான பாலை பெற முடியுமா என்றுகூட புரியாத நிலையில் இருக்கிறார்கள்.

ஆடு வளர்ப்புத் துறையைப் பார்க்கின்ற நேரத்தில் மிக முக்கியமான உணவாக இருக்கிறது. அது ஒரு சத்தான உணவாகவும் இருக்கிறது. இந்த 2 துறைகளில் முன்னேற்றம் அடைந்தால், உடல் நலமும் சீராக வளர வாய்ப்பாக இருக்கும். இத்துறையிலே நாம் பார்க்கின்ற நேரத்தில் பல சிக்கல்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இன்றைக்கு உற்பத்தியாகிற கால்நடைகளை வளர்க்க முடியாமல் வெளிநாடுகளுக்கு இறைச்சியாக அனுப்பிப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்தத் துறையிலே சென்ற ஆண்டு பேசிய எங்கள் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எடுத்துக்காட்டி, குறிப்பாக காளை மாடு போன்றவைகளாக இருந்தாலும், அந்த இறைச்சியை வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற திட்டத்தை தமிழ்நாடு ஆராய்ந்து அதிலே ஈடுபட்டால் வெளிநாட்டு செலாவணி ஈட்டுவதற்கு வசதியாக இருக்கும், என்றார்கள். இங்கே இருக்கிறவர்கள் மாமிசத்தை உண்பதற்கு தடை இருக்கும் என்று சொல்வார்கள். இதிலே இந்த அரசு அக்கறை காட்டாமல் இருக்கிறது.

மேலும், நம் நாட்டிலிருந்த நிறைய கால்நடைகள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. கேரளா என்று சொன்னால் தவறாகக் கருதமாட்டீர்கள் என்று கருதுகிறேன்.



1978 மார்ச் 7] [திரு. மா. மணிமாறன்]

அப்படிச் செல்லும் கால்நடைகளைத் தடுப்பதற்கு எந்தவிதமான அக்கறையும் இந்த அரசு காட்டவில்லை. இந்தத் துறைக்கு அரசு ஒதுக்கிய பணம் போதுமானதாக இல்லை. உற்பத்தி இலக்கை எட்டவில்லை. Intensive Cattle Development Project என்று 1975-76-லே, ஏறத்தாழ 60,000 மாடுகளுக்கு இனப் பெருக்கத்திற்காக ஊசி போட்டார்கள். ஆனால் 18,000 கன்றுகள் போடப்பட்டன. 1977-78-லே 68,249 மாடுகளுக்கு ஊசி போடப்பட்டு, 13 ஆயிரம் கன்றுகள் ஈன்றெடுக்கப்பட்டன.

அடுத்து 'கி' சென்டரில் 1975-76-லே 76,000 மாடுகளுக்கு ஊசி போடப்பட்டதில், 22,800 கன்றுகள் போடப்பட்டன. 1977-78-லே 10,400 மாடுகளுக்கு ஊசி போடப்பட்டதில், 24,319 கன்றுகள் இந்தத் துறையிலே வளர்ந்து இருக்கின்றன.

ஆடுகளைப் பார்க்கின்ற நேரத்தில் 1975-76-லே 5,000 ஆடுகளுக்கு ஊசி போடப்பட்டதில் 5,094 குட்டிகள் கிடைத்தன. 1977-78-லே 5,000 ஆடுகளுக்கு ஊசி போடப்பட்டதில், 2,330 குட்டிகளை உற்பத்தி செய்து காட்டப்பட்டிருக்கிறது.

கோழிகளைப் பார்க்கின்ற நேரத்தில், 1975-76-லே கோழி வளர்ப்பிற்கு 20.69 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு 1978-79-லே 1.59 லட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் துறையிலே ஆடுகளையோ, பசுங்கன்றுகளையோ பசு மாடுகளையோ கோழிகளையோ ஆகியவைகளின் இனப்பெருக்கத்தை இந்த அரசு கட்டாயமாகக் கூர்ந்து பார்க்க வேண்டும்.

இதை ஏன் சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னால், கிராமப்புறங்களில் இருக்கிற நிலையங்களில் ஊசி போடுகிற நிலை இருக்கிறது. அரசுக்குத் தெரிந்தோ, தெரியாமலோ, அங்கே கட்டணம் வேறு வசூலிக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலே உள்ள அத்தனை பேர்களும் விஞ்ஞானத்தை ஏற்றுக்கொள்கிறார்களா என்றால் இல்லை என்று சொல்லக்கூடிய நிலை தான் இருக்கிறது. நகரத்திலே உள்ள மக்களிடம் எடுத்துச் சொல்கின்ற அளவு, கிராமப்புறத்து மக்களிடம் எடுத்துச் சொல்லமுடியாத நிலை இருக்கிறது. இந்தக் கட்டணம் வசூலிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று சென்ற கூட்டத்திலே சொல்லியும் இன்னும் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது.

[திரு. மா. மணிமாறன்] [1978 மார்ச் 7

அவர்களைப் பொறுத்தவரையில் போடுகின்ற ஊசி கட்டாயமாக
பலன் இருக்கிறதா என்று சொன்னால், இல்லை. அப்படிப்பட்ட
நிலைமையில் 2 ரூபாய் பணம் கொடுக்கவேண்டும் என்று கேட்
கிறார்கள். இந்த நிலையைப் பார்க்கின்ற நேரத்தில் சாதாரண
ஏழை எளிய விவசாயிகள் இந்த இனவிருத்தித் திட்டத்திற்கு
தயக்கம் காட்டுகிறார்கள். இந்தத் துறையில் கட்டாயமாக
கட்டணம் வசூல் செய்யக்கூடாது என்பதை அரசு சிந்திக்க
வேண்டும். கலப்பின உற்பத்திக்கு ஆதரவு தரவேண்டும் என்ற
நிலைமை உருவாகவேண்டும்.

இந்தத் துறையில் இருக்கின்ற அலுவலாளர்களின் நிலை மிகவும்
மோசமாக இருக்கிறது. மக்கள் தொடர்பு கொள்ளக்கூடிய
அலுவலாளர்களை விட, அலுவலர்கள் எண்ணிக்கை அதிகமாக
இருக்கிறது. இன்ஸ்பெக்டர் பதவியில் இருப்பவர்கள்தான்
மக்கள் தொடர்பு கொண்டு பணியாற்றக் கூடியவர்கள். அதிகாரி
களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறபோது, இந்த இன்ஸ்
பெக்டர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாக இருக்கிறது.
மொத்தம் 3,127 இன்ஸ்பெக்டர்கள்தான் இன்று அந்தத் துறையில்
பணியாற்றுகிறார்கள். ஆனால் அதிகாரிகளின் எண்ணிக்கையைப்
பார்த்தால் ஏறத்தாழ 2,653 பேர் இருக்கிறார்கள். ஆனால் மக்க
ளோடு தொடர்பு கொண்டு கால்நடை பராமரிக்கக்கூடியவர்களின்
எண்ணிக்கை 3,127 என்று இருக்கிற நேரத்தில், ஸ்பெஷல்
கேட்டிகரி என்ற வகையில் 2,781 பேரும், அதிகாரிகள் என்ற
அளவில் 2,653 பேரும் இருக்கின்றனர். ஆகவே, உண்மையிலேயே
கால்நடை பராமரிப்பு செய்யும் இன்ஸ்பெக்டர்களின் எண்ணிக்கை
குறைவாக இருக்கிறது.

அது மட்டுமல்ல. அந்தத் துறையில் இன்ஸ்பெக்டர்கள் பதவி
260 காலியாக இருக்கின்றது. ஆகவே, இதனால் கிராமப்புறங்
களில் இருக்கும் 260 கால்நடை நிலையங்கள் பாதிக்கப்பட்டு இருக்
கின்றன. தமிழ்நாட்டில் ஏறத்தாழ ஒரு 10-12 மைல் தூரத்திற்
குள் ஒரு கிளை நிலையம் இருக்கிறது. ஆகவே, அந்தக் கிளை
நிலையங்கள் நல்ல முறையில் இயங்க அரசு நடவடிக்கை எடுத்து,
அந்த 260 ஆய்வாளர்களையும் நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அவர்களை நியமிப்பதில் இந்த அரசுக்கு என்ன
சிரமம் இருக்கும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.



1978 மார்ச் 7] [திரு. மா. மணிமாறன்]

இந்தத் துறையில் பல சிக்கல்கள் உருவாகிக்கொண்டு இருக்
கின்றன. கால்நடை ஆய்வாளர்கள் இன்றைக்குப் போராட்டம்
நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அப்படி அவர்கள் இந்தப்
போராட்டத்தை நடத்துவது இந்த அரசாங்கத்தை எதிர்க்க
வேண்டும் என்பதற்காக என்று சொல்லிவிட முடியாது. இன்றைக்கு
இந்தியத் துணைக் கண்டமே, இந்திராவின் கோரப் பிடியில்
இருந்து விடுபட்டு இருக்கிறது. எதிர் பக்கத்திலே இருப்பவர்கள்
இதை ஏற்றுக்கொள்வார்களோ மாட்டார்களோ, ஆனால் எங்களைப்
பொறுத்தவரையில் இன்றைக்கு ஒரு கோரப்பிடியில் இருந்து விடு
பட்டு இருக்கிறது, இந்தியாவும், தமிழகமும். அதனால் பல்வேறு
பிரச்னைகள் மனதிலே கொதித்துக்கொண்டு இருந்தவைகள் வெளிப்
படத்தான் செய்யும்.

அரசாங்க ஊழியர்கள், இந்தக் கால்நடை அலுவலாளர்கள்
வைத்து இருக்கும் பிரச்னையைத் தீர்க்க இந்த அரசு தயங்காது
என்று நினைக்கிறேன். இந்தப் பிரச்னையைப் போக்குவதில்
தயக்கம் காட்டக்கூடாது என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த நேரத்தில்,
ஏறத்தாழ 1,000 இன்ஸ்பெக்டர்களுக்கு 1-வது கிரேடில்
பிரமோஷன் தரப்பட்டது. ஆனால் இந்தியத் துணைக் கண்டத்திலே
இந்திரா கெடுபிடி இருந்த நேரத்தில், தமிழகத்திலும் 300 பேர்
பதவி உயர்வு செய்யப்பட்டார்கள். 4-5 நாட்கள் அந்தப் பதவியில்
இருந்து விட்டு, பிறகு அவர்கள் அந்தப் பணியில் தொடர்ந்து
வேலை செய்ய விடாமல் பதவி இறக்கம் செய்யப்பட்டது.
தொடர்ந்து பணி செய்வதில் என்ன கஷ்டம் வந்து விடும் என்று
எனக்குத் தெரியவில்லை. அவர்கள் சம்பளம் வாங்குவதிலும் மேக்
ஸிமம் ( Maximum ) ரீச் ஆகிவிட்டார்கள். ஆகவே, சம்பளம்
கொடுப்பதிலும் அதிகச் செலவு இல்லை என்கிற நிலைமை இருக்
கிறபோது, அவர்களுக்கு மறுபடியும் அந்த வேலை அளிப்பதில்
தயக்கம் காட்டுவது வேடிக்கையாக இருக்கிறது. ஆகவே, அந்த
300 பேருக்கும் பதவி உயர்வு தர அமைச்சர் அவர்கள் முன்வரு
வார்கள் என்று கருதுகிறேன். அந்தத் துறையில் உள்ளவர்கள்
நல்ல முறையில் பணியாற்றினால்தான் அந்தக் கால்நடைகள்—
கிராமப்புறத்தில் உள்ள கால்நடைகள் பராமரிப்பு சீராக,
செம்மையாக அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. மா. மணிமாறன்] [1978 மார்ச் 7

கிராமப்புறங்களில் இருக்கும் கிளை நிலையங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால், 10-15 மைல் நடக்க வேண்டியிருக்கிறது. கால் நடைகளை எடுத்துச்செல்வதற்கும் கஷ்டமாக இருக்கிறது. அப்படியே கஷ்டப்பட்டு மாடுகளை அழைத்துக்கொண்டு அந்நிலையங்களுக்குச் சென்றாலும், அப்படிச் செல்கின்ற நேரத்தில் போதிய மருந்து கிடைப்பது. ஆகவே, அரசு அந்தக் கால்நடை மருத்துவமனைகளில் போதிய மருந்து இருக்கச்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள். உங்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்து விட்டது.

(முற்பகல் 10.50)

* திரு. மா. மணிமாறன் : கிளை நிலையங்களில் இருக்கிற கால்நடை உதவியாளர்கள் ஊசி போடுவதில் என்ன தவறு இருக்கிறது? அவர்களை ஊசி போட அனுமதித்தால் தமக்கு வருகின்ற வருமானத்தைக் குறைத்துவிடுவார்களோ என்று அஞ்சிய மருத்துவர்கள் அந்த அச்சத்தின் காரணமாக அவர்கள் ஊசி போடுவதற்குத் தடை விதிக்கிறார்கள். இவர்களே ஊசி போடுவதாக இருந்தால், 20, 25 கிலோமீட்டர் தூரம் மாடுகளை ஓட்டிச்செல்ல வேண்டியிருக்கிறது. அவர்களிடம் வைத்தியம் அதனால் பார்க்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விடுகிறது. 20, 25 கிலோமீட்டர் தூரத்திற்கு நோய் பிடித்துள்ள மாடுகளை ஓட்டிச்செல்வது மிகவும் கஷ்டம். அதனால் கிளை நிலையங்களிலே இருப்பவர்களுக்கும் ஊசி போடும் பயிற்சி அவர்களுக்கு இல்லாமலிருந்தால், அந்தப் பயிற்சியை அளித்து, அவர்களே ஊசி போட்டு வைத்தியம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மேலும் பல திட்டங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதாவது 3 மாதம், 6 மாதம் என்று பயிற்சி அளித்து, ஊசி போட ஒருவர், மருந்து கொடுக்க ஒருவர் இப்படி பலரை நியமிக்க முயற்சி செய்கிறார்கள். ஆனால் ஊசி போடுவதற்கு ஒரு இடம், மருந்து கொடுப்பதற்கு ஒரு இடம், வைத்தியம் செய்வதற்கு ஒரு இடம் என்று வைத்தால் மிகவும் சிரமமாக இருக்கும். ஆகவே, இவை எல்லாம் அந்தந்த இடங்களிலேயே இருப்பதற்கு ஏற்ற வகையில் சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 மார்ச் 7] [திரு. மா. மணிமாறன்]

அடுத்தபடியாக, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கிளை நிலையம் கட்டாயமாக ஏற்படுத்த வேண்டும். . . (மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

* திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, தமிழகத்தில் வாயில்லாப் பூச்சிகளாக விளங்கும் அடித்தளத்து மக்களுக்கும்; வாயில்லாப் பிராணிகளான ஆடு மாடுகளுக்குமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிற சமுதாய நலத்துறை பற்றியும், கால்நடைத் துறை பற்றியும் மாண்புமிகு அமைச்சரவர்கள் கடந்த காலத்திலே அளித்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்த பல பிரச்னைகள் பற்றிய சாத்தியக்கூறுகள் நிறைவேற்றப்படுமா, நிறைவேற்ற முடியுமா என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டிருந்தது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இங்கு தரப்பட்டிருக்கிற அறிக்கையைப் பார்க்கின்ற நேரத்தில் எவ்வளவு தூரத்திற்கு அவர்கள் சொன்னதை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை அறிந்து அதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிறையப் பேர் பேசவேண்டியிருக்கிறது. 5 நிமிடங்களில் சுருக்கமாகப் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. யா. சை. மு. யூசுப் : அதிலும் குறிப்பாக இந்த ஆண்டு ஏதாவது சிறப்புத் திட்டங்கள் இருக்கின்றவா என்று பார்த்தேன். கோழி வளர்ப்புத் திட்டத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது. அதன் மூலம் கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்களின் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கும் வகையில், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையில் பல திட்டங்கள் தரப்பட்டிருப்பதைப் பார்த்து பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

அதிலும் குறிப்பாக கோழி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் பார்க்கும் சாத்தியக் கூறுகளைப் பார்க்கும் நிறுவப்பட்டு, அவை பணியாற்றும் தமிழ்நாடு தொடங்கப்பட்ட போது, 1973-74 ஆம் ஆண்டிலே 24.6 லட்சம் ரூபாய் நஷ்டத்தில் கோழி அபிவிருத்தி நிறுவனம் நடந்த கணக்கெடுப்புப்படி செயல்பட்டது. 1976-77 ஆம் ஆண்டில்

[திரு. யா. சை. மு. யூசப்] [1978 மார்ச் 7

7.11 லட்சமாக இந்த நஷ்டம் குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்த ஆண்டு அந்த நஷ்டம் கூட இல்லாமல், லாபமும் இல்லாமல் நஷ்டமும் இல்லாமல் வரக்கூடிய வகையில் அமைய இருக்கிறது. இதைப் பார்க்கிறபோது வரக்கூடிய காலங்களில் இந்தத் தொழிலில் ஈடுபடக்கூடியவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கக் கூடிய வகையில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

அடுத்தபடியாக, கால்நடை வளர்ப்புத் திட்டத்தைப்பற்றி ஒரு சில குறியீடுகளைக் காட்டி, அதை நிறைவேற்றுவதற்கு ஒருசில திட்டங்களைச் செயல்படுத்த தொடங்கியிருக்கிறார்கள்.

என்னுடைய மாவட்டமான நெல்லை மாவட்டத்தில் செம்மறி ஆடு வளர்ப்புத் திட்டம் மிகவும் சிறப்பாக நடை பெற்றுக்கொண்டிருந்தது. கடந்த காலத்தில் ஏற்பட்ட வறட்சியால் பாதிப்பு ஏற்பட்டு, அந்த செம்மறி ஆடுகளுக்கு உணவு வழங்க முடியாமல் அங்குள்ள விவசாய மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, விரைவிலே தீவிர புல் சாகுபடி திட்டத்தை மிகவும் அதிக அளவிலே நிறைவேற்ற வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்த அறிக்கையிலே வெக்கை நோய் தடுப்புத் திட்டம் பற்றியும் மற்றும் பல திட்டங்கள் பற்றியும் அறிவித்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) குறிப்பாக கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பல உழவர்களுக்கும் சிறப்பாக உதவி செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஆடு மாடு வாங்குவதற்கும், அவைகளைப் பராமரிப்பதற்கும் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரே ஒரு வேண்டுகோளை மட்டும் கூறி என்னுடைய உரையினை முடித்து விடுகிறேன். குறிப்பாக என்னுடைய பகுதியாகிய பணகுடி மற்றும் வானூர் ஆகிய இடங்களில் நீண்டகாலமாக அங்கு கால்நடை மருத்துவத்திற்கென்று ஒரு துணை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அன்பு கூர்ந்து பரிசீலனை செய்து உடனடியாக துவக்க வேண்டுமென்று மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



1978 மார்ச் 7] [திரு. யா. சை. மு. யூசப்]

அடுத்து, இங்கு மகளிர் நிலையத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக புதிதாக மகளிர் பணி இல்லங்கள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

(மணியடிக்கப்பட்டது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது.

**திரு. யா. சை. மு. யூசுப்:** என்னுடைய மாவட்டமாகிய நெல்லை மாவட்டத்தில். . . .

(மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பட்டார்)

***திரு. அ. ப. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கு நடைபெறுகின்ற கால்நடை பராமரிப்புத் துறை மகளிர் நலத்துறை ஆகிய துறைகளின் கீழ் வரும் மானியக் கோரிக்கையின் மீது நானும் என்னுடய சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

பொதுவாக, விவசாயம் நாட்டின் முதுகெலும்பு என்று சொல்கிறார்கள். இந்த விவசாயம் சீரும் சிறப்புமாக வளமளிக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுவதற்கு உறுதுணையாக இருப்பது கால்நடைகளாகும். ஆகவே அந்த கால்நடையைப் பெரிதும் பேணிக் காக்க வேண்டியது மிகமிக அவசியமான காரியம் என்பது இங்குள்ள அனைவரும் அறிந்த ஒன்று. ஆனால் இன்று இந்த துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய மானியக் கோரிக்கை மிகக் குறைவானது என்று நான் கருதுகிறேன்.

ஏனென்றால் இப்போது எல்லா மாவட்டங்களிலும் ஒன்றியப் பகுதிகளிலும் கால்நடை மருந்தகங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த மருந்தகங்கள் சரியான முறையிலே இயங்கவில்லை என்பது என்னுடைய ஒரு எண்ணமாகும். இது நான் தெரிந்த ஒரு உண்மையும் கூட. அங்கே உள்ள மருந்தகங்களிலே இன்றைக்கு கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற நோய்களுக்குத் தேவையான மருந்துகள் இல்லை. ஒரு கிராமப் புறத்திலே இருக்கின்ற விவசாயி மாட்டுக்கு நோய் வந்தது என்று கொண்டு போனால் அங்கே சொல்கிறார்கள். இந்த நோய்க்குத் தேவையான மருந்து இங்கே இல்லை வெளியிலே வாங்கி வாருங்கள் என்று கூறுகிறார்கள்.

1978 மார்ச் 7] [திரு. அ. ப. பழனியப்பன்]

என்னுடைய தொகுதியாகிய ஒட்டன்சத்திரத்தில் கால்நடைப்
பொது மருத்துவ மனை இருக்கிறது. அங்கு இரண்டு டாக்டர்களும்
இருக்கிறார்கள். ஆனால் தேவையான மருந்துகள் அங்கு
இல்லை. ஆகவே, சாதாரண ஒரு ஏழை விவசாயி மருந்து வாங்க
வேண்டுமென்றால் அந்த மருந்து விலை கூடுதலாக உள்ளது.
அதோடு எங்கள் பகுதிபோல் இருக்கிற கிராமப்புற பகுதிகளிலே
அந்த மருந்துகள் கடைகளிலும் கிடைப்பதில்லை. நகர்ப்புறங்
களுக்குச் சென்று மருந்து வாங்க வேண்டிய நிலை இருக்கிறது.
அப்படி அங்கு சென்று வாங்கி வந்து மாட்டுக்கு கொடுப்பதற்குள்
ளாக மாட்டுக்கு நோய் முற்றி மாடு இறந்துவிடுகிறது.

இப்படி பல சம்பவங்கள் அங்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.
இந்த குறையைப் போக்க எல்லா மருந்தகங்களிலும் எல்லாவித
மான நோய்களுக்கும் உரிய மருந்துகள் இல்லை என்று சொல்லாத
அளவுக்கு அங்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்பது அவசியமான
தொன்றாகும்.

அதோடு கால்நடை இனவிருத்தி நிலையம் இருக்கிறது. ஒரு
இன விருத்தி நிலையமும் பத்து கிளை நிலையங்களும் இருக்கின்றன.
அந்தக் கிளை நிலையங்களுக்கு விந்துகள் சென்று சேர்வதற்கு கால
தாமதம் ஆகிறது. பொதுவாக மாடுகளுக்கு சினை ஊசி போடுவது
காலை 9 மணியிலிருந்து 10 மணிக்குள்ளாக போட்டால் அது
பயனுள்ளதாகி மாடுகளுக்கு சினை ஏற்படுகிறது. அதற்கு மேலே
போனால் பயனற்றதாகி சினை பிடிப்பதில்லை.

(முற்பகல் 11-00)

ஆக அந்த முறையை மாற்றி மத்திய நிலையத்தில் இருந்து கிளை
நிலையங்களுக்கு வேகமாகக் கொண்டு செல்ல வாகனவசதிகளை
ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

அதோடு, கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய சிறிய
விவசாயிகளுக்கு, நிலமற்ற ஏழைக் கூலிகளுக்கு வேலைவாய்ப்பு
அளிக்கும் முறையில் மாடுகள் வளர்ப்பதற்காக வேண்டிய உதவி
அரசின் மூலம் கொடுப்பதாக குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
ஆனால் அப்படி ஒரு திட்டம் இருக்கிறது, அந்தத் திட்டத்தின்
பலனைப்பெற வேண்டும் என்று முயற்சி செய்ய அந்தக் கிராம
மக்களுக்கு இந்த அறிவிப்பு செல்லவில்லை. இந்தச் சட்ட



1978 மார்ச் 7] [திரு. அ. ப பழனியப்பன்]

மன்றத்தில் உறுப்பினராக இருக்கிற எங்களைப் போன்றவர்
களுக்கே இப்படி ஒரு திட்டம் இருப்பதாக இப்போதுதான்
தெரிகிறது. இது கிராமங்களில் விளம்பரப்படுத்தப்படவில்லை.
ஆகவே கிராமப்புறங்களில் உள்ள ஏழை மக்களுக்கு வேலை
வாய்ப்பளிக்கிற அல்லது வாழ்வளிக்கிற வகையில் இன்னின்ன
காரியங்கள் இருக்கின்றன, இன்னின்ன திட்டங்கள் உள்ளன
என்று அறிவித்து அதன் பயனை அந்த ஏழை மக்கள்
பெறும் அளவில் கிராம மக்கள் தெரிந்து கொள்ளும் அளவிற்கு
திட்டங்கள் விளம்பரப்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.) அதற்கு ஒரு ஏற்பாடு
இருக்கவேண்டும்.

அதோடு, புதிதாக கால்நடைப் பண்ணைகள் ஏற்படுத்தப்
போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. என் பகுதியில் வடகாடு
என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் ஒரு
கால்நடைப் பண்ணை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இதற்கு
முன்பு அங்கே பல ஆராய்ச்சிகளையெல்லாம் செய்தார்கள். அது
தகுதியான இடமா என்றெல்லாம் ஆராய்ச்சி செய்யப்பட்டது.
ஆனால் அது குறித்து ஒரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்
படவில்லை. அங்கு ஒரு கால்நடைப் பண்ணை ஏற்படுத்த அது
நல்லதொரு வாய்ப்பான இடமாகும்.

அங்கு ஒரு பண்ணையை ஏற்படுத்தினால் அதன் மூலம் நல்ல
தரமான கன்றுகளை உற்பத்தி செய்து அப்பகுதி மக்களுக்கு விநி
யோகிக்க ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆகவே அங்கு வடகாட்டில்
ஒரு கால்நடைப் பண்ணை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

அடுத்து, பால் அபிவிருத்தித் திட்டம். பால் அபிவிருத்தித்
திட்டம் நல்லமுறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மதுரை
பால் வழங்கு திட்டத்தின்கீழ் எங்கள் பகுதியில் பல சொசைட்
டீஸ் ஏற்படுத்தி அங்கிருந்து பால் வாங்கப்படுகிறது.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி: பால் வள நிறுவனம்
பொறுத்தவரையில் அது மாண்புமிகு வேளாண்மைத் துறை
அமைச்சர் அவர்களிடம் இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு
உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அ. ப. பழனியப்பன் : என் பகுதியில் கோழி வளர்ப்புப்
பண்ணை ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். ஒட்டன்சத்திரத்தில் ஒரு மார்க்கெட் இருக்கிறது.
வாரத்திற்கு ஒரு முறை இரண்டாயிரம் கோழிகள் வருகின்றன.
வாரத்திற்கு சுங்கமாக என் பஞ்சாயத்திற்கு 200 ரூபாய்க்கு மேல்
வருமானம் வருகிறது. நல்ல வியாபாரம் நடக்கிறது. ஆகவே
கோழி வளர்ப்புப் பண்ணை ஒன்றை அங்கே ஏற்படுத்தித்தந்தால்
அங்குள்ள மக்களுக்கு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று கூறி
என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, இன்றைக்கு
சமூக நலனும் கால்நடை வளர்ப்பும் ஒருங்கே சேர்ந்து வந்திருக்
கக்கூடிய மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என் கருத்துக்களைக்
கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதுவரையில் வேளாண்மையோடு இணைந்து வந்திருக்கக்
கூடிய கால்நடை இலாகா இன்றைக்கு சமூக நலத் துறை
இருக்கக்கூடிய அமைச்சர் அவர்களிடம் வந்திருக்கிறது. இருந்த
கிறது. ஆகவே இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு
சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை இலாகாவிலுள்ள மருந்து ஆராய்ச்சி நிலையங்களுக்கு
இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. 77-78-ல் கூட
நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு அது விடப்பட்டிருக்
கிறது. ஆகவே இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொண்டு
இந்தத் தடவை வராவிட்டாலும் அடுத்த தடவையாவது அதைச்
சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

இந்த இனங்களில் எல்லாம் அதிகமான நிதி ஒதுக்கவேண்டும்.
மருந்து ஆராய்ச்சி செய்யும் இடங்களை வளர்ச்சி பெறச் செய்ய
வேண்டும். இதில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு ஊக்கம் அளிக்க
வேண்டும். பல மருந்துகளை கண்டுபிடிக்கிறார்கள். கோமாரி
நோயைப்பற்றி எல்லாம் ஆராய்ச்சி செய்கிறார்கள். இது மிகவும்





பயன் உள்ளது. ஆகவே இப்படிப்பட்ட ஆராய்ச்சி நிலையங்
களுக்கு இப்போது இல்லாவிட்டாலும் வருகின்ற சப்ளிமெண்டரி
பட்ஜெட்டிலாவது அதிகமாக நிதி ஒதுக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை இலாகாவைப் பொறுத்தவரையில்—'அசர்கட்டா'
போன்ற இடங்களில் நடைபெறுகின்ற பண்ணைகளைப் பார்த்திருக்
கின்றேன். அங்கே நல்ல முறையில் கால்நடைகளை, பலதரப்
பட்ட இடங்களை வளர்க்கிறார்கள். நல்ல கறவையுள்ள பலதரப்
பட்ட பசுக்களை வளர்க்கிறார்கள். இப்படிப்பட்ட பசுக்களை
எல்லாம் நாம் வளர்க்கவேண்டும்.

ஓசூர் பண்ணையை எடுத்துக்கொண்டால், முன்னால் வெள்ளைக்
காரன் காலத்தில் இருந்ததுபோலவே இப்போதும் இருக்கிறது.
இதை நவீனப்படுத்துவதில் நமது அமைச்சர் அவர்கள் கவனம்
செலுத்தவேண்டும்.

அங்கே குதிரைகளை எல்லாம் வளர்த்துக் கொண்டிருந்தார்கள்.
இப்போது இல்லை, அதைப் பற்றி இங்கே ஒரு பிரச்னையே வந்து
விட்டது, அதுவும் கட்டாயம் இருக்க வேண்டும். அந்த பண்ணை
யில் இன்னும் பல மேம்பாடுகளை கொண்டு வர வேண்டும்.
வெள்ளைக்காரன் காலத்தில் இருந்ததுபோலவே இருந்து
கொண்டிருக்கிறது. எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் இருந்து
கொண்டிருக்கிறது. இதை நல்ல முறையில் நவீனப்படுத்த
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோழி இனங்களைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்
கிறோம். நம் நாட்டுக்கு மிகவும் தேவைதான். நல்ல சத்துள்ள
உணவாக இன்றைக்கு நமக்கு கோழி முட்டை கிடைக்கிறது.
இன்னும் குறைந்த விலையில் முட்டை கிடைக்கவில்லை,
இன்றைக்கும் முட்டையின் விலை சரியாக குறையவில்லை. டாப்கோ
நிறுவனம் வைத்திருக்கிறோம், இப்படியெல்லாம் இருந்தும் முட்டை
யின் விலை 35 காசு, 40 காசு என்று தான் இருக்கிறது, போதிய
அளவுக்கு இறங்கவில்லை, இதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும்.
ஆனால் முன்பு 50 காசாக இருந்தது இப்போது ஓரளவுக்கு 35 காசு
என்ற அளவுக்கு வாங்க முடிகிறது. ஆனால் இன்னும் குறைய
வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால் கோழி இறைச்சியை விற்பனை செய்து கொண்டிருக்கிறோம். விலையை எடுத்துக்கொண்டால் இதன் விலையும் அதிகமாகத்தான் இருக்கிறது. நந்தனத்தில் இருக்கக்கூடிய கோழிப் பண்ணையில் கோழி இறைச்சி விற்கப்படுகிறது, விலை இன்னும் குறைய வேண்டும். சபாநாயகர் அவர்கள் மணியைப் பார்த்துக்கொண்டிருக்கிறார், குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் மணியைப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. திரு. எஸ். ஜே. இராமசாமி அவர்கள் சைவ முதலியார் ஆயிற்றே, கோழியைப் பற்றி இவருக்கு என்ன இவ்வளவு கவலை என்றுதான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். (சிரிப்பு)

**திரு. எஸ். ஜே. இராமசாமி:** அடுத்து, சமூக நலத் துறையை எடுத்துக்கொண்டால், விதவைகளுக்கு 20 ரூபாய் பென்ஷன் கொடுக்கிறார்கள். கொடுப்பதை உரிய காலத்தில் கொடுக்க வேண்டும். தாலுகா ஆபீஸ்களில் இவர்கள் எல்லாம் வந்து நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒழுங்காக பென்ஷன் போவதில்லை. தாசில்தார் என்கொயரி, மணியகாரர் என்கொயரி என்று இப்படி காலம் கடந்து கொண்டே போகிறது. இதற்குள் நடந்து நடந்து அந்த அம்மாவே இறந்து போய் விடுவார்.

இப்போது 40 வயதிற்கு மேற்பட்ட விதவைகள் எல்லோருக்கும் பென்ஷன் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. ஆனால் இதெல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் நடைமுறையில் வருவதில்லை. எத்தனையோ விதவைகள் தாலுகா ஆபீசுக்கும் வீட்டுக்கும் நடந்து கொண்டேயிருக்கிறார்கள், கையிலே இருக்கின்ற ரூபாய் அத்தனையும் இதற்கே செலவழிந்து போய்விடுகிறது. இதை வைத்துக் கொண்டாலே இருபது ரூபாய் பென்ஷன் கொடுப்பது போல் ஆகிவிடும். அந்த அளவுக்கு அவர்கள் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. தாசில்தார், மணியக்காரர் இவர்களிடம் எல்லாம் போய் வருவதற்குள் மிகவும் சிரமப்பட்டு விடுகிறார்கள். இதையெல்லாம் சரியான முறையில் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





இந்த பென்ஷன் எல்லா விதவைகளுக்கும் கிடைக்க வேண்டும். இந்தத் துறையை ஏற்றுக் கொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள் பெண் ஆனதால் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், ஆனால் ஏதோ சிலரைப்போல் எல்லோரும் வசதியாக இருப்பார்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. அப்படியில்லாமல் எல்லோருக்கும் இநத பென்ஷன் கிடைப்பதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, அவை முன் வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சமீபத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளம் இவைகளால் கால்நடைகள் மிகவும் பாதிக்கப்பட்டு, மக்கள் மிகவும் சிரமப்பட்டிருக்கிறார்கள். முக்கியமாக கிராமப்புற மக்களுக்கு 'இதற்காக விசேஷ திட்டம் ஒன்றைத் தீட்டி, வெள்ளத்தால், புயலால் அடித்துச் செல்லப்பட்ட நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான கால்நடைகளுக்குப் பதிலாக இப்போது புதிய திட்டம் தீட்ட விவசாயிகளுக்கு, இலவசமாக கால்நடைகளை வழங்க கவனம் செலுத்தப் பட்டிருக்கும் என்று எதிர்பார்த்தேன். அது ஒன்றும் இதில் காணப்படவில்லை. சமீபத்தில் 'கேர்' ஸ்தாபனத்திலிருந்து கால்நடைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவை போதுமானதல்ல, தேவையான அளவுக்கு இந்தத் துறையில் இன்னும் அதிகமான கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.10]

அடுத்து, இந்தத் துறையிலே தங்களுக்கு கீழே இருக்கக்கூடிய சிப்பந்திகளோடு எப்போதும் அதிகமான, நெருக்கமான தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். எந்தத் துறையிலும் [illegible] நெருக்கமான தொடர்பு அதிகம் இல்லாவிட்டால், அதிலே செயல்திறன் அதிகமாக இருக்க முடியாது. கால்நடை ஆய்வாளர்கள் வருந்துகிறார்கள். மிகப் பெரிய சம்பளம் கொடுக்கக் கூடிய பெரிய பதவிகளுக்குத்தான் பதவி உயர்வு கொடுக்கின்றார்கள்.

[திரு. என். வரதராஜன்] [1978 மார்ச் 7

அதேபோல் பல ஆண்டுக் காலமாக இந்த கால்நடை துறையிலே ஈடுபட்டிருக்கின்ற தங்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதில்லை என்ற குறைபாடு அவர்களிடையே இருக்கிறது. அவர்கள் சொல்கிறார்கள், கிரேடு II என்ற நிலையிலேயே 8 ஆண்டுகள் 10 ஆண்டுகள் நாங்கள் பணியாற்றினாலும் எவ்விதப் பதவி உயர்வும் இல்லாமல் இருக்கிறோம் என்று. தேர்வு நிலையை ஏற்படுத்தலாம். கிரேடு I என்று பதவி உயர்வு கொடுக்கலாம் கால்நடை அதற்கான வசதிகளை மேலும் நீடிக்கலாம். ஏற்கனவே இருந்ததைப்போல் ஒன்றியங்களில் கால்நடை விரிவாக்க அலுவலர்களாக பதவி உயர்வு கொடுக்கலாம்.

ஏற்கனவே கால்நடை ஆய்வாளர்களுக்கு இருந்த பயிற்சி முகாம்கள் இப்போது தடைபட்டு நிற்கின்றது. மல்டி பர்பஸ் ஒர்க்ஸ் என்கின்ற அடிப்படையில் இந்தத் துறையிலே இன்னும் அதிகமான வேலைகளை கிராமங்களிலே செய்ய முடியும். அதற்குரிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கிறார்கள்.

அதேபோல், டிப்ளமா கோர்ஸ்-ல் தங்களுக்கு தேர்வு அடைவதற்கான வசதிகளைச் செய்து தர வேண்டுமென்றும் கேட்கிறார்கள். இப்படி அவர்கள் கேட்கின்ற வசதிகள் எல்லாம் மிகப் பெரிய கோரிக்கைகள் அல்ல; செலவும் அதிகம் ஆகிவிடாது. ஆகவே, அவர்களுக்கு இந்த வசதிகளைச் செய்து தரவேண்டும். சட்டையில்லாத போராட்டத்தில் அவர்கள் இறங்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே, அவர்களுக்கு தயவுசெய்து இந்தத் துறையைப் பற்றி விவாதித்து பதில் அளிக்கும்போது, அமைச்சர் அவர்கள் இதுபற்றிய தெளிவான பதிலை, கால்நடை ஆய்வாளர்கள் மனசாந்தி பெறக்கூடிய அளவிலே சொல்ல வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன்.

அடுத்து, கால்நடை தீவிரத் திட்டமோ அல்லது கேந்திர திட்டமோ எது அமலில் இருந்தாலும் நம் நாட்டிலே உள்கடைக் கிராமங்களிலே கால்நடைகளுக்குப் போதுமான மருந்துகள் கிடைப்பதிலே மிகப் பெரிய சங்கடம் இருக்கிறது. இதை நாம் உணர வேண்டும்.



1978 மார்ச் 7] [திரு. என். வரதராஜன்]

அப்படி உணர வேண்டுமானால், கால்நடை சப்-சென்டர்களை அதிகமாக்க வேண்டும். அரசு ஆராய்ச்சி செய்து புதிய மருந்துகள் கண்டுபிடித்திருக்கின்றது என்று சொன்னால் மட்டும் போதாது; அதிலே பிரயோஜனமும் இல்லை. இந்த உள்கடைக் கிராமங்களிலே போதுமான மருந்துகள் கிடைப்பதில்லை என்று காங்கிரஸ் நண்பர் திரு. பழனியப்பன் அவர்கள்கூடப் பேசினார்கள். உள்கடைக் கிராமங்களிலே சரியான முறையிலே மருந்துகள் கிடைப்பதில் சங்கடம் இருக்கிறது. இதற்கு என்னுடைய ஆலோசனையைச் சொல்கிறேன்.

மொபைல் வான்களை நாம் அதிகமாக்குவதன் மூலம், இதை ஓரளவுக்கு நிறைவேற்ற முடியும். இதன் மூலம் இன்றைக்கு கால்நடைகளுக்குப் போதுமான மருந்துகள் கிடைக்க உதவி செய்ய முடியும்.

இரண்டாவது, சப்-சென்டர்களை நாம் அதிகப்படுத்த வேண்டும். மருந்துகள் என்று வருகிறபோது, கால்நடை மருந்தகங்களில் அதிகமான மருந்துகள் இப்போது கிடைப்பதில்லை. இதுபற்றி ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும். சில பகுதிகளில் இப்படிப்பட்ட மருந்துகள் கடைகளிலே கூட கிடைப்பதில்லை. இவைகளைப் பற்றியும் கவனிக்க வேண்டும்.

அடுத்து சொல்ல வேண்டியது, இன்றைக்கு நாம் இன விருத்தி செய்வதில். அதிகமான முயற்சி செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்படிப்பட்ட காலத்திலே, இந்த இன விருத்தி செய்வதற்காக ஊசிகள் போடப்படுகின்றன. அந்த இடங்களிலே இதற்காக பணம் வசூலிக்கின்றார்கள். இன்றைக்கு இந்த முறையைக் கைவிடுவதன் மூலம், இதிலே ஓரளவுக்கு சிறு விவசாயிகள் பயன் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த இன விருத்தி என்று சொல்லும்போது, மேல்நாடு போன்ற இனங்களை விருத்தி செய்வதற்கு நாம் முயற்சிகள் செய்து வருகிறோம். இதைபோல் இன்னும் பல இனங்களைப் பற்றி இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அயல் இனங்களிலே எல்லாம் நாம் இன விருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சமூக நலத் துறையைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். இன்றைக்கு விதவைகளுக்கு உதவுவது என்ற பெயரால், நாம் அவர்களுக்கு 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு உதவி செய்கிறோம். அது போதுமானதாக இல்லை. நம்முடைய நாட்டிலே உள்ள வறுமை நிலைமைகளை நாம் அனைவரும் அறிவோம். ஆகவே, விதவைகள் என்று சொல்கின்றபோது சிறிய வயதில் விதவையானவர்கள் 15, 19, 20 வயதிலே உள்ளவர்கள் என்ன செய்வார்கள்? ஆகவே, விதவைகள் அனைவருக்கும் உதவி செய்வது என்ற வகையிலே இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உடல் ஊனமுற்றவர்கள் என்று சொல்கிறபோது, நாம் அவர்களுக்கு பல சலுகைகள் அளிப்பதிலே கவனம் செலுத்த வேண்டும். வேலை வாய்ப்பு போன்றவற்றிலும், இன்னும் பிற துறைகளிலும் நாம் அவர்களுக்கு உதவிகள் அளிக்க வேண்டும். சென்னை நகரத்திலே கூட, தொழுநோய்க்காரர்கள் சுற்றிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அவர்கள் எந்த இடத்திலே இருந்தாலும் சரி, தொற்று நோயைப் பரப்பக் கூடிய இந்தச் சமுதாயத்தினரை அவர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கின்ற இல்லங்களிலே உடனடியாகக் கொண்டு போய்ச் சேர்த்து, அவர்களுக்கு அங்கே நிவாரணம் அளிக்க வேண்டும்; அதிலே நாம் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த வருவாய்த் துறையிலே, வயோதிகர்களுக்காக உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. வயோதிகர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதை சமுதாய நலத் துறைக்கு மாற்றினால் நல்லது. அப்படிப் பார்க்கின்றபோது, இன்றைக்கு மேற்கு வங்காளத்திலே அரசு வேலையில்லாதவர்களுக்கு மாதம் 50 ரூபாய் உதவித் தொகை அளிக்க முன்வந்துள்ளது. இங்கே வயோதிகர்கள் அனைவருக்கும் மாதம் குறைந்ததான ரூ. 20 கொடுக்காமல் இருக்கிறோம். குழந்தைகளைக்கூட பராமரிக்க முடியாமல், தங்களுடைய தாய் தகப்பன்களுக்குக் கூட உணவு அளிக்க முடியாத நிலையில் நம் நாட்டிலே குடும்பங்கள் வாழ்வு தாழ்வாகி நிற்கின்றன. இந்த உதவித் தொகை 20 ரூபாய் இருக்கக்கூடிய வயோதிகர்கள் அனைவருக்கும் கொடுக்கப்படவில்லை என்பதை மனதில் கொண்டு, நாம் இந்த தேவையான உதவியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். கால்நடைகளுக்கு, புண்பட்டிருக்கும் கால்நடைகளை மாட்டு வண்டிகளில் பூட்டினால் அபராதம் விதிப்பது முன்பு ஐந்து ரூபாயாக இருந்தது இன்று ஐம்பது ரூபாய் அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது, அதனால் அதைத் தடுத்து நிறுத்த முடிந்திருக்கிறதா என்றால் இல்லை. லஞ்ச லாவண்யத்திற்குத்தான் இடமளிப்பதாக இருக்கிறது. ஏழை எளிய மக்கள் தொல்லைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். ஆகவே, இதைப் பற்றியும் இந்த இலாகா பரிசீலித்து பழையபடி ரூபாய் ஐந்து அபராதம் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. பி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற கால்நடை, சமூக நலத் துறை மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கால்நடைப் பராமரிப்பிலும், கோழி வளர்ப்பிலும் நமது அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு எடுத்துக்கொண்ட பல நடவடிக்கைகள் மூலமாக, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல மாவட்டவாரியாக, தாலுகாவாரியாகச் சென்று கால்நடைப் பராமரிப்பில் எந்தெந்த வகையில் கவனம் செலுத்த வேண்டுமென்ற முறையில் மிகவும் சுறுசுறுப்பாகப் பணியாற்றி வருகிறார்கள்.

இந்த நாட்டில் வாழக்கூடிய ஏழை எளிய மக்கள் ஆடு மாடுகளையும் கோழிகளையும் வளர்க்கிறார்கள். அவற்றைக் கொண்டு தான் அவர்கள் அவர்களுடைய குடும்பங்களைப் பராமரித்து வருகிறார்கள். அந்தக் கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும், நோய் வருகிற நேரத்தில் எங்கு சென்று அதற்கு வைத்தியம் செய்வது என்பதைக்கூட அறியாத மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கிறார்கள். ஆகவே கிராமங்கள்தோறும் நடமாடும் மருத்துவ மனைகளை ஏற்படுத்தி அந்தக் கால்நடைகளுக்கு வைத்திய வசதிகளைச் செய்து கொடுத்து கால்நடை அபிவிருத்தியில் இந்த அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உடனுக்குடன் கால்நடைகளுக்கு ஏற்படக் கூடிய நோய்களைத் தீர்க்க முடியாததன் காரணமாக கிராமப்புறங்களில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது.

அதேபோன்று இனவிருத்தி செய்கிற நேரத்தில் அந்த ஆடு மாடுகளுக்கு எந்த வகையிலே இன விருத்தி செய்யவேண்டுமென்பதை அறியாத மக்கள் எல்லாம் கிராமங்களிலே இருக்கிறார்கள். ஒரு கால்நடைக்கு இன விருத்திக்காக ஊசி செலுத்த வேண்டுமென்றால் ஊசி செலுத்துகிற நேரம் எப்போது என்பதை டாக்டர்களிடத்திலோ அல்லது அங்குள்ள அதிகாரிகளிடத்திலோ கலந்து அந்த நேரத்தில் ஊசி செலுத்த வேண்டுமென்பதை அறியாமல் அங்கே சென்று இன விருத்திக்கான ஊசியைச் செலுத்துகின்ற காரணத்தால் இனவிருத்தி ஏற்பட முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி அந்த அதிகாரிகள் சொல்லுகிற வகையில் அந்த மக்கள் நடப்பார்களானால் இனவிருத்தி நிச்சயமாக ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தில் பல கிராமங்களில் கோழிகளை வளர்த்து அதன்மூலம் தங்கள் வயிற்றுப் பாட்டைக் கவனித்துக் கொள்ள வேண்டிய நிலைமையில் மக்கள் இருக்கிறார்கள்.

கிராமங்களில் ஏழை எளிய, ஊனமுற்ற, கண்பார்வையற்றவர்கள் குடும்பங்களுக்கு இந்த அரசு மானியமாக கால்நடைகளையும் கோழிகளையும் கொடுத்து அந்தத் திக்கற்ற குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற எனது வேண்டுகோளை அரசிடம் வைக்கிறேன்.

அதேபோன்று இந்த நாட்டில் பல்லாயிரக்கணக்கான விதவை சகோதரிகள் வாழ்கிறார்கள். அவர்கள் கோழி வளர்ப்பில் கால்நடை வளர்ப்பில் ஆர்வம் காட்டக்கூடிய வகையில் அவர்களுக்கு ஆடுமாடுகள், கோழிகளைத் தந்து இந்த அரசு அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்ளவும், அவர்களுடைய வாழ்க்கையைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





[முற்பகல் 11-20]

கும்பகோணம் தொகுதியில் கால்நடை மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, விடை பெறுகிறேன். வணக்கம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பண்ணை கே. சேதுராம் தலைமை)

* திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே இன்றைய தினம் கால்நடைப் பராமரிப்பு; சமூக நலத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கால்நடைப் பராமரிப்புத் துறை என்பது இந்திய கால்நடைகளையும் அயல் இன ரகங்களையும் கலப்பு இன அபிவிருத்தி மூலமாக உற்பத்தி செய்து நாட்டிலே கால்நடைகளைப் பெருக்குவதற்கும், அதே நேரத்திலே பால் வளத்தைப் பெருக்குவதற்கும் உதவிகரமாக இருந்து வருகிறது. உயர் ரக கால்நடைகளைப் பெருக்குவதற்கும், இந்தியக் கால்நடைகளைப் பெருக்குவதற்கும் கால்நடைத் துறை இருக்கிறது.

இப்படி இனவிருத்தி மூலமாக உற்பத்தியாகக் கூடிய பாலை விநியோகிக்கக்கூடிய பொறுப்பு மற்றொரு துறையிடம் இருக்கிறது, மற்றொரு அமைச்சரிடம் இருக்கிறது. அது சரியாகாது. ஏனெனில், பாலையும் பசுவையும் பிரிப்பது சரியல்ல. மாடுகளை வளர்க்கின்ற, பெருக்குகின்ற முழுப் பொறுப்பும், இனத்தைப் பெருக்குகின்ற முழுப் பொறுப்பும் ஒரு அமைச்சரிடம் இருக்கிறது. ஆனால், அந்த மாடுகளிலிருந்து உற்பத்தியாகும் பாலை இன்னொரு அமைச்சர் நிர்வகித்து வருகிறார் என்றால் இது இரட்டை ஆட்சி முறையாகும். ஆகவே, வருங்காலத்தில் ஒரே அமைச்சரிடம் இரண்டையும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே வெட்கை நோய் மாடுகளுக்கும், ஆடுகளுக்கும், செம்மறியாடுகளுக்கும், மற்ற பிராணிகளுக்கும் வந்து அவைகள் செத்து மடிகின்றன. கால்நடை வளர்ப்புத் துறையில் நல்ல மருத்துவ வசதிகள் இல்லாத காரணத்தால் அவைகள் எல்லாம்

பண்ணை பண்ணையாக மடிந்து விடுவதால் நாட்டிலே பால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. அது மட்டுமல்ல. இறைச்சி உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. அதே நேரத்தில் அந்த மாடுகளை வளர்க்கக் கூடியவர்களுக்கு பொருள் இழப்பும் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட கொடிய நோயால் ஆடு, மாடுகள் இறந்துவிட்டால் பொருள் இழக்கின்றவர்களுக்கு நட்டயீடு கொடுக்கக்கூடிய முறையில் கால்நடை இன்ஷ்யூரன்ஸ் திட்டம் கட்டாயமாகக் கொண்டு வரப்பட வேண்டுமென்று சென்ற நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போதே நான் சொன்னேன். அதன்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் பதிலில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம், ஏர்க்காடு மலைப் பகுதியில் அயல் இனங்கள், குர்ஜியன், ஜர்ஸி, ரெட்டேன் என்று சொல்லக்கூடிய ரகங்களை வைத்து பண்ணைகளை ஏற்படுத்தி அதன் மூலமாக விந்துகள் சேமிக்கப்பட்டு மற்ற மாவட்டங்களுக்கு விநியோகிக்கக்கூடிய முறையில் ஏர்க்காட்டில் ஒரு கால்நடைப் பண்ணையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் கால்நடைகளை வளர்க்கக்கூடியவர்களுக்கு பெரிய பிரச்னையாக இருப்பது வறட்சிக் காலங்களில் தீவனம் கிடைப்பதில்லை என்பதாகும். பச்சை, உலர்ந்த தீவனங்களை ஆண்டு முழுவதும் கொடுக்கக்கூடிய முறையில் தரிசாகக் கிடக்கும் நிலங்களையெல்லாம் சாகுபடிக்குக் கொண்டு வந்து ஆண்டு முழுவதும் கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்கக் கூடிய முயற்சிகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். இந்தியா முழுவதும் கோழிப் பண்ணைக்கு வழங்கும் மின் இணைப்பிற்கு விவசாயத்திற்கான மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் நான்-டொமஸ்டிக் கட்டணமாக 65 பைசா, 70 பைசா யூனிட்டுக்கு வசூலிக்கப்படுகிறது. இதை அரசு கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் தீவிர கால்நடை வளர்ப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்தில் கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.





கன்னியாகுமரியிலே அருமனை என்ற இடத்திலே ஒரு கால்நடை மருத்துவர் தாக்கப்பட்டு, சமூகவிரோதிகளால் தாக்கப்பட்டிருக்கிறார். தாக்கப்பட்ட மருத்துவர் போலீஸில் புகார் செய்திருக்கிறார். ஆனால், இன்னும் நடவடிக்கை எடுக்கப் பட்டதாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் கால்நடை மருத்துவர்கள் எப்படி பணியாற்றுவார்கள் என்பதை பார்க்க வேண்டும். அரசாங்க ஊழியர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்வதற்கு போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டும். அப்படி அளிக்காவிட்டால் அவர்கள் தங்களுடைய கடமைகளைச் சரிவர செய்ய முடியாது.

மதுரை ஜில்லாவிலே 1976 ஆம் ஆண்டு திடீரென்று கொள்ளை நோய் ஏற்பட்டு அதன் காரணமாக 15 லட்சம் ரூபாய் மதிப்புள்ள வாத்துக்கள் இறந்து விட்டன. அதை வளர்த்தவர்கள் அரசாங்கத்திடம் கடன் கேட்டு விண்ணப்பித்து இருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகள் ஆகியும் இன்னும் அவை கவனிக்கப்படாமல் இருக்கின்றன.

கேரளாவில் இம்மாதிரி விபத்துக்கள் ஏற்பட்டால் உடனடியாக நிதியுதவியும், கடனுதவியும் செய்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுபோல தமிழ்நாட்டிலேயும் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சமூக நலத் துறையைப் பொறுத்தவரையில் விதவைகள் உதவி நிதி பெறும் வயது 40 வயதுக்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒரு பெண் 18 அல்லது 20 வயதில் விதவையாகிவிட்டால் அவர்கள் இந்த விதவைகள் நிதி உதவியைப் பெறுவதற்கு 20 ஆண்டு காலம் காத்திருக்க வேண்டி யிருக்கிறது. தினசரி கூலி வேலை செய்கின்ற, அல்லது வண்டி இழுக்கின்ற ஒரு தொழிலாளி இறந்துவிட்டால், அவனது மனைவிக்கு 20 வயது ஆகியிருந்தால், அந்தப் பெண் 20 ஆண்டு காலம் எவ்வாறு காத்திருந்து பெற முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

[திரு. எம். ஆறுமுகம்] [1978 மார்ச் 7

எனவே, சமுதாயத்தில் வாழ்விழந்த விதவைகளுக்கு, அவர்களுக்கு வயதுவரம்பைக் கணக்கில் கொள்ளாமல், இந்த நிதி உதவியைப் பெற வாய்ப்பு கொடுக்க வேண்டும். 40 வயதான விதவை, விதவை நிதியுதவி கேட்டு மனுச் செய்து, அந்த உதவியைப் பெறுவதற்காக நடந்து நடந்து முதியோர் உதவித் தொகை பெறுகின்ற வயதை அடைந்து விடுகிறார் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஆகவே, சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற ஏழை எளிய விதவைகள் அந்த உதவியைப் பெறும் வகையில், வயது வரம்பை நீக்கி, விதவையான பெண்கள் அனைவரும் இந்த உதவியைப் பெறுவதற்குத் தகுதி உள்ளவர்கள் என்று அரசு அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாயத்தில் உள்ள ஏழைகள், விதவைகள், ஊனமுற்றோர் ஆகியோருக்கு அரசாங்கம் உதவி செய்யும்பொருட்டு, அரசு எழுதுபொருள் பிரிவில் பழுதடைந்த தட்டெழுத்துக் கருவிகளை ஏலம் விடுவதைத் தவிர்த்து, அத்தகையவர்களுக்கு இலவசமாக அளித்தால் அவர்கள் சுயமாகவே தொழில் நடத்த உதவியதாக அமையும். அதே நேரத்தில் விதவைகளுக்கு இலவசமாக தையல் மிஷினும் வழங்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதியோர் பென்ஷன் என்பது 15 ஆண்டுகளுக்கு முன்பு பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்பொழுது கொடுக்கப்பட்ட 20 ரூபாய் என்பது 15 ஆண்டுகளாக அப்படியேதான் இருந்து வருகிறது. ஆகவே, முதியோர் உதவித் தொகையான 20 ரூபாய் என்பதை காலத்திற்கும், விலைவாசிக்கும் ஏற்றவாறு உயர்த்தி 50 ரூபாயாகவாவது உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமூகத்தில் உள்ள குழந்தைகளின் வளர்ச்சியை சமூக நலத் துறை சரியாகக் கவனிக்க வேண்டும். ஏனென்றால், ஒரு நாட்டின் வருங்காலச் செல்வம் குழந்தைகள்தான். இந்தக் குழந்தைகள் சம்பந்தமாக இரஷ்யாவிலும், இங்கிலாந்திலும் தீவிர கவனம்



1978 மார்ச் 7] [திரு. எம். ஆறுமுகம்]

செலுத்தப்படுவதோடு, ஏராளமான பொருளும் செலவிடப்படுகிறது. அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும் உள்ள அலுவலகங்களில் உத்தியோகத்திற்குச் செல்லும் தாய்மார்கள் இருக்கிறார்கள். அவர்கள் அலுவலகங்களுக்குச் சென்றுவிட்டால் அவர்களுடைய குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும். அதற்காக குழந்தைகள் இல்லத்தை அதிகமாக ஆக்க வேண்டும். குழந்தைகள் வளரக் கூடிய சூழ்நிலையிலும், அவர்கள் இருக்கின்ற நிலைமைகளிலும் குழந்தைகளின் மனோநிலை மாறுகிறது.

தமிழ் நாட்டிலே குழந்தைகள் தெருக்களிலே திரிகிறார்கள். அப்படித் திரிகின்ற குழந்தைகளின் உடல்நிலையும், கல்வி நிலையும் மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே, அம்மாதிரி ஏழை எளிய குழந்தைகளுக்கு நல்ல கல்வி வசதி அளிக்க வேண்டும். அவர்களது உடல் நலத்தைப் பேணுவதற்காக அதிகமாக நடமாடும் மருத்துவ மனைகளை ஏற்படுத்த வேண்டும்.

தமிழ் நாட்டில் 4 வயது முதல் 9 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு கட்டாயமாக நர்சரி கல்வி போதிக்கப்பட வேண்டும். ஏனென்றால், சிறு வயதில்தான் குழந்தைகளின் அறிவு வளர்ச்சியடையும். எனவே, 1,000 பேர்கள் உள்ள கிராமமாக இருந்தாலும், நகரமாக இருந்தாலும் அங்கே நர்சரி பள்ளிகளை அரசாங்கத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ ஏற்படுத்தி நர்சரி கல்வியை அந்தக் குழந்தைகளுக்குப் போதிக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது.) நர்சரி கல்வி என்பது தற்பொழுது கல்வி இலாக்காவில் இருக்கிறது. கல்வி இலாக்காவானது கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் ஆகியவைகளைக் கவனித்து வருகின்ற இந்த நேரத்தில் சமூக நலத் துறையைச் சேர்ந்த இந்தக் குழந்தைகளையும் அவர்களால் கவனிக்க இயலாது. ஆகவே, நர்சரி பள்ளிகளை சமூக நலத் துறைக்கே மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

* திரு. பொ. உத்திராபதி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, சமூக நலத்துறை மற்றும் கால்நடை வளர்ப்பு பற்றிய இந்த மானியக் கோரிக்கைகளின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1978 மார்ச் 7

சமூக நலத்தில் பெண்கள் நலம், குழந்தைகள் பாராமரிப்பு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. வாழ்க்கை நிலையில் பாதிப்புக்குள்ளான விதவைகள் அனைவருக்கும் நிதி உதவி கொடுக்க வேண்டும் என்று சொல்லுகின்ற நேரத்தில் எனக்கு முன் பேசியவர் சொன்னதைப்போல், விதவையான அத்தனை பேர்களுக்கும் கொடுக்க இந்த அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் மனுப் போட்டால் கிடைப்பதற்கு ஆறு மாதங்கள் ஆகின்றன.

தமிழ்நாட்டில் ஆயிரம் பேர்கள் விதவைகள் இருக்கிறார்கள் என்றால் அவர்களில் 10 பேர்களுக்குத்தான் பணம் கிடைக்கிறது. பிறகு 10 பேர்களுக்குக் கிடைப்பதற்குள்ளாக இந்த 10 பேர்களும் செத்தால்தான் சேர்க்கிறார்கள். இதையெல்லாம் பார்க்காமல் விதவைகள் அத்தனைபேர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அனாதைக் குழந்தைகள் என்று சொல்லும்பொழுது, குழந்தைகள் விடுதி வைத்திருக்கிறார்கள். அவைகள் பெயரளவில் விளம்பரத்திற்காக உருவாக்கப்பட்டனவே தவிர உண்மையிலேயே அந்தக் குழந்தைகளை வளர்த்து, படிக்க வைத்து அவர்களுக்கு எதிர்காலத்தை உருவாக்க வேண்டுமென்ற நோக்கம் இல்லை. நம்

(முற்பகல் 11-30)

அரசு கூடச் சொல்லியிருக்கிறது, கிராமத்தை நகரமாக்க வேண்டு மென்று. சென்னை நகரத்திலே பார்த்தோமானால், இலட்சக் கணக்கான குழந்தைகள் பிச்சை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். பெண் குழந்தைகளும் ஆண் குழந்தைகளும் பிச்சை எடுப்பது, பிளாட்பாரத்திலிருந்து இரயில்வே ஸ்டேஷனில் கீழே இறங்கும் வரை, காண்கின்ற காட்சியாகத் தானிருக்கிறது. அதே போல், கிராமங்களில், ஏழைகள், பின்தங்கிய மக்கள், ஏழை விவசாயிகள், தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்க முடியாமல், அவர்களிடம் உழைப்பைப் பெறவேண்டுமென்ற நோக்கில், மாடு மேய்க்க வைக் கிறார்கள்.

அனாதைக் குழந்தைகளுக்கு, கணக்குப் பிள்ளையிடமும், தாசில் தாரிடமும் சர்ட்டிபிகேட் வாங்கச் சொல்கிறார்கள். கணக்குப் பிள்ளையும் தாசில்தாரும் பணம் கொடுக்கிறவர்களுக்கு



1978 மார்ச் 7] [திரு. பொ. உத்திராபதி]

சர்ட்டிபிகேட் கொடுக்கிறார்கள். அந்த நிலையைப் போக்கி, சோவியத் ரஷ்யா, மற்றும் சோஷலிச நாடுகளைப் போல், அரசு அந்தக் குழந்தைகளைத் தாங்களே கவனித்து, படிக்க வைக்க வேண்டுமென்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கால்நடை என்பது மிக முக்கியமானது. நம் தமிழகத்திலே, கிராமங்களிலே, ஏழை, எளிய மக்கள் பெரும்பகுதி கால்நடைகளை வைத்துத்தான் பிழைக்கிறார்கள். அந்தக் கால்நடைகள் இல்லையென்றால், அவர்களால் உற்பத்தியைப் பெருக்க முடியாது. அந்தக் கால்நடைகளுக்கு சர்ட்டிபிகேட் வாங்கவேண்டும், தாசில்தாரிடத்திலே பெற வேண்டுமென்றெல்லாம் உத்தரவு இருக்கிறது.

ஏழை, எளிய மக்கள் கால்நடை வளர்க்க, சர்க்கார் நேரடியாகக் கடன் கொடுக்கவேண்டும். இன்னும் அரிசன மக்களுக்கு, பாதி மானியமும், பாதி கடனும் கொடுத்து, அவர்கள் கால்நடைகளை வளர்க்கச் செய்யவேண்டும்.

என்னுடைய தொகுதியிலே கொருக்கையில் கால்நடைப் பண்ணை இருக்கிறது. சாதாரண ஏழை, எளிய விவசாயிகள் வைத்திருக்கிற மாடும் எலும்பும் தோலுமாக இருக்கிறது, இந்தப் பண்ணையிலே இருக்கிற மாடும் எலும்பும் தோலுமாக இருக்கிறது. காரணம், வைக்கோல் வாங்கிக்கொடுக்கிறேன் என்று, வைக்கோல் கொடுக்காமலே, பாதிப் பணத்தை மோசடி செய்கிறார்கள்.

அதே மாதிரி, பசும்புல் வளர்ப்பதாகக்கூறி பணத்தைச் சாப்பிடு கிறார்கள். தயவுசெய்து அமைச்சர்வர்கள் அங்கு வந்து பார்க்க வேண்டும். ஆனால், வந்து பார்க்கிறேன் என்று முன்னாலேயே சொல்லக்கூடாது. முன்னாலேயே சொல்லிவிட்டால், 10 பெண்களை விட்டு, புல்லுக்கெல்லாம் தண்ணீர் தெளித்து வைத்துவிடுவார்கள், பச்சையாக இருக்கவேண்டும் என்று. அதேபோல், வைக்கோலை வாங்கி அடுக்கி வைத்துவிடுவார்கள். ஆகவே, திடீரென்று வந்து பார்க்கவேண்டும். இப்படியெல்லாம் அரசாங்கப் பணம் விரயம் ஆகிறது. அரசு இதுபற்றி தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டு மென்று கேட்டுக்கெள்கிறேன்.

[திரு. பொ. உத்திராபதி] [1978 மார்ச் 7

அமைச்சருக்கு நல்ல பொறுப்பு கிடைத்திருக்கிறது. ஆடு, மாடு, கோழி, வாத்து இவைகளை வளர்ப்பதிலே தீவிரமாக இருப்பவர்கள் பெண்கள். பெண்கள் பொறுப்பில் இருக்கக்கூடிய இவற்றிற்கு பொறுப்பேற்றுள்ள அமைச்சர் பெண் அமைச்சர். பத்திரிகைகளிலே பார்க்கிறோம், பிரமாதமாக அறிக்கை விடுக்கிறார்கள். ஆனால், கிராமங்களிலே அந்த ஜனங்களுக்குப் பயன் அளிக்கிறதா என்றால் இல்லை. அந்த மாடு, கோழி, ஆடு இவைகளையெல்லாம் முக்கியமாகக் கருதி, கிராமங்களை நகரங்களாக்க வேண்டுமென்றால், அந்தப் பொருளாதாரத்தை மேம்படுத்த, இவைகளை வளர்க்க அரசு தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து புயல், வெள்ளத்தாலே ஆடு, மாடு இவைகளெல்லாம் இறந்து விட்டால், அதற்காக உதவி கொடுப்பதாக அரசு அறிவித்திருக்கிறது. என்னுடைய தொகுதியிலே கோட்டூரிலே, ஆடு, கால்நடை பறிகொடுத்தவர்களுக்கு உதவி செய்வதற்காகக் குலுக்குச் சீட்டு மூலமாக கால்நடைகளைப் பறிகொடுத்த, எல்லோருக்கும் கொடுக்க ஏற்பாடு செய்கிறார்கள். ஆனால், அதற்குப் பதிலாக, யாருடைய மாடு, ஆடு சாகவில்லையோ, அவர்களுக்குக் குலுக்குச் சீட்டுக் கொடுத்து, தகராறு நடந்து கொண்டிருக்கிறது; என் தொகுதியிலே. அதைக் கவனித்து, எத்தனை பேருக்கு ஆடு மாடு செத்திருந்தாலும் அவர்களுக்கு உதவி கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

கிராமப் புற பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமென்றால், ஆடு, மாடு, கோழி, வாத்து, இவைகளையெல்லாம் வாங்க, அரசே, நேரடியாக, மானியமும் கடனும் கொடுத்து, கிராமத்தை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் பென்ஷன். 1957-லே கனம் காமராஜ் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்பொழுது, பென்ஷன் ரூ. 20. 27 ஆண்டுகளுக்குப் பிறகும் ரூ. 1 கோடி சொச்சம்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். எந்த ஆட்சி வந்தாலும் அதை உயர்த்தவில்லை. காமராஜர் ஆட்சிக்குப் பிறகு நாங்கள் நிறைய செய்தோம் என்று சொல்கிறார்கள். ஆனால், 1 கோடி சொச்சத்தை விட அதிகமாக ஒதுக்கவில்லை. இப்பொழுதும் அதே தொகைதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை அதிகமாக ஒதுக்கிட வேண்டும்.



1978 மார்ச் 7] [திரு. பொ. உத்திராபதி]

இப்பொழுது 100 பேர் மனு போட்டால் 20 பேருக்குக் கிடைக்கிறது. வேறு 20 பேருக்குக் கிடைக்கவேண்டுமென்றால், ஏற்கனவே வாங்கிக்கொண்டிருக்கிற 20 பேர் செத்தால்தான் சாங்க்ஷன் கிடைக்கிறது. அதில், ஆணுக்கு 65 வயதுக்கு மேலும், பெண்ணுக்கு 60 வயதுக்கு மேலும் என்று கொடுக்கிறார்கள். இங்கே 65, 60 வயதுக்கு யார் இருக்கிறார்கள்? சோவியத் நாட்டில் வேண்டுமானால், 100 ஆண்டுகள் சர்வ சாதாரணமாக இருக்கிறார்கள். இங்கே நம்முடைய நாட்டிலே, 40 வயது வரை இருப்பதே பெரிய காரியம்.

ஆகவே 65 வயது என்று இல்லாமல் அவர்களுக்கும் வயதைக் குறைத்து, சாக சாக கொடுக்காமல் உயிரோடு இருக்கும்போதே பென்ஷன் கொடுக்கவேண்டும்.

நகரத்தில் பயிரிகள் என்று இருப்பவர்கள் தார் வைத்திருந்தால் சார்ஜ் பண்ணுகிறார்கள். அது தார் வைத்திருந்து குத்தினால், சார்ஜ் பண்ணினால் பரவாயில்லை. ஆனால் தார் இல்லாமல் இருந்தாலும் சார்ஜ் பண்ணுவார்கள் என்று பயந்து கொண்டு 10 ரூபாய் கொடுத்துவிடுகிறார்கள். தினமும் அவனுக்குக் கிடைப்பதோ 10 ரூபாய்தான். அதை அவர்களிடம் கொடுத்துவிட்டு போக வேண்டியிருக்கிறது. அரசு இதிலே தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இந்தக் கால்நடை மருத்துவமனை என்று ஒன்று இருக்கிறது. மருத்துவமனையில் ஆடுமாடுகளை அழைத்துச் செல்லுபவர்கள் நாள் முழுவதும் உட்கார்ந்திருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. ஒரு நாளைக்கு அவனுக்கு 6 அல்லது 5 ரூபாய் கிடைக்கும், அதைவிட்டு விட்டு அவன் நாள் முழுவதும் மருத்துவமனையில் உட்கார்ந்திருக்கிற சூழ்நிலை இருக்கிறது. அதுமட்டும் அல்ல. அங்கே மருந்தும் இல்லை. என்னுடைய தொகுதியான கோட்டூரில் இருந்து மருந்து வாங்கப் போக வேண்டுமானால் திருத்துறைப்பூண்டிக்கும் மன்னார்குடிக்கும் செல்ல வேண்டும். இரண்டும் 10 மைல் தூரத்தில் இருக்கின்றன. அப்படி அவர்கள் செலவு செய்வதற்கும் அவர்களிடம் பணம் இல்லை. வீட்டுக்குப் போனால் மாடு செத்துப் போகிறது. 1,000 ரூபாய், 1,500 ரூபாய் கொடுத்து வாங்கிய மாடுகளை ஒரு விவசாயி இழந்துவிட்டால்

[திரு. பொ. உத்திராபதி] [1978 மார்ச் 7

மீண்டும் வாங்க ஓராண்டாவது ஆகும். எனவே இந்த மருத்துவ மனைகளுக்கு மருந்து அதிகம் கொடுக்க வேண்டும், நல்ல முறையில் கவனிக்க வேண்டும் என்று அரசு உத்தரவு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனையில் பணிபுரிகின்ற ஊழியர்கள் பணம் வாங்குகிறார்கள். ஏனென்றால் அவர்களுக்குச் சம்பளம் குறைவாகக் கிடைக்கிறது. அவர்களுக்கு 4, 5 பிள்ளைகள். அதனாலே அவர்கள் 5, 10 ரூபாய் வாங்குகிறார்கள். அப்படி அவர்கள் வாங்கி ஊழலும் பண்ணக்கூடாது, அவர்கள் குடும்பமும் பாதுகாக்கப்பட வேண்டும்.

மதுரை மாவட்டத்தில் வாத்துப் பண்ணையில் இருந்த அனைத்தும் இறந்துவிட்டதாம். அவர்கள் கடன் வாங்கியிருக்கிறார்கள். வாத்து இருந்தால்தான் முட்டையிடும். அதன் மூலமாகக் கடன் அடைக்க முடியும். இதிலே அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமத்தை நகரமாக ஆக்க வேண்டும் என்று எண்ணங்கொண்ட இந்த அரசு இந்த முறையில் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டும்.

கடைசியாக தாயையும் பிள்ளையையும் பிரிப்பது போன்று, பால் இலாகாவையும் கால்நடை இலாகாவையும் தனித்தனி அமைச்சர்கள் பார்க்கிறார்கள். 4 மாத குழந்தையை தாயிடம் இருந்து பிரித்துவிட்டால் அது எப்படி வளரும். இதனைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு பால் ஒரு பக்கம், மாடு ஒரு பக்கம் என்று பார்க்காமல் இரண்டையும் ஒரே இடத்தில் வைத்து இருந்தால் வசதியாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

(முற்பகல் 11.40)

**திரு. கூ. சு. முருகேசன் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த கால்நடை சமூக நல மானியத்தின் பேரிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன்

முதலில், இந்த கால்நடை மருத்துவத் துறை, விவசாயத் துறை இரண்டும் நெருக்கடி காலத்திற்கு முன்பு தனித்தனியாக இருந்தன. அதை நெருக்கடி காலத்தில்—அந்த இரண்டு



1978 மார்ச் 7] [திரு. கூ. சு. முருகேசன்]

இலாக்காக்களையும்—ஒன்றாக சேர்த்ததன் பலனாக அங்கே பணி புரிகின்றவர்களுக்கும், நிர்வாகத்திலே சில சிக்கலும், சிரமங்களும் ஏற்பட்டு இருப்பதால், அந்த இரண்டு இலாக்காவையும் தனித்தனியாக முன்பு இருந்ததுபோல் இயங்கச் செய்ய வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இப்போது நடந்து கொண்டு இருக்கும் போராட்டத்திலே கால்நடை ஆய்வாளர்கள் சாதாரண கோரிக்கைகளைத்தான் வைத்து இருக்கிறார்கள். அவர்கள் 3-ம் தேதி அடையாள உண்ணா விரதம் இருந்தார்கள். 6-ம் தேதி அமைச்சர் அவர்களோடு பேசுவதாக இருந்து அது முடிவுபெறாமல் போய்விட்டதால், அந்தக் கோரிக்கைகளை வைத்து இருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் அவர்கள் சாகும் வரையில் உண்ணாவிரதம் இருப்பதாகக் கூறிக்கொண்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** பேரவைத் தலைவரவர்களே, அதைப்பற்றிய அறிவிப்பு நான் பேசுகின்ற நேரத்தில் குறிப்பிட இருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. கூ. சு. முருகேசன் :** அந்தக் காரியத்தை சீக்கிரத்தில் முடித்துக் கொடுத்தால் நல்லது. தங்கள் அறிவிப்புக்கு நன்றி.

கால்நடை மருத்துவ மனைகள் ஊராட்சி ஒன்றியங்களை ஒட்டித் தான் இருக்கின்றன. அப்படியிருக்கிற காரணத்தால் பல கிராமங்களில் உள்ள மக்கள் அந்த மருத்துவ மனைக்கு வரவேண்டும் என்று சொன்னால் 10, 12 மைல் நடந்து வரக்கூடிய நிலை இருக்கிறது. முன்பு சப்-சென்டர்கள் வைத்து இருந்தார்கள். ஆனால் எந்த காரணத்தினாலேயோ அதை எடுத்து விட்டார்கள். அந்த துணை நிலையங்களை பழையபடி கொண்டு வந்து, அங்கேயுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் அந்த மருத்துவ மனை மூலமாக அந்தக் கால் நடைகளுக்கு மருத்துவம் பார்த்துக்கொள்ள உதவி புரிய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சமுதாய நலனிற்காக இந்த அரசு ரூ. 4 கோடிக்கு மேல் ஒதுக்கியிருக்கின்றது. பேரறிஞர் அண்ணா அவர்களும், தந்தை பெரியார் அவர்களும் ஏழை எளிய மக்கள் தாழ்த்தப் பட்ட சமுதாயத்தினரின் பேரில் எத்தகைய அக்கறை

கொண்டிருந்தார்கள் என்பது இந்த அரசுக்கு நன்றாகத் தெரியும். எந்த சமுதாய நலனுக்காக, எந்த சமுதாயத்தின் ஆதரவைப் பெற்றுக்கொண்டு இங்கே ஆட்சியில் அமர்ந்து இருக்கிறார்களோ, அவர்களின் நன்மைக்காக இந்த அரசு பாடுபடும் என்று அடிக்கடி சொல்லி வருகிறார்கள்.

அப்படியிருக்கையில், இங்கே அகதிகளாக, பர்மாவிலிருந்தும், இலங்கையில் இருந்தும், பாகிஸ்தானிலிருந்தும். நம்மை நம்பி வந்து இருப்பவர்களுக்கு நல்ல வசதி வாய்ப்புகளை, அவர்களுக்குக் குடியிருக்க வீடுகளை, தண்ணீர் வசதியை, மின்சார வசதியை, மற்ற வசதிகளை செய்து கொடுக்கவேண்டும். அதேபோல் அவர்களுக்குக் கிடைக்கும் கடன்கள் மற்றும் வீடு கட்டிக்கொள்ள கடன் போன்றவற்றையும் அளிக்கவேண்டும்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** பேரவைத் தலைவரவர்களே, இந்த அவைமுன் உள்ள மானியக் கோரிக்கை சமூக நலன் பற்றியதாகும். அகதிகள் மறுவாழ்வு பற்றியது அல்ல என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கூ. சு. முருகேசன்:** தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்காக முன்பு இருந்த அரசு 10 இல்லங்களை அமைத்துத் தந்தது. ஆனால் அப்படி இருந்தும் அவர்கள் நிலை சீர்படவில்லை. ஆகவே, அந்த 10-க்கும் மேற்பட்டு இல்லங்களை அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் ஊதியம் பெறுவதில் கிராமப்புறத்தில் இருப்பவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்கள் அந்த ஊதியத்தைப் பெறுவதற்காக கிராம கணக்கர், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரை அணுகி, அவர்களிடமிருந்து ஆணையைப் பெற்றுத்தான் அந்த ஊதியத்தைப் பெற முடிகிறது. இதன் காரணமாக அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

ஆகவே, ஒவ்வொரு கிராமத்திலும், சமூக நலனிலே அக்கறையுள்ள இந்த அரசு, யார் யார் முதியோர்கள் இருக்கிறார்கள் என்று [illegible]கை எடுத்து, ஆங்காங்கு அவர்களுக்கு அந்த ஊதியம்





கொடுக்க ஏற்பாடு செய்தால் நல்ல பயனை அவர்கள் அடைய முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பழங்குடி மக்களைப் பற்றிச் சொல்லும்போது, எங்கள் பகுதியில் தேவராயனேரி, பழங்கனூங்குடி போன்ற இடங்களில் நரிக் குறவர்கள் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** பழங்குடியினர் பற்றியது அரிசன நல இலாகா அமைச்சர் அவர்களைச் சார்ந்தது என்று நான் கருதுகிறேன்.

**திரு. கூ. சு. முருகேசன்:** அடுத்தபடியாக, கருணை இல்லத்தைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். முன்பு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு 50-க்கு மேற்பட்ட கருணை இல்லங்களை அமைத்திருந்தது. ஆனால் இப்போது அதைக் குறைத்திருக்கிறார்கள் என்பதை இந்தப் புத்தகத்தில் பார்த்தேன். அந்த கருணை இல்லங்களை மீண்டும் அதிகமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு சைக்கிள் ரிக்சா போன்றவைகளை முந்தைய அரசு கொடுத்து வந்தது. அதை நம்முடைய முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் கொடுத்தார்கள். இப்போது இருக்கும் முதலமைச்சர் புரட்சிகரமாக அந்த சைக்கிள் ரிக்சாக்களுக்கு மோட்டார் வைத்து, மோட்டார் சைக்கிள் ரிக்சாவாக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, ஊனமுற்ற பட்டதாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுக்கு என்று முன்பிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசில் ஒரு இயக்குநரை நியமித்து, அந்த இயக்குநர் மூலம் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வளிக்கப்பட்டது. அந்த பிச்சைக்காரர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இல்லங்கள் இலக்கைப் பார்க்கும்போது முன்பு இருந்ததைவிட இப்போது குறைவாக காட்டியிருக்கிறார்கள். பிச்சைக்

காரர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட வசதி இப்போது குறைந்து
விட்டதோ என்ற ஒரு அச்சம் அதனால் ஏற்பட்டிருக்கிறது.
உண்மையிலேயே பிச்சைக்காரர்கள் எங்கு பார்த்தாலும் தெருக்
களிலே அலைந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, கூடுதலாக
இல்லங்களை அமைத்து, தெருவிலே திரிபவர்களை அந்த இல்லங்
களிலே வைத்து, அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்த
நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கோழி வளர்ப்பு பற்றி வரும்போது, உண்மையிலேயே கோழி
வளர்ப்பவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஊராட்சி ஒன்றியங்
களிலிருந்து கோழிகளைக் கொடுக்கிறார்கள். அதை வளர்த்து,
கணக்கைப் பார்க்கும்போது நஷ்டம்தான் ஏற்படுகிறது. அதனால்
மீண்டும் கோழி வளர்க்கும்படி கேட்டால் அவர்கள் அச்சப்படுகி
றார்கள். அதற்காக, இத்திட்டத்தைத் தீவிரப்படுத்த கோழியை
வளர்த்து முட்டையிடும் வரையில் கோழி தீவனத்தை மானிய
மாகக் கொடுக்கும் ஒரு தீவிரத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கால்நடை அபிவிருத்தித் திட்டத்தில் முன்னேற
வேண்டுமென்றால் உழவர்களுக்கு மாட்டுத் தீவனத்தை மானிய
மாக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பால் வளத்தைப் பெருக்க வேண்டுமென்றால்
நமது விவசாயக் கடன் வழங்கும் சங்கங்கள் மூலமாக பால்
வழங்கும் மாடுகளை விவசாயிகளுக்குக் கொடுக்கலாம். அது
கொடுக்கப்பட்டு வந்தாலும் மீண்டும் அதிகமாகக் கொடுப்பதற்கு
முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்தபடியாக, விதவைகளுக்கு உதவியளிக்க இப்போது வைத்
திருக்கும் வயது வரம்பை எடுத்துவிட்டு, விதவைகள் எல்லோ
ருக்கும் உதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்,

கலப்புத் திருமணம் செய்வதற்கு இந்த அரசு—இந்த அரசு
மட்டுமல்ல, எந்த அரசாக இருந்தாலும்—கலப்புத் திருமணம்
செய்து கொள்வதற்கு ஊக்கமளிக்கும் வகையில் நல்ல பல திட்டங்
[illegible] செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அதைப்போல கண் இழந்தவர்கள், கால் இழந்தவர்கள் இருக்கி
றார்கள். அவர்களுக்கும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, அவர்
களும் நல்ல முறையிலே வாழ வழிவகைகளை ஏற்படுத்திக்
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாய கடன் வழங்கும் சங்கங்கள் மூலமாக
நல்ல தரமான கால்நடைகளை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்
கிறேன். வணக்கம்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் துணைத் தலைவரவர்களே,
மக்களையும் மாக்களையும் ஒன்றாக இணைத்துள்ள ஒரு மானியத்தை
மக்களிடமும் மாக்களிடமும் இயற்கையிலேயே பரிவுடைய
ஒரு அம்மையார் அவர்களிடம் ஒப்படைத்திருப்பது
இந்தத் துறை மேலும் வளர்ச்சியடையும் என்பதற்கு அறிகுறி
என்பதை எடுத்துச் சொல்லி, அவர்களும் இந்தத் துறையை
நன்றாக செம்மைப்படுத்தி, மக்கள் வாழவும் மாக்கள் செம்மைப்
படவும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, நன்கு செய்ய வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.50)

பொதுவாக இந்த மானியத்திலே பல விஷயங்களை அமைச்சர
வர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் விரிவாக்கி
இங்கே ஆய்வு செய்ய நேரம் இல்லை.

இருந்தாலும் மலைப் பகுதிகளைப்பற்றி ஒரு சில வார்த்தைகளைச்
சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். பழங்குடி
மக்கள் மேம்பாட்டுக்கு அவர்களுடைய முன்னேற்றத்தின் அடிப்
படையிலே கறவை மாடுகள் வாங்கவும், மற்ற மேம்பாட்டுத்
திட்டங்களையும் வழங்க சுமார் 11.5 இலட்சம் ரூபாயை ஒதுக்கி
இருப்பதை நான் வரவேற்கிறேன். அந்தப் பழங்குடி மக்கள்
அபிவிருத்தி அடைய இந்த திட்டங்களை மேற்கொள்ளவேண்டு
மென்று கூறுவது என்னுடைய கடமையாகும். அவ்வாறு குறிப்
பிடுகையிலே குறிப்பாக மலைப்பகுதியான ஜவ்வாது மலைப் பகுதி
யைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்லிக்கொள்வது

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 7

என்னுடைய கடமையாகும். ஏனென்று சொன்னால் ஜவ்வாது மலையிலே கால்நடை அபிவிருத்தித் திட்டம் நிறைவேற்றப்படவேண்டுமென்று எத்தனை தடவை சொல்லி இருக்கிறேன். இங்கே இருக்கும் பல உறுப்பினர்கள் அதை நன்றாக அறிவார்கள்.

நான் இப்போது இந்த ஜவ்வாது மலையைப் பற்றிச் சொன்னால் பழைய பல்லவி ஆரம்பித்து விட்டது என்று உறுப்பினர்கள் எல்லாம் நினைக்கும் அளவுக்கு பல முறை பேசி இருக்கிறேன். அந்த பகுதியிலே என்ன மேம்பாட்டுத் திட்டம் மேற்கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. நடைமுறையிலே எதுவும் செய்யவில்லை. 1972-லே இங்கே நம்முடைய எஸ்டிமேட் கமிட்டி உறுப்பினர்களை எல்லாம் அழைத்துச் சென்று அங்கே இருக்கின்ற நிலைமைகளைப்பற்றி எடுத்துக் கூறப் பட்டது. அது அந்தக் குழுவின் அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது.

ஜவ்வாது மலையிலே கால்நடை அபிவிருத்திக்கான முறையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கூறி இருந்தும் இன அபிவிருத்தி ஏற்பாடு ஜவ்வாது மலையின் நுழைவாயிலிலே இருக்கின்ற ஆலங்காயம் என்ற பகுதியிலே இது வரையில் எதுவுமே செய்யவில்லை. செயற்கை கருதரிக்கின்ற ஆர்டிஃபிஷியல் இன்செமினேசன் முறைகளை மேற்கொள்ள வசதிகள் செய்ய வேண்டுமென்று அந்தக் குழு பரிந்துரை செய்தும் அங்கு எதுவும் செய்யவில்லை என்பதை மன வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வாணியம்பாடியிலே கீழ்நிலை மருத்துவமனையை ஹாஸ்பிடலாக உயர்த்தி இருக்கிறார்கள். முன்பு நிதிநிலை அறிக்கையிலே இந்த ஐந்து இடங்களை, கீழ்நிலை கால்நடை மருத்துவமனைகள் ஹாஸ்பிடல் ஆக உயர்த்தப்படும் என்று கூறினார்கள். அதிலே வாணியம்பாடி கீழ்நிலை மருத்துவமனை ஒன்றாகும். ஆனால் இதுவரையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அதற்கான இடத்தை அறிவிக்கவில்லை. கட்டட ஏற்பாடுகளையும் செய்யவில்லை. எப்போது துவக்கப் போகிறார்கள் என்று அறிய முடியவில்லை.

இன அபிவிருத்திக்கான காளை மாடுகளைக் கட்டி வைத்திருக்கிறார்கள். அது எப்போது போனாலும் தலையை கீழேயே சாய்த்துக்கொண்டு நிற்கிறது. நல்ல பசு மாடுகளைக்கொண்டு போனாலும் அவைகள் தலையை நிமிர்த்துவதில்லை. காளை மாடுகள்



1978 மார்ச் 7] [திரு. எம். ஏ. லத்தீப்]

மலட்டுக் காளி மாடுகளாக இருக்கின்றன. இந்த நிலையை அந்த காளை மாடுகளை வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த காளை மாடுகளை அங்கேயே வைத்திருக்கிற காரணம் என்னவென்று புரியவில்லை. இனவிருத்தி செய்ய வேண்டுமென்ற நிலை காளை மாடுகளை இனவிருத்தி இல்லாத மாடுகளை வைத்துக் இருக்கும்போது வீரியம் இல்லாத மாடுகளை வைத்துக் கொண்டிருப்பது என்ன காரணம் என்று தெரியவில்லை. அதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். தயவுசெய்து அமைச்சரவர்கள் இதில் கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாணியம்பாடி ஒரு முக்கியமான சென்டர். அது தாலுக்கா ஹெட்குவார்ட்டாஸ் ஆகும். அங்கே உள்ள மலைப்பகுதியிலே இருக்கின்ற அந்த சுற்றுப்புறத்திலே உள்ளவர்கள் எல்லாம் வாணியம்பாடிக்கு வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. தயவுசெய்து அமைச்சரவர்கள் அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமூக நலம் பற்றி பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஜவ்வாது மலை ஒரு காட்டுப் பகுதியாகும். குறிஞ்சி, முல்லை போன்ற பகுதிகளில் நோய்வாய்ப்பட்ட மக்கள் அதிகமாக இருப்பதோடு அவர்களுக்கு முறையான சிகிச்சை அளிக்கப்படுகிறதா என்பதை அரசு நினைத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நோய்வாய்ப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு சரியான முறையிலே மருத்துவ வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஜவ்வாது மலையிலே ஊனமுற்றோருக்கு என்று பயிற்சி நிலையம் அமைத்துத் தருமாறும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விதவைகளைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். விதவைகள் விதவைகளாகி விடுகிறார்கள். அவர்களுக்கு ஏன் 40 வயது என்று வரம்பு இருக்க வேண்டும்? 20 அல்லது வயதில் விதவையாகிவிட்டால் 20 ஆண்டுகள் கழிந்த பிறகுதான் உதவித் தொகை ரூபாய் 20 கொடுக்க வேண்டும் என்று சொல்வது அவ்வளவு நல்லதாக இருக்காது. அரசின் நிதிப் பற்றாக்குறை நிதிப் பற்றாக்குறை காரணமாகத்தான் எனக்குத் தெரிகிறது.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 7

சய்திருக்கிறார்களே தவிர பரிவு இல்லை, பாசம் இல்லை என்று பாருள் அல்ல. நிதிப் பற்றாக்குறை காரணமாகத்தான் செய்திருக்கிறார்கள் என்பதை உணருகிறேன். ஆனால் மற்ற ட்டங்களில் கொஞ்சம் குறைத்துக்கொண்டாலும் இத்தகைய சமுதாயத்தில் பலகீனமாக உள்ள இந்த விதவைகளுக்கு—விதவையானவுடனே அவர்கள் மறுமணம் செய்து கொண்டால் பரவாயில்லை, இல்லாவிட்டால் எல்லா விதவைகளுக்கும் உதவித் தொகை கிடைக்கக்கூடிய அளவில் வகை செய்ய வேண்டும்.

பல வீடுகளில் விதவைகள் என்ன பாடுபடுகிறார்கள் என்பதை நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். சொந்தத் தாயார், சகோதரர்களே, தாலி அறுத்துவிட்டு வந்து உட்கார்ந்திருக்கிறாயே என்ற ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி அவர்கள் இன்று கண்ணீர் விடும் காட்சி நம்மையெல்லாம் கதறி அழக்கூடிய நிலையில் செய்து விடுகிறது. ஆகவே அந்த விதவைகளின் மீது கொஞ்சம் பரிவோடு தங்கள் கனிவான பார்வையைச் செலுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்வது என் கடமை. நமது முதல் அமைச்சர் அவர்கள் இந்த விஷயங்களில் எல்லாம் மிகவும் கனிவு உள்ளவர்கள். ஆகவே இந்த பலகீனமான சாரார்மீது அவர்களுக்கு தனி அக்கறை உண்டு. ஆகவே அவர்கள் மீது தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனாதை விடுதிகளை நிறைய நடத்துகிறார்கள். அதேமாதிரி தனியார்களும் நம் மாநிலத்தில் நிறைய அனாதை விடுதிகளை நடத்தி வருகிறார்கள். அனாதை விடுதிகளை நடத்துவதை ஒரு லாபகரமாகக் கருதாது அனாதைகளைப் பராமரிப்பது தர்மம் என்ற அடிப்படையிலும், அது தன்னுடைய ஆத்மீக வளர்ச்சிக்கு வித்திடும் என்று கருதியுந்தான் பலர் நடத்துகிறார்கள். தங்கள் வாழ்க்கை வசதிகளைத் துறந்துவிட்டு பலர் இத்தகைய அனாதை விடுதிகளை நடத்துகிறார்கள், தங்கள் பணத்தைப் போட்டு நடத்துகிறார்கள். அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு குறிப்பிட்ட அளவிற்கு மானியம் வழங்கப்பட்டபோதிலும் இன்னும் சிறிது அதிகமாக அவர்களுக்கு மானியம் வழங்குவோமானால் மேலும் செம்மையாக அந்த அனாதை விடுதிகளை நடத்த அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும். ஆகவே தனியார் நடத்துகின்ற அனாதை விடுதிகளுக்கு வழங்கப்படுகிற மானியத் தொகையை இன்னும் சிறிது அதிகமாக வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும்.



1978 மார்ச் 7] [திரு. எம். ஏ. லத்தீப்]

அனாதை இல்லங்களிலேயே கல்விச் சாலைகளை நடத்தினால் அந்தக் கல்விச் சாலைகள் நல்லமுறையில் பயன்படும். அதற்காக மேலும் சில வசதிகளை, இப்போது கல்வி மானியம் கொடுக்கப்பட்டு வந்தாலும், சிறிது அதிக வசதியைச் செய்து கொடுக்க வேண்டும்.

அகதிகள் பற்றி இந்த மானியத்தில் பேச முடியாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய குறிப்புப் புத்தகங்களில் பர்மா அகதிகள் பற்றியும், சிலோன் அகதிகள் பற்றியும், வியட்நாம் அகதிகள் பற்றியும் கூட குறிப்புகள் இருக்கின்றன. அது முதல் அமைச்சர் அவர்களுக்கு மாற்றப்பட்டு விட்டது என்று சொல்லப்படுகிறது. ஆனால் அது எனக்குத் தெரியாது. ஆகவே, குறிப்புகளில் இருப்பதை வைத்துத்தான் நாங்கள் பேசக்கூடியவர்களாக இருக்கிறோம்.

இந்த அரசினிடம் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இந்தத் துறையிலிருந்து அகதிகளுக்குப் பெற வேண்டிய பல நன்மைகளை நாம் பெறுவதற்கு கொஞ்சம் சுணக்கம் காட்டி விட்டோம் என்பது என்னுடைய கருத்தாகும். ஏனென்றால், இத்துறையைப் பற்றி இரண்டு மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக எந்தக் குழு இதை ஆய்வு செய்யவேண்டுமோ அந்தக் குழுவில் இருந்து ஆய்வு செய்து பார்த்திருக்கிறேன். குறிப்பாக ஸ்ரீமாவோ பண்டாரநாயகா—சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப் படையில் சில வாக்குறுதிகளை மத்திய அரசு நமக்கு தந்திருக்கிறது. இந்த ஒப்பந்தத்தால் பாதிக்கப்பட்டிருப்பது—இந்த ஒப்பந்தம் இந்தியாவிற்கும் ஸ்ரீலங்காவிற்கும் இடையே ஏற்பட்டதாக இருந்தாலும்—நேரடியாகப் பாதிக்கப்பட்டிருப்பது தமிழ்நாடுதான் என்பதை யாரும் மறுத்திட முடியாது.

ஸ்ரீலங்காவில் நல்ல வசதியோடு வாழ்ந்து வந்தவர்கள், பர்மாவில் நல்ல வசதியோடு வாழ்ந்து வந்தவர்கள், மிகப் பெரிய வியாபாரிகளாக, பெருந்தனக்காரர்களாக, பெரிய நிலக்கிழார்களாக இருந்து வந்தவர்கள், வியட்நாமில் இந்திய வம்சாவளியினராக இருந்து வந்தவர்கள் இன்று ஒன்றுமேயில்லாமல் ஏழை பாழைகளாக வாழ வழியில்லாமல் அவர்கள் தங்கள் குழந்தை குட்டிகளோடு இந்தியாவிற்கு திடீரென்று திருப்பி அனுப்பப் பட்டிருக்கிறார்கள். இது இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்டிருக்கிற

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 7

ஒரு ஒப்பந்தமாக இருந்தாலும் தமிழ்நாடு பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இந்திய அரசின் அன்றைய பிரதமர் சாஸ்திரி அவர்கள் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில் நாம் பெற வேண்டிய பல வசதிகளை, பல மானியங்களை நாம் பெறாமல் விட்டு விட்டோம். அதற்கான விளக்கங்கள் அரசாங்கக் குறிப்பில் இருக்கிறதா என்று தயவு செய்து அமைச்சர் அவர்கள் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வருகிற ஒவ்வொரு அகதிக்கும் முதல் மானியம் ரூ. 5,000 கொடுக்கப்பட்டது. அதில் பாதி அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. மீண்டும் அந்தப் பணத்தைப் பெறுவதற்கு எந்தவிதமான முனைப்பான ஒரு நடவடிக்கையும் தமிழக அரசு எடுக்கவில்லை என்பதைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது. நம் மாநிலப் பணத்தை அவர்களிடமிருந்து திருப்பிப் பெற எவ்வளவு முனைப்பு காட்டினோமோ, சுறுசுறுப்பு காட்டினோமோ, அப்பணம் திரும்பிவந்து ரீஇம்பேஸ் செய்யப்பட மத்திய அரசுக்கு திருப்பியனுப்ப எவ்வளவு கவனம் செலுத்தினோமோ, அதே அளவு கவனம் மத்திய அரசிடமிருந்து நாம் பெற வேண்டிய மானியங்களை மீண்டும் பெற நம் அரசு இலாகாவினர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை என்ற ஒரு ஐயப்பாடு நிச்சயமாக இருக்கிறது. ஐயப்பாடு மட்டுமல்ல, உண்மை நிலையும் அதுதான்.

[நண்பகல் 12-00]

ஆகவே இதையெல்லாம் ஆய்ந்து மத்திய அரசோடு, நம்முடைய உரிமைகளைப் பெற—மேற்கொண்டு நமக்கு என்னென்ன உதவிகள் கிடைக்கவேண்டுமோ அவைகளைப் பெற—ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் என்னென்ன சொல்லப்பட்டிருக்கிறதோ—அவைகளை நிறைவேற்ற மத்திய அரசு கடமைப் பட்டிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் வற்புறுத்துகின்ற முறையில் மத்திய அரசாங்கத்தின் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வளத்தோடு வாழ்ந்த மக்கள் இன்றைக்கு இந்த நாட்டில் வந்து ஏழை மக்களாக இருந்துகொண்டு, கும்மிடிப் பூண்டியில் இருப்பதா இராமநாதபுரத்தில் இருப்பதா என்று அவர்களை கொண்டுபோய், அந்த கேம்பிலிருந்து இந்த கேம்பிற்கும், இந்தக் கேம்பிலிருந்து அந்த கேம்பிற்கும் 'பிட்பால்' [illegible] அடிப்பதைப்போல [illegible]



1978 மார்ச் 7] [திரு. எம். ஏ. லத்தீப்]

அங்கும் இங்கும் அலையச் செய்து கொண்டிருக்கின்ற அந்த மக்களுக்கு நல்ல முறையில் அவர்கள் வாழ்வதற்குரியத் திட்டங்களைத் தீட்டுவதற்கும் அதற்கான நிவாரணம் அளிப்பதற்கும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த முறையில் இவர் களுக்கென்று முனைப்பான திட்டங்களைத் தீட்டி, மத்திய அரசாங்கத்தோடு வாதாடி அதற்கான உதவிகளைப் பெறுவதற்கும்—அதற்கான உதவிகளையும் நாம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நேரம் அதிகமாக இல்லாத காரணத்தால், என்னுடைய வெட்டுத் தீர்மானங்களில் குறிப்பிட்டிருக்கின்ற பிரச்னைகளை எல்லாம் பரிவோடு கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

* திரு. சொ. ந. பழனிச்சாமி: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சமூகநலத் துறையில் பேசுகின்ற வாய்ப்பைத் தந்தமைக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள் கிறேன். மகளிர் நலப்பணிகள், சத்துணவுத் திட்டங்கள், உடல் ஊனமுற்றோருக்குப் பயிற்சி அளித்தல், மறுவாழ்வு அளித்தல், பிச்சைக்காரர்களுக்கு இல்லம் அமைத்தல் போன்ற பணிகளை சமூக நலம் மேற்கொண்டு வருகின்றது. வருகின்ற நடப்பு ஆண்டில் ரூபாய் 4 கோடி 92 லட்சத்து 13,000 நிதி இதற்காக ஒதுக்கீடு செய்துள்ளார். இதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இத் துறை 18 வயது முதல் 40 வயது வரை உள்ள ஆதரவற்ற பெண்களுக்கு கோவை ஜில்லாவில் பணி இல்லம் ஒன்றும் திறக்க வேண்டும். அப்பணி இல்லங்களில் கொடுக்கப்படுகின்ற உதவித் தொகையை இன்னும் அதிகரிக்க வேண்டும். அங்கு தொழிற் கல்வி சொல்லிக்கொடுக்க வேண்டும். அப்பணி நிலையங்களில் நூல் நூற்றல் ஒரு முக்கியப் பணியாக வைக்க வேண்டும்.

அங்கு பணிபுரியும் பெண்களுக்கு உணவு உறைவிட வசதிகள் அளிக்க சென்னை நகரில் இருப்பது போல் ஒவ்வொரு ஜில்லாவிலும் பெண்கள் விடுதி அமைக்க வேண்டும். அந்த மாணவ உன்னை சேர்த்துக் கொள்வதில் முறைகேடுகள் இல்லாமல் இடமாக குறைந்த வருவாய் உள்ள பெண்களுக்குத்தான் கிடைக்கவேண்டும். பயிற்சி நிலையங்களும் உற்பத்தி நிலைய களும் இன்னும் திறக்கப்படவேண்டும். அப்பயிற்சி நிலைய

[திரு. சொ. ந. பழனிச்சாமி] [1978 மார்ச் 7

களில் அதிகப் பேர்களுக்கு இடம் ஒதுக்கவேண்டும். இது குறித்து மத்திய அரசிடம் கூட மானியம் கோரலாம். சாக்குத்துண்டு செய்யும் பயிற்சி நிலையங்கள் நிறையத் தொடங்கினால் நிறைய பெண்களுக்கு வேலை கொடுக்க முடியும். அதே சமயத்தில், அது அவர்களுக்கும், அரசுக்கும் வருமானம் உடையதாக இருக்கும்.

ஒவ்வொரு ஊராட்சியிலும் குறைந்தது ஒரு சிறார் பள்ளியாவது இருக்க அரசு உடனடியாக ஆவன செய்ய வேண்டும். இங்கு பயிற்சி பெற்ற பாலசேவிகைகளை நியமிக்க வேண்டும். எங்கள் மாவட்டத்தில் ஒரு சிறார் பள்ளி கூட இருப்பதாகத் தெரியவில்லை. எனவே உடனடியாக எங்கள் மாவட்டத்திலும் சிறார் பள்ளிகளைத் திறக்க வேண்டும். குறிப்பாக அவனாசி தாலுகாவில் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பேரவைத் தலைவர்—தலைமை)

சத்துணவு பற்றி கிராம மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கா அவர்களுக்கு சத்துணவைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். தினசரி உபயோகிக்கும் உப்போடு இரும்புச் சத்துக்கள் சேர்த்து வீரியப்படுத்தினால் அது மிக்க பலனைக் கொடுக்கும் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவைகளை இச்சமூகநல வாரியம் மக்களிடத்திலே எடுத்துச் சொல்ல வேண்டும். கிராமப் புறங்களில் மக்கள் அநாகரிகம் என்று நினைத்து சத்துள்ள உணவாகிய கேழ்வரகு, சோளம் போன்றவற்றை ஒதுக்கி வருகின்றார்கள். இந்நிலையை மக்களிடத்திலே மகளிர் மன்றங்கள் எடுத்துச்சொல்லி மாற்றவேண்டும்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு இச்சமூக நலத்துறை பல உதவிகளைச் செய்து வருகின்றது. அவ்வுதவிகள் எல்லாம் கிராம மக்களுக்கு கிடைப்பதில்லை. பெரும்பாலும் சென்னை போன்ற நகரங்களில் உள்ளவர்கள்தான் பயன்படுகின்றார்கள். எனவே அது சென்னையை விட்டு தமிழகத்தில் உள்ள எல்லா உடல் ஊனமுற்றவர்களுக்கும் பயன்படுமாறு இருக்கவேண்டும்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு கல்வி நிலையங்களில் அவர்களுக்கு என்று ஒரு குறிப்பிட்ட இடம் ஒதுக்கவேண்டும். அரசுப் பணித் தேர்வுகளிலும் அவர்களுக்கு மத்திய அரசு ஒதுக்குவது போன்று ஒரு குறிப்பிட்ட விகிதாச்சார இடம் ஒதுக்கவேண்டும்.



1978 மார்ச் 7] [திரு. எஸ். என். பழனிச்சாமி]

ஒவ்வொரு தாலுகாவிலும் ஒரு அனாதை இல்லம் திறக்கப்பட வேண்டும். அனாதை இல்லங்களில் குழந்தைகளுக்கு நல்ல உணவு, உடை முதலியவை கொடுக்கப்பட வேண்டும். எனவே, இங்கு ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 12-50 கொடுக்கிறார்கள். இது போதாது. இன்னும் அதிகமாக கொடுக்கவேண்டும். ஒவ்வொரு கோவில்களிலும் கருணை இல்லங்களைத் தொடங்கி, அதற்கு ஆகும் செலவை அக்கோயில்களின் வருமானத்திலிருந்து கொடுக்கிறார்கள். இதை இன்னும் அதிகப்படுத்துவதன் மூலம், அதிகப்படியான அனாதைக் குழந்தைகளை மேலும் பராமரிக்க முடியும். எனவே, அதைச் செய்யவேண்டும்.

ஆதரவற்றப் பெண்களுக்கு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 20 கொடுக்கின்றார்கள். இது அந்தப் பெண்களுக்கு போதாது. அதை ரூ. 30 ஆக உயர்த்திக் கொடுத்தால்தான், அவர்கள் ஒருவேளை சாப்பாடாவது சாப்பிடுவதற்கு வழி வகுக்கும். தயவுசெய்து வயது வரம்பு பாராது, ஆதரவற்ற அனைத்துப் பெண்களுக்கும் கொடுக்கவேண்டும்.

கலப்புத் திருமணம் செய்தவர்களையும், கைம்பெண்களை மறுமணம் செய்கின்றவர்களையும் ஊக்குவிக்க அரசு சேமிப்புப் பத்திரங்களைக் கொடுப்பதோடு மட்டுமல்லாது, அவர்களுக்கு வேலை வாய்ப்பும் கொடுக்க ஆவன செய்யவேண்டும்.

கால்நடை பராமரிப்பு சம்பந்தமாக ஒரு நிலையத்தை அவினாசி தாலுகாவிலே புகளூரில் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, மனித வாழ்க்கையோடு இணைந்திருக்கிற ஒரு பிரச்னைபற்றி இன்று மானியம் வைக்கப்பட்டு, அதன்மீது நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம். நான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்தபோது, அமைச்சர் அவர்கள் உறுதியளித்திருக்கிறார்கள். இந்தக் கருத்துக்களை இங்கே அறிவிக்க இருப்பதாகத் தெரிவித்தார்கள். அதற்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 மார்ச் 7

சட்டை செய்யவில்லையாதலால், சட்டடையில்லாத போராட்டம் என்ற ஒரு போராட்டத்தை நேற்று ஆரம்பிப்பதாக லைவ்-ஸ்டாக் இன்ஸ்பெக்டர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் ஆரம்பித்தார்கள். அவர்கள் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதிலே ஒன்றை நான் குறிப்பிடுகிறேன்.

குறிப்பாக, என்ன கோரிக்கை என்று சொன்னால், 'பி' கிளாஸ் வெடர்னரி பிராக்டிஷனர்ஸ் உரிமையைத் தங்களுக்குத் தரவேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களும் ஏறக்குறை அவர்களைப்போல் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அதற்கான பயிற்சியைப் பெற்று, அவர்கள் பொதுவாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு மேலாக இருக்கின்ற வெடர்னரி அசிஸ்டெண்ட் சர்ஜன்களுடைய விருப்பு வெறுப்புக்களுக்கு ஆளாகின்ற நிலைமையில் அவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாவிதமான வேலைகளையும், குறிப்பாக, தடுப்பு ஊசி போடுதல், செயற்கை இன விருத்தி செய்தல், ஆண்மை இழக்கச் செய்தல் போன்ற காரியங்களுக்கு முழு பொறுப்பேற்றுக்கொண்டு வேலை செய்கின்றார்கள். இப்படிச் செய்கின்ற இடத்திலே அவர்களுக்கு மேலாக பணியாற்றுகின்ற அசிஸ்டெண்ட் வெடர்னரி சர்ஜன்களுடைய விருப்பு வெறுப்புக்களுக்கு அவர்கள் ஆளாகின்ற நிலைமை இருக்கிற காரணத்தால், அதை மாற்றியமைப்பது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற குடியரசுத் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே ஏராளமான பேர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். promotion of Livestock Inspectors from Grade II to Grade I என்கிற முறையில் புரமோஷன் வந்திருக்கிறது. குடியரசுத் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே அது மாற்றப்பட்டிருக்கிறது. அதை ரத்து செய்து, ஏற்கனவே புரமோஷன் கொடுக்கப்பட்டதை அவர்களுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த பாரபட்சத்திற்கு முக்கியமான காரணமாக இருப்பது, இந்த டைரக்டர் ஆப் அனிமல் ஹஸ்பெண்டரி என்று சொல்லக்கூடியவர், இந்த வெடர்னரி அசிஸ்டென்ட் சர்ஜனிலே இருந்து வரக்கூடியவர்களைப் போடுகிறார்கள் என்பதால். ஆகவே, இந்த



1978 மார்ச் 7] [திரு. ரா. மார்க்கபந்து]

பாரபட்சம் ஏற்படுகின்றது. ஆகவே, இந்தத் துறைக்கு டைரக்டர் சம்பந்தப்பட்ட வரையில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இருக்க வேண்டுமென்ற நிலைமையை அவர்கள் சொல்கிறார்கள்.

அதேபோன்று, இவர்கள் 25 ஆண்டுக் காலமாக வேலை செய்து வந்தபோதும், ஈ.ஓ.க்களாக வேலை செய்தாலும், இவர்களுக்கு வெடர்னரி அசிஸ்டெண்ட் சர்ஜன் போன்ற பதவிகளில், இவர்களுடைய சீனியாரிடியை ஓவர்-லுக் செய்கிறார்கள். இதனால் இவர்களுக்கு பதவி முடக்கம் ஏற்படுகின்றது. இந்தப் பதவி முடக்கத்தை நீக்கவேண்டும்.

குறிப்பாக, இந்த லைவ்-ஸ்டாக் இன்ஸ்பெக்டர்களுக்கு 300 ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகின்றது. ஆனால், வெடர்னரி அசிஸ்டெண்ட் சர்ஜன்களுக்கு 600 ரூபாய் மாதச் சம்பளம் தருகின்ற நிலைமை இருக்கின்றது. அதனால், இந்த லைவ்-ஸ்டாக் இன்ஸ்பெக்டர்களை, இவர்கள் எல்லா வேலைகளையும் செய்கிறார்கள் என்பதால், இவர்களை இதிலே நியமிப்பதன் மூலம், இதிலே மிச்சம் பிடித்து, எப்படி நாம் நிதி நிலையிலே செலவைக் குறைக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதால், இந்தக் குறைந்த செலவின் மூலமாக நிறைய லாபத்தை, பயனை பெறலாம், நன்மைகளைப் பெறலாம் என்பதால் இதுபோன்ற நிலைமைகளை மாற்றியமைப்பதன் மூலமாக ஏற்கனவே பல ஆண்டுகளாக உழைத்துக்கொண்டிருக்கிற இந்த லைவ்-ஸ்டாக் இன்ஸ்பெக்டர்களுக்கு பதவி உயர்வு தரமுடியும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-10]

மூன்று வகையானவர்களுக்கு ட்ரெயினிங் கொடுக்கப்படுகிறது. இன்செமினேஷன், வாக்சினேஷன், காஸ்ட்ரேஷன் என்பதற்கு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ட்ரெயினிங் கொடுத்து அவர்களைப் போடுகிறார்கள். ஒருவர் ஒரு மாட்டை அழைத்துக் கொண்டு இன்செமினேஷனுக்கு ஓரிடத்திலும், வாக்சினேஷனுக்கு ஓரிடத்திலும், காஸ்ட்ரேஷனுக்கு ஓரிடத்திலும் எடுத்துச் செல்ல வேண்டிய காரணத்தால் மாடுகளை வைத்துக்கொண்டிருப்பவர்கள் ஏராளமான தொல்லைகளுக்கு உள்ளாகிறார்கள். ஆகவே, லைவ் ஸ்டாக் இன்ஸ்பெக்டர்கள் என்று இருப்பவர்களிடம் இதை ஒப்படைக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற முறையே தெரிவித்தேன். 200 சப்-செண்டர்கள் மூடப்பட்டிருக்கின்றன. ஒரு சப்-செண்டர் ஆறுமாத காலம் பணியாற்றவில்லை என்று சொன்னால் அதை நிரந்தரமாக மூடவேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அந்த வகையில் 200 சப் செண்டர்கள் மூடப்பட்டிருக்கின்றன. அவற்றைத் திறக்க வழிவகை செய்யவேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு சப் சென்டர் அமைப்பது சாலச் சிறந்ததாக இருக்கும்.

வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை நான்கு அஸிஸ்டெண்ட் டைரக்டர்கள் இருக்கிறார்கள். இப்படி அதிகாரிகளே இருக்கும் காரணத்தால் கீழே பணிபுரிபவர்களுக்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கும் நிலைமை இருக்கிறது. Sheep rearing societies, Cattle rearing societies எங்கள் பகுதியில் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னேன்.

யாதவர்கள் என்ற சமுதாயம் இருக்கிறது. ஆடுகளை நம்பியிருக்கும் சமுதாயம் அது. ஆடுகள் அழிந்துவிட்டால் அவர்களுக்கு வாழ்வில்லை என்ற நிலைமை இருக்கிறது. நோய் மூலம் ஆடுகள் அழிந்து விட்டால் அவர்களுக்குப் பாதுகாப்புத் தரும் வகையில் ஒரு திட்டத்தை அமைப்பது சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக நலத்துறை பற்றி ஒரு வார்த்தை. விதவைகளுக்கு 40 வயதுக்கு மேல்தான் பென்ஷன் தரப்படும் என்று சொல்லுகிறார்கள். இந்தச் சட்டத்தில் ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. விதவைகள் ஆகிவிட்டால் devolution of the property right என்று இருக்கிற முறையில் உரிமைகளைப் பெறுகிறார்கள். எந்த வயதில் விதவைகள் ஆனாலும் அவர்களுக்கு பென்ஷன் கொடுக்கவேண்டும். They should not go astray அவர்கள் மறுமணம் செய்து கொள்ளுகிறவரை இளம் விதவைகளாக இருந்தாலும் பென்ஷன் கொடுக்கவேண்டும்.

ஓல்டு ஏஜ் பென்ஷன் வாங்குவதில் சிரமங்கள் இருக்கின்றன. ஓல்டு ஏஜ் பென்ஷன் அதிகச் சிரமமின்றி உடனடியாகத் தரப்பட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். Handicapped widows and women இவர்களுக்கு வே



வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. கே. கந்தசாமி மூன்று நிமிஷத்தில் முடித்துக் கொள்ளவேண்டும்.

**திரு. க. கந்தசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று நிமிஷத்தில் பேச பணித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கால்நடைப் பராமரிப்புத் துறை, சமூக நலத் துறை சார்பாக அளித்துள்ள மானியக் கோரிக்கைகளை வரவேற்று சில கருத்துக்களை கூறுகிறேன்.

கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு அரசு இன்னும் கணிசமான தொகையை ஒதுக்க வேண்டும். விவசாயம் பெரிய தொழில். அந்த விவசாயத்திற்கு உறுதுணையாக இருப்பது கால்நடை. கால்நடைகள் உரம் கொடுக்கும் 'நியூகிளயஸ்' ஆக இருப்பது. ஆகவே, அதிலே அதிகக் கவனம் செலுத்த வேண்டும், அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று முதல் வேண்டுகோளாக வைக்கிறேன்.

ஆடுமாடுகளுக்கு ஏற்படுகின்ற நோய்களைத் தடுக்கும் முறைகளைத் தீவிரப்படுத்த வேண்டும். அவை வெப்ப நோய்களால் தாக்கப்படுகின்றன. காளை மாடுகளுக்கு குடல் நோய் வருகிறது. வெப்ப நோயை காணை நோய் என்று கிராமத்தில் சொல்லுவார்கள். செக்கானூரணியிலே, அமைச்சர் அவர்களுடைய தொகுதியிலே எனக்கும் தோட்டம் இருக்கிறது. நான் பார்த்தேன். வெப்ப நோய் தாக்கிப் பல மாடுகள் இறந்துவிட்டன, உழுவதற்குகூட மாடுகள் அந்தப் பகுதியில் கிடைக்காத துர்பாக்கியமான நிலைமை இருக்கிறது, மருத்துவர்கள் மருந்துகளைப் பயன்படுத்தி அதைத் தடுக்க முடியவில்லை. அந்த நோயைத் தடுப்பதற்கும் ஊசிகள் போடுவதன் மூலமாக சொஸ்தப்படுத்துவதற்கும் ஆஸ்பத்திரிகளை அமைத்துத் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பாடர் கிராப்ஸ் என்ற முறையிலே பல வகைகள் இருக்கின்றன. 10 சென்டில் போட்டால் அநேக ஜோடி மாடுகளுக்குப் போடலாம் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். அதை நல்ல முறையிலே பாபுலரைஸ் பண்ணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த வசதியை ஏற்படுத்தித்தர வேண்டும்.

ஆண்டிபட்டியில் ஒரே ஒரு இடம் தான் இந்த கால்நடை மருத்துவ வசதிக்காக இருக்கிறது. வேறு எந்த தொகுதியிலேயும் இப்படி இருக்காது. கடமலைக்குண்டு, மயில்காடு, போன்ற கடைநிலைப் பகுதிகளில் உள்ள இடங்களில் இரண்டு இடங்களிலேயாவது அந்த மருத்துவ வசதி நிலையங்களை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து செக்கானூரணியிலே—அமைச்சர் அவர்களுடைய தொகுதி அது—அதிர்ஷ்டவசமாக அங்கே நல்லமுறையிலே மருத்துவர்கள் செயல்படுகிறார்கள். (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 12½ மணிக்குள் வாக்கெடுப்பு நடைபெற வேண்டும். எனவே மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் எவ்வளவு சீக்கிரம் முடிக்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 12-20)

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** பேரவைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையேற்ற பிறகு கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரையில் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது என்பதை நாடு நிச்சயமாக அறிந்திருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நவீன அறிவியல் முறைகளைப் பின்பற்றி கால்நடைகளின் தரத்தை மேம்படுத்துவதே கால்நடை பராமரிப்புத் துறையின் நோக்கமாகும். எனவேதான் பெரிய அளவில் திட்டங்களை உ[illegible] வாக்கி, சமுதாயத்தில் நலிவுற்றவர்கள் தங்களுடைய வருவா[illegible] தனைப் பெருக்கிட வாய்ப்பளிக்கப்படுகிறது. 1977-78 ஆம் ஆண்டி[illegible] ஏற்கனவே நடைமுறையிலிருக்கும் மையக் கிராமத் திட்டம், தீவி[illegible] கால்நடை அபிவிருத்தித் திட்டம், வேளாண்மை மறுநிதிக் கழ[illegible]





உதவியுடன் கூடிய ஆடு வளர்ப்புத் திட்டம், வறட்சிப் பாங்கான பகுதித் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சிறப்பு கால்நடை வளர்ப்புத் திட்டத்துடன் 1977-78-ம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன :

பதினைந்து மையக் கிராம நிலையங்களை நிறுவுதல் மற்றும் விரிவுபடுத்துதல், ஐந்து கால்நடை மருந்தகங்கள் திறப்பு, மூன்று கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் வேலூரிலும், மதுரையிலும், திருநெல்வேலியிலும் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. ஐந்து கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாக மாற்றப்பட்டன.

இம்மாநிலத்தில், இத்துறையின் கொள்கையின்படி கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்கு எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. காங்கேயம், உம்பளாச்சேரி, ஹலிகார் போன்ற வேலைக்குகந்த கால்நடைகள் அந்தந்தப் பகுதிகளிலும், மற்றுமுள்ள இடங்களில் பாலின் தரத்தையும், உற்பத்தியையும் உயர்த்தும் பொருட்டு, உயரின கால்நடைகளான ஜெர்சி, பிரீசியன், ரெட்டேன் காளைகள், சிவப்பு சிந்தி தார்பார்கர் காளைகள் ஆகியவை பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த உயரினக் காளைகள், இம்மாநிலத்தில் உள்ள கால்நடைகளின் தரத்தை உயர்த்த உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

கேந்திர கிராமத் திட்டம், தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் குறிப்பிட்ட இடங்களில் தீவிர கால்நடை அபிவிருத்தி செயல்பட்டு வருகிறது. தற்பொழுது 39 கேந்திர கிராம நிலையங்களும், 4 தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்களும் செயல்பட்டு வருகின்றன. இத்துறையின் கீழ் 59 காளை நிலையங்கள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன.

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜே. இராமசாமி அவர்கள் மெத்த வருத்தப்பட்டுச் சொன்னார்கள், இராணிப்பேட்டைக்கு ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை என்று. இராணிப்பேட்டையில் தொற்றுநோய் தடுப்பு மருந்து தயாரிப்பிற்காக மத்திய அரசு ஆதரவுடன் மாநில அரசால் ரூபாய் 22 இலட்சம் செலவிட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[செல்வி பி. டி. சரஸ்வதி] [1978 மார்ச் 7

தஞ்சை மாவட்டம் ஈச்சங்கோட்டையில் ஜெர்ஸி இன விருத்திக்காக மத்திய அரசு ஆதரவுடன் மாநில அரசு 93 இலட்சத்துக்கான திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அண்மையில் ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து 109 பசுக்களும், 2 காளைகளும் வந்தது சபைக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

ஈச்சங்கோட்டையிலுள்ள பண்ணைக்கு, டென்மார்க் நாட்டிலிருந்து சுமார் 18 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள செயற்கை இனஅபிவிருத்திக்கான உபகரணங்களைத் தருவிக்க உத்தரவு இடப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டம் ஓசூரில் மேல்நாடுகள் அபிவிருத்தி முகமையின் உதவியுடன் அயலின கால்நடைப்பண்ணை ஒன்று உருவாக்க அரசின் பரிசீலனையில் உள்ளது. ஏறக்குறைய அதன் தொகை நாலரைக் கோடி அளவிலே அந்தத் திட்டம் உருவாக இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் முழுமையாகப் பயன் அளிக்கத் தொடங்கும்போது ஓசூர் கலப்பின ஜெர்சி, சிந்தி காளைகளை அங்கே நாம் வழங்க முடியும்.

ஜெர்சி, பிரைசியன் போன்ற பால்வளமிக்க அயலின வகைகளை அறிமுகப்படுத்தி அதன்மூலம் திட்டப் பகுதிகளில் ஐந்தாண்டுக் காலத்திற்குள் பால் உற்பத்தியை 331/3 சதவீதத்திற்கு நிச்சயமாக அதிகரிக்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் மார்க்கபந்து அவர்களும், மணிமாறன் அவர்களும், வரதராசன் அவர்களும் கால்நடை ஆய்வாளர்களின் கோரிக்கைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். கால்நடை ஆய்வாளர்களின் கோரிக்கைகளில் இரண்டினை ஏற்கனவே அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இவைகளில் ஒன்று, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் பணியாற்றுவதற்குப் பதில் விடுப்பு நாள், இரண்டாவது கால்நடை உதவியாளர் (லைவ்ஸ்டாக் அசிஸ்டண்ட்) என்று வழங்கி வந்த பெயரினை மாற்றி கால்நடை ஆய்வாளர் (லைவ்ஸ்டாக் இன்ஸ்பெக்டர்) என்று பெயர் வழங்குதல்.

கீழ்க்கண்ட கோரிக்கைகள் ஊதியக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளன :—

அதாவது, கேந்திர கிராமத்திட்டம் மற்றும் கால்நடை மேம்பாட்டுத் திட்டங்களில் பணியாற்றும் ஆய்வாளர்களுக்கு நிலையான பயணப்படி (ஃபிக்ஸட் டிராவலிங் அலவன்ஸ்) அளித்தல்.



1978 மார்ச் 7] [செல்வி பி. டி. சரஸ்வதி]

கீழ்க்கண்ட கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது :—

இவர்களுக்குப் பால்வள அறிவியல் மற்றும் கால்நடை மருத்துவம் இவற்றில் டிப்ளோமா பயிற்சி அளித்தல்.

கால்நடைத் துறையில் கம்பவுண்டர்களை நியமிக்கக் கூடாது என்ற கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ள இயலாது.

பஞ்சாயத்து ஒன்றியங்களில் விஸ்தரிப்பு அதிகாரிகளாக பட்டதாரிகளை நியமிக்கும் உத்தேசத்தைக் கைவிட வேண்டுமென்ற கோரிக்கைக்குத் தற்பொழுது இடமில்லை. ஏனெனில் அப்படியொரு செயற்குறிப்பு அரசினிடம் இல்லை.

முக்கிய கோரிக்கை, நிலை 2-இல் இருந்து நிலை 1-க்கு பதவி உயர்வு பற்றியது. காலியாக உள்ள 314 கால்நடை மருந்தகங்களில் நிலை 1-ல் நியமிப்பதென அரசு இன்று முடிவெடுத்துள்ளது என்பதை மெத்த மகிழ்ச்சியுடன் அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதனால் 1,953 இரண்டாம் நிலை கால்நடை ஆய்வாளர்களில் 314 பேர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள் ஆடுவளர்ப்புத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத் திட்டம், சிறப்புக் கால்நடை பராமரிப்புத் திட்டம், வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய பல்வேறு திட்டங்களிருக்கின்றன. விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு முழுவதும் 7 மாவட்டங்களில் 39 ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கங்களின் மூலம் 2,029 விவசாயிகளுக்கு ரூ. 50.57 இலட்சம் ஏற்கனவே கொடுக்கப் பட்டுள்ளது. இது தவிர, சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் உதவியுடன், பல மாவட்டங்களில், வட ஆற்காடு, தர்மபுரி, சேலம், இராமநாதபுரம், திருநெல்வேலி—செம்மறியாடுகள் வழங்கப்பட்டு, தற்சமயம் தீவிரமாக, நன்கு செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் வாணியம்பாடியிலே மருத்துவமனை இயங்கவில்லையென்று குறிப்பிட்டார்கள். It is already functioning. அவர்கள் குறிப்பிட்டது புதுக் கட்டிடம் இல்லையென்று குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால், சென்ற நிதிநிலை அறிக்கையின்

பொழுது அந்த மருந்தகம் தரம் உயர்த்தப்பட்டு, மருத்துவமனையாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்த மருத்துவமனை இப்பொழுது பழைய கட்டிடத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது. கூடிய விரைவிலே வேறு கட்டிடத்திற்கு அந்த மருத்துவமனையை மாற்றியமைக்கவிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் பல குறைகளை எடுத்துச் சொன்னார்கள். அவைபற்றி நிச்சயமாகக் கவனித்து நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். செயற்கைக் கருத்தரிப்பு நிலையம் ஒன்று வேண்டுமென்று கேட்டார்கள். வாணியம்பாடி தொகுதியைச் சார்ந்த ஆம்பூரில் ஏற்கனவே செயற்கைக் கருத்தரிப்பு நிலையம் இருப்பதாலே, புதிதாக ஒன்று ஏற்படுத்த முடியாது என்பதை வருத்தத்தோடு அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே, மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் சொன்னார்கள், வரதராஜன் அவர்களும் சொன்னார்கள். நகராட்சி எல்லையிலே செயற்கை கருத்தரிப்பு ஊசி போட ரூ. 5-ம் கிராமங்களிலே ரூ. 2-ம் வாங்குகிறார்கள். அதைக் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். சென்ற தடவை கூடச் சொன்னோம் என்று சொன்னார்கள். அந்த ரூ. 5 ரூ. 2-ஐ, ரூ. 1 ஆகக் குறைக்கும் செயற்குறிப்பு அரசின் தீவிரப் பரிசீலனையில் இருக்கிறது என்பதைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, மருந்துகள் கிடைக்கவில்லையென்று சொன்னார்கள். மருந்துகள் தாராளமாகக் கிடைப்பதற்காக, மருந்துகள் மற்றும் உபகரணங்கள் வாங்க, குழு அமைத்து, அங்கீகரிக்கப்பட்ட விலையிலே, அங்கீகரிக்கப்பட்ட கிடங்குகளிலேயிருந்தும், மத்திய அரசு கிடங்குகளிலேயிருந்தும் மருந்துகள் வாங்கப்பட்டு அனைத்து மருந்தகங்களுக்கும் நாங்கள் சீராக வழங்குகின்றோம் என்பதை இங்கே எடுத்துச் சொல்லவிரும்புகிறேன்.

இன்னும் சில பிரிவுகளிலே, மொபைல் டிஸ்பென்சரி மூலம், நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி மூலம், கால்நடைகள் நோய்வாய்ப்பட்டுள்ளதைப் பற்றி, கால்நடை மருத்துவர்களுக்குச் செய்தி வந்தவுடனே, அந்த இடங்களுக்குச் சென்று தக்க நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் இங்கே இருந்து, வெளி மாநிலங்களுக்கு—குறிப்பாக, கேரள மாநிலத்திற்கு கால்நடைகள் அனுப்பப்பட்டு, அங்கிருந்து மாமிசமாக, வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது என்று சொன்னார்கள். மற்ற மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிற கால்நடைகளில் 90 சதவிகிதம், வயதானவைகளும், பாதிக்கப்பட்டவைகளும்தான். அவைகளைத்தான் நாம் அனுப்புகிறோம். ஏனென்றால், இந்த மாநிலத்திலே பசுவதைத் தடுப்புச் சட்டம் இருப்பது இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும் என்று நான் கருதுகிறேன். இந்த மாடுகளை இங்கு வைத்திருப்பதால், தீவனப் பற்றாக்குறை வேறு ஏற்படுகிறது.

மேலும், மாநிலங்களைப் பொறுத்தவரையிலே, ஒரு மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்குக் கால்நடைகள் ...யாக தடை இருக்கக் கூடாது என்று மத்திய அரசுச் சட்டம் இருப்பதால் அங்கே அனுப்பப்படுகின்றன. அங்கே அனுப்பப்படுபவையும், தரம் குறைந்த, வயதானவை என்று நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மாட்டுத் தீவன விலையைக் குறைக்க வேண்டுமென்று ...மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்களும் சொன்னார்கள், ...முருகேசன் அவர்களும் சொன்னார்கள். கால்நடைப் பராமரிப்புத் ...துறை, கால்நடை தீவனத்தைத் தயாரிப்பதில்லை. என்றாலும், ...சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியிலே கால்நடை ...தீவனம் பற்றி ஆராய்ச்சி நடத்துகிறார்கள். சுலபமாக, திப்பி, ...மொலேசஸ் இவைகளைக் கொண்டு, தரமான தீவனத்தைக் ...குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய அக்கல்லூரியில் ஆராய்ச்சி ...நடைபெற்று வருகிறது. அத்தோடு, முந்திரிப் பழம், கடல் பாசி ...இவைகளைக் கொண்டு தீவனம் செய்ய ஆராய்ச்சி நடைபெறுகிறது ...என்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் பல கருத்துக்களை ...என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். அவற்றை நிச்சயமாகத் ...தீவிரமாகப் பரிசீலனை செய்வேன் என்பதை நான் தெரிவிக்க ...விரும்புகிறேன்.

[செல்வி பி. டி. சரஸ்வதி] [1978 மார்ச் 7

1978-79-ல் தீவிரமாக, இந்த இலாகாவைச் சேர்ந்தவர்கள் செயல்பட வேண்டுமென்பதற்காக, தர்மபுரியிலும், தஞ்சாவூரிலும் உள்ள கால்நடை மருத்துவ மனைகளைப் பிரதம மருத்துவ மனைகளாக உயர்த்த இருக்கிறோம்.

[பிற்பகல் 12.30]

அதைப்போல வடார்க்காடு மாவட்டத்தில் கலசபாக்கம் ஒன்றியத்தில் உள்ள ஆதமங்கலம் கிராமத்திலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள தியாகதுர்க்கம் தியாக துருவத்திலும், திருச்சி மாவட்டத்தில் உள்ள திருமானூர் ஒன்றியத்தில் உள்ள கீழ்ப்பழூர் கிராமத்திலும், மதுரை மாவட்டத்தில் உள்ள வாடிப்பட்டி ஒன்றியத்திலுள்ள சி. புதூர் கிராமத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கடலாடி ஒன்றியத்தில் உள்ள சிக்கல் கிராமத்திலும், இராமநாதபுரம் மாவட்டம் கல்லல் ஒன்றியத்தில் உள்ள குன்றக்குடி கிராமத்திலும், சேலம் மாவட்டம் இடப்பாடி ஒன்றியத்திலுள்ள கூறட்டுப்புதூர் கிராமத்திலும், கோவை மாவட்டத்தில் சத்தியமங்கலம் ஒன்றியத்தில் உள்ள காசிப்பாளையம் கிராமத்திலும், கோவை மாவட்டத்தில் பெருந்துறை ஒன்றியத்தில் உள்ள காஞ்சிக்குடி என்ற கிராமத்திலும், தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் ஒன்றியத்தில் உள்ள சுவாமிமலை கிராமத்திலும், கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நெல்லை மாவட்டத்தில் உள்ள பாளையங்கோட்டையிலும் செங்கற்பட்டு மாவட்டத்தில் சிட்லபாக்கத்திலும், கோவை மாவட்டத்தில் கோபிசெட்டிப்பாளையத்திலும், சேலம் மாவட்டத்தில் நாமக்கல்லிலும், வடார்க்காடு மாவட்டத்தில் ஆரணியிலும் கால்நடை மருந்தகங்களை, கால்நடை மருத்துவ மனைகளாக உயர்த்தவிருக்கிறோம்.

அடுத்து கால்நடை நோய்ப் புலன் ஆய்வுப் பிரிவுகள் கடலூரிலும், கோயம்புத்தூரிலும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் திருச்சியிலே செயல்படுத்தப்படும்.

அடுத்து, சமூக நலத் துறையைப் பொறுத்த அளவில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், வருத்தத்தோடு, அருமைச் சகோதரிகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், விதவைகள்



1978 மார்ச் 7] [செல்வி பி. டி. சரஸ்வதி]

இவர்களைப் பற்றி மெத்த வருத்தத்தோடு எடுத்துச் சொன்னார்கள். உடல் ஊனமுற்றவர்களைப் பற்றியும் வேதனையோடு எடுத்துச் சொன்னார்கள்.

தமிழக அரசு அனாதை விதவைகளுக்காக சில மறுவாழ்வுத் திட்டங்களைத் தீட்டியுள்ளது. அவைகளில் முக்கியமானவை தையல் இயந்திரங்கள் வழங்குதல், விதவைத் திருமணம் புரிந்து கொண்ட தம்பதிகளுக்கு ரூ. 5,000 மதிப்புள்ள 7 வருட கால சேமிப்புப் பத்திரங்கள் வழங்குதல் ஆகும்.

20 வயதில் இருந்து 40 வயது வரை அனாதை விதவைகள் தாமே சொந்தமாக தொழில் செய்து வாழ வழி செய்யும்பொருட்டு அவர்களுக்கு தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

மேலும் இங்கே பல உறுப்பினர்கள் குறிப்பாகச் சொன்னார்கள். அந்த வாய்ப்பு 40 வயதுக்கு பிறகுதான் இருக்கிறது என்று சொன்னார்கள். இதற்கு முன்னால் அது 45 வயதாக இருந்தது. இப்போது 40 வயதாக வயது வரம்பைக் குறைத்திருக்கிறோம். 0 வயதிலிருந்தே கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதற்காகத்தான் அந்த சகோதரிகளுக்குப் பயன்படுகின்ற வகையில் புலன் பெறத்தக்க வகையில் பல குடிசைத் தொழில்களையும் கைத்தொழில்களையும் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்கிறோம். கறவை மாடுகள் வழங்குதல் கோழிப் பண்ணை வைக்க உதவுதல், இவைகளுக்கு தேசியமயமாக ஆக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெற ஏற்பாடு செய்கிறோம். 1978-79 இல் 0 வயது உடைய விதவைகளும் இச்சலுகையை பெறுவார்கள். இதுவரை 10,000 பெண்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். 1978-79 இல் மேலும் 5,000 பேர்கள் பயனடைவார்கள்.

அரசாங்க வேலைக்கு அரசு பணியாளர் தேர்வுக் கழகம் மூலமோ அல்லது வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மூலமாகவோ எல்லோரும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். விதவைகளும் இந்த தேர்வின் மூலமே வேலையில் அமர்த்தப்படுவார்கள். எனினும் அநாதை விதவைகளை கடைநிலை ஊழியர்களாக (எஸ். ஜி. ஜி. எஸ்.

(L. G. G. S.) நியமிக்க அவர்களுக்குத் தனிச் சலுகை கொடுக்கலாம் என்ற குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

உடல் ஊனமுற்றவர்களைப் பற்றி வேதனையோடு எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு அரசுப் பொறுப்பிலே பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக பொதுப் பணிகளுக்கு மேல் வயது வரம்பினை 10 வருடங்களுக்கு உயர்த்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தட்டச்சர்கள், தொலைபேசி இயக்குபவர், அனுப்புகை எழுத்தர் மற்றும் விசைத் தூக்கி இயக்குபவர் போன்ற பதவிகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்குங்கால் உடல் ஊனமுற்றோர் மனுக்களைப் பரிவுடன் கவனிக்கும்படி நியமன அதிகாரிகள் அறிவுறுத்தப் பட்டுள்ளார்கள்.

இது தவிர, உடல் ஊனமுற்றோருக்கென சிறப்பு வேலை வாய்ப்பகங்கள் சென்னை, மதுரை, கோவை ஆகிய நகரங்களில் நிறுவப்பட்டு, செம்மையாகப் பணி செய்து வருகின்றன.

மாநிலத்திலுள்ள, வேலைவாய்ப்பகங்களின் மூலம் நியமனங்கள் செய்யப்படும் காலியிடங்களைப் பூர்த்தி செய்வதில் உடல் ஊனமுற்றோருக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலகத்திலேயும் கூட உடல் ஊனமுற்ற 7 மின்விசைத் தூக்கி இயக்குபவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 40 கண் பார்வை யற்ற பெண்கள் தங்கி வேலை பயிலும் இல்லம் ஒன்று சென்னையில் துவங்கப்பட உள்ளது. பயிற்சிக்குப் பிறகு இவர்கள் அங்கேயே உள்ள தொழிற்பட்டறையில் வேலையில் அமர்த்தப்படுவர்.

நவீன பயிற்சி மற்றும் உற்பத்தித் தொழிற்பட்டறை ஒன்று 30 லட்சம் ரூபாய் செலவில் சென்னைக்கருகில் உள்ள முட்டுக்காட்டில் துவங்கி, நல்லமுறையில் நடைபெற்று வருகின்றது. இதுவரை இந்தத் தொழில் பட்டறையில் 28 உடல் ஊனமுற்றோர் பயிற்றுவிக்கப்பட்டு அங்கேயே நிரந்தரமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும் தற்போது 43 உடல் ஊனமுற்றோர், பயிற்சி பெற்று வருகின்றனர்,



கண் பார்வையற்றவர்களை பள்ளி ஆசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள், பேராசிரியர்கள், விளக்குநர், உதவி ஆசிரியர் போன்ற பதவிகளுக்கு நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பளிக்கும் பொறுப்பினில் அரசு பெரும் பங்கு பெற்றாலும், முழுப் பொறுப்பினையும் அரசு ஏற்றுக்கொள்வதென்பது கடினமானது. தனியார்த் துறைகளும் இதில் முக்கிய பங்கினை வகிக்க வேண்டும். உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பளிக்க முன்வருமாறு தனியார்த் துறை நிறுவனங்களுக்கு அவ்வப்போது அரசினால் வேண்டுகோள் விடப்பட்டு வருகின்றது. உடல் ஊனமுற்றோர் பலர் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் நல்ல முறையில் நியமனம் பெற்று இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சியோடு எடுத்துக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் குழந்தைகளுக்கு பாலர் பள்ளி ஏற்படுத்தவேண்டுமென்று சொன்னார்கள். அவை மாநிலம் பூராவும் ஏற்படுத்தப்பட்டு இயங்கிக்கொண்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் பெண்கள் வேலைக்குச் செல்கிற நேரத்தில் குழந்தைகளை விட்டுச்செல்ல குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். சென்னையைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட காப்பகங்கள் தனியார் நிறுவனங்கள் மூலமாக நிறைய இருக்கின்றன. அதற்கு மத்திய அரசாங்கம் 90% செலவை மானியமாக அளித்து வருகிறது என்பதையும் உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வெகு சீக்கிரத்தில் தலைமைச் செயலகத்தில் அப்படிப்பட்ட ஒரு காப்பகம் திறக்க இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் ஆதரவற்ற குழந்தைகளை பராமரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டார்கள். தமிழ் நாட்டில் தற்போது ஏறத்தாழ 43 நிறுவனங்கள் அனாதைக் குழந்தைகளை பராமரித்தலுக்காக அத்திட்டத்தின்

கீழ் உதவி பெறுகின்றன. பராமரிப்பு செலவு வகையிலும் மற்றும் கட்டிட செலவு வகையிலும் ஆகும் மொத்த செலவில் 90% மத்திய அரசு மானியமாக அந் நிறுவனங்களுக்கு வழங்குகிறது. இத்திட்டம் மாநில அரசின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய அரசு மொத்தமாக ஒவ்வொரு காலாண்டிற்கும் வழங்குகின்ற நிதியினின்று மாநில அரசு அந்நிறுவனங்கள் ஒவ்வொன்றுக்கும் நிதி உதவி அளித்து வருகிறது. இவ்வகையில் நடப்பு ஆண்டில் ரூ. 21,45,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் தமிழ் நாடு அரசின் உதவியுடன் கோயில்கள் அறநிலையங்கள் நடத்தும் 36 கருணை இல்லங்கள், இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் கண்காணிப்பில் நல்ல முறையில் இயங்குகின்றன. அவற்றிற்காகும் செலவில் 25% அல்லது (நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு) ரூ. 12.50 வரை மானியமாக இத்துறை மூலம் வழங்கப்படுகிறது.

பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு பற்றிச்சொன்னார்கள். அந்தப் பிரச்னை பற்றி முடிவு எடுப்பதற்காக நான் ஏற்கனவே அதிகாரிகளை கலந்து ஆலோசித்து இருக்கிறேன். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் இது பற்றி சொல்லியிருக்கிறேன். அதைத் தொடர்ந்து, சீப் மெட்ராபாலிடன் மாஜிஸ்டிரேட் அவர்களிடத்திலும் பிச்சைக்காரர்களாக வீதியில் இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிற நோக்கில் அவர்களை, பிச்சைக்காரர்கள் இல்லத்திற்கு தண்டனை என்ற பெயரில் அனுப்ப வேண்டும் என்று கேட்டதற்கிணங்க, இப்போது சைதாப்பேட்டை கோர்ட்டில் பிச்சைக்காரர்கள் விசாரிக்கப்படும் வழக்குகளும் நடந்து கொண்டு இருக்கிறது.

நான் மெட்ரோபாலிடன் மாஜிஸ்டிரேட் அவர்களிடம் கேட்டு இருக்கிறேன். அப்படிப்பட்ட வழக்குகள். ஜியார்ஜ் டவுன் வட்டத்தில் உள்ள கோர்ட்டிலும், எழும்பூர் கோர்ட்டிலும் விசாரிக்கப்படவேண்டும் என்று. பிச்சைக்காரர்களுக்கு சட்டத்தின் மூலம் தண்டனை கொடுத்து, அவர்களை அந்த இல்லங்களுக்கு அனுப்பி வைத்தால், அங்கே அவர்களுக்கு தகுந்த வேலை கொடுத்து அவர்களை மறுவாழ்வுக்குக் கொண்டு வர அரசு முயற்சி எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மேல்பாக்கத்தில் இருக்கும் இல்லத்தில் இருக்கும் நபர்களின் எண்ணிக்கை 900-லிருந்து 138-க்குக் குறைந்து இருப்பதால், அந்த இல்லத்தில் பிச்சைக்காரர்களை வைத்து, அவர்களுக்கு மறு வாழ்வு தர தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்காக 10 இல்லங்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. அவர்கள் நல்ல சூழ்நிலையில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். வீதியில் இருக்கும் தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள், மற்றவர்களின் கண்ணுக்கு அருவருப் பாக இருப்பவர்கள், இவர்களையும் பராமரிக்க வேண்டிய நடவடிக் கைகளை எடுக்க முடிவு எடுக்க இருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்ததாக, மகளிர் மேம்பாட்டிற்காக, குறிப்பாக, ஆதரவு அற்ற விதைவைகளுக்கும், பிற மகளிருக்கும் உதவி செய்வதற்கு, இந்த அரசு முன்னுரிமை அளித்துள்ளது. கடந்த நிதி நிலை அறிக்கையில் ஆதரவு அற்ற விதவைகளுக்காகச் சில புதிய திட்டங்களைக் கொண்டு வந்தோம். இவை தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

தற்போது 45 வயதிற்கு மேற்பட்டுள்ள, ஆதரவற்ற விதவை களுக்கு மட்டுமே உதவித் தொகை கொடுக்கப்பெறுகிறது. இந்த வரம்பு 40 வயதாகக் குறைக்கப்பட்டு, ஆண்டொன்றுக்கு 12 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 5,000 பேருக்கு உதவித் தொகை வழங்கப்படும் என்று ஏற்கெனவே சொன்னேன். சேலத்தில் பணி இல்லம் ஒன்று தொடங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளது. தஞ்சாவூரிலும், கடலூரிலும் உள்ள பணி இல்லங்களில் பள்ளி இறுதித் தேர்வுக்கு இரண்டாண்டு படிப்பு ஏற்படுத்தப் படும். கன்னியாகுமரியிலும், மதுரையிலும் தையல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

சமூக நலத் துறையின் கீழ், மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் சாக்கட்டி தயாரிக்கும் தொழிற்கூடங்கள் மூன்றும், மெழுகுவர்த்தி தயாரிக்கும் தொழிற்கூடங்கள் மூன்றும்

[செல்வி பி. டி. சரஸ்வதி] [1978 மார்ச் 7

தொடங்கப்படும். நெல்லை மாவட்டத்தில் பாளையங்கோட்டையி லும், குமரி மாவட்டத்தில் நாகர்கோயிலிலும், தஞ்சை மாவட்டத் தில் வேளாங்கண்ணியிலும் மெழுகுவர்த்தித் தொழிற்சாலை ஏற் படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

முகவை மாவட்டத்தில் பரமக்குடி, தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம், மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் ஆகிய இடங் களில் சாக்கட்டி தயாரிக்கும் தொழிற்கூடங்கள் ஏற்படுத்தப் படும்.

குழந்தைகளுக்கான சத்துணவு, சுகாதாரக் கவனிப்பு, பாலர் கல்வி ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குழந்தைக் காப்ப கங்கள் நம் மாநிலத்தில் ஏறக்குறைய 3,000 இருக்கின்றன. அடுத்த ஆண்டில், மேலும் 200 குழந்தைக் காப்பகங்களை ஏற்படுத்த நிதி ஒதுக்கியுள்ளோம்.

உடல் ஊனமுற்றோர்களின் மறுவாழ்வுக்கான பல்வேறு திட்டங் களுக்கு வரவு-செலவுத்திட்டத்தில் மொத்தம் 83 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 300 பள்ளிச் சிறுர்களுக்கு காது கேட்க உதவும் கருவிகள் வழங்குதல், உதவி பெறுவதற்கு தகுதியுடைய 500 உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டி வழங்குதல் ஆகிய திட்டங்களுக்கான நிதி ஒதுக்கங்கள் இதில் அடங்கும்.

பேசுவதிலும் கேட்பதிலும் ஊனமுற்றோருக்கு சிகிச்சையும் பயிற்சியும் அளிக்க நிலையம் ஒன்று சென்னையில் வரும் ஆண்டில் நிறுவப்படும்.

கண்பார்வை இல்லாதவர்களுக்கு நெசவுத் தொழிலில் பயிற்சி அளித்து அவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க நெசவுக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று கோவையில் ஏற்படுத்தப்படும் இத்திட்டத்தின் கீழ் 100 விழி இழந்தோர் பயன்பெறுவர்.



1978 மார்ச் 7] [செல்வி பி. டி. சரஸ்வதி]

1978-79-ல் மூன்று பணி இல்லங்களுக்கும் 3 தமிழ் தட்டச்சுப் பொறியும், 2 ஆங்கில தட்டச்சுப் பொறியும் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. கடலூரில் பணி இல்லக் கட்டடத்தில் வகுப்பு அறைகளுக்காக ரூபாய் 1.05 லட்சம் செலவில் கூடுதலான அறைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 150 சிறுர் பள்ளிகள் 1978-79-ல் தொடங்கப்பட இருக்கின்றன. இதுவன்றி மேலும் 50 சிறுர் பள்ளிகள் அரிசனக் காலனிகளில் திறக்கப்படவிருக்கின்றன. மலைவாழ் மக்களுக்கு 30 சிறுர் பள்ளிகள் திறக்கப்படும்.

உலக வங்கி நிதியுடன் செயல்படும் சென்னை நகர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1978-79-ல் 70 சிறுர் நிலையங்கள் தொடங்கப்பட உள்ளன.

நான் இங்கே கூறிய கருத்துக்களையும் விளக்கங்களையும் மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டு, பலரும் இங்கே குறிப்பிட்டதைப்போல இது விவசாயிகளின் உற்ற நண்பனை கால்நடைகள், ஆடுகள் பற்றிய மானியமாக இருப்பதால் ஜீவ காருண்யத்தோடு தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அதைப்போல சமூக நலனைப் பொறுத்த அளவில் அருமைச் சகோதரிகள், விதவைகள், ஆதரவற்ற, திக்கற்ற சகோதரிகள், உடல் ஊனமுற்றவர்கள், காலை இழந்தவர்கள், கண்ணை இழந்த வர்கள், வயோதிகர்கள், தாய் முகம் தெரியாத, தந்தை முகம் தெரியாத அனாதைக் குழந்தைகள், ஆதரவற்ற வயது முதிர்ந்த வர்கள் பற்றிய மானியமாக இருப்பதால் அதிலும் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல், பாசத்தோடு, பண் போடு, அன்போடு, அக்கறையோடு, ஆர்வத்தோடு, அனுதாபத் தோடு அவர்களுக்கு நற்பணியாற்ற வேண்டுமென்ற நல்லெண் ணத்தோடு திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியங்களை நிறை வேற்றித் தரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களை மெத்தப் பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது. அடுத்து வாக்கெடுப்பு.

திருவாளர்கள் க. வேணுகோபால், ரெ. வீ. சவுந்திரராஜன், மு. அம்பிகாபதி, வி. கே. கோதண்டராமன், எ. சுவாமிதாஸ்,

[1978 மார்ச் 7

ரா. மார்க்கபந்து, எம். ஏ. லத்தீப் ஆகியவர்கள் மானியக் கோரிக்கை எண் 22-க்குக் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள **கேள்வி:** மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,87,59,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திருவாளர்கள் சு. பாலன், ரெ. வீ. சவுந்திரராஜன், எம். அண்ணாமலை, எம். ஆறுமுகம், சோ. அழகர்சாமி, ரா. மார்க்கபந்து, எம். ஏ. லத்தீப் ஆகியவர்கள் மானியக் கோரிக்கை எண் 30-க்குக் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : "மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,92,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(இ) கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத்தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,22,22,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."



1978 மார்ச் 7]

**திரு. ஏ. இராமலிங்கம்:** தலைவரவர்களே, தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில், மருதூர் கிராமத்தில், வள்ளல் இராமலிங்க அடிகளார் பிறந்த இடமானதால் வெளி மாவட்டங்களில் இருந்து பக்தர்கள் நிறைய அவ்விடத்தை கண்டு தரிசிக்க வருவதால், வரும் பக்தர்கட்கும், பயணிகட்கும் தங்குவதற்கு இடவசதி இல்லாததால் சுற்றுலா துறை மூலம் சிறு தொகை செலவில் தங்கும் விடுதி அமைத்தல் குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,22,22,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்:** தலைவரவர்களே, சுற்றுலாப் பயணிகளுக்குக் கூடுதல் வசதிகள் செய்து கொடுப்பது பற்றியும், சுற்றுலாப் பயணிகள் மகிழ்விடங்கள் அதிகரிக்க வேண்டும் என்பது பற்றியும் விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,22,22,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. என். வரதராஜன் :** தலைவரவர்களே, வீரபாண்டிய கட்டபொம்மன் இளவல் ஊமைத்துரையின் பெயர் விளங்கும் திண்டுக்கல் மலைக் கோட்டையில் கட்டபொம்மன் வரலாற்றை யும், திப்புசுல்தான் வரலாற்றையும் சித்தரிக்கும் கண்காட்சியை நிறுவ மத்திய அரசின் அனுமதி பெற வேண்டுவதுபற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 47-செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,22,22,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU M. A. LATHEEF : Sir, to discuss the need to have the films for public exhibition freed from obscene items opposed to public policy and decency, I move—

'That the allotment of Rs. 1,22,22,000 under Demand No. 47—Information, Tourism and Film Technology be reduced by Rs. 100'.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மானிய கோரிக்கையின் மீது விவாதிப்பதற்கு செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பப் பிரிவினுடைய கொள்கை விளக்கக் குறிப்பு * ஒன்று அச்சடிக்கப் பெற்று அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. தமிழில் உள்ள அந்த அறிக்கையை இந்த அவையில் நான் படித்ததாகக் கருதி அவை அனைத்தையும் அவை நடவடிக்கைக் குறிப்பேட்டில் பதிவு செய்யுமாறு வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் விவாதத்திலே தருகிற கருத்துக்களைப் பரிசீலித்து இறுதியில் நான் என்னுடைய கருத்தைத் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் தயவு செய்து சுருக்கமாக முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். கணேசன்:** பேரவைத் தலைவரவர்களே, செய்தி, சுற்றுலாத் துறை மானியக்கோரிக்கையின் மீது என்னுடைய கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகிறேன்.

இன்றைய தினம் செய்தி சுற்றுலாத் துறை ஊழல் நிறைந்து இருக்கிற, ஆளும் கட்சியின் நிர்வாகக் குறைபாடுகள் மலிந்து இருக்கின்ற, ஒரு துறையாகச் செயல்பட்டு வருகிறது என்பதை நான் வருத்தத்தோடு இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

*429-444-ம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப் பெற்றுள்ளது.





இன்றைக்குச் செய்தித் துறையின் மிகப் பெரிய அந்தஸ்திலே இருக்கக்கூடிய இயக்குநராக இருக்கக் கூடியவர்கள் ஒருதலைப் பட்சமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். நெருக்கடி காலத்திலே வேண்டுமென்றே பத்திரிகைத் துறையிலே அத்துமீறி செயல்பட்டார், இன்னும் சொல்லப்போனால் அண்ணா அவர்களுடைய கொள்கைக்கு முரண்பட்ட எண்ணத்தைக் கொண்டிருப்பவர், குறிப்பாகச் சொல்லப்போனால் கலைவாணர் அரங்கம் என்ற பெயரையே மாற்ற வேண்டுமென்ற கருத்துக்கு உடன்பாடாக இருந்த ஒருவர், இன்றைக்குச் செய்தித் துறையிலே மிகப் பெரிய அந்தஸ்த்திலே இயக்குநராக இருந்துகொண்டிருப்பது வருந்தத் தக்கது. அவர் உடனடியாக மாற்றப்பட வேண்டுமென்று நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்று முன் தினம் மாண்புமிகு செய்தி, சுற்றுலாத்துறை அமைச்சரவர்கள் இதே மன்றத்திலே சொன்னார்கள்—பத்திரிகைத் துறையிலே பாரபட்சம் காட்டப்படுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்—விளம்பரம் கொடுப்பதில் பத்திரிகைகளின் விற்பனை, பத்திரிகைகளின் தரம் ஆகியவற்றைப் பார்த்துப் பத்திரிகைகளுக்கு விளம்பரம் கொடுப்பதாக மாண்புமிகு செய்தி, சுற்றுலாத் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் உங்கள் மூலமாக அமைச்சரவர்களைக் கேட்க ஆசைப்படுகிறேன். 'அலை ஓசை' என்ன பாவம் செய்திருக்கிறது? 'அலை ஓசை' க்கு விளம்பரங்களை அரசு கொடுக்க முன்வரவேண்டுமென்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில் செய்தித் துறையின் வாயிலாக நேற்றைய தினம் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சரவர்களுடைய கடிதத்தை இங்கே படித்தார்கள். செய்தித் துறையின் மூலமாக அது ஸ்டென்சில் செய்யப்பட்டு நிருபர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் எந்தத் துறையின் மூலமாக இது வழங்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை. செய்தித் துறையின் மூலமாகப் பல செய்திகள் நிருபர்களுக்கு அளிக்கப்படுகிறது. நிதியமைச்சரவர்கள் படித்த

கடிதத்தின் நகல் நிருபர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இது
எந்தத் துறையிலே இருந்து கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட
வில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50 மணி)

ஆனால் நம் நிதி அமைச்சர் அவர்கள் படித்த கடிதத்தின் நகல்
நிருபர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எந்தத் துறை
அதைக் கொடுத்தது என்பதற்கு இதில் எந்தவிதமான குறிப்பு
இல்லை என்பதை மெத்த வருத்தத்தோடு குறிப்பிட்டுச் சொல்ல
கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இங்கே ஊழல், ஊழல் என்று
கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பற்றி வானளாவ
பேசப்பட்டு வருகிறது. ஆனால் இன்று ஆளும் கட்சியில் இருக்க
கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்—நிருப
களுக்கு பஸ் பாஸ் கடந்த ஆட்சிக்காலத்திலே கொடுக்கப்பட்டிரு
கிறது—ஆனால் நெடுந்தூர பேருந்துகளில் செல்வதற்கும் ப
பாஸ் கொடுக்க வேண்டும் என்று இந்த மன்றத்தில் இருக்கி
எதிர்கட்சித் தலைவர்கள் அத்தனை பேர்களும் கையெழுத்து இட்
அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருந்தும் இன்னும் நிருபர்
களுக்கு அத்தகைய பாஸ் வழங்கப்படவில்லை. நிருபர்களுக்கு
வழங்கப்படும் பஸ் பாஸ் பொறுத்தவரையில், இன்றைய ஆளும்
கட்சிப் பத்திரிகையின் நிருபராக இருந்த ஒருவர் அவர்
உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவி
யாளராக ஆகிவிட்ட பிறகும்—ஏப்ரல் 30-ஆம் தேதி வரையில்
அந்த பஸ் பாஸின் காலம் இருக்கிறது—அதைத் தவறாக இன்று
உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், அரசாங்க உத்தியோகத்
திற்கு சென்றுவிட்ட பிறகும். அதே போல் தி.மு.க. ஆட்சிக்
காலத்தில், தி.மு.க. அரசு இருந்த காலத்தில் செய்யப்பட்டிருந்தால்
[illegible] ஊழல் அல்லவா என்றெல்லாம் இன்றுள்ள ஆளும்கட்சித்



தரப்பினரால் கேட்கப்பட்டிருக்கக்கூடும். ஆனால் தென்னகம்
பத்திரிகையில் நிருபராக இருந்த பாண்டியன் என்பவர் இன்றைய
தினம் உள்ளாட்சித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளராக
ஆக்கப்பட்டும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பாஸை-பாஸ்
413 இன்று அவர்கள் அரசாங்க அலுவலராகப் பணிபுரிந்து
கொண்டிருக்கிறார்கள் என்றாலும் இன்னும் அந்தப் பாஸை
தவறான முறையில் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்
என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன்.
அதேபோல் ஆளும்கட்சிப் பத்திரிகைகளைச் சார்ந்திருக்கிற நிருபர்
கள் அரசாங்கத் தொலைபேசியை உபயோகித்துக் கொண்டிருக்
கிறார்கள் என்று இந்த மன்றத்தில் கூட பல மாண்புமிகு
உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். கடந்த காலத்தில் கழக
ஆட்சியில் தொலைபேசி தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது
என்றெல்லாம் குற்றஞ்சாட்டிப் பேசப்பட்டிருக்கிறது. ஆனால்
இன்று ஆளும்கட்சியில் இருப்பவர்கள்கூட, அந்தக் கட்சிப்
பத்திரிகை நிருபர்களாக இருக்கக் கூடியவர்கள்
அரசாங்கத் தொலைபேசியைப் பயன்படுத்திச் செய்தி
களைத் தருகிற விந்தையை நாம் இன்று கண்டு
கொண்டிருக்கிறோம் என்பதை மெத்த வருத்தத்தோடு மாண்பு
மிகு அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன். இன்னும், இந்த சட்டசபையில் நிருபர்களுக்கு இடங்கள்
ஒதுக்கப்படுகின்றன. தற்சமயம் அது மியூசிக்கல் செயர் போன்ற
தொரு நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறது. இங்கே பழம்
பெரும் பத்திரிகைகளாக இருக்கக்கூடிய ஹிந்துஸ்தான் டைம்ஸ்,
டைம்ஸ் ஆப் இந்தியா போன்ற பத்திரிகைகளுக்கு ஒரு குறிப்
பிட்ட நாற்காலி, இந்த இடத்தில்தான் அமரவேண்டும் என்று
வரையறுத்துத் தரப்படவில்லை. ஆளும் கட்சியைச் சார்ந்திருக்கக்
கூடிய பத்திரிகை நிருபர்களைக் கொண்ட ஒரு குழு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்
கணேசன் அவர்கள் எழுப்புகிற பிரச்னைக்கும் சுற்றுலா செய்தித்
துறைக்கும் சம்பந்தமேயில்லை. இது பேரவைத் தலைவர் துறை
சம்பந்தப்பட்ட விவகாரம். அதைப் பற்றிப் பேசக்கூடாது.

[1978 மார்ச் 7

திரு. எஸ். கணேசன்: திரைப்படப் பிரிவு இந்தத் துறையில் இயங்கி வருகிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் மீது இன்றைக்கு ஆளும் கட்சித் தரப்பினராக இருப்பவர்கள் சாட்டிய குற்றச்சாட்டு, அரசால் வெளியிடப்படுகிற செய்திப் படங்கள் அல்லது தமிழரசு பத்திரிகையாக இருந்தாலும் அல்லது செய்தித் துறையிலுள்ள இன்னின்ன பிற வெளியீடுகளிலும் அன்றைக்கு முதல் அமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் படங்களே அவற்றில் முழுக்க முழுக்க வந்திருக்கிறது என்ற குற்றச்சாட்டு இந்த மன்றத்திலும் வெளியேயும் பரவலாக எடுத்துப் பேசப்பட்டது. ஆனால் இன்றைய நிலை என்ன? நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் படம்தான் இன்று எல்லாச் செய்தி திரைப் படங்களிலும் இருந்து கொண்டிருக்கிறது. உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், இந்த வார தமிழரசு பத்திரிகையில்

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

17 பக்கங்களில் நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் திருவுருவப் படம்தான் அதில் இருக்கிறது. இந்த நிலைகளை கழக அரசு செய்தது அல்லது கழகம் செய்தது என்று சொல்லிக்கொண்டு இன்று அதை களையப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிற இன்றைய அண்ணா தி.மு.க. அரசு செய்வது உள்ளபடியே வேதனைக்குரிய செயல் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

கழக ஆட்சிபற்றிக் குறிப்பிட்டார்கள். வேண்டியவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றெல்லாம் பரவலாகப் பேசப்பட்டது. ஆனால் இன்று இந்தத் துறையில் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் திரைப்படத் துறையில் மிகுந்த நிபுணத்துவம் பெற்றிருப்பவர்கள். அரசாங்கச் சார்பில் திரைப்பட பிரிவு ஒன்று இயங்கி வந்துகொண்டிரு



8 மார்ச் 7] [திரு. எஸ். கணேசன்]

து. ஆனால் கைத்தறி முன்னேற்றம்பற்றிய ஒரு துண்டுப்படம், ய்திப்படம் வெளியிட தனியார் ஒருவருக்கு அதுவும் ஆளும் சியைச் சார்ந்திருக்கக்கூடிய, அதிலும் அரசில் பணி புரிந்து ாண்டு இருக்கக்கூடிய ஒருவரின் இளவலுக்கு—கைத்தறி துணி ற்றி செய்திப் படங்கள் தயாரித்துக் கொடுக்க—தேவதாஸ்க்கு ர்சை குத்திக்கொள்ள வெட்கப்படாது குத்திக்கொண்டிருக்கும் மதாஸின் இளவலுக்கு அந்த வாய்ப்பு கொடுக்கப் டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக ருக்கிறேன்.

செய்தித் துறையில் பணியாற்றிய பி. ஆர். ஓ.-க்கள் விளம்பர தவியாளர்கள், போன்ற இன்ன பிற அலுவலர்கள் எல்லாம் நருக்கடி காலத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தார்கள். தைப் பற்றிக் கேட்டால் காரணம் சொல்வார்கள், இவர்கள் ல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், அது ட்டுமல்ல அவர்களுக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் வேலை ழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்த ராமதாஸ் அவர்கள், பி. சி. ணேசன் அவர்கள் இவர்கள் எல்லாம் யார் என்பதை எண்ணிப் ார்க்கவேண்டும்.

ஆனால் இன்றைக்கு வேலையிழந்து நிற்கக்கூடிய பி. ஆர்.ஓ.-க் கள், பப்ளிஸிட்டி அஸிஸ்டன்ட்கள் இவர்கள் எல்லாம் நேற்றைக்கு. அமைச்சரவர்களைச் சந்தித்திருக்கிறார்கள். அவர்கள் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கூறியிருப்பதாகத் தெரிகிறது. அதனை களாக—இன்றைக்கு வேலையற்றிருக்கும் இந்த பி.ஆர்.ஓ.-களுக்கும், அவர்களோடு சேர்ந்த அலுவலர்களுக்கும் உடனடியாக வேலை தர வேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள் கிறேன்.

கழகத்தினுடைய ஆட்சியில் வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டப்பட்டது என்று சொல்லப்பட்டது. இங்கு செய்தி-சுற் றுலா இலாக்கா சார்பில் பொருட்காட்சி நடத்தப்பட்டது, வழக்கம் போல் அரசுத்துறைகளும் இதில் பங்கு கொண்டிருக்

[திரு. எஸ். கணேசன்] [1978 மார்ச் 7

கின்றன. சாதாரணமாக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இலவச அனுமதிபாஸ் வழங்குவது வழக்கமாக இருந்து வந்தது. இப்போது இந்த பொருட்காட்சிக்குச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

தனியார்களுக்கு வேலை கொடுப்பதில்லை. வேண்டியவர்களுக்கு சலுகை காட்டுவதில்லை என்று மட்டும் சொல்கிறார்கள். ஆனால் இந்தப் பொருட்காட்சியில் டெண்டர்கள் விடப்பட்டன. தங்களுக்கு வேண்டியவர்களுக்கு டெண்டர்கள் கிடைக்கவில்லை என்பதற்காக முறைகள் மாற்றப்பட்டு, சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டிய ஆர்ட் டைரக்டர் ஒருவருக்கு இறுதியில் வேலை கொடுக்கின்ற நிலைமை உருவாக்கப்பட்டது என்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. இதில் ஊழல் மலிந்திருக்கிறது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்ல முடியாதா என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

அதைப்போலவே, தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தின் சார்பில், தியேட்டர்களுக்குக் கடன் உதவி அளிக்கின்ற நிலை இருந்து வருகிறது. இதிலிருந்து திரையரங்கம் அமைப்பதற்கு கடன் கொடுக்கப்பட்டு வருகிறது என்றால், இதற்காக 17% வட்டி விகிதம் வாங்குகிறார்கள். அதிலும் குறிப்பிட்ட காலத்தில் இதற்கு செலுத்தவேண்டிய பணத்தைச் செலுத்தவில்லையென்றால், அதிகப்படியான அளவில், அபராத வட்டி என்ற அளவில், வட்டி போடப்பட்டுச் செலுத்த வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 30 ஆயிரம் ரூபாய் அசல் கொடுக்க வேண்டும் என்று இருந்தால், குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தவில்லை என்றால், இதற்காக வட்டி, அதன் மீது போடப்படும் அபராத வட்டி என்று கணக்கிட்டு 38 ஆயிரம் ரூபாய் வருகிறது. அசல் 30 ஆயிரம் என்றால், வட்டி 38 ஆயிரம் வருகிறது. இப்படியிருக்கின்ற வட்டி விகிதத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பூம்புகாரில் இருக்கின்ற விடுதிகள், பூம்புகார் இவை எல்லாம் பராமரிப்பு மிக மோசமாக இருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது) இந்த பூம்புகார், கட்டபொம்மன் கோட்டை



1978 மார்ச் 7] [திரு. எஸ். கணேசன்]

இந்த இடங்களை எல்லாம் நல்ல முறையில் பராமரிப்புச் செய்வதற்கு இந்த அரசு நாட்டம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டுபேச்சு முடித்துக் கொள்ளப்பட்டது.)

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, மாண்புமிகு கணேசன் அவர்கள் பேசும்போது, தென்னகம் நிருபர் பாண்டியன்—அரசாங்க உத்தியோகத்திற்கு வந்தபின்பும் பாஸ் வைத்துக்கொண்டு தவறாக உபயோகித்துக்கொண்டிருக்கிறார் என்று சபையில் இல்லாத ஒருவரைப்பற்றி ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி பாஸ் இருக்கிறதா. அப்படியிருந்தாலும் அது தவறாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கிறதா அல்லது சரண்டர் செய்தாகிவிட்டதா இதைப்பற்றி எதுவும் நிரூபிக்க முடியாத நிலைமையில் உறுப்பினர் அவர்கள் இப்படிப் பட்ட குற்றச்சாட்டைச் சொல்வது சரிதானா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. எஸ். கணேசன் : பாண்டியன் அவர்கள் வைத்துக் காண்டிருந்த பாசின் நம்பர் 413. அது தவறாகப் பயன்படுத்தப் ட்டிருக்கிறது என்று நான் சொல்லுகிறேன். அது தவறு ப்படிப் பயன்படுத்தவில்லை என்று சொல்வதாக இருந்தால் ரி.

திரு. எஸ். ஆர். இராதா : நான் சொல்வது சபையில் இல்லாத ஒருவரைப் பற்றி, அவர் இப்போது அரசாங்க உத்தியோகத்தில் இருக்கிறார், அவர் பாஸைத் தவறாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று சொன்னால் அதை எந்த ஆதாரத்தைக்கொண்டு சொல்லுகிறார் என்பதை நிரூபிக்க வேண்டும். அப்படிச் சொல்வதாக இருந்தால், பழைய எம்.எல்.ஏ.க்கள் இன்னும் தங்களுடைய பாஸைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லிவிட முடியுமா? பாஸ் இருக்கிறது, அதை தவறாக பயன்படுத்தியிருக்கிறார் என்றால் அதைக் கவனித்துக்கொள்வதற்கு செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்கள் இருக்கிறார்கள் அப்படியிருக்கும்போது சபையில் இல்லாத ஒருவரைப்பற்றிக் குறிப்பிட்டு

[திரு. எஸ். ஆர். இராதா] [1978 மார்ச் 7

அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர் பாஸைத் தவருகப் பயன் படுத்திஞர் என்று சொல்வது முறைதானு? அப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டை எப்படி ஆதாரமில்லாமல் சொல்ல முடியும்?

(பிற்பகல் 1-00)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது மட்டுமல்ல, இந்தச் சபையிலே விளக்கம் அளிக்க முடியாத, சபையிலே உறுப்பினராக இல்லாத ஒருவரைப் பற்றி, அவருடைய பெயரைக் குறிப்பிட்டோ அல்லது அவர்மீது குற்றம்சாட்டுவதோ கூடாது என்ற மரபு நடைமுறையில் இருந்து வருகிறது. அந்த மரபைக் காப்பாற்றுகின்ற வகையில் இங்கே பேசுகின்ற உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**திரு. எஸ். கணேசன்:** அவர் வைத்திருக்கின்ற இந்தப் பாஸை அரசிடம் சரண்டர் செய்யவில்லை. அப்படி இருக்கும்போது, அவர் ஏன் அதைத் தவருகப் பயன்படுத்தி இருக்கக் கூடாது என்பது தான் கேள்வி. அவரிடமுள்ள 413 எண்ணுள்ள பாஸை சரண்டர் செய்தாரா?

**மாண்புமிகு திரு கா. காளிமுத்து:** அது தொலைந்து போன காரணத்திஞல்தான் சரண்டர் செய்யப்படவில்லை. தவருகப் பயன்படுத்திஞர் என்ற குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது தவறு.

**திரு. ஏ. ரகுமான்கன்:** ஆன் எ பாயின்ட் ஆப் எக்ஸ்பிளனே ஷன். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன எக்ஸ்பிள னேஷன்?

**திரு ஏ. ரகுமான்கான்:** அமைச்சர் அவர்கள் தவறான . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசிய உறுப்பினர் சபையில் இருக்கிறார். நீங்கள் அவருக்குப் பதில் சொல்வது தப்பு.



1978 மார்ச் 7]

**திரு. ஏ. ரகுமான்கான்:** என்ன தப்பு? அவர் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதில் சொல்லியிருக்கிருர். அதைப்பற்றித் திருப்பி விளக்கம் சொல்வதற்கு எனக்கு உரிமை உண்டு.

It is in the discretion of the Hon. Minister to refuse to answer. But as a Member I am entitled to ask for an explanation from the Hon. Minister. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எந்த ரூலின்கீழ் இப்போது நீங்கள் எக்ஸ்பிளனேஷன் கேட்கிறீர்கள்? நீங்கள் இப்போது உட்காருங்கள்.

**திரு. ஏ. ரகுமான்கான்:** உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லிய விளக்கத்தின்மீது நான் எக்ஸ்பிளனேஷன் கேட்கிறேன். அப்படிக் கேட்க எனக்கு உரிமை இருக்கிறது. இல்லை என்று சொல்கிறீர்களா? இல்லை என்று சொல்லுங்கள் உட்காருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சட்டசபையிலே ரூலை மட்டும் வைத்துக்கொண்டு பேசக் கூடாது. நடைமுறைகளை வைத்துக் கொண்டும் மரபுகளை வைத்துக் கொண்டும் பேச வேண்டும்.

**திரு ஏ. ரகுமான்கான்:** என்ன மரபு சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எந்த உறுப்பினர் கேள்வி கேட்டாரோ, அந்த உறுப்பினர் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிவிட்டுக் கேள்வி கேட்டார். பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டவுடன் பேச அனுமதித்தேன். அவர் என்ன பாயின்ட் ஆப் ஆர்டரில் சொல்லுகிறார் என்பதைக் கேட்டுவிட்டுத் தானே நான் பதில் சொல்ல முடியும். நீங்கள் எக்ஸ்பிளனேஷன் என்று சொல்லிவிட்டு எழுந்தீர்கள். அதனால்தான் உட்காருங்கள் என்று சொன்னேன்.

**திரு. எஸ். கணேசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய நேர்முக உதவியாளராக அவர் இருக்கின்றார் என்ற முறையிலே நான் இந்தக் குற்றச்சாட்டைச் சொன்னேன். அந்த அமைச்சர் இந்த அவையிலே இருக்கிறார். எனக்கு பதிலளிக்கின்ற வகையிலே, அந்தக் குற்றச்சாட்டிற்குப்

பதில் அளிக்கின்ற வகையிலே ஆளுங்கட்சி உறுப்பினர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதை நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். அமைச்சர் அவர்கள் பதில் கூறியபிறகு, என்னுடைய கட்சியைச் சார்ந்த ஒரு உறுப்பினர் எழுந்து விளக்கம் கேட்பதில் எந்தத் தவறும் இருக்க முடியாது என்று கருதுகிறேன்.

**திரு ஆ. நடராசன்:** ஆளும் கட்சியைச் சேர்ந்தவரை மட்டும் நீங்கள் பேச அனுமதிக்கலாமா?

(இதுசமயம் தி.மு.கவைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். அவர் என்ன பேசினார் என்பது எனக்குத் தெரியும். என்ன பேசினார் என்பதைக் கேட்டபிறகுதான், நான் ரூலிங் கொடுக்க முடியும் என்று ஏற்கனவே சொன்னேன். அவர் பாயின்ட் ஆப் ஆர்டர் ரெயிஸ் பண்ணினார். நீங்கள் எக்ஸ்பிளனேஷன் என்று சொன்னீர்கள். இப்போது எக்ஸ்பிளனேஷன் சொல்ல முடியாது.

**திரு. ஏ. ரகுமான்கான்:** எந்த விதியிலும் அம்மாதிரி கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எனக்கு விதிகள் தெரியும். உட்காருங்கள். நீங்கள் எந்த விதியின்கீழ் பேச உரிமை கேட்கிறீர்கள்?

**திரு ஏ. ரகுமான்கான்:** ஆன் எ பாயின்ட் ஆப் எக்ஸ்பிளனேஷன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் நான் சொன்னேன். எக்ஸ்பிளனேஷன் இப்போது கேட்க முடியாது. நீங்கள் உட்காருங்கள். மரபை ஒட்டி, சந்தர்ப்ப சூழ்நிலையைப் பொறுத்து, எனக்கு ஒரு உறுப்பினரைப் பேச அனுமதிப்பதற்கும், அனுமதிக்காமல் இருப்பதற்கும் உரிமை இருக்கிறது. அப்படித்தான் சொல்லவேண்டும், இப்படித்தான் சொல்லவேண்டும் என்று என்னை கட்டுப்படுத்த முடியாது.



(திரு. எஸ். ஆர். இராதா எழுந்திருந்தார்)

நீங்களும் உட்காருங்கள். நான் இப்போது தீர்ப்பு கூறுகிறேன். திரு. பாண்டியன் அவர்கள் வைத்திருந்த பாலை தவறாக உபயோகப்படுத்தினார் என்ற அந்த வாக்கியங்களை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். *

**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தின் பேரறிஞரும், புரட்சிக் கவிஞருமான அண்ணா, பாரதிதாசன் விழாக்களை அரசு விழாக்களாக ஆக்கியுள்ளதற்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் அந்தத் தமிழ்ச் சான்றோர்களின் இலக்கிய எழுத்துப் படைப்புகள் மக்களுக்குக் கிடைக்கவில்லை. சாதி மத பேதமற்ற பகுத்தறிவு சமுதாயம் அமைப்பதைக் கொள்கையாகக் கொண்டுள்ள நமது அரசு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, இவர்களின் எழுத்துக்களை, எளிதாக மக்களுக்குக் கிடைக்கும்படி செய்தால், மக்களின் மனம் மாற்றம் ஏற்பட்டு சமுதாய மறுமலர்ச்சி ஏற்படும்.

இவர்களுடைய இலக்கிய படைப்புகள் சரிவர வெளிவருவதில்லை. வெளிவருவனவும் மக்களுக்குப் போய்ச் சேரும் வகையில் எளிய விலைக்குக் கிடைப்பதில்லை. எனவே, பேரறிஞர் அண்ணா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகியோரது இலக்கிய படைப்புகளை அரசுடைமை ஆக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்புத் திட்டத்தைப் பற்றிய இசை மற்றும் நாடக நிகழ்ச்சிகளை மாவட்டத் தலைநகர்களில் நடத்தத் திட்டமிட்டுள்ளதைப் பாராட்டுகிறேன். அந்த நாடகங்களில் தீண்டாமை ஒழிப்பு கொள்கை கொண்ட பாரதிதாசன், அண்ணா அவர்களின் நாடகங்களையும் இந்த நாடக நிகழ்ச்சிகளோடு சேர்க்க

*இதே பொருள் குறித்து உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டிருப்பதால், பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெறவில்லை.

பணிவுடன் வேண்டுகிறேன். அண்ணா அவர்கள் பேச்சுக்களையும், எழுத்துக்களையும் நாடக மூலமாகத் தந்தால் நம்முடைய மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்குப் புரியும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பனைக் கலையில் சான்றிதழ் பயிற்சி படிப்புத் திட்டத்தை ஏற்படுத்தி அக்கலையை ஊக்கப்படுத்துகின்ற முயற்சிகளைப் பாராட்டுகின்றேன்.

படச்சுருள் காப்பகம் ஏற்படுத்தி சமுதாய மறுமலர்ச்சி ஊட்டும் பழைய திரைப்படங்களைப் பாதுகாக்க ரூ. 140 இலட்சம் ஒதுக்கியுள்ளதைப் பாராட்டுகிறேன். பழைய திரைப்படங்கள் பாதுகாக்கப்படுவது நம் சந்ததியர்கள், வருங்காலச் சந்ததியர்கள் அதைப் பார்ப்பதற்கு ஏற்றதொரு திட்டமாகும். முன்பு எப்படி எல்லாம் நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ள அது எற்றதொரு திட்டமாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மத்திய பிரதேசத்திலுள்ள கஜோராஹோ என்ற இடம் சுற்றுலாத்துறையின் தொடர்பினால் அழகுபுரியாக இன்று அமைக்கப்பட்டிருக்கிறது; அதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 60 லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது என்று குறிப்பேட்டில் கூறப்பட்டிருக்கிறது. அதைப்போலவே தர்மபுரி மாவட்டம், ஹரூர் தாலுகாவிலுள்ள தீர்த்தமலையில் ஒரு நீர்வீழ்ச்சி இருக்கிறது; நான் பல இடங்களில், பல மாவட்டங்களில், பல மாநிலங்களில் சுற்றியிருக்கிறேன். அது போன்ற ஒரு நீர்வீழ்ச்சியை இன்று வரை பார்த்தது இல்லை. நான் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது-மத்திய பிரதேசத்திலுள்ள கஜோராஹோவைப்போல் தீர்த்தமலை நீர்வீழ்ச்சியை நல்ல முறையில் பயன்படுத்தி, வெளிநாட்டுக்காரர்களும் வருவதற்கான ஏற்பாடுகளுடன் அதனைச் சுற்றுலாத்துறை ஏற்றுக் கொண்டால் வருஷத்திற்கு 20 லட்சம் ரூபாய் வருமானம் வரும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு வருகிற நேரத்தில் அவர்களை அந்த இடத்திற்கு அழைத்துச்சென்று காண்பிக்க இருக்கிறேன் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.





தருமபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரி அணைப் பகுதியைச் சுற்றுலா மையமாக அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சாத்தனூர், மைசூர் பிருந்தாவனம் பார்க்கைப் போல் கிருஷ்ணகிரி அணைப் பகுதியிலும் பார்க்கை விரிவுபடுத்த சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கு ஒரு சுற்றுலா மாளிகை அமைத்திட வேண்டும். அப்படி அமைப்பதன் மூலம் வெளி நாடுகளிலிருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் அங்கு வந்து அதனைப் பார்ப்பதற்கு நல்லதொரு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்தில் ஹொகனேகல் நீர்வீழ்ச்சி இருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு அங்கு நல்லதொரு சூழ்நிலை அமைந்திருக்கிறது. அங்கு சுற்றுலாத் துறையின் சார்பில் ஏற்கனவே ஒரு பங்களா இருக்கிறது. ஆனால் ஏழை எளியவர்கள் வந்து தங்கி பார்க்க இன்னும் குறைவான கட்டணத்தில் பல கட்டடங்களைக் கட்டித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் நகரம் பல கோயில்கள் நிறைந்த நகரம். தினசரி ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். ஆண்டு தோறும் 'மகம்' என்ற விழாவும், 12 ஆண்டுக்கு ஒரு முறை மாசி மகப் பெருவிழாவும் வருகிறது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் மாசி மகப் பெருவிழா வருவதால் அங்கு சுற்றுலா விடுதி ஏற்படுத்தி பயணிகளைக் கவருகிற வகையில் சுற்றுலாத்துறை செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் மறுபடியும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தருமபுரி மாவட்டம் தீர்த்தமலைப் பகுதியை அமைச்சர் அவர்கள் கண்டிப்பாக சுற்றுலாப் பகுதியாக அமைத்துத் தருவதன் மூலம் 20 லட்சம் ரூபாய் வருமானம் வரும் என்று தெரிவித்து செய்தி சுற்றுலா மானியத்தின் பேரில் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

[1978 மார்ச் 7

[பிற்பகல் 1-10]

* திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம், செய்தி, சுற்றுலா மற்றும் திரைப்படம் அது சம்பந்தமான மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அந்த வகையிலே இந்தத் துறையை ஏற்று இருக்கிற அமைச்சர் அவர்கள் இந்தத் துறையிலே ஓரளவிற்கு நல்ல அனுபவம் பெற்றிருக்கிறார் என்று நம்பலாம். அதுமட்டுமல்ல, இந்தத் துறையைத் திறம்பட நன்றாக நடத்துவதற்கான ஆற்றலும் அவருக்கு உண்டு என்ற நிலைமையிலே, கடந்த காலத்திலே பல்வேறு குறைகள் இந்தத் துறையிலே ஏற்பட்டதன் காரணமாக ஆட்சியில் உள்ளவர்களுக்கு எவ்வளவு அவப்பெயர் ஏற்பட்டது என்பதையெல்லாம் அவர்கள் நன்றாக அறிந்தவர்கள் என்ற முறையிலே தொடர்ந்து அதுபோன்று ஏற்படாவண்ணம் அவர் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காரணம், தி.மு.க. ஆட்சியிலே மாவட்டங்களிலே பணிபுரிந்த செய்தித் தொடர்பு அதிகாரிகள் மாவட்டச் செயலாளர்கள் போன்று அரசு அலுவலகங்களுடைய தொலைபேசிகளைப் பயன்படுத்தி ஆளுங்கட்சியினுடைய பத்திரிகைக்கு லைட்னிங் கால்களைப் போட்டு செய்தி அளித்தார்கள் என்பதை நாடு நன்றாக அறியும். அதுபோல் இல்லாமல் பாரபட்சமற்ற முறையிலே அரசாங்கத்தினுடைய நல்ல கொள்கைகளையும் இலட்சியங்களையும் காந்தியடிகள் கண்ட கனவாகிய தீண்டாமை ஒழிப்பு பற்றியும், மதுவிலக்கு பற்றியும் பிரச்சாரம் நல்ல முறையிலே செய்வதற்கு செய்தித் துறை பாடுபட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராம மக்கள் மத்தியிலே இந்த சட்டசபை எப்படி நடக்கிறது என்று தெரியாமல் இருக்கிறது. ஆகவே இந்த சட்டசபையின் நடவடிக்கைகளை எங்கே எப்படி யார் யார் இருக்கிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்பதைப் பொதுமக்கள்





...ராமங்களிலே உள்ள மக்கள் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் ஒரு திரைப்படமாக எடுத்து மக்களுக்கு காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமேஸ்வரத்திற்கு வட நாட்டிலிருந்து ஏராளமான யாத்ரீகர்கள் வருகிறார்கள், அவர்களுக்கு எந்தவிதமான சலுகையோ, வசதியோ அங்கே அளிக்கப்படாதது குறையாக இருக்கிறது. அவர்கள் வெளியிலிருந்து இராமேஸ்வரத்தில் உள்ள ராமபிரானை வணங்குவதற்காக வருகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய சலுகைகளையும் வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்பது நம்முடைய அரசாங்கத்தின் கடமை, ஆகவே அதை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய பெருந் தலைவர் திரு. காமராஜ் அவர்களுடைய நினைவாலயம் இன்று கேட்பாரற்ற நிலையிலே மோசமான நிலைமையிலே பராமரிக்கப்படுகிறது என்பதைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது. அதை நல்லமுறையிலே பராமரிப்பதற்கும் சீர்திருத்தம் செய்வதற்கும் அதோடு திருமலைப் பிள்ளை ரோடிலுள்ள அவர்களுடைய வீட்டை அரசாங்கமே எடுத்து அதை நினைவாலயமாக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த திருமயத்தைச் சேர்ந்த பகுதியில் உள்ள ஊமைத்துரை கோட்டை. சத்தியமூர்த்தி அவர்கள் தங்கி இருந்த வீடு. சத்தியமூர்த்தி கோயில் எல்லாம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடங்களாக இருக்கின்றன. ஆகவே அந்தப் பகுதியிலே அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய வகையிலே ஒரு சுற்றுலா இல்லத்தைக் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருக்களம்பூர் என்ற ஊரிலே தண்ணீர் இல்லாமலே வாழை மரங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன கூரையிலே, அது ஏதோ தெய்வ சக்தி என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த வாழைப் பழத்தை யாராவது சாப்பிட்டால் அவர்களுக்கு வெண்குஷ்டம் வந்துவிடுகிறதாம். ஆகவே சாமிக்கு அபிஷேகம் செய்துவிட்டுச் சாப்பிட்டால்தான் நல்லமுறையிலே இருக்கிறது.

[திரு. நா. சுந்தரராஜ்] [1978 மார்ச் 7

அங்கேயுள்ள வலிகள் வெள்ளவெளேரென்று இருக்கும் நிலைமை இருக்கிறது, அங்கேயும் ஒரு சுற்றுலா இல்லத்தை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டையிலே ஒரு மியூசியம் இருக்கிறது, அங்கே ஏராளமான பொருட்கள் இருந்தாலும்கூட வசதியில்லாத இடத்தில் இருக்கிறது, ஆகவே அதை வேறு ஒரு இடத்திற்கு மாற்றி பெரிய அளவிலே அதை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டையிலே அமரர் சத்தியமூர்த்தியினுடைய சிலையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர் இந்த நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர், அதிலே தீவிரப் பங்கு ஆற்றியவர், இந்த நாட்டிலே தீர்க்கதரிசியாக இருந்தவர் என்ற முறையிலே அவருடைய பெரிய சிலையை அங்கே வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டிலே முழுப்புரட்சி வேண்டும், முழுப்புரட்சி வரவேண்டும் என்று சொல்லி முழுப்புரட்சி, முழுப்புரட்சி என்று சொல்லி கூக்குரலிட்ட பெரியவர்கள் இன்று மத்திய ஆட்சியில் இருக்கிற நிலையிலே சினிமாவிலே முத்தக்காட்சி வருகிறது, முழுப்புரட்சியின் ஆரம்பம்தான் முத்தக்காட்சியா? திரைப்படங்களிலே முத்தக்காட்சி இடம் பெறக்கூடாது என்ற முறையிலே இந்த அரசு எச்சரிக்கை செய்து திரைப்படங்களிலே முத்தக்காட்சிகள் இடம்பெறாத நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆபாசப் படங்களை ஒழிப்பது என்ற முறையிலே எடுத்துக் கொண்டால் சென்னை நகரத்திலே திரு. எல்பின்ஸ்டன் தியேட்டரில் பெரிய [illegible] வைத்திருக்கிறார்கள். அதைப் பார்க்கும்பொழுது அந்தப் படத்தின் காட்சியைப்பற்றிச் சொல்ல முடியும், அவ்வளவு ஆபாசமாக அந்தத் தியேட்டர் முன்னால் வைத்திருக்கிறார்கள். நிச்சயமாக அதைப் பார்க்கின்ற எந்தப் பெண்ணோ அல்லது சிறு குழந்தைகளோ பெரிதும் அருவருக்கக் கூடிய முறையிலே அது இருக்கிறது. அதை உடனடியாக அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 மார்ச் 7] [திரு. நா. சுந்தரராஜ்]

சென்னை நகரில் சினிமா ஸ்டுடியோக்களில் பணியாற்றும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் முதலாளிகளுக்கும் லேபாய்களுக்கும் ஏகப்பட்ட தகராறுகள் இருப்பதாக நான் அறிகிறேன். அதைத் தீர்ப்பதற்கு அமைச்சரவர்கள் வேகமாக நடவடிக்கைகள் எடுத்துக் காரியமாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சேலம் வெற்றி வேந்தன் நாடகக் கலைக் குழு தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம், மதுவிலக்குப் பிரச்சாரம் ஆகியவற்றைப்பற்றி நடத்திக் கொண்டிருக்கிறது. இப்பொழுது அந்தக் குழுவை நீக்கிவிட்டு வேறொரு நாடகக் குழுவிற்கு அனுமதி கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. உடனடியாக அமைச்சரவர்கள், வெற்றி வேந்தன் நாடகக் கலைக் குழுவிற்கு அனுமதி வழங்கி பிரச்சாரம் செய்ய அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகை நிருபர்களுக்கு மாநிலம் முழுவதும் பஸ்ஸிலே செல்வதற்கான பாஸ் வழங்க வேண்டுமென்று சர்வ கட்சியினரும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது ஏற்கப்பட்டிருக்கிறதா என்பது தெரியவில்லை. இல்லையென்றால், அதை உடனடியாக ஏற்றுக்கொண்டு தமிழ்நாடு பூராவும் செல்வதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறிய பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் கொடுத்து அவற்றை ஊக்குவிக்க வேண்டும். கிராமப்புறங்களில் உள்ள ஏழை மக்களின் வாழ்க்கையை உயர்த்த வேண்டுமென்று அரசுக்கு எண்ணம் இருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் நலிந்த சிறிய பத்திரிகைகளை ஊக்குவிக்க வேண்டுமென்றால் அவர்களை விளம்பரத்தின் மூலம்தான் ஊக்குவிக்க முடியும். பல இலட்சக் கணக்கான ரூபாய்களைப் பெரிய பத்திரிகைகளுக்குக் கொடுப்பதன் மூலம் மேலும் மேலும் பணக்காரர்கள் பணக்காரர்கள் ஆகத்தான் வழி வகுக்கும். அதனால் ஏழைகளை வாழவைக்கும் நிலைமை இல்லை.

ஆகவே, சமதர்ம சமுதாயம் அமைய வேண்டுமென்றால், ஏழைப் பத்திரிகைகளுக்கு, சாதாரண சிறிய பத்திரிகைகளுக்கு அரசாங்கம் விளம்பரம் கொடுக்க வேண்டும். குறிப்பாக

[திரு. நா. சுந்தரராஜ்] [1978 மார்ச் 7

நவசக்தி பத்திரிகை நலிந்து கொண்டிருக்கிற பத்திரிகை அந்தப் பத்திரிகைக்கு பெருவாரியான அளவில் விளம்பரங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், பத்திரிகையாளர்களுக்கு பீட்டர்ஸ் காலனியில் வீடுகள் ஒதுக்கப்பட்டு வந்தன, ஆனால் இப்பொழுது கே. கே. நகரில் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பாரபட்சம் இல்லாமல், பெங்களூர் போன்ற நகரங்களில் ஜர்னலிஸ்ட் காலனி என்று இருப்பதைப் போல் பீட்டர்ஸ் காலனியில் தனியாக ஒதுக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது)

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, செய்தி-சுற்றுலாத் துறை என்பது நவீன உலகத்திலுள்ள மிக முக்கியமான துறையாகும். அதற்குக் குறைவான நிதி ஒதுக்கியிருந்தாலும் அது கூடுதலான பணியாற்ற வேண்டிய காலத்தில் இருக்கிறது. இன்றைக்கு அகில இந்திய வானொலித் துறை நம்முடைய ஆதிக்கத்திலே இல்லாவிட்டாலும் நம்முடைய செய்தி-சுற்றுலாத் துறை அல்லது மாநில அரசு ஒரு முக்கியமான கருத்தை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வற்புறுத்த விரும்புகிறேன். இன்றைக்கு நம் நாட்டில் பல கருத்துக்கள் மோதிக் கொண்டிருக்கும் காலம்.

அதுமட்டுமல்ல. 20. 30 ஆண்டுக் கால வளர்ச்சியில் மாநிலங்களில் பல்வேறு ஆட்சிகள் உருவாகியிருக்கும் காலம். ஒவ்வொரு மாநில அரசுக்கும் வெவ்வேறு விதமான கருத்துக்கள் இருக்கும்படியான காலம். வானொலித் துறை இன்றைக்கு ஒரே கருத்தைப் பிரதிபலிக்கும் நிலையில்தான் இருக்கிறது என்பதுதான் எங்களைப் போன்ற கட்சிக்காரர்கள் அபிப்பிராயம். மொழிப் பிரச்சினையில் மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் வேறு கருத்துக்கள் இருக்கின்றன.

இதைப் போலவே வேறு சில துறைகளிலேயும் கருத்து வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஆஸ்திகம், நாத்திகம் என்ற மிக முக்கியமான பிரச்சினையில் கருத்துக்கள் மக்கள் மத்தியிலே முன்வந்து



1978 மார்ச் 7] [திரு. என். வரதராஜன்]

கொண்டிருக்கும் காலம். ஆனால் அகில இந்திய வானொலி ஓயாமல் 24 மணி நேரமும் ஆஸ்திகக் கருத்துக்களைப் பரப்பும் துறையாகத்தான் இருக்கிறது.

ஆகவே, நம்முடைய மாநில செய்தி-சுற்றுலாத் துறை இது சம்பந்தமாக தன்னுடைய ஆழமான கருத்துக்களைச் சொல்ல வேண்டும். மாநிலத்தில் உள்ள நிலைமைகளைப் பரப்பும் செய்திகளில் நம்முடைய அரசின் ஆலோசனையை அவர்கள் பெற வேண்டும் அல்லது இந்தப் பேரவையின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அழுத்தம் திருத்தமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் சொல்ல வேண்டியது, நாடகக் கலை நலிந்து கொண்டு வருகிறது. இவைகளுக்குப் புத்துணர்ச்சி ஊட்டுகின்ற வகையில் ஏதாவது முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் பலயிடங்களில் அறிந்தவரையிலும் ஏற்கனவே விளம்பரமாகியிருக்கும் நாடகக் கதைகளைக்கூட எழுதிக் கொடுத்தால்தான் லைசென்ஸ் கொடுக்கிறார்கள். இதனால் நாடகம் நடத்துகின்றவர்களுக்குப் பெரிய தொல்லை ஏற்படுகிறது. இராஜா தேசிங்கு கட்டபொம்மன் போன்ற கதைகளைக் கூட மீண்டும் எழுதிக் கொடுங்கள் என்று மாவட்டந்தோறும் இருக்கின்ற அதிகாரிகள் நிர்ப்பந்திருக்கிறார்கள். நாடகங்கள் நடத்துவதில் ஏதாவது தவறுகள் இருந்தால் அவைகளைக் குறிப்பாக போலீஸ் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் கண்காணித்து அவைகளைக் கட்டுப்படுத்த முயற்சிக்க வேண்டுமே தவிர, இம் மாதிரி முக்கியமான நாடகங்களைக்கூட எழுதிக்கொடுக்க வேண்டுமென்று கேட்கின்ற முயற்சியைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஓய்வு பெற்றுள்ள நாடக கலைஞர்களுக்கு உதவிகள் செய்ய வேண்டுகிறேன். நாடகக் கலைக்கு அதிக சலுகைகள்வழங்கவேண்டுகிறேன்.

[பிற்பகல் 1.20]

மதுரை மாவட்டத்தில் இருக்கும்படியான பழனி நகரம் பெரிய சுற்றுலா நகரத்திற்குரிய தகுதிகளைப் பெற்றிருக்கிறது. ஆகவே, அதற்குரிய நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்து அதைச் சிறிய சுற்றுலா நகரமாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். வரதராஜன்] [1978 மார்ச் 7

நாம், அரசின் சார்பாக தமிழரசு என்ற பத்திரிகையை நடத்துகிறோம். அது அரசு கெசட்டாக வெளிவராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கருத்துக்களைக் கண்டு பயப்படலாகாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள், ஆளுங்கட்சித் தலைவர்கள், மற்ற எதிர்க் கட்சித் தலைவர்கள், பொதுவான தலைவர்கள் இவர்கள் அனைவரும் எழுதப்படக் கூடிய பொதுவான கட்டுரைகள் அதில் இடம் பெறவேண்டும். பொதுவான கட்டுரைகள் என்று சொல்லும்போது, நான் சில வற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாஸ்திகம், ஆஸ்திகம் பற்றிய கட்டுரைகள், தீண்டாமை, நாட்டின் முன்னேற்றம் இந்த வகையிலே கட்டுரைகள் இடம் பெறுகின்ற வகையிலே நாம் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாதம் 11-ந் தேதி, குன்றக்குடி அடிகளார் தலைமையிலே, மதுரையில் பிள்ளையார் கோவிலிலே ஒரு நிகழ்ச்சி நடை பெறுகிறது, அதற்குக் கொடுத்து இருக்கும் தலைப்பு, நாட்டு வறுமையை அகற்றுவதற்கு, கீதை வழியில் செல்ல வேண்டுமா, மார்க்ஸ் வழியில் செல்ல வேண்டுமா என்று பெரிய விவாதம். பட்டிமன்றமாக நடைபெற இருக்கிறது. நாம் பொதுக் கருத்துக்களை மோத விடுவதிலே சங்கடப்படலாகாது. அது நல்லது.

அதே போல், செய்தித் துறையின் படங்களில் கூட, தமிழகத் தின் பெரும் நிகழ்ச்சிகளை படமாக்க வேண்டும். பல கட்சி மாநாடுகள் நடைபெறுகின்றன. அது ஆளுங்கட்சி மாநாடாக இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழக மாநாடாக இருந் தாலும், காங்கிரஸ் கட்சி மாநாடாக இருந்தாலும், ஜனதா கட்சி மாநாடாக இருந்தாலும், மார்க்சிஸ்ட் கட்சி மாநாடாக இருந் தாலும் எந்தக் கட்சி மாநாடாக இருந்தாலும், இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்று பேதம் பார்க்காமல், படம் பிடித்துக் காட்ட வண்டும். அப்படிப்பட்ட முறையிலும் நம்முடைய செய்தித் றை வளர்ச்சி அடைய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள் றேன்.



1978 மார்ச் 7] [திரு. என். வரதராஜன்]

அதுபோல்தான், நிருபர்களுக்கு இன்றைக்கு இருக்கிற பலதரப்பட்ட சங்கடங்களை நாம் கவனிக்க வேண்டும். ஏதோ மாற்றாந்தாய் போல் இடம் பிடிக்கவும், அல்லது, மாவட்டங்களில் தலைவர்கள் செல்கின்றபொழுது, அவர்களது கார்களிலே தொத்திக் கொண்டு போவது போன்ற நிலை இப்பொழுது இருக்கிறது. நான் கூடப் பார்த்திருக்கிறேன். மாவட்டங்களிலே, நிருபர்கள் கலெக்டர்களை கெஞ்சிக் கொண்டிருக்கிறார்கள், எங்களுக்கு ஏதாவது ஒரு ஜீப் பார்த்துத் தயார் பண்ணிக் கொடுங்கள் என்று. செய்திகளைப் பரப்புவதிலே நிருபர்களுக்கு முக்கியமான பங்கு இருக்கிறது. ஏற்கனவே, சில தவறுகள் நடந்திருக்கின்றன. அதைத் தவிர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது, சினிமாக்களிலே, இருக்கும்படியான உழைக்கும் மக்களைப் பற்றி ஆழ்ந்த அக்கறை தேவைப்படுகிறது. சென்னையிலே இருக்கிற கோல்டன் ஸ்டுடியோவிலே 500 பேர் வேலையில்லாமல் பல ஆண்டுகளாக இருக்கிறார்கள். உடனடியாக, நீங்கள் என்ன செய்ய முடியும் என்பதல்ல கேள்வி. அந்தத் துறையிலே கவனம் செலுத்துகிறோமா என்பதுதான் என்னுடைய கேள்வி. அவர்கள் வேண்டுகோளைக் கவனிக்க வேண்டும்.

அதேபோல், திரை அரங்குகளிலே இருக்கும் ஊழியர்களுக்குக் குறைந்தபட்சச் சம்பளம் வழங்கும் முறையை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். இப்பொழுது, அவர்கள், எப்படி வாழ்கிறார்கள். கழிவு நீர்—சாக்கடைக்குப் பக்கத்தில்தான் அவர்கள் வாழ்கிறார்கள். ரூ. 40, ரூ. 50-க்கு மேல் அவர்களுக்கு மாதச் சம்பளம் கிடையாது. இது மிகவும் முக்கியமான துறை. நமது முதலமைச்சரவர்கள் உட்பட செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சருக்கு அதிகமான விவரங்கள் தெரிந்திருக்கும். ஆகவே, அவர்கள் பேரில் அதிகமான அக்கறை எடுக்க நாம் முயற்சிக்க வேண்டும்.

அடுத்தாற்போல், ஒன்றே ஒன்று தான் சொல்ல வேண்டியது. விளம்பரங்களைப் பற்றி. அதை அலட்சியப்படுத்த வேண்டாம். ஏற்கனவே, விளம்பரத் துறையை வைத்துக் கொண்டு, மத்தியில் உள்ளவர்கள் என்னென்ன செய்தார்கள்? ரூ. 80 கோடிக்கு விளம்பரமே செய்யவில்லையென்ற மோசடி வசூல் செய்து,

எல்லாம் நாட்டிலே நடந்து இருக்கிறது. ஆகவே, எந்தக் கட்சியைச் சார்ந்தது என்று பாராமல், எல்லாக் கட்சியைச் சேர்ந்த பத்திரிகைகளுக்கும் அரசு விளம்பரம் கொடுக்க முன்வர வேண்டும்.

அதேபோல், கருத்துப் படங்கள் தயாரிக்கப்பட வேண்டும். தீண்டாமையைப் பற்றி, கேள்வி நேரத்தில் அதன் கொடுமை காண முடிந்தது. ஆனால், சொல்லத் தகாத முறையில் வெளியே நடக்கின்ற அந்தச் சண்டாளத்தனத்தை எதிர்த்துத்தான் தீர வேண்டும். அவைகளை எல்லாவிதத்திலும் எதிர்த்துத்தான் தீர வேண்டும். அவைகளை எதிர்த்துக் குறிப்பிட்ட செய்திகளின் மூலமாகவும், படங்கள் மூலமாகவும், நம்முடைய கிராமப் புறங்களில் பரப்ப வேண்டும். அவைகளையெல்லாம் ஒழித்தாக வேண்டும். இதிலே கருத்து வித்தியாசங்கள் ஏற்பட இடமிருக்காது. ஆகவே, அப்படிப்பட்ட கருத்துப்படங்களை இந்தத் துறையே தயாரிக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. அ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, செய்தி-சுற்றுலா திரைப்படங்கள் ஆகிய துறைகளின் மானியத்தின் மீது ஒரு சில வார்த்தைகளை இந்த நேரத்திலே கூற விரும்புகிறேன்.

கலைவாணர் அரங்கத்தைப் பற்றி இங்கே குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. புனரமைப்பு செய்யப்பட்டு பொலிவோடு விளங்குவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். முன்னால் இருந்த கட்டடத்தை அப்படியே வைத்துக் கொண்டு, வேறு புதிய கட்டடத்தை கட்டியிருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். இதிலே பல இழப்புகள் ஏற்பட்டன. அதைப்போலவே இனிமேல் புனரமைப்பு செய்யும்போது இந்தக் கருத்தை மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு தமிழரசு இதழை தமிழரசு அச்சகத்திலேயே வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. அது வரவேற்கத் தக்க ஒன்று. இந்த பத்திரிகையில் அரசைச் சார்ந்த விளம்பரங்கள் மிகுதியாக தரப்பட வேண்டும். குறிப்பாக பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுகளைப் பற்றியும், தேர்ந்தெடுத்தவர்கள் முடிவுகளைப்





பற்றியும் விளம்பரங்கள் செய்தால் பத்திரிகைகளும் கூடுதலாக விற்பனையாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எல்லோரும் விரும்பிப் படிப்பார்கள். வேலை வாய்ப்புத் தேடுபவர்களும், மற்றவர்களும் இந்த விளம்பரங்களை படிப்பதன் மூலம் பயனடைவார்கள் என்ற கருத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக பிற பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்படும் விளம்பரங்களை விட இந்தப் பத்திரிகைக்கு அதிகமாக, கொடுக்க வேண்டும். இதனால் பொருளும் மிச்சமாகிறது. அதோடு இந்தப் பத்திரிகையின் மதிப்பையும் உயர்த்துவதற்கு இது ஏதுவாக இருக்கும் என்ற கருத்தை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பத்திரிகை நிருபர்களைப் பற்றி சொன்னார்கள். சென்னையில் உள்ள பத்திரிகை நிருபர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பல சலுகைகள், மாவட்டத்தில் உள்ள பத்திரிகை நிருபர்களுக்கு அளிக்கப்படவில்லை. அதுவும் மாவட்டங்களுக்கு அமைச்சர்கள் வரும்போது அவரைப் பின்தொடர்ந்து செய்திகளை சேகரிக்க எண்ணுகின்ற நிருபர்கள் வாகன வசதி இல்லாமல் மிகவும் திண்டாடிப் போகிறார்கள். மாவட்ட கலெக்டரையோ அல்லது மற்ற அதிகாரிகளையோ அணுக வேண்டிய கட்டாயத்திலே இருக்கிறார்கள். மேலும் செய்திகளை சேகரிப்பதற்காக அந்த மாவட்டத்தின் உள்ளே அரசு பேருந்துகளில் பயணம் செய்வதற்கு, பாஸ் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனாலே அரசுக்கு எந்தவிதமான சங்கடமும் இல்லை.

இப்போது திரையரங்குக் கழகம் செயல்பட்டு வருகிறது. தனியார், கிராமங்களில் திரை அரங்குகள் கட்டுவதற்கு உதவி செய்வதாக அறிவிக்கப்பட்டிருக்கிற ஒரு கருத்து இருக்கிறது. ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். நகராட்சிகளிலும், பஞ்சாயத்துக்களிலும் எங்கெங்கே திரை அரங்குகளைக் கட்டினால் வருவாய் வரும் என்று பார்த்து அத்தகைய இடங்களில் திரை அரங்குகளைக் கட்டுவதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும். அந்த

[திரு. அ. சுவாமிதாஸ்] [1978 மார்ச் 7

பணிகளை பஞ்சாயத்துக்களே ஏன் நடத்தக் கூடாது? புல் திரை அரங்குகளை அமைக்கக் கூடாது? நல்ல வருவாய் உள்ள கிராம நகர பஞ்சாயத்துகளுக்கு இந்தப் பொறுப்பை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில், அமைச்சர் அவர்களுக்கு இந்தத் துறையை விரிவுபடுத்த, அழகுபடுத்த வேண்டும், அபிவிருத்திபடுத்த வேண்டும் என்ற கருத்து இருப்பதாக உணர்ந்து அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் போதாது. கேரளத்திலே சுற்றுலா துறையிலே எடுத்துக் கொண்டால் அவர்கள் செய்கிற செலவைப் பார்த்தால், அந்த அளவுக்கு இங்கு செயல்படவில்லை. அங்கே கோவளம், ஒரு பெரிய டூரிஸ்ட் சென்டராக இருக்கிறது. அதை அப்படி அமைத்ததாலேயே வெளி நாட்டிலே இருந்து வருகிற அத்தனை பேர்களும் கோவளத்திற்குத்தான் செல்கிறார்களே தவிர, அருகில் உள்ள கன்னியாகுமரிக்கு வருவது இல்லை.

கோவளத்திலே தங்கிவிட்டு, ஒரு மணி நேரம், அல்லது இரண்டு மணி நேரம் தங்குவதற்காகத்தான் கன்னியாகுமரிக்கு வருகிறார்கள். எனவே கன்னியாகுமரியை ஒரு பெரிய டூரிஸ்ட் சென்டராக அமைக்க ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே முன்னே கேப் ஓட்டல் என்று இருந்தது. இப்போது சுற்றுலாத் துறை வந்த பிறகு செயல்படவில்லை. அங்கு ஒரேயடியாக அறைகளின் வாடகையைக் கூட்டிவிட்டார்கள். நல்ல சாப்பாடும் கிடையாது. ஒழுங்காகப் பராமரிப்பதும் கிடையாது. இதையும் அரசு கவனத்தில் கொண்டு, ஏழை எளியவர்கள், நடுத்தர அதிகாரிகள், கீழ் மட்டத்தில் பணியாற்றும் அரசாங்க குமாஸ்தாக்கள் போன்றவர்கள் தங்குவதற்கு வசதியை கொடுக்க. இந்த சுற்றுலாத் துறை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1978 மார்ச் 7] [திரு. அ. சுவாமிதாஸ்]

[பிற்பகல் 1-30]

கன்னியாகுமரிக்கு தினசரி கிட்டத்தட்ட 100 பஸ்கள் வருகின்றன. கேரளத்தில இருந்து கூட வருகிறது. அப்படி வருகிறவர்களுக்குப் போதிய தண்ணீர் வசதிகள் அங்கே இல்லை. சாப்பிடுவதற்கு வசதி இல்லை. ஆகவே, அங்கேயொரு ஜனதா ஓட்டல் சுற்றுலாத் துறை மூலம் நடத்தலாம். அது மக்களுக்குப் பயன்பெறத்தக்க வகையில் இருக்கும். அரசாங்கத்திற்கும் நல்ல வருவாய் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த கன்னியாகுமரி கடலில் முன்னாலே ஒரு "பேத்திங் காட்." குளிக்குமிடம் இருந்தது. அது அழிந்து விட்டது. அந்தத் துறையைச் சேர்ந்தவர்களிடத்தில விசாரித்ததில் 'அதைப் பெரிய துறையாகக் கட்ட வேண்டும் என்றும், ஆண்களுக்கு என்று ஒன்றும், பெண்களுக்கு ஒன்றும் தனித்தனியே குளிக்குமிடம் கட்ட வேண்டும் என்றும் சொன்னார்கள். கன்னியாகுமரியைப் பொறுத்தவரையில் மற்ற இடங்களில் குளிப்பதுபோல் கடலில் இறங்கி குளித்து விட முடியாது. ஆகவே, அங்கே ஒரு பேத்திங் காட் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே ஒரு ஸ்விம்மிங் பூல் இருக்கிறது. அதை விரிவுபடுத்தி, அக்குவாட்டிக் ஸ்விம்மிங் பூலாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே ஒரு மீன் காட்சி சாலையும் ஏற்படுத்தலாம். பல்விதமான மீன்கள் அங்கே கிடைக்கின்றன. ஆகவே, அங்கே கிடைக்கின்ற மீன்களை வைத்து ஒரு காட்சி சாலை அமைத்தால் அங்கு வந்து செல்கிற மக்கள் பார்த்து ரசிப்பதற்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அங்கேயொரு மீன் காட்சி சாலை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி ஒரு சிறந்த இடம், சுற்றுலாப் பயணிகளுக்கு. அங்கே அழகான கோவில் இருக்கிறது, காலையில் சூரிய உதயத்தையும், மாலையில் சூரிய அஸ்தமனத்தையும் பார்க்க

மக்கள் ஆசைப்பட்டு அங்கே வருகிறார்கள். அங்கே தங்கிச் செல்லப் போதிய வசதி இல்லை. ஆகவே, அதை ஒரு டூரிஸ்ட் சென்டராக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பெரும் தலைவர் காமராஜர் இருந்தபோது, அவர் அப்பர் கோதையாறு லோயர் கோதையாறு இரண்டையும் பார்வையிட்ட போது ஒரு கருத்தைச் சொன்னார்கள், அங்கேயிருக்கிற அணைக்கட்டுகளை எல்லாம் திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கும் அணைக்கட்டுப் பகுதிகளோடு சேர்த்து, போக்குவரத்து வசதி செய்து கொடுத்து, இடையில் தங்குவதற்கு மாளிகைகள் கட்டி வைத்தால், அந்தப் பாதையில் பயணம் செய்பவர்கள் பெருஞ்சாணி, பேச்சிப்பாறை, கோதையாறு, மணிமுத்தாறு, பாபநாசம், குத்தாலம் வழியில் இருக்கும் மலைகளின் அழகையும், அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிற காட்டு மிருகங்களையும் கண்டு ரசிக்க முடியும் என்று சொன்னார்கள். ஆகவே, அரசு இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதையெல்லாம் செய்வதற்கு அந்தத் துறைக்குப் பணம் போதாது. பணம் அதிகம் வேண்டும். இந்தத் துறை இவைகளை செய்தால் அதிக வருமானம் வரும் என்பதாலும், வெளி நாட்டில் இருந்து பயணிகள் இங்கே வருவதால் அந்நிய செலாவணி அதிகம் கிடைக்கும் என்பதாலும், இதற்கு அதிகமான நிதி ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டு, இந்தத் துறையை அந்த வகையில் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தத் துறைக்கு ரூ. 1 கோடி 22 இலட்சம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்தத் துறையானது நல்ல பிரகாசமாக எதிர் காலத்தில் நல்லபடியாக முன்னேற வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, இந்தத் துறையில்—சுற்றுலாத் துறை பெரும்பகுதி வசதிக்காரர்களுக்குத்தான் உபயோகப்படுகிறது; ஆகவே, சாதாரண மக்கள் அந்த சுற்றுலாத் துறை மூலமாக வெளியிடங்களுக்குச் சென்று, தங்கி, பலயிடங்களைச் சுற்றிப் பார்க்க சௌகர்யமான வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



முகவை மாவட்டத்தில் மருதுபாண்டியர்களைத் தூக்கில் இட்ட இடம் மிகவும் முக்கியமான இடம். நெல்லை மாவட்டத்தில கட்டபொம்மனை தூக்கிலிட்ட இடம் முக்கியமான இடம். இப்படிப் பட்ட இடங்களை முக்கியமாக சுற்றுலாத் துறை மூலம் முன்னேற்றம் செய்ய எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. கிழக்குக் கடற்கரையை ஒட்டி, உப்பூர் பிள்ளையார் கோயில் இருக்கிறது. ஸ்ரீ இராமச்சந்திரன் இலங்கைக்குச் செல்லக்கூடிய நேரத்தில் அந்த பிள்ளையார் கோயிலுக்கு வந்து சாமி கும்பிட்டுச் சென்றார் என்பதாக சரித்திரம் இருக்கிறது. அத்தகையச் சிறப்பு வாய்ந்த அந்தக் கோயிலைப் பிரதானப்படுத்த வேண்டும். இப்போது அங்கே ஒரே ஒரு போர்டு மட்டும் இருக்கிறது. "ஸ்ரீ இராமச்சந்திர பிரபு இந்த பிள்ளையார் கோயிலில் சாமி கும்பிட்ட சிறப்பு பெற்றது. பொது மக்களும் ஆர்வத்தோடு வழிபட்டு, பயனடைய வேண்டும்" என்று போக்குவரத்துத் துறை போர்டில் எழுதி வைத்திருக்கிறார்கள். சுற்றுலாத் துறையில் மூலம் அதை நல்லபடியாக பிரபலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இளையாங்குடியில் மாறநாயனார் கோவில் ஒன்று இருக்கிறது. அதுமட்டுமல்ல; விதைத்த விதை அரித்துவந்த நாற்றங்கால் இருக்கிறது; அவர்கள் குடியிருந்த வீடு இருக்கிறது. அந்த இடமெல்லாம் இப்போது கவனிப்பாரற்று இருக்கிறது. சுற்றுலாத் துறை அதைக் கவனித்து, மேம்பாடு செய்து, பிரதானப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தாசில்தார் அவர்களிடம் ரிப்போர்ட் கேட்டால் கூட அந்தப் பகுதியை குறிப்பாக எடுத்துச் சொல்வார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று மிகவும் முக்கியமான இடங்களை எல்லாம் சுற்றுலாத் துறை பிரதானப்படுத்தி, சுற்றுலாப் பிரயாணிகளுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இராமேஸ்வரம், கன்னியாகுமரி, மதுரை போன்ற சுற்றுலா சிறப்புப் பெற்ற இடங்களில் ஒலி-ஒளி காட்சிகள் அமைப்பதற்கு சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சுற்றுலாத் துறையின் மூலமாக மேலும் மேலும் சிறப்பு வாய்ந்த பல்வேறு இடங்களைத் தேர்ந்தெடுத்து அபிவிருத்தி செய்து, சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு எல்லா சுற்றுலாத் தலங்களையும் ஏழை எளிய மக்கள் குறைந்த செலவில் கண்டுகளிக்க வசதிகள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. மி. வின்சென்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, செய்தி, சுற்றுலா, திரைப்பட நுட்பவியல் மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற வாய்ப்பு பெற்றமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆரம்பத்தில் பேசிய ஒரு உறுப்பினர் ஒரு பத்திரிகையின் பெயரைச் சொல்லி, 'என்ன பாவம் செய்தது. அதற்கு ஏன் விளம்பரம் கொடுக்கவில்லை' என்று சொன்னார்கள். 1973 முதல் 1976 வரை "மக்கள் குரல்" பத்திரிகை என்ன பாவம் செய்தது, அதற்கு ஒரு ரூபாய்க்கான விளம்பரம் கூட கொடுக்காதவர்கள் இன்று என்ன அடிப்படையில் பேசுகிறார்கள் என்ற எண்ணம் எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். கணேசன்: நாங்கள் தவறு செய்தோம் என்று திரு. வின்சென்ட் அவர்கள் சொல்கிறார்கள். நாங்கள்தான் தவறு செய்தவர்களாயிற்றே; அதே தவறை நீங்கள் ஏன் செய்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். ஒவ்வொருவரும் பேசும்போது கேள்வி கேட்க ஆரம்பித்தால் குறிப்பிட்ட நேரத்திற்குள் நிகழ்ச்சிகளை முடிக்க முடியாது; நேரமில்லை.

திரு. மி. வின்சென்ட்: வடக்கே காஷ்மீருக்கு கிடைக்கின்ற முக்கியத்துவம், முக்கடல் சங்கமமாகி முத்தமிடும் தென் கோடியிலிருக்கும் குமரி முனைக்கு கிடைத்திட வேண்டுமென்று



வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஏனென்றால் அகில உலகத்தி லேயும் காண முடியாத காட்சிகள் குமரி முனையில் காணக் கிடைக் கின்றன. சூரிய உதயமும், சூரிய மறைவும், சந்திர உதயமும் இந்த உலகிலே ஒரே இடத்தில் பார்க்கக் கூடிய இடம் குமரி முனை என்பதை நாடறியும்.

அதைப்போல ஏழு நிறங்களும் கொண்ட பல நிற மணல் குமரி கடற்கரையில் கிடைக்கின்றது. மூன்று கடலும் சந்திப்பதால் இந்துக்கள் ஒரு புனித இடமாக ஏற்று, குளித்து வருகிறார்கள். ஆகையால் இதை ஒரு 'இன்டர்நேஷனல் டூரிஸ்ட் சென்டர்' ஆக ஆக்குவதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-40]

அதுமட்டுமல்ல, குமரிமுனையிலிருந்து ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வரக்கூடிய ஒரு திட்டத்தை இதுவரையில் அரசாங்கம் செய்யாமல் இருந்திருக்கிறது என்பது குமரி மாவட்ட மக்கள் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சிதான் காரணம் என்பதை நான் சொல்வதற்கு கடுகளவும் தயங்கவில்லை.

ஏனென்றால் இன்று ஆண்டு ஒன்றுக்கு 15 லட்சத்திற்கு மேல் குமரி முனையைப் பார்வையிடுவதற்காக பயணிகள் வருகிறார்கள். விவேகானந்தா மண்டபத்தினைப் பார்ப்பதற்கு நன்கொடையாக ஒரு ரூபாய் வீதம் இன்று பிரிக்கப்பட்டு அதனால் ஆண்டு ஒன்றுக்கு 12 லட்சம் ரூபாய் அவர்களுக்கு வருமானம் வருகிறது. ஆனால் படகுகளைக் கொடுப்பது தமிழக அரசு, பணத்தை எடுத்துச் செல்பவர்கள் மற்ற அரசாக இருப்பதை நான் ஒத்துக்கொள்ள இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்திய பிரஜைகளும் வெளி நாட்டினரும் குமரி முனையில் மிக முக்கியத்துவம் கொடுப்பது முக்கடல் சந்திப்புக்குத்தான். எனவே, வெளிநாட்டினரும் மற்றவர்களும் முதலில் கேட்க விரும்புவது முக்கடலைச் சுற்றிவர ஒரு உல்லாச விசைப் படகு வைத்திருக்கிறார்களா என்ற கேள்வியைத் தான் இவர்கள் கேட்கிறார்கள் ஏனென்றால், வங்காள விரிகுடாவில் இருந்து புறப்பட்டு இந்து மகாசமுத்திரம் வழி அரபிக் கடலில் கரை எல்லையின் அருகே—ஒரு இடத்திற்குச் செல்பவர்கள் முதலில் அந்த இடத்தைக் காண வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். கண்டு

களித்ததற்குப் பிறகு—தங்கள் வாழ்நாள் முழுவதும் அதை எண்ணி எண்ணிப் பார்த்து மகிழ்ந்து ஆனந்தம் கொள்கிறார்கள் ஒரு படகில் ஏறி முக்கடலையும் சுற்றி வந்தேன் என்று பெருமைப்படுவதற்காக ரூ. 25 முதல் ரூ. 50 வரையில், கொடுப்பதற்கு இந்தியப் பிரஜைகளும் வெளி நாட்டினரும் தயாராயிருக்கிறார்கள். இதன் மூலம் அன்னிய நாட்டின் அன்னிய செலாவணி குமரி முனையில் குவியும். ஆதலால் ஒரு உல்லாசப் படகு முக்கடலைச் சுற்றிவர, கரையோரங்களில் சுற்றி வர ஏற்பாடு செய்தால் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வர காத்துக் கொண்டிருக்கிறது என்ற நல்ல திட்டத்தை நான் இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குமரி மாவட்டத்தில் மருத்துவாமலையில் அப்ஸர்வேட்டரி டவர், பார்வைக்கான கோபுரம் ஒன்று அமைத்து தொலைநோக்காடி அமைத்தால் panoromic view of the landscape முக்கடலும் சந்திக்கும் முனைப் பார்வை கிடைக்கும். பார்வைக்கான கோபுரத்தில் ஏறும் பயணிகளும் பக்தர்களும் சுசீந்திரம் கோவில், நாகர்கோவில் நாகராஜா கோவில், புனித சவேரியார் கோவில், திருச்செந்தூர் கோவில் ஆகியவற்றைக் காண முடியும். அதேபோல் முக்கடலும் சந்திக்கும் முனைப்பார்வையையும் பார்த்து மகிழவும் ஏதுவாகயிருக்கும்.

இந்த அப்ஸர்வேட்டரி டவர் கட்டிக் கொடுத்தால் ஆண்டு ஒன்றுக்கு 50 லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் வரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே இதில் அரசு அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேங்காய்ப்பட்டணம் தென்னைமரச் சோலைகள் அடங்கிய கடற்கரை காயலோடு அமைந்திருக்கிறது. அதை சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடமாக ஆக்க வேண்டும். ஒரு ஹாண்டிகிராப்ட் எம்போரியம் (Handicraft Emporium) குமரி முனையில் அமைக்கப்பட வேண்டும். நாகர்கோவிலில் [illegible] இன்பர்மேஷன் சென்டர் ஒன்றை உருவாக்கி அதில் சுற்றுலாப் பயணிகள் சுற்றிப்பார்க்க [illegible] வழங்கப்பட வேண்டும் என்று வாதைக் கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.





## (5) உரிமைப் பிரச்னை.

உள்ளாட்சித் துறை அமைச்சர் உதவியாளர் பஸ் பாஸைத் தவறாக உபயோகித்ததாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டு பற்றி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவைக்கு அளித்த தகவல் குறித்து.

Thiru A. RAHMANKHAN : Sir I want to raise a matter of privilege. Rule 184 of our Rules says:

"A member wishing to raise a matter of privilege shall before the commencement of the sitting of the day on which he proposes to raise the point leave with the Speaker a written notice of the matter proposed to be raised."

But there is a proviso to that rule which says:-

"Provided that in respect of a matter of privilege arising during the sitting of the House the Speaker may waive such notice".

ஆகவே நோட்டீஸ் தேவையில்லை.

Rule 186 says :

"A matter of privilege must be raised after the question hour and before the list of the business of the day is entered upon.

But proviso to that rule says :

"Provided that a matter of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business.

ஆகவே உரிமைப் பிரச்னை எழுப்புவதற்கு தாங்கள் அனுமதி தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு தகவல் வெளியிட்டார்கள். அந்தத் தகவலை வெளியிடுகிறபோது 413 எண் உள்ள பாஸ் அவரது P. A. யால்

[திரு. ஏ. ரகுமான்கான்] [1978 மார்ச் 7

தவருக பயன்படுத்தப்படுகிறது என்ற குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் சொல்கிறபோது அவர்கள் சொன்னர்கள் அந்த பாஸ் தொலைந்து விட்டது என்ற தகவல் சொன்னர்கள். அருமை நண்பர் ராதா அவர்கள் கூட ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டார்கள். இப்படி ஒரு தவருன தகவலை அமைச்சர் அவர்கள் தந்திருக்கிருர்கள் இந்தச் சபைக்கு இது உரிமை மீறல் ஆகும் என்பது முதல் குற்றச்சாட்டு. இப்படி தவருன தகவலைத் தந்திருக்கிருர்கள். அந்தப் பாஸில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு கண்டிஷன்கள் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முதல் கண்டிஷன். . . .

Loss of pass shou'd be reportəd to the Managing Director of the the Pallavan Transport Corporation, Madras with in 24 hours.

24 மணி நேரத்திற்குள் மானேஜிங் டைரக்டரிடத்தில்—பாஸ் தொலைந்து போனல் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனல் அமைச்சர் அவர்கள் அது தொலைந்துவிட்டதாக அறிவித்திருக்கிருர். எந்தத் தகவலின் மீது அதை இங்கு தெரிவித்தார்? எனக்குக் கிடைத்த தகவலின்படி அப்படி 24 மணி நேரத்தில் தொலைந்து போனதாக தெரிவிக்கப்படவில்லை என்பது. அப்படியிருக்கும்போது, எந்த சூழ்நிலையில் அமைச்சர் அவர்கள் அப்படி சொன்னர்கள்? இது ஒரு முக்கியமான பிரச்னை, அமைச்சர் அவர்களுக்கு வேண்டியவர்களாக இருக்கலாம். அது வேறு. ஆனல் இது முக்கியமான பிரச்னையாதலால், இது பிரிவிலேஜ் என்ற அடிப்படையில் நான் இந்தப் பிரச்னையை எழுப்புகிறேன். . .

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டுக்கு. இதில் சம்பந்தப்பட்ட பாண்டியன் அவர்கள் எழுதியிருக்கும் விளக்கத்தில்—‘நான் தென்னகம் செய்தியாளராக இருந்த நேரத்திலேயே பாஸ் தொலைந்து போய்விட்ட காரணத்தால், அதை அரசுக்கோ ‘தென்னகம்’ பத்திரிகைக்கோ திருப்பித்தர இயலவில்லை. உள்ளாட்சித் துறை அமைச்சர் அலுவலகத்தில்



1978 மார்ச் 7] [திரு. ஆர். எம். வீரப்பன்]

பணியில் சேரும்போதே அந்தப் பாஸ் என் கைவசமில்லை. அதற்குப் பின் நான் அதை உபயோகப்படுத்தியதே இல்லை’...... என்று விளக்கம் அளித்திருக்கிருர்கள். இது தான் நிலைமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புவது. அப்படி அந்த பாஸ் தொலைந்துவிட்டது என்று அமைச்சர் அவர்கள் சொன்னர்கள் என்பது எதன் அடிப்படையில் தான்....

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: அமைச்சர் அவர்கள் அது தவறிவிட்டது என்று சொன்னர்கள், அது 24 மணி நேரத்திற்குள் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி டிரான்ஸ்போர்ட் டிப்பார்ட்மென்டிடம் தான் கேட்க வேண்டும். அதை அங்குதான் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்....

திரு. ஏ. ரகுமான்கான்: தொலைந்துவிட்டது என்ற தகவல் அமைச்சருக்கு எப்படி வந்தது? அவருக்கு அதுபற்றி தெரியாது. அமைச்சர் தவருக சொல்லுகிருர் என்று நான் சொல்லுகிறேன். . .

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, பாஸ் சம்மந்தமான பிரச்சினையில்.. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், ஒரு தகவலைத் தந்தார்கள். அந்தத் தகவல் தவருன தகவல். பாஸ் என்னிடத்தில் இருக்கிறது, அல்லது பாஸ் இதோ இருக்கிறது, இதோ வைத்திருக்கிறேன் என்று சொல்லுவார்களேயானல் அப்போது தான் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன தகவல், தவருன தகவல் என்ற சந்தேகத்திற்கே இடம் வரும். அதல்லாமல் பாஸில் சந்தேகத்திற்கே இடம் வரும். அதல்லாமல் பாஸில் என்ன கூறப்பட்டிருக்கிற நிபந்தனைகள், தொலைந்துவிட்டால் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்ற கண்டிஷன்கள், நிறைவேற்றப்பட்டனவா என்றெல்லாம் கேட்பது தவறு. அவ்விதம் கேட்பது சரியுமல்ல,

[திரு. ச. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 7

மன்றத்தைப் பொறுத்தவரையில், அமைச்சர் அவர்கள் தவறான தகவல் தந்தார் என்பதற்கோ, அல்லது தவறான தகவல் தந்ததற்கு ஆதாரம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கோ இதில் இடமே இல்லை. ஆகவே, இதில் உரிமைப் பிரச்னை என்பதற்கே இடமில்லை. கன்டிஷன் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா இல்லையா என்பது வேறு பிரச்னை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர் பதவியில் இருக்கிறவர்கள் என்பது பொறுப்பான இடத்தில் இருக்கிறவர்கள். அவர்களுக்கெல்லாம் விதிமுறைகள் தெரியாது என்று சொல்ல முடியாது. Ignorance of law is no excuse இந்த விதிமுறைகளை படிக்காமல் இருக்க முடியாது. 24 மணி நேரத்தில் தொலைந்து போனது பற்றி தெரிவிக்க வேண்டும் என்று தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே தொலைந்து போயிருந்தால் அப்படி தெரிவித்திருக்க முடியும். அப்படி யில்லாமல் தொலைந்துவிட்டது சொல்லாமல் இருந்தால், அதை வேறு நபர்கள் கூட 'மிஸ் யூஸ்' செய்யக்கூடும். இதில் யார் மிஸ் யூஸ் செய்தார்கள் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், அமைச்சர் அவர்கள் இங்கு சொன்ன விளக்கம் சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** யார் உரிமை மீறல் பிரச்னை கொடுத்திருக்கிறார்களோ அவர்கள் தான் அந்தப் பிரச்னையைப் பற்றி பேச வேண்டும். . . .

**திரு. க. சுப்பு :** அவையில் உரிமை மீறல் பிரச்னை என்று வந்தால் அதில் எல்லோருக்கும்தான் பொறுப்பு இருக்கிறது.... It concerns all the Members of the House. (திரு. கே. கந்தசாமி அவர்கள் பேசுவதற்கு எழுந்திருந்தார்...)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு சுப்பு அவர்களுக்கு என்ன சொன்னேனோ அது உங்களுக்கும் பொருந்தும்....

(திரு. கே. கந்தசாமி அவர்கள் மீண்டும் பேசுவதற்கு எழுந்திருந்தார். . .



1978 மார்ச் 7]

[பிற்பகல் 1.50]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பிரிவிலெஜ் மோஷனை மூவ் பண்ணி அனுமதித்து அது டிஸ்கஷனுக்கு வந்த பிறகுதான், எந்த மெம்பர் வேண்டுமானாலும் அதன் மீது பேசலாம் என்பதிலே ...ாற்றுக் கருத்து கிடையாது. ஆனால், பிரிவிலெஜ் மாட்டரைக் ...ாண்டுவந்து அனுமதி கோரி பேசும்போது, அந்த மாட்டரைக் ...ாண்டு வந்த உறுப்பினர் மட்டும் தான் பேச வேண்டும். ...ாஷன் மூவ் பண்ணின பிறகு எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் ...வண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் பேசலாம். இதிலே ...ந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது.

**திரு. க. சுப்பு :** பிரிவிலெஜ் பற்றிய புரொசிஜர் சம்பந்தமாக ...னிஸ்டர் குறுக்கிட்டு விளக்கம் சொல்லியிருப்பதால், நாங்களும் ...தன்மீது பேச கடமைப்பட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு ...றுப்பினர் சுப்பு அவர்கள் வேறு இடத்திற்குப் போகிறார். ...ஸ்-யூஸ் ஆகியிருக்கிறதா, இல்லையா என்பது வேறு பிரச்னை. But, what the Hon. Minister has informed the House is correct.

**திரு. ஏ. ரகுமான் கான் :** நான் இந்தப் பிரச்னையை எழுப்பி ...ருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விதி 40 (1)-ன் கீழ் ...ற்கனவே நீங்கள் ஒரு நோட்டீஸ் கொடுத்திருக்கிறீர்கள். அதை அனுப்பிய பிறகு, இங்கே திரும்பவும் ஒரு உரிமை மீறல் பிரச்னையை எழுப்பியிருக்கிறீர்கள். முதல் கடிதம் கொடுத்த ½ மணி நேரத்திற்குள், அது ஆய்வில் இருக்கின்ற நேரத்திலேயே, திரும்பவும் உரிமை மீறல் பிரச்னையை எழுப்பியிருக்கிறீர்கள்.

**திரு. ஏ. ரகுமான்கான் :** பிரிவிலெஜ் மேட்டர் எழுப்பக் கூடாது என்று சொல்கிறீர்களா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உரிமை மீறல் பிரச்னையின் மீது நான் தீர்ப்பளிக்கிறேன்.

**திரு. ரகுமான்கான் :** நான் சொல்வதை இன்னும் நீங்கள் கேட்கவில்லையே ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் ரெயில்ஸ் பண்ணியது என்னவென்றால், அமைச்சர் கொடுத்த தகவல் தவறானத் தகவல் என்பது. அப்படித் தவறானத் தகவல் என்பதை நிரூபிப்பதற்கு உங்களிடம் ஆதாரம் இருக்கின்றது என்று சொல்லியிருந்தால், உங்களிடம் ஆதாரம் இருக்கிறது, ஆகவே தவறான தகவலை அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிறார்கள் என்ற நிலைமையிருந்தால், அது இந்த அவையின் உரிமையை மீறிய பிரச்னையாகலாம். தவறு இருக்கலாம், தவறு நடந்திருக்கலாம் என்ற ஊகத்தின் அடிப்படையிலே இந்த உரிமை மீறல் பிரச்னையை எழுப்பி யிருக்கிறீர்கள். ஆகவே, இந்த உரிமைப் பிரச்னையை நான் தள்ளுபடி செய்கிறேன்.

**திரு. ஏ. ரகுமான்கான் :** தங்கள் தீர்ப்பை ஒத்துக் கொள்கிறேன். தவறு செய்யவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்வதற்கு என்ன ஆதாரம் ?

(திரு. கே. கந்தசாமி எழுந்திருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தயவுசெய்து அமருங்கள். அடுத்து, மாண்புமிகு செய்தி, சுற்றுலாத் துறை அமைச்சர்.

## (4) மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

* **மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பப் பிரிவின் மானியக் கோரிக்கையின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் விளக்கமாக பதில் சொல்லிக் கொண்டிருப்பதற்கு அவையின் நேரம்





அனுமதிக்கவில்லை என்பதை நீங்கள் உணர்வீர்கள். என்றாலும், ஒன்றிரண்டு முக்கியமான கருத்துக்களுக்கு விளக்கம் அளித்து விட்டு, என்னுடைய வேண்டுகோளை இந்த அவையின் முன்னாலே வைக்க, அனுமதி அளிக்க வேண்டுகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் மாண்புமிகு கணேசன் அவர்கள் அவர்களுடைய உள்ளத்திலே நீண்ட நாட்களாக, நீண்ட காலமாகக் குமுறிக் கொண்டிருந்த ஒரு உணர்வை பேசத் துவங்குகின்றபோதே எடுத்து முன்னாலே வைத்துவிட்டார்கள். விவரங்களை எடுத்துச் சொல்லி, சில குற்றங்களைச் சொல்லி, இவைகளிலே ஊழல் இருக்கின்றது என்று சொல்வதற்கு பதிலாக, அவர்கள் இந்த அரசின் மீது, இந்த இலாகாவின் மீது, இந்தத் துறையின் மீது ஊழல் என்று சொல்ல வேண்டுமென்ற ஆசையின் காரணமாக, எடுத்தவுடனேயே அவர்கள் ஊழல் பல்லவியை ஆரம்பித்தார்கள்.

அவர்கள் ஊழல் என்று சொன்னவுடனே, நான்கூட அதிர்ச்சி அடைந்துவிட்டேன். பின்னாலே பெரிய குற்றச்சாட்டுக்களைச் சொல்வார்கள் என்று எண்ணினேன். கடைசியிலே அவர்கள், குடியரசுத் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே இருந்த அதிகாரியை வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, அது ஊழல் இல்லையா என்கிறார்கள். அப்படியெல்லாம் பார்த்தால், ஒவ்வொரு ஆட்சியிலேயும் உள்ள எல்லா அதிகாரிகளையும் மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும். புதிய அரசு வந்தால் கூண்டோடு புதிய அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்ற நடைமுறைப் பழக்கம் இந்த நாட்டின் அரசியல் சட்ட ரீதியாக வந்தால், அதைப் பற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

அடுத்தபடியாக, 'தென்னகம்' நிருபராக இருந்தவர் பஸ் பாசைப் பற்றிச் சொன்னார்கள். அந்த பஸ் பாஸ் என்னிடம் இல்லை, தொலைந்துவிட்டது என்று எழுதி அனுப்பியிருக்கிறார். உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களின் உதவியாளராக வருவதற்கு முன்பே அது தொலைந்து விட்டது என்று சொல்லி யிருக்கிறார். அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டியது டிரான்ஸ்போர்ட் நிர்வாகம். அது வேறு விஷயம். அதற்குள்ளே நுழைய நான் விரும்பவில்லை.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1978 மார்ச் 7

அதற்கு அடுத்தாற்போல் ஏதோ டாக்குமென்டரி படம் எடுப்பதைப் பற்றிச் சொன்னார்கள். இந்த செய்தி சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரை யாருக்கும் தனிப்பட்டவர்களுக்கு எந்தவிதமான படங்களையும் எடுப்பதற்கு அனுமதி வழங்குவது இல்லை என்பதை மிகத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் டாக்குமென்டரி—கருத்து விளக்கப் படங்கள் எடுப்பதற்குச் சில விதிமுறைகளை வகுத்திருக்கிறோம். அதற்கான அடிப்படைக் கதை—சீனரியோ, ஸ்க்ரிப்ட்—தருவதற்கு பல எழுத்தாளர்களிடத்திலிருந்து, டைரக்டர்களிடத்திலிருந்து ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. அவர்களிடத்தில் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறதே தவிர, மொத்தமாகப் படம் எடுக்கும் உரிமையை இன்னும் இந்தத் திரைப்படத் துறைதான், அரசு திரைப்படத் துறைதான் வைத்திருக்கிறது. வேறு தனிப்பட்ட வாரியங்கள், கைத்தறித் துறை போன்ற வாரியங்கள் அவர்களுடைய விளம்பரத்திற்காக ஒரு நிமிஷப் படங்கள், விளம்பரத்திற்காக எடுக்கப்படுகிற படங்கள் இந்தத் துறைக்கு அப்பாற்பட்டது, எங்களுடைய கவனத்திற்கு வாராதது என்பதால் அங்கே என்ன நடந்தது என்று தெரியாது என்பதை மறுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, விளம்பரத்தைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு நாஞ்சில் வின்சென்ட் பேசும்போது 'நீங்கள் செய்யவில்லையா?' என்று கேட்டதற்கு மாண்புமிகு கணேசன் அவர்கள் 'நாங்கள்தான் தவறு செய்தோம்; அந்தத் தவறை நீங்கள் ஏன் செய்தீர்கள்?' என்று கூறி அதை ஒப்புக் கொண்டதற்கு நன்றி. ஆனால் அந்தத் தவறையும் இந்த அரசு செய்யவில்லை என்பதை இந்த மன்றத்திற்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்று முன்தினம் ஒரு கேள்விக்குப் பதிலளித்தேன். முரசொலிக்கு ஒரு ஆண்டில் எவ்வளவு விளம்பரச் செலவு என்று கேட்டார்கள். நான் அதை வெளியிட வேண்டாமென்றுதான் வைத்திருந்தேன். இன்றைக்குக் கேட்பதால் சில உண்மைகளை வெளியிடலாம் என்று விரும்புகிறேன். ஒரு ஆண்டில் பத்தே மாதத்தில் 3,46,000 ரூபாய்; அதற்கு முந்திய ஆண்டு



[திரு. ஆர். எம். வீரப்பன்] [1978 மார்ச் 7

3,75,000 ரூபாய்; அதற்கும் முந்திய ஆண்டு 2,56,000 ரூபாய். ஒரு குறிப்பிட்ட மூன்றாண்டுக் காலத்தில் 2 ஆண்டு 10 மாத காலத்திற்குள் ஒரு பத்திரிகை சுமார் 10 லட்சம் ரூபாயை விளம்பரக் கட்டணமாகப் பெற்றிருக்கிறது. தரப்பட்டிருக்கும் கணக்குப்படி பத்திரிகையின் விநியோக எண்ணிக்கை இருபதாயிரத்து நூற்றுச் சொச்சம். ஆனால் அதே காலத்தில் கழகத்தின் பத்திரிகையான, கட்சிப் பத்திரிகையான 'நம் நாடு' பத்திரிகைக்கு எதுவுமே கொடுக்கவில்லை. அதே நேரத்திலே வேறு சில பத்திரிகைகளுடைய பெயரே அங்கே இல்லை. மக்கள் குரல் போன்ற பத்திரிகைகளுக்கு விளம்பரமே கொடுக்கப்படவில்லை என்றெல்லாம் சொன்னார்கள்.

ஆனால் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைக்கு இந்த அரசு எந்தப் பத்திரிகையையும் விளம்பரப் பட்டியலில் இருந்து நீக்கவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் குறிப்பாகச் சொல்லுகிறேன்—1976 ஆம் ஆண்டு இங்கே ஆளுநர் ஆட்சி நடைபெற்றபோது அரசு விளம்பரம் தருவதற்கான பட்டியலில் இருந்து 'முரசொலி', 'விடுதலை' போன்ற பத்திரிகைகள் நீக்கப்பட்டிருந்தன. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் 'முரசொலி', 'விடுதலை' பத்திரிகைகள் இணைக்கப்பட்டு இன்றைக்கு விளம்பரங்கள் தந்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக 'அலை ஓசை' பத்திரிகை பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர் அலை ஓசையைப் பார்க்கிறவர். அவ்வாறு பார்க்கும்போது அவருக்கு வேறு விஷயங்கள் கண்ணில் படுகின்றனவே தவிர, அரசு விளம்பரங்கள் அவர் கண்ணில் படவில்லை என்று தெரிகிறது. எனவே அரசு விளம்பரங்கள் அதில் பயன் அளிக்கவில்லை என்பதும் தெரிகிறது. என்றாலும் அதற்கும் விளம்பரம் தருகிறோம். இரண்டு நாள் முன்பு கூட தமிழக அரசு பரிசுச் சீட்டு விளம்பரம் கிட்டத்தட்ட அரைப் பக்கத்திற்கு அதிலே வந்திருக்கிறது. அதைப் பார்க்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1978 மார்ச் 7

ஆகவே, இந்த அரசுக்கு எந்தப் பத்திரிகைகள் எந்தக் கருத்தைச் சொல்லுகிறது என்பதில் பயம் இல்லை; அதற்காக அஞ்சவில்லை. எல்லாப் பத்திரிகைகளுக்கும், அரசு வைத்திருக்கும் இலக்கணத்திற்கு உட்பட்டால் அதற்கு விளம்பரம் தருவதில் தயக்கம் இல்லை. எந்த விளம்பரத்தை, எப்போது, எந்தப் பத்திரிகைக்கு, எந்தத் தொகையின் அடிப்படையில் தருவது என்று பரிசீலிக்கப்பட்டு தரப்படுகிறது என்பதிலே தெளிவான கொள்கை இருக்கிறது. எந்தப் பத்திரிகையையும் நாங்கள் அலட்சியப்படுத்தவில்லை. கடந்த காலத்தில் செய்யப்பட்ட, பத்திரிகை தர்மத்தை மீறிச் செய்யப்பட்ட, நியாயத்தை மீறிச் செய்யப்பட்ட அந்தக் கருத்துக்கள், அந்தக் கொள்கைகள் இப்போது அரசுக்கு இல்லை - என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலாப் பொருட்காட்சியைப் பற்றிச் சொன்னார்கள். ஊரெல்லாம் புகழ்ந்தது. மத்திய அரசிலிருந்து வந்த அமைச்சர்கள் எல்லாம் பாராட்டினார்கள்; குடியரசுத் துணைத் தலைவர் பாராட்டினார்; வெளி மாநிலங்களிலிருந்து வந்த அமைச்சர்கள் எல்லாம் பாராட்டினார்கள். சென்னை மாநகரத்தில், தமிழகத்தில் இருந்து வந்த மக்கள் எல்லாம் பாராட்டினார்கள். பெருமளவுக்கு கண்டவர்கள் எண்ணிக்கை அதிகரித்தது. அதை எல்லாம் பாராட்ட அவர்களுக்கு மனம் இடம் தராது; இடம் தரவில்லை; பொறுத்துக் கொள்கிறேன். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவச அனுமதிச் சீட்டுகள் வழங்கப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒருவேளை வெளியூர்களில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர் களுக்குத் தரவில்லையா என்பது தெரியாது. முறைப்படி ஒரு நாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நானே கையெழுத்திட்டு அழைத்து, விருந்து கொடுத்து சுற்றிக் காண்பித்திருக்கிறேன். அதைத் தவிர சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தனியாக பாஸ், குடும்பத்தோடு பார்க்க இலவச அனுமதிச் சீட்டு கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். ஆகவே அங்கே எதையும்



1978 மார்ச் 7] [திரு. ஆர். எம். வீரப்பன்]

[பிற்பகல் 2.00]

நாங்கள் வேண்டாம் என்று தடைப்படுத்தவில்லை. இன்னும் சொல்லப் போனால் ஏலம் விடுதல், டெண்டர் விடுதல் போன்ற காரியங்களிலே மிக அக்கறையோடு மிகத் தெளிவாக கடந்த ஆண்டுகள் நடைபெற்ற தவறுகள் நீக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆர்ட் டைரக்டர் பற்றிச் சொன்னார்கள், அங்கமுத்து என்று பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். புதிதாக எங்களுக்கு வேண்டியவர் மட்டுமில்லை, அவர்களுக்கும் வேண்டியவர் தான். அவர் மிகச் சிறந்த கலைத் துறை நிபுணர். அந்த ஆட்சிக் காலத்திலேயே ஓவியர்களைத் தேர்ந்தெடுக்கின்ற குழுவிலே அவரைப் போட்டிருக்கிறார்கள். மாமல்லபுரத்தை அப்படியே கொண்டுவந்து முன்னாலே நிறுத்த வேண்டும், அதற்குத் தகுதியானவரைத் தாருங்கள் என்று நாங்கள் கேட்டோம். வழக்கமாகக் கொள்ளை அடித்துக் கொண்டிருந்தவர்கள் இப்போது கொள்ளை அடிக்க முடியவில்லை, அதற்காக ஏதாவது சொல்லி யிருக்கலாம், ஆனால் அதைப் பார்த்தவர்கள் அத்தனை பேருமே மாமல்லபுரத்தை நேரிலே அப்படியே பார்ப்பது போல் இருக்கிறது என்று தான் சொன்னார்கள். ஆகவே இப்படிப்பட்ட திறமையாளர் களுக்கு இழுக்குத் தேட வேண்டாம் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நிருபர்களுக்கு பாஸ்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள், அதைப் பற்றி நான் கடைசியிலே சொல்கிறேன்.

தியேட்டர் கார்ப்பரேஷன் வட்டி விகிதத்தைப் பற்றிச் சொன்னார்கள். தியேட்டர் கார்ப்பரேஷன் சர்க்காருடைய மூலதனத்திலிருந்தும் வங்கிகளிடமிருந்து வட்டிக்கு வாங்கும் மூலதனத்திலிருந்தும் வழங்குகிற கடன். அப்படி வாங்கிய கடனை வைத்து 58 பேர்கள் தியேட்டர்களை கட்டி முடித்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வாங்குகிற கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லையென்றால் திருப்பிக் கொடுக்காதவர்களுக்கு வட்டி விகிதம் ஏன் அதிகமாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார்கள் என்றால் திருப்பிக் கொடுக்காதவர்களை எப்படிக் கொடுக்கச் செய்வது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தான் சொல்ல வேண்டும்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1978 மார்ச் 7

இப்படித் திருப்பிக் கொடுக்கப்படாத காரணத்தால் கடன் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. தியேட்டர்களை கட்டி முடித்தவர்கள் திருப்பித் தராத காரணத்தாலே இன்றைக்கு கடன் கேட்டு வந்துள்ள மனுக்களை ஏற்றுக்கொள்ள முடியாமல் அவையெல்லாம் தேங்கி நிற்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய காங்கிரஸ் உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் காமராஜர் நினைவாலயத்தைப் பற்றிச் சொன்னார்கள். காமராஜர் நினைவாலயத்தை மிக முக்கியமான ஒரு இடமாக, தலைநகருக்கு வருகின்ற எல்லா மக்களும் பார்த்து அதை வணங்குகின்ற ஒரு இடமாக, அதை மிகச் சிறந்த இடமாக மாற்றியமைப்பதற்காக தமிழக அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சில திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திற்கு நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைச் சொல்கிறபோது ஈரோட்டிலே பெரியார்—அண்ணா நினைவு இல்லம், பெரியார் வீட்டை முந்தைய அரசு வாங்கி பெரியார்—அண்ணா நினைவு இல்லமாக மாற்றினார்கள். மாற்றியவர்கள் எப்படி அதை வைத்திருந்தார்கள்? அங்கே இரண்டு காவலர்களை நியமித்து அந்த இடத்தைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் எப்படி பாதுகாக்கப்படும் என்பதை நீங்களே கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எதிலே மிகுந்த அக்கறை காட்டப்பட்டிருக்கிறது என்றால் மின்சார ஒளி அமைப்பு ஏற்படுத்தி, பெரியார், அண்ணா, இன்றைய எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருணாநிதி ஆகியவர்களின் உருவப் படங்கள் மாறி மாறித் தெரிவதைப் போல் ஒருவரிலே மூவர் என்று போட்டு, பெரியார்—அண்ணா இல்லத்திலே பெரியார், அண்ணா இவர்களோடு முன்னாள் முதலமைச்சர் தன்னையும் இணைத்துக் கொண்டதில் எடுத்துக் கொண்ட அக்கறை நினைவு இல்லத்தைப் பாதுகாப்பில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அந்த இல்லத்தை நல்ல முறையிலே பாதுகாத்து விளங்கச் செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1978 மார்ச் 7] [திரு. ஆர். எம். வீரப்பன்]

நாடகக் குழுக்கள்பற்றி காங்கிரஸ் உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் சொன்னார்கள். இந்த மாதத்திற்கு 20 நாடகக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு எல்லா நாடகக் குழுக்களையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தக் காட்சி பற்றிச் சொன்னார்கள். முன்பே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் அறிவித்திருக்கிறார்கள். மத்திய செய்தி, ஒலிபரப்புத் துறை அமைச்சருக்கு நேரிலே கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தத் தணிக்கைக் குழுவிலே நம்முடைய அரசினுடைய அதிகாரம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது மத்திய சர்க்காருடைய இலாகாவைப் பொறுத்த விஷயம். நாம் நிச்சயமாக அதற்காகப் போராடுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் வானொலித் துறையைப் பற்றிச் சொன்னார்கள். வானொலித் துறையும் மத்திய அரசினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டதுதான். ஆகவே, நம்முடைய விருப்பங்களை அங்கே நிறைவேற்ற முடியாது. அதற்காக முன்பு இருந்தவர்கள் செய்ததைப் போல மிரட்டுகின்ற பழக்கம் எங்களுக்குக் கிடையாது. இதைச் செய்கிறாயா என்று கேட்டு, பத்திரிகைக் காரர்கள் ஆதரித்து எழுதவில்லையென்றால் நூறு பேர், இருநூறு பேர்களை அனுப்பி கலவரம் செய்வது, கல்லெறிவது போன்ற பழக்கங்கள் எங்களுக்குக் கிடையாது. ஆனால் முறையாக, நிச்சயமாகக் கண்டிப்பாக இந்த மாநில மக்களுடைய நலன், இந்த அரசினுடைய கொள்கைகள், இந்த மாநில மக்களுக்குத் தேவையான கொள்கைகள் வானொலியிலே ஒலிபரப்பச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழரசு பத்திரிகையைப் பற்றிச் சொன்னார்கள், சுவாமிதாஸ் அவர்களும் சொன்னார்கள். தமிழரசு முன்னால் எப்படி நடந்தது என்பது எனக்குத் தெரியாது. இன்றைக்குப் பல்வேறு கருத்துக்களையும் அதிலே வெளியிட வேண்டுமென்ற முயற்சியிலே

தான் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். ஆகவே, எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களும் மக்களுக்கு நன்மை பயக்கின்ற கருத்துக்களை, கட்டுரைகளை அனுப்பினால் தமிழரசு அதை வெளியிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சுவாமிதாஸ் அவர்கள் சொன்ன ஒரு கருத்து, சர்வீஸ் கமிஷன் விளம்பரங்கள், அதனுடைய ரிசல்ட், டெண்டர்கள் ஆகியவைகளைப் பற்றியது. இதுபோல் முன்னாலே முயற்சி செய்து, தமிழரசு பத்திரிகையிலே விளம்பரங்களாக வெளியிடுவதற்காக முயற்சித்தார்கள். அதிலே ஏதோ பல சிக்கல்கள் வந்ததன் காரணமாக அது நிறுத்தப்பட்டு விட்டதாகச் சொல்லி இருக்கிறார்கள். அதைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். அது எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு முயன்று நிறைவேற்றுவோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரையரங்குகளிலே உள்ள சம்பளத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நேற்றுகூட திரையரங்கு நிறுவனத்தைச் சேர்ந்த தொழிற்சங்கப் பொறுப்பாளர்கள் வந்து சந்தித்தார்கள். தென்னிந்திய வர்த்தக சபையினிடத்தில் போய் பேசி அதற்கான முடிவையெடுக்க அரசு முன்வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளம்பரங்களைப் பற்றி நான் முன்பே தெரிவித்து விட்டேன். அதைப்போல கருத்துப் படங்களையும் இன்றைக்கு அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த அரசு அந்தத் துறையிலே வேகமாக மட்டும் நடவடிக்கை எடுக்காமல் முறையாகவும், ஒழுங்காகவும் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. கருத்துப்படங்களை வெளியிடும்பொழுது தவறான முறையிலே வெளியிடப்பட்டு விடக்கூடாது என்று இந்த அரசு நினைக்கிறது. தீண்டாமை பற்றிய படமும் தயாரிப்பில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்னொரு படத்தையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் படத்தைப்பற்றி நான் இப்பொழுதே சொல்லிவிடுகிறேன். முகவை மாவட்டத்தில், அருப்புக்





கோட்டையில், இராமநாதபுரம் மற்ற பகுதிகளிலே ஏழ்மை நிலையிலுள்ள கிராம மக்கள் குடிக்கத் தண்ணீர் எடுக்க எப்படியெல்லாம் கஷ்டப்படுகிறார்கள் என்ற காட்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. எப்படி, எத்தனை மைல்கள் நடந்து போய் தாய்மார்கள் தலையில் குடத்தை வைத்துக்கொண்டு செல்கிறார்கள் என்று ஒரு காட்சி. ஆற்று மணலைத் தோண்டித் தோண்டி ஊறுகின்ற தண்ணீரை எப்படி எடுத்து வருகிறார்கள் என்று ஒரு காட்சி. இன்னொரு காட்சி, வயல் வெளியிலே உள்ள பம்பு செட்டிலேயிருந்து வரும் தண்ணீரைப் போய் பிடிக்கிறார்கள், அந்தத் தண்ணீரைப் பிடிக்க விடாமல் காவல்காரன் அந்தச் சகோதரிகளை விரட்டுகிறான். இப்படி குடிக்கும் தண்ணீருக்குக்கூட கிராமப்புற மக்கள் எப்படித் தொல்லைப்படுகிறார்கள் என்ற காட்சி எடுக்கப்படுகிறது. அதைத்தொடர்ந்து அந்த மக்களுக்காக குழாய் மூலம், தரைக்கு அடியிலே, பூமிக்கு அடியிலேயும் உள்ள தண்ணீரைக் கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு எப்படி விவசாயிகள் என்ற பெயரால் எதிர்ப்புகளைத் தெரிவிக்கிறார்கள், குடிக்கத் தண்ணீர் கொடுக்கக்கூடத் தடை வருகிறது என்றெல்லாம் செய்திப்படங்களை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு கலைவாணர் அரங்கத்தைப்பற்றி சுவாமிதாஸ் அவர்கள் சொன்னார்கள். அதைப் புதுப்பித்தது இந்த ஆட்சிக் காலத்தில் அல்ல. முன்பே நடந்து விட்ட விஷயம். இருப்பதைப் பாதுகாப்பது என்பதுதான் எங்களுக்கு உள்ள பிரச்னை.

மற்றபடி திரையரங்கு நடத்துவது பற்றிச் சொன்னார்கள். திரையரங்குகள் வியாபார ஸ்தாபனங்கள் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் அவைகளை நடத்துவதில் எவ்வளவு சிக்கல் வருகிறது என்பது இன்றைக்கு நகராட்சிகளே தியேட்டர்களை தஞ்சையிலும், திருச்சியிலும் கட்டி குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள் என்பதிலிருந்து தெரியும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றபடி செய்தித் துறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு கணேசன் அவர்கள் தான் மிகுந்த உணர்ச்சியோடும், பரபரப்போடும் ஊழலை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று

தூடித்துக்கொண்டிருந்து சொல்லிவிட்டார்கள். ஆகவே, ஊழல்
எங்கேயிருக்கிறது என்பதை நாட்டுமக்கள் தெரிந்து கொள்
வார்கள்.

சுற்றுலா அபிவிருத்தித் திட்டங்கள் எடுத்துக்கொள்ள
வேண்டியது அவசியம்தான். ஏனென்றால் எல்லோரும் சுற்றுலாத்
திட்டத்தை வளர்க்க வேண்டுமென்றுதான் கேட்டுக் கொண்டிருக்
கிறார்கள். எனவே இதற்கு விடையளித்து விளக்கம் சொல்ல
வேண்டியதில்லை. இந்த முறைதான் சுற்றுலாத் துறைக்கு
என்று தனியாகக் கருதி மானியக் கோரிக்கை வைக்கப்பட்டி
ருக்கிறது. அந்த அளவிற்கு வெற்றி பெற்றிருக்கிறோம்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும்
சுற்றுலா மையங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கருதிக்கொண்டி
ருக்கிறார்கள். எனவே அது வளரும். ஒன்றை மட்டும் வேண்டு
கோளாக விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 2-10)

கன்னியாகுமரியைப் பற்றி நம்முடைய மாண்புமிகு
உறுப்பினர் சுவாமிதாஸ் அவர்கள் சொன்னார்கள். கன்னியா
குமரிக்குப் போடப்பட்டிருக்கிற அந்த மாவட்ட சுற்றுலாக்
குழுவிலே, நம்முடைய சுவாமிதாஸ் அவர்களும் போடப்பட்டி
ருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது
மாத்திரமல்ல, நாடாளுமன்ற உறுப்பினர் குமரி அனந்தனையும்
போட்டிருக்கிறோம். ஆனால், கேட்க வேண்டிய இடம், தட்ட
வேண்டிய கதவு இது அல்ல—மத்திய சர்க்கார். தயவு செய்து,
அதற்கு உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் கோவளத்தைப் பற்றிச் சொன்னீர்கள். யுனைட்டைட்
நேஷன்ஸில் இருந்து வந்த குழு, இந்தியாவிலே 3 இடங்களைத்
தேர்ந்தெடுத்துச் சொன்னது. ஒன்று, கோவளம். இன்னொன்று,
கோவா. மற்றொன்று, நம்முடைய மாமல்லபுரம். உலகத்திலேயே
மிகச் சிறந்த கடற்கரை வாசஸ்தலமாக மாற்றுவதற்கு மற்ற





எல்லா இடங்களையும் விட அதிகத் தகுதியைக் கொண்டது
நம்முடைய மாமல்லபுரம். மாமல்லபுரத்தில் வெறும் கடற்கரை
மாத்திரம் அல்ல ஆயிரமாயிரம் ஆண்டுகாலமாக கற்களிலே
செய்த சிற்பங்களெல்லாம் நம் பெருமையைச் சொல்லும்
அளவில், அங்கு சிறபங்கள் உள்ளன. உங்களுக்கெல்லாம்
தெரியும். கோவளத்திற்கு ரூ. 2 கோடிக்கு மேல் செலவு செய்
திருக்கிறார்கள், மத்திய அரசினர்.

நம்முடைய நாஞ்சில் வின்சென்ட் அவர்கள், அவருக்கே உரிய
பாணியில் அழகாகச் சொன்னார்கள், கன்னியாகுமரி எப்படி
இருக்கிறது என்றால், நம்முடைய மூன்று கடல்களும் முத்த
மிடுகிற இடம், குமரிமுனை; அங்கே விவேகானந்தர் பாறை புகழ்
பெற்ற பாறையாக இருக்கிறது; காந்தியார் மண்டபம் இருக்
கிறது. இன்னும் அற்புதமான இடங்களெல்லாம் இருக்கின்றன.
நிச்சயமாக, அதை அகில இந்திய அளவிலே, மிகச் சிறந்த
சுற்றுலா தலமாக மாற்றியாக வேண்டும். அதற்காக
உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, மத்திய சர்க்காரிடம்
தெரிவிக்க வேண்டும்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், ஒலி—ஒளி காட்சிக்கு
முந்தைய மத்திய அரசு அனுமதி தந்தது. மதுரையிலே, ஒலி—
ஒளி காட்சிக்கு அனுமதி கொடுத்தார்கள். ஆனால், ஆஸ்திகப்
பெருமக்கள் கருத்து மாறுபாடு கொண்ட காரணத்தாலே,
மாமல்லபுரத்திலே வைக்கலாம் என்று சொன்னார்கள்.
இப்பொழுது உள்ள அரசு அதுவும் கிடையாது, வேண்டுமானால்
திரைப்படம் எடுத்துத் தருகிறோம் என்று சொல்கிறார்கள்.
இன்னொரு செய்தி என்னவென்றால், கலைநிகழ்ச்சி நடத்தலாம்
என்று சொல்கிறார்கள். தயவு செய்து, ரூ. 2 கோடி, 3 கோடி
இல்லாவிட்டாலும், ரூ. 1 கோடியாவது மாமல்லபுரத்திற்கு
ஒதுக்கவேண்டும். கன்னியாகுமரியை நிச்சயமாகப் புகழ்
பெற்ற சுற்றுலா தலமாக மாற்றியாக வேண்டும். அதை
சுற்றுலாத் துறை அமைச்சர்கள் மாநாட்டிலே எடுத்துச் சொல்லி
யிருக்கிறேன். உறுப்பினர் சுவாமிதாஸ் போன்றவர்கள்,
கன்னியாகுமரியிலேயிருந்து வந்தவர்கள் என்ற அந்த உரிமைக்

காக மத்திய அரசிடம் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும். மாமல்லபுரத்தை விட்டுவிடுங்கள். அதை மற்றவர்களிடத்திலே நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லி, உங்களிடத்திலே வேண்டுகோளாக விடுக்க விரும்புகிறேன்.

மற்றபடி இங்கே நிருபர்களுடைய பாஸ் வசதியைப் பற்றிச் சொன்னார்கள். நிருபர்கள்மேல், மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்களோ, அதைவிட அதிகமான அக்கறையை இந்த அரசு கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன், அல்லது இந்த அரசை நடத்துகிற கட்சியும் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் பற்றிய பரிசிலனைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது இங்கே ஒரு அறிவிப்பையும் தெரிவிக்க இருக்கிறோம்—பத்திரிகையாளர்களுக்காக என்பதையும் நான் தெரிவித்துக் கொண்டு, இந்த பஸ் பாஸ் பொறுத்த அளவில், ஒவ்வொரு மாவட்டத்திற்கு உள்ளேயும் செல்ல—அக்ரெடிட்டேஷன் இருக்கிற, உறுப்பினர்கள் சொல்கிறபடி ஏற்றுக்கொள்ளப்பட்டு, பத்திரிகை நிருபர்களுக்கு, இலவச பாஸ் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அனுமதியோடு இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்.)

அது மாத்திரமல்ல, நீண்ட காலம் பணியாற்றி உடல் நலம் குன்றிய—ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்கள் மற்றும் எதிர்பாராமல் இயற்கை எய்திய பத்திரிகையாளர்களின் குடும்பங்கள் வறுமையில் வாடுவதைப் போக்கி அவர்கள் நலனுக்கான வழிவகைகள் காண அரசு முயற்சி எடுத்து வருகிறது.

இந்த முயற்சியின் முதற்கட்டமாக குறைந்த பட்சம் ரூ. 5 இலட்சம் கொண்ட "பத்திரிகையாளர்கள் உதவி நிதி" ஒன்றினை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. அரசு கொடுக்கும் ஆரம்பத் தொகை பத்திரிகை நிர்வாகங்களும், பத்திரிகையாளர்களும் வழங்கும் பங்கு மூன்றையும் அடிப்படையாக வைத்து, இந்த நிதி ஆரம்பிக்கப்படும். இந்த உதவி நிதியின் முதலீட்டுத் தொகைக்கு அரசின் பங்காக ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு



செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்) இந்த நிதியிலிருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு மாதம் ஒன்றுக்கு ரூ. 100-க்கு குறையாமலும் ரூ. 250-க்கு மேற்படாமலும் உதவித்தொகை வழங்கப்படும்.

இந்த திட்டத்தின் விவரங்கள் பத்திரிகை நிர்வாகத்தினருடனும் பத்திரிகையாளர் பிரதிநிதிகளுடனும் பேசி முடிவு செய்யப்படும். இத்திட்டத்தை நிர்வகிக்க ஒரு குழுவும் நியமிக்கப்படும்.

இந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அறிவித்து இருக்கிறேன். அது மாத்திரம் அல்ல. எழுத்தாளர்களை வாழ வைக்க பத்திரிக்கைகள் வாழவேண்டும். பத்திரிக்கைகள் வாழவேண்டுமென்றால் சிறு பத்திரிகைகளும் வாழவேண்டும். இதற்கும் ஒரு திட்டம் அறிவிக்கப்படுகிறது.

"குறைவான பிரதிகள் விற்பனையாகும் தரமுள்ள நாளிதழ்கள், வார, மாத இதழ்கள் அது மட்டுமல்ல தமிழ் இலக்கியப் பதிப்புக்கள் பல, தமிழ்நாட்டிலிருந்து பிரசுரிக்கப்படுகின்றன. இவைகளுக்குத் தேவைப்படும் காகிதம் News Print பெரும்பாலும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகின்றது. இவர்களுக்குக் காகிதம் இறக்குமதி செய்வதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. மொத்தமாக வாங்குவதால் செலவு குறையும் ஆனால் அப்படி வாங்க அவர்களுக்குப் போதிய நிதி வசதி இருப்பதில்லை. இதைக் கருத்தில் கொண்டு காகிதம் வாங்குவதற்கு உதவி செய்ய வேண்டும் என்று அரசு எண்ணுகிறது. தமிழக அரசின் சார்பில் Small Industries Development Corporation (SIDCO) மூலமாக காகிதம் இறக்குமதி செய்து சிறு பத்திரிகைகளுக்கும், புத்தகங்களுக்கும் கொடுக்க ஒரு திட்டம் பரிசீலிக்கப்படும். இதனால் குறைந்த விலையில் காகிதம் வழங்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது". இங்கு பத்திரிகைகளுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் விளம்பரம் மாத்திரம் கேட்டார்கள். நாங்கள் விளம்பரம் மாத்திரம் அல்ல, இந்த உதவியையும் செய்வோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மருதுபாண்டியன் நினைவு சின்னத்தைப் பற்றி இங்க பேசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சிவசாப அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே மருதுபாண்டியர்களுக்குட் புகழ் மிக்க நிரந்தரமான, சிறந்த நினைவுச் சின்னம் அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்து அதற்கென்று ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய ஆலோசனையை ஏற்று மிக விரைவிலே அந்த நினைவுச் சின்னத்தை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இந்த அறிவிப்பு மிகவும் மகிழ்ச்சியான ஒன்று. வரவேற்கிறேன். இன்று மருதுபாண்டியனுடைய ஒரே மகன் துரைசாமி என்பவர் 1802-லே, கப்பலிலே ஏற்றப்பட்டு, அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது. அதனைப் பற்றிய குறிப்புகள், தகவல்கள் நிறைய இருக்கின்றன. அந்த வாரிசு இப்போது பினாங்கில் இருப்பதாக தகவல் இருக்கிறது. அதை எல்லாம் கண்டுபிடித்து, அவர்களைப் பற்றி அறிமுகம் செய்வதற்கும், அவைகளை எல்லாம் பெருமை யோடு பரப்புவதற்கும் இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** நிச்சயமாக இது சம்பந்தமான தகவலை தந்தால், தொடர்பு கொண்டு வேண்டிய வசதிகளை, முறையான வசதிகளை, செய்வதற்கு, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நிச்சயமாக அனுமதிப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஒலி ஒளிக் காட்சியைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். அது கழுதை தேய்ந்து கட்டெறும்பாக மாறி விட்டதுபோல, நாடகம் நடத்துவதற்கு அனுமதி தருகிறோம், அல்லது திரைப்படம் எடுத்துத் தருகிறோம், என்று சொல்கி றார்கள். அந்த அளவுக்கு நிலைமை இருக்கிறது.

மாமல்லபுரத்தைப் பற்றியும் மற்ற சுற்றுலா தலங்களைப் பற்றியும் உலகம் முழுவதும் இருந்து வருபவர்கள் பார்த்துப் பாராட்டுகின்ற அந்த முயற்சிகளுக்கு ஊக்கம் அளித்தாக வேண்டும். அதற்காக மாநில அரசு மாத்திரம் அந்த



முயற்சியிலே ஈடுபட முடியாது. ஏனென்றால் நான் முன்னாலேயே சொன்னேன். கேரளாவில் 2 கோடி ரூபாய் செலவு செய்யப் பட்டிருக்கிறது. மத்திய அரசால். மாமல்லபுரத்திலே ஒரு ஐ.டி.டி.சி. "Temple Bay" என்ற அரசாங்க விடுதிகட்ட 30 இலட்சம் ரூபாய்தான் செலவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக நான் குறை சொல்ல வில்லை. அவர்களுக்கு எத்தனையோ பொறுப்புகள் இருக்கின்றன. இருந்தாலும் மாமல்லபுரத்தை கவனத்திலே எடுத்துக் கொள்ள வேண்டும். கன்னியாகுமரியை மறந்துவிடக் கூடாது, கைவிட்டு விடக்கூடாது என்று வேண்டுகோள்விட நான் கடமைப்பட்டிருக் கிறேன்.

மற்றபடி வேறு பெரிய குற்றச்சாட்டுகள், குறைகளைச் சொல்ல வில்லை. பல்வேறு மாவட்டங்களில் சுற்றுலாவை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். முன்னாலே சொன்னபடி இப்போதுதான் ஒரு மானியக் கோரிக்கையை நிறைவேற்றுகிற நிலைமைக்கு வந்திருக்கிறது. இது வளரும். நிதிநிலைமையும் மத்திய அரசும் மனமுவந்து ஏற்றுக்கொண்டால் இன்னும் மாவட்டங்களில் உள்ள பல்வேறு நிலையங்களை உருவாக்க முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். கணேசன் :** நம்முடைய மாண்புமிகு செய்தி—சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் நான் ஏதோ நீண்ட நாட்களாக இருந்த உணர்வை வெளிப்படுத்தினேன், என்று சொன்னார்கள். எந்த ஒரு சிறு தவறும் நடந்துவிட விட மாட்டோம் என்ற அந்தத் தரப்பிலே சொல்லப்படுகிறது. இங்கேகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொருட்காட்சிக்கு அழைப்பிதழ் அனுப்பியதாகச் சொன்னார்கள். நான் கூட எல்லா உறுப்பினர்களையும், வெளியூர் உறுப்பினர்களை, கேட்டேன் அவர்கள் வரவில்லை என்று சொன்னார்கள். நான் கூட நினைத்தேன் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை ஒதுக்கி விட்டார்களோ என்று, ஆனால் காங்கிரஸ் உறுப்பினர்களுக்குக் கூட கிடைக்கவில்லை.

(பிற்பகல் 2-20)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** நான் முன்னமேயே தெரிவித்து விட்டேன். சென்னையில் இருப்பவர்களுக்கு அனுப்பி விட்டு, வெளியூரில் இருப்பவர்களுக்கு அனுப்பாமல் விட்டு விட்டார்களா என்று தெரியவில்லை, நான் பரிசீலிக்கிறேன் என்று முன்னமேயே சொல்லியிருக்கிறேன். என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் சுவாமிதாஸ் அவர்கள் வந்து இருப்பதாகச் சொல் கிறார்கள். ஆகவே, வெளியூருக்கும் போய் இருக்கிறது. ஒரு வேளை தபால்காரர் வேண்டுமென்றே மாண்புமிகு உறுப்பினர் கணேசனுக்குக் கொண்டு வந்து தரவில்லையோ என்னவே எனக்குத் தெரியவில்லை. அதை விசாரிக்கிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ் :** திரு. சத்தியமூர்த்தி அவர்களுக் புதுக்கோட்டையில் ஒரு நினைவச் சின்னம் அமைக்க அர முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** அதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக நான் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள இன்னொரு துறையைப் பற்றிய அறிவிப்பை தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் கணேசன், போன்றவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். அதாவது, நடமாடும் திரையரங்கம்—டூரிங் சினிமா—பற்றி நீண்டகாலமாக ஒரு வேண்டுகோள் இருக்கிறது. அவர்களுக்கு லைசென்சு மூன்றாண்டுகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள் 1933-ல் 3 மாதம் என்று ஆரம்பித்து, பிறகு 4 மாதம், பிறகு 6 மாதம் என்று ஆகி, 1949-ல் ஒரு வருஷமாக அது மாற்றப்பட்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை 2 வருஷமாக மாற்றியிரு கிறார்கள். அதற்குப் பிறகு 1976 ஆம் ஆண்டில் அது 2 வருஷ 3 மாதம் என்று தந்து இருக்கிறார்கள். இதை இந்த அர 3 வருஷமாக நீடித்துத் தருவது என்ற முடிவை எடுத் திருக்கிறது என்பதையும், அதனுடைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருடைய நிபந்தனைக்கு உட்பட்டு இருக்குமானால் மூன்றாண்டுகளுக்குத் தருவதாக முடிவு எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தாலே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் முன்பே இதற்கு மிகக் குறைந்த தொகையைத்தான் கேட்டு இருக்கிறோம் என்று சொன்னார்கள். ரூ. 1,22,22,000—தான் வேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். இருப்பினும், இங்கே மேலும் அதிகம் செலவாகக்கூடிய வகையில் தான் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் ஆலோசனையைக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்த மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, நீங்கள் அந்த வெட்டுத் தீர்மானங்களை பின்வாங்கிக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விவாதம் முடிவுற்றது.

திரு. செ. இராமலிங்கம், திரு. என். வரதாராஜன் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன், திரு. எம். ஏ. லத்தீப் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : “மானியக் கோரிக்கை எண். 47. செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்” என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,22,22,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்”.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. நாளைக்காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-24 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[1978 மார்ச் 7

(6) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

%92. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கான கொள்கை விளக்கக் குறிப்பு—கைத்தறி பஞ்சாலை, 1978-79 (ஆங்கிலம், தமிழ்)

% 93. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கான கொள்கை விளக்கக் குறிப்பு—தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் வாரியம், 1978-79 (ஆங்கிலம், தமிழ்)

%% 94. கைத்தறி—துணி நூல் துறையின் 1978-79 ஆம் ஆண்டின் செயல்முறை வரவு-செலவுத்திட்டம் (ஆங்கிலம், தமிழ்).

% 95. கோரிக்கை எண். 22—கால்நடை பராமரிப்புக்கான கொள்கை விளக்கக் குறிப்பு, 1978-79 (ஆங்கிலம், தமிழ்).

% 96. 1977-78 ஆம் ஆண்டு தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனத்தின் செயலாக்கம் பற்றிய மதிப்புரை (ஆங்கிலம், தமிழ்)

%% 97. சமூக நலத்துறையின் 1978-79 ஆண்டின் செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்)

% % 98. "மூப்புகால உதவித் தொகை" குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்)

% %99.கால்நடை பராமரிப்புத் துறையின் 1978-79 ஆம் ஆண்டின் செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம், தமிழ்)

% % 100. தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சி பற்றிய ஆய்வுரை—தமிழ்நாடு வேளாண்மைப் பண்ணைக் கழகம், 1977-78.

% % 101. தமிழ்நாடு பால்வள நிறுவனம் பற்றிய ஆய்வுரை 1977-78 (ஆங்கிலம், தமிழ்)



1978 மார்ச் 7]

% % 102. 1978-79 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறைக்கான கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்)

% % 103. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் பற்றிய ஆய்வுரை 1977-78 (ஆங்கிலம், தமிழ்)

% % 104. பால்பண்ணை வளர்ச்சித் துறை, பால் வழங்குத் திட்டம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1978-79 (ஆங்கிலம், தமிழ்)

% % 105. வேளாண்மைத் துறையின் 1978-79 ஆம் ஆண்டின் செயல்வினைமுறைத் திட்டம் (ஆங்கிலம், தமிழ்)

** 106. கோரிக்கை எண் 47. செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பப் பிரிவின் கொள்கை விளக்கக் குறிப்பு 1978 (ஆங்கிலம், தமிழ்)

---

% 4-3-1978 அன்று பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

% 5-3-1978 அன்று பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

** 6-3-1978 அன்று பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.

## இணைப்பு I

[237-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 439-க்கான விடையைக் காண்க.]

(அ) துறையூர் கந்தசாரி கரும்பு சர்க்கரை உற்பத்தித் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கத்தின்கீழ் துறையூரில் இயங்கி வந்த கந்தசாரி சர்க்கரை ஆலையின் இயந்திரங்களில் அடிக்கடி கோளாறு ஏற்பட்டதால் அதைப் பராமரிக்க பெரும் பொருள் செலவிட நேர்ந்தது. இதனால் இவ்வாலையில் உற்பத்தியாகும் சர்க்கரையின் அடக்க விலை வெளிச் சந்தையில் விற்கும் விற்பனை விலையை விட மிக அதிகமாக இருந்தது. கோத்தாரி சர்க்கரை ஆலை, சேலம் கூட்டுறவு ஆலை, தென் இந்திய எஃகு மற்றும் சர்க்கரை ஆலை முதலியவை துறையூருக்கு மிக அருகாமையில் இருப்பதால் இந்த ஆலைக்குத் தேவையான கரும்பு கிடைப்பதில்லை. மாநில சர்க்கரை இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த தொழில் நிபுணர் ஒருவர் இந்த ஆலையைப் பார்வையிட்டு கந்தசாரி சர்க்கரை தொழிலில் கரும்புச்சாறு மற்ற பெரிய ஆலைகளில் பிழியப்படுவது போன்று பிழியப்படாமல் சாறு வீணாக்கப்படுகின்றது என்றும், இது ஒரு தேசிய இழப்பு என்றும் கருத்துத் தெரிவித்து தமிழ் நாட்டுக்கு கந்தசாரி சர்க்கரை உற்பத்தி உகந்ததல்ல என்றும் கூறியுள்ளார். மேலும், கரும்பு ஆலையை லாபகரமாக இயக்குவதற்கு சாத்தியக் கூறுகள் இருப்பினும் கரும்பு கொள்முதல் செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை சுட்டிக்காட்டி இந்த ஆலையை மேலும் பணம் செலவு செய்து எப்படியாவது நடத்த வேண்டும் என முயற்சிப்பது விரும்பத்தக்கதல்ல என்று திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையில், சங்க நிர்வாக இயக்குநர்கள் மேலும் ஆலையை தொடர்ந்து நடத்துவதில் ஆர்வம் இழந்து விட்டார்கள். மேற்கூறிய காரணங்களினாலும் சங்கம் 31-3-197 முடிய ரூ. 3,31,373.37 நட்டத்தில் இயங்கியதாலும் மேற்கொண் தொடர்ந்து நடத்தினால் நட்டம் மேன்மேலும் ஏற்படும் என்றும்



இதனைத் தடுக்கவே சங்கத்தை முடிவு கட்டுவதென அரசின் ஒப்புதலைப் பெற்று முடிவு எடுக்கப்பட்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயலர் அலுவலரால் மேல் நடவடிக்கை தொடரப்பட்டு வருகின்றது.

(ஆ) கூட்டுறவுச் சங்கத்தையே கலைப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டு மேல் நடவடிக்கை தொடரப்பட்டு வருவதால், இத்தொழிற்சாலையை மீண்டும் திறக்கும் பிரச்சினை எழவில்லை.

# இணைப்பு II

(252ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கால்நடை பராமரிப்பு

### கோரிக்கை எண் 22.

### கொள்கை விளக்கம்.

I. முகவுரை.

பசு, எருமை, கோழி ஆகியவை சத்துள்ள உணவு
உற்பத்தியை பன்மடங்கு பெருக்க, உழவுக்கு எருதுகளை
அளிக்க உதவும் கால்நடை வளர்ச்சி, வேளாண்மையைப்
பெரும்பாலும் சார்ந்துள்ள தமிழ்நாட்டில் பெரும் பங்கேற்
கின்றது. நவீன இனவிருத்தி, பராமரிப்பு, கால்நடை மருத்து
வம் ஆகியவற்றல புதிய முறைகளைக் கையாண்டும், தீவிர
கால்நடை வளர்ப்புத் திட்டங்களின் மூலமும் கடந்த பல
ஆண்டுகளில் நல்லதொரு முன்னேற்றத்தைக் கால்நடை
வளர்ப்பில் கண்டுள்ளோம்.

இத்துடன், கிராமப்புற மக்களின் வேலை வாய்ப்பு
நிலைமை விரிவாக்கவும், ஊதியத்தைக் கூட்டுவதற்கும்,
ஊட்ட உணவுகள் வழங்குவதற்கும் கால்நடை வளர்ச்சித்
திட்டம் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. கிராமப்
புறங்களில் கால்நடைகளை வளர்ப்போரில் பெரும்பான்மை
யோர் சிறிய அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகள்,
ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகள், மற்றும் நிலமற்ற
தொழிலாளர்கள் ஆவர். இத்தகைய ஏழை மக்கள் பயன் பெற
மாநில அரசு, சிறப்பு கால்நடை வளர்ப்புத் திட்டம், ஆடு
வளர்ப்புத் திட்டம் (வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக்
கழகத்தின் மூலம்), மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு
மலைத்தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பாங்
கான பகுதித் திட்டம், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்,
தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம், கேந்திர கிராமத்
திட்டம் மற்றும் கால்நடை இன வளர்ச்சி, சுகாதாரப் பணி
களுக்கான பல சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.



II. முன்னேற்றத் திட்டங்கள்.

1. பொதுவானது :

உள்நாட்டுக் கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்
காக கால்நடை பராமரிப்புத் துறை பல்வேறு திட்டங்களை
செயற்படுத்தி வருகிறது. தற்பொழுது நிறைவேற்றப்பட்டு
வரும் திட்டங்களுள் சிலவும் அவற்றின் முக்கியத்துவமும்
முன்னேற்றமும் வரும் பத்திகளில் சுருக்கமாக விவரிக்கப்
படுகின்றன.

2 கேந்திர கிராமத் திட்டம் :

பால்வளம், உழவு மற்றும் இதர இழுவை வேலைகளுக்
காக அந்தந்தப் பகுதிகளில் கலப்பின விருத்தி அல்லது தர
உயர்வு படுத்துவதன் மூலமாகவும் அல்லது இன விருத்தி
செய்வதன் மூலமாகவும் கால்நடைகள், எருமைகள் இவற்
றின் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
ஒவ்வொரு கேந்திர கிராம வளர்ச்சி வட்டாரமும் ஒரு
முக்கிய நிலையமும் பத்து கிளை நிலையங்களையும் கொண்டு
ஒருங்கிணைந்த பகுதியில் இனவிருத்தி மூலம் பால் உற்பத்
திக்கு பொருத்தமான மொத்தம் 10,000 பசுக்களையும்,
எருமைகளையும் கொண்டதாகும். தற்பொழுது மதுரை, திருச்
சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கன்னியாகுமரி, திருநெல்
வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 39 கேந்திர
கிராம நிலையங்கள் உள்ளன.

3 தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம் :

தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம் கேந்திர கிராமத்
திட்டத்தின் மீது மேம்பாடடைந்த ஒன்றாகும். கேந்திரக்
கிராமத் திட்டம் மையமாக அமைந்த முக்கிய நிலையத்துடன்
10 கிளை நிலையங்களைக் கொண்டு, 12-லிருந்து 15 கிலோ
மீட்டர் பரப்பளவிலுள்ள ஒரு செறிவுமிக்கப் பகுதியில் செயல்
படுகையில், தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம், 50 கிளை
நிலையங்களுடன் திருநெல்வேலி, தஞ்சாவூர், புதுக்கோட்டை

ஆகிய இடங்களிலும், 100 கிளை நிலையங்களோடு, மதுரையி
லும், பரந்த அளவில் பால் உற்பத்தி பெருக்கும் பொருட்டு
செயல்பட்டு வருகிறது. தற்போது, மதுரை, திருநெல்வேலி,
தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் 4 தீவிர
கால்நடைவளர்ப்பு நிலையங்கள் உள்ளன.

4. பொலிகாளை நிலையம் மற்றும் உறைவிந்து வங்கி:

தற்போது கறவை மாடுகளின் இன வளர்ச்சி செயல்
முறைகளில் கண்டுள்ள முன்னேற்றம், பெரும்பாலும் வம்சா
வழித்துறையில் அடைந்துள்ள முன்னேற்றத்தையே சாரும்.
இதன் முக்கியத்துவம் கருதி, தமிழ்நாட்டில் உயர் அயலினங்
களான பிரிசியன், ஜெர்சி, பிரவுன்ஸ்விஸ், ரெட்டேன்
போன்ற இனங்களும், உயர்ந்த இந்திய பால் இனங்களான
சிந்தி, தார்பார்க்கர், முர்ரா, காங்கேயம் மற்றும் உயர்
அயல் கலப்பினங்களும் மாவட்டங்களில் உள்ள பொலிகாளை
நிலையங்களில் பராமரிக்கப்படுகின்றன. இனவிருத்திக்குத்
தேவைப்படும் உயர்ந்த இன காளைகளின் விந்து தொடர்ந்து
போதிய அளவு இத்துறை நிலையங்களுக்கு அளிக்கும் வகை
யில், பொலிகாளை நிலையங்கள் செயல்படுகின்றன. தமிழ்
நாட்டில் தற்போது 59 பொலிகாளை நிலையங்கள் உள்ளன.

செயற்கை முறை இனவிருத்தி முறையில், உறைவிந்து
உபயோகித்தல் மிக்கப் பலன் தரக்கூடியதாகும். வம்சா
வழியில் சிறந்த இனப்பெருக்க ஆற்றல் மிக்க தேர்ந்தெடுக்கப்
பட்ட பொலிகாளைகளின் விந்தினை இம்முறையில் மட்டுமே
மிக அதிக அளவில் பயன்படுத்த இயலும். இத்தகைய உறை
விந்து நிலையங்கள் ஏற்படுத்த துவக்க காலத்தில் அதிக நிதி
ஒதுக்கீடு தேவைப்பட்டாலும், இம்முறையில் விந்து விரயம்
ஆகுதல் மிகவும் குறைவு. தமிழ்நாட்டில் முன்னோடித் திட்ட
மாக காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர் ஆகிய இடங்
களில் உள்ள கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கேந்திர
கிராம நிலையங்கள், கால்நடை மருத்துவமனை, சைதாப்
பேட்டை, கால்நடை மருந்தக மற்றும் கேந்திர கிராம



நிலையம், செங்கல்பட்டு ஆகிய நிலையங்களுக்கு உறைவிந்து
வசதியுடன் கூடிய செயற்கை முறை இனவிருத்தி வசதிகள்
செய்யப்பட்டுள்ளன.

5. ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்புத் திட்டம்—வம்சாவழி ஆய்வுத்
திட்டம்:

வம்சாவழி ஆய்வு என்பது ஒரு பொலிகாளை ஒரு குறிப்
பிட்ட வகைப் பசுவுடன் சேருவதால் அப்பசு ஈனுகின்ற
கன்றுகளைக் கொண்டு அந்தப் பொலிகாளையின் இனப்பெருக்க
ஆற்றலை மதிப்பிட்டு. இந்த வழியில் அதுபோன்ற பொலி
காளைகளை வரிசைப்படுத்துகின்ற ஒரு முறை ஆகும்.

வம்சாவழி ஆய்வுத் திட்டம் மத்திய அரசு பொறுப்
பேற்கும் திட்டமாகும். இது சிவப்பு சிந்தி இனத்தைச்
சேர்ந்த பொலிகாளைகளை (இனப்பெருக்க ஆற்றல் குறித்துச்
சோதனை நடத்துவதற்கான காளைகள்) முறைப்படி அமை
யும் ஏற்பாட்டின்கீழ் உற்பத்தி செய்வதற்கான ஒருங்
கிணைந்த கால்நடை வளர்ப்புத் திட்டமாகும். இத்திட்டம்
ஹோசூரிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில்
1972ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகிறது.

6. ஆநிரைக் காப்பகங்கள்:

தனிப்பட்ட அறக்கொடை நிறுவனங்களில் சிறிய அள
விலமைந்த பால் பண்ணைகள் நிறுவுவதற்காக அவற்றுக்கு
உதவித் தொகை அளிப்பதோடு தொழில் நுட்ப அறிவுரை
வழங்குவதே ஆநிரைக் காப்பகங்கள் திட்டத்தின் முக்கிய
நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு பண்ணைக்கும் உயர்
இனத்தைச் சேர்ந்த 10 பசுக்களும், 1 பொலிகாளையும் வழங்
குதல், கட்டிடங்களைப் புதுப்பித்தல், கால்நடைக் கொட்ட
கைகள் அமைக்க மானிய உதவித் தொகை ரூ. 5,000,
கால்நடை தீவனச் செலவுக்காக பத்து ஆண்டுகளுக்கு
தொடர் இன ஆண்டு பராமரிப்பு மானியமாக ரூ. 2,000

மூலம் நோய் நீக்க திட்டத்தைச் செயல்படுத்தவும், கோழி வளர்ப்பில் ஊக்கமளிக்கும் வகையில் கோழி வளர்ப்போருக்குக் கடன் வசதிகள் பெற உதவி செய்வதும் ஆகும். ஒசூர், ஒரத்தநாடு, புதுக்கோட்டை, செட்டிநாடு, திருநெல்வேலி மாவட்ட கால்நடை பண்ணைகளுடனும், சாத்தூர், சின்ன சேலம் ஆட்டுப் பண்ணைகளுடனும் கோழி வளர்ப்பு நிலையங்கள் இணைக்கப்பட்டு உள்ளன. கோழி விரிவாக்க நிலையங்களைச் சுற்றிலும் முட்டை உற்பத்திக்காக 956 கொல்லைப்புற கோழி வளர்ப்பு பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தரமுள்ள சத்துணவு கிடைப்பதுடன் கோழி வளர்ப்போரின் வருமானமும் அதிகரிக்க ஏதுவாகிறது.

தற்சமயம் தமிழ்நாட்டில் 11 கோழி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களும், 1 கோழி வளர்ப்பு கூட்டு விற்பனைச் சங்கமும் இருக்கின்றன. இதிலுள்ள அங்கத்தினர்கள் தரமான கோழிகள் வாங்கவும், வளர்க்கவும், நவீன முறைகளைப் பின்பற்றி கோழி வளர்ப்பில் அபிவிருத்தி காணவும் இச்சங்கங்கள் உதவுகின்றன. கோழி வளர்ப்புத் தொடர்பான வணிக முறைக் கூறுகளை அரசால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனம் கவனிக்கிறது.

10. தமிழ்நாடு கோழிப்பண்ணை வளர்ச்சி நிறுவனம், சென்னை:

மாநிலத்தில், கோழிப்பண்ணை வளர்ச்சி குறித்த பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதும், அதே சமயத்தில் பொருளாதார வகையில் தனித்தியங்கக்கூடியதாக இருப்பதற்கு வகை செய்து கொள்வதுமே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். கோழிப்பண்ணைப் பொருட்களுக்கு வணிக முறையில் விற்பனை வசதிகளை செய்து கொடுத்தல், நுகர்வோரின் நலனை முன்னிட்டு விலைகள் உயராமல் பார்த்துக் கொள்வதும் மற்றும் கோழி வளர்ப்போரின் பொருளாதாரத் தரத்தை உறுதிப்படுத்துவதும் இதன் இரு நோக்கங்களாகும்.

இந்நிறுவனத்தின்கீழ், தீவனப் பிரிவுகள், சென்னை மாவட்டத்தில் நந்தனம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில்



மதுரை மாவட்டத்தில் கல்லுப்பட்டி ; கோட்டப்பட்டு ; கோயம்புத்தூர் மாவட்டத்தில் திருப்பூர் மற்றும் சேலம் மாவட்டத்தில் சேஷஞ்சாவடி ஆகிய ஐந்து இடங்களில் உள்ளன. தமிழ்நாடு கோழிப்பண்ணை வளர்ச்சி நிறுவனத்தின் கோழித் தீவனத்திற்கு மக்களிடையே நாளும் வளர்ந்து வரும் தேவையை கருத்திற்கொண்டு மணிக்கு 4 மெட்ரிக் டன் அளவு தீவனம் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட பெரிய அளவிலான தீவனக் கலவை நிலையம் ஒன்று நந்தனத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அந்நிலையம் விரைவில் உற்பத்தியினைத் துவக்கும்.

இந்நிறுவனத்தின் கீழ் விற்பனைப் பிரிவுகள் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், சேலம், செங்கல்பட்டு, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய எட்டு இடங்களில் உள்ளன. இந்நிறுவனம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரசூரிலும், மதுரை மாவட்டத்தில் கப்பலூரிலும் குஞ்சு பொரிப்பு நிலையங்களை நடத்தி வருகின்றது.

முன்னால் கோழி விரிவாக்க நிலையங்கள் என்ற பெயரால் இயங்கி வந்த நிலையங்கள் தற்பொழுது பெயர் மாற்றம் செய்யப்பட்டு கோழிக்குஞ்சு வளர்க்கும் பண்ணைகள் மற்றும் விரிவாக்க நிலையங்கள் என்ற பெயரில் இயங்குகின்றன. தற்போது இந்நிறுவனத்தின் கீழ் அடையாறு, செங்கல்பட்டு, கோட்டப்பட்டு, கல்லுப்பட்டி, பெருந்துறை மற்றும் சேஷஞ்சாவடி ஆகிய ஆறு இடங்களில் இப்பண்ணைகள் உள்ளன. இந்நிலையங்களில், மிக அதிக அளவில் வீரிய கோழிக் குஞ்சுகள் வளர்த்து கால்நடை வளர்ப்புச் சிறப்புத் திட்டம், சத்துணவு ஊட்டத்திட்டம், ஊராட்சி ஒன்றிய திட்டங்கள் போன்ற வளர்ச்சித் திட்டங்களுக்கு வழங்கப்படுவதுடன், கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோருக்கும் நேரடியாக விற்கப்படுகின்றன. அடையாரில் இருக்கும் கோழிக்குஞ்சு வளர்ப்பு நிலையம், சென்னை வாழ் மக்களின் இறைச்சித் தேவைக்காக, மட்டுமே கோழிக் குஞ்சுகளை வளர்க்கின்றது.

முதலிய உதவிகள் வழங்கப்படுகின்றன. இவ்வுதவியைப் பெற ஒவ்வொரு ஆநிரைக் காப்பகமும், அரசு உதவிக்குச் சமமான 10 பசுக்களை கொண்டிருக்க வேண்டும். தற்போது தமிழ்நாட்டில் ஐந்து ஆநிரைக் காப்பகங்கள் உள்ளன.

7. கால்நடை கண்காட்சிகளும் கால்நடை விளக்கக் காட்சிகளும் :

சிறந்த கால்நடை வளர்ப்பு முறைகளை மக்களிடையே பரப்புவதற்கும், கால்நடைகளை விஞ்ஞான முறையில் பாதுகாக்கவும் இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கால்நடை கண்காட்சிகள் மற்றும் விளக்கக் காட்சிகள் நடத்தப்படுகின்றன. கேந்திர கிராமம் மற்றும் தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டப் பிராந்தியங்களில் கடந்த இரண்டாண்டுகளில் 14 கால்நடைக் கண்காட்சிகளும், கன்று பேரணிகளும் நடைபெற்றுள்ளன. தென் மண்டல கால்நடைக் கண்காட்சி மற்றும் அனைத்திந்திய கால்நடை கோழி கண்காட்சிகளில் நடைபெற்ற போட்டிகளில் நமது பண்ணை கால்நடைகள் போட்டியிட்டு பாராட்டுகள் பெற்றுள்ளன.

8. ஆடு வளர்ப்பு :

கிராமப் புறங்களில் முழு நேர வேலையற்றவர்களுக்கு ஆடு வளர்ப்பு சார்நிலைத் தொழிலாக அமைகின்றது. கிராமப் புறங்களிலும், மலைப்பகுதிகளிலுமுள்ள தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் தங்களின் வாழ்க்கைக்கான வருமானத்தைக் கணிசமாக அதிகரிக்கும் பொருட்டு அதிக வாய்ப்புகளை அளிக்கும் நோக்குடன் ஆடு வளர்ப்புத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகள், வேளாண்மை மறுநிதி உதவி வளர்ச்சிக் கழகம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக நிதி உதவி பெறுவதற்கு வழிகள் வகுக்கப்பட்டுள்ளன. குறைந்த வட்டியில் கடன் உதவி அளிக்கப்படுகிறது. ஆடு வளர்ப்போருக்கு விஞ்ஞான முறையில் ஆடு வளர்க்க தொழில் முறை உதவியும் அளிக்கப்படுகிறது. தமிழகத்தில் சாத்தூர், சின்னசேலம் ஆகிய இடங்களில்



ஆட்டுப் பண்ணைகளும், மாவட்ட கால்நடைப் பண்ணை ஓசூர், செட்டி நாடு, அபிஷேகப்பட்டி, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் நான்கு ஆடு வளர்ப்பு நிலையங்களும் உள்ளன. மாண்டியா, மேச்சேரி, சென்னை சிவப்பு ஆடு, கீழக்கரிசல் மற்றும் அயலின ஆடுகளான காரிடேல், காரிடேல் கலப்பினம், ரோம்னிமேஷ் கலப்பினம் இந்நிலையங்களில் பராமரிக்கப்படுகின்றன.

ஆடு வளர்ப்போரும் மற்றும் பிற முற்போக்கு விவசாயிகளும் ஆடு வளர்ப்புத் தொழிலில் அதிக ஆதாயம் பெறவும், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துத் தங்களது பொருளாதார நிலைமையை மேம்படுத்திக் கொள்ளவும் வேளாண்மை மறுநிதி உதவி வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் ஆடு வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டம் ஒன்று செயற்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் 39 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.

வேளாண்மை மறுநிதி உதவி வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உபரியான செம்மறிக் கிடாக்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு விற்கப்படுகின்றன. இது தவிர, வட ஆற்காடு, தர்மபுரி, சேலம், இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள சங்கங்கள் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கும், வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கும், சிறப்புக் கால்நடைத் திட்டங்களின் கீழ் இயங்கும் சங்கங்களிலுள்ள அங்கத்தினர்களுக்கும் செம்மறியாடுகள் வழங்கியுள்ளன.

9. கோழி வளர்ப்பு:

தற்சமயம் கால்நடைப் பராமரிப்புத்துறையின் கீழ் 39 கோழி விரிவாக்க நிலையங்களும், 2 குஞ்சு பொரிக்கும் நிலையங்கள், ஒன்று ஓசூரிலும் மற்றது காட்டுப்பாக்கத்திலும் இருக்கின்றன. இந்நிலையங்களின் முக்கிய நோக்கம் கோழி வளர்ப்பைத் தீவிரப்படுத்தவும், தடுப்பூசிகள் போடுவதன்

இந்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட கால்நடை வளர்ப்புச் சிறப்புத் திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்புத் திட்டத்தினை இந்நிறுவனம் மதுரை, செங்கற்பட்டு, சேலம், வடஆற்காடு ஆகிய நான்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தி வருகின்றது. இத் திட்டம் சிறிய அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கும், ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கும் மற்றும் நிலமற்ற விவசாய தொழிலாளர்களுக்கும் உதவி செய்வதற காகவுமே தீட்டப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பலன் பெறுவதற்காக, இதுவரை 1,707 விவசாயிகள் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளனர். இந்நிறுவனமானது, இத்திட் டத்தின்கீழ் பங்கேற்பவர்களுக்குக் கோழிக் குஞ்சுகள், தீவனம் மற்றும் தொழில் நுட்ப அறிவுரையும் வழங்குவ துடன் அல்லாமல், கிடைக்கும் முட்டைகளையும், கழிக்கப் பட்ட கோழிகளையும் பங்கேற்பவர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் விற்பனை செய்யவும் உதவும்.

1978–79 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவிற் காக தமிழ்நாடு கோழிப் பண்ணை வளர்ச்சி நிறுவனத் திற்கு மூலதனப் பங்குத் தொகையாக கூடுதலாக ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

11. பன்றி வளர்ப்பு :

இம்மாநிலத்தில் தற்போது பன்றி வளர்ப்புப் பண்ணை என்று தனியாக ஏதுமில்லை. 9 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஓசூர், புதுக்கோட்டை, ஒரத்தநாடு, திருநெல்வேலி, உதகமண்டலம், செட்டிநாடு ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணைகளிலும், சின்னசேலம், சாத்தூர் ஆட்டுப் பண்ணைகளிலும், சைதாப்பேட்டை கால் நடை மருத்துவமனைப் பகுதியிலும் செயல்பட்டு வருகின் றன. இப்பிரிவுகள் செய்முறை விளக்கப் பிரிவுகளாகவும், உழவர்கள் பன்றி வளர்ப்புப் பிரிவுகள் தொடங்குவதற்காக நட்டி னும் பன்றிகளை வாங்கவும் பயன்படுகின்றன. இப்



பிரிவுகளில் பெரிய வெள்ளை யார்க்ஷயர் பன்றிகள் பரா மரிக்கப்படுகின்றன.

12. தீவனப் பயிர் அபிவிருத்தி:

கலப்பின முறை மூலம் செயற்படுத்தப்படும் கால்நடை வளர்ப்பின் வெற்றி, அதே சமயத்தில் செயல்படுத்தப்படும் தீவனப் பயிர் அபிவிருத்தியைச் சார்ந்துள்ளது. பச்சை, உலர்ந்த தீவன தேவையில் தமிழகம் பின்தங்கியுள்ளது. கால்நடைத் தீவனப் பயிர் உற்பத்திப் பிரிவுகள் செங்கற் பட்டு மாவட்டத்தில் படப்பை, தென்னாற்காடு மாவட்டத் தில் சின்னசேலம், திருநெல்வேலி, புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணைகளிலும் செயல்பட்டு வருகின்றன.

'மினி கிட்' அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் தஞ்சாவூர் மற்றும் மதுரை தீவிர கால்நடைத் திட்டப் பரப்பில் விவ சாயிகளுக்கு தீவன விதைப்பொருட்கள் விநியோகிக்கப் படுகின்றன. இதுவரையில் இத்திட்டத்தின் மூலம் 450 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

3. சிறப்புத் திட்டங்கள்:

**(1) கால்நடை வளர்ப்புச் சிறப்புத் திட்டம்.**— இந்திய அரசு கேட்டுக்கொண்டதன் பேரில் இம்மாநிலத் தில் சில மாவட்டங்களில் கால்நடை வளர்ப்புச் சிறப்புத் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக, கால்நடை வளர்ப்புத் துறை, இத் திட்டத்தை உருவாக்கியது. 25,000 கலப்பின இளம் பசுங் கன்றுகளை வளர்த்தல், 6,000 கோழி வளர்ப்புப் பிரிவுகளையும், 9,000 செம்மறி ஆடு வளர்ப்புப் பிரிவுகளை யும் தொடங்குதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்க மாகும்.

கீழ்க்காணும் மாவட்டங்களில் தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சி நிறுவனம் கன்றுகள் வளர்த்தல் திட்டத்தினையும், தமிழ்நாடு கோழியின வளர்ச்சி நிறுவனம் கோழியினப்

பெருக்குத் திட்டத்தினையும், கால்நடை வளர்ப்புத்துறை செம்மறி ஆட்டு இனப் பெருக்குத் திட்டத்தினையும் செயல் படுத்தி வருகின்றன :

| மாவட்டம். (1) | திட்டங்கள். (2) |
| --- | --- |
| 1. சேலம் .. | கன்று வளர்த்தல், கோழி வளர்த்தல், செம்மறி ஆடு வளர்த்தல். |
| 2. வட ஆற்காடு .. | கன்று வளர்த்தல், கோழி வளர்த்தல், செம்மறி ஆடு வளர்த்தல். |
| 3. மதுரை .. | கன்று வளர்த்தல், கோழி வளர்த்தல். |
| 4. தென் ஆற்காடு .. | கன்று வளர்த்தல். |
| 5. கோயமுத்தூர் .. | கன்று வளர்த்தல். |
| 6. திருநெல்வேலி .. | செம்மறி ஆடு வளர்த்தல். |
| 7. செங்கல்பட்டு .. | கோழி வளர்த்தல். |

(i) கன்று வளர்த்தல்.—மூன்றும் மாதம் முதல் 28 ஆம் மாதம் வரையில் தேவையான உதவியை மானியமாக தீவன வடிவில், தேர்ந்தெடுக்கப்பட்ட சிறிய அளவு நிலம் வைத்திருக்கும்/ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கும், வேளாண்மைத் தொழி லாளர்களுக்கும் இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படும். சிறிய அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயி/ஓரளவு நிலம் வைக்



திருக்கும் விவசாயி, உதவித் தொகையாக 800 ரூபாயையும், கடனாக 800 ரூபாயையும் பெறுவார். வேளாண்மைத் தொழிலாளர், உதவித் தொகையாக 1,066 ரூபாயையும், கடனாக 534 ரூபாயையும் பெறுவார். 28ஆம் மாதம் வரையில் கன்று ஒன்றினை வளர்ப்பதற்கு ஆகும் மொத்த செலவு ரூ. 1,600 ஆகும்.

(ii) செம்மறி ஆட்டு இனப்பெருக்குத் திட்டம்.—செம்மறி ஆட்டுப்பிரிவு ஒவ்வொன்றிலும் 20 செம்மறி ஆடுகளும் ஒரு ஆட்டுக்கிடாவும் இருக்கும். அப்பிரிவில் மொத்த மூலதனச் செலவு ரூ. 3,000 ஆகிறது. அத் தொகையில், சிறிய அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயி களுக்கு ரூ. 750 உதவித் தொகையாகவும், ஓரளவு நிலம் வைத்து இருப்போர்களும் வேளாண்மைத் தொழிலாளர் களும் உதவித் தொகையாக 1,000 ரூபாயும் பெறுவர். நெல்லை மாவட்டத்தில் 33 ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங் களும், சேலத்தில் 25-ம், வட ஆற்காட்டில் 18-ம், இத் திட்டத்தின் கீழ் தற்சமயம் இயங்கிவருகின்றன. இம் மாவட்டங்களில் 930 செம்மறியாட்டு பிரிவுகள் அமைக்கப் பட்டுள்ளன. 3,939 விவசாயிகள் பயன் பெற்றனர்.

(iii) கோழியினப் பெருக்குத் திட்டம்.—கோழி வளர்ப்புப் பண்ணை ஒவ்வொன்றிலும், முட்டையிடும் 100 கோழிகள் இருக்கும். ஒரு பண்ணைக்கு ஆகும் மொத்த மூலதன செலவு சுமார் ரூ. 5,330 ஆகும். சிறிய அளவு நிலம் வைத்திருக்கும் ஒவ்வொரு விவசாயியும், உதவித் தொகையாக 1,330 ரூபாயும், ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயியும் வேளாண்மைத் தொழிலாளரும் உதவித் தொகையாக 1,776 ரூபாயும் பெறுவர். இத்திட்டத்தின் கீழ் 1,707 விவசாயிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(2) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் :

சிறப்பு மத்திய உதவியின் மூலம் நிதியுதவி பெறும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 500 தேர்ந்தெடுக்கப்பட்ட உழவர்கள், சிறு உழவர்களுக்கும் மற்றும் 500 வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும், 1977-78 ஆம் ஆண்டில் உதவித் தொகை வழங்கும் பொருட்டு ரூ. 4.5 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது. உற்பத்தி நிலை வரை, 1,000 கலப்பின கன்றுகளை வளர்ப்பதற்காக தீவன உதவித் தொகை வடிவில் உழவர்கள் உதவி பெறுவர்.

(3) மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம் :

இந்திய அரசு ஆதரவு பெற்ற மலைப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டம், கால்நடை வளர்ப்ப வளர்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

செம்மறி ஆடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 200 செம்மறி ஆடு வளர்ப்புப் பிரிவுகள் அமைப்பதற்காக 1977-78 ஆம் ஆண்டில் ரூபாய் 4 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. உதகமண்டலம் மாவட்டக் கால்நடை வளர்ப்பு பண்ணையை விரிவுபடுத்தும் திட்டத்தின்கீழ், கால்நடை கொட்டகைகள், கிணறுகள் வெட்டுதல், தெளிப்பு நீர்ப்பாசன வசதிப் பிரிவு, தடுப்பு அணை, பசுந்தீவன பதன அறை, பால்பண்ணை சாதனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்காக 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 3·63 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(4) பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :

தமிழ்நாட்டில் சேலம், தென்னாற்காடு, திருச்சிராப் பள்ளி, தருமபுரி, வட ஆற்காடு ஆகிய ஐந்து மாவட்டங் களில் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகள் ஒன்பது உள்ளன. மேற்கூறியவற்றில் சேலம் மாவட்டமும் அதற்கு அடுத்த படியாக தென்னாற்காடு மாவட்டமும் பெருவாரியான பழங்குடியினர்களைக் கொண்டுள்ளன. கறவை மாடுகளை வளர்த்தல், கோழி வளர்ப்பு நிலையங்களை அமைத்தல், பன்றி வளர்ப்பு நிலையங்களை அமைத்தல், தீவன புல் நாற்றுக்களை வழங்குதல், சுகாதார வசதிகளை வழங்குதல் போன்றவற்றில் பழங்குடி மக்களுக்கு உதவ அரசு முன்வந்துள்ளது.

ரூ. 16·50 இலட்சம் செலவில், 1977-78 ஆம் ஆண்டில் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் கால்நடை வளர்ப்பு வளர்ச்சிக்காக துணைத் திட்டம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

(5) வறட்சிப்பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

தமிழ்நாட்டில் வறட்சிப்பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில், தருமபுரி மாவட்டமும், இராமநாதபுரம் மாவட்டமும் அடங்குகின்றன. மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான வருமானத்தை அளித்தல், சுற்றுப்புறப் பகுதி களில் தரம் வாய்ந்த கால் நடைச் செல்வத்தைப் பெருக்குதல் ஆகிய இவ்விரண்டும் இத்திட்டத்தின் நோக்கமாகிறது. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்குத் துணைத் தொழில் வாய்ப்பினை அளிப்பதற்கும் வகை செய்கிறது.

(i) இராமநாதபுரம் மாவட்டம்: 1977-78 ஆம் ஆண்டில், 325 கறவை மாடுகள் வழங்குவதற்காகவும், 750 செம்மறி ஆடு பிரிவுகளைத் தொடங்குவதற்காகவும், பால்பண்ணை வளர்ச்சிக்கு நிதியுதவி அளிப்பதற்காகவும், ரூ. 13.23 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ii) தருமபுரி மாவட்டம்.—1977—78 ஆம் ஆண்டில் 400 செம்மறி ஆடு வளர்ப்புப் பிரிவுகளைத் தொடங்குவதற்காகவும் மற்றும் 300 செம்மறி ஆடு வளர்ப்புப் பிரிவுகளைக் கொண்ட 6 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கவும், ரூ. 7.38 இலட்சம் ஒதுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## (6) ஒருங்கிணைந்த மாதிரிப் பொருள் ஆய்வுத் திட்டம் [1978 மார்ச் 7]

தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த மாதிரி ஆய்வுத் திட்டம் என்னும் மத்திய அரசு ஆதரவு திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பால், முட்டை, கம்பளி, இறைச்சி போன்ற கால்நடை உற்பத்தி பொருட்களின் விவரங்களைத் தொகுத்து சேகரிப்பதற்காக, ஐந்தாவது ஐந்நாண்டுத் திட்டம் முழுவதிலும் இத்திட்டம் செயல் படுத்தப்படும்.

### III. கால்நடைப் பண்ணைகள் :

கால்நடைப் பராமரிப்புத் துறையின்கீழ் ஒசூர், ஒரத்தநாடு, கொற்கை, செட்டிநாடு, அபிஷேகப்பட்டி, உதகமண்டலம், புதுக்கோட்டை ஆகிய ஏழு இடங்களில் கால்நடைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. உயரினப் பொலி காளைகள் கிடைக்கச் செய்வதற்காக, இக் கால்நடைப் பண்ணைகள் "மூலப் பண்ணை"களாகச் செயல்படுகின்றன. இப் பண்ணைகளில், இந்திய இனக் கால்நடைகளும், அயல் இனக் கால்நடைகளும் பராமரிக்கப்படுகின்றன.

கால்நடைப் பண்ணைகளில் செம்மறி ஆடுகள், கன்றுகள், கோழிகள் போன்ற இதர கால்நடைகளும் வளர்க்கப்படுகின்றன. இக் கால்நடைப் பண்ணைகளில், 6 கோழி அபிவிருத்திப் பகுதிகளும், 4 ஆடு அபிவிருத்திப் பகுதிகளும், 6 பன்றி அபிவிருத்திப் பகுதிகளும் இணைக்கப்பட்டுள்ளன. பொது மக்கள் தங்கள் நிலங்களில் பசுந்தீவனம் பயிரிட்டு பெருக்குவதற்காக, கால்நடைப் பண்ணைகளில் பலவகையான, நமது பருவகால சூழ்நிலைக்கேற்ற தீவனப் புல் பயிர்கள் உற்பத்தி செய்ய, விதை நாற்றுகள் விநியோகிக்க விதைப் பண்ணைகள் இயங்குகின்றன. மேலும் இந்த கால்நடைப் பண்ணைகள் கால்நடை மருத்துவக் கல்லூரியில் பயிலும் பட்டதாரி மாணவர்களுக்கு, பண்ணை பராமரிப்பு முறைகளில் நேரடிப் பயிற்சி அளிக்கும் நிலையங்களாகப் பயன்படுகின்றன.



1978 மார்ச் 7]

**அயல் இன கால்நடைப் பண்ணை, ஈச்சங்கோட்டை.**

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டையில் உயர் அயல் இனமான ஜெர்சி இன கால்நடைகள் வளர்க்க, அயல் இன கால்நடைப் பண்ணை ஒன்று துவக்கப்பட்டுள்ளது. டென்மார்க் உதவியுடன் ஈச்சங்கோட்டையில் ஓர் உறை விந்து நிலையமும் நிறுவப்பட்டு வருகிறது. இதன் மூலம் இனவிருத்தி வசதிகளை தஞ்சை மாவட்டம் முழுமையும், எல்லாப் பகுதிகளிலும் செயற்கை இனவிருத்தி கிளை நிலையங்கள் மூலம், முதற்கட்டமாக உறை விந்து விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, இப்பண்ணைக்கு ஆஸ்திரேலியாவிலிருந்து 111 ஜெர்சி இன மாடுகள் அண்மையில் வந்துள்ளன.

### IV. கால்நடை நோய் நீக்கப் பணிகள் :

ஆற்றலுடன் நோய்களைக் கட்டுப்படுத்துவதும் அவைகளை முற்றிலும் ஒழிப்பதும் கால்நடை நோய் நீக்கப் பணியின் முக்கிய குறிக்கோளாகும். இதற்கான சகல சாத்தியக் கூறுகளையும் மேற்கொள்ளுவது அரசின் கடமையாகும்.

தற்சமயம் தமிழகத்தில் நோய் நீக்குப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக 38 கால்நடை மருத்துவ மனைகளும், 10 கால் நடை மருத்துவ கேந்திர கிராம நிலையங்களும், 509 கால்நடை மருந்தகங்களும், 78 கால்நடை மருந்தக கேந்திர கிராம நிலையங்களும் ஆக மொத்தம் 635 நிலையங்கள் உள்ளன.

(i) பிரதம மருத்துவ நிலையங்கள்.—

மாவட்ட தலைமையிடங்களில் இயங்கும் கால்நடை மருத்துவ மனைகளில், நோய்களைக் கண்டுபிடிப்பதற்கும், மருத்துவம் அளிப்பதற்குமான நவீன வசதிகளுடன் கூடிய பரிசோதனைச் சாலைகளை ஏற்படுத்தி, பிரதம மருத்துவர் ஒருவரின்கீழ் இயங்கும் பிரதம மருத்துவ மனைகளாக உயர்த்தப் பட்டுள்ளன. இத்தகைய மருத்துவ மனைகள் சென்னை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு இடங்களில் இயங்கி வருகின்றன.

[1978 மார்ச் 7

(ii) கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள்.—

கவனத்துடன், விரைவாகவும் நவீன முறைகளில் நோய்களைக் கண்டு பிடிக்கவும், புதிய மருந்துகள் முதலியனவற்றை புகுத்தவும், 1977–78 ஆம் ஆண்டு ஒரு புதிய திட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், வேலூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் மூன்று கால்நடை நோ புலனாய்வுப் பிரிவுகள் செயல்படுகின்றன். ஒவ்வொரு விலும் (1) நுண்மை ஆய்வு-ஒட்டுயிர் ஆய்வு, (2) இய முறை-நோய்க்குறி ஆய்வு, (3) தடுப்பு மருந்து ஆகிய 3 பிரி கொண்ட ஒரு மருத்துவ பரிசோதனைக் கூடம் இரு மருத்துவ பரிசோதனைகளைக் கொண்ட நடமாடும் ஊ இந்நிலையங்களுடன் இணைக்கப்பட்டு, சாதாரண நோய்களை மட்டுமின்றி கொடிய குடற்புழுக்களையும் கண்டுபிடிக்கும் அளவீடும் மேற்கொள்ளப்படும்.

(iii) வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்.—

வெக்கைநோய் மிகக் கொடுமையான தொத்து நோய். இந்நோய் கொண்ட மாடுகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள் ஆகியவை மந்தை மந்தையாக இறப்பதனால் பெரும் இழப்பு ஏற்படுகின்றது. மேலும், பால் உற்பத்தி, இறைச்சி உற்பத்தி முதலியனவும் குறைந்து விடுகின்றன. இந்நோய் கால்நடைகளுக்கு ஆண்டின் எல்லாக் காலத்திலும், எந்த வயதிலும் பால் வேறுபாடின்றி ஏற்படுகின்றது. இந்நோய் ஒழிப்பிற்காக மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமொன்று தமிழ்நாட்டில் செயலில் இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் கீழ்க்காணும் பிரிவுகளின் மூலமாக வெக்கை நோய்த் தடுப்பு ஊசி குத்தும் பணி நடைபெற்று வருகிறது :—

(1) வெக்கைநோய்த் தடுப்பூசி குத்தும் மாவட்டக் குழுக்கள். 14

(2) கண்காணிப்புப் பிரிவுகள் .. 10

(3) சோதனைச் சாவடிகள் .. 13



1978 மார்ச் 7]

மேலும் அரசு இம்மாநிலத்திலுள்ள தொற்று நோய் பரவக் கூடிய சூழ்நிலைகளைக்கொண்ட இடங்களைச் சீராக கண்டறிந்து ஆங்கு அந்நோயினைக் கட்டுப்படுத்துவதற்காக, தடுப்பூசிகள் போடுவதற்காக ' வெக்கை நோய் கண்காணிப்பு மற்றும் தடுப்பதற்கான திட்டம் ' ஒன்றிற்கு அண்மையில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

(iv) இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு நிலையம்.—

கடும் தொற்று நோயினால் பெருவாரியான கால்நடைகள் இறந்துவிடுவதன் காரணமாக, இத்தகைய நோய்களைக் கட்டுப்படுத்துவது குறித்து கவனம் செலுத்துவது இன்றியமையாததாகும். பல்வேறு தொற்றுநோய்கள் பரவாவண்ணம் கால்நடைகள் உரியவாறு பாதுகாக்கப்பட்டால்தான் கால்நடைகளை பெருமளவுக்கு உற்பத்தி செய்ய முடியும். இராணிப்பேட்டையிலுள்ள இந்நிலையம் தற்போது நோய்த் தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்வதோடு நோய்த் தடுப்பு மருந்தின் தரத்தை உயர்த்துதல், நோய்த் தடுப்பு மருந்துகளைப் புதிதாகக்கண்டுபிடித்தல், பல்வேறு நோய்க்கான காரணங்கள், அவற்றைத் தடுப்பதற்கான முறைகள் ஆகியவை குறித்து ஆய்வு செய்தல் முதலிய ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளது. இந்நிலையத்திலிருந்து பல ஆராய்ச்சிக் குறிப்புகளும் வெளியிடப்படுகின்றன. இந்நிலையத்தில் 23 உயிரியல் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றைக் கொண்டு நமது மாநிலத்தின் தேவைகளை நிறைவு செய்வதோடு மட்டுமல்லாது அண்டை மாநிலங்களுக்கும் வழங்கப்படுகின்றன. சென்னை கால்நடைக் கல்லூரி, கால்நடை மருத்துவ பட்ட மேற்படிப்பு மாணவர்கள், பட்டப் படிப்பு இறுதியாண்டு மாணவர்கள் கொண்ட குழுவினர் பல்வேறு உயிரியல் பொருட்களைத் தயாரிக்கும் முறையையும் அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பதுபற்றியும் அறிந்து கொண்டு அவற்றில் பயிற்சி பெற ஒவ்வொராண்டும் முகமையில் அனுப்பப்படுகின்றனர். அண்மையில் இந்நிறுவனத்தினை விரிவாக்குவதற்கும், வலுப்படுத்துவதற்கும் ரூ. 21·81 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

(v) வெறிநோய்த் தடுப்பு மருந்து (ஒரு ஊசி).—

தற்சமயம் வெறிநோய்த் தடுப்பூசி மாடுகளுக்கு 14 நாட்களுக்கும், ஆடுகளுக்கு 10 நாட்களுக்கும், நாய்களுக்கு 7 நாட்களுக்கும் போடப்படுகின்றன. நாய்களுக்கு நீண்டகாலத் தேவையான "ஒரு ஊசி" வெறிநோய்த் தடுப்பு மருந்தை இந்நிலையம் உற்பத்தி செய்வதின் மூலம் மக்களுக்கு பெரிதும் உதவியுள்ளது.

(vi) பரிசோதனைக்கூடங்கள்.—

தமிழகத்தில் 13 மாவட்டங்களில் 13 பரிசோதனைக் கூடங்கள் இயங்கி வருகின்றன. இவைகளின் மூலம், நோய்க்கான காரணம் உடனடியாகக் கண்டுபிடிக்கப் படுவதுடன் தகுந்த சிகிச்சையும், தடுப்புப் பணியும் மேற்கொள்ள துறைஅலுவலர்களுக்கு உதவுகின்றன.

vii) டமாடும் நிலையங்கள்.—

தமிழகத்தில் சென்னை, விருதுநகர், சிவகங்கை ஆகிய இடங்களில் மூன்று நடமாடும் கால்நடை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

V. கால்நடைப் பராமரிப்புத்துறையின் நிர்வாக அமைப்பு

கால்நடை பராமரிப்புத்துறை மண்டல அடிப்படையில், செயல்படுகிறது. கால்நடை பராமரிப்பு இயக்குநரின் மேற்பார்வையின்கீழ் துறையின் அனைத்து நடவடிக்கைகளும் கால்நடை பராமரிப்பு இயக்குநர் அலுவலகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலம் எட்டு மண்டலங்





களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் கால்நடை பராமரிப்புத் துணை இயக்குநர் ஒருவரின் பொறுப்பில் உள்ளது.

கால்நடை பராமரிப்பு இணை இயக்குநர் இருவரும் கால்நடை பராமரிப்பு துணை இயக்குநர் ஒருவரும் கால்நடை பராமரிப்பு இயக்குநருக்கு உதவி புரிகின்றனர். இந்த அலுவலகத்தில் வெக்கை நோய் அலுவலர் ஒருவரும் இருக்கிறார். இந்த மாநிலத்தில் வெக்கை நோய் ஒழிப்புத் திட்டத்திற்கு அவர் பொறுப்பு ஏற்றுள்ளார். ஆடு, கோழி மற்றும் பிற இனம் வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், மேற்பார்வையிடுதல், கட்டுப்படுத்தல் முதலியவற்றிற்கு கால்நடை பராமரிப்பு இயக்குநருக்கு கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் உதவி புரிகிறார். இயக்குநர் அலுவலகத்தில் கால்நடைப்பண்ணை பராமரிப்பு விவரங்களைப் பராமரிப்புச் செய்வதற்கும், இந்திய அரசு ஒருங்கிணைப்பு மாதிரி ஆய்வுத் திட்டப் பொறுப்புக்கும், இரண்டு கால்நடைப் பராமரிப்பு புள்ளிவிவர இயலாளர் உள்ளனர். மாநிலம் முழுவதும் கால்நடைத்தீவன வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, வேளாண்மைத் துறையைச் சேர்ந்த தீவன வளர்ச்சி அதிகாரி ஒருவர் இயக்குநர் அலுவலகத்தில் இருக்கிறார்.

தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள கால்நடை பராமரிப்பு மண்டலத் துணை இயக்குநர்களுக்கு, ஒருவர் கால்நடைப் பராமரிப்புக்கும், மற்றொருவர் நோய் ஆய்விற்குமாக இரண்டு சிறப்பறிஞர்கள் உதவி புரிகின்றனர். மற்ற கால்நடை பராமரிப்பு மண்டலத் துணை இயக்குநர்களுக்கு ஒரு சிறப்பறிஞர் உதவி புரிகிறார். நோயினைக் கட்டுப்படுத்துவதே சிறப்பறிஞரின் (நோய் ஆய்வாளர்) முக்கிய திட்டப் பணியாகும். ஒவ்வொரு மண்டலமும் மீண்டும் ஒரு வருவாய்த் துறை வட்டாரம் மற்றும் தாலுக்காவினை உள்ளடக்கிய கால்நடைப் பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு கால்நடைப் பகுதியும் ஒரு கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநரின் பொறுப்பிலுள்ளது.

தொழில் நுட்ப உதவி அளிப்பதுடன், அவர்களால் உற்பத்தி செய்யப்படும் கோழிப்பண்ணைப் பொருட்களான முட்டைகள், கழிக்கப்பட்ட கோழிகளை அவர்களிடமிருந்து பெற்று விற்பனை செய்ய உதவி புரிகின்றன.

கோழிப் பண்ணைக்குத் தேவையான பொருள்கள் அளித்து அவைகளின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யும் பொறுப் பேற்று, இந்நிறுவனத்தால் செய்யப்படும் உதவியானது கோழி வளர்ப்புத் தொழில் இம்மாநிலத்தில் ஒரு பெரிய திருப்புமுனையை அடைய ஏதுவாயிற்று. இடைத்தரகர்கள் இடையில் புகாமல் தடுக்கப்பட்டு, உற்பத்தியாளர்களுக்கு அவர்கள் செய்யும் உற்பத்திப் பொருட்களுக்கு நியாய விலைகள் கிடைக்கும்படி செய்கிறது. அதே சமயத்தில் நுகர்வோர் உற்பத்திப் பொருட்களை நியாய விலையில் அடையவும் உதவி செய்துள்ளது. இந்நிறுவனத் தினால் உறுதியான விற்பனை வசதி அளிப்பது கண்டு கோழி வளர்ப்பிற்கு இதுவரை நிதியுதவி அளிக்க முன்வராத தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் தற்போது நிதியுதவியளிக்க முன்வந்துள்ளன.

**விற்பனைப் பிரிவின்கீழ் எய்தியுள்ள சாதனைகள் கீழே தரப் பட்டுள்ளன.**

(1) ஒவ்வொரு பிரிவிற்கும் விற்பனை உத்தி தாமாகப் பாகு படுத்தப்பட்டு முட்டை கொள்முதல் பலவித அடிப்படையில் எவ்விடம் வாங்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டு, பலவித நிலைகள் கொண்ட நுகர்வோரின் தரம் பாகுபடுத்தப்பட்டு, தேவையை எவ்விதம் பூர்த்தி செய்ய வேண்டும் என்று நிர்ணயிக் கப்பட்டுள்ளது. இந்த விற்பனை உத்தி 1½ ஆண்டு காலத்திற்கு நடப்பிலிருக்க தயாரிக்கப்பட்டுள்ளது.

(2) சென்னை மாநகரத்தில் முட்டை விற்பனை விலை ஒவ்வொரு நாளும் ஏற்ற இறக்கத்திற்கு உட்பட்டிருக்கிறது. இதை நீக்கும் பொருட்டு இந்நிறுவனம் முதன்முறையாக வியாபாரிகளிடம் முட்டை கொள்முதல் விலையை ஓராண்டு காலத்திற்கு நிர்ணயித்





சென்னையில் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்கள், அதாவது மாணவர் விடுதிகள், மருத்துவ மனைகள் முதலியவற்றிற்கு இந் நிறுவனத்தினால் ஆண்டு முழுவதும் நிர்ணயிக்கப்பட்ட விலையில் முட்டை விநியோகம் செய்ய முடிகிறது. இம்மாதிரியான முட்டை கொள்முதல் விலை நிர்ணயம் குறித்து நாமக்கல்லிலிருக்கும் முட்டை வியாபாரிகளுடன் உடன்பாடு செய்து கொள்ள இந்நிறுவனம் கருத்தில் கொண்டு கலந்துறையில் ஆழ்ந்துள்ளது.

(3) பொது, மற்றும் தனியார் துறையில் இயங்கும் மாணவர் விடுதிகளுக்கும் மற்றும் உணவு விடுதிகளுக்கும் முட்டை மற்றும் கோழி இறைச்சி முதலியவைகளை விநியோகிக்கும் பொறுப்பை இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது. சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பாதுகாப்புத் துறையின் முப்படையைச் சார்ந்த நிலையங்களுக்கும் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முட்டைகள் விநியோகம் செய்யும் பொறுப்பை இந்நிறுவனம் மேற் கொண்டுள்ளது.

(4) இவ்விற்பனைப் பிரிவானது இறைச்சிக் கோழிக்குஞ்சு உற்பத்தியை இம்மாநிலத்தில் பெருக்கும் பொருட்டு இறைச்சிக் கோழிக்குஞ்சு வளர்ப்பின் முக்கியத்துவத்தையும் லாபத்தன்மை யையும் மக்களுக்கு எடுத்துரைத்துள்ளது. சென்னை நகரத்தில் இவ்வித இறைச்சிக்கோழி அறிமுகப்படுத்தப்பட்டு அது பிரபல மடைந்துள்ளது. மேலும் இத்தொழிலால் குறைந்த முதலீட்டைக் கொண்டு சீக்கிரத்தில் லாபம் கிட்டும் என்ற நோக்கத்தை அனேக விவசாயிகள் உணர்ந்துள்ளனர்.

(5) மேலும் மக்கள் இறைச்சிக் கோழிக்குஞ்சுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் அதிகமாக விநியோகிக்கப்படும் நோக்கத்துடன் இந் நிறுவனமானது சென்னை மற்றும் சுற்றுப்புறங்களில் தொடர் பிணைப்புக் கொண்டு அவ்வித இறைச்சிக் கோழிக்குஞ்சு வளர்ப்பிற்கு வேண்டிய பண்ணைப் பொருட்களும், அவ்விதமாக உற்பத்தியான பொருட்களை விற்பனை செய்யவும் ஏற்பாடு செய்துள்ளது. இந்நிறுவனம் விவசாயிகளுக்கு வருவாய் பெருக்க வதுடன் உணவு உற்பத்திக்கு வழிவகையும் செய்கிறது.

(6) இந்நிறுவனமானது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்பொருட்டு தொழில் வணிக நிறுவனத்துடன் (State Trading Corporation) தொடர்பு கொண்டுள்ளது.

(7) கோழி வளர்ப்பில் ஈடுபட்டோர்க்கு கோழி வைத்தியத்திற்குத் தேவையான மருந்துகளைக் குறைந்த விலையில் வழங்கும்பொருட்டு முக்கியமான கோழி வைத்திய மருந்துகளை இருப்பில் வைத்துக்கொள்ள உத்தேசித்துள்ளது.

(8) உடைந்த, சிறிய, கன்னிக் கோழி முட்டைகளை வீணாக்காமல் இதர முட்டையைச் சார்ந்த உற்பத்திப் பொருட்களுக்குப் பயன்படுத்த உத்தேசித்துள்ளது. ஆரம்ப கட்டமாக சென்னையில் முட்டை ஊறுகாய் தயார் செய்து விற்பனை துவக்கப்பட்டுள்ளது. இதனால் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு அவர்களுடைய கோழிப் பண்ணை உற்பத்திப் பொருள்கள் எல்லாவற்றையும் விற்க உதவி புரியும் வகையில் உள்ளது.

(அ) (2) **தீவனக் கலவை நிலையங்கள்:** (1) நந்தனம் (சென்னை), (2) கொட்டப்பட்டு (திருச்சி), (3) கப்பலூர் (மதுரை), (4) திருப்பூர் (கோவை) மற்றும் சேலம் அருகே (5) சேஷஞ்சாவடி ஆகிய இடங்களில் உள்ளன.

இத் தீவனக் கலவை நிலையங்களில் சரிவிகிதக் கோழித் தீவனம், தொழிற்கூடம் மற்றும் விவசாய சார்நிலை உற்பத்திப் பொருள்களைக் கொண்டும் மற்றும் மனித உணவிற்கு தேவையற்றது என்று கருதப்படும் பொருட்களைக் கொண்டும் தயாரிக்கப்படுகிறது. தீவனத்தின் தரத்தை ஒரே சீரான நிலையில் வைத்துக் கொள்ளத் தேவையான கலவை விகிதம் பின்பற்றப் படுகிறது. மேலும் தீவனத்தின் தரத்தை ஒரு கோழியின ஊட்டச் சத்து நிபுணர் கண்காணித்து வருகிறார்.

நியாய விலையில் இந்தத் தீவனக் கலவை நிலையங்கள் கோழித் தீவனத்தை விற்பனை செய்கின்றன. வளரும் கோழித் தீவனத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு, இத் தீவனக் கலவை நிலையங்களில் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது.



**(அ) 3. அரசூர் குஞ்சுபொரிப்பு நிலையம்**

அதிக முட்டையிடும் "பேர்ல் ரூபாலி" என்ற வெள்ளை முட்டையிடும் கோழிக்குஞ்சுகள், "பேர்ல் சோனலி" என்ற தங்கநிற முட்டையிடும் கோழிக் குஞ்சுகள் உற்பத்தி அரசூரில் உள்ள வீரிய குஞ்சு பொரிப்பு நிலையத்தில் தொடங்கப்பட்டுள்ளது. "பேர்ல் ப்ரோ சாம்ராட்" என்ற உண்பதற்கேற்ற இறைச்சிக் கோழிக் குஞ்சு உற்பத்தியும் இந்நிலையத்தில் தொடங்கப் பட்டுள்ளது.

இவ்விதமான கோழிக்குஞ்சு உற்பத்தியும், விற்பனையும் இந்நிறுவனத்தால் தொடங்கப்பட்டதனால் வணிக முறையில் கோழி வளர்ப்பினால் லாபம் அடைய முடியும் என்று நிரூபித்துள்ளது. மேலும் வேண்டிய நேரத்தில் போதுமான அளவு தரமான கோழிக்குஞ்சுகள் கோழி வளர்ப்பில் ஈடுபட்டோருக்கு அளிக்க முடியும் என்ற உறுதித் தன்மை யமைந்துள்ளது. இந்தியாவிலேயே பொதுத் துறையில் இயங்கும் இந்த ஒரே வீரிய இனக் குஞ்சு பொரிப்பு நிலையமானது இம்மாநிலத்தின் கோழி வளர்ச்சி அபிவிருத்திக்காக மேற்கொண்ட ஒரு முக்கிய செயலாகும்.

## ஆ. விரிவாக்கப் பணி

மதுரை மாவட்டத்தில் கப்பலூரில் உள்ள குஞ்சு பொரிப்பு நிலையம், இந்நிறுவனத்தின் கீழ் இயங்கும் கோழி வளர்க்கும் நிலையங்களுக்கும் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் இயங்கும் கோழி விஸ்தரிப்பு நிலையங்களுக்கும் இனக் கோழிக் குஞ்சுகள் அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

கோழிப் பண்ணைகளின் வணிகத் தன்மையுடைய மாற்றத்தினால், இனக் கோழிக் குஞ்சுகள் தேவை தற்பொழுது குறைந்துவிட்டது. மேலும், அரசூரில் உள்ள வீரிய இனக் கோழிக் குஞ்சு பொரிப்பு நிலையத்தில் உண்பதற்கேற்ற கோழிக் குஞ்சுகள் உற்பத்தித் திறன் வளரும் தேவையை சமாளிக்க முடியாத

நிலையிலுள்ளதால் கப்பலூர் குஞ்சு பொரிப்பு நிலையத்தை உண்பதற்கேற்ற கோழிக் குஞ்சு தயாரிப்பு நிலையமாக மாற்ற உத்தேசிக்கப்பட்டு அதற்கேற்ற நடவடிக்கைகளில் இந் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

### வளர்க்கும் நிலையங்கள்

இந்நிறுவனத்தின் கீழ் ஆறு வளர்க்கும் நிலையங்கள் அடையாறு (சென்னை), செங்கல்பட்டு (செங்கல்பட்டு), கொட்டப்பட்டு (திருச்சிராப்பள்ளி), தே. கல்லுப்பட்டி (மதுரை), பெருந்துறை (கோவை), சேலம் அருகே சேஷஞ்சாவடி ஆகிய இடங்களில் இயங்குகின்றன. இவ்வளர்க்கும் நிலையங்களில் பொதுமக்கள் மற்றும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு கோழிகள் அளிக்கும்பொருட்டு, கோழிக் குஞ்சுகள் வளர்க்கப்படுகின்றன.

### 9. செயல்படுத்தப்படும் திட்டங்கள்

1. தேர்ந்தெடுக்கப்பட்ட மதுரை, செங்கற்பட்டு, வட ஆற்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் கால்நடை வளர்ப்பு சிறப்புத் திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்புத் திட்டத்தை செயற்படுத்த இந் நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது.

கோழிப் பண்ணைகளுக்கு வேண்டிய கோழிப் பண்ணைப் பொருட்கள் மற்றும் விற்பனை செய்யும் வாய்ப்பை இந் நிறுவனம் ஏற்கும் தயார் நிலையைக் கண்டு, முதலில் தயங்கிய தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் தற்பொழுது இத்திட்டத்திற்கு நிதியுதவி செய்ய முன்வந்துள்ளன. சிண்டிகேட் வங்கி இத்திட்டத்திற்கு நிதி உதவி செய்ய முன்வந்துள்ளது. சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு உதவி புரிவதற்காக தீட்டப்பட்ட இத்திட்டம் இந்நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, இத்திட்டத்தின்கீழ் 1,707 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். முழுமையாக இத்திட்டம் செயல்படும்பொழுது, [illegible] முட்டை உற்பத்தி நாள் ஒன்றுக்கு எண்ணிக்கை



?,60,000 வீதம் பெருகுவதோடல்லாமல், முட்டை குறித்த தேவைக்கு அண்டை மாநிலத்திலிருந்து முட்டை இறக்குமதியைத் தடுக்க வழி வகுக்கும். தமிழ்நாட்டில் இத்திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்படும் கோழிப் பண்ணைகள் 6,000 ஆக இருக்கும்.

2. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளரின் நலனுக்காக கோழி வளர்ப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டு, இத்திட்டம் வளர்ந்து வரும் நிலையிலுள்ளது.

3. "கூண்டுகளில் கோழி வளர்த்தல்" என்ற திட்டத்தை நகர்ப்புற மற்றும் கிராமங்களில் செயற்படுத்த இந்நிறுவனம் தொடங்கியுள்ளது.

4. ஸ்ரீலங்கா அகதிகள் புனர்வாழ்விற்காக ஒரு கோழி வளர்ப்புத் திட்டம் செயற்படுத்த வேண்டி இந்நிறுவனம் வேண்டிய மூலப் பொருட்களும் தொழில் நுட்ப வசதியும் அளிக்கும்.

### நிதி நிலை

இந்நிறுவனம் தனது நிதிநிலை விவகாரத்திலும் முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. 1973-74 ஆம் ஆண்டில் (8 மாத நடப்பில்) ஏற்பட்ட ரூபாய் 24.06 இலட்சம் நஷ்டம், 1976-77 இல் ரூபாய் 7.11 இலட்சமாகக் குறைந்துவிட்டது. வணிகத் தன்மையில்லாத விஸ்தரிப்புப் பணிகளுக்குச் செய்யப்பட்ட செலவுகளும் இதில் அடங்குவதால் இவ்வாறுள்ளது. மேலும் நஷ்டத்தைக் குறைக்கும் நோக்கத்தோடு குஞ்சு பொரிப்பு நிலையம் மற்றும் வளர்க்கும் நிலையங்களை வர்த்தக ரீதியில் மாற்றியமைக்கவும், இந்நிறுவனம் உற்பத்திப் பொருட்களை அதிக அளவில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

1977-78 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் இலாபமோ நஷ்டமோ இல்லாத நிலையை அடைந்தபின் சிறிது இலாபத்துடன் இயங்குமென நம்பப்படுகிறது.

## இணைப்பு

(252-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கொள்கை விளக்கக் குறிப்பு

### 1978-79.

**கோரிக்கை எண் 30.**

சமூக நலம் என்ற தலைப்பின்கீழ் 1978-79 ஆம் ஆண்டிற்கான
ரூபாய் 4,92,13,000 நிதி ஒதுக்கீடு செய்ய அவையின் ஒப்புதலை
கோருகிறேன்.

**முன்னுரை.**

தமிழ்நாடு, சமூக பொருளாதார முன்னேற்றத்தின்
நுழைவு வாயிலில் உள்ளது. திட்டக்காலத்தில் செயல்
படுத்தப்பட்ட பல்வகை திட்டங்கள், பெண்களின் சமூக
பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்குடையது.
அவர்களுக்கு உதவவும், வழிக்காட்டவும், ஊக்குவிக்கவும்,
மாறி வருகின்ற காலத்தையும் சமூக [illegible]
உணர்ந்து சிறப்பான பங்காற்றவும் [illegible]
திட்டங்களை அவர்கள் அறியும்படி செய்து அத்திட்டங்
களால் உண்டாகிய முன்னேற்றத்தை உணரவும் 1947 ஆம்
ஆண்டு ஒரு தனி அரசுத்துறை ஏற்படுத்தப்பட்டு, அத்துறை
1955 ஆம் ஆண்டில் ஓர் இயக்குநரை தலைவராகக் கொண்ட
துறையாக மாற்றி அமைக்கப்பட்டது. தமிழ்நாடு சமூக, நல
வாரியம் 1954 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. மகளிர் நலத்
துறை, மாநில சமூகநல வாரியம், சமுதாய வளர்ச்சித் துறையின்
மகளிர் நலப்பிரிவு ஆகிய மூன்று அமைப்புகளும் 1961 ஆம்
ஆண்டில் ஒருங்கிணைக்கப்பட்டு தனிப்பட்டதோர் மகளிர் நலத்
துறையாக உருவாக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டில் மகளிர் நலத்
துறையின் பெயரை, சமூக நலத்துறை என்று மாற்றப்பட்டது.

2. மகளிர் நலப் பணிகளை மேற்கொள்ளுவதுடன், இத்துறை
பள்ளியில் சேரும் வயதடையாத சிறார்களுக்கும்,
கருவுற்றிருக்கும் மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் ஆகி
யோருக்கும் பல்வேறு சத்துணவுத் திட்டங்கள், உடல் ஊன







முற்றோருக்குப் பயிற்சியளித்தல், மறுவாழ்வளித்தல், சட்டப்படி
காவலில் வைக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்களுக்காக இல்லம்
ஒன்றை நடத்துதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

### நிர்வாக அமைப்பு

3. மாநில் அளவில் சமூக நலத்துறை இயக்குனரே இத்
துறையின் தலைவராவார். இணை இயக்குநர் ஒருவரும்,
துணை இயக்குநர் ஒருவரும், நேர்முக உதவியாளர் ஒருவரும்,
நிர்வாக நேர்முக உதவியாளர் ஒருவரும், சிறப்பு அலுவலர்
இருவரும் (சிறார் நலத்திற்கு ஒருவர், சிறப்புச் சத்துணவுத்
திட்டத்திற்கு ஒருவர்), உடலூனமுற்றோரின் மறுவாழ்வுக்குப்
பொறுப்பு வகிக்கும் உதவி இயக்குநர் ஒருவரும், நிதியைக்
கணக்கு அலுவலர் ஒருவரும் சமூக நலத்துறை இயக்குநருக்கு
உதவி புரிகின்றனர்.

4. மாவட்ட அளவில், மாவட்ட சமூக நல அதிகாரியே.
துறைத் திட்டப்பணிகள் அனைத்திற்கும் பொறுப்புள்ளவராவார்.
ஊராட்சி ஒன்றியங்களுடன் இணைக்கப்பட்ட விரிவாக்கப் பணி
யாளர்கள் (சமூக நலம்), ஊர் நலப் பணியாளர்கள், சிறார் நல
மையங்களில் சிறார் நல அமைப்பாளர்கள், நகர்ப்பகுதிகளில்
சமூக நல அமைப்பாளர்கள், ஆகியோர்கள் களப்பணியாளர்
களாவார்கள்.

### 1. மகளிர் நலன்

5. பணி இல்லங்கள்—இத்துறை 18 வயது முதல் 40 வயது
வரை உள்ள சமூகத்தில் ஆதரவற்ற, கைவிடப்பட்ட பெண்களுக்கு
தாம்பரத்திலும், கடலூரிலும், தஞ்சாவூரிலும் ஆக மூன்று பணி
இல்லங்களை நடத்தி வருகிறது. மேலும் தென் மாவட்டங்களின்
தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு திருநெல்வேலியில் ஒரு
பணி இல்லம் 1977-78 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது.
1978-79 ஆம் ஆண்டில் மற்றுமொரு பணி இல்லம் தொடங்கப்பட
இருக்கிறது. பணி இல்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் பெண்
களுடன் அவர்களின் இரு குழந்தைகளும் அனுமதிக்கப்
படுகின்றனர். அவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. வரை கல்வி கற்பிக்கப்

படுகிறது. முதியோர் ஒருவருக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 வீதமும், சிறுர் ஒருவருக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 36 வீதமும் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இந்த இல்லங்களில் இருப்பதற்கு அனுமதிக்கப்படுகின்ற காலம் மூன்றுண்டுகளாகும். முதியோர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 60-ம், சிறுர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 25-ம் உடைகளுக்காக மானியம் வழங்கப்படுகிறது.

6. தாம்பரத்திலுள்ள பணி இல்லத்தின் பொதுப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள முதியோர் 200 பேரும், சிறுர் 100 பேரும் ஆவர். கடலூர், தஞ்சாவூர், பணி இல்லங்கள் ஒவ்வொன்றிலும் அனுமதிக்கப்பட்ட முதியோரின் எண்ணிக்கை 50-ம், சிறுரின் எண்ணிக்கை 25-ம் ஆகும். திருநெல்வேலி இல்லத்தில் பொதுப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை முதியோர் 40 பேரும், சிறுர் 15 பேரும் ஆவர்.

7. தாம்பரம் பணி இல்லத்தில் உடல்ஊனமுற்ற மகளிர், சிறுர் ஆகியோருக்காக தனிப்பிரிவு ஒன்றும் உள்ளது. இதில் அனுமதிக்கப்படும் எண்ணிக்கை முதியோர் 30 பேரும், சிறுர் 20 பேரும் ஆகும்.

8. பணி இல்லங்களில் முன்பு தங்கியிருந்தவர்களின் மறு வாழ்விற்காக கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:—

(அ) தாம்பரம் பணி இல்லத்திலுள்ள பொதுப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை 200-க்கு உட்பட்டு, உதவித் தொகையுடன் இரண்டாண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேறுகிய பாடமுறை வகுப்பும் நடத்தப்பட்டு வருகிறது. 1978-79 ஆம் ஆண்டில் கடலூர், தஞ்சை ஆகிய பணி இல்லங்கள் ஒவ்வொன்றிலும் 25 பேர்களுடன் இரண்டாண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேறுகிய பாடமுறை வகுப்பு நடத்தப்பட இருக்கின்றது. புதிதாக திருநெல்வேலியில் கட்டப்பட்டுள்ள பணி இல்லத்திலும், 1978-79 ஆம் ஆண்டு தொடங்கப்பட இருக்கும் இல்லத்திலும் மேற்கண்ட வகுப்பு நடத்தப்பட இருக்கின்றது.



(ஆ) அரசாங்கத் தொழில் நுட்பத் தேர்வுகளுக்கு அனுப்புவதற்காக 65 பெண்களுக்கு தையல் தொழிலில் பயிற்சியளிக்கும் பொருட்டு, தையல் பயிற்சி நிலையம் ஒன்று தாம்பரத்திலுள்ள பணி இல்லத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதுபோன்ற தையல் பயிற்சி நிலையங்கள் கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய பணி இல்லங்களுடனும் இணைக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றிலும் 15 பேர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

(இ) மூன்று பணி இல்லங்களிலும், ஸ்திரி சேவா மந்திரில் ஒன்றுமாக நான்கு சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பயிற்சி நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு இல்லத்திலும் 20 பேர் பயிற்சி பெற அனுமதிக்கப்படுகின்றனர். பயிற்சி பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 உதவித் தொகை வழங்கப்படுகின்றது. 1978-79-ஆம் ஆண்டில் மூன்று பணி இல்லங்களுக்கும், 3 தமிழ் தட்டச்சுப் பொறியும் 2 ஆங்கில தட்டச்சுப் பொறியும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஈ) இடைநிலை ஆசிரியர்கள் பயிற்சிப் பாடமுறை வகுப்பு ஒன்றும் பல்லாவரத்தில் நடத்தப்பட்டு வருகிறது. முழுநிலைப் பிரிவில் 40 பேர், இளநிலைப் பிரிவில் 40 பேர் ஆக 80 பேர்கள் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப்பிரிவைச் சேர்ந்த ஒவ்வொருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 உதவித்தொகை வழங்கப்படுகிறது.

(உ) ஆயத்த உடைகள் தைக்கும் பயிற்சி நிலையம் ஒன்று தாம்பரத்தில் அன்றுடக் கூலி பெறும் 15 பணியாளர்களுடன், நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு பணியாளருக்கும் நாளொன்றுக்கு ரூ. 3 கூலி வழங்கப்படுகிறது.

(ஊ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் (1974-75-ம் ஆண்டுத் திட்டம்) எட்டாம் வகுப்பு படித்துத் தேறிய பெண்கள் வீட்டைக் கவனித்துக் கொள்பவராகவும், வேலைக்காரிகளாகவும் பணியில் சேரும் பொருட்டு அவர்களுக்கு பயிற்சி அளிப்பது குறித்த திட்டம் ஒன்றிற்கு அனுமதி வழங்கப்பட்டு, தாம்பரத்திலுள்ள பணி இல்லத்தில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த

பயிற்சிப்பிரிவில் 25 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது. பயிற்சி பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 உதவித்தொகை அளிக்கப்படுகிறது.

(எ) 6—10—77 முதல் கடலூரில் பணி இல்லம் அரசுக்குச் சொந்தமான புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு அங்கு நடை பெற்று வருகின்றது. 1978-79-ல் மேற்கண்ட புதிய கட்டிடத்தில் வகுப்பு அறைகளுக்காக ரூ. 1.05 இலட்சம் செலவில் கூடுதலாக அறைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளன.

9. 1978-ம் ஆண்டு சனவரித்திங்கள் முதல் ரூ. 3,000-க்கு குறைவான ஆண்டு வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள 1 முதல் 30 வயதுள்ள 1,000 ஏழைப் பெண்கள் தட்டச்சு பயிற் பெற ஆண்டு உதவித் தொகை ரூ. 150 வழங்கப்பட்டு வருகின்ற

## பணிபுரியும் பெண்களுக்குரிய விடுதிகள்

10. குறைந்த வருவாய், நடுத்தர வருவாய் உள்ள புரியும் பெண்களுக்கு உணவு, உறைவிட வசதிகள் 1967-ல் 25 பெண்கள் கொண்ட பணிபுரியும் பெண்கள் விடுதி ஒன்று சென்னை மாநகரில் இத்துறை வாயிலாக தொடங்கி நடத்தப்பட்டு வருகிறது. உணவிற்காக 80 ரூபாயும் வாடகைக் காக 25 ரூபாயும் மின்கட்டணத்திற்காக 5 ரூபாயும் இவ்விடுதியில் தங்குவோரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

இவ்விடுதியில் பயன் பெறுவோரின் எண்ணிக்கையை கூடு லாக்க செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

11. பணிபுரியும் பெண்கள் விடுதிகளை நடத்துவதற்கு தொண் நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்காக மாநி அரசின் பரிந்துரையின் பேரில், பெண்கள் நலனில் ஈடுபட்டுள் தொண்டு நிறுவனங்களால் கட்டப்படுகின்ற விடுதிக் கட்டிடத்தி கட்டுமான விரிவாக்க மதிப்பீட்டுச் செலவில் 75 சதவீதம் வ மத்திய அரசு மானியம் வழங்குகிறது. அந்த தொண்டு நி வனங்களுக்கு மத்திய அரசால் வழங்கப்படுகின்ற மானிய







தொகைக்குக் கூடுதலாக மாநில அரசும், தகுதி வாய்ந்த தொண்டு நிறுவனங்களுக்கு 15 சதவீதம் வரையில் அல்லது ரூ. 35,000 (இவற்றில் எது குறைவோ அத்தொகையினை) மானிய மாக வழங்கி வருகின்றது.

இதுவரை இம்மாநிலத்தில் 17 தொண்டு நிறுவனங்கள் மேற் கண்ட மான்ய உதவித் தொகையைப் பயன்படுத்திக் கொண் டுள்ளன.

## பயிற்சி நிலையங்களும் உற்பத்தி நிலையங்களும்.

12. கிராமப்புற மகளிர்க்கு, தையல் பயிற்சி, கம்பளி நெசவு, பனை ஓலை, பாய் முடைதல், சமுக்காளம் நெய்தல் போன்ற எளிய குடிசைத் தொழில்களின் வாயிலாக, ஆழ்ந்த பயிற்சி அளிக்கும் பொருட்டு பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டன; அதனால் அவர்கள் தங்கள் குடும்ப வருவாயைக் கூட்டிக் கொள்ள முடி கிறது. இதற்குரிய பயிற்சிக்காலம் ஓராண்டாகும். பயிற்சிக் காலத்தில், பயிற்சி பெறுவோரின் வண்டிச் செலவுகள் போன்ற தற்செயல் செலவுகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, அவர்கள் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 உதவித்தொகை வழங்கப்படுகிறது. மூன்று அல்லது நான்கு பிரிவு முடிந்த பின்னர் பயிற்சி நிலையம் உற்பத்தி நிலையமாக மாற்றப்பட்டு பயிற்சி பெற்ற பெண்களுக்கு அவர்களால் முடிக்கப்படும் பொருட்களுக்குத் தகுந்தாற்போல் கூலி வழங்கப்பட்டு வருகின்றது.

13. தற்போது 25 பயிற்சி நிலையங்களுக்கும் 5 உற்பத்திப் பிரிவுகளும் உள்ளன. இவை சமூக நலத்துறையின் நிதியிலிருந்து நடத்தப்படுகின்றன.

14. 1978-79 ஆம் ஆண்டில் இரண்டு தையல் பயிற்சி நிலையங்கள் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒன்று கன்னியாகுமரி மாவட்டத்திலும், மற்றொன்று மதுரை மாவட்டத்திலும்.

15. இவைகளைத் தவிர, அரிசன நலத்துறை, பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை, தொழிலாளர் நலக்குழு, மறுவாழ்வுத் துறை ஆகியவற்றின் நிதியுதவியுடன் கீழ்க்கண்ட பயிற்சி நிலையங்களும் இத்துறையால் நடத்தப்படுகின்றன :—

| | பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. அரிசன நலத்துறை நிதி | 12 |
| 2. பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை நிதி | 4 |
| 3. தொழிலாளர் நலக்குழு நிதி | 10 |
| 4. மறுவாழ்வுத்துறை நிதி | 3 |

16. பழங்குடியினரைச் சேர்ந்த மகளிருக்காக வட ஆற்காடு மாவட்டத்தில் தையற் பயிற்சி நிலையம் ஒன்று திறக்கப் பட்டது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

17. 1978-79 ஆம் ஆண்டு மூன்று சாக்குத் துண்டு ( Chalk Crayon ) செய்யும் பயிற்சி நிலையங்களும் மூன்று மெழுகு வர்த்தி செய்யும் பயிற்சி நிலையங்களும் தொ[illegible] உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

சமூக நலக் கிளைகள்.

18. மாநிலம் முழுவதிலும் 50 சமூக நலக் கிளைகள் உள்ளன. சமூக நலக் கிளைகளைப் பொறுப்பேற்றுள்ள சமூக நலத்திட்ட அமைப்பாளர்கள் காலையில் புகுமுக ஆதாரக் கல்வி வகுப்புகள் நடத்துகின்றனர். மாலையில் குடும்பக்கலை, சத்துணவு, குழந்தை வளர்ப்பு, உடல்நலம், சுகாதாரம், உடலை நல்ல நிலையில் வைத்துக் கொள்ளுதல் போன்ற கலைகளைப் பெண்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றனர். குடும்ப வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் பொருட்டு தையற் பயிற்சி, பாய் முடைதல், தையல் இலைகள் தைத்தல் போன்ற குடிசைத் தொழில்களை முதிய மகளிருக்குக் கற்றுக் கொடுக்கின்றனர்.



## தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மானியம் அளித்தல்.

19. சமூகத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கியிருக்கும் மகளிர் நலனுக்காகவும், உடல் ஊனமுற்றவர்களின் நலனுக்காக வும் உள்ள தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, கீழ்க்காணும் பணிகளுக்கு அரசு மானியம் வழங்குகிறது.

(அ) அனாதைப் பெண்டிர்க்காக பணி இல்லங்கள் நடத்த மானியம்.

(ஆ) இளம்பிள்ளை வாதம், மூளை வாதநோய், மன வளர்ச்சிக் குறைவு நோய் இவற்றால் பாதிக்கப்பட்ட குழந்தை களைப் பராமரிக்கும் தொண்டு நிறுவனங்கள் தவிர, தொழுநோ யால் பாதிக்கப்பட்ட பெற்றோர்களின் தொழுநோய்க் குழந்தை களையும் அந்நோய் இல்லாத ஆரோக்கியமான குழந்தைகளையும் பராமரிக்கும் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம்.

(இ) மன வளர்ச்சி குன்றிய சிறார்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக சிறப்பாசிரியர் பயிற்சிக்காக உள்ள சென்னை பாலவிகார் பயிற்சிப் பள்ளிக்கு மானியம்.

20. கிராமப் புறங்களில், மகளிர் நலத்திற்காகவும், 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் நலத்திற்காகவும், உடல் ஊனமுற்றோரின் நலத்திற்காகவும், பாடுபடுகின்ற தொண்டு நிறுவனங்களுக்கு உதவி செய்து, ஊக்குவிப்பது அவசியமென கருதப்படுகிறது. அரசே இப்பணிகளை கிராமப் புறங்களிலுள்ள மேற்கூறியவர்களுக்கு நேரிடையாக உதவி செய்வதென்றால், அதற்கு மிகவும் அதிகச் செலவாகும். அரசு உதவியுடன், தொண்டு நிறுவனங்கள் இப்பணியைச் செய்தால், அரசின் சார்பில் பணியாளர்களுக்கும், இதர செலவுகளுக்கும் ஆகின்ற செலவினைத் தவிர்க்கலாம். இந்தக் குறிக்கோளுடன், கிராமப் புறங்களிலுள்ள தொண்டு நிறுவனங்களுக்கு சமூகப் பணி செய்வதற்கு ரூபாய் ஒரு இலட்சம் மானியமாக 1978—79-ல்

வழங்கப்பட இருக்கிறது. இந்த மானியம் கீழ்க்கண்ட பணிகளில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனங்களுக்கு மாநில சமூக நல வாரியத்தின் மூலமாக வழங்கப்படும் :—

(1) கைக் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகம்.

(2) குழந்தைகள் காப்பகம்.

(3) குழந்தைகளுக்கான மனமகிழ் மையம்.

(4) குழந்தைகளுக்கான வழிகாட்டி மையம்.

(5) மகளிருக்கான தாய்-சேய் பராமரிப்பு, சுகாதாரம், சத்துணவு, கைத்தொழில்கள் ஆகியவற்றில் பயிற்சி.

(6) மகப்பேறு மற்றும் நல்வாழ்வுப் பணிகள்.

(7) மகளிருக்கு மணமகிழ்வூட்டும் பணிகள்.

(8) வயதானவர்களுக்கும் ஊனமுற்றோருக்கும் ந வாழ்வுப் பணிகள்.

(9) தொழுநோய் மற்றும் எலும்புருக்கி, நோயிலிருந்து குணமாகியவர்களுக்கு மறு வாழ்வுப் பணிகள்.

(10) உடல் ஊனமுற்றோருக்கான நல்வாழ்வுப் பணிகள்.

(11) மகளிருக்கான கல்வித் திட்டங்கள்.

### மகளிர்—குழந்தைகளுக்கான குறைந்தளவுத் திட்டம்.

21. இத்திட்டம், கிராமப் பகுதிகளில் உள்ள பெண்கள், பற்பல சமூக, பொருளாதார வேற்றுமைகளை மறந்து மகளிர் மன்றங்களில் ஒன்று கூடுவதற்காக வகுக்கப்பட்ட ஒரு திட்டமாகும். மூன்றாவது திட்டக் காலத்தில் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 30 மன்றங்கள் வீதம் 11,220 மகளிர் மன்றங்கள் அமைக்கப்பட்டன. இவை தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. ஆண்டு தோறும் ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் இத்திட்டத்திற்காக சுமார் ரூ. 4,000 ஒதுக்கப்படுகிறது.



### மகளிர் மன்றம் மூலமாகப் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

22. பல்வேறு வகையான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள மகளிர் மன்றங்களை ஊக்குவிப்பதற்காக, பொருளாதார நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ள சிறந்த மகளிர் மன்றங்களுக்கு ரொக்கப் பரிசுகள் கொடுக்கப்படுகின்றன. மகளிர் மன்றங்கள் மூன்று வகைகளாகத் தரம் பிரிக்கப்பட்டு, ரொக்கப் பரிசாக முறையே ரூ. 1,000, ரூ. 600, ரூ. 400 என்று வழங்கப்படுகிறது. இது மத்திய அரசுத்திட்டமாகும். இதற்காக ஆண்டுக்கு ரூ. 21,200 செலவாகிறது.

### மகளிர் மன்ற அமைப்பாளர் பயிற்சி.

23. தலைமை தாங்கி நடத்தும் தகுதியுள்ள உள்ளூர் மகளிர் ஒவ்வொரு ஊராட்சியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, டி. கல்லுப்பட்டி (மதுரை), எஸ். வி. நகரம் (வட ஆற்காடு) ஆகிய இடங்களில் உள்ள கிராம விரிவாக்க பயிற்சி நிலையத்திலும், தாம்பரம் பணி இல்லத்திலும் ஒரு மாத கால அளவிற்கு அமைப்பாளர் பயிற்சி பெற அனுப்பப்படுகின்றனர். அத்தகைய பயிற்சி பெற்ற அமைப்பாளர்கள் அவரவர் தொடர்பு கொண்டுள்ள மகளிர் மன்றங்களில் மகளிரை கூட்டி, குழந்தை நலன், மனைக்கலைகள், மனைப்பொருளியல், காய்கறித் தோட்டம் வைத்து வளர்த்தல், சுற்றுப்புற சுகாதாரம், துப்புரவு போன்ற ஆர்வமும், பயனும் மிக்க பல்வேறு பொருள் குறித்து உள்ளூர் மகளிருடன் விவாதிக்கின்றனர். இது மத்திய அரசுத் திட்டமாகும். இதற்கு ஆண்டுக்கு ரூ. 27,000 செலவாகிறது.

### மகளிர் மன்றங்களின் முன்னேற்றமும் வளர்ச்சியும்.

24. மகளிர் மன்றங்களின் வளர்ச்சியை மேம்படுத்த இத்திட்டம் முத்துப்பேட்டை, உசிலம்பட்டி, தளி ஆகிய மூன்று வட்டாரங்களில் செயற்படுத்தப்படுகிறது. இதுவும் மத்திய அரசுத் திட்டங்களில் ஒன்றாகும். இதற்கு ரூ. 20,000 செலவாகிறது.

## 2. குழந்தைகள் நலன்.

25. சிறார் பள்ளிகள்—

(அ) இம்மாநிலத்தில் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து தொடங்கி தற்போது 3,154 சிறார் பள்ளிகள் இயங்கி வருகின்றன. பூவிருந்தவல்லி வட்டாரத்தில் உள்ள 50 சிறார் பள்ளிகள், அரிசனக் குடியிருப்பில் உள்ள 150 சிறார் பள்ளிகள், நீலகிரியைச் சேர்ந்த பனியா குழந்தைகளுக்கான 10 சிறார் பள்ளிகள், தென்னாற்காடு, வடஆற்காடு, சேலம், தர்மபுரி, திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள பழங்குடியினருக்கான 49 சிறார் பள்ளிகள், ஸ்ரீலங்கா அகதிகளுக்கான 4 சிறார் பள்ளிகள், ஒருங்கிணைந்த சிறார் நல மேம்பாட்டுத் திட்ட பள்ளிகள் 300 ஆகியவை இதில் அடங்கும்.

(ஆ) எல்லா சிறார் பள்ளிகளிலும், ஒருங்கிணைந்த சிறார் நல மேம்பாட்டுத் திட்டம் தவிர, பாலாகார் ("கேர்" நிறுவனம் இலவசமாக வழங்கும் உணவுப் பொருள்) வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சுமார் 2,10,000 சிறார் பள்ளி குழந்தைகளும், கருவுற்ற மகளிரும், பாலூட்டும் தாய்மார்களும் பயனடைகின்றனர். இந்த சிறார் பள்ளிகளில் நோய்த் தடுப்பு ஊசி குத்தும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) இந்தச் சிறார் பள்ளிகளில் நேரடிக் கல்வி பயிற்சி அளிப்பதைவிட விளையாட்டுக் கருவிகளின் வாயிலாக பயிற்சி அளிப்பதற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு சிறார் பள்ளியிலும், கல்விச் சாதனங்களும், பொது விளையாட்டுச் சாதனங்களும் உள்ளன. அந்த விளையாட்டுச் சாதனங்கள் எந்த அளவுக்குப் பழையதாகிவிட்டது என்பதைக் கருத்தில் கொண்டு, ஐந்தாண்டுக்குப் பிறகு அவற்றுக்குப் பதிலாக புதிய விளையாட்டுச் சாதனங்கள் வாங்கப்படும். 1962 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்ட சிறார் பள்ளிகளைப் பொறுத்த வரையில் பழைய விளையாட்டுச் சாதனங்களுக்குப் பதிலாக புதிய விளையாட்டுச் சாதனங்கள் வழங்குவது படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் 1.20 இலட்சம் ரூபாய் செலவிட இருக்கிறது.



(ஈ) ஒவ்வொரு ஊராட்சியிலும் குறைந்தது ஒரு சிறார் பள்ளியாவது இருக்க வேண்டும் என்பது கொள்கை ஆதலின் படிப்படியாக மேலும் பல சிறார் பள்ளிகளைத் திறக்கக் கருதப் பட்டுள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் அத்தகைய 100 பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 1978-79 ஆம் ஆண்டில் இம்மாதிரியான 150 பள்ளிகள் தொடங்கப்பட இருக்கின்றன.

(உ) இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து பால சேவிகைகள் பலர் சொந்தக் காரணங்களுக்காக வேலையிலிருந்து விலகி விட்டனர். அவர்களுக்குப் பதிலாக பயிற்சி பெறாத பால சேவிகைகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பயிற்சி பெறாத பால சேவிகைகளுக்கு உதவியாக பயிற்சித் திட்டம் ஒன்று வகுக்கப் பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 200 பால சேவிகாக்கள் பயிற்சி பெறுவர். இதற்காக ரூ. 64,000 செலவாகும்.

(ஊ) முன்னோடித் திட்டமாக 1962-63 ஆம் ஆண்டில் குழந்தைகள் நல்வாழ்வு ஒருங்கிணைந்த திட்டம் பூவிருந்த வல்லியில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சராசரி 40 சிறார்கள் உள்ள 50 குழந்தைகள் காப்பகங்களும், சராசரி 10 கைக்குழந்தைகள் உள்ள 10 குழந்தைகள் காப்பகங்களும் செயல்பட்டு வருகின்றன. முழு பயிற்சி பெற்ற பால சேவி காக்கள் இச்சிறார் பள்ளிகளை நடத்தி வருகிறார்கள். இக் குழந்தைகளுக்கு பாலாகார் உணவு கொடுக்கப்படுகிறது. விரி வான நோய் தடுப்பு, சுகாதாரத் திட்டங்களும் மேற்கொள்ளப் படுகின்றன.

(எ) 1975-76-ம் ஆண்டில் ஒருங்கிணைந்த சிறார் நல மேம் பாட்டு வளர்ச்சிப் பணிகள் (மத்திய அரசு) திட்டத்தின் கீழ் மூன்று இடங்களில் செயல்பட்டு வருகிறது. இவை, சென்னை, தர்மபுரி மாவட்டத்தில் தளி ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் ஆகிய மூன்று. பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பகுதியிலும் 100 சிறார் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. துணைச் சத்துணவு, உடல் நலப் பரிசோதனை, நோய்த்தடுப்பு ஆலோசனை கூறும் பணிகள், 0—5 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு கல்வி, கர்ப்பிணி,

பாலூட்டும் தாய்களை சிறப்பு மருத்துவத்திற்கு அனுப்பி வைக்கும் பணிகளை வழங்க, இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் சத்துணவுப் பொருள்களை வழங்குவது மாநில அரசின் பொறுப்பாகும். 'கேர்' நிறுவனத்தினர் இலவசமாக வழங்கும் பாலாகார் 1977 டிசம்பர் முடிய இத்திட்டத்திற்கு துணை சத்துணவாக உபயோகிக்கப்பட்டு வந்தது. 1978 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நம் நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. 15—44 வயதுத் தொகுதியைச் சேர்ந்த மகளிருந்தும் பயனளிக்கும் பொருட்டு இம் மூன்று திட்டங்களிலும் செயல்முறைக் கல்வி கற்பிக்கும் புதிய திட்டம் ஒன்று செயல் படுத்தப்பட்டு வருகிறது.

இந்நாட்டில் தொடங்கப்பட்ட 33 ஒன்றியங்களில் மூன்று மாநிலங்களுக்குத்தான் மூன்று ஒன்றியங்கள் ஒதுக்கப்பட்டன. அதில் தமிழ்நாடும் ஒன்று. இத்திட்டத்தின் வெற்றியைக் கண்டு 1978-79 ஆம் ஆண்டு மேலும் 4 ஒன்றியங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த உதவியளிக்கப்படலாமென மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

(ஏ) பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் பழங்குடியினர் பகுதிகளில் 1976-77 ஆம் ஆண்டில் 19 சிறார் பள்ளிகள் தொடங்கப்பட்டன. நீலகிரி மாவட்டத்தில் பணியா சிறார்களுக்காக 10 சிறார் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 1977-78-ம் ஆண்டில் கல்ராயன், பச்சை மலை, சித்தேரி, அரனூத்துமலை ஆகிய ஏனைய பழங்குடியினர் பகுதி களில் 30 சிறார் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா அகதிகளின் சிறார்கள் பயனுக்கென்று நான்கு சிறார் பள்ளிகளைத் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினருக்காக அளிக்கப்பட்ட நிதியில் ஐந்து சிறார் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. அரிசன நலத் துறையின் கீழ் 1977-78-ல் 50 சிறார் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன



சிறார் பள்ளி கட்டிடங்கள்—

26. 0—6 வயது வரம்பிற்குட்பட்ட சிறார்களுக்கான
சத்துணவுத் திட்டம் 1962 ஆம் ஆண்டு முதல் அமுலில் இருந்து
வருகிறது. சிறார் பள்ளிகள் தொடக்க காலத்தில் மரங்
களின் கீழும், திண்ணைகளிலும் இயங்கி வந்தன. சிறுகச்
சிறுக, இப்பள்ளிகள் ஊராட்சிகளின் உதவியுடனும், அந்தந்த
ஊர் மக்களின் உதவியாலும் கூரைக் கொட்டகைகளுக்கோ,
வாடகை இல்லாத கட்டடங்களுக்கோ மாற்றப்பட்டன. 1974
முதல் 1979 வரையான ஐந்து ஆண்டு காலத்தில் "கேர்" நிறுவனம்
சிறார் பள்ளிகளுக்கு கட்டடம் கட்ட உதவி செய்ய முன்வந்தது.
1974-75 ஆம் ஆண்டு தொடங்கி ஆண்டொன்றுக்கு
200 கட்டடங்கள் விதம் கட்ட ஒப்பளிக்கப்பட்டது. 1978-79 ஆம்
ஆண்டும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படும்.

இருநூறு கட்டடங்களில், 50 அரிசன குடியிருப்புகளிலும்,
50 ஒருங்கிணைந்த சிறார் நல மேம்பாட்டுத் திட்டம் இயங்கும்
பகுதிகளிலும், 100 ஏற்கனவே சிறார் பள்ளிகள் இயங்கும்
இடங்களிலும் கட்டப்படும். இதற்காக, 1978-79 ஆம் ஆண்டு
மூலதன ஒதுக்கீடு மானியத்தில் ரூ. 10.48 இலட்சம் மானிய
எண் 57 மூலதன ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

27. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படவிருக்கும் சென்னை
நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தாய்-சிறார் நலத்திட்டம் ஒரு
பகுதியாகும். வில்லிவாக்கம், அரும்பாக்கம், கொடுங்கையூர் ஆகிய
இடங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொருட்டு, இத்
திட்டத்தின் கீழ் 200 சிறார் நிலையங்கள் 1977—80-ல் தொடங்கப்
படவுள்ளன. ஒவ்வொரு நிலையத்திலும் 70 குழந்தைகள் (சிறார்
பள்ளிகளில் 40 குழந்தைகளும் மற்றும் காப்பகங்களில் 30 குழந்
தைகளும்) அனுமதிக்கப்படுவர். 1977-78 ஆம் ஆண்டில் 30
நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த நிலையங்களுக்கான
கட்டிடங்களைக் கட்டுதல் குறித்து இத்திட்டத்தில் கருத்து தெரி
விக்கப்பட்டுள்ளது. 1978-79-ல் 70 சிறார் நிலையங்கள் தொடங்கப்
படவுள்ளன.

28. இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகள் வழங்கப்படும் :—

1. துணைச் சத்துணவு ;
2. உடல் நலப் பரிசோதனை, ஆலோசனை கூறும் பணிகள் ;
3. நோய்த் தடுப்பு ;
4. சிறுர் கல்வி ;
5. சத்துணவு, உடல் நலக் கல்வி ;
6. செயல்முறைக் கல்வி.

29. இத்திட்டம் சமூக நலத்துறை இயக்குநரால் செயல்படுத்தப்படும். உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படும் திட்டங்கள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் பொறுப்பு, சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திடம் விடப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நடப்பாண்டில் (1978-79) ரூ. 40 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சிறப்புச் சத்துணவுத் திட்டம்.

30. சிறப்புச் சத்துணவுத் திட்டம் முதன் முதலில் 1970-71 ஆம் ஆண்டில் மத்திய அரசுத் திட்டமாக தொடங்கப்பட்டது. 1974-75 ஆம் ஆண்டில் இத்திட்டம் மாநில அரசுக்கு மாற்றப்பட்டது. ஊட்டச் சத்துக் குறைவினால் நலிவுற்ற சிறுர்கள் குறிப்பாக நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் பள்ளி செல்லும் வயது அடையாத சிறுர்களுக்குச் சத்துணவு வழங்குவதும், மாடர்ன் ரொட்டி வழங்கி ஊட்டச் சத்து குறைவினால் ஏற்படும் நோயினை ஒழிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். மாடர்ன் ரொட்டி வழங்கும் திட்டம் 1975 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் வரை செயலில் இருந்தது. பின்னர், இத்திட்டம் பாலாகார் உணவு வழங்கும் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது.

31. 100 கிராம் பாலாகார் உணவில் 360 கலோரிகளும், 21 கிராம் புரதமும் அடங்கியுள்ளது. சென்னை மாநகரத்தின் எல்லாப் பகுதிகளிலும், வெளியூர்களிலும் இவ்வுணவைப் பயன்படுத்துபவர்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 80 கிராம் வீதம்





பாலாகார் சமைத்த உணவு வழங்கப்படுகிறது. உடல் நலப் பரிசோதனையும் செய்யப்படுகிறது. மருத்துவப் பரிசோதனையுடன் நோய்த் சிறப்புச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் தேவையான ஆகிய பணிகள் தடுப்புப் பணிகள், மதிப்பீட்டுப் பணிகள் மாநகரங்களிலும், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மேற்கொள்ளப்படுகின்றன. புதுக்கோட்டை மாநகராட்சியிலும் இந்த இடங்களில் வாரத்திற்கு ஒரு தடவை ஒருவருக்கு 700 கிராம் பாலாகார் மாவு தரப்படுகின்றது. சிறப்புச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் 2,76,530 பேர் பயன் அடைந்துள்ளார்கள். ஓராண்டில் 300 நாட்களுக்கு இவர்களுக்கு இச்சத்துணவு வழங்கப்படுகிறது.

## சத்தூட்ட உப்பு.

32. சத்துணவுக் குறைவை எதிர்த்துப் போராட சாதாரணமாக தினசரி உபயோகத்தில் இருந்துவரும் உணவுப் பண்டங்கள் மூலம் வீரிய சத்துணவை மக்களிடையே பரப்ப ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன.

33. ஆராய்ச்சிகளில், தினசரி உபயோகிக்கப்படும் உப்போடு இரும்புச் சத்துகள் சேர்த்து வீரியப்படுத்தினால் அது மிக்க பலனைக் கொடுக்கும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஐதராபாத்திலுள்ள தேசிய சத்துணவு ஆராய்ச்சி நிலையத்தினர் சாதாரண உப்பை வீரியப்படுத்துவதால் சமைந்த பின்னரோ அல்லது சேமித்து வைப்பதாலோ அதன் நிறமோ சுவையோ மாறுவதில்லை என்றும், சமைந்த பின் அதன் இயல்பான தன்மையில் மாறுதல் எதும் இல்லை என்றும் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். இதன் தொடர்ச்சியாக, மத்திய அரசு கீழ்க்கண்ட நான்கு ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் மேலும் நடைமுறை சோதனைகள் செய்ய உத்தேசித்திருக்கிறது :—

1. தேசிய சத்துணவு நிலையம், ஐதராபாத்து ;
2. அனைத்திந்திய மருத்துவ விஞ்ஞான நிலையம், புதுடில்லி
3. அனைத்திந்திய உடல் நல மற்றும் பொதுச் சுகாதார நிலையம், கல்கத்தா ;
4. சிறுர் நல நிலையம், சென்னை.

34. இந்திய அரசு ஒரு முன்னோடித் திட்டத்தை தமிழ் நாட்டுக்கு ஒப்பளித்திருக்கிறது. சத்தூட்டப்பட்ட உப்பு சென்னையில் ஒரு கூட்டுத் துறை நிறுவனம் மூலம் தயாரிக்கப்பட்டு மேற்கூறப்பட்ட நான்கு நிலையங்களுக்கும் விநியோகிக்கப்படும். இயந்திர சாதனங்களை நிறுவுதல், தலப் பரிசோதனைகள் நடத்துதல், மேலும் அது சம்பந்தப்பட்ட செலவினங்களை மத்திய அரசு ஏற்கும். தலப் பரிசோதனைகள் கீழ்க்கண்ட பிராந்தியங்களில் நடத்தப்படும்.

(அ) சென்னையில் குறைப் பிரிவில் சற்றேறக்குறைய 3,000 பேர் ;

(ஆ) ஐதராபாத் அருகே சில கிராமங்கள் ;

(இ) கல்கத்தா அருகே சில கிராமங்கள் ;

(ஈ) டில்லிக்கு அருகே சில கிராமங்கள்.

35. தலப் பரிசோதனைகள் இரண்டாண்டு காலம் நீடிக்கும். அதன் பின்னர் இப்பரிசோதனைகள் மூலம் ஏற்படும் பலன்களை உத்தேசித்து சத்தூட்டப்பட்ட உப்பை வியாபார ரீதியில் தயாரித்து நாட்டு மக்கள் அனைவரும் பயனடையச் செய்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.

### 3. உடல் ஊனமுற்றோர்.

உடல் ஊனமுற்றோருக்காக கீழ்க்கண்ட திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன ;

36. நவீன முறைப் பயிற்சி—உற்பத்தி தொழிற்சாலை முட்டுக்காடு—உடல் ஊனமுற்றோர் மறுவாழ்விற்காக தமிழக அரசு நவீன முறைப் பயிற்சி உற்பத்தித் தொழிற்பட்டறை ஒன்று சென்னை—மாமல்லபுரம் சாலையில் முட்டுக்காடு என்ற இடத்தில் அமைந்துள்ளது. 1975 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் இத்தொழிற் பட்டறை செயல்படத் தொடங்கியது. 1976 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இத்தொழிற்பட்டறையில் சேர்க்கப்பட்ட 28 பேர் முதல் குழுவில் தமது பயிற்சியினை முடித்து இத்தொழிற் பட்டறையிலே தற்போது தினக் கூலி பணியாட்களாக சேர்த்துக்



கொள்ளப்பட்டுள்ளனர். தற்போது இரண்டாம் குழுவினரில் 27 பேரும் மூன்றும் குழுவில் 20 பேரும் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும், இலேசான பொறியியல் சகங்கள், கட்டுமானப் பணிகள், உதிரிப் பாகங்கள் செய்தல் போன்ற உற்பத்திப் பணிகள் இத்தொழிற்பட்டறையில் செய்யப் படுகின்றன. இத்தொழிற்சாலை ஒரு வணிக நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

37. உடல் ஊனமுற்ற 29 மகளிருக்கு ஸ்திரி சேவா மந்திரில் பயிற்சி அளிக்கப்படுகிறது. செவிடு, ஊமைப் பெண்களுக்கு, பொம்மை செய்தல், பூ வேலை, ஆடை தைத்தல் ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது. கண் பார்வையற்ற மகளிருக்குப் பாய் முடைதல், ஆடை நெய்தல் ஆகிய தொழில்களில் பயிற்சியளிக்கப் படுகிறது. ஊனமுற்ற மகளிருக்குச் சுருக்கெழுத்து தட்டச்சுப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

38. இதுவரை 3,500 மூன்று சக்கர வண்டிகளும், 1,325 கேட்பு உதவிச் சாதனங்களும் (Hearing aids) கொடுக்கப்பட்டுள்ளன.

39. இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், மூளைக் கோளாறினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், ஊமை நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், செவிடு, ஊமை, மற்றும் மேலும் கண் பார்வையற்ற உடல் ஊனமுற்ற குழந்தைகள், 8—16 வயது வரம்பிற்குட்பட்ட குழந்தைகளைப் பராமரிக்க தொண்டு நிறுவனங்களுக்கு மானியமாக ரூ. 40,000 கொடுக்கப் பட்டுள்ளது. தொழு நோயால் துன்புறும் குழந்தைகள், தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகளைப் பராமரிக்க மேலும் ரூ. 40,000 கொடுக்கப்பட்டுள்ளது.

40. மனநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குப் பயிற்சி யளிக்கும் பொருட்டு, ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்காக பாலவிகாருக்கு ரூ. 45,600 மானியத் தொகை வழங்கப் பட்டுள்ளது.

41. செவிட்டுக் குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டு ஆசிரியர்களின் பயிற்சிக்காக, சென்னையிலுள்ள செவிடர்கள் பள்ளிக்கு ரூ. 65,000 மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

1978 மார்ச் 7]

42. 1977-78 இல் 40 கண் பார்வையற்ற பெண்களுக்காக கூடை வேய்ந்த தொழிற்கூடம் ஒன்று சென்னையில் தொடங்கப் பட்டுள்ளது.

43. சென்னை நகரத்திலுள்ள கண் பார்வையற்றவர்கள் நகரத்தினுள் பல்லவன் போக்குவரத்துக் கழக (பெருநகர் பிரிவு) பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

44. பள்ளி செல்லும் காது கேளாத ஏழை மாணவர்களுக்கு 300 காது கேட்கும் கருவிகள் 1978-79 இல் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

45. 1978-79 ஆம் ஆண்டு கால் ஊனமுற்றவர்களுக்காக 500 மூன்று சக்கர வண்டிகள் தயாரித்து வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

## உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு உதவித் தொகை.

46. இந்திய அரசு, 14—30 வயது வரம்பிற்குட்பட்ட உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு 9 ஆவது வகுப்பிலிருந்து தொடங்கி மேல் படிப்புக்கு 31—3—1977 வரை உதவித் தொகை அளித்து வந்தது. 1—4—1977 முதல் இந்தத் திட்டம் மாநில அரசின் சமூக நல இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. 1—4—1977 தேதிக்கு முன் மாநில அரசும் கல்லூரிப் படிப்பு படிக்கும் 112 உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு உதவித் தொகை அளித்து வந்தது. 1—4—1977 முதல் உதவித் தொகை திட்டம் மாநில அரசால் செயல்படுத்தப்படுவதால் 1—4—1977-க்கு முன் இருந்த மாநில அரசுத் திட்டம் கைவிடப்பட்டது.

47. பள்ளிகளில் உடல் ஊனமுள்ள சிறுவர்களின் ஒருங்கிணைப்பு—இந்திய அரசுத் திட்டத்தின் கீழ், மாநில அரசு 1977-78 ஆம் ஆண்டு பள்ளிகளில் படிக்கும் சிறுவர்களின் ஒருங்கிணைப்புக்காக ரூ. 1,63,200 ஒப்பளித்தது. இத்திட்டம் எட்டு சாதாரண பள்ளிகளில் ஒரு சோதனைத் திட்டமாக செயல்படுத்தப்படும். அரைகுறைப் பார்வையுள்ள, சிறிதே காது



1978 மார்ச் 7]

கேளாத, உணர்ச்சி வசப்படுவதால் பாதிக்கப்பட்ட, காக்காய் வலிப்பால் அவதியுறும், மற்றும் உடல் ஊனமுற்ற பிள்ளைகள் சாதாரண பள்ளிகளில் கல்வி வசதி அளிக்கப்படுவர். அவர்களுக்கு மூக்கு கண்ணாடிகள், கேட்பு சாதனம், படிக்க உதவும் கருவிகள் முதலியனவையும், பயணச் செலவுகள், புத்தகங்கள், சிலேட்டுகள் ஆகியவையும் அளிக்கப்படும். 80 சிறுர்கள் இத்திட்டத்தால் பயன் பெறுவர்.

48. உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியம்.—உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியம் மூன்று ஆண்டுகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் நோக்கங்களாவன:—

(1) உடல் ஊனமுற்றோரின் மறுவாழ்வுக்காக அவர்களின் பிரச்சினைகளை ஆராய்வது;

(2) அரசுடன் கலந்தாலோசித்து உடல் ஊனமுற்றோரின் முன்னேற்றத்திற்காக வேலை வாய்ப்புத் திட்டங்களை உருவாக்குதல்;

(3) உடல் ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பை ஊக்குவித்தல்;

(4) உடல் ஊனமுற்றோருக்கும், நலப் பணிகளிலும் ஈடுபடும் தனியார் நிறுவனங்களுக்கும் நிதியுதவி அளிப்பது பற்றி ஆராய்தல்;

(5) உடல் ஊனமுற்றோரின் கல்வி, பயிற்சி மற்றும் மறுவாழ்வுப் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்கள் புரியும் பணிகளை ஒருங்கிணைத்தல்.

## உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு உதவித் தொகை.

26—10—1977 ஆம்

49. இந்த வாரியத்தின் முதல் கூட்டம் 26—10—1977 ஆம் நாளன்று நடந்தது. வரியத்திற்கான சட்ட திட்டங்கள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. உடல் ஊனமுற்றோருக்கும் அவர்களின் நலன்களுக்காக பாடுபடும் நிறுவனங்களுக்கும், மானியம்/கடன் வசதியளிக்க ரூ. 50,000 இந்த வாரியத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த வாரியம் ஒரு தனி நபருக்கு

[1978 மார்ச் 7

ரூ. 1,000 வரை மானியம்/கடன் வழங்கலாம். ஒரு நிறுவனத்திற்கு ரூ. 10,000 வரை மானியம்/கடன் வழங்கலாம். ரூ. 10,000-க்கு மேல் உள்ள மானியம்/கடன் ஒப்பளிப்பது, அரசால் தீர்மானிக்கப்படும்.

50. முதியோர் ஓய்வூதியம்.—இத்திட்டத்தின்கீழ் [illegible] வயதிற்கு மேற்பட்ட, ஆதரவற்ற, உடல் ஊனமுற்றோர், திங்களொன்றுக்கு ரூ. 20 ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவராவர். மேற்படி வயது வரம்பை தகுதியுள்ளவர்களுக்குத் தளர்த்த, மாவட்ட ஆட்சியாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை வருவாய்த் துறை செயல்படுத்தி வருகிறது. நடைமுறையில் முதியோர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கு பொருந்தக்கூடிய விதிகள் இதற்கும் பொருந்தும். இத்திட்டத்தில் இதுவரை ஆதரவற்ற 5,768 உடல் ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## 4. அனாதைக் குழந்தைகளுக்கு இந்திய அரசின் திட்டம்.

51. இத்திட்டத்தின்கீழ் இம்மாநிலத்திலுள்ள ஆதரவற்ற அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்கும் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்க இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 5 முதல் 18 வயது வரையுள்ள ஆதரவற்ற ஏழைக் குழந்தைகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்திய அரசு, கட்டுமானப் பணிக்கும் பராமரிப்புக்கும் ஆகும் செலவுத் தொகையின் 90 சதவீதத்தை மானியமாக வழங்குகிறது. தொடர், தொடரா இனச் செலவுகளில் 10 சதவீதத்தினை தொண்டு நிறுவனங்கள் ஏற்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ் 43 நிறுவனங்கள் இம்மானியத் தொகையினைப் பெறுகின்றன. 1,975 குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

## 5. கருணை இல்லங்கள்.

52. 1975 ஆம் ஆண்டில் 53 இடங்களில் கருணை இல்லங்கள் (அனாதை இல்லங்கள்) தொடங்கப்பட்டுள்ளன. இவ்வில்லங்கள் இந்து கோயில்களின் கூடுதல் நிதியினால் நடத்தப்படுகின்றன.



1978 மார்ச் 7]

5 முதல் 18 வயது வரையுள்ள ஆதரவற்ற அனாதைக் குழந்தைகள் இவ்வில்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 12-50 வீதம், இக்குழந்தைகளைப் பராமரிப்பதற்காகும் செலவில் 25 சதவீதத்தை, மானியமாக வழங்குகிறது. மேலும் கட்டிடம், மரச் சாமான்கள் முதலியவற்றிற்கென ஒரு குழந்தைக்கு ரூ. 1,000 வீதம் ஒப்பளிக்கப்படும். 1977-78 ஆம் ஆண்டு குழந்தைகளைப் பராமரிக்க அரசு மானியமாக ரூ. 2,41,000 வழங்கப்பட்டுள்ளது. 53 இல்லங்கள் தற்போது 36 இல்லங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. சுமார் 2,700 குழந்தைகள் இதில் பயன் பெறுகின்றனர். இத்திட்டம், இந்து சமய அறக்கட்டளைத் துறையின் ஆணையரால் நிர்வகிக்கப்படுகிறது. இதற்கான மானியம் இத்துறையின் மூலம் வழங்கப்படுகிறது.

## 6. பிச்சைக்காரர்கள் இல்லம்.

### அரசு பாதுகாப்பு முகாம், மேல்பாக்கம்.

53. மேல்பாக்கத்திலுள்ள பாதுகாப்பு முகாம் பிச்சைக்காரர்களுக்கான ஓர் இல்லமாகும். தமிழ்நாடு 1945 ஆம் ஆண்டு பிச்சையெடுத்தல் தடுப்புச் சட்டத்தின்கீழ் மூன்றாண்டுகள் வரை தண்டனை விதிக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்களுக்காக இந்த இல்லத்தை அரசு நடத்துகிறது. இந்த இல்லத்தை காவல் துறை நிர்வகித்து வந்தது. 1973 ஆம் ஆண்டில் இவ்வில்லத்தின் நிர்வாகப் பொறுப்பு சமூக நலத்துறை இயக்குநருக்கு மாற்றப்பட்டது. இதன் பணியாளர் அமைப்பு முறை தற்போது மாற்றப்பட்டு சமூக நலம் பணியாளர்கள் மேற்பார்வையாளர்களாக பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். துணை இயக்குநர் பதவித் தரத்தில் ஓர் அலுவலர் இவ்வில்லத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். இவ்வில்லத்தில், 770 ஆடவரும், 180 பெண்டிரும் தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டது. இப்போது 129 ஆடவரும், 31 பெண்டிரும் மட்டுமே உள்ளனர். இல்லத்தில் தங்கியிருப்போருக்கு நெசவு, தச்சு வேலை, தையற்கலை முதலிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

[1978 மார்ச் 7.

### 7. ஆதரவற்ற கைம்பெண்களுக்கு மறுவாழ்வு

54. 1975-76 ஆம் ஆண்டில் ஆதரவற்ற கைம்பெண்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக கீழ்க்காணும் திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது :—

(1) முதியோர் ஓய்வூதியம்.—இத்திட்டத்தின் கீழ் ஆதரவற்றவர்களும், 40 வயதிற்குக் குறையாமல் இருப்பவர்களுமான கைம்பெண்கள் திங்களொன்றுக்கு ரூ. 20 ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவராவர். இத்திட்டத்தை வருவாய்த் துறை செயல்படுத்தி வருகிறது. நடைமுறையில் முதியோர்களுக்கு உதவித்தொகை வழங்கு திட்டத்திற்குப் பொருந்தக் கூடிய விதிகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். ஆதரவற்ற கைம்பெண்கள் 9,869 பேர் இதுவரை இத்திட்டத்தின்கீழ் பயன் அடைந்துள்ளனர். இத்திட்டம் ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(2) தையல் இயந்திரங்கள்.—ஆதரவற்ற கைம்பெண்கள், உடல் அளவிலும், ஊனமுற்றுள்ள மகளிர் (20 முதல் 40 வயது வரை உள்ளவர்கள்) தையற் கலையில் பயிற்சி பெற்றிருந்தால் ஆதரவற்ற மகளிர், சமூகத்திலும், பொருளாதார வகையிலும், அவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதனால், அவர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான வருவாயினை ஈட்டிக் கொள்ள இயலும். இத்திட்டத்தின்கீழ் இதுவரை 2,000 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1978-79 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தை தொடர்ந்து செயற்படுத்தவும், 500 தையல் இயந்திரங்களை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(3) கைம்பெண்களுக்கு மறுமணம்.—கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்வதற்கு ஊக்கமளிக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதியளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 18—30 வயது வரம்பிற்குட்பட்ட கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்வார்களானால் அந்த மணமக்கள் இருவர் பெயரிலும் கூட்டாக முதலீடு செய்யப்படுகின்ற ஏழாண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வடிவில் அவர்களுக்கு ரூ. 5,000 நிதியுதவி வழங்கப் படுகிறது. 1975 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3 ஆம் நாளுக்குப் பிறகு மணம் செய்து கொள்ளும் தம்பதிகளே இத்திட்டத்தின்



1978 மார்ச் 7]

கீழ் பயனடையத் தகுதியுள்ளவர்கள் ஆவார்கள். 1975-76, 1976-77 ஆம் ஆண்டுகளில் முறையே 90, 46 தம்பதியினர் பயனடைந்தனர். 1977-78 ஆம் ஆண்டிலும் 100 தம்பதியினர் இத்திட்டத்தால் பயனடைய இருக்கின்றனர்.

(4) ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்கும் குறைவாக உள்ள விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகம், நோட்டுப் புத்தகம் ஆகியவை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் 3,000 குழந்தைகள் இதன் மூலம் பயன் பெறுவார்கள்.

55. ஆயுள் ஈட்டுறுதிப் பயன்களையும், வருங்கால வைப்பு நிதிப் பயன்களையும் பெறுதல், குழந்தைகளை அனாதை இல்லங்களிலும், கல்வி நிலையங்களிலும் சேர்த்துக் கொள்வது தொடர்பாகவும், கல்வி—வேலை வாய்ப்புகள் பெறுதல் தொடர்பாகவும் விதவைகளுக்கு உதவும் பொருட்டு ஆலோசனை நல்கும் வழிகாட்டி இம்மாநிலத்தில் தஞ்சை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அண்மையில் சென்னையிலும் வழிகாட்டி அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது.

### 8. தமிழ்நாடு மாநில சமூக நல வாரியம்.

56. 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில சமூக நல வாரியம், தனியார் நிறுவனங்களை உருவாக்கி, அவற்றை ஊக்குவித்து வளர்ச்சி பெறச் செய்வதில் முக்கிய பங்காற்றி வருகிறது. இந்த வாரியம் மூன்றாண்டுகளுக்கொரு முறை திருத்தியமைக்கப்படுகிறது. அதன் முக்கிய பணிகள் :—

(அ) சமூக நல நிறுவனங்களைத் தோற்றுவித்து ஊக்குவித்தல் ;

(ஆ) தொண்டு நிறுவனங்களின் பணிகளின் தரத்தையும், தன்மையையும் உயர்த்தல், பொருளாதார மற்றும் தொழில் நுட்பம் போன்றவற்றிற்கு உதவுதல் ;

(இ) மானியம் பெறும் தொண்டு நிறுவனங்களில் பணிகளைப் பரிசீலனை செய்தல் ;

(ஈ) களப் பணியில் உள்ள தொண்டு நிறுவனங்களுக்கும், மத்திய சமூக நல வாரியத்திற்கும் நடுவராக இருந்து திட்டங்களை செயலாற்ற இவ்வாரியம் உதவுகிறது.

முக்கியமாக மகளிர், குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோர் நலனுக்காக பரவலாக, பணி புரியும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு உதவ, இவ்வாரியம் பணி புரிந்து வருகிறது.

1976-77 ஆம் ஆண்டில் 618 நிறுவனங்களுக்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற ரூ. 27.35 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1977-78 ஆம் ஆண்டில் இதுவரை 768 நிறுவனங்களுக்கு ரூ. 46.02 இலட்சம் ஒதுக்கீடு செய்து கீழ்க்கண்ட பணிகளைச் செய்திட வகை செய்யப்பட்டுள்ளது :—

| வரிசை எண்ணும், தொண்டின் இனமும். (1) | நிறுவனங்களின் எண்ணிக்கை. (2) | அனுமதிக்கப்பட்ட மானியம். (3) |
|---|---|---|
| | | ரூ. |
| 1. ஆண்டு மானியம் .. .. | 299 | 3,58,770 |
| 2. திட்டகால மானியம் .. .. | 80 | 4,55,875 |
| 3. மகிளா மண்டல் .. .. | 15 | 1,31,610 |
| 4. விடுமுறை முகாம் .. .. | 33 | 99,000 |
| 5. ஓராண்டு குறுகிய கால்க் கல்விப் பயிற்சி. | 13 | 1,89,100 |
| 6. மகளிர் தொழிற்பயிற்சித் திட்டம். | 48 | 6,63,596 |
| 7. பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள் | 3 | 18,100 |
| 8. விரிவாக்க நலத்திட்டம் (புற நகர்). | 2 | 13,200 |
| 9. குழந்தைகள் குடும்பங்களில் பராமரிக்கும் திட்டம். | 1 | 29,400 |
| 10 ஊட்டச் சத்துணவு .. .. | 105 | 3,80,640 |
| 11. சமூகப் பொருளாதாரம் .. | 1 | 50,000 |
| 12. பால் பண்ணைத் திட்டம் .. | 152 | 21,28,000 |
| 13. குழந்தை வளர்ப்பு காப்பகங்கள், | 16 | 84,537 |
| மொத்தம் .. | 768 | 46,01,828 |



## இணைப்பு

318-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கோரிக்கை எண் 47.

### செய்தி-மக்கள் தொடர்புத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை, அரசுக்கும் பொதுமக்கள் மற்றும் பத்திரிகை உலகுக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்தும் ஒரு பொதுத் தொடர்பு அமைப்பாக இயங்கி வருகிறது. அரசின் கொள்கைகள், திட்டங்கள், செயல்கள், சாதனைகள் ஆகியவை பத்திரிகைகளுக்கான செய்திக் குறிப்புகள் மற்றும் அறிவிப்புகளாக இத்துறையின் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. பொது மக்களின், குறைகளை, தேவைகளை, அரசுக்கும், அரசின் நிர்வாகத் துறைகளுக்கும் எடுத்து விளக்கும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு, அரசின் கண்ணாகவும், காதாகவும் இத்துறை விளங்கி வருகிறது.

அரசின் பல்வேறு துறைகளும், அரசின்கீழ் உள்ள பல்வேறு கழகங்கள், வாரியங்கள் நிறுவனங்கள் ஆகியவைகளும் தருகின்ற விளம்பரங்கள் அனைத்தும் இந்தத் துறையின் வாயிலாக பத்திரிக்கைகளுக்கு ஒருமுகப்படுத்தப் பெற்று வழங்கப் படுகின்றன. மற்ற அரசுத் துறை விளம்பரங்களை வெளியிடும் ஒரு சாதனமாக இயங்குவது மட்டுமல்லாமல், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தானே பல விளம்பரங்களைத் தயாரித்து வெளியிடுகிறது. இந்த விளம்பரங்கள் பொதுவாக அரசின் கொள்கைகளை, திட்டங்களைப் பொதுமக்களுக்கு விளக்கும் முறையில் அமைகின்றன.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களையும், தேசியப் பெருந்தலைவர்களின் பிறந்த நாள், நினைவு நாள் கூட்டங்களையும் நடத்தி, பொதுமக்கள் நாட்டுப் பணியில் ஈடுபாடு கொள்ளத்தக்க வகையிலும், நாட்டுக்காக உழைத்தவர்களை அறிந்து பாராட்டும் வகையிலும் இத்துறை ஊக்கமளித்து வருகிறது.

நமது மாநிலத்திலும், பிற மாநிலங்களிலும் நடைபெறுகிற பொருட்காட்சிகளில் அரசின் சார்பாக இத்துறை பங்கு பெற்று அரசின் பல்வேறு துறைகளின் செயற்பாடுகளையும் சாதனங்களையும்

விளக்குகிறது. 1977-78 ஆம் ஆண்டில் பங்கு பெற்ற பொருட்காட்சிகளில் குறிப்பிடத்தக்கது புதுடெல்லியில் நடைபெற்ற தேசிய விவசாயப் பொருட்காட்சியாகும். அரசுக்கும், உள்ளாட்சி அமைப்புக்களுக்கும் சொந்தமான பொதுவிடங்களில், தனி நபர்களோ, தனி நிறுவனங்களோ பொருட்காட்சி நடத்த அனுமதி அளிப்பதில்லையென்று அரசு அண்மையில் முடிவெடுத்துள்ளது. மேலும், தனியார் மற்றும் தனி நிறுவனங்கள் நடத்தும் பொருட்காட்சிகளில் அரசுச் சார்பில் பங்கு பெறுவதில்லை என்ற முடிவும் எடுக்கப்பட்டுள்ளது. எனினும், அரசின் முன் அனுமதி பெற்று பொது இடங்களில் உள்ளாட்சி அமைப்புகளும், அங்கீகாரம் பெற்ற தொழில் வர்த்தக நிறுவனங்களும் பொருட்காட்சிகளை நடத்தலாம்.

அரசின் நல்வாழ்வுத் திட்டங்களையும், குடிப் பழக்கத்தினால் விளையும் கேடுகளையும், தீண்டாமை ஒழிப்புப் பற்றியும் பொது மக்களுக்கு எடுத்துக்கூற மாவட்டங்களிலும் தலைநகரிலும் 1978-79 ஆம் ஆண்டில் 100 இசை மற்றும் நாடக நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சிகள் தேர்ந்தெடுக்கப் பட்ட கலைக் குழுவினரால் நடத்தப் பெறும்.

சென்னை, மதுரை, தஞ்சை ஆகிய இடங்களிலுள்ள இத்துறையைச் சார்ந்த செய்தி நிலையங்கள் பல்வேறு பொருள்கள் குறித்தும், மற்றும் அரசின் கொள்கைகள், சாதனைகள் பற்றிய செய்திகளையும் விளக்கங்களையும் பொதுமக்களுக்குத் தந்து உதவுகின்றன. தவிர, ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்துறையின் சார்பில் விளம்பரப் பணிகள், விழாக்கள், பொருட்காட்சிகள் நடத்த அலுவலகம் ஒன்று உள்ளது.

சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கம், காந்தி இல்லம், இராஜாஜி மண்டபம், சீரணி அரங்கம், வள்ளுவர் கோட்டம், வேலூரிலுள்ள அண்ணா கலை அரங்கம் ஆகியவை இத்துறையின் மேற்பார்வையில் உள்ளன. பொதுமக்களுக்கான வசதிகளைப் பெருக்க, கலைவாணர் அரங்கத்துக்கு அண்மையில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இப்போது அரங்கம் புதுப் பொலிவுடன் விளங்குகிறது. வேலூர் அண்ணா கலை அரங்கமும் இதுபோன்றே புதுப்பிக்கப்பட்டு விரைவில் திறக்கப்பட



யிருக்கிறது. வள்ளுவர் கோட்ட அரங்கில் ஒலியமைப்பினைச் சீராக மாற்றி செம்மைப்படுத்த அரசு அண்மையில் ரூ. 2.20 லட்சம் அனுமதி வழங்கியுள்ளது. இதற்கான வேலை விரைவில் தொடங்கும்.

(1) “தமிழரசு” இதழ், (2) திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி, (3) தமிழ்நாடு திரைப்படப் பிரிவு ஆகியவை மேற்பார்வையில் நடத்தப்பட்டு வருகின்றன.

### “தமிழரசு”

“தமிழரசு” இதழ் (தமிழ்-ஆங்கிலம்) அரசின் அதிகாரப் பூர்வமான ஒரே இதழாகும். இந்து அறநிலையத் துறையால் வெளியிடப்படுகிற “திருக்கோயில்” எனும் பத்திரிகையைத் தவிர, அரசாங்கத்தின் மற்றப் பத்திரிகைகளையெல்லாம் இணைத்து “தமிழரசு” 1970 ஆம் ஆண்டு ஜூலையில் துவக்கப்பட்டது. திங்கள் இருமுறை வெளிவரும் தமிழ் இதழில் 35,000 பிரதிகளும மாதம் ஒரு முறை வெளிவரும் ஆங்கில இதழில் 2,750 பிரதிகளும் வெளியிடப்படுகின்றன. இவை இத்துறையின் கீழுள்ள “தமிழரசு” அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகத்தில் மத்திய அரசு வெளியீடான “திட்டமும்”, அறநிலையத் துறையின் “திருக்கோயிலும்” அச்சிடப்படுகின்றன. மேலும் அரசுக்குத் தேவையான சுவரொட்டிகள், சிறு கையேடுகள், துண்டு வெளியீடுகள் முதலியனவும் இதில் அச்சிடப்படுகின்றன.

### திரைப்படத் தொழில்நுட்பக் கல்லூரி.

திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி 1948 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, கணிசமாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது. திரைப்படத் தயாரிப்பு சம்பந்தப்பட்ட அனைத்துப் பிரிவுகளிலும் பயிற்சியளித்து, தேர்வு நடத்தி வெற்றி பெற்றோர்க்குச் சான்றிதழ் வழங்குதல், கல்வியை வளர்ப்பதிலும் கலையின்பத்தை நல்குவதிலும் திரைப்படத்திற்குள்ள சக்தியை மக்களுக்கு உணர்த்துதல், திரைப்படத் தொழில் பற்றிய ஆய்வு நிகழ்த்துதல ஆகியவை இக்கல்லூரியின் குறிக்கோள்களாகும். அரசு அலுவலர்களையும், திரைப்படத் தொழில் தொடர்புடைய அரசு

சார்பற்ற தொழில்நுட்ப வல்லுநர்களையும் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று இக்கல்லூரிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகிறது. படப்பிடிப்பு, ஒலிப்பதிவு மற்றும் ஒலிப் பொறியியல், படச்சுருள் கழுவுதல், படம் இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல், படத் தொகுப்பு, நடிப்பு ஆகியவற்றில் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. தொலைக்காட்சிக்கான திரைக்கதை வசனம் எழுதுதல், படப்பிடிப்பு, ஒலி பொறியியல் ஆகியவற்றில் பயிற்சியளிக்கும் திட்டமொன்று ஆய்வில் உள்ளது. மேலும், ஒப்பனைக் கலையில் ஒரு சான்று இதழ்ப் பயிற்சி (டிப்ளமா) பாடப் பிரிவு துவக்குவதற்கும் ஒரு திட்டம் உள்ளது. இக்கல்லூரியில் பயிலும் மாணவர்கள் திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்களிலும், ஆய்வுக் கூடங்களிலும், தொலைக்காட்சி நிலையங்களிலும் வேலை வாய்ப்புப் பெறலாம்.

1977-78 ஆம் ஆண்டில் படச்சுருள் காப்பகம் ஒன்று நிறுவுவதற்காக ரூ. 1.40 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. பல நல்ல தரமான பழைய படங்கள் பழுதுபட்டதாலும், பாதுகாக்கப்படாததாலும் சேதமடைந்துவிடுகின்றன. ஆகவே, அப்பழைய படங்களை விலைக்கு வாங்கியும் இலவசமாகக் கிடைத்தால் அவற்றையும் சேர்த்து, வருங்காலத்தினருக்காகப் பாதுகாத்து வைக்கும் நோக்குடன் இக்காப்பகம் அமைக்கப் படுகிறது.

இக்கல்லூரியிலுள்ள படப்பிடிப்பு வசதிகளும், படப்பிடிப்புத் தளமும், படம் தயாரிக்கும் தனியாருக்கு வாடகைக்கு வழங்கப் படுகின்றன. இப்படி வழங்குவதால், அரசுக்கு வருவாய் கிடைப்பதுடன், புகழ்பெற்ற படத் தொழில் வல்லுநர்களின் செயல்திறன்களை நேரில் அறியவும், அவர்களுடன் படப்பிடிப்பில் பங்கு கொள்ளவும் மாணவர்களுக்கு வாய்ப்பும் கிடைக்கிறது. படத் தயாரிப்பாளர்களுக்குத் தேவைப்படும் இப்படப்பிடிப்புத் தளம், முழுமையாகப் பயன்படுத்தப்படுவதற்குரிய வகையில் வசதிகளை பெருக்குவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

குடிப் பழக்கத்தினால் விளையும் கேடுகள், தேசிய ஒருமைப்பாடு நாட்டுப் பற்று போன்ற தேசிய அளவில் நலன் தரும் பொருள்கள் பற்றிய கதாபாத்திர படங்கள் தயாரிப்பதை ஊக்கப்படுத்துவதற்காக.



ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் இப்படிப்பட்ட தமிழ்ப் படம் ஆண்டுதோறும் ரூபாய் வீதம் ஐந்து தமிழ்ப் படங்களுக்கு தீர்மானித்துள்ளது. உதவித் தொகை வழங்க அரசு தணிக்கை முதற்கட்டமாக, 1976-77 இல் தயாரிக்கப்பட்டு செய்யப்பட்ட படங்கள் இது தொடர்பான தேர்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இதற்கென அமைக்கப்படும் தேர்வுக் குழு, அரசின் நிதி உதவியைப் பெறத்தக்க தயாரிப்பாளர்களின் தகுதிகளை ஆராய்ந்து, அரசுக்கு ஆலோசனை வழங்கும்.

மேலும், சிறந்த படங்களுக்கும், சிறந்த நடிகர்கள், சிறந்த படத் தொழில்நுட்ப வல்லுநர்கள். ஆகியோருக்கும் பரிசு வழங்கும் திட்டத்தை மீண்டும் செயற்படுத்துவது குறித்தும் அரசு ஆலோசித்து வருகிறது.

## தமிழ்நாடு திரைப்படப் பிரிவு.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மாநிலத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துப் படமாக்கி செய்திப் படங்களாக மத்திய அரசின் திரைப்படப் பிரிவின் மூலம் வெளியிடுகிறது.

இத்துடன் அரசின் பல்வேறு துறைகளின் செயல்களை. கருத்து விளக்கப் படங்களாக (டாகுமெண்டரி) எடுத்து இத்திரைப்படப் பிரிவு வெளியிடுகிறது. இப்படங்கள் (35 மில்லிமீட்டர் அளவில்) திரையரங்கங்களுக்கும், (16 மில்லி மீட்டர் அளவில்) அரசின் செய்தி, விளம்பரப் பிரிவுகளுக்கும் அனுப்பப்பட்டு பொது மக்களுக்குக் காட்டப்படுகின்றன. பல்வேறு அரசுத் துறைகளுக்கான கருத்து விளக்கப் படங்களை (டாகுமெண்டரி) தயாரிப்பதற்காக 1978-79 ஆம் ஆண்டில் இரண்டு இலட்சம் ரூபாய் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

முக்கிய அரசு விழாக்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப் புகைப்படம் எடுப்பதற்கான பிரிவு ஒன்று இத்துறையில் இருக்கிறது. இப்பிரிவு எடுக்கும் புகைப்படங்களை பத்திரிகை களுக்கும் பல்வேறு நிறுவனங்களுக்கும் வழங்குகிறது. சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய இடங்களில் எற்கெனவே

இருக்கின்ற புகைப்படப் பிடிப்பாளர்கள் தவிர, மேலும் ஒரு புகைப்படக்காரரைக் கூடுதலாக மதுரையில் நியமித்து, தக்க வசதிகளுடன் கருவிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு திரையரங்குக் கழகம், சென்னை.

1972 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட தமிழ்நாடு திரையரங்குக் கழகம் பொறுப்பு வரையறுக்கப்பட்ட முற்றிலும், அரசுசார் நிறுவனமாகும். தமிழ்நாட்டில் பகுதி நிலைத் திரையரங்கங்களைக் கட்டவும், நிலையான புதிய திரையரங்குகளாக அவற்றை மாற்றி அமைத்திடவும், நிலையான புதிய திரையரங்கங்களைக் கட்டவும், அத்தகைய திரையரங்கங்களுக்குத் தேவையான கருவிகள் முதலியவற்றை வாங்கவும் நிதியுதவியளிப்பதே இக்கழகத்தின் தலையாய நோக்கமாகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 25 இலட்சம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் கடனாகக் கிடைக்கும் ரூ. 50 இலட்சம் ஆகியவை இக்கழகத்தின் நிதி ஆதாரங்களாகும்.

இன்றைய நிலையில், சட்டப்படி செல்லக்கூடிய ஒப்பளிப்புகள் 77 ஆகும். இவற்றில் 58 நபர்கள் திரையரங்கங்களைக் கட்டி முடித்து, படங்களைத் திரையிட்டு வருகின்றனர். திரையரங்கம் ஒன்றுக்குக் கடன் உதவியின் உச்சவரம்பு ரூ. 1.20 இலட்சமாகும். தமிழ்நாடு திரையரங்குக் கழகம் இதுவரையில் ரூ. 93.90 இலட்சம் கடன் தொகை அனுமதித்துள்ளது. அத்தொகையில் ரூ. 75.30 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் திரையரங்கங்களைக் கட்டும் பணியை ஊக்குவிப்பதில் திரையரங்கக் கழகம் வெற்றி கண்டுள்ளது.

## சுற்றுலாத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

நாட்டுக்குப் பொருள் வருவாயை ஈட்டுவதாகவும், மக்களுக்குப் பரந்த மனப்பான்மையை ஊட்டுவதாகவும் சுற்றுலாக் கலை உலக அரங்கில் சிறப்போடு ஓங்கி வருவதோடு தொழில் துறையாகவும் செழித்து வருகிறது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்", "நாடும் நகரமும் நல்திருக்கோயிலும் பாடிப் பணியின்" என்னும் தமிழ்ச் சான்றோர்களின் கருத்துக்கள் சுற்றுலாக் கலையின் பெருமையைச் சுட்டிக் காட்டுவதோடு, அதை மேலும் வளர்ப்பதற்கான ஊக்க உரைகளாகவும் நமக்கு அமைகின்றன. விருந்தினர்களை



வரவேற்பதையும், சுற்றுலாக்களை மேற்கொள்வதையும் நாடுகாண் காதை, ஊர்காண் காதை என்றெல்லாம் பழைய இலக்கியங்களிலே காணலாம்.

மேலை நாடுகளில் சுற்றுலா மிகப் பெரிய அளவில் வளர்ந்து வருகிறது. ஆசிரியர்கள், மாணவர்கள், வணிகர்கள், தொழிலாளர்கள், மகளிர் என எல்லா நிலையினரும் வெளிநாடுகளில் ஆண்டுதோறும் உலகப் பயணத்தை மேற்கொள்கிறார்கள். மாதந்தோறும் தங்கள் ஊதியத்தில் ஒரு பகுதியை உலகப் பயணத்துக்காக இளைஞர்கள் ஒதுக்கி சேமித்து வைக்கிறார்கள். அயல்நாட்டு விருந்தினர்களின் பயணங்களோடு, செல்வம் படைத்தவர்கள் உல்லாசமாகப் பயணம் செய்கின்ற வழக்கமும் உண்டு. வணிகர்கள், அறிஞர்கள், அலுவலர்கள் தங்கள் பணிகளின் காரணமாகப் பயணம் மேற்கொள்வதும் உண்டு.

"சாமானியர்களின் சகாப்தம் என்று இந்தக் காலத்தை நாம் அழைக்க வேண்டும். ஏழைகளின் கரங்களுக்கு எட்டும்படியாக எல்லாவற்றையும் இழுக்க வேண்டும்", என்ற பேரறிஞர் அண்ணாவின் கருத்திற்கேற்ப நடுத்தர, எளிய மக்களும் சுற்றுலாக் கலையின் வாய்ப்புக்களையும், வசதிகளையும் பெற்றாக வேண்டும் என்பதே மாண்புமிகு முதல்வர் அவர்களின் விருப்பமாகும். சுற்றுலாத் திட்டங்களை அந்த அடிப்படையில் வகுக்க இந்த அரசு கருதியுள்ளது. வடக்கே காசியில் விஸ்வநாதர், தெற்கே இராமேஸ்வரத்தில் இராமநாதர், மேற்கே சோமநாதர், கிழக்கே ஜெகன்னாதர் என்ற நான்கு நாதர்களையும் வழிபட வேண்டுமென்றெல்லாம் சமய உணர்வினைக் காட்டுவதன் மூலம் ஒருமைப்பாட்டை நமது மக்கள் பல காலமாகக் கருதியும் வந்திருக்கிறார்கள். என்றாலும், இந்நாளில் எல்லா நிலையினரும் எல்லாத் தரப்பினரும் சுற்றுலாச் செல்லும் வாய்ப்புக்களைப் பெறும் நிலைமைகள் உருவாக்கப்பட வேண்டும்.

ஏராளமான சுற்றுலா மையங்களையும் எழில் குலுங்கும் இடங்களையும் தமிழகம் கொண்டு விளங்குகிறது. வான் முட்டும் கோபுரங்களைக் கொண்ட வழிபாட்டு ஆலயங்களும், அற்புதச் சிற்பக் கலைக் கூடங்களும், வண்ணக் களஞ்சியங்களாக அருவிகளும், அடவிகளும், வாழும் வன விலங்குகளும், கோல எழில் கொழிக்கும் குறிஞ்சி நகர்களும், நலப் புகலிடங்களும், நெஞ்சைக் கவரும் நீண்ட கடற்கரைப் பகுதிகளும், வளம் கொழிய நம் தமிழகத்தை அலங்கரிக்கிறது.

[1978 மார்ச் 7

மேலை நாட்டினரைப் போலவே சுற்றுலாப் பலன்களையும் அனுபவ வளர்ச்சியையும் நம் நாட்டினரும் பெற வேண்டும். மாவட்டந் தோறும் சுற்றுலா மையங்களை ஏற்படுத்தி வார விடுமுறைகளை நமது மக்களில் எல்லா நிலையினரும் அந்த மகிழ்விடங்களுக்குச் செல்வதன் மூலம் ஓய்வைப் பயனுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும். நம்மோடு ஒரு மாவட்டத்தில் பல ஆண்டுகளாக வாழ்பவர்களில் பலர் கூட இன்னொரு மாவட்டத்தின் சிறப்புக்களையோ இயல்புகளையோ கூட அறிந்துகொள்ளாமல் இருக்கின்ற நிலைமைகளை மாற்ற வேண்டும். நாம் அறியாத இடங்கள் தெரியாத தலங்கள், விளம்பரப்படுத்தாமற் போன கலைக்கூடங்கள் என்று விடுபட்டுள்ள பல இடங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியையும் அரசு செய்ய கருதியுள்ளது. சிற்பங்களைக் கொண்ட சிற்றூராகப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் வெளி உலகிற்குத் தெரியாதிருந்த மத்திய பிரதேசத்திலுள்ள கஜோராஹோ சுற்றுலாத் துறையின் தொடர்பினால் இலட்சக்கணக்கான அயல்நாட்டுப் பயணிகளைக் கவரும் அழகு புரியாக அமைந்ததோடு ஆண்டுக்கு ரூ. 60 இலட்சம் வருவாயையும் இன்று ஈட்டித் தருகிறது. இதனால் சுற்று வட்டாரத்தில் பொது மக்களுக்குப் பெரும் பயன்களும் வாழ்க்கைக்கான வேலை வாய்ப்புக்களும் விளைந்துள்ளன. இந்த வகையில் இதுவரை அறிமுகமாகாத தமிழகத்தில் உள்ள இடங்களைக் கண்டறிந்து சுற்றுலாத் துறை ஆவன செய்ய உள்ளது. அவ்வகையில் தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரத்தை அடுத்துள்ள தம் பேரறிஞர் அண்ணாவின் சிந்தை கவர்ந்த கடற்கரைப் பகுதியான பிச்சாவரத்தையும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஏலகிரியையும் தமிழகச் சுற்றுலாத் துறை மேம்படுத்த ஏற்பட்டுள்ளது.

இனிவரும் ஆண்டுகளில் சுற்றுலாவைப் பெருக்கவும், உள்நாட்டு வெளிநாட்டு பயணிகள் வந்திறங்கும் பகுதியாகத் தமிழகத்தை வளர்ச்சியுறச் செய்யும் வகையில் திட்டங்களை வகுக்க வேண்டும். 1980-ல் 10 இலட்சம் (1 மில்லியன்) வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வருகை தருவார்கள் என்று இந்திய அரசு கணித்துள்ளது. இப்போதைய சுற்றுலா வளர்ச்சிப் போக்கின் அடிப்படையில் இதில் 3 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் நாம் இவர்களோடு கருத்திற்கொள்ள வேண்டும்.



78 மார்ச் 7]

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்தவும் சுற்றுலாப் பயணி ...ளுக்கு அதிக வசதிகளைச் செய்து கொடுக்கவும் வசதிகளை மேலும் ...ரிவுபடுத்தவும், பரந்த கண்ணோட்டத்தில் திட்டமிடுதல் ...வண்டும்.

நமது மாநிலத்தில் 1971 மே திங்களில் சுற்றுலாத் துறை ...மைக்கப்பட்டது. சுற்றுலா இயக்குநர் அலுவலகமும், சுற்று...ாச் செயலகத் துறையும் இணைந்து தலைமைச் செயலகத்தின் ...குதியாகப் பணி ஆற்றிவருகிறது. சுற்றுலா மாளிகைகள், ...ற்றுலா சொகுசுப் பேருந்துகள் நிருவகிக்கும் பணி முதலிய ...ணிக முறை நடவடிக்கைகள் 1971 ஜூலையில் அமைக்கப்பட்ட ...மிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்...ள்ளது.

செயலகத்தோடு இணைந்து செயல்படும் சுற்றுலாத் துறையின் ...ீழ் மதுரை, உதகை, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, சேலம், ...மாமல்லபுரம், சென்னை ஆகிய இடங்களில் சுற்றுலா அலுவலகங்கள் ...செயல்பட்டு வருகின்றன. இச்சுற்றுலா அலுவலகங்கள் பயணி...களுக்குச் சுற்றுலாத் தகவல்களை அளிப்பதோடு சுற்றுலா மேம்...பாட்டிற்கான விளம்பரத்திலும் வளர்ச்சிப் பணிகளிலும் களப் ...பிரிவுகளாகச் செயல்பட்டு வருகின்றன. மதுரை, திருச்சிராப்...பள்ளி, இராமேஸ்வரம் இரயில் நிலையங்களிலும் மற்றும் கொடைக்...கானலிலும் சுற்றுலாத் தகவல் நிலையங்கள் பணியாற்றி வருகின்றன. சென்னை சென்ட்ரல் நிலையத்திலும், கோயமுத்தூர் இரயில் நிலையத்திலும், புதுடில்லியிலும், சுற்றுலாத் தகவல் நிலையங்கள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

### இளைஞர் விடுதி.

இளைஞர்கட்குக் குறைந்த செலவில் தங்குமிட வசதியை அளிக்...கும் நோக்கத்துடன் மத்திய அரசு அடையாறில் ஓர் இளைஞர் ...விடுதி கட்டுவதற்கு ரூ. 5.25 இலட்சம் வழங்கியது. மாநில அரசு ரூ. 1.5 இலட்சம் மதிப்புள்ள நிலத்தை அதற்கு அளித்தது. மத்திய அரசின் நோக்கப்படி உள் நிர்வாகக் குழுவினரின் வழிகாட்டுதலுடன் 1975 ஜூலையிலிருந்து இவ்விளைஞர் விடுதியை வருவாயோ இழப்போ இன்றி மாநில அரசு நடத்தி வருகின்றது. இளஞ்சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு உதகையில் இளைஞர் விடுதியினைத் திறப்பதற்கான வாய்ப்பு வசதிகளை அரசு ஆய்வு செய்து வருகிறது.

[1978 மார்ச்

## சுற்றுலா மாளிகைகள்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உதகையில் படகு வீடு நடத்துவதுடன், கீழ்க்கண்ட சுற்றுலா மாளிகைகளையும் நடத்தி வருகின்றது.

1. சுற்றுலா மாளிகை, உதகை.
2. சுற்றுலா மாளிகை, திருச்சி.
3. சுற்றுலா மாளிகை, மதுரை.
4. சுற்றுலா மாளிகை, கன்னியாகுமரி.
5. கேப் விடுதி, கன்னியாகுமரி.
6. சுற்றுலா மாளிகை, திருச்செந்தூர்.
7. சுற்றுலா மாளிகை, கொடைக்கானல்.
8. சுற்றுலா மாளிகை, ஏற்காடு.
9. சுற்றுலா மாளிகை, ஓகேனக்கல்.
10. சுற்றுலா மாளிகை, இராமேஸ்வரம்.
11. கடற்கரை மையம், மாமல்லபுரம்.
12. இராஜா ஓய்வு விடுதி, தஞ்சாவூர்.
13. சுற்றுலா மாளிகை, சிதம்பரம்.

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பின்வரும் இடங்களில் வி... சுற்றுலா மாளிகைகளை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

1. கோயம்புத்தூர்.
2. நாகப்பட்டினம்.
3. குற்றாலம்.
4. காஞ்சிபுரம்.
5. பிச்சாவரம்.
6. முதுமலை.

தேசிய நெடுஞ்சாலைகளில் வட ஆற்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டையிலும், தென்னார்காடு மாவட்டத்தில் உளுந்தூர்ப் பேட்டையிலும் சாலை விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. ஓசூரில் இத்தகைய ஒரு சாலை விடுதி (Motel) விரைவில் கட்டு வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.



1978 மார்ச் 7]

இந்தியச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் காஞ்சிபுரம், திருச்சி, தஞ்சாவூர் முதலிய நகரங்களிலுள்ள சுற்றுலா விடுதிகளையும், (Bock Value) மதிப்பீட்டின்படி மாநில அரசுக்கு ஏட்டு மதிப்பீட்டின்படி அளிப்பதற்குத் தயாராக உள்ளது. மாநில அரசு அச்சுற்றுலா விடுதிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது.

## பூம்புகாரும், கட்டபொம்மன் நினைவிடமும்.

பூம்புகார் அமைப்பும், காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள பூம்புகார் அமைப்பும், பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள கட்டபொம்மன் நினைவிடமும் செய்தி மக்கள் தொடர்புத் துறையிலிருந்து இத்துறையின் பொறுப்புக்கு மாற்றப்பட்டுள்ளன. உள்ளூர்ச் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் இவை ஈர்த்து வருகின்றன.

## உதகை ஏரி.

உதகையின் ஏரிப் பகுதியை மேலும் கவரக்கூடிய வகையில் மேம்படுத்தி அழகுபடுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டிடக்கலையில் முன்னணியில் உள்ள சென்னை நிறுவனம் ஒன்றை இவ் ஏரியை அழகு படுத்துவதற்கான பெருந் திட்டம் ஒன்றைத் ( Masler Plan ) தயாரிக்க அரசு அமர்த்தி உள்ளது. இவ் ஏரிப் பகுதியை மேம்படுத்தும் திட்டத்திற்கு 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 16 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 1.56 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. ரூ. 6.69 இலட்சம் செலவு செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் நடப்பு ஆண்டில் ரூ. 2.5 இலட்சமும் 1978-79 ஆம் ஆண்டில் மீதித் தொகையையும் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## ஏற்காடு ஏரி.

ஏற்காட்டில் உள்ள ஏரியையும் அதன் சுற்றுப்புறத்தையும் அழகுபடுத்தி சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நோக்கத்தோடு திட்ட மதிப்பீட்டுடன் அறிக்கை ஒன்று தயாரிக்க கட்டிடக்கலை நிறுவனம் ஒன்று அமர்த்தப்பட்டது. இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களையும் படிப்படியாகச் செயல்படுத்த ரூ. 36.35 இலட்சம் தோராய மதிப்பீட்டில் அறிக்கை ஒன்றை அரசுக்கு வழங்கியுள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் முதல் கட்டப்பணியாக மேற்கொள்ள ரூ. 2.60 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் இரண்டாம் கட்டப்பணியாக ரூ. 1.5 இலட்சம் அனுமதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1978 மார்ச் 7

## கொடைக்கானல் ஏரி.

கொடைக்கானல் ஏரியை மேம்படுத்தி அதிக அளவில் சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் பொருட்டு கவர்ச்சியுள்ள வகையில் அப் பகுதியைக் கவினுள்ளதாக்கத் திட்டங்களும் மதிப்பீடும் அடங்கிய திட்ட அறிக்கையைத் தயாரித்து கொடுப்பதற்கு வேருெரு கட்டிடக்கலை நிறுவனம் அமர்த்தப்பட்டது. மூன்று கட்டங் களில் செயலாக்கும் வகையில் ரூ. 25,64,100-க்கான தோராய மதிப் பீட்டில் ஒரு விரிவான அறிக்கையை திட்ட மதிப்பீட்டுடன் இந் நிறுவனம் அளித்தது. முதல் கட்டமாகச் சில சிறு பணிகளை மேற்கொண்டு இவ் ஏரியை அழகுபடுத்துவதற்காக ரூ. 58,100 1977-78 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. இரண்டாவது கட்டத் தில் இன்னும் சில பெரிய பணிகளைச் செயலாக்குவதற்கு ரூ. 2.01 இலட்சம் 1978-79 ஆம் ஆண்டில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## உதகை, கொடைக்கானலில் மேலும் வசதிகள்.

கொடைக்கானலில் "கோக்கர்ஸ் வாக்" என்னும் இடத்திலும், "குறிஞ்சி ஆண்டவர் கோயில்" அருகாமையிலும் ஆக இரண்டு தொலை நோக்காடிகள் ரூ. 1,60,000 செலவில் அமைக்கப்பட்டன. கொடைக்கானல் செல்லும் சுற்றுலாப் பயணிகள் இத் தொலை நோக்காடிகளின் உதவியால் பழனி ஆலயத்தின் வடக்குப் பகுதி யையும், வைகை அணையின் பொலிவான காட்சியினையும் கண்டு களிக்கலாம். இத் தொலைநோக்காடிக் கருவிகளை அங்கே அமைத் ததின் மூலம் கொடைக்கானலுக்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் 1978-79 ஆம் ஆண்டில் இத்தகைய தொலை நோக் காடிகள் இரண்டு ரூ. 2.14 இலட்சம் செலவில் நிறுவ உத்தேசிக்கப் பட்டுள்ளது. உதகை வரும் சுற்றுலாப் பயணிகளின் தேவையை ஈடு செய்யும் வகையில் பல படுக்கைகள் கொண்ட கூடமும், ஓய்வு விடுதி ஒன்றும் ரூ. 10 இலட்சம் செலவில் கட்டும் திட்டமும் உத் தேசத்தில் உள்ளது.

## மாமல்லபுரம் மேம்பாடு.

ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட நிபுணர் குழுவினர் அளித்த பரிந்துரைகளைச் செயல்படுத்தி மாமல்லபுரத்தின் சுற்று லாச் சிறப்பினைப் பேணிக்காத்து மேலும் மேம்படுத்த இவ்வரசு முழு முயற்சி எடுத்து வருகின்றது. மாமல்லபுரம் மேம்பாட்டிற்



1978 மார்ச் 7]

காக ஏற்படுத்தப்பட்ட இயக்குநர் குழு, ஐக்கிய நாடுகள் மேம் பாட்டுத் திட்ட நிபுணர்கள் அளித்த பரிந்துரைகளைச் செயல் படுத்துவதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளது. புதுடெல்லியில் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் நடைபெற்ற மாநிலச் சுற்றுலா அமைச்சர்கள் மாநாட்டில் மாமல்லபுரத்தை அனைத்துலக (சுற்றுலா)க் கடற்கரை மையமாக ஆக்குவதற்காக மத்திய உதவிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் மத்திய அரசின் சுற்றுலா, சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் மாமல்லபுரத்தைப் பார்வையிடுகையில் இக்கோரிக்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டது. அதற்கு அவர் பதிலளிக்கையில் விரிவான மதிப்பீடுகளுடன் குறிப்பிட்ட திட்டங் களைத் தீட்டி மத்திய அரசின் ஆய்வுக்கு அனுப்பி வைக்கும்படி கூறினார். இதைத் தொடர்ந்து மாமல்லபுர மேம்பாட்டிற்கான திட்டங்கள் தீட்டித்தர தமிழக அரசு கட்டிடக்கலை நிறுவனம் ஒன்றை அமர்த்தியுள்ளது.

இடைக்காலத்தில் கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்ற ஆண் டின் நிதிநிலை அறிக்கை மதிப்பீட்டில் ரூபாய் 3.10 இலட்சம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடற்கரைக் கோயிலை அடுத்துள்ள நிலத்தைக் கையகப்படுத்தி, காற்றுத் தடுப்பாக பசுமையான சவுக்குத் தோப்புகளை எழிலுற வளர்த்தலும், எளிய குறைந்த வருமானமுள்ள சுற்றுலாப் பயணி களுக்கேற்ற வகையில், பெரிய அளவில் தகுந்த வசதிகளுடன் ஓய் விடம் ஒன்றை அமைத்தலுமாகும்.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குப் பங்கு மூலதன உதவி.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு பங்கு மூலதன மாக 1977—78 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 20 இலட்சம் வழங்கப்பட் டுள்ளது. 1978—79 ஆம் ஆண்டிற்கும் ரூபாய் 20 இலட்சம் சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குக் கொடுக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

## சுற்றுலாத் திட்டங்கள்.

இம் மாநிலத்தின் எல்லாச் சுற்றுலா மையங்களிலும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு இத் துறை பல செயற்குறிப்புகளை ஆய்வு செய்து வருகின்றது. உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசு மிகவும் ஆவலாக உள்ளது. தொடக்கத்திலேயே நான் குறிப்பிட்டது போல பொது மக்கள் பார்வையில் படாத, சிறப்பு மிக்க பல இடங்கள் தமிழகத்திலுள்ளன. அத்தகைய இடங்களாகிய தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்திற்கு அருகாமையிலுள்ள பிச்சாவரம், வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஏலகிரி, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆவுடையார் கோயில் ஆகிய இடங்களை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## விளம்பரம்.

இம்மாநிலத்திற்குச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பொருட்டு விளம்பரங்கள் அளித்தல், பொருட்காட்சிகள் நடத்துதல், திரைப் படங்கள் திரையிடுதல், சுற்றுலாக் கையேடுகளை அச்சிட்டு வழங்குதல் ஆகிய பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்புக்களை விளக்கும் வகையிலும், சுற்றுலாப் பயணிகளுக்குத் தமிழகத்தில் உள்ள வசதிகளை பரப்பும் வகையிலும் சுற்றுலாத் தொடர்பான இதழ்களிலும், நாளிதழ்களிலும் விளம்பரம் கொடுத்து வருகிறது. சுற்றுலாவின் முக்கியத்துவத்தை நமது மாநில மக்கள் உணரும் வகையிலும் தமிழகச் செய்தித் தாள்களிலும், இதழ்களிலும் விளம்பரம் வழங்கப்படுகிறது.

## பொருட்காட்சிகள்.

சென்னையிலும் மற்ற மாநிலங்களிலும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் தமிழகத்தின் சிறப்பு அம்சங்களை எடுத்துக் காட்டும் வகையில் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் சனவரி—பிப்ரவரி மாதங்களில் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் சுற்றுலாத் துறையும் பங்கேற்று வருகின்றது. 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் புது டில்லியில் நடைபெற்ற தேசிய வேளாண்மைப் பொருட் காட்சியில் சுற்றுலாத் துறை பங்கு கொண்டது. 1978 சனவரியில் புது டில்லியில் நடைபெற்ற பசிபிக் கடற்கரை நாடுகளைச் சார்ந்த பயண முகவர்களின் மாநாட்டிலும் இத்துறை பங்கேற்றது. 1978 ஏப்ரல் மாதத்தில் பெங்களூரில் நடைபெறவிருக்கும் வருடாந்திர இந்தியப் பயண முகவர்களின் மாநாட்டில் இத்துறை கலந்து கொள்வதற்காகத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. சென்ற ஆண்டு ஆக்ராவில் நடைபெற்ற இந்தியப் பயண முகவர் குழுவினரின் கூட்டத்தில் சிறிய பொருட் காட்சியை அமைத்ததின் வாயிலாக 'ஆலன் கரீம்பாய் சுழற் கோப்பையை' இத்துறை வென்றது என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.



## திரைப்படங்கள்.

இத்துறை பெல்ஜிய நாட்டு நிபுணர் ஒருவரை நியமித்து ஒரு வண்ணத் திரைப்படம் எடுத்துள்ளது. வெளிநாடுகளிலுள்ள இந்தியச் சுற்றுலா அலுவலகங்களுக்கு அப்படம் வழங்கப்பட்டுள்ளது. கேரளா, கர்நாடக மாநில அரசுகளின் கூட்டுடன் மற்றொரு வண்ணப்படமும் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் வாயிலாக சில படங்களைத் தயாரிப்பதற்கு இத்துறை திட்டமிட்டுள்ளது.

## நிழற்படம்.

இத்துறையின் நிழற்படப் பிரிவில் சுற்றுலாத் தொடர்பான முக்கிய இடங்களைப் பற்றிய சாதாரண நிழற்படங்கள், வண்ணப் படங்கள் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. நிழற்படங்கள் தமிழ்நாட்டைப் பற்றிய கட்டுரைகளுடன் பத்திரிகைகளில் வெளியிடுவதற்காக கொடுக்கப்படுகின்றன. இத்துறை வெளியிடும் சுற்றுலாக் கையேடுகளிலும் இப்படங்கள் அதிக அளவில் பயன் படுத்தப்படுகின்றன. சிறப்பு விருந்தினர்களுக்கும், பயண முகவர்களுக்கும், பயண எழுத்தாளர்களுக்கும் காண்பிப்பதற்காகச் சிலேடு தொகுப்பும் இத்துறையிடம் உள்ளது.

### சுற்றுலாக் கையேடு.

பலதரப்பட்ட சுற்றுலாக் கையேடுகள், வண்ண அஞ்சலட்டைகள், சுவரொட்டிகள் முதலியன ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்பெற்று அவைகள் இந்தியாவிலும் வெளிநாடுகளிலுள்ள இந்தியச் சுற்றுலா அலுவலகங்களிலும், ஏர் இந்தியா முதலிய பிற விமான அலுவலகங்கள், பயண முகவர்கள் ஆகியோருக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

### விருந்தோம்பல்.

பயண எழுத்தாளர்கள், பயண முகவர்கள் ஆகியோரை வரவேற்று விருந்தோம்புவது சுற்றுலா வளர்ச்சியின் மிக முக்கிய அம்சமாகும். எனவே, இத்திட்டத்தில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. "தென்னகத்தை நோக்கி" என்னும் திட்டத்தின் கீழ் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் உலகில் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த 60-க்கும் மேற்பட்ட பயண எழுத்தாளர்கள் தென்னகத்துக்கு வருகை தந்தார்கள். சென்னையில் இந்தப் பயண எழுத்தாளர்களுக்கு இத்துறை சிறப்பான வரவேற்பு அளித்தது. 1978 சனவரியில் பசிபிக் கடற்கரை நாடுகளைச் சார்ந்த முகவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்னை வழியாகச் சென்ற சார்பாளர்களுக்கும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழகத்தின் பல்வேறு பண்பாட்டுச் சிறப்புகளை நேரடியாகக் கண்டு செல்லும் இவ்விருந்தினர்கள் தங்கள் நாட்டுச் செய்தித்தாள்கள், இதழ்கள் ஆகியவற்றில் தமிழகத்தைப் பற்றி எழுதி பலரும் அறிந்து நம்நாடு வர வழிசெய்கின்றனர். இவ்வகையில் செலவானதைக் காட்டிலும் நமக்குக் கிட்டும் விளம்பரம் பெரியதாகும்.

கண்ணுக்கும் கருத்துக்கும் கவர்ச்சியூட்டுவதோடு நாட்டின் கருவூலத்திற்குப் பொருளும் சேர்க்கின்ற சுற்றுலாத் துறையில் இவ்வாறு பல்வேறு திட்டங்களை இணைத்துச் சுற்றுலாத் துறையை விரிவுபடுத்த அரசு கருதுகிறது. எல்லாத் தரப்பினரும் நிறைந்த ஓய்வை நுகரவும், நெஞ்சுக்கு நிம்மதியைத் தேடிக் கொள்ளும் உணர்வுகளால் உயர்வடையவும், தாயகத்தின் வரலாற்றுப் பெருமைகளையும், தனிப் பெரும் கலைக்கூறுகளையும், அறிந்து அனுபவித்து எழுச்சியும் ஏற்றமும் பெற சுற்றுலாத்துறை செயல்பட்டு வருகிறது.

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

### புதன்கிழமை, 1978 மார்ச் 8.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### HARIJAN AND BACKWARD CLASSES STUDENTS' HOSTELS

S.N.Q. No. 3.—Thiru R. E. CHANDRAN JAYAPAL and Thiru K. KANDASAMY:— Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :—

(a) whether there is any proposal to provide meals with mutton or eggs or fish or any other non-vegetarian items to the inmates of the Harijan and Backward Classes Students' Hostels in Madras as well as in other places in the State of Tamil Nadu ;

(b) if so, when was it implemented ; and

(c) if not, when will the necessary arrangements be made for its implementation ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) தலைவரவர்களே, தமிழ்நாட்டில் சென்னையிலும் ஏனைய இடங்களிலும் உள்ள அரிசன, பிற்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதிகளில் தங்கிப் படிக்கின்றவர்களுக்கு உணவுடன் இறைச்சி, முட்டை போன்ற அசைவ உணவும் வழங்க அரசு 4—3—1978 அன்று ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) இந்த ஆணை உடனடியாக நடைமுறைக்கு வருகிறது.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவரவர்களே, சென்னையில் அரசு நடத்தும் கல்லூரி மாணவர் விடுதிகளில் தினந்தோறும் வழங்கும் உணவு விவரத்தை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

[1978 மார்ச் 8

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே,

ஞாயிறு காலை—பொங்கல் ; மதியம்—சோறு, சாம்பார், பொரியல் ; இரவு—சப்பாத்தி, ஆட்டு இறைச்சி, குருமா.

திங்கள் காலை—எலுமிச்சை சாதம் ; மதியம்—சோறு, சாம்பார், பொரியல் ; இரவு—சோறு, சாம்பார், ரசம், மோர், காய்கறி.

செவ்வாய் காலை—இட்டலி ; மதியம்—சோறு, சாம்பார், பொரியல் ; இரவு—சோறு, சாம்பார், ரசம், மோர், காய்கறி.

புதன் காலை—ஊத்தப்பம் அல்லது தோசை ; நண்பகல்—சோறு, சாம்பார், பொரியல் ; இரவு—சோறு, சாம்பார், ரசம், மோர், காய்கறி மற்றும் ஒரு அவித்த முட்டை.

வியாழன் காலை—இட்டலி, வடை ; மதியம்—சோறு, சாம்பார், பொரியல் ; இரவு—சோறு, சாம்பார், ரசம், மோர், காய்கறி.

வெள்ளி காலை—உப்புமா ; மதியம்—சோறு, சாம்பார், பொரியல் ; இரவு—சோறு, சாம்பார், ரசம், மோர், காய்கறி.

சனி காலை—எலுமிச்சை சாதம் ; மதியம்—சோறு, சாம்பார், பொரியல் ; இரவு—சோறு, சாம்பார், ரசம், மோர் காய்கறி.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, அமைச்சரவர்களின் பதிலிலிருந்து ஒரு நாள் மட்டும் தான் இறைச்சி வழங்கப்படுவதாகத் தெரிகிறது ; வாரத்திற்கு 2 அல்லது 3 நாட்கள் இறைச்சி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இதற்கு முன்பு அந்த மாணவர்கள் இறைச்சியையே பார்க்கவில்லை. இப்போதுதான் அதை பார்க்க வைத்திருக்கிறோம்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, இறைச்சி, முட்டை அதிகம் போடவில்லை ; புதிதாக அவர்கள் இறைச்சியைப் பார்ப்பதால் ஆசையாக இருக்கும் ; ஆகையால் அரசாங்கத்தின் நிதி பட்டு வாரத்திற்கு இரண்டு முறையாவது மாணவர்களுக்கு இறைச்சி, முட்டை வழங்கப்படுமா ?



1978 மார்ச் 8]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, மாணவர்கள் வாரத்தில் ஒருநாள் மட்டன் மட்டும்தான் கேட்டார்கள். இந்த அரசு மட்டன் மட்டும் கொடுக்கவில்லை ; ஒரு நாள் முட்டையும் சேர்த்துக் கொடுக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மாணவர்களுக்கு இறைச்சி கொடுக்கப்பட்டதா ? அது சம்பந்தமான குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மட்டன் தரவேண்டுமென்று ஆணை எதுவும் பிறப்பிக்கவில்லை. ஆனால் 1975-76-ல் மாணவர்கள் கோரிக்கையை ஏற்று சில நாட்கள் மட்டன் கொடுக்கப்பட்டது. பிறகு அது தொடர்ந்து நிறுத்தப்பட்டது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லுபோது வெறும் சோறும், சாம்பார், பொரியல், ரசம் என்று சொன்னார்கள், மாணவர்களுக்கு மீன், முட்டை, பன்றி இறைச்சி, கறி போன்ற உணவு வகைகளைக் கொடுத்து அவர்களைத் தெம்பூட்டும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, நான் படித்த பட்டியலில் முட்டையும் மட்டனும் இருக்கிறது. அவர்கள் சரியாகக் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். மாணவர்களுக்குத் தெம்பூட்டும் வகையில்தான் இந்த புதிய அரசு இந்தப் புதிய திட்டத்தை உருவாக்கி இருக்கிறது.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் விடுதியிலும் முட்டை, கறி கொடுக்கப்படுகிறதா ? இல்லை என்றால் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் இந்த மட்டன், முட்டை கொடுப்பதை விரிவுபடுத்தும் எண்ணம் இருக்கிறது, அதைப் பரிசீலித்து நிறைவேற்றுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவரவர்களே, அரிசன நல இலாகா நடத்துகின்ற விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்குச் சாதாரணமாக வாய்ப்புண் போன்ற சில நோய்களால் பாதிக்கப்படுகிறார்கள். அதற்குக் காரண சத்துள்ள உணவு அவர்களுக்குக் கொடுக்கப்பட அதோடு அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அர வைட்டமின் வில்லை.

உதவிப் பணமும் மிகவும் குறைவாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இப்போது இருக்கின்ற அவசியப் பண்டங்களின் விலைவாசியைப் பார்க்கின்றபோது அரசு கொடுக்கின்ற அந்த உதவித் தொகை போதாத காரணத்தினால் இன்னும் மானியத்தைக் கூட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே 1948ஆம் ஆண்டு முதல் 1977ஆம் ஆண்டு வரை படிப்படியாக மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவனுக்கு உணவுச் செலவுக்கு வழங்கப்பட்ட தொகை ரூ. 65 தான். இப்போது புதிய அரசு பொறுப்பேற்ற 6, 7 மாதத்தில் ரூ. 15 ரூபாயைக் கூட்டிக் கொடுத்திருக்கிறது. சென்னையில் முன்பு ரூ. 65. இப்போது 80 ரூபாயாகக் கொடுக்கிறோம். வெளியூர்களில் முன்பு 55 ரூபாய். இப்போது 65 ரூபாய் கொடுக்கிறோம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், மட்டன் முட்டை, சோறு, சாம்பார் என்று அமைச்சரவர்கள் கூறும்போது மிகவும் ருசியாகத்தான் இருக்கிறது. ஆனால் அந்த மாணவர்கள் எந்த அளவுக்குச் சாப்பிடுகிறார்களோ அந்த அளவுக்குப் போடுகிறார்களா அல்லது அளவுச் சாப்பாடுதான் போடப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கேட்பதற்கு மட்டும் ருசியாக இல்லை. சாப்பிடுவதற்கும் ருசியாகத்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நாள் அந்த விடுதிக்குச் சென்று சாப்பிட்டுப் பார்த்தால் தெரியும். திருப்திகரமாகத்தான் போடப்படுகிறது.

திரு. வெ. கருணாமூர்த்தி: தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளி விடுதி மாணவர்களுக்கும் இந்த மாதிரி அசைவ உணவு வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த யோசனை பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கரு. ராம. சூரியமாணிக்கம் அம்பலம்: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்போது ஆஸ்டல்களில் கறி, முட்டை, சாம்பார் ரசம் இவை பற்றித்தான் சொன்னார்கள். மாணவர்களுக்கு மிக அவசியமான பால், தயிர், மோர் முதலியவைகளையும் சேர்த்துக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மோர் வழங்கப்படுகிறது. பால் வழங்குவது பற்றி பரிசீலிக்கலாம்.



மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போதுதான் எல்லோரும் சாப்பிட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். பசி இருந்தால் கூட பல கேள்விகள் கேட்கலாம். ஆகவே, கேள்விகளைச் சுருக்கமாக முடித்துக்கொண்டால் நல்லது.

திரு எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மட்டன், முட்டை என்று வாசித்துவிட்டு சோறு, சாம்பார், சோறு, சாம்பார் என்று சொல்லி இருந்தார்கள். அதைப் பார்க்கும்போது சோறு, சாம்பார் போடுவது மாதிரியே இருந்தது. என்றாலும் மாணவர்களுக்கு ஒரு திருப்தி தருகின்ற வகையில் ஒரு நாளைக்கு குருமா போடுவதும் இன்னொரு நாளைக்கு பிரியாணி போடுவதும் இப்படி அவர்களுக்குத் தெம்பாகப் போய் சாப்பிடுகின்ற அளவுக்கு கவர்ச்சிகரமாக அந்த உணவு வகையை மாற்றுவது நல்லது என்று தெரிவித்துக்கொள்வதோடு, இந்த சைவ உணவு, அசைவ உணவு சாப்பாட்டுக்கு எவ்வளவு செலவாகும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, சோறு, சாம்பார் என்று மட்டும் சொல்லவில்லை. இட்லி, வடை, உப்புமா, சப்பாத்தி போன்றவற்றையும் போடுவதாக நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதையும் மாண்புமிகு உறுப்பினர் கவனித்து இருக்க வேண்டும்.

திரு கெ. சொக்கலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருப்போரூர் ஒன்றியத்தில் இருக்கின்ற ஞ்தையூர் ஹரிஜனப் பள்ளியில் மூன்று மாத காலமாக பகல் உணவு போடப்படுவதில்லை என்பது பற்றி இந்த அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன்: தலைரவர்களே, கேள்வி மாணவர் விடுதியில் மட்டன் வழங்குவது பற்றி. மதிய உணவு வழங்குவது பற்றியல்ல.

## சினிமா டிக்கட்டுகள் அதிக விலைக்கு விற்பனை.

* வினா 161—திரு எஸ். கணேசன்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை நகரில் கடந்த ஓராண்டில் சினிமா டிக்கட்டுகளை அதிக விலைக்கு விற்க முனைந்து தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு கி. மனோகரன்: சென்னை நகரில் கடந்த ஆண்டில் சினிமா டிக்கட்டுகளை அதிக விலைக்கு விற்க முனைந்தவர்களில் தண்டனை பெற்றவர்கள் 1,469.

[1978 மார்ச் 8

திரு எஸ். கணேசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக்
கள்ளச் சினிமா டிக்கெட்டுகள் விற்பனையில் திரையரங்கு
நிர்வாகிகளுக்கும், அங்கே பாதுகாப்புக்காகச் செல்லுகின்ற சில
காவலர்களுக்கும் ஈடுபாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது.
ரசிகர் மன்றத்தின் தலைவர்களுக்கும் தொடர்பு இருப்பதாக
நம்பப்படுகிறது. இதுபற்றி அரசு அறியுமா ? இதன் மீது
நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் கேட்ட கேள்விக்கு என்னிடத்தில் முழுத் தகவல் இல்லை.
ஆனாலும் சில தகவல்களை அவைக்குத் தர விரும்புகிறேன்.

தமிழ் நாடு படக்காட்சி விதி 52-ஏ-யின் கீழ் உரிமம் பெற்றவர்
அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஏஜன்ட் இவர்களைத் தவிர
வேறு எவரும் படக்காட்சி டிக்கட்டுகள் விற்கவோ, கொடுக்கவோ
விற்பனைக்காக வைத்திருப்பதோ கூடாது. படக்காட்சி
கொட்டகைகளில் விற்பனை அலுவலகத்தில் மட்டும்தான் விற்கப்
பட வேண்டும். மேலும், வரிசையில் நிற்கும் நபர்களுக்குத்தான்
கொடுக்கப்பட வேண்டும்.

பொது நன்மைக்காக காட்டப்படும் காட்சிகளுக்கு
விற்பனை அலுவலகத்தைத் தவிர வெளியில் விற்க, உரிமை
வழங்கும் அதிகாரம் உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு உண்டு.

இது போதும் என்று கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கு என்னிடத்தில் பதில்
இல்லை.

## தீயணைப்பு நிலையங்கள்.

* வினா 162—திரு ரெ. வீ. சவுந்திரராஜன் : மாண்புமிகு
முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், பாபநாசத்தில்
தீயணைப்புப் படையின் பிரிவு ஒன்றை ஏற்படுத்தும் செயற் குறிப்பு
ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு கி. மனோகரன் : இல்லை.

* வினா 163—திரு கே. சுப்பிரவேலு : மாண்புமிகு முதல்
அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சீர்காழி நகரத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்த
அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு கி. மனோகரன் : சீர்காழி உள்பட 52 நகரங்
களில் தீயணைப்பு நிலையங்கள் அமைக்க தீயணைப்புத்துறை
இயக்குநரால் அனுப்பப்பட்ட பட்டியல் ஒன்று அரசின் பரிசீலனை
யில் உள்ளது.



1978 மார்ச் 8]

திரு ரெ. வீ. சவுந்திரராஜன் : சாதாரணமாக எங்கள்
பகுதியில் தீ பிடித்துக்கொண்டால் அதை பொதுமக்கள் அணைத்த
பிறகுதான் தீயணைப்புப் படை வருவது வழக்கம். ஆகவே
மிக முக்கியமான தாலுக்கா தலைநகராக பாபநாசம் இருப்
பதால் அங்கே ஒரு தீயணைப்புப் படை அமைப்பதற்கு இந்த
அரசு இனிமேலாவது ஏற்பாடு செய்யுமா ?

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு கி. மனோகரன் : அரசினர் தமது 19—3—73
ஆம் தேதிய உள்துறை ஆணை 762இல் ஓர் முதன்மைப் பட்டியலை
அங்கீகரித்துள்ளனர். இம்முதன்மை பட்டியலானது நகரின்
மக்கள் தொகை, தீ அபாயம் உள்ள இடங்கள், அருகாமையி
லுள்ள தீ அணைப்பு நிலையத்தின் தொலைவு ஆகியவற்றைக்
கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில்
உள்ள 59 நகரங்களில் 29 நகரங்களில் ஏற்கெனவே தீயணைப்பு
நிலையங்கள் நிறுவப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ள 30 நகரங்
களோடு மேலும் 22 நகரங்களின் பெயர்களையும் சேர்த்து 52
நகரங்கள் கொண்ட ஒரு புதிய பட்டியலை தயாரித்து அரசினரது
ஒப்புதலுக்கு தீயணைப்புத் துறை இயக்குநரால் அனுப்பப்
பட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு என். கிட்டப்பா : ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட
நகரங்கள் தவிர எஞ்சியுள்ள நகரங்களின் பட்டியல் இருப்பதாகத்
தெரிவித்தார்கள், அதில் எந்தெந்த ஊர்கள் அடங்கியிருக்
கின்றன ? குறிப்பாக, சீர்காழியில் தீயணைப்பு நிலையம் உரு
வாக்கப்படுமா ?

மாண்புமிகு திரு கி. மனோகரன் : அந்தப் பட்டியல் என்னிடம்
இல்லை. இப்போது. இரண்டாவது கேள்விக்குப் பதிலளிக்
கிறேன். சீர்காழி 19ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இதன்
முறை வரும்போது ஒரு தீயணைப்பு நிலையம் திறப்பதற்கு தக்க
நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

## புயலால் பாதிக்கப்பட்டவர்கள்:

* வினா 441—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு
நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;
12-11-1977ல் வீசிய கடும் புயல் காரணமாக மரணமடைந்தோர்
குடும்பத்திற்கு அளிக்கப்படும் உதவித் தொகை ரூ. 1000
என்பதை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வி
லுள்ளதா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இல்லை.

திரு. மு. அம்பிகாபதி : மோட்டார் விபத்தில் இறக்கிற
அனைவருக்கும் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. புயல்,
வெள்ளத்தால் இறந்த அனைவருக்கும் ‘தலா ஆயிரம் ரூபாய்
என்று அவர்கள் வருமானம் வருகிறவர்களா சம்பாதிக்கிறார்களா
என்று பார்க்காமல் வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா ?
எவ்வளவு பேர்கள் இறந்தார்கள் என்ற தகவலை அரசு அறி
விக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இப்போதைய முறைப்
படி தீ, வெள்ளம் இவைகளால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்கள்
குடும்பத்தின் தலைவராகவும் பொருளீட்டுபவராகவும், மிகவும்
ஏழ்மை நிலையிலும் இருந்திருந்தாலோ அல்லது நிரந்தரமான
உடல் ஊனமுற்று வேலை செய்ய இயலாத நிலையை அடைந்
தாலும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் முதல்வரின்
பொது நிவாரண நிதியில் இருந்து அளிக்கலாம் என அரசு
உத்தரவிட்டுள்ளது. இதுபோன்ற நிகழ்வுகளில் விபத்து
நடந்த 15 நாட்களுக்குள் நிதி உதவி அளிப்பதற்கான செயற்
குறிப்பினை அரசுக்கு அனுப்பும்படி மாவட்ட ஆட்சியாளர்களுக்கு
ஆணையிடப்பட்டுள்ளது. ஆனால் சமீபத்தில் ஏற்பட்ட புயல்
வெள்ளத்தினால் உயிரிழந்தவர்கள் குடும்பத்தின் பொருளீட்டுப
வர்களாக இருந்தால் அக் குடும்பத்திற்கு ரூ. 1,000 மட்டும்
முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க மாவட்ட
ஆட்சித் தலைவரே அனுமதி வழங்கலாம் என்று நிதித் துறை
ஆணை பிறப்பித்துள்ளது.

ஆனால் திரு. அம்பிகாபதி கேட்ட கேள்வி எல்லோருக்கும்
வழங்கப்படுமா என்பதாகும். அது இப்போது சாத்தியமில்லை
என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சதாசிவம் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்
களே, இந்த வெள்ளத்தால் இறந்தவர்களின் எண்ணிக்கை என்
னுடைய தொகுதியில் மட்டும் 30 என்பதை அறிவித்துக்கொள்ள
விரும்புகிறேன். ஆனால் இந்த எண்ணிக்கையில் தொகை
கிடைத்திருப்பது 5 பேர்களுக்கு மட்டும் தான். பொருள்
ஈட்டுபவர்கள், குடும்பத்தின் தலைவன் என்கின்ற முறைகளை எல்
லாம் மாற்றி பாதிக்கப்பட்டவர்கள் ஏழை எளிய மக்கள் என்
பதை கருத்திற்கொண்டு, எல்லோருக்கும் இந்த உதவி கிடைக்க
கூடிய வழியில், ஒரு குடும்பத்திற்கு ஒருவருக்காவது இந்
தொகை கிடைக்கின்ற அளவில் அரசு நடவடிக்கை எடுக்க முன்
வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஏற்கனவே முதலமைச்ச
நிவாரண நிதியிலிருந்து யார் யாருக்கு எவ்வளவு கொடுக்கப்படு
என்பதைப்பற்றி குறிப்பிட்டுவிட்டேன். அதையொட்டி திரு. அம்
பிகாபதி அவர்கள் கேட்ட கேள்விக்கும் பதில் சொல்லி விட்டேன்



மற்றபடி இப்போது இருக்கின்ற முறைகளை மாற்றுகின்ற உத்
தேசம் தற்போது அரசிடம் எதுவும் இல்லை. தேவைப்பட்டால்
அது பற்றி பரிசீலிக்கப்படும். 30 பேர்கள் இறந்து போனார்கள்
என்றும், ஐந்து பேர்களுக்குத்தான் இந்தத் தொகை கொடுக்கப்
பட்டது என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் தந்
திருக்கிறார்கள். அதைத் தெரிந்து கொண்டு, இதில் உண்மை
என்ன என்று கண்டுபிடித்து ஆவன செய்யப்படும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : இந்தப் புயலால் பாதிக்கப்பட்ட
வர்களைப்பற்றிச் சரியான கணக்கு எடுக்கப்படவில்லை. எங்களைப்
போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அப்போது வெளியூரில்—
பொது நிறுவனங்கள் குழு சுற்றுப்பயணத்தில் இருந்தோம்.
எங்கள் பகுதியில் இரண்டு பேர் ஆற்றில் அடித்துச் செல்லப்
பட்டு இறந்து விட்டார்கள். இதற்கு எந்தவித உதவியும்
கிடைக்கவில்லை. இதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்
களிடமும் மனுக் கொடுத்திருக்கிறேன். அரசாங்க அதிகாரி
களிடமும் மனுக் கொடுத்திருக்கிறேன். அரசாங்கத்தினிட
மிருந்தோ அதிகாரிகளிடமிருந்தோ இதற்கு எந்தவிதமான
பதிலும் வரவில்லை. ஆகவே, இதைப்பற்றி விசாரித்து
உடனடியாக நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய அரசு முன்
வருமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அது பற்றி பரிசீலித்து
ஆவன செய்யப்படும் என்ற உறுதிமொழியைத் தருகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, புயல் வீசுகின்ற
நேரத்தில், சம்பாதிக்கின்றவர்களா இல்லையா என்று பார்த்து
வீசுவதில்லை. புயலால் இறந்தவர்களும், அவர்களுடைய தவறால்
இறந்துவிட வில்லை. ஆகவே, இறந்தவர்கள் அனைவருக்கும் இந்த
உதவி கிடைக்க ஆவன செய்யப்படுமா ? மேலும் இப்படி
இறந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர்கள், இதில் எத்தனை
பேர்களுக்கு இந்த உதவி வழங்கப்படுகிறது என்கின்ற விவரத்தை
அரசு தெரிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு திரு. அம்பி
காபதி அவர்கள் தெரிவித்தது ஒரு புதிய தத்துவம் என்று நான்
கருதவில்லை. அது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான்.
புயல் வீசும்போது யார் என்று பார்த்து வீசுவதில்லை. அப்படி
புயலுக்கு வீசத் தெரியாது. இரண்டாவது எத்தனை பேர்கள்
மாண்டு போனார்கள் என்கின்ற செய்திக்கும் இதில் எத்தனை
பேர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது என்
கின்ற செய்திக்கும் என்னிடம் இப்போது விவரம் இல்லை. தனி
யாக இதற்குக் கேள்வி போட வேண்டும்.

[1978 மார்ச் 8

* வினா 442—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாக வீடிழந்தவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அதற்குப் பட்டுவாடா செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் :

(அ) 2,84,815 குடிசைகள்.

(ஆ) 6—3—1978 வரை ரூ. 5,63,82,300.

திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணம் விரைவாக கொடுக்கப்பட வேண்டும் என்று அதிகாரிகள் மிக அவசர அவசரமாகச் செயல்பட்டதின் காரணமாக உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த உதவி கிடைக்காமலும், பாதிப்பு இல்லாதவர்கள் பெரும்பான்மையோர் இந்தப் பலனை பெற்றதும் அரசுக்குத் தெரியுமா? இதுபற்றி புகார்கள் வந்தனவா? அப்படியானால் அவை மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அரசுக்கு இப்படிப்பட்ட புகார்கள் வரவில்லை. புகார் இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து தான் வந்திருக்கிறது. அதை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : வீடு இழந்தவர்களுக்கு 200 ரூபாயும், துணிமணி இழந்தவர்களுக்கு 300 ரூபாயும் கொடுக்கப்படும் என்று அரசு அறிவித்து இருந்தும், இதிலுள்ள முழுத் தொகையும் சிதம்பரம் வட்டத்திலும், நெல்லிக்குப்பம் பகுதியிலும் கொடுக்கப்படவில்லை. இதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்திருக்கிறேன். இதைப்பற்றி அரசு கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு கோவிந்தராசன் அவர்கள் இது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இந்த புகார் தரப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அவருக்கு மட்டும் தரப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராசன் அவர்கள் என்னிடத்திலும் மனு தந்திருக்கிறார்கள். அதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1978 மார்ச், 8]

[முற்பகல் 9-20]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாக வீடு இழந்தவர்கள் மொத்த எண்ணிக்கையை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே, தாலூகா வாரியாக, எந்தெந்த தாலூகாவிலே எவ்வளவு பேர்கள் வீடுகள் இழந்தார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ? அதைப் போல், தாலூகா வாரியாக எவ்வளவு தொகை பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : என்னிடம் இருக்கின்ற குறிப்பு அடித்துச் செல்லப்பட்ட குடிசைகள் எண்ணிக்கை; எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது என்பதைப் பற்றிய எண்ணிக்கை. அதைத் தவிர, மற்றத் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, புயலால் பாதிக்கப்பட்ட கைத்தறித் தொழிலாளர்கள் எத்தனை பேர் ? அவர்களுக்கு என்ன நிவாரணம் கொடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சிவசாமி அவர்கள் ஒரு தனிக் கேள்வி போட்டால் உதவியாக இருக்கும்.

## விற்பனை வரி விதிப்பு.

* வினா 443—

திரு. எஸ். ஜே. இராமசாமி :

திரு. என். கிட்டப்பா :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விற்பனை வரியை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக எக்சைஸ் தீர்வை விதிப்பது குறித்து மத்திய அரசு நமது மாநில அரசை கருத்து ஏதேனும் கேட்டு இருந்தார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தின் அமைச்சர்களிடையே இந்தச் விற்பனை வரியை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக எக்சைஸ் வரியைப் போடலாம் என்ற ஒரு பேச்சு அடிபட்டுக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி என்ன என்று கேட்டதற்கு, அதை இந்தச் சர்க்கார் ஆதரிக்க வில்லை என்று சொன்னார். ஆனால், அவர்கள் அப்படிச் சொல் வதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவர்கள் ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றிய காரணத்தை நான் இங்கே தெரிவிக்க வேண்டுமென்று விரும்பவில்லை. நம்மைப் பொறுத்தவரையில் நம்முடைய நிலைமையை மத்திய சர்க்காருக்கு விளக்கியிருக்கிறோம். அதோடு, பொதுவாக மத்திய அரசு, மாநில அரசு உள்ளாட்சி மன்றங்களுக்கு விதிக்கும் மறைமுக வரிகளின் தற்போதைய அமைப்பைப் பற்றி ஆராய்ந்து, இந்த வரிகளை சீரமைப்பது பற்றி அரசுக்கு எடுத்துக் கூறுவதற்கு 1976-லே காஷ்மீர் மாநிலத்தின் ஆளுநராக இருந்த திரு. எல். கே. ஜா அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு தனது பரிந்துரையை இந்தியத் துணைக் கண்ட சர்க்காருக்கு தந்திருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ். ஜே. இராமசாமி அவர்கள் எடுத்துச் சொன்னது போல், விற்பனை வரியை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக எக்சைஸ் வரியைப் போடுவது குறித்து பல செய்திகள் பத்திரிகை களிலே வெளிவந்திருக்கிறது. எனவே, விற்பனை வரியை எடுத்து விடுவதற்கான ஒப்புதலை நமது அரசு அளிக்காது என்பதற்கு நமது நிதி அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பல முறை இந்த உறுதியை இந்த அரசு அறிவித்திருக்கிறது என்பது மட்டுமல்ல. முறை யாக மத்திய சர்க்காருக்கு இந்த அரசு எடுத்துச் சொல்லியிருக் கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, இப் போது நமது மாநிலத்தின் நிதி நெருக்கடியைப் பற்றி எல் லோரும் உணர்ந்திருக்கிறார்கள். இந்த நிதி வசதியைப் பெருக்கு வதற்கு, மத்திய அரசாங்கத்தில் எந்த அளவிற்காவது நிதி பெற்றுத் தரக்கூடிய அளவிற்கு நமது அரசு என்ன முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் என்னுடைய கேள்வி.





மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவரது கேள்வி அது அவர் போட்ட கேள்வி, வல்ல என்று நான் கருதுகிறேன். எக்சைஸ் டியூடி கொண்டு வரு சேல்ஸ் டாக்சை மாற்றிவிட்டு, ஒரு யோசனை சொல்லிக் கொண் வதற்கு மத்திய சார்க்கார் இந்த அரசின் கருத்து என்னவென்று டிருக்கிறது, இதைப் பற்றி கேள்வி போட்டிருக்கிறார். கேட்டார். இப்போது புதுக் அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

## மின் வாரிய ஊழியர்கள் இடமாற்றம்.

* வினா 444—

திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மின் வாரியத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி காலத்தில் ஒரு. இடத்தில் மூன்று ஆண்டு காலம் நிலையாகப் பணி புரிந்த பிறகு தான் விருப்ப மாற்றுதலுக்கு விண்ணப்பம் செய்யலாம் என ஆணை பிறப்பித்து உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதுபோன்ற விண்ணப்பங்களை இந்த அரசில் பரிசீலனை செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) இல்லை. மின் வாரிய பணியாளர்களை இடமாற்றம் செய்வது மின் வாரியத்தின் அதிகாரத்திற்குட்பட்டது.

திரு. அ. செல்லப்பா : மூன்று ஆண்டுகளுக்கு மேல், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கூட, கோவையைச் சார்ந்தவர்கள் தஞ்சா வூரிலும், தஞ்சையைச் சேர்ந்தவர்கள் கோவையிலும் பணியாற் றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அவர்களை அவர்களுடைய சொந்த மாவட்டத்திற்கு மாற்ற அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு : திரு. ச. இராமச்சந்திரன் மின் வாரியம் என்பது தனி அமைப்பு. அதனால் அதனுடைய தொழிலாளர்களை மாற்றுவது சம்பந்தமாக அரசு எந்தவித ஆணையும் பிறப்பிக்க முடியாது. மின் வாரியத்தில் 1976 ஆம் ஆண்டு அளவில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஓரிடத்தில் பணியாற்றியவர்களை பல்வேறு

(1978 மார்ச் 8

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தின் அமைச்சர்களிடையே இந்தச் விற்பனை வரியை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக எக்சைஸ் வரியைப் போடலாம் என்ற ஒரு பேச்சு அடிபட்டுக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி என்ன என்று கேட்டதற்கு, அதை இந்தச் சர்க்கார் ஆதரிக்க வில்லை என்று சொன்னார். ஆனால், அவர்கள் அப்படிச் சொல்வதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவர்கள் ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றிய காரணத்தை நான் இங்கே தெரிவிக்க வேண்டுமென்று விரும்பவில்லை. நம்மைப் பொறுத்தவரையில் நம்முடைய நிலைமையை மத்திய சர்க்காருக்கு விளக்கியிருக்கிறோம். அதோடு, பொதுவாக மத்திய அரசு, மாநில அரசு உள்ளாட்சி மன்றங்களுக்கு விதிக்கும் மறைமுக வரிகளின் தற்போதைய அமைப்பைப் பற்றி ஆராய்ந்து, இந்த வரிகளை சீரமைப்பது பற்றி அரசுக்கு எடுத்துக் கூறுவதற்கு 1976-லே காஷ்மீர் மாநிலத்தின் ஆளுநராக இருந்த திரு. எல். கே. ஜா அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு தனது பரிந்துரையை இந்தியத் துணைக் கண்ட சர்க்காருக்கு தந்திருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ். ஜே. இராமசாமி அவர்கள் எடுத்துச் சொன்னது போல், விற்பனை வரியை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக எக்சைஸ் வரியைப் போடுவது குறித்து பல செய்திகள் பத்திரிகைகளிலே வெளிவந்திருக்கிறது. எனவே, விற்பனை வரியை எடுத்துவிடுவதற்கான ஒப்புதலை நமது அரசு அளிக்காது என்பதற்கு நமது நிதி அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பல முறை இந்த உறுதியை இந்த அரசு அறிவித்திருக்கிறது என்பது மட்டுமல்ல. முறையாக மத்திய சர்க்காருக்கு இந்த அரசு எடுத்துச் சொல்லியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, இப்போது நமது மாநிலத்தின் நிதி நெருக்கடியைப் பற்றி எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். இந்த நிதி வசதியைப் பெருக்குவதற்கு, மத்திய அரசாங்கத்தில் எந்த அளவிற்காவது நிதி பெற்றுத் தரக்கூடிய அளவிற்கு நமது அரசு என்ன முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் என்னுடைய





மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவரது கேள்வி அது வல்ல என்று நான் கருதுகிறேன். அவர் போட்ட கேள்வி, சேல்ஸ் டாக்சை மாற்றிவிட்டு, எக்சைஸ் டியூடி கொண்டு வருவதற்கு மத்திய சார்க்கார் ஒரு யோசனை சொல்லிக் கொண்டிருக்கிறது, இதைப் பற்றி இந்த அரசின் கருத்து என்னவென்று கேட்டார். இப்போது புதுக் கேள்வி போட்டிருக்கிறார். அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

## மின் வாரிய ஊழியர்கள் இடமாற்றம்.

* வினா 444—

திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மின் வாரியத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி காலத்தில் ஒரு இடத்தில் மூன்று ஆண்டு காலம் நிலையாகப் பணி புரிந்த பிறகு தான் விருப்ப மாற்றுதலுக்கு விண்ணப்பம் செய்யலாம் என ஆணை பிறப்பித்து உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதுபோன்ற விண்ணப்பங்களை இந்த அரசில் பரிசீலனை செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) இல்லை. மின் வாரிய பணியாளர்களை இடமாற்றம் செய்வது மின் வாரியத்தின் அதிகாரத்திற்குட்பட்டது.

திரு. அ. செல்லப்பா : மூன்று ஆண்டுகளுக்கு மேல், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கூட, கோவையைச் சார்ந்தவர்கள் தஞ்சாவூரிலும், தஞ்சையைச் சேர்ந்தவர்கள் கோவையிலும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அவர்களை அவர்களுடைய சொந்த மாவட்டத்திற்கு மாற்ற அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு : திரு. ச. இராமச்சந்திரன் மின் வாரியம் என்பது தனி அமைப்பு. அதனால் அதனுடைய தொழிலாளர்களை மாற்றுவது சம்பந்தமாக அரசு எந்தவித ஆணையும் பிறப்பிக்க முடியாது. மின் வாரியத்தில் 1976 ஆம் ஆண்டு அளவில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஓரிடத்தில் பணியாற்றியவர்களை பல்வேறு

கமிஷன் கொடுப்பதால் தான் இன்றைக்குக் கமிஷன்கள் எல்லாம் வந்து விடுகின்றன. இருந்தாலும் கூட அந்த முறையைச் சீராக்குவதற்காக எந்தத் தேதியில் இருந்து பம்ப் செட்டுகளுக்கு மனுக் கொடுத்திருக்கிருர்களோ அந்தத் தேதியின் அடிப்படையில் தான் மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்ற விதி மின்சார வாரியத்திலிருந்து பிறப்பிக்கப்படவிருக்கிறது. ஆகவே, கீழ் மட்டத்தில் இருக்கும் அதிகாரியோ, பணியாளரோ இப்போது இருக்கும் பல்வேறு விதி முறைகளைப் பயன்படுத்திக் கொண்டு மின் இணைப்புக் கோருகிறவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு செயல்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-30]

இரண்டாவதாக பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் வழங்குவதற்குப் போதுமான மெட்டிரியல்ஸ், சாமான்கள் உரிய நேரத்தில் வாங்கி வைக்காத காரணத்தாலேயும் இப்படிப்பட்ட நிலைமை வருகிறது. உரிய காலத்திலே அவைகளை வாங்கி வைப்பதற்குத் தனி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மூன்ருவதாக அவர்கள் போடுகிற பம்பு செட்டுகளுக்கு அதி மான மின்சாரத்தைப் பயன்படுத்துகிற அளவில் ஹார்ஸ் பவரை அதிகப்படுத்திக் கொள்கிருர்கள் என்று சொன்ஞர்கள் அப்படிப்பட்ட புகார் ஏதேனும் வருமாஞல், அது பற்றியும் சர்ப்ரைஸ் செக்ஸ் மூலமும் இத்தகைய தவருன முறையில் பயன் படுத்துகிறவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். லஞ்ச ஓழிப்பு என்பு பொது மக்களும் விழிப்போடு இருக்க வேண்டிய காரியம் ஆகுப்

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, மின் துறையிலே அரசு அச்சகம் இருந்தும் கூ அங்கே அச்சடிக்காமல் வேறு தனியார் துறைகளிலே அச்சடிக்க படுவதன் காரணமாகவும், மின் துறையிலே பல்புகள் தயாரிக்க கூடிய துறை இருந்தும் பல்புகளை வெளியே வாங்குவதன் காரண மாகவும் இப்படிப்பட்ட பலவித தவறுகள் ஏற்படுகின்றன என் சொல்லப்படுகிறது. ஆகவே, அவைகளை நீக்குவதற்கான முன யிலே அரசே, அவைகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மின் துறையி இருக்கிற அச்சகம் மின் துறையின் தேவைக்குப் போதுமானதல்— மின்சார வாரியம் மின்சாரத்தை உற்பத்தி செய்து வழங்க [illegible] தவிர பல்புகளை உற்பத்தி செய்ய வேண்டியது இல்லை;



## மணிமுத்தாறு பாசனத் திட்டம்.

*வினு—446 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :— மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மணிமுத்தாறு பக்கமுள்ள முக்கவர் பக்கத்தில் வேறு பாசனத்திற்கு மேலும் ஒரு தனிக்கால் ஏற்படுத்தியதால் முக்கவர் பாசன விவசாயம் தீய்வு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தீய்வு ஏற்படுவதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) மணிமுத்தாறு பக்கமுள்ள முக்கவர் பக்கத்தில் வேறு பாசனத்திற்காக இதுவரை மேலும் ஒரு தனிக்கால் வெட்டப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே மூன்று விதமான கால்வாய்கள் போய்க் கொண்டு இருக்கின்றன. இப்போது நான்காவது கால்வாய் என்ற முறையில் தண்ணீர் திருப்பி விடப்படுகிறது. தவருன தகவலை மந்திரிக்குக் கொடுத்திருக்கிருர்கள். ஆகவே, மந்திரி அவர்கள் மீண்டும் சரியான தகவலை அறிந்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தவருன தகவல் அல்ல. திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு பக்கமுள்ள முக்கவர் பக்கத்தில் வேறு பாசனத்திற்கு மேலும் ஒரு தனிக்கால் வெட்டப்பட வில்லை என்று சொன்னேன். பெருங்கால் வாய்க்காலின் குளத்துப் பாசனமான குட்டிக்கரடி குளத்திற்கு நேரடிப் பாசனத்தின் மூலம் தண்ணீர் கொடுப்பதற்காக முக்கவரின் தள மட்டத்தை திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருங்கால் குளத்துப் பாசனத்தார்கள் ஆகியோரின் ஒப்புதலின் பேரில் 1 அடி உயர்த்தப்பட்டுள்ளது. இதனுல் முக்கவருக்குக் கீழுள்ள பாசனம் இதுவரை பாதிக்கப்படவில்லை.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்.

---

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறாவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத் தொடர்.

---

1978 மார்ச் 6, 7, 8, 9, 10 ஆம் நாட்கள்.

(தொகுதி 14— எண்கள் 1 முதல் 5).

## உள்ளடக்கம்

### திங்கட்கிழமை, 1978, மார்ச் 6.

---


| | பக்கங்கள். |
|---|---|
| (i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும் .. .. .. .. | i—vi |
| (ii) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. | vii |
| (iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர் பட்டியல் .. .. .. | viii—xvi |
| 1. வினாக்கள்—விடைகள் .. .. .. | 1—36 |
| 2. தகவல் கோரல்— | |
| முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும் இலாக்காக்கள் தொடர்பான கேள்விகள் எடுத்துக் கொள்ளப்படாதது குறித்து. | 37—41 |
| 3. அமைச்சரின் அறிக்கை— | |
| மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதம் குறித்து .. .. | 42—4 |

பக்கங்கள்.

## புதன்கிழமை, 1978, மார்ச் 8.


1. வினாக்கள்—விடைகள் .. .. .. 445—4

2. தகவல் கோரல்—

அரசிதழ் பதிவில்லா ஊழியர்களின் வேலை நிறுத்தம் குறித்து .. .. .. 485—49

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—

இராமநாதபுரம் மாவட்டத்தில் பதவி இறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்களை மீண்டும் தமிழாசிரியர் பதவி புரிய வேண்டி தலைமைச் செயலகத்திற்கு முன்பு நடக்கவிருக்கும் உண்ணா நோன்பு குறித்து .. .. .. .. 491—49

4. அமைச்சரின் அறிக்கைகள்—

(அ) 9-1-1978ஆம் நாளன்று ஒரு துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சரின் திருத்த அறிக்கை .. .. .. .. 49

(ஆ) அரசிதழ் பதிவில்லா ஊழியர்களின் கோரிக்கைகளை அமைச்சரவை பரிசீலிக்க இருப்பது குறித்து பொதுப் பணித் துறை அமைச்சரின் அறிக்கை 575

5. கவன ஈர்ப்பு—

முதுகுளத்தூர் தாலுகா, சாயல்குடி கிராமம், காந்தி நகர், வி. வி. ஆர். காலனியில் வீடுகள் தீப்பற்றி எரிந்ததால் ஏற்பட்ட சேதம் குறித்து .. .. .. 492—94

6. 1978-79ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்—

(அ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் .. .. ..
(ஆ) கோரிக்கை எண் 20—வேளாண்மை ..
(இ) கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. ..
} 494—575

7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 576




பக்கங்கள்.

## வியாழக்கிழமை, 1978, மார்ச் 9,


1. வினாக்கள்—விடைகள் .. .. .. 627—668

2. தகவல் கோரல்—

கவன ஈர்ப்பு அறிவிப்பு எடுத்துக்கொள்ளப் படாதது குறித்து .. .. .. 668—669

3. கவன ஈர்ப்பு—

ஏற்றுமதி செய்யும் பருத்தித் துணியின் அளவினை நிர்ணயித்து பிறப்பிக்கப்பட்ட ஆணையும், அதன் விளைவுகளும் குறித்து. 669—671

4. அரசினர் தீர்மானம்—

தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு தேர்தல் .. .. .. .. 671—672

5. அறிவிப்பு—

தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்கு தேர்தல் .. .. .. .. 672—673

6. 1978-79ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்— (தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 29—தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் ..
(ஆ) கோரிக்கை எண் 33—வீட்டுவசதி ..
(இ) கோரிக்கை எண் 49—பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு ..
} 673—770

7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் .. 770

பக்கங்கள்.

**வெள்ளிக்கிழமை, 1978, மார்ச் 10**


1. வினாக்கள்—விடைகள் .. .. .. 889—927

2. தகவல் கோரல்—

(அ) பெரியார் அஞ்சல்தலை வெளியிடுவதில் தாமதம் குறித்து .. .. .. 928—930

(ஆ) வினா விடை நேரம் முடிந்தவுடன் எதிர் கட்சித் தலைவர் எழுப்பிய பிரச்சினை குறித்து .. .. .. .. 929—930

3. அறிவிப்பு—

பேரவை அலுவல் குறித்து .. .. 930—931

4. 1978-79ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும். 931—939

(அ) கோரிக்கை எண் 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன .. } 941–1047

(ஆ) கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. }

5. ஒழுங்கு பிரச்சினை—

கோட்டை நுழைவாயில்களில் நிறுத்தப் பட்டிருக்கும் வெளி மாநில காவலர் உறுப்பினர்களைத் தடுத்ததாகக் கூறப் படுவது குறித்து .. .. .. 940—941

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 1048


## அகர வரிசைத் தொகுப்பு அட்டவணை (Index)

### பயன் படுத்தும் முறை.

இவ்வட்டவணை அகர வரிசைப்படி அமைக்கப் பெறுகிறது. முக்கியத் தலைப்புகள் ஓரங்களிலிருந்து அச்சடிக்கப்பெறுகின்றன. துணைத் தலைப்புகள் முக்கியத் தலைப்புகளிலிருந்து சற்று உள்ளடங்க அச்சிடப் பெறுகின்றன.

வினாக்கள் தவிர, மற்ற நடவடிக்கைகளைக் குறித்த பல்வேறு குறிப்புகள் யாவும், பெயர்கள் உள்ளிட்ட வெவ்வேறு முக்கியத் தலைப்பின் கீழ் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கத்தினை அடுத்து அடைப்புகளுக்குள் அச்சிடப்பெறுகின்றன. எடுத்துக் காட்டாக, (தீ) என்று போடுவது தீர்மானத்தையும், (க. ஈ.) என்று போடுவது கவன ஈர்ப்பையும், (ஒ. தீ.) என்று போடுவது ஒத்தி வைப்புத் தீர்மானத்தையும், (அ) என்று போடுவது அறிக்கையையும் குறிக்கும்.

இத்தகைய குறிப்புகள் எதுவும் பெற்றிராத பொருள் விளக்கம் வினாக்களைச் சுட்டும் எனினும், சட்ட முன்வடிவுகள், நிதி அலுவல்களைப் பொறுத்தவரையில் சம்பந்தப்பட்ட பொருள் விளக்கமே அவற்றைத் தெளிவாக்கும்.

எல்லாச் சட்ட முன்வடிவுகளும் ''சட்ட முன்வடிவு'' என்ற முக்கியத் தலைப்பின் கீழ் அகர வரிசைப்படி முறைப்படுத்தப் பெறுகின்றன.

குழுக்கள், மன்றங்கள், வாரியங்கள், உள்ளாட்சிகள் போன்ற அமைப்புக்கள் அனைத்தும், 'குழு(க்கள்)', 'மன்றம்(கள்)' 'உள்ளாட்சி(கள்)' ஆகிய முக்கியத் தலைப்புகளின் கீழ் தொகுக்கப் பெறுகின்றன.

பள்ளிகள், கல்லூரிகள், மாநாடுகள், துறைமுகங்கள், ஆலயங்கள் குறித்த பல்வேறு விரிந்த பொருள்களும், அத்தகைய முக்கியத் தலைப்புகளின் கீழேயே அகர வரிசைப்படி காட்டப் பெறுகின்றன.

பேரவை முன் வைக்கப்பெறுகின்ற ஏடுகளின் பக்கங்கள் இத் தலைப்பின் கீழ் கொடுக்கப் பெறுகின்றன.

தலைவர் மற்றும் துணைத் தலைவர், மாற்றுத் தலைவர் ஆகியோரின் தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும் ''தலைவர்'' என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தப் பெறுகின்றன.

அகர வரிசைத் தொகுப்பு அட்டவணையில் பயன்படுத்தப் பெற்றுள்ள சில சுருக்கங்களின் விளக்கப் பட்டியல் ஒன்று கீழே கொடுக்கப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| அ | : | அறிக்கை. |
| அறிவி. | : | அறிவிப்பு. |
| அ.வி. | : | அரைமணி விவாதம். |
| கு.வி. | : | குறுகிய கால விவாதம். |

| | | |
|---|---|---|
| பொ. வி. | : | பொது விவாதம். |
| ஆ. உ. | : | ஆளுநர் உரை. |
| உ. பி. | : | உரிமைப் பிரச்சினை. |
| ஒ. பி. | : | ஒழுங்குப் பிரச்சினை. |
| க. ஈ. | : | கவன ஈர்ப்பு. |
| க. ஈ. அ. | : | கவன ஈர்ப்பு அறிக்கை. |
| ச. அ. நி. | : | சட்ட முன்வடிவின் அறிமுகநிலை. |
| ச. ஆ. நி. | : | சட்ட முன்வடிவின் ஆய்வு. நிலை—இந்நிலையில், (1) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பெறும் தீர்மானம், (2) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமென்ற திருத்தம். (3) சுற்றுக்கு அனுப்பப்பெறுவதற்கான திருத்தம். (4) ஆய்வு/கூட்டாய்வுக் குழு அறிவித்தபடி ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கான தீர்மானம். (5) ஆய்வு/கூட்டாய்வுக் குழுவிற்கு மீண்டும் அனுப்புவதற்கான திருத்தம் முதலியன. |
| ச. பிரி. ஆ. | : | சட்ட முன்வடிவு—பிரிவுவாரியாக ஆய்தல். |
| ச. பே. | : | சட்டமன்றப் பேரவை. |
| ச. மே. | : | சட்டமன்ற மேலவை. |
| த. கோ. | : | தகவல் கோரல். |
| த. வி. | : | தன்னிலை விளக்கம். |
| தீ. | : | தீர்மானம். |
| உ. தீ. | : | உரிமைத் தீர்மானம். |
| ஒ. தீ. | : | ஒத்திவைப்புத் தீர்மானம். |
| த. தீ. | : | தனித் தீர்மானம். |
| து. மா. கோ. | : | துணை மானியக் கோரிக்கை. |
| மி. மா. கோ. | : | மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கை. |
| பே. அ. | : | பேரவையின் அலுவல். |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்

### தமிழ்நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொது, பொது நிர்வாகம், இந்திய ஆளுகைப் பணியாளர், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சியாளர் சம்பந்தப்பட்டவை, காவல், தேர்தல்கள், பயண இசைவுச் சீட்டு, மதுவிலக்கு, நலவாழ்வு, மருந்துகள், அறநிலையத் துறை, இலஞ்ச ஒழிப்பு, தொழில் நிறுவனங்கள், பூமிதானம்—கிராமதானம், முன்னாள் இராணுவத்தினர், சுரங்கம்-கனிவளம், ஊரகத் தொழில் நிறுவனத் திட்டங்கள்.

2. **மாண்புமிகு திரு. கி. மனோகரன் (நிதித் துறை அமைச்சர்)** கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—நிதி, திட்டம், வணிகவரிகள், ஆயத்துறை, வருவாய், சட்டமன்றம்.

3. **மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணி, சிறப்புச் சிறு பாசனத் திட்ட வேலை உட்பட்ட சிறு பாசனங்கள், இரும்பு—எஃகுக் கட்டுப்பாடு, மின்சாரம்.

4. **மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார்** (சட்டத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—சட்டம், நீதி மன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் சட்டம் இயற்றல், கடன் கொடுத்தல் சட்டம் இயற்றல், சீட்டு நிதிச் சட்டம் இயற்றல், நிறுவனங்கள் பதிவு.

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

*Governor of Tamil Nadu*

## THIRU PRABHUDAS PATWARI.

*Members of the Council of Ministers.*

1. THE HON. THIRU M. G. RAMACHANDRAN (Chief Minister).—Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption, Industries, Bhoodan & Gramdan, Ex-Servicemen, Mines & Minerals and Rural Industries Project.

2. THE HON. THIRU K. MANOHARAN (Minister fo Finance).—Finance, Planning, Commerical Taxes and Excise Revenue and Legislature.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister fo Public Works).—Public Works, Minor Irrigation including Specia Minor Irrigation Pogramme Works, Iron & Steel Control anc Electricity.

4. THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR (Minister for Law).—Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on money lending, Legislation on Chits and Registration of Companies.

5. THE HON. THIRU G. R. EDMUND (Minister for Food).—Food, Food Production, Co-operation, Fisheries, Registration, Forest including Cinchona, Youth Service Corps and Price Control.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN (Minister for Information and Tourism).—Information and Publicity, Film Technology. Tourism and Tourism Development Corporation and Cinematograph Act.

7. THE HON. THIRU C. ARANGANAYAGAM (Minister for Education).—Education including Technical Education, Official Language and Employment & Training.

8. THE HON. THIRU K. KALIMUTHU (Minister for Local Administration).—Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness.

9. THE HON. THIRU S. RAGHAVANANDHAM (Minister for Labour)—Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply & Drainage Board and Town Planning.

10. THE HON. THIRU P. SOUNDARAPANDIAN (Minister for Harijan Welfare).—Harijan Welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes and Bonded Labour.

11. THE HON. THIRU C. PONNAIYAN (Minister for Transport).—Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Highways and Ports.

12. THE HON. SELVI P. T. SARASWATHI (Minister for Social Welfare).—Social Welfare including Women and Children's Welfare, Animal Husbandry, Beggars' Home, Orphanages, Indian Overseas and Refugees, Evacuees and Correctional Administration.

13. THE HON. THIRU P. KOLANDAIVELU (Minister for Agriculture).—Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering Wing, Milk, Dairy Development Corporation and Operation Flood Project.

14. THE HON. THIRU K. RAJA MOHAMMED (Minister for Handlooms and Textiles).—Accommodation Control, News Print Control, Agro-Service Co-operative Societies at Block, District and Apex Level including Federation, Wakfs, Textiles, Yarn, Handloom and Khadi and Village Industries.



தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

<u>பேரவைத் தலைவர்.</u>

<u>மாண்புமிகு திரு. முனு ஆதி.</u>

பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

<u>மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.</u>

1. திரு. கே. பண்ணை சேதுராம்.
2. திரு. ஆர். முத்தையா.
3. திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா.
4. திரு. கே. கே. முத்தையா.

<u>சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.</u>

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

<u>துணைச் செயலாளர்.</u>

திரு. த. இராதாகிருஷ்ணன்.

<u>குழு அலுவலர்.</u>

திரு. ச. பாஷ்யம், பி.ஏ. (ஹானர்ஸ்).

<u>சார்புச் செயலாளர்கள்.</u>

திரு. வீ. சீதாராமன், பி.காம்.
திரு. பி.எம். பத்மனாபன் நம்பியார், பி.ஏ.
திரு. பெ. பள்ளிகொண்ட பெருமாள், பி.ஏ., பி.எல்.

<u>விவாதப் பதிப்பாளர்.</u>

திரு. கே. சுந்தரராசன்.

<u>தலைமை நிருபர்.</u>

திரு. ஜி. எஸ். அனந்தநாராயணன், பி.லிட்.

<u>எஸ்டேட் அதிகாரி.</u>

திரு. கே. பாலகுரு. பி.ஏ.

5. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீன் வளம், ஆவணப் பதிவுத் துறை, சிங்கோனு உள்பட வனங்கள், இளைஞர் அணி விலைக்கட்டுப்பாடு.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி விளம்பரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—செய்தி, விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்ப வியல், சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், திரைப்படச் சட்டம்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சியும்.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊரகக் கடன்கள், சமுதாய வளர்ச்சி.

9. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—தொழிலாளர், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு.



10. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அரிசன நலம், பிற்பட்ட வகுப்பினர், எழுதுபொருள் அச்சுத்துறை, அரசு அச்சகம், மலைவாழ் பழங்குடியினர், பிணைத் தொழிலாளர்.

11. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்கு வரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, இயக்கூர்திகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறை முகங்கள்.

12. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—மகளிர், குழந்தைகள் நலம் உள்ளிட்ட சமூக நலம், கால் நடை பராமரிப்பு, பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள், வெளியேற்றப் பட்டவர்கள் நலம், சீர்திருத்த நிர்வாகம்.

13. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மை பொறியியல் பிரிவு, அக்ரோ பொறியல் பிரிவு, பால், பால் வள திருவனம், பால் பெருக்குத் திட்டம்.

14. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (கைத்தறி ஆலைத் துணிகள் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—இடவசதிக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, கூட்டமைப்பு உள்ளிட்ட வட்டார மாவட்ட தலைமை இடம் சார்ந்த வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், வக்ப், நெசவு, நூல், கைத்தறி, கதர், கிராமத் தொழில்கள்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர் (2) |
|---|---|
| 55 காமலி, திரு. டி.கே. | மயிலாப்பூர். |
| 56 கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம. | திருவாடானை. |
| 57 கருணகிரி முத்தையா, திரு. கு. | மருங்காபுரி. |
| 58 கருணாநிதி, திரு. மு. | அண்ணா நகர், சென்னை. |
| 59 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.) |
| 60 கருணாமூர்த்தி, திரு. செ. | ஜெயங்கொண்டான். |
| 61 கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. | ஆலங்குளம். |
| 62 கலியமூர்த்தி, திரு. அனை. | [illegible] |
| 63 காத்தமுத்து, திரு. டி.பெ. | தொட்டியம். |
| 64 காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்). | திருப்பரங்குன்றம். |
| 65 காளியப்பன், திரு. பொ. | காரைக்குடி. |
| 66 காளியப்பன், திரு. ஜெ. | ஏற்காடு (ஆ.வா.) |
| 67 கிட்டப்பா, திரு. என். | [illegible] |
| 68 கிட்டு, திரு. ம.கோ. | பல்லடம். |
| 69 கிருஷ்ணன், திரு. பி.எம். | பாலக்கோடு. |
| 70 கிருஷ்ணன், திரு. செ. | கன்னியாகுமரி. |
| 71 கிருஷ்ணன், திரு. நா. | ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.) |
| 72 கிருஷ்ணன், திரு. பி. | விழுப்புரம். |
| 73 கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 74 குப்புசாமி, திரு. என். | மொரப்பூர். |
| 75 குருசாமி, திரு. ப. | ஆண்டியூர் (செ.வ.) |
| 76 குழந்தைவேலு, மாண்புமிகு திரு ப. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 77 கோதண்டராமன், திரு. வி.கே. | குடியாத்தம். |
| 78 கோதண்டராமன் என்கிற முசிறி புத்தன், திரு. பி. | முசிறி. |
| 79 கோபாலன், திரு. போ. | உதகமண்டலம். |
| 80 கோவிந்தராசன், திரு. ஏ. | நெல்லிக்குப்பம். |
| 81 கோவிந்தன், புலவர் கா. | செய்யாறு. |
| 82 கோவேந்தன், திரு. மு.பெ. | பேராவூரணி. |
| 83 சங்கரய்யா, திரு. என். | மதுரை கிழக்கு. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 84 சண்முகம், திரு. கா.ந. | லால்குடி. |
| 85 சண்முகம், திரு. ப. உ. | திருவண்ணாமலை. |
| 86 சண்முகம், திரு. ஆர். | திருத்தணி. |
| 87 சண்முகம், திரு. கூத்தகுடி, ச. | திருப்பத்தூர். |
| 88 சதாசிவம், திரு. செ. | அரவக்குறிச்சி. |
| 89 சந்திரசேகரன், திரு. ஆர். | கம்பம். |
| 90 சந்திரன், திரு. ப. | பேரணாம்பட்டு? பெரணமல்லூர். |
| 91 சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ. | தியாகராயநகர், சென்னை. |
| 92 சமரசம், டாக்டர். கே. | காவேரிப்பட்டிணம். |
| 93 சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்). | திருமங்கலம். |
| 94 சவுந்திரராஜன், திரு. ரெ.வீ. | பாபநாசம். |
| 95 சாதிக் பாட்சா, திரு. எஸ்.ஜே. | ஆயிரம்விளக்கு, சென்னை. |
| 96 சாது செல்வராஜ், திரு. கோ. | ஸ்ரீவைகுண்டம். |
| 97 சாமிக்கண்ணு, திரு. தா. | செங்கம் (செ.வ.). |
| 98 சிகாமணி, திரு. பொ. | திருவொற்றியூர். |
| 99 சிவசாமி, திரு. செ. | இளையாங்குடி. |
| 100 சிவபெருமான், திரு. மு. | ஓமலூர். |
| 101 சின்னசாமி, திரு. வ. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 102 சின்னசாமி, திரு. வி.கொ. | பவானிசாகர். |
| 103 சின்னய்யா, திரு. வீ. | குளத்தூர் (செ.வ.) |
| 104 சின்னராசு, திரு. க.இரா. | திருவெண்ணெய்நல்லூர்? திருவெண்ணெயி |
| 105 சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ. | குளித்தலை |
| 106 சுந்தரம், திரு. ப. | திருப்பத்தூர். |
| 107 சுந்தரம், திரு. மு. | சிவைகுண்டம்? மிஷிவைந்தியம். |
| 108 சுந்தரராஜன், திரு. மு. | விருதுநகர். |
| 109 சுந்தரராஜ், திரு. நா. | திருமயம். |
| 110 சுப்பராயன், திரு. என். | பனைமரத்துப்பட்டி. |
| 111 சுப்பிரமணியம், டாக்டர், திரு. சு. | உத்திரமேரூர். |
| 112 சுப்பிரமணியம், திரு. கே.ஜே. | போளூர். |
| 113 சுப்பிரமணியம், திரு. ஆர்.சி. | கடலாடி. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 114 சுப்பிரமணியம், திரு. டி. .. | ஆண்டிமடம். |
| 115 சுப்பிரமணியன், திரு. ஓ. .. | சிவகங்கை |
| 116 சுப்பிரமணியன், திரு. மா. .. | சின்னசேலம். |
| 117 சுப்பிரமணியன், திரு. வ.மு. | மானாமதுரை (செ.வ.) |
| 118 சுப்பிரவேலு, திரு. கே. .. | சீர்காழி (செ.வ.). |
| 119 சுப்பு, திரு. க. .. .. | வில்லிவாக்கம். |
| 120 சுப்புலட்சுமி, மாண்புமிகு திருமதி | மொடக்குறிச்சி. |
| 121 சுப்பையா, திரு. ச. .. .. | சங்கரநயினார் கோவில் (செ.வ.) |
| 122 சுவாமிநாஸ், திரு. அ. .. | பத்மநாபபுரம். |
| 123 செங்கோடன், திரு. கா. .. | கபிலமலை. |
| 124 செங்கோட்டையன், திரு. கு.அ. | சத்தியமங்கலம். |
| 125 செல்லப்பன், திரு. ஏ. .. | வலங்கைமான் (செ.வ.) |
| 126 செல்வராசன், திரு. அ. .. | துறைமுகம், சென்னை. |
| 127 செல்வராஜ், திரு. சீனி. .. | சமயநல்லூர் (செ.வ.). |
| 128 செல்வராஜ், திரு. மு. .. | குறிஞ்சிப்பாடி. |
| 129 சொக்கலிங்கம், திரு. கெ. .. | திருப்போரூர் (செ.வ.). |
| 130 சோமசுந்தரம், திரு. ஒ.ப. | பொள்ளாச்சி. |
| 131 சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்). | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 132 சௌந்திரராசன், திரு. கே. .. | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 சௌந்திரராஜன், திரு. மு.ரா. | பவானி. |
| 134 சௌந்திரராஜன், மாண்புமிகு திரு. திருச்சி ஆர். | ஸ்ரீரங்கம். |
| 135 ஞானசிகாமணி, திரு. தே. .. | விளவங்கோடு. |
| 136 தங்கவேலு கவுண்டர், திரு. பொ. | மேலமலையனூர். |
| 137 தங்கவேல், திரு. ரா.ச. | வால்பாறை (செ.வ.) |
| 138 தண்டபாணி, திரு. பா.க. சு. .. | காங்கேயம். |
| 139 தமிழரசன், திரு. இ. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| 140 தனசேகரன், திரு. ந. .. | தூத்துக்குடி. |
| 141 தனபால், திரு. ப. .. .. | சங்கரி (செ.வ.). |
| 142 தனுஷ்கோடி, திரு. கோ. .. | ராஜபாளையம் (செ.வ.). |



| தொடர் எண்ணும்; உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 143 தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 144 திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத் தலைவர்). | அறந்தாங்கி. |
| 145 திருவேங்கடம், திரு. பே.சு. | கலசப்பாக்கம்: |
| 146 துரை கோவிந்தராசன், திரு. (அரசாங்கத் தலைமைக் கொறடா). | திருவோணம்: |
| 147 துரைசாமி, திரு. ப. .. .. | ராசிபுரம். |
| 148 துரை முத்துசாமி, திரு. .. | சங்கரபுரம். |
| 149 துரை முருகன், திரு. .. | இராணிப்பேட்டை. |
| 150 துரைராஜ், திரு. சு.ம. .. | பொன்னேரி (செ.வ.) |
| 151 துலுக்காணம், திரு. வ. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 152 தைலப்பன், திரு. டி.எம். .. | ஒரத்தநாடு. |
| 153 நடராசன், திரு. ஆ. .. | பேரூர். |
| 154 நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 155 நல்லதம்பி, திரு. தீ.சு. .. | பார்க்டவுன், சென்னை. |
| 156 நாச்சிமுத்து, திரு. க. .. | பொங்கலூர். |
| 157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கொ. பொ. | மேட்டூர். |
| 158 நாராயணன், திரு. ரா. .. | தாரமங்கலம். |
| 159 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 160 பண்ணை சேதுராம், திரு. கே. | பெரியகுளம். |
| 161 பரமசிவன், திரு. அ.ம. .. | மேலூர். |
| 162 பரமசிவம், திரு. மொ. .. | வானூர் (செ.வ.). |
| 163 பழனிச்சாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம். |
| 164 பழனிச்சாமி, திரு. சொ.ந. .. | அவிநாசி (செ.வ.). |
| 165 பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 166 பழனியப்பன், திரு. அ.ப. .. | ஒட்டன்சத்திரம். |
| 167 பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.) |
| 168 பாண்டியன், திரு. பி.எச். .. | சேரன்மாதேவி. |
| 169 பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர். |
| 170 பாலகுருவா ரெட்டியார், திரு. வெ. | சோழவந்தான். |

உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1 அண்ணமலை, திரு. எம். .. | ஹரூர் (செ.வ.). |
| 2 அப்துல் ரஜாக், திரு. கே.எம். | ஆலந்தூர். |
| 3 அப்துல் லத்தீப், திரு. கி. .. | கடலூர். |
| 4 அப்புனு கவுண்டர், திரு. கா. | பெண்ணகரம். |
| 5 அமிர்த ராஜ், திரு. இரா. .. | திருச்செந்தூர். |
| 6 அம்பிகாபதி, திரு. மு. .. | மன்னார்குடி. |
| 7 அய்யாச்சாமி, திரு. ரா. .. | தாராபுரம் (செ.வ.). |
| 8 அரங்கசாமி, திரு. க. .. | குன்னூர் (செ.வ.). |
| 9 அரங்கநாதன், திரு. அ.க. | வேலூர். |
| 10 அரங்கநாதன், திரு. மு. .. | திருவல்லிக்கேணி. |
| 11 அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | கோயம்புத்தூர் (மேற்கு). |
| 12 அருணசலம், திரு. இரா. .. | நாமக்கல் (செ.வா.). |
| 13 அர்சுனன், திரு. வீ. .. | ஆரணி. |
| 14 அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி. |
| 15 அன்பழகன், திரு. கா. | புரசவாக்கம். |
| 16 அன்பழகன், திரு. தி. .. | நாட்ராம்பள்ளி |
| 17 ஆண்டி அம்பலம், திரு. மெ. | நத்தம். |
| 18 ஆதிசுவாமி, திரு. இரா. .. | குளச்சல். |
| 19 ஆறுமுகம், திரு. சி. .. | மதுராந்தகம். |
| 20 ஆறுமுகம், திரு. எச். ஜி. .. | பர்கூர். |
| 21 ஆறுமுகம், திரு. இல. .. | திருநாவலூர். |
| 22 ஆறுமுகம், திரு. எம். .. | சேலம்-2. |
| 23 ஆறுமுகம், திரு. த. .. | அரியலூர். |
| 24 இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 25 இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர். | திண்டிவனம். |
| 26 இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி. |
| 27 இராதா, திரு. எஸ். ஆர். .. | கும்பகோணம். |
| 28 இராமசாமி, திரு. க.ந.க. .. | கோபிச்செட்டிபாளையம். |
| 29 இராமசாமி, திரு. எஸ்.ஜே. | சோளிங்கர். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர், |
|---|---|
| (1) | (2) |
| | பெரம்பலூர் (செ.வ.). |
| 30 இரமசாமி, திரு. எஸ்.வி. .. | இராமநாதபுரம். |
| 31 இராமசாமி, திரு. டி. .. | சாத்தூர். |
| 32 இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ். ஆர். | அருப்புக்கோட்டை. |
| 33 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம்.ஜி. (முதலமைச்சர்) | செஞ்சி. |
| 34 இராமச்சந்திரன், திரு. என். | பண்ருட்டி. |
| 35 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | ஹோசூர். |
| 36 இராமச்சந்திர ரெட்டி, திரு. என். | திருவிடைமருதூர். |
| 37 இராமலிங்கம், திரு. செ. .. | தல்லி. |
| 38 இராஜாராம் நாயுடு, திரு. தே. இரா. | திருவையாறு. |
| 39 இளங்கோவன், திரு. கோ. .. | அம்பாசமுத்திரம். |
| 40 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | பரமக்குடி (செ.வ.) |
| 41 உக்கிரபாண்டியன், திரு. கா. | கூடலூர். |
| 42 உச்சி, திரு. கே. .. .. | திருத்துறைப்பூண்டி (செ. வ.). |
| 43 உத்திராபதி, திரு. பொ. .. | நாகப்பட்டிணம். |
| 44 உமாநாத், திரு. ரா. .. | ஆற்காடு. |
| 45 உய்யக்கொண்டான், திரு. கே. ஜே. | திருநெல்வேலி. |
| 46 எட்மண்ட், மாண்புமிகு திரு. க.உரொ. (அமைச்சர்). | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 47 எத்திராஜ், திரு. கி. .. | பள்ளிப்பேட். |
| 48 ஏகாம்பர ரெட்டி, திரு. .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர். |
| 49 ஐசரி வேலன், திரு. .. | எடப்பாடி. |
| 50 கணேசன், திரு. இ. .. .. | பூம்புகார். |
| 51 கணேசன், திரு. எஸ். .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 52 கண்ணன், திரு. ம. .. | ஆண்டிப்பட்டி. |
| 53 கந்தசாமி, திரு. கே. .. | திணத்துக்கடவு. |
| 54 கந்தசாமி, திரு. கா.வே. .. | |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
| --- | --- |
| (1) | (2) |
| 171 பாலன், திரு. சு. .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 172 பாலாஜி, திரு. க. .. | காஞ்சீபுரம். |
| 173 பாலுச்சாமி, திரு. அ. .. | நிலக்கோட்டை,(செ.வ.). |
| 174 புருஷோத்தமன், திரு. து. .. | சைதாப்பேட்டைசென்னை. |
| 175 புஸ்பராஜு, திரு. த. .. | ஆலங்குடி. |
| 176 பெரியசாமி, திரு. மொ. .. | மங்களூர் (செ.வ.). |
| 177 பெரியசாமி, திரு. ரா. .. | உப்பிலியாபுரம். |
| 178 பெரியசாமி, திரு. டி.பி.மு. | மதுரை மேற்கு. |
| 179 பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ.வ.) |
| 180 பெருமாள், திரு. ரா.கு. | விளாத்திகுளம். |
| 181 பொன்னுசாமி, டாக்டர் ஏ. | பெருந்துறை. |
| 182 பொன்னுரங்கம் திரு. ப. .. | இராயபுரம். |
| 183 பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்). | திருச்செங்கோடு. |
| 184 மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.). |
| 185 மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர். |
| 186 மணிமுடி, திரு. எஸ். .. | எழும்பூர், சென்னை (செ.வ.). |
| 187 மருதாசலம், திரு. க. .. | தொண்டாமுத்தூர். |
| 188 மனோகரன், மாண்புமிகு திரு. கி. (அமைச்சர்). | பாளையங்கோட்டை. |
| 189 மாணிக்கம், திரு. ஒ. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 190 மார்க்கபந்து, திரு. ரா. .. | அணைக்கட்டு. |
| 191 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ் | (நியமன உறுப்பினர்). |
| 192 மாரிமுத்து, திரு. ஏ.ஆர். .. | பட்டுக்கோட்டை. |
| 193 மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 194 முத்துசாமி, திரு. பா.க.ஒ. .. | தர்மபுரி. |
| 195 முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு. |
| 196 முத்துசாமி கரையாளர், திரு.சு. | தென்காசி. |
| 197 முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி. |
| 198 முருகேசன், திரு. கூ. சு. .. | திருவரம்பூர். |
| 199 முனிசாமி, திரு. பொ. .. | வந்தவாசி (சவ). |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
| --- | --- |
| (1) | (2) |
| 200 முனிரத்தினம், திரு. எஸ். | கும்மிடிபூண்டி. |
| 201 முனு ஆதி, திரு. மாண்புமிகு (பேரவைத் தலைவர்). | தாம்பரம், சென்னை. |
| 202 மூக்கையா தேவர், திரு. பி.கே. | உசிலம்பட்டி. |
| 203 யூசுப், திரு. யா.சை.மு. .. | ராதாபுரம். |
| 204 ரகுமான்கான், திரு. ஏ. .. | சேப்பாக்கம், சென்னை. |
| 205 ரகுராமன், திரு. வி. .. .. | புவனகிரி. |
| 206 ரகோத்துமன், திரு. கோ. | முகையூர். |
| 207 ரமணி, திரு. கு. .. .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 208 ரசாக், திரு. எம்.எம்.ஏ. .. | கடையநல்லூர். |
| 209 ராமசாமி, திரு. கோ. .. | சிவகாசி. |
| 210 ராமசாமி, திரு. து. .. .. | வெள்ளக்கோயில். |
| 211 ராமதாஸ், திரு. பி. .. | போடிநாயக்கனூர். |
| 212 ராமநாதன், திரு. சி. .. | விருத்தாசலம். |
| 213 ராமலிங்கம், திரு. இ. .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.). |
| | புதுக்கோட்டை. |
| 214 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | |
| | தலைவாசல் (செ.வ.). |
| 215 ராஜு, திரு. செ.மெ. .. | அரக்கோணம் (செ.வ.). |
| 216 ராஜு, திரு. வி.கே. .. | மதுரை மத்திய தொகுதி. |
| 217 லட்சுமிநாராயணன், திரு. என். | வாணியம்பாடி. |
| 218 லத்தீப், திரு. எம்.ஏ. .. | கரூர். |
| 219 வடிவேலு, திரு. கே. .. | திண்டுக்கல். |
| 220 வரதராஜன், திரு. என். .. | சேலம்-1. |
| 221 வரதராஜன், திரு. சௌ.வே. | வேடசந்தூர். |
| 222 வாசன், திரு. சீ.மு. .. .. | நாகர்கோயில். |
| 223 வின்செண்ட், திரு. மி. .. | கிள்ளியூர். |
| 224 விஜயராகவன், திரு. பொ. | வீரபாண்டி. |
| 225 வேங்கா கவுண்டர், திரு. பி. | சிங்காநல்லூர். |
| 226 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு திரு. ரா. | |
| 227 வெள்ளைச்சாமி, திரு. ஆ. .. | ஆத்தூர். |
| 228 வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 229 வேலுச்சாமி, திரு. ஒ.சோ. | ஒட்டபிடாரம் (செ.வ.). |
| 230 ஜகதீசன், திரு. ஆனூர். .. | செங்கல்பட்டு. |
| 231 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி. |
| 232 ஜெபமணி, திரு. ரா. .. | சாத்தான்குளம். |
| 233 ஜெயராமன், திரு. வே.இரா. | தேனி. |
| 234 ஜெயவேலு, திரு. எம்.ஏ. | காட்பாடி. |
| 235 ஜேம்ஸ் திரு. ஜே. .. .. | திருவட்டாறு. |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.**

| | |
|---|---|
| 1 மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார். | அமைச்சர். |
| 2 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். | அமைச்சர். |
| 3 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம். | அமைச்சர். |
| 4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது. | அமைச்சர். |
| **5 திரு. வி. பி. இராமன் .. ..** | **தலைமைவழக்கறிஞர்** |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகளின் அட்டவணை

---

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படியான ஆறுவது சட்டமன்றப் பேரவையின் இரண்டாவது கூட்டத்தொடர்

1978, மார்ச் 6, 7, 8, 9, 10 ஆம் நாட்கள்.

(தொகுதி 14—எண்கள் 1 முதல் 5)


பக்கங்கள்

அ

**அஞ்சல் தலை—**

பெரியார் (த.கோ.) .. .. .. .. 928—929

**அண்ணாமலை திரு. எம்.—**

பாலிடெக்னிக், தர்மபுரியில் துவக்கம் செயற் குறிப்பு .. .. .. .. 653—654

வரவு-செலவுத்திட்டம், 1978—79, வாக்கெடுப்பு: .. 251

கால்நடை வளர்ப்பு ..

சமூக நலன்

**அப்துல் லத்தீப், திரு. கி—**

வரவு-செலவுத் திட்டம், 1978—79, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள்

வேளாண்மை

வேளாண்மை குறித்த மூலதனச்செலவு } 561—562

**அம்பிகாபதி, திரு. மு—**

அரசு ஊழியர்கள், வேலைநிறுத்தம் (த.கோ.) .. .. 486

பக்கங்கள்

அ—தொடர்ச்சி.

அம்பிகாபதி, திரு. மு—தொடர்ச்சி.

நெல், அரவை மில், 'அல்லர்' பொருத்துதல் .. 895

புயலால் மரணமடைந்தோர், உதவித்தொகை .. 451

பூச்சி மருந்து, தொழிற்சாலை, மன்னார்குடி அருகில், 907

மரமேறும் தொழிலாளர்கள், காதி போர்டு மூலம் செய்யும் செலவு... .. .. .. 925—927

மீனவர்கள், தகராறுகள்.. .. .. .. 645—649

மூவாநல்லூர் குடிநீர் திட்டம் .. .. 217—218

வரவு-செலவுத் திட்டம், 1978—79, வாக்கெடுப்பு:

காலநடை வளர்ப்பு }
சமூக நலன் } 249

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் }
வீட்டுவசதி }
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச்செலவு } 674, 701—709

அய்யாசாமி, திரு. ரா—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள் }
வேளாண்மை }
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 529—530

அரங்கசாமி, திரு. க—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் }
வீட்டுவசதி .. .. .. }
பொதுச்சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. } 674

பக்கங்கள்

அ—தொடர்ச்சி

அரங்கநாதன், திரு. மு.—

கள்ளச் சாராய விற்பனையாளரிடையே ஏற்பட்ட சச்சரவு .. .. .. 244—246

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. 1010, 1043

அரசு அலுவலர்கள்—

கோரிக்கை, பரிசீலனை, (அ.) .. .. 575

தொழில்நுட்ப உதவியாளர், சம்பளம் .. .. 892—893

வேலை நிறுத்தம் (த.கோ.) .. .. .. .. 485—491

அரிசனங்கள்—

மணக்குடியில் நலத்துறை பள்ளி.. .. .. 219

அலுவலகங்கள்—

பத்திரப் பதிவு அலுவலகங்கள், வசதிகள், .. 908—910

அழகர்சாமி, திரு. சோ.—

அரசு ஊழியர்கள், வேலை நிறுத்தம் (த.கோ.) 487

அரசிதழ் பதிவு பெருத அலுவலர்கள், வேலை நிறுத்தம்.( ஒ.தீ.) .. 46—47, 61—65, 71

ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களை எந்த வரிசையில் பேச அழைப்பது என்பது குறித்து (ஒ.பி.) .. .. 58—59 108, 109

அழகர்சாமி, திரு. சோ.—தொடர்ச்சி

கூலி, குறைந்த பட்ச கூலி, கைத்தறி நெசவாளர்களுக்கு .. .. .. 920—921

வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு:

கால்நடை வளர்ப்பு .. .. .. 251
சமூக நலன் ..

பக்கங்கள்

அ— தொடர்ச்சி

அன்பழகன், திரு. க.—

கேள்விகள், முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும் இலாக்காக்கள் தொடர்பானவை, (த.கோ.) 38, 40

ஆ

ஆசிரியர்கள்—

தமிழாசிரியர்கள் உண்ணாவிரதம் (ராமநாதபுரம் மாவட்டம்) (ஒ.தீ.) .. .. .. 491—492

தமிழ் ஆசிரியர்கள் கோரிக்கை குறித்து அறிக்கை .. 242—243

தனியார் பள்ளியில் பணியாற்றுவோருக்கு மருத்துவ வசதி .. .. .. 211

பட்டதாரி ஆசிரியர்கள், பணி நிரந்தரம் .. 652—653

பொறியியல் ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளிகள், தேர்வு நிலை .. .. .. 19

வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள், வட ஆற்காடு .. .. .. .. 463

ஆண்டி அம்பலம், திரு. மெ.—

பாசன வசதி, வலையங்குளம், வட்டாரம், மதுரை மாவட்டம் .. .. .. 892

ஆலயங்கள்—

திருப்பணி, வரதராஜப்பெருமாள் ஆலயம், காஞ்சி .. .. .. 889—891

ஆறுமுகம், திரு. எம்.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

கால்நடை வளர்ப்பு சமூக நலன் .. .. 251
273—277



பக்கங்கள்

ஆ—தொடர்ச்சி

ஆறுமுகம், திரு. எஸ். ஜி.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. .. .. 329—331

ஆறுமுகம், திரு. சி.—

உறுப்பினர்கள், பாதுகாப்பு (ஒ. பி.) .. .. 940

ஆறுமுகம், திரு. மு.—

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. 932,934 967—973

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி .. .. .. பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு .. 674,677

ஆனூர் ஜெகதீசன், திரு.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

பால் வழங்கு திட்டங்கள் .. .. .. வேளாண்மை .. .. வேளாண்மை குறித்த மூலதனச்செலவு 552—555

இ

இராகவானந்தம், திரு. எஸ்.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

கைத்தறியும் நெசவுத் தொழிலும் கதர் .. 131

சமுதாயநல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன. நகர்ப்பகுதி மேம்பாடு .. .. . 1024,1032

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி .. .. .. பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு .. 673 674, 676 677, 743 744—768

பக்கங்கள்

இ—தொடர்ச்சி

**இராசமாணிக்கம், திரு. இரெ.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. 935—939, 941—944

**இராசரத்தினம், திரு. து.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன. நகர்ப்பகுதி மேம்பாடு .. .. 984—988

**இராதா, திரு. எஸ். ஆர்.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

பால் வழங்கு திட்டங்கள் ..
வேளாண்மை .. .. ..
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. .. 499, 524

**இராமச்சந்திரன் திரு. எம். ஜி.—**

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெருத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ. தீ.) .. .. 69, 85, 89, 110

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும், வீட்டுவசதி .. ..
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் ..
வழங்கல் குறித்த மூலதனச் செலவு .. 744, 745, 765—766

**இராமச்சந்திரன், திரு. ச.—**

அரசு ஊழியர்கள், கோரிக்கை பரிசீலனை, விதி 82-ன் கீழ் அறிக்கை .. .. .. 575

கள்ளச் சாராய விற்பனையாளரிடையே ஏற்பட்ட சச்சரவு (க. ஈ. அ.) .. .. 244—246

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு . 1020





பக்கங்கள்

இ—தொடர்ச்சி

**இராமச்சந்திரன், திரு. செஞ்சி ந.—**

ஊராட்சி ஒன்றியங்கள், பிரித்தமைத்தல் .. 655—657
பேருந்து, வந்தவாசி-கள்ளக்குறிச்சி .. 923—924

**இராமசாமி, திரு. எஸ். ஜே.—**

உடல் ஊனமுற்றோர், வேலை வாய்ப்பகங்களில், பதிவு செய்தோர் விவரம் .. .. 466

ஊராட்சி ஒன்றியங்கள், பிரித்தமைத்தல் .. 655—657
டிராக்டர்கள், கடன் .. .. .. 13—18

லாரிகள் போக்கு வரத்து விதிகளை மீறியதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை .. .. 227—232

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

கால்நடை வளர்ப்பு சமூக நலன் .. .. 264—267

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. 1007—1010

விற்பனை வரிக்கு பதில் எக்சைஸ் தீர்வை .. 455

**இராமலிங்கம், திரு. ஏ.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—

செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. .. .. 377

**இராமலிங்கம், திரு. செ.—**

ஆடுதுறையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி .. 210—211

**இளங்கோவன், திரு. சோ.—**

பட்டதாரி ஆசிரியர்கள், பணி நிரந்தரம் . 652—653

**இராஜா முகமது, திரு. கே.—**

கேள்விகள், முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும் இலாக்காக்கள் தொடர்பானவை, (த. கோ), 39, 40—41

இ—தொடர்ச்சி — பக்கங்கள்

**இராஜா முகமது, திரு. கே.—தொடர்ச்சி**

துணிகள், ஏற்றுமதிக் கட்டுப்பாடும் தொழிலாளர் பாதிப்பும் (க. ஈ. அ.) .. 670—671

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—
கைத்தறியும் நெசவுத் தொழிலும் கதர் .. 112—112, 147—154

ஈ

**ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.—**

தொழில்நுட்ப உதவியாளர், சம்பளம் .. 892—893

மணிமுத்தாறு அணை பராமரிப்பு ஊழியர் குடியிருப்புகள், மராமத்து .. .. 632—633

மணி முத்தாறு பாசனத் திட்டம் .. .. 461

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—
கைத்தறியும் நெசவுத் தொழிலும் கதர் .. .. .. } 113, 124—131
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. } 958—964

உ

**உச்சி திரு. கே.—**

மருத்துவமனைக் கட்டிடம், தானேரி .. .. 627—628

**உணவு தானியங்கள்—**

அரிசி ஆலைகள், 'ஷெல்லர் டைப்' அரவை முறை, 895—901
கையிருப்பு விவரங்கள் .. .. .. 636—645
நெல், அரைவை மில், 'அல்லர்' பொருத்துதல், 895



பக்கங்கள்.

உ—தொடர்ச்சி.

**உணவு தானியங்கள்—தொடர்ச்சி.**

நெல், கொள் முதல் விலை .. .. .. 635—636

**உணவு விடுதிகள்—**

உணவுப் பண்டங்கள், விலை .. .. 901—906

**உத்திராபதி திரு. பொ.—**

வரவு செலவுத் திட்டம், 1977—78, வாக்கெடுப்பு:
கால் நடை வளர்ப்பு சமூக நலம் } 277—282
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு } 934

**உமர்நாத் திரு. ரா.—**

கல்லூரிகள், செமஸ்டர் திட்டம், .. .. 914—916
குடிநீர்க் கட்டணம், திருச்சிராப்பள்ளி நகராட்சி, 23—24
சுற்றுலாவிடுதி, நாகப்பட்டினம் .. .. 650—651
பிஷப் ஹிபர் உயர்நிலைப்பள்ளி, புத்தூர், செயல் படாமை, .. .. .. 19—20

வரவு செலவுத் திட்டம், 1978—79, வாக்கெடுப்பு:
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டுவசதி .. .. .. } 747, 749, 765
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு .. .. }

**உரிமைப் பிரச்னை—**

பார்க்க—தலைவர் .. .. ..

**உள்ளாட்சிகள்—**

ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றியம், பிரித்தமைத்தல் 657
உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், பிரித்தமைத்தல் .. .. .. 657

பக்கங்கள்.

உ—தொடர்ச்சி.

**உள்ளாட்சிகள்—தொடர்ச்சி.**

உள்ளாட்சி ஒன்றியங்கள், பிரித்தமைத்தல் .. 655—657

ஊராட்சிகள் பிரித்தமைத்தல் .. .. 211—216

கிணத்துக்கடவு, பொள்ளாச்சி வடக்கு ஒன்றியங்கள், இணைத்துப் பிரித்தல் .. 657—661

பூந்தோட்டம் ஊராட்சி, பிரித்தல் .. .. 216—217

வெள்ளியக்குடி ஊராட்சி—பிரித்தல் .. 217

ஏ

**ஏடுகள்—**

பேரவை முன் வைக்கப்பெற்றவை .. .. 372—373, 576—625, 770, 1048

ஒ

**ஒத்திவைப்புத் தீர்மானம்—**

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் .. .. 46—57, 61—111

பதவி இறக்கம் செய்யப்பட்ட (ராமநாதபுரம் மாவட்ட) தமிழாசிரியர்கள் உண்ணாவிரதம். 491—492

**ஒழுங்குப் பிரச்னை—**

உறுப்பினர்கள், பாதுகாப்பு .. .. .. 940—941

ஒத்தி வைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களை எந்த வரிசையில் பேச அழைப்பது என்பது குறித்து. .. 58—60

ஓ

**ஓய்வூதியம்—**

புலவர்களுக்கு நிதி உதவி திட்டம். .. .. 665





பக்கங்கள்.

க

**கடன்கள்—**

டிராக்டர்களுக்கு .. .. .. .. 13—18

பம்பு செட்டுகள், வசூல் நிறுத்துதல், .. 10—13

மாநாடு, கடன் நிவாரண மாநாடு தீர்மானங்கள் .. 18

**கணேசன் திரு. எஸ்.—**

அரசு மருத்துவமனை, பொறையார், விரிவு படுத்துதல் .. .. .. 628—629

கூலி, குறைந்த பட்ச கூலி, கைத்தறி நெசவாளர்களுக்கு .. .. .. 920—921

கைதிகள், வெளி மாநிலத்தவர்கள். .. .. 9—10

சினிமா டிக்கட் விற்பனை, தண்டனை. .. 449

டாக்ஸிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள் சென்னை விவரம் .. .. .. 479

தூக்கு தண்டனை, ஆயுள் தண்டனை, விவரங்கள், 6—9

பால், தானியங்கி பால் விற்பனை நிலையங்கள், சென்னை .. .. .. .. 28—36

புயல் வெள்ளம் பாதிப்பு, உதவித்தொகை, .. 454

பேருந்து பயணிகள் எண்ணிக்கை எடுக்க கம்ப்யூட்டர்கள் .. .. .. .. 232—235

மூடப்பட்ட பஞ்சாலைகள், விவரம் .. 482

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. .. .. .. 318—325, 327—328

விசை சாயச்சாலை—துவங்கல் .. .. 239—242

**கந்தசாமி திரு. கா. வே.—**

கிணத்துக்கடவு, பொள்ளாச்சி வடக்கு ஒன்றியங்கள் இணைத்துப் பிரித்தல் .. .. 657—661

பக்கங்கள்.

க—தொடர்ச்சி.

**கந்தசாமி திரு கே.—**

அரிசன பின்தங்கியோர் மாணவ விடுதி, அசைவ உணவு .. .. .. 445

அலுவலர்கள். அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ. தீ.) .. 87

ஆண்டிப்பட்டி ஊராட்சி ஒன்றியம், பிரித்தமைத்தல் .. .. .. 657

உறுப்பினர்கள், பாதுகாப்பு (ஒ. பி.) .. 940

வரவு-செலவுத் திட்டம். 1978-79 வாக்கெடுப்பு:

கால்நடை வளர்ப்பு
சமூக நலன் .. .. .. } 299--302

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. 1010—1016, 1041

தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்
வீட்டுவசதி
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 721—724

**கரியமாணிக்கம் அம்பலம் திரு கரு. ராம.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. 999--1004

**கருணாநிதி திரு தாழை. மு.—**

கலப்புத் திருமணங்கள், சலுகைகள் .. 661—663

புலவர்களுக்கு நிதியுதவித் திட்டம் .. 465

**கருணாநிதி திரு. மு.—**

அஞ்சல் தலை, பெரியார் (த. கோ.) .. 928

அரசு ஊழியர்கள், வேலை நிறுத்தம் (த. கோ.) 490—491

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ. தீ.) 76—77, 102, 109



பக்கங்கள்

க—தொடர்ச்சி.

கருணாநிதி திரு. மு.—தொடர்ச்சி

ஒத்தி வைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களை எந்த வரிசையில் பேச அழைப்பது என்பது குறித்து (ஒ. பி.) 59,60

கேள்விகள், முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும் இலாக்காக்கள் தொடர்பானவை (த. கோ.) 37, 39--41

**கருணாமூர்த்தி திரு. வெ.—**

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதன செலவு } 505—508

**கலியமூர்த்தி திரு. துரை—**

தானே இயங்கும் நீரூற்றுகள், சிதம்பரம் வட்டம் 666—667

**கல்லூரிகள்—**

செமஸ்டர் திட்டம். .. .. .. 914—916

**கவன ஈர்ப்புகள்—**

கள்ளச் சாராய விற்பனையாளரிடையே ஏற்பட்ட சச்சரவு .. .. .. 244—246

தீ விபத்து, காந்தி நகர் வி. வி. ஆர் காலனி (முதுகுளத்தூர்) .. .. .. 492—494

துணிகள், ஏற்றுமதிக் கட்டுப்பாடும் தொழிலாளர் பாதிப்பும் .. .. .. 669—671

**காளிமுத்து, திரு. கா.—**

துணை வினாவிற்கு அளிக்கப் பெற்ற விடைக்கு திருத்தம் (அறி) .. .. .. 493

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. 931, 933, 934—935, 936, 937, 979, 1008, 1034—1045

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

**காளியப்பன் திரு. இரா—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டுவசதி பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 691–693

**காளியப்பன் திரு. பொ.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. 945—948

**கிட்டப்பா திரு. என்.—**

ஆட்டோ ரிக்ஷாக்கள், மீட்டர்களில் முறைகேடுகள். .. .. .. .. 480
ஆலயம், திருப்பணி, வரதராஜப் பெருமாள் ஆலயம், காஞ்சி .. .. .. 889—891
உயர்நிலைப் பள்ளி, திருமங்கலம், மாயூரம் தாலுக்கா. புதிய கட்டடம், .. 913—914
ஊராட்சி ஒன்றியங்கள், பிரித்தமைத்தல் 655—657
ஏலகிரி மலை, கோடை வாசஸ்தலமாக்குதல் 650
கடுவங்குடி சாலை பகுதி, மதகு சீரமைப்பு 665—666
பர்மா அகதிகள், தஞ்சை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரிவோர், கோரிக்கை, 924—925
பால் விற்பனை, சென்னை நகர், நடமாடும் ஊர்தி .. .. .. .. 28
பாலம், ராஜன் வாய்க்கால் பாலம், மாயூரம் ஒன்றியம் .. .. .. .. 923
பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள், அரசு விழா 462
புதிய உயர்நிலைப்பள்ளி துவங்க விண்ணப்பங்கள். 201—208
பூம்புகார் பகுதி தொல்பொருள் ஆய்வு, .. 20—22
மணக்குடியில் அரிசன நலத்துறை பள்ளி .. 219
விற்பனை வரிக்குப் பதில் எக்சைஸ் தீர்வை .. 455





பக்கங்கள்.

க— தொடர்ச்சி.

**கிருஷ்ணன், திரு. பி—**

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
கால் நடை வளர்ப்பு .. .. .. } 271—273
சமூக நலன் .. .. .. .. }

**கிருஷ்ணன் திரு. பி. எம்.—**

வரவுசெலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
பால் வழங்கு திட்டங்கள் .. .. } 546—549
வேளாண்மை .. .. .. .. }
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு }

**கிருஷ்ணன் திரு. ரா.—**

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம், (ஓ.டீ.) .. 46—47
பொறியாளர் தேர்வு, மின்சார வாரியம் .. 894
போக்குவரத்து, தனியார் துறை தொழிலாளர்க்கு வேலைவாய்ப்பு .. .. .. .. 664—665
மின் விளக்கின்மை தொழிலாளர் குடியிருப்புகள், மாஞ்சோலை எஸ்டேட் .. .. 476
வரவு-செலவுத் திட்டம், 1978-79 வாக்கெடுப்பு :
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. 933—934

**குடிநீர்—**

கட்டணம், திருச்சிராப்பள்ளி நகராட்சி .. 23—24
குழாய்கள், ஊராட்சிகள், செப்பனிடல் .. 922
சென்னைத் திட்டம், ஐ. நா. நிபுணர்கள் அறிக்கை 469
மூவாநல்லூருக்கு திட்டம் .. .. .. 217—218

பக்கங்கள்

க—தொடர்ச்சி.

**குழந்தைவேலு திரு. ப —**

- நில மேம்பாட்டு வாரியம், உறுப்பினர் தேர்தல் (அ.தி.) .. .. .. .. .. 671—672
- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு : பால் வழங்கு திட்டங்கள். வேளாண்மை, வேளாண்மை குறித்த மூலதனச் செலவு — 494, 495—496, 518, 562—574

**குற்றங்கள்—**

- கைதிகள், வெளிமாநிலத்தவர்கள் .. .. 9—10
- திருட்டுக் குற்றங்கள் (சென்னை நகர்) .. 629—631
- தூக்குத்தண்டனை, ஆயுள் தண்டனை, விவரங்கள். 6—9

**கூத்தகுடி சண்முகம் திரு. ச—**

- அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெருத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ.தி.) .. .. 46—47

**கைத்தறி—**

- கூலி, குறைந்தபட்ச கூலி, கைத்தறி நெசவாளர்களுக்கு .. .. .. .. .. 920—921

**கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன் திரு. பி.—**

- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு: தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டுவசதி பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு .. 709—712

**கோதண்டராமன் திரு. வி. கே—**

- இன்ஜினீரிங் கல்லூரி, பாலிடெக்னிக், மாணவர்கள் தேர்வு, .. .. .. .. .. 910—913
- உணவுப் பொருட்கள், கையிருப்பு விவரங்கள் .. 636—645
- குடியாத்தம், பரதராமியில் உயர்நிலைப்பள்ளிக் கட்டிடம் .. .. .. .. .. 208—209





பக்கங்கள்

க—தொடர்ச்சி

**கோதண்டராமன் திரு. வி. கே. — தொடர்ச்சி**

- தூக்குத் தண்டனை, ஆயுள் தண்டனை, விவரங்கள். 6—9
- நூல் விலைகளில் வேறுபாடுகள் .. .. .. 483
- மின்வாரியம், விஜிலன்ஸ் இலாகாவின் குற்றக் கண்டுபிடிப்புப்பணி .. .. .. 458
- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :
  - கால்நடைவளர்ப்பு, சமூக நலன் — 249
  - சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. 932
  - தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டுவசதி பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு — 673

**கோவிந்தராசன் திரு. சி—**

- தொழில் தகராறு, டி. வி. எஸ். நிறுவனம்.(பாடி) 477
- வரவு செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு : தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டுவசதி பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு — 693—702

**கோவேந்தன் திரு. மு. ரெ—**

- வரவு-செலவுத்திட்டம், 1978—79, வாக்கெடுப்பு: சமுதாய நலவளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு — 953—958

பக்கங்கள்

ச

சங்கரய்யா திரு. என்—

அரசு ஊழியர்கள், வேலை நிறுத்தம், (த. கோ.) .. 485

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறுத அலுவலர்கள், வேலை நிறுத்தம். (ஒ.தீ.) .. .. 46—47, 49—57, 77—78, 82, 110

கேள்விகள், முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும் இலாக்காக்கள் தொடர்பானவை (த.கோ.) .. 39—40

சண்முகம் திரு. கா. ந—

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 555—557

சண்முகம் திரு. ப. உ—

வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டுவசதி
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 734—744

சதாசிவம் திரு. செ—

ஊழியர்கள், தென் சென்னை மின் வழங்கு நிறுவனம், முறைப்படுத்துதல் .. .. .. 893—894

சந்திரன் திரு. ப—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் நகர்ப்பகுதி மேம்பாடு .. } 1004—1007

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 675



பக்கங்கள்

ச—தொடர்ச்சி

சந்திரன் ஜெயபால் திரு. இரா—

அரிசன பின்தங்கியோர் மாணவ விடுதி, அசைவ உணவு .. 445

சமரசம் டாக்டர் கே—

உணவு விடுதிகள், உணவுப் பண்டங்கள், விலை, 901—906

தருமபுரி மாவட்டத்தில் இ. எஸ். ஐ. மருத்துவமனை .. 218

பாலிடெக்னிக், தர்மபுரியில் துவக்கும் செயற்குறிப்பு .. 653—654

மின் இணைப்பு, புதிய பம்பு செட்டுகளுக்கு விதியைத் தளர்த்தல், தர்மபுரி மாவட்டம் 4

சமூக நலம்—

கலப்புத் திருமணங்கள், சலுகைகள் .. 661—663

சரஸ்வதி செல்வி பி. டி—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

கால்நடை வளர்ப்பு
சமூக நலன் } 248, 250, 252—253, 263, 302—315

சவுந்திரராஜன் திரு. ரெ. வீ—

தீயணைப்பு நிலையங்கள், பாபநாசம் தஞ்சை .. 450

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு :

கால்நடை வளர்ப்பு } 249, 250
சமூக நலன்
கைத்தறியும் நெசவுத் தொழிலும் கதர் } 112, 113

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலிய நகர்ப்பகுதி மேம்பாடு } 933

பக்கங்கள்

ச—தொடர்ச்சி


**சவுந்திரராஜன் திரு. ரெ. யீ தொடர்ச்சி**

செய்தி, சுற்றுலா திரைப்படத் தொழில் நுட்பவியல் .. 317

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 673, 675, 676

**சாதிக் பாட்சா திரு. எஸ். ஜே—**

சப்-மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம், பண்ருட்டி. மாஜிஸ்ட்ரேட் இல்லாமை, .. 895

சென்னை குடிநீர் திட்டம் ஐ. நா. நிபுணர்கள் அறிக்கை .. 469

தூக்குத் தண்டனை, ஆயுள் தண்டனை, விவரங்கள், 6—9

நிலக்கடலை ஆய்வு நிலையம், பொள்ளாச்சி, மாற்றுதல் .. 668—669

மொழிப் பிரச்னை, பிரதமரிடமிருந்து கடிதம், 916—919

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சமுதாய நலவளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு } 1020, 1024—1034, 1041

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டுவசதி பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 75

**சாமிக்கண்ணு. திரு. தா—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள் வேளாண்மை வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 539—540




பக்கங்கள்

ச—தொடர்ச்சி


**சாலைகள்—**

கடுவங்குடி பகுதி சாலை, மதகு சீரமைப்பு 665—666

**சிகாமணி திரு. பொ—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 686—688

**சிவசாமி, திரு. செ—**

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம், (ஒ. தீ.) .. 46—47

உணவு விடுதிகள், உணவுப் பண்டங்கள், விலை .. 901—906

பொறியியல் ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளிகள் தேர்வு நிலை, .. 19

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு } 932, 975—980

செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. 344—346

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 675

**சின்னசாமி, திரு. வி. கொ—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள் வேளாண்மை வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 540—542

பக்கங்கள்

ச—தொடர்ச்சி


**சின்னசேலம் சுப்பிரமணியன் திரு. மா—**

துரித கால வண்டி, கள்ளக்குறிச்சி-சென்னை .. 24—26

**சீனி செல்வராஜ், திரு—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மைக் குறித்த மூலதனச் செலவு .. 557 559

**சீனிவாச ரெட்டியார் திரு. போ. எ—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலிய நகர்ப்பகுதி மேம்பாடு 988—990

**சுந்தரம் திரு. ப—**

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவ செ[illegible] 211

**சுந்தரம் திரு. மு—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
சமுதாய நல வளர்ச்சி திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. 949—953

**சுந்தரராஜ் திரு. நா—**

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம், (ஒ. தீ.) .. 46—47

ஒத்தி வைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களை எந்த வரிசையில் பேச அழைப்பது என்பது குறித்து (ஒ. பி.) .. 60

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. 932
செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. 332 336

[illegible], கோணுபேட் கிராமம், திருமயம் [illegible] .. 891—892




பக்கங்கள்

ச—தொடர்ச்சி.


**சுப்பிரமணியம், திரு. ஆர். சி—**

தீ விபத்து, காந்தி நகர் (முதுகுளத்தூர்) (க.ஈ.) .. 493, 493—494

வரவு-செலவுத் திட்டம். 1978-79, வாக்கெடுப்பு:
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு. .. 981—984

**சுப்பிரமணியம், திரு. பாக்கூர் சு—**

உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம், பிரித்தமைத்தல் .. 657

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
கைத்தறியும் நெசவுத் தொழிலும் கதர் .. 118—124

**சுப்பிரமணியம், திரு. ஒ—**

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம். (ஒ.தீ) .. 46—47

**சுப்பு, திரு. க—**

அலுவலர்கள். அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ.தீ) 46—47, 84—89, 104

உள்ளாட்சித் துறை அமைச்சர் உதவியாளர் பஸ் பாஸைத் தவறாகப் பயன்படுத்தியது பற்றி அமைச்சர் அளித்த தகவல் குறித்து (உ.பி.) .. 349—354

**சுவாமிதாஸ், திரு. அ**

வரவு-செலவுத் திட்டம். 1978—79, வாக்கெடுப்பு:
கால்நடை வளர்ப்பு
சமூக நலம் 249
செய்தி, சுற்றுலா திரைப்படத் தொழில் நுட்பவியல் .. .. .. 340—344

பக்கங்கள்

ச—தொடர்ச்சி.

**சுற்றுலா—**

- ஏலகிரி மலை கோடை வாசத்தலமாக்குதல் .. 650
- பிச்சாவரம், சிதம்பரம் வட்டம் .. 463
- விடுதிகட்டுதல், நாகப்பட்டிணம் .. 650—651

**செங்கோட்டையன், திரு அ—**

- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
  - பால் வழங்கு திட்டங்கள் / வேளாண்மை / வேளாண்மை, குறித்த மூலதனச் செலவு } 508—511

**செங்கோடன் திரு. கா—**

- வரவு-செலவுத்திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
  - சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள்முதலியன / நகர்ப்பகுதி மேம்பாடு } 990—994

**செம்மலை, திரு. செ—**

- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
  - கைத்தறியும் நெசவுத் தொழிலும் / கதர் } 143—147

**செல்லப்பா திரு. அ—**

- மின்வாரிய ஊழியர்கள் இடமாற்ற விண்ணப்பம் 457

**செல்வராசன், திரு. அ—**

- அலுவலகங்கள், பத்திரப் பதிவு அலுவலகங்கள், வசதிகள் .. 908—910

**சௌந்தரராஜன், திரு. திருச்சி, ஆர்—**

- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
  - பால் வழங்கு திட்டங்கள் / வேளாண்மை / வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 527



பக்கங்கள்

த

**தீக்கவல் கோரல்—**

- அஞ்சல் தலை, பெரியார். .. 928—929
- அரசு ஊழியர்கள், வேலை நிறுத்தம் .. 485—491
- கவன ஈர்ப்பு, எடுத்துக்கொள்ளப் பெருதது குறித்து. .. 668—669
- கேள்விகள், முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும் இலாக்காக்கள் தொடர்பானவை, .. 37—41
- தமிழாசிரியர் கோரிக்கை குறித்து அறிக்கை 242—243
- 42-வது விதியின் கீழ் கொடுத்த அறிவிப்பு குறித்து .. 246—248
- பேரவையின் அலுவல். .. 929—930

**தங்கவேல் திரு. ர. ச—**

- வரவு-செலவுத் திட்டம் 1978-79, வாக்கெடுப்பு:
  - தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் / வீட்டுவசதி / பொதுச் சுகாதாரம், துப்புரவு குடிநீர் வழங்கல்குறித்து மூலதனச் செலவு } 703—704

**தண்டபாணி திரு. ரா. கா, சு—**

- வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
  - பால் வழங்கு திட்டங்கள் / வேளாண்மை / வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 529—530

**தலைவர்—**

- **அறிவிப்புகள்—**
  - நிலமேம்பாட்டு வாரியம், உறுப்பினர் தேர்தல் 672—673
  - பேரவையின் அலுவல் .. 930
  - ஜெர்மன் டெமாக்ரடிக் ரிபப்ளிக்கைச் சார்ந்த பாராளுமன்றக் குழு, பேரவை நடவடிக்கைகளைக் கவனித்தல் .. 111

த—தொடர்ச்சி.

தலைவர் —தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—

உரிமைப் பிரச்சினைகள்—

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் மீது—

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் மீதான
உரிமைப் பிரச்சினையின் மீது 28-2-1978
அன்று தலைவர் அளித்த தீர்ப்பையும்
அப்பத்திரிகை முதலில் எழுதிய கடிதத்
தையும் முழுமையாக வெளி
யிடாமல் சில பகுதிகளை வேண்டு
மென்றே விட்டுவிட்டிருப்பது அவை
உரிமையை மீறிய செயலாகும் என்று
கூறி இப்பத்திரிகையின் மீது ஓர் உரி
மைப்பிரச்சினை எழுப்பப்பெற்றபோது
தலைவர் பின்வருமாறு தீர்ப்புரைத்தார்:

''தவறான செய்தி ஒன்றினை வெளி
யிட்டு, அது தவறு என்று சுட்டிக்
காட்டப்பட்டு, தீர்ப்பு வழங்கியபின்,
அத்தீர்ப்பையும் அம்மாதிரித் தவறாக
வெளிட்டதற்கான வருத்தத்தையும்
முதலில் வெளியிட்ட செய்திக்கு எவ்
வளவு முக்கியத்துவம் கொடுத்து வெளி
யிடப்பட்டதோ அதே அளவு முக்கியத்
துவம் கொடுத்து வெளியிட
வேண்டும். இதுதான் மரபு. எனவே
'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் இவ்வாறு
செய்யாதது தவறானது.

ஆயினும் 2-3-1978 தேதியிட்ட இதழில்
எனதுதீர்ப்பையும அப்பத்திரிகைமுதலில்
எழுதிய கடிதத்தையும் முழுவதுமாக
வெளியிட்டுள்ளார்கள். எனவே, இப்
பிரச்சினையை இத்துடன் விட்டு விட
லாம். இனி இவ்வாறு நிகழா
வண்ணம் அப்பத்திரிகை எச்சரிக்கை
யுடன் நடந்துகொள்ள வேண்டும்.''



த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்-தொடர்ச்சி—

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி

'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழ் 'தினமன'
'அண்ணா' மீது—தொடர்ச்சி,

இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, அண்ணா
நாளிதழ்கள் மீது— பேரவையில் நிதி
யமைச்சர் 23-2-1978 அன்று ஆற்றிய
உரையையும் பொதுப்பணித்துறை
அமைச்சர் 25—2—1978 அன்று படித்
ததையும் முழுமையாக வெளியிடாதது
குறித்து 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' 'தின
மணி', 'அண்ணா' ஆகிய நாளேடுகளின்
மீது உரிமைப் பிரச்சினைகள் 27—2—
1978 அன்று அவையில் எழுப்பப்பெற்ற
போது சம்பந்தப்பட்ட பத்திரிகை
களிடமிருந்து விளக்கம் பெற்றபின்
தீர்ப்புரைப்பதாகத் தலைவர் தெரிவித்
திருந்தார்.

இதன்மீது தலைவர் தீர்ப்பளிக்கும்
போது சம்பந்தப்பட்ட பத்திரிகைகள்,
இட நெருக்கடி காரணமாக மற்ற
பகுதிகளையும் வெளியிடவில்லை என்றும்
தவறான தகவலைத் தரவேண்டுமென்ற
எண்ணமோ, உள்நோக்கமோ தங்களுக்கு
இல்லையென்றும் பதில் தெரிவித்
துள்ளன என்று கூறி, பின் வருமாறு
தீர்ப்புரைத்தார்:

''பத்திரிகைகள், நடவடிக்கைக் குறிப்பு
களை முழுவதும் வெளியிட முடியாது
என்பதையும், ஆனால் மையக் கருத்துக்
கள் மாறாமல் கூடியவரை எல்லா
நிகழ்ச்சிகளும் வெளியிடப்படுவதுதான்
நல்லது என்றும் ஏற்கனவே தீர்ப்பளித்
துள்ளேன், அதை மீண்டும் வலி
யுறுத்தி, அவை நிகழ்ச்சிகளை
வெளியிடும்போது இம்மாதிரித் தவறு
கள் நேராவண்ணம் பார்த்துக்கொள்
வது அவசியமென்றும், இட நெருக்

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, அண்ணு நாளிதழ்கள் மீது—தொடர்ச்சி.

கடியைக் காரணம் காட்டி ஒரு சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டுவிட்டு அதை யொட்டிய பகுதிகளை வெளியிடாது இருப்பது சிலசமயங்களில் தவருன கருத்துக்களை ஏற்படுத்தக் கூடும் என்பதால், இனிமேல் இம்மாதிரி நிகழாவண்ணம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

இவைமீது மேல் நடவடிக்கை ஏதும் தேவையில்லை.''

உள்ளாட்சித்துறை அமைச்சரின் உதவியாளர் பஸ் பாஸைத் தவருக உபயோகித்ததாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டு பற்றி உள்ளாட்சித்துறை அமைச்சர் அவைக்குத் தவருன தகவல் அளித்ததாக உரிமைப் பிரச்சினை ஒன்றினை 1978 மார்ச் 7 ஆம் தேதி ஓர் உறுப்பினர் கொண்டுவந்தார்.

''தவருக நடந்திருக்கலாம் என்ற ஊகத்தின் அடிப்படையில் இந்த உரிமை மீறல் பிரச்சினை எழுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த உரிமைப்பிரச்சினையைத் தள்ளுபடி செய்கிறேன்'' என்று தலைவர் தீர்ப்பளித்தார். 349—[illegible]

தினத்தந்தி, மாலைமுரசு நாளிதழ்கள் மீது—

பேரவையில் நிதியமைச்சர் 23—2—1978 அன்று ஆற்றிய உரையையும், பொதுப் பணித்துறை அமைச்சர் 25—2—1978 அன்று படித்ததையும் முழுமையாக வெளியிடாதது குறித்து 'தினத்தந்தி', 'மாலைமுரசு' ஆகிய நாளிதழ்களின் மீது உரிமைப் பிரச்சினைகள் 27—2—1978



தலைவர்—தொடர்ச்சி

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

உரிமைப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

தினத்தந்தி, மாலைமுரசு நாளிதழ்கள் மீது—

அன்று கொண்டு வரப்பெற்றபோது சம்பந்தப்பட்ட பத்திரிகை ஆசிரியர்களின் விளக்கம் பெற்றுத் தீர்ப்புரைப்பதாகத் தலைவர் தெரிவித்திருந்தார்.

இவைமீது தலைவர் தீர்ப்புரைக்கையில் சம்பந்தப்பட்ட பத்திரிகைகள் தங்கள் பதிலில் இனிமேல் கவனமாக இருப்பதாகவும், விடப்பெற்ற பகுதிகளுடன் சேர்த்து முழுப் பகுதியையும் மீண்டும் 1—3—1978 அன்று வெளியிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளதால், இனி இம்மாதிரி நிகழாவண்ணம் இப்பத்திரிகைகள் கவனத்துடன் நடந்து கொள்ள வேண்டும் என்று எச்சரித்து, மேல் நடவடிக்கை ஏதும் தேவையில்லை என்று தீர்ப்புரைத்தார். .. .. 43—44

த்திவைப்புத் தீர்மானம்—

அரசிதழ் பதிவு பெருத அலுவலர்கள் வேலை நிறுத்தம் குறித்து—

முதலமைச்சரின் விளக்கத்திற்குப்பின் இசைவு மறுக்கப்பெற்றது. .. 46—47, 110

ழுங்குப் பிரச்சினைகள்—

ஒத்திவைப்புத் தீர்மானம், பேசும் உறுப்பினர்களின் வரிசை முறை—

ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்த உறுப்பினர்களைப் பேச அழைக்கும் வரிசை முறைபற்றி ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப்பி ஓர் உறுப்பினர் விளக்கம் கோரியபோது, ஒரே கட்சியைச் சேர்ந்த உறுப்பினரும் தலைவரும் அறிவிப்புகள் கொடுத்திருக்கும்போது, உறுப்பினரின் அறிவிப்பு

**தலைவர்—தொடர்ச்சி.**

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்சினைகள்—

ஒத்திவைப்புத் தீர்மானம், பேசும் உறுப்பினர்களின் வரிசை முறை—

முதலில் கொடுக்கப்பெற்றிருந்தால் பேசும் உரிமை உறுப்பினருக்குத்தானே தவிர கட்சித் தலைவருக்குக் கிடையாது.

ஆயினும் அவ்வுறுப்பினர் தாம் பேசவில்லையென்றும் தம் கட்சித் தலைவர் பேசட்டும் என்றும் சொல்லி விட்டால் கட்சித் தலைவருக்கு வாய்ப்பு அளிக்கப் பெறும்.

ஒத்திவைப்புத் தீர்மான அறிப்புகள் எந்த நேரத்திலே கொடுத்தாலும் நேரத்தைக் குறிப்பிட்டு கையொப்பம் இடப்பெறும். .. 58,59,60

ஒழுங்குப் பிரச்சினை சட்டமன்ற விதி முறைகளுக்கு மாறாக ஏதாவது நடைபெற்றால் மட்டும் எழுப்ப வேண்டும். .. 691

நுழைவு அனுமதி—

கோட்டைக்குள் வர உறுப்பினர்களுக்கு எந்தத் தடையும் இல்லை. உறுப்பினர்களுக்கு எல்லாவிதமான பாதுகாப்பும் உண்டு. உறுப்பினர்களுடன் கூட வருபவர்கள் அனுமதி பெற்றுத்தான் வரவேண்டும். .. 940, 941

மானியக் கோரிக்கைகள்—

முன்பே பேரவையில் வைக்கப்பெற்றுள்ள அறிக்கையில் இருப்பதையே அமைச்சர் தம் பதிலுரையில் படித்து நேரத்தை வீணாக்க வேண்டுமா என ஒரு உறுப்பினர் ஆட்சேபணை எழுப்பியபோது, தலைவர் அளித்த குறிப்புரையாவது:
"அறிக்கையில் ஒன்றிரண்டு இருக்கும், இருக்காது, அறிக்கையில் இல்லாததைக் கூட அமைச்சர் இனிமேல் படிக்கலாம். அதனால், இதில் ஒழுங்குப் பிரச்சினை ஒன்றும் இல்லை." .. 752—753







**தலைவர்—தொடர்ச்சி.**

தீர்ப்புரைகளும், குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

ஒழுங்குப் பிரச்சினைகள்—தொடர்ச்சி.

வினாக்கள் நேரம்—

கேள்வி நேரத்தில் கேள்வியை ஒட்டி ஒழுங்குப் பிரச்சினை எழுப்பலாம். வேறு ஒரு பிரச்சினை மீது கொண்டுவரக் கூடாது. .. 921

தகவல் கோரல்—

அரசிதழ் பதிவில்லா ஊழியர்களின் வேலை நிறுத்தம் குறித்து கொடுக்கப்பெற்றுள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றிய அறிவிப்பு குறித்து உறுப்பினர்கள் பேச முற்பட்டபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது:

"இன்று காலையில்தான் தீர்மானம் கொடுக்கப்பெற்றுள்ளது; அது ஆய்வில் உள்ளது, அது பற்றிப் பேசக் கூடாது." 486

வினாக்கள்-விடைகள்—

முதலமைச்சர் அவைக்கு வராதது பற்றியும், அவர் பதிலளிக்கவேண்டிய வினாக்கள் எடுத்துக்கொள்ளப் பெறாதது குறித்தும் தகவல் கோரியபோது தலைவர், பின்வருமாறு தீர்ப்புரைத்தார்:

"முதலமைச்சர் இங்கே வரவேண்டுமென்றோ வரக்கூடாது என்றோ நான் கட்டாயப்படுத்த முடியாது.

முதலமைச்சருக்குச் சார்ந்த கேள்விகள் தயாராக இருக்குமானால் உடனே அவருடன் கலந்து நடவடிக்கை எடுக்க நான் முனைகிறேன்." .. 4[illegible]

பக்கங்கள்.

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

நடைமுறைகள்:

வெட்டுப் பிரேரணை—

கொடுக்கப்பெற்றுள்ள வெட்டுப்பிரேரணைகளில் எதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று எழுதிக்கொடுத்தால் தான், அதன்மீது அவ்வுறுப்பினர் பேச அழைக்கப்படுகின்றார் என்றும், எழுதிக் கொடுக்காவிட்டாலும் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்றும் ஓர் உறுப்பினர் கோரியபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது :

''உறுப்பினர்கள் எழுதிக்கொடுத்தால்தான் பரிசீலனை செய்ய முடியும், எழுதிக் கொடுக்காததைப்பற்றி எடுத்துக் கொள்ள முடியாது'' .. 496

விவாதம்—

ஒத்திவைப்புத் தீர்மானம்—

அமைச்சர் விளக்கம் தந்ததற்குப் பின்னர் உறுப்பினர்கள் மீண்டும் பேசுவதற்கு அனுமதி கிடையாது. .. 107, 108

இசைவு அளிப்பதற்கு முன்—

அவையை ஏன் ஒத்திவைக்கவேண்டும் என்பதைப்பற்றி மட்டும் சுருக்கமாகச் சொல்ல வேண்டும். .. 63

சுருக்கமாகப் பேசுதல் வேண்டும். .. 71-72



பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

ஒத்திவைப்புத் தீர்மானம்—தொடர்ச்சி.

இசைவு அளிப்பதற்கு முன்—தொடர்ச்சி.

பத்திரிக்கையில் வந்த தகவலை வைத்துப் பேசுவது சரியல்ல.

அதன்மீது இங்கே விவாதம் நடத்தத் தேவையில்லை. .. 68—69

மற்றவர்கள் பேசியதற்குப் பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை. சபையின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து ஏன் இதைப்பற்றி விவாதிக்க வேண்டும் என்பதற்கான காரணத்தை மட்டும் சொன்னால் போதும். .. 82

மற்றவர்கள் பேசியதுபற்றி விமர்சனம் செய்தல் கூடாது—

ஒத்திவைப்புத்தீர்மான அறிவிப்பின்மீது பேசும்போது அவர் அதைச் சொல்லியிருக்கக்கூடாது, இவர் இதைச் சொல்லியிருக்கக்கூடாது என்று எடுத்துச் சொல்வதும் மற்றொருவர் பேசியதற்குப் பதில், விளக்கம் என்று எல்லாம் சொல்வதும் சரியல்ல .. .. .. 63,64

ஒரு தீர்மானம் கொடுத்துவிட்டு, ஒழுங்குப் பிரச்சினை என்ற முறையில் அதைப்பற்றி எழுப்புவது கூடாது .. .. .. 931

நேரம் ஒதுக்குதல்—

ஆளும் கட்சியை எதிர்த்துப் பேசினாலும் ஆதரித்துப் பேசினாலும் நேரத்தை மேயாட்டி சீக்கிரமாக முடிக்க வேண்டுமென்று சொல்வது கட்சிக் கண்ணோட்டத்தோடு சொல்வதல்ல .. 77

பக்கங்கள்

த—தொடர்ச்சி

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

விவாதம்—தொடர்ச்சி.

பேசும் முறை—

தலைவர் அனுமதியின்றி பேசுதல் கூடாது. 930

மரபு—

பொதுவாக மேலவையில் நடைபெறும் ஒரு சம்பவத்தைப்பற்றி பேரவையில் எழுப்புவதில்லை. மேலவையில் ஏது நடந்தாலும் அந்நிகழ்ச்சிகள், விவாதங்களைப் பற்றிப் பேரவையில் பேசக் கூடாது என்பது நம்முடைய மரபு .. 38,40

வினாக்கள்—விடைகள்

துணை வினாக்கள்

உறுப்பினரொருவர் நீண்ட கேள்வியாகப் போட்டிருப்பதால், தாமும் நீளமாகப் பதில் சொல்ல வேண்டியிருக்கின்றது என்று ஓர் அமைச்சர் கூறியபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது:

''அமைச்சர்களுடைய திறமை சுருக்கமாகச் சொல்வதில்தான் இருக்கிறது. அமைச்சர்கள் சுருக்கமாக விடையளித்தல் வேண்டும்.'' .. .. .. 899

ஓர் உறுப்பினர் எழுப்பிய பிரச்சினைக்கு இன்னொரு உறுப்பினர் பதில் சொல்லுதல் கூடாது .. .. .. .. 649

கேட்கப்பெறுகின்ற கேள்வி மூலக் கேள்விக்கு ஒட்டியதாக இருத்தல் வேண்டும் .. .. .. 890

சுருக்கமாக இருக்க வேண்டும் .. .. 658,898

தனித்தனியாக கேள்வி கேட்டால் தான் அமைச்சர் பதில் சொல்ல முடியும். [illegible] ஒரே சமயத்தில் [illegible] வைத்துக்கொள்ள முடியாது [illegible] .. 637





பக்கங்கள்

த—தொடர்ச்சி

தலைவர்—தொடர்ச்சி.

தீர்ப்புரைகளும். குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி.

துணை வினாக்கள்—தொடர்ச்சி.

துணை வினாவிற்கான பதில் அமைச்சர்களிடமிருந்து முறையாக வருவதில்லையென்று ஓர் உறுப்பினர் கூறியபோது தலைவர் அளித்த குறிப்புரையாவது:

''அமைச்சர்களைத் தாங்கள் அப்படிக் கட்டாயப்படுத்த முடியாது'' .. 900

பதிலளிக்கும் முறை—

ஒரு துணை வினாவிற்கு அமைச்சர் நீண்ட விடை அளித்த போது தலைவர் குறிப்புரைத்ததாவது:

''இவ்வளவு நீண்ட விவரங்களை எதிர் காலத்தில் அமைச்சர்கள் மேஜை மீது வைத்துவிடுவது நலம்''. .. 22

பதில்கள் கேள்வியை ஒட்டியனவாக இருத்தல்வேண்டும் .. .. 921

பேரவைத் தலைவர் ஓர் கேள்வியை அனுமதித்தபிறகு, ''பொதுநலனுக்கு ஒவ்வாது என்பதால் இவ்வினாவிற்கு பதிலளிக்க இயலாது'' என சம்பந்தப்பட்ட அமைச்சர் விடையளிக்காமலிருப்பது சரிதானா என்கிற பிரச்சினை அவையில் எழுப்பப் பெற்றபோது ''நான் அதை அனுமதித்தேன். 'A Minister to whom a question or a supplementary question is put may decline to answer it on the ground that to answer it would be against public interest' என்பதாக விதி 39-இல் உள்ளது. ..

பக்கங்கள்


த—தொடர்ச்சி.

**தலைவர்—தொடர்ச்சி.**

தீர்ப்புரைகளும் குறிப்புரைகளும்—தொடர்ச்சி.

வினாக்கள்—விடைகள்—தொடர்ச்சி.

துணை வினாக்கள்—தொடர்ச்சி.

பதிலளிக்கும் முறை—தொடர்ச்சி.

அதற்கான விடையை வெளிப்படுத்துவது பொது நலனுக்கு உகந்தது அல்ல என்று அரசு கருதினால் அதனை வெளியிடாமல் இருக்க அவர்களுக்கு உரிமையிருக்கிறது. இதில் பிரச்சினை எதுவும் இல்லை'' என்று தலைவர் குறிப்புரைத்தார். .. .. .. .. 917—918

**தனுஷ்கோடி. திரு. கோ.**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச்செலவு } 559—561

**திருவேங்கடம் திரு. பெ. சு.:—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன
நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. } 931—932

விவசாய பம்பு செட்டுகளுக்கு இணைப்பு சான்றிதழ், .. .. .. .. .. 1—4

**திரைப்படம்—**

சினிமா டிக்கட் விற்பனை, தண்டனை — — 449

**தீண்டாமை—**

ஒழிப்புக் குழு அமைத்தல்— .. — — 220—221

**தீயணைப்புப் படை —**

நிலையம் பாபநாசம், தஞ்சை .. — 451




பக்கங்கள்


து—தொடர்ச்சி.

**தீர்மானங்கள்—**

நில மேம்பாட்டு வாரியம், உறுப்பினர் தேர்தல் (தீ.) .. .. .. .. .. 671—672

**துணிகள்—**

ஏற்றுமதிக் கட்டுப்பாடும், தொழிலாளர் பாதிப்பும் (க.ச.) .. .. .. .. 669—671

**துரை கலியமூர்த்தி திரு.—**

குடிநீர்க்குழாய்கள், ஊராட்சிகள், செப்பனிடல், 922

சுற்றுலா மையம், பிச்சாவரம், சிதம்பரம் வட்டம். 463

தூக்குத் தண்டனை, ஆயுள் தண்டனை, விவரங்கள், 6—9

நெல், கொள்முதல் விலை .. .. .. 635—636

பால் பண்ணை, மாதவரம் பால் பண்ணை, விவரங்கள் .. .. .. .. .. 27—28

பூந்தோட்டம் ஊராட்சியைப் பிரித்தல் .. 216—217

பேருந்து நிலையம், சிதம்பரம், கடன் .. 23

வெள்ளியக்குடி ஊராட்சி பிரித்தல் .. 217

**துரை கோவிந்தராசன், திரு.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

பால் வழங்கு திட்டங்கள்
வேளாண்மை
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு } 511—518
527

**துரை முத்துசாமி. திரு.—**

உணவு விடுதிகள், உணவுப் பண்டங்கள், விலை.. 901—906

ஊராட்சிகளை பிரித்தமைத்தல் .. .. 211—216

பேரவையில் அலுவல். (த.தோ.) .. .. 929,930

பக்கங்கள்

த—தொடர்ச்சி.

துரை முருகன். திரு.—

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ.தீ.) .. 101

வரவு—செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. 937

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி .. .. பொதுச் சுகாதாரம், துப்பரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு 673,677 686,753

தேசியத் தலைவர்கள் — .. ..

பாவேந்தர் பாரதிதாசன் பிறந்தநாள், அரசு விழா 462

தொல்பொருள் ஆய்வு—

பூம்புகார் பகுதி .. .. .. .. 20—22

தொழிலாளர்கள்—

தருமபுரி மாவட்டத்தில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை 218

தொழில் தகராறுகள், டி.வி.எஸ். நிறுவனம் (பாடி) .. .. .. .. .. 477

பர்மா அகதிகள். தஞ்சை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலையில் பணிபுரிவோர், கோரிக்கை .. 924—925

மரமேறும் தொழிலாளர்கள், காதி போர்டு மூலம் செய்யும் செலவு, .. .. .. 925—927

மின்வாரிய தற்காலிகத் தொழிலாளர்கள், நிரந்தரமாக்கப் பெறுதல் .. .. .. .. 633—635

மின் விளக்கின்மை, தொழிலாளர் குடியிருப்புகள், மாஞ்சோலை எஸ்டேட், .. .. .. 476



பக்கங்கள்

த—தொடர்ச்சி.

தொழிற்சாலைகள்—

பூச்சி மருந்து, மன்னார்குடி அருகில், .. 907

மூடப்பட்ட பஞ்சாலைகள், விவரம். .. 482

துறையூர் கந்தசாரி சர்க்கரை ஆலை .. 237—238

விசை சாயச்சாலை,-துவங்கல் .. .. 239—242

ந

நடராசன் திரு. ஆ—

மூடப்பட்ட பஞ்சாலைகள் விவரம் .. .. 482

வீட்டு வசதி, மாவுத்தம்பதி மலை சாதியினருக்கு. 663—664

நிதி ஒதுக்கீடுகள்—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—

கதர் .. .. .. .. 112—153

கால் நடை வளர்ப்பு .. .. .. 248—348 354—371

கைத்தறியும், நெசவுத் தொழிலும் .. 112—153

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன- நகர்ப்பகுதி மேம்பாடு .. .. .. 931—939 941—1047

சமூக நலன், .. .. .. 248—348 354—371

செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. .. .. 316—371

தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் .. 673—770

பக்கங்கள்

ந—தொடர்ச்சி.

நிதி அலுவல்கள்—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

பால் வழங்கு திட்டங்கள் .. .. 494—575

பொதுச் சுகாதாரம், துப்பரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச்செலவு .. .. 673—770

வீட்டு வசதி .. .. 673—770

வேளாண்மை .. .. .. 494—575

வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. 494—575

நிலக்கடலை—

ஆய்வு நிலையம், பொள்ளாச்சி, மாற்றுதல் .. 667—668

நீர்ப்பாசனம்—

அணைகள்—

குடகனாறு-உடைப்பு .. .. .. 196—201

ஆலத்துறை திட்டம் .. .. .. 193—194

சாத்தனூர் அணை, இடது புற மேல் மட்டக் கால்வாய்த் திட்டம் .. .. .. 631—632

தானே இயங்கும் நீரூற்றுகள், சிதம்பரம் வட்டம் பச்சையாறு திட்டம் .. .. .. 666—667

194—196

மணிமுத்தாறு திட்டம் .. .. .. 461

வளையங்குளம் வட்டாரம், மதுரை மாவட்டம், 892

நீதிமன்றங்கள்—

சப்-மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம், பண்ருட்டி, மாஜிஸ்ட்ரேட் இல்லாமை .. .. 895

நூல்கள்—

விலைகளில் வேறுபாடுகள் .. .. .. 483

நூலகங்கள்—

அவசரநிலை காலத்தில் அகற்றப்பெற்ற நூல்கள் .. 654—655



பக்கங்கள்

ப

பண்ணை சேதுராம் திரு. கே.—

பாண்டியன் போக்குவரத்துக் கழகம், மதுரை மாவட்டம், விவரங்கள், ... ... 26—27

பரமசிவன், திரு. அ. மா.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு

பால் வழங்கு திட்டங்கள் .. ..<br>வேளாண்மை .. .. ..<br>வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. } 544—546

பழனிச்சாமி திரு. க.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும்<br>வீட்டு வசதி<br>பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 724—726

பழனிச்சாமி, திரு. சொ. ந.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

கால் நடை வளர்ப்பு .. .. ..<br>சமூக நலன் .. .. .. } 293—295

பழனிமுத்து, திரு. சி.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்<br>வீட்டு வசதி<br>பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 688—691

பழனியப்பன், திரு. அ. ப.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:

கால்நடை வளர்ப்பு .. .. ..<br>சமூக நலன் .. } 261—264

ப—தொடர்ச்சி


**பள்ளிகளும் கல்லூரிகளும்—**

ஆடுதுறையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி .. 210—211

உயர்நிலைப் பள்ளி, திருமங்கலம், மாயூரம் தாலுகா, புதிய கட்டடம், .. .. 913—914

குடியாத்தம், பரதராமில் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் .. .. 208—209

பாலிடெக்னிக், தர்மபுரியில் துவக்கும் செயற் குறிப்பு .. .. .. 653—654

பிஷப் ஹிபர் உயர்நிலைப் பள்ளி, புத்தூர் செயல்படாமை, .. .. 19—20

புதிய உயர்நிலைப் பள்ளி துவங்க விண்ணப்பங்கள் 201—208

**பாரதிதாசன்—**

பாவேந்தர் பிறந்தநாள், அரசு விழா .. 462

**பால்—**

தானியங்கி பால் விற்பனை நிலையங்கள், சென்னை, 28—36
மாதவரம் பால் பண்ணை, விவரங்கள், 27—28
விற்பனை, சென்னை நகர், நடமாடும் ஊர்தி, .. 28

**பாலகிருஷ்ணன், திரு. சோ.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
கைத்தறியும் நெசவுத் தொழிலும் .. } 114—118
கதர் .. .. .. }

**பாலகுரு, திரு. வெ.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. 973—97

**பாலம்—**

ராஜன் வாய்க்கால் பாலம், மாயூரம் ஒன்றியம், 92






ப—தொடர்ச்சி.


**பாலன், திரு. சு.—**

தீண்டாமை ஒழிப்புக் குழு .. .. .. 220—227

வரவு-செலவுத் திட்டம் 1978-79, வாக்கெடுப்பு:
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன } 933
நகர்ப்பகுதி மேம்பாடு }
தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் } 726—729
வீட்டுவசதி }
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் }
வழங்கல் குறித்த மூலதனச் செலவு }

**புயல்—**

புயல் வெள்ளம், பாதிப்பு, உதவித்தொகை .. 454
புயலால் மரணமடைந்தோர், உதவித்தொகை .. 451

**புருஷோத்தமன், திரு. து.—**

திருட்டுக் குற்றங்கள், சென்னை நகர் .. .. 629—631

**புஷ்பராஜு, திரு. த.—**

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஓ.தி.) .. .. 46—47

**பெரியசாமி, திரு. டி. பி. எம்.—**

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஓ.தி.) .. .. 111

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
கைத்தறியும் நெசவுத் தொழிலும் .. .. } 131—136
கதர் .. .. }
பால் வழங்கு திட்டங்கள் .. .. } 535—539
வேளாண்மை .. .. }
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. }

**பெரியசாமி, திரு. மொ.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
பால் வழங்கு திட்டங்கள் .. .. } 542—544
வேளாண்மை .. .. }
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. }

பக்கங்கள்

ப—தொடர்ச்சி.


பெரியசாமி திரு. ரா.—

துறையூர் கந்தசாரி சர்க்கரை ஆலை .. .. 237—238

பெருமாள், திரு. நா.—

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும்
வீட்டுவசதி
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 718—721

பெருமாள், திரு. ரா. கு.—

வரவு-செலவுத் திட்டம், 1978 79, வாக்கெடுப்பு:
பால் வழங்கு திட்டங்கள் .. ..
வேளாண்மை .. .. ..
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. } 530—534

பொன்னுரங்கம், திரு. ப.—

நூலகங்கள், அவசரநிலை காலத்தில் அகற்றப் பெற்ற நூல்கள் .. .. .. .. 654—655

போக்குவரத்து—

அரசுடைமையாக்குதல், தனியார் துறை தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு .. .. 664—665
ஆட்டோ ரிக்ஷாக்கள் மீட்டர்களில் முறைகேடுகள் 480
டாக்ஸிகள், ஆட்டோ ரிக்ஷாக்கள், சென்னை விவரம் .. .. .. .. 479
துரிதகால வண்டி, கள்ளக்குறிச்சி-சென்னை .. 24—26
பாண்டியன் போக்குவரத்துக் கழகம், மதுரை மாவட்டம். விவரங்கள் .. .. .. 26—27
பேருந்து நிலையம், சிதம்பரம், கடன் .. .. 23
பேருந்து பயணிகள் எண்ணிக்கை எடுக்க கம்ப்யூட்டர்கள் .. .. .. .. 232—235
பேருந்து, வந்தவாசி-கள்ளக்குறிச்சி .. .. 923—924
மாற்றுப்பாதை அமைத்தல், நெடுஞ்சாலை எண் 47 (கோவை) .. .. .. .. 481
லாரிகள், விதிகளை மீறியதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை .. .. .. .. 227—232




பக்கங்கள்

ம


மணிமாறன், திரு. மா.— .. .. .. 635—636

நெல், கொள்முதல் விலை
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
கால்நடை வளர்ப்பு .. .. ..
சமூக நலன் .. } 253—259

மருத்துவ மனைகள்—

அரசு மருத்துவ மனை, பொறையார் விரிவு படுத்துதல் .. .. .. 628—629
கட்டட வேலை, தூனேரி .. .. .. 627—628
தருமபுரி மாவட்டத்தில் இ. எஸ். ஐ. .. 210
மருந்தகம், கேரளாபேட்டை கிராமம், திருமயம் வட்டம் .. .. .. 891—892

முருகேசன், திரு. கி.— .. 928—929

அஞ்சல் தலை. பெரியார் (த. கோ.)
அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ.தீ.) .. .. 67, 68, 71, 77, 106
கடிதம், சமூக நலத்துறை அமைச்சர் எழுதியது (அ.) .. .. .. .. 42—43
தீ விபத்து, காந்தி நகர், வி. வி. ஆர். காலனி (முதுகுளத்தூர்) (க.ஈ.அ.) .. .. 493

மாணவர்கள்— .. 910—917

தேர்வு, இன்ஜினீரிங் கல்லூரி பாலிடெக்னிக் .. 489

மார்க்கபந்து, திரு. ரா.—

அரசு ஊழியர்கள், வேலை நிறுத்தம் (த.கோ.) .. 46—47
அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ.தீ.) .. .. 80—84
.. .. 196—201
குடகனாறு அணை, உடைப்பு .. .. .. 636
நெல் கொள்முதல் விலை
வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
கால்நடை வளர்ப்பு .. ..
சமூக நலன் } 250, 251, 295—299

ம—தொடர்ச்சி.


**மார்க்கபந்து, திரு. ரா.—தொடர்ச்சி.**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—தொடர்ச்சி.
- கைத்தறியும் நெசவுத் தொழிலும் .. .. } 136—139
- கதர் .. .. .. .. .. ..
- பால் வழங்கு திட்டங்கள் .. .. } 494, 495,
- வேளாண்மை .. .. .. .. 496,
- வேளாண்மை குறித்த மூலதனச் செலவு 499—505

வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள், வடாற்காடு .. .. .. .. .. 464

**மாரிமுத்து, திரு. ஏ. ஆர்.—**

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ.தீ.) .. .. .. 46—49

ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களை எந்த வரிசையில் பேச அழைப்பது என்பது குறித்து (ஒ.பி.) .. 60, 110

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
- தொழிலாளர் நலனும், தொழிற்சாலைகளும் } 729—734
- வீட்டுவசதி
- பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு.

**மின்சாரம்—**

இணைப்பு, பம்பு செட்டுகளுக்கு, சாத்தான்குளம் யூனியன் .. .. .. .. .. 5—6

இணைப்பு, புதிய பம்பு செட்டுகளுக்கு, விதியைத் தளர்த்தல், தர்மபுரி மாவட்டம் .. .. 4

மின் வாரிய ஊழியர்கள் இடமாற்ற விண்ணப்பம் 437

விவசாய பம்புசெட்டுகளுக்கு இணைப்பு, சான்றிதழ் 1—4

**மீனளம்—**

மீனவர்கள், தகராறுகள் .. .. .. 645—649

**முத்துசாமி, திரு. துரை—**

வளர்ப்பு, எடுத்துக் கொள்வது குறித்து (த.கோ.) .. .. .. .. .. [illegible]




ம—தொடர்ச்சி.


**முருகேசன், திரு. கூ. ச.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
- கால்நடை வளர்ப்பு .. .. .. } 282—287
- சமூக நலன் ..
- தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் } 676
- வீட்டுவசதி .. ..
- பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு

**மொழிகள்—**

மொழிப் பிரச்சினை, பிரதமரிடமிருந்து கடிதம் .. 916—919

ய

**யூசப், திரு. யா. சை. மு.—**

ஆழியாறு நீர்ப்பாசன திட்டம் .. .. 193—194

பச்சையாறு திட்டம் .. .. .. 194—196

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
- கால்நடை வளர்ப்பு .. .. .. } 259—261
- சமூகநலன் ..
- சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன } 996—999
- நகர்ப்பகுதி மேம்பாடு

ர

**ரகுமான்கான், திரு. ஏ.—**

உள்ளாட்சித்துறை அமைச்சர் உதவியாளர் பஸ் பாஸைத் தவறாகப் பயன்படுத்தியது குறித்து அமைச்சர் அளித்த தகவல் குறித்து (உ.பி) 349—354

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
- சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன } 1045
- நகர்ப்பகுதி மேம்பாடு

**ரசாக், திரு. மு. மு. அ.—**

பச்சையாறு திட்டம் .. .. .. 194—196

பக்கங்கள்.

ர—தொடர்ச்சி.

ரமணி, திரு. கு.—

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள் வேலை நிறுத்தம், (ஒ. தீ.) .. .. 46—47

உணவு விடுதிகள், உணவுப் பண்டங்கள், விலை .. 901—906

மின் வாரிய தற்காலிகத் தொழிலாளர்கள், நிரந்தரமாக்கப் பெறுதல் 633—635

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி
பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு. } 675, 764

ராமசாமி, திரு. து.—

அரசு ஊழியர்கள், வேலை நிறுத்தம் (த. கோ.) 488—489

ல

லத்தீப், திரு. எம். ஏ.—

அரசு ஊழியர்கள், வேலை நிறுத்தம் (த. கோ.) .. 489—490

அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம் (ஒ. தீ.) .. .. 46—47, 72—76, 78—80, 111

துணிகள், ஏற்றுமதிக் கட்டுப்பாடும் தொழிலாளர் பாதிப்பும் (க.ஈ.) .. .. .. .. 669—670, 671

42-வது விதியின்கீழ் கொடுத்த அறிவிப்பு (த.கோ.) 246—248

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
கால்நடை வளர்ப்பு .. .. .. } 250, 252
சமூக நலன் .. .. .. } 287—293
கைத்தறியும் நெசவுத் தொழிலும் கதர் } 114, 140—143



பக்கங்கள்

ல—தொடர்ச்சி.

லத்தீப், திரு. எம். ஏ.—தொடர்ச்சி.

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:—தொடர்ச்சி.
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு .. .. } 933, 934, 1017—1024, 1032, 1042
செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் .. .. .. } 318
தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் வீட்டு வசதி பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு } 674, 676
பால் வழங்கு திட்டங்கள் .. ..
வேளாண்மை ..
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. } 496, 519—529

வ

[illegible], திரு. கே.—

வரவு-செலவுத் திட்டம், 1978—79, வாக்கெடுப்பு:
பால் வழங்கு திட்டங்கள் .. ..
வேளாண்மை .. ..
வேளாண்மை குறித்த மூலதனச் செலவு .. } 549—552

வரதராஜன், திரு. என்.—

உணவு விடுதிகள், உணவுப் பண்டங்கள், விலை, 901—906

மாநாடு கடன் நிவாரண, தீர்மானங்கள். .. 18

வரவு-செலவுத் திட்டம், 1978—79 வாக்கெடுப்பு:
வரவு-செலவுத் திட்டம் .. ..
கால்நடை வளர்ப்பு .. .. .. } 267—271
சமூக நலன் ..
செய்தி, சுற்றுலா, திரைப் படத்தொழில் நுட்பவியல் .. .. .. } 317, 336—340

வரதராஜன், திரு. சௌ. வே.—

வரவு-செலவுத் திட்டம், 1978—79, வாக்கெடுப்பு:
சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு } 964—967

பக்கங்கள்

வ—தொடர்ச்சி

**வரிகள்—**

விற்பனை வரிக்குப் பதில் எக்சைஸ் தீர்வை .. 455

**வாரியங்கள்—**

மின் வாரியம்:—

ஊழியர்கள், தென் சென்னை மின் வழங்கு நிறுவனம், முறைப்படுத்துதல் .. .. 893—894

பொறியாளர் தேர்வு 894

விஜிலன்ஸ், இலாகாவில் குற்றக் கண்டு பிடிப்புப் பணி. .. .. .. .. 4?8

நில மேம்பாட்டு வாரியம், உறுப்பினர் தேர்தல் (தீ.) .. .. .. .. 671—672

**விடுதிகள்—**

அரிசன பின் தங்கியோர் மாணவர், அசைவ உணவு, .. .. .. .. 445

**விவசாயம்—**

நிலக்கடலை ஆய்வு நிலையம், பொள்ளாச்சி, மாற்றுதல் .. .. .. 668—669

பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு, சான்றிதழ் 1—96

**வின்சென்ட், திரு. மீ.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் சட்டங்கள் .. .. .. 316—348
633

**வீட்டு வசதி—**

மணிமுத்தாறு அணை பராமரிப்பு ஊழியர் குடியிருப்புகள், மராமத்து .. .. 632—633

மலைசாதியினருக்கு வீடுகள், மாவுத்தம்பதி .. 663—664





பக்கங்கள்

வ—தொடர்ச்சி

**வீரப்பன், திரு. ஆர். எம்.—**

வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் .. .. 316—317, 318
நுட்பவியல் .. .. .. 354—371

**வெங்கிடு சாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.—**

[illegible]ற்றுப் பாதை அமைத்தல். நெடுஞ்சாலை எண். 47. (கோவை.) .. 481

**[illegible], திரு. த.—**

[illegible]சி ஆலைகள், '[illegible]லர் டைப்' அரவை முறை 895—901

[illegible]த்தனூர் அணை, இடதுபுற மேல் மட்டக் கால்வாய்த் திட்டம். .. .. .. 631—632

[illegible]-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு:
[illegible]ல்நடை வளர்ப்பு, .. .. ..
[illegible]மூக நலன். .. .. .. 248

சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன நகர்ப்பகுதி மேம்பாடு. .. .. 994—996

**வேலை வாய்ப்பகங்கள்—**

பதிவு செய்துள்ள உடல் ஊனமுற்றோர் விவரம். .. .. .. .. 466

ஜ

**ஜெபமணி, திரு. ரா.—**

பம்பு செட்டுகள், கடன் வசூல், நிறுத்துதல், .. 10—13

மின் இணைப்பு, பம்பு செட்டுகளுக்கு, சாத்தான்குளம் யூனியன், .. .. .. 5—6

ஜ—தொடர்ச்சி


| | பக்கங்கள் |
|---|---|
| **ஜேம்ஸ், திரு. ஜே.—** | |
| அரசு ஊழியர்கள், வேலை நிறுத்தம் (த. கோ.) | 487—48[illegible] |
| அலுவலர்கள், அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள், வேலை நிறுத்தம், (ஓ. தீ.) .. | 46—47<br>65—70,<br>71 |
| ஒத்தி வைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களை எந்த வரிசையில் பேச அழைப்பது என்பது குறித்து (ஓ.பி.) | [illegible] |
| கேள்விகள், முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும் இலாகாக்கள் தொடர்பானவை, (த.கோ.) .. | [illegible]8,<br>107—[illegible] |
| வரவு-செலவுத் திட்டம், 1978-79, வாக்கெடுப்பு: | 37—38 |
| தொழிலாளர் நலனும் தொழிற்சாலைகளும் .. வீட்டு வசதி .. .. .. பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு .. | [illegible]8,<br>713—71[illegible] |


———

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

———

திங்கட்கிழமை, 1978 மார்ச்சு 6

———

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு

*401 வினா—**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயத்திற்குப் புதியதாக மின்இணைப்பு கோரும் விவசாயிகளை மின்சார வாரியம், நிலநீர் பொறியாளர்களிடம் சான்றிதழ் பெற்று வர கட்டாயப்படுத்துவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், விவசாயிகளின் நன்மை கருதி அம்முறை ரத்து செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) மற்றும் (ஆ): தற்சமயம் அம்முறை அமுலில் இல்லை.

**திரு. த. வேணுகோபால்:** பேரவைத் தலைவரவர்களே, சாத்தனூர் பகுதியில் எப்போதும் நீர்ப் பற்றுக்குறை என்பது இல்லை. ஆகவே, அப் பகுதியிலாவது அந்த நிலத்தடிநீர் சான்றிதழ் இல்லாமல் மின்சாரம் அளிக்க அரசு ஆவன செய்ய முடியுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவரவர்களே, இவ்வாண்டு மின்சாரம் தர இருக்கின்ற 35,000 பம்ப்செட்டுகளுக்கும் அத்தகைய நிலத்தடி நீர் சான்றிதழ்கள் வேண்டுமென்று வற்புறுத்தப்படமாட்டாது.

செய்து, புதிதாக தற்போது ஆய்வு செய்து, புதிதாகத் தேர்ந்
தெடுக்கப்பட்ட மனுதாரர்களுக்கு மின்சாரம் வழங்க அரசு
முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே,
சாங்ஷன் செய்வதிலே தில்லுமுல்லுகள் நடந்ததாக மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். தில்லுமுல்லுகள்
நடந்தன என்பதற்கு எந்தவிதமான ரிகார்டும் கிடையாது.

* 402 Q.— Dr. K. SAMARASAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government propose to relax the existing procedure that power supply to new pump-sets are prohibited for wells situated within a distance of 400 feet in Dharmapuri district where adequate vround water is available ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** கூட்டுறவு நிலவள
வங்கி, கிராமப்புற மின் வசதிக் கழகம் ஆகியவையின் உதவியோடு
மின் இணைப்பு வழங்கும் திட்டங்கள், இந்தக் கட்டுப்பாட்டிற்கு
உட்படுகின்றன. மற்ற திட்டங்களின் கீழ் இணைப்பு வழங்கு
வதற்கு தற்போது இம்முறை அமுலில் இல்லை.

**டாக்டர் கே. சமரசம்:** தலைவரவர்களே தர்மபுரி மாவட்டம்
பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால் மட்டுமல்ல; அங்கே
3 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள்தான்
அதிகமாக இருக்கிறார்கள் என்ற காரணத்தால் மின் இணைப்பு
கொடுப்பதில் இப்போதிருக்கின்ற விதியைத் தளர்த்தி, அத்தனை
பேர்களுக்கும் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே,
தர்மபுரி மாவட்டத்தில் 20,550 மனுக்கள் வந்திருக்கின்றன.
அதிலே அனுமதி கொடுக்கப்பெற்றவை திட்டத்தட்ட 3,500 தான்.
ஆகையால் அங்கே தேவை அதிகமாகும் அதேநேரத்தில்
'சாங்ஷன்' ஆனது 3,500 என்ற காரணத்தால் பல மனுதாரர்
களுக்கு மின்சாரம் வழங்க முடியவில்லை. இதற்குத் தனியாகத்
திட்டம் போடுவதற்கில்லை.



*** 403 வினா—திரு. ர. ஜெபமணி:** மாண்புமிகு பொதுப்பணித்
துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சாத்தான்குளம் யூனியனில் உள்ள விவசாயிகளின்
பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கிடைக்காமல் உள்ளது
அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு நடவடிக்கை
எடுத்துள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) மற்றும் (ஆ):
மின் இணைப்பு வழங்க அரசு
நிலுவையில் உள்ள மனுக்களுக்கு
ஒரு முன்னுரிமைப் பட்டியல் தயாரித்துள்ளது. இந்த வழிமுறைக்கு
ஏற்ப மின் இணைப்பு வழங்கப்படுகிறது.

**திரு. ர. ஜெபமணி:** சட்டப்பேரவைத் தலைவரவர்களே, திருச்
செந்தூர் தாலுகா பின்தங்கிய தாலுகாவாக இருக்கிறது. அந்தத்
தாலுகாவில் சாத்தான்குளம் மிகவும் பின்தங்கியது. அந்த
யூனியனுக்கு மட்டும் மின்னிணைப்பு கிடையாது என்று அரசாங்கம்
அறிவித்திருப்பதாக அதிகாரிகள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.
அதனால் அங்கே இருக்கிற விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.
அதனால் என்ன காரணம் என்பதை அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே,
சாத்தான்குளம் ஒன்றியத்தில் 1,159 மனுக்கள் வந்திருக்கின்றன.
அவற்றில் 35 மனுக்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. 496
மனுக்கள் ஆதாயமற்றது என்ற காரணத்தால் நிராகரிக்கப்
பட்டன. மீதம் 628 மனுக்கள் பற்றி மேற்கொண்டு நடவடிக்கை
எடுக்க வேண்டும்.

**புலவர் கா. கோவிந்தன்:** தலைவரவர்களே, நிலவள வங்கிகள்
கடன் கொடுக்கின்ற நோக்கில், அந்தக் கடனைக்கொண்டு கிணறு
வெட்டி, ஆயில் என்ஜின் அல்லது மின்சார மோட்டார்
வைத்திருந்தால், அவர்கள் பாதிக்கப்படாத வகையில் அவர்களுக்
காவது மின்சார இணைப்புக் கொடுக்க அரசு முன்வருமா என்று
அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு ஏற்கெனவே அனுமதி வழங்கப் பட்டிருந்தால் மின்னிணைப்பு கிடைக்கும். 'சாங்ஷன்' ஆகாமல் இருந்தால் கொடுக்க இயலாது.

**புலவர் கா. கோவிந்தன்:** அப்படிப்பட்ட விவசாயிகள் 1969 ஆம் ஆண்டிலேயே கடன் வாங்கியும், இன்னும் மின்னிணைப்புக் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக் காவது உடனடியாக மின்னிணைப்பு கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, அம்மாதிரி இருந்தால் அதை அரசு பரிசீலிக்கும்.

### தூக்கு தண்டனையை நீக்குதல்.

* 404 வினா—திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா, திரு. துரை கலிமூர்த்தி, திரு. எஸ். கணேசன், திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தூக்கு தண்டனையை ஒழிக்கும் யோசனை அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

(ஆ) தமிழ்நாடு சிறைகளில் உள்ள ஆயுள் தண்டனைக் குற்றவாளிகளின் எண்ணிக்கை என்ன?

(இ) ஆயுள் தண்டனைக் காலம் என்பது எத்தனை ஆண்டுகள்?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR:

(a) No.

(b) There are 2,653 life prisoners confined in Tamil Nadu as on 5—11—1977.

(c) 20 years.

**திரு. எஸ். கணேசன்,** தலைவரவர்களே, இந்த ஆயுள் தண்டனை என்பது மற்ற மாநிலங்களில் 7 ஆண்டு, 8 ஆண்டு என்று இருப்பதாகச் சொல்லப்படுகிறது. பொதுவாகவே, ஆயுள் தண்டனை பெற்று, சிறைச் சாலைகளில் இருக்கிற குற்றவாளிகள் 4 அல்லது 5 ஆண்டுக் காலத்தில் நேர்மையாளர்களாகவும் ஒழுக்கமுள்ளவர் களாகவும் மாறிவிடுகிறார்கள். எனவே, இந்த அரசு அதைப் பரிசீலனை செய்து, 20 ஆண்டு என்று இருப்பதை குறைக்க நடவடிக்கை எடுக்குமா?





THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Regarding the period of imprisonment which is taken into consideration by the neighbouring States, this Government has no information. But so far as the policy of this Government is concerned, it is mainly dependent on the attitude of the Centre also. But normally when a man completes 10 years of actual imprisonment excluding remissions, this Government always considers their eligibility and claim for release on the recommendation of the Advisory Board.

(முற்பகல் 9-10)

**திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்:** பேரவைத் தலைவரவர்களே, சட்டங்கள் கடுமையாக இருந்தால்தான் சட்டம் ஒழுங்கு (Law and Order) காப்பாற்றப்படும் என்பதும், பொதுமக்கள் அச்சமின்றி நிம்மதியாக வாழ்வார்கள் என்பதும் அரசுக்குத் தெரியுமா? அது உண்மையா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: We believe in this theory of proportionate punishment to the heinous character of the offence.

**திரு. கே. பண்ணை சேதுராம்:** தலைவரவர்களே, இப்போது கொலைக் கைதிகளுக்குத்தான் தூக்குத் தண்டனை விதிக்கப்படு கிறது. அதேமாதிரி கலப்படம் செய்கின்ற சமூகவிரோத செயல்களைப் புரிபவர்களுக்கும் இவ்வாறு தூக்குதண்டனை விதிக்க சட்டம் கொண்டுவரப்படுமா? ட்ரான்ஸ்போர்ட்டேஷன் ஃபார் லைப் என்ற பழைய சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: I think this transportation for life has been given up a long time back, and in its place, imprisonment for life has been substituted. I do not think that the modern approach to criminal law would warrant transporting prisoners to the Andamans, or transportation for life will be countenanced by any section of this House.

திரு. ரா. மார்க்கபந்து : [1978 மார்ச் 6
பேரவைத் தலைவரவர்களே,
ஆண்டுகளுக்கு முன்பாகவே பம்ப் செட் வாங்கி வைத்துக்
கொண்டு அதற்கான மனுவை மின்சார இலாகாவிற்குப் போட்ட
பின்பும், இன்று வரையிலும் நிலத்தடி நீர் கிளியரன்ஸ்
சர்ட்டிபிகேட் இல்லை என்பதால் மின்சார இணைப்புத்தர மறுக்
கிறார்கள். ஆகவே, அதை நீக்குவதற்கு ஏதாவது முயற்சி
எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே,
மின்சார வாரியம் ஏற்கனவே சாங்ஷன் செய்யப்பட்ட மனுக்
களுக்கு மின்சாரம் வழங்கவேண்டுமென்று அரசு உத்தரவிட்டு
இருக்கிறது. அவர்கள் மின்சார வாரியத்திற்கு மனு போடாமல்
மோட்டாரை மட்டும் வாங்கி வைத்துக்கொண்டு இருந்தால், அது
அவர்களுடைய இஷ்டமே தவிர வேறு அல்ல.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, மனுக்களைப் போட்டு
இருப்பவர்களுக்குக் கூட கொடுக்கமாட்டேன் என்று சொல்
கிறார்கள். ஆகவே ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக
மனுப்போட்டவர்களுக்காவது கொடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மனு
போட்டவர்களுக்கு எல்லாம் தர இயலாது. சாங்ஷன் ஆகியிருப்
பவர்களுக்கு மட்டும் தான் தர முடியும்.

திரு. கா. கந்தசாமி: தலைவரவர்களே, நிலத்தடி நீர் சான்றிதழ்
கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இன்னும் வரவில்லை
வரவில்லை என்று சொல்கிறார்கள். சாங்ஷன் செய்யப்பட்ட
கிணறுகளுக்குக் கூட அந்த சர்டிபிகேட் கொடுத்தால் தான்
அவர்கள் மின்சார சப்ளை செய்ய முடியும் என்று சொல்கிறார்கள்.
இன்னும் அந்த நிலத்தடி நீர் சான்றிதழ் கோவை
மாவட்டத்திற்குப் போய்ச்சேரவில்லையா? அரசு அதற்கான
உத்தரவை மின்சார வாரியத்திற்கு அனுப்பவில்லையா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே,
கோவை மாவட்டமானாலும் சரி, அது வேறு எந்த மாவட்ட
மானாலும் சரி, சாங்ஷன் ஆகி இருக்குமானால் அப்படி சாங்ஷன்
செய்யப்பட்ட பம்ப்செட்டுகளுக்கு அந்த நிலத்தடி நீர் சான்றிதழ்
தேவை இல்லை என்று மின்சார வாரியத்திற்கு அரசு சொல்லி



1978 மார்ச் 6]

இருக்கிறது. அதற்கான உத்தரவு பிறப்பித்து இருக்கிறது.
ஆகவே கோவை மாவட்டத்தில் அத்தகைய குறை இருக்குமானால்
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சரின் கவனத்திற்குக்
கொண்டு வரலாம்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, அப்படி சாங்ஷன்
செய்யப்பட்ட கேஸ்கள் மிக சொற்பமாக இருக்கின்றன. சாங்ஷன்
ஆகாத, மனு போட்டவர்கள்—நிலவள வங்கி மூலமாக கடன்
பெற்று கிணறு வெட்டி, பம்ப்செட் வாங்கி வைத்து இருப்பவர்கள்
ஏராளமான பேர் இருக்கிறார்கள். அவர்கள் மின்சார இலாகா
விற்கு மனுப் போட்டு விட்டு நீண்ட நாட்களாகக் காத்துக்கொண்டு
இருக்கிறார்கள். சென்ற ஆண்டு 35,000 கிணறுகளுக்கு மின்
இணைப்பு கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது. அது பூராவும்
இன்னும் கொடுக்கப்படவில்லை. இந்த ஆண்டும் அப்படி
கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. இந்த ஆண்டு எல்லா
இடங்களிலும் தண்ணீர் பற்றுக்குறை இல்லாமல் இருப்பதால்
அந்த விதியைக் கொஞ்சம் தளர்த்தி விவசாயம் பாதிக்காத
அளவிற்கு மின் இணைப்புகளைத் தருவதற்கு, அந்த நிலத்தடி நீர்
சான்றிதழ் தேவை என்ற விதியைத் தளர்த்தி, விரைவாக
நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே,
மின்சாரம் கோரி மனுப் போட்டவர்கள் 2¼ லட்சம். ஆனால்
சாங்ஷன் செய்யப்பட்ட மனுக்கள் 80,000. நாம் இந்த ஆண்டு
தர இருப்பது 35 000. ஆகவே தான், சாங்ஷன் செய்யப்பட்ட
வர்களுக்கு முதலிலே மின் வசதி கொடுத்து விட்டு, பிறகு
மற்றவை குறித்து அரசு முடிவு எடுக்கும்.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் தலைவரவர்களே,
ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2¼ லட்சம் மனுக்கள்
வந்து இருப்பதாகவும், அதிலே 80,000 பேருக்குத்தான் சாங்ஷன்
செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் இந்த ஆண்டு 35,000 சாங்ஷன்
செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்கள். ஆனால் அப்படி
சாங்ஷன் செய்யப்பட்டதிலே கடந்த காலத்தில் பல
இன்னல்கள் நடந்த காரணத்தாலே அவற்றை மறுபரிசீலனை

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே, ஆயுள் தண்டனை 20 ஆண்டுகாலம் என்று இருப்பதால் அவர்களை ஒரு வருடத்திற்கு ஒரு மாதமாவது பரோலில் விடக்கூடிய முறையில் ஏதாவது இப்போது இந்த அரசு ஆலோசித்துக்கொண்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: I think at least this Government has been fairly liberal in granting parole. The suggestion that every year the life imprisonment prisoners, that is what we call the lifers, may be given the benefit of parole, will be considered by this Government on merits.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவரவர்களே, ஆயுள் தண்டனை மிக நீண்ட ஆண்டுகளாக இருக்கிறது. அவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாவதற்கும் அன்றாட மக்கள் பிரச்சினையில் இணைந்து கொள்வதற்கும் அவர்களைப் பரோலில் விடவேண்டியது அவர்களுடைய அடிப்படை உரிமையாக இருக்கிறது. வெளியே அவர்கள் அப்படி வருவதன் காரணமாக திருந்துவதற்கும் ஒழுக்கம் உள்ளவர்களாக மாறுவதற்கும் ஒரு பாச உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படுவதற்கும் வழிவகையாக இருக்கிறது. ஆகவே அந்த ஆண்டுக்கு ஒரு முறை என்பதை 6 மாதங்களுக்கு ஒரு முறை அவர்களை அனுப்பி, மக்களோடு பழக விட்டு அவர்கள் தவறு செய்கின்றார்களா என்பதைப் பார்த்து அவர்கள் சிறை வாழ்க்கையிலே திருந்துவதற்கு இந்த அரசு வழிவகைகள் காண முயற்சிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR The principle behind punishment is—let us all remember—the prisoner has committed a very serious offence, particularly the lifers. You must also try to view it from the standpoint of the family which lose its breadwinner. If 'X' is murdered and 'X' is the breadwinner the entire family becomes destitute or decrepit practically. Therefore viewing from that standpoint, there is some amount of validity in the theory of punishment. Whether parole must be granted every si months, is a matter which will be considered on merits again.

திரு. என். இட்டப்பா: தலைவரவர்களே, 1976-ஆம் ஆண்டு அட்வைசரி போர்டால் பரிந்துரை செய்யப்பட்ட ஆயுட்கால தண்டனைக் கைதிகள் பற்றிய நிலைகள் கவர்னர் ஆட்சிக் காலத்தி தமிழ்நாட்டில் ஒத்தி வைக்கப்பட்டு இருப்பதாகவும் அது மீண்டு



பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை என்றும் ஆயுட்கால கைதிகள் குறைபட்டுக்கொள்கிறார்கள், இது அரசுக்குத் தெரியுமா? அது பற்றி அரசு ஏதேனும் ஆவன செய்ய முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Government needs notice. A separate question may be put.

வெளி மாநில கைதிகள்.

*405 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமது மாநிலத்தின் உள்ள சிறைச்சாலைகளில் வைக்கப்பட்டுள்ள வெளி மாநிலத்தைச் சேர்ந்த கைதிகளின் எண்ணிக்கை என்ன?

(ஆ) அவர்கள் எந்தெந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR:

(a) 26.

| | | |
|---|---|---|
| (b) | Andhra Pradesh ... ... ... | 4 |
| | Kerala ... ... ... ... | 3 |
| | Karnataka ... ... ... ... | 3 |
| | Maharashtra ... ... ... | 3 |
| | Madhya Pradesh ... ... ... | 4 |
| | West Bengal ... ... ... ... | 2 |
| | Pondicherry ... ... ... ... | 7 |
| | | 26 |

திரு. எஸ். கணேசன்: வேறு மாநிலங்களிலிருந்து இங்கேயுள்ள சிறைச்சாலைகளில் இருக்கக்கூடிய கைதிகள் இந்த மாநிலத்தில் குற்றம் புரிந்தவர்களா அல்லது அந்தந்த மாநில அரசுகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்த மாநிலத்தில் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார்களா? அப்படியானால் அவர்களுக்காகும் செலவுகளை அந்தந்த மாநில அரசு ஈடுசெய்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Most of these prisoners are confined in the jails in the State for the offences committed inside the State. If their nativity—as the word used is nativity—place of birth is in the other State and if the offence is committed inside the State, they are confined in our State. If the other State Government is willing to take them, we are prepared to send them back. That is only on reciprocal basis, please remember.

MR. SPEAKER: Thiru Sivaswamy.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: On a point of further explanation to the supplementary question put by the Hon. Member Thiru Ganesan. Some years back you must have read in the newspapers there was one Sarala Sella *alias* Chandra —Car Mohini—she came from Karnataka. But the Car Mohini is confined in the jail in Tamil Nadu State because the offence was committed inside Tamil Nadu.

திரு. செ. சிவசாமி: அவசரநிலை காலத்தில் மதிப்பிற்குரிய ஷேக் அப்துல்லா அவர்கள் நம் மாநிலத்தில் சிறைவைக்கப் பட்டதாகத் தெரிகிறது. அவர்கள் எந்தச் சிறையில் இருந் தார்கள், எவ்வளவு காலம் இருந்தார்கள், எவ்வளவு செலவாயிற்று என்று சொல்லப்படுமா?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Government needs notice.

பம்புசெட்டுகளுக்குக் கடன் உதவி.

*406 வினு—திரு. ர. ஜெபமணி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கிடைக்கும் வரை அரசு கடன் வசூலை நிறுத்திவைக்க உத்தேசமுண்டா?

(ஆ) அந்த இடைக்காலத்துக்கு வட்டி இல்லாமல் வசூலிக்க இந்த அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு க. உரொ. எட்மண்ட்: (அ) இல்லை. இருந்த போதிலும், மின் இணைப்புக் கிடைக்காத புதிய கிணறும் பம்பு செட்டும் சேர்ந்த அல்லது கிணற்றை ஆழப்படுத்தவும் பம்பு செட்டும் சேர்ந்த க[illegible] தவணையை செலுத்த கடன்





வழங்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு ஆண்டு காலச் சலுகை அனுமதிக்கப்படுகிறது. மின் இணைப்பு முற்றுப்பெருத தவிர்க்க முடியாத இனங்களில் கடன் தவணை செலுத்த அதிகப்பட்சமாக 23 மாதங்கள் அனுமதிக்கப்படுகின்றது. கடன் பம்புசெட்டுக்கு மட்டுமானல் சலுகை காலம் அனுமதிக்கப்படுவதில்லை.

(ஆ) இல்லை.

திரு. ர. ஜெபமணி: சபாநாயகர் அவர்களே, விவசாயிகள் கிணறு வெட்டிவிட்டு தண்ணீர் இல்லாமல் அவர்கள் கரன்ட் கேட்கவில்லை. தண்ணீர் நிறைய இருந்தாலும் கொடுப்பதில்லை என்பது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும். ஆனல் அரசாங்கத்திலிருந்து கிணறுகள் வெட்டுவதற்கு கடன் கொடுத்திருக்கிருர்கள். பம்ப்செட்ஸ் வைக்கவும் கடன் கொடுத் திருக்கிருர்கள். ஆனல் கரன்ட் கொடுக்காமல், அந்தக் கடனை வசூலிப்பதில் அதைக் கொஞ்சம் தள்ளி வைத்திருக்கிறேம் என்று சொல்கிருர்களேதவிர வட்டியோடு சேர்த்து நன்ருக வசூலித்து விடுகிருர்கள். தவறு அரசாங்கத்தினுடையதே தவிர கிணறு வெட்டியவர்கள் தவறு அல்ல. மின் இணைப்பு கேட்டால் நிலத்தடி நீர். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெரியவர், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. ர. ஜெபமணி: ஆகவே நிலத்தடி நீர் இல்லையென்று சொல்லக்கூடியவர்கள் ஆயில் என்ஜின் வைத்து தண்ணீர் எடுப்பவர் களுக்கு அனுமதி கொடுக்கிருர்கள். அப்படி ஆயில் என்ஜின் வைக்கமுடியாதவர்களுக்கு கரன்ட் கொடுப்பதுவரை கடன் வசூல் செய்வதை ஒத்திவைக்க வேண்டும், வட்டியை நீக்க முடியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 9-20)

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, வட்டியை நீக்க முடியாது என்று நான் ஏற்கனவே மூலக் கேள்விக்குப் பதில் சொல்லி விட்டேன்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவர் அவர்களே, பம்பு செட் வாங்குவதற்கு லோன் வழங்கப்படுகிறது, கிணறு வெட்டு வதற்கும் லோன் வழங்கப்படுகிறது. இந்த இரண்டும் சேர்த்து

[1978 மார்ச் 6

ஒரு வருடத்திற்கு 2000 ரூபாய் வரை தவணை வருகிறது. மகசூல் கிடைப்பதற்கு முன்பு கூட இந்தத் தவணையைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. தொழிற்சாலையை எடுத்துக்கொண்டால் கடன் பெற்று தொழிற் சாலையை ஏற்படுத்தி தொழிற்சாலை இயங்க ஆரம்பித்து உற்பத்தி செய்த பின்தான் தவணை கொடுக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுத்த பின்தான் கடன் தவணை வசூலிக்கப்படும் என்பதை அரசு ஒத்துக்கொள்ளலாம். அரசாங்கம் ஏன் இதில் பிடிவாதமாக இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** கடன் வசூலை ஒத்தி வைக்கலாம் அதாவது கடன் தவணையை ஒத்திவைக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இதில் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றிருப்பதற்கு காரணம், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது போல் அவகாசம் கொடுத்தால் கூட்டுறவுத் துறைக்கு அதிக ... ஏற்படும் என்பது தான்.

**திரு. கே. கந்தசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இவ்விதம் ஒத்திவைக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் கடன் வழங்குகின்ற உலகவங்கி இதற்கு ஒத்துக்கொள்ள மாட்டோம் என்று சொல்வதுதான் என்று சொல்கிறார்கள். நமது அரசு இப்போது நம்மிடமுள்ள நடைமுறை சிக்கலை எடுத்துச்சொல்லி, மின் இணைப்பு வரும்வரையிலும், விவசாயிகளுக்கு வருமானம் கிடையாது. கம்மலைக்கூட கடன் தவணைக்காக பிடுங்கிக்கொண்டுபோய்விடுகிறார்கள். இவ்விதம் விவசாயிகள் எந்தவிதமான வருமானமும் இல்லாத நிலைமையிலும் கடன் தவணைக்காக நிர்பந்திக்கப்படுவதை நாம் அறிவோம். கொடுத்த கடனுக்குத் தவணைக்கடன், அதோடு வட்டி, வட்டிக்குமேல் வட்டி இப்படி வசூலித்துக்கொண்டிருப்பது முறை தானா? பொதுவாக எங்கு பார்த்தாலும் போராட்டங்கள் நடைபெறுகின்றன, அப்படி போராட்டம் நடைபெறும்போது மைனாரிட்டிகளாக இருக்கின்ற ...ர்களுக்கு அவர்களுடைய கோரிக்கைகள் ஏற்கப்படுகின்றன ...அரசு அவற்றுக்கு ஒத்துக்கொள்ளவும் செய்கிறது. அதே போல் இந்த நாட்டில் மெஜாரிட்டியாக இருக்கும் ஏழை விவசாயிகளுக்கு



1978 மார்ச் 6]

பாதுகாப்பு தருகின்ற முறையில், அரசு கருணை கூர்ந்து இவர்களுடைய கோரிக்கையையும் கவனிக்குமா? உலக வங்கியிடம் ...அவர்கள் போடுகின்ற நிபந்தனைகளைத் தளர்த்திக்கொடுக்க முயற்சி எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** உலக வங்கியோடு பேசி இதற்கான முயற்சிகள் எடுக்க அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### டிராக்டர்கள் வாங்கக் கடன்கள்

*407 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1976-ம் ஆண்டில் உலக வங்கி, தமிழ்நாடு நிலவள வங்கியின் மூலம் டிராக்டர்களுக்கு கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் எத்தனை டிராக்டர்களுக்கு எத்தனை விவசாயிகளுக்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டது?

(ஆ) இதற்கு வசூலிக்கப்படும் வட்டி விகிதம் எவ்வளவு?

(இ) வட்டி விகிதத்தைக் குறைக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** (அ) 1976 ஆம் ஆண்டு முதல் 1977 அக்டோபர் முடிய உலக வங்கித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாநில கூட்டுறவு நிலவளவங்கியின் மூலம் 1601 டிராக்டர்கள் வாங்க, 1601 விவசாயிகளுக்கு ரூ. 835 இலட்சம் அளவில் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இதற்கு வசூலிக்கப்படும் வட்டி விகிதம் 9½ சதவிகிதம்.

(இ) வட்டி விகிதத்தைக் குறைக்க உத்தேசமில்லை.

**திரு. எஸ். ஜே. இராமசாமி:** தலைவர் அவர்களே, இந்த டிராக்டர்கள் வழங்குவதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வெளி நாட்டிலிருந்து தயாராகின்ற டிராக்டர்களையும், உள்நாட்டில் தயாராகின்ற டிராக்டர்களையும் நாம் வாங்கி வழங்குகிறோம். இதில் உள்நாட்டில் தயாராகின்ற டிராக்டர்களின் விலை 10 ஆயிரம் ரூபாய் 12 ஆயிரம் ரூபாய்

விலை குறைவாக இருக்கிறது. இப்படிப்பட்ட வித்தியாசத்தைப் போக்குவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா? இந்த வித்தியாசத்தைப் போக்குவதற்கு எக்சைஸ் ட்யூட்டியை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

இரண்டாவது நான் கேட்க விரும்புவது. உலக வங்கியிட மிருந்து 9½ சதவிகிதம் வட்டிக்கு கடன் வாங்கி விவசாயிகளுக்கு வழங்கப்படும்போது 12½ சதவிகிதம் வட்டி என்று விதிக்கிறார்கள்; இதைக்க குறைப்பதற்கும் என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்படுகின்ற டிராக்டர்களுக்கும், உள்நாட்டில் தயாராகின்ற டிராக்டர்களுக்கும் விலை வித்தியாசம் இருப்பது உண்மைதான். இந்த வேறுபாட்டை நீக்குவது என்பது இயலாத காரியம். 12½ சதவிகிதம் வட்டி வாங்குவது என்பது பற்றி விசாரிக்கப் படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் லட்சக்கணக்கான விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு வேலை தேடிக் கொடுக்கவேண்டும் என்பதில் இந்த அரசு மிகுந்த கவலையுடன் செயலாற்றி வருகிறார்கள். அதே சமயத்தில் அதிகமான டிராக்டர்களை வரவழைத்து விவசாயத்தில் ஈடுபடுத்து வதால், விவசாயக் கூலித் தொழிலாளர்களுக்கு இருக்கின்ற வேலைவாய்ப்புக் குறைந்துவிடும் என்பதை அரசு உணருமா? இப்படி இவர்களின் மனித சக்தியைக் குறைக்கின்ற அளவில், இயந்திரங்களைக் கொண்டுவந்து கிராமப்புறங்களில் புகுத்துவதை அரசு மறுபரிசீலனை செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டிலிருந்து டிராக்டர்கள் வாங்க வேண்டிய நிலைமை ஏற்படுவதற்கு காரணம், உள்நாட்டிலிருந்து டிராக்டர்கள் வாங்கி விவசாயிகளுக்கு வழங்கும்போது, இதன் எண்ணிக்கை போதுமான அளவுக்கு இல்லாமல் இருக்கின்ற காரணத்தால், சில நேரங்களில் வெளிநாட்டிலிருந்து தயாரிக்கப்படுகின்ற டிராக்டர்கள் தருவிக்கப்படுகின்றன. மற்றும், டிராக்டர்கள் வாங்குவதற்கு கடன் கொடுப்பது உலக வங்கி என்பதை நாம் மறந்து விட கூடாது.



**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, உள்ளபடியே உங்கள் பாதுகாப்பு இப்போது வேண்டியிருக்கிறது. என்னுடைய கேள்வி வேறு; அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் வேறு. நான் வேலை இழப்பு ஏற்படுகிறது என்று சொன்னேனே தவிர, நான் டிராக்டர்களுக்கு விரோதியல்ல. இன்றையதினம் இதன் காரணமாக வேலை இழப்பு ஏற்படுகின்றது என்பது தெரியும். மேன் பவர் அதாவது மனித சக்தியை உபயோகப் படுத்துவது என்பதுதான் இந்த அரசின் கொள்கை என்று தெரிவித்திருப்பதன் காரணத்தினாலே, அதை உபயோகிப்பதற்கு முதலிடம் கொடுத்து, இப்போது டிராக்டர்களை நிறுத்திவிட்டு, இந்த ஆட்களுக்கு வேலை கொடுப்பதற்கு முதலிடம் கொடுக்கின்ற முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றிய யோசனை இந்த அரசின் பரிசீலனையில் இப்போது இல்லை.

**புலவர் கா. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, நில வள வங்கிகளில் இப்போது டில்லர், டிராக்டர் போன்றவைகளுக்குத் தான் கடன் கொடுக்கிறார்கள். புதிய கிணறுகள் வெட்டு வதற்கோ, பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கோ இப்போது கடன் கொடுப்பதில்லை: இன்றைக்கு இந்த நிலைமை இருக்கின்ற காரணத்தினாலே, டிராக்டர், டில்லர்களை திரு. எஸ். ஜே. இராமசாமி போன்ற பெரிய விவசாயிகள்தான் பயன்படுத்தி இதனால் பயனடைகிறார்கள். எனவே, புதிய கிணறுகள் வெட்டுவதன் மூலம், பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதன் மூலம் ஏழை விவசாயிகள் பயனடைவார்கள். ஆகவே, இந்தக் கொள்கை மாற்றத்தை இந்த அரசு செய்து, ஏழை விவசாயி களுக்கு உதவுகின்ற வகையிலே கடன் கிடைக்கின்ற அளவுக்கு வழி செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:** பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கிணறுகள் வெட்டுவதற்கும், பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் இப்போது கடன் வழங்குவதில்லை; டில்லர், டிராக்டர்கள் வாங்குவதற்குத்தான் கடன் வழங்கப்

[1978 மார்ச் 6

கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் கடன் கொடுப்பதற்கும் உண்டான நடவடிக்கைகளை இந்தத் துறை நிச்சயம் பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**கடன் நிவாரண மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்**

* 408 வினா—திரு. என். வரதராஜன்: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல்லில் 25—9—1977 தேதி நடைபெற்ற மதுரை மாவட்ட கடன் நிவாரண மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அரசுக்குக் கிடைத்துள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அவைமீது அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை யாது ?

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** (அ) ஆம்.

(ஆ) பேரவையின் முன் அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

[முற்பகல் 9.30]

**திரு. எம். அண்ணாமலை:** கிணறுகள் வெட்டுவதற்கு நிலவள வங்கி அல்லது தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் போன்ற ஸ்தாபனங்களில் கடன் வாங்கிக் கிணறு வெட்டியும் சதுப்பு செட் ஆகவும், கடின முறையாகவும் தண்ணீரற்றும் உபயோகமற்ற தண்ணீராகவும் உள்ள நிலையில் அந்தக் கடன்களைத் தள்ளுபடி செய்ய அரசுக்கு மனுக்கள் வந்தனவா ? அதன் பேரில் அதுபற்றி அரசு பரிசீலித்ததா .

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** கிணறுகளுக்கு வழங்கப்பட்ட கடன்களைத் தள்ளிவைக்க வேண்டும் அல்லது ரத்து செய்ய வேண்டுமென்று ஏராளமான மனுக்கள் அரசுக்கு வந்திருக்கின்றன. அரசு ஏற்கனவே முடிவு எடுத்துத் தன்னுடைய முடிவை அறிவித்திருக்கிறது.

* 154—158-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



1978 மார்ச் 6]

**உயர்நிலைப் பள்ளிகளில் பொறியியல் ஆசிரியர்கள்.**

* 409 வினா—திரு. செ. சிவசாமி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள பொறியியல் ஆசிரியர்களுக்கு ( Engineering Instructors ) இன்னும் தேர்வு நிலைத் தகுதிகள் வழங்கப்படாமை குறித்து கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(ஆ) இக்கோரிக்கையின்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** (அ) ஆம்.

(ஆ) இக்கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளவேண்டியதில்லை என அரசாணை எண். 333 கல்வி, நாள் 14—2—77-ல் ஆணை வெளியிடப்பட்டது. அவ்வரசாணையினை மீண்டும் மறுபரிசீலனை செய்து தேர்வுநிலை அளிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். அக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. செ. சிவசாமி:** உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள பொறியியல் ஆசிரியர்களுக்குத் தேர்வு நிலைத் தகுதிகள் வழங்கப்படாமல் நீண்ட நாட்களாக இருந்து கொண்டிருக்கிறது. அது சம்பந்தமாகப் பல தடவைகள் மந்திரி அவர்களிடத்திலும், டைரக்டர் அவர்களிடத்திலும் நேரடியாகச் சொல்லியும்கூட இன்று வரை அது சம்பந்தமாகப் பரிசீலிக்கப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. அது பற்றி எப்போது முடிவு எடுக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** அந்தப் பரிசீலனை முடிந்தவுடன் முடிவு அறிவிக்கப்படும்.

**பிஷப் ஹிபர் உயர்நிலைப்பள்ளி, புத்தூர்**

* 410 வினா—திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி, புத்தூரில் இருக்கும் பிஷப் ஹிபர் உயர்நிலைப்பள்ளி செயல்படாமல் இருக்கிறதா ?

படுவதாக மாண்புமிகு உறுப்பினர் புலவர் கோவிந்தன் அவர்கள்
வினாவை எழுப்பியிருக்கிறார்கள். புதிய கிணறுகள் தோண்டு
வதற்கும் பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் கடன்
வழங்குவதை இந்த அரசு நிறுத்திவைக்கவில்லை. இதற்கு
முந்திய அரசுதான் அத்தகைய கடன் வழங்குவதை நிறுத்தி
வைத்திருக்கிறார்கள். காரணம், ஏற்கனவே அப்படித் தோண்டப்
பட்ட கிணறுகளுக்கு, ஏற்கனவே அமைக்கப்பட்ட பம்பு செட்டு
களுக்கு மின்சார இணைப்புக் கிடைக்காத காரணத்தினால், மேலும்
இது தேவையில்லை என்று கருதி அந்த நேரத்திலே, அந்த
எண்ணத்திலே நிறுத்தியிருக்கிறார்கள்.

**திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் தலைவர் அவர்களே,
இப்போது 1,600 டிராக்டர்கள் விவசாயிகளுக்குக் கொடுக்கப்
பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலே
பெரும்பகுதி கொஞ்சம் பெரிய விவசாயிகளுக்குத்தான் கிடைத்
திருந்தாலும், சில மத்தியதர விவசாயிகளும் வாங்கியிருக்கிறார்
கள். தவிர, இதைத் திருப்பிக் கட்டும் தவணை 7 ஆண்டுகள், 10
ஆண்டுகள் என்று போட்டிருப்பதால், அதிகத் தொகை கட்ட
வேண்டியிருக்கிறது. அப்படி அதிகத் தொகையைத் திருப்பிக்
கட்ட முடியாமல், இன்றைக்கு அவர்கள் ஜப்தி செய்யப்பட்டு,
கடன் வழங்கியவர்களே இந்த டிராக்டர்களைத் திருப்பி எடுத்துச்
செல்கிறார்கள். ஆகவே, இந்தத் தவணைக் காலத்தை நீட்டிப்
பதற்கும், இன்றைக்கு சிறுசிறு விவசாயிகள் கூட்டாகச் சேர்ந்து
டிராக்டர் வேண்டுமென்று கேட்டால், அவர்களுக்குக் கொடுப்
பதற்கும் இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** பேரவைத் தலைவர்
அவர்களே, தவணை முறையை மாற்றியமைப்பது விஷயமாக
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதை
இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். சிறுசிறு விவசாயிகள்
மொத்தமாகச் சேர்ந்து, டிராக்டர் வாங்குவது அவர்களுக்கு
நல்லதாக இருக்கும் என்கிற நல்லதொரு யோசனையையும்
அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதையும் இந்த அரசு நிச்சய
மாகப் பரிசீலித்து, அதன்மேல் உரிய நடவடிக்கையை எடுக்கும்
என்ற உறுதிமொழியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத்
தெரிவித்துக் கொள்கிறேன்.



**புலவர் கா. கோவிந்தன்:** தலைவர் அவர்களே, புதிய
கிணறுகள் வெட்டுவதற்கும், பழைய கிணறுகளை ஆழப்படுத்து
வதற்கும் கடன் வழங்குவதை சென்ற அரசு நிறுத்திவிட்டது
என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உலக வங்கியின்
கட்டாயத்தின் பேரில் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கலாம். ஆனால்,
அந்த அரசு செய்தது என்ற காரணத்தைப் பார்க்காமல்,
இப்போது இருக்கின்ற நிலைமையில் 50, 60, 100 ஏக்கர்கள்
வைத்திருக்கின்ற பெரிய விவசாயிகள்தான் பயனடைகிறார்கள், 2,
3 ஏக்கர்கள் நிலங்கள் வைத்திருக்கக்கூடிய சிறு விவசாயிகள்
பயனடைய முடியவில்லை. ஆகவே, இந்த அரசு ஏழை விவசாயி
கள் பயனடைகின்ற முறையிலே புதிய கிணறுகளை வெட்டு
வதற்கும், பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும் கடன்
வழங்க, இதை மாற்றியமைப்பதற்கு முன்வருமா? என்று அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:** பேரவைத் தலைவர்
அவர்களே, எந்தவிதமான பழியையும் முந்திய அரசின்மேல்
சுமத்துகின்ற அளவிலே நான் பதிலளிக்கவில்லை. இருக்கின்ற
நிலைமையை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் எடுத்துச்
சொல்வதற்காகத்தான் பதில் சொன்னேன். மாண்புமிகு உறுப்
பினர் அவர்களுக்கும் தெரியும். பொதுப்பணித் துறை அமைச்சர்
அவர்கள் பதில் சொல்கிற நேரத்திலே, 35,000 பம்பு செட்டு
களுக்கு இந்த ஆண்டில் மின் இணைப்புக் கொடுப்பதற்கு இந்த
அரசு முடிவு எடுத்திருக்கின்றது என்றும், ஏற்கனவே லட்சக்
கணக்கான விவசாயிகள் மின் இணைப்பு வேண்டுமென்று
விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள் என்றும் சொன்னார்கள்.
எனவே, இதை நல்லமுறையிலே அமைக்க வேண்டுமென்ற இந்த
அடிப்படையிலேதான், இப்போது எல்லாவற்றுக்கும் கடன்வசதி
கொடுப்பது என்பது, பல்வேறு சந்தர்ப்பங்களில் மின் இணைப்புக்
கொடுக்கப்படாத நேரத்திலே இந்தக் கடனை வசூலிக்கின்றார்கள்,
அதற்கான வட்டித் தொகையை போடுகின்றார்கள் என்கிற
காரணத்தினாலேதான், இந்த அளவுக்கு நிறுத்தி வைக்கப்பட்டு,
இப்பேர்ப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்துவிட்டதற்குப்
பின்னால், மேலும் புதிய கிணறுகள் வெட்டுவதற்கும், பழைய

கறுப்பு, சிவப்பு பானை ஓடுகள், ரௌலட்டட் ஓடுகள் ஆகியவை களோடு சதுரக்காசுகளும் இங்கு கிடைத்திருப்பது கி.பி. முதல் ஐந்து நூற்றாண்டுகளில காவிரிப் பூம்பட்டினம் சிறந்த ஒரு துறைமுகமாக விளங்கியிருந்தது என்பதைத் தெரிவிக்கிறது.

இப்பொழுது சிறு பகுதி வெளிக்கொணரப்பட்டிருக்கும் கட்டடத்தின் முழுப்பகுதியையும் அறிவதற்கும் முழுமையாக மறைந்திருக்கும் மற்ற முக்கியப் பொருட்களை வெளிக்கொணர் வதற்கும் மேற்கூறப்பட்ட இடங்களிலும் காவிரிப் பூம்பட்டி னத்துக்கு அருகிலுள்ள வேறு சில இடங்களிலும் மேலும் அகழ்வாய்வு செய்வது மிகவும் தேவைப்படுகிறது. மேலும் அகழ் வாய்வினைத் தொடர்வதற்குரிய இடங்கள் தனியார்வசம் உள்ள படியால் அவற்றை வாங்குவதில் காலதாமதம் ஆகிறது.

இது சம்பந்தமாக மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறைக்கும் தஞ்சை மாவட்ட ஆட்சியருக்கும் 1973 முதல் கடிதப் போக்குவரத்து நடந்து வந்துள்ளது. மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித் துறை அகழ்வாய்விற்காகத் தெரிந்தெடுத்த இடத்தில் தற்போது மக்களால் வழிபடும் கோவில்களும், குளங்களும் இருக் கின்றன.

இம்மாதிரி இடங்களை நில ஆர்ஜிதம் செய்யலாகாது என அதற் குரிய விதிகளில் உள்ளன. ஆதலின் அவைகளை விட்டுவிட வேண்டுமென்று மாவட்ட வருவாய் அலுவலர் மத்திய தொல் பொருள் துறைக்கு கூறியுள்ளார். தவிரவும் அவ்விடத்தில் வீடு கட்டிக் குடியிருப்பவர்களை வேறு எவ்விடத்திலாவது குடியமர்த்த வேண்டுமென்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இது பொதுக் காரியமாதலால் மாநில அரசே இம்மாதிரிக் குடி யமர்த்தும் வேலையை எடுத்துக் கொண்டால் நலமென தஞ்சை மாவட்ட ஆட்சியருக்கு மத்தியத் தொல்பொருள் துறை தெரிவித்துள்ளது. இவ் விஷயத்தை மாநில அரசே துரிதப் படுத்தி முடித்துக் கொடுக்குமாறு மத்திய தொல்பொருள் ஆய்வுத் துறை 24-12-77-ல் இத்துறையைக் கேட்டுக் கொண்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு நீண்ட விவரங் களை எதிர்காலத்தில் அமைச்சர்கள் மேஜைமீது வைத்துவிட்டால் நலம் என்று கருதுகிறேன்.



### சிதம்பரத்தில் பேருந்து நிலையம்

* வினா 412 **திரு. துரை கலியமூர்த்தி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரத்தில் பேருந்து நிலையம் கட்ட அரசு கடன் வழங்கியுள்ளதா?

(ஆ) இதுவரை கொடுக்கப்பட்டது எவ்வளவு?

(இ) கொடுப்பதாக உத்தேசிக்கப்பட்டது எவ்வளவு?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) ஆம்.

(ஆ) ரூ. 3,24,000.

(இ) மதிப்பீட்டுத் தொகையான ரூ. 10,65,000-ல் நகராட்சி நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 3,66,000-ம் அரசு வழங்கிய கடன் ரூ. 3,24,000-ம் போக மீதித்தொகையான ரூ. 3,75,000 அளிக்குமாறு நகராட்சி கோரியுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

### *Tap rates in Tiruchirappalli.*

* Q. 413.—THIRU R. UMANATH: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any representation regarding raising drinking water tap rates by the Tiruchirappalli Municipality from April 1977 has been rcceived; and

(*b*) if so, the action taken thereon?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** (அ) ஆம்.

(ஆ) திருச்சிராப்பள்ளி நகராட்சியின் நிதி நிலையைக் கருதி பழைய வீதத்திலேயே தண்ணீர் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

**திரு. எஸ். ஆர். இராதா:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தண்ணீர் கட்டணத்தை பழைய நிலையில் வைத்துக்கொள்வது குறித்து உள்ளபடியே நன்றியைச் செலுத்த வேண்டும். ஆனால் சில நகராட்சிகளிலே வியாபார ரீதியிலே தண்ணீர் கட்டணத்தை உயர்த்த அரசு உத்தரவிட்டு இருக்கிறது, கும்பகோணம்

(ஆ) ஆம் என்றால், எத்தனை காலம்?

(இ) இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மற்றும் (ஆ) 31-10-77 முதல் 15-1-78 வரை இப்பள்ளி செயற்படாமலிருந்தது.
(இ) 1,800.

## பூம்புகர் பகுதியில் தொல்பொருள் ஆய்வு.

*411 வினா—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய தொல்பொருள் ஆராய்ச்சித்துறை பூம்புகார் பகுதியில் இதுவரையில் ஆராய்ந்து கண்டறிந்தவற்றை அரசுக்கு அறிவித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) மத்திய தொல் பொருள் ஆராய்ச்சித்துறை பூம்புகார் பகுதியில் நடத்திய ஆய்வு குறித்து அரசுக்கு எவ்விதத் தகவலும் அனுப்பவில்லை.

(ஆ) இக் கேள்விகளுக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: மத்திய தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்தினர் பூம்புகாரில் அத்தகைய முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். ஐம்பெருங் காப்பியங்களான சிலப்பதிகாரம் மணிமேகலை போன்றவற்றில் கூறப்பட்டுள்ளபடி பூம்புகார் பகுதியில் நகர அமைப்பு இருந்தது என்பது பற்றியெல்லாம் தெரிய வருகிறது. அத்தகைய தடயங்கள் அகப்பட்டுள்ளன என்றால் அதுபற்றி இனியேனும் அரசு அறிந்து கொள்ள முயற்சிகளை மேற்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மத்திய அரசின் தென் வட்ட தொல்பொருள் ஆய்வுத் துறை காவிரிப்பூம்பட்டினத்துக்கு அருகிலுள்ள காவிரி டெல்டா பகுதியில் 40 முக்கிய இடங்களைத் தேர்ந்தெடுத்திருந்தபோதிலும், சென்ற 1963 ஆம் ஆண்டிலிருந்து



1973-ஆம் ஆண்டு வரையிலான இடைப்பட்ட காலத்தில் கீழையூர், வானகிரி, பல்லவனேஸ்வரம் ஆகிய இடங்களில் மட்டும் ஆய்வு செய்தது. அவ்வாய்வில் கண்டுப்பிடிக்கப்பட்ட முக்கியப்பொருள்களின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:—

1. நடுவில் தண்ணீர் செல்வதற்கான வசதியோடு கட்டப்பட்டிருக்கும் ஒரு கட்டடப்பகுதி, கீழையூர், கண்டுபிடிக்கப்பட்டது. இதன் அருகில் இரு வரிசைகளில் மரத் தூண்கள் நடப்பட்டிருந்தன. அவற்றின் அடிப் பகுதிகள் கிடைத்துள்ளன. இவைகளைக் கொண்டு பார்க்கையில் பொருள்கள் ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் படகுகள் வந்து செல்லும் துறைமுகப் பகுதியாக அது இருக்கலாம் எனத் தெரிகிறது.

2. வானகிரியிலும் ஒரு கட்டடப்பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. அது குளத்துக்கு நீர் வரும் வழியில் அமைக்கப்பட்டிருந்த மதகாகத் தெரிகிறது. அதன் இரு பக்கங்களிலும் அரை வட்டச் சுவர் காணப்படுகிறது. அச்சுவர்கள் குளத்தின் மண்கரையோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்ததாக இருக்கலாம். இக்குளத்து நீர் பாசனத்திற்காகவும் குடி நீருக்காகவும் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். இப்பகுதியில் மிகப் பெரும் அளவு மணல் படிந்திருப்பதைப் பார்க்கையில் காவிரியாற்றிலிருந்து இக்குளத்துக்கு நீர் இக்கட்டடப் பகுதியின் வழியாக வந்திருக்கலாம் என்று தெரிகிறது.

3. பல்லவனேஸ்வரம் பகுதியில் புத்த விஹாரம் ஒன்று இருந்தது என்பதை அகழ்வாய்வு புலப்படுத்தியது. புத்த ஸ்தூபாவின் உடைபாடுகளும் ஆயகா தூணின் சிதறல்களும் கூடக் கண்டுபிடிக்கப்பட்டன. 1.7 மீட்டர் கனமுள்ள சுவர்கள் செங்கல், சுதை வேலைப்பாடுகளினால் அழகுபடுத்தப்பட்டன.

யோக நிலையிலுள்ள புத்தரின் செப்புத் திருமேனியும் கதையால் செய்யப்பட்டுள்ள துவாரபாலகரின் தலைப்பகுதியும் முற்காலச் சோழர்களைச் சார்ந்த சதுரக் காசுகளை வார்ப்பிப்பதற்கான சுடுமண் அச்சும் இங்கு கிடைத்திருப்பது இவ்விஹாரம் கி.பி. 4 ஆம் நூற்றாண்டிலிருந்து 6 ஆம் நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதற்காக முக்கிய சான்றுகளாக அமைகின்றன.

நகராட்சிக்குக் கூட அப்படிப்பட்ட உத்திரவு வந்திருக்கிறது. ஆகவே, அதை மறுபரிசிலனை செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, அது பற்றிய விவரக் குறிப்பு இல்லை, தெரிந்து சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள் 414-ம் 415-ம் அமைச்சர் அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

**கள்ளக்குறிச்சி—சென்னை விரைவுப் பேருந்துப்பணி.**

*வினா திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி—சென்னைக்கு சங்கராபுரம், திருக்கோயிலூர், விழுப்புரம் வழியாகத் துரிதகால வண்டி விடும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் என்றால், விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. துரை முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, குறுகிய தூரத்தை உடைய திருவண்ணாமலை, பாண்டிச்சேரிக்கு எல்லாம் துரித வண்டிகள் விடப்பட்டிருக்கின்றன. ஆனால் 250 கிலோ மீட்டர்கள் தூரமுள்ள கள்ளக்குறிச்சிக்கு—அங்கே கூட்டுறவு சர்க்கரை ஆலை இருக்கிறது. செப்புத் தொழிற்சாலை இருக்கிறது. வியாபாரிகள் அதிகமாக சென்னைக்கு வந்துபோகிறார்கள், பொதுமக்களுடைய நீண்டகாலக் கோரிக்கையான இதை ஏற்றுக்கொள்ள அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி ஒரு முனிசிபாலிட்டியாகக் கூட இல்லை. அது பேரூராட்சியாக மட்டுமே இருக்கிறது. அடிக்கடி கள்ளக்குறிச்சி வழியாக சென்னையிலிருந்தும், சென்னை...



நோக்கியும் 12 விரைவு வண்டிகள் செல்கின்றன. கள்ளக்குறிச்சியிலிருந்து 38 மைல் தூரத்திலுள்ள உளுந்தூர்பேட்டை வழியாக அண்ணா போக்குவரத்துக் கழக, தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக மற்ற மாவட்டப் பேருந்துகள் செல்கின்றன. எனவே விரைவுப் பேருந்து கள்ளக்குறிச்சி வரை விடுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-40)

**திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்:** பேரவைத் தலைவரவர்களே, கள்ளக்குறிச்சி வழியாக எத்தனை பேருந்துகள் வந்தாலும் அங்கே பயணிகளுக்கு இடம் கிடைப்பதில்லை. ஆகவே, தற்சமயம் அதிகாலை 4 மணியிலிருந்து திண்டிவனம் வரையிலும் வரும் பேருந்தை சென்னை வரை நீட்டிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவரவர்களே, அதுபற்றிப் பரிசிலிக்கப்படும்.

**திரு. துரை முத்துசாமி:** தலைவரவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் 12 வண்டிகள் வருவதாகச் சொன்னார்கள், அது உண்மையல்ல. 4 வண்டிகள்தான், இரவு 10½ மணிக்கும், 11½ மணிக்கும், 12½ மணிக்கும் என்று வருகின்றன. இரவு நேரத்தில் எனக்கேகூட டிக்கெட் கிடைக்காமல் இரண்டாவது வண்டியில்தான் வந்தேன். தினம் நூறு பேர்களுக்குமேல் காத்துக்கொண்டிருக்கிறார்கள். உளுந்தூர்பேட்டையில் லைட்னிங் வண்டிகள்மட்டும்தான் நிற்கின்றன, மற்ற வண்டிகளில் இடம் கிடைப்பதில்லை. ஆகவே, இதைப் பரிசிலனை செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொன்னையன்:** பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள்தான் தவறான தகவலைக் கூறுகிறார்கள். நான்கு வழித்தடங்கள் எண்கள் உள்ளன, ஆனால் சென்னை—சேலம் நோக்கி இரண்டு பேருந்துகள் ஓடுவது, சென்னை—கோவை நோக்கி ஒரு பேருந்தும், பேருந்துகளும், சென்னை—கோவை நோக்கி இரண்டு பேருந்துகளும், சென்னை—சேலம் ஒரு பேருந்தும் ஆக ஆறு பேருந்துகள் சென்னையிலிருந்து

செல்கின்றன, சென்னை நோக்கி ஆறு பேருந்துகள் வருகின்றன. ஆகமொத்தம் 12 பேருந்துகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பாண்டியன் போக்குவரத்துக் கழகம்.

* வினா 417 திரு. கே. பண்ணை சேதுராம்: மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தில் மதுரை மாவட்டத்தில் எத்தனை பஸ்கள் ஓடுகின்றன? அதன்மூலம் தினசரி வருமானம் எவ்வளவு?

(ஆ) மதுரை மாவட்டத்தில் ஓடும் பேருந்துகள் இதுவரை ஓடியிருக்கும் சராசரி வருடங்கள் எவ்வளவு?

(இ) 1974-75, 1975-76-ல் எத்தனை பஸ்கள் பயனற்றதாக ஒதுக்கப்பட்டன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) பாண்டியன் போக்குவரத்துக் கழகம் மதுரை மாவட்டத்தில் 476 பேருந்துகளை ஓட்டியது. அதன்மூலம் கிடைக்கும் சராசரி வருமானம் சுமார் ரூ. 2,79,000.

(ஆ) மதுரை மாவட்டத்தில் ஓடும் பேருந்துகள் இதுவரை சராசரியாக 5 வருடங்கள் ஓடியிருக்கின்றன.

(இ) 1974-75-ல் 29 பேருந்துகளும், 1975-76-ல் 18 பேருந்து களும் பயனற்றதாக ஒதுக்கப்பட்டன.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, டி. வி. எஸ். கம்பெனியிலிருந்து இந்த பஸ்களை அரசு தேசியமயமாக்கி எடுத்துக்கொண்ட நேரத்தில் எத்தனை வண்டிகள் பயனற்ற வையாக இருந்தன, அந்தப் பயனற்ற வண்டிகளுக்கு அரசு பணம் கொடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, பயனற்ற வண்டிகளை எடுத்துக்கொள்வதில் பயனேதும் இல்லாத காரணத்தால் அப்படிப்பட்ட வண்டிகள் ஏதும் எடுத்துக்கொள்ளப் படவில்லை.



திரு. என். பழனிவேல்: தலைவரவர்களே, பொது மக்களுடைய போக்குவரத்து அன்றாடம் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது. இந்த நிலையில் பாண்டியன் போக்குவரத்துக் கழகம் நகரப் பேருந்துகளை ஒவ்வொரு ஊருக்கும் அதிகப்படுத்தும் உத்தேசத்தில் இப்பொழுது ஏதேனும் திட்டமிடப் பட்டிருக் கிறதா? அப்படியிருந்தால் மதுரை மாவட்டத்தில் எந்தெந்த ஊர்களுக்குப் பஸ் விடுவதாக உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, நகரப் பேருந்துகளையும், மொபசல் பேருந்துகளையும் மிகைப் படுத்தத் திட்டம் உள்ளது. விரைவில் அதுபற்றிப் பரிசீலித்து அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: தலைவரவர்களே, பி. ஆர். சி. யில் மாணவர்களுக்குப் பஸ் பாஸ் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா? அப்படியென்றால் ஏன் காலதாமதம் ஏற்படுகிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவரவர்களே, மதுரை மாநகரில் ஏற்கனவே சலுகைக் கட்டண வசதி இருந்து வருகிறது. மேற்கொண்டு பரிசீலனை எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து வினா எண். 418.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மூன்று கேள்விகளையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி.

மாதவரம் பால்பண்ணை.

* வினா 418 திரு. துரை கலியமூர்த்தி: மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) மாதவரம் பால் பண்ணையில் லைசென்ஸ்தாரர் எத்தனை பேர் உள்ளார்கள்? எவ்வளவு மாடுகள் உள்ளன?

(ஆ) என்ன விலைக்கு லைசென்ஸ்தாரரிடம் பால் வாங்கப்படு கிறது?

(இ) என்ன விலைக்கு விற்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) மாதவரம் பால் பண்ணையில் தற்சமயம் 39 உரிமக்காரர்கள் உள்ளனர்.

(ஆ) இவர்களுடைய 461 மாடுகளும் 261 இளங்கன்றுகளும் தற்சமயம் உள்ளன.

(இ) கொழுப்புச்சத்து, கொழுப்புச்சத்து அல்லாத மற்ற திடப்பொருள் ஆகியவற்றின் அடிப்படையில் பாலின் விலை நிர்ண யிக்கப்பட்டு, பால்வள நிறுவனத்தாரால் உரிமக்காரர்களிட மிருந்து பால் வாங்கப்படுகிறது.

(ஈ) தரப்படுத்தப்பட்ட பால் சென்னை நகரில் பால் அட்டை வைத்திருப்போருக்கு லிட்டர் ஒன்றுக்கு ரூ. 2.00 வீதம் விநியோகம் செய்யப்படுகிறது. பாலிதின் பையில் அடைத்த பால் லிட்டருக்கு ரூ. 2.10 வீதம் விற்கப்படுகிறது.

## சென்னை நகரில் பால் வழங்கல்.

* வினா 419 **திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நடமாடும் வான் மூலமாக தானாக இயங்கும் விற்பனை முறையில் சென்னை நகரில் பால் விற்பனை செய்யும் திட்டம் சோதனை முறையில் நடத்திப்பார்க்கப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டத்தினை செயல்படுத்துவது குறித்து முடிவெடுக்கப்பட்டுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் சோதனை முறையில் நடத்திப் பார்க்கப்படவில்லை.

தற்சமயம் தானியங்கி இயந்திரமில்லாத நான்கு நடமாடும் பால் விற்பனை ஊர்திகள் மூலம், சென்னை நகரத்தில் பாலும், பால்பண்ணை உற்பத்திப் பொருட்களும் விற்பனை செய்யப்படு கின்றன.

* Q. 420.—THIRU S. GANESAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Dairy Development Corporation has opened automatic milk supply booths in Madras ;

(*b*) the cost of its installations; and

(*c*) whether public opinion is against this?



**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** (அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு தானியங்கி பால் விற்பனை நிலையத்தையும் நிறுவுவது உட்பட அதற்கு ஆகும் செலவு 1 இலட்சம் ரூபாய்.

(இ) இம்முறையில் பால் விற்பனை செய்வதற்கெதிராக சில புகார்கள் பெறப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிட்டப்பா. . .

**திரு. என். கிட்டப்பா:** இல்லை.

**திரு. எஸ். கணேசன்:** பேரவைத் தலைவரவர்களே, இந்தத் தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் சென்னையிலே எந்தெந்த இடங்களிலே நிறுவப்பட்டிருக்கின்றன? இது அடிக்கடி பழுதுபட்டு விடுவதாகச் சொல்லப் படுகிறது. பழுதுபட்டால், உடனடியாக அதைச் சரிபார்க்கின்ற நிபுணர்கள் அருகாமையில் இல்லையென்ற குறைபாடு இருக்கிறது. அதைக் களைய அரசு முன்வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் 8 இடங்களில் தானியங்கி பால் விற்பனை நிலையங்களிருக்கின்றன. அதிலே, ஏற்படுகிற கோளாறுகளை அவ்வப்பொழுது அரசு கவனித்து நடவடிக்கை எடுப்பதன் மூலமாகச் சரி செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. மு. அரங்கநாதன்:** பேரவைத் தலைவரவர்களே, மாதவரம் பால் பண்ணையிலிருந்து வருகின்ற இந்தப் பாலோடு, பால் பவுடரும் கலக்கப்பட்டு, சென்னை நகரிலே பாட்டில்களிலே விற்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. அது உண்மையா ?

இரண்டாவதாக, பாட்டில்களின் மேலேயுள்ள கவர்கள் சரியாக இல்லாத காரணத்தாலே, பால் பங்குகளிலே உள்ளவர்களாலேயே, அந்த பாட்டில் பால்களுடன், வேறு பாலோ, நீரோ, கலக்கப்பட்டு விற்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவர வர்களே, பாலிலே, ஸ்கிம் பவடர் என்கின்ற பவுடர் பால்வள நிறுவனத்காலே கலக்கப்படுகிறது. அந்த பவுடர் கலக்கப்படுவதன்

[1978 மார்ச் 6

**திரு. என். கிட்டப்பா:** நான் இப்பொழுது கையைத் தூக்க வில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தயவுசெய்து பேரவைத் தலைவர் மேல் இவ்வாறு குற்றம் சொல்லாதீர்கள். நான், மூலக் கேள்வி கேட்டவர் என்பதால், உங்களை முதலிலே கூப்பிட்டேன். நீங்கள் இல்லையென்று சொல்லிவிட்டீர்கள். பிறகுதான், கணேசனைக் கூப்பிட்டேன். பிறகு நீங்கள் கையைத் தூக்கினீர்கள். நான், அதற்குள் அரங்கநாதனைக் கூப்பிட்டேன் என்பதற்காக, கையிலிருந்தவற்றை வீசி எறிந்துவிட்டு, அங்கே (வேறிடத்தில்) போய் உட்கார்ந்தீர்கள். பிறகு வந்து கையைத் தூக்கினீர்கள். ஆகவேதான் கூப்பிட்டேன்.

**திரு. என். கிட்டப்பா :** தன்னிலை விளக்கம். நான், வீசி எறிந்து விட்டேன் என்று சொல்கிறீர்கள். நான் சபையிலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புலவர் அவர்களைச் சாட்சி சொல்லச் சொல்லுங்கள். நீங்கள் விசிறி அடித்துவிட்டுப் போக வில்லையென்று புலவர் அவர்களைச் சொல்லச் சொல்லுங்கள். நீங்கள் வீசி எறிந்ததை அவர்கள் பார்த்துக்கொண்டுதானிருந்தார்கள்.

**திரு. க. அன்பழகன்:** அது அந்த நினைவோடு செய்கிற காரியம் அல்ல. அவர், எங்கோ போகிற நிலையில் அப்படி கையிலிருந் ததைப் போட்டுவிட்டுப் போயிருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புலவர் அவர்களுக்குத் தெரியும், அவர் எப்பொழுது வீசி எறிந்துவிட்டுப் போனார் என்பது. முதலிலே, நான் அவருடைய பெயரைக் குறிப்பிட்டேன்; அவர் இல்லையென்று சொன்னதால், நான் கணேசன் அவர்களைக் கூப்பிட்டேன். பிறகு கையைத் தூக்கினார், அதற்குள் அரங்கநாதனைக் கூப்பிட்டேன் என்பதால், கையிலிருந்ததை வீசி எறிந்துவிட்டுச் சென்றார் அதைப் புலவரும் பார்த்தார். பிறகு வந்து கையைத் தூக்கினார்கள். ஆகவே, அவரைக் கூப்பிட்டேன் தாங்கள் இப்படி பேசுவது சரியல்ல.



1978 மார்ச் 6]

(முற்பகல் 9.50)

**திரு. எஸ். ஜே. இராமசாமி:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, சென்னை நகரிலே அதிகமாக பால் வந்துகொண்டிருப்பதாகவும், அதற்காக அங்கே கிராமங் களிலே உள்ளவர்கள் சென்னைக்கு வந்து போகிறார்கள் என்றும் சொன்னார்கள். நான் கேட்கும் கேள்வியின் நோக்கம் கிராமங் களிலேயே பால் பற்றுக்குறை இருக்கிறதே, அதற்கு என்ன செய்யப்போகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். இதற்கு நீங்கள்தான் விளக்கம் அளிக்கவேண்டும்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே, இன்று போடப்பட்டிருக்கிற கேள்விகள் எல்லாம் பொதுவாக பால் பண்ணையைப் பொறுத்துதான். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிராமங்களிலே பால் குறைவாகக் கிடைக் கிறது என்கிற காரணத்தைச் சொன்னார்கள். அதற்காக சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டங்கள் கீழ் கறவை மாடுகள் வாங்குவதற்கான கடன்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. எங்கெங்கே பால் குறைவாக இருக்கிறதோ, அங்கே இருக்கக் கூடிய சிறு விவசாயிகள், அவர்களுக்கு உபதொழிலாக கறவை மாடுகளைக் கடனைப் பெற்று பால் பெருக்கத்தை அதிகப்படுத் தலாம் என்று உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***திரு. மு. அரங்கநாதன்:** தலைவர் அவர்களே, தனியார் வெளியிலே பால் கறந்து விற்கிறார்கள். இப்படி விற்பவர்கள் அந்தப் பாலிலே பால் பவுடரைக் கலந்து விற்றால், கலப்படப் பால் என்ற முறையிலே அவர்களின் மீது சானிடரி இன்ஸ்பெக் டர்கள், வழக்குப் போடுகிறார்கள். தண்டனையும் விதிக்கிறார்கள். அப்படியி ஆயிரம் ரூபாய் வரைகூட அபராதம் விதிக்கிறார்கள். அப்படியி ருக்கும்போது அரசு இப்படிப் பாலில் பால் பவுடரைக் கலக் கிறதே அவர்கள் மீது யார் வழக்குப் போடுவது?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் சொல்லக் இந்தப் பவுடர் வேறு. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் சொல்லக் கூடிய பால் பவுடர் வேறாக இருக்கலாம். இது ஸ்கிம் பவுடர். மீதியாக இருக்கக்கூடிய பாலை இயந்திரங்களின் மூலமாக பவுட ராக ஆக்கி, அதைப் பாலிலே கலந்து வைப்பதன் மூலமாக எந்த

மூலமாகத்தான் பால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பாலை 'பாஸ்டரைஸ்' செய்து, நீர்த்த வெண்ணெயும், பால் பவுடரும் கலந்து, இன்று சப்ளை செய்யப்படுகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், பாட்டில்களின் மேலே போடுகின்ற அடைப்பான்கள், சில நேரங்களிலே, மேலே பிய்ந்து, வெளியே வருகின்ற நேரங்களெல்லாம் உண்டு. அந்த நேரங்களில், அவை சரி செய்யப்படுகின்றன. மேலும், அவற்றை நிரந்தரமாக எடுக்கமுடியாத அளவிலும், தண்ணீரையோ, வேறு பாலையோ கலக்க முடியாத அளவிற்குப்பிய்க்க முடியாத அடைப்பான்களை, புதிய முறையிலே போடலாமா என்ற ஆலோசனையை அரசு ஆராய்ந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, 3 கேள்வியும் ஒன்றாக எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கொஞ்சம் தாராளமாக அனுமதியுங்கள். மாதவரம் பால் பண்ணையிலே இருக்கிற லைசென்ஸ்தாரர்கள் எண்ணிக்கையைப் பற்றிச் சொன்னார்கள். இந்த லைசன்ஸ்தாரர்கள் எண்ணிக்கை முன்னால் இருந்ததைவிட, இப்பொழுது ரொம்பக் குறைந்து விட்டதென்பது உண்மை. காரணம், விலைப்பற்றுக்குறை.

பாலில், 8 சதவிகிதத்துக்கு மேல் கொழுப்பு அடிக்க முடியாது. அவர்களிடம் மாதவரம் பால் பண்ணையிலே, பால் வாங்கும்போது, கொடுக்கப்படும் விலை, கொழுப்புச் சத்து, 7.8 சதவிகிதம், 8 சதவிகிதம் இருந்தால், அதற்கு, ரூ. 1.40, ரூ. 1.50 க்கு மேல் கொடுப்பதில்லை. அதில், பவுடரையும், மற்றவற்றையும் சேர்த்து, கொழுப்புச் சத்து 4.5 சதவிகிதம் இருக்குமானால், அது ரூ. 2.10 க்கு விற்கப்படுகிறது. அவர்கள், பாலை வாங்குகிற விலையும் குறைவு. அதை விற்கும் விலையும் அதிகமாக இருக்கிறது. ஆகவே, இதில், அதிகமான மார்ஜின் இருக்கிறது. பால் உற்பத்தி செய்கிறவர்களுக்கு நியாமான அதிக விலை கிடைக்கவில்லை. பாலை வாங்கிச் சாப்பிடுபவர்களுக்குக் குறைந்த விலையில் பால் விற்கப்படவில்லை.

ஆகவே, அரசாங்கம், பால் உற்பத்தி செய்கிறவர்களுக்கு இன்னும் கூடுதல் விலை கொடுக்கவும், பால் வாங்கிச் சாப்பிடுபவர்களுக்குக் குறைந்த விலையில் விற்பனை செய்யவும் என்ன திட்டம் வைத்து இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, முதலிலேயிருந்த லைசன்ஸ்தாரர்களுடைய, உரிமதாரர்களுடைய எண்ணிக்கைக் குறைந்திருக்கிறது என்பது ஓரளவிற்கு உண்மைதான். நிறுவனம் கொடுக்கக் கூடிய விலை கட்டுப்படியாகவில்லையென்று பலபேர் குறிப்பிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதே நேரத்தில், இங்கே நாம் விற்கக்கூடிய பாலினுடைய விலை, மற்ற மாநிலங்களைக் காட்டிலும், தமிழகத்திலே, குறைவான விலைக்குத்தான் விற்றுக்கொண்டிருக்கிறோம். மேலும், வாங்கக்கூடிய பாலுக்குக் கொழுப்புச் சத்தின் அடிப்படையில்தான் ஒரு கிலோவிற்கு ரூ. 22 என்ற அடிப்படையில் தான் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனாலும், அதை அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்பதற்காக, இப்பொழுது ரூ .23 கொடுக்கலாமா என்பது யோசிக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், உரிமைதாரர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் ஆலோசனையை இந்த அரசு ஆராய்ந்து வருகிறது. அப்படிச் செய்கிற நேரத்தில், பாலை அதிகமாக சென்னைக்கும் மற்றுமுள்ள இடங்களுக்கும் பெற்று எல்லா மக்களுக்கும் கொடுத்து வருவதற்கான திட்டதை ஏற்படுத்துகிற நிலையை அரசு வகுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கிட்டப்பா. . . .

திரு. என். கிட்டப்பா: நான் கேள்வி கேட்கும்பொழுது தாங்கள் அனுமதி மறுக்கிறீர்கள். நான் கேட்காதபொழுது வேண்டுமென்றே இப்படி கூப்பிடுகிறீர்கள். இப்படி வேண்டுமென்றே கேள்வி கேட்காதபொழுது கூப்பிட்டு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலிலே, தாங்கள் வேண்டாமென்று விட்டு விட்டதால், திரு. கணேசனைக் கூப்பிட்டேன். தாங்கள்தான் மூலக் கேள்வி போட்டவர்கள். உங்களைக் கூப்பிட்டேன், நீங்கள் இல்லையென்று சொன்னதால் கணேசனைக் கூப்பிட்டேன்.

இப்பொழுது கையைத் தூக்கியதால்தான் கூப்பிட்டேன்.

[1978 மார்ச் 6

விதமான சுகாதாரக் கெடுதலும் இல்லை என்று தெரிந்த பின்னுலே
தான் அது விற்கப்படுகிறது என்பதை அவர்களுக்குத் தெரிவித்து
கொள்கிறேன். ஆகவே வெளியிலே இருப்பவர்கள் கலப்படம்
செய்தால் கண்டிப்பாக தண்டனை உண்டு என்பதையும் அவர்
களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சீ. மு. வாசன் :** தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே
பால் கறந்து விற்பதையே வேலையாகக் கொண்டவர்கள் இருக்கி
ருர்கள். அப்பகுதி மக்களுக்கு அரசின் நிர்ணய விலை குறைவாக
இருக்கிறது. ஒரு கிலோ கொழுப்புச் சத்துக்கு 21 ரூபாய்
கொடுக்கப்படுகிறது. அதை 26 ரூபாயாக கொடுத்தால் வசதி
யாக இருக்கும். அதனைச் செய்ய இயலுமா என்று அறிய விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லக்கூடிய கருத்து
அரசின் கவனத்தில் உள்ளது என்பதனை தெரிவித்துக் கொள்
கிறேன்.

**திரு. எஸ். கணேசன்:** தலைவர் அவர்களே, இந்தத் தானியங்கி
பால் விற்பனை நிலையங்கள் சென்னையில் 8 இடங்களில் இருப்ப
தாகச் சொன்னுர்கள். எந்தெந்த இடங்களில் இந்தத் தானியங்கி
பால் விற்பனை நிலையங்கள் இருக்கின்றன. இந்தத் திட்டத்தை
விரிவு படுத்தும் நோக்கம் அரசுக்கு இருக்கிறதா, இந்தத்
திட்டத்திற்காக மத்திய அரசின் உதவி ஏதேனும் இருக்கிறதா
என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவர் அவர்களே,
தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் 8 இடங்களில் இருக்
கின்றன. அவை திருவல்லிக்கேணி, பட்டினப்பாக்கம், பெசன்ட்
நகர், அசோக் நகர், டிரஸ்ட்புரம், சித்திரக்குளம், ராஜா
அண்ணுமலைபுரம், அருணுசல ஆசாரித் தெரு, திருவல்லிக்கேணி
ஆகிய இடங்களில் இயங்கிக் கொண்டு வருகின்றன. மேலும்
இந்த பால் நிலையங்கள் இந்தியன் டெய்ரி கார்ப்பரேஷன்
மூலமாக நடத்தப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்
கிறேன்.



1978 மார்ச் 6]

**திரு. க. மருதாசலம்:** தலைவரவர்களே, கிராமங்களில் இது
போன்ற பால் சொசைடி நிறுவனங்களை வைத்து இருப்பவர்கள்,
அதிலே 20—30 பேர் உறுப்பினர்களாக இருக்கிருர்கள் என்ருல்
அவர்கள் அந்த சொசைடிக்கு ஒரு உறுப்பினரின் வீட்டில் இருந்து
10 லிட்டர் பால் கோருகிருர்கள் என்ருல் அவர்கள் 1 லிட்டரை
மட்டும் சொசைடிக்குக் கொடுத்துவிட்டு, 9 லிட்டர் பாலை வெளியி
லேயே விற்று விடுகிருர்கள். அப்படி சொசைடியில் உறுப்பின
ராக இருந்து பெரும்பாலும் வெளியிலே விற்கும் நோக்தில்
அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, இது
வரையிலும் அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.
ஆனுல் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியது போல்,
கடனை அரசாங்கத்தில் இருந்து பெற்று, கறவை மாடுகளை
வாங்கி, பால் பண்ணைக்கு அல்லது பால் நிறுவனங்களுக்கு
அந்தப் பாலைக் கொடுக்காமல் இருப்பது தவறு. அப்படி
தவறு செய்கிருர்கள் என்ருல், அவர்களுக்குத் தகுந்த
யோசனையை மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் சொல்ல
லாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. மார்க்கபந்து :** தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள்
பதில் சொல்கிறபோது, அரசாங்க பால் பண்ணையில் சிறிது
கலப்படம் செய்வதாகச் சொன்னுர்கள்.
It is not injurious to health என்ற வகையில் செய்வ
தாகச் சொன்னுர்கள். ஆனுல், செக்ஷன் 16, புட் அடல்டரேஷன்
ஆக்டிலே— non-injurious substance என்று சொல்லி
கலப்படம் செய்தால் கூட, அதற்காக குறைந்த பட்சம் அபராதம்
ரூ. 1,000 வரையிலும், என்றும், தண்டனை 6 மாதம் என்றும்
இருக்கிறது. அந்த வகையில் even if it is non-injurious to health
என்று விளக்கங்கள் சொல்லப்பட்டு, தண்டனை கொடுத்து இருக்
கிருர்கள். அரசாங்கத்தின் பால் பண்ணைக்கு இதில் இருந்து
விலக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது என்று அந்த ஆக்டிலே
சொல்லப்படவில்லை. அப்படி இல்லை என்பதால், ஒரே மாதிரி
யாக அந்தச் சட்டத்தை அரசாங்கப் பால் பண்ணைகளுக்கும்
பயன்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** பேரவைத் தலைவர வர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது சரியாக இல்லை. ஏனெனில் கலப்படம் என்கிற வார்த்தைக்கும், அவர் சொல்கிற கலப்படத்திற்கும் மிகுந்த வித்தியாசம் உண்டு. இங்கே பால் வள நிறுவனத்தின் சார்பாக கலப்படம் என்று சொல்கிறபோது, அங்கே பால் பவுடரோடு, நீர்த்த வெண்ணெயைக் கலப்படம் செய்து, மக்களுக்கு நல்ல பால் வழங்கவேண்டும் என்ற நோக்கத் தோடு செய்யப்படுகிறது. ஆனால் வெளியிலே இருப்பவர்கள் பாலிலே தண்ணீரையும், தண்ணீரிலே பாலும் கலப்படம் செய் கிறார்கள். அது சரியாக இருக்காது. மேலும் தேவையான அளவிற்கு வேண்டிய கொழுப்புச் சத்து அதிலே இல்லாமல் போய் விடுகிறது. வேண்டிய அளவு கொழுப்புச் சத்து, புரதச் சத்து சேர்க்கப்படவேண்டும், மக்களுக்கு அப்படிப்பட்ட பால் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அந்த பால்சுரைசேஷன் செய்யப் படுகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. சதாசிவம்:** பேரவைத் தலைவரவர்களே, ஏற்கனவே பாலில் இயற்கையாக இருக்கக்கூடிய கொழுப்புச் சத்தை எடுத்து விட்டு, மறுபடியும் அதில் பவுடர் பால் சேர்ப்பது வேலை இல்லாத வேலை இல்லையா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** தலைவரவர்களே, நமக்கு வேண்டிய கொழுப்புச் சத்து 4.5 சதவிகிதம். அது இருந்தால் போதும். ஆனால் இயற்கையாகக் கிடைக்கும் பாலில் எருமைப் பலாக இருந்தால் அதிகக் கொழுப்புச் சத்தும், பசும்பாலாக இருந்தால் குறைவான கொழுப்புச் சத்தும் இருக்கிறது. ஆகவே, ஒரு மனிதனுக்குத் தேவையான அளவு கொழுப்புச் சத்து கிடைக்க வேண்டும் என்ற காரணத்திற்காக பாலை பதப்படுத்தி அதே நேரத்தில் நல்ல முறையில் நவீனமான முறையில் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்ற அளவிலே தான் அது கொடுக்கப் படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விஞக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]



## 2. தகவல் கோரல்.

### முதலமைச்சர் பொறுப்பு வகிக்கும் இலாக்காக்கள் தொடர்பான கேள்விகள் எடுத்துக்கொள்ளப்படாதது குறித்து.

***திரு. மு. கருணாநிதி:** பேரவைத் தலைவரவர்களே, இந்த அவை தொடங்கி, அதனுடைய கூட்டங்கள் 12-வது நாளாக இன்று நடைபெறுகிறது. அமைச்சர்களுக்குத் தாங்கள் கே விகளைப் பகிர்ந்து கொடுத்து, அவர்கள் பதில் அளித்து வரு ன்றார்கள். ஆனால்—அன்றைக்கே அந்த பிரச்னையை நான் எடு பினேன்—முதலமைச்சர் அவர்கள் 4-5 இலாக்காக்களுக்கு பொறுப்பேற்றுக் கொண்டு இருக்கிறார்—உள் துறை, மருத்துவத் துறை, பொதுத் துறை, அறநிலையத் துறை, தொழில் துறை ஆகிய மிக முக்கியமான இலாக்காக்களை அவர்கள் ஏற்று இருக் கிறார்கள். அதற்கான கேள்வி ஒன்று கூட இந்த 12 நாட்களாக இந்த அவையில் இடம் பெறாதது வருந்தத்தக்கது.

முதலமைச்சர் அவர்களே, குறிப்பிட்டு இருக்கிறார், ஒரு மணி நேரத்திற்கு ரூ. 3,500 செலவாகிறது என்று. ஆனால் அந்தக் கணக்கைச் சொன்ன முதலமைச்சர் இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்க இங்கே வராமல் இருப்பதும், அவைத்தலைவர் அவர்கள் முதலமைச்சருக்கு கேள்விகள் பகிர்ந்து கொடுக்காமல் இருப்பதும் வருந்தத்தக்க ஒன்றாக இருக்கிறது.

ஆகவே, அதற்கு இந்த அவையின் மரபுப்படி எங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எப்போது கேள்விகள் தங்களால் பகிர்ந்தளிக்கப்படும் முதலமைச்சர் அவர்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்ல வருவாரா? வரமாட்டாரா என்பதற்கு நான் தங்களிடம் விளக்கம் கேட்க விரும்புகிறேன்.

(முற்பகல் 10.00)

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, இன்றைக்கும் நான் கூற விரும்புகிறேன். கவுன்சில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது முதலமைச்சர் வரவில்லையே என்று ஒரு அங்கத்தினர் கேட்டதற்கு மாண்புமிகு அமைச்சர் இராஜா முகம்மது அவர்கள் பேரவை நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இங்கே வரவில்லை

என்று கூறினார்கள். அவர்கள் அப்படிக் கூறும்போது முதலமைச்சர் இந்த அவையிலும் இல்லை. ஆகவே, இம்மாதிரியான நிலைமை சரிதானா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஜேம்ஸ் அவர்கள் மேலவையிலே நடைபெற்ற நிகழ்ச்சிகளைப்பற்றி இங்கே கூறக் கூடாது. அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். எது என்றாலும் அங்கு நடந்த விவாதங்களைப் பற்றி இங்கே கூறக் கூடாது.

**திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, தாங்கள் தீர்ப்புக் கூறும்போது அந்த அவையிலே நடைபெற்ற எதுபற்றியும் இந்த அவையிலே எழுப்பக் கூடாது என்று சொன்னீர்கள். ஆனால் இந்த அவையைப்பற்றி அந்த அவையிலே கூறும்போது அந்த அவையைப்பற்றி இங்கே கூறுவது ஒன்றும் தவறாகிவிட முடியாது என்பது என்னுடைய கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேலவையில் எது நடந் தாலும் அதுபற்றி இங்கு பேசக் கூடாது என்பது நம்முடைய மரபு.

**திரு. க. அன்பழகன்:** அது தவறு. எப்போது இந்த அவையைப் பற்றி அங்கே கூறுவது சரி என்று ஏற்றுக்கொள்ளப் படுகிறதோ அப்போது அந்த அவையைப்பற்றி இங்கே குறிப் பிடுவதும் தவறாகாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேராசிரியரே தவறு என்று சொன்னால் எப்படி? உங்களுக்கு நன்றாகத் தெரியும் விதி முறைகளைப்பற்றி.

**திரு. க. அன்பழகன்:** நான் மேல்சபையில் 6 ஆண்டுகள் இருந்திருக்கிறேன்; இந்த அவையில் 11 ஆண்டுகள் இருந்திருக் கிறேன். மேல்சபையில் நடைபெறும் விவாதத்தைப்பற்றி இங்கே குறிப்பிடுவது பொருத்தமல்ல. ஆனால் அமைச்சர் அளிக்கும் ஒரு தகவலைப்பற்றிக் கேட்பது தவறாகாது. அதுவும் ஒரு அமைச்சரைப்பற்றி அந்த அவையில் தகவல் கேட்டார்கள்; அந்த அமைச்சர் இந்த அவையிலே இருப்பதாக அங்கே சொல்லப்





பட்டது. ஆனால் அந்த நேரத்தில் அந்த அமைச்சர் இங்கேயும் இல்லையே, அது சரிதானா என்று ஜேம்ஸ் கேட்டார்கள். அதற்குத் தீர்ப்பு தரவேண்டியது தங்களுடைய கடமையாகும்.

(திரு. சங்கரய்யா, திரு. ஜேம்ஸ், மாண்புமிகு இராஜா முகமது ஆகியோர் எழுந்தார்கள்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். முதலில் அமைச்சர் விளக்கம் அளிக்கட்டும்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** தலைவரவர்களே, மேலவையில் மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் ஏன் முதலமைச்சர் கேள்விக்குப் பதிலளிக்க வரவில்லை என்று கேட்டபோது இப்போது பேரவையும் மேலவையும் ஏக காலத்தில் நடைபெற்றுக்கொண்டி ருக்கின்றன. எனவே, முதலமைச்சர் இரண்டு அவைகளுக்கும் ஒரே நேரத்தில் வர முடியாது; ஆதலால் இப்போது மேலவைக்கு வரமுடியவில்லை; முக்கியமான கேள்விகளை நாங்கள் எடுத்து அனுப்புகிறோம்; அவர்கள் வந்து பதில் சொல்வார்கள் என்று நான் அங்கே தெரிவித்தேன். இந்த அவையிலே முதலமைச்சர் இருக்கிறார் என்று அப்போது நான் சொல்லவில்லை.

**திரு. மு. கருணாநிதி:** பேரவையும் மேலவையும் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது முதலமைச்சர் இரண்டு அவைகளுக்கும் வரக் கூடாது என்று ஏதாவது இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** மேலவையும் பேரவையும் ஏககாலத்தில் நடந்துகொண்டிருந்தால், ஏதாவது ஒரு அவையில் இருக்கலாம்; அல்லது இல்லாமலும் இருக்கலாம் ஏக காலத்தில் இரண்டு அவைகளிலும் இருக்க முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா:** தலைவரவர்களே, இங்கே பல தடவைகள் அமைச்சர்கள் பதில் சொல்லும்போது மேலவையிலே ஏற்கெனவே பதில் சொல்லியிருக்கிறேன் என்று குறிப்பிடுகின் றார்கள். ஆகவே, இதில் பல பிரச்சினைகள் வருகின்றன. இங்கே பேசியதை அங்கே பேசலாம் என்று வரும்போது, அங்கே பேசியதை இங்கே பேசலாம் என்று வருகிறது. இப்போது இரண்

சபைகளும் ஒரே நேரத்தில் நடைபெறுவதால் இந்தப் பிரச்னை வந்திருக்கிறது. ஆகவே, இதை மேலும் பெரிதாக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**. நானும் 16 ஆண்டுகள் உறுப்பினராக இருந்திருக்கிறேன். இரண்டு அவைகளும் ஒரே நேரத்தில் நடைபெறுவதால், முதலமைச்சர் வரவில்லையே என்று அங்கே கேட்டபோது, அமைச்சர் அதற்கு என்ன சொன்னார் என்பதற்கு விளக்கம் அளித்தார்கள். பொதுவாக மேலவையில் நடைபெறும் ஒரு சம்பவத்தைப்பற்றி இந்த அவையில் எழுப்புவதில்லை. முதலமைச்சர் ஏன் வரவில்லை என்று அங்கே கேட்ட போது அவர் இந்த அவையிலே இருக்கிறார் என்று சொன்னதாக திரு. ஜேம்ஸ் குறிப்பிட்டார்கள். ஆனால் அமைச்சரவர்கள் இங்கே இருக்கிறார் என்று சொல்லவில்லை என்று தெரிவித்தார்கள்.

**திரு. க. அன்பழகன்**: தலைவரவர்களே, அந்த அவையிலே கேட்கும்போது இந்த அவையிலே இருந்தார்கள் என்று சொன்னதாக நாங்கள் அறிந்தோம். ஆனால் அமைச்சரவர்கள் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்கிறார்கள். ஆக, இரண்டு அவைகளும் ஒரே நேரத்தில் நடந்துகொண்டிருப்பதால், அதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு, அங்கே கேட்டால் இங்கே இருக்கிறார்; இங்கே கேட்டால் அங்கே இருக்கிறார் என்று சொல்லி தப்பித்துக்கொள்ள முடியாது. இரண்டு அவைகளும் ஒரே நேரத்தில் நடப்பதால் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமலும் இருக்க முடியாது. ஆக, இரண்டு அவைகளிலும் இல்லாமல், உறுப்பினர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் இருப்பதால், அதுபற்றி இங்கே கேட்க உரிமை படைத்தவர்களாக இருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது**: தலைவரவர்களே, இரண்டு அவைகளும் ஒரே நேரத்தில் நடைபெறுவதை ஒரு சாக்காக வைத்துக்கொண்டு, அந்த அவையிலே கேட்டால் இங்கே இருக்கிறார்; இந்த அவையிலே கேட்டால் அங்கே இருக்கிறார்; என்று சொல்வதாக மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் அவர்கள்



அவர்கள் கூறியது சரியல்ல. அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு' என்று குறிப்பிடுவது சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: முதலமைச்சர் அவர்கள் இங்கே வந்து, அவர்களுடைய நிகழ்ச்சிகளுக்குத் தடங்கல் இல்லாமல் நடத்தித் தரவேண்டுமென்று எதிர்கட்சித் தலைவர்கள் கேட்டார்கள். முதலமைச்சர் இங்கே வரவேண்டுமென்றோ வரக்கூடாது என்றோ நான் கட்டாயப் படுத்த முடியாது. ஆனால் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் முதலமைச்சர் சம்பந்தப்பட்ட கேள்விகள் தேங்கிக் கிடக்கின்றன; இந்த அவையிலே அவர் சம்பந்தப்பட்ட கேள்விகளையும் கொண்டுவந்து ஏன் பதில் சொல்ல அழைக்கக் கூடாது என்று கேட்டார்கள். முதலமைச்சர் அங்கே இருக்கவில்லை; அல்லது இங்கே இருக்கவில்லை என்று கேட்பதும் சரியல்ல; இருக்க வேண்டுமென்று நான் சொல்வதும் சரியல்ல.

* **திரு. மு. கருணாநிதி**: தலைவரவர்களே, மன்னிக்க வேண்டும். ஏன் முதலமைச்சரை அழைக்கக் கூடாது என்று நான் கேட்கவில்லை. பொதுவாக கேள்விகளை அமைச்சருக்குப் பகிர்ந்து அளிக்கின்ற அதிகாரத்தைத் தங்கள் பெற்றிருக்கிறீர்கள். ஒரு நாளாவது முதலமைச்சருக்குப் பகிர்ந்து அளித்து ஒரு கேள்வி கூட அளிக்கவில்லை. முதலமைச்சர் நான்கு இலாக்காக்களுக்கு பொறுப்புள்ளவராக உள்ளார். ஒருவேளை ஒரு கேள்வி கூட இருக்க வில்லையா என்று கேட்டால் நிச்சயமாக அப்படி இருக்க முடியாது. ஏராளமான கேள்விகள் முதலமைச்சரது இலாக்காக்கள் மீது போடப்பட்டுள்ளன. அதைத் தாங்கள் பகிர்ந்தளிக்க வேண்டும். அதற்கு முதலமைச்சர் இங்கே பதிலளிக்க வேண்டும் என்பதைத் தான் இங்கே சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் கோரிக்கை அவைக்கு தேவையானதும் அவசியமானதும் ஆன ஒன்றாகும். முதலமைச்சருக்கு சார்ந்த கேள்விகள் தயாராக இருக்குமானால் உடனே அவருடன் கலந்து நடவடிக்கை எடுக்க நான் முனைகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செஞ்சி இராமச்சந்திரன் அண்ணா நாளிதழ் மீதும் உரிமை மீறல் குறித்த பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். நிதி அமைச்சர் 23—2—1978-ல் பேரவையில் ஆற்றிய உரையின் பகுதியை 25—2—1978 அன்று பேரவையில் பொதுப்பணித்துறை அமைச்சர் படித்ததை முழுவதுமாக இப்பத்திரிகைகள் செய்தியை வெளியிடாதது உள்நோக்கத்துடன் மக்களுக்குத் தவறான தகவலைத் தந்து மக்களைத் திசை திருப்புவதாக அமைந்துள்ளது என்று உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். பத்திரிகைகளுக்கு விளக்கம் கேட்டு, பின்னர் எனது தீர்ப்பை அளிப்பதாக நான் தெரிவித்திருந்தேன்.

இதேமாதிரி தினத்தந்தி நாளிதழ் மீது இதே காரணத்திற்காக திரு. உச்சி கவுடர் அவர்களும் ஒரு அறிவிப்பைப் பின்னர் கொடுத்திருந்தார். அதையும் இவற்றுடன் இணைத்து மேலே குறிப்பிட்டுள்ள எல்லா பத்திரிகைகளுக்கும் விளக்கம் கேட்டு எழுதப்பட்டது.

(முற்பகல் 10-10)

அவைகளிடமிருந்து விளக்கங்கள் வந்துள்ளன. இவற்றில், தினத்தந்தி, மாலைமுரசு இரண்டு பத்திரிகைகளும் இனிமேல் கவனமாக இருப்பதாகத் தெரிவித்தும், விடப்பெற்ற பகுதிகளுடன் சேர்த்து முழுப் பகுதியையும் மீண்டும் 1—3—1978 அன்று வெளியிட்டுள்ளதாகவும் பதில் அனுப்பியுள்ளன. எனவே, அப்பத்திரிகைகளை இனி இம்மாதிரி நிகழாவண்ணம் கவனத்துடன் நடந்து கொள்ளும்படி தெரிவித்துக்கொள்கிறேன்.

இடநெருக்கடி காரணமாக, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பேசியது முழுவதையும் அது சம்பந்தப்பட்ட மற்ற பகுதிகளையும் கூடத் தாங்கள் வெளியிடவில்லை என்றும், எனவே ஒரு பகுதியை மறைத்து வெளியிட்டு, அதன் மூலம் மக்களுக்குத் தவறான தகவலைத் தரவேண்டும் என்ற எண்ணம் இல்லை என்றும் உள்நோக்கம் எதுவும் இல்லை என்றும் அண்ணா, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி ஆகிய நாளிதழ்கள் தெரிவித்துள்ளன



பத்திரிகைகள், நடவடிக்கைக் குறிப்புகளை முழுவதும் வெளியிட முடியாது என்பதையும் ஆனால் மையக் கருத்துக்கள் மாறாமல் கூடியவரை எல்லா நிகழ்ச்சிகளும் வெளியிடப்படுவது தான் நல்லது என்றும் ஏற்கனவே தீர்ப்பளித்துள்ளேன். அதை மீண்டும் வலியுறுத்தி, அவைநிகழ்ச்சிகளை வெளியிடும்போது இம்மாதிரி தவறுகள் நேராவண்ணம் பார்த்துக்கொள்வது அவசியம் என்றும், இடநெருக்கடியைக் காரணம் காட்டி ஒரு சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டு விட்டு அதையொட்டிய பகுதிகளை வெளியிடாது இருப்பது சில சமயங்களில் தவறான கருத்துக்களை ஏற்படுத்தக் கூடும் என்பதால் இனிமேல் இம்மாதிரி நிகழா வண்ணம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனவே, அவை உரிமை குறித்து எழுப்பப்பட்ட பிரச்சினைகளில் மேல் நடவடிக்கை ஏதும் தேவையில்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

(ஆ) 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடு மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினை மீதான பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1—3—1978 அன்று திரு. ஆர். உமாநாத் அவர்கள் பேரவையில் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் மீது ஒரு உரிமை மீறல் குறித்த பிரச்சினையை கொண்டு வந்தார். அப்பத்திரிகை 15—2—1978 அன்று வெளியிட்ட ஒரு செய்தி குறித்துப் பேரவையில் 23—2—1978 அன்று திரு. உமாநாத் அவர்கள் ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினையை எழுப்பினார். அதற்கு நான் 28—2—1978 அன்று எனது தீர்ப்பை அளித்தேன். 1—3—1978 அன்று இது குறித்து இந்தியன் எக்ஸ்பிரஸ் வெளியிட்ட செய்தியில் எனது தீர்ப்பு முழுவதும் வெளியிடப்பெறவில்லை என்றும் அப்பத்திரிகை எழுதிய கடிதத்தின் வருத்தம் தெரிவிக்கும் பகுதியும், இனி இவ்விதம் நிகழாது என்று உறுதி அளித்தப் பகுதியும் எனது தீர்ப்பில் நான் கொடுத்த எச்சரிக்கைப் பகுதியும் விடுபட்டுள்ளன என்றும், இது வேண்டுமென்றே செய்யப்பட்டது என்றும், எனவே இது அவை உரிமையை மீறிய செயல் என்றும் திரு. உமாநாத் குறிப்பிட்டார்.

[1978 மார்ச் 6

### (3) அமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எழுதிய கடிதம் குறித்து.**

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தங்களின் அனுமதியோடு இந்த கடிதத்தை இந்த அவைக்கு படிக்க விரும்புகிறேன். இந்தக் கடிதம் எழுதியது சமூக நலத்துறை அமைச்சர் மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி அவர்களாவர். இதை அவர் தமிழக முதல்வர் அவர்களுக்கு எழுதி இருக்கிறார்.

வணக்கத்திற்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு,

வணக்கம்.

கடந்த 1—3—1978 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற நிதிநிலை அறிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்கள் என்மீது சாட்டிய குற்றச்சாட்டினைப் பற்றி என்னுடைய விளக்கத்தைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் பயன்படுத்துகிற அரசாங்க கார் டி. எம். வி. 7575 ரிப்பேர் வேலைகளுக்காகவோ சர்வீசுக்காகவோ ஒர்க் ஷாப்பிற்குச் செல்லுகிறபோது நான் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிற இலாகாவைச் சேர்ந்த கார்களை நான் பயன்படுத்துவது வழக்கம்.

அதுபோல் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்ட நாளன்று என்னுடைய கார் ஒர்க்ஷாப்பிற்குச் சென்றிருந்தால் என்னுடைய உபயோகத்திற்கு என் சம்பந்தப்பட்ட இலாகாவிலிருந்து டி. எம். பி. 1144 வந்திருந்தது.

அன்று நான் அரசாங்க அலுவல் காரணமாக வீட்டிலேயே இருக்க நேர்ந்தது. அந்த நாளன்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படாமல் எனது தாயார் அவர்கள் அந்தக் காரைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். என்னுடைய தாயார் வயதான காரணத்தினால் அவர்கள் வெளியிலே செல்லும்பொழுது





எங்கள் குடும்பத்திற்கு பாதுகாப்பு அதிகாரிகளில் ஒருவர், தாயாரோடு அவர் ஏற்கனவே அறிமுகமானவர் என்ற முறையில் உதவிக்குச் செல்வது வேலை நேரங்கள் இல்லாத போதும் கூட வழக்கம்.

குறிப்பிட்ட இந்த முறையில்தான் எதிர்க் கட்சித் தலைவர் சென்றிருக் நாளன்று என்னுடைய தாயாரும், பாதுகாப்பு அதிகாரியும் நடைபெற்றதற்குப் கிறார்கள். இதுதான் அந்தச் சம்பவம் இந்தக் காரை என் பின்னணி என்றாலும், நான் பயன்படுத்துகிற நான் தாயார் உபயோகப்படுத்த உரிமை இருக்கிறதென்றாலும், சென்றது விரும்பாத ஒரு இடத்திற்கு அந்தக் காரை எடுத்துச் வருந்தத்தக்க நிகழ்ச்சி என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். இதுபற்றிய செய்தி எனக்குத் தெரிந்தவுடன் என்னுடைய தாயாரையும், பாதுகாப்பு அதிகாரியையும் இனி வருங்காலத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறக் கூடாதென்று உண்மையாகக் கண்டித்திருக்கிறேன்.

அப்பாற்பட்டு நடந்து எனவே, என்னுடைய கவனத்திற்கு வருத்தத்தைத் தெரிவித்துக் விட்ட இந்த நிகழ்ச்சிக்கு என்னுடைய எனக்குத் கொள்கிறேன். இனிமேல் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தெரியாமல் கூட நடைபெறாது என்பதற்கு உறுதி கூறுகிறேன்.

தங்கள் தாழ்மையுள்ள,

(ஒப்பம்) பி. டி. சரஸ்வதி.

### (4) உரிமைப் பிரச்சினைகள்.

**(அ) 'இந்தியன் எக்ஸ்பிரஸ்', 'மாலை முரசு', 'தினமணி', 'அண்ணா' மற்றும் 'தினத்தந்தி' ஆகிய நாளேடுகள் மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் பிரச்சினைகள் மீதான பேரவைத் தலைவர் தீர்ப்பு.**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 27—2—1978 அன்று பேரவையில் திரு. சாதிக் பாட்சா அவர்கள் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் மீதும், திரு. து. புருஷோத்தமன் அவர்கள் மாலை முரசு நாளிதழ் மீதும், திரு. ஏ. ரகுமான்கான் தினமணி நாளிதழ் மீதும்,

அப்படி வற்புறுத்தியதின் பேரில் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடந்தது. அதில் அந்த பேச்சுவார்த்தையில் என்ன நடந்தது என்பது எங்களுக்குத் தெரியாது. அரசு தரப்பில் கூறப்பட்டது. அவர்களின் குறைகளை எல்லாம் கேட்டோம். இன்னும் சில நாட்களில் அதிகாரிகளோடு கலந்து, அமைச்சரவையில் கலந்து எங்களுடைய முடிவை தெரிவிக்கின்றோம் என்று அரசு தரப்பில் சொல்லப்பட்டது. அவர்கள் தரப்பில் என்ன சொல்லப்பட்டது என்றால், எங்களுடைய குறைகளை அரசு உதாசீனம் செய்து விட்டது. பேச்சு வார்த்தை முடிந்துவிட்டது, ஆகவே நாங்கள் தொடர்ந்து போராட்டத்தை நடத்துகிறோம் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஆகவே, எங்களைப் பொறுத்தவரையில் எதிர்க்கட்சிகள் கூறியவாறு அவர்களோடு அரசு பேச்சுவார்த்தை நடத்திய பிறகு இன்னின்ன விஷயங்களை பேசினோம் என்று சொல்லியிருப்பார்களேயானால் நன்றாக இருந்திருக்கும். ஆனால் அவர்களே ஒரு அறிவிப்பை செய்துவிட்டார்கள். பின்னால் போராட்டத்தை அவர்கள் துவங்கியபின், பிரதிநிதிகள் சென்று அவர்களைப் பார்த்து பேசிய போது, அரசோடு பேசி இதற்கு முடிவு செய்ய வேண்டும் என்றும், அதுவும் இன்னின்ன தேதிக்குள் அரசு தெரிவிக்க வேண்டும் என்றும் சொல்லியிருந்தார்கள். அப்படி ஏன் ஒரு 'அல்டிமேட்டம்' கொடுக்க வேண்டும். அரசு இதைப்பற்றி பார்த்து முடிவு செய்ய வேண்டும் என்று விட்டிருக்கக் கூடாதா? என்று நாங்கள் அவர்களுக்கு அறிவுரை சொன்னோம்.

ஆனால் அவர்களுடைய நியாயத்தையும் நாம் புறக்கணித்துவிட முடியாது. அவர்களுடைய கோரிக்கையிலும் நியாயம் இருக்கிறது. இன்றைக்கு மத்திய சர்க்காரில் கொடுக்கப்படுகின்ற ஊதியம் தங்களுக்கும் தரப்படவேண்டும் என்று கேட்க தங்களுக்கு உரிமை இருக்கிறது. அதே நேரத்தில் அரசு தரப்பில் பல சங்கடங்கள் இருக்கலாம். அதை உணர்ந்தாலும் பக்கத்தில் வேலை செய்கின்ற மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு கொடுக்கப்படுகின்ற சலுகை தங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று அவர்கள் கூறுவதில் தவறு கிடையாது.





இருந்தாலும், நமக்கிருக்கின்ற பொருளாதார நெருக்கடிகள், நம்முடைய நிதி வசதி, இவைகளைப்பற்றியும் பேசித் தீர்ப்பதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அதைத் தான் நாங்கள் வற்புறுத்துகின்றோம். அதேபோன்று அரசு ஊழியர்களும் தொடர்ந்து போராட்டத்தை நடத்திக்கொண்டிருப்பது உசிதம் அல்ல. அவர்களும் போராட்டத்தை ஒத்தி வைத்து அரசோடு பேச்சுவார்த்தை நடத்த மீண்டும் முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்கட்சித் தலைவர்களுடைய கூட்டம் ஒன்றைக் கூட்டினார்கள். கோட்டையில் இரண்டு நாட்களுக்கு முன்னால் நடந்தது. நாங்கள் கலந்து கொண்டோம். அரசு தரப்பில் தங்களுக்கு இன்னின்ன விதங்களில் சங்கடங்கள் இருக்கின்றன என்று எடுத்துக்கூறினார்கள். ஊழியர்களும் தங்கள் குறைகளை தெரிவித்தார்கள். அதே நேரத்தில் அரசாங்கத்தினுடைய நிலைமை என்ன என்பதை பட்டவர்த்தனமாக, நிதிநிலை போக்குவரத்து என்ன என்பதையெல்லாம் எடுத்துச்சொன்னார்கள். அது எப்படியிருந்தபோதிலும், இதற்கு ஒரு முடிவு எடுத்தாக வேண்டும் என்று நாங்கள் வற்புறுத்துகின்றோம். ஆகவே, அரசு இதற்கான முடிவை எடுத்து இப்படிப்பட்ட போராட்டத்தை தவிர்க்க வேண்டும், ஆகவே இதைப் பற்றி விவாதித்து, முடிவு எடுக்க, அவையில் இதைப்பற்றி விவாதிப்பதற்கு அரசின் இதர நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-20

* திரு. என் சங்கரய்யா: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசிதழ் பதிவு இல்லாத ஊழியர்கள் சம்பந்தமான பிரச்னையைத் தீர்ப்பதற்கு பின்வருமாறு யோசனைகளை நான் பலமாக வற்புறுத்துகிறேன்.

இன்றைக்கு அரசிதழ் பதிவு இல்லாத ஊழியர்கள் சம்பந்தமான விவாதிப்பதற்காக இந்த அவையை ஒத்திவைப்பதற்கான காரணங்கள் என்ன என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நேற்றைய முன்தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே இருக்கக்கூடிய கட்சித் தலைவர்களின் கூட்டத்தை நடத்தினார்கள். இந்தக் கூட்டத்திலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் கலந்து கொண்டு, என் கட்சியின் சார்பிலே அரசு ஊழியர்களுடைய பிரச்னையைத் தீர்ப்பதற்கு பின்வருமாறு யோசனைகளை நான் பலமாக வற்புறுத்தினேன்.

[பேரவைத் தலைவர்] [1978 மார்ச் 6

இம்மாதிரி தீர்ப்பின் முக்கிய பகுதிகளை வெளியிடாததும் அவர்களே எழுதிய கடிதத்தின் பகுதிகளை மறைத்து செய்தி வெளியிட்டதும் தவறான செயலாகும். தவறான செய்தி ஒன்றினை வெளியிட்டு அது தவறு என்று சுட்டிக்காட்டப்பட்டு தீர்ப்பு வழங்கியபின், அத்தீர்ப்பையும் அம்மாதிரி தவறாக வெளியிட்டதற்கான வருத்தத்தையும் முதலில் வெளியிட்ட செய்திக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்பட்டதோ அதே அளவு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடப்படவேண்டும். இதுதான் மரபு. எனவே, இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் இவ்வாறு செய்யாதது தவறானது.

ஆயினும், 2-3-1978 தேதியிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் எனது முந்திய தீர்ப்பையும் தாங்கள் முதலில் எழுதிய கடிதத்தையும் முழுவதுமாக வெளியிட்டுள்ளார்கள். எனவே, இப்பிரச்சினையை இத்துடன் விட்டுவிடலாம் என்று கருதுகிறேன். இனி இவ்வாறு நிகழாவண்ணம் அப்பத்திரிகை யுடன் நடந்துகொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள் கிறேன்.

அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானம்.

**திரு. துரை முத்துசாமி:** பாயின்ட் ஆப் ஆர்டர். இன்று 6 தேதி ஆகியும் என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இன்னும் எங்களது சம்பளத்தை வாங்கவில்லை. மேலும் பொது மக்களும் அவதிப்படுகிறார்கள். காவரையறையின்றி என்.ஜி.ஓ. க்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இன்னும் சம்பளம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்பதை பேரவையில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(5) ஒத்திவைப்பு தீர்மானம்.

(அ) அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள் வேலை நிறுத்தம் குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அரசிதழ் பதிவு பெறாத அலுவலர்கள் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்துவருவது குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை



1978 மார்ச் 6] [பேரவைத் தலைவர்]

ஒத்திவைக்க வேண்டுமென்று திரு. க. சுப்பு, திரு. ஏ. ஆர் மாரிமுத்து, திரு. ஓ. சுப்பிரமணியம், திரு. புஷ்பராஜ், திரு. நா. சுந்தரராஜ், திரு. என். சங்கரய்யா, திரு. கு. ரமணி, திரு. ஆர். கிருஷ்ணன், திரு. ஜே. ஜேம்ஸ், திரு. சோ. அழகர்சாமி, திரு. கூத்தக்குடி ச. சண்முகம், திரு. செ. சிவசாமி, திரு. எம். ஏ. லத்தீப், திரு. ரா. மார்க்கபந்து ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து மிகச் சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று அரசு ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். இந்த வேலைநிறுத்தம் நீடிக்கப்படக்கூடாது என்பது என்னுடைய கருத்து. வேலை நிறுத்தத்தை நாங்கள் தூண்டிவிடவில்லை என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால் அவர்களுக்கு தொழிற்சங்க உரிமை இருப்பதின் காரணமாக, அவர்களுக்கு இருக்கின்ற குறைபாடுகளை போக்கிக் கொள்வதற்கு வேலைநிறுத்தம் செய்வதின் மூலமாக அவர்களுடைய கோரிக்கையைச் சொல்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அந்த உரிமையை நாம் பறிக்க முடியாது.

இருந்தாலும் என்னைப் பொறுத்த வரையிலும் அரசு தரப்பில் சொல்லப்படுகின்ற காரணங்களையும், ஊழியர்கள் சொல்லுகின்ற குறைகளையும் கேட்டு பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டும், இந்தப் போராட்டம் தொடரக் கூடாது. போராட்டத்தை திரும்பப் பெறவேண்டும் என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்காது. எங்களுடைய கருத்தும் அதுதான்.

அரசு ஊழியர்களை நாங்கள் பார்த்தபோது, போராட்டத்தை தொடர்ந்து நடத்தக்கூடாது. அரசோடு பேசி ஒரு முடிவுக்கு வருவதுதான் நல்லது என்று கூறியிருக்கின்றோம். அதுதான் எங்களுடைய கருத்தும் கூட, அவர்கள் முன்னால் போராட்டத்தை ஆரம்பித்த போது, இந்த அவையில் அது பற்றி பேசப்பட்டது. அவையில் எல்லா எதிர்க்கட்சித் தலைவர்களும், அரசு அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தவேண்டும் என்று வற்புறுத்தியிருக் கிறார்கள்.

அதாவது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட்டிலே குறிப்பிட்டிருப்பதுபோல் 200 ரூபாய்க்கு கீழே சம்பளம் பெறக் கூடியவர்களுக்கு 25 ரூபாயும், 200-க்கு மேலே சம்பளம் வாங்கக் கூடியவர்களுக்கு 15 ரூபாயும் நான்-ரெகரிங்காக ஒரே ஒரு மாதத்திற்கு மட்டும் கொடுப்பதென்றும் தொடர்ந்து வராமல் இருக்கக்கூடிய இந்தப் பணத்தை, இந்த அரசாங்கம் நிர்ணயித்திருக்கும் சம்பளக் கமிஷன் அதனுடைய முடிவுகளை நிர்ணயித்து, இந்த அரசுக்கு ஒரு அறிக்கையை வெளியிடும் வரையில் இந்த அரசாங்கம் அவர்களுக்கு மாதந்தோறும் இதை 15 ரூபாய், 25 ரூபாய், 200 ரூபாய்க்கு மேல் சம்பளம் வாங்கக்கூடியவர்களுக்கும், 200 ரூபாய்க்கு கீழே சம்பளம் வாங்கக் கூடியவர்களுக்கும் தொடர்ந்து கொடுத்து வரவேண்டும். அவ்வாறு கொடுத்துவந்தால் அதிலே பிரச்னை இல்லை. காரணம், 1—4—1978 முதல் இந்தச் சம்பளக் கமிஷனின் தீர்ப்புகளை இந்த அரசாங்கம் நிறைவேற்றும் என்று ஏற்கனவே நிதி அமைச்சர் அவர்களால் வாக்குறுதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் கூறினேன்.

அப்போது அவர்கள் கேட்டார்கள். ஒருவேளை இந்தச் சம்பளக் குழு இந்த அளவிற்கு அவர்களுக்கு உதவி கொடுக்க வேண்டாம் என்றால், அவர்களுக்கு அதிகப்படியான நிதியை கொடுப்பதாகிவிடுமே என்று அவர்கள் சொன்னபோது, நான் சொன்னேன் அப்படியானால் பரவாயில்லை, நம்முடைய மாகாண அரசாங்கமே அதை அவர்களுக்கு மானியமாகக் கொடுத்து விடலாம் என்று இன்றைக்கு ஜூன் மாதத்திற்குள் சம்பளக் குழுவின் அறிவிப்புகள் வந்துவிடும். ஆகவே, இதற்கிடையிலே நாட்கள் அதிகமில்லை. ஆகவே, இந்த 15, 25 ரூபாய்களை இந்த அரசு உதவித்தொகையாக மாதந்தோறும் இடைக்கால நிவாரணமாக அவர்களுக்குக் கொடுப்பது பொருத்தமாக இருக்கும், இதை சம்பளக் குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கின்றவரையிலே அமுல் செய்யப்பட வேண்டுமென்று நான் பலமாக வற்புறுத்தினேன்.

அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு மத்திய சர்க்கார் ஊழியர்களின் சம்பளத்திற்கு ஏற்றவாறு இவர்களின் சம்பளமும் இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் பார்த்தால் தமிழக அரசிலே இருக்கக்கூடிய 300 ரூபாய்க்கு கீழே சம்பளம் வாங்கக் கூடியவர்களுக்கும், மத்திய அரசாங்கத்திலே 300 ரூபாய்க்கு கீழே சம்பளம் வாங்கக் கூடியவர்களுக்கும் இடையிலே சுமார் 35





ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. அதற்கு மேலே சம்பளம் வாங்கக் கூடியவர்களுக்கு 50 ரூபாய்வரை வித்தியாசம் இருக்கிறது. இப்படி மத்திய அரசாங்கத்திலே உள்ளவர்களுக்கும், மாநில அரசாங்கத்திலே உள்ளவர்களுக்கும் எந்தவிதத்திலும் வித்தியாசம் இருக்கக் கூடாது. அவர்கள் செய்யக்கூடிய பணி ஒன்றாக இருக்கிறது. ஆகவே, ஒரேமாதிரியான சம்பளம், மத்திய அரசாங்கத்திலே கொடுக்கப்படுகின்ற சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்று நான் வற்புறுத்தினேன்.

அதைப்போல், அரசாங்கத்திலே வேலை செய்யக்கூடிய பெண்கள் தங்கள் வீடுகளிலே வேலைசெய்துவிட்டு, அலுவலகம் வருவதற்கு கொஞ்சம் கஷ்டமாக இருக்கின்றது, இப்போதுள்ள வேலைநேரம் சரியல்ல, காலை 10½ மணி முதல் மாலை 5 மணி வரை தமிழகம் பூராவிலும் ஒரே சீரான நேரத்தை அமைத்துத் தரவேண்டும் என்று அவர்கள் சொன்ன கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் வற்புறுத்தினேன்.

அதோடு மட்டுமல்ல. அவர்களுடைய பிராவிடெண்ட் பண்டு நிதியிலே ஏற்கனவே இருந்ததைப்போல், அவர்களுடைய வீட்டிலே மருத்துவ செலவுக்காக அல்லது அவர்களுடைய திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் வந்தால் கடன் பெறுவதற்கான வசதி முன்பு எப்படியிருந்ததோ, அதைபோல் இருக்க புதிய உத்தரவை ரத்துசெய்ய அரசாங்கம் முன்வர வேண்டுமென்றும் முன்பிருந்த நிலைமைக்கு உடனடியாக வர வேண்டுமென்றும் நான் வற்புறுத்தினேன்.

அது மட்டுமல்லாமல், கட்டாய ஓய்வுத் திட்டத்தின்கீழ் 700 பேர்களை இந்த அவசர காலத்திலே வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களின் ஒரு பகுதிக்கு மட்டும் விசாரணை நடைபெற்று மீண்டும் வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இது போல் இல்லாமல், மற்றவர்கள் அனைவரையும் வேலையில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும், இந்தக் கட்டாய ஓய்வளிக்கும் திட்டத்தை, இந்தக் கொள்கையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், எங்கள் கட்சி ஆளுகின்ற மேற்கு வங்காளத்திலும், கேரளாவிலும் இந்த கட்டாய ஓய்வுத் திட்டத்தின்

கீழ் வேலை இழந்தவர்கள் அத்தனை பேர்களையும் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொண்டார்கள். அதைப் போல் இந்த மாநில அரசாங்கமும் இப்படி கட்டாயமாக ஓய்வு பெறச் செய்தவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் பலமாக வற்புறுத்தினேன்.

அதேபோல், அவர்கள் ஓய்வு பெறுகின்ற காலத்தில் இன்றைக்கு வாழ்நாள் பூராவும் இந்த அரசாங்கத்திற்காக பாடுபடுகின்றவர்களுக்கு 10,000 ரூபாய் கொடுப்பதற்கான திட்டத்தை இந்த அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென்பதாகும். இதுவும் நியாயமாகும். இப்படி இந்த அரசாங்கத்திற்காக ஒருவர் வாழ்நாள் பூராவும் பணியாற்றுகின்றவர்களுக்கு இந்த அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் நான் வற்புறுத்தி, அதற்கான திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன்.

அந்தக் கோரிக்கைகளை நாங்கள் வற்புறுத்தி அதை அரசாங்கம் அறிவிக்க வேண்டுமென்று சொன்னோம். இன்றைக்கும் நான் அதைத்தான் கூற விரும்புகிறேன். நிலைமை என்னவாக இருந்தாலும் சரி, அரசாங்கம் இந்தக் கோரிக்கைகளைப் பற்றிப் பரிசீலனை செய்து உடனடியாக அறிவிக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கூறுகிறேன். நண்பர் சிவ இளங்கோ சார்ந்த என். ஜி. ஓ. ஸ்தாபனத்தினரும், பாதனைச் சார்ந்த என்.ஜி.ஓ. ஸ்தாபனத்தினரும், ஏனைய ஸ்தாபனங்களும் இதுபோன்ற கோரிக்கைகளைத் தந்து வற்புறுத்தியிருக்கிறார்கள். நாங்கள் இதுபற்றிக் கூறியபோது முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்—ஏற்கனவே கொண்டு வந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்போது வெளி நடப்புச் செய்ய முற்பட்டீர்கள், அவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று நீங்கள் சொன்ன உறுதியின்பேரில் அவர்கள் பேச்சு வார்த்தை நடத்துவார்கள்; ஆகவே, அவர்களை விடுதலை செய்யுங்கள் என்று சொன்னதன் அடிப்படையில் அவர்களை விடுதலை செய்த பிறகு அவர்கள் இப்படி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று கேட்டார்கள்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரை அந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த நண்பர்கள் எங்களிடம் வந்து அதிகார பூர்வமாகப் பேசினார்கள். திரு. சிவ இளங்கோ அவர்களும், சுப சீதாராமன் அவர்களும் வந்து ஆலோசனை நடத்தினார்கள். 'நீங்கள் தனி ஸ்தாபனம், உங்களுக்குத் தேவையான எல்லா





நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று சொன்னோம்.
முதலமைச்சர் அவர்களோடு நடந்த பேச்சு வார்த்தை அரை
மணி நேரத்தில் முடிந்து விட்டது, அரை மணி நேரத்தில் எங்களை
அனுப்பிவிட்டார்கள் என்று அவர்கள் சொன்னார்கள்.

முதலமைச்சர் அவர்கள் மறு நாள் வேறு பல சங்கங்களோடு
பேச்சு வார்த்தை நடத்தி யிருக்கிறார். உங்களுக்கும் முதலமைச்
சருக்கும் இடையே என்ன நடந்தது? நீங்கள் பேச்சு வார்த்தை
யின்போது என்ன கேட்டீர்கள்? எதைக் கொடுக்க அவர்கள்
மறுத்தார்கள்? அதைத் தமிழக மக்கள் மத்தியில் வையுங்கள்.
நீங்கள் இன்று இரண்டு பிரிவாக இயங்கிக் கொண்டிருக்கிறீர்கள்,
இரண்டு பேரும் ஒன்றாகச் சேர்ந்து அரசாங்கத்திடம் கோரிக்கை
யைக் கொடுத்து சிறிது அவகாசம் கொடுங்கள். அப்படிக்
கொடுத்து அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அதற்கு
பிறகு தொழிற்சங்க ரீதியில் நடவடிக்கை எடுப்பதில் தவறு
இல்லை.

கைது செய்யப்பட்ட நூற்றுக் கணக்கானவர்களை விடுதலை
செய்யவேண்டுமென்று நாங்கள் கோரி விடுதலை செய்யப்பட்ட
தற்கு பிறகு மறுநாளே மறியல் செய்ய வேண்டுமென்று நீங்கள்
செல்லுவது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சிக்குச் சரியாகப்
படவில்லை என்று கூறினோம். அதுதான் என்.ஜி.ஓ.க்கள் நலனைப்
பாதுகாக்கவும் சரியாக இருக்கும். அவர்கள் மற்றவர்களையும்
கூட்டி வைத்துப் பேசுவதாகச் சொல்லிப் போனார்கள்.

மறுநாள் காலையில் வந்தார்கள், நீங்கள் அனைவரும் சொல்லுகிற
யோசனையைக் கேட்டுக் கொள்கிறோம்; மறியல் நடைபெறும்
என்று கூடியுள்ள ஊழியர்கள் சேப்பாக்கத்தில் காத்துக் கொண்
டிருக்கிறார்கள். சர்வ கட்சிப் பிரதிநிதிகளும் எங்கள் கோரிக்
கையை சட்டமன்றத்தில் வற்புறுத்துவதாக உறுதி அளித்தால்
அவர்கள் திருப்திப் படுவார்கள்; நாங்கள் மாற்று வழியில்
இயக்கத்தை நடத்துவது பற்றி யோசிக்க முடியும் என்று
சொன்னார்கள். அப்போது எங்கள் கட்சியின் சார்பில் நாங்கள்
வற்புறுத்தியது—நாங்கள் வருகிறோம்; ஆனால் நாங்கள் வந்தால்
எங்களுக்குத் தெரியாமல், எங்களுடைய உடன்பாடு இல்லாமல்
நீங்கள் போராட்டத் திட்டத்தை அறிவிவிக்கக்கூடாது. அதற்கு

[திரு. என். சங்கரய்யா] [1978 மார்ச் 6

நாங்கள் ஆதரவு கொடுத்ததாக எங்கள்மீது குற்றம் சுமத்தக் கூடாது என்று சொன்னேன். அப்படிச் செய்ய மாட்டோம் என்று நண்பர் சுப. சித்தாராமன் அவர்கள் உறுதி அளித்தார்கள். மற்றக் கட்சியைச் சார்ந்தவர்களும் அதே போலத்தான் கேட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அப்படித்தான் என்னிடம் கேட்டார்கள். சங்கரய்யாவைக் கேட்காமல் பதில் சொல்ல மாட்டேன் என்று தான் அவர்களிடம் சொல்லிவிட்டதாக எதிர்க் கட்சித் தலைவர் கூறினார் என்றார்கள். நீங்கள் அனுப்பினால் நாங்களும் எங்கள் கட்சியின் சார்பாக பிரதிநிதியை அனுப்பு கிறோம் என்றார்கள்.

அந்த வகையில் எங்கள் கட்சியின் சார்பாக திரு. ரமணி அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. சாதிக் பாட்சா அவர்களும், மற்றும் காங்கிரஸ் கட்சி, ஜனதா கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி சார்பாக பிரதிநிதிகள் அங்கு சென்று, உங்களுடைய கோரிக்கையைப் பற்றிச் சட்ட மன்றத்தில் தொடர்ந்து எடுத்துச் சொல்லுவோம் என்று அங்கே பேசினார்கள்.

கடைசியில் என்ன நடந்தது? நண்பர் சாதிக் பாட்சா அவர்கள் பேசி முடிந்த பிறகு, திரு. ரமணி அவர்கள் பேசி முடித்த பிறகு திடீரென்று அவர்கள் அறிவித்தார்கள்—2-ம் தேதி பார்த்து விட்டு 3 ஆம் தேதி முதல் மறியலில் ஈடுபடுவோம் என்று சொன்னார்கள். அது அங்கு சென்றிருந்த ரமணி அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது. எங்களைக் கேட்காமலே நீங்கள் இப்படி போராட்ட திட்டத்தை அறிவித்தால், "நாங்கள் அதற்குப் பொறுப்பு எப்படி ஏற்க முடியும்?" என்று வருத்தத்தோடு சொல்லிவிட்டு வந்தார்கள்.

மூன்றாம் தேதியிலிருந்து மறியல் என்று அறிவித்து விட்டு, மறுபடியும் எங்களிடம் வந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஒரு பிரதிநிதியை 2-ம் தேதி நடைபெறும் பொதுக் கூட்டத்திற்கு அனுப்ப வேண்டுமென்று வந்து கேட்டார்கள். மற்றவர்களைக் கலந்து கொண்டு பதில் சொல்வதாகக் கூறினோம். நண்பர் பாதனும் நீங்களும் ஒன்றாகச் சேர்ந்து ஒற்றுமையை ஏற்படுத்திக் கொண்டு, கூட்டத்தை நடத்தினால் அதிலே வந்து பேசுகிறோம் என்று சொன்னோம். 3 ஆம் தேதி மறியலைத்



1978 மார்ச் 6] [திரு. என். சங்கரய்யா]

தொடங்கக்கூடாது, அரசாங்கத்திற்கு ஓரளவு அவகாசம் அளிக்க
வேண்டும்; அரசாங்கம் உங்கள் கோரிக்கையை இறுதியாக
நிராகரித்து விட்டார்கள் என்றால் அதற்குப் பிறகு முழு
நிலைமையையும் பொதுமக்கள் சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.
அதற்கு முன்கூட்டியே திட்டமிட்டு இப்படிப் போராட்டம்
நடத்துவது சரியாக இராது. மூன்றாம் தேதி நடைபெறும்
மறியலை ஆதரித்துப் பேசவேண்டுமென்று சொல்லி ஏற்கனவே
ஏற்பட்ட நிலையை பிரிசிபிடேட் செய்யாதீர்கள். நாங்கள்
சொன்னதை நீங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை, மறியல் செய்ய,
திட்டமிட்டு விட்டீர்கள், ஆகவே, நாங்கள் கலந்து கொள்ள
இயலாது என்று தெரிவித்தோம்.

(முற்பகல் 10-30)

முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நீங்கள் வற்புறுத்தி
நாங்கள் விடுதலை செய்தோம் என்று சொன்னார்கள். எதிர்க்கட்சித்
தலைவர் கலைஞர் கருணாநிதி, நாங்கள், இந்திய கம்யூனிஸ்ட்
கட்சியைச் சேர்ந்தவர்கள், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள்,
ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் மறியல்
போராட்டம் வேண்டாம் என்று சொன்னது அரசாங்கத்திற்குத்
தெரியும், சுப்பு அவர்கள் கூட என்னிடம் சொன்னார்கள்,
என்னைப் பேசுவதற்கு அவர்கள் கூப்பிட்டார்கள். ஆனால் கலைஞர்
கருணாநிதி அவர்கள் போகவேண்டாம் என்று சொல்லிவிட்டார்
என்றும் ஆனால் ரகுமான்கானுக்கு விஷயம் தெரியாது அவரை
அழைத்துப் போய்விட்டார்கள் என்றும் சொன்னார். ஆகவே,
எதிர்க்கட்சிகளைச் சேர்ந்தவர்கள் என்ன நிலைமையை எடுத்தார்கள்
என்பது தெரியும். அவர்கள் வேலைநிறுத்தத்தை வைத்துக்
கொண்டிருக்கிறார்கள், இந்த வேலை நிறுத்தத்தைப் பற்றி
உங்களுடைய நிலை என்ன என்று முதல் அமைச்சர் அவர்கள்
கேட்டார்கள். எங்களுடைய கட்சித் தலைமையைக் கேட்டுக்
கொண்டு தான் நாங்கள் சொல்லமுடியும் என்று சொல்லிவிட்டோம்.

அந்தக் கூட்டம் முடிந்தபிறகு பத்திரிகை நிருபர்கள் எங்களைச்
சூழ்ந்துகொண்டார்கள். புலவர் கோவிந்தன், நான், மாரிமுத்து,
கந்தசாமி, மார்க்கபந்து, ஜேம்ஸ் எல்லோரும் சொன்னோம்,
அவர்களுடைய கோரிக்கைகளை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டு

மென்று. என்ன என்ன கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியுமோ அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சரிடம் வற்புறுத்தினோம் என்றும் சொன்னோம்.

பிறகு அவர்கள் மறியல் பற்றி என்ன நிலைமை என்று கேட்டார்கள். மறியல் இன்றைக்கு நீங்கள் செய்யவேண்டாம். என்றைக்கும் வேண்டாம் என்று சொல்லவில்லை. இன்றைக்கு வேண்டாம் என்று சொன்னோம். இது தான் எங்கள் நிலை என்று சொன்னோம்.

பிறகு அவர்கள் ஸ்ட்ரைக்கைப்பற்றிக் கேட்டார்கள். இந்தியன் எக்ஸ்பிரஸிலே, சரியாகப் போட்டிருக்கிறார்கள். ஸ்ட்ரைக்கைப்பற்றி என்.ஜி.ஓ. தலைவர்கள் ஆலோசனை எங்களிடம் கேட்கவில்லை, மறியல் பற்றிக் கேட்டார்கள், ஒத்திவையுங்கள் என்று சொன்னோம் என்று தான் குறிப்பிட்டோம். மறியலை ஒத்திவையுங்கள், முதலமைச்சர் என்ன அறிவிக்கிறார் என்று பார்த்துச் செய்யுங்கள் என்று சொன்னோம். ஸ்ட்ரைக்கைப் பொறுத்தவரை 'It is for them to decide' என்றுதான் சொன்னேன்.

அப்படியானால், பத்திரிகை நிருபர்கள் கேட்டார்கள், வேலை நிறுத்தத்தை வாபஸ் வாங்கவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர்கள் கேட்பீர்களா என்று ஏற்கனவே மறியல் வேண்டாம் இப்போது என்று சொல்லியிருக்கிறோம். அதுதான் எங்கள் நிலை என்றேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். அரசாங்கம் இதை அனுதாபத்தோடு பார்த்து, அவர்கள் வேலை நிறுத்தம் செய்கிறார்களே என்று பார்க்க வேண்டாம்.

என்.ஜி.ஓக்கள் 7½ லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு வேறு சங்கங்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பாதன் தலைமையில் உள்ள சங்கத்தினர் 3 ஆம் தேதி விடுப்பு எடுக்கும் வேலை நிறுத்தத்தை நடத்தாமல் அரசாங்கத்தின் அறிவிப்பை எதிர்பார்த்து ஒத்திவைத்திருக்கிறார்கள். அதைப் போலே ரெவின்யூ ஆபீஸர்ஸ் சங்கம், தலைமைச் செயலகச் சங்கம் போன்





றவை எல்லாம் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இவர்கள் வேலைநிறுத்தம் செய்வதைப் பார்க்காமல் அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் நேற்று ஒரு கூட்டத்திலே பேசும் போது கூறியிருக்கிறார்கள், போலீஸாரை விட்டு கைது செய்ய மாட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். எங்களுடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலை ஊழியர்கள் கோரிக்கைகளை வலியுறுத்துகிற போது அடக்கு முறைகளைக் கொண்டு அடக்குவது பயன்தராது என்பது தான்.

நேற்றைக்கு முதலமைச்சர் அவர்கள் பேசியதுபற்றி, அது ஆட்சேபகரமான பகுதி என்று பலர் என்னிடத்திலே சொன்னார்கள். நானே மக்களிடம் சென்று பிரச்சினைகளை பற்றி சொல்வேன் என்று அவர் சொன்னதாக. மாநிலத்திலே உள்ள வர்கள் தங்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்துவதற்காக கிளர்ச்சி செய்வது என்ற நிலை உண்டு. ஆனால் முதலமைச்சர் அவர்கள் அவைகளைப்பற்றி கவனித்து கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் மக்களைத் திரட்டி இந்தக் கிளர்ச்சிக்கு பதில் சொல்ல வேண்டுமென்று முறையிலே எடுக்கக்கூடிய நிலை சரியானதல்ல. பல சிக்கல்கள் இன்றைக்கு இருந்தாலும்கூட, தேர்தல் காலத்திலே கொடுத்த வாக்குறுதிப்படி, செயல்பட வேண்டுமென்ற முறையில் அவர்கள் வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்காமல் நீங்கள் அறிவிப்புக் கொடுங்கள், எந்த நேரத்திலேயும் அவர்களுடைய கோரிக்கைகளைப்பற்றி பேச்சுவார்த்தைகளின் மூலம் பேசித் தீர்த்து வைப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும். அதனால் இந்தச் சபையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது என்பதைக் கூறிக்கொண்டு, அமர்கிறேன்.

## (6) ஒழுங்குப் பிரச்னை.

### ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு கொடுத்த உறுப்பினர்களை எந்த வரிசையில் பேச அழைப்பது என்பது குறித்து.

**திரு. சோ. அழகர்சாமி :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். இந்தச் சபை நடவடிக்கைகள் சம்பந்தமாகத்தான் பாயிண்ட் ஆஃப் ஆர்டர். ஒத்தி வைப்புத் தீர்மானம் சம்பந்தமாக நாங்கள் கொடுக்கும்பொழுது, யார் முதலிலே கொடுத்தார்கள், யார் இரண்டாவதாகக் கொடுத்தார்கள் என்ற வரிசையில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுக்கப்படுகிறதா அல்லது இதிலேயும் பெரிய கட்சி என்று பார்த்து அந்தக் கட்சி வரிசையில் வாய்ப்பு கொடுக்கப் படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எது எதை யார் யார் எப்பொழுது கொடுத்தார்கள் என்று மணிக்கணக்கைப் பார்த்தால், இன்றைக்குக் கொடுத்தவர்களில் திரு. சுப்புதான் முதலில் கொடுத்திருக்கிறார்கள். ஒரே நாளில் சுப்புவைத் தவிர, காலையிலே இரண்டு பேர் கொடுத்தார்கள் மீதி 4-வும் நேற்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே முதலிலே கொடுத்தவர்களுக்கு முதலிலே வேண்டுமென்று போடச் சொன்னால் முதலிலே கொடுத்தவர்களுக்குத்தான் போட வேண்டும். அதை நான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் கட்சியின் அடிப்படையிலே எல்லோரும் கொடுத்திருப்பதால் எதிர்க்கட்சி. அடுத்த எதிர்க்கட்சி என்று வரிசைக் கிரமமாகத்தான் இருக்கிறதே தவிர முன்னால் கொடுத்தவர்களுக்கு முன்னால் தாருங்கள் என்றால் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். ஜேம்ஸ் அவர்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அவர் பேச வேண்டுமென்றால் பேசட்டும், எனக்கு ஆட்சேபணை இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் தலைவரவர்களே, எனக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. சங்கரய்யா அவர்களும் பல விவரங்களைச் சொன்னார்கள்.





இந்த ஸ்டிரைக் இன்றைக்குத் தமிழ்நாட்டிலே பெரும்பகுதி இடங்களில் நடந்து, அரசு ஊழியர்கள் அத்தனைபேரும் இந்த வேலை நிறுத்தத்தில் பங்குகொண்டு, பெரும்பகுதி அலுவலகங்கள் நேற்றைக்கு முன்தினம், அதாவது சனிக்கிழமையன்று காலியாக இருந்தது. எங்களுடைய கோயில்பட்டியில், நான்போய் இரண்டு மூன்று நாட்களாகிவிட்டது, அங்கு தமிழக அரசின் எல்லா அலுவலகங்களும் மூடப்பட்டிருந்தன, அதனால் பெரும்பகுதி வேறு பல வேலைகள் முடங்கக்கூடிய நிலை ஏற்பட்டு விட்டது. இதிலே நான் சொல்லிக் கொள்ள விரும்புவது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அழகர்சாமி அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கிளப்பினார்கள். நான் எதிர்க்கட்சித் தலைவரவர்களைக் கூடக் கேட்டுக்கொள்கிறேன். அழகர்சாமி அவர்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் முதலிலே கொடுத்தார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், பிறகு அழகர்சாமி கொடுத்தார்களேயானால் அந்த உரிமையை அந்த உறுப்பினர்களுக்குத்தான் தர வேண்டியிருக்குமே தவிர கட்சித் தலைவருக்குக் கொடுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :.** அதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் ·** மற்ற கட்சித் தலைவர்களுடைய அபிப்பிராயத்தையும் கூறினால் நான் ஏற்றுக்கொள்கிறேன்.

**திரு. மு கருணாநிதி :.** தலைவரவர்களே, ஒரே கட்சியிலே உள்ள கட்சித் தலைவரும், உறுப்பினர்களும் கொடுக்கும்பொழுது உறுப்பினர்கள் முதலிலே கொடுத்திருந்து, ஆனால் உறுப்பினர், தலைவர் பேசுவார் என்று அனுமதி கொடுத்தால் உறுப்பினரை நிறுத்திவிட்டுத் தலைவர் பேசுவதற்கு அனுமதிப்பீர்களா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் கடைப்பிடிக்க வேண்டிய முறை, அழகர்சாமியின் கட்சிக்காரர்கள் 8-50 மணிக்குக் கொடுத்து, அழகர்சாமி அவர்கள் 8-55 மணிக்குக் கொடுத்தால் 8-50 மணிக்குக் கொடுத்தவரைத்தான் அனுமதிப்பேன். அவர் கேட்கின்ற கோரிக்கை முதலிலே கொடுத்தவருக்கு

[திரு. சோ. அழகர்சாமி] [1978 மார்ச் 6

மாதாமாதம் ரூ. 10 கட்டினால், பாங்கிலே ரூ. 20,000 கிடைக்கிறது என்றெல்லாம் இங்கே சொல்லப்பட்டது.

அதே போல், பிராவிடென்ட் பண்டிலிருந்து திரும்பக் கொடுப்பதிலே என்ன கஷ்டம்? அவன் கட்டிய பணம். அவன் அவசரத்திற்குக் கேட்கிறான். கடன் கொடுத்தால், திரும்பக் கட்டுகிறான்.

அதே போல், விட்டில் வேலை செய்கிற ஆட்களுக்கு, ரூ. 15, ரூ. 25 பொங்கல் இனாம் கொடுப்பதுபோல், இருக்கிற ஊழியர்களுக்கு ஒரு மாதத்திற்கு மட்டும் ரூ. 15, ரூ. 25 கொடுப்பது என்கிற முறை எனக்கு விளங்கவில்லை. சிறு இடைக்கால நிவாரணம் என்று ரூ. 15, ரூ. 25 என்று அறிவித்திருக்கிறார்கள். அதை, பே கமிஷன் ரிப்போர்ட் வந்து அமுலாகும் வரை என்று சொல்லியிருந்தால் என்ன? ரிப்போர்ட் எப்பொழுது வரும் என்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்டபொழுதுதான் ஜூன் மாதம் வரும் என்று சொன்னார்கள்.

அதே மாதிரி, பஞ்சப்படியிலே சீலிங். மத்திய சர்க்காருடைய பஞ்சப்படி எல்லா மாநிலங்களிலும்—பல மாநிலங்களிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கு கொடுக்கப்படவில்லை. இப்படி ஒரு நெருக்கடி. இதனால், அரசு ஊழியர்களுடைய வாழ்க்கையிலே நெருக்கடி. இவற்றைப்பெற வேண்டுமென்று அவர்கள் சங்கம் முடிவுசெய்கிறது; அவர்கள் போராடுகிறார்கள்.

இப்படிப்பட்ட நேரத்தில், தொழிலாளர்களும், விவசாயிகளும், அரசு ஊழியர் மற்றும் யார் போராடினாலும், அரசின் அணுகுமுறை எப்படி இருக்கவேண்டும்? அரசின் அணுகுமுறையில் ஒன்றை நான் ஆட்சேபிக்கிறேன். முதலமைச்சர் பேசியது பத்திரிகையிலே வந்திருக்கிறது. வேலை நிறுத்தக்காரர்களை போலீஸ்காரர்கள் கைது செய்ய மாட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார். இதை மதிப்பிற்குரிய சங்கரய்யா அவர்கள் வரவேற்கிறார்கள். ஆனால், அடுத்துச் சொல்லும்போது, லா அண்ட் ஆர்டர் என்று வரும்போது, மக்களே நிலைமைகளைச் சமாளிப்பார்கள் என்று சொல்லியிருக்கிறார். என்ன அர்த்தம் இதற்கு? கட்சி ஆட்களுக்கும் அவர்களுக்கும் தகராறு, சண்டை



1978 மார்ச் 6] [திரு. சோ. அழகர்சாமி]

மூட்டிவிடுவோம் என்றுதான் அர்த்தம். அதே மாதிரிதான் பல்லவன் போராட்டத்திலே, மாணவர் போராட்டத்திலே, போராட்டம் நடத்துபவரைக் கூப்பிட்டுப் பேசுங்கள், சட்டத்தை மீறினால் நடவடிக்கை எடுங்கள்; சட்டப்படி நியாயமான நடவடிக்கை எடுங்கள்; நிலைமைகளைப் பொறுத்து நடவடிக்கை எடுங்கள் என்று சொன்னார்கள்.

இப்பொழுதே, எல்லா ஜில்லாக்களிலும் ஆபீஸ்கள் மூடப்பட்டுள்ளன. மேற்கொண்டு சுமுகமான நிலையை உருவாக்கி மக்களுக்கு நன்மை செய்வதற்குப் பதிலாக, சண்டை மூட்டிவிடுகிற மாதிரி, முதலமைச்சர் சொல்லலாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்பட்ட பிறகு இவைகளையெல்லாம் பேசலாம். உங்களுடைய கருத்து என்ன, கட்சியின் கருத்து என்ன, அரசு செய்ய வேண்டியது என்ன என்பது பற்றி கருத்து சொல்லுங்கள். இப்பொழுது சுருக்கமாக ஏன் ஒத்தி வைக்க வேண்டுமென்பதுபற்றி மட்டும் சொல்லுங்கள்.

**திரு. சோ. அழகர்சாமி:** அவையின் இதர அலுவல்களை ஒத்திவையுங்கள். எல்லோரும் பேசுவார்கள், ஆளுங்கட்சிக்காரர்களும் பேசட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சங்கரய்யா அவர்கள் இதை சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்றுதான் கருத்துக்களைச் சொன்னார்கள். நீங்கள் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்கக் கூடிய வழிமுறைகளைச் சொல்ல வேண்டும், உங்கள் கொள்கைகளைச் சொல்லவேண்டும். அவர்கள் இதைச் சொல்லியிருக்கக் கூடாது என்று எடுத்துச் சொல்வது சரியல்ல. இவர்கள் இதைச் சொல்லியிருக்கக் கூடாது,

**திரு. சோ. அழகர்சாமி:** முதல்வர் சொல்லியிருக்கிறார். அதைப்பற்றி கருத்தே சொல்லக் கூடாதா? நாங்கள் சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்பதிலே முழு ஒத்துழைப்பு தரத் தயார். முதல்வர் பேசியது இதில் சரியல்ல என்பதுதான் எங்கள் கருத்து.

முதலிலே கொடுக்க வேண்டுமென்பது. ஆகவே, நான் கட்சித் தலைவர், முதலிலே கொடுக்க வேண்டுமென்றால் அதை அனுமதிக்க

**திரு. மு. கருணாநிதி:** அது தப்பு. 8-50 மணிக்குக் கொடுத்த உறுப்பினர் தங்கள் கட்சித் தலைவர் பேசுவார், நான் பேசவில்லை என்று சொல்லிவிட்டால் அதற்குப்பிறகு கட்சித் தலைவருக்கு அனுமதி தருவீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படித் தந்துதான் ஆக வேண்டும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவரவர்களே. இதுவரையிலேயும் அனுசரித்துக்கொண்டு வருவது, ஒரு கட்சியைச் சார்ந்த மூன்று பேர்கள், இரண்டு பேர்கள் கொடுத்திருந்தால் அதில் யாராவது ஒருவர் பேசுவதற்கு அனுமதி கொடுத்தீர்கள். அப்படியிருக்கும்பொழுது அந்த உறுப்பினர், கட்சித் தலைவர் பேச வேண்டுமென்று சொன்னால் கட்சித் தலைவருக்குக் கொடுப்பீர்கள் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலிலே கொடுப்பது மாண்புமிகு உறுப்பினர் திரு. வஜீப் என்று வைத்துக்கொள்ளுங்கள், அவரைத்தான் முதலில் போடுவேன், அப்படித்தான் திரு. அழகர்சாமி அவர்களின் கோரிக்கை இருக்கிறது.

**திரு. நா. சுந்தரராஜ்:** தலைவரவர்களே, உங்களிடம் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கும்பொழுது நேரம் போட வேண்டுமா, யார் முதலிலே கொடுத்தார்கள் என்று தெரிவதற்கு நேரம் போட வேண்டுமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கொண்டு வந்து தரும்பொழுது நானே குறித்துவிட்டு கையெழுத்துப்போடுவேன் இதுவரையில் நேரம் போடுவது இல்லை. ஆனால் இப்பொழுது அவர்களே எழுப்பிவிட்ட காரணத்தால் நான் எச்சரிக்கையாக இருக்கவேண்டியதாக இருக்கிறது. உறுப்பினர்கள் எந்த நேரத்திலே கொடுத்தாலும் நேரத்தைக் குறிப்பிட்டு கையொப்பம் இடுவேன்



## (5) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

**திரு. சோ. அழகர்சாமி:** பேரவைத் தலைவரவர்களே, இந்த அரசு ஊழியர்களுடைய வேலைநிறுத்தம் சம்பந்தமாக, போராட்டம் சம்பந்தமாக அவர்களுடைய கோரிக்கையின் நியாயத்தைப் பற்றி அத்தனை எதிர்க்கட்சிகளும் ஒப்புக் கொள்கிறார்கள், ஆளுங்கட்சியிலே உள்ள பலரும் ஒப்புக்கொள்ள வார்கள் என்று நான் கருதுகிறேன். நியாயமான பல கோரிக்கைகள் இருக்கின்றன.

(முற்பகல் 10-40)

ஆனால், எல்லா கோரிக்கைகளும் என்று சொல்லவில்லை யென்றாலும்கூட, பிரதானமாக, வேலை நேரத்திலே உள்ள சிரமத்தைப் பார்க்கவேண்டும். கணவனும் மனைவியும் வேலை செய்கிறார்கள் என்றால், ஒருவர் 9 மணிக்கு, ஒருவர் 10.00 மணிக்கு, ஒருவர் 10.30 மணிக்குப் போக வேண்டுமென்றால், அது சிரமம் என்பது எல்லோருக்கும் தெரியும்.

அதேபோல், ரிட்டையர்மெண்ட் ஏஜ். சென்டரல் கவர்ன் மெண்டில் வேலை செய்பவர்களுக்கு அந்த ஏஜ் 58, இந்த அரசின்கீழ் வேலை செய்பவருக்கு ரிட்டையர்மெண்ட் ஏஜ் 55.

அதேபோல், கம்பல்சரி ரிட்டையர்மெண்ட். ஒருவர் பிடிக்க வில்லையென்றால், வீட்டுக்கு அனுப்புகிறார்கள். அதில் எவ்வளவு தவறுகள் நடந்தன என்பது எல்லோருக்கும் தெரியும்.

இன்னொன்று, மாதாமாதம் ரூ. 15 கட்டினால், ரிட்டையர் ஆகும் போது ரூ. 10,000 கொடுப்போம் என்று சொன்னார்கள். ஆனால், இன்னொரு திட்டம் இருக்கிறது, பணியிலிருக்கும்போதே திடீரென்று இறந்து விட்டால் ரூ. 10,000 கொடுப்போம் என்பது. 4 நாள் கழித்து ரிட்டையர் ஆனால் அவருக்கு ரூ. 10,000 வராது என்பதற்காக, ரிட்டையர் ஆவதற்கு 4 நாளைக்கு முன்னால், கணவனை மனைவி கொன்றதை—ரூ. 10,000-த்திற்காக—பற்றிய செய்தி பத்திரிகையிலே எல்லாம் வந்திருக்கிறது. ஆகவே, இறக்காமல் பணியிலிருந்து ரிட்டையர் ஆனாலும், ரூ. 10,000 வேண்டுமென்று கேட்கிறார்கள்.

ஊழியர்களது கோரிக்கைகள் நியாயமான கோரிக்கைகள். ரூ. 50 கேட்கிறார்கள், இடைக்கால நிவாரணமாக. அந்தத் தொகை எவ்வளவு என்பதிலே வித்தியாசம் இருக்லாம். ஆனால், கோரிக்கைகள் நியாயமானவை. ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர் களைக் கேட்டாலும், நியாயமான கோரிக்கைகள் என்று ஒத்துக் கொள்வார்கள். நாங்கள் சொன்னோம், அவர்களைக் கைது பண்ணியிருக்க வேண்டாம், கூப்பிட்டுப் பேசியிருக்கலாம் என்று.

அவர்கள் என்ன சொல்லி இருக்கிறார்கள், நேரம் வேண்டு மென்று கேட்டோம்; முதலமைச்சரைப் பார்க்க முடியவில்லை. நீண்ட நாட்களாகக் கேட்டு வருகிறோம், நியாயமான கோரிக்கை களைப் பேச சந்தர்ப்பம் அளிக்கவில்லை என்று சொல்கிறார்கள். 10, 15 கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். அதிலே. இத்தனை கோரிக்கைகளை ஏற்றுக் கொள்கிறோம், இவை, இவை பற்றி, அடுத்த ஒரு வாரத்திலே, அல்லது இரண்டு வாரத்திலே, காபி னெட் கூடி முடிவு எடுப்போம் என்று அரசுத் தரப்பில் சொல்ல வில்லையென்பதுதான் என்னுடைய கருத்து. எங்களுடைய கட்சியைப் பொறுத்தவரையிலும், ஒன்றிரண்டைத் தவிர, மற்றவை எல்லாம் நியாயமான கோரிக்கைகள்தான், நாங்கள் ஆதரிக்கிறோம்.

சங்கங்கள் இரண்டு இருக்கின்றன. அவர்களுக்கு இருக்கிற வித்தியாசத்தை நாம் பயன்படுத்தி அவர்களுக்குள் ஒரு பிளவு உண்டுபண்ணவேண்டிய தேவையில்லை. அவர்கள் எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் கவலையில்லை. வேறு மாநிலங் களில் அதிகம் தருகிறார்கள். மத்திய சர்க்காரில் ஓய்வு பெறும் வயது 58, இங்கே 55. அவர்களுக்கு அதிக ஊதியம், இங்கே குறைந்த ஊதியம் என்றிருக்கிறது. நாட்டிலே 50 சதவிகிதம் பட்டினியாக இருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். அப்படி யானால் எல்லோருக்கும் ஒரே மாதிரியாக 500 ரூபாய் சம்பளம் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்னைக்கு வாருங்கள். அவர் பேசியது அதற்கு உங்கள் பதில் இப்படி விளக்கம் எல்லாம் சொன்னால் என்ன அர்த்தம்.





**திரு. சோ. அழகர்சாமி:** ஆகவே அரசாங்கம் அனுகு முறையிலே சரியாக இருந்து, அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய வகையிலே, அனுதாபமாக அவர்களுக்கு செய்யக் கூடிய நடைமுறையைக் கடைபிடிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நியாயமான கோரிக்கைகளை எல்லாம் ஒத்துக் கொண்டு அவர்களுடைய வேலைநிறுத்தத்தை வாபஸ் பெறவேண்டும் என்று அறிவிப்புக் கொடுத்து, சுமுகமான முறை யிலே, அவர்களுக்கு ஆதரவாக நியாயம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தி கொடுக்கக்கூடிய முறையிலே நடந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அவர்களுக்கு என்ன சந்தேகம் வருகிறது என்றால், இந்த 15 ரூபாய் ஒரு மாதத்திற்குத்தானா, பே கமிஷன் அறிக்கை வந்தற்குப் பின்னாலே கிடைக்குமா என்று அச்சப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடிய முறையிலே, அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இது பற்றி அரசாங்கத்திற்கு பல்வேறு கருத்துக்கள் இருக்க லாம், அதைப் பூரணமாக பரிசீலித்து நியாயம் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அதை விவாதிப்பதற்காக இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே கூற வேண்டிய பல கருத்துக்களை இங்கே கூறிவிட்டார்கள். அதையே மீண்டும் கூற நான் விரும்பவில்லை. ஒரு சில கருத்துக்களை மட்டும் நான் கூறுகிறேன்.

இந்த என்.ஜி.ஓ.-க்களின் போராட்டம் எந்த அளவுக்கு பொது மக்களுக்கும், அரசாங்கத்திற்கும் அசௌகரியத்தை ஏற்படுத்தி யிருக்கிறது என்பதை அரசாங்கம் நன்றாக உணர்ந்திருக்கிறது. அவர்கள் கோரிக்கையை முன் வைத்துப் போராட்டம் நடத்து கிறார்கள். அது சரியா, இல்லையா என்ற பிரச்னைக்குப் போகாமல், இந்தப் போராட்டத்திற்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் வழிவகை செய்யவேண்டும்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1978 மார்ச் 6

ஏற்கனவே நாங்கள் முதலமைச்சரோடு பேசும்போது ஒன்றை எடுத்துக் கூறினோம். அதாவது, ஏற்கனவே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே பேசும்போது பரிசீலனையில் இருக்கிறது என்ற இரண்டு கோரிக்கைகளைக் கூறினார்கள். அதாவது பிராவிடன்ட் பண்டு நிதியிலிருந்து கடன் வாங்கும் விதியைத் தளர்த்துதல், பணி நேரத்தை மாற்றி அமைப்பது ஆகிய இரண்டு கோரிக்கைகளும் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். ஆகவே இவற்றை இந்த மன்றத்திலே அறிவித்துவிடலாம். அதனால் அரசாங்கத்திற்கு எந்த பொருளாதாரச் சிக்கலும் ஏற்படப்போவதில்லை.

அடுத்து, நான்-ரெக்கரிங் என்று சொல்லி, ஒரு சலுகையை அளித்திருக்கிறார்கள். ஒரு மாதத்திற்கு 15 ரூபாய், 25 ரூபாய் என்று நீங்கள் வழங்க இருப்பதை, கமிஷன் அறிக்கை வருவது வரையிலும் இதனை, நீடித்துக் கொடுப்பது என்றும் கமிஷன் அறிக்கை வந்த பிறகு கமிஷன் அறிக்கையை ஒட்டி பேச்சு வார்த்தை நடத்தினால் நலமாக இருக்கும் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன். இதனை முதலமைச்சரோடு பேசுகிறபோதும், அனைத்துக் கட்சிக் கூட்டத்திலேயும் நாங்கள் கூறினோம்.

அதோடு, முதலமைச்சர் ஒன்றைச் சொன்னார். இப்போது இருக்கிற சங்கம், போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிற ஒரு சங்கம் இந்தச் சங்கத்தோடு நாங்கள் பேச்சு வார்த்தை நடத்த மாட்டோம் என்று கூறுகின்ற நிலை வரவேற்கத்தக்கது அல்ல. அனைத்து சங்கங்களை அழைத்துப் பேசினால் சுமுகமான நிலைமை ஏற்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-50)

மாண்புமிகு அழகர்சாமி அவர்கள் கூறியது போல், நேற்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் கூறியதை நான் கேட்டேன், பத்திரிகையில் பார்த்தேன் * * * என்ற கருத்துப்பட கூறியிருக்கிறார் கள். இது ஒரு முதலமைச்சர்—4½ கோடி மக்களின் முதலமைச்சராக இருக்கும் அந்தப் பெரிய பதவிக்கு உகந்ததா என்பதை மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரவர்களே, நீங்கள்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1978 மார்ச் 6] [திரு. ஜே. ஜேம்ஸ்]

நன்றாக சிந்திக்கவேண்டும். இதனால் இந்த மாநிலத்தில் என்னென்ன விளைவுகள் ஏற்படும், இது நல்லதாக இருக்குமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

* * * * * *
* * * * * *

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் துணைத் தலைவர்களே, பேரவையை ஒத்தி வைத்து அது பற்றி விவாதிக்க வேண்டுமென்று கொண்டு வரப்பட்ட தீர்மானத்தின் மீது நண்பர் ஜேம்ஸ் போன்றவர்கள் பேசும்போது, * * என்ற பகிரங்கமான, அடிப்படை அற்ற, முறைகேடான ஒரு குற்றச் சாட்டை இந்தச் சபையில் வைத்து இருக்கிறார்கள். அருள் கூர்ந்து நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன், அருமை நண்பர் ஜேம்ஸ் போன்றவர்கள் பேசும்போது, தயவுசெய்து வார்த்தைகளை கொஞ்சம் ஜாக்கிரதையாக பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்.ஜி.ஓ.-க்கள் இந்த ஆட்சியின் அஸ்திவாரம் என்று நம்புகிறது இந்த அரசு. அப்படியிருக்க முதலமைச்சருக்குக் களங்கம் கற்பிக்கும் முறையில், முதலமைச்சர் அப்படிப்பட்ட எண்ணத்தோடு பேசி இருக்கிறார் என்று உறுதியோடு அறுதியிட்டு அவர் பேசுவதைத் தயவுசெய்து மாற்றிக்கொள்ள வேண்டுமென்று நான் ஜேம்ஸ் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அப்படிப் பேசியதைக் குறிப்பேட்டில் இருந்து எடுக்குமாறும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேற்றையதினம் பொதுக்கூட்டத்தில் பேசினார்கள். அது பத்திரிகையில் வந்து இருக்கிறது. அதை நான் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: முதலமைச்சரின் பேச்சின் மீது ஒத்திவைப்புத் தீர்மானம் கிடையாது. நீங்கள் என்.ஜி.ஓ.-வினரின் போராட்டத்திற்கான நியாயங்களை விளக்கிச் சொல்லி, அதைப்பற்றி விவாதிக்க சபையை ஒத்திவைக்க வேண்டு

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மென்று சொல்ல வேண்டுமே தவிர முதலமைச்சர் பேசிய பேச்சையோ அல்லது அதன் பேரில் விவாதமோ நடத்துவது சரியல்ல. அதற்காக இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வரப்படவும் இல்லை என்பதை சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** நான் ஏற்கனவே கேட்டுக் கொண்டபடி அவை குறிப்பேட்டில் இடம் பெறக்கூடாது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** நான் சொல்வதைக் கேட்டு விட்டு நீங்கள் நீக்க வேண்டும். * * * * என்னுடைய கருத்தைக் கூற எனக்கு அனுமதி அளிக்க வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்.ஜி.ஓ. சம்பந்தப்பட்ட பிரச்சினையைக் குறித்து நேற்றைதினம் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசியிருக்கிறார். அதைத்தான் நான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:** * * * * என்று சொன்ன வார்த்தை சரியல்ல.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அவர் சொல்வது போல் * * என்னுடைய கருத்தைக் கூற அனுமதி வேண்டும் என்று தான் கேட்டேன். அதில் தவறு இல்லை. என்னுடைய கருத்தை கேட்டு விட்டு, பிறகு நீக்கிவிட வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். என்.ஜி.ஓ.-க்கள் அந்த வேண்டுகோளுக்கும் எதிர்க்கட்சித் தலைவரின் ஆலோசனைகளுக்கும் இணங்காவிட்டால், வேலை நிறுத்தக்காரர்களை என்.ஜி.ஓ-வினரைத்தான் அவர் குறிப்பிடுகிறார்கள். (. . . .)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பத்திரிகையில் வந்த தகவலை வைத்துப் பேசக்கூடாது. அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் பேசியிருந்தால் சொல்லுங்கள். வெளியிலே பேசிய பேச்சு பத்திரிக்கையில் வந்து இருக்கிறது என்று சொல்லி பேசக்கூடாது. சில பத்திரிக்கையில் தவறாகப் போடலாம். சில அப்படியே அவர் பேசியதைப் போடலாம். சில அதைத் திரித்தும்

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



போடலாம். ஆகவே, பத்திரிகையில் வருவதை வைத்துப் பேசுவது சரியல்ல. அதன் மீது இங்கே விவாதம் நடத்தத் தேவையில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, தாங்கள் தீர்ப்புக் கொடுப்பதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் என்னுடைய கருத்தையும் கேட்டுவிட்டு தங்களுடையத் தீர்ப்பைக் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய கருத்தையும் கேட்டுவிட்டு, முழுவதையும் எடுத்துவிடுவதாக இருந்தாலும் பரவாயில்லை. முதலமைச்சரவர்களும் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் மறுக்கவில்லை. அவர்கள் பொதுக்கூட்டத்தில் பேசியதை இங்கே குறிப்பிடுகிறேன். தங்கள் அனுமதியோடு படிக்கிறேன். அரசாங்கத்தினுடையவும் எதிர்க்கட்சித் தலைவர்களுடையவும் வேண்டுகோளுக்கிணங்க என்.ஜி.ஓ. வினர் வேலை நிறுத்தத்தை கைவிடாவிட்டால் மக்களிடம் தாமே வேண்டுகோள் விடுக்கப் போவதாகவும்—அதோடு நானும் காதால் கேட்டேன்—நானே நேரடியாக இறங்குவேன் என்று சொன்னார்கள்; அது பத்திரிகையில் வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பத்திரிகையில் வரவில்லை; நான் காதால் கேட்டேன் என்றெல்லாம் சொல்வது நல்லதல்ல.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** துணைத் தலைவரவர்களே, நீங்கள் பின்னால் குறிப்பிலிருந்து நீக்குவதாக இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் அது எந்தப் பத்திரிகை என்பதைக் குறிப்பிட்டு, அவர் சொல்வதைச் சொல்லட்டும், கேட்போம். அதற்குப் பிறகு அது தேவையா இல்லையா என்பதைப்பற்றி நீங்கள் முடிவெடுக்கலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** துணைத் தலைவரவர்களே, 6—3—1978 தேதியிட்ட தினமணி பத்திரிகையில் வந்திருக்கிறது. அதோடு நானும் என் காதால் கேட்டேன். வேலை நிறுத்தத்தைச் சமாளிக்க மக்களிடம் தானே வேண்டுகோள் விடுக்கப்போவதாகவும், அதன் மூலம் மக்கள் அவர்களைப் பார்த்துக்கொள்வார்கள் என்றும் முதலமைச்சர் பேசியிருக்கிறார்கள். (குறுக்கீடு—

[திரு ஜே. ஜேம்ஸ்] [1976 மார்ச் 6

பத்திரிகையைச் சரியாகப் படியுங்கள்) தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்களின் வேண்டு கோளுக்கிணங்க, பத்திரி கையில் இருப்பதை திரும்பவும் படிக்கிறேன்.

"என்.ஜி.ஓ.-வினர் எதிர்க்கட்சித் தலைவர்களின் ஆலோசனைக்கு இணங்காவிட்டால், வேலைநிறுத்தம் செய்கிற வர்களை சமாளிக்க மக்களிடம் தாமே வேண்டுகோள் விடுக்கப் போவதாகவும் இதன் விளைவாக மக்கள் அவர்களுக்கு எதிராக திரும்பிவிடுவார்கள என்றும் எச்சரித்தார்". ஆக, நான் கேட்பது என்னவென்றால் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுவது என்று சொல்வது, பொதுமக்கள் எந்த சர்ச்சைக்கும் வம்புக்கும் போக மாட்டார்கள். அதுமட்டுமல்ல. இம்மாதிரி ஒரு நிலை எடுப்பது சரியா?

இரண்டு சங்கங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று இப்போது போராட்டம் நடத்திக்கொண்டிருக்கும் சங்கம். இன்னொன்று போராட்டம் நடத்தாத சங்கம். போராட்டம் நடத்தும் சங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம், போராட்டம் நடத்தாமல் இருக்கின்ற சங்கத்தோடுதான் பேச்சுவார்த்தை நடத்துவோம் என்று சொல்வதும் சரிதானா?

என்.ஜி.ஓ. வினருக்காக அவர்கள் நடத்தும் போராட்டம் இது. இரண்டு அல்லது 3 சங்கங்கள் இருக்கின்றன என்றால் அத்தனைச் சங்கங்களையும் ஒன்றாகச் சேர்த்து வைத்து, அவர்களோடு அலோசனை செய்து பேச்சு வார்த்தை நடத்தி, தீர்வு காண்பது தான் சரியாக இருக்கும்; நாட்டுக்கும் நல்லது என்.ஜி.ஓ. வினருக்கும் நல்லது; பொது மக்களுக்கும் நல்லது. இந்தக் கருத்தை போலும் தெளிவாக வலியுறுத்த இந்த மன்றத்தின் இதா அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா**: தலைவரவர்களே, திரு. ஜேம்ஸ் அவர்கள் * * *என்று இங்கே பேசியிருக்கிறார்கள். அதை சபைக் குறிப்பிலிருந்து நீக்கி விட வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

* மாண்புமிகு போரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



1978 மார்ச் 6]

**திரு. ஜே. ஜேம்ஸ்**: தலைவரவர்களே, * * * அதைத் தான் குறிப்பிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: * * * என்று சொன்னதை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்**: அவர்கள் பேசியதை நானும் கேட்டேன். * * * என்ற கருத்தில் சொன்னார்கள் என்று இங்கே குறிப்பிடுவதாகச் சொன்னார்கள். (குறுக்கீடு) அதைத் தான் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: நீங்கள் பேசும்போது * * என்று முதலமைச்சர் கூறினார் என்ற கருத்தில் இங்கே குறிப்பிட்டதை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

அடுத்து, திரு. லத்தீப் அவர்கள். (திரு. லத்தீப் பேச எழுந்தார்.)

திரு. சோ. அழகர்சாமி: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். இங்கே விதி 42-ன் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்த வர்கள்தான் அதுபற்றி கருத்துத் தெரிவிக்கலாம். ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்காதவர்களும் அதில் பேசலாமா? லத்தீப் அவர்கள் பெயர் இடம்பெறவில்லை என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: திரு. லத்தீப் அவர்களும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள் அவர்கள் பெயரும் வாசிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அவர் களுடைய கருத்தையும் இங்கே தெரிவிக்கலாம்.

(முற்பகல் 11-00)

**திரு. எம். ஏ. லத்தீப்**: பேரவைத் துணைத் தலைவரவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**: ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்து சபையை ஒத்தி வைப்பதற்கு முன் தான் ஒத்தி வைக்காமலேயே ஒத்தி வைத்தது மாதிரியே அதிக

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நேரம் எடுத்துக்கொண்டு எல்லோரும் எல்லாக் கருத்துகளையும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஒத்தி வைக்காமலேயே ஒத்தி வைத்தால் என்ன பேச வேண்டுமோ அதையெல்லாம் பேசிக் கொண்டிருந்தால் மத்தியானம் வரைக்கும் ஆகும். அதனால் சுருக்கமாக முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** இந்தக் கருத்தை முதலிலேயே சொல்லியிருந்தால் நன்றாக இருக்கும். நான் எழுந்திருக்கும்போது சொல்லி இருக்க வேண்டியதில்லை.

துணைத் தலைவரவர்களே, இது மிக முக்கியமான ஒரு பிரச்சினை. இதன் விளைவாக அரசு இதழ் பதிவு பெறாத அரசு ஊழியர்கள் தொடர்ந்து செய்து வருகின்ற இந்த வேலை நிறுத்தத்தின் காரணமாகவும் கிளர்ச்சிகளின் காரணமாகவும் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள பாரதூரமான விளைவுகளைப் பற்றி ஆராய இந்த அவைக்கு உரிமையும் கடமையும் இருக்கின்றதென்ற காரணத்தினால் இதை உடனடியாக விரிவாக விவாதிக்க வேண்டுமென்றுதான் இந்தத் தீர்மானத்தை நான் கொண்டு வந்திருக்கிறேன்.

அரசு ஊழியர்கள் தங்களுடைய கோரிக்கையை எடுத்து வைப்பதும் கோரிக்கைகள் நிறைவேறாவிட்டால் ஒரு சில சமயங்களில் அவர்கள் கிளர்ச்சிகள் செய்வதும் ஏதோ நாட்டில் நடைபெறாத ஒரு நிகழ்ச்சியல்ல. நடைபெற்று வந்திருக்கிறது. ஆனால் எந்த வகையில் எந்தச் சூழ்நிலையில் நடைபெறுகின்றன என்பதை நாம் ஆராயும்போது இன்று நடைபெறுகின்ற இந்த போராட்டத்திற்கு அவர்கள் கூறுகின்ற காரணங்கள் அல்லது கோரிக்கைகள்தான் அடிப்படையாக அமைந்துள்ளனவா அல்லது வேறு சில காரணங்களும் இதோடு இணைந்துவிட்டிருக்கின்றதா என்ற ஐயப்பாடுகளை நாட்டு மக்களிடம் நிச்சயமாக ஏற்படுத்திவிட்டிருக்கிறது, என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கனவே இந்த அவையிலே ஒத்திவைப்புத் தீர்மானம் வந்திருக்கிறது. அதன் மீது நாம் எல்லாம் பேசி இருக்கிறோம். அரசு தரப்பில் உறுதிமொழிகள் தரப்பட்டிருக்கின்றன. அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும், விடுதலை செய்யப்பட்டு அவர்களோடு பேச்சு வார்த்தை நடத்தப்பட வேண்டுமென்று எதிர்தரப்பிலே சொல்லப்பட்ட கோரிக்கைகளை அரசு உடனே ஏற்றுக்கொண்டு பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்தது. ஆனால் என்ன பேச்சு வார்த்தை இவர்கள் செய்தார்கள் என்று நாம் பார்க்கும்போது அவர்கள் முதலமைச்சரைச் சந்தித்தார்கள். அவர்களுடைய வீட்டிலேயே சென்று சந்தித்து இருக்கிறார்கள். அந்த இயக்கத்தின் தலைவராக இருக்கக்கூடியவரோடு முதலமைச்சருடைய பேச்சுவார்த்தையின் விளைவாக உங்களுடைய இந்தக் கோரிக்கைகளை அரசு ஆராய்ச்சி செய்து அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பிறகு தெரிவிக்கிறோம் என்று சொன்ன அதே நேரத்தில் வெளியே வந்த உடனே பக்கத்திலே இருந்த நிருபர்களை அழைத்து வந்து மற்ற தோழர்களுடைய கருத்துக்களைக்கூட கலந்துகொள்ளாமல் இதிலே தான் விஷயம் இருக்கிறது மற்ற தங்களுடைய தோழர்களைக் கூட கலந்து கொள்ளாமல் உடனடி போராட்டம் நடக்கும் என்று சொல்வது அவ்வளவு பொறுப்புள்ள காரியம் அல்ல என்று நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு எத்தனை ஆஸ்பத்திரிகளில், மருத்துவமனைகளில் நோயாளிகள் கவனிக்கப்படாமல் இன்றைக்கு அவர்கள் எல்லாம் உதாசீனப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பெருத்த கஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். சென்னையிலுள்ள பொது மருத்துவமனையில் இந்த வேலை நிறுத்தத்தின் காரணமாக நோயாளிகள் பெருத்த பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். என்று பத்திரிகைகளில் நாம் பார்க்கும்போது இந்தமாதிரியான செயல்கள் எல்லாம் மனிதாபிமான முள்ள செயல்தானா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அதை இந்தச் சபை ஆராய வேண்டும். அதுவும் சட்டமன்றம் நடந்து கொண்டிருக்கும்போது பல்வேறு காரணங்களுக்காக உறுப்பினர்கள் கோரிக்கைகளை வலியுறுத்திச் சொல்லும்போது அதற்கான தகவலைச் சேமிக்க வேண்டிய நிலைமை, அந்த வேலைகள் எல்லாம் அரசுக்கு இருக்கும் போது அந்தக் காரியத்தை எல்லாம் செம்மையாகச் செய்யும் அடித்தளமாக இருக்கும் இந்த அங்கத்தினர்கள் இன்றைக்கு

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 6

இத்தகைய முறையிலே ஈடுபட்டிருப்பது பொறுப்புள்ளசெயல் என்று நாடு கருதாது என்று நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு இன்னொன்றை நான் மிகுந்த வருத்தத் தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

கிளர்ச்சிகள் செய்யும்போது நாகரீகமான முறையில் செய்ய வேண்டும். தலையிலே கர்சீப்புகளைக் கட்டிக்கொண்டு ஆபீஸு களுக்குச் சென்று அதன் கதவுகளை மிக வேகமாக அடித்து அநாகரீகமான வார்த்தைகளை நாம் திருப்பிச் சொல்ல முடியாத வார்த்தைகளை அவர்கள் அங்கே பயன்படுத்தி நம்முடைய பொது வாழ்க்கைக்கே களங்கம் ஏற்படுத்தும் வகையில் அவர்கள் நடந்து கொண்டிருப்பது அவர்களுக்கும் நல்லதல்ல. அவர்கள் வாழ்கின்ற சமுதாயத்துக்கும் நல்லதல்ல. அதைப் பார்த்துக்கொண்டு இந்தச் சபை வேறு காரணங்களுக்காக, அரசியல் காரணங் களுக்காக அவர்கள் ஏதாவது கடுமையான நடவடிக்கை எடுத்தால் என்ன ஆகுமோ, ஆட்சிக்கு ஆபத்து ஏற்படுமோ என்று கருதி மெத்தனமாக இருப்பதால் அவர்களுக்கு இத்தகைய காரியங்களைச் செய்வதற்கு மேலும் மேலும் விட்டுக்கொடுப்பது அவ்வளவு நல்ல செயல் அல்ல என்பதை இந்த ஆட்சிக்கு உணர்த்துவது என் கடமை என்று நான் கருதுகிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் கூட பத்திரிகையில் பார்த்தேன். எதிர்க்கட்சித் தலைவர்களுடைய ஆலோசனைக்கு அவர்கள் இணங்காவிட்டால் இதைத்தான் கவனமாகப் பார்க்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவர்களது ஆலோசனைகளுக்கு செவிமடுக்காவிட்டால் நாட்டிலே இருக்கிற நிலையை உத்தேசித்து அவர்கள் செயல்படத் தவறினால் நான் மக்களைச் சந்திப்பேன் என்றுதான் அவர்கள் சொல்லியிருக் கிறார்கள். தமிழ்நாட்டில் இருக்கிற நாலரைக் கோடி மக்களின் ஒப்புதலைப் பெற்று நாட்டில் ஒரு ஆட்சி நடந்து கொண்டிருக்கும் போது அதன் நாயகராக இருக்கிற முதல் அமைச்சர் அவர்கள், எதிர்கட்சித் தலைவர்கள் சொல்லியும் கேளாது தவறுகள் செய்வார் களானால் மக்கள் பிரதிநிதிகளாக இங்கு வீற்றிருக்கக்கூடியவர்கள் விளைவுகளை சரியான முறையில் ஆராய்ந்து ஒரு முடிவு எடுக்கா



1978 மார்ச் 6] [திரு. எம். ஏ. லத்தீப்]

விட்டால் மக்களைச் சந்திக்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. (ஆரவாரம்) மக்களைச் சந்திக்க வேண்டும், அது அவர்களுடைய கடமை. அதைத்தான் அவர்கள் சொல்லியிருக் கிறார்களே தவிர மக்களைத் தூண்டிவிட்டு அவர்களைத் தாக்க வேண்டும் என்று ஒரு முதல் அமைச்சர் சொல்வார்கள் என்று நீங்கள் ஏன் நினைத்துப் பார்க்க வேண்டும்? அது தவறு. அப்படி யெல்லாம் சொல்லக்கூடாது.

மக்களைச் சந்திக்கிறேன் என்று தான் சொல்லியிருக்கிறார்கள். மக்களைச் சந்தித்து, இவ்வளவு நிதிதான் இருக்கிறது, இவ்வளவு நிர்வாகத்திற்காக செலவிடப்படுகிறது, மக்களுக்குத் தேவையான அன்றாட முன்னேற்றத் திட்டங்களை குறைத்துக் கொண்டு இதைச் செய்ய வேண்டியிருக்கிறது என்று மக்களிடம் தகவல் சொல்வது தவறு அல்ல. மாநில நிதிநிலை இப்படியிருக்கிறது, 20 அல்லது 25 கோடி ரூபாய்தான் மிச்சப்படுகிறது, மிச்சமுள்ள தெல்லாம் பணியாளர்களின் செலவிற்காகச் செலவு செய்யப்படு கிறது, மத்திய அரசிடமிருந்து கிடைக்கக் கூடிய 300 கோடி ரூபாயை மானியத்தை வைத்துக்கொண்டுதான் நாம் பிற காரியங்களை நடத்த வேண்டி இருக்கிறது என்று சொல்வதில் தவறு என்ன இருக்கிறது?

நான் கூட மக்கள் பிரதிநிதிதான். நான் எல்லா அமைச்சர் களிடமும் கேட்கிறேன். எங்கள் ஊருக்கு குடிநீர் திட்டம் வேண்டும், எங்களுக்கு பாலங்கள் அமைத்துத் தரவேண்டும், நெடுஞ்சாலை வேண்டும், எங்கள் ஊரில் ஆஸ்பத்திரிகள் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம் எங்கள் தொகுதி மக்கள் சார்பாக.

அப்படிக் கேட்கும்போது அதுகுறித்து உள்ள நிலையை எடுத்துச் சொல்ல வேண்டும், அதை நாங்கள் தொகுதி மக்களுக்குச் சொல்ல வேண்டியிருக்கிறது. எங்களுக்கு இன்னின்ன கஷ்டங்கள் உள்ளன, எங்களது தற்போதைய நிதிநிலையில் உங்களுக்குச் செய்ய முடியாது, மற்றவர்களுக்கு செய்ய வேண்டியிருக்கிறது என்று மக்களுக்கு விளக்க வேண்டிய ஒரு பொறுப்பு முதல் அமைச்சர் அவர்களுக்கு உண்டு. அதைச் செய்யாவிட்டால் அவர்கள் பொறுப்பிலிருந்து தம்மை தட்டிக்

கழித்துக் கொள்கிருர்களே தவிர, மக்களிடம் உள்ள நிலைமைகளை எடுத்துச் சொல்ல வேண்டியது முதல் அமைச்சர் அவர்களின் பொறுப்பாகும்.

**திரு. மு. கருணாநிதி :** ஒரு ஐயப்பாடு. மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் மத்திய அரசு மாநில அரசுக்கு 300 கோடி ரூபாய் மானியம் கொடுப்பதாகச் சொன்ஞர்கள். எந்த நிதிநிலை அறிக்கையில் அப்படி குறிப்பிடப்பட்டுள்ளது?

**திரு. எம். ஏ. லத்தீப்:** எந்த நிதிநிலை அறிக்கையையும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இருக்கிற சூழ்நிலையை, பல்வேறு வகைகளில் கிடைக்கிற மானியங்களை வைத்துக்கொண்டுதான் சொல்கிறேனே தவிர எந்த நிதிநிலை அறிக்கை என்ருல் முன்னுள் நிதி அமைச்சராக நான் இருந்ததும் இல்லை இந்நாள் நிதி அமைச்சராகவும் நான் இருக்கவும் இல்லை. மக்களின் பிரதிநிதி என்ற முறையில்தான் சொல்கிறேன்.

என் முன்னேற்றத் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படவில்லை என்று கேட்கும்போது, என் தொகுதியில் இவை எல்லாம் தேவை என்று சொல்லும்போது முதல் அமைச்சர் அவர்கள், நான் என்ன செய்ய முடியும், எங்களால் கொடுக்க முடியவில்லை, சட்டியில் இவ்வளவுதான் இருக்கிறது, நான் என்ன செய்ய முடியும், எங்களால் கொடுக்க முடியவில்லை, அவர்களுக்கு கொடுத்து விட்டேன் என்று எனக்கு விளக்கம் அளிக்கவேண்டிய கடமை முதல் அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது, என் தொகுதி மக்களுக்கு விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிருர்கள்.

அதேபோல் தமிழ்நாட்டிலுள்ள 234 தொகுதியில் உள்ள ஏழை பாழைகளாக இருக்கிற மக்களுக்கு விளக்கம் அளிக்கும் கடமை அவர்களுக்கு நிச்சயமாக உண்டு. அதைச் செய்யாவிட்டால் அவர்கள் கடமையிலிருந்து தவறியவராவார்கள்.

**திரு. மு. கருணாநிதி:** பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த அவையில் சபாநாயகர் அவர்கள் குறை கூறுவதாக கருதிக் கொள்ளக்கூடாது. ஆளும் கட்சியின் போக்கை எதிர்த்துப் பேசுகிற உறுப்பினர்களை எல்லாம் அடிக்கடி மணி அடித்து உட்கார வைப்பதும் ஆதரிக்கிற





பாக்கில் பேசுபவர்களுக்கு எவ்வளவு நேரம் வேண்டுமானுலும் பழங்குவது என்ற ஒரு முறையை வகுத்திருப்பது இது தியாகுமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யார் அப்படிச் செய்தார்கள்?

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** அழகர்சாமி அவர்கள் பேசும்போது எவ்வளவு நேரம் பேசினுர் என்பதும், சங்கரய்யா அவர்கள் பேசும்போது எவ்வளவு அதிக நேரம் பேசினுர்கள் என்பதும்—யாரும் தடுக்கவில்லை, எல்லோரும் கேட்டுக்கொண்டுதான் இருந்தார்கள், எதிர்கட்சித் தலைவர் உட்பட தெரியும் அதற்குப் பிறகும் எப்படி இப்படிக்கேட்கிருர் என்று புரியவில்லை.

**திரு. மு. கருணாநிதி:** பொதுமக்கள் பார்த்துக்கொள்வார்கள் என்ற பிரச்னைபற்றி முதல் அமைச்சர் அவர்கள் கூறியதை சங்கரய்யா அவர்கள் சாங்கோபாங்கமாக பேசும்போது தடுக்கப்படவில்லை. அதேவிஷயத்தை அழகர்சாமி அவர்கள் பேசியபோது மேலே பேசக்கூடாது என்று தடுக்கப்பட்டார்.

**திரு. சோ. அழகர்சாமி:** சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள் என்று தலைவர் குறிப்பிட்டார். அது சரி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆளும்கட்சியை எதிர்த்துப்பேசினுலும் ஆதரித்துப் பேசினுலும் நேரத்தையொட்டி சீக்கிரமாக முடியுங்கள் என்று சொல்வது கட்சிக்கண்ணேட்டத்தோடு சொல்வது அல்ல. அப்படி நானும் சொல்லவில்லை, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களும் சொல்லமாட்டார்கள். பிஸினஸ் அட்வைஸரிக் கமிட்டியில் டிசைட் செய்யுங்கள். இவ்வளவு நேரம்தான் ஒரு கட்சிக்கு ஒதுக்க வேண்டும் என்று முடிவு செய்யுங்கள்.

(முற்பகல் 11.10)

**திரு. என். சங்கரையா :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் என்னைக் குறிப்பிட்டதால் சொல்லுகிறேன், மார்க்ஸிஸ்ட் கட்சியைப் பொறுத்தளவில், எந்த ஒரு பிரச்சினையையும் அதன் தன்மையைப் பார்த்து, அதற்குத் தகுந்தபடி தான் எந்த ஒரு

[திரு. என் சங்கரய்யா] [1978 மார்ச்சு 6

நிலையையும் எடுக்கும் என்பதையும், முதலமைச்சர் அவர்கள் பேசியதைப்பற்றி குறிப்பிடும்போது, அதைப்பற்றிய தவறான ஒரு ஞானமும், அபிப்ராயமும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதைப் பற்றித்தான் சொன்னேன், இதில் எதுவும் ஆட்சேபிக்கக் கூடியதில்லை என்று கருதுகிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப்:** இப்பக்கத்திலுள்ளவர்களை ஆதரித்தோ அல்லது அப்பக்கத்திலுள்ளவர்களை ஆதரித்தோ பேசவேண்டிய கட்டாயம் எனக்கில்லை. தமிழ்நாட்டு மக்களை ஆதரித்துத்தான் இதைப் பேசுகின்றேன். (ஆளும்கட்சி தரப்பிலிருந்து கைதட்டல். . . ) எதை ஆதரிக்கவேண்டும், எதை ஆட்சேபிக்கவேண்டும் என்பது எனக்குத் தெரியும். நான் எந்த முறையில் பேசுவேன் என்பதையும் எல்லோரும் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் நான் எப்படிப் பேசுவேன் என்பதும் தெரிந்தது தான். அப்படி நான் எந்த நிலையில் எப்படி பேசுவேண் என்பதை நன்கு தெரிந்தவர்கள் இப்படிச் சொல்வதுதான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் அப்படி பேச வேண்டிய அவசியமில்லை.

நான் சொல்ல விரும்புவது, இந்த அவையின் சார்பாக சொல்லிக்கொள்ள விரும்புவது, அரசு ஊழியர்களுக்கு எதிரானவர்கள் நாங்கள் என்று ஏன் நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்? அவர்களும் தமிழ் நாட்டு மக்கள் தான், அவர்கள் இன்றைக்கு ஏழுரை லட்சம் பேர்கள் இருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கும் சேர்ந்து தான் இந்த ஆட்சி நடைபெறுகிறது. அவர்களுக்கு எதிராக பேசுகிறோம் என்று ஏன் நினைத்துக் கொள்ளவேண்டும்? கட்சிக்காரர்களைக் கொண்டு இவர்களை அடக்குவார்கள் என்ற எண்ணம் ஏன் வரவேண்டும்? அப்படிப்பட்ட எண்ணம் வருவதே தவறு என்று கூட சொல்வேன்.

ஆகவே, தயவு செய்து வேலைக்கு வராமல் இருக்கும் ஊழியர்களை கேட்டுக்கொள்கிறேன். தயவு செய்து வேலைக்கு திரும்புங்கள்.... அரசோடு உங்களுடைய குறைகளைப் பற்றி பேசுங்கள். . . . . பேசி ஒரு முடிவுக்கு வாருங்கள். வேலைக்கு உடனடியாக திரும்புங்கள். . .



1978 மார்ச்சு 6] [எம். ஏ. லத்தீப்]

Come to the table. We will discuss across the table along with the other Leaders of the Opposition Parties. They have also got equal responsibility.

[மாண்புமிகு பேரவைத்தலைவர் தலைமை.]

இதில் எல்லோருக்கும் பொறுப்பு உண்டு. இந்த விஷயத்தில்
அவர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது. எதிர்க்கட்சியிலுள்ளவர்
களுக்கும் பொறுப்பு இருக்கிறது. அரசுக்கும் பொறுப்பு இருக்
கிறது. ஆகவே, ஊழியர்களைப் பொறுத்தவரையில் அவர்கள்
வேலைக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் கோரிக்கைகளைப் பொறுத்தவரையில், கட்டாய ஓய்வு
பற்றி பேசுகிறார்கள். அதில் போடப்பட்ட உத்தரவை
மாற்றுங்கள் என்று கேட்பதாகத் தெரிகிறது. இதை அரசாங்கம்
பரிசீலிக்கலாம், ஃபைனான்ஷியல் கமிட்மெண்ட் இல்லாத இப்படிப்
பட்ட விஷயங்களில் எல்லாம் அரசு முடிவு எடுக்கலாம்.
அதேபோன்று வேலை நேரத்தை மாற்றவேண்டும் என்று
சொல்கிறார்கள். இதில் அரசுக்கு எந்தவிதமான கஷ்டமும்
இராது என்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட அறிவிப்புகளை
எல்லாம் அரசு செய்துவிட்டு, பிறகு மற்றக் காரியங்களை எல்லாம்
அரசின் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்வது நன்றாக
இருக்கும் என்று கருதுகிறேன். இந்தக் காரியங்களை எல்லாம்
செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புவதின் காரணம்,
அரசு அமைத்துள்ள சம்பளக் கமிஷன் முடிவுக்கு முன்னாலேயே
இதைப்பற்றி சொல்ல வேண்டும் என்று நாம் ஏன் வற்புறுத்த
வேண்டும்? சம்பளக் கமிஷனின் முடிவு வேறுவிதமாக இருக்கும்
என்று நாம் எதற்காக அப்படி நினைக்க வேண்டும்? சம்பளக்
கமிஷனின் முடிவு இப்படித்தான் இருக்கும் என்று ஏன் நாம்
சந்தேகிக்க வேண்டும்? அப்படி சந்தேகிப்பது நல்ல
நிர்வாகத்தின் அல்லது நல்ல வாழ்க்கையின் அடிப்படையாக
அமையாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்
கிறேன். இதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
கூறியபோல், நியாயமான முடிவு ஏற்படாவிட்டால், தமிழ்நாட்டு
மக்களின் சார்பில், இந்த நிலைமைகளை எண்ணிப் பார்த்து,

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 மார்ச்சு 6]

15 ரூபாய், 25 ரூபாய் என்பதை நீங்கள் அப்படியே வைத்துக் கொள்ளுங்கள். அதோடு திரு. சங்கரய்யா அவர்கள்கூட சொன்னார்கள். மேலும் 10 ரூபாய் போட்டுக் கொடுக்கலாம், என்று சொன்னார்கள்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். அவர்கள் சொன்னதுபோல், மேலும் 10 ரூபாய் போட்டுக் கொடுக்கவேண்டு மென்று நான் சொல்லவில்லை, இப்போது 25 ரூபாய் 15 ரூபாய் என்று ஒரு மாத காலத்திற்கு, இடைக்கால நிவாரணமாகக் கொடுக்கப்படுகின்ற தொகையை ஊதியக் கமிஷன் அறிக்கை வரும்வரையில் கொடுக்கவேண்டுமென்றுதான் தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மார்க்கபந்து அவர்கள் இங்கே பேசியவர்களுக்குப் பதில் சொல்லவேண்டிய அவசிய மில்லை. சபையின் இதர நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட வேண்டியதற்கான காரணத்தை மட்டும் சொன்னால் போதும்.

திரு. ரா. மார்க்கபந்து: இப்போது நியமிக்கப்பட்டுள்ள பே கமிஷன் தன்னுடைய அறிக்கையைக் கொடுக்கும்போது இப்போதுள்ள தொகைக்கும் குறைவாகக் கொடுக்கக்கூடியதா இருக்குமானால், அதிகப்படியாக கொடுத்திருக்கும் தொகையை திருப்பி வாங்கவேண்டிய நிலை வருமே? அதே நேரத்திலே பே கமிஷன் குறைவாக நிர்ணயம் செய்யுமானால், இப்படிக் குறைத்துக் கொடுக்கவேண்டும் என்கின்ற நிலைமையில், எப்படி யும் நாம் இன்னொரு போராட்டத்தை எதிர்காலத்தில் சந்திக்க முடியாது என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது?

அதே நேரத்தில், மற்றொரு கருத்தையும் சொன்னோம். இப் போது வேலைநிறுத்திலே 7½ லட்சம் என்.ஜி.ஓ.க்கள் இந்தப் போராட்டத்திலே கலந்து கொள்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் இந்த நாட்டிலே உள்ள நிலையையும் பற்றிச் சிந்திக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒருவேலை சோற்றுக்குக்கூட வழியில்லாமல் வாடுகின்ற பட்டதாரிகள், பி.யு.சி. படித்தவர்கள், எஸ்.எஸ்.எல்.சி படித்தவர்கள் தங்களுடைய பெயர்களை 1963–ஆம் ஆண்டிலே யிருந்தும் — அதற்கு முன்னாலிருந்தும் எம்ப்ளாய்மென்ட்



[திரு. ரா. மார்க்கபந்து]

1978 மார்ச்சு 6]

நாட்டிலே எக்ஸ்சேஞ்சிலே பதிவு செய்துவிட்டு, இன்றைக்கு நாட்டிலே உள்ள 5 கோடி மக்களிலே பெரும்பான்மையினர் பசியால் வாடிக் கொண்டு, எரிமலையின் உச்சியிலே உட்கார்ந்து கொண்டிருக்கின்ற நிலைமையைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமென்றும், இவர்களுடைய பிரச்னைகளை எப்படி சமாளிக்கப் போகிறீர்கள், எப்படி சரிப் படுத்தப் போகிறீர்கள் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்திலே, வேண்டுமென்றால் உயர் படிப்பு படித்தவர் களுக்கு தமிழகத்திலே இதற்குமேல் படித்தவர்களுக்கு வேலை இல்லை என்ற ஒரு உத்திரவினை இந்தத் தமிழக அரசு அறிவித்து விடத் தயாராக இருக்கிறதென்றால், என்.ஜி.ஓ.க்களுக்கு அதிக ஊதியம் கொடுங்கள் என்று சொல்லிக்கொள்வதிலே எனக்கு ஆட்சேபணையில்லை.

(முற்பகல் 11-20)

செய்கிறோம் என்று ஒன்று சொன்னார்கள்; பரிசீலனை பிறகு ஒரு முடிவுக்கு சொன்னார்கள். பரிசீலனை செய்த பிறகு எதிர்க்கட்சித் வருவோம் என்று உறுதியளித்துவிட்ட மீறித்தான் அவர்கள் தலைவர்கள் கொடுத்த வாக்குறுதியை நாங்கள் இப்படித் போராட்டத் திட்டத்தை அறிவிக்கிறார்கள். அரசுத் தரப்பில் கொடுக்கப் [illegible] செய்வோம் என்று சொன்னால், தலைவர்கள் சார்பில் பரிசிற வாக்குறுதி, எதிர்க்கட்சித் எல்லாம் தூக்கி கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் ஆகியவற்றை செய்வோம் என்று எறிந்துவிட்டு நாங்கள் நினைப்பதைச் நாட்டில் மற்றத் என்.ஜி. ஓ. வினர் இறங்குவார்களானால் இதுபோன்ற நிலைமையில் ஈடுபட தொழில்களில் இருப்பவர்கள் என்ன உத்தரவாதம் இருக்கிறது? மாட்டார்கள் என்பதற்கு அதே போன்று

போலீஸ் இலாகா எசன்ஷியல் சர்வீஸ்; எசன்ஷியல் சர்வீஸ் எலக்ட்ரிசிடி போர்டு, ஹாஸ்பிடல் டிப்பார்ட்மெண்ட், ஆஸ்பத்திரி வரிசையில் வரலாம். எலக்ரிசிடி கொண்டிருந்தவர்களை களுக்கெல்லாம் சென்று வேலை செய்து ஆபத்தான நிலைமை எல்லாம் வெளியே இழுத்துவரக்கூடிய ஏற்றுக்கொள்ளத்தான் உருவாக்கினார்கள். இதை எல்லாம் ஒதுக்கியிருக்கிறோமோ, வேண்டுமா? எந்த அளவுக்கு நிதிநிலை மூன்றாவது பே அந்த அளவுக்கு அவர்களுக்குத் தரப்படும். அந்த அறிக்கை கமிஷன் அறிக்கை தரப்பட இருக்கிறது. முன்னாலேயே தாங்கள் [illegible]ப்பட்டு செயலாற்றுவதற்கு

[திரு. எம். ஏ. லத்தீப் [1978 மார்ச்சு 6

தமிழ்நாட்டு மக்கள் அவர்களை சந்திக்காமல், தங்களைத்தானே சந்தித்துக் கொண்டு தீர்ப்பை வழங்குவார்கள் என்பதைச் சொல்லிக்கொண்டு (ஆளும்கட்சி தரப்பில் ஆரவாரம்) இதைப் பற்றி விரிவாக சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, நேற்றைய தினமும் நேற்றைய முன்தினமும் நடைபெற்ற கூட்டத்தில், எதிர்க்கட்சித் தலைவர்கள் அழைக்கப்பட்டதில், உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக நானும் கலந்து கொண்டேன். அங்கே ஒருமனதாக எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு மாறாக கருத்துக்கள் இங்கே கூறப்பட்டு வருகின்றன என்பதைப் பார்த்து நான் சில விவரங்களைப்பற்றி சந்தேகிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறேன் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.. நேற்றைய முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில், நான்-கெஸட்டட் ஆபீசர்கள் சார்பில் வெளியிட்ட ஒரு பத்திரிகைக் குறிப்பைப் பார்த்தேன். அதில் மூன்று கோரிக்கைகளை சொல்லியிருந்தார்கள். வேலை நேரத்தை மாற்ற வேண்டும், பிராவிடன்ட் பண்டிலிருந்து பணம் பெறுவதற்கு இருக்கின்ற விதிமுறைகளை தளர்த்தவேண்டும் என்றும், மூன்று ஆண்டுகளுக்குப் பின்னாலும் ஒருவரை இடமாற்றம் செய்யக்கூடாது என்றும் மூன்று முக்கிய கோரிக்கைகளை அரசு ஏற்றுக்கொள்ளவில்லையே என்ற குறிப்பை அதில் சொல்லியிருந்தார்கள். நேற்றைய கூட்டத்தில் சொன்னார் கள். தாய்மார்களின் வேண்டுகோளுக்கு இணங்கி வேலை நேரத்தை மாற்றி அமைக்கவிருக்கிறோம் என்றும், பிராவிடன்ட் பண்டிலிருந்து கடன் பெறுவதற்கான விதிகளை தளர்த்தி யிருக்கிறோம் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இன்னொரு கோரிக்கையைப் பொறுத்தவரையில் அதில் இரு சங்கடம் என்னவென்று சொன்னால் மூன்று ஆண்டுகளாக ஒரே இடத்தில் பணியாற்றுகின்ற அரசாங்க ஊழியர்களை மாற்றாமல் இருந்தால் . . . .



1978 மார்ச்சு 6] [திரு. ரா. மார்க்கபந்து]

'They can have a vested interest in that area'
என்கின்ற முறையிலே, இந்த அரசாங்கம் 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை மாற்றுவது என்பதுதான் சரியானது என்கின்ற கருத்திலேதான் அந்தக் கோரிக்கையை கவனிக்க வேண்டும் என்று கோரினார்கள். அதற்கு அங்கேயிருந்த எதிர்க்கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்களும் கூட, இந்தக் கோரிக்கையை அந்த அளவிலே சிந்திக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

அப்படிச் சொல்கின்றபோது நீங்கள் இந்தப் போராட்டத்தை ஆரம்பித்ததை நாங்கள் விரும்பவில்லை. காரணம், நாங்கள் இந்த அரசாங்கத்திற்கு ஒரு வாக்குறுதி கொடுத்து, கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள். மறியலை நிறுத்தி, பேச்சுவார்த்தைகள் மூலம் இதற்கு முடிவு காணலாம் என்பதற்கு நாங்கள் ஒத்துழைப்பு தந்திருக்கிறோம். கலைஞர் அவர்கள்கூட, என்.ஜி. ஓக்களைச் சேர்ந்தவர்களோடும் பேசுகின்றபோது, நீங்கள் கையாளுகின்ற முறை சரியல்ல என்று கருத்து தெரிவிக்கப்பட்டதாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே கலந்துகொண்ட புலவர் கோவிந்தன் அவர்கள் அறிவித்தார்கள்.

இவர்கள் கடைப்பிடிக்கின்ற முறை சரியல்ல, முறையானதல்ல என்பது எல்லாக் கட்சிக்காரர்களும் ஒத்துக்கொண்ட ஒன்றாகும். ஆனால், மாறான கருத்துக்கள், தவறான கருத்துக்கள் ஏன் இங்கே தெரிவிக்கப்படுகின்றன என்பதைப்பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

என்.ஜி.ஓ.க்களுக்கு பே கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவினர் அறிக்கை சமர்ப்பிக்க இருக்கிறார்கள். அந்த அறிக்கை வந்தபிறகு, அவர்கள் குறிப்பிட்டுள்ள வாக்குறுதிகளை இந்த அரசு கொடுப்பதாக, அதுவும் 1-4-1978 தேதியிலிருந்து கொடுப்பதாகவும், இப்படி ஒரு ரிட்ராஸ்பெக்டிவ் எபெக்ட் கொடுப்பதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். இந்த நேரத்திலே மற்றொன்றும் சொல்லப்பட்டது. இப்போது கொடுக்கின்ற இந்த

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 மார்ச்சு 6

நினைத்ததைத் சாதிக்கவேண்டுமென்ற நினைப்பு இருக்குமானால், நாட்டிலே போராட்டங்களை அன்றாடம் சந்திக்க வேண்டிய கட்டாய நிலைமைக்குத் தள்ளப்படுவோம் என்பதைக் கூறி இதைப் பற்றி விரிவாக விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை மிகவும் சிக்கலான பிரச்சினை என்பதை மன்றத்தில் இருக்கும் அனைவரும் அறிவார்கள். இது நமது அரசு ஊழியர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை. இதிலே இந்த அரசுக்கு இருக்க வேண்டிய அக்கறையை விட மற்றவர்களுக்கு நிச்சயமாக அதிகமான அக்கறை இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அரசாங்க ஊழியர்களை எப்படி கவனிக்க வேண்டும், அவர்கள் குறையை எப்படிப் போக்கவேண்டும், எவ்வாறு அணுகவேண்டும் என்பதை அரசாங்கந்தான் முறையாகக் கவனித்துத் தீர்க்க வேண்டுமே தவிர வேறு யாரும் தீர்க்க முடியாது.

இந்த மன்றத்தில் இருக்கும் அத்தனை எதிர்க்கட்சிகளும் ஆளும் கட்சிக்கு எதிராக எழுப்பப்படுகின்ற பிரச்சினை என்று கருதாமல் ஆளும் கட்சியின் சங்கடத்தையும் உணர்ந்து பொறுப்போடு அரசு ஊழியர்களுடைய பிரச்னையை சுமுகமாகத் தீர்க்க வேண்டுமென்பதிலே அக்கறை காட்டிற்று. அதைத்தான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள் பேசும்போது, எதிர்க்கட்சிகள் சொன்னதைக்கூடக் கேட்காமல் அவர்கள் தூக்கி எறிந்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அரசு ஊழியர்கள் ஆளும் கட்சியிலும் இல்லை, எதிர்க்கட்சியிலும் இல்லை. அவர்கள் அரசாங்க ஊழியர்கள். அரசாங்கமே அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு அவகாசம் வேண்டுமென்று கூறியதைக் கேட்கவில்லை என்றால் நாங்கள் சொல்வதை அவர்கள் எப்படிக் கேட்க முடியும்? முதலமைச்சர் சொல்வதையே கேட்கவில்லை என்றால் அவர்கள் வேறு யார் சொன்னாலும் கேட்க மாட்டார்கள்.

இதிலே எதிர்க்கட்சி, ஆளும் கட்சி என்ற பிரச்னை இல்லை. அரசு ஊழியர்கள் கோரிக்கை நியாயமானதா இல்லையா என்பதுதான் பிரச்னை. அரசாங்கத்திற்கு அதிகச் செலவு இருக்கிறது



1978 மார்ச்சு 6] [திரு. க. சுப்பு]

இல்லையென்று சொல்லவில்லை. அரசாங்கமே இல்லாவிட்டால் செலவும் இல்லை. கம்யூனிஸ்ட் ஃபாரம் ஆப் கவர்ன்மெண்ட் என்று இருந்தால் சர்க்கார் ஊழியர்கள் என்று தனியாக இருக்காது, செலவும் இருக்காது. அதுவரை செலவாகிக் கொண்டு தான் இருக்கும். நிர்வாகச் செலவு ஆகிக் கொண்டுதான் இருக்கும். அதுவரை இரண்டுபேரும் இருந்துதான் ஆக வேண்டும். செலவு வேண்டாம் என்றால் நாம் இருக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்படிப்பட்ட நிலைமை எல்லாம் இருக்கிற காரணத்தால் நாம் நிதானத்தோடு பிரச்னையை அணுகவேண்டும். யார் ஆட்சியில் இருக்கிறார்கள் என்பது பிரச்சினை அல்ல.

என். ஜி. ஓ. வினர் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். முதலமைச்சருடைய பேச்சு சிக்கலை உருவாக்கியிருக்கிறது. சட்டப் பேரவையில் நிதியமைச்சர் அவர்கள் ஏப்ரல் 1-ஆம் தேதியிலிருந்து சம்பளக் குழுவின் அறிக்கை அமல்நடத்தப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் முதலமைச்சர் அவர்கள் பேசும்போது—ஜனவரியிலிருந்து நாங்கள் கொடுப்போம் என்று சொல்லுகிறோம்; ஆனால் அவர்கள் நாங்கள் பதவி ஏற்ற மாதத்திலிருந்து, ஜூலை மாதத்திலிருந்து தரவேண்டுமென்று கேட்கிறார்கள் என்று பேசியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பத்திரிகையில் அந்தச் செய்தி வந்திருக்கிறது என்பதை தயவுசெய்து கூறவேண்டும்.

**திரு. க. சுப்பு:** முதலமைச்சருடைய 'நீதியின் குரல்' பத்திரிகை. அவருக்கு தெரிந்த பத்திரிகை; மாவீரனுடைய பத்திரிகை. அந்தப் பத்திரிகையில் வந்ததுதான் சரியான ஆதாரமாக இருக்கிறது. இல்லையென்றால் மறுக்கலாம். ஆனால் முதலமைச்சர் அப்படி ஒரு செய்தி வந்திருக்கிறது. முதலமைச்சர் வாயிலிருந்து ஒரு சொல்லைச் சொல்லும்போது அதனால் எந்த அளவுக்கு நிலைமைகள் ஏற்படும் என்பதை அறிந்து யோசித்துச் சொல்லவேண்டும். நாங்கள் என்ன வேண்டுமென்றாலும் சொல்லலாம். பொறுப்பிலுள்ளவர்கள் எந்த அளவுக்குச் சொல்ல வேண்டுமென்று யோசித்துச் சொல்லவேண்டும்.

[திரு. க. சுப்பு] [1978 மார்ச் 6

பல்லவன் போக்குவரத்து ஊழியர்கள் போராட்டம் நடந்த போது, மின் வாரிய ஊழியர்கள் போராட்டம் நடந்தபோது அருப்புக்கோட்டை பகுதியில் முதலமைச்சர் அவர்கள் 'பொது மக்கள் பார்த்துக் கொள்வார்கள்' என்று சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் நல்லெண்ணத்தில் சொல்லியிருக்கலாம். எந்தப் பொதுமக்கள் அவர்களைப் பார்த்துக் கொள்வார்கள்? முதலமைச்சர் வாயிலிருந்து ஒரு வார்த்தை வருமானால் அவருடைய வார்த்தையைக் காப்பாற்ற வேண்டுமென்று துடிக்கக் கூடியவர்கள் நாட்டிலே இருக்கிறார்கள். முதலமைச்சர் தெரிவித்துவிட்டார், நாம் சும்மா இருக்கக்கூடாது என்று துடிக்கிறார்கள். நியாயத்தைக் கோரி போராட்டத்தை அவர்கள் நடத்துகிறபோது அவர்களை அடக்குவதற்கு—நாம் நினைக்கா விட்டாலும் அவர்களைத் தூண்டி விடுவதாகப் பேசியிருக்கிறார்கள். சைக்கிள் செயினை வைத்து அடிக்கக் கூடிய அளவிற்கு, அடித்து உதட்டை இரண்டாகப் பிளக்கக்கூடிய அளவுக்கு பொதுமக்கள் யாரும் முன்வரமாட்டார்கள்.

முதலமைச்சர் ஒன்றைச் சொன்னால் அவருடைய வார்த்தைக்கு மரியாதை கொடுக்கவேண்டுமென்று நினைக்கிற பெரியவர்கள் இருக்கிறார்கள். அந்தப் பெரியவர்கள் கையிலே எடுத்துக்கொள் வார்கள் சட்டத்தை. அப்படி வருமானால் நிலைமை மிகப் பெரிய ஆபத்தாகிவிடும். பொது மக்களை நானே சந்திக்கிறேன் என்று சொல்கிறார். அப்படியானால் என். ஜி. ஓ. க்கள் பொதுமக்கள் இல்லையா? அவர்களும் பொதுமக்கள் தான். முதலமைச்சர் அவர்க ளுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்கிறாரா இல்லையா என்றால் அது வேறு விவகாரம். ஆனால் பொது மக்களை விட்டு பார்த்துக் கொள்ளச் சொல்கிறேன் என்று சொன்னால், அப்படிச் சொல்லி முதலமைச்சரே தெருவிலே இறங்கிவிட்டால், பிறகு அரசாங்கம் எதற்கு? நிர்வாக இயந்திரம் வேறு, அரசாங்க ஊழியர்கள் வேறா? இரண்டும் ஒன்றாகத்தானே இருக்கவேண்டும், இரண்டிற் குள்ளே பிரிவினை என்று வந்துவிட்டால் அது அவ்வளவு சரியாக இருக்காது.

மக்கள் நம்பிக்கையைப் பெறமுடியும் என்று சொல்கிறார்கள், ஊழியர்களின் நம்பிக்கையை எப்படிப் பெறமுடியும்? நம் முடைய ஊழியர்களிடத்திலேயே நமக்கு நம்பிக்கை



1978 மார்ச் 6] [திரு. க. சுப்பு]

இல்லையென்றால் யாரிடத்திலே நாம் நம்பிக்கையைப் பெறப்போ கிறோம். அந்தச் சங்கத்தின் பிரதிநிதிகளை, சிறையின் கதவுகள் திறக்கப்பட்டவுடன் முதலமைச்சர் அவர்களுடைய வீட்டுக்கு அழைத்தார்கள், அங்கே போனார்கள், போகவில்லையா? அவர்களிடம் அங்கீகாரத்தை ரத்து செய்வோம் என்று சொன்ன போது சொன்னார்கள். ஆனால் முதலமைச்சர் ஏதோ கோபத்திலே சொல்லியிருக்கலாம், திருத்திக் கொள்வார், நீங்கள் போய்ப் பேசுங்கள் என்றுதான் நாங்கள் எல்லாம் சொன்னோம்.

அவர்கள் 63, 73 சங்கங்கள் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். திரு. சங்கரய்யா அவர்கள் கூடச் சொன்னார்கள். நாங்கள் எல்லாம் சொல்லியும் கூட அவர்கள் கேட்கவில்லை, அவர்களுடைய தலைவர்கள் சொல்லியே அவர்கள் கேட்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. சிவ இளங்கோ அல்ல, பாதன் அல்ல, யார் சொன்னாலும் கேட்கவில்லை. சிவ இளங்கோ அவர்களே அவர் களுடைய கோரிக்கைக்கு விரோதமாக வந்தால் கூட சிவ இளங்கோ இருக்கமாட்டார், ஆனால் அந்தப் போராட்டம் இருக்கும். எங்களுடைய தலைவர் கூடச் சொன்னார்கள், யாரையும் கேட்காமல் போராட்டம் நடத்துகிறீர்கள், எங்களையும் மீறி வந்தால் என்ன செய்வது? உங்களையும் மீறி வந்து விட்டபோது எங்களை ஏன் மீறுவது? எல்லாவற்றையும் மீறக்கூடிய நிலைமைகள் வந்துவிடும். அவர்கள் நியாயமான கோரிக்கைகளை வைப்பதாகச் சொல் கிறார்கள். திரு. கபாலி அவர்களுடைய தொகுதியில் பட்டினப் பாக்கத்தில் அவர்கள் நடத்திய ஆலோசனைக் கூட்டத்தில் சோடா பாட்டில் வீசி தாக்கப்பட்டிருக்கிறது என்பது யாருக்கும் தெரியா விட்டாலும் அரசாங்கத்திற்குத் தெரியும். . . . .

திரு. கே. கந்தசாமி: பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். முக்கிய மான பிரச்னை. போராட்டத்தை அவர்கள் தொடர்ந்து நடத்து வதற்குரிய காரணங்கள் இருக்கின்றன, அரசின் சார்பிலே கொடுக்கப்பட்ட உறுதியையும், எதிர்க்கட்சிகள் சார்பிலே தெரிவிக்கப்பட்ட உறுதிமொழியையும் மீறி யாரையும் கேட்காமல் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்கிறார்களே, யார் சொல்லியும் கேட்காமல் அவர்களுடைய கோரிக்கையை வைத்து தைரியமாகச் செய்வதால் அது பாதுகாப்பற்ற நிலைக்குக் கொண்டுபோய்விடலாம் என்று நினைக்கிறார்களா? அதையும் உறுப்பினர் அவர்கள் ஆதரிக்கிறார்களா? இப்படிப்பட்ட நிலைமை நாட்டுக்குத் தேவையா?

[1978 மார்ச் 6

திரு. க. சுப்பு: இது ஒழுங்குமுறைக்குள் வராது என்பதால் நான் அதற்குள் போக விரும்பவில்லை. இந்தப் பிரச்சினைபற்றி முதலமைச்சருடைய பேச்சு பெரிய பரபரப்பையும் அச்சத்தையும் திகிலையும் ஏற்படுத்தியிருக்கிறது. அவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடத்தியபோது சோடாபாட்டில்கள் அடிக்கப்பட்டு—அந்த பெரிய மனிதர் யார் தெரியுமா? வைத்தி என்பவர், போலீஸார் அவரை கைது செய்யவில்லை, அவரோ பெரிய மனிதர், கைது செய்தால் போலீஸ்காரர் அந்த ஊரிலே இருக்கமாட்டார். சோடாபாட்டில் வைத்துக் கொண்டு என்.ஜி.ஓ. பிரச்னையைத் தீர்க்கமுடியும் என்ற முடிவுக்கு அரசாங்கம் வருமானல் நான் அதைப்பற்றி மேலும் பேசத் தயாராக இல்லை.

(முற்பகல் 11.30)

அதற்குப்பிறகு நம்முடைய ஊழியர்களின் கோரிக்கைகளைப் பற்றிப் பேசுவதில் என்ன கௌரவப் பிரச்னை வந்து விட்டது? இதில் கௌரவப் பிரச்னை வேண்டியதில்லை. இது உங்களுடைய ஊழியர்களுக்கும் உங்களுக்கும் இடையே உள்ள பிரச்னை, அது தெருவுக்கு வந்தால்தான் அகௌரவம். அப்படி தெருவுக்கு வராமல் நீங்கள் அவர்களை அழைத்துப் பேச வேண்டும்.

மகாராஷ்டிராவிலும், கேரளாவிலும்—கஷ்டமான நிலையிலுள்ள மாநிலம்—அவர்கள் கொடுப்பதைக்கூட நாம் கொடுக்க முடியவில்லையென்றால் நாம் என்ன அவர்களைவிட மட்டமா? அந்த முதலமைச்சர்களைவிட நம்முடைய முதலமைச்சர் மட்டமா? மற்ற முதலமைச்சர்களைவிட நம்முடைய முதலமைச்சர் மட்டமாக இருக்கக்கூடாது என்று நினைக்கிறேன். ஏனென்றால், இவர் புரட்சித் தலைவர், அந்தப் புரட்சித் தலைவர் பொதுமக்களைக் கொண்டு பதம் பார்க்கக்கூடாது. அண்டை மாநிலங்களில் அள்ளிக் கொடுப்பதைப்போலக் கொடுக்க முடியாவிட்டாலும், இடைக்கால நிவாரணமாக அளிக்காமல், அன்பளிப்பைப்போல் 25 ரூபாயும், 15 ரூபாயும் வாங்கி கொள்ளுங்கள் என்று சொன்னால் அவர்கள் எப்படி வாங்கிக் கொள்வார்கள்?

அவர்கள் சென்ட்ரல் டி. ஏ. வேண்டுமென்று கேட்கிறார்கள். சென்ட்ரல் கவர்ன்மென்ட் ஊழியரும் ஒரே ஊரிலேதான் இருக்கிறார், இவர்களும் ஒரே ஊரிலேதான் இருக்கிறார்கள்; இவர்



[1978 மார்ச் 6] [திரு. க. சுப்பு]

[...]ருக்கும் அவர்களுக்கும் இடையில் வேறுபாடு இருக்கக்கூடாது [...]து கொள்கையளவில் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்[...]றேன். இதைப் பற்றிப் பேசித் தீர்ப்பதில் என்ன கடினம் [...]ருக்கிறது?

இந்தப் போராட்டத்தை எந்தக் கட்சியும் தூண்டிவிட்டு [...]டவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தினர் இவர்களுக் [...]கப் பரிந்து பேசுகிறார்கள் என்பதால் அவர்கள் தூண்டி[...]டுகிறார்கள் என்று அர்த்தம் இல்லை, இப்படிப்பட்ட பரி[...]புணர்ச்சி உங்களிடம் வந்தாக வேண்டும். அப்படி வந்தால்தான் [...] நல்லது, நாட்டுக்கும் நல்லது, நிர்வாகத்திற்கும் நல்லது. அந்தப் பரிவுணர்ச்சி வர வேண்டும். அது வராவிட்டால் பிரச்னையைத் தீர்க்க முடியாது.

இந்தப் பிரச்னையைத் தீர்க்கவில்லையென்றால் பொதுமக்கள் தான் பாதிக்கப்படுவார்கள். ஆபீஸ்களில் 80 சதவிகிதத்திற்கு மேல் வரவில்லை என்றால் யாரை வைத்து வேலை பார்ப்பது? பெரிய அதிகாரிகள்தான் வந்திருக்கிறார்கள். அவர்களும்கூட விட்டு [...]வந்தால்தான் வருவார்கள், இல்லாவிட்டால் அவர்களையும் பொதுமக்கள் பார்த்துக் கொள்வார்கள். ஆகவே, நான் கேட்டுக் கொள்வது, இப்படிப்பட்ட நிலைமைகளை வளரவிடாமல், அவர்களை மீண்டும் அழைத்துப் பேசி, அவர்களது நியாயமான கோரிக்கைகளைப்பற்றி பேச முன்வரவேண்டும். ஆகவே, அதைப்பற்றி விவாதிக்க குறைந்தபட்சம் இந்தச் சபையின் அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவரவர்களே, நான் கொஞ்சம் தாமதப்பட்டு வந்துவிட்டாலும், இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்களாக இருக்கின்ற பலர் சில உண்மைகளையும், தாங்கள் என்ன நினைக்கின்றார்களோ அவர்களுடைய கருத்துக்களையும் எடுத்துச் சொன்னதாக நான் அறிந்தேன். இங்கே மதிப்பிற்குரிய மாண்புமிகு ஜேம்ஸ் அவர்களும், மாண்புமிகு சுப்பு அவர்களும் பேசியவற்றையும் நான் நேரில் கேட்கின்ற வாய்ப்பினைப் பெற்றேன். மாண்புமிகு சுப்பு அவர்கள் என் சார்பிலே பேசிய

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச்சு 6

முத்தாலிங்கம் போன்ற நண்பர்களுடைய கோரிக்கையை ஒன்ருக வைத்து, பரிசீலித்து, நிதித் துறைச் செயலாளரிடம் அதைப்பற்றி விரிவாக விவாதித்து, எந்த அளவிற்கு நிதிநிலைமை அனுமதிக்கப் படுகிறதோ, அனுமதிக்கிறதோ, அதற்கேற்ப அதைப்பற்றி அமைச்சரவை கூடி, அங்கே முடிவு செய்து, நாங்கள் உங்களுக்குத் தெரிவிக்கின்ருேம் என்று சொன்ஞேம். அப்பொழுதுதான், எத்தனை நாளைக்குள் என்று கேட்டார்கள். நாங்கள் இத்தனை நாளைக்குள் என்று குறிப்பிட்டுச் சொல்ல முடியாது; எவ்வளவு விரைவாகத் துரிதமாகச் செய்ய முடியுமோ, அந்தக் கடமையுணர்வோடு நாங்கள் செய்கிருேம். அதற்கான முயற்சியில் நாங்கள் ஈடுபட்டிருக்கிருேம் என்று உறுதி கூறினேம்.

அவர்கள், அதற்குப் பிறகு எழுந்து செல்லும்போது, நான் அவர்களிடம் சொன்னேன், கீழே நண்பர்கள் காத்திருக்கிருர்கள்; இங்கே நேரம் ஆகிவிட்டதால், அவர்களை இன்றையதினம் சந்திக்க முடியாது. அவர்கள் என்ன நினைப்பார்களோ தெரியாது என்றுகூறிவிட்டுத்தான், அவர்களே, அவர்கள் விருப்பப்படி பேச்சை முடித்துவிட்டு, அங்கேயிருந்து சென்ருர் கள். நாங்களும் மரியாதையுடன் அனுப்பி வைத்தோம்.

ஆனல், சிவ. இளங்கோவுடன் நண்பார்கள் பலர் வந்தார்கள் நான் வைத்திருக்கின்ற அலுவலகத்திற்கு மூன்ருவது வீட்டில் என்று கருதுகிறேன், அங்கேகூடி, ஏறத்தாழ 1½ மணிநேரம் பேசி, பேச்சு முறிந்துவிட்டது என்று பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்தார்கள். மறுநாள், எனக்கு அது கிடைத்தது. நாங்கள் அமைச்சரவையிலே வைத்து, முடிவை எவ்வளவு துரித மாக, விரைவாக தெரிவிக்க முடியுமோ அவ்வளவு விரைவாகத் தெரிவிக்கின்ருேம் என்ற உறுதியை நாங்கள் அளித்த பிறகு, அதைக் கேட்டுக்கொண்டு சென்ற சிவ. இளங்கோ போன்ற நண்பர் கள், பேச்சு முறிந்து விட்டது என்று எந்த அடிப்படையில் கருத்தை வெளியிட்டார்கள் என்பதை இன்னும் என்னல் புரிந்து கொள்ளமுடியவில்லை.

அதைப் போலவே, கீழே காத்துக்கொண்டிருந்த பாதல அவர்களை நான் கேட்டுக்கொண்டேன். தவருக நினைக் வேண்டாம். வியட்நாமியக் கலைக் குழு நிகழ்ச்சி ஒன்றில் நாங



[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

8 மார்ச்சு 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

க்கும் பொறுப்பின் காரணமாக பங்கேற்க வேண்டியுள்ள ன்றும், ஆகவே, நாளை சந்திக்கிறேனென்றும் தெரிவித் ன்.

(முற்பகல் 11.40)

மறுநாள் அவர்கள் வந்து சந்தித்தார்கள். அவர்களும் றத்தாழ இதைப்போல சில கோரிக்கைகளை வைத்தார்கள். வர்களுக்கும் நாங்கள் சிவ. இளங்கோவிற்கு எப்படி பதில் சான்ஞேமோ அதை மாற்ருமல், அலட்சியப்படுத்தாமல் வெவ் வறு வகையில், வெவ்வேறு கருத்தை வைத்து நாங்கள் வளித்தோம் என்ற நிலை இல்லாமல், ஒரே சம நிலையில் வர்களையும் வைத்து அவர்களுடைய கேள்விகளுக்கும் பதில் ந்து, எவ்வளவு விரைவில் நாங்கள் முடிவு தரமுடியுமோ, ங்கள் எண்ணத்தை வெளியிடமுடியுமோ, அவ்வளவு விரைவில், அமைச்சரவையைக் கூட்டி அதை வெளியிடுகிருேம் என்று சான்ஞேம். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டு சென்ருர்கள். ஆனல் அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவில்லை.

ஆனல் மறுநாள் பேச்சு வார்த்தை முறிந்துவிட்டது என்று சொன்ன பிறகு, சட்டசபையை நோக்கி ஊர்வலம் வருவது என்கிற நிலைமையை உருவாக்கத் தயாராகி விட்டார்கள் என்பதை நாம் அறிந்தோம்.

தடை கடமையை ஆற்றுவதற்காக ஊர்வலம் துறையினர் விதிக்கப்பட்டிருக்கிறது என்பதை மீறி அவர்கள் குறிப்பிட்டவர்களைக் நடந்து முன்வந்த போது, அவர்களிலே விடுதலை கைது செய்து அழைத்துச் சென்று, உடனடியாக யாரையும் செய்து அனுப்பி விட்டார்கள் என்பதையும், மற்ற அனுப்பினுர்கள் எந்தத் துன்பத்திற்கும் ஆளாக்காமல் திருப்பி கடமை என்று என்பதையும் இங்கே குறிப்பிடுவது என்னுடைய கருதுகிறேன்.

இங்கே விவாதித்தவர்கள் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அரசு ஏன் மறுத்துவிட்டது, அரசு ஏன் பதில் சொல்லக்கூடாது என்று கேட்டார்கள். அரசு பதில் சொல் வதற்கு எங்களுக்கு நாட்கள் தேவை என்று சொன்னதை யாராவது கேட்டுக்கொண்டார்களா, ஏற்றுக்கொண்டார்களா,

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச்சு 6

ஏன் அவர்கள் அதை மறுத்து உண்மைக்கு மாறாக, பேச்சு
வார்த்தை முறிந்துவிட்டது என்று நண்பர் சிவ. இளங்கோ
எப்படி வெளியிட்டார்கள் என்பதை தயவு செய்து மாண்புமிகு
உறுப்பினர்கள் அவர்களைக் கேட்க வேண்டும் என்று இப்போது
கூட நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே இருக்கிற அனைத்துக்கட்சித் தலைவர்களும் எதிர்க்
கட்சித் தலைவர்களும் நேற்றைக்கு முன்தினம் இந்த விவரத்தை
சொன்னபோது நான் சொன்னேன், இங்கே எதிர்க்கட்சித் தலைவர்
மாண்புமிகு கலைஞர் அவர்கள், சிவ. இளங்கோ, அவரைப்
பார்க்கவந்தபோது, யாரைக் கேட்டுக்கொண்டு இந்தப்
போராட்டத்தைத் துவக்கினீர்கள் என்று கடிந்து கொண்டார்கள்
என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள்
பொதுக்கூட்டத்திலே போய் பேசியதையும் கண்டித்தார் என்றும்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டசபைக் கட்சியின்
சார்பாக இங்கே வந்து கலந்து கொண்ட மாண்புமிகு உறுப்பினர்
புலவர் கோவிந்தன் அவர்கள் அந்தக் கூட்டத்தில் வெளிப்படுத்தி
யதையும் இங்கே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.
அப்படிப்பட்ட நிலைமை இருந்தது.

அதே சமயத்தில் மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா
அவர்களை நான் கேட்டேன், நீங்கள் இதற்கு என்ன பதில் சொல்
கிறீர்கள் என்று. ஒரு பகுதியினர் நான் சொன்ன வார்த்தையை
நம்பி, எவ்வளவு விரைவில் நாங்கள் அமைச்சரவையைக் கூட்டி
கருத்தைச் சொல்ல இருக்கிறோமோ அதைத் தெரிந்து கொள்ள
அவர்கள் காத்திருக்கிறார்கள். அதே சமயத்தில் சிவ. இளங்கோ
அவர்கள் மட்டும் பேச்சுவார்த்தை முறிந்து விட்டது என்று
சொல்லி, போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். எங்களுக்கு
அவகாசம் தரவேண்டும், அல்லது நாங்கள் அலட்சியப்படுத்தியதை
உறுதிப்படுத்தக்கூடிய ஆதாரம் அவர்களிடம் இருந்து ஆக
வேண்டும். இது இரண்டும் அவர்கள் சொல்லவில்லை.

அதுமட்டுமல்ல. அவர்கள் மரியாதைக்குரிய தலைவர்களால்
கண்டிக்கப்பட்டிருந்தும் அவர்கள் அந்த வேலை நிறுத்தத்தை
தொடர்ந்திருக்கிறார்கள் என்பதை இங்கே நான் குறிப்பிட
விரும்புகிறேன்.



1978 மார்ச்சு 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அதைவிட தினமணியைப் படித்துக் காட்டிய மாண்புமிகு
ஜேம்ஸ் அவர்கள் நேற்றைய முன்தினம் நடந்த கூட்டத்தில்
ஒரு செய்தியை வெளியிட்டார்கள். சர்வ கட்சிக் கூட்டம்
என்று சொல்லி என்னை ஏமாற்றி அழைத்துச் சென்று
விட்டார்கள். போராட்டத்தை தொடங்கியது தவறு, நீங்கள்
போராட்டத்திலே ஈடுபடக் கூடாது என்று இங்கே பேசிய
மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள், நேற்றைய முன்தினம்
நடந்த அனைத்துக் கட்சியினர் கூட்டத்தில் கருத்தை வெளி
யிட்டார் என்பதை இங்கே நான் எடுத்தக் காட்ட விரும்பு
கிறேன்.

தினமணியிலே வந்த செய்திக்கு நான் பின்னாலே பதில்
சொல்கிறேன் என்றாலும், ஒன்றை நான் இப்போதும் கேட்க
விரும்புகிறேன். பேச்சு வார்த்தை நடத்துவது, இதிலே நிதி
பற்றிய பிரச்சினை இருக்கிறது. ஆயிரக்கணக்கான ரூபாயைச்
செலவழித்துக் கொண்டிருக்கிற நேரத்தில், பட்ஜெட் இங்கே
தாக்கல் செய்து ஒவ்வொரு பிரிவுக்கும் நிதி ஒதுக்கித் தர
வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுடைய அனுமதியைக்
கேட்கின்ற நேரத்தில், எங்களுக்கு இவ்வளவு இடைக்கால
நிவாரணம், அதுவும் ஜூலை மாதம் 1 ஆம் தேதியிலிருந்து தரப்
படவேண்டும் என்று கேட்கிற நிலை உருவாக்கப்படுமானால்,
இதற்காக எவ்வளவு ரூபாய் செலவழிக்கப்பட வேண்டும்
என்பதையும், எதிலிருந்து எதை நீக்கி எதை ஒதுக்குவது
என்பது பற்றியும், திட்டம் போடப்பட்டிருக்கிற எந்த செலவி
லிருந்து குறைத்து அதைத் தீர்க்க மாற்றி அமைப்பது
பற்றியும், சிந்திக்க வேண்டியிருக்கிறது என்கிற மிகப் பெரிய
தேவையும், கடமையும், பொறுப்பும் இருக்கிறது என்பதையும்
மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் தெரிந்து கொண்டிருப்
பார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை.

அப்படிப்பட்ட நிலையில் அவர்களிடம் யாரோ பேச மறுத்
ததைப் போலவும், அரசு விரும்பாததைப் போலவும் வேண்டு
மென்றே அவர்களை அலட்சியப்படுத்துவது போலவும் ஒரு
பேச்சை, கருத்தை, ஒரு நிலைமையை நாட்டில் உருவாக்குவது
எப்படி நாகரீகமான அரசியலுக்கு ஒத்ததாக இருக்கும் என்பதை
என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச்சு 6

தற்காக முதலில் அவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்
பட்டிருக்கிறேன். நான் எதைச் சொல்லவேண்டுமோ அதில்
பெரும்பகுதியை அவர்கள் பேசியிருக்கிறார்கள் என்பது எனக்கு
மனத் திருப்தியாக இருக்கிறது.

ஆனால் ஒன்று, அவர் எந்தப் பத்திரிகையிலேயிருந்து
படித்துக்காண்பிக்கிறார் என்று நான் கேட்டதிலேயிருந்தே அவர்
குறிப்பிட்ட அந்தப் பத்திரிகைக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை
என்பதையும், அந்தப் பத்திரிகையை நான் படிக்கவில்லை
என்பதையும் அவர் புரிந்து கொண்டிருப்பார் என்று நான்
கருதுகிறேன்.

தினமணியிலே வந்திருக்கின்ற செய்தியை இங்கே படித்துக்
காண்பித்தார்கள். ஒரு மணி நேரம் பேசுகின்ற ஒருவருடைய
பேச்சை இரண்டு காலங்களிலே பூர்த்தி செய்து முழுமையாக
வெளியிட்டு விட்முடியுமென்று இங்கேயிருக்கின்ற யாரும் நம்ப
மாட்டார்கள் என்று நான் நிச்சயமாக, உறுதியாக எதிர்
பார்க்கிறேன்.

நிலைமைகளை ஆதியிலிருந்து சொல்ல வேண்டிய கட்டாயத்
திற்கு ஆளாக்கப்பட்டிருப்பதால், இங்கே எதிர்க்கட்சிகளைச்
சார்ந்த தலைவர்கள், நண்பர்கள் சொல்லியிருந்தாலும் நான்
சொல்வதையும் கொஞ்சம் பொறுமையோடு கேட்பீர்கள் என்று
நான் எதிர்பார்க்கிறேன்.

அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்கள் இடைக்கால நிவாரணம்
வேண்டுமென்று கேட்டு அதற்காக அவர்கள் நடவடிக்கையிலே
இறங்கினார்கள் என்கின்ற நிலைமையில் கைது செய்யப்பட
வேண்டிய அவசியம் ஏற்பட்டு, கைது செய்யப்பட்டார்கள்
என்பதும், அவர்கள் விடுதலை செய்யப்பெற்று அவர்களுடன்
பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென்று மாண்புமிகு
உறுப்பினர் சங்கரய்யா போன்றவர்கள் வற்புறுத்தினார்கள்
என்பதும் தெரியும்.

அதற்கேற்ப நான் அன்றே இந்த மாமன்றத்தில் ஒரு கேள்வி
யைத் திருப்பிக் கேட்டேன். மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா
போன்றவர்கள்—அவர்களுடைய வார்த்தையை நம்பி நான்



1978 மார்ச்சு 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

விடுதலை செய்ய உத்தரவிட்டால் வெளியே வருகின்றவர்கள்
மீண்டும் வேலைநிறுத்தம், மறியல் போன்றவைகளில் ஈடுபட
மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தைத் தர முடியுமா என்று
கேட்டபொழுது, எங்கள் வார்த்தையை அவர்கள் ஏற்றுக்கொள்
வார்கள் என்ற நம்பிக்கையிருக்கிறது என்று அவர் சொன்னதை
இங்கே நான் நினைவுபடுத்த முதலில் விரும்புகிறேன்.

அதற்கேற்ப நாங்கள் விடுதலை செய்தோம். அவர்கள் பேச்சு
வார்த்தைக்கு வந்தார்கள். எனது வீட்டிற்கு வரவில்லை, எனது
அலுவலகத்திற்கு வந்தார்கள் என்பதைத் தயவுசெய்து தெரிந்து
கொள்ள வேண்டும். அங்கே, தலைமைச் செயலர் அவர்கள்
இருந்தார்கள்; ஹோம் டிபார்ட்மெண்ட்டைச் சேர்ந்த செயலர்
இருந்தார்; நிதித் துறைச் செயலர் இருந்தார். அவர்களுக்கு
முன்பாக பேச்சுவார்த்தை நடந்தது.

கோரிக்கையைப் பற்றி நாங்கள் பேச்சுவார்த்தை நடத்துவது
என்று நான் ஒப்புக்கொண்டவுடன், பரதன் என்ற பெயருடைய
தலைவருடைய ஒரு பிரிவு என்று சொன்னாலும் சரி, ஒரு அமைப்பு
என்று சொன்னாலும் சரி, அவர்கள் சொன்னார்கள், எங்களையும்
நீங்கள் கலந்து பேசவேண்டும்; எங்களுடைய கோரிக்கைகளையும்
நீங்கள் மதித்து, அவைபற்றி விவாதிப்பதற்கு வாய்ப்பு தர
வேண்டுமென்றார்கள். அவர்களுக்கும் அன்றையதினமே நாங்கள்
நேரத்தை ஒதுக்கிவைத்தோம்.

அதே சமயத்தில், முத்தாலிங்கம் என்ற பெயருள்ள—
செங்கற்பட்டு, காஞ்சிபுரம் போன்ற இடங்களிலேயுள்ள
அரசிதழ் பதிவுபெறாத சங்கத்தைச் சேர்ந்த—அவர்கள் நாங்களும்
பேசுவதற்கு வாய்ப்பு வேண்டுமென்று கேட்டார்கள். அதையும்
ஏற்றுக் கொண்டு அன்றையதினமே பேசுவதாக இருந்தது.

ஆனால், குறிப்பிட்ட நேரத்திற்கு மேலும் நண்பர் சிவ
இளங்கோவிடம், அவர்கள் நண்பர்களிடம், பேச வேண்டியிருந்த
தால், பேச்சு நீண்டு கொண்டே சென்றது. கடைசியாக, அவர்கள்
கேட்ட கேள்வி, எத்தனை நாளைக்குள் உங்கள் பதில் கிடைக்கும்
என்று கேட்டார்கள். ஏன் அவர்கள் இப்படிக் கேட்டார்கள்
என்றால், நான் சொன்னேன், உங்கள் கோரிக்கையை, பரதன்
தலைமையிலே இருக்கிற நண்பர்களுடைய கோரிக்கையை,

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச்சு 6

ஒத்துழைப்புத் தருகிருர்கள் என்று நாங்கள் தெரிந்து
கொள்வதற்கு, அந்த மக்களுக்காக இந்த அரசு எந்தத்
திட்டங்களை வகுத்துக்கொண்டு இருக்கிறது என்பதையும், எந்த.
எண்ணத்தையும் மக்களிடம் சொல்லி வாக்குகளை பெற்று
நாங்கள் ஆட்சிக்கு வந்து இருக்கிருேமோ, அந்த எண்ணத்
திற்குச் சாதகமாக மற்றவர்கள் ஒத்துழைப்புத் தரவேண்டும்
என்று கேட்டுக்கொள்வதும் எனது கடமை என்ற நிலையிலே
நான் சொல்லும்போது சொன்னேன்.

அவர்கள் மறியல் செய்யப்போவதாகச் சொல்கிருர்கள்.

(முற்பகல் 11.50)

அப்படிப்பட்ட நிலைமையெல்லாம் இந்த ஆட்சியிலே இருக்கு
மானல், நான் சொன்னேன், "போலீசைப் பயன்படுத்தப்
போவதில்லை; மக்களிடம் உண்மையைச் சொல்லி, நானும் அங்கே
கலந்து, மக்களுடன் சேர்ந்து, நீங்கள் இப்படிச் செய்வது
கூடாது; இது சரியல்ல; நாங்கள் எந்த ஏழை மக்களுக்காக—
இந்தச் சம்பள உயர்வு கொடுப்பதன் மூலம் எந்த ஏழை மக்களுக்
காக நல்ல திட்டங்களை தீட்ட நிதி ஒதுக்கியிருக்கிருேமோ, அந்த
ஏழை மக்களைச் சந்தித்து, நிலைமையை எடுத்துச் சொல்லி,
சமாளிப்போமே தவிர, போலீசை பயன்படுத்த
மாட்டேன்" என்று சொல்வதை பத்திரிகைகளில்
காணேம். ஏப்ரல் 1-ந்தேதி முதல் சம்பள உயர்வு கிடைக்கும்
என்று சொன்னது ஜூலை 1-ந்தேதி கொடுப்போம் என்று
திருத்தி போட்டிருக்கிருர்கள். இதைப்போன்ற செய்திகளை
மட்டும் மனதிலே வைத்துக்கொண்டு இந்த ஒத்திவைப்புத்
தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிருர்கள் என்பதை என்னல்
புரிந்துகொள்ள முடிகிறது.

நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். இன்று மட்டுமல்ல.
தேர்தலுக்கு முன்பும் கூறியிருக்கிறேன். நாங்கள் ஆட்சிக்கு
வந்தால் எங்களைத் தொல்லைக்கு ஆளாக்கினல், எங்களுக்கு
நெருக்கடியை ஏற்படுத்தினல் நாங்கள் மக்கள் முன்னல்
வருவோம்; இது மக்கள் கட்சி என்று சொன்னேன். அந்த
எண்ணத்திலே வார்த்தை மாறியிருக்கலாமே தவிர எண்ணம்
அதேதான்; போறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்த அதே
எண்ணம்தான் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.
அண்ணு அவர்கள் ஒருமுறை சொன்னர்கள். என்னைப்பற்றி



1978 மார்ச்சு 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

சோதனைகள் வரும்
எனக்குக் கவலையில்லை. இப்படிப்பட்ட
சொல்வேன் என்று
போது மக்களைச் சந்திப்பேன்; மக்களிடம்
சொல்கிறேன். ஏழை
சொன்னர்கள். அதைத்தான் நானும்
வசதியும்
எளிய மக்களுடைய நிலைமைகளை வாய்ப்பும்
உள்ளவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

சொன்னேன்.
நேற்றைதினம் பேசும்போது ஒன்றைச்
முன்னலே
முன்னல் இருந்த மக்களிடம் சொன்னேன்.
அவர்களைப்
இருந்தவர்கள் நாற்காலிகளில் அமர்ந்திருந்தார்கள்.
முன்னல்
பார்த்துச் சொன்னேன். நீங்கள் நாற்காலிகளிலே,
அவ்வளவு
வந்து அமர்ந்திருக்கிறீர்கள்; உங்களுக்குப் பின்னலே
அவர்களுக்கு ஒரு
பேர் நின்றுகொண்டிருக்கிருர்களே,
பாயாவது
பெஞ்சாவது போட வேண்டாமா? இல்லை என்ருல்
கவலைப்
விரித்துப்போட வேண்டாமா அதைப்பற்றி சிறிதும்
போட
படாமல் "சோபா போட வேண்டும், திண்டுகளைப்
நியாயமாக
வேண்டும்" என்று நீங்கள் கேட்டால் அது எப்படி
எனக்கு
இருக்கும் என்று ஒரு உதாரணத்திற்காக அங்கே
அதைத்தான்
முன்னல் இருந்த மக்களை வைத்துப் பேசினேன்.
இன்றும் சொல்கிறேன்.

ஏழை எளிய
நாற்பது 40 ரூபாய் சம்பளம் வாங்க முடியாத
சொல்லுகிறபோது,
மக்களுக்கு திட்டம் தீட்ட வேண்டுமென்று
ஓரளவுக்கு
ஓரளவுக்கு சம்பளம் பெற்றுக்கொண்டிருக்கும்போது
கவலை
வாய்ப்பு வசதியோடு இருக்கும்போது அவர்களைப்பற்றி
மேலும் மேலும்
யில்லை; எங்களைக் கவனியுங்கள் என்று
இப்படிப்
வற்புறுத்தினல், அதுவும் எதிர்க்கட்சித் தலைவர்கள்
வேண்டுமென்று
பட்ட பிரச்சினைகளையும் நீங்கள் கவனிக்க
எல்லோரும்
சொல்லும்போது அவர்களை மதித்து, நீங்கள்
வைத்திருப்
உங்களைச் சேர்ந்தது இந்த ஆட்சி என்று கருத்தில்
விரைவில்
பதனல் வேலை நிறுத்தம் வேண்டாம்; எங்கள் முடிவை
பேச்சுவார்த்தைக்கு
எடுப்போம். இப்போதும் சொல்கிறேன்;
எல்லைக்கு
இப்போது இடமில்லை. பேச்சு நடந்து ஒரு
வேண்டிய
போய்க்கொண்டிருக்கிறது. முடிவு எடுக்க
அமைச்
பொறுப்பு எங்கள் கையிலே இருக்கிறது. அதற்கு
கலந்து,
சரவையைக் கூட்டி, நிதித் துறைச் செயலாளரைக்

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 6

இன்னென்றையும் வற்புறுத்திக் கூறுகிறேன். சி.பி.ஐ. சார்ந்த கூத்தக்குடி சண்முகம் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். நாங்கள் அனைவரும் அந்த வேலை நிறுத்தத்தையும் அந்த மறியலையும், போராட்டத்தையும் ஆதரிக்கத் தயாராக இல்லை, அவர்கள் செய்வது தவறு என்று சொன்னுர்கள்.

நான் திரும்பக் கேட்டேன், பத்திரிக்கை நிருபர்கள் வெளியில் இருக்கிருர்கள், கேட்டால் சொல்வீர்களா என்று கேட்டேன், நிச்சயமாக சொல்வேன் என்ருர்கள். திரு. சங்கரய்யா அவர் களும் சொன்னுர்கள். எங்கள் நண்பர்களைக் கேட்டுக்கொண்டு கருத்து தெரிவிக்கிறேன் என்று, ஆனுல் எங்கள் வார்த்தையை மீறி அவர்கள் நடக்கிருர்கள், நாங்கள் சொன்னதை அவர்கள் கேட்கவில்லை என்று அவர்கள் சொன்னதை நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். ஜேம்ஸ் அவர்களும் அதையேதான் சொன்னுர்கள்.

இப்படிப்பட்ட நிலைமையில், அங்கே அனைத்துக் கட்சித் தலைவர்களும் கருத்து வெளியிட்டுவிட்ட பிறகு, இந்த அரசின் நோக்கத்தைப்பற்றி நீங்கள் நன்ருக உணர்ந்து கொண்டாக வேண்டும். நாங்கள் எடுத்த செயல்முறையை முடித்து விடவில்லை. இதுதான் எங்கள் முடிவு என்று நாங்கள் தெரிவித்து விடவில்லை. இதைவிட எங்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று கூறிவிடவில்லை. அல்லது இதுதான் செய்ய முடியும் என்று நான் சொல்லிவிடவில்லை. நாங்கள் பரிசீலித்துக்கொண்டு இருக்கிறோம் என்றும், நிதித்துறைச் செயலாளர் இரண்டு நாட்களில் வெளிநாடுகள் செல்ல இருக்கிருர் என்றும், அதற்குள் நாங்கள் அவர்களிடமிருந்து அதற்கான வழிமுறைகள் தெரிந்து, அதை அமைச்சரவைக் கூட்டத்தில் வைத்து விவாதித்து, இந்தச் சட்டமன்றத்தில் அதை நாங்கள் உங்களிடத்தில் சொல்லி, அதற்குப் பிறகு வெளியிடுகிறோம் என்று சொல்லி இருக்கிறோம்.

இப்படி நிலைமைகள் இருக்கிறபோது, ஒரு பகுதியினர் மறியல் செய்வது என்றபோது, அதுபற்றி நான் குறிப்பிட்டுச் சொன்னேன், அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு கலந்துகொள்ள நான் அந்தப் பக்கம் வந்துகொண்டு இருந்தேன்



978 மார்ச் 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

...ான் மனம் புண்படும்படியாகவோ, என்னை அவமானப்படுத்த வேண்டும் என்ருே அவர்கள் வார்த்தைகளை உபயோகிக்கவில்லை. அவர்கள் ஒரு சொல்கூட அப்படிச் சொல்லவில்லை. முறை தவறி நடக்கவில்லை. அப்படிப்பட்டவர்கள் அங்கே நின்று அவர்கள் பிரச்சினையை முறையிட்டுக்கொண்டு இருந்தார்கள். நான் அது குறித்து பேச விரும்பவில்லை.

ஆனுல் அதே சமயத்தில் சிவ. இளங்கோ அவர்கள் மருத்துவ மனைக்குச் சென்று, சமையல் செய்து கொண்டிருந்தவர்களை வெளியே வா என்று அழைத்துக்கொண்டு வந்து இருக்கிருர்கள். அங்கே சுத்தம் செய்யும் தொழிலாளர் தோழர்களை வெளியே அழைத்துக்கொண்டு வந்து இருக்கிருர்கள். நோயாளிகள் காப்பாற்றப்பட வேண்டும் என்று அங்கே அனுமதிக்கப்பட்டு இருக்கும் நேரத்தில், உயிருக்கு ஆபத்து உண்டாக்கும் நடவடிக் கையில் அவர்கள் ஈடுபடுகிறபோது அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க முடியுமா என்று கேட்டேன். அரசு அதை தடை செய்ய வேண்டிவரும். அவர்களைத் தடை செய்ய வேண்டி வரும் என்பதைச் சொல்லி, அதற்கு ஏற்ப நீங்கள் ஏதாவது வழி சொல்லுங்கள் என்று சொன்னபோது, சங்கரய்யா போன்றவர்கள் சொன்னுர்கள். நாங்கள் மீண்டும் அவர்களோடு பேசுகிறோம். நிலைமையை எடுத்துச் சொல்கிறோம் என்ருர்கள். மதிப்பிற்குரிய மாண்புமிகு புலவர் கோவிந்தன் சொன்னுர்கள், நாங்கள் பேசு கிறோம், நாங்கள் எல்லாம் பேசிப் பார்க்கிறோம். பேசியபிறகு அவர்கள் மாற்றம் அடைகிருர்களா என்று பார்ப்போம். எங்கள் தலைவர்கூட கண்டித்து இருக்கிருர் என்றெல்லாம் சொன்னுர்கள்.

அதற்குப் பிறகு, நான் வருத்தத்தோடு சொல்கிறேன், நிலைமைகள் ஆங்காங்கு மாறுபடுகிற அளவிற்கு சில பத்திரிக்கை யில் செய்திகள் வந்தன. சி.பி.ஐ. அவர்களுக்கு ஆதரவு தரப்போகிருர்கள். எதிர்க்கட்சித் தலைவர் அதற்கு ஆதரவு தருகிருர் என்றும், இப்படி சிலர் சிவ. இளங்கோ போராட்டத் திற்கு ஆதரவு தருவதாக செய்தி வந்து இருக்கிறது. அப்படி செய்திகள் வருகிறபோது எங்களைப் போன்ற பொறுப்பில் இருக்கின்றவர்கள் போலீசை அனுப்பி அவர்களை தடை செய்வது என்பதைவிட மக்கள் எங்களுக்கு எந்த அளவிற்கு

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச்சு 6

என்னென்ன செய்வது என்பதை அறிவிக்க வேண்டும். அந்தப் பொறுப்பு எங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அதற்கிடையில் போராட்டம் எதற்காக?

மீண்டும் சொல்கிறேன். நாங்கள் அலட்சியப்படுத்தியிருக்க வேண்டும்; பேச மறுத்திருக்க வேண்டும்; அல்லது அதைப் பற்றி விவாதிக்க நாங்கள் தயாராக இல்லை என்று சொல்லியிருக்க வேண்டும்; அல்லது நியாயமான முடிவை எடுப்பதற்கு என்னென்ன முயற்சி எடுக்க வேண்டுமோ அதை எடுக்காமல் இருக்க வேண்டும்; இவை எதுவுமே இல்லை. அப்படி இருக்கும் போது நாங்கள் கூறியதையும் ஏற்றுக்கொள்ளாமல், எதிர்க் கட்சி தலைவர்கள் பேச்சுக்கும் மரியாதைக் கொடுக்காமல், கடமையைச் செய்யமாட்டோம் என்று சொல்லி, போராட்டத்தில் இறங்குவது சரியா?

அதுவும் எல்லோரும் போராட்டத்தில் இறங்கவில்லை. ஒரு சாரார் மட்டும், திரு. சி. இளங்கோவும் அவரைச் சேர்ந்த மற்றவர்களும் மட்டுமே இந்த மறியல் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என்பதை—ஏன் இவர்கள் இந்த ஒரு சாரார் மட்டும் மறியல் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அந்த நேரத்திலே நான் என்ன செய்யவேண்டும்? அத்தனை என். ஜி. ஓ. க்களையும் குற்றவாளிகள் என்று சொல்லமுடியாது. ஒரு பகுதியினர் வேலை செய்ய மறுக்கவில்லை. கடமையைச் செய்கிறார்கள். ஒரு பிரிவினர் நாங்கள் மறியல் செய்வோம், நாங்கள் வேலைநிறுத்தம் செய்வோம் என்று சொல்கிறார்கள். அப்படியானால் எங்களுடைய நிலை என்ன? யாரைக் கைது செய்வது, யாரை வேண்டாமென்று மறுப்பது? யார் மேல் நாங்கள் பழி சுமத்துவது? அந்தப் பொறுப்பிலிருக்கிற அத்தனை ஊழியர்களும் எங்களுக்கு எதிராக இருக்கிறார்கள் என்று சொல்வதற்கு இப்போது வழி இல்லை. அவர்கள் அத்தனை பேர்களும் எங்களுக்கு எதிராக இந்த அரசுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்திவிட்டார்கள் என்று சொல்வதற்கு இப்போது காரணம் இல்லை, ஆதாரம் இல்லை.



1978 மார்ச்சு 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

அந்நிலையில் நான் அத்தனை பேர்களையும் சந்திக்க முடியாது, அத்தனை பேர்களின் ஒருமித்த கருத்தைப் பெறவும் முடியாது. நாங்கள் எண்ணுவது நம்புவது ஒரு சாரார் ஒத்துழைக்கிறார்கள், எங்கள் வார்த்தையை நம்பி காத்திருக்கிறார்கள். ஒருசாரார் பேச்சு முறிந்துவிட்டது என்று பொய் சொல்லி அந்த வார்த்தையை இங்கே [illegible]ச்சரித்தே [illegible]ரவேண்டும் [illegible] மைக்குப் புறம்பாக என்று சொல்லலா[illegible]வே [illegible] அவர்கள் பொய் சொன்னார்கள் என்ற வார்த்தையை நான் சொல்லித் தீரவேண்டியிருக்கிறது.

திரு. துரை முருகன்: பாயின்ட் ஆப் ஆர்டர். மன்னிக்க வேண்டும். முதலமைச்சர் அவர்கள் நான் [illegible] வார்த்தையை உச்சரித்தே தீர வேண்டும் என்று சொல்[illegible] நம் [illegible] ஒவ்வாத வார்த்தையை உச்சரித்தே தீருவேன் என்று [illegible] அமைச்சர் அவர்கள் சொல்வது நியாயம் அல்ல. அப்படியானால் மற்றவர்களும் அப்படிச் சொல்ல முன்வருவார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: இங்கிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்கள் பொய் சொன்னார்கள் என்று சொல்வதுதான் தவறு. என்னிடம் பேசிவிட்டு, இங்கே எங்களிடம் ஒரு செய்தியைச் சொல்லிவிட்டு அதற்குப்பிறகு பத்திரிக்கைகளுக்கு பேச்சு முறிந்துவிட்டது என்று சொல்வது உண்மைக்கு மாறுபட்டதாகும் என்று சொல்லியேயாக வேண்டும். இங்குள்ள மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் சொல்வதை பொய் என்று சொன்னால் அது தவறு, அதை நான் சொல்லக் கூடாது. யாரும் உபயோகிக்கக்கூடாததுதான். ஆனால் பொறுப்பில் உள்ளவர்கள் என்ற நிலையிலிருந்து தங்களை தாங்களே இறக்கிக்கொண்டு தந்த மரியாதையை அவர்கள் தூக்கியெறிந்துவிட்டு, நாங்கள் கொடுத்த மரியாதையை, அவர்களுக்கு காபி முதற்கொண்டு கொடுத்தோமே அதை யெல்லாம் சாப்பிட்டுவிட்டு, எங்களைக் கவனிக்கவே இல்லை, எங்களை அலட்சியப்படுத்தி விட்டார்கள், உட்காரக்கூட அனுமதிக்கவில்லை என்று வெளியே போய் சொன்னால், மக்கள் மத்தியில் பேசுவது என்று சொன்னால் எங்களைப் போன்றவர்கள் அரசு பலத்தை, அரசு அதிகாரத்தை வைத்துக்கொண்டு

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1978 மார்ச்சு 6

சந்திப்பதா அல்லது அவர்களுடைய பாணியில் அவர்கள் எப்படி மக்களைச் சந்திக்கிறார்களோ அதற்கு மாறாக எங்களுடைய பாணியில்—நாங்களும் அரசியல் கட்சிதான்—எங்கள் கட்சித் தோழர்களையும் நண்பர்களையும் வைத்துக்கொண்டு, நாங்கள் எந்த ஏழை மக்களுக்காக திட்டம் தீட்டவேண்டுமென்று விரும்புகிறோமோ அவர்களிடம் போய் உண்மையை எடுத்துச் சொல்லி நீங்கள் எங்களுக்கு சாதகமாக இருங்கள். உங்களது எண்ணத்தை நீங்கள் அவர்களிடம் வலியுறுத்தி வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறும்படிச் செய்யுங்கள் என்று கேட்பேன் என்று சொல்வது பலாத்காரத்தைத் தூண்டிவிடுவதாகாது.

ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். சைக்கிள் செயினுக்குச் சொந்தக்காரர்கள் நிச்சயமாக அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை சேர்ந்தவர்கள் அல்ல என்பதை தயவு செய்து எல்லோரும் நம்ப வேண்டும். அதற்கு யார் சொந்தக்காரர்களோ அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமே தவிர அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சைக்கிள் செயினை உருவாக்கியவர்கள் அல்ல.

திரு. மு. கருணாநிதி: திண்டுக்கல் தேர்தல் நடைபெற்ற போது இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிற காதர் ஷா அவர்கள் அத்தேர்தலின்போது சைக்கிள் செயினால் அடிப்பட்டு மருத்துவ மனையில் இருந்தார்கள். அவரைச் சென்று நானும் மதுரை முத்து அவர்களும் பார்த்தோம். அவர்கள் முதுகு புலிக்கோடுபோல் சைக்கிள் செயினால் அடிப்பட்டிருந்தது. இப்போது அவர் அ.தி.மு.க.வில் இருக்கிறார், அப்போது தி.மு.க.வில் இருந்தார்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் எந்தக் கட்சியையும் குறிப்பிடாதிருக்கும்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு ஏன் இவ்வளவு அக்கறை வந்திருக்கிறது என்று புரியவில்லை. நான் பொதுவாகச் சொன்னேன். எங்களுக்குச் சொந்தமானதல்ல என்றுதான் சொன்னேனே தவிர எந்தக் கட்சிக்கு சொந்தம் என்று நான் இங்கே குறிப்பிடவில்லை.



1978 மார்ச்சு 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

இங்கு மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் இருக்கிறார். இம்மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அவரது முதுகைப் பார்த்தால் சட்டையை அவிழ்த்துப் பார்த்தால் தெரியும் சைக்கிள் செயின் அடையாளம். காதர் ஷா பற்றிச் சொன்னார்கள், இனிமேல்தான் சோதித்துப் பார்க்க வேண்டும்.

ஒன்று சொல்ல விரும்புகிறேன். பிரச்சினைகளைபற்றி பேச்சு வார்த்தை முறிந்துவிடவில்லை, நாங்கள் பேச்சு வார்த்தையில் இறங்கமாட்டோம் என்று ஒதுக்கிவிடவில்லை.

(நண்பகல் 12.00)

நாங்கள் சொன்னவைகளுக்கு மாறாக, திரு. இளங்கோ அவர்கள் அவசரப்பட்டு இப்படிப்பட்ட கருத்துக்களை சொல்லும் போது, அதற்கு வேறுவகையில் கடுமையான நடவடிக்கைகளை நாங்கள் எடுப்போம் என்று நாங்கள் இதுவரை கூறவில்லை.

ஆனால் அவர்கள் மக்களிடம் சென்று தவறாக செய்திகளை சொல்லும்போது, அவர்கள் சொல்லுகின்ற கருத்துக்கள் தவறு என்றும், இதுதான் உண்மை என்றும், எங்களை நம்பி ஓட்டுப் போட்டு அனுப்பி வைத்திருக்கின்ற அந்த ஏழை மக்கள், அவர்களுடைய உடுக்க உடை இல்லாத நிலைமை, மேல் ஆடை இல்லாத நிலையில் உள்ள தாய்மார்கள் இவர்களை எல்லாம் நாம் பார்த்தாக வேண்டும் என்று முன்பே சொல்லியிருக்கிறேன், அப்படிப்பட்டவர்களை அழைத்துக்கொண்டு, எங்களைப் பாருங்கள், எங்களையும் உங்களைப்போல் வாழ வழி செய்யுங்கள், அதற்குரிய வாய்ப்பை தாருங்கள் என்று கேட்பதற்காக செல்வோம் என்று சொன்னதை, ஏதோ அகங்காரமாக சொன்னேன் என்று தவறாக உண்மைக்கு மாறாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறதே தவிர, நான் ஏற்கனவே கூறியது மாதிரி அவர்களிடம் சென்று கேட்பதற்குத்தான் இப்படிப்பட்ட மக்களை அழைத்துச் சென்று சந்திப்பேன் என்று சொன்னேனே தவிர வேறு நிலைமை அல்ல என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. க. சுப்பு :** முதலமைச்சர் அவர்களிடம் ஒரு விளக்கம் கேட்டுக்கொள்வது நல்லது என்று கருதுகிறேன். அதாவது தாய்மார்கள் மிகவும் வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள் என்றும், மேல் ஆடைகூட இல்லாமல் எத்தனையோ தாய்மார்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள் என்றும், இதற்கெல்லாம் என்.ஜி.ஓ.க்கள் தான் காரணம் என்ற முறையில் சொன்னார்கள். அப்படியென்றால் இவர்களுக்கு சம்பளமே கொடுக்க வேண்டாம் என்று முடிவு செய்துவிடுவோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்படியென்றால்கூட நாட்டில் உள்ள வறுமையை அறவே ஒழித்து விட முடியுமா, அப்படி ஒழித்துவிட முடியும் என்பதை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்பதை கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் மிக அழகாக திறமையாக வாதத்தை எடுத்து வைக்கிறார்கள். அந்த நிலைமை இருக்குமானால், அவர்களுடைய கட்சி ஆட்சியில் இருந்த நேரத்தில் என்.ஜி.ஓ.க் கள் வேலை நிறுத்தம் நடைபெற்றபோது, கைது செய்தவர்களை விடுதலை செய்வதற்கு, தங்களுடைய வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்ற பின்னால்தான் விடுதலைப்பற்றி முடிவு செய்ய முடியும் என்று கூறியதை எல்லாம் நான் குறிப்பிட்டு காண்பிக்க முடியும். இப்படிப்பட்ட கேள்விகள் மூலமாக நம்முடைய பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியாது. அந்த அளவுக்கு இப்படிப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு நான் இளிச்சவாயனும் அல்ல, புரியாதவனும் அல்ல. அமரர் அண்ணா அவர்களுடைய கொள்கைகளை நிறைவேற்ற முன் வந்திருக்கிற இந்த அரசுக்கு இடையூறுகள் இருக்கின்றன என்று சொன்னால், அது இன்று மட்டுமல்ல, அன்றைக்கு அமரர் அண்ணா அவர்கள் எந்தக் கொள்கையை ஏற்றுக்கொண்டு முதலமைச்சராக வந்தாரோ—அப்போதே அந்த ஆறு மாதங் களுக்குள் எவ்வளவோ தொல்லைகள் தரப்பட்டன என்பதை நான் நன்றாக அறிந்தவன், என்பதை சுப்பு அவர்கள் நன்றாக கவனத்தில் கொள்ள வேண்டும்.





அது மட்டுமல்ல, என் முன்னால் இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி அவர்கள் அன்றைக்கு முதலமைச்சராக வந்த நேரத்தில் எப்படிப்பட்ட தொல்லைகள் இருந்தன, எப்படிப் பட்ட சங்கடங்கள் தரப்பட்டன என்பதையும் நான் நன்கு அறிந்தவன் என்பதையும் அவர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

உடுக்க துணி இல்லை என்று சொல்வது, மேல் ஆடை இல்லாமல் வயது முதிர்ந்த தாய்மார்கள் இந்த நாட்டில் இல்லை என்று மாண்புமிகு சுப்பு அவர்கள் கூற மாட்டார்கள் என்பதையும் அதை அவர்கள் ஒத்துக்கொள்ள முடியாது என்று சொல்ல மாட்டார்கள் என்பதும் நிச்சயமாகத் தெரியும். சம்பளம் கொடுப்பதை எடுத்துக்கொண்டால், எத்தனை வேண்டுமானாலும் சம்பளம் வாங்கட்டும், லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான ரூபாய்களை சம்பளமாக வாங்கட்டும் எவ்வளவு புகழ் வேண்டு மானாலும் பெற்றுக்கொள்ளட்டும், அதில் எங்களுக்கு பொறாமை யில்லை.

எங்களுடைய நிலைமை, இருப்பதை எப்படி எப்படி, யார் யாருக்குப் பிரித்துக் கொடுப்பது, எப்படி பிரித்துக்கொண்டு செயல்படுவது பிற்பட்ட நிலைமையில் இருக்கின்ற கிராமங் புறங்களுக்கு எப்படியெல்லாம் நன்மைகளை செய்வது, கிராமப் களுக்கு என்று இருக்கின்ற, அவைகளை எல்லாம் மேம்படுத்த வேண்டும் என்று இருக்கின்ற பணத்திலிருந்து குறைத்துக்கொள்ள முடியுமா—அப்படிப்பட்ட நிலைமை வரக்கூடாது என்றாலும், அப்படி வராமல் பார்த்துக் கொள்ள முடியுமா என்பதை யெல்லாம் சிந்தித்துப் பார்ப்பதற்கும், அவற்றைப்பற்றி பரிசீலனை செய்வதற்கும் நிதித்துறை செயலாளரிடம் தொடர்பு கொண்டு இருக்கிறோம் என்பதை எல்லாம் அனைத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்து சொன்னோம்.

இப்போதும் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருப்பது முறிந்துவிடவில்லை. அவர்களுடைய கோரிக் கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என்ற முடிவுக்கு வரவில்லை. இவ்வளவுதான் கொடுக்க முடியும் என்று நாங்கள் சொல்லுகிற அளவுக்கு இன்னும் வந்துவிடவில்லை. பரிசீலனை செய்துகொண்டி ருக்கிறோம். அதை அமைச்சரவையில் வைத்து இந்த அரசின்

பண நெருக்கடி இந்த அளவுக்கு இருக்கிறது என்பதைப்பற்றி யெல்லாம் விவாதித்து, எந்த அளவுக்கு செய்ய முடியும் என்பதை முடிவு செய்து, விரைவில் இந்த சட்டமன்றத்தில் வெளியிட முடியும் என்பதைத் தெரிவித்து—நேற்றும் வேண்டு கோள் விடுத்தேன்.

நேற்று இரண்டு கருத்துக்களைச் சொன்னேன், வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக்கொண்டு, எங்களுடைய முடிவுகளை தெரிவிக்க—அதைத் தெரிந்து கொள்ள சில நாட்கள் பொறுத்துக்கொள்ளுங்கள்—என்று வேண்டுகோள் விடுத்தேன்.

அவர்கள் வீட்டில் இருக்கின்ற தாய்மார்களுக்கும் நான் வேண்டுகோள் விடுத்தேன். உங்களைப்போன்ற பெண்கள், தாய்மார்கள் கிராமப்புறங்களிலே இருக்கின்றார்கள் என்பதையும் தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். இப்போதுள்ள நிலைமையில் அவர்களுக்கும் உதவி செய்கின்ற முறையில், அரசின் நடவடிக் கைகளுக்கு உறுதுணையாக இருக்கின்ற அளவில், அரசிதழ் பதிவு பெரு அதிகாரிகள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று தயவு செய்து நீங்களும் கேட்டுக்கொள்கிற வகையில் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்ளுங்கள். இந்த வேண்டுகோள்கள், அப்படி நான் தெரிவித்த கருத்துக்கள் பத்திரிக்கைகளிலே வரவில்லை.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்:** வந்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** வந்திருந்தால் மகிழ்ச்சி. நான் அவைகளைப் படிக்கவில்லை. இதையெல்லாம் நான் சொல்லும்போது, வேலை நிறுத்தத்தை வாபஸ் பெற்றுக் கொண்டு, கொஞ்ச நாள் பொறுத்துக்கொள்ளுங்கள் என்றேன். என் வேண்டுகோளை, அறிவிப்பை அவர்கள் கவனிக்கவில்லை என்றாலும், அதைப்பற்றிச் சொல்வதற்கு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏன் மனம் வரவில்லை என்பதுதான் எனக்குத் தெரியவில்லை.

இங்கே அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் பேசினார்கள். அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கை தவறு, நாங்கள் கேட்டோம், அவர்கள் ஒத்துழைக்கவில்லை, வேலை நிறுத்தம் செய்யாதீர்கள் என்று நாங்கள் சொல்லியும் அவர்கள் கேட்க



வில்லை, ஏற்றுக்கொள்ளவில்லை, மறியல் செய்தார்கள் என்று சொல்லியவர்கள் எல்லாம், நாங்கள் எவ்வளவு கேட்டுக் கொண்டும் அவர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள் என்று சொன்ன ஜேம்ஸ் அவர்கள், ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து, அதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்று சொல்வது ஏன் என்பதுதான் எனக்குத் தெரியவில்லை; அந்தச் சூழ்நிலை ஏன் உருவாக்கப்பட்டது என்பதுதான் எனக்குத் தெரியவில்லை.

கடைசியாக நான் சொல்லிக் கொள்கிறேன். தமிழக அரசு, அரசிதழ் பதிவுபெருத ஊழியர்கள் என்று அழைக்கப்படுகின்ற அதிகாரிகளை அலட்சியப்படுத்தவில்லை என்பதையும், அவர்களுக்கு எங்களால் என்ன செய்யமுடியுமோ, எதைச் செய்ய முடியுமோ எப்படிச் செய்ய முடியுமோ, அதை வெளியிடுவதிலேதான் மகிழ்ச்சியும், மன நிம்மதியும் தரும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காக நான் சம்பந்தப்பட்ட துறைகளோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிறேன் என்ப தையும், எவ்வளவு விரைவிலே இந்தச் செய்தியைச் சொல்ல முடியுமோ, அவ்வளவு விரைவிலே சொல்ல விரும்புகிறேன் என்ப தையும் நான் தெரிவித்துக்கொள்வதோடு, இந்தப் பேச்சுவார்த்தை முடிந்து விட்டது என்பதல்ல, அவர்கள் சொன்ன கோரிக்கைகள் என்னிடம் இருக்கின்றன, அது சம்பந்தமாக தொடர்பு வைத்திருக்கிறோம் என்பதைக் கூறிக் கொள்கிறேன். ஆகவே, இதற்காக ஒரு நெருக்கடி நிலை ஏற்படுத்தி, நெருக்கடி என்று சொல்லி, மற்ற அலுவல்களை தடைப்படுத்தக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டாம் என்று மாண்புமிகு உறுப்பினர்களைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பாயின்ட் ஆப் ஆர்டர், என்னைப்பற்றிச் சொல்லியிருப்பதால் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானத் திற்குப் பிறகு, நான் ஏற்கனவே சொல்லியிருப்பதுபோல் இதற்கு அனுமதி அளிக்க முடியாது. ஜேம்ஸ், தயவுசெய்து என்னுடன் ஒத்துழையுங்கள், மறுபடியும் பேச அனுமதிக்க மாட்டேன், தயவுசெய்து அமருங்கள்.

[1978 மார்ச் 6

**திரு. ஜே. ஜேம்ஸ்:** முதலமைச்சர் சொன்ன பதிலுக்கு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். என்.ஜி.ஓ.க்களைத் தூண்டுகிற. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது நீங்கள் பேசுவதற்கில்லை. அவர் சொன்னபோதே, பதில் சொல்லியிருக்க வேண்டும். சொல்லி முடித்தபிறகு, பேசக் கூடாது. அதற்கு நான் அனுமதிக்க மாட்டேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** விளக்கம் திருப்தியில்லாமையால், நாங்கள் வெளியேறுகிறோம்.

(ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

(மாண்புமிகு திரு. எம். ஜி. இராமசந்திரன் எழுந்திருந்தார்.)

**திரு. சோ. அழகர்சாமி:** நாங்களும் வெளிநடப்பு . . .

* * * * * *

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதல் அமைச்சர் அவர்கள் பேசுவதற்கு நின்று கொண்டிருக்கும்போது, நீங்களும் நின்று கொண்டிருந்தால் எப்படி? நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** ஜேம்ஸ் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லியிருப்பேன். 'மக்களை சந்திப்பேன்' என்று சொன்னதற்குக் காரணம், அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்களில் ஒரு பகுதியினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவில்லை. ஒரு பகுதியினர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அந்த வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டவர்கள், இங்கே மாண்புமிகு உறுப்பினர் சங்கரய்யா போன்ற தலைவர்கள் கொடுத்த வாக்குறுதிக்கு அவர்கள் கட்டுப்படவில்லை. ஆகவே, அவர்கள் பொய்யான செய்தியை, தவறான செய்தியை மக்களுக்குச் சொல்லும்போது, நாங்களும் பத்திரிக்கையிலே அறிக்கை விடுவது என்பது மட்டும் எங்கள் வேலையில்லை. நாங்களும் ஒரு அரசியல் கட்சி என்கின்ற நிலைமையிலே மக்களிடம் சென்று உண்மைகளை

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1978 மார்ச் 6] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

எடுத்துச் சொல்ல வேண்டியது எங்களுடைய கடமை என்ற கருத்திலேதான் சொன்னேன், அதுதான் பொருள் என்பதை நான் தெளிவுபடுத்துகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, ஜேம்ஸ் அவர்கள் சொன்ன அதே காரணத்திற்காக நாங்களும் வெளியேறுகிறோம் என்று சொல்ல ஆரம்பித்த நேரத்திலே, ஆளும் கட்சி பக்கத்திலேயிருந்து * * என்ற குரல் வந்தது, அதைச் சட்டமன்றத்திலே நீங்கள் அனுமதிக்கின்றீர்களா? அது சரியா?

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** இந்த சட்டமன்றத்தில் அப்படி எங்கள் தரப்பிலே பேசியிருந்தால், அதற்காக நான் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நடவடிக்கைக் குறிப்பில் அப்படி அந்த வார்த்தை ஏறியிருந்தால், அதை நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

**திரு. மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, என்.ஜி.ஓ. கிளர்ச்சியை 'மக்களை வைத்துச் சந்திப்பேன்' என்ற பொருளில் சொன்னதாக முதல் அமைச்சர் அவர்கள் இன்றைக்கு விளக்கம் அளித்தாலும் நேற்று அவர்கள் பேசிய பேச்சை எப்படி ஜேம்ஸ் அவர்கள் கேட்டார்களோ, அதைப் போலவே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் சிலரும் கேட்டிருக்கிறார்கள். அங்கு பேசும்போது, நான் வீதிக்கு வருவேன், மக்களை வைத்துச் சந்திப்பேன் என்ற வகையில் போலீஸ் துணை நாடாமலேயே அவர்கள் சந்திப்பதாகப் பேசியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-10]

இப்போது விளக்கங்கள் மாறாக இருந்தாலும் நேற்றுப் பேசிய பேச்சு பிரச்சினையைத் தீர்க்க உதவுவதாக இல்லை; மேலும் கிளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில்தான் உள்ளது என்ற வகையில் எங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கிற வகையில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தால் இதற்கு இசைவு மறுக்கப் படுகிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அரசு ஊழியர்கள் வேலை நிறுத்தம் சம்பந்தமாக ஒரு அறிவிப்பைச் செய்தார்கள். இந்த அறிவிப்பை எங்கள் தரப்பில் மேலும் வலியுறுத்தி மிக விரைவில் தீர்வு காண வேண்டு மென்று வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் மீண்டும் சொல்லுகிறேன்—இந்த அரசு இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்க்க விரும்புகிறது; அந்த முறையில் கண்டிப்பாக அந்தக் கடமையைச் செய்யும் என்பதை நான் இங்கே மாண்புமிகு உறுப்பினர், எதிர்க் கட்சியைச் சார்ந்த தலைவர் மாரிமுத்து அவர்களுக்கு கூறிக் கொள்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக, விரைவில் அரசாங்கம் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு இருக்கின்ற அத்தனை பேர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்—அந்த வாக்குறுதியை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சங்கரய்யா அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வது மற்றவர்களுக்கும் பொருத்தமுடையது என்று கருதுகிறேன். நிச்சயமாக அரசு தன் கடமையைச் செய்யும், விரைவில் முடிவு காண விரும்புகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



**திரு. எம். ஏ. லத்தீப்:** இந்த மாதிரியான பிரச்சினையில் பரிகாரம் கொடுக்கும் வகையில் அரசு தீர்க்கும்போது நம்முடைய தமிழகத்தின் ஒட்டுமொத்தமான நன்மைகளை, மக்களின் நன்மைகளை உத்தேசித்து அதன் விளைவுகளுக்கேற்ப முடிவுகளை எடுக்க வேண்டுமென்றும், எல்லோருக்கும், நிவாரணம் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோர் கருத்தும் ஒன்று தான். ஒரு கட்சித் தலைவர் எழுந்து சொன்னால் எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் சொல்ல வேண்டுமென்றில்லை. திரு. பெரியசாமி, நீங்களும் சொல்லுங்கள்.

**திரு. டி. பி. மு. பெரியசாமி:** தலைவர் அவர்களே. முதலமைச்சர் அவர்கள் அறிவிப்புக் கொடுக்கும்போது கிராமப் புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களின் எண்ணக் குமுறல்கள் எரிமலையாக வெடிப்பதாக அமைந்து விடாமல் அந்த எண்ணக் குமுறல்களை அடக்க ஏதுவாக அவர்களுடைய அறிவிப்பு அமைய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

## (7) அறிவிப்பு

**ஜெர்மன் டெமாக்ரடிக் ரிபப்ளிக்கைச் சார்ந்த பாராளுமன்றக் குழு பேரவைக்கு வருகை தந்திருப்பது குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெர்மன் டெமாக்ரடிக் ரிபப்ளிக்கைச் சார்ந்த பாராளுமன்றக் குழு அந்நாட்டுப் பேரவைத் தலைவர் தலைமையில் வந்திருக்கிறார்கள். இப்பேரவையின் சார்பாக நான் அவர்களை வரவேற்கிறேன். இப்போது அவர்கள் பேரவைத் தலைவர் மாடத்திலிருந்து பேரவை நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆரவாரம்.

I have to make an important announcement:

A Parliamentary Delegation from the German Democratic Republic, led by the Speaker, is now watching the Proceedings of this House from the Speaker's Gallery. On behalf of this House and myself I extend a warm welcome to them. (cheers)

## (8) 1978-79-ம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

### (அ) கோரிக்கை எண் 26—கைத்தறியும் நெசவுத் தொழிலும்

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,15,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 496—த. வேணுகோபால் இருக்கையில் இல்லை.

**திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களுக்கு சலுகைகள் வழங்குவது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,15,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.'
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 506—திரு. பொ. விஜயராகவன்—இருக்கையில் இல்லை.

THIRU M. A. LATHEEF: Sir, to discuss about the need to start a Spinning Mill at Ambur or at Vaniambadi.

I move:—

"That a sum of Rs. 4,15,00,000 under Demand No. 26-Handloom and Textiles be reduced by Rs. 100."

### (ஆ) கோரிக்கை எண் 27—கதர்

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:





"மானியக் கோரிக்கை எண் 27-கதர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,02,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்:** தலைவர் அவர்களே பண்டிகைக் காலங்களில், கைத்தறித் துணிகளைக் கடனுக்கு வழங்கி, பணத்தை வசூலிக்க சில உத்திரவாதங்கள் ஏற்பாடு செய்வதுபோல் கதர் துணியை உற்பத்தி செய்கின்ற அனைத்து நிறுவன துணிகளையும் பாகுபாடின்றி, கடன் விற்பனை செய்யவும், வசூலிக்கவும் அரசு ஏற்பாடு செய்யாததைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,02,51,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்:** தலைவர் அவர்களே, தற் காலத்துக்கு ஏற்றவாறு மக்களைக் கவரும் வண்ணம் கதர் துணிகள் உற்பத்தி செய்வது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண்: 27—கதர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,02,51,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத்தீர்மானங்களும் பேரவை முன் வைக்கப்படுகின்றன.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முன் கதரையும், நெசவுத் தொழிலையும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகளும்* கதர் கிராமத் தொழில் வாரியம் பற்றிய கொள்கை விளக்கங்களும் நிதிநிலை செயல் பாடுகள் பற்றிய விளக்கங்களும்* மாண்புமிகு உறுப்பினர் களுடைய மேலான பார்வைக்காக வைக்கப்படுகின்றன.

---

* 159-191 ம் பக்கங்களில் இணைப்புகள் II, III ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான ஆலோசனை களை வழங்கியதற்குப் பிறகு இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இன்று கைத்தறி மானியத்தில் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கைத்தறித் தொழில் என்பது தமிழகத்தில் வேளாண்மைக்கு அடுத்தபடியாக மிகப் பெரும் பாலோர் ஈடுபட்டிருக்கிற ஒரு தொழில் ஆகும். இந்தத் தொழிலில் கிட்டத்தட்ட தமிழ்நாட்டில் 30 லட்சம் பேர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். அவர்களுக்குச் சரியான பாதுகாப்பு இது வரையில் இந்த அரசால் ஏற்படுத்தப்படவில்லை.

நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் பீடித் தொழிலாளர்களுக்காக 1966 ஆம் ஆண்டில் அப்போது இருந்த காங்கிரஸ் அரசாங்கம் ஒரு சட்டத்தைப் போட்டு, அந்தத் தொழிலாளர்களுக்கு என்ன என்ன நன்மைகளை ஏற்படுத்த வேண்டுமோ அவைகளைக் கிடைக்கச் செய்தது. அதுபோன்ற பாதுகாப்புச் சட்டத்தை கைத்தறி தொழிலாளர்களுக்கும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இம்மாதிரி ஒரு சட்டம் வருவதின் மூலமாக கைத்தறித் தொழி லாளர்களுக்கு உரிய அந்தஸ்து கிடைக்கச் செய்யும். அதன் மூலம் வேலைப் பாதுகாப்பு அவர்களுக்குக் கிடைக்கும். அது போன்று அவர்களுக்கு ஏற்படுத்துவதால் குற்றங்குறைகள் ஏற் பட்டால் அவர்கள் லேபர் கோர்ட்டுகளுக்குச் செல்கின்ற உரிமையை வழங்க முடியும். விடுமுறைகள் அவர்களுக்கு ஒழுங்காகக் கிடைக்கும். இ. எஸ். ஐ. போனஸ், பிராவிடண்ட் பண்ட் போன்ற வசதிகளும் அவர்களுக்குக் கிடைக்கும். ஆகவே 1966 ஆம் ஆண்டுச் சட்டத்தைப்போல இவர்களுக்கும் ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

கூட்டுறவுத் துறையில் சில நன்மைகள் ஏற்படுகின்றன என்பதை மறுக்கமுடியாது. ஆனால் அதே நேரத்திலே இன்னும் அவர்களுக்கு ஏராளமான குறைகள் இருக்கின்றன. அவை களையும் தீர்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





உற்பத்தி அடிப்படையில் மூன்றில்
கூட்டுறவுச் சங்கங்களுக்கு உற்பத்தி அடிப்படையில் மூன்றில் ஒரு பங்கு என்று கடன் வழங்கப்படுகிறது, அதை இரண்டில் ஒரு பங்காக உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அதுபோன்று நெசவு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வரவேண்டிய ரிபேட் தொகையை உடனடியாக பட்டுவாடா செய்வதற்கு ஆணை பிடவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு, அந்த ரிபேட் தொகையை அது அனுமதிக்கப்பட்ட 3 மாதங்களுக்குள் வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெசவு கூட்டுறவுச் சங்கங்களுக்கு என்று தனியே மாவட்ட அளவில் ஒரு மத்திய கூட்டுறவு வங்கியை ஏற்படுத்த வேண்டும். இன்றுள்ள மாவட்ட மத்திய வங்கிக்கு இருக்கக்கூடிய அலுவல் களில் கூட்டுறவு நெசவுப் பிரச்னையைக் கவனிப்பது ஒரு பெரிய பிரச்னையாக இருக்கிறது. ஆகவே, தனியாக மாவட்ட அளவிலே மத்திய கூட்டுறவு வங்கியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு குறைந்த விலையில் மூலப்பொருட் களை அளிக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

கைத்தறி உற்பத்திக்குத் தேவையான சாய மருந்துகளுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஸ்டேபிள் ஃபைபர் செயற்கை பட்டிலிருந்து தயாரிக்கப்படும் சேலை ரகங்களை விசைத்தறி உற்பத்தி செய்யக் கூடாது என்று தடை கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே இந்தக் கோரிக்கை நாடு முழுவதும் உள்ள கைத்தறியாளர்களிடம் ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்தி யிருக்கிறது. நெசவு கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்யும் தனியார்களிடமிருந்து கொள்முதல் செய்யும்போது ஒரு மாதத்திற்குள் அந்தப் பணத்தைப் பட்டுவாடா செய்ய ஏற்பாடு களைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1978 மார்ச் 6

(பிற்பகல் 12-20)

மாநில நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்களில் தீபாவளி, பொங்கல் போன்ற விசேஷ காலங்களிலே மட்டும் கொள்முதல் செய்யும் நடைமுறையை மாற்றி ஆண்டு முழுவதும் சரக்குத் தேக்கம் இல்லாமல் அவ்வப்போது கொள்முதல் செய்ய ஆணையிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கு இப்பொழுது 500 ரூபாய் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதையும் ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போதிய இட வசதியின்றி இன்று அவதியுறும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் அவல நிலையைப் போக்க அலுவலகம் மற்றும் கிட்டங்கி கட்ட குறைந்த வட்டியில் நீண்ட கால மானியம் வழங்க ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை நடத்துபவர்கள் முழு நேர அலுவலர்களாக இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு ஏற்கனவே ஓரளவு கௌரவ ஊதியமாகக் கொடுத்து வந்தார்கள். இதை இடையிலே நிறுத்தி விட்டார்கள். மீண்டும் அதைக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையிலே உள்ளவர்களுக்கு சில சலுகைகளைக் கொடுக்கிறார்கள். தனியார் துறையைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 30 இலட்சம் கைத்தறியாளர்கள் இருக்கும் நிலையில், 30,000 பேர் உள்ள இந்தக் கூட்டுறவுத் துறையிலே உள்ளவர்கள் பயன் அடைகிறார்கள். மற்றவர்கள் அத்தனை பேரும் தனியார் துறையிலே இருப்பவர்கள். அவர்கள் பல துன்பங்களுக்கும், அபாயங்களுக்கும் ஆளாகிறார்கள். எனவே, அவர்களுக்கும் இந்த வசதிகளைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரணமாக, சாதாரண சேலைகளுக்குக் கூலி 2 ரூபாய் 25 காசுகள் கூட்டுறவுத் துறையிலே கொடுக்கிறார்கள். ஆனால் தனியார்கள் ஒன்றரை ரூபாய்தான் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.



1978 மார்ச் 6] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

இதுபோன்ற வசதிகளை தனியார் கைத்தறித் தொழிலாளர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளிகளுக்கும், முதலாளிகளுக்கும் தகராறுகள் ஏற்படுகின்றபொழுது கைத்தறித் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் தலையிடுவது ஒரு சிக்கலான பிரச்சினை. தொழிலாளர்களையும் அவர்கள் சமாளிக்க வேண்டும், அதே நேரத்தில் முதலாளிகளினுடைய பிரச்சினைகளையும் தீர்த்து வைக்க வேண்டும். இந்த நேரத்தில் தொழிலாளர் துறையும் அதிலே தலையிட்டு அந்தக் கைத்தறித் தொழிலாளர்களின் பிரச்னைகளில் நேரடியாகத் தலையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பலயிடங்களில் கைத்தறியாளர்கள்மீது வழக்குகள் போடப் பட்டிருக்கின்றன. அருப்புக்கோட்டையில் கடந்த நான்கைந்து மாதங்களுக்கு முன்பு பெரிய போராட்டம் நடந்தது, கூலிக் குறைப்பு ஏற்பட்ட நேரத்தில் ஏற்பட்ட போராட்டத்தில் பல கைத்தறித் தொழிலாளர்கள் மீது வழக்குகள் போடப் பட்டன. பிறகு மாவட்ட ஆட்சித் தலைவரும் மற்றவர்களும் அங்கேயிருந்து அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தும்கூட வழக்குகள் வாபஸ் பெறப்படவில்லை. அவர்கள் இன்னும் அருப்புக்கோட்டையிலிருந்து 13 மைல் தொலைவில் உள்ள விருதுநகருக்கு பல ஏழை எளியவர்கள் கோர்ட்டுக்குச் செல்வதாகத் தகவல் வந்திருக்கிறது. எனவே, உடனடியாக அவர்கள்மீதுள்ள அத்தனை வழக்குகளையும் வாபஸ் பெற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, கோவையிலேயும்கூட கடந்த அக்டோபர், நவம்பர் மாதங்களில் வேலை முறையை மாற்ற முதலாளிகள் முயற்சித்தார்கள். அதாவது சட்டத்திற்கு உட்படாத வகையில் கைத்தறி முதலாளிகள், கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களிடத்தில் நூலைக் கொடுத்து, அவர்களுடைய உற்பத்தியை வாங்குவதில், நூலை விற்பதைப் போலவும், அவர்களிடமிருந்து உற்பத்தி செய்யும் சேலை முதலியவற்றை விலைக்கு வாங்குவதைப்போலவும் பாவனை செய்த நேரத்தில் தொழிலாளர்கள் ஆவேசம் கொண்டு போராட்டம் நடத்தினார்கள். அந்த நேரத்தில் திருப்பூர்

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1978 மார்ச் 6

கோவை நெசவாளர்களில் ஒருவர் தீக்குளிக்கப் போவதாக அறிவித்தார். அவர்மீது வழக்கு போடப்பட்டது. ஆனால் அவர்கள் எதற்காகப் போராடினார்களோ அந்தப் போராட்டம் வெற்றி பெற்றாலும்கூட அவர்மீது போடப்பட்ட வழக்கு இன்னும் இருந்துகொண்டேயிருக்கிறது. இது மாதிரி நிலைமைகளை மாற்ற வேண்டும், அவர்கள்மீது உள்ள வழக்கை வாபஸ் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தீவிர வளர்ச்சித் திட்டம் என்று பலயிடங்களில் அறிவித்திருக்கிறார்கள். பரமக்குடியிலும் தீவிர வளர்ச்சித் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும். 600-க்கும் மேற்பட்ட கைத்தறிகள் இயங்குகின்றன. கிட்டத்தட்ட அந்த ஊரின் ஜனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கு, அதாவது 30,000-க்கும் மேற்பட்ட மக்கள் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். ஆகவே பரமக்குடியில் தீவிர வளர்ச்சித் திட்டத்தை அல்லது எற்றுமதி மையத்தை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அருப்புகோட்டையில் ஒரு டிசைன் சென்டர் ஏற்படுத்த வேண்டும். எங்கள் தொகுதியான முதுகுளத்தூர் தாலுக்காவில் நூற்பாலை என்பதே கிடையாது. இந்த மாநிலத்தில் ஒரு தாலுக்காவில் நூற்பாலை இல்லாத தாலுக்கா என்றால் அது முதுக்குளத்தூராகத்தான் இருக்க வேண்டும். ஆகவே, முதுகுளத்தூரில் நூற்பாலையை கூட்டறவுத் துறையிலே ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கோரிக்கைகளை யெல்லாம் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

**திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்:** பேரவைத் தலைவரவர்களே, கைத்தறி, கதர் கிராமத் தொழில்கள் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திலே கலந்து கொள்கின்ற நல்ல வாய்ப்பினை எனக்கு அளித்தமைக்கு முதற்கண் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது நாட்டிலே, மிகப் பெரிய குடிசைத் தொழிலாக கருதப்படுவது கைத்தறி நெசவுத் தொழிலாகும். வேளாண்மைக்கு அடுத்தபடியாக இந்தத் தொழிலுக்கு முக்கியத்துவம் கொடுக்க



1978 மார்ச் 6]

[திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்]

வேண்டுமென்பதை இந்த அரசு தன்னுடைய கடமையாகக் கருதி, இந்த அளவுக்கு இந்த மானியக் கோரிக்கையிலே பல நல்ல திட்டங்களை அளித்து, நெசவாளர், தொழிலாளர் பயன்பெறத் தக்க வகையிலே, இதைத் துரிதமாக்க, இந்தத் துறையினை விரிவு படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் கடந்த நேரங்களில்லாத வகையிலே, நமது புரட்சித் தலைவர் அரசு தனியாக ஒரு அமைச்சரை இந்த இலாகாவிற்கு ஒதுக்கி, நெசவாளர்களுக்கென்று செயல்பட்டு வருவதை நல்ல உள்ளம் படைத்தவர்கள் பாராட்டு வார்கள் என்பதில் ஐயமில்லை.

நாட்டின் மொத்த கைத்தறி உற்பத்தியிலே நாலில் ஒரு பங்கைத் தமிழ்நாடு உற்பத்தி செய்கிறது. அடுத்தவரும் ஆண்டுகளில், கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிரளிப்பதும், கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல் கிடைக்க வகை செய்வதும், புதுவகை வடிவமைப்புகளையும் பாலிஸ்டர் துணிகள் உட்பட புதுவகைத் துணிகளை அறிமுகப் படுத்துவதும் கைத்தறி துணிகளின் விற்பனையைப் பெருமளவில் உயர்த்தும் பொருட்டு 'கோ-ஆப்டெக்ஸ்' விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கையை உயர்த்துவதும், தனியார் துறையைச் சேர்ந்த நெசவாளர்களின் பயனுக்காகத் திட்டங்களைத் தீட்டுவதும், நெசவாளர் வேலைப் பாதுகாப்பு, ஊதியம் முதலியவை தொடர்பாக அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கும் சட்டங்கள் இயற்றுதல் முதலியவை பாராட்டுக்கு உட்பட்டதாகக் கருதப்பட வேண்டும்.

1978-79-வது ஆண்டில் 30,000 கூடுதல் கைத்தறிகளை, கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வரத் திட்டமிடப் பட்டுள்ளது. சொந்தத் தறியில்லாத 2,000 நெசவாளர்களுக்காக 20 தொழிலியல் சங்கங்களை அமைக்க இந்த அரசு இந்த மானியக் கோரிக்கையிலே திட்டம் இட்டிருப்பது பாராட்டத்தக்க ஒன்றாக இருக்கிறது. இதிலே நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன்.

பெருவாக, கிராமங்கள் கைத்தறி துணிகளை ஆதரிக்கிற நிலை ஏற்பட்டிருக்கிறது. கிராமப்புற மக்கள் சுலபமாக வாங்கி உடுத்தும் வண்ணம் கிராமத்திலே நடைபெறுகிற சந்தைகளிலே

[திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்] [1978 மார்ச் 6

முக்கியமாக கிராமங்களிலே நடைபெறுகிற திருவிழாக்கள் நேரங்களிலே, ஊர்திகளின் மூலம் கைத்தறி துணிகளை அந்தக் கிராம மக்களுக்கு எடுத்துச் சென்று விற்கக்கூடிய வகையில், அவர்கள் சுலபமாக வாங்கக்கூடிய அளவிலே, அதைச் செயலாக்க வேண்டும், அமுலாக்க வேண்டும், அதற்கான ஊர்திகளைப் பெருக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

இலட்சக்கணக்கான மக்கள் ஈடுபட்டு இத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன், புது விற்பனை நிலையங்களைத் துவக்குவதும், புதிய டிசைன்களைக் கண்டுபிடிக்க முயற்சிகள் மேற்கொள்வதும், பாலிஸ்டர் போன்ற ரகங்களை அறிமுகம் செய்வதும், அவற்றை மேலும் விரிவு செய்ய இந்த மானியக் கோரிக்கையில் வகை செய்திருப்பதும் ஆகியவற்றையெல்லாம், அரசியல் காழ்ப்புணர்ச்சியற்றவர்கள் நிச்சயமாகப் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள்.

கைத்தறி தொழில் மேலும் சிறப்படைய இந்த மானியக் கோரிக்கையிலே வழிவகை செய்யப்பட்டிருப்பது மிகச் சாலச் சிறந்ததாக வரவேற்கப்படும் என்பதில் ஐயம் இல்லை. என்னுடைய தொகுதியில் இருக்கிற சில குறைபாடுகளை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமையாகும் என்று நான் கருதுகிறேன்.

என்னுடைய தொகுதியிலே, ஏறத்தாழ 18 கிராமங்கள் அதிக அளவில் நெசவாளர்கள் வாழ்கிற பகுதியாகும். அதிலே, சாயம் தோய்க்கும் தொழிலிலும், டையிங் செய்யும் தொழிலிலும் சுமார் ஆயிரம் பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள்.

குறிப்பாக அதிலே ஈடுபட்டிருக்கிற கமலா டையிங் மில்ஸ் என்ற ஒரு மில் இருக்கிறது. அங்கே வேலை செய்கிற தொழிலாளர்கள், 15 ஆண்டுகள், 20 ஆண்டுகள் வேலை செய்தாலும், முதலாளிக்கு ஏற்பாயில்லை என்று கருதப்படுகிற காரணத்தாலே, அவர்கள் அந்த வேலையிலிருந்து நீக்கப்பட்டு, தெருவிலே நின்று வறுமையிலே வாடுகிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சாயத் தொழிற்சாலையிலே



[திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்]
978 மார்ச் 6] [திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்]

அந்தத் தொழிலாளர்கள் ஊதியக் குறைவாலே, நிரந்தரக் கூலி ஒரு நாளைக்கு ரூ. 4, ரூ. 5 கூடப் பெற முடியாத நிலையிலே அபாயகரமான, அருவருக்கத்தக்க அந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அரசு, ஏதேனும் வழிவகை காண நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்கள் அதிகமாக வாழ்கிற அந்த ஐயம்பேட்டையிலே 100 தறிகளை வைத்து, அந்த நெசவாளர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 12-30]

ஜனதா துணி என்று சொல்லப்படுகிற மலிவு விலைத் துணித் திட்டம் ஏற்கனவே அமுல் படுத்தப்பட்டிருந்தாலும், இந்த அரசு அதை விரிவுபடுத்தி பல்வேறு திட்டங்களை அமுல் படுத்தியிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை]

இதற்கு மேலாக புயல் வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட நெசவாளர்களுக்கு நிவாரணம் அளிக்க ஏறத்தாழ 22 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அவர்களுக்கு ஆதரவு தர முன்வந்திருப்பது பாராட்டத்தக்க ஒன்றாகும். இதையெல்லாம் நிச்சயமாக மாற்றுக் கட்சியினர் மோடி மஸ்தான் வேலையாக கருத மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். மந்திரத்திலே மாங்காய் காய்க்கும் என்று சொல்லி, மக்களுடைய வரிப் பணத்தை ஏப்பம் விட்டது அன்றைய ஆட்சியாளர்களாக இருக்கலாம்.

ஆனால் இன்றைய அரசு, புரட்சித் தலைவர் தலைமையிலே இருக்கிற அரசு சொன்னதைச் செய்யும், செய்வதைச் சொல்லும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

வீடுகளை இழந்த நெசவாளர்களுக்கு 500 ரூபாய் கொடுக்கிறார்கள். 200 ரூபாய் கடனாகவும், 300 ரூபாய் மானியமாகவும், தறிகளை இழந்தவர்களுக்கு ஏறத்தாழ 125 ரூபாய் மட்டும் வழங்க இந்த அரசால் ஆணைப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

[திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்] [1978 மார்ச் 6

இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், நெசவாளர்கள் வீட்டு வசதித் திட்டம், 1962 ஆம் ஆண்டிலே துவக்கப்பட்டு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதை, இந்த அரசு தகுந்த முறையிலே மாற்றி, கிராம வீட்டு வசதித் திட்டத்தையும் இதனோடு இணைத்து, மாற்றி அமைக்கப்பட்ட திட்டத்தை 1978-79 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்போவது, புரட்சித் தலைவர் அவர்களின் நல்ல உள்ளத்தின் பிரதிபலிப்பு ஆகும். இதற்கு மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நெசவாளத் தொழிலாளர்கள், அவர்கள் செய்கிற தொழிலின் காரணமாக காசநோய்க்கு ஆளாகிறார்கள். அந்த நோயின் தன்மையை உணர்ந்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்கிற வகையிலே, அவர்களைப் பரிசோதித்து அவர்கள் தக்க முறையிலே வாழ வேண்டும் முறையிலே இந்த அரசு வழி வகைகள் செய்து இருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

நெசவாளர் வாழ்கின்ற அந்தப் பகுதியிலே ஊர்திகளின் மூலமாகச் சென்று அவர்களுக்கு நன்மைகள் பல செய்திருப்பதை நாம் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சுமார் 20 லட்சம் ரூபாய் இதற்கு நிதி ஒதுக்கி இருப்பதைக் கருத்திலே கொள்ள வேண்டும்.

நெசவாளர்களுக்கு ஏராளமான பணம் ஒதுக்க வேண்டும் என்று இந்த அரசு கருதினாலும், இருக்கிற நிதி நிலைமையை ஆதாரமாகக் கொண்டு, இந்த அளவுக்கு செயல்படுத்தி வந்திருப்பதை நல்லம் உள்ளம் படைத்தவர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

என்னுடைய அய்யம்பேட்டை தொகுதி நெசவாளர்கள் அதிகமாக வாழ்கிற பகுதியாகும். அண்ணா அவர்கள் வாழ்ந்த நேரத்திலே கால்கோள் செய்யப்பட்டு இன்னும் கட்டப்படாமல் இருக்கிற இந்த மருத்துவமனைக் கட்டடத்தை கட்டி முடித்து, காசநோய்ப் பிரிவையும் திறந்து, நெசவாளர்கள் அதிகமாக வாழ்கிற இந்தப் பகுதியில் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1978 மார்ச் 6] [திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம்]

அளவு பெருக்கப்படுத்தப்
கதர் விற்பனை பெரும் அளவு ஊக்கப்படுத்தப்
பட்டிருப்பதை நாம் பார்க்கிறோம். பெரும்பான்மையான கதர்
விற்பனையை ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக நாம்
செய்ய வேண்டியிருக்கிறது. அந்தக் கடன்களை வசூலிப்பதற்கு
அந்நகராட்சியில் உள்ள அலுவலர்களையே நாம் உபயோகிக்க
வேண்டியிருக்கிறது. ஆகவே, அந்தக் கடன்களை வசூல்
செய்வதற்கு தனியாக ஒரு அதிகாரியை அல்லது அலுவலரை
நியமிக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பனைவெல்லத் தொழில், மிக
நம்முடைய தமிழ்நாட்டில் பனைவெல்லத் தொழில், மிக
சிறப்பான தொழில். அதிலிருந்து தயாரிக்கப்படும் அத்தனை
தொழில்களும் நமக்கு வருவாய் ஈட்டித்தருகின்ற தொழிலாக
அமைந்துள்ளது.

இந்த 1978-79-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 2,30,000
பேருக்கு வேலை வாய்ப்பை இந்தத் துறை தருகிறது என்ற
புள்ளி விவரத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். ஆகவே, அந்த
பனை ஓலைத் தொழிலில் அவர்கள் உற்பத்தி செய்கின்ற அந்த ஓலைப்
போன்ற பொருள்கள் நமக்குச் சிறப்பாக பயன் பெறுகிற
வகையில் இந்த அரசு சிறப்பான முறையைக் கொண்டு வந்து
இருப்பதை நாம் அனைவரும் பாராட்டுகிறோம்.

இடைக்கழி
அதே நேரத்தில் அச்சரப்பாக்கம் தொகுதி, இடைக்கழி
நாடு பகுதியில் பனைமரம் ஏராளமாக இருப்பதால் அங்கே
ஏதாவது ஒரு தொழிலை அமைத்து அதன் மூலமாக அந்தப்
பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

அறிக்கையை அளித்து,
இத்தகைய ஒரு சிறந்த நிதிநிலை அறிக்கையை அளித்து,
இத்தகைய ஒரு சிறப்பான மானியக் கோரிக்கையை வைத்து,
இந்த கிராம மக்களுக்கு, நெசவாளர்களுக்கு, கைத்தறி
நெசவாளர்களுக்கு வசதி செய்து கொடுக்கும் மானியக்
கோரிக்கையாக இருக்கிறது என்று கூறி, கைத்தறி
வளர்ச்சிக்கும், நெசவுத் தொழிலுக்கும் இந்த மானியக்

கோரிக்கை ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கும் என்று கூறி, என் பாராட்டைத் தெரிவித்து அமர்கிறேன். வணக்கம், நன்றி.

* **திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சோமணம்:** பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி மானியத்திலே மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையைத் தெளிவுபடுத்த நான் இங்கே விழைகிறேன்.

தமிழ் நாட்டில் துணி உற்பத்தியைப் பொறுத்தவரையில், 3 விதமான உற்பத்தி முறைகள் இருக்கின்றன. மில்லில் உற்பத்தி, விசைத்தறி உற்பத்தி, கைத்தறி உற்பத்தி என்று மூன்று நிலைகள் இருக்கின்றன. இதிலே கைத்தறியைப் பொறுத்தவரையில் மொத்தமாக 36 லட்சம் தறிகள் இந்தியாவில் இருக்கின்றன.

அவற்றில் 6 லட்சத்திற்கும் அதிகமான தறிகள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. சுமார் 35 இலட்சம் குடும்பங்கள் வேலை செய்கின்றனர். ஆகவே, இந்த கைத்தறி ஒரு மிகப் பெரிய தொழிலாக வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க உதவியாக உள்ள தொழிலாக இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, அந்தத் தொழிலைப் பாதுகாப்பதற்காக ஒரு சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

1966-ம் ஆண்டில் ஒவ்வொரு நபரும் 18¾ கெஜத்திற்கும் மேலாக துணி உபயோகித்துக்கொண்டு இருந்தனர். இன்று மக்களுக்கு வாங்கும் சக்தி குறைந்தது காரணமாக அவர்களுக்குப் போதிய அளவிற்கு வருமானம் இன்மை காரணமாக, 13 கெஜம் துணிதான் உபயோகிக்கிறார்கள் என்பதை மத்திய அரசாங்கம் அறிவித்து இருக்கிறது. அந்த அளவிற்கு மக்களின் வாங்கும் சக்தி குறைந்து இருப்பதால் அதனால் ஏற்படக்கூடிய நிலைமையையும் அரசாங்கம் கவனத்தில் எடுத்துக் கொண்டு, ஏற்கனவே சில துணி வகைகளுக்கு ரிபேட் கொடுக்கப் படுவதுபோல், அனைத்து கைத்தறித் துணி வகைகளுக்கும் ரிபேட் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அந்த ரிபேட் கொடுப்பதிலும் பல்வேறு விதமான பாகுபாடு இருப்பதாக அரசின் கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

பண்டிகை காலங்களில் சில துணி ரகங்களுக்கு 10 பைசா ரிபேட்டும், சில துணி ரகங்களுக்கு 5 பைசா ரிபேட்டும், சிலவற்றிற்கு எந்தவிதமான ரிபேட்டும் இல்லாமல் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே, அந்த நிலையை மாற்றி, எல்லா விதமான துணிகளுக்கும்—மொத்த விற்பனைக்கும், சில்லறை விற்பனைக்கும்—20 பைசா ரிபேட் கொடுத்து அந்த துணித் தேக்கத்தைத் தவிர்க்க இந்த அரசு முன்வரவேண்டும்.

இன்றைக்கு தமிழகத்தில் இருக்கும் நிலையை எடுத்துக் கொண்டால், உற்பத்தி செய்யப்பட்ட பல கோடி ரூபாய் துணிகள் தேங்கிக்கிடக்கின்றன. சமீபத்தில் மதுரையில் திருஷ்ணாபுரம் பகுதியில்—கிட்டத்தட்ட 3,000 கைத்தறி நெசவாளர்கள் வாழும் பகுதியில்—35 லட்சம் ரூபாய்க்கும் அதிகமான அளவிற்கு அந்த கூட்டுறவுச் சங்கத்தில் கோடம்பாக்க ரகத் துணி தேக்கத்தின் காரணமாக அங்கே இருக்கும் நெசவாளர்களுக்கு வேலை இல்லாத நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் தனியார் துறையிலும் இந்தக் கோடம்பாக்கம் ரகம் உற்பத்தி செய்கிறார்கள். அங்கே தேக்கம் இல்லாத அளவிற்கு கோ-ஆப்டக்ஸ் வாங்குகிறார்கள். ஆனால் கூட்டுறவுத் துறையில் இருக்கும் அந்தச் சங்கத்தில் தேக்கம் இருக்கிறபோது, தனியார் துறையில் வாங்குகிறீர்களே என்று கேட்டால், எங்களுக்கு அந்தத் துணி தேவை இல்லை என்று கூறுகிறார்கள். இதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சம்பந்தப்பட்ட கோ-ஆப்டெக்ஸ் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுத்து, கூட்டுறவுச் சங்கங்களுக்கு முன்னுரிமை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

வேலையில்லாத் திண்டாட்டம் குறைக்கப்படுவதற்காக உறுதுணையாக இருக்கும் தொழிலை நசிக்கச் செய்துவிடாமல், அதற்கென மேலும் குறிப்பிட்ட சில ரகங்களையும் ஒதுக்கித் தந்து, கைத்தறிக்கென ஒதுக்கி இருக்கும் ரகங்களை விசைத்

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1978 மார்ச் 6

தறியில் தயாரிக்காமல் இருக்கச் செய்ய நடவடிக்கைகளை மேற்கொண்டு, மற்றவர்கள் யாரும் அந்த ரகங்களை தயார் செய்யக்கூடாது என்று சொல்வதோடு மட்டுமல்லாமல், அப்படிச் செய்கிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஹைக்கோர்ட்டும் கூட கடும் நடவடிக்கை எடுக்கக் கூறியுள்ளது. அந்த நிலையையே அரசும் கொண்டு இருக்கிறது என்பதைக் கொள்கை அறிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது என்பதற்கு நன்றி—மத்திய அரசு உத்தரவு தெளிவில்லாமல் இருப்பதால் நடவடிக்கை எடுக்க தவறிவிடாமல் இருப்பதற்காக இந்த மாதிரியான விஷயங்களை மத்திய அரசுக்குத் தெளிவுபடுத்த சுட்டிக்காட்டி, தெளிவுபடுத்தி, ஒதுக்கீடு செய்யப்பட்ட ரகங்களை கைத்தறி மூலம்தான் உற்பத்தி செய்ய வேண்டும் என்று உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

அதைப்போல நூல் விநியோகத்தைப் பார்த்தால், கூட்டுறவு மில் அல்லது தேசிய பஞ்சாலைகளிலிருந்து விநியோகம் செய்யும் நூல் விலை தனியார் மில்களிலிருந்து வாங்கப்படும் நூல் விலையைவிட அதிகமாக இருக்கிறது. ஆகவே, கைத்தறிக்கு சப்ளை செய்யப்படும் நூல் விலையைக் குறைப்ப தோடு தரமான நூலை வழங்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட வேண்டும்.

மார்க்கெட்டைப் பொறுத்தமட்டில், இப்போது பெருமளவில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. இந்தத் தேக்கத்தை குறைக்க பண்டிகைக் காலங்களில் விற்பனை செய்யும் ஜவுளிக்கு ரிபேட் கொடுப்பதைப்போல மற்ற காலங்களிலும் ரிபேட் கொடுக்க அரசாங்கம் மானியம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மார்க்கெட்டைப் பற்றி இன்றுகூட மத்திய அமைச்சர் மோகன் தாரியா அவர்கள் கூறியிருக்கிறார்கள். இடைத் தரகர்கள் ஒழிக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்ய வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். ஆகவே, கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தியாகும்



1978 மார்ச் 6] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

துணியை கொள்முதல் செய்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கமே செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஏற்கெனவே தேங்கி இருக்கிற சரக்குகளை ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட கைத்தறிக் கூட்டுறவு வங்கிகள் ஏற்படுத்தி, அவை மூலம் இருக்கின்ற ஸ்டாக்குக்கு ஏற்றபடி கடன் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். சேலம் மாவட்டத்தில் ஒரு மாவட்ட கூட்டுறவு வங்கி வைத்திருக் கிறார்கள். ஒரு சொசைட்டியில் எவ்வளவு ஸ்டாக் தேங்கி யிருக்கிறது, அதற்கு எவ்வளவு ரிபேட் கிடைக்கும் என்பதைக் கணக்கிட்டு, அதற்கேற்ற வகையில் குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்து உதவுகிறார்கள். அதைபோல எல்லா மாவட்டங் களிலும் மாவட்ட கூட்டுறவு வங்கிகள் அமைத்து உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கடன், கூட்டுறவு கைத்தறி சங்கங்களுக்கு 4 சதவிகிதம் வட்டிக்குக் கடன் கொடுத்து உதவி செய்ய வேண்டும்.

ஏற்கெனவே கிருஷ்ணாபுரம் சொசைட்டியிலிருந்து ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். அந்தக் குறிப்பை இந்த நேரத்தில் அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சில இடங்களில் அடக்க விலையிலிருந்து 41 சதவிகிதம் லாபம் கூட்டி வைத்து விற்பனை செய்வதால் விலை ஜாஸ்தி ஆகி, அதனால் தேக்கம் ஏற்படுகிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தவறு ஏற்படாமல் இருக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நூல் விலை ஏறிவிட்டது; மார்க்கெட் போதுமான அளவுக்கு இல்லை; நூல் கிடைக்கவில்லை என்று ஏதாவது காரணம் சொல்லி, நெசவுத் தொழிலாளர்களின் கூலியை வெட்டுகிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டும். நெசவாளர் களுக்கு ஏற்கெனவே, எவ்வளவு சம்பளம் கொடுக்க வேண்டும்: குறைந்தபட்சம் கூலி எவ்வளவு கொடுக்க வேண்டுமென்று பரிந்துரை செய்ய ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு அறிக்கையும் கொடுத்துவிட்டதாகச் சொல்லப்படுகிறது.

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1978 மார்ச் 6

ஆனால் அந்த அறிக்கையின் விவரம் என்ன என்பது தெரியவில்லை. அந்த அறிக்கையை உடனடியாக வெளியிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, குறைந்தபட்சம் கூலிக்கு உத்தரவாதம் அளித்து, அரசாங்கம் சட்டமியற்ற வேண்டும்.

நெசவாளர்களுடைய குழந்தைகளுக்கு இலவச கல்வியும், புத்தகங்களும் நோட்டுகளும் இலவசமாக அளிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

குடியிருப்பு இல்லாத ஏழை நெசவாளர்களுக்கு நல்ல வகையிலே குடியிருப்பு காலனி அமைத்து, 50 சதவிகிதம் அரசு மானியமாகவும் 50 சதவிகிதம் கடனாகவும் வீடு கட்ட வழங்க வேண்டும். கடனை பல சுலபமான நீண்டகால தவணைகளில் வசூல் செய்துகொள்ளும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு பாவு ஆற்றும் நெசவாளர்களுக்கு புதிதாக ஒரு நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அதாவது வார்ப்பின் பாவு முறையை மில் துணிகளில் புகுத்தி, கைத்தறிக்கு பாவு ஆற்றும் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காத புதிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் கைத்தறித் துணிக்கு வார்ப்பின் பாவு நூலைப் பயன்படுத்தக்கூடாது என்று சட்டம் கொண்டுவர வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தமிழ்நாட்டிலிருந்து பட்டுமார்பு துணி ஏற்றுமதிக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. அதன்மூலம் அந்நியச் செலாவணி கிடைக்கும் வாய்ப்பு இருந்தது. முன்பெல்லாம் அரசாங்கம் இதற்கு 30 சதவிகிதம் மானியம் கொடுத்து ஊக்குவித்து வந்தது, சமீபத்தில் அந்த 30 சதவிகிதம் மானியத்தை 12½ சதவிகிதம் ஆக குறைத்துவிட்டார்கள். அதனால் அந்தத் தொழிலில் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. அது அந்நியச் செலாவணி ஈட்டுகின்ற ஒரு தொழிலாக இருப்பதால் பட்டுமார்பு துணி உற்பத்திக்கு முன்பு போலவே 30 சதவிகிதம் மானியம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 மார்ச் 6] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

சொல்ல
கடைசியாக மாநில கூட்டுறவுச் சங்கத்தைப் பற்றி ஆபீசர்கள்
விரும்புகிறேன். அந்தச் சங்கங்களிலே ஸ்பெஷல் நடந்து
தான் நிர்வாகப் பொறுப்பிலே இருக்கக்கூடிய நிலையிலே எப்படி
கொண்டிருக்கிறது. அவர்களை எல்லாம் மாற்றி முன்பு உட
போர்டு அமைக்கப்பட்டு நடத்தப்பட்டதோ அதேபோல் கேட்டுக்கொள்கிறேன்.
னடியாக அமைக்கப்பட வேண்டுமென்று

நிர்வாகிகள்
இதோடு முந்தைய காலங்களிலே பல கூட்டுறவு இருக்கின்றன.
மீது, கூட்டுறவுச் சங்கங்கள்மீது பல கேஸ்கள் மாவட்டத்தைச்
உதாரணமாக கடையநல்லூர் (நெல்லை வருடம்,
சேர்ந்தது) கேஸ்களை எடுத்துக்கொண்டு பார்த்தால் 8 எந்த
10 வருடம் கூட கழிந்துவிட்டது. அப்படியிருந்தும் புலனாய்வு
விதமான வழக்கும் நடைபெறவில்லை. தொடர்ந்து ஆகவே
என்ற பெயரால் காலம் கடத்திக்கொண்டிருக்கிறார்கள். பரிசீலனை
அப்படிப்பட்ட வழக்குகளை எல்லாம் உடனடியாக பெற்றுக்
செய்து அரசாங்கம் அந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் தேர்ந்
கொண்டு அந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மக்களால் கொண்டு
தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை, பிரதிநிதிகளைக் கேட்டுக்
நடத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று
கொள்கிறேன்.

அரசாங்கத்
அடுத்து, விசைத்தறியின் பிரச்சினையைப் பற்றி டர்க்கி
தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தறி
துணிகளுக்கு 5 விசைத் தறிகள், வேஷ்டி, சேலை நெய்யும் பாக்டரி
களுக்கு 10 விசைத் தறிகள் என்று இருந்தால் அதற்கு அறிவிக்
சட்டமும், தொழிலாளர் சட்டங்களும் பொருந்துமென பாது
கவும். அப்படி அறிவித்தால்தான் எல்லாவிதமான ஈ.எஸ்.ஐ.,
காப்பும் தொழிலாளர்களுக்கு கிடைக்க முடியும். அவர்
பிராவிடண்ட் பண்ட் போன்ற வசதிகளை எல்லாம் கேட்டுக்கொள்
களுக்குச் செய்து கொடுக்கவேண்டுமென்று
கிறேன்.

சொல்ல
கூட்டுறவுப் பஞ்சாலையைப் பற்றி சில விஷயங்கள் நம்முடைய
விரும்புகிறேன். ஒரு புறத்தில் தேசீய பஞ்சாலை நம்
மேற்பார்வையில் இருக்கிறது. கூட்டுறவுப் பஞ்சாலை இருந்து
மேற்பார்வையில் இருக்கிறது. அங்கே சிலோனிலே

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1978 மார்ச் 6

பர்மாவிலே இருந்து வந்திருக்கக்கூடிய அகதிகளுக்கு வேலை கொடுக்கக்கூடிய திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. இது ஒரு நல்ல திட்டம். வரவேற்க வேண்டிய திட்டம். ஆனால் அவர்கள் என்ன வேலை செய்கிறார்களோ அந்த வேலைக்குரிய ஊதியம் சமவேலைக்கு சமசம்பளம் என்று அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு அதற்கு பதிலாக தினக் கூலி என்ற பெயரால் சம்பளத்தை நிர்ணயிக்கிறார்கள். பல வருடங்களாக வேலை பார்ப்பவர்களுக்குக் கூட தினம் 5 ரூபாய் 6 ரூபாய் என்று மிகவும் குறைந்த கூலி கொடுக்கிறார்கள். அதே வேலையை செய்யக் கூடிய பெர்மெனன்ட் தொழிலாளர்களுக்கு 22 ரூபாய், 23 ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது. இப்படிப்பட்ட முறை சரியல்ல என்று அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த தொழிலாளிகூட 10, 15 ஆண்டுகளுக்கு மேலாக வேலை செய்தும் இன்னும் தினக்கூலியாகவே அவர்களை வைத்துக்கொண்டு 5 ரூபாய், 6 ரூபாய், 7 ரூபாய்தான் கொடுக்கிறார்கள். இந்த அளவுக்குமேல் கூலி கொடுப்பதில்லை. காலி ஸ்தானங்கள் ஏற்பட்டாலும் அவர்களைப் பதிவு செய்யவில்லை. அந்த முறை அகற்றப்பட்டு உடனடியாக அவர்களுக்கும் வேலைக்குரிய முழுச் சம்பளமும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காலி ஸ்தானங்கள் நிரப்பப்பட வேண்டும். தொழில் ஸ்தாபனங்கள் லாபத்தில் ஓடவில்லை என்ற காரணத்தைக் காட்டி நிறுத்தி வைக்கக்கூடிய முறையில் பாக்டரி சட்டத்தை மீறுகிறார்கள்.

தேசிய பஞ்சாலைகளில் ஓவர்டைம் வேலை வாங்குகிறார்கள். நம்முடைய சட்டப்படி டபிள் சம்பளம் கொடுக்க வேண்டும். அப்படி ஓவர்டைமாக ஒரு மணி நேரம் வேலை செய்தால் சாதாரணமாக என்ன சம்பளம் கொடுக்கப்படுகிறதோ அதே சம்பளம்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக சட்டத்தை மீறுகிற முதலாளிகளை தண்டிக்க வேண்டிய அரசாங்கமே இப்படிப்பட்ட முறையை கையாண்டால், சர்க்காருடைய நிர்வாகத்திலேயே இந்தமாதிரி செய்தால் நாமும் ஏன் செய்யக்கூடாது என்று மில் முதலாளிகளும்



1978 மார்ச் 6] [திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

சட்டத்தை மீறிவிட முயல்வார்கள். ஆகவே நாமும் சட்டத்தை மீறவேண்டாம். முதலாளிகள் மீறுவதையும் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து சீக்கிரம் முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது.

**மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:** தலைவரவர்களே, தொழில் துறை சட்டங்கள் எங்கெங்கு மீறப்படுகின்றன என்ற தகவலை இன்று மாலையே தனியாக எழுதி கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** அமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி. எழுதிக் கொடுக்கிறேன்.

கடைசியாக கதர்த் துணிபற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். என்.ஜி.ஜி.ஓ.-க்களுக்கு கைத்தறித் துணி வாங்குவதற்கு மற்ற தொழிலாளர்களுக்கும் கடன் சலுகை வழங்கப்படுவது போல் கதர் துணிகள் வாங்குவதற்கும் அனைத்துக் கதர் ஸ்தாபனங்களுக்கும் சலுகை கொடுத்து அதன் விற்பனையை ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று கட்டடம் கட்டுவதற்கும் அவர்களுக்கு மானியம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு இவ்வளவு நேரம் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

**திரு. டி. பி. மு. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கைத்தறி—கதர் மானியக் கோரிக்கைகள் மீது இந்திய தேசிய பார்வேர்ட் ப்ளாக் கட்சி சார்பாக என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைய தினம் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் சார்பாக அறிவிக்கப்பட்டிருக்கிற அறிக்கையையும், நிதி அறிவிப்புகளிலும் பார்க்கிறபோது நாட்டில் வாழ்கிற 40 லட்சத்திற்கு மேலான நெசவாளர்களின் உள்ளக்குமுறலை

[திரு. டி. பி. மு. பெரியசாமி] [1978 மார்ச் 6

தேங்கிக் கிடக்கின்ற நிலைமையில் தேக்கநிலை அடைந்திருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு சில ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் மற்ற துறைகளில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு ஊக்க போனஸ் போன்றவைகள் கொடுப்பதன் மூலமாக தொழில் அபிவிருத்தி செய்கின்ற பல வழிமுறைகளை நாம் காண்கிறோம்.

அதேபோல் கைத்தறி கூட்டறவு சங்கங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கும் ஊக்கம் அளிக்கின்ற வகையில், விற்பனையை அதிகப்படுத்தி போனஸ் போன்றவற்றை அங்கு பணியாற்றுபவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, விற்பனையாகாமல் தேங்கிக்கிடக்கின்ற நிலைமையை மாற்றி தேக்க நிலைமையையும் போக்க வேண்டும் என்று இந்த அரசை விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அரசே ரா-மெட்டீரியல்ஸ் கொடுத்தால் நல்ல முறையில், கைத்தறிகளால் நல்ல தரமான துணிகளை உற்பத்தி செய்ய முடியும் என்று எல்லா கூட்டறவு சங்கங்களிலிருந்தும் சொல்கிறார்கள். அதற்கு வேண்டிய ரசாயன பொருட்களும், மூலப் பொருட்களும் கிடைப்பதற்கான உத்தரவாதத்துடன் அவர்களுக்கு இப்பொருட்களை வழங்க வேண்டும் என்று இந்திய தேசிய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படும் நூல், நல்ல தரமான நூல்களாக—அதிகமாக வழங்க வேண்டும் என்று சொல்லும்போது, கூட்டுறவு அதிகாரிகள் சொல்வது என்னவென்றால், எங்களிடம் தரப்படுகின்ற பஞ்சைதான் கூட்டறவு மில்களுக்கு கொடுக்க முடிகிறது, அதிலிருந்து கிடைப்பதை தான் நாங்கள் விற்பனை செய்ய முடிகிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். இப்படியில்லாமல் காலக்கிரமத்தில் கொள்முதல் செய்வதற்கும், அதற்கு வேண்டிய அளவுக்கு கூட்டுறவு ஆலைகளுக்கு போதுமான அதிகாரத்தை கொடுத்து, நல்ல



ார்ச் 6] [திரு. டி. பி. மு. பெரியசாமி]

பஞ்சுகளை வாங்கிவைத்து, தரமான நூல்களை உற்பத்தி செய்து கூட்டுறவு சங்கங்களுக்கு கொடுப்பதன் மூலமாக நல்ல தரமான துணி கிடைப்பதற்கு வழிவகை ஏற்படும் என்பதை சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கூட்டறவு சூப்பர் மார்க்கெட் போன்றவற்றில், கூட்டறவு சங்கங்களில் கொள்முதல் செய்யாமல், தனிப்பட்ட கம்பெனி களில் கொள்முதல் செய்வதாக தெரிகிறது. இனிமேலாவது அப்படி இல்லாமல், சூப்பர் மார்க்கெட்டில் துணிகளை எல்லாம் கூட்டுறவு சங்கங்களிலேயே கட்டாயமாக ஆணை பிறப்பித்து, வாங்க வேண்டும் என்று சொல்லப்பட்டால் கைத்தறி நெசவாளர்களுடைய வாழ்வுக்கு உதவியாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவுத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையைப் பொறுத்தமட்டில், அவர்களுடைய வாழ்க்கை வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருக்கிறது. இந்த நாடு சுதந்திரம் பெற்று 30 ஆண்டுகள் ஆகியும், இந்தத் தொழிலாளர்கள், எட்டு மணி நேரம், பத்து மணி நேரம் வேலை பார்த்தும்கூட, மூன்று ரூபாய் இரண்டரை ரூபாய் என்று சம்பளம் கொடுக்கக்கூடிய அவலநிலையில் கைத்தறி நெசவாளர்கள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டறவு சங்கங்களில் போதுமான அளவுக்கு வேலையில்லாத காரணத்தால், நெசவாளர்கள் மாஸ்டர் வீவர்களிடம் சென்று வேலைக்குப் போகவேண்டியிருக்கிறது. அவர்களிடம் அதாவது தனியார் துறையிடம் இருக்கின்ற ஆட்களிடத்தில் வேலைக்குச் சென்று, எட்டு மணி நேரம் அதற்கும் மேலும் வேலை செய்து விட்டு இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் என்று சம்பளம் பெறுகிறார்கள். காலை 8 மணிக்குச் சென்றால் இரவு 8 மணி வரையிலும் வேலைக்குச் சென்று மூன்று ரூபாய் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டு, வீட்டுக்குச் சென்றால் அவர்களுடைய மனைவி மக்கள் என்ன நினைப்பார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். கைத்தறி நெசவாளர்களுடைய குறைகளைப் போக்க வேண்டும் என்று பாடுபட்ட அமரர் அண்ணா அவர்களுடைய கொள்கைகளை கொண்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்

[திரு. டி. பி. மு. பெரியசாமி] [1978 மார்ச் 6

நல்ல முறையில் புரிந்துகொண்டு ஆக்கபூர்வமான அறிவிப்புகளை அறிவித்திருக்கிறார்கள் என்பதைக் கண்டு இந்திய தேசிய பார்வேட் ப்ளாக் கட்சி சார்பாக நன்றியையும் வரவேற்பையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றியையும் வரவேற்பையும் தெரிவிக்கிற அதே நேரத்தில் என் கட்சி சார்பாக சில கருத்துக்களை சொல்ல ஆசைப் படுகிறேன். கைத்தறி துறையில் பணியாற்றுகிற, பாடுபடுகிற 40 லட்சம் மக்கள் பிரச்சினைபற்றி விவாதிக்கிற இந்த நேரத்தில் 7½ லட்சம் மக்களுக்காக இன்று வெளிநடப்பு செய்திருக்கக் கூடிய பிரதான எதிர்க்கட்சிகள் இல்லாமலிருப்பது வருந்தக் கூடிய ஒரு சூழ்நிலையாகும என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏன் நான் இதைக் கூறுகிறேன் என்றால் எந்தக் கைத்தறி நெசவாளர்களுக்காக அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் தோளிலே கைத்தறித் துணியை சுமந்துகொண்டு தெருத்தெருவாக சுற்றியலைந்து கைத்தறி நெசவாளர்களின் துயரைத் துடைக்க வேண்டும் என்று பாடுபட்டார்களோ அந்த அண்ணாவின் பெயரைச் சொல்லி இன்றைக்கு பிரதான எதிர்கட்சியாக இருக்கக்கூடியவர்களும் மற்றவர்களும் வெளிநடப்பு செய் திருப்பது வேதனைக்குரிய விஷயமாகும் என்றாலும், இருக்கிற ஒருசில எதிர்க்கட்சி உறுப்பினர்களாவது ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை இந்த மன்றத்தில் எடுத்து வைத்திருக்கும் காட்சியைப் பார்க்கிறபோது மனநிறைவு பெறுகிறேன்.

அந்த 40 லட்சம் மக்கள் இன்று எப்படி வாழ்கிறார்கள் என்றால், அந்த கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் வாழக்கூடிய பகுதிக்குச் சென்று பார்த்தால் அவர்கள் சமுதாயத்தின் அடித்தளத்தில் வாழ்கிறார்களா என்றால் சமுதாயத்தின் அடித்தளக் கோட்டிற்குக் கீழேதான் வாழ்கிறார்கள் என்றுதான் சொல்ல தோன்றுகிறது.

அந்த 40 லட்சம் மக்களின் நல்வாழ்விற்காக தமிழக அரசு முன்வந்து பல ஆக்கப்பூர்வமான அறிவிப்புகளை அறிவித்திருக்கும் நேரத்தில் கைத்தறி விற்பனை நிலையங்கள் கிளைகள் இன்னும்



1978 மார்ச் 6] [திரு. டி. பி. மு. பெரியசாமி]

அதிகப்படுத்தப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை இந்திய தேசிய பார்வேர்ட் பிளாக் கட்சியின் சார்பில் விடுக்க விரும்பு கிறேன்.

அப்படி கைத்தறி விற்பனை நிலையங்கள் கிளைகளை அதிகப் படுத்துகிற அதே நேரத்தில் அங்குள்ள துணிகளும் பிற பொருள்களும் நல்ல தரமானவையாக இருக்கும்படிச் செய்ய வேண்டியது கைத்தறித் துறையின் கடமையாகும். கூட்டுறவு மில்களில் வாங்கும் நூல் தரமாக இல்லாததன் காரணமாக கைத்தறியில் தரமான துணிகளை வெளியிட முடியவில்லை என்ற கருத்தினை கைத்தறி விற்பனை நிலையங்களில் பணியாற்றுகிற நபர்கள் சொல்கிறார்கள்.

எனவே கூட்டுறவு மில்களில் வாங்கும் நூல் தரமானவையாக இருக்கும் வகையில் ஆக்கபூர்வமான உத்தரவுகளை உடனடியாக இடவேண்டும் என்று விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் இயங்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்யும் அதிகாரங்களை கிளை விற்பனை நிலையங் களுக்குக் கொடுப்பதன் மூலம் எப்போது விலைவாசி குறைந் திருக்கிறதோ அப்போது வாங்கி வைத்துக் கொள்ளலாம், விலையைக் குறைத்து மக்களுக்குக் கொடுக்க முடியும் என்ற நிலை இருக்கிறது. தனியார் துறையில் உற்பத்தி செய்கிற பொருள்கள் மிகவும் குறைவான விலையில் கிடைக்கிறது. ஆனால் கூட்டுறவுத் துறையில் உற்பத்தி செய்யப்படுகிற துணிகளின் விலை சிறிது அதிகமாக இருப்பதன் காரணமாக இன்று நாட்டிலுள்ள ஏழை எளியவர்கள் கைத்தறி துணியை வாங்க ஆசைப்பட்டாலுங்கூட வாங்க முடியாததொரு சூழ்நிலை ஏற்படுகிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விற்பனை சங்ககங்களைப் பொறுத்தவரையில் பிரதம சங்கங்களுக்கு 9 சதவிகிதம் என்று லாபம் வைக்கப்படுகிறது. விற்பனை குறைந்திருக்கிறதா என்று பார்த்தால், கூட்டுறவு சங்க விற்பனை நிலையங்களில் அதிகமாக லாபம் இல்லாததின் காரணமாக அதிகமான துணிகள் விற்பனையாகாமல் ஆங்காங்கு

[திரு. டி. பி. மு. பெரியசாமி] [1978 மார்ச் 6

கழக அரசு இதற்காக கங்கணம் கட்டிக்கொண்டு, பொறுப் பேற்றுக் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

* **திரு. ரா. மார்க்கபந்து:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கைத்தறி நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற நெசவாளர்களுடைய பிரச்னை எந்தக் காலத்திலும் தீர்க்க முடியாத பிரச்னையாக இருந்துகொண்டு வந்திருக்கிறது. இந்தப் ரச்னைகளிலே அவர்களுக்கு பாதுகாப்புத் தருவதற்கு, அவர் ளுடைய துயரைத் துடைப்பதற்கு ஏற்கனவே ஒரு குழு மைக்கப்பட்டது. இதுவரைக்கும் அந்தக் குழுவின் பரிந் ரைகள் வைக்கப்படவில்லை. உடனடியாக அந்தப் பரிந்துரை ளை வைக்குமாறு இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, குறைந்தபட்ச கூலி நிர்ணயம் என்பது ற்றவர்களுக்கு கொடுப்பதுபோல், இவர்களுக்கும் தந்தாக வண்டும். இவர்களுடைய துயரைத் துடைக்க வேண்டுமென்று சொன்னால், இந்தக் கைத்தறித் தொழிலிலே ஈடுபட்டிருக் ன்றவர்களுக்கு என்று தனியாக, இந்த வகையான துணியைத் நான் அவர்கள் நெய்ய வேண்டும் என்ற உத்தரவாதத்தை அளித்து, அதை மில்கள் தயாரிக்கக் கூடாது என்ற ஒரு தடையை விதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே, மாஸ்டர் வீவர்கள் என்று சொல்லக் கூடியவர்கள் அதிகமான லாபத்தைச் சம்பாதிக்கக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். இவர்கள் இடைத் தரகர்கள்போல் இருந்துகொண்டு, உழைக்கின்ற நெசவாளர்களுக்கு போதிய ஊதியம் கிடைக்காமல் இருக்கின்ற நிலைமை இருக்கின்றது. ஆகவே, இந்த இடைத் தரகர்கள் என்று சொல்லக்கூடிய மாஸ்டர் வீவர்கள் சிஸ்டத்தை நாம் ஒழித்தாக வேண்டும். இதை ஒழிக்க வேண்டுமென்று சொன்னால், எந்தெந்த மாவட்டங் களில், எந்தெந்தப் பகுதிகளிலே நெசவாளர்கள் நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றார்களோ, அந்தப் பகுதிகளில்



1978 மார்ச் 6] [திரு. ரா. மார்க்கபந்து]

ஒரு தனியாக கூட்டுறவு சொசைடிகள் அமைக்கப்பட்டு, அதிலே அவர்கள் சேர்க்கப்பட வேண்டுமென்கிற ஒரு உத்திரவாதத்தை நாம் அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அப்படிச் சொல்கின்றபோதுகூட, இந்தக் கைத்தறியை கட்டாயமாக அணிய வேண்டுமென்று ஒரு உறுதியை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். நாம் வாயலே பேசிக் கொண்டிருந் தால் மட்டும் போதாது. இவைகளைச் செயல்படுத்துவதாக இருக்க வேண்டும்.

அரசாங்கத்திலே உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். கல்லூரிகளிலே படிக்கின்றவர்கள் இருக்கிறார்கள். பள்ளிக் கூடத்திலே யூனிபாரம் அணிவது என்ற முறையை வைத்திருக் கிறோம். அதே நோக்திலே ஆஸ்பத்திரிகளிலும்கூட யூனிபாரம் அணிவது என்று வைத்திருக்கிறோம். டிரான்ஸ்போர்ட் இலாகாவி லேயும் யூனிபாரம் அணிவது என்று வைத்திருக்கிறோம். இப்படி அரசாங்க உத்தியோகத்திலே பல்வேறு பகுதிகளுக்கு, அதிலே பணியாற்றுகின்றவர்களுக்கு யூனிபாரம் அணிவது என்ற ஏற்பாடுகள் இருக்கிறது. ஆகவே, இவர்களு டைய குறையைத் தீர்க்க வேண்டுமென்று சொன்னால், வாரத்தில் ஒரு நாள் அல்லது இரண்டு நாட்களுக்கு இந்த கைத்தறித் துணியைப் பயன்படுத்த வேண்டுமென்று ஒரு உத்திரவாதத்தை இந்த அரசு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதெல்லாம் தனித்தனியாக அந்தந்தத் துறைகளிலே வேலை செய்கின்றவர்களுக்குத் தனியாக பாதுகாப்புச் சட்டம் கொடுக்கப்பட வேண்டுமென்று ஒரு கூப்பாடு, கூச்சல் இருந்து கொண்டிருக்கிறது. நான் ஏற்கனவே முன்னாலே சொல்லியபடி, மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இப்படித் தனித்தனியாக ஒவ்வொரு துறைக்கும் போடாமல், அனைவருக்கும் பொருந்தும்படியாக, Comprehensive legislation to safeguard the interest of all the people' என்கின்ற முறையிலே ஒரு காம்பிரஹென்சிவ் லெஜிஸ்லேஷன் போட்டு, அவர்களுக்கு உத்திரவாதம் அளிக்கின்ற ஒரு லெஜிஸ் லேஷனை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 'Shops and Establishment, Act' என்பதில் குறிப்பிட்ட வயதிற்கு குறைவாக இருக்கக்கூடிய சிறுவர்களைப் பயன்படுத்தக்கூடாது என்று சட்டம் இருக்கிறது.

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 மார்ச் 6

ஆனால், இந்த நெசவுத் தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்கள், குழந்தைகளை ஒரு வருஷம், இரண்டு வருஷமானாலும்கூட, இந்தத் தொழிலிலே ஈடுபடுத்தக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அதைப் போக்குகின்ற வகையிலே, இந்த 'ஷாப்ஸ் அண்டு எஸ்டாப்ளிஷ்மெண்டு' ஆக்டில் சொல்லியபடி இந்தச் சட்டத்தை, சட்டத்திலுள்ள விதிமுறையை இதிலேயும் அமுலாக்க வேண்டும்.

அதே நேரத்திலே, இந்தக் கைத்தறித் துணியின் தரத்தை உயர்த்துவதற்கு, ஒரு சூபர்வைசரி ஆபீசரைப் போடுவதன் மூலமாக கைத்தறித் துணியை சிறப்பான நிலைக்கு எடுத்துச் செல்லக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படுமென்பதை நான் கூறி கொள்ள ஆசைப்படுகிறேன். அதே நேரத்திலே, ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் போன்றவைகள், நெசவாளர்கள் உற்பத்திச் செய்யக்கூடிய அந்தப் பொருள்களை எல்லாம் அரசாங்கமே விலைக்கு வாங்கி, நெசவாளர்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய விலைக்கு வாங்கி விற்பது என்ற ஒரு உத்திரவாதத்தை ஏற்றுக்கொண்டால் சரியாக இருக்குமென்று நான் கருதுகிறேன்.

அதேபோன்று, வேலையில்லாத பட்டதாரிகள் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு 'மொபைல் சேல்ஸ் டிப்போ' என்று, அவர்களுடைய வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற வகையிலே அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். Propaganda for propaganda purposes and for effective sales, என்கின்ற வகையிலே இவர்களைப் பயன்படுத்திக் கொண்டாலும், அது சரியாக இருக்குமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, நூல்கள் கொடுக்கின்றபோது 'சப்சிடைஸ்ட் ரேட்' என்கின்ற முறையிலே குறைந்த விலைக்கு நூல்கள் தருவதும், இந்த நெசவுத் தொழிலுக்கு வேண்டிய உபகரணங்களை குறைந்த விலையில் மானியமாகவும், மற்றும் நீண்டகால கடன் அடிப்படையில் கொடுப்பதும் நல்லது, சரியாக இருக்குமென்றும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



1978, மார்ச் 6] [திரு. ரா. மார்க்கபந்து]

இப்படிப்பட்ட முறைகளைக் கையாள்வது மூலமாக அவர்களுடைய துயரைத் தீர்க்கலாம். அரிசன மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறோமே அதே முறையில் வீவர்களுக்கும் வீடுகளைக் கட்டி கொடுத்து வீவர்ஸ் காலனி என்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் வாங்கிய கடன்களை வசூலிப்பதில் கெடுபிடி இருப்பதாக அறிகிறோம். ரெவின்யூ ரெகவரி ஆக்டின் கீழ் கெடுபிடி செய்து வசூலிப்பதைத் தள்ளி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

நான் ஓரிரு இடங்களை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ஜெயம்கொண்டம், கல்லத்தூர், சின்னகாந்தபுரம், சீனிப் பாளையம், உக்கடை, உதயநத்தம், மாத்தூர், ஆண்டிமடம், பொன்பரப்பி ஆகிய இடங்களில் பெருவாரியாக நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் ரேஷன் பெற மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தால் அந்தப் பகுதியில் உடனடியாக நியாயவிலைக் கடைகளைத் திறந்து அவர்களுக்கு உதவி செய்து கொடுக்கும் வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்கள் ஆந்திர மாநிலத்திற்குச் சென்றிருந்தபோது அந்த மாநிலத்து அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். விரைவில் கதர் கைத்தறிபற்றி ஒரு மாநாடு கூட்ட இருக்கிறோம்; தமிழகத்தைச் சார்ந்த அமைச்சர்கள் கலந்து கொள்ளுகிறார்கள்; சிறப்பான முடிவுகளை எல்லாம் எடுக்க இருக்கிறோம் என்று சொன்னார்கள். தமிழகத்தின் சார்பாக அமைச்சர் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள்; இந்த அரசின் கொள்கையாக என்பதை இந்த அவையில் வைத்தால் நாம் சிறந்த பணிகளை நெசவாள மக்களுக்குச் செய்தோம் என்ற நிலைமை தமிழக மக்களுக்குத் தெரிவிக்கும் வகையில் அமையும் என்று நான் சார்ந்துள்ள உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாகத் தெரிவித்துக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உழவுத் தொழிலுக்குப் பிறகு மிக முக்கியமான தொழிலாக ஆண்டாண்டு காலமாக இருந்து வருவது நெசவுத் தொழிலாகும். இந்த நெசவுத் தொழிலைக் குறித்த இந்த மானியத்தில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு மத்திய அரசாங்கம் எடுத்திருக்கிற சில முடிவுகளின் காரணமாக தமிழகத்தினுடைய பொருளாதாரத்தின் அடிப்படைக்கு அந்த அடிப்படை ஆக்கத்தையும், ஊக்கத்தையும் அளிக்கக்கூடிய இந்த மிக முக்கியமான தொழிலுக்கு ஒரு மாபெரும் அபாயத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று இந்த அவையிலே சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

கடந்த 14-2-78 அன்று கோட்டா சிஸ்டம் என்ற பெயரிலே நம்முடைய காட்டன் டெக்ஸ்டைல் எக்ஸ்போர்ட் ப்ரொமோஷன் கவுன்சில் சார்பில் டிரேட் கன்ட்ரோல் ஆர்டர் என்ற பெயரால் இப்போது இருக்கிற நிலைமைகளை அடிப்படையாக மாற்றும் வகையில், குறிப்பாக நெசவுத் தொழிலுக்கு மிகப் பெரிய பாதகம் ஏற்படும் வகையில் அவர்கள் சில முடிவுகளை எடுத்திருக்கிறார்கள். அதைப்பற்றி, என்னுடைய அச்சத்தை, கவலையை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதுவரை ஏற்றுமதிக்கான குறியீடுகள் இம்போர்ட் மெட் கூட்சுக்காக ஆலைகளில் நெய்யப்படுகிற துணிகளுக்கும், காட்டன் டெக்ஸ்டைல், ஹாண்ட்லூம் டெக்ஸ்டைல் இந்த இரண்டுக்கும் என்று ஒரு குறியீடு இருந்தது. இப்போது நெசவுத் தொழிலில் உற்பத்தி செய்கிற துணிகளுக்கு ஏற்றுமதிக் குறியீட்டை 20 சதவிகிதமாகக் குறைத்திருக்கிறார்கள். காட்டன் டெக்ஸ்டைல் மில் மேட் கூட்சுக்கு 50 சதவிகிதம்.

கைத்தறிக்கு 50 சதவிகிதம் என்ற ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். இதுவரை ஹாண்ட்லூமுக்கு 70 சதவிகிதம் மில் மேட் கூட்சுக்கு 30 சதவிகிதம் என்று இருந்தது. இப்போது நிலைமை மாறுவதால் 20 சதவிகிதம் கைத்தறி துணிகளுக்கு ஏற்றுமதி வாய்ப்பு குறைகிறது. அப்படிக் குறையுமானால்





தமிழ் நாட்டில் இன்றைக்கு வேலை செய்து வருகிற லட்சக்கணக்கான நெசவுத் தொழிலாளர்கள், தையற்காரர்கள், அவர்களோடு தொடர்பு கொண்டுள்ள மற்றத் தொழிலாளர்கள் பாதிக்கப்படக் கூடிய நிலைமை உருவாகியிருக்கிறது. இது சாதாரணமாக வடபுலத்தில் இருக்கிற மற்றக் கைத்தறியாளர்களுக்குச் சாதகமாக அமைந்திருந்தால் நாம் கவலைப்பட்டிருக்க மாட்டோம்.

(பிற்பகல் 1.10)

ஆனால் மில்லுக்கு உதவுகின்ற வகையில் இப்படிப்பட்ட முடிவை எடுத்திருப்பது நாட்டிலே நிதர்சமான நிலைமைகளை மத்திய அரசாங்கம் கவனிக்காமல் செய்திருக்கிறதோ என்ற ஐயப்பாட்டை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நாட்டிலே இந்தத் தொழில் முக்கியமான தொழில், தமிழகத்திலே மிக முக்கியமாக இருக்கக்கூடிய இந்தத் தொழிலுக்கு நட்டத்தை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருவது இன்றைக்கு மத்திய அரசாங்கத்தினுடைய சடங்காக, வழக்கமாக இருக்கிறது.

ஏதோ ஒரு பெரிய லாபி வடபுலத்திலே இருந்துகொண்டு, வேலை செய்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கு இருக்கிற செல்வாக்கைப் பயன்படுத்திக் கொண்டு அந்த லாபி ஏதோ ஒன்றைச் செய்யச் சொல்கிறது என்றால் அதைச் செய்வது என்ற முறையிலே இத்தகைய முடிவுகளைச் செய்வார்களேயானால் இந்த நாட்டினுடைய பொருளாதாரம் மிகப் பெரிய விளைவுகளைச் சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதை இந்த அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு வற்புறுத்திச் சொல்லி இந்த நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எக்ஸ்போர்ட் குறியீடுகளை நிர்ணயிக்கின்ற அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் இருந்தாலும்கூட தமிழ் நாட்டிலே உள்ள தொழிலாளர்கள் நலனைக் கருதி நம்முடைய அரசாங்கத்தோடு மத்திய அரசாங்கம் தொடர்புகொண்டு ஆலோசனைகளைக் கேட்டுத்தான் செய்ய வேண்டுமே தவிர ஏதோ ஒரு தலைப்பட்சமாக முடிவு செய்து ஏற்படுகின்ற விளைவுகளை மாநில

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 6

அரசாங்கம் சமாளித்துக்கொள்ள வேண்டுமென்ற முறையிலே முடிவு ஆகுமானால் அப்படி அங்கே இருக்கின்றவர்கள் சொல்கின்ற காரணத்தினாலே தமிழ் நாட்டிலே எதிர் காலத்திற்குப் பாதகம் ஏற்படக்கூடிய வகையிலே மத்திய அரசாங்கம் நடந்துகொண்டால் இந்த நாட்டினுடைய ஒருமைப்பாட்டிற்கு சவாலாக அது அமையும் என்பதை மத்திய அரசாங்கம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அந்த வகையில் நம்முடைய அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தி இந்த ஆர்டரை வாபஸ் பெறச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நேரம் இல்லை எனக்குத் தெரியும், சீக்கிரம் முடித்துக்கொள்கிறேன்.

இந்த கடையநல்லூர் விவகாரத்திலே இத்தனை ஆண்டுகளாக வழக்கு நடைபெற வேண்டுமா, ரிசர்வ் வங்கியே அது தேவையில்லை இப்படிப்பட்ட முறையில் அதிகமான செலவில் வழக்கை நடத்திக்கொண்டிருக்க வேண்டியதில்லை, ஏதோ நடந்துவிட்டது என்பதற்காக 15 லட்சம் ரூபாய்வரை செலவு செய்து வழக்கை நடத்திக்கொண்டு, ஒவ்வொரு மாதமும் அந்த ஏழை நெசவாளர்களை கோர்ட்டிற்கு வரவழைத்துக் கொண்டிருப்பதால் பயனில்லை என்று ரிசர்வ் வங்கியே கருத்துச் சொல்லியிருக்கும் போது, காவல்துறையினர் அந்த வழக்கை வாபஸ் பெறாமல் தேவையில்லாத கால தாமதம் செய்கிறது என்ற காரணத்தால் நல்ல விளைவுகள் ஏற்படவில்லை என்பதை அரசாங்கம் கவனித்து உடனடியாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய முறையிலே அந்த வழக்கு கோர்டிலே இருந்தாலும்சரி அல்லது டிபார்ட்மெண்டல் என்குயரி இருந்தாலும் சரி உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும், உடனடியாக வழக்கை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஏதோ ஒரு பகுதியில் மட்டும் கவனம் செலுத்தாமல் என்னுடைய வட ஆற்காடு மாவட்டத்திலே கைகோளர்கள் என்ற சமுதாயத்தினர் இந்தத் தொழிலில் அதிகமாக ஈடுபட்டிருக்கிறார்கள், அமைச்சர் அவர்கள் வேண்டுமானால் வந்து பார்க்கலாம், அங்கே நெசவு தொழிலில் ஈடுபட்டுள்ள பெரும்பாலோர் இந்த கைக்கோலர் சமுதாயத்தைச்



1978 மார்ச் 6] [திரு. எம். ஏ. லத்தீப்]

சேர்ந்தவர்கள், அந்தப் பகுதிக்கு சில நடவடிக்கைகளை எடுத்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விரிவாகப் பேசுவதற்கு நேரம் இல்லையென்றாலும், துணைத் தலைவர் அவர்கள் இந்த அளவிற்காவது அனுமதித்ததற்காக நன்றியைக் கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய கன்னிப் பேச்சை கைத்தறி மானியத்தின்மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்ததற்காக நான் என்து நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் துறை என்றாலே அதிலே பயன்படுத்துகின்ற நூலைப்போல் சிக்கலானது என்று கருதி, முந்தைய அரசுகள் அந்தச் சிக்கலிலே ஒருவேளை சிக்கிக்கொண்டால் மீளமுடியாது என்று பயந்தும் அதில் அதிக அக்கறை காட்டாமலும் ஒதுங்கியும் இருந்துவந்தன என்பதை நாம் நன்கு அறிவோம். ஆனால் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் எண்ணத்தைப் பிரதிபலிக்கின்ற வகையிலும், அவருடைய கனவுகளை நனவாக்குகின்ற வகையிலும் தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் செயல்படுகின்ற இந்த அரசு அதற்கென்று ஒரு தனி அமைச்சரை நியமித்து செயல்பட்டு வருவதை சிலர் பாராட்ட மறுத்தாலும் நல்ல உள்ளம் படைத்தவர்கள் இன்று வாழ்த்திக் கொண்டு இருக்கிறார்கள்.

நாட்டினுடைய மொத்த கைத்தறி உற்பத்தியில் நான்கில் ஒரு பங்கு தமிழ் நாடு உற்பத்தி செய்து வருகின்றது என்பதைக் கருத்திற்கொண்டு, கைத்தறித் துறைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து இந்த நிதிநிலை அறிக்கை மாண்புமிகு நிதியமைச்சரவர்களால் தயாரிக்கப்பட்டிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

நலிந்துபோன இந்தத் துறையை ஊக்குவிக்கும் வகையில் கைத்தறித் துணியின் உற்பத்தியைப் பெருக்கும் அளவிற்கு சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு நான்கு கோடி ரூபாய்க்கு உற்பத்தியைக் கூடுதலாக்கியிருப்பது இந்த அரசின் மிகப்பெரிய சாதனையாகும்.

[திரு. செ. செம்மலை] [1978 மார்ச் 6

உற்பத்தியைப் பெருக்கிவிட்டு விற்பனைக்கு வழி என்ன வென்று கையைப் பிசைந்து கொண்டு இராமல் தற்பொழுது கழக அரசு ஏற்றுமதிக் கொள்கையில் கொண்டுள்ள முயற்சி மிகவும் பாராட்டுதற்குரியதாகும்.

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்கள் இந்த ஏற்றுமதிக் கொள்கையை ஒரு அறைகூவலாகவே ஏற்றுக் கொண்டு, இதிலே நேரடியாகத் தலையிட்டு, வெளிநாடுகளுக்கு கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்வதிலே மிகுந்த அக்கறை காட்டியுள்ளார்கள். அதற்காக நான் இந்த நேரத்திலே அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதன் மூலம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் ரூபாய் ஐந்து கோடிக்கான ஏற்றுமதி விற்பனையை எய்த இயலும் என்ற செய்தி நெசவாளர் பெருங்குடி மக்களுக்கு இனிப்பான செய்தியாகும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற காரணத்தால் நல்ல தரமுள்ள துணிகளை தயாரிக்க அதிகரித்துவரும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நவீன முறையில் சாயமேற்றும் வசதி களைச் செய்து கொடுக்கும் பொருட்டு நவீன சாயத் தொழிற் சாலைகளை ஏற்படுத்தியிருக்கின்ற முயற்சி வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

நெசவுத் தொழில் ஒரு புராதன குடிசைத் தொழில் என்றாலும் அதை நவீனப்படுத்தி உற்பத்தியையும் விற்பனையையும் பெருக்கி அதன்மூலம் எண்ணற்ற நெசவாளர்களை இன்றைக்கு வாழ வைத்த இந்த அரசை நெசவாளர் பெருங்குடி மக்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, 1962 ஆம் ஆண்டு நிறுத்திவைக்கப்பட்ட நெசவாளர் வீட்டு வசதித் திட்டம் 15 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தக் கழக அரசின் முயற்சியினால் இந்தத் திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இதனால் வீட்டு வசதியில்லாத ஏழை நெசவாளர் பெருங்குடி மக்களுக்கு நிறைய வீடுகள் கிடைக்கின்ற நிலையை இந்த அரசு உருவாக்கி யிருக்கிறது.



1978 மார்ச் 6] [திரு. செ. செம்மலை]

அடுத்தபடியாக செய்கின்ற தொழிலைத் தெய்வமாகக் கொண்டு, அப்படி செய்கின்ற தொழிலாலேயே நோய்க்கு ஆளாக்கப்பட்டு வந்த நெசவாளர்களுக்கு நடமாடும் மருத்துவ மனையை ஏற்படுத்தி அவர்களை நோயினின்றும் காப்பாற்றுகின்ற வகையிலே வழிவகை செய்திருக்கிறது.

மேலும் நெசவாளர் சேமிப்பு பாதுகாப்புத் திட்டத்தில், ஒரு நெசவாளர் 55 வயது அடைவதற்கு முன்பு இறக்க நேரிட்டால் அவருடைய வாரிசுக்கு அவரது கணக்கில் சேர்த்து வைக்கப்பட்ட தொகையோடு ரூபாய் 500 ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தால் கொடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கக்கூடியது. நெசவாளர்களை அனுதாபத்தோடு பார்க்கின்ற இந்த அரசு இந்தத் தொகையை, அதாவது 500 ரூபாய் என்ற நிலையை மாற்றி ஒரு கணிசமான தொகையாக 1,500 ரூபாய் அல்லது 2,000 ரூபாய் என்ற அளவிலே அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத் திலே மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்களை நெசவாளர் பெருங்குடி மக்களின் சார்பில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1977 பிப்ரவரியிலிருந்து 1978 பிப்ரவரி வரை இந்த ஓராண்டு இடைவெளிக்குள் இந்த அரசு சுமார் 17,000 தொழிலாளர்கள் பணிபுரியும் 14 ஆலைகளைத் திறந்திருப்பதும், நலிவுற்ற 9 ஆலை களுக்கு இதுவரை ரூபாய் 437 இலட்சம் வங்கிக் கடனுக்கு உத்திரவாதம் அளித்துள்ளதும் இந்த அரசு நெசவாளர் பிரச்னைகளை அணுகும் முறையையும், அதிலுள்ள ஆர்வத்தையும் காட்டுகிறது.

மேலும் மாஸ்டர் வீவர்ஸ் என்று சொல்லப்படும் தறி முதலாளிகளிடம் சிக்கியுள்ள ஏழை நெசவாளர்களுக்குப் புனர்வாழ்வுத் திட்டமாக சொந்தத் தறியில்லாத நெசவாளர் களுக்கு தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பது உள்ளபடியே வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

[திரு. செ. செம்மலை] [1978 மார்ச் 6

இந்தக் கருத்தைச் சொல்லும்பொழுது என்னுடைய
தொகுதியைப் பொறுத்தவரையில் தறியற்ற ஏழைகள் பலர்
இருக்கிறார்கள். அப்படிப்பட்ட என்னுடைய தொகுதியில்
ஒரு மையமான இடத்தைத் தேர்ந்தெடுத்து அங்கே தொழிலியல்
நெசவாளர் கூட்டுறவு சங்கம் அமைக்க வேண்டுமென்று இந்தச்
சந்தர்ப்பத்தில் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்களை
நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆக, இவ்வளவு நன்மைகளையும் செய்த இந்த அரசு,
மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களின்
தலைமையில் இயங்கும் இந்த அரசு, நெசவாளர் வாழ்க்கையைப்
பொறுத்தவரையில் இந்த அரசினுடைய காலம் ஒரு பொற்காலம்
என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-20)

அதேபோல், கிராமத் தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம்
அளித்து, கிராமத்தில் தொழில் வளர்ந்தால் கிராமப்
பொருளாதாரம் உயர்கிறது; பொருளாதாரம் உயர்வதன்மூலம்
வாங்கும் சக்தி (பர்சேஸிங் பவர்) உயர்கிறது; வாங்கும் சக்தி
உயர்வதன்மூலம் பொருளாதார நெருக்கடி தவிர்க்கப்படுகிறது
என்பதை உணர்ந்து, மாண்புமிகு புரட்சித் தலைவர்
தலைமையிலான இந்த அரசு நிதிநிலை அறிக்கையைத் தயாரித்
துள்ளதை இந்த நேரத்தில் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன். கிராமப் பொருளாதாரத்தை உருவாக்க வேண்டிய
தற்போதைய நிலையில் கிராமத் தொழில்களை, தொழில்
கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின்மூலம் நடத்தியும், திட்டங்
களுக்குக் கடன்களை அரசு வழங்கி வருவதும் பாராட்டுக்குரிய
ஒன்றாகும்.

மொத்தத்தில், இந்த நிதிநிலை அறிக்கை நாம் வாழுகின்ற
இந்த சகாப்தத்தின் உரிமைச் சாசனம் ஆகும். ஏனெனில்,
மானியக் கோரிக்கைகள் அனைத்துமே அமைதியான சமூகப்
புரட்சியை உண்டாக்கத் திட்டங்களை தன்னகத்தே அடக்கி
வைத்திருக்கின்ற அத்தியாயங்கள் ஆகும்.



1978 மார்ச் 6] [திரு. செ. செம்மலை]

கோரிக்கையைப் பொறுத்தவரை
கைத்தறி மானியக் கோரிக்கையில் அடக்கி,
பல்வேறு பிரச்னைகளையும் மானியக் கோரிக்கையில் அடக்கி,
அதைத் தீர்வுகாண அரசு எடுத்திருக்கின்ற முயற்சிகளைத்
தெளிவாகவும், மதி நுட்பத்துடனும் மாண்புமிகு கைத்தறித்
துறை அமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கிறார். அதற்காக நான்
நெசவாளர்களின் சார்பாக, பாராட்டுகளையும், நன்றியையும்
தெரிவித்துக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு
நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன், வணக்கம்.

* மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு சட்டப்
பேரவைத் துணைத் தலைவரவர்களே, கைத்தறி, நெசவுத் தொழில்
கதர், கிராமத் தொழில்பற்றிய கொள்கை விளக்கத்தின்மீது
மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை
இந்தப் பேரவையிலே தெரிவித்திருக்கிறார்கள்.

இங்கே பல்வேறு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக்
கொடுத்து அவற்றின்மீது அவர்கள் தங்களுடைய கருத்துக்களை
வலியுறுத்தி, அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்
கிறார்கள். அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றி
யறிதலையும் அவர்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிற
முயற்சியிலே பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்ன
மைக்கு, என்னுடைய நன்றியையும் பாராட்டுகளையும் நான் தெரி
வித்துக் கொள்ளுகிறேன்.

இங்கே வலியுறுத்திப் பேசிய அனைத்து உறுப்பினர்களும்
நெசவுத் தொழிலிலே இன்று நிலவிவருகிற பொதுப்படையான
சிக்கல் குறித்து தங்களுடைய கருத்துக்களை எடுத்துத்
தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள்
ஒவ்வொருவருக்கும் அவரவர்களுடைய கருத்துக்களை தனிமைப்
படுத்தி, அவர்களுடைய பெயர்களைச் சுட்டி, அந்தக் கருத்துக்
களுக்குப் பதிலாக நான் சொல்ல விரும்பாமல், ஒட்டுமொத்தமாக
இந்தத் தொழிலில் இப்பொழுது ஏற்பட்டிருக்கிற பிரச்னைகள்
என்ன? இவற்றைத் தீர்ப்பதிலே, தமிழக அரசு மாண்புமிகு
முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையிலே,
என்னென்ன திட்டங்களைத் தயார் செய்து இன்றைக்கு நடை

[திரு. கே. இராஜா முகமது] [1978 மார்ச் 6

முறைப்படுத்துகிறது என்பதை மிகவும் சுருக்கமாகச் சொல்லி, மானியக் கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே வலியுறுத்திய அத்தனை உறுப்பினர்களும், குறைந்த பட்சக் கூலியை நெசவாளர்களுக்குக் கொடுக்கச் சட்டம் இயற்ற வேண்டுமென்ற ஒரு கருத்தை இங்கே வலியுறுத்தியிருக்கிருர்கள். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது எல்லாம், இங்கே நெசவாளர்களுக்கு நாம் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக, நியாயமான கூலிகளைக் கொடுத்து வருகிறோம். அதே நேரத்தில், தனியார் துறையில், வேலை பார்க்கிற நெசவாளர் களுக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலே கொடுக்கிற கூலி கொடுப்ப தில்லை. எனவே, அங்கே குறைந்தபட்சக் கூலி நிர்ணயிக்கக்கூடிய சட்டத்தை இந்த அரசு பரிசிலனை செய்துவருகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுறவுத் துறையிலே உற்பத்தியாகிற துணிகளைப் பொதுவாகக் கொள்முதல் செய்கிற காலம், ஒவ்வொரு குறிப்பிட்ட பண்டிகைகளை ஒட்டி வருவதனுல் இடைப்பட்ட காலங்களிலே நிரந்தரமான தேக்கங்கள் ஏற்படுவதை இங்கே மாமன்றத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தார்கள். அவர்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்திலே ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நா கூட்டுறவு சங்கங்களை அமைக்கின்றபொழுது அந்தச் சங்க களுக்கு எப்படிப்பட்ட பிரச்னைகள் எல்லாம் வரும் என் தெரிந்துதான் அந்தச் சங்கங்களுக்குக் கூட்டுறவு உற்பத் விற்பனைச் சங்கம் என்று பெயரைக் கொடுத்திருக்கிறோ தனியார் துறையிலே உற்பத்தி செய்கிருர்கள். உடனுக்குட விற்பனை செய்கிருர்கள்.

அதேபோல், கூட்டுறவுச் சங்கத்திலே ஏன் விற்பனை ஆகவில்லை யென்று கேட்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன், இந்த விற்பனைத் தேக்கத்திற்கு உள்ளாகிற கூட்டுறவுச் சங்கங்களில், அந்தச் சங்கங்களை நடத்திச் செல்கிற தலைவர்களும், இயக்குநர்களும் பெருமளவு துணை நின்று, அச்சங்கங்கள் உற்பத்தி செய்கிற துணியில் 50 சதவீதத்தை விற்பனை செய்வதில், அவர்கள் பங்கு



1978 மார்ச் 6] [திரு. கே. இராஜா முகமது]

மேற்கொள்ளக் பெற வேண்டும். அப்படிப்பட்ட முயற்சிகளை ஒட்டுமொத்தமாக கடமைப்பட்டிருக்கிருர்கள் என்பதை நாம் இயக்குநர் கூட்டுறவுச் சங்கங்களில் தலைவர்களையும், நிர்வாக கடமைப்பட்டிருக் களையும் வலியுறுத்திக் கேட்டுக்கொள்ளக் கிறோம்.

நிலையங்களை அதைப்போல இங்கே அதிகமான விற்பனை தெரிவித்தார்கள். உருவாக்க வேண்டும் என்று கருத்துத் குறிப்பிடப்பட்டிருக் கொள்கை விளக்க அறிக்கையிலே தெளிவாக மூலமாகத் கிறது. மேலும் 100 கடைகளை, கோ ஆப்டெக்ஸ் திறப்பதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

இந்த ஆண்டு துணி ஏற்கனவே சென்ற ஆண்டைவிட ஏற்படுத்தியிருக்கிறோம். விற்பனையிலே மிகப் பெரிய மாறுதலை முறையில் கூட்டுறவுத் எந்த ஆண்டும் எந்த அரசும் சாதிக்காத மூலம், வெளி துறையின் மூலம், குறிப்பாக கோ ஆப்டெக்ஸ் முயற்சியிலே, நாடுகளுக்கு நாமே நேரடியாக ஏற்றுமதி செய்கிற என்பதை நான் மிகப் பெரிய வெற்றியை ஏற்படுத்தியிருக்கிறோம் இதற்கு முன்பு இப்படிப் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ரூபாய்க்குத்தான் செய்து பட்ட ஏற்றுமதியை சில லட்சம் நிலைமையை மாற்றி வந்தார்கள். அப்படிச் செய்துவந்த ஏற்றுமதி செய்யக்கூடிய இன்றைக்கு 2 கோடி ரூபாய்க்கு பெற்றிருக்கிறது. இந்த வாய்ப்பினை இந்த கோ ஆப்டெக்ஸ் பெறும்போது, ஏற்றுமதியிலே நாம் மிகப் பெரிய வளர்ச்சியினைப் இராது என்பதை இந்தத் துணித் தேக்கங்கள் அவ்வளவாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிலையங்கள் பல்வேறு பகுதிகளில் நம்முடைய விற்பனை துணிகளைக் இருக்கின்றன. இதனை நாம் அதிகமான அளவுக்கு விரிவுபடுத்து கொள்முதல் செய்ததைப்போல, விற்பனையையும் அரசு எடுத்து வதற்கு இன்றைக்குப் பல்வேறு திட்டங்களை இந்த நேரத்திலே வருகிறது, செயல்படுத்துகிறது என்பதை இந்த தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சாதாரண கடை இதிலே முதற்கட்டமாக 800-க்கு மேற்பட்ட ஊழியர்களாக இரு நிலை ஊழியர்களாக இருந்தாலும் சரி, இருந்தாலும் சரி, அல்ல தாலும் சரி, விற்பனையாளர்களாக

[திரு. கே. இராஜா முகமது] [1978 மார்ச் 6

மார்கெட்டிங் ஆபிசராக இருந்தாலும் சரி, அத்தனை பேருக்குமே எப்படி இந்த துணிகளை விற்பனை செய்ய வேண்டும், எப்படி நிர்வகிக்க வேண்டும் வாங்க வருபவர்கள் நம்மிடையே வாங்கி செல்கிற அளவுக்கு எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்ற பயிற்சியை, கூட்டுறவு பயிற்சி நிலையம் மூலமாக பயிற்சி கொடுக்கிற பெரிய திட்டத்தை இன்றைக்குச் செயல்படுத்துகிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் செம்மலை அவர்கள் குறிப்பிட்டதைப் போல, 1962-வது ஆண்டிலே அறிமுகப்படுத்தப்பட்ட நெசவாளர் வீட்டு வசதித் திட்டம், இடைக்காலத்திலே நிறுத்தி வைக்கப்பட்டு கைவிடப்பட்டு இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவர் அரசு நெசவாளர்களுக்கு வீடுகள் கட்டுகிற திட்டத்தை, கிராம வளர்ச்சித் திட்டத்துடன் இணைந்து, அவர்களுக்கும் வீடுகள் கட்டுகிற ஒரு பெரிய திட்டத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

அதைப் போலவே, பல்வேறு சமூகநல பாதுகாப்புத் திட்டங்களை இன்றைக்கு இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

உதாரணத்திற்கு ஒன்றை நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு காசநோயால் பாதிக்கப்படக்கூடிய தொழிலாளர்கள், பெரும் பகுதியினர் 70 சதவிகிதத்தினருக்கு மேற்பட்டவர்கள் நெசவுத் தொழிலிலே ஈடுபட்டவர்கள் என்பதை புள்ளிவிவரங்களிலே கண்டறிந்து, எங்கு நெசவாளர்கள் பெருமளவு இருக்கிறார்களோ அந்தப் பகுதிகளுக்கு நேரடியாக நடமாடும் மருத்துவ ஊர்திகளை அனுப்பி அவர்களைப் பரிசோதனை செய்து, அவர்களுக்கு இலவச சிகிச்சை அளிப்பதற்காக, நடமாடும் மருத்துவமனைகளை நெசவாளர்களிடம் நேரடியாக அனுப்பிவைக்கின்ற ஒரு பெரும் திட்டத்தை இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

அதைப்போல நெசவாளர்களின் வேறு சில பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு ஆயுள் காப்புறுதி கழகத்தின் மூலமாக அந்தத் தொகையை உயர்த்தவேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அதையும் கருத்தில் கொண்டு அதற்கான திட்டங்களை நாம் செயல்படுத்தி வருகிறோம்.



1978 மார்ச் 6] [திரு. கே. இராஜா முகமது]

வெட்டுத்தீர்மானங்களை நான் ஒரு முறை பார்த்தேன். ஒன்றைத் தெளிவு படுத்தியிருக்கிறீர்கள். அரசு பல்வேறு துறைகளின் மூலமாக உற்பத்தி செய்யக்கூடிய கதர், கைத்தறி கிராமப் பொருள்களை அரசே வாங்கி விற்கவேண்டும் என்று கேட்டிருக்கிறீர்கள்.

ஏற்கனவே நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறோம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேசுகின்ற போதும் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். இந்த அரசு பல்வேறு துறைகளின்மூலமாக, இலாகாகள் மூலமாக அங்கே உற்பத்தி செய்கிற பொருள்களை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த மானியத்தின் மீது வாக்கெடுப்பு முடியும் வரை, சபையின் அனுமதியோடு நேரத்தை நீட்டிக்கிறேன்.

(பிற்பகல் 1-30)

**(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)**

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:** இந்த அரசு ஒரு மிகப்பெரிய வாங்கும் நிறுவனமாக—லார்ஜஸ்ட் கன்ஸ்யூமராக மாறி—பல்வேறு துறைகளிலே உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை வாங்கி பாதுகாப்பு அளிக்கும் என்ற முறையில் நான் கூறிக்கொள்கிறேன். நம்முடைய துறைகள் மூலம் உற்பத்தி செய்யப்படும் கைத்தறித் துணியாக இருந்தாலும் சரி, கதர்த் துணியாக இருந்தாலும் சரி, கிராமப்பொருள்களாக இருந்தாலும் சரி அவைகளையெல்லாம் அரசாங்கத்தின் பல்வேறு இலாகாகள் மூலமாக தேவைப்படுகின்றவற்றை வாங்கி அந்தத் தொழிலுக்கு ஒரு பெரிய பாதுகாப்பை அளிக்கும் என்ற செய்தியை — இங்கே செய்தி என்று கூற முடியாது — அதை ஒரு உரிமைச்சாசனம் என்று சொல்லலாம் — அதை கொள்கை விளக்கமாக அறுதியிட்டுச் சொல்லி, அதை மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

சொர்ணம் அவர்கள் பேசுகின்றபோது, சேலத்தில் இருக்கும் கூட்டுறவு மத்திய வங்கி துணிக்கொள்முதலை செய்தபின்னும், அனுசரித்து கடன் வசதி தேங்கியிருக்கும் பாக்கி ஸ்டாக்கை

[திரு. கே. இராஜா முகமது] [1978 மார்ச் 6

தருகிறார்கள். அது பல்வேறு மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் குறிப்பிட்டதுபோல், எல்லா மாவட்டங்களுக்கும் அந்த முறையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுத்து நிறைவேற்றும் என்று சொல்லிக்கொண்டு, இந்த அரசு ஆட்சிக்கு வந்த பிறகுதான் நசிந்து கிடக்கும் இந்தத் தொழிலுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மட்டுமன்றி ஒவ்வொரு துறையிலும் இருக்கும் பல்வேறு பிரச்னைகளைத் தீர்த்திருக்கிறது என்று எடுத்துக்கூறி, இங்கே கொடுக்கப்பட்டு இருக்கும் வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்று, இந்த மானியக்கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. அடுத்து, மானியக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் ரெ. வீ. சவுந்திரராஜன், எம். ஏ. லத்தீப் ஆகியவர்கள் மானியக்கோரிக்கை எண் 26-க்கு வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக்கோரிக்கை எண்: 26 — 'கைத்தறியும், நெசவுத் தொழிலும்' என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,15,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

மானியக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திருவளர்கள் ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரெ. வீ. சவுந்தரராஜன் ஆகியவர்கள் மானியக் கோரிக்கை எண் 27-க்கு கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.



1978 மார்ச் 6]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,02,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.34 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

இணைப்பு—I.

[..18..ம் பக்கத்தில் உடுக்குறியிட்ட வினா எண். 408-க்கான விடையைக் காண்க.]

| வரிசை எண்ணும், தீர்மானமும். (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை. (2) |
| --- | --- |
| 1 ஒரு ஆண்டு நிகர வருமானம் ரூபாய் 5,000 வரை உள்ள கிராமப்புற மக்களும், அதே அளவு வருமானமுள்ள நகர்ப்புற மக்களும் தனியார்களிடம் பெற்றுள்ள கடன்கள் பூராவும் ரத்துச் செய்யப்பட வேண்டும். அதோடு மேற்கண்டவர்கள் ஈட்டுக் கடையில் பொருள்களை (நகைகள், பத்திரங்கள்) அடகு வைத்து வாங்கியுள்ள கடன்கள் முழுவதையும்ரத்துச் செய்து, அடகு வைத்துள்ள பொருள்களை இலவசமாகத் திருப்பிக்கொடுத்துவிட வேண்டும். | தீர்மானங்கள் உரிய நேரத்தில் அரசின் கருத்தில் கொள்ளப்படும். |
| 2 ஒரு ஆண்டு நிகர வருமானம் ரூ. 5,000-க்கு மேலே உள்ளவர்கள் பெற்றிருக்கும் கடனுக்கு இதுவரை அவர்கள் செலுத்தியிருக்கும் வட்டியை அசலுக்கு வரவு வைத்துக் கொண்டு, மீதி வரும் அசலின் பாதியை ரத்துச் செய்துவிட்டு பாக்கியுள்ள கடனை 10 ஆண்டு சம தவணையில் பெற்றுக் கொள்ள வேண்டும். | டிை |



| | |
| --- | --- |
| 3 கூட்டுறவு, நிலவள வங்கி, தேசவுடைமையாக்கப்பட்ட வங்கி, அரசு ஆகியவைகளிடம் கிணறுகள் வெட்ட கடன் வாங்கி கிணறுகள் வெட்டியபின் தண்ணீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் கிணறுகள் வெட்டுவதற்கு வாங்கியுள்ள கடன்கள் முழுவதையும் ரத்துச் செய்ய வேண்டும். | நிலவள வங்கியின் கடன் வாங்கி கிணறுகள் வெட்டிய பின் தண்ணீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் பயனற்ற கிணறுகளுக்கான நிதியிலிருந்து உதவ அரசு விதிகளை அங்கீகரித்து அமுல்படுத்தி வருகிறது. |
| 4 வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விதை, உரம், பூச்சி மருந்து போன்றவைகளுக்காகவும் விவசாயச் செலவிற்காகவும் வாங்கியுள்ள கூட்டுறவு அரசு கடன்கள் முழுவதையும் ரத்து செய்ய வேண்டும். | வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொடுக்கப்பட்ட குறுகிய கால கடன், 36 பைசாவும் அதற்குக் குறைவாகவும் அணுவாரி அறிவிக்கப்பட்டிருக்கும் இடங்களில் மத்திய கால கடனுக மாற்றம் செய்யப்பட்டு வசூலிக்கப்படுகிறது. கடன்களை தள்ளுபடி செய்ய சட்டத்தில் விதிகள் இல்லை. |
| 5 1386-ம் பசலிவரை உள்ள குத்தகை, வார பாக்கிகள் முழுவதும் ரத்துச் செய்யப்பட வேண்டும். | இந்தத் தீர்மானம் அரசு வருவாய்த் துறை சம்பந்தப்பட்டதாதலால் அந்தத் துறைக்கு அனுப்பப்பட்டு அதன் பரிசீலனையில் இருந்து வருகிறது. |
| 6 கூட்டுறவுத்துறையிலுள்ள பிணைமிக் கடன்களையும் தனியார் துறையிலுள்ள மோசடிக் கடன்கள் முழுவதையும் கிராம அளவில் மக்கள் கமிட்டி அமைத்து கண்டு பிடித்து ரத்துச் செய்ய வேண்டும். | இந்தத் தீர்மானத்தின் நகல் கூட்டுறவுப் பதிவாளரின் அறிக்கைக்காக அவருக்கு அனுப்பப்பட்டு பதில் எதிர்பார்க்கப்படுகிறது. |

| வரிசை எண்ணும் தீர்மானமும் (1) | எடுக்கப்பட்ட நடவடிக்கை (2) |
|---|---|
| 7 கூட்டுறவுச் சங்கங்கள், நிலவள வங்கிகள் அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள், அரசு நிறுவனங்கள் ஆகிய பல்வேறு ஸ்தாபனங்களின் கீழ் விவசாயிகளுக்கு தனித்தனியே கடன்கள் வழங்கும் முறை மாற்றப்பட்டு ஒரே அமைப்பின் கீழ் உரிய காலத்தில் தேவையான கடனை விவசாயிகளுக்கும், குத்தகை வார விவசாயிகளுக்கும், விவசாய தொழிலாளர்கள், பண்ணை ஆட்கள், பருவகாரர்கள் (நீர்பாய்ச்சிகள்) கிராமக் கைவினைஞர்கள் ஆகிய அனைவருக்கும் ஆண்டு 1-க்கு ரூ. 100-க்கு 6½ சதவிகித வட்டிக்கு கடன் கொடுக்க வேண்டும். இவர்களுக்கு கடன் கொடுப்பதற்கு சொத்து ஜாமீன் கோரக் கூடாது. | குறுகிய கால கடன் மற்றும் மத்திய கால கடன் நீண்ட கால கடன்களுக்கான தனித்தனி அமைப்புகளும், இதர அரசு நிறுவனங்கள் மற்றும் அரசுடைமை வங்கிகளும் தற்போது கடன்கள் வழங்கி வருகின்றன. இந்த வழிகளில் கடன்கள் வழங்கும் முறைகளும் விதிகளும் திருப்திகரமான முறையில் இயங்கி வருவதால், இந்த அமைப்புகளை ஒருங்கிணைக்கும் அவசியம் ஏதும் இல்லை. மற்றபடி குறுகிய கால மத்திய கால கடன்கள் இப்போதும் குறிப்பிட்ட அளவுக்கு வழங்கப்படுகின்றன. வட்டி விகிதங்கள் இந்திய சேம வங்கியின் வட்டி விகிதங்களையொட்டியே அமைந்திருக்கின்றன. அவைகளைக் குறைக்க வழியில்லை. |
| 8 கூட்டுறவு கிராம நாணயச் சங்கங்களில் ஆண்டு முழுவதும் குடும்பச் செலவு, திருமணம், மரணம் ஆகிய சடங்குகளுக்கு தேவையானபோது கடன் கொடுக்க வேண்டும். அத்துடன் நகைகள், பாத்திரங்கள் அடமானம் வைத்து கடன் வாங்க வசதி செய்து கொடுக்க வேண்டும். | இப்போதுள்ள விதிகளின்படி கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் அங்கத்தினர்களுக்கு அவர்கள் சொந்த பொறுப்பில் திருமணம் மற்றும் மருத்துவச் செலவிற்கு ரூ. 250-க்கு மேற்படாமலும் ஈமச் சடங்குகளுக்கு ரூ. 75-க்கு மேற்படாமலும் கடன்கள் வழங்கி வருகின்றன. ரூ. 2,000-க்கு மேற்படாமல் தங்கநகை மற்றும் வெள்ளி பாத்திரங்களின் அடகின் பேரில் கடன்கள் வழங்கப்படுகின்றன. |
| 9 கூட்டுறவு ஸ்தாபனங்களில் கொடுக்கும் கடன்களுக்கு அபராத வட்டி விதித்து வசூலிக்கும் முறை ரத்து செய்யப்பட வேண்டும். | கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தினர்கள் குறித்த தவணையில் கடனைத் திருப்பிச் செலுத்தாவிட்டால் அபராத வட்டி விதிக்கப்படுகிறது. அபராத வட்டி வசூலிக்காவிட்டால், கடனைத் திருப்பிச் செலுத்துவதில் அவ்வளவு அக்கறை இருக்காது. சங்கத்தின் நிதி நிலைமை பாதிக்கப்படும். எனவே இந்தத் தீர்மானத்தை ஏற்க இயலாது. |
| 10 கூட்டுறவு கடன் பாக்கிகளை வசூலிக்க உற்பத்தி கருவிகள், மாடுகள், இஞ்சின் மோட்டார் பம்புசெட், நிலம், வீடு போன்றவைகளை ஜப்தி செய்வதை தடை செய்ய வேண்டும். | ஜப்தி செய்வது, அதில் கடைப் பிடிக்க வேண்டிய விதி முறைகள் பற்றி தமிழ் நாடு கூட்டுறவு சட்ட விதிகளில் (விதிகள் 59–83) குறிப்பிடப்பட்டிருக்கிறது. |
| 11 கூட்டுறவு நாணய சங்கங்கள் மூலம் கொடுக்கும் கடன்களுக்குக் குறுகியகால கடன் என்பது மூன்று ஆண்டு என்றும், நீண்டகால கடன் என்பது பத்து ஆண்டு என்றும் கடனுக்காக காலக்கெடு நிச்சயிக்க வேண்டும். | உழவர்கள் தமது விவசாயத்தின் மகசூலிலிருந்து கடனைத் திருப்பச் செலுத்தும் வசதிக்காகவே குறுகிய காலக் கடன் என்று வழங்கப்படுகிறது. சாதாரணமாக ஒரு ஆண்டுக்குள் பயிர்விளைந்து மகசூல் பெறக் கூடுமாதலால் பயிர்க்கடன் போன்ற குறுகிய கால கடன்களுக்கு திருப்பித்தர ஒரு ஆண்டு என்ற அவகாசம் போதுமானதே. நீண்டகாலக் கடன் என்பது என்ன காரியத்திற்காகக் கடன் பெறப்படுகிறது என்பதைப் பொறுத்து ஏழு ஆண்டு முதல் பதினைந்து ஆண்டு வரை திரும்பச் செலுத்த அவகாசமளிப்பதாகும். இந்த விதி முறைகளை மாறுதல் செய்யத் தேவையில்லை. |

| வரிசை எண் (1) | தீர்மானம். (2) | எடுக்கப்பட்ட நடவடிக்கை. (3) |
| --- | --- | --- |
| 12 | தன் சொந்தப் பணத்தை வட்டிக்குக் கொடுத்து வாங்கும் நபர்களைக் கூட்டுறவு வங்கி ஸ்தாபனங்களில் உறுப்பினர்களாக சேர்க்கக்கூடாது. | கூட்டுறவு சங்கப் பதிவாளரின் குறிப்புரைகள் கோரப்பட்டு அவை எதிர்பார்க்கப் படுகின்றன. |
| 13 | அடகுக் கடைக்காரர்களுக்கு தேசவுடைமை யாக்கப்பட்ட வங்கிகளிலும், கூட்டுறவு வங்கிகளிலும் நகை அடமானம் வைத்து கடன் வாங்க அனுமதிக்கக்கூடாது. | கூட்டுறவு சங்கப் பதிவாளரின் குறிப்புரைகள் கோரப்பட்டு அவை எதிர்பார்க்கப் படுகின்றன. |
| 14 | கூட்டுறவுத் துறை நிர்வாகப் பொறுப்பின் ஏழை, மத்திய தர விவசாயிகள், விவ சாயத் தொழிலாளர்களுக்கு 75 சதவிகித இடம் வழங்க வேண்டும். | கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் குறிப்புரை கள் கோரப்பட்டு அவை எதிர்பார்க்கப் படுகின்றன. |
| 15 | கைத்தறித் தொழிலாளர்கள், சிறுவர்த்தகர் கள், தொழிலதிபர்கள், அரசு ஊழியர் கள், ஆசிரியர்கள், ஆலைத் தொழிலாளர் கள், தினக் கூலித் தொழிலாளர்கள் அனைவருக்கும் தேவையான கடன்களை அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலம் கடன் கொடுத்து உதவ வேண்டுமென்று மத்திய மாநில அரசுகளை இம் மாநாடு கேட்டுக் கொள்கிறது. | தீர்மானம் பொதுப்படையாக உள்ளது. |



## இணைப்பு II.

[113-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### மானியக் கோரிக்கை எண் 26.

### கைத்தறி—பஞ்சாலைத் தொழில்.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

#### 1. முன்னுரை.

நமது நாட்டின் மிகப் பெரிய குடிசைத் தொழில் கைத்தறி நெசவுத் தொழிலேயாகும். பருத்தித் துணிக்கான தேவை யில் மூன்றில் ஒரு பங்கு கைத்தறி துணி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படுகின்றது. தொழில்களில் வேளாண் மைக்கு அடுத்தபடியாக மிகப் பெரிய அளவில் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது கைத்தறித் தொழிலே. துணி உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெருமளவு மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற கைத்தறித் துறை படிப்படியாக வளர்ச்சி பெறச் செய்வது மத்திய அரசு அறிவித்துள்ள புதிய தொழிற்கொள்கையின் குறிக்கோளில் முக்கிய அம்சமாகும்.

2. இந்திய நாட்டில் உள்ள கைத்தறிகளின் மொத்த எண் ணிக்கை 35.63 இலட்சம், அவற்றில் 5.56 இலட்சம் தறிகள் தமிழ்நாட்டில் உள்ளன. ஆக, நாட்டிலுள்ள தறிகளின் மொத்த எண்ணிக்கையில் 1/6 பங்கு தறிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன; அதே சமயம், நாட்டின் மொத்த கைத்தறித் துணி உற்பத்தி அளவு 230 கோடி மீட்டர்; இதில் தமிழ்நாட்டில் மொத்த உற்பத்தியளவு 60 கோடி மீட்டர் ஆகும். அதாவது நாலில் ஒரு பங்கு தமிழ்நாடு உற்பத்தி செய்கின்றது. கைத்தறித் தொழிலை ஊக்குவிப்பதற்காக நிர்க்காணும் குறிக்கோள்களுடன் புதிய திட்டங்களை அரசு வகுத்துள்ளது:—

அடுத்த சில ஆண்டுகளில் முக்கியமாகக் கூட்டுறவுச் சங்கங் களுக்குப் புத்துயிரளிக்கும் திட்டத்தின் மூலமும், அதிக அளவில் விற்பனை வசதிகளை ஏற்படுத்தித் தருதல் வாயிலாகவும் கைத்தறி உற்பத்தியில் கூட்டுறவுத் துறையின் பங்கை உயர்த்துதல்;

கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு நியாய விலையில் நூல் எப்போதும் வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் கூட்டுறவு நூற்பாலைகளின் உற்பத்தித் திறனை விரிவு படுத்துதல் ;

புதுவகை வடிவமைப்புகளையும் ( Designs ) பாலிஸ்டர் துணிகள் உட்பட புதுவகைத் துணிகளையும் அறிமுகப்படுத் துவதன் மூலம் உற்பத்தியைப் பல்வகைப்படுத்துதல் ;

கைத்தறித் துணிகளின் விற்பனையைப் பெருமளவில் உயர்த் தும் பொருட்டு 'கோ-ஆப்டெக்ஸ்' விற்பனைக் கூடங்களின் எண்ணிக்கையை உயர்த்துதல் ;

தனியார் துறையைச் சேர்ந்த நெசவாளர்களின் பயனுக் காகத் திட்டங்களை நிறைவுதல் ;

வேலைப் பாதுகாப்பு, ஊதியம் முதலியவை தொடர்பாக நெசவாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கத்தக்க சட்டத்தை இயற்றுதல் முதலியன.

1977-78 ஆம் ஆண்டில் பல்வேறு திட்டங்களின்கீழ் எய்திய சாதனைகள், 1978-79 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் ஆகிய வற்றின் விவரங்கள் கீழ்க்காணும் பத்திகளில் விளக்கப் பட்டுள்ளன.

1976-77 ஆம் ஆண்டில் தனியார் துறையைச் சேர்ந்த 37,416 நெசவாளர்கள், புதிதாக அமைக்கப்பட்ட 120 நெச வாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும், ஏற்கனவே உள்ள நெச வாளர் கூட்டுறவுச் சங்கங்களிலும் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். தவிரவும், சொந்தத்தில் தறி வைத்திராத 300 நெசவாளர்களுக்காக 3 நெசவாளர் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. 1976-77 ஆம் ஆண்டின் இறுதி வரை காஞ்சிபுரத்திலும் ஈரோட்டிலும் அமைந்த இரண்டு கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்கள் மூலமாகவும் கரூரில் அமைந்துள்ள ஏற்றுமதிக்கான கைத்தறி உற்பத்தித் திட்டம் மூலமாகவும் மொத்தமாக 2,000 நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. 1977-78 ஆம் ஆண்டில் மேற்கொண்டும்



30,000 நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்க உறுப்பினர் களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவர். தமக்கென்று சொந்தத் தறியில்லாத 1,600 நெசவாளர்களுக்கென்று 16 நெசவாளர் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கக் கருதப் பட்டுள்ளன. 1976-77-ல் தொடங்கப்பட்ட மூன்று கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்கள் ஏற்றுமதிக்கான கைத்தறி உற்பத்தித் திட்டம் மூலம் மேலும் 2,500 தறிகள் சேர்க்கப்படு மென்று எதிர்பார்க்கப்படுகின்றது. நடப்பாண்டில், சேலம், மதுரை ஆகிய இடங்களில் மேலும் 2 கைத்தறி தீவிர வளர்ச் சித் திட்டங்களும், குறிஞ்சிப்பாடியில் ஏற்றுமதிக்கான உற்பத்தித் திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றில் மதுரை, சேலம் ஆகிய இடங்களில் ஒவ்வோரிடத்திலும் 5,000 தறிகளும், குறிஞ்சிப் பாடியில் 1,000 தறிகளும் கொண்டதாக இறுதியில் அமையும். 1978-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள் இப்புதிய திட்டங் களில் 2,000 தறிகள் சேர்க்கப்படும்.

1978-79 ஆம் ஆண்டில் மேலும் 30,000 கூடுதல் கைத்தறிகளை கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டுவரத் திட்டமிடப் பட்டுள்ளது. இவற்றில் சொந்தத் தறியில்லாத 2,000 நெச வாளர்களுக்காக 20 தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக் கப்படும். 1978-79 ஆம் ஆண்டின் இறுதியில் 6 கைத்தறி மும்முர வளர்ச்சித் திட்டங்கள் ஏற்றுமதிக்கான தீவிர உற்பத்தித் திட்டங்கள் ஆகியவற்றின் கீழ் வரும் தறிகளின் எண்ணிக்கை 13,300 ஆக உயரும்.

## 2. மூலப்பொருட்கள் வழங்குதல்.

### (1) கூட்டுறவு நூற்பாலைகள்.

மாநிலத்தில் தென்னிந்தியக் கூட்டுறவு நூற்பாலையின் இரண்டாவது ஆலை உட்பட 13 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றின் மொத்த நிறுவப்பட்ட திறன் சுமார் 2 இலட்சம் கதிர்கள் ஆகும். கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவைப்படும் பலதரப்பட்ட ரக நூல்களை இந்த ஆலைகள் மாதந்தோறும் சுமார் 5,000 பேல் அளவிற்கு உற்பத்தி செய் கின்றன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தலைமை அமைப்பாக இருக்கும் தமிழ்நாடு கைத்தறி

[1978 மார்ச் 6

நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்), நெசவாளர்
மதாடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் வினியோகம்
செய்யும் பொருட்டு, நெசவாளர்கள் இருக்கும் முக்கியமான
பகுதிகளில், 18 நூல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது.
1978-79 ஆம் ஆண்டில், குடியாத்தம், கரூர் ஆகிய இடங்களில்
நூல் விற்பனை நிலையங்களைத் தொடங்கத் திட்டமிடப்பட்டிருக்
கிறது.

மேற்படி 13 கூட்டுறவு நூற்பாலைகளில் எழு ஆலைகள்
ஒவ்வொன்றும் அவற்றின் திறனைத்திறனை 25,000 கதிர்களாக
ஏற்கனவே விரிவுபடுத்தியுள்ளன. ஏனை நூற்பாலைகளும்
அவற்றின் திறனைத்திறனை விரிவுபடுத்தி வருகின்றன. இவ்
வாறு எல்லா கூட்டுறவு நூற்பாலைகளின் விரிவுபடுத்தும்
திட்டங்கள் முடிவு பெற்றவுடன், அவற்றின் கதிர்களின்
எண்ணிக்கை 2 இலட்சத்திலிருந்து 3 இலட்சமாக உயரும்.
இக்கூட்டுறவு நூற்பாலைகள் தற்போது, திங்கள் ஒன்றுக்கு
சுமார் 5,000 பேல்கள் உற்பத்தி செய்கின்றன. விரிவாக்கத்
திட்டம் முடிவுற்றதும், இவற்றின் உற்பத்தி திங்கள் ஒன்றுக்கு
சுமார் 8,500 பேல்களாக உயரும். கூட்டுறவுத் துறையிலுள்ள
நெசவாளர்களுக்குத் தேவைப்படும் நூலின் அளவு தோராய
மாக திங்கள் ஒன்றுக்கு 9,000 பேல்களாக உயருமாதலால் இந்த
அதிகத் தேவையைப் பூர்த்தி செய்யும்பொருட்டு இக்கூட்டுறவு
நெசவாலைகளை விரிவுபடுத்துவதன் மூலமும், நவீன மயமாக்கு
வதன் வாயிலாகவும் எதிர்பார்க்கப்படும் கூடுதல் உற்பத்தி நெச
வாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தேவைகளை நிறைவு செய்யப்
போதுமானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

கூட்டுறவு ஆலைகளில் பயன்படுத்தப்படும் பருத்தி உற்பத்தி
யாகும் நூல் ஆகியவற்றின் தரத்தைச் சோதனை செய்யும்
பொருட்டு ஒரு மத்திய ஆய்வுக் கூடம் ரூ. 8.25 இலட்சம்
திட்டச் செலவில் சேலத்தில் அமைக்கப்பட்டு வருகின்றது.
இந்த ஆய்வுக் கூடம் செயல்படத் தொடங்கியவுடன் தமிழ்
நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள் யாவும் அவை உற்பத்தி
செய்யும் நூல், பஞ்சு இவற்றின் தரத்தை சோதனை செய்ய
இந்த ஆய்வுக் கூடத்தைப் பயன்படுத்திக் கொள்ளும்.



1978 மார்ச் 6]

கூட்டுறவு நூற்பாலைகளை நிர்வகிக்கும் பணியில், பஞ்சு
வாங்குவதே மிக முக்கியமான பணியாக இருந்துவருவதால்,
இந்த ஆலைகளுக்குத் தேவைப்படும் பஞ்சினை உரிய காலத்தில்
வாங்க, தகுந்த ஓர் அமைப்பை ஏற்படுத்துவது பற்றியும்
அரசு ஆய்வு செய்து வருகிறது. இதனால் இந்த ஆலைகள்
வாங்கும் மூலப்பொருள்களுக்கான செலவு குறையும். தரமான
பஞ்சும் கிடைக்கும்.

(2) செயற்கை பட்டுநூல் விநியோகம்.

சேலம், மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி ஆகிய
மாவட்டங்களில் சில கைத்தறிகளில் சேலைகள் உற்பத்தி செய்ய
பருத்தி நூலுக்கு அடுத்தபடியாக செயற்கைப்பட்டு நூல்
பரந்த அளவில் பயன்படுத்தப்படுகிறது. இந்த நாட்டில்
செயற்கைப் பட்டுநூல் உற்பத்தி செய்யும் எட்டு நூற்பாளர்
களும், நெசவாளர்களும் சேர்ந்து அவர்களாகவே செய்து
கொண்ட ஒப்பந்தத்தின்படி, பல்வேறு இடங்களில் உற்பத்தி
யாகும் செயற்கைப்பட்டு நூலின் மொத்த அளவில், ஒப்பந்தத்
தில் ஒப்புக்கொண்ட அளவு செயற்கைபட்டு நூலைப் பல்வேறு
இடங்களில் உள்ள நெசவாளர்களுக்கு வழங்கும் வகையில்
அந்தந்தப் பகுதிகளிலுள்ள மண்டலக் குழுக்களுக்கு பம்பாயில்
உள்ள மத்திய கமிட்டி ஒதுக்கீடு செய்கிறது. இந்த ஏற்
பாட்டின் கீழ் உண்மையான நெசவாளர்கள் முறையான விலை
களில் செயற்கைப்பட்டு நூல்களைப் பெறவில்லையாதலால் இம்
முறையைக் குறை கூறி ஏராளமான புகார்கள் வந்தன. மத்திய
அரசிடம் மாநில அரசு பலமுறை முறையிட்டுக் கொண்ட
பிறகு, கைத்தறி வளர்ச்சி ஆணையாளர் இதில் தலையிட்டு நூல்
விநியோகிக்கும் பணியை மாநிலக் கைத்தறி துணை இயக்கு
நருக்கு மாற்ற ஏற்பாடு செய்தார். செயற்கைபட்டுநூல்
விநியோகம் செய்வதைக் கவனிக்க சேலத்தில் தேவையான
பணியாளர்களுடன் செயற்கைபட்டுநூல் பிரிவு ஒன்று
அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மண்டலக் குழுவினால் அனுப்பப்பட்ட நெச
வாளர்கள் விண்ணப்பங்களிலும் பின்னர் கைத்தறி துறைக்கு
நேரடியாக வந்த விண்ணப்பங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளபடி
செயற்கைபட்டுநூல் தேவையின் உண்மைத் தன்மையை
கண்டறியும் நோக்கத்தோடு, தறிகள் இருக்குமிடத்திற்கு

[1978 மார்ச் 6]

நேரடியாகச் சென்று பார்ப்பதன் மூலம் விண்ணப்பங்கள்
முழுவதும் சரிபார்க்கப்பட்டு ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும்
தேவைப்படக் கூடிய செயற்கைபட்டுநூல் எவ்வளவு என்று
சரியாக முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தேவைகள்
திர்ணயிக்கப்பட்டதன் அடிப்படையில், தமிழ்நாட்டிற்கு ஒதுக்
கப்பட்ட அளவு, விண்ணப்பதாரர்களுக்கு சரிசம விதத்தில்
இப்பிரிவினால் விநியோகிக்கப்பட்டு வருகிறது. 1976 ஆம்
ஆண்டு விலை உயர்வோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது வெளி
அங்காடியில் செயற்கைபட்டுநூலுக்கான விலையும் குறைந்து
விட்டது.

**(3) தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் கைத்தறி துணிகளை விற்பனை செய்தல்.**

"கோ-ஆப்டெக்ஸ்" என்று புகழ்பெற்ற தமிழ்நாடு கைத்தறி
நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தலைமைச் சங்கமாகும். எல்லா
நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் இத்துடன் இணைக்கப்
பட்டுள்ளன. அரசின் பங்கு மூலதனமான ரூ. 2.14 கோடி
புடன் கோ-ஆப்டெக்ஸின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம்
ரூ. 2.63 கோடியாகும். இயல்பான வரம்பின்கீழ்
ரூ. 500 இலட்சம் ரொக்கக் கடன் பெற கோ-ஆப்டெக்ஸ் நிறு
வனத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்துடன்
பண்டிகை காலங்களில் பொதுமக்களின் அதிகபட்சத் தேவை
களுக்கேற்ப, சிறப்புக்கடன் வரம்பின்கீழ் ரூ. 250 இலட்சம்
பெறவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இச் சங்கத்தின்
முக்கிய நோக்கம் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத்
தேவையான மூலப்பொருட்களைப் பெற்று விநியோகிப்பதாகும்.

"கோ-ஆப்டெக்ஸ்" 18 நூல் கிடங்குகளை நடத்துகிறது.
கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்த நூல்களைப் பெற்று,
இவற்றின் மூலம் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும்
பகிர்ந்தளிக்கின்றன. இது தமிழ்நாட்டில் 226 சில்லறை கிளை
விற்பனைப் பிரிவுகளையும் பிற மாநிலங்களில் 106 விற்பனைப் பிரிவு
களையும் கொண்டுள்ளது. இவை தவிர, கமிஷன் ஏஜன்சி
அடிப்படையில் கைத்தறித் துணிகளை விற்பதற்கு, நாட்டின்
பல்வேறு பகுதிகளில் 200 தனியார் வணிகர்களை 'கோ-ஆப்டெக்ஸ்"
நியமித்துள்ளது.



1978 மார்ச் 6]

1977 ஆம் ஆண்டில் "கோ-ஆப்டெக்ஸ்" தொடக்க நெசவாளர்
கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து 20 கோடி மதிப்புள்ள கைத்தறித்
துணிகளை கொள்முதல் செய்து, 23 கோடி மதிப்புள்ள துணிகளை
விற்பனை செய்துள்ளது. 1978 ஆம் ஆண்டில், கைத்தறித் துணி
விற்பனையை 25 கோடியாக உயர்த்தமுடியும் என நம்பப்படு
கிறது. இதைக் கருத்தில்கொண்டு, "கோ-ஆப்டெக்ஸ்" கீழ்க்
கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது :—

(அ) மாநிலத் தலைநகரங்களிலும், தமிழ்நாட்டிலும், பிற
மாநிலங்களிலும் முக்கிய நகரங்களிலும் ரூ. 133 இலட்சம்
செலவில் 100 புதிய விற்பனை நிலையங்களைத் திறத்தல், மேற்
சொன்ன திட்டத்தின் கீழ், 40 புதிய விற்பனை நிலையங்கள்
ஏற்கெனவே திறக்கப்பட்டுள்ளன. புதிதாக விற்பனை நிலையங்கள்
திறப்பதைத் தவிர முக்கிய நகரங்களில் தற்போது
இருக்கும் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தும் பணியையும்
மேற்கொள்கிறது. இதுவரை 14 விற்பனை நிலையங்கள்
நவீனப்படுத்தப்பட்டுள்ளன. 1976-77 ஆம் ஆண்டில், இத்
திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மத்திய அரசும் மாநில
அரசும ரூ. 20 இலட்சம் நிதியுதவி வழங்கியுள்ளன. நடப்
பாண்டில், இத்திட்டத்திற்காக ரூ. 50 இலட்சம் நிதியுதவி
அனுமதிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இந்தியாவிலுள்ள ஏற்றுமதியாளர்களின் வணிகத்
தகவல் தேவைகளைக் கவனிப்பதற்கும் அயல்நாடுகளுக்கு கைத்
தறித் துணியை நேரடியாக ஏற்றுமதி செய்யும் பணியை மேற்
கொள்ளவும் ஏற்றுமதிப் பிரிவு ஒன்றை "கோ-ஆப்டெக்ஸ்"
அமைத்துள்ளது. 1977 ஜூலை, ஆகஸ்ட் மாதத்தில், அமெரிக்கா,
இங்கிலாந்து, பிரான்ஸ், சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு
தூதுக்குழு ஒன்றினை "கோ-ஆப்டெக்ஸ்" அனுப்பியது. இத்
தூதுக்குழு, சுமார் ரூ. 1 கோடி மதிப்புள்ள சட்டைத் துணிகள்,
துண்டுகள், கைலிகள் முதலியவற்றை ஏற்றுமதி செய்ய கேட்பு
ஆணைகளைப் பெற்று வந்தது. இவைகளை நிறைவேற்றி
வருகிறது. நாளடைவில் ஏற்றுமதி ரகத் துணிவகைகளை
உற்பத்தி செய்வதற்காகக் கூட்டுறவு அமைப்பில் உள்ள கைத்
தறிகளை "கோ-ஆப்டெக்ஸ்" மாற்றி வருகிறது. அதன் மூலம்
அடுத்த இரண்டு ஆண்டுகளில் சுமார் ரூ. 5 கோடிக்கான ஏற்றுமதி

விற்பனையை படிப்படியாக எய்த இயலும் என்று நம்பப்படுகிறது. இந்த நோக்கங்களை எய்த, "கோ-ஆப்டெக்ஸ்" வெளிநாடுகளில் கிளைகளைத் திறக்கத் திட்டமிட்டுள்ளது.

(இ) புதிய 'டிசைன்களைக்' கண்டுபிடிக்கவும், தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள், உள்நாட்டு, ஏற்றுமதித் தேவைகளை நிறைவு செய்வதற்காகத் தங்களின் உற்பத்திப் பொருள்களைப் பண்படுத்த உதவுவதற்கும், "கோ-ஆப்டெக்ஸ்" மாநில அரசிடமிருந்து பெற்ற ரூ. 3.5 இலட்சம் நிதியுதவியைக்கொண்டு மதுரையில் வடிவமைப்பு நிலையம் ஒன்றை அமைத்துள்ளது. தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, பூப்போடும் பெட்டி (Jacquards) போன்ற மேம்படுத்தப்பட்ட நெசவுக் கருவிகளையும் "கோ-ஆப்டெக்ஸ்" அளித்து வருகிறது.

(ஈ) "பாலிஸ்டர்" கைத்தறி சேலைகள், சட்டைகள் ஆகியவற்றின் உற்பத்திக்கான ஏற்பாடு செய்துள்ளது. இவை அங்காடியில் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ரகத் துணிகள் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெறத் தொடங்கியுள்ளன.

(உ) தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து உற்பத்திப் பொருள்கள் கொள்முதல் செய்தலை அதிகரிப்பதற்கும், விற்பனை வசதியைச் செய்து கொடுப்பதற்கும், போதுமான அளவிற்குக் கடன் பெற அதன் பங்கு மூலதனத்தை வலுப்படுத்திக் கொள்வதற்காகத் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பங்கு மூலதனத் தொகையாக ரூ. 20 இலட்சம் நிதியுதவி பெற்றுள்ளது.

(ஊ) நடப்பாண்டில், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதியுதவி பெற்று, ஆயத்த ஆடை தயாரிப்புத் தொழிற் பிரிவுகளை நிறுவ "கோ-ஆப்டெக்ஸ்" நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது. இத்திட்டத்திற்காக ரூபாய் 17.73 இலட்சம் முதலீடு செய்யப்பட்டு, சென்னை, மதுரை, திருச்சி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் 125 தையல் இயந்திரங்களுடன் 3 தொழிற் பிரிவுகள் நிறுவப்பட்டு வருகின்றன.

**(1) ஈரோட்டிலுள்ள, தமிழ்நாடு கூட்டுறவு துணி செய்முறைக்கு உட்படுத்தும் பிரிவில் துணிகளைச் செய்முறைப்படுத்துதல் (Processing)**

பல ஆண்டுகளாகத் தமிழ்நாடு, கைத்தறித் துணி உற்பத்தியில் முதலிடம் வகித்து வந்துள்ள போதிலும் செய்முறைப்



படுத்தும் வசதிகள் குறிப்பாக அச்சிடும் வசதி, இம்மாநிலத்தில் போதிய அளவிற்கு மேம்பாடு அடையவில்லை. இந்தக் குறையைப் போக்க, தமிழ்நாட்டில் செய்முறைப்படுத்தும் வசதிகளை ஏற்படுத்த வலியுறுத்தப்பட்டு வருகிறது. நல்ல முறையில் தயாரிக்கப்பட்ட துணிக்கு கிராக்கி இருப்பதை அறிந்து அந்தந்தத் தேவையை நிறைவு செய்யும் வகையில் கைத்தறித் தொழில் மேம்படுத்தப்பட வேண்டும். இந்த ஏற்பாடுகளினால், கைத்தறித் துறை, 50 இலட்சம் மீட்டர் கைத்தறித் துணி, முழுமை பெற்றதாக வழங்கப்பட இயலும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதில், குறிப்பாக, அச்சிடப்பட்ட புடவைகளும், சட்டைகளும், மெருகூட்டப்பட்ட, சாயமிடப்பட்ட துணிகளும் அடங்கும். கதர் துணிகளை அச்சிடுவதற்கும், நேர்த்தியுடையதாக்குவதற்கும், இந்த செய்முறைப்படுத்தும் வசதிகள், கதர் தொழிலுக்கும் பயனுடையதாயிருக்கும். கைத்தறித் துறையில் உற்பத்தியைப் பெருக்க இந்த, அச்சிடப்பட்ட, நேர்த்தியான துணிகள் பெரிதும் உதவியாயிருக்கும்.

ஈரோட்டிலுள்ள, தமிழ்நாடு கூட்டுறவுத் துணி செய்முறைப்படுத்தும் ஆலை, துணி சலவை செய்தல், பளபளப்பாக்குதல், மெருகேற்றுதல், முதலியவற்றிற்கு நவீன இயந்திரங்களைப் பெற்றுள்ளது. துணிகளுக்குச் சாயமிடும் வசதிகளுடன் இந்த ஆலையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வசதிகளும் உள்ளன :—

| | |
|---|---|
| (1) சலவை செய்தல், வேலை நிறைவு செய்தல். | ஒரு மாதத்திற்கு 5 இலட்சம் மீட்டர். |
| (2) மெருகேற்றுதல். | ஒரு மாதத்திற்கு 2.5 இலட்சம் மீட்டர். |
| (3) முன் கூட்டியே சுருங்கச் செய்தல் (Evasetting) | ஒரு மாதத்திற்கு 2.5 இலட்சம் மீட்டர். |

நூல் சிட்டம், சாயப் பொறி ஒன்றுடன் இந்த சாயத் தொழிற்சாலை சமீபத்தில் நவீனப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், இதன் சாயமிடும் திறன், ஒரு நாளைக்கு [illegible] பத்து பேல்களுக்கு அதிகரித்துள்ளது. இந்த ஆலையின் பல் வேறு பிரிவுகளின் திறன்களையும் ஒன்றுக்கொன்று இசைவாக

இயங்கும் வகையில், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் ரூ. 22.50 இலட்சம் செலவில் திட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்பொழுது, இந்த ஆலை, திரைச் சீலைகளில் அச்சடிப்பதற்கென (Screen Prin.ing) தனிப்பிரிவு ஒன்றினையும் துவக்கியுள்ளது.

அதிகரித்துவரும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நவீன முறையில் சாயமேற்றும் வசதிகளைச் செய்து கொடுக்கும் பொருட்டு, தமிழ்நாடு கூட்டுறவு துணி செய்முறைப்படுத்தும் ஆலை, சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களிலுள்ள முக்கிய இடங்களில் ரூ. 60 இலட்சம் செலவில், 5 நவீன சாயத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தியுள்ளது. இதற்கு தேவையான நிதியுதவியினை தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் ஏற்படுத்தியுள்ளது. தமிழ்நாட்டில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய தென்மாவட்டங்களிலுள்ள கைத்தறி நெசவாளர்களின் செய்முறைப் படுத்தும் வசதிகளின் தேவைகளைக் கவனிப்பதற்காக ரூ. 22 இலட்சம் செலவில் மதுரையில் கூட்டுறவுத் துறையில் துணி செய்முறைப்படுத்தும் பிரிவு ஒன்று நிறுவப்பட்டு வருகிறது. ஈரோட்டில் ஏற்கனவே யுள்ள செய்முறைப் பிரிவும், மதுரை மாவட்டத்தில் தகுதியான இடத்தில் அமைக்கப்படவிருக்கும் செய்முறைப் பிரிவும், ஆக இரண்டு பிரிவுகள் உள்ளதால், கைத்தறித் துணிகள் செய்முறைப் படுத்தப்படுவதற்கும், வேலை நிறைவுபெறுவதற்கும், பம்பாய்க்கு அனுப்ப வேண்டிய அவசியமில்லை. இதனால் காலம், உழைப்பு, செலவு பெருமளவில் சேமிக்கப்படுகிறது.

(5). கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள்.

மத்திய அரசு இரண்டு ஏற்றுமதி ரக உற்பத்தித் திட்டங்களையும், இரண்டு கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்களையும் இரண்டு தொழிற் பிரிவுகளுடன் நிறுவ அனுமதி அளித்துள்ளது. இத்திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு.



| தொடர் எண்ணும் திட்டத்தின் பெயரும். | சேர்க்கப்பட வேண்டிய தறிகளின் எண்ணிக்கை. | திட்டத்தின் மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்). | சேர்க்கப்பட்ட தறிகளின் எண்ணிக்கை. | மாத உற்பத்தி அளவு (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், கரூர். | 1,000 | 40 | 400 | 5.00 |
| கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம், காஞ்சிபுரம் தொழிற் பிரிவு. | 5,000 | 79 | 1,700 | 6.00 |
| 3. கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம், ஈரோடு தொழிற் பிரிவு. | 5,000 | 106 | 1,100 | 11.00 |
| ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், கூட[illegible] | 1,000 | 32 | 100 | 0.75 |
| 4. [illegible] தீவிர வளர்ச்சித் திட்டம், மதுரை தொழிற் பிரிவு. | 5,000 | 120 | 250 | 1.50 |
| 5. கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம், சேலம் தொழிற் பிரிவு. | 5,000 | 86 | 180 | 1.50 |

[1978 மார்ச் 6

மேற்கூறிய திட்டங்களில் குறியீட்டளவாகக் குறிக்கப்பட்ட தறிகளைச் சேர்த்து அவற்றின் மொத்த தறிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனினும், இந்தத் திட்டங்களின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதில் பெரும் பிரச்சனையுள்ளது. உற்பத்தியின் ஒரு பகுதியை ஏஜெண்டுகள் மூலம் விற்பனை செய்வதற்காகத். திட்ட இயக்குநர்கள் தக்கநடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். மேலும், தமிழ்நாடு கைத்தறி நிதி வர்த்தகக் கழகம் மேற்படி கைத்தறி வளர்ச்சித் திட்டங்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு இம்மாநிலத்திலும், இதர மாநிலங்களிலும் 9 விற்பனை நிலையங்களை அமைத்துள்ளது. "கோ—ஆப்டெக்ஸ்" கைத்தறி—கை வினைப் பொருள் ஏற்றுமதிக் கழகம், தனியார் ஏற்றுமதியாளர்கள் சிலரிடமிருந்தும் பெற்ற தனிப்பட்ட ஆர்டர்களின் பேரில், அவர்களுக்குத் தேவைப்படக் கூடிய பொருள்களை உற்பத்தி செய்து வழங்கவும் இத்திட்டங்கள் நடவடிக்கை எடுக்கின்றன.

## (6) மலிவு விலைத் துணித் திட்டம்

ஜனதா துணி என்று சொல்லப்படும் மலிவு விலைத் துணி திட்டத்தின்கீழ் வேட்டி, புடவைகள் தொடக்கத்தில் 1,000 தறிகளைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்டன. இவை, 1976-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ஆம் நாளன்று, முதல் விற்பனைச் செய்யப்பட்டன. இதன் பின்னர், தறிகளின் எண்ணிக்கை படிப்படியாக உயர்த்தப்பட்டு தற்சமயம் 15,00 தறிகள் மலிவு விலை வேட்டி, புடவைகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. இதுவரை, சுமார் 10.00 மில்லியன் மீட்ட மலிவு விலைத் திட்டத்தின் கீழ் வேட்டிகள், புடவைகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

மலிவு விலை வேட்டிகள் மற்றும் புடவைகள் விற்பனை இம்மாநிலத்திலும், வெளியிலும் உள்ள கோ-ஆப்டெக்ஸ் சில்லரை விற்பனை நிலையங்கள் மூலம் செய்யப்பட வருகிறது. விற்பனை செய்யப்படும் மலிவுவிலை துணியின் ச மீட்டர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் என்ற வீதத்தில் மத்தி அரசு, இதுவரை 75 இலட்சம் ரூபாய் உதவித் தொ அளித்துள்ளது.



1978 மார்ச் 6]

60-ம் நம்பர் துணிகள் மற்றும் லுங்கிகள் தற்சமயம்
இந்த மலிவுவிலை ரகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.
மலிவுவிலை வேட்டிகள், புடவைகள், லுங்கிகள் உற்பத்தியை
இம்மாநிலத்தில் மேன்மேலும் அதிகரிக்கத் தேவையான
எல்லா நடவடிக்கைகளையும் கோ-ஆப்டெக்ஸ் மேற்கொண்
டுள்ளது.

### 7. கைத்தறி ஒதுக்கீட்டுத் திட்டம் :

தற்பொழுது அமுலில் இருக்கும் கைத்தறி ஒதுக்கீட்டு
திட்ட ஆணைகளைச் செயல்படுத்துவதில் பல தடங்கல்கள்
இருப்பினும், விசைத் தறிகளின் மூலம் ஒதுக்கீட்டு
ஆணைகள் மீறப்படுவது குறித்துக் கண்டுபிடித்து அவற்றுக்
கெதிராக கிரிமினல் வழக்கு தொடர்வதற்கு கைத்தறி துணி
நூல் இயக்குநரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.
486 இனங்களில் 1940 விசைத் தறிகள் பயன்படுத்தப்
பட்டு வந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டு, 165 இனங்கள்
குறித்து வழக்குத் தொடரப்பட்டது. 114 இனங்களில்
தண்டனை அளிக்கப்பட்டது. தற்சமயம் அமுலில் இருக்கும்
மத்திய அரசின் ஒதுக்கீட்டு ஆணைகள் தெளிவாகயில்லை.
ஆகையினால், விசைத்தறிகள் மூலம் இந்த ஆணைகள்
மீறப்படுவது குறித்து திறம்பட நடவடிக்கைகள் எடுக்க இயல
வில்லை. நமது அரசு, இதனை, மத்திய அரசின் கவனத்திற்குக்
கொண்டு சென்றது. இதன் மீதான மத்திய அரசின் ஆணை
எதிர்பார்க்கப்படுகிறது.

### 8. வெள்ள நிவாரணம் அளித்தல் :

தமிழ்நாட்டில் அண்மையில் ஏற்பட்ட புயல் மற்றும்
வெள்ளம் காரணமாக சுமார் 5,000 நெசவாளர்கள் தங்க
ளுடைய வீடு, தறிகள் மற்றும் மூலப் பொருட்களை இழந்
துள்ளார்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அவர்களுக்கு
நிவாரணம் அளிப்பதற்காக மாநில அரசு ரூ. 22 இலட்சம்
வழங்கியுள்ளது. வீடு இழந்த நெசவாளர்களுக்கு ரூ. 500
வீதம் (ரூ. 300 கடனாகவும், ரூ. 200 மானியமாகவும்)
வழங்கவும், தறிகள் இழந்தவர்களுக்கு ரூ. 125 வீதம்
மானியம் வழங்கவும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதைத் தவிர, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நெச
வாளர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்காக மத்திய அரசு
அளித்துள்ள ரூ. 50 இலட்சத்திலிருந்து சுமார் ரூ. 20
இலட்சம் செலவில், வெள்ளத்தால் தறிகளை இழந்து
பாதிக்கப்பட்டுள்ள நெசவாளர்களின் பயனுக்காக 10
தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் (Industrial

Weavers Co-operative Societies) அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 9. நெசவாளர்கள் நலன்

கூட்டுறவுத் துறையிலுள்ள நெசவாளர்களின் பயனுக்காக, தற்போது சேமிப்பு—பாதுகாப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் நெசவாளர்களின் ஊதியத்தில் 6 சதவீதத் தொகையை இத்திட்டத்தில் செலுத்தினால் 6 சதவீதத் தொகையை இத்திட்டத்தில் செலுத்தினால் அரசு 3 சதவீதத் தொகை செலுத்துகிறது. இத்தொகைகளுக்கு 7 சதவீத வட்டி அனுமதிக்கப்படுகிறது. இத்தொகையும் அதற்கான வட்டியும் இத்திட்டத்தின் கீழ் வரும் நெசவாளர்களின் நிதிக் கணக்கில் சேர்ந்துவரும். இத்திட்டத்தின் ஒரு பகுதியாக தொகுதி கூட்டுறுதித் திட்டத்தின் கீழும் நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். நெசவாளர் ஒருவர் இறந்துவிட்டால் அவரது கணக்கில் இந்நிதியில் சேர்ந்து வந்துள்ள தொகையோடு 500 ரூபாயும் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தால் இறந்துவிட்ட அந்நெசவாளரின் சட்டப்படிக்கான வாரிசுக்குக் கொடுக்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் தற்போது 57,000 நெசவாளர்கள் உள்ளனர். இந்த கூட்டுறுதித் திட்டத்தின் கீழ் அதிகமான அளவுக்கு நெசவாளர்களைச் சேர்ப்பதன் மூலம் இத்திட்டத்தை மேலும் பிரபலமாக ஆக்குவதற்கான செயல் குறிப்புகள் அரசின் ஆய்வில் உள்ளன.

நெசவாளர்கள் வீட்டு வசதித் திட்டம் 1962-ஆம் ஆண்டிலிருந்து தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அத்திட்டத்தைத் தகுந்த முறையில் மாற்றியமைத்தும், கிராம வீட்டு வசதித் திட்டத்தை அதனுடன் இணைத்தும் அத்திட்டத்திற்குப் புத்துயிர் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாற்றியமைக்கப்பட்ட வீட்டு வசதித் திட்டம் 1978—79 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்படும். நெசவாளர்களுக்கு எலும்புருக்கி நோய் முதலியவை கண்டுள்ளனவா என்பதைக் கண்டறிய பெருமளவில் மருத்துவச் சோதனையிடுவதை மேற்கொள்வதற்காக, இயல் மருத்துவப் பிரிவுகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பிரிவுகள் நெசவாளர்கள் அதிகமாக உள்ள இடங்களுக்குச் சென்று நெசவாளர்களுக்கு மருத்துவச் சோதனை



யிடுதலை மேற்கொள்ளும். நோய் கண்டுள்ள நெசவாளர்களுக்கு மருந்துகள் முதலியவற்றை வழங்குவதற்கான ஏற்பாடுகள் சுமார் 20 இலட்சம் ரூபாய் செலவில் செய்யப்படும்.

### 10. தமிழ்நாடு கைத்தறி நிதி வர்த்தகக் கழகம்.

கூட்டுறவுத் துறையின் கீழ் வராத கைத்தறி நெசவாளர்களுக்கு நிதியுதவி செய்யும் நோக்கோடு அமைக்கப்பட்ட தமிழ்நாடு கைத்தறி நிதி வர்த்தகக் கழகத்திடம், மத்திய அரசு பொறுப்பேற்கும் தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள், ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட திட்டங்களும் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 1977 ஆம் ஆண்டில், இக்கழகம் 93.39 இலட்சம் ரூபாய் கடன் வழங்கியுள்ளது. வெவ்வேறு வட்டி வீதத் திட்டத்தை இக்கழகம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின்படி 1,000 ரூபாய் வரையிலான கடனுக்கு 12½ சதவீத வட்டியும், 5,000 ரூபாய் வரையிலான கடனுக்கு 13½ சதவீத வட்டியும் விதிக்கப்படுகிறது. இத்திட்டங்களின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கும், ஏற்றுமதி செய்யத்தக்க துணி ரகங்களை வடக்கேயுள்ள ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கவும் இக்கழகம் பல விற்பனைக் கூடங்களை அமைத்துள்ளது. 1977 ஆம் ஆண்டில், 91.17 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கைத்தறி துணி இக்கழகத்தால் விற்பனை செய்யப்பட்டது.

1976 ஆம் ஆண்டில், தேய்மானத்திற்காக 88,000 ரூபாயை ஒதுக்கிய பிறகு, தமிழ்நாடு கைத்தறி நிதி வர்த்தகக் கழகத்திற்கு 68,000 ரூபாய் இழப்பு ஏற்பட்டது. 1977 ஆம் ஆண்டிற்கான தணிக்கை விரைவில் முடிக்கப்படும்.

### 11. தமிழ்நாடு பொன் இழை ( Zari ) ஆலை.

தமிழ்நாடு பொன் இழை ஆலை 1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் காஞ்சிபுரத்தில் அமைக்கப்பட்டது. நெசவாளர்களுக்குத் தேவைப்படும் முக்கிய மூலப்பொருளான பொன் இழையை உற்பத்தி செய்வதற்காகவே இந்த ஆலை ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆலையின் பங்கு மூலதனத்திற்கு, அரசு இதுவரை 7 இலட்சம் ரூபாய் முதலீடு செய்துள்ளது. இப்பிரிவின் தற்போதைய உற்பத்தித் திறன் ஆண்டு ஒன்றுக்கு 8,500 மார்க்கு பொன் இழையாகும். இந்தப் பிரிவு இந்திய அரசிடமிருந்து தங்க ஒதுக்கீட்டைப் பெற்று வருகிறது.

உற்பத்தி செய்யப்படும் பொன் இழை முழுவதும் 'கோ-ஆப்டெக்ஸ்' மூலம் முக்கியமாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. வெள்ளி இழையை ஒழுங்காகப் பெறும் பொருட்டு, இத் தொழிற் பிரிவு தமிழ்நாடு தொழிற் முதலீட்டுக் கழகத்திடமிருந்து பெற்ற ரூ. 9.00 இலட்சம் கடனுதவியுடனும், கோயம்புத்தூர் திருவாளர்கள் டெக்ஸ்டூல்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடனும் வெள்ளி இழைத் தயாரிப்பு பிரிவு ஒன்றை நிறுவியுள்ளது. ஐந்து தட்டையாக்கும் இயந்திரங்களில் (Flattening Machines) உள்ள உருளைகளில் சில குறைபாடுகள் இருந்ததால் இப்பிரிவு இயந்திரங்களின் முழு நிறுவத் திறனையும் பயன்படுத்த இயலவில்லை. எனவே 10 தட்டைப்படுத்தும் இயந்திரங்களில் 5 இயந்திரங்கள், 20 நூற்பு இயந்திரங்களில் 10 இயந்திரங்கள் மட்டுமே தற்போது செயல்படுகின்றன. இப்பிரிவு, மாதந்தோறும் சுமார் 200 மார்க்கு பொன் இழையைத் தற்போது உற்பத்தி செய்து வருகிறது. இக்குறையைப் போக்குவதற்கும் முழு நிறுவத்திறனைப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. நிர்வாகப் பணியாளர்களைக் குறைத்தல், ஏனைய நிர்வாகச் செலவுகளில் சிக்கன முறையைக் கொண்டுவருதல் ஆகியவற்றின் மூலம் இக்கழகத்தின் நிர்வாகச்செலவைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளது.

(12). மூடப்பட்ட பஞ்சாலைகளை மீண்டும் திறத்தல்.

பஞ்சாலைத் தொழிலில் தொடர்ந்து ஏற்பட்ட மந்த நிலையின் காரணமாக, மாநிலத்தில் உள்ள பெரும்பாலான பஞ்சாலைகள் மிகவும் மோசமான நிதி இடர்ப்பாட்டில் உள்ளன. ஒரு சில ஆலைகள் மூடப்பட்டன. மூடப்பட்ட, நலிவுற்ற பஞ்சாலைகளின் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்வதற்கும், அப்பஞ்சாலைகளுக்கு மீண்டும் புத்துயிர் அளிப்பதற்குத் தேவையான வழிவகைகளைத் தெரிவிக்கவும், மாநில அரசு, டாக்டர் எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களின தலைமையில் 1976, ஜூலையில் மாநில அளவிலான குழு ஒன்றை அமைத்தது. மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட ஆலைகளின் நிலைமையை மதிப்பிடுவதற்காக, மத்திய அரசும், பம்பாய் கூடுதல் பஞ்சாலை ஆணையாளர் தலைமையில் இது போன்ற ஒரு குழுவை அமைத்தது. மாநில அளவிலான குழுவும், மத்தியக் குழுவும் 38 ஆலைகளின் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்து பொருத்தமான பரிவுரைகளைச்



செய்துள்ளன. பெரும்பாலான பரிவுரைகள், பிரச்சினைகளை உடனடியாக தீர்த்து வைப்பது பற்றியவையாகும். எனவே, பஞ்சாலைகளின் நிதிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவற்றிற்கு நிதியுதவி அளித்து உதவுமாறு நிதியுதவி வங்கிகள் கேட்டுக் கொள்ளப்பட்டன.

1976, 1977 ஆம் ஆண்டுகளில், நிதி இடர்ப்பாடுகள், நிர்வாகக் குறைபாடுகள் முதலிய காரணங்களால் 17 பஞ்சாலைகள் மூடப்பட்டன. நடைமுதல் மூலதனத்திற்காக வங்கி கடன்களைப் பெறுவதற்கு உத்திரவாதம் அளித்தல், தொழில்கள் (மேம்பாடு முறைப்படுத்தல்) சட்டத்தின் கீழ் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் ஆலைகளின் நிர்வாகத்தை எடுத்துக் கொள்ளுதல் போன்று அரசு எடுத்துள்ள பல்வேறு நடவடிக்கைகளினால் சுமார் 17,000 தொழிலாளர்கள் பணி புரியும் 14 ஆலைகள், 1977 பிப்ரவரி திங்களிருந்து 1978 பிப்ரவரி வரை மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. நலிவுற்ற 9 ஆலைகளுக்கு இதுவரையில் அரசு ரூ. 437 இலட்சம் வங்கிக் கடனுக்கு உத்தரவாதம் அளித்துள்ளது; ரூ. 30 இலட்சம் கடன் அளித்துள்ளது. நலிவுற்ற இந்தப் பஞ்சாலைகளை கடையிடின்றி நடத்துவதற்காக, ஏழு பஞ்சாலைகளை நிவாரண உதவி பெறும் நிறுவனங்களாக அரசு அறிவித்துள்ளது. இவ்வாறாக, தனித்தியங்கக் கூடிய, மூடப்பட்ட ஆலைகள் அனைத்தும், அரசு உத்திரவாத உதவியுடன் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. அரசு நியமிக்கும் இயக்குநர் மூலமாக, இவ்வாலைகள் செயல்பட்டு வருவதை அரசு கூர்ந்து கண்காணித்து வருகிறது. இந்த இயக்குநர், கொள்முதல் விற்பனை அலுவல்களைக் கட்டுப்படுத்துகிறார். நலிந்த ஆலைகளுக்கு நீண்ட கால அடிப்படையில் முக்கியமாக கடந்த காலத்தில் சேர்ந்து வந்த கடன்களையும். அவற்றின் மீதான கடும் வட்டியையும் குறைப்பதன் மூலம் அவற்றிற்குப் புத்துயிரளிக்க அவசியமான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது. இப்பிரச்சினை குறித்து ஆய்ந்து, இத்தகைய ஆலைகளுக்கு நீண்ட கால அடிப்படையில் புத்துயிர் ஊட்டுவதற்கான வழிவகை, தொழி

நுட்ப வகையிலான வழிவகைகளைப் பரிந்துரைக்க இந்திய
ரிசர்வ் வங்கி, தென்னிந்திய துணி ஆலை ஆராய்ச்சிக்
கழகம் (SITRA) தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்
கழகம் (TIIC) ஆகியவற்றின் பிரதிநிதிகள் கொண்ட
குழு ஒன்று நியமிக்கப்பட உள்ளது.

13. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம்.

சென்னையிலுள்ள, தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம்,
1969 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில், தமிழ்நாடு அரசு
முழு உரிமை பெற்ற நிறுவனமாக சட்டப்படி இணைக்கப்
பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம், மூடப்பட்ட
நலிந்த பஞ்சாலை நிறுவனங்களை எடுத்துக் கொள்வதும்,
வேலையினின்று வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களுக்கு
மீண்டும் வேலை வாய்ப்பளிப்பதுவும் ஆகும். புதிதாக
இயந்திரங்களை வாங்குவதற்கும், ஏற்கெனவே உள்ள
இயந்திரங்களைப் புதுப்பிப்பதற்கும் தேவையான நிதி
யுதவி அளிப்பதும், நடைமுறை மூலதனத்துக்குத் தொடக்க
நிதியுதவி அளிப்பதும் இக்கழகத்தின் பிற நோக்கங்
களாகும்.

இக்கழத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம்
ரூ. 500 இலட்சமாகும். இதன் செலுத்தப்பட்ட பங்கு
மூலதனம் ரூ. 90 இலட்சமாகும். இது முழுவதும்
தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டது. இத்துடன், நவீனப்
படுத்துவதற்கும், நடைமுறை மூலதனத் தொடக்கச்
செலவிற்கும் பயன்படுத்தும் பொருட்டு " அரசு எடுத்துக்
கொண்ட ஆலைகளுக்கு " கடன் வழங்குவதற்காக, கழகத்
திற்கு கடனுக ரூ. 188.90 இலட்சம் தமிழ்நாடு அரசு
வழங்கியது. இத்தொகையில் தற்போது ரூ. 173.50
இலட்சம் நிலுவையாக உள்ளது.

முதலில், இக்கழகத்திடம் 14 நலிந்த ஆலைகளின்
நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. இவையாவும் 1974 ஆம்
ஆண்டில் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவற்றின் நிர்வாகம்
கோயம்புத்தூர் தேசிய பஞ்சாலைக் கழகத்தினால் (தமிழ்
நாடு & புதுச்சேரி) மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்
விளைவாக 1975, 76 ஆம் ஆண்டுகளில் இக்கழகம் ஆற்ற
வேண்டிய அலுவல் எதுமில்லை. நாட்டுடைமையாக்கப்
படுவதற்கு முன்னர். இந்த ஆலைகளுக்குக் கடன் வழங்கப்
பட்ட தொகை வட்டியுடன். கோயம்புத்தூரிலுள்ள
தேசிய பஞ்சாலைக் கழகத்தினால் (தமிழ்நாடு & புதுச்சேரி)
எற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.



(மேம்பாடு—முறைப்படுத்தல்) சட்டத்தின்
தொழில் புதுக்கோட்டையிலுள்ள
கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட இராமநாதபுரம் மாவட்டம்,
காவேரி நூற்பு நெசவு ஆலை, சூப்பர் நூற்பாலை
முத்தனேந்தலில் உள்ள சோமசுந்தரம் முறையே 4—1—1977,
ஆகியவற்றின் நிர்வாகம் தமிழ்நாடு பஞ்சாலைக்
6—12—1977 அன்றிலிருந்து
கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தொழிலுக்கு புத்துயிரூட்டு
முடிவாக, கைத்தறித் தனித்து இயங்கவல்லதாக
வதும் அதனை, மேலும் தற்சார்புடையதாக்குவதும், மக்களின்
செய்வதும், துணி ரகங்களில் ஏற்படுகிற மாறுதல்
விருப்பத்திற்கேற்ற நமது கைத்தறிக் கொள்
களை அது உணரச் செய்வதும், அமர்த்தப்படுபவர்கள்,
கையின் நோக்கமாகும். வேலைக்கு ஆகியவற்றைப்
வேலை வாய்ப்புக்களின் பரவலான தன்மை வேளாண்மைத்
பொறுத்தவரையில், கைத்தறித்துறை, வேலைவாய்ப்பு அளிக்
துறைக்கு அடுத்ததாக, அதிக அளவில் அரசு உணர்ந்துள்ளது. ஏற்
கும் துறையாகும் என்பதை பல்வேறு திட்டங்கள் இந்த
கெனவே அனுமதிக்கப்பட்ட
அடிப்படையில் அமைந்துள்ளன.

இணைப்பு III

(... ...113 ...ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பை காண்க)

மானியக் கோரிக்கை எண் 27

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்
கொள்கை விளக்கக் குறிப்பு.

1946 ஆம் ஆண்டில் கதர் திட்டத்தை மேற்கொண்ட
முதல் மாநில அரசு தமிழ்நாடு அரசாகும். சர்வோதய
சங்கத்திலிருந்து மாற்றப்பட்ட கிட்டத்தட்ட 1,800 நூற்
பாளர்கள், 500 கதர் நெசவாளர்களைக் கொண்டு தீவிர
கதர் திட்டம் தொடங்கப்பட்டது. 1956-ல் கதர் துறை
என்று தனியாக ஒரு துறை அமைக்கப்பட்டது. தேசீய
அளவில், கதர், கிராமத் தொழில்கள் வளர்ச்சியின் முக்கியத்
துவமும் அவசியமும், உணரப்பட்டதால் இந்திய அரசு
1956-ல் கார்வே குழுவை அமைத்தபோது இதற்குச் சிறப்
பிடம் அளிக்கப்பட்டது. அக்குழுவின் பரிவுரையின்படி,
திட்ட ஆணைக்குழு இத்துறையின் வளர்ச்சிக்குப் பெருமளவு

நிதி ஒதுக்கீடு செய்தது. இத்திட்டம், அனைத்திந்திய கதர்-கிராமத் தொழில் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அப்போது இந்த வாரியம் ஆலோசனை வழங்கும் அமைப்பாக இருந்தது. ஆலோசனை வாரியத்திற்கு குறைந்த அதிகாரங்கள் இருந்ததை உணர்ந்து கொண்டும், கதர்-கிராமத் தொழில்கள் விரைவில் வளர வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தும் இந்திய அரசு, 1957-ல் கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு என்றழைக்கப்படுகிற சட்டப்படியான ஆணைக்குழு ஒன்றை அமைத்தது. நாட்டு அளவில் ஆலோசனைக்குழு எதிர்நோக்கிய பிரச்சினைகளை மாநில அரசுகள் உணர்ந்து, கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு அறிவுரையின்படியும் பரிவுரையின்படியும், கதர்-கிராமத் தொழில் வளர்ச்சிக்காகச் சட்டப்படியான வாரியங்களை அமைத்தன. தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியச் சட்டம் 1959-ல் நிறைவேற்றப்பட்டது. முன்னர், கதர் துறையாலும் தொழில் வணிகத்துறையாலும் மேற்கொள்ளப்பட்ட கதர்-கிராமத் தொழில் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக 1960 எப்ரல் திங்களில் தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் அமைக்கப்பட்டது.

2. பணியாளர்களுக்குப் பயிற்சியளிப்பது உட்பட கதர்-கிராமத் தொழில் உற்பத்தி, வளர்ச்சிக்கான திட்டங்களைத் தயாரிப்பது வாரியத்தின் முக்கிய அலுவல்களாகும். இதனைத் தவிர, கதர்-கிராம தொழில் ஆணைக்குழு வழங்கிய ஆலோசனையின் அடிப்படையில், இதற்குத் தொடர்பான பொருட்கள் அனைத்தையும் இயன்றவரையில் இவ்வாரியம் கவனிக்கிறது. கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழுவின் ஆட்சி வரம்புக்கு வரும் தொழில்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

(1) கதர்.

(2) சிறு தானியங்களையும், பருப்பு வகைகளையும் செயல்முறைப்படுத்துதல்.

(3) கிராம செக்கு எண்ணெய்.

(4) கிராமத் தோல் தொழில்.

(5) தீப்பெட்டித் தொழில் (குடிசைத் தொழில்).

(6) கரும்பு வெல்லம், கண்டசாரி தயாரித்தல்.

(7) பனைவெல்லம் தயாரித்தல், பிற பனைப் பொருட்களை தயாரித்தல்.



(8) சமையலுக்கு உதவாத எண்ணெய், சோப்பு.

(9) கையால் தயாரிக்கப்பட்ட தாள்.

(10) தேனீ வளர்த்தல்.

(11) கிராம மட்பாண்டத் தொழில்.

(12) நார்.

(13) தச்சுத்தொழிலும், கருமார் தொழிலும்.

(14) சுண்ணாம்பு தயாரித்தல்.

(15) உரம், மீத்தேன் வாயு தயாரித்தலும், பயன்படுத்தலும்.

(16) மருந்துக்காக வனச்செடிகளையும், பழங்களையும் சேகரித்தல்.

(17) பழங்களைப் பதப்படுத்தல், பாதுகாத்தல்.

(18) பிரம்பும், மூங்கிலும்.

(19) அலுமினிய வீட்டு சாமான்களை தயாரித்தல்.

(20) 'கத்தா' தயாரித்தல்.

(21) மரப்பிசினையும், ரெசினையும் தயாரித்தல்.

(22) அவலரக்கு (Shellac).

3. கதர் ஆணைக்குழுவிடமிருந்து நிதியுதவியைப் பெறாமல், மாநில அரசு அனுமதித்துள்ள கீழ்க்காணும் தொழில்களுக்கும் கூடுதலாக வாரியம் உதவிசெய்து வருகிறது:—

1. அகர்பத்தி.
2. சிகைக்காய்தூள்.
3. பற்பொடி.
4. நீலகிரித் தைலம்.

4. இத்திட்டங்களை வாரியம், துறைப்பிரிவுகள் மூலமும் கூட்டுறவுச் சங்கங்கள், தனிப்பட்ட கைத்திறப் பணியாளர்கள் மூலமும் செயற்படுத்துகிறது.

கதர்.

5. துறைப் பிரிவுகள் மூலமும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும் கதர் உற்பத்தி செய்யப்படுகிறது. வாரியம் கச்சாப் பட்டிலிருந்து கதர் பட்டுத் துணியையும் உற்பத்தி

செய்கிறது. கிஸான் நூல், அம்பர் நூல் ஆகியவற்றை வாரியம் வாலாயமான நூற்போரிடமிருந்து வாங்குகிறது. கிராம நூற்பு நிலையங்களில், உற்பத்தியை ஒட்டி ஊதியம் வழங்கும் அடிப்படையில் வாரியம் நூலை உற்பத்தி செய்கிறது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் நூல் நெசவாளர்களுக்கு கதர் துணி நெய்வதற்கு வழங்கப் படுகிறது. இம்மாநிலத்தில் 305 கிராம நூற்பு நிலையங்கள் உள்ளன. இவை 6 கதிர் இராட்டை கொண்டு நூல் உற்பத்தி செய்கின்றன. 1977–78-ம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்ட உற்பத்தி இலக்கு 325·25 லட்சம் சிட்டங்களாகும். 1977 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ம் நாள் முடிய வாரியம் 246·59 லட்சம் சிட்டங்கள் நூலை உற்பத்தி செய்துள்ளது. தற்போது கிராம நூற்பு நிலையங்கள் மூலம் 9,760 நூற்போருக்கு வேலை கிடைக்கிறது. இந்த நூற்பு நிலையங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 2·50 முதல் ரூ. 3·00 வரை ஊதியம் கிடைக்கிறது.

6. ஆயத்த உடைகளையும் வாரியம் தயாரித்து வருகிறது இத்துணிகளைப் பொது மக்கள் மிகவும் விரும்பி வாங்குகின் றனர். 17·23 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள இவ்வகைத் துணிகள் 1977–78-ம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் (அதாவது1977-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரையில்) தயாரிக்கப்பட்டன. அதே காலத்தில் 25·99 இலட் சம் ரூபாய் மதிப்புள்ள உடைகள் விற்கப்பட்டன. 1978–79-ம் ஆண்டிற்கான தயாரிப்பு இலக்கு 25 இலட்சம் ரூபாயாகும். மேலும் பண்டிகைக் காலத்தில் பொது மக்கள் வாங்கும் பொருட்டு 98·44 லட்சம் மதிப்புள்ள பூப்போட்ட கதர்த் துணிகளையும் வாரியம் விற்பனைக்கு வெளியிட்டதில் ரூ. 63·23 லட்சம் மதிப்புள்ள கதர்த்துணிகள் 1977-ம் ஆண்டு காந்தி ஜெயந்தி, தீபாவளி மற்றும் பக்ரீத் பண்டிகைக் காலங்களில் விற்பனை செய்யப்பட்டது.

7. இம்மாநிலம் முழுவதும் பரந்து அமைந்துள்ள 155 விற்பனைப் பிரிவுகள் மூலம் துணிகளை இவ்வாரியம் விற்பனை செய்து வருகிறது. இதில் 4 கதர் விற்பனை முக்கிய நிலையங் களும் அடங்கும். இந்நான்கு நிலையங்களில் இரண்டு நிலையங் கள் சென்னையிலும் திருச்சியில் ஒன்றும், கோயம்புத்தூரில் ஒன்றும் உள்ளன. 1976–77-ம் ஆண்டில் 405·55 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள கதர்த்துணிகள் விற்பனையாயின. கதர்த் துணிகள் விற்பனை 30–11–1977-ம் நாள் வரையில் 524·43 இலட்சம் ரூபாயாகும். இந்த விற்பனை 1977–78-ம் நிதியாண்







டின் இறுதியில் 578 இலட்சம் ரூபாயை எட்டும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. 1977–78-ம் ஆண்டுக்கான உற்பத்தி 525 இலட்சம் ரூபாயாகும். 1978–79-ம் ஆண்டில் இந்த உற்பத்தி 575 இலட்சம் ரூபாயை அடையும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. 1978–79-ம் ஆண்டிற்கான விற்பனை இலக்கு 600 இலட்சம் ரூபாயாகும்.

**மாநில அரசால் அளிக்கப்பட்ட சிறப்புத் தள்ளுபடி :**

8. வாரியத்தினாலும், தமிழ்நாட்டிலுள்ள சான்றளிக்கப் பட்ட ஏனைய கதர் நிலையங்களாலும் விற்பனை செய்யப்பட்ட கதர் துணிகளுக்கு 1976–77-ம் ஆண்டில் தீபாவளிக் காலத் தில் அரசு 5 சதவீத சிறப்புத் தள்ளுபடி வழங்கியது. காந்தி ஜெயந்தி, தீபாவளி, பொங்கல் ஆகிய காலங்களில் வாரியத் தால் விற்பனை செய்யப்பட்ட கதர் துணிகளுக்கு 10 சதவீதத் தள்ளுபடியையும் ஏனைய சான்றளிக்கப்பட்ட கதர் நிலையங் களால் விற்பனை செய்யப்பட்ட கதர் துணிகளுக்கு 5 சத வீதத் தள்ளுபடியையும் 1977–78-ம் ஆண்டில் மாநில அரசு வழங்கியது. அரசு அளித்த உயர் தள்ளுபடியாலும், கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அளித்த உயர் தள்ளுபடி யாலும், துணிகளை வாங்குவோருக்கு பருத்திக் கதர் துணி களுக்கு 30 சதவீதத் தள்ளுபடியையும், பட்டு கதர் துணி களுக்கு 15 சதவீதத் தள்ளுபடியையும், கம்பள கதர் துணி களுக்கு 20 சதவீதத் தள்ளுபடியையும், வாரியத்தால் அளிக்க முடிந்தது. உயர் தள்ளுபடி அளித்ததன் விளைவாகக் கதர் துணிகள் விற்பனை மேற்குறிப்பிட்டபடி கணிசமான அள விற்கு அதிகரித்தது.

9. கதருக்கான சிறப்புத் திட்டத்தின் கீழ், 1977–78-ம் ஆண்டில், அரசு 2·00 இலட்சம் ரூபாய் (1·50 இலட்சம் ரூபாய் மானியம், 0·50 இலட்சம் ரூபாய் கடன்) வழங்கியது. தறி ஒன்றுக்கு 50 ரூபாய்க்கு அதிகப்படாமல் பண்ணை, விழுது கள் ஆகியவற்றை கதர் நெசவாளர்கள் வாங்குவதற்கு நிதி யுதவி செய்ய இத்திட்டம் வகை செய்தது. இத்தொகை யில் 75 சதவீதம் உதவித் தொகையாகவும், எஞ்சியுள்ள 25 சதவீதம் கடனாகவும் அளிக்கப்படும். இத்திட்டத்தால், 4,000 தறிகள் பயனடையும்.

10. நூற்போர், நெசவாளர்கள், சிட்டத்தில் நூலைச் சுற்றுவோர்கள், சாயம் போடுபவர்கள், வெளுப்பவர்கள், தையற்காரர்கள் முதலியவர்கள் போன்ற ஏறத்தாழ அரை

இலட்சம் பேருக்கு (பகுதி நேர, முழு நேர) கதர் திட்டங்கள் வேலை வாய்ப்பளிக்கின்றன. 1977–78-ம் ஆண்டில் 200 இலட்சம் ரூபாய் ஊதியமாக வழங்கப்படும்.

கிராமத் தொழில்கள்.

11. கிராம ஏழ்மை நிலையைப் போக்கவும், உள்ளூரில் கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களையும், ஆட்படை ஊற்றத்தையும் பயன்படுத்தவும், நுகர்வோர்களது தேவைகளுக்கு, குறிப்பாக கிராமப் பகுதியிலுள்ளவர்களின் தேவைகளுக்குப் பொருட்களை வழங்க வகை செய்யும் வண்ணம் கிராமத் தொழில்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனவே, வளமான கிராமப் பொருளாதாரத்தை உருவாக்க வேண்டிய தற்போதைய நிலையில், பல்வேறு கிராமத் தொழில் திட்டங்களைச் செயல்படுத்துவதில் வாரியம் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது.

12. கீழ்க்காணும் கிராமத் தொழில்களை, துறையின் பிரிவுகள். தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் மூலம் வாரியம் நடத்தி வருகிறது:—

1. பனை வெல்லம்.
2. கைக்குத்தல் அரிசி (தானியங்களையும் பருப்பு வகைகளையும் பதப்படுத்துதல்).
3. நாட்டு செக்கு எண்ணெய்.
4. நாட்டுத் தோல்,
5. மட்பாண்டங்கள், செங்கற்கள், ஓடுகள்.
6. சுண்ணாம்பு.
7. தேனீ வளர்த்தல்.
8. தச்சு-கருமார் தொழில்.
9. பழங்களைப் பதப்படுத்துதலும் பாதுகாத்த
10. கையால் செய்யப்பட்ட காகிதம்.
11. குடிசைத் தொழில் தீப்பெட்டி.
12. வெல்லம், கண்டசாரி சர்க்கரை.
13. சமையலுக்கல்லாத எண்ணெய், சோப்பு.
14. நார் தொழில்.
15. கிராமப் பொருட்கள் விற்பனை நிலையம்
16. பிரம்பு. மூங்கில்.





முன்புகுறிப்பிட்டது போல, கதர், கிராமத் தொழில் வாரியம், தனிப்பட்டதொழில் கைவினைஞர்களுக்கும் ஆதரவு தருகிறது.

13. கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழுவிடமிருந்து கிடைக்கப்பெறும் நிதியுதவியின் அளவைக் கொண்டு மாநில அளவில் கிராமத் தொழில்கள் திட்டம் முடிவு செய்யப்படுகிறது. சிறப்புத் திட்டங்கள் சிலவற்றிற்கு குறுகிய காலக் கடன்களையும் மாநில அரசு வழங்குகிறது.

பனைவெல்லத் தொழில்

14. வாரியம் மேற்கொண்டுள்ள கிராமத் தொழில்களில் பனை வெல்லம் தயாரிக்கும் தொழில் பெருந் தொழிலாகும். தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இத்தொழில் நடைபெற்று வருகின்றது. 31—3—1977 ஆம் நாளிலுள்ளபடி மாநில அளவில் மாநிலப் பனைவெல்லம் கூட்டுறவுக் கூட்டமைப்பு ஒன்றும், மாவட்ட அளவில் பனை வெல்ல மாவட்டக் கூட்டுறவு கூட்டமைப்புகள் எட்டும், பனைவெல்ல தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் 958-ம் வாரியத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வந்தன.

15. 31–12–1977-ஆம் நாள் நிலவரப்படி இத்தொழிலில் உற்பத்தி செய்த பொருட்களின் மதிப்பும், விற்பனை செய்த பொருட்களின் மதிப்பும் முறையே ரூ. 293·33 இலட்சமும் ரூ. 306·58 இலட்சமும் ஆகும். 2,20,000 தொழிலாளர்கள் இத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர். அவர்கள் ஈட்டிய ஊதியம் ரூ. 96·80 இலட்சமாகும். உற்பத்திச் செலவில் பெரும்பகுதி பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ஊதியமாக வழங்கப்படுகின்றது. உழைப்பையே நோக்கமாகக் கொண்ட இத்தொழில் ஏராளமான பேருக்கு வேலைவாய்ப்பு அளித்து, அவர்களுக்கு ஊதியம் அளித்து வருகிறது என்பது தெரியவரும். 1978–79-ஆம் ஆண்டில் இத்துறையில் உற்பத்தி மற்றும் விற்பனை இலக்குகள் முறையே ரூ. 960 இலட்சங்கள், ரூ. 1050 இலட்சங்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1978–79-ல்இத்திட்டங்களின் மூலம் சுமார் 2,30,000பேருக்கு வேலைவாய்ப்பளிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

16. மேலும், பனைநார், பனையோலைத் தொப்பிகள், கழித்தாள் கூடைகள், புருசுகள், பொருள்களைக் கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் கூடைகள் போன்ற பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் இத்தொழில்கள் அந்நிய செலாவணியை ஈட்டி வருகின்றன.

[1978 மார்ச் 6

''பாம்கோலா''

17. தமிழ்நாடு மாநிலப் பனைவெல்லக் கூட்டமைப்பு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் வழிகாட்டு முறையின்கீழ் உள்ளது. இந்தக் கூட்டமைப்பு '' பாம் கோலா '' ''பாம் ஆரஞ்சு'' என்கின்ற வணிகக் குறியீட்டுப் பெயர்களில் பானங்களைத் தயாரித்து, அவற்றை குறிப்பிட்ட அளவில் விற்பனையும் செய்கின்றது. 1977 வேளாண்மைப் பொருட்காட்சி (Agro Exhibition, 1977) டில்லியில் நடைபெற்ற பொழுது, எந்தப் பொருளையும் தரத்தை நோக்கிப் பிரித்தறிந்து நாடுகின்ற டில்லி வாழ் மக்களாகிய வாடிக்கையாளர்கள் இந்தப் பானங்களை விரும்பி வாங்கிப் பருகினர். சென்னையிலுள்ள சில நட்சத்திக ஓட்டல்களில்கூட, இந்த பானங்கள் பாராட்டுப்பெற்றுள்ளன. இப்போது (அமெரிக்கத் தயாரிப்பான) '' கோகோ கோலா '' இந்தியச் சந்தைகளிலிருந்து மறைந்துவிட்டபடியாலும், அதற்குப் பதிலாகச் சந்தைகளில் விற்பனைக்கு வெளியிடப்பட்டுள்ள இந்தியப் பானமாகிய ''77'' இன்னும் எல்லா இடங்களிலும் உள்ள சந்தைகளில் தனக்குரிய இடத்தைப் பிடிக்கவில்லையாதலாலும், '' பாம் கோலாவுக்கு'' வாடிக்கையாளரிடமிருந்து நல்ல ஆதரவு கிடைக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பனஞ்சர்க்கரையிலிருந்து '' பாம் கோலா '' பானம் தயாரிக்கப்படுகிறது. எனவே இந்த பானத்தின் உற்பத்தி அதிகரித்தால், அதன்மூலம் மறைமுகமாக அதிக அளவில் பனை வெல்லத்தைப் பயன்படுத்துகின்ற வேலை வாய்ப்புக்கள் பெருகும்; இதனால் பனைமரத்திலிருந்து பதநீரை இறக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் அதனைச் சார்ந்த மற்ற தொழிலாளர்களுக்கும், ஆதரவு கிடைக்கும். இதைத் தவிர, பனை வெல்ல உற்பத்தியாலும், பானம் தயாரிப்பிலும் அதனைப் புட்டியில் அடைக்கும் தொழிலிலும் கூடுதலான வேலை வாய்ப்புக்கள் உருவாகும்.

சென்னையில், ஒரு வேலை முறை நேரத்தில் (shift) ,500 புட்டிகளில் பானத்தை அடைக்கும் திறனுடைய தொழிற்சாலை யொன்றை நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு விரும்பியவாறு டில்லியில் இதேபோன்று இன்னொரு தொழிற்சாலை நிறுவப்படும்.



1978 மார்ச் 6]

(கிராமத் தொழில்) எண்ணெய் எடுக்கும் தொழில்

18. எண்ணெய் எடுக்கும் தொழில், வாரியத்தின் நிதி உதவியுடன், முக்கியமாகத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயற்படுத்தப்படுகின்ற மற்றுமொரு பெரிய கிராமத் தொழில் ஆகும். திருப்பூரில் இத் துறையின் தொழிற்சாலையொன்று செயல்பட்டு வருகின்றது. எண்ணெய் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கங்களும் கூட்டமைப்புகளும் 55 உள்ளன. இவை யாவும் வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளன.

19. 1977ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் வரையில் இத்தொழிலின்கீழ் ஏற்பட்ட உற்பத்தி, விற்பனை ஆகியவற்றின் மதிப்பு முறையே ரூ. 120·85 இலட்சம், ரூ. 115·48 இலட்சம் ஆகும். 409 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது; அவர்களுக்கு ஊதியமாக ரூ. 4·2 இலட்சம் கொடுக்கப்பட்டது. 1978–79-ம் ஆண்டுக்கான உற்பத்தி இலக்கு ரூ. 375·00 இலட்சம் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1978–79-ம் ஆண்டில் இத்துறையின்கீழ் 1,816 பேர்களுக்கு முழுநேர வேலையும் மற்றும் 1,020 பேர்களுக்கு பகுதி நேர வேலையும் வழங்கமுடியும் என்று கருதப்படுகின்றது.

கையால் செய்யப்பட்ட தாள்

20. தற்போது கையால் தாள் செய்வதற்காக வாரியத்தின் கட்டுப்பாட்டின்கீழ் 7 துறைப் பிரிவுகளும், 4 சங்கங்களும் உள்ளன. 1977 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாள் நிலவரப்படி கையால் செய்யப்பட்ட தாளின் மதிப்பு ரூ. 9·43 இலட்சமாகும்; விற்கப்பட்ட தாளின் மதிப்பு ரூ. 8·55 இலட்சமாகும். 365 பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. அவர்களுக்கு ஊதியமாக ரூ. 3·05 இலட்சம் கிடைத்துள்ளது. 1978–79 ஆம் ஆண்டுக்கு உற்பத்தி இலக்கு ரூ. 18 இலட்சங்களாகும்.

முட்டை வைக்கும் தட்டுகள் செய்தல்

21. முட்டை வைக்கும் குழித் தட்டுக்களை வழங்குவதில், கோழி வளர்ப்பவர்களும் சிறு வணிகர்களும் நன்கு அமைந்த ஆலைத் துறையினரையே நம்பியிருக்கவேண்டிய நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு கதர்-கிராமத்தொழில் வாரியம், தமிழ்நாடு கோழி-வளர்ப்பு

நிறுவனம் ஏற்று குறித்தட்டுகளைத் தயாரிப்பதில் முழு வெற்றி அமைந்துள்ளது. இயந்திரத்தால் உற்பத்தி செய்யப்பட்டு இப்போது அங்காடியில் விற்பனையாகும் பொருட்களுடன் இப்பொருட்கள் போட்டிவிலைகளில் விற்கப்பட முடியும். இவற்றிற்கு பெங்களூர் முதலிய இடங்களிலும் பெரும்தேவை இருக்கிறது. வெளிமாநிலங்களிருந்து உற்பத்திசெய்து அனுப்புபவர்கள், தவறாமல் தொடர்ந்து பொருட்களை அனுப்பாமையால், பிறமாநிலங்களில் இப்பொருட்களுக்கு அதிகத் தேவை ஏற்படுகின்றது. கதர் கிராமத் தொழில்களின் கீழ் உள்ள கையால் செய்யப்படும் தாள் தொழில் பிரிவுக்கு முட்டைத் தட்டுக்கள் உற்பத்தி செய்யும் பணியை ஒதுக்குமாறு இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

22. 1977-78ஆம் ஆண்டு இறுதியில் எல்லா கிராமத் தொழில்களிலும் மொத்தமாக 192 துறையினரால் நேரடியாக நடத்தப்படும் பிரிவுகளும் 3,298 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் 1,293 தனிப்பட்ட தொழில் பிரிவுகளும் இருக்கும். கிராமத் தொழிலில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் மதிப்பு ரூ.1,610 இலட்சமாகவும், அவற்றின் மொத்த விற்பனை அளவு ரூ. 1,785 இலட்சமாகவும் இருக்கும் 2·54 இலட்சம் பேர்களுக்கு ஊதியமாக ரூ. 620 இலட்சம் வழங்கப்படும்.

கிராம/குடிசைத்தொழில் துறையினருக்கென/சில உற்பத்திப் பொருள்களை ஒதுக்கி வைத்தல்.

23. கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பின்மையால் பொருளாதார நிலையில் நலிவுற்றவர்களின் நிலையை உயர்த்த வேண்டுமென்ற நோக்கத்துடன், கூடுதலாக 43 இனங்களை குடிசை/கிராமத் தொழில் துறையினருக்கென ஒதுக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு பரிவுரை செய்தது. சிறு தொழில்கள், குடிசை/கிராமத் தொழில் துறையினர் உற்பத்தி செய்வதற்கென்று, 504 நுகர்வோர் பொருட்கள் ஒதுக்கப்படுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது. கதர் கிராமத் தொழில் வளர்ச்சிக்கும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் உயர்வுக்கும் இது வழி வகுக்கும்.



பழங்குடியினர் முன்னேற்ற மும்முரத்திட்டம்

24. பழங்குடியினர் பகுதிகளை தீவிரமாக மேம்படுத்தும் ஒரு திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்படி 9 மலைப் பகுதிகளில் ஒவ்வொரு பழங்குடியினருக்கும் 10 தேனீ கூடுகள் என்ற வீதத்தில் 400 பழங்குடியினருக்கு 4,000 தேனீ கூடுகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கல்ராயன் மலைப் பகுதியில் 100 விழுக்காடு உதவித் தொகை என்ற முறையில் தேனீ கூடுகள் வழங்கப்படும். மற்ற பகுதிகளில் இந்த உதவித் தொகை 50 விழுக்காடு அளவுக்கு வரையறுக்கப்படும். இத்திட்டத்திற்காக அரசு 1977–78-ஆம் ஆண்டில் ரூ. 1·75 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. ஜவ்வாது, கல்ராயன், சித்தேரி மலைப் பகுதிகளில் உள்ள 340 பழங்குடியினருக்கு 1,700 தேன் கூடுகள் வழங்கிய வகையில் வாரியத்திற்கு 1976–77-ஆம் ஆண்டில் ரூ. 77,900 செலவு ஏற்பட்டது. 1977–78-ல் இந்தத் தொகையையும் அரசு ஏற்றுக்கொள்ளும். ஜவ்வாது மலையில் ரூ. 45,000 செலவில் தேனீ வளர்ப்பு இல்லம் அமைப்பதற்காகவும், 20 இளநிலை தேனீ வளர்ப்பு களப்பணியாளர்களைக் கொண்ட மேற்பார்வைப் பணியாளர் செலவுக்காக ரூ. 89,000 தொகைக்கும், அரசு 1978–79-ஆம் ஆண்டில் ரூ. 1·34 இலட்சம் மானியத்தை ஒதுக்கியுள்ளது.

மலைப்பகுதி முன்னேற்றத் திட்டம்

25. மலைப் பகுதி முன்னேற்றத் திட்டத்தின்கீழ், 1975–76-ஆம் ஆண்டில் திட்டப் பணிகளின் கீழ் ரூ. 7 இலட்சத்தை (50 விழுக்காடு மானியமாகவும் 50 விழுக்காடு கடனாகவும்) வாரியம் பெற்றுக் கொண்டது.

இத்திட்டத்தின்கீழ் நீலகிரி பகுதியில் மக்களுக்கு அதிக வருமானம் அளிக்கக் கீழ்க்கண்ட பொருட்களை ஏற்கனவே வாரியம் வழங்கியுள்ளது.

| | எண்ணிக்கை. | தொகை. ரூ |
|---|---|---|
| 1. தேன் கூடுகள் விநியோகம் .. | 2,000 | 2,00,000 |
| 2. யூகலிப்டஸ் தைலம் வடிப்பதற்கான வடிப்பு இயந்திரங்களை வழங்குதல். | 145 | 1,45,000 |

1977-78-ம் ஆண்டில் பழங்குடியினர், சிறு விவசாயிகள் போன்ற 100 பேர்கட்கு 1,000 தேன் கூடுகளையும் 50 யூகலிப்டஸ் தைலம் வடிப்பதற்கான இயந்திரங்களையும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு 1977–78-ல் ரூ. 1.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1978–79-ம் ஆண் டில் மொத்தம் ரூ. 2.05 லட்சம் செலவில் 1,500 தேன் கூடு களையும் 55 யூகலிப்டஸ் தைலம் வடிப்பதற்கான இயந்திரங் களையும் வழங்க வாரியம் உத்தேசித்துள்ளது.

### வறட்சி நிவாரணத் திட்டம்

26. பனைத் தொழிலின் கீழ், கீழ்க்கண்ட திட்டங்களுக் காக திருநெல்வேலி மாவட்டத்தில் வறட்சி நிவாரண திட் டத்தின்கீழ் ரூ. 5.57 இலட்சம் (ரூ. 1.27 இலட்சம் மானியம், ரூ. 4.30 இலட்சம் கடன்) 1976-77-ல் அரசு உதவி அளித்தது. இவை, 1977-78-ல் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

| | | உதவித் தொகை. |
|---|---|---|
| | | ரூபாய் |
| 1. 4 இலட்சம் பனை விதை விநியோகம் | .. | 40,000 |
| 2. 20 பனை நார்த் தொழில் பயிற்சி நிலையங்கள் ஆரம்பித்தல் .. .. | .. | 2,67,000 |
| 3. 50 பனை ஓலை பொருட்கள் உற்பத்தி நிலையங்கள் ஆரம்பித்தல் .. .. | .. | 2,50,000 |
| மொத்தம் | .. | 5,57,000 |

### வறட்சிப் பாங்கான பகுதிகள் திட்டம்

27. தருமபுரி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களின் வறட்சி நிவாரணப் பணிக்கென 1977–78-ம் ஆண்டில் மாநில அரசு மேலும் முறையே ரூ. 4.24 லட்சம், ரூ. 9.58 லட்சம் வழங்கியுள்ளது. இந்த உதவி பனைத் தொழிலில் ஈடுபட் டுள்ள தொழிலாளர்களுக்கு நிதி உதவி அளிக்கவும் பனை ஓலை முடையும் நிலையங்கள் நிறுவுவதற்கும் 5 இலட்சம் பனை விதைகளை நடவும் பயன் படுத்திக் கொள்ளப்படும்.



### புயல் வெள்ள நிவாரணத் திட்டத்தின்கீழ் (1977) உதவித்தொகை

28. அண்மையில் ஏற்பட்ட புயல், வெள்ளத்தால் மாநிலத்தின்பல்வேறு மாவட்டங்களில் குறிப்பாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென்னாற்காடு, திருநெல்வேலி மாவட்டங்களில் சொத்துக்கும், உயிருக்கும் அதிக நஷ்டம் ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தாலும் புயலாலும் சேதமடைந்த கட்டிடங்களை புதுப்பித்துக் கட்டவும், கருவிகளையும் சாத னங்களையும் பழுது பார்க்கவும், தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்திற்கு ரூ. 9.09 இலட்சம் மானியமாகவும், ரூ. 0.65 இலட்சம் கடனாகவும் அரசு அனுமதித்துள்ளது, வாரியத்தின் அதிகார வரம்பின்கீழ் வரும் பல்வேறு வகை கைவினைஞர்களுக்கு உதவியும் அளித்துள்ளது. வாரியத்தின் அதிகார வரம்பின்கீழ் சுமார் 2,800 பேர் இந்த நிவாரணத் திட்டத்தினால் பயனடைந்தனர்.

### திக்கற்ற விதவைகள் மறுவாழ்வு திட்டம்.

29. இவ்வாண்டில் விதவைகள் மறுவாழ்வுக்கென ரூ. 2.79 இலட்சம் வாரியத்திற்கு அரசு மானியமாக வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 279 திக்கற்ற விதவை களை கிராமப் பஞ்சாலை நிலையங்களில் வாரியம் சேர்த் துள்ளது. இவர்களுக்கு நிரந்தர வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு அவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 மதிப் புள்ள 6 கதிர்கொண்ட புது மாதிரி இராட்டைகள், கருவிகள் ஆகியவற்றை வழங்கக் கருதப்பட்டுள்ளது.

### வாரியத்தின் நிதி

30. அரசின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின் அடிப் படையில் தனிப்பட்ட இரண்டு தலைப்புகளின்கீழ் [அதாவது (1) கதர் நிதி, (2) கிராமத் தொழில் நிதி] தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியம் தனது வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டை தயாரிக்கிறது.

31. இந்திய அரசு ஏற்பளித்தவாறு ஒப்புக் கொள்ளப் பட்ட திட்டத்தின் அடிப்படையில், பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தேவைப்படும் நிதி உதவியை அகில இந்திய கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு தனது நிதி உதவி

அளிக்கும் அடிப்படையின்படி வாரியத்திற்கு அளிக்கிறது. வணிக முறையல்லா நடவடிக்கைகள் குறித்து வரவுக்கும் செலவுக்குமிடையே உள்ள நிகர செலவு வேறுபாட்டுத் தொகையை தமிழ்நாடு அரசு கொடுக்கிறது.

வாரியத்தின் நிதி நிலை

32. 1977–78-ல் இறுதியாக ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டத்தின்படி கதர்-கிராமத் தொழில் ஆணைக் குழு தமிழ் நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு கீழ்க்கண்ட தொகையை ஒதுக்கியுள்ளது :—

| | மானியம். | கடன். |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| கதர் .. .. .. .. | 0.51 | 98.30 |
| கிராமத் தொழில்கள் .. .. | 17.70 | 82.50* |

1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி அன்றுள்ள வாறு, வாரியத்திற்குச் சேர வேண்டிய நிகர செலவு மானியம் குறித்து கீழ்க்கண்ட தொகைகளை மாநில அரசு வழங்கியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1. கதர் நிதி .. .. .. .. | 14.50 |
| 2. தணிக்கைக் கட்டணங்கள் .. .. | 12.50 |
| 3. கிராமத் தொழில் நிதி .. .. .. | 18.00 |
| மொத்தம் | 45.00 |

* இதில் வங்கிக் கடன் ரூ. 6 இலட்சம் அடங்கும்.



கதர்-கிராமத் தொழில் ஆணைக்குழு வழங்கும் மானியங் களும், கடன்களும், வாரியத்தின் வளர்ந்து வரும் தேவைக் குப் போதுமானவையாக இல்லாததால், தனது திட்டத் தைச் செயல்படுத்துவதற்கு வாரியம் மாநில அரசையும் மத்திய அரசையும் உதவி கேட்க வேண்டியுள்ளது. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவிற்கு போதுமான நிதிகளை ஒதுக்குமாறு இந்த அரசு இந்திய அரசுக்குக் கடிதம் எழுதி யுள்ளது. அப்போதுதான் கதர்-கிராமத் தொழில் திட்டங் களைச் செயல்படுத்த மாநில வாரியங்களுக்கு அதிக தொகைகளை ஆணைக்குழு வழங்க முடியும். இது குறித்து அவசியமானவற்றைச் செய்வதாக இந்திய அரசு உறுதி யளித்துள்ளது.

## கோரிக்கை எண் 27, கதர், 1978-79.

### 321. கிராமத் தொழில்களும், சிறு தொழில்களும்.

(ரூபாய்களில்.)

கதர்த் தொழில்கள் :

I திட்டத்தில் சேராதவை—

| | | |
|---|---|---|
| AA. | தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்தின் கதர் வளர்ச்சிக்குரிய உதவி மானியங்கள். | 19,00,000 |
| AB. | தணிக்கைக் கட்டணத்தைச் செலுத்துவதற்கென தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு அளிக்கப்படும் மானியங்கள், உதவி மானியங்கள் .. .. | 12,50,000 |
| AD. | கிராமத் தொழில்கள் நிதிக்கென தமிழ் நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு அளிக்கப்படும் மானியங்கள், உதவி மானியங்கள் .. .. .. .. | 26,00,000 |

I. மாநிலத் திட்டம்— 1978 மார்ச் 6

(ரூபாய்களில்)

JB. கதர் நெசவாளர்களுக்கு துணைக் கருவிகள் வழங்குவதற்கென தமிழ் நாடு கதர்-கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு அளிக்கப்படும் மானியங்கள், உதவி மானியங்கள். 1,000

JC. கதர் விற்பனைத் தள்ளுபடிக்கான உதவி மானியங்கள் .. .. 40,00,000

JA. பழங்குடியினருக்கு தேனீ கூடு கள் வழங்குவதற்கென அளிக்கப் படும் மானியங்கள் .. .. 5,00,000

VI மத்தியத் துறை—

XA. நீலகிரி மாவட்டத்தில் தேனீ வளர்ப்பை வளப்படுத்துவதற்கென தமிழ்நாடு கதர்—கிராமத் தொழில் கள் வாரியத்திற்கு அளிக்கப்படும் மானியங்கள், உதவி மானியங்கள். ..

மொத்தம் .. 1,02,51,000

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

செவ்வாய்கிழமை, 1978 மார்ச் 7.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள்** தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### ஆலத்துறை பாசனத் திட்டம்

**421 வினா—திரு. யா. சை. மு. யூசுப்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், நான்குநேரி வட்டத்திலுள்ள ஆலத்துறை ஆறு நீர்ப்பாசனத் திட்ட வேலை முடிவடையும் தருவாயிலேயே நீண்டகாலமாக இருக்கின்றதா?

(ஆ) இத்திட்டம் நிறைவுபெற நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** (அ) மற்றும் (ஆ) ஆலத்துறையாறு திட்டத்தில் கால்வாய் முடியும் இடத்திலுள்ள டிராப் (Drop) மற்றும் பாதுகாப்பு வேலைகள் தவிர மற்ற எல்லா வேலைகளும் முடிவடைந்துவிட்டன. கால மழையினாலும், அண்மையில் இயங்குகின்ற இராணுவ பயிற்சி முகாமினாலும் இந்த வேலை தடைப்பட்டுள்ளது. தண்ணீர் செல்வதற்கு இந்த முடிவடையாத வேலைகளால் எந்த தடையும் கிடையாது.

[1978 மார்ச் 7

திரு. யா. சை. மு. யூசுப்: துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆலத்துறை நீர்ப்பாசனத் திட்டம் ஏற்கெனவே நிறைவேற்றப் பட்டு திறக்கப்படாமல் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சா வர்கள் சொன்னதைப் போல அங்கு அடிக்கடி இராணுவ முகாம் இடுகின்ற காரணத்தால் வேலை தடைப் பட்டிருந்தது உண்மை. இப்போது மலைப் பகுதி வேலை முடிந்து, ஆற்றுப் பகுதி வேலை மட்டும் பாக்கி இருக்கிறது. இந்த நோக்கில் வேலையை முடிக்கின்ற அந்தத் திட்டத்தை உடனடியாக மேற்கொண்டு, தண்ணீர் பயன்படுத்துவதை ரெகுலேட் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

## பச்சையாறு திட்டம்

* விஞ—திரு. யா. சை. மு. யூசப், திரு. மு. மு. அ. ரசாக் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், நான்குநேரி வட்டத்திலுள்ள பச்சையாறு திட்டத்திற்கு 1975 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப் பட்டும் வேலை தொடரப்படாமல் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் நிறைவேற அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் மறு பரிசீலனை செய்யப்படுகிறது. மேலும் கூடன்குளம் அருகே ஓர் அணு மின் நிலையம் அமைக்க இவ்வரசு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது. அணு மின் நிலையத்திற்கான தண்ணீரையும் வழங்குவதற்கு பச்சையாறு திட்டத்தை மாற்றியமைக்க விரிவான ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.



1978 மார்ச் 7]

திரு. யா. சை. மு. யூசுப் : துணைத் தலைவரவர்களே, கூடன்குளம் அருகே அமைக்கப்பட இருக்கிற அணுமின் நிலையத்திற்கும் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கும் பச்சையாறு திட்டத்திற்கும் என்ன சம்பந்தம் என்பதை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அணுமின் நிலையத்திற்குத் தண்ணீர் தேவை. பச்சையாறு மூலம் கிடைக்கும் தண்ணீரைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது யோசனை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கூடன்குளத்தில் ஒரு அணுமின் நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். அந்தத் திட்டம் இந்த தமிழ் நாடு அரசால் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதா ? அது எத்தனையாவது பிரையாரிட்டி கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மத்திய அரசைப் பொறுத்தவரை, தென் பிராந்தியத்தில் எங்கெங்கே அணுமின் நிலையம் அமைக்கலாம் என்று இடத்தை தேர்வு செய்தபோது தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் கூடன்குளம் பகுதியில் அமைக்கலாம் என்று தெரிவித்து இருக்கிறோம். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் இந்தத் திட்டம் ஒரு உருக்கொள்ளவில்லை.

திரு. மு. அம்பிகாபதி : துணைத் தலைவரவர்களே, நீர்த் தட்டுப்பாடு மிகுந்திருக்கிற இந்த நோக்கில் அணுமின் நிலையம் அமைப்பது என்பது வரவேற்கத்தக்கது. இந்த அணுமின் நிலையம் எத்தனை கோடி ரூபாய்க்கான திட்டம்? இத்திட்டம் முடிவடைய எத்தனை ஆண்டு ஆகும் என்பதை அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, மூலக் கேள்வி பச்சையாறு திட்டத்தைப் பற்றியது.

திரு. மு. ஜான் வின்சென்ட் : தலைவரவர்களே, முன்னாள் காங்கிரஸ் அரசில் பச்சையாறுத் திட்டம் கொண்டு வரப்பட்டு, 1974-75 ஆம் ஆண்டில் அன்றைய முதலமைச்சர் கருணாநிதி அவர்களால் அடிக்கல் நாட்டப் பெற்று, 225 லட்சம் ரூபாய்

செலவில் போடப்பட்டத் திட்டம் இது. இத்திட்டம் நிறைவேற்றப்
பட்டால் 11,835 எக்கர் நிலம் பயன்படும். ஆகையால் இத்திட்டம்
இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே,
28—2—1975 அன்று சில திட்டங்களை ஆராயமலே கொள்கை
யளவில் ஏற்றுக்கொள்கிறோம் என்று அன்றைய அரசு
அறிவித்தது. அப்படி அறிவித்ததில் இது ஒரு திட்டம். இந்தத்
திட்டத்தின் மதிப்பு 464 லட்சம் ரூபாய். இதன் மூலம் புதிதாக
பலன்பெறும் நிலம் 260 ஏக்கர்தான். மேலும் அதுபற்றிய
குறிப்பில் என்ன இருக்கிறது என்றால், 10,203 ஏக்கர்
இத்திட்டத்தின் மூலம் நீர் உறுதிப்படும். ஏற்கெனவே பாசன
வசதி பெறும் பகுதி உறுதிப்படும். 10,203 ஏக்கர் நிலம் பாசன
நீரால் உறுதிப்படுமா என்பது குறித்து மேலும் ஆராயப்பட
வேண்டுமென்று வருவாய் வாரியம் ஒரு பிரச்சனையை எழுப்பி
இருக்கிறது. ஆக, புதிதாக பாசனம் பெறும் நிலம் 260 ஏக்கர்
தான். 10,203 ஏக்கர் நீர் உறுதிப்படுவதற்கும் 260 ஏக்கர் பாசன
வசதி பெறுவதற்கும் போதுமான தண்ணீர் வருமா என்பது
குறித்து மறு ஆய்வு செய்ய வேண்டுமென்று வருவாய் வாரியம்
திருப்பி அனுப்பி இருக்கிறது. அப்படி மறு ஆய்வு செய்யும்
போது, கடன்குளத்தில் அணுமின் நிலையம் அமைக்கும் திட்டம்
இருப்பதால் அதற்குத் தேவையான தண்ணீர் கிடைக்கக்கூடிய
வாய்ப்புகள் பற்றியும் சேர்த்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று
கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

## குடகனாறு அணை

* 423 வினா—திரு. ரா. மார்க்கபந்து, திரு. கு. ரமணி :
மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா—

குடகனாறு அணை உடைப்பு பற்றி விசாரிக்க அமைக்கப்பட்ட
நீதி விசாரணைக் கமிஷன் பணிகள் எந்த நிலையில் உள்ளன ?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இக்குழு இப்போது
தொழில் நுட்ப விவரங்களை பரிசீலனை செய்து வருகிறது.
இக்குழுவின் அறிக்கை மார்ச் 1978-ல் அரசுக்கு கிடைக்குமென்று
எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. கு. ரமணி :** பேரவைத் துணைத் தலைவரவர்களே,
குடகனாறு அணை உடைந்து மக்களுக்கு பெரும் நாசத்தை
ஏற்படுத்தியுள்ள அந்த இடத்தில் விசாரணை முடிந்து அந்த அணை
மறுபடியும் கட்டப்படுமா ? அது உறுதிதானா ? அந்த அணை
கட்டப்பட்டபோது அதிலே வேலை பார்த்த தொழிலாளர்கள்
மார்ச் மாதத்திலே இருந்து அத்தனை பேரும் வேலையில்லாமல்
இருக்கிறார்கள் என்று சொல்லப்படுவது உண்மையா ? அந்த அணை
நிச்சயமாக கட்டப்படுமா ? அதிலே வேலை பார்த்த தொழிலாளர்
களுக்கு மீண்டும் தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைக்கும் வகையில்
சீக்கிரத்தில் வேலை கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே,
இந்தக் குடகனாறு அணைத் திட்டம் அண்மையிலே பெய்த
மழையில் அடித்துக் கொண்டு செல்லப்பட்டு விட்டது. இந்த
அழிவுக்கு என்ன காரணம் என்பதைப் பற்றி ஆராய்வதற்கு ஒரு
குழு நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழுவுக்கு எவ்வாறு
ஆராய வேண்டுமென்று டெர்ம்ஸ் ஆஃப் ரெபரன்ஸ்
கொடுத்திருக்கிறோம். அந்தக் குடகனாறு அணை கட்டப்பட்டதில்
அந்த டிசைன் சரியா ? திட்டமிடப்பட்டது சரியா ? என்பதும்
இரண்டாவதாக திட்டமிட்டபடி அதாவது 'Whether the execution
is according to the design' நிறைவேற்றப்பட்டிருக்கிறதா ?
என்பதும் மூன்றாவதாக ஏற்பட்டிருக்கிற உடைப்புக்கள் அல்லது
சேதங்கள் ஆகியவற்றிற்கு இந்த டிசைன் காரணமா அல்லது
செயல்முறை காரணமா என்பதும் நான்காவதாக அதைப்
பராமரிக்க இருந்த அதிகாரிகளின் கவனக் குறைவு காரணமா
என்பதும் ஐந்தாவதாக திட்டம் இனிமேலும் இருக்க வேண்டுமா,
அவ்வாறு இருக்க வேண்டுமென்றால் என்ன காரியங்களைச் செய்ய
வேண்டும் என்பதும் ஆகிய இவ்வெல்லா பரிந்துரை விவரங்
களையும் கேட்டு அனுப்பியிருக்கிறோம். அதற்கான அறிக்கை

கொடுத்த பிறகுதான் முடிவு செய்ய முடியும். அவர்கள் அறிக்கைக்குப் பிறகு மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது நல்லதல்ல என்று தெரிவதாக இருந்தால் மேலும் 3, 4 கோடி ரூபாயை நாம் வீணுக்குகின்ற நிலையில் இல்லை.

**திரு. கு. ரமணி:** தலைவரவர்களே, சரியான ஆய்வுக்குப் பிறகு அரசு என்ன முடிவுக்கு வருகிறதோ அதை நாங்கள் வரவேற்போம். ஆனால் ஒரு பாவமுமறியாத தொழிலாளர்களுக்கு வேலையில்லாமல் போய் அவர்கள் கஷ்டப்படுவதால் அவர்களுக்கு பக்கத்திலே இருக்கக் கூடிய வைகை பகுதிகளிலே அவர்களுக்கு உடனே வேலை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா? என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல இயலும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, குடகனாறு அணைத் திட்டம் எப்போது கட்டப்பட்டது? அதற்கு செலவான தொகை எவ்வளவு? இதற்கு முன்பு அந்த அணைக்குத் தண்ணீர் வந்திருக்கிறதா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, எஸ்டிமேட் போடப்பட்டது, அதாவது திட்டமிடப்பட்ட மதிப்பீடு 212 லட்ச ரூபாய். அது கட்டி முடிக்கப்பட்ட தேதி என்னிடத்தில் இல்லை. ஆனால் கட்டி முடிந்த வரையில் அங்கு தண்ணீர் வந்ததாக அந்தப் பகுதி மக்கள் நான் அங்கு சென்ற போது தெரிவிக்கவில்லை. தண்ணீர் வந்ததும் ஒரு முறைதான் அடித்துக் கொண்டு போனதும் ஒரு முறைதான்.



[முற்பகல் 9-10]

**திரு. எஸ். ஜே. இராமசாமி:** குடகனாறு அணை உடைந்து போனது சமீபத்தில் பெய்த பெருமழை காரணமாக என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். அந்த விசாரணைக் குழுவில் யார் யார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? அதில் சட்டமன்ற உறுப்பினர்கள் யாராவது இடம் பெற்றிருக்கிறார்களா? இல்லையானால் அப்படி இடம் பெறுவதற்கு அமைச்சர் அவர்கள் வகை செய்ய முன்வருவார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** சட்டமன்ற உறுப்பினர்களை இந்தச் சிக்கலில் மாட்டி வைப்பது சட்டமன்ற உறுப்பினர்களுக்கே நல்லதல்ல. அதோடு மட்டுமல்லாமல், மாநில அரசின் பொறியாளரையேகூட நாம் வைத்து விசாரித்திருக்கலாம். இருந்தாலும் அவர்கள் அரசாங்கத்திற்கு சாதகமாக அறிக்கை கொடுத்து விட்டார்கள் என்ற புகார் வந்தாலும் வரலாம் என்ற அடிப்படையில் மத்திய அரசினிடத்தில் எழுதிக் கேட்டு மத்திய அரசினுடைய நீர் ஆய்வுக் குழு உறுப்பினர் திரு. ஏ. என். ஹர்கௌலி, அவர்கள் தலைவராகவும் ஏற்கனவே நம் மாநிலத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற தலைமைப் பொறியாளர் திரு. வி. ஆர். எஸ். பாண்டியன் அவர்கள் உறுப்பினராகவும், திரு. ஏ. எம். சுவாமிநாதன், ஐ.ஏ.எஸ். அரசு இணைச் செயலாளர் அவர்கள் செயலாளராகவும் நியமிக்கப்பட்டு இம்மூவரும் அதுபற்றி ஆராய்ந்து அறிக்கை தருவார்கள்.

**திரு. செ. சிவசாமி:** கடந்த பெருமழையில் குடகனாறு உடையாவிட்டாலும் வேடசெந்தூர் அழிந்து போயிருக்கும் என்று சொல்லப்பட்டது. அப்படி வேடசெந்தூர் அழிந்து போயிருக்கும் என்று தெரிந்தும் கூட அந்த இடத்தில் ஏன் அந்த அணையைக் கட்டினார்கள். மீண்டும் அந்த இடத்தில் அணை கட்ட உத்தேசமுண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** அதுபற்றித்தான் அந்தக் குழு தீவிரமாக ஆராய்ந்து நமக்குத் தெரிவிக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இந்த அணையைக் கட்டுவதற்கு பொறுப்பாக இருந்த அதிகாரிகள் இப்போது வேலையில் இருக்கிறார்களா? இந்த விசாரணை நடத்துகிறபோது During the pendency of the Enquiry whether this Government is likely to take any action on those officers?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, we should await the report from the Committee before proceeding against any officer.

திரு. செ. சதாசிவம்: இந்த அணை உடைப்பு சம்பந்தமாக வந்த என்குயரிக் குழுவினிடம் சாட்சி சொன்னவர்களில் நானும் ஒருவன். அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய பெரும்பாலான மக்களின் எண்ணம் அந்த அணையை மீண்டும் கட்ட வேண்டும் என்பது தான். ஆகவே, அரசாங்கம் அதை நிச்சயமாகப் பரிசீலித்து அந்த அணையைக் கட்டுவதோடு அது மீண்டும் உடையாத அளவிலும், அதில் அதிகமான அளவிற்கு தண்ணீர் கொள்ளக்கூடிய அளவிற்கும் திருத்தியமைத்து கீழ்ப்பகுதியிலுள்ள வரண்ட பகுதியிலுள்ள மக்களுக்கு வாழ்வளிக்க வழிவகை செய்யப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாட்சி சொன்னதற்கு நன்றி. அதை முதலில் தொழில் நுட்ப விசாரணையாகத்தான் போட்டோம். பிறகு அதை பகிரங்க விசாரணையாக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை வந்த பிறகு அதைப் பற்றி பத்திரிகைகளில் விளம்பரம் போட்டு பொதுமக்களைக் கேட்டு கருத்துக்களை அறிந்திருக்கிறார்கள். அந்த அணையை எவ்வாறு அமைக்கலாம், எந்த இடத்தில் அமைக்கலாம், எந்த வகையில் எவ்வளவு செலவில் அமைக்கலாம் என்பதை விரிவாக ஆராய்ந்து வல்லுநர் குழு அறிக்கை அளித்த பிறகுதான் எந்த முடிவும் எடுக்க முடியும்.

திரு. மு. அரங்கநாதன்: இந்த அணையைக் கட்ட வேண்டுமென்று அந்தப் பகுதிவாழ் மக்கள் பெரும்பாலோர் அந்த இடத்தில் அந்த அணை வேண்டுமென்று வேண்டுகோள் செய்திருக்கிறார்கள். அப்படி வேண்டுகோள் செய்ததற்குப் பின்னால் அந்த அணை கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்



பட்டனவா? அந்த இடத்தில் அந்த அணை தேவை என்று பொறியாளர் அனுமதி பெறப்பட்டுள்ளதா? பெற்று அதன் அடிப்படையில் அது கட்டப்பட்டதா அல்லது கடந்த கால அரசு நேரடியாக எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்ற நோக்கோடு அது கட்டப்பட்டதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த அணையைப் பொறுத்தவரையில், இந்த அணை கட்டப்பட்ட இடத்திலுள்ளவர்கள் இந்த அணையினால் எங்களுக்கு பயன் இல்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். அதன் மூலம் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த பகுதிகளுக்குதான் பாசன வசதி கிடைக்கிறது என்பது அவர்களுடைய குறை. ஆகவே இதைப் பற்றியெல்லாம் இந்த தொழில் நுட்ப குழு ஆராய்ந்து தகவல் தந்த பிறகு தான் இதன் மீது முடிவு எடுக்க முடியும். முன்னால் இருந்த அரசு எந்த அடிப்படையில் இந்த அணையைக் கட்டியது என்பதும் இந்தக் குழுவின் அறிக்கையின் மூலம் தான் விவரங்கள் கிடைக்கும்.

## புதிய உயர்நிலைப் பள்ளிகள்.

*424 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடப்புக் கல்வியாண்டில் தமிழ்நாட்டில் புதிய உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தத் தனியார்களிடமிருந்து எத்தனை விண்ணப்பங்கள் வந்தன?

(ஆ) எத்தனை விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) 19.

(ஆ) 7.

திரு. கோ. இளங்கோவன்: துணைத் தலைவர் அவர்களே, வசதியும் வாய்ப்பும் உள்ள தனியார் உயர்நிலைப் பள்ளிகளில் மேல் உயர்நிலை பள்ளிகளை அமைக்க அவை முன் வரவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா? அப்படிப்பட்ட பள்ளிகளுக்கு அரசு

[1978 மார்ச் 7

அறிவுரை கூற முன்வருமா ? இல்லையென்றால் ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றுக்கும் அரசு உயர்நிலைப் பள்ளியைக் கொண்டு வர அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இதற்கு தனிக் கேள்வி போடவும்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** ஸார், தனியார் பள்ளிகளை எல்லாம் அரசே ஏற்றெடுத்து நடத்த வேண்டும் என்று சொல்லுகின்ற இந்த நேரத்தில் தனியார் பள்ளிகளை துவங்குவதற்கு இன்னும் அனுமதி வழங்கிக் கொண்டிருப்பது இந்த சர்க்காரின் தொடர்ந்து இருக்கும் கொள்கையா ? இப்படி தனியார் பள்ளிகளுக்கு அனுமதி வழங்குவதற்குப் பதிலாக அரசே உயர்தர பாடசாலைகளை ஆரம்பிக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, அரசின் நிதிநிலைக்கு ஏற்ப புதிய உயர்நிலை பள்ளிகளை துவங்குவதற்கு அனுமதி வழங்குகின்றோம். இந்தப் பிரச்னையை அந்த முறையில் தான் அணுகி வருகின்றோம்.

**திரு. மி. வின்சென்ட் :** புதிய உயர்நிலைப் பள்ளிகளில் எத்தனை மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள் ? உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு எத்தனை விண்ணப்பங்கள் வந்தன. எத்தனை விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றன ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, புதிய உயர்நிலைப் பள்ளி ஆரம்பிப்பதற்கு சில நிபந்தனைகள் இருக்கின்றன. இதற்கென்று வருகின்ற விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்குகின்ற விஷயத்தில் நாம் நம்முடைய நிதி ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு தான் புதிய உயர்நிலைப் பள்ளிகளை துவங்குவதற்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

**திரு. துரை முருகன் :** தலைவர் அவர்களே, இப்போது அரசின் சார்பில் எத்தனை புதிய உயர்நிலைப் பள்ளிகள் துவங்கப் பட்டிருக்கின்றன என்பதையும், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின் எத்தனை உயர்நிலைப் பள்ளிகளை துவக்கியிருக்கிறார்கள் என்பதையும் அறிவிப்பார்களா ?



1978 மார்ச் 7]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, இதில் மூலக் கேள்வி, 'நடப்பு கல்வியாண்டில் தமிழ் நாட்டில் புதிய உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தத் தனியார்களிடமிருந்து எத்தனை விண்ணப்பங்கள் வந்தன என்பதும் எத்தனை விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது ?' என்பதும். இதற்கு நான் பதிலில் அனுமதி வழங்கப்பட்டது. 7 என்று சொன்னேன்.

**திரு. ஆர். விஜயரகுநாத தொண்டமான் :** உதவி சபாநாயகர் அவர்களே, இந்த தனியார் பள்ளிகளில்தான் அதிகமாக ஊழல்கள் நடைபெறுகின்றன. ஆகவே தனியார் பள்ளிகளுக்கு அனுமதி கொடுக்கும்போது, இப்படிப்பட்டவர்கள் நல்லவர்களா அல்லவா என்று பார்த்து அனுமதி கொடுக்கப்படுமா ? அப்படி கொடுப்பதால் ஊழல்கள் நடைபெற முடியாமல் பார்த்துக் கொள்ள முடியும் என்பதால், அப்படி ஒரு கொள்கையை அரசு ஏற்றுக் கொண்டு செயலாற்றுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அறிவு வளர்ந்திருக்கின்ற நிலையில் ஊழல்கள் நடந்ததற்குப் பின்னால்தான் கண்டுபிடிக்க முடிகிறதே தவிர; முன்னால் கண்டுபிடிக்க முடியவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, நிதிநிலைக்கு ஏற்ப அரசு தனியார் பள்ளிகளுக்கு அனுமதி வழங்கி வருகிறது என்று சொன்னார்கள். இப்போது தனியார் பள்ளிகளாக இருந்தாலும், அரசு பள்ளிகளாக இருந்தாலும் அரசுதான் பணம் செலவு செய்து வருகிறது. முன்னால் மூன்றில் இரண்டு பங்கு என்றிருந்தது, இப்போது முழுமையாகவும் அரசே செலவு செய்து வருகிறது. இப்படி பல கிராண்டுகளை கொடுத்து வருகிறோம். இந்த நிலையில் தனியார் பள்ளிகளில் பல ஊழல்கள் நடைபெற்று வருவதாகவும் தகவல்கள் வருகின்றன. ஆகவே இதைத் தவிர்ப்பதற்கு—தனியார்கள் மூலமாக பள்ளிகள் நடத்த

[1978 மார்ச் 7

அனுமதி வேண்டும் என்று கேட்கின்ற நேரத்தில் தனியார் களிடத்தில் அவைகளை விடாமல் அரசே இவைகளை எல்லாம் ஏற்றெடுத்து நடத்துவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.20]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, தனியார் துறையிலே பள்ளிகள் ஆரம்பிக்கப்படுகின்றபோது, முழுமையான செலவையும் அரசு ஏற்பதில்லை. பல்வேறு செலவுகளை அவர்கள் செய்கின்றார்கள். ஆனால் தனியார் துறையில் ஆரம்பிக்கப்படுகின்ற பள்ளிகளுக்கு அனுமதி தரக்கூடாதென்று பேசப்படுகின்ற இந்த நேரத்தில், நம்முடைய அனுமதியைப் பெறாமலேயே சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்தவர்கள் பள்ளிகள் ஆரம்பிக்கலாம் என்ற ஒரு நிலைமை இருந்து வருகிறதென்பதையும், அப்படி ஆரம்பித்ததற்குப் பின்னாலே இந்த அரசின் அனுமதி பெற்றுக் கொள்ள முடியும் என்ற நிலைமை இருந்து வருகிறது என்பதையும், இதுபோன்றதைத் தவிர்க்கப்பட வேண்டுமானால் நாம் அரசியல் சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டுமென்றும், அதற்கான முயற்சிகளில் ஈடுபடுமாறு மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்தும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படித் தனியார் பள்ளிகளுக்கு அனுமதி தருகின்ற நேரத்தில், இந்த உயர்நிலைப் பள்ளிக்குத் தேவையான கட்டிட வசதியோ, விளையாட்டு மைதான வசதியோ அல்லது வேறு வகையான வசதிகளோ ஏற்படுத்திய பின்னால்தான் அனுமதி தரப்படுகின்றதா? அல்லது ஏற்படுத்தப்படும் என்ற நம்பிக்கையில் அனுமதி தரப்படுகின்றதா? ஆனால் பல்வேறு உயர்நிலைப் பள்ளிகளிலே கட்டட வசதியில்லாமல், விளையாட்டு மைதான வசதி இல்லாமல் இருக்கின்றன. எனவே, இந்த வசதிகள் அனைத்தையும் ஏற்படுத்தியதற்குப் பின்னர் அனுமதி வழங்கப்படுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



978 மார்ச் 7]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளுக்கு சில குறிப்பிட்ட குறைந்தபட்ச வசதி இருந்தால்தான் அனுமதி தர வேண்டுமென்ற நிலை இருக்கிறது. ஆனால், உயர்நிலைப் பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களின் தேவைகளையும் நாம் பார்க்கிறோம். ஆகவே, இந்தத் தேவைகளை உடனடியாகப் பூர்த்தி செய்ய வேண்டுமென்ற நிலைமையில், சில வசதிகளைப் பற்றிய நிபந்தனைகளைத் தளர்த்தி, தனியார் பள்ளிகளுக்கு அரசு அனுமதி வழங்கிக் கொண்டு வருகிறது.

**திரு. சொ. ந. பழனிச்சாமி :** மாண்புமிகு உதவித் தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளிலே ஊழல்கள் நடக்கின்றது என்று எங்கள் கட்சியைச் சேர்ந்த தொண்டமான் அவர்கள் சொன்னார்கள். அதிலும் குறிப்பாகக் கூற வேண்டுமென்றால், சத்துணவுத் திட்டத்திலே ஏழை மக்களுக்கு அளிக்கப்படுகின்ற இந்த உணவிலே கல்லையும், புழுவையும் கலந்த ஒரு அரிசியைச் சமைத்துப் போடுகின்றார்கள் என்பதையும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதைப் பற்றி இந்த அரசு கவனித்து ஆவன செய்யுமா என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, எந்த இடத்திலே நடைபெறுகின்றது என்பதைக் குறிப்பாகத் தெரிவிப்பார்களானால், அதுபற்றிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு நலமாக இருக்கும். ஏதோ ஒரு இடத்தில் நடைபெறுகின்ற குற்றத்தை வைத்து, எல்லோருடைய தலையிலும் அதைச் சுமத்துவது முறையாகாது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. அ. சுவாமிதாஸ் :** தலைவர் அவர்களே, ஒட்டு மொத்தமாகத் தனியார் பள்ளிகளிலே ஊழல்கள் நடப்பதாக இங்கே சட்ட மன்றத்திலே புகார்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே, தனியார் பள்ளிகளில், அதுவும் மைனாரிட்டியார் நடத்துகின்ற பள்ளிகளிலே, பெரும்பாலான பள்ளிகள் முன்மாதிரிப் பள்ளிகளாகத் தமிழ்நாட்டிலே செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. அப்படிச் செயல்படுகின்ற

அவர்கள், முன்னுரிமையில் தாங்களாகவே இந்த ஆண்டில்
ஏறத்தாழ 50-க்கு மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகளை அவர்கள்
துவக்கியிருக்கிறார்கள். அரசு இந்த எல்லா உயர்நிலைப்
பள்ளிகளுக்கும் அனுமதி வழங்கவில்லை. ஆனால், தேர்விலே
மாணவர்கள் கலந்து கொள்ள அனுமதி வழங்கியிருக்கிறது.
ஆகவே, இந்தத் தனியார் பள்ளிகளின் நன்மையைக் கருதி
எல்லாப் பள்ளிகளுக்கும் இந்த ஆண்டு அனுமதி வழங்குவதற்கு
இந்த அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே,
முறைப்படி அரசு பரிசீலனை செய்து அதற்கான அனுமதியை
வழங்கும்.

**திரு. ஆர். மணிமாறன் :** பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, தனியார் துறைப் பள்ளிகளுக்கு அரசு அனுமதி
வழங்கும்போது, இந்த உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்துவதற்கு
என்ன என்ன வரையறையை, முறைகளைப் பின்பற்றி அனுமதி
அளிக்கப்படுகின்றது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே,
கட்டிட வசதி, இட வசதி போன்ற வசதிகளும், இன்னும் பல்வேறு
நிபந்தனைகளும் இருக்கின்றன. அதைத் தெரிந்து கொள்வதற்குத்
தனியாக கேள்வி போட்டால், அந்த விவரங்களைத் தெரிந்து
கொள்ளலாம்.

**திரு. மு. அரங்கநாதன் :** பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, அரசு உதவி பெறும் தனியார் பள்ளிகளில்
பணியாற்றுகின்ற ஆசிரியப் பெருமக்களுக்கு, எல்லா ஆசிரியர்
களுக்கும் நிர்ணயிக்கப்படுகின்ற ஊதிய விகிதங்கள் சரியான
முறையிலே வழங்கப்படுவதில்லை என்று பொதுவாகப் புகார்கள்
இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, அவர்களுக்கு வழங்கப்
படுகின்ற ஊதியத்தை நேரடியாக வழங்குவதற்கான முயற்சிகளை
இந்த அரசு மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே,
அப்படிப்பட்ட முறைகேடுகள் நடந்தால், நேரடியாக
வழங்குவதற்கான சாத்தியக் கூறுகளை இந்த அரசு ஆராயும்.



**திரு. எச். ஜி. ஆறுமுகம் :** உயர்நிலைப் பள்ளிகள் பல, ஆரம்பப்
பள்ளிகள் இருக்கும் கட்டடங்களிலேயே இருந்து
கொண்டிருக்கின்றன. குறிப்பாக என்னுடைய தொகுதியில்
உள்ள ஒரு ஆரம்பப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக மாற்றப்பட்டு
கட்டடம் கட்ட ஆரம்பிக்கப்பட்டு பாதியிலேயே நின்று
கொண்டிருக்கிறது. அந்த உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம்
கட்டிக் கொடுக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** புதிய பள்ளிக்கூடம்
துவக்குகின்றபோது, கட்டடங்கள் கட்டித் தருகின்ற
பொறுப்பையும், இடவசதி செய்து தருகின்ற பொறுப்பையும்,
பல்வேறு வசதிகள் செய்து தரும் பொறுப்பையும்
கட்டடக் குழுவினர் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற
முறையில் புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.
அதுவுமல்லாமல் எல்லாப் பள்ளிக் கட்டடங்களையும்
கட்டுகின்ற அளவுக்கு அரசு நிதிநிலைமை இல்லை
என்பதையும், கடந்த பல்லாண்டு காலமாக இப்பேர்ப்பட்ட முறை
தான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய
தொகுதியில் பள்ளிக்கூடம் கட்டுவதற்கான முயற்சியில் கொஞ்சம்
தீவிரமாக ஈடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன் :** பள்ளிக்கூடங்களுக்காக அவர்கள்
அமைத்திருக்கிற கட்டடக் குழுவின் சார்பில் சில கட்டடங்களைக்
கட்ட நிதி வசூலித்து பாதியில், முக்காலில் நின்று விடுகிறது.
அதற்கு மேல் கிராமப் பகுதிகளில் நிதி வசூலிக்க முடியாத
நிலைமையில் அந்தக் கட்டடங்கள் பாதியில் நிற்கின்றன. இந்த
நிலைமையில் 20 பள்ளிக் கட்டடங்களாவது நின்று போயிருக்கும்.
அத்தகைய கட்டடங்களைப் பொறுத்தவரை அரசு தனியாக
உத்தரவிட்டு நிதி உதவி, அந்தக் கட்டடங்களைக் கட்டி முடித்துப்
பயன்படுத்திக் கொள்ள முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** புதிய கட்டடங்களுக்கு
நிதி ஒதுக்குகின்றபோது இதுபோன்ற பள்ளிகளுக்கு ஒரு
முன்னுரிமை தரலாம்.

திரு. இரா. அருணாசலம் : தனியார் பள்ளிகளில் ஊழல் நடப்பதாகப் பரவலாகப் பேசப்படுகிறது. குறிப்பாக, ஆசிரியர்களுக்கு அந்தந்தப் பள்ளிகளின் மேலாளர்கள் ஊதியத்தைக் கொடுக்கும்போது ஒரு பகுதியைப் பிடித்துக் கொண்டு அக்விடன்சில் முழுத் தொகையும் போட்டு கையெழுத்து வாங்குகிறார்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். அந்த மாதிரிக் குறைகள் பற்றி அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா ? அப்படி வந்திருந்தால் அவற்றைப் பற்றி அரசு கவனித்து நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அத்தகைய பள்ளிகளில் நேரடியாக ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபடும். ஆயினும் இதுபோன்ற நுணுக்கங்களை எல்லாம் இங்கே பேசுவதன் மூலமாக தெரியாதவர்களுக்கும் சொல்லிக் கொடுக்கும் முறையை நாம் உருவாக்க வேண்டாம்.

### பாதாரமியில் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்.

* 425 வினா—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தொகுதி, பாதாரமியில் உயர்தரப் பாடசாலைக் கட்டடம் கட்டுவதற்காக 2½ ஏக்கர் நிலம் வாங்கப் பட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(இ) கட்டடம் கட்டும் வேலை தற்போது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) பாதாரமி கிராமத்தில் ஸ. எண். 251-ல் 2.65 ஏக்கரும் ஸ. எண். 263/1-ல் 0.65 ஏக்கரும் ஆகிய 3½ ஏக்கர் பட்டா நிலங்கள்



திரு. பாலகிருஷ்ணன் என்பவரிடமிருந்து பள்ளிக் கட்டிடக் குழுவால் கிரயம் கொடுத்து வாங்கப்பட்டு 21—2—61 அன்று விற்பனை சாசனம் பதிவு செய்யப்பட்டது.

(இ) இப்பள்ளிக் கட்டிடம் கட்டும் வேலை எதுவும் நிலுவையில் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : பல ஆண்டுகள் ஆகியும் ஆந்திரா பார்டரில் இருக்கக்கூடிய மிகவும் பின்தங்கி இருக்கக் கூடிய ஒரு பிரதேசத்தில் இருக்கக்கூடிய அந்தப் பாடசாலைக் கட்டடத்திற்காக வேண்டி 3½ ஏக்கர் நிலத்தைக் கொடுத்தற்குப் பிறகும் அரசு அவர்கள் கொடுக்க வேண்டிய பணத்தைக் கொடுத்து அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு முன்வராத காரணத்தால்தான் அந்த வேலை இப்போது அப்படியே ஸ்தம்பித்து நிற்கிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, முன் கேள்விக்கு அமைச்சர் பதில் கூறியது போல் இதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு உடனடியாகக் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆறு வகுப்பறைகள் கொண்ட கூறைக் கட்டிடத்தை மாற்றி ஆறு வகுப்பறைகள் கொண்ட நிரந்தரக் கட்டடம் கட்டும் நிலை குறித்து மாவட்ட அளவில் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : பரிசீலனை இன்னும் எத்தனை வருஷ காலம் நடைபெறும் ? இப்போதே பத்து பன்னிரண்டு வகுப்புகள் வெளியிலே மரத்தடியில் நடத்தப்பட்டு வருகிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, உடனடியாகக் கட்டடம் கட்டி அங்கே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு நல்லது செய்ய உடனடி ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எதுவுமே விரைவில் நடைபெற வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது. ஆனால் பரிசீலனை என்று சொல்லுகிறபோது அதற்குத் தேவையான நேரத்தை எடுத்துக் கொள்வதில் நியாயம் இருக்கிறது. அந்த அளவுக்குக் காலத்தைத்தான் எடுத்துக் கொள்வார்கள்.

## ஆடுதுறையில் பெண்கள் உயர்நிலைப் பள்ளி

*426 வினா—திரு. செ. இராமலிங்கம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், ஆடுதுறையில் பெண்களுக்கான உயர்நிலைப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

[முற்பகல் 9-30]

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆடுதுறை பேரூராட்சியில் நீண்ட நாட்களாக ஒரு உயர்நிலைப் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று அங்கே இருக்கின்ற பெரும்பகுதி மக்கள் விருப்பம் தெரிவித்து அதற்கான நடவடிக்கைகளை எடுத்து பல்வேறு கோரிக்கைகளை அனுப்பியிருக்கிறார்கள். அதைச் சுற்றிலும் இருக்கிற கிராமப் பகுதிகளில் உள்ள மக்கள் ஆடுதுறையிலே ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அவசியமாக ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லி வருவதால் அப்படிப்பட்ட ஒரு உயர்நிலைப் பள்ளியை துவக்குவதற்கு அரசு இனிமேலாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட கோரிக்கை வரும்பொழுது பரிசீலிக்கப்படும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தஞ்சை மாவட்டத்தில் பாபநாசம் பகுதியில் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி ஆடுதுறையைப் பற்றியது, உட்காருங்கள்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: கேள்வி பெண்கள் உயர்நிலைப் பள்ளியைப் பற்றியிருப்பதால். . .



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பெண்கள் உயர்நிலைப் பள்ளியைப் பற்றியதாக இருந்தாலும் ஆடுதுறையைப் பற்றித் தான் கேட்கப்பட்டிருக்கிறது, பாபநாசத்தைப் பற்றி அல்ல, உட்காருங்கள்.

## தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு மருத்துவ வசதி

*427 வினா—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு பள்ளிக்கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் இலவச சிகிச்சையளிக்கும் திட்டத்தினை, தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: உதவி பெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர், ஆசிரியரல்லாதோர் மற்றும் அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தோர் இவர்கள் அரசு மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகளில் இலவச மருத்துவ வசதி பெற தேவையான ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. கோ. இளங்கோவன்: துணைத் தலைவர் அவர்களே, இந்த வசதி தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது குறித்துப் பரிசீலிக்கப்படும்.

## பஞ்சாயத்துக்களைப் பிரித்தமைத்தல்.

*428 வினா—திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேர்தலுக்கு முன்பாக பஞ்சாயத்துக்களை பிரிக்கும் உத்தேசமுண்டா?

(ஆ) ஆம் என்றால் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) ஆம். 28—2—78-க்குள் இந்த வேலை முடிவு பெற வேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் படி ஊராட்சிகளைப் பிரிக்கும் அதிகாரம் ஊராக வளர்ச்சி இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ளது. 23—2—78 முடிய 215 கருத்துருக்கள் பெறப்பட்டன. அவற்றை ஆய்வு செய்து 163 ஊராட்சிகளைப் பிரித்து ஆணையிட்டுள்ளார். 18 கருத்துருக்கள் பல்வேறு காரணங்களால் நிராகரிக்கப்பட்டன. 34 கருத்துருக்கள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிவு செய்ய இயலாது என்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

**திரு. துரை முத்துசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த காலக் கெடுவை இன்னும் நீட்டுவதற்கு உத்தேசம் உண்டா? பஞ்சாயத்துக்களைப் பிரிப்பதிலே அங்கே செல்வாக்குப் பயன்படுத்தியவர்களுக்குத் தான் பஞ்சாயத்துக்கள் பிரிக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது, ஆகவே எல்லா தகுதிகளையும் பெற்றிருக்கின்ற பஞ்சாயத்துக்கள் கூட பிரிக்கப் படவில்லை என்ற குறைபாடு இருக்கிறது, அது நீக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** புதிதாகப் பிரிக்கப்பட்ட ஊராட்சிகளில் வார்டுகளைப் பிரிப்பதற்கும் வாக்காளர்கள் பட்டியலைத் தயாரிப்பதற்கும் இதுபோன்ற காரியங்களுக்காக 3½ மாதங்கள் தேவைப்படுகிறது. ஆகவே தேர்தல் வருவதற்குள் இவைகளையெல்லாம் பிரிக்க முடியாது, எனவே காலக் கெடுவை நீட்டிக்க வேண்டியதில்லை என்று அரசு கருதுகிறது. விதிகளின் படிதான் ஊரக வளர்ச்சி இயக்குநர் ஊராட்சிகளைப் பிரிப்பதைப் பற்றி முடிவு செய்கிறார்.

**திரு. ரா. மார்க்கபந்து :** துணைத் தலைவர் அவர்களே, சில பஞ்சாயத்துக்களை பிரிக்கின்றபோது 2, 3 ரெவின்யூ கிராமங்கள் இருந்தால் ஒரு ரெவின்யூ கிராமத்திலே உள்ள சில சர்வே நம்பர்களை வேறு கிராமத்தோடு சேர்த்துவிட்டு பிரிக்கின்ற முறை இருக்கிறது, அதைப் பற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா? அப்படி இருக்கின்றவற்றை மாற்றி மறுபடியும்





அந்தந்த சர்வே நம்பர்களை அந்த அந்த ரெவின்யூ கிராமங்களோடு சேர்த்து பஞ்சாயத்துக்களைப் பிரிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா? இன்னொரு கேள்வி. கால வரையறையை நீட்டிக்கும் உத்தேசம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். முறையாக பஞ்சாயத்துக்களில் தீர்மானம் போட்டு கலெக்டர்களுக்கு அனுப்பியும்கூட இந்தப் பட்டியலில் அந்தப் பஞ்சாயத்துக்கள் இடம் பெறவில்லை. ஆகவே அவைகளை எல்லாம் பிரிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** திரு. மார்க்கபந்து அவர்கள் முதலிலே கேட்ட கேள்விக்கு பதில், மாவட்ட ஆட்சித் தலைவர் எந்த வகையிலே பரிசிலனை செய்ய வேண்டுமென்று சொல்கிறாரோ அந்த வகையிலே அதை ஏற்று அதிலே சிக்கல் இல்லாத அளவிற்குத்தான் பிரிக்கப்படுகிறது. காலக் கெடுவை நீட்டித்துக் கொண்டே போனால் அது முடிவற்ற கதையாக இருக்கும். ஆகவே குறிப்பிட்ட காலத்திற்குள் அதை முடிவு செய்வதுதான் நல்லது.

**திரு. என். பழனிவேல் :** பேரவைத் தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கக் கூடிய அமைப்பிலே பழனி வட்டம் ஆயக்குடி பேரூராட்சியை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று அந்தப் பேரூராட்சி தீர்மானம் போட்டு அனுப்பியிருந்தது. அது தற்போது எந்த நிலையிலுள்ளது என்பதோடு தொப்பம்பட்டியில் 40-க்கும் மேற்பட்ட பஞ்சாயத்துக்கள் அமைந்திருக்கின்றன; அதையும் இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று அந்தப் பகுதியில் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது என்று என்னிடத்தில் கூறினார்கள். அதையும் பிரிக்க பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, 374 ஊராட்சி ஒன்றியங்களும், 12,000-க்கும் மேற்பட்ட ஊராட்சிகளும் இருக்கின்றன. எனவே, குறிப்பிட்ட ஒரு ஊராட்சி

ஒன்றியத்தைப் பற்றியோ, ஊராட்சியைப் பற்றியோ மாண்புமிகு உறுப்பினர்கள் தகவல் தெரிய விரும்பினால் தனியாகக் கேள்வி போடுவதுதான் நல்லது.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** பேரவைத் தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் எத்தனை ஊராட்சிகளைப் பிரித்திருக்கிறார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா என்பதோடு. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வியைப் பொதுவாகக் கேட்க வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்தைப் பற்றியும் தனியாகக் கேட்க வேண்டும் என்றால் அதற்குத் தனிக் கேள்விதான் போட வேண்டும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** வட ஆற்காடு மாவட்டத்தில் எத்தனை ஊராட்சிகள் பிரிக்கப்பட்டன? பல பஞ்சாயத்துக்களைப் பிரிப்பதற்கு, அமைச்சரவர்கள் சொன்னார்கள் பிப்ரவரி 28 ஆம் தேதிக்குள் என்று, அதை இன்னும் கொஞ்சம் நீட்டித்துக் கொடுக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் ஏறக்குறைய 30 ஊராட்சிகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன என்று கருதுகிறேன். காலக் கெடுவை நீட்டிப்பது தேர்தலைத் தள்ளிப் போடக் கூடிய சூழ்நிலைக்குக் கொண்டு வந்துவிடும். குறிப்பிட்ட காலத்திற்கு முன்னாலே முடிப்பதுதான் நல்லது.

**திரு. துரை முருகன் :** சார், அமைச்சரவர்கள் பதில் அளிக்கும் நேரத்தில் மூன்றரை மாதங்களுக்குள் முடிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியென்றால் மூன்றரை மாதங்களில் தேர்தல் வரும் என்று அறிவிக்கிறாரா அமைச்சர்? அப்படி தேதி நிர்ணயிக்கப்பட்டு விட்டதா? அப்படியென்றால் எந்தத் தேதி?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** கேள்வி, ஊராட்சிகளைப் பிரிப்பது பற்றியது.





**திரு. துரை முருகன் :** ஊராட்சி மன்றத் தேர்தலைப் பற்றித் நான் கேட்கிறேன்.

**திரு. ஏ. சுவாமிநாதன் :** தலைவரவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய பரிந்துரையின் மேல் ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமென்று கருதினால் ஊராட்சி மன்றங்களை மாறுதல் செய்யலாம் என்று தெரிவித்தார்கள். அண்மையில் நடந்த கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்தில் கூட இது குறித்து நாங்கள் கேள்வி கேட்டபொழுது நாங்கள் அரசுக்கு கன்னியாகுமரி மாவட்ட பஞ்சாயத்துப் பிரிவினை பற்றி விண்ணப் பித்திருக்கிறோம். கூடிய சீக்கிரம் அரசு முடிவெடுக்கும் என்று ஆட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, குமரி மாவட்டத்தில் ஒட்டுமொத்தமாக ஊராட்சி அமைப்புகளைச் சீர்திருத்தி அமைக்க வேண்டிய நிலை இருப்பது உறுப்பினருக்குத் தெரியும் என்று கருதுகிறேன். இதுபற்றிய கருத்தை மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து பெற்று இதுபற்றி முடிவு செய்ய அரசு காத்திருக்கிறது.

**திரு. கே. பண்ணை சேதுராம் :** தலைவரவர்களே, சில பஞ்சாயத்துக்களை உண்மையிலேயே பிரிக்க வேண்டிய நியாயமான காரணங்கள் இருக்கின்றன. ஆகவே, பிப்ரவரி 28 ஆம் தேதிக்குள் முடிவு பெற வேண்டுமென்று கொடுக்க வேண்டிய உத்தரவுகளெல்லாம் கொடுத்துவிட்டதால், நியாயமாகப் பிரிக்கப்பட வேண்டிய பஞ்சாயத்துக்கள் பிரிக்கப் படாமல் இருப்பதால், இன்னும் ஒரு மாதம் நீட்டித்து, மார்ச் 31 ஆம் தேதி வரையில் காலக் கெடுவை நீட்டித்து, பஞ்சாயத்துக்களைப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, பிரிக்கப்பட வேண்டிய அளவில் பல ஊராட்சிகள் பிரிக்கப் பட்டிருக்கின்றன. ஆகவே, காலக் கெடுவை நீட்டிப்பதாக உத்தேசமில்லை.

A 274—4

[1978 மார்ச் 7

**திரு. நா. ராமசாமி :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஊராட்சிகளைப் பிரிக்கின்ற நேரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்தை அறிந்து பிரிப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத்தினுடைய கருத்தையும் அறிந்து பிரிக்கப்படுகின்றதா அல்லது அதன் கருத்தை அறியாமலேயே மாவட்ட ஆட்சித் தலைவருடைய சிபாரிசின் மேல் செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, ஊராட்சி மன்றத்தின் கருத்தின் மீதும், வட்டார வளர்ச்சி இயக்குநர் அவர்களின் கருத்தின் மீதும் மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்கிறார்.

**திரு. ப. சந்திரன் :** தலைவரவர்களே, ஊராட்சிகளுக்குக் காலவரம்பு அறிவிக்கப்பட்டு அந்தக் காலவரம்பு கடந்து விட்டது. இருந்தாலும் அந்தக் காலவரம்பிற்குள்ளாக மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசோடு அந்த மனுக்கள் இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. குறைந்தபட்சம் அந்த மனுக்களையாவது பரிசீலித்து பிரிப்பதற்கு வழிவகை செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:** தலைவரவர்களே, குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு வந்து சேர்ந்திருக்கிற கோரிக்கைகள் நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும்.

*429 வினா—**திரு. துரை கலியமூர்த்தி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சிதம்பரம் வட்டம், கீரபாளையம் ஒன்றியம் பூந்தோட்டம் ஊராட்சியினை பூந்தோட்டம்—வாகூர் என இரண்டாகப் பிரிக்க கீரபாளையம் ஒன்றியம் மூலம் கோரப் பட்டதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும் ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) ஆம். பூந்தோட்டம் ஊராட்சியை பூந்தோட்டம்—வாகூர் என இரு ஊராட்சிகளாகப் பிரித்து 25—10—1977 இல் ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆணை பிறப்பித்துள்ளார்.



78 மார்ச் 7]

(ஆ) பிரிவினை செய்யப்பட்ட இரு ஊராட்சிகளும், டைபெறவிருக்கும் ஊராட்சிகளின் சாதாரணத் தேர்தல் நாள் தல் நடைமுறைக்கு வரும்.

**திரு. துரை கலியமூர்த்தி :** தலைவரவர்களே, வருகிற ஊராட்சி ன்றியத் தேர்தலில் கலந்து கொள்ள வாய்ப்பு அளிக்கப்படுமா ன்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** தலைவரவர்களே, வாய்ப்பு ளிக்கப்படும்.

*430 வினா—**திரு. துரை கலியமூர்த்தி :** மாண்புமிகு ள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு டையளிப்பாரா :—

(அ) தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள வெள்ளியக்குடி பஞ்சாயத்தை வெள்ளியக்குடி, வடபாக்கம் என இரண்டாகப் பிரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

**மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :** (அ) பஞ்சாயத்துக்களைப் பிரிக்கும் அதிகாரம் ஊரக வளர்ச்சி இயக்குநருக்கு வழங்கப் பட்டிருக்கிறது. அதன்படி வெள்ளியக்குடி ஊராட்சியை வெள்ளியக்குடி, வடபாக்கம் என இரண்டு பஞ்சாயத்துக்களாகப் பிரித்து 25—10—1977 இல் ஊரக வளர்ச்சி இயக்குநர் ஆணை பிறப்பித்துள்ளார்.

(ஆ) இவ்விரு ஊராட்சிகளும் சாதாரண பஞ்சாயத்து தேர்தல் நாள் முதல் நடைமுறைக்கு வரும்.

## மூவாநல்லூர் குடிநீர் திட்டம்

*431 வினா—**திரு. மு. அம்பிகாபதி :** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மன்னார்குடி தாலுக்கா மூவாநல்லூரில் குடிதண்ணீர் திட்டம் அமுலாக்கப்பட்டு விட்டதா ?

(ஆ) வீதிகளுக்கு குழாய் இணைப்புக் கொடுப்பதில் சிக்கல் ஏதும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதைத் தீர்க்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) இல்லை.

(இ) வினா எழ இடமில்லை.

(முற்பகல் 9-40)

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, சுதந்திரம் வந்து 30 வருஷத்திற்குப் பிறகு
குடி நீர் வழங்குவதற்கான திட்டங்களை நாம் தீட்டியிருக்கிறோம்.
இந்தக் குடி நீர் திட்டத்தை மூவாநல்லூர் கிராமத்திற்கு
விரைவிலே நிறைவேற்றி, குடி நீர் கிடைப்பதற்கு அரசு
நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிந்து கொள்ள
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத்
தலைவரவர்களே, மூவாநல்லூரில், ஊராட்சி ஒன்றியத்தால்
அமைக்கப்பட்ட 6 கை அழுத்த குழாய்களும் (Hand Pumps)
4 திறந்த வெளி கிணறுகளும் உள்ளன. அதோடு, மேல்நிலை
நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் உள்ளது. அதிலுள்ள நீர்
இரு பொதுக் குழாய்கள் மூலமாக ஊருக்கு வழங்கப்பட்டு
வருகின்றது. அதோடு, அரிசன மக்கள் வாழும் இடத்திலே
ஒரு கையழுத்தக் குழாய் 1976-77 இல் பொருத்தப்பட்டு, நன்றாக
இயங்கி வருகிறது. மேலும், ஒரு தரைமட்ட நீர்த் தேக்கத்
தொட்டியினை அரிசன காலனியில் அமைக்கும் பணி, அரிசன நலத்
துறையினரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தரைமட்ட நீர்த்
தேக்கத் தொட்டி, இறைவை நிலையம் முதலியவை
அமைக்கப்பட்டும் விட்டன. இறைவை இயந்திரம் பொருத்தி
மின் இணைப்பு பெறும் பணி எஞ்சியுள்ளது. அது முடிவு
பெற்றவுடன் குடிநீர் நிரம்பக் கிடைக்கும்.

*E.S.I. Hospital for Dharmapuri district.*

*432 Q.—Dr. K. SAMARASAM: Will the Hon. the Minister
for Labour be pleased to state whether there is any proposal with
the Government to open an E.S.I. Hospital in Dharmapuri district?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இல்லை.



மணக்குடியில் நலத்துறைப் பள்ளி

*433 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத் துறை
அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியம் 'மணக்குடி' பஞ்சாயத்தில்
தாழ்த்தப்பட்டோருக்கென தனிப் பள்ளி ஒன்று இயங்கி
வருகின்றதா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாயூரம்
ஒன்றியம் 'மணக்குடி' பஞ்சாயத்தில் தாழ்த்தப்பட்டோருக்கென
தனிப் பள்ளி ஒன்று இயங்கி வருகின்றது.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, அந்தப் பள்ளியில் பல்வேறு குறைகள்
இருப்பதாகவும், அது சிறப்பாகச் செயல்படுவதற்குப் பல்வேறு
ஆலோசனைகள் வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. அந்த
வகையில் அப்படிப்பட்ட அந்த தாழ்த்தப்பட்டோர் பள்ளியைச்
சிறப்பான முறையில் நடத்துவதற்கு நம்முடைய அமைச்சரவர்கள்
தனிக் கவனம் செலுத்தி, அந்தப் பள்ளியைச் சீர்படுத்துவதற்கு
ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே,
தற்பொழுது இருக்கிற பள்ளிக் கட்டிடம் பழுதடைந்திருக்கிறது.
அது தெரிந்த பிறகு, ரூ. 1,800 செலவில், அதைத் திருத்தி
யமைப்பதற்கு ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளிக்
கூட்டப்பட்ட இடத்தில் ஏற்கனவே உள்ள ஒரு குழாய்கிணறு குடி
தண்ணீருக்காகப்பயன் படுத்தப்பட்டு வருகிறது.

## தீண்டாமை ஒழிப்புக் குழு

*434 **திரு. சு. பாலன் :** மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறை D.I.G. தலைமையில் தீண்டாமை ஒழிப்பு உயர்மட்டக் குழு ஏதேனும் அமைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், இதற்கு தலைவர் யார் ?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, திருத்தப்பட்ட குடி உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் 9—11—1976 முதற்கொண்டு செயலுக்கு வந்தது. காவல் துறை டி.ஐ.ஜி. தலைமையில் தீண்டாமை ஒழிப்பு உயர்மட்டக் குழு இம்மாநிலத்தில் ஏதும் அமைக்கப்படவில்லை. இச்சட்டம் கண்டிப்பாக செயற்படுத்தப்படுகிறதா என்பதைக் கவனிக்க காவல் துறை டி.ஐ.ஜி. பதவித் தரத்தில் ஒரு காவல் துறை அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

**திரு. சி. மாணிக்கம் :** தலைவரவர்களே, தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கை எடுக்கும்பொழுது புகார் தரப்பட்டதும் போலீஸ் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து விடுகிறார்கள். அந்த மனு மீது பல நேரங்களில் பரிசீலனை கூட நடப்பதில்லை. எனவே, மாவட்ட அளவில் அரிசன மக்கள் மீது பற்று வைத்துள்ளவர்களைக் கொண்டு குழு அமைத்துத் தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, இந்தத் தீண்டாமையை ஒழிப்பதற்குத்தான் ஒவ்வொரு மாவட்ட அளவிலேயும் ஒரு ரோந்துப்படை, அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தனிப்பட்ட குழு அமைப்பதைவிட, ஒவ்வொரு பகுதியிலும் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களும், மக்களும் எங்கெங்கே தீண்டாமைக் கொடுமை இருக்கிறதோ, அங்கங்கே அதை ஒழிப்பதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. சு. பாலன் :** தலைவர் அவர்களே, முந்தைய அரசு ஒரு குழுவை ஏற்பாடு செய்வதற்கு ஏதேனும் ஆணை பிறப்பித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, இந்தத் தீண்டாமை சட்டத்தை செயல்படுத்துவதில் அரசுக்கு ஆலோசனை கூற, மாநில அளவில், மாநில காவல் துறைத் துணைத் தலைவர் உட்பட, அரசு அலுவலர்களும், அலுவலர்கள் அல்லாதவர்களும் சேர்ந்த, ஒரு உயர்மட்டக் குழு குடியுரிமைப் பாதுகாப்பிற்காக ஏற்கனவே அமைக்கப் பட்டிருக்கிறது.

**திரு. துரை முருகன் :** துணைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியோடு சம்பந்தப்படாவிட்டாலும் ஒரு ஒழுங்குப் பிரச்சினையாகவே கேட்கிறேன். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி நேரத்தில் ஒழுங்குப் பிரச்சினை இல்லை.

**திரு. துரை முருகன் :** இது ஒரு முக்கியமான விஷயம். என்னவென்று கேட்டால், இன்று காலைப் பத்திரிகையிலே மாண்புமிகு அரிசன நல அமைச்சர் மருத்துவ மனையிலே அனுமதிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி வந்திருக்கிறது. இங்கே வந்து பார்த்தால் அமைச்சர் அவர்கள் கேள்விக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார், பொதுமக்கள் மிகுந்த பரபரப்பு அடைந்து, ஆஸ்பத்திரியை நோக்கி சென்று கொண்டே இருக் கிறார்கள். ஆகவே நன்றாக இருக்கிற அமைச்சர் அவர்களை— அவர் நல்ல அமைச்சர்—மருத்துவ மனையிலே சேர்த்திருக் கிறார்கள் என்று தவறான தகவலை பத்திரிகைகள் பிரசுரித்திருக் கின்றன. எனவே இது குறித்து ஒரு ஸ்டேட்மென்ட் கொடுப் பார்களா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஆஸ்பத்திரியில்தான் இருந்தார், இப்போது நலமாக இருக்கிறார். உங்களுக்குப் பதில் சொல்வதற்கென்றே வந்திருக்கிறார்.

**திரு. க. மருதாசலம் :** துணைத் தலைவர் அவர்களே, தீண்டாமையை ஒழிப்பதற்கு அரசு ஏதேனும் தனித் திட்டம் தீட்டி செயல்படுத்த இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, தீண்டாமைக் கொடுமைகளை அறவே ஒழிக்க வேண்டும் என்று தான் மத்திய சர்க்காரும் ஒரு காலவரையறையை

நிர்ணயித்து அதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளது. இதேபோல மாநில அரசும் மத்திய அரசு இடுகிற கட்டளையைத் துரிதமாக நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பல செயல் திட்டங்களை விரைவிலே வகுத்து, நடைமுறைப்படுத்தி இருக்கிறது.

திரு. இ. கா. ராமலிங்கம்: தலைவர் அவர்களே, தீண்டாமை ஒழிக்க வேறு வழிகளின் மூலம் தீவிரப்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே இதைத் தீவிரமாகத் தான் கடந்த காலத்தில் இருந்த அரசும் இந்த அரசும் செயல்படுத்தி வருகிறது

திருமதி சுப்புலட்சுமி: தலைவர் அவர்களே, ரோந்து படை செயல்பட்டு வருவதாகக் கூறினார்கள். அது தற்பொழுது எந்தெந்த மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டிலிருந்து கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, தென்னார்க்காடு, மதுரை ஆகிய 6 மாவட்டங்களில் இந்த ரோந்துப் படை செயல்பட்டு வருகின்றது.

திரு. எம். ஏ. ஜெயவேலு: தலைவர் அவர்களே, தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம் காலனிகளில் மட்டும்தான் நடத்தப்படுகிறது. இது மற்ற இடங்களிலும், ஊர்களிலும் நடத்தப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, காலனிகளிலே மட்டும் அல்ல, பொதுவாக எல்லா இடங்களிலும் நடத்தப்படுகிறது.

திரு. ஏ. செல்லப்பன்: தலைவர் அவர்களே, தீண்டாமை ஒழிப்பு காவல் துறையில் பொதுவாக ஆட்களை எடுக்கும்போது தாழ்த்தப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா? இதுவரையில் அப்படி எத்தனை தாழ்த்தப்பட்ட காவல் துறை அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: கேள்வி தீண்டாமை ஒழிப்பது பற்றி. காவல் துறையினரை நியமிப்பது பற்றி அல்ல.

திரு. மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, தீண்டாமையை ஒழிப்பது என்கின்ற அடிப்படையிலேதான் கடந்த காலத்தில் தமிழக அரசு, அர்ச்சகர்கள் சட்டம் ஒன்றினை நிறைவேற்றி, அது சுப்ரீம் கோர்ட்டு உத்தரவினால் முடக்கப்பட்டு கிடக்கிறது. அந்தச் சட்டம் மீண்டும் உலவ வேண்டுமேயானால், நடைமுறைக்கு வரவேண்டுமேயானால், அரசியல் சட்டத்தில் திருத்தம் தேவை. அதை ஏற்கனவே இருந்த கழக அரசு பலமுறை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, வலியுறுத்தி வந்திருக்கிறது. அப்படி இந்த அரசும் வலியுறுத்துமா, தீண்டாமையை ஒழிக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு?

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: அந்த நல்ல நோக்கம் இந்த அரசுக்கு இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: துணைத் தலைவரவர்களே, தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடத்துவதாலும், தாழ்த்தப்பட்ட மக்களை அர்ச்சகர்களாக்குவதினாலும் தீண்டாமையை ஒழித்துவிட முடியும் என்று இந்த அரசு கருதுகிறதா? கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய நிலங்களை சொந்தமாக்கி, அவர்களுக்குப் பட்டா கொடுத்து, வேலைக்கு உத்தரவாதம் செய்யாமல் தீண்டாமையை ஒழிப்போம் என்று மாநாடு போடுவதாலும் கோயில் அர்ச்சகர்களாக்குவதாலும் தீண்டாமையை ஒழித்துவிட முடியுமா? கோவில்களில்தான் ஜாதி வித்தியாசமும் தீண்டாமையும் வளர்க்கப்படுகிறது என்பது இந்த அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே. தீண்டாமையை ஒழிப்பதற்கு எவ்வளவுதான் சட்டங்கள் போட்டாலும் என்னதான் அரசு திட்டங்கள் தீட்டினாலும்

நாட்டிலே இருக்கிற ஒவ்வொருவருக்கும் மனமாற்றம் தேவை. அந்த மனமாற்றத்தை ஏற்படுத்தி, ஊக்குவிக்க முதலில் நல்ல எண்ணம் தேவை. அதை உருவாக்க அரசு முயற்சி செய்கிறது.

**திரு. மு. கருணாநிதி:** ஜாதியை வேரோடு களைய வேண்டும்; அறவே அகற்ற வேண்டும் என்று தமிழகத்திலே பிரச்சாரம் செய்து செயல்பட்ட தந்தை பெரியார் அவர்கள் கூட ஆலயங்களிலே அர்ச்சகர்களாக அனைவரும் ஆக வேண்டுமென்ற தகுதி பெற வேண்டும் என்பதற்காக போராட்டத்தை நடத்தத் தயாராக இருந்தார்கள். அவர்கள் மறைகின்ற வரையில் அந்த உணர்ச்சியோடு செயல்பட்டு வந்தார்கள். கோயில்களில் அர்ச்சகர்களாக ஆக்கப்படுவதால் தீண்டத் தகாத மக்கள் அல்லது தாழ்த்தப்பட்ட மக்கள் முன்னேறிவிடுவார்கள் என்று பொருளல்ல. அவர்களுடைய உரிமை காக்கப்படுகிறது; அதற்குப் பாதுகாப்பு அளித்தோம் என்று பொருள். அந்த வகையில்தான் இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்தி அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று கேட்டேன். அமைச்சரவர்கள் அந்த நல்ல நோக்கம் இருக்கிறது என்று சொன்னார்கள். அது மத்திய அரசுக்கு வலியுறுத்தி எழுதப்படுமா என்று கேட்டதற்குப் பதில் சொல்லவில்லை. அந்தப் பதிலை எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, அந்த நல்ல நோக்கம் இந்த அரசுக்கு இருக்கிறது என்று ஏற்கெனவே நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, அதற்குரிய நடவடிக்கையை எடுக்க இந்த அரசு முயற்சி எடுக்கும்.

**திரு. வீ. சின்னய்யா:** தலைவரவர்களே, தீண்டாமையை ஒழித்திடும் திட்டம் பற்றி இங்கே சொன்னார்கள். தாழ்த்தப் பட்டவர்களிலேயே தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கிறார்களே, அது இந்த அரசுக்குத் தெரியுமா? இந்தச் சட்டம் அவர்களுக்கும் பொருந்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** அந்த வேறுபாடு இருப்பது அரசுக்கும் தெரியும். சட்டம் அவர்களுக்கும் பொருந்தும்.





**திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்:** துணைத் தலைவரவர்களே, தீண்டாமையை ஒழிக்க வேண்டுமென்ற இத்திட்டம் நீண்ட நாட்களாக அரசின் கவனத்தில் இருந்தாலும் 'இன்டீரியர்' என்று சொல்லக்கூடிய மிக உள்ளடங்கிய கிராமப்புறங்களில் இருக்கிற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இன்னமும் தாழ்வு மனப்பான்மை இருக்கிறதே, அதைப் போக்க 'டு எஜுகேட் தெம்' பக்குவம் பெற வேண்டிய நிலைக்கு ஆவன செய்ய இந்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, ஏற்கெனவே நான் பதில் அளித்தபோது கூட அரசாங்கம் மட்டும் முயற்சி செய்தால் போதாது என்று சொன்னேன். ஆங்காங்கே இருக்கிற ஒவ்வொருவரும் கடமை உணர்வோடு இதில் முயற்சி எடுத்தால்தான் இந்த நிலையைப் போக்க முடியும். அதற்கு மாண்புமிகு உறுப்பினர்களை போன்றவர்கள் தீவிரமாகப் பிரச்சாரம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ரா. மார்க்கபந்து:** தலைவரவர்களே, சென்ற கூட்டத் தொடரிலேயே பஞ்சாயத்துச் சட்டத்தில் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தோம். இப்போது பஞ்சாயத்துத் தேர்தல், முனிசிப்பல் தேர்தல் வரப்போகிறது. அப்படி தேர்தல்கள் வரக் கூடிய காலத்தில் போட்டியிட விரும்புகின்ற சில செல்வாக்குப் படைத்தவர்கள் வேண்டுமென்றே உண்மைக்குப் புறம்பாக எதிர்த்து நிற்பவர்கள் மீது வழக்குகளைப் போட்டு, அவர்களை தேர்தலில் போட்டியிட முடியாமல் செய்யக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா? இப்போது செல்வாக்குப் படைத்தவர்கள் ஆதிக்கம் மேலோங்கி நிற்கிறது என்பதால் இதைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** அப்படி ஒரு கொடுமையான நோக்கோடு நடைபெறும் என்கிற அச்சம் தேவையில்லை.

**திரு. பொ. உத்திராபதி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, தீண்டாமை என்பது சுதந்திரம் பெற்று 32 ஆண்டுகளாகியும் மத்தியிலே எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி அல்லது மாநிலத்திலே எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் சரி தீண்டாமை

ஒழிப்பது எங்கள் பிரதான கடமை என்றுதான் கூறி வந்திருக்கிறார்கள். நம்முடைய தமிழகத்தில் 20 ஆண்டு காலம் காங்கிரஸ் ஆட்சி புரிந்தபோதும், 9 ஆண்டு காலம் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி புரிந்தபோதும் அவர்கள் இதே கருத்தைத்தான் கூறி வந்தார்கள். இன்றைய ஆட்சியும் அதே வாக்குறுதி தான் கொடுத்து வருகிறார்கள்.

நான் தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன். இந்த அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாவது மத்திய அரசை எதிர்பார்க்காமல் தமிழக சட்டமன்றம் ஒரு தீர்மானம் கொண்டு வந்தால் இங்கே இருக்கக் கூடிய அத்தனை பேரும் ஆதரிப்பார்கள் என்ற அந்த அடிப்படையில் மத்திய சர்க்கரை எதிர்பார்க்காமல் இந்தத் தீண்டாமை ஒழிப்புக்கு ஒரு சட்டம் கொண்டுவரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** இந்தத் தீண்டாமை கொடுமை அகில இந்திய அளவில் இருந்து வருகிற ஒன்றாகும். ஏற்கனவே இருந்த சட்டம் கொஞ்சம் கடுமையாக ஆக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு தான் சட்டங்கள் போடப்பட்டாலும் அல்லது கடுமையான தண்டனை வழங்கப்பட்டாலும் கிராமப் பகுதிகளில் தீண்டாமை இன்னும் வேர் ஊன்றிப் பரவிக் கொண்டுதான் இருக்கிறது. ஆகவேதான் சொன்னேன். மக்கள் மத்தியில் மனமாற்றம் தேவை என்று.

**திரு. ஆர். விஜயரெகுநாத தொண்டமான் :** மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் தீண்டாமை ஒழிப்பது பற்றி பேசும்போது இப்போது ஹரிஜன் காலனி கட்டிக் கொடுக்கிறார்கள். அதைப் பார்த்தால் ஊருக்கு வெளியே தனியாக ஹரிஜன் காலனி என்று கட்டிக் கொடுக்கிறார்கள். மற்ற ஜாதிக்காரர்கள் அதிலே இல்லாததுபோல் தோன்றுகிறது. இப்படி நாம் அவர்களுக்கென்று தனியாக ஒதுக்கி ஒதுக்கி வீடுகள் கட்டிக் கொடுக்கும்போது இந்தத் தீண்டாமை ஒழிப்பது என்பது இந்தத் தலைமுறையிலேயே அதைக் கொண்டு வர முடியாது. அதனால் அரசாங்கம் இனிமேலாவது அந்த ஹரிஜன் காலனிகளைக் கட்டிக் கொடுக்கும்போது ஊருக்குள்ளேயே மற்ற ஜாதிக்காரர்கள் இருக்கக்கூடிய இடத்திலேயே கட்டிக் கொடுத்து எல்லோரும் ஒன்றாக வாழக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. பெ. சௌந்திரபாண்டியன் :** அரசாங்கம் ஹரிஜன மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க திட்டமிடுகிற நேரத்திலே பொதுவான இடத்தில் இடம் இருக்கிறதா என்று பார்க்கிறோம். அங்கே இடம் இல்லை என்றால் தான் வேறு இடத்திலே வீடு கட்டுகிற பணி செயல்படுத்தப்படுகிறது. முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலும் கூட இந்த முறைதான் இருந்துவந்தது.

### போக்குவரத்து விதிகளின் கீழ் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட லாரிகள்.

* 435 வினா—**திரு. எஸ். ஜே. இராமசாமி :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974 முதல் இன்று வரை சென்னை நகரில் பாரங்கள் ஏற்றி வரும் லாரிகளுள் விதிமுறைகள் சரிவர பின்பற்றப்படாத காரணத்தால் போலீஸ் நடவடிக்கை எடுக்கப்பட்ட லாரிகள் எத்தனை ?

(ஆ) எத்தனை லாரி உரிமையாளர் அல்லது டிரைவர்கள் மீது வழக்குகள் போடப்பட்டன ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** (அ) 1974 முதல் 30—9—1977 வரை சென்னை நகரில் 786 பாரங்கள் ஏற்றி வரும் லாரிகள் மீது, விதிமுறைகள் சரிவர பின்பற்றப்படாத காரணத்தால், போக்குவரத்துக் காவலர்களால் (போலீஸ்) நடவடிக்கை எடுக்கப்பட்டது.

(ஆ) 786 லாரி உரிமையாளர்கள் மீதும், 786 டிரைவர்கள் மீதும் வழக்குகள் போடப்பட்டன.

**திரு. எஸ். ஜே. இராமசாமி :** தலைவரவர்களே, இந்த பாரங்கள் ஏற்றி வரக்கூடிய லாரிகள் போலீஸ்காரர்களால் தடுக்கப்பட்டு மறிக்கப்படுகிற நேரத்திலே அந்தப் போலீஸ்காரர்கள் வழியிலே பல தவறுகளுக்கு உள்ளாகிறார்கள். அந்த அதிக பாரம் ஏற்றி

வரக்கூடிய டிரைவர்களின் பாட்ஜை எல்லாம் பிடுங்கி வைத்துக் கொள்ளக் கூடிய நிலைமை இருக்கிறது. இதைப் போக்குவதற்கு அவர்களுக்கு ஏதாவது ஸ்டிரிக்ட் ஆக ஒரு ஆணையை இந்த அரசு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதிக பாரம் ஏற்றி வருகின்ற லாரி உரிமையாளர்கள் மீதும் டிரைவர்கள் மீதும் காவல் துறை நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு வழக்கு முடிந்த பிறகு மாவட்ட போக்குவரத்து அதிகாரிகள் லாரியின் பெர்மிட்டை சஸ்பெண்ட் செய்கிறார்கள். காவல் துறை அதிகாரிகள் தவறு செய்வதாக தனிப்பட்ட புகார்கள் ஏதேனும் வந்தால் அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(முற்பகல் 10-00)

**திரு. சி. ஆறுமுகம்:** மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, வெளி மாவட்டங்களில் இருந்து லாரிகளில் பாரம் ஏற்றிக் கொண்டு சென்னை நகரத்திற்குள் வருவதற்கு பயப்படுகிறார்கள். காரணம், சென்னை நகர டிராபிக் போலீஸ் அத்தனை பேரும் மோட்டார் சைகிள் வைத்துக் கொண்டு கிண்டிக்கு அருகாமையிலேயே அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருமானத்தை மாமூல் மூலமாக வசூல் செய்து விடுகிறார்கள். ஆகவே, அதைத் தடுக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதிக பளுவை ஏற்றிக் கொண்டு லாரிகளில் வருபவர்கள் காவல் துறையினரைக் கண்டு பயப்படத் தேவையில்லை. அஞ்சுபவர்கள் தவறு செய்கிறார்கள் என்று பொருள். காவல் துறை அதிகாரிகள் தவறு செய்கிற லாரிகள் மீதும் ஓட்டுநர்கள் மீதும் தான் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கிறார்கள். ஊழல் இருக்கிறது என்று சொன்னால் கண்டிப்பாக காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வப்போது எடுக்கப்பட்டும் வருகின்றது.



**திரு. கே. சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறுகிறபோது தவறு செய்கிறவர்கள் தான் அஞ்சுகிறார்கள் என்று பொருள்பட சொன்னார்கள். தவறு செய்பவர்கள் மட்டும் அஞ்சுகிறார்கள் என்பது அல்ல. நியாயமாக இருப்பவர்கள் கூட அஞ்ச வேண்டி யிருக்கிறது. காரணம் ஒரு காவல் துறை அதிகாரி ஒரு லாரியை நிறுத்தி, 3—4 மணி நேரம் நிற்க வைத்து விட்டால், அதன் காரணமாக அவர்களுடைய தொழில் பாதிக்கப்படுகிறது; அடுத்த நாள் அவர்கள் ஏற்றிச் செல்வதற்கு பாரம் கிடைப்பது போய்விடும் சூழ்நிலை இருக்கிறது. அதற்குப் பிறகு அவர்கள் காவல் நிலையத்திற்கு அவர்களை அழைத்துச் சென்று வழக்கு எதுவும் போடவில்லையென்று சொல்லி திருப்பி அனுப்பிவிடலாம். ஆனால், இப்படி 4—5 மணி நேரம் நிறுத்தி வைத்த காரணத்தால் அவர்களுக்கு ஏற்படும் தாமதத்தால் விளையும் பாதகத்தைக் கருத்தில் கொண்டு அஞ்சுகிறார்கள். அது அமைச்சருக்குத் தெரியுமா? அப்படி என்றால் அப்படிப்பட்ட சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் மீது தகுந்த முறையில் நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவரவர்களே, முன்னாலே நான் குறிப்பிடும்போது 786 லாரிகள் மீது, தவறு செய்கிறார்கள், என்று வழக்குப் போடப்பட்டது என்று சொன்னேன். காவல் துறையினர் நடவடிக்கை எடுக்காமல், வழக்கு பதிவு செய்யாமல் இருந்தால், லாரி உரிமையாளர்கள் தவறு செய்யப்படுவதைத் தடுக்க முடியாது என்பதால் மாண்புமிகு உறுப்பினர் கூறிய யோசனையை பரிசீலிக்க முடியாது என்று கூறிக் கொள்கிறேன். காவல் துறை அதிகாரிகள் ஆங்காங்கு அந்த லாரி உரிமையாளர்களை தடுத்து நிறுத்தி, லஞ்சம் பெறுகிறார்கள் என்ற தகவல் வரும்போது, அரசு கண்டிப்பான நடவடிக்கை எடுத்து வரும் என்பதை கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் அனுமதியோடு கேள்வி நேரத்தை நீட்டித்துக் கொள்கிறேன்.

**திரு. க. அன்பழகன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, லாரிகள் புறப்படுகிற இடத்தில் இருந்து சென்னைக்கு வந்து சேருகிறவரையில், வழியில் எந்த விதமான செக்கிங்கும் இல்லாமல் கடைசியில் சென்னையில் செக்கிங் இருப்பதால் தப்பித்துக் கொள்வதற்கு ஏதாவது செய்யலாம் என்ற எண்ணம் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, லாரிகள் புறப்படும் பகுதியில் கோயம்புத்தூர், திருச்சி, மதுரை போன்ற இடங்களில் இப்படிப்பட்ட செக்கிங் செய்யும் முறையில், அதை சீர்திருத்தி அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே இம்முறை சீர்திருத்தம் செய்யப்பட்டு, அந்தந்த மாவட்டங்களில் இந்தக் கண்காணிப்பு இப்போது நடந்து வருகிறது.

**திரு. எம். ஏ. லத்தீப்:** துணைத் தலைவரவர்களே, அதிகபட்ச பளு நிர்ணயம் செய்யப்பட்டு இருக்கிறதா? அப்படியானால், அது எவ்வளவு? இப்படி அதிக பட்ச பளுவை ஏற்றிக் கொண்டு வருபவர்கள் மீது மட்டும் நடவடிக்கை எடுக்காமல், அதிக பருமனாக—வைக்கோல் போன்றவற்றை ஏற்றிக் கொண்டு வருபவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி பெரிய பருமனாக வைக்கோலை அவர்கள் ஏற்றிக் கொண்டு வருவதால் அது சாலையை அடைத்துக் கொண்டு, பின்னால் வருவது என்ன என்று தெரியாத அளவிற்கு இருப்பதால், விபத்துகள் ஏற்படுகின்றன. ஆகவே, பெரிய அளவில் வைக்கோல் போன்றவற்றை ஏற்றிக் கொண்டு செல்கிற லாரிகள், மாட்டு வண்டிகள் மீது நடவடிக்கை எடுத்து அவற்றைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் தலைவரவர்களே, அதிக பட்ச பளு என்பது 15 டன். அதற்கு மேல் ஏற்றிக் கொண்டு வருபவர்கள் மீது தான் நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைக்கோல் ஏற்றிக் கொண்டு வருகின்ற வண்டிகளைப் பற்றிக் கூறினார்கள். அதுபற்றி நல்ல யோசனை செய்து பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கப்படும்.





**திரு. இரா. தாமரைக்கனி:** துணைத் தலைவரவர்களே, போக்குவரத்துக் கழகங்களை அரசே நடத்தி வருவது மாதிரி, இந்த லாரி மூலம் நல்ல வருமானம் இருப்பதால், அவற்றையும் அரசே ஏற்று நடத்த முன்வருமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கனவே தமிழக அரசின் போக்குவரத்துக் கழகம் லாரிகளையும் அரசுப் பொறுப்பில் நடத்தி வருகிறது. தனியாக அதற்கென ஒரு போக்குவரத்துக் கழகத்தையும் அமைத்து அது நடத்தப்பட்டு வருகிறது. அதை மேலும் விரிவுபடுத்தும் எண்ணத்துடன் அரசு செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம். ஆறுமுகம்:** துணைத் தலைவரவர்களே அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, வைக்கோல் போன்ற கால்நடைகளுக்குத் தேவையான பொருள்களை லாரிகளில் ஏற்றிச் செல்வதை தடை செய்ய பரிசீலிக்கப்படும் என்று கூறினார்கள். அப்படியானால், கால்நடைகளுக்குத் தேவையான வைக்கோல் போன்ற அத்தியாவசியமான பொருள்களை எந்த வகையில் கொண்டு செல்வது என்பதற்கான மாற்று யோசனையை அரசு வழங்குமா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** தலைவரவர்களே, வைக்கோலை மாட்டு வண்டிகளில், லாரிகளில் ஏற்றிச் செல்வதை தடை செய்யப் போவதாகக் கூறவில்லை. பாரம் அதிகமாக ஏற்றிச் செல்வதால் ஏற்படுகின்ற விபத்துகளைத் தடுக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் கோரினார்கள். எனவே அது ஒழுங்குபடுத்தப்படும் என்று கூறினேன்.

**திரு. பி. எச். பாண்டியன்:** சென்னை நகரில் அண்ணா சாலை, சென்ட்ரல் ரெயில்வே ஸ்டேஷன் அருகில் சினிமா விளம்பரங்கள், போஸ்டர்ஸ், அதிகமாக ஒட்டப்பட்டு அல்லது வைக்கப்பட்டிருப்பதன் காரணமாக வாகனங்களை ஓட்டுபவர்கள் தங்களுடைய மன நிலை மாறி போக்குவரத்து விதிகளை மீறுகிற நிலை தனக்கே தெரியாமல் ஏற்படுகிறது. எனவே அதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஓட்டுநர்கள்தான் மனக்கட்டுப்பாட்டை மேற்கொள்ள வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

## பேருந்துப் பயணிகள் கணக்கெடுப்பு.

*436 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேருந்துகளில் பயணம் புரியும் பயணிகளின் நெருக்கடியைப் போக்கவும், வசதியை பெருக்கவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் கம்ப்யூட்டர்களின் மூலம் பிரயாணிகளின் கணக்கை எடுத்து பேருந்துகளை அதற்கேற்ப அதிகப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனின், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். கணேசன் : அவ்வப்போது பொது மக்களின் தேவைகளை அறிந்து பேருந்துகள் அதிகப்படுத்தப்பட்டு வந்தாலும்கூட இந்தப் பேருந்துகளில் இடம் கிடைப்பது என்பது அரிதாக இருக்கிறது. எனவே பரீட்சார்த்தமாக கம்ப்யூட்டர் முறையை எங்கேயாவது சோதனை செய்து பார்க்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : நடைமுறையில் அந்தந்த வழித் தடங்களில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து பேருந்துகள் மிகையாக விடப்பட வேண்டுமா வேண்டாமா என்பதைப் பரிசீலனை செய்து பார்ப்பது தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது. கம்ப்யூட்டர் திட்டம் மூலம் செய்ய வேண்டும் என்றால், நாட்டுடைமையாக்கப் பட்ட இடங்களில் பணிபுரியும் பொறிஞர்கள் ஒரு வட்ட ... பேருந்துகள் இப்போது 51 சதவிகிதம் இருக்கின்றன. அ... றக்குறைய 75 சதவிகிதம் அளவை எட்டும்போது கம்ப்யூட்ட...





முதல் பயணிகளின் அளவைப் பொறுத்து பேருந்துகளை மிகைப்படுத்துவது பற்றிப் பரிசீலிக்கலாம் என்று அரசு கருதிக் கொண்டிருக்கிறது.

திரு. ஏ. செல்லப்பன் : தற்போது நகரப் பேருந்துகளில் அதிகபட்சமாக எவ்வளவு பேர்கள் பயணம் செய்ய அனுமதிக்கப் படுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஸ்டான்டிங் பாஸஞ்சேர்ஸ் 25 பேர்களை ஏற்றிக்கொண்டு செல்ல அனுமதி இருக்கிறது. இருந்தாலும், சென்னை நகரில் பயணிகள் காலை நேரத்திலும் மாலை நேரத்திலும் அதிகமாகப் பயணம் செய்ய வேண்டிய கட்டாயத் தேவை இருக்கிற காரணத்தால் அந்த விதிமுறை அவ்வளவு கட்டாயமாக அமலில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, கடந்த ஒரு தொடர் கூட்டத்தில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு இனிய அறிவிப்பைச் செய்தார்கள். சிறிய கிராமங்களுக்கு சிறிய பஸ்களை விடுவதற்கு அந்தக் கிராமத்திலுள்ள வசதி படைத்த பெருமக்கள் யாராவது சாலைகள் அமைத்துக்கொள்ள முன்வருவார்களேயானால் அவர்களுக்கு பஸ் ரூட் வழங்கப்படும். சிறிய கிராமங்களுக்கு பஸ் வசதி செய்யப்படும். அதற்கான ஒரு திட்டம் பரிசீலனையில் இருக்கிறது என்று சொன்னார்கள். எட்டு மாதங்களாகி விட்டன. அந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டுவிட்டதா? என்ன நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கிராமப்புறத்தில் உள்ள வசதி படைத்தவர்கள் அந்தச் சாலையைப் போட முன்வர வேண்டும் என்று நான் கூறவில்லை. வசதி படைத்தவர்கள், பணம் உள்ளவர்கள் நல்ல மனம் படைத்து முன்வருவார்களானால் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படும் என்ற நோக்கோடு அந்த அறிவிப்பு செய்யப்பட்டது. அந்தத் திட்டத்தின் செயற்குறிப்பு தயார் நிலையில் இருக்கிறது. அதோடு போக்குவரத்துக் கழகங்கள்,

வாரியங்கள் கூட சில கிராமங்களில் சாலைகள் அமைத்துப் பேருந்துகள் விடுவதற்கு முன்வந்திருக்கின்றன. அவை நடைமுறைக்கு வர இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். இராதா :** இந்தப் பேருந்துகளில் பயணிகளின் நெருக்கடியைப் போக்குவதற்காக மனிதர்கள் கணக்கு எடுக்க முடியாது என்று கூறி கம்ப்யூட்டர் மூலம் கணக்கு எடுக்க வேண்டும் என்று கணேசன் அவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். கம்ப்யூட்டர் மூலம் கணக்கெடுத்தாலும் சரி அல்லது மனித சக்தியைப் பயன்படுத்திக் கணக்கெடுத்தாலும் சரி, முதலில் இந்த நெருக்கடியைப் போக்குவதற்காகத் தனியார் பேருந்துகளில் இவ்வளவு பேர்களைத்தான் ஏற்ற வேண்டும் என்ற அளவு இல்லாமல் பஸ்ஸுக்கு மேலே எல்லாம் ஏற்றிக் கொண்டு போகிற நிலை இருக்கிறது. அதை உடனடியாகத் தடுத்து நிறுத்தி பஸ் என்றால் இவ்வளவு பேர்கள் தான் ஏற வேண்டும் என்ற கட்டுப்பாட்டைக் கொண்டு வந்து ஒழுங்குபடுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மொபசல் பஸ்ஸில் இவ்வளவு பேர்களைத்தான் ஏற்ற வேண்டும் என்ற விதிமுறை ஏற்கனவே அமலில் இருந்து வருகிறது. எங்கெங்கே பேருந்துகள் அதிகமாக விடப்பட வேண்டுமோ அந்தப் பகுதிகளில் தேவையின் அடிப்படையில் பேருந்துகள் அவ்வப்போது விடப்பட்டு வருகின்றன.

**திரு. செஞ்சி. ந. இராமச்சந்திரன் :** தற்போது தனியார் பஸ்களில் எல்லாம் அதிகமான பயணிகளை ஏற்றிச் செல்கிறார்கள். அந்தப் பயணிகள் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறதா? அதைக் குறைத்து பஸ் உரிமையாளர்கள் கணக்குக் காட்டுகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** பயணிகளை மிகுதியாக ஏற்றிச் செல்கிற அத்தகைய பேருந்துகளை அவ்வப்போது அந்தந்த மாவட்ட போக்குவரத்துத் துறை அதிகாரிகள் கவனித்து நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அப்படிப்



பயணிகளை அதிகமாக ஏற்றிக் கொண்டு வரும்போது நடவடிக்கை எடுத்துத் தண்டனைக்கும் ஆளாக்கப்படுகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.10]

**திரு. க. மருதாசலம் :** தலைவர் அவர்களே, சென்னை போன்ற நகரங்களில் ஓடிக் கொண்டிருக்கிற பேருந்துகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஏறினால் கூட, நின்று கொண்டுதான் போக வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வெளியூர்களில் செல்லுகின்ற பஸ்களில் அனுமதிக்கப்பட்டிருப்பது போல் இதிலும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னால் அமரக்கூடிய வகையில் ஒன்றிரண்டு சீட்டுகள் தர முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற யோசனையை நடைமுறைப்படுத்துவதில் மிக்க சிரமம் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் குழாய்க் கிணறுகள்.

*437 வினா—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம் பின்தங்கிய மாவட்டமாக இருப்பதால் அம்மாவட்டத்தில் உள்ள கண்மாய்களில் விவசாயத் துறையின் மூலம் மின் இணைப்புடன் கூடிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** அம்மாவட்டத்தில் கண்மாய்களில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கத் திட்டம் தற்பொழுது அரசிடம் எதுவும் இல்லை.

*438 வினா—திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமச் சாலைகளில் உள்ள குளங்களில் விவசாயப் பொறியியல் துறை மூலம் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து மின்சார மோட்டார்கள் மூலம் விவசாயிகள் விவசாயம் செய்ய ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** இல்லை.

**திரு. நா. சுந்தரராஜ் :** புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. ஆகவே, அங்கே ஆழ்கிணறுகள் மூலம் நிரம்பத் தண்ணீரை கொண்டு வர முடியும் என்று திட்டக் கமிஷன் மூலம் பரிசீலனை செய்தபோது விவரம் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இதன் மூலமாக முன்னேற்றம் அடைய ஆழ் குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொடுத்தால் நிச்சயமாக ஐந்தாண்டுக் காலத்தில் நல்ல முன்னேற்றம் காணக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, இதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட திட்டம் எதுவும் தற்போது அரசிடம் இல்லை.

**திரு. நா. சுந்தரராஜ் :** தலைவர் அவர்களே, தற்போது அந்தப் பகுதியில் குழாய்க் கிணறுகள் அமைக்கின்ற முறையில் பெரிய கிணறுகள் தோண்டப்பட்டு இருக்கின்றன. 40 ஆயிரம், 50 ஆயிரம் ரூபாய் செலவுசெய்து இந்தக் கிணறுகள் வெட்டப் பட்டிருக்கின்றன. ஆனால், இவற்றுக்கு மின் இணைப்பு இல்லாத காரணத்தால், வெறுமனே சும்மா இருக்கின்றன. ஆகவே, இதற்கு மின் இணைப்புக் கொடுத்து அங்குள்ள விவசாயிகளுக்கு இருக்கின்ற தண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். கண்மாய்களில் குழாய்க் கிணறுகள் மூலம் நீர் எடுத்துப் பாசன வசதிக்குக் கொடுக்கப்படும் என்ற அறிவிப்பு எதுவும் இந்த அரசிடம் தற்போது இல்லை என்பதைச் சொன்னேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லுகின்றார்கள். அங்கே பெரிய ஆழ்குழாய்க் கிணறுகள் தோண்டப்பட்டிருக்கின்றன என்று. அந்த குழாய்க் கிணறுகள் குடிநீர் வாரியத்தின் மூலமாகத் தோண்டப் பட்டிருக்கின்றன. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னும்



எல்லா இடத்திலும் குடிநீர் வழங்க வேண்டும் என்ற எண்ணத்தோடு, இப்படிப்பட்ட குழாய்க் கிணறுகள் வெட்டப் படுகின்றன. இதன் மூலம் குடிதண்ணீர் தட்டுப்பாடு தீர்ந்து கொண்டு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. த. புஷ்பராஜ் :** அவைத் தலைவர் அவர்களே, வருகின்ற கூட்டுறவு ஆண்டில் ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் கூட்டுறவு முறையில் பொதுப் பாசனத் திட்டம் அமலுக்குக் கொண்டு வரப்பட இருக்கிறது. அதைப்போல் பின்தங்கிய மாவட்டமாக இருக்கின்ற புதுக்கோட்டைப் பகுதியிலும் கூட்டுறவு முறையில் பொதுப் பாசனத் திட்டத்தை அமலுக்குக் கொண்டு வருவார்களா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

## துறையூர் கந்தசாரி சர்க்கரை ஆலை

* 439 வினா—**திரு. ரா. பெரியசாமி :** மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூரில் இயங்கிவந்த கந்தசாரி சர்க்கரை ஆலை மூடியிருப்பதற்குக் காரணம் என்ன?

(ஆ) இந்தத் தொழிற்சாலையைத் திறக்க அரசு எடுக்க உத்தேசித்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது :**

ஒரு விவர அறிக்கை * சட்டப் பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

* 374-375-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

[1978 மார்ச் 7

திரு. கோ. இளங்கோவன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் அந்த ஆலை விரைவில் மூடப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆலையில் வேலை செய்த தொழிலாளர்கள் எத்தனை பேர்? அவர்களுக்கு மாற்றுத் திட்டம் அரசு வைத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : 3–4—1976 முடிய 42 பேர்கள் இருந்தார்கள். இப்போது 15 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களாகவே மாற்றுவேலை பார்த்துக்கொண்டதால், தொழிலாளர் பிரச்னை இங்கு எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு : தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகளில் சர்க்கரைக்காகக் கரும்பு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர்களிலே பயிர்செய்து, இப்போது கரும்பு தேங்கிக் கிடக்கின்றது. எனவே, இத்தகைய கந்தசாரி சர்க்கரை ஆலைகளுக்கு அனுமதி கொடுப்பதன் மூலம், இந்த நிலைமையை மாற்ற முடியுமென்று நான் நினைக்கிறேன். எனவே, அத்தகைய கந்தசாரி சர்க்கரை ஆலைகளுக்கு லைசன்சுகள் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே கந்தசாரி சர்க்கரை ஆலைகளை வெற்றிகரமாக நடத்த முடியாது என்று விவர அறிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆலையிலே ஒரு சிறு ரிப்பேர் என்றாலும், வட மாநிலத்திலே இருந்து ஆட்கள் வந்துதான் ச[illegible] செய்ய முடியும் என்கின்ற நிலையிருக்கிறது. எனவே, கந்தசா[illegible] சர்க்கரை ஆலைகளை வட மாநிலத்தில் வெற்றிகரமாகச் செய[illegible] படுத்த முடியும். அதைத் தமிழ் நாட்டிலே லாபகரமாக நடத்[illegible] முடியாது என்ற காரணத்தினால், இந்த நடவடிக்கை மேற்கொள்[illegible] [illegible] இருக்கிறது.



1978 மார்ச் 7]

## விசைச் சாயச்சாலை.

*440 வினா—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நமது மாநிலத்தில் ஒரு விசைச் சாயச்சாலை தொடங்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனின், அது எந்த மாவட்டத்தில் நிறுவப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) ஆம்.

(ஆ) மூன்று விசைச் சாயச்சாலைகள் வட ஆற்காடு, செங்கற்பட்டு கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் நிறுவத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளது. மேலும் ஐந்து நவீன சாயச்சாலைகளை சேலம், கோவை, திருச்சி, திருநெல்வேலி, மதுரை ஆகிய மாவட்டங் களில் நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திரு. எஸ். கணேசன் : தலைவர் அவர்களே, இந்த பவர் டையிங் பாக்டரியிலே செயல்படுத்தப்படும் துணிகள் தரமுள்ளவைகளாக இருக்கின்றனவா? அப்படிப்பட்ட துணிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா? வெளி நாடுகளிலே அதற்கு மார்க்கெட் எப்படியிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செமி ஆட்டோமேடிக் டையிங் யூனிட் என்று சொல்லப்படுகின்ற இந்த நவீனப்படுத்தப் பட்ட சாயத் தொழிற்சாலையை நிறுவியதன் நோக்கமே, கைத்தறித் துணிகள் காலப்போக்கிலே வெளுத்து விடுகின்றன என்று புகார் வரக்கூடாது. அதிலே குறை ஏற்படக்கூடாது என்ற நோக்கத்தில்தான் இந்த அரசு, கைத்தறி நெசவாளர்கள் இருக்கும்படியான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படிப்பட்ட நவீன சாயத் தொழிற்சாலைகளை

நிறுவுவதற்கான திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. அதன் காரணமாக, இன்றைக்கு மேல்நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்ற துணிகள் தரமுள்ளவைகளாக இருக்கின்றன. குறுகிய காலத்திற்குள் 6, 7 மாதங்களுக்குள் இந்த அரசு 2 கோடி ரூபாய்க்கு மேல் ஏற்றுமதி செய்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. திருச்சி. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் உறையூர் பகுதியில் நெய்யப்படுகின்ற புடவைகள் உலகப் புகழ் பெற்று விளங்குகின்றன. ஆகவே, இப்படிப்பட்ட புது டையிங் பாக்டரியை அங்கே நிறுவினால், அங்கிருக்கக்கூடிய நெசவாளர்கள் பயனடைவார்கள். எனவே, விரைவிலே அத்தகைய பாக்டரி ஒன்றை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இத்தகைய நவீன சாயத் தொழிற்சாலையை அந்தந்தப் பகுதிகளிலே நிறுவுவதன் மூலம் அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்கள் அத்தனையும் இந்தச் சாயத் தொழிற்சாலையிலே தங்களுடைய நூலைச் சாயப்படுத்திக் கொள்ள வேண்டும். உறையூரிலே மிகச் சிறந்த சேலைகள் நெய்யப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். திருச்சியிலே இந்த நவீன சாயத் தொழிற்சாலை நிறுவப்பட இருக்கிறது. அது விரைவிலே செயல்படும். எனவே, அந்தப் பயனை உறையூர் மக்களும் பெறுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, இந்தப் புதிய சாயத் தொழிற்சாலையைக் கைத்தறிப் பட்டுக்குப் பெயர்போன காஞ்சிபுரம் நகரிலே அமைப்பதற்கு இந்த அரசுக்கு ஏதாவது உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய விடையிலேயே செங்கற்பட்டு மாவட்டத்தையும், அதிலே இணைத்திருக்கிறேன். செங்கற்பட்டு





காஞ்சிபுரத்தை மறந்துவிட முடியாது.
மாவட்டம் வருகின்றபோது, காஞ்சிபுரத்தை மறந்துவிட முடியாது. எனவே, நிச்சயம் அத்தகைய கருத்தைச் செயல்படுத்த வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆர். மணிமாறன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விசைச் சாயச் சாலையைப் பல்வேறு மாவட்டங்களிலே தொடங்க ஏற்பாடு செய்ய இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அதை எப்போது ஏற்படுத்த இருக்கின்றார்கள்? அந்தத் தொழிற்சாலைகளை எந்தெந்த மாவட்டங்களில் அமைக்க அரசு உத்தேசித்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்?

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** நவீன சாயச் சாலைகளை எங்கெங்கு அமைக்கிறோமோ அங்கெல்லாம் பிரிண்ட் போடக்கூடிய தொழில்களை இணைத்து அமைப்பதன் மூலமாக நெசவாளர்களுக்கு நன்மை கிடைக்குமென்று இந்த அரசு கருதுகிறது. அந்த அடிப்படையில் ஏற்கனவே ரோட்டில் நாம் இந்த முயற்சியில் பெரிதும் ஈடுபட்டு இருக்கிறோம். அது வெற்றிகரமாகச் செயல்பட ஆரம்பித்தால், வேறு சில இடங்களிலும் இதனை விரிவுபடுத்தும் முயற்சியில் இந்த அரசு ஈடுபடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். கணேசன் :** சேலைகளில் மிகுந்த பிரசித்தி பெற்றது கொரநாட்டுச் சேலை. எனவே, மாயூரத்தில் இருக்கும் கொரநாட்டில் பவர் டையிங் பாக்டரியை அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** நவீன சாயச் சாலைகளை நிறுவுவதற்குக் குறைந்தபட்சம் பத்தாயிரம் உறுப்பினர்கள் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கவேண்டும்; அதைப் போல் நூற்பாலைகளில் இருந்து எடுத்து வருகின்ற நூல்கள் சாயச் சாலைகளுக்குப் பொருந்துவனவாகப் பக்கத்தில் தயாரிக்கப்படுவதாக இருக்கவேண்டும். மூன்றாவது தண்ணீர் வசதி நிரம்ப இருக்க வேண்டும். இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டுதான் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏற்ற இடங்களைத் தேர்ந்தெடுத்து நவீன சாயச் சாலைகளை நிறுவ வேண்டுமென்ற திட்டத்தைத் தயாரித்து வருகிறோம்.

[1978 மார்ச் 7

**திரு. ஆ. வெள்ளைச்சாமி :** கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடத்து கிற சாயச் சாலைகளில் தனியார் சாயச் சாலைகளைவிட அதிக் சாயக் கூலி இருப்பதால், நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கச் சாயச் சாலைகளில்தான் சாயம் போட வேண்டுமென்ற நிர்ப்பந்தம் இருப்பதால் அவர்களுடைய ப்ரொடக்ஷன் காஸ்ட் அதிகமாகிறது. ஆகவே, இப்படிப்பட்ட குறைகளைப் போக்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது :** இது நவீன சாயத் தொழிற்சாலை. நவீனப்படுத்துகிறபோது இந்தக் குறைபாடுகள் இருக்காது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வினுக்கள்—விடைகள் முடிவுறறன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

## (2) தகவல் கோரல்.

### (அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழாசிரியர் கோரிக்கை பற்றி அமைச்சர் அறிக்கை அளிப்பது குறித்து.

**திரு. க. சுப்பு :** ஏற்கனவே நான், இராமநாதபுரம் மாவட்டத் தில் 13 தமிழாசிரியர்களை பணிக்குத் திரும்பவும் எடுத்துக் கொள்ளவேண்டுமென்ற கோரிக்கைபற்றி நான் 57-வது விதியில் ஒரு நோட்டீஸ் கொடுத்தேன் ; 42வது விதியிலும் ஒரு நோட்டீஸ் பெண்டிங் ஆக இருக்கிறது. இதற்கிடையே சாதகமான ஒரு முடிவை அரசு எடுத்து அது பத்திரிகையில் வந்திருக்கிறது. சட்ட மன்றத்தில் சொல்லாமல் பத்திரிகையில் வந்திருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்திருப்பார்களானுல் அவர்களுடைய உண்ணுவிரதம் கூட நீடித்திருக்காது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விதி 82ன் கீழாவது ஒரு ஸ்டேட்மெண்டை அளிக்க முன்வருவார்களா ?



1978 மார்ச் 7]

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** இந்தப் பிரச்சினை மேற் சபையில் கிளப்பப்பட்டபோது அப்போதே சொல்லியிருக்கிறேன். அங்கு சொன்னதுகூட எல்லோருக்கும் சேரும் என்று தயவு செய்து ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மு. கருணாநிதி :** நேற்றையதினம் இரு அவைகளைப் பற்றி யும் ஒரு விவாதம் நடந்தது. மேல்சபையில் சொன்னது இந்தச் சபைக்குச் சொன்னதாக ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று அமைச்சர் சொல்வது பொருத்தந்தானு ? தங்கள் தீர்ப்பு தேவை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** தலைவர் அவர்களே, ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று ஒரு ரிக்வஸ்ட் ஆகப் பண்ணி னேன். அவ்வளவுதான்.

**திரு. க. சுப்பு :** பிரச்சினை இங்கே எழுப்பப்பட்டிருக்கிறது. 42-வது விதியின் கீழ் நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது ; 57-வது விதியின்கீழ் வெட்டுத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது போன செஷனின்போதே நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதுபற்றித் தெளிவாக அறிக்கை வைக்க அரசு முன் வருமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக விளக்கம் அளிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** பிறகு நான் அதை வைக்கிறேன்.

**திரு. க. சுப்பு :** மேலவையில் அறிவிக்கப்பட்டு விட்டது என்று சொல்லுகிறார்கள். அப்படியானுல் இன்னும் அவர்களுக்கு டைம் கொடுக்க வேண்டுமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அறிக்கை வைக் கிறேன் என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதற்கு மேல் அந்தப் பிரச்சினை பற்றிப் பேச வேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :** அங்கே பரிசீலனை செய்யப்படும் என்று சொன்னேன். முடிவு எடுத்து இப்போது விவரம் என்னிடத்தில் வந்திருப்பதாக அவர்கள் கூறுகிருர்கள். இல்லாததால் அதை வைக்கிறேன் என்று கூறுகிறேன்.

## (3) கவன ஈர்ப்பு.

பாரதிதாசன் நகர் மாயாண்டி காலனி, ரோட்டரி நகர் பகுதியிலே கள்ளச் சாராய விற்பனையாளரிடையே ஏற்பட்ட சச்சரவால் அப்பகுதி மக்கள் பாதிப்பு குறித்து.

**திரு. மு. அரங்கநாதன்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 22—2—78 ஆம் தேதியிட்ட ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை நான் கொடுத்தேன். சென்னை திருவல்லிக்கேணி தொகுதியைச் சார்ந்த பாரதிதாசன் நகர். . .

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்</u> : Mr. Deputy Speaker, Sir, under Rule 41, the hon. Member can only read the Notice he has given, but he is making a speech.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : நீங்கள் அதுபற்றிப் பேசக்கூடாது. நிகழ்ச்சிநிரலில் உள்ள உங்கள் அறிவிப்பைப் படியுங்கள்.

**திரு. மு. அரங்கநாதன்** : தலைவர் அவர்களே, 'சென்னை திருவல்லிக்கேணி தொகுதியைச் சார்ந்த பாரதிதாசன் நகரில் உள்ள மாயாண்டி காலனி மக்களும், கிருஷ்ணாம்பேட்டையைச் சார்ந்த ரோட்டரி நகர்ப் பகுதி மக்களும், 19—2—1978 ஆம் தேதி இரவு 1.45 மணிக்கு அப்பகுதியைச் சேர்ந்த சாராய விற்பனையாளர்களிடையே ஏற்பட்ட சண்டை காரணமாக, குடும்பம் குடும்பமாக வீட்டை விட்டு வெளியேறி இ-2 காவல் நிலையத்திற்குச் சென்று பாதுகாப்புத் தேடி அடைக்கலம் புகவேண்டியிருந்த நிலை குறித்து' மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கி. மனோகரன்** : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எட்வர்ட் எலியட்ஸ் ரோடுக்கும் லாயிட்ஸ் ரோடுக்கும் இடையில் மாயாண்டி காலனியும் ரோட்டரி நகரும் அருகருகே அமைந்துள்ளன. மாயாண்டி காலனியைச் சேர்ந்த ஆதி திராவிடர்களுக்கும் ரோட்டரி நகரைச் சேர்ந்த தெலுங்கு பேசும் ஒட்டர் இனத்தவர்களுக்கும் இடையே ஏற்கனவே மனக்கசப்பு இருந்து வந்திருக்கின்றது. 17—2—1978 அன்று போலீசார் நடத்திய சாராயவேட்டையில், ரோட்டரி நகரைச் சேர்ந்த, கள்ளச்சாராயம் விற்கும் நான்கு பேரிடமிருந்து 400 லிட்டர்



கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து, எட்டுமுறை தண்டனை பெற்ற குப்பன் என்ற கள்ளச்சாராய விற்பனையாளருக்கும், ரோட்டரி நகரைச் சேர்ந்த சிலருக்கும், மாயாண்டி காலனியைச் சேர்ந்த சிலருக்கும் சிறிய தகராறு ஏற்பட்டது. மாயாண்டி காலனியைச் சேர்ந்தவர்கள்தான் காவல் துறையினருக்கு தகவல் கொடுத்திருப்பர் என்று குப்பன் சந்தேகப்பட்டதால் நடந்த இந்தத் தகராறில் குப்பனுக்கும் ஆறுமுகம் என்பவருக்கும் காயம் ஏற்பட்டது. இது சம்பந்தமாக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு, தகராறு செய்தது குப்பன்தான் என்று தெரிய வந்ததால் வழக்கு கைவிடப்பட்டது. அதற்குப் பிறகு, அதே இரவு, நகர துணைக் காவல் கண்காணிப்பாளர், சட்டமும் ஒழுங்கும் (தெற்கு), ரோட்டரி நகர் பகுதியில் சாராய வேட்டை நடத்தி, 140 லிட்டர் சாராயம் கைப்பற்றப்பட்டு, தாஸ், தாமல், சண்முகம், கணேசன், கொலம்மாள், சித்திரை ஆகியோர் உட்பட 14 பேர்கள் கைது செய்யப்பட்டனர். அன்றைய தினமே அப்பகுதியில் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டு இன்னும் தொடர்ந்து போலீஸ் பாதுகாப்பு கொடுக்கப்பட்டு வருகின்றது. இரு சாராருக்குமிடையே ஒரு சமரசம் ஏற்பட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாயாண்டி காலனியைச் சேர்ந்த சித்திரை என்பவரும் பலமுறை போலீசாரால் குற்றம் சாட்டப்பட்டவர். கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால், இந்த இரண்டு காலனிகளைச் சேர்ந்த, கள்ளச் சாராயத் தொழிலில் ஈடுபடுபவர்கள், கட்டுப்பாட்டினில் வைக்கப்பட்டுள்ளனர். 1978 ஆம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி ஆகிய மாதங்களில் மட்டும் இந்தப் பகுதியில் சுமார் எழுபது வழக்குகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

**திரு. மு. அரங்கநாதன்** : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாராய சம்பந்தப்பட்ட வழக்குகள் தொடரப்பட்டது பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் அளித்தார்கள். நன்றி. ஆனால் ஏற்கனவே, அந்தப் பகுதியில் இரண்டு சாரார்களுக்கும் தகராறு இருந்தது என்று போலீஸ் தரப்பில் சொல்லப்படுகிற தவறான தகவலை இங்கே நிதியமைச்சர் படித்துக் காட்டினார்கள். இது தவறான தகவல். சாராய விற்பனையிலே ஏற்பட்ட தகராறில்

அவர்களுக்குள்ளே அடிதடி ஏற்பட்டு அந்த இரண்டு சாராய விற்பனைக் கோஷ்டி சண்டைகளின் காரணமாக பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமை ஏற்பட்டு இரவு 1-30 மணிக்கு என் வீட்டிற்கு ஓடி வந்தார்கள், அதற்குப் பிறகு நான் அவர்களை காவல் நிலையத்திற்கு அனுப்பி வைத்தேன், காவல் துறையினரும் அவர்களுக்குப் பாதுகாப்பு தரவேண்டுமென்று சொன்னேன். இதிலே சம்பந்தமில்லாதவர்கள் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள்மீது வழக்குத் தொடர்வதில் எனக்கு ஆட்சேபனையில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி கேளுங்கள், பதிலுரை சொல்லக்கூடாது.

**திரு. மு. அரங்கநாதன் :** ஆனால் தொடர்ந்து லாயிட்ஸ் சாலை பக்கம் சாராயத் தொல்லைகள் இருந்து வருகின்றன, அமைச்சர் அவர்கள் கவனித்து நடவடிக்கை எடுப்பார்களா ?

(முற்பகல் 10-30)

**மாண்புமிகு திரு. கி. மனோகரன் :** ஏற்கனவே எனது அறிக்கையில் அதை நான் தெளிவுபடுத்தியிருக்கிறேன்.

**திரு. ரா. மார்க்கபந்து :** தலைவரவர்களே, நேற்றைய தினம் 42-வது விதியின்கீழே ஒரு நோட்டீஸ் கொடுத்தேன். அதை சட்டை செய்யாத காரணத்தால். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தாங்கள் கொடுத்தேன் என்று சொன்னது, ஆய்வில் இருக்கிறது. எனவே அதைப் பற்றி பேரவைத் தலைவருடைய அறையில் வந்து கேட்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## (2) தகவல் கோரல் (தொடர்ச்சி)

### (ஆ) 42-வது விதியின் கீழ் கொடுத்த அறிவிப்பு குறித்து

**திரு. எம். ஏ. லத்தீப் :** தலைவரவர்களே, ஒரு முக்கியமான பிரச்னையைப்பற்றி 42-வது விதியின்கீழ் ஒரு பிரசாரம் கொடுத்திருந்தேன், மானியம் வரும்பொழுது அதைப்பற்றிப் பேசிக்கொள்ளலாம் என்று பதில் கொடுத்து எனக்குத் தபால் எழுதப்





பட்டிருக்கிறது. மானியம் வரும்வரையில் காத்துக்கொண்டிருக்க வேண்டிய நிலையிருந்தால் 42-இன்கீழ் கொடுத்திருக்கமாட்டேன். அவசரமும், அவசியமும் இருக்கிறது என்பதால்தான் 42-வது விதியின்கீழ் கொடுக்கிறேனே தவிர, மானியம் வருகிறபொழுது பேசிக்கொள்ளலாம் என்றால், அதுவரையில் காத்துக்கொண்டிருக்கக்கூடிய பிரச்னை இல்லை இது. எனவே இப்படிப்பட்ட பதிலைக் கொடுத்து திருப்பி அனுப்ப வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் 42-வது விதியின்கீழே கொடுக்கும்பொழுது, பேரவைத் தலைவர் அதன் முக்கியத்துவத்தைப் பொறுத்து பதில் எழுதுவதற்கு உரிமையிருக்கிறது. ஆகவே, அந்த விதத்தில் முடித்து வைத்திருக்கிறார்கள். ஆகவே, தயவு செய்து அதை விட்டுவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** எங்களுக்கு அதனால் உரிமையில்லாமல் போகிறது. எங்களுடைய உரிமையை நிலைநாட்ட முடியாமல் போகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்களுக்கு உள்ள உரிமையைப் போல் அவருக்கும் உரிமை இருக்கிறது.

**திரு. எம். ஏ. லத்தீப் :** என்னுடைய உரிமை போகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உங்களுக்குள்ள உரிமையை ஒட்டி நீங்கள் கொடுக்கிறீர்கள். அவருடைய உரிமையையொட்டி, அதை நிராகரிப்பது அல்லது ஏற்றுக்கொள்வது என்று முடிவு செய்கிறார்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** அவசியம், அவசரம் என்பதால்தான் கொடுக்கிறோம். காரணம் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதை அறையிலே அவருடன் டிஸ்கஸ் செய்யுங்கள்.

திரு. மு. அரங்கநாதன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அதைப்போலவே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 42-வது விதியின்கீழ் கொடுத்துள்ளதுதானே, அது ஆய்வில் இருக்கிறது. அதைப் பற்றி அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. மு. அரங்கநாதன் : சென்னை நகரத்திலே காலரா நோய் பரவுவது குறித்து. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள்.

(4). 1978-79 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,87,59,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

திரு. த. வேணுகோபால் : தலைவரவர்களே, கால்நடை வளர்ப்பை அபிவிருத்தி செய்யும் வகையில் தகுதிக்கேற்ப அரசாங்கத்தில் கடன் வழங்க வேண்டும் என்பதைப் பற்றி விவாதிக்க—

"மானிய கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,87,59,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.





திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நல்ல கோழி இனம், செம்மறி ஆடு இனம், பன்றி இனம் ஆகியவைகளின் பெருக்கங்களின் முக்கியத்துவம் பற்றி விவாதிக்க—

"மானிய கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,87,59,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், மூன்று கிலோ மீட்டர் தூரத்துக்கு ஒரு கால்நடை உதவியாளர் வீதம் நியமிக்கப்பட வேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,87,59,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. அ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, கால்நடைகளுக்குத் தேவையான தீனிகளை அரசாங்கமே ஆலை அமைத்து உற்பத்தி செய்து கூட்டுறவுச் சங்கங்களின் வாயிலாக கால்நடை வளர்ப்பவர்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யாதது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,87,59,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, மன்னார்குடி பகுதியில், கால்நடை மருந்தகங்களை சீர்படுத்தவும், அதிகரிக்கவும் வேண்டியது பற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண். 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 11,87,59,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru R. MARGABANDU : Sir to discuss about the importance of formation of sheep rearing and cattle rearing societies I move

"That the allotment of Rs. 11,87,59,000 under Demand, No. 22, Animal Husbandry-be reduced by Rs. 100

Thiru M.A. LATHEEF : Sir, to discuss about the need to institute effective preventive measures to contain cattle diseases in Naickaneri Hill Village in Madanoor Union, I move.

"That the allotment of Rs. 11,87,59,000 under Demand No. 22--Animal Husbandry-be reduced by Rs. 100

(ஆ) கோரிக்கை எண். 30—சமூக நலன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

"மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப் பின்கீழ் ரூ. 4,92,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங் கப்பெற வேண்டும்."

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, பேணுவார் அற்ற முதியோர் களை ஓரிடத்தே வைத்து பேணத்தக்க முதியோர் இல்லங்களை நிறுவ வேண்டியதன் தேவையைச் சுட்டிக்காட்டி விவாதிக்க—

"மானிய கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,92,13,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே, இளம் விதவை களுக்கும், கணவனால் கைவிடப்பட்ட இளம் பெண்களுக்கும் சில வேலைகளுக்கும், மற்றும் சில வேலைகளுக்குப் பயிற்சிகள் அளிக்க தேர்ந்தெடுக்கும்போதும், இவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பது பற்றி விவாதிக்க—



"மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 4,92,13,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, விதவைப் பெண் களுக்கு தொழில் உத்தியோகத் துறையில் உத்திரவாத உதவி யளிக்கவும், விதவை ஊதியத்தையும் முதியோர் ஊதியத்தையும் உயர்த்தவும், ஊனமுற்றோர் ஊதியம், தொழில் வாய்ப்பும் தகுதி உள்ள அனைவருக்கும் கிடைக்க வகை காணுவது பற்றியும் விவாதிக்க—

"மானியக் கோரிக்கை என் 30—சமூக நலன் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,92,13,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru M. ARUMUGAM : Sir, to discuss the need to take steps to organise homes for the children of employed mothers during office honrs and to finance such organisation in doing so, I move

'That the allotment of Rs. 4,92,13,000 under Demand No. 30, Social Welfare-be reduced by Rs. 100,

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, தகுதியுள்ள அனைவருக்கும் முதியோர் பென்ஷன் கிடைக்க உரிய நிதி ஒதுக்கீடு செய்யாதது குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை என் 30—சமூக நலன் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,92,13,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru R. MARGABANDU : Sir, to discuss about the economical measures to be taken to improve the status, both social and economical, for women and widows, I move.

'That the allotment of Rs. 4,92,13,000 under Demand No. 30 Social Welfare-be reduced by Rs. 100.

Thiru M. A. LATHEEF : Sir, to discuss about the need to lower the age limit from 40 to 25 for the purposes of widows pension scheme I move

'That the allotment of Rs. 4,92,13,000 under Demand No. 30, Social Welfare-be reduced by Rs. 100

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. கால்நடை பராமரிப்பு, சமூக நலத் துறை ஆகிய இந்த மானியக் கோரிக்கைகளுக்கு 2 மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 12-30 மணிக்கு மானியக் கோரிக்கை எண் 47 எடுத்துக்கொள்ளப்படும்.

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சரவர்கள் ஏதாவது மறுமொழி அளிக்க விரும்பினால், அளிக்கலாம்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி* :** பேரவைத் துணைத் தலைவரவர்களே, கால்நடை பராமரிப்பு இலாகா சம்பந்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகமும்* சமூக நலப் பணி பற்றிய ஆக்கப் பணிகள் குறித்த குறிப்புகள் விளக்கப் புத்தகமும்* ஏற்கனவே அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களின் தலைமையின்கீழ் இயங்கி வருகிற இந்த அரசின் திட்டங்களும், ஆக்கப் பணிகள் பற்றிய தகவல்களும் இவற்றில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. அவற்றை உறுப்பினர்கள் படித்துப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நான் உளமாரக் கருதுகிறேன். எனவே, கால்நடை பராமரிப்புச் சம்பந்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பு சமூக நலன் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு ஆகியவற்றை நான் இந்த அவையிலே படித்துக் கூறியதாக எடுத்துக் கொண்டு, அவையின் நடவடிக்கைக் குறிப்

*376-403 404-428-ம் பக்கங்களில் இணைப்பு III. II ஆக அச்சிடப் பெற்றுள்ளன.



பேட்டிலே ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். இவை குறித்து, மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் தெரிந்து கொண்டு எனது பதிலுரையை ஆற்றுகிறேன் என்று கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. மா. மணிமாறன் :** துணைத் தலைவரவர்களே, கால்நடை பராமரிப்பு, சமூகநலன் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது எங்கள் கட்சி உறுப்பினர்கள் கொண்டு வந்த வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து நான் ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** பாயின்ட் ஆப் ஆர்டர். இன்றையதினம் இன்னொரு அமைச்சருடைய மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. அது எப்பொழுது எடுத்துக்கொள்ளப்படும் என்று இப்பொழுது அறிவித்தால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் முதலிலே அதைச் சொல்லிவிட்டேன். இப்பொழுது அவையின் முன்னுள்ள மானியக் கோரிக்கைகள்மீது இரண்டு மணி நேரம் விவாதம் நடக்கும். 12-30 மணிக்குச் சுற்றுலாத் துறையின்மீது விவாதம் தொடங்கும்.

*** திரு. மா. மணிமாறன் :** தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்தைக் கணக்கில் கொண்டு பார்த்தால், இந்திய துணைக் கண்டத்துப் புள்ளிவிவரங்களைக் காணும்போது, ஒருசில அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இங்கு வருவாய் அதிகம் என்று சொல்லமாட்டார்கள். ரூ. 40-க்கும் கீழே வருமானம் பெறுபவர்கள் 50 சதவீதத்துக்கும் மேலே இருப்பதை நம்மாலே பார்க்க முடிகிறது. அப்படிப்பட்ட நிலையிலேயிருக்கிற பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் உருவாக்குவதற்குக் கால்நடைப் பராமரிப்புத் திட்டம் சாலச்சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

[திரு. மா. மணிமாறன்] [1978 மார்ச் 7

(முற்பகல் 10.40)

கால்நடை பராமரிப்புத் திட்டம் வெற்றிகரமாக முடியுமானால் பல பிரச்சினைகளை ஈடுகட்ட முடியும். பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவியாக இருக்கும். அதே போல உணவுத் துறையிலே ஒரு மாற்றத்தைக் காணமுடியும். ஏழை எளியவர்கள் இன்றைக்கு நல்ல சத்துணவு கிடைக்காமல் இடர்ப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறங்களிலேகூட பாலை சிறிய அளவிலே தான் உற்பத்தி செய்ய முடிகிறது. மற்றவர்கள் அதைப் பணம் கொடுத்துத்தான் வாங்கிக் கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது. கிராமப்புறங்களிலே பசுவோ, அல்லது கறவை மாடுகளோ வளர்த்து வருகிறவர்கள் தங்களுக்குத் தேவையான பாலை பெற முடியுமா என்றால் முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

ஆடு வளர்ப்புத் துறையைப் பார்க்கின்ற நேரத்தில் மிக முக்கியமான உணவாக இருக்கிறது. அது ஒரு சத்தான உணவாகவும் இருக்கிறது. இந்த 2 துறைகளில் முன்னேற்றம் அடைந்தால், உடல் நலமும் சீராக வளர வாய்ப்பாக இருக்கும். இத்துறையிலே நாம் பார்க்கின்ற நேரத்தில் பல சிக்கல்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இன்றைக்கு உற்பத்தியாகிற கால்நடைகளை வளர்க்க முடியாமல் வெளிநாடுகளுக்கு இறைச்சியாக அனுப்பப் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்தத் துறையிலே சென்ற ஆண்டு பேசிய எங்கள் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எடுத்துக்காட்டி, குறிப்பாக காளை மாடு போன்றவைகளாக இருந்தாலும், அந்த இறைச்சியை வெளிநாடுகளுக்கு அனுப்புகின்ற திட்டத்தை தமிழ்நாடு ஆராய்ந்து அதிலே ஈடுபட்டால் வெளிநாட்டு செலாவணி ஈட்டுவதற்கு வசதியாக இருக்கும், என்றார்கள். இங்கே இருக்கிறவர்கள் மாமிசத்தை உண்பதற்கு தடை இருக்கும் என்று சொல்வார்கள். இதிலே இந்த அரசு அக்கறை காட்டாமல் இருக்கிறது.

மேலும், நம் நாட்டிலிருந்து நிறைய கால்நடைகள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகின்றன. கேரளா என்று சொன்னால் தவறாகக் கருதமாட்டீர்கள் என்று கருதுகிறேன்.



1978 மார்ச் 7] [திரு. மா. மணிமாறன்]

அப்படிச் செல்லும் கால்நடைகளைத் தடுப்பதற்கு எந்தவிதமான அக்கறையும் இந்த அரசு காட்டவில்லை. இந்தத் துறைக்கு அரசு ஒதுக்கிய பணம் போதுமானதாக இல்லை. உற்பத்தி இலக்கை எட்டவில்லை. Intensive Cattle Development Project என்று 1975-76-லே, ஏறத்தாழ 60,000 மாடுகளுக்கு இனப் பெருக்கத்திற்காக ஊசி போட்டார்கள். ஆனால் 18,000 கன்றுகள் போடப்பட்டன. 1977-78-லே 68,249 மாடுகளுக்கு ஊசி போடப்பட்டு, 13 ஆயிரம் கன்றுகள் ஈன்றெடுக்கப்பட்டன.

அடுத்து 'கி' சென்டரில் 1975-76-லே 76,000 மாடுகளுக்கு ஊசி போடப்பட்டதில், 22,800 கன்றுகள் போடப்பட்டன. 1977-78-லே 10,400 மாடுகளுக்கு ஊசி போடப்பட்டதில், 24,319 கன்றுகள் இந்தத் துறையிலே வளர்ந்து இருக்கின்றன.

ஆடுகளைப் பார்க்கின்ற நேரத்தில் 1975-76-லே 5,000 ஆடுகளுக்கு ஊசி போடப்பட்டதில் 5,094 குட்டிகள் கிடைத்தன. 1977-78-லே 5,000 ஆடுகளுக்கு ஊசி போடப்பட்டதில், 2,330 குட்டிகளே உற்பத்தி செய்து காட்டப்பட்டிருக்கிறது.

கோழிகளைப் பார்க்கின்ற நேரத்தில், 1975-76-லே கோழி வளர்ப்பிற்கு 20.69 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு 1978-79-லே 1.59 லட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் துறையிலே ஆடுகளையோ, பசுங்கன்றுகளையோ பசு மாடுகளையோ கோழிகளையோ ஆகியவைகளின் இனப்பெருக்கத்தை இந்த அரசு கட்டாயமாகக் கூர்ந்து பார்க்க வேண்டும்.

இதை ஏன் சுட்டிக்காட்டுகிறேன் என்று சொன்னால், கிராமப்புறங்களில் இருக்கிற நிலையங்களில் ஊசி போடுகிற நிலை இருக்கிறது. அரசுக்குத் தெரிந்தோ, தெரியாமலோ, அங்கே கட்டணம் வேறு வசூலிக்கப்படுகிறது. தமிழ்நாட்டிலே உள்ள அத்தனை பேர்களும் விஞ்ஞானத்தை ஏற்றுக்கொள்கிறார்களா என்றால் இல்லை என்று சொல்லக்கூடிய நிலை தான் இருக்கிறது. நகரத்திலே உள்ள மக்களிடம் எடுத்துச் சொல்கின்ற அளவு. கிராமப்புறத்து மக்களிடம் எடுத்துச் சொல்லமுடியாத நிலை இருக்கிறது. இந்தக் கட்டணம் வசூலிப்பதைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று சென்ற கூட்டத்திலே சொல்லியும் இன்னும் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது.

[திரு. மா. மணிமாறன்] [1978 மார்ச் 7

அவர்களைப் பொறுத்தவரையில் போடுகின்ற ஊசி கட்டாயமாக
பலன் இருக்கிறதா என்று சொன்னால், இல்லை.
நிலைமையில் 2 ரூபாய் பணம் கொடுக்கவேண்டும் அப்படிப்பட்ட
கிறார்கள். இந்த நிலையைப் பார்க்கின்ற என்று கேட்
ஏழை எளிய விவசாயிகள் இந்த நேரத்தில் சாதாரண
தயக்கம் காட்டுகிறார்கள். இந்தத் இனவிருத்தித் திட்டத்திற்கு
கட்டணம் வசூல் செய்யக்கூடாது என்பதை துறையில் கட்டாயமாக
வேண்டும். கலப்பின உற்பத்திக்கு ஆதரவு அரசு சிந்திக்க
நிலைமை உருவாகவேண்டும். தரவேண்டும் என்ற

இந்தத் துறையில் இருக்கின்ற அலுவலாளர்களின் நிலை மிகவும்
மோசமாக இருக்கிறது. மக்கள் தொடர்பு கொள்ளக்கூடிய
அலுவலாளர்களை விட, அலுவலர்கள் எண்ணிக்கை அதிகமாக
இருக்கிறது. இன்ஸ்பெக்டர் பதவியில் இருப்பவர்கள்தான்
மக்கள் தொடர்பு கொண்டு பணியாற்றக் கூடியவர்கள். அதிகாரி
களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறபோது, இந்த இன்ஸ்
பெக்டர்களின் எண்ணிக்கை மிகமிகக் குறைவாக இருக்கிறது.
மொத்தம் 3,127 இன்ஸ்பெக்டர்கள்தான் இன்று அந்தத் துறையில்
பணியாற்றுகிறார்கள். ஆனால் அதிகாரிகளின் எண்ணிக்கையைப்
பார்த்தால் ஏறத்தாழ 2,653 பேர் இருக்கிறார்கள். ஆனால் மக்க
ளோடு தொடர்பு கொண்டு கால்நடை பராமரிக்கக்கூடியவர்களின்
எண்ணிக்கை 3,127 என்று இருக்கிற நேரத்தில், ஸ்பெஷல்
கேட்டிகரி என்ற வகையில் 2,781 பேரும், அதிகாரிகள் என்ற
அளவில் 2,653 பேரும் இருக்கின்றனர். ஆகவே, உண்மையிலேயே
கால்நடை பராமரிப்பு செய்யும் இன்ஸ்பெக்டர்களின் எண்ணிக்கை
குறைவாக இருக்கிறது.

அது மட்டுமல்ல, அந்தத் துறையில் இன்ஸ்பெக்டர்கள் பதவி
260 காலியாக இருக்கின்றது. ஆகவே, இதனால் கிராமப்புறங்
களில் இருக்கும் 260 கால்நடை நிலையங்கள் பாதிக்கப்பட்டு இருக்
கின்றன. தமிழ்நாட்டில் ஏறத்தாழ ஒரு 10-12 மைல் தூரத்திற்
குள் ஒரு கிளை நிலையம் இருக்கிறது. ஆகவே, அந்தக் கிளை
நிலையங்கள் நல்ல முறையில் இயங்க அரசு நடவடிக்கை எடுத்து,
அந்த 260 ஆய்வாளர்களையும் நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அவர்களை நியமிப்பதில் இந்த அரசுக்கு என்ன
சிரமம் இருக்கும் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.



1978 மார்ச் 7] [திரு. மா. மணிமாறன்]

இந்தத் துறையில் பல சிக்கல்கள் உருவாகிக்கொண்டு இருக்கின்றன. கால்நடை ஆய்வாளர்கள் இன்றைக்குப் போராட்டம் நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். அப்படி அவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்துவது இந்த அரசாங்கத்தை எதிர்க்க வேண்டும் என்பதற்காக என்று சொல்லிவிட முடியாது. இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டமே, இந்திராவின் கோரப் பிடியில் இருந்து விடுபட்டு இருக்கிறது. எதிர் பக்கத்திலே இருப்பவர்கள் இதை ஏற்றுக்கொள்வார்களோ மாட்டார்களோ, ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ஒரு கோரப்பிடியில் இருந்து விடுபட்டு இருக்கிறது, இந்தியாவும், தமிழகமும். அதனால் பல்வேறு பிரச்னைகள் மனதிலே கொதித்துக்கொண்டு இருந்தவைகள் வெளிப்படத்தான் செய்யும்.

அரசாங்க ஊழியர்கள், இந்தக் கால்நடை அலுவலாளர்கள் வைத்து இருக்கும் பிரச்னையைத் தீர்க்க இந்த அரசு தயங்காது என்று நினைக்கிறேன். இந்தப் பிரச்னையைப் போக்குவதில் தயக்கம் காட்டக்கூடாது என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த நேரத்தில், ஏறத்தாழ 1,000 இன்ஸ்பெக்டர்களுக்கு 1-வது கிரேடில் பிரமோஷன் தரப்பட்டது. ஆனால் இந்தியத் துணைக் கண்டத்திலே இந்திரா கெடுபிடி இருந்த நேரத்தில், தமிழகத்திலும் 300 பேர் பதவி உயர்வு செய்யப்பட்டார்கள். 4-5 நாட்கள் அந்தப் பதவியில் இருந்து விட்டு, பிறகு அவர்கள் அந்தப் பணியில் தொடர்ந்து வேலை செய்ய விடாமல் பதவி இறக்கம் செய்யப்பட்டது. தொடர்ந்து பணி செய்வதில் என்ன கஷ்டம் வந்து விடும் என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் சம்பளம் வாங்குவதிலும் மேக்ஸிமம் ( Maximum ) ரீச் ஆகிவிட்டார்கள். ஆகவே, சம்பளம் கொடுப்பதிலும் அதிகச் செலவு இல்லை என்கிற நிலைமை இருக்கிறபோது, அவர்களுக்கு மறுபடியும் அந்த வேலை அளிப்பதில் தயக்கம் காட்டுவது வேடிக்கையாக இருக்கிறது. ஆகவே, அந்த 300 பேருக்கும் பதவி உயர்வு தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்கள் என்று கருதுகிறேன். அந்தத் துறையில் உள்ளவர்கள் நல்ல முறையில் பணியாற்றினால்தான் அந்தக் கால்நடைகள்—கிராமப்புறத்தில் உள்ள கால்நடைகள் பராமரிப்பு சீராக, செம்மையாக அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கிராமப்புறங்களில் இருக்கும் கிளை நிலையங்களுக்குச் செல்ல வேண்டுமென்றால், 10-15 மைல் நடக்க வேண்டியிருக்கிறது. கால் நடைகளை எடுத்துச்செல்வதற்கும் கஷ்டமாக இருக்கிறது. அப்படியே கஷ்டப்பட்டு மாடுகளை அழைத்துக்கொண்டு அந்நிலையங்களுக்குச் சென்றாலும், அப்படிச் செல்கின்ற நேரத்தில் போதிய மருந்து கிடைப்பதில்லை. ஆகவே, அரசு அந்தக் கால்நடை மருத்துவ மனைகளில் போதிய மருந்து இருக்கச்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள். உங்களுக்குக் கொடுத்த நேரம் முடிந்து விட்டது.

(முற்பகல் 10.50)

* திரு. மா. மணிமாறன் : கிளை நிலையங்களில் இருக்கிற கால்நடை உதவியாளர்கள் ஊசி போடுவதில் என்ன தவறு இருக்கிறது ? அவர்களை ஊசி போட அனுமதித்தால் தமக்கு வருகின்ற வருமானத்தைக் குறைத்துவிடுவார்களோ என்று அஞ்சிய மருத்துவர்கள் அந்த அச்சத்தின் காரணமாக அவர்கள் ஊசி போடுவதற்குத் தடை விதிக்கிறார்கள். இவர்களே ஊசி போடுவதாக இருந்தால், 20, 25 கிலோமீட்டர் தூரம் மாடுகளை ஓட்டிச்செல்ல வேண்டியிருக்கிறது. அவர்களிடம் வைத்தியம் அதனால் பார்க்க வேண்டிய அவசியம் இல்லாமல் போய்விடுகிறது. 20, 25 கிலோமீட்டர் தூரத்திற்கு நோய் பிடித்துள்ள மாடுகளை ஓட்டிச்செல்வது மிகவும் கஷ்டம். அதனால் கிளை நிலையங்களிலே இருப்பவர்களுக்கும் ஊசி போடும் பயிற்சி அவர்களுக்கு இல்லாமலிருந்தால், அந்தப் பயிற்சியை அளித்து, அவர்களே ஊசி போட்டு வைத்தியம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். மேலும் பல திட்டங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அதாவது 3 மாதம், 6 மாதம் என்று பயிற்சி அளித்து, ஊசி போட ஒருவர், மருந்து கொடுக்க ஒருவர் இப்படி பலரை நியமிக்க முயற்சி செய்கிறார்கள். ஆனால் ஊசி போடுவதற்கு ஒரு இடம், மருந்து கொடுப்பதற்கு ஒரு இடம், வைத்தியம் செய்வதற்கு ஒரு இடம் என்று வைத்தால் மிகவும் சிரமமாக இருக்கும். ஆகவே, இவை எல்லாம் அந்தந்த இடங்களிலேயே இருப்பதற்கு ஏற்ற வகையில் சூழ்நிலைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஒரு கிளை நிலையம் கட்டாயமாக ஏற்படுத்த வேண்டும். . . (மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்.)

* திரு. யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, தமிழகத்தில் வாயில்லாப் பூச்சிகளாக விளங்கும் அடித்தளத்து மக்களுக்கும்; வாயில்லாப் பிராணிகளான ஆடு மாடுகளுக்குமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிற சமுதாய நலத்துறை பற்றியும், கால்நடைத் துறை பற்றியும் மாண்புமிகு அமைச்சரவர்கள் கடந்த காலத்திலே அளித்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்த பல பிரச்னைகள் பற்றிய சாத்தியக்கூறுகள் நிறைவேற்றப்படுமா, நிறைவேற்ற முடியுமா என்ற அச்சம் எனக்கு ஏற்பட்டிருந்தது என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இங்கு தரப்பட்டிருக்கிற அறிக்கையைப் பார்க்கின்ற நேரத்தில் எவ்வளவு தூரத்திற்கு அவர்கள் சொன்னதை நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதை அறிந்து அதற்காக என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நிறையப் பேர் பேசவேண்டியிருக்கிறது. 5 நிமிடங்களில் சுருக்கமாகப் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. யா. சை. மு. யூசுப் : அதிலும் குறிப்பாக இந்த ஆண்டு ஏதாவது சிறப்புத் திட்டங்கள் இருக்கின்றவா என்று பார்த்தேன். கோழி வளர்ப்புத் திட்டத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது. அதன் மூலம் கிராமப்புறங்களில் இருக்கின்ற மக்களின் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கும் வகையில், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்ற வகையில் பல திட்டங்கள் தரப்பட்டிருப்பதைப் பார்த்து பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.

அதிலும் குறிப்பாக கோழி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டு, அவை பணியாற்றும் சாத்தியக் கூறுகளைப் பார்க்கும் போது, 1973-74 ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்ட தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனம் 24.6 லட்சம் ரூபாய் நஷ்டத்தில் செயல்பட்டது. 1976-77 ஆம் ஆண்டில் நடந்த கணக்கெடுப்புப்படி

[திரு. யா. சை. மு. யூசப்] [1978 மார்ச் 7

7.11 லட்சமாக இந்த நஷ்டம் குறைக்கப்பட்டிருக்கிறது. மேலும் இந்த ஆண்டு அந்த நஷ்டம் கூட இல்லாமல், லாபமும் இல்லாமல் நஷ்டமும் இல்லாமல் வரக்கூடிய வகையில் அமைய இருக்கிறது. இதைப் பார்க்கிறபோது வரக்கூடிய காலங்களில் இந்தத் தொழிலில் ஈடுபடக்கூடியவர்களுக்கு நல்ல வருமானவம் கிடைக்கக் கூடிய வகையில் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை ஏற்படுகிறது.

அடுத்தபடியாக, கால்நடை வளர்ப்புத் திட்டத்தைப்பற்றி ஒரு சில குறியீடுகளைக் காட்டி, அதை நிறைவேற்றுவதற்கு ஒருசில திட்டங்களைச் செயல்படுத்த தொடங்கியிருக்கிறார்கள்.

என்னுடைய மாவட்டமான நெல்லை மாவட்டத்தில் செம்மறி ஆடு வளர்ப்புத் திட்டம் மிகவும் சிறப்பாக நடை பெற்றுக்கொண்டிருந்தது. கடந்த காலத்தில் ஏற்பட்ட வறட்சியால் பாதிப்பு ஏற்பட்டு, அந்த செம்மறி ஆடுகளுக்கு உணவு வழங்க முடியாமல் அங்குமுள்ள விவசாய மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே, விரைவிலே தீவிர புல் சாகுபடி திட்டத்தை மிகவும் அதிக அளவிலே நிறைவேற்ற வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இந்த அறிக்கையிலே வெக்கை நோய் தடுப்புத் திட்டம் பற்றியும் மற்றும் பல திட்டங்கள் பற்றியும் அறிவித்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) குறிப்பாக கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் பல உழவர்களுக்கும் சிறப்பாக உதவி செய்யப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஆடு மாடு வாங்குவதற்கும், அவைகளைப் பராமரிப்பதற்கும் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரே ஒரு வேண்டுகோளை மட்டும் கூறி என்னுடைய உரையினை முடித்து விடுகிறேன். குறிப்பாக என்னுடைய பகுதியாகிய பணகுடி மற்றும் வானூர் ஆகிய இடங்களில் நீண்டகாலமாக அங்கு கால்நடை மருத்துவத்திற்கென்று ஒரு தனி மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை அன்பு கூர்ந்து பரிசிலனை செய்து உடனடியாக துவக்க வேண்டுமென்று மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



1978 மார்ச் 7] [திரு. யா. சை. மு. யூசப்]

அடுத்து, இங்கு மகளிர் நிலையத்தைப் பற்றி ஒரு சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன். குறிப்பாக புதிதாக மகளிர் பணி இல்லங்கள் துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

(மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சீக்கிரம் முடியுங்கள். நேரம் ஆகிவிட்டது.

திரு. யா. சை. மு. யூசுப்: என்னுடைய மாவட்டமாகிய நெல்லை மாவட்டத்தில். . . .
(மணியடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் பேச அழைக்கப்பட்டார்)

* திரு. அ. ப. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கு நடைபெறுகின்ற கால்நடை பராமரிப்புத் துறை மகளிர் நலத்துறை ஆகிய துறைகளின் கீழ் வரும் மானியக் கோரிக்கையின் மீது நானும் என்னுடைய சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

பொதுவாக, விவசாயம் நாட்டின் முதுகெலும்பு என்று சொல்கிறார்கள். இந்த விவசாயம் சீரும் சிறப்புமாக வளமளிக்கக்கூடிய ஒரு நிலைமை ஏற்படுவதற்கு உறுதுணையாக இருப்பது கால்நடைகளாகும். ஆகவே அந்த கால்நடையைப் பெரிதும் பேணிக் காக்க வேண்டியது மிகமிக அவசியமான காரியம் என்பது இங்குள்ள அனைவரும் அறிந்த ஒன்று. ஆனால் இன்று இந்த துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய மானியக் கோரிக்கை மிகக் குறைவானது என்று நான் கருதுகிறேன்.

ஏனென்றால் இப்போது எல்லா மாவட்டங்களிலும் ஒன்றியப் பகுதிகளிலும் கால்நடை மருந்தகங்கள் இருக்கின்றன. ஆனால் அந்த மருந்தகங்கள் சரியான முறையிலே இயங்கவில்லை என்பது என்னுடைய ஒரு எண்ணமாகும். இது நான் தெரிந்த ஒரு உண்மையும் கூட. அங்கே உள்ள மருந்தகங்களிலே இன்றைக்கு கால்நடைகளுக்கு ஏற்படுகின்ற நோய்களுக்குத் தேவையான மருந்துகள் இல்லை. ஒரு கிராமப் புறத்திலே இருக்கின்ற விவசாயி மாட்டுக்கு நோய் வந்தது என்று கொண்டு போனால் அங்கே சொல்கிறார்கள். இந்த நோய்க்குத் தேவையான மருந்து இங்கே இல்லை வெளியிலே வாங்கி வாருங்கள் என்று கூறுகிறார்கள்.

1978 மார்ச் 7] [திரு. அ. ப. பழனியப்பன்]

என்னுடைய தொகுதியாகிய ஒட்டன்சத்திரத்தில் கால்நடைப்
பொது மருத்துவ மனை இருக்கிறது. அங்கு இரண்டு டாக்டர்களும்
இருக்கிறார்கள். ஆனால் தேவையான மருந்துகள் அங்கு
இல்லை. ஆகவே, சாதாரண ஒரு ஏழை விவசாயி மருந்து வாங்க
வேண்டுமென்றால் அந்த மருந்து விலை கூடுதலாக உள்ளது.
அதோடு எங்கள் பகுதிபோல் இருக்கிற கிராமப்புற பகுதிகளிலே
அந்த மருந்துகள் கடைகளிலும் கிடைப்பதில்லை. நகர்ப்புறங்
களுக்குச் சென்று மருந்து வாங்க வேண்டிய நிலை இருக்கிறது.
அப்படி அங்கு சென்று வாங்கி வந்து மாட்டுக்கு கொடுப்பதற்குள்
ளாக மாட்டுக்கு நோய் முற்றி மாடு இறந்துவிடுகிறது.

இப்படி பல சம்பவங்கள் அங்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது.
இந்த குறையைப் போக்க எல்லா மருந்தகங்களிலும் எல்லாவித
மான நோய்களுக்கும் உரிய மருந்துகள் இல்லை என்று சொல்லாத
அளவுக்கு அங்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்பது அவசியமான
தொன்றாகும்.

அதோடு கால்நடை இனவிருத்தி நிலையம் இருக்கிறது. ஒரு
இன விருத்தி நிலையமும் பத்து கிளை நிலையங்களும் இருக்கின்றன.
அந்தக் கிளை நிலையங்களுக்கு விந்துகள் சென்று சேர்வதற்கு கால
தாமதம் ஆகிறது. பொதுவாக மாடுகளுக்கு சினை ஊசி போடுவது
காலை 9 மணியிலிருந்து 10 மணிக்குள்ளாக போட்டால் அது
பயனுள்ளதாகி மாடுகளுக்கு சினை ஏற்படுகிறது. அதற்கு மேலே
போனால் பயனற்றதாகி சினை பிடிப்பதில்லை.

(முற்பகல் 11-00)

ஆக அந்த முறையை மாற்றி மத்திய நிலையத்தில் இருந்து கிளை
நிலையங்களுக்கு வேகமாகக் கொண்டு செல்ல வாகனவசதிகளை
ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

அதோடு, கிராமப்புறங்களில் உள்ள ஏழை எளிய சிறிய
விவசாயிகளுக்கு, நிலமற்ற ஏழைக் கூலிகளுக்கு வேலைவாய்ப்பு
அளிக்கும் முறையில் மாடுகள் வளர்ப்பதற்காக வேண்டிய உதவி
அரசின் மூலம் கொடுப்பதாக குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.
ஆனால் அப்படி ஒரு திட்டம் இருக்கிறது, அந்தத் திட்டத்தின்
பலனைப்பெற வேண்டும் என்று முயற்சி செய்ய அந்தக் கிராம
மக்களுக்கு இத்த அறிவிப்பு செல்லவில்லை. இந்தச் சட்ட



1978 மார்ச் 7] [திரு. அ. ப பழனியப்பன்]

இருக்கிற எங்களைப் போன்றவர்
மன்றத்தில் உறுப்பினராக இருப்பதாக இப்போதுதான்
களுக்கே இப்படி ஒரு திட்டம் விளம்பரப்படுத்தப்படவில்லை.
தெரிகிறது. இது கிராமங்களில் மக்களுக்கு வேலை
ஆகவே கிராமப்புறங்களில் உள்ள ஏழை வகையில் இன்னின்ன
வாய்ப்பளிக்கிற அல்லது வாழ்வளிக்கிற திட்டங்கள் உள்ளன
காரியங்கள் இருக்கின்றன, இன்னின்ன அந்த ஏழை மக்கள்
என்று அறிவித்து அதன் பயனை தெரிந்து கொள்ளும் அளவிற்கு
பெறும் அளவில் கிராம மக்கள் வேண்டும் என்று கேட்டுக்
திட்டங்கள் விளம்பரப்படுத்தப்பட அதற்கு ஒரு ஏற்பாடு
கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)
இருக்கவேண்டும்.

அதோடு, புதிதாக கால்நடைப் பண்ணைகள் ஏற்படுத்தப்
போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. என் பகுதியில் வடகாடு
என்ற ஒரு கிராமம் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் ஒரு
கால்நடைப் பண்ணை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இதற்கு
முன்பு அங்கே பல ஆராய்ச்சிகளையெல்லாம் செய்தார்கள். அது
தகுதியான இடமா என்றெல்லாம் ஆராய்ச்சி செய்யப்பட்டது.
ஆனால் அது குறித்து ஒரு நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்
படவில்லை. அங்கு ஒரு கால்நடைப் பண்ணை ஏற்படுத்த அது
நல்லதொரு வாய்ப்பான இடமாகும்.

அங்கு ஒரு பண்ணையை ஏற்படுத்தினால் அதன் மூலம் நல்ல
தரமான கன்றுகளை உற்பத்தி செய்து அப்பகுதி மக்களுக்கு விநி
யோகிக்க ஒரு வாய்ப்பாக இருக்கும். ஆகவே அங்கு வடகாட்டில்
ஒரு கால்நடைப் பண்ணை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

அடுத்து, பால் அபிவிருத்தித் திட்டம். பால் அபிவிருத்தித்
திட்டம் நல்லமுறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மதுரை
பால் வழங்கு திட்டத்தின்கீழ் எங்கள் பகுதியில் பல சொசைட்
டீஸ் ஏற்படுத்தி அங்கிருந்து பால் வாங்கப்படுகிறது.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பால் வள நிறுவனம்
பொறுத்தவரையில் அது மாண்புமிகு வேளாண்மைத் துறை
அமைச்சர் அவர்களிடம் இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு
உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[1978 மார்ச் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. அ. ப. பழனியப்பன் : என் பகுதியில் கோழி வளர்ப்புப் பண்ணை ஒன்றை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். ஒட்டன்சத்திரத்தில் ஒரு மார்க்கெட் இருக்கிறது. வாரத்திற்கு ஒரு முறை இரண்டாயிரம் கோழிகள் வருகின்றன. வாரத்திற்கு சுங்கமாக என் பஞ்சாயத்திற்கு 200 ரூபாய்க்கு மேல் வருமானம் வருகிறது. நல்ல வியாபாரம் நடக்கிறது. ஆகவே கோழி வளர்ப்புப் பண்ணை ஒன்றை அங்கே ஏற்படுத்தித்தந்தால் அங்குள்ள மக்களுக்கு நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று கூறி என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, இன்றைக்கு சமூக நலனும் கால்நடை வளர்ப்பும் ஒருங்கே சேர்ந்து வந்திருக் கக்கூடிய மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என் கருத்துக்களைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இதுவரையில் வேளாண்மையோடு இணைந்து வந்திருக்கக் கூடிய கால்நடை இலாகா இன்றைக்கு சமூக நலத் துறை இருக்கக்கூடிய அமைச்சர் அவர்களிடம் வந்திருக்கிறது. இருந்த கிறது. ஆகவே இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை இலாகாவிலுள்ள மருந்து ஆராய்ச்சி நிலையங்களுக்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. 77-78-ல் கூட நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு அது விடப்பட்டிருக் கிறது. ஆகவே இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொண்டு இந்தத் தடவை வராவிட்டாலும் அடுத்த தடவையாவது அதைச் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

இந்த இனங்களில் எல்லாம் அதிகமான நிதி ஒதுக்கவேண்டும். மருந்து ஆராய்ச்சி செய்யும் இடங்களை வளர்ச்சி பெறச் செய்ய வேண்டும். இதில் ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். பல மருந்துகளை கண்டுபிடிக்கிறார்கள். கோமாரி நோயைப்பற்றி எல்லாம் ஆராய்ச்சி செய்கிறார்கள். இது மிகவும்



1978 மார்ச். 7] [திரு. எஸ். ஜே. இராமசாமி]

பயன் உள்ளது. ஆகவே இப்படிப்பட்ட ஆராய்ச்சி நிலையங் களுக்கு இப்போது இல்லாவிட்டாலும் வருகின்ற சப்ளிமெண்டரி பட்ஜெட்டிலாவது அதிகமாக நிதி ஒதுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கால்நடை இலாகாவைப் பொறுத்தவரையில்—'அசர்கட்டா' போன்ற இடங்களில் நடைபெறுகின்ற பண்ணைகளைப் பார்த்திருக் கின்றேன். அங்கே நல்ல முறையில் கால்நடைகளை, பலதரப் பட்ட இடங்களை வளர்க்கிறார்கள். நல்ல கறவையுள்ள பலதரப் பட்ட பசுக்களை வளர்க்கிறார்கள். இப்படிப்பட்ட பசுக்களை எல்லாம் நாம் வளர்க்கவேண்டும்.

ஓசூர் பண்ணையை எடுத்துக்கொண்டால், முன்னால் வெள்ளைக் காரன் காலத்தில் இருந்ததுபோலவே இப்போதும் இருக்கிறது. இதை நவீனப்படுத்துவதில் நமது அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும்.

அங்கே குதிரைகளை எல்லாம் வளர்த்துக் கொண்டிருந்தார்கள். இப்போது இல்லை, அதைப் பற்றி இங்கே ஒரு பிரச்னையே வந்து விட்டது, அதுவும் கட்டாயம் இருக்க வேண்டும். அந்த பண்ணை யில் இன்னும் பல மேம்பாடுகளை கொண்டு வர வேண்டும். வெள்ளைக்காரன் காலத்தில் இருந்ததுபோலவே இருந்து கொண்டிருக்கிறது. எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. இதை நல்ல முறையில் நவீனப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோழி இனங்களைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்து கொண்டிருக் கிறோம். நம் நாட்டுக்கு மிகவும் தேவைதான். நல்ல சத்துள்ள உணவாக இன்றைக்கு நமக்கு கோழி முட்டை கிடைக்கிறது. இன்னும் குறைந்த விலையில் முட்டை கிடைக்கவில்லை, இன்றைக்கும் முட்டையின் விலை சரியாக குறையவில்லை. டாப்கோ நிறுவனம் வைத்திருக்கிறோம், இப்படியெல்லாம் இருந்தும் முட்டை யின் விலை 35 காசு, 40 காசு என்று தான் இருக்கிறது, போதிய அளவுக்கு இறங்கவில்லை, இதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும். ஆனால் முன்பு 50 காசாக இருந்தது இப்போது ஓரளவுக்கு 35 காசு என்ற அளவுக்கு வாங்க முடிகிறது. ஆனால் இன்னும் குறைய வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால் கோழி இறைச்சியை விற்பனை செய்து கொண்டிருக்கிறோம். விலையை எடுத்துக்கொண்டால் இதன் விலையும் அதிகமாகத்தான் இருக்கிறது. நந்தனத்தில் இருக்கக்கூடிய கோழிப் பண்ணையில் கோழி இறைச்சி விற்கப்படு கிறது, விலை இன்னும் குறைய வேண்டும். சபாநாயகர் அவர்கள் மணியைப் பார்த்துக்கொண்டிருக்கிறார், குறிப்பிட்ட நேரத்திற்குள் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் மணியைப் பார்த்துக் கொண்டிருக்கவில்லை. திரு. எஸ். ஜே. இராமசாமி அவர்கள் சைவ முதலியார் ஆயிற்றே, கோழியைப் பற்றி இவருக்கு என்ன இவ்வளவு கவலை என்றுதான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். (சிரிப்பு)

**திரு. எஸ். ஜே. இராமசாமி:** அடுத்து, சமூக நலத் துறையை எடுத்துக்கொண்டால், விதவைகளுக்கு 20 ரூபாய் பென்ஷன் கொடுக்கிறார்கள். கொடுப்பதை உரிய காலத்தில் கொடுக்க வேண்டும். தாலூகா ஆபீஸ்களில் இவர்கள் எல்லாம் வந்து நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒழுங்காக பென்ஷன் போவதில்லை. தாசில்தார் என்கொயரி, மணியகாரர் என்கொயரி என்று இப்படி காலம் கடந்து கொண்டே போகிறது. இதற்குள் நடந்து நடந்து அந்த அம்மாவே இறந்து போய் விடுவார்.

இப்போது 40 வயதிற்கு மேற்பட்ட விதவைகள் எல்லோ ருக்கும் பென்ஷன் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. ஆனால் இதெல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் நடைமுறையில் வருவதில்லை. எத்தனையோ விதவைகள் தாலூகா ஆபீசுக்கும் வீட்டுக்கும் நடந்து கொண்டே யிருக்கிறார்கள், கையிலே இருக்கின்ற ரூபாய் அத்தனையும் இதற்கே செலவழிந்து போய்விடுகிறது. இதை வைத்துக் கொண்டாலே இருபது ரூபாய் பென்ஷன் கொடுப்பது போல் ஆகிவிடும். அந்த அளவுக்கு அவர்கள் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. தாசில்தார், மணியக்காரர் இவர்களிடம் எல்லாம் போய் வருவதற்குள் மிகவும் சிரமப்பட்டு விடுகிறார்கள். இதையெல்லாம் சரியான முறையில் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





இந்த பென்ஷன் எல்லா விதவைகளுக்கும் கிடைக்க வேண்டும். இந்தத் துறையை ஏற்றுக் கொண்டிருக்கிற அமைச்சர் அவர்கள் பெண் ஆனதால் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், ஆனால் ஏதோ சிலரைப்போல் எல்லோரும் வசதியாக இருப்பார்கள் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. அப்படியில்லாமல் எல்லோருக்கும் இநத பென்ஷன் கிடைப்பதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* **திரு. என். வரதராஜன்:** தலைவர் அவர்களே, அவை முன் வந்திருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சமீபத்தில் ஏற்பட்ட புயல், வெள்ளம் இவைகளால் கால்நடைகள் மிகவும் பாதிக்கப்பட்டு, மக்கள் மிகவும் சிரமப்பட்டிருக்கிறார்கள். முக்கியமாக கிராமப்புற மக்களுக்கு 'இதற்காக விசேஷ திட்டம் ஒன்றைத் தீட்டி, வெள்ளத்தால், புயலால் அடித்துச் செல்லப்பட்ட நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான கால்நடைகளுக்குப் பதிலாக இப்போது புதிய திட்டம் தீட்ட விவசாயிகளுக்கு, இலவசமாக கால்நடைகளை வழங்க கவனம் செலுத்தப் பட்டிருக்கும் என்று எதிர்பார்த்தேன். அது ஒன்றும் இதில் காணப்படவில்லை. சமீபத்தில் 'கேர்' ஸ்தாபனத்திலிருந்து கால்நடைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவை போதுமான தல்ல, தேவையான அளவுக்கு இந்தத் துறையில் இன்னும் அதிக மான கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.10]

அடுத்து, இந்தத் துறையிலே தங்களுக்கு கீழே இருக்கக்கூடிய சிப்பந்திகளோடு எப்போதும் அதிகமான, நெருக்கமான தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். எந்தத் துறையிலும் [illegible]களோடு நெருக்கமான தொடர்பு அதிகம் இல்லாவிட்டால், அதிலே செயல்திறன் அதிகமாக இருக்க முடியாது. கால்நடை ஆய்வாளர்கள் வருந்துகிறார்கள். மிகப் பெரிய சம்பளம் கொடுக்கக் கூடிய பெரிய பதவிகளுக்குத்தான் பதவி உயர்வு கொடுக்கின்றார்கள்.

[திரு. என். வரதராஜன்] [1978 மார்ச் 7

அதேபோல் பல ஆண்டுக் காலமாக இந்த கால்நடை துறையிலே ஈடுபட்டிருக்கின்ற தங்களுக்கு பதவி உயர்வு கிடைப்பதில்லை என்ற குறைபாடு அவர்களிடையே இருக்கிறது. அவர்கள் சொல்கிறார்கள், கிரேடு II என்ற நிலையிலேயே 8 ஆண்டுகள் 10 ஆண்டுகள் நாங்கள் பணியாற்றினாலும் எவ்விதப் பதவி உயர்வும் இல்லாமல் இருக்கிறோம் என்று. தேர்வு நிலையை ஏற்படுத்தலாம். கிரேடு I என்று பதவி உயர்வு கொடுக்கலாம் கால்நடை அதற்கான வசதிகளை மேலும் நீடிக்கலாம். ஏற்கனவே இருந்ததைப்போல் ஒன்றியங்களில் கால்நடை விரிவாக்க அலுவலர்களாக பதவி உயர்வு கொடுக்கலாம்.

ஏற்கனவே கால்நடை ஆய்வாளர்களுக்கு இருந்த பயிற்சி முகாம்கள் இப்போது தடைபட்டு நிற்கின்றது. மல்டி பர்பஸ் ஒர்க்ஸ் என்கின்ற அடிப்படையில் இந்தத் துறையிலே இன்னும் அதிகமான வேலைகளை கிராமங்களிலே செய்ய முடியும். அதற்குரிய முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கிறார்கள்.

அதேபோல், டிப்ளமா கோர்ஸ்-ல் தங்களுக்கு தேர்வு அடைவதற்கான வசதிகளைச் செய்து தர வேண்டுமென்றும் கேட்கிறார்கள். இப்படி அவர்கள் கேட்கின்ற வசதிகள் எல்லாம் மிகப் பெரிய கோரிக்கைகள் அல்ல; செலவும் அதிகம் ஆகிவிடாது. ஆகவே, அவர்களுக்கு இந்த வசதிகளைச் செய்து தரவேண்டும். சட்டையில்லாத போராட்டத்தில் அவர்கள் இறங்க வேண்டிய அவசியமில்லை. ஆகவே, அவர்களுக்கு தயவுசெய்து இந்தத் துறையைப் பற்றி விவாதித்து பதில் அளிக்கும்போது, அமைச்சர் அவர்கள் இதுபற்றிய தெளிவான பதிலை, கால்நடை ஆய்வாளர்கள் மனசாந்தி பெறக்கூடிய அளவிலே சொல்ல வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன்.

அடுத்து, கால்நடை தீவிரத் திட்டமோ அல்லது கேந்திர திட்டமோ எது அமலில் இருந்தாலும் நம் நாட்டிலே உள்கடைக் கிராமங்களிலே கால்நடைகளுக்குப் போதுமான மருந்துகள் கிடைப்பதிலே மிகப் பெரிய சங்கடம் இருக்கிறது. இதை நாம் உணர வேண்டும்.



1978 மார்ச் 7] [திரு. என். வரதராஜன்]

அப்படி உணர வேண்டுமானால், கால்நடை சப்-சென்டர்களை அதிகமாக்க வேண்டும். அரசு ஆராய்ச்சி செய்து புதிய மருந்துகள் கண்டுபிடித்திருக்கின்றது என்று சொன்னால் மட்டும் போதாது; அதிலே பிரயோஜனமும் இல்லை. இந்த உள்கடைக் கிராமங்களிலே போதுமான மருந்துகள் கிடைப்பதில்லை என்று காங்கிரஸ் நண்பர் திரு. பழனியப்பன் அவர்கள்கூடப் பேசினார்கள். உள்கடைக் கிராமங்களிலே சரியான முறையிலே மருந்துகள் கிடைப்பதில் சங்கடம் இருக்கிறது. இதற்கு என்னுடைய ஆலோசனையைச் சொல்கிறேன்.

மொபைல் வான்களை நாம் அதிகமாக்குவதன் மூலம், இதை ஓரளவுக்கு நிறைவேற்ற முடியும். இதன் மூலம் இன்றைக்கு கால்நடைகளுக்குப் போதுமான மருந்துகள் கிடைக்க உதவி செய்ய முடியும்.

இரண்டாவது, சப்-சென்டர்களை நாம் அதிகப்படுத்த வேண்டும். மருந்துகள் என்று வருகிறபோது, கால்நடை மருந்தகங்களில் அதிகமான மருந்துகள் இப்போது கிடைப்பதில்லை. இதுபற்றி ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டும். சில பகுதிகளில் இப்படிப்பட்ட மருந்துகள் கடைகளிலே கூட கிடைப்பதில்லை. இவைகளைப் பற்றியும் கவனிக்க வேண்டும்.

அடுத்து சொல்ல வேண்டியது, இன்றைக்கு நாம் இன விருத்தி செய்வதில். அதிகமான முயற்சி செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். இப்படிப்பட்ட காலத்திலே, இந்த இன விருத்தி செய்வதற்காக ஊசிகள் போடப்படுகின்றன. அந்த இடங்களிலே இதற்காக பணம் வசூலிக்கின்றார்கள். இன்றைக்கு இந்த முறையைக் கைவிடுவதன்மூலம், இதிலே ஓரளவுக்கு சிறு விவசாயிகள் பயன் அடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த இன விருத்தி என்று சொல்லும்போது, மேலை போன்ற இனங்களை விருத்தி செய்வதற்கு நாம் முயற்சிகள் செய்து வருகிறோம். இதைபோல் இன்னும் பல இனங்களைப் பற்றி இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அயல் இனங்களிலே எல்லாம் நாம் இன விருத்தி செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சமூக நலத் துறையைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். இன்றைக்கு விதவைகளுக்கு உதவுவது என்ற பெயரால், நாம் அவர்களுக்கு 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு உதவி செய்கிறோம். அது போதுமானதாக இல்லை. நம்முடைய நாட்டிலே உள்ள வறுமை நிலைமைகளை நாம் அனைவரும் அறிவோம். ஆகவே, விதவைகள் என்று சொல்கின்றபோது சிறிய வயதில் விதவையானவர்கள் 15, 19, 20 வயதிலே உள்ளவர்கள் என்ன செய்வார்கள்? ஆகவே, விதவைகள் அனைவருக்கும் உதவி செய்வது என்ற வகையிலே இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உடல் ஊனமுற்றவர்கள் என்று சொல்கிறபோது, நாம் அவர்களுக்கு பல சலுகைகள் அளிப்பதிலே கவனம் செலுத்த வேண்டும். வேலை வாய்ப்பு போன்றவற்றிலும், இன்னும் பிற துறைகளிலும் நாம் அவர்களுக்கு உதவிகள் அளிக்க வேண்டும். சென்னை நகரத்திலே கூட, தொழுநோய்க்காரர்கள் சுற்றிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அவர்கள் எந்த இடத்திலே இருந்தாலும் சரி, தொற்று நோயைப் பரப்பக் கூடிய இந்தச் சமுதாயத்தினரை அவர்களுக்காக அமைக்கப்பட்டிருக்கின்ற இல்லங்களிலே உடனடியாகக் கொண்டு போய்ச் சேர்த்து, அவர்களுக்கு அங்கே நிவாரணம் அளிக்க வேண்டும்; அதிலே நாம் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த வருவாய்த் துறையிலே, வயோதிகர்களுக்காக உதவித் தொகை கொடுக்கப்படுகிறது. வயோதிகர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதை சமுதாய நலத் துறைக்கு மாற்றினால் நல்லது. அப்படிப் பார்க்கின்றபோது, இன்றைக்கு மேற்கு வங்காளத்திலே அரசு வேலையில்லாதவர்களுக்கு மாதம் 50 ரூபாய் உதவித் தொகை அளிக்க முன்வந்துள்ளது. இங்கே வயோதிகர்கள் அனைவருக்கும் மாதம் குறைந்ததான ரூ. 20 கொடுக்காமல் இருக்கிறோம். குழந்தைகளைக்கூட பராமரிக்க முடியாமல், தங்களுடைய தாய் தகப்பன்களுக்குக் கூட உணவு அளிக்க முடியாத நிலையில் நம் நாட்டிலே குடும்பங்கள் வாழ்வு தாழ்வாகி நிற்கின்றன. இந்த உதவித் தொகை 20 ரூபாய் இருக்கக்கூடிய வயோதிகர்கள் [illegible]க்கும் கொடுக்கப்படவில்லை என்பதை மனதில் கொண்டு, நாம் இந்த தேவையான உதவியைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





கடைசியாக ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். கால்நடைகளுக்கு, புண்பட்டிருக்கும் கால்நடைகளை மாட்டு வண்டிகளில் பூட்டினால் அபராதம் விதிப்பது முன்பு ஐந்து ரூபாயாக இருந்தது இன்று ஐம்பது ரூபாய் அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது, அதனால் அதைத் தடுத்து நிறுத்த முடிந்திருக்கிறதா என்றால் இல்லை. லஞ்ச லாவண்யத்திற்குத்தான் இடமளிப்பதாக இருக்கிறது. ஏழை எளிய மக்கள் தொல்லைக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். ஆகவே, இதைப் பற்றியும் இந்த இல்ாகா பரிசீலித்து பழையபடி ரூபாய் ஐந்து அபராதம் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

* **திரு. பி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற கால்நடை, சமூக நலத் துறை மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கால்நடைப் பராமரிப்பிலும், கோழி வளர்ப்பிலும் நமது அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு எடுத்துக்கொண்ட பல நடவடிக்கைகள் மூலமாக, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பல மாவட்டவாரியாக, தாலூகாவாரியாகச் சென்று கால்நடைப் பராமரிப்பில் எந்தெந்த வகையில் கவனம் செலுத்த வேண்டுமென்ற முறையில் மிகவும் சுறுசுறுப்பாகப் பணியாற்றி வருகிறார்கள்.

இந்த நாட்டில் வாழக்கூடிய ஏழை எளிய மக்கள் ஆடு மாடுகளையும் கோழிகளையும் வளர்க்கிறார்கள். அவற்றைக் கொண்டு தான் அவர்கள் அவர்களுடைய குடும்பங்களைப் பராமரித்து வருகிறார்கள். அந்தக் கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும், நோய் வருகிற நேரத்தில் எங்கு சென்று அதற்கு வைத்தியம் செய்வது என்பதைக்கூட அறியாத மக்கள் கிராமப்புறங்களில் வாழ்கிறார்கள். ஆகவே கிராமங்கள்தோறும் நடமாடும் மருத்துவ மனைகளை ஏற்படுத்தி அந்தக் கால்நடைகளுக்கு வைத்திய வசதிகளைச் செய்து கொடுத்து கால்நடை அபிவிருத்தியில் இந்த அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உடனுக்குடன் கால்நடைகளுக்கு ஏற்படக் கூடிய நோய்களைத் தீர்க்க முடியாததன் காரணமாக கிராமப்புறங்களில் கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது.

அதேபோன்று இனவிருத்தி செய்கிற நேரத்தில் அந்த ஆடு மாடுகளுக்கு எந்த வகையிலே இன விருத்தி செய்யவேண்டுமென்பதை அறியாத மக்கள் எல்லாம் கிராமங்களிலே இருக்கிறார்கள். ஒரு கால்நடைக்கு இன விருத்திக்காக ஊசி செலுத்த வேண்டுமென்றால் ஊசி செலுத்துகிற நேரம் எப்போது என்பதை டாக்டர்களிடத்திலோ அல்லது அங்குள்ள அதிகாரிகளிடத்திலோ கலந்து அந்த நேரத்தில் ஊசி செலுத்த வேண்டுமென்பதை அறியாமல் அங்கே சென்று இன விருத்திக்கான ஊசியைச் செலுத்துகின்ற காரணத்தால் இனவிருத்தி ஏற்பட முடியாத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அதைப்பற்றி அந்த அதிகாரிகள் சொல்லுகிற வகையில் அந்த மக்கள் நடப்பார்களானால் இனவிருத்தி நிச்சயமாக ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தில் பல கிராமங்களில் கோழிகளை வளர்த்து அதன்மூலம் தங்கள் வயிற்றுப் பாட்டைக் கவனித்துக் கொள்ள வேண்டிய நிலைமையில் மக்கள் இருக்கிறார்கள்.

கிராமங்களில் ஏழை எளிய, ஊனமுற்ற, கண்பார்வையற்றவர்கள் குடும்பங்களுக்கு இந்த அரசு மானியமாக கால்நடைகளையும் கோழிகளையும் கொடுத்து அந்தத் திக்கற்ற குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற எனது வேண்டுகோளை அரசிடம் வைக்கிறேன்.

அதேபோன்று இந்த நாட்டில் பல்லாயிரக்கணக்கான விதவை சகோதரிகள் வாழ்கிறார்கள். அவர்கள் கோழி வளர்ப்பில் கால்நடை வளர்ப்பில் ஆர்வம் காட்டக்கூடிய வகையில் அவர்களுக்கு ஆடுமாடுகள், கோழிகளைத் தந்து இந்த அரசு அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்ளவும், அவர்களுடைய வாழ்க்கையைப் பாதுகாத்துக் கொள்ளவும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





[முற்பகல் 11-20]

கும்பகோணம் தொகுதியில் கால்நடை மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்காக தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, விடை பெறுகிறேன். வணக்கம்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. பண்ணை கே. சேதுராம் தலைமை)

* திரு. எம். ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே இன்றைய தினம் கால்நடைப் பராமரிப்பு; சமூக நலத் துறை மானியக் கோரிக்கைகளின்மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கால்நடைப் பராமரிப்புத் துறை என்பது இந்திய கால்நடைகளையும் அயல் இன ரகங்களையும் கலப்பு இன அபிவிருத்தி மூலமாக உற்பத்தி செய்து நாட்டிலே கால்நடைகளைப் பெருக்குவதற்கும், அதே நேரத்திலே பால் வளத்தைப் பெருக்குவதற்கும் உதவிகரமாக இருந்து வருகிறது. உயர் ரக கால்நடைகளைப் பெருக்குவதற்கும், இந்தியக் கால்நடைகளைப் பெருக்குவதற்கும் கால்நடைத் துறை இருக்கிறது.

இப்படி இனவிருத்தி மூலமாக உற்பத்தியாகக் கூடிய பாலை விநியோகிக்கக்கூடிய பொறுப்பு மற்றொரு துறையிடம் இருக்கிறது, மற்றொரு அமைச்சரிடம் இருக்கிறது. அது சரியாகாது. ஏனெனில், பாலையும் பசுவையும் பிரிப்பது சரியல்ல. மாடுகளை வளர்க்கின்ற, பெருக்குகின்ற முழுப் பொறுப்பும், இனத்தைப் பெருக்குகின்ற முழுப் பொறுப்பும் ஒரு அமைச்சரிடம் இருக்கிறது. ஆனால், அந்த மாடுகளிலிருந்து உற்பத்தியாகும் பாலை இன்னொரு அமைச்சர் நிர்வகித்து வருகிறார் என்றால் இது இரட்டை ஆட்சி முறையாகும். ஆகவே, வருங்காலத்தில் ஒரே அமைச்சரிடம் இரண்டையும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே வெட்கை நோய் மாடுகளுக்கும், ஆடுகளுக்கும், செம்மறியாடுகளுக்கும், மற்ற பிராணிகளுக்கும் வந்து அவைகள் செத்து மடிகின்றன. கால்நடை வளர்ப்புத் துறையில் நல்ல மருத்துவ வசதிகள் இல்லாத காரணத்தால் அவைகள் எல்லாம்

[திரு. எம். ஆறுமுகம்] [1978 மார்ச் 7

பண்ணை பண்ணையாக மடிந்து விடுவதால் நாட்டிலே பால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. அது மட்டுமல்ல. இறைச்சி உற்பத்தியும் பாதிக்கப்படுகிறது. அதே நேரத்தில் அந்த மாடுகளை வளர்க்கக் கூடியவர்களுக்கு பொருள் இழப்பும் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட கொடிய நோயால் ஆடு, மாடுகள் இறந்துவிட்டால் பொருள் இழக்கின்றவர்களுக்கு நட்டயீடு கொடுக்கக்கூடிய முறையில் கால்நடை இன்ஷூரன்ஸ் திட்டம் கட்டாயமாகக் கொண்டு வரப்பட வேண்டுமென்று சென்ற நிதிநிலை அறிக்கை விவாதத்தின் போதே நான் சொன்னேன். அதன்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் பதிலில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம், ஏர்க்காடு மலைப் பகுதியில் அயல் இனங்கள், குர்ஜியன், ஜர்ஸி, ரெட்டேன் என்று சொல்லக்கூடிய ரகங்களை வைத்து பண்ணைகளை ஏற்படுத்தி அதன் மூலமாக விந்துகள் சேமிக்கப்பட்டு மற்ற மாவட்டங்களுக்கு விநியோகிக்கக்கூடிய முறையில் ஏர்க்காட்டில் ஒரு கால்நடைப் பண்ணையை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு முழுவதும் கால்நடைகளை வளர்க்கக்கூடியவர் களுக்கு பெரிய பிரச்னையாக இருப்பது வறட்சிக் காலங்களில் தீவனம் கிடைப்பதில்லை என்பதாகும். பச்சை, உலர்ந்த தீவனங்களை ஆண்டு முழுவதும் கொடுக்கக்கூடிய முறையில் தரிசாகக் கிடக்கும் நிலங்களையெல்லாம் சாகுபடிக்குக் கொண்டு வந்து ஆண்டு முழுவதும் கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்கக் கூடிய முயற்சிகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். இந்தியா முழுவதும் கோழிப் பண்ணைக்கு வழங்கும் மின் இணைப்பிற்கு விவசாயத்திற்கான மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும் நான்-டொமஸ்டிக் கட்டணமாக 65 பைசா, 70 பைசா யூனிட்டுக்கு வசூலிக்கப்படுகிறது. இதை அரசு கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்தில் தீவிர கால்நடை வளர்ப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் மாவட்டத்தில் கோழிக்குஞ்சு பொரிப்பு நிலையம் ஒன்றை ஏற்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.



1978 மார்ச் 7] [திரு. எம். ஆறுமுகம்]

கன்னியாகுமரியிலே அருமனை என்ற இடத்திலே ஒரு கால்நடை மருத்துவர் தாக்கப்பட்டு, சமூகவிரோதிகளால் தாக்கப்பட்டிருக்கிறார். தாக்கப்பட்ட மருத்துவர் போலீஸில் புகார் செய்திருக்கிறார். ஆனால், இன்னும் நடவடிக்கை எடுக்கப் பட்டதாகத் தெரியவில்லை. இப்படிப்பட்ட நிலைமை இருந்தால் கால்நடை மருத்துவர்கள் எப்படி பணியாற்றுவார்கள் என்பதை பார்க்க வேண்டும். அரசாங்க ஊழியர்கள் தங்களுடைய கடமைகளைச் செய்வதற்கு போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டும். அப்படி அளிக்காவிட்டால் அவர்கள் தங்களுடைய கடமைகளைச் சரிவர செய்ய முடியாது.

மதுரை ஜில்லாவிலே 1976 ஆம் ஆண்டு திடீரென்று கொள்ளை நோய் ஏற்பட்டு அதன் காரணமாக 15 லட்சம் ரூபாய் மதிப்புள்ள வாத்துக்கள் இறந்து விட்டன. அதை வளர்த்தவர்கள் அரசாங்கத்திடம் கடன் கேட்டு விண்ணப்பித்து இருக்கிறார்கள். இரண்டு ஆண்டுகள் ஆகியும் இன்னும் அவை கவனிக்கப்படாமல் இருக்கின்றன.

கேரளாவில் இம்மாதிரி விபத்துக்கள் ஏற்பட்டால் உடனடியாக நிதியுதவியும். கடனுதவியும் செய்து வருகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதுபோல தமிழ்நாட்டிலேயும் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சமூக நலத் துறையைப் பொறுத்தவரையில் விதவைகள் உதவி நிதி பெறும் வயது 40 வயதுக்குக் குறையாமல் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒரு பெண் 18 அல்லது 20 வயதில் விதவையாகிவிட்டால் அவர்கள் இந்த விதவைகள் நிதி உதவியைப் பெறுவதற்கு 20 ஆண்டு காலம் காத்திருக்க வேண்டியிருக்கிறது. தினசரி கூலி வேலை செய்கின்ற, அல்லது வண்டி இழுக்கின்ற ஒரு தொழிலாளி இறந்துவிட்டால், அவனது மனைவிக்கு 20 வயது ஆகியிருந்தால், அந்தப் பெண் 20 ஆண்டு காலம் எவ்வாறு காத்திருந்து பெற முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எனவே, சமுதாயத்தில் வாழ்விழந்த விதவைகளுக்கு, அவர்களுக்கு வயதுவரம்பைக் கணக்கில் கொள்ளாமல், இந்த நிதி உதவியைப் பெற வாய்ப்பு கொடுக்க வேண்டும். 40 வயதான விதவை, விதவை நிதியுதவி கேட்டு மனுச் செய்து, அந்த உதவியைப் பெறுவதற்காக நடந்து நடந்து முதியோர் உதவித் தொகை பெறுகின்ற வயதை அடைந்து விடுகிறார் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

ஆகவே, சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற ஏழை எளிய விதவைகள் அந்த உதவியைப் பெறும் வகையில், வயது வரம்பை நீக்கி, விதவையான பெண்கள் அனைவரும் இந்த உதவியைப் பெறுவதற்குத் தகுதி உள்ளவர்கள் என்று அரசு அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாயத்தில் உள்ள ஏழைகள், விதவைகள், ஊனமுற்றோர் ஆகியோருக்கு அரசாங்கம் உதவி செய்யும்பொருட்டு, அரசு எழுதுபொருள் பிரிவில் பழுதடைந்த தட்டெழுத்துக் கருவிகளை ஏலம் விடுவதைத் தவிர்த்து, அத்தகையவர்களுக்கு இலவசமாக அளித்தால் அவர்கள் சுயமாகவே தொழில் நடத்த உதவியதாக அமையும். அதே நேரத்தில் விதவைகளுக்கு இலவசமாக தையல் மிஷினும் வழங்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதியோர் பென்ஷன் என்பது 15 ஆண்டுகளுக்கு முன்பு பெருந்தலைவர் காமராஜர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. அப்பொழுது கொடுக்கப்பட்ட 20 ரூபாய் என்பது 15 ஆண்டுகளாக அப்படியேதான் இருந்து வருகிறது. ஆகவே, முதியோர் உதவித் தொகையான 20 ரூபாய் என்பதை காலத்திற்கும், விலைவாசிக்கும் ஏற்றவாறு உயர்த்தி 50 ரூபாயாகவாவது உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமூகத்தில் உள்ள குழந்தைகளின் வளர்ச்சியை சமூக நலத் துறை சரியாகக் கவனிக்க வேண்டும். ஏனென்றால், ஒரு நாட்டின் வருங்காலச் செல்வம் குழந்தைகள்தான். இந்தக் குழந்தைகள் சம்பந்தமாக இரஷ்யாவிலும், இங்கிலாந்திலும் தீவிர கவனம்





செலுத்தப்படுவதோடு, ஏராளமான பொருளும் செலவிடப் படுகிறது. அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும் உள்ள அலுவலகங்களில் உத்தியோகத்திற்குச் செல்லும் தாய்மார்கள் இருக்கிறார்கள். அவர்கள் அலுவலகங்களுக்குச் சென்றுவிட்டால் அவர்களுடைய குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும். அதற்காக குழந்தைகள் இல்லத்தை அதிகமாக ஆக்க வேண்டும். குழந்தைகள் வளரக் கூடிய சூழ்நிலையிலும், அவர்கள் இருக்கின்ற நிலைமைகளிலும் குழந்தைகளின் மனோநிலை மாறுகிறது.

தமிழ் நாட்டிலே குழந்தைகள் தெருக்களிலே திரிகிறார்கள். அப்படித் திரிகின்ற குழந்தைகளின் உடல்நிலையும், கல்வி நிலையும் மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே, அம்மாதிரி ஏழை எளிய குழந்தைகளுக்கு நல்ல கல்வி வசதி அளிக்க வேண்டும். அவர்களது உடல் நலத்தைப் பேணுவதற்காக அதிகமாக நடமாடும் மருத்துவ மனைகளை ஏற்படுத்த வேண்டும்.

தமிழ் நாட்டில் 4 வயது முதல் 9 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு கட்டாயமாக நர்சரி கல்வி போதிக்கப்பட வேண்டும். ஏனென்றால், சிறு வயதில்தான் குழந்தைகளின் அறிவு வளர்ச்சியடையும். எனவே, 1,000 பேர்கள் உள்ள கிராமமாக இருந்தாலும், நகரமாக இருந்தாலும் அங்கே நர்சரி பள்ளிகளை அரசாங்கத் துறையிலோ அல்லது தனியார் துறையிலோ ஏற்படுத்தி நர்சரி கல்வியை அந்தக் குழந்தைகளுக்குப் போதிக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது.) நர்சரி கல்வி என்பது தற்பொழுது கல்வி இலாக்காவில் இருக்கிறது. கல்வி இலாக்காவானது கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், ஆரம்பப் பள்ளிகள் ஆகியவைகளைக் கவனித்து வருகின்ற இந்த நேரத்தில் சமூக நலத் துறையைச் சேர்ந்த இந்தக் குழந்தைகளையும் அவர்களால் கவனிக்க இயலாது. ஆகவே, நர்சரி பள்ளிகளை சமூக நலத் துறைக்கே மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

* திரு. பொ. உத்திராபதி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, சமூக நலத்துறை மற்றும் கால்நடை வளர்ப்பு பற்றிய இந்த மானியக் கோரிக்கைகளின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

சமூக நலத்தில் பெண்கள் நலம், குழந்தைகள் பராமரிப்பு பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. வாழ்க்கை நிலையில் பாதிப்புக்குள்ளான விதவைகள் அனைவருக்கும் நிதி உதவி கொடுக்க வேண்டும் என்று சொல்லுகின்ற நோத்தில் எனக்கு முன் பேசியவர் சொன்னதைப்போல், விதவையான அத்தனை பேர்களுக்கும் கொடுக்க இந்த அரசாங்கம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் மனுப் போட்டால் கிடைப்பதற்கு ஆறு மாதங்கள் ஆகின்றன.

தமிழ்நாட்டில் ஆயிரம் பேர்கள் விதவைகள் இருக்கிறார்கள் என்றால் அவர்களில் 10 பேர்களுக்குத்தான் பணம் கிடைக்கிறது. பிறகு 10 பேர்களுக்குக் கிடைப்பதற்குள்ளாக இந்த 10 பேர்களும் செத்தால்தான் சேர்க்கிறார்கள். இதையெல்லாம் பார்க்காமல் விதவைகள் அத்தனைபேர்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அனாதைக் குழந்தைகள் என்று சொல்லும்பொழுது, குழந்தைகள் விடுதி வைத்திருக்கிறார்கள். அவைகள் பெயரளவில் விளம்பரத்திற்காக உருவாக்கப்பட்டனவே தவிர உண்மையிலேயே அந்தக் குழந்தைகளை வளர்த்து, படிக்க வைத்து அவர்களுக்கு எதிர்காலத்தை உருவாக்க வேண்டுமென்ற நோக்கம் இல்லை. நம்

(முற்பகல் 11-30)

அரசு கூடச் சொல்லியிருக்கிறது, கிராமத்தை நகரமாக்க வேண்டு மென்று. சென்னை நகரத்திலே பார்த்தோமானால், இலட்சக் கணக்கான குழந்தைகள் பிச்சை எடுத்துக்கொண்டு வருகிறார்கள். பெண் குழந்தைகளும் ஆண் குழந்தைகளும் பிச்சை எடுப்பது, பிளாட்பாரத்திலிருந்து இரயில்வே ஸ்டேஷனில் கீழே இறங்கும் வரை, காண்கின்ற காட்சியாகத் தானிருக்கிறது. அதே போல், கிராமங்களில், ஏழைகள், பின்தங்கிய மக்கள், ஏழை விவசாயிகள், தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்க முடியாமல், அவர்களிடம் உழைப்பைப் பெறவேண்டுமென்ற நோக்கில், மாடு மேய்க்க வைக் கிறார்கள்.

அனாதைக் குழந்தைகளுக்கு, கணக்குப் பிள்ளையிடமும், தாசில் தாரிடமும் சர்ட்டிபிகேட் வாங்கச் சொல்கிறார்கள். கணக்குப் பிள்ளையும் தாசில்தாரும் பணம் கொடுக்கிறவர்களுக்குத்தான்



சர்ட்டிபிகேட் கொடுக்கிறார்கள். அந்த நிலையைப் போக்கி, சோவியத் ரஷியா, மற்றும் சோஷலிச நாடுகளைப் போல், அரசு அந்தக் குழந்தைகளைத் தாங்களே கவனித்து, படிக்க வைக்க வேண்டுமென்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கால்நடை என்பது மிக முக்கியமானது. நம் தமிழகத்திலே, கிராமங்களிலே, ஏழை, எளிய மக்கள் பெரும்பகுதி கால்நடைகளை வைத்துத்தான் பிழைக்கிறார்கள். அந்தக் கால்நடைகள் இல்லையென்றால், அவர்களால் உற்பத்தியைப் பெருக்க முடியாது. அந்தக் கால்நடைகளுக்கு சர்ட்டிபிகேட் வாங்கவேண்டும், தாசில்தாரிடத்திலே பெற வேண்டுமென்றெல்லாம் உத்தரவு இருக்கிறது.

ஏழை, எளிய மக்கள் கால்நடை வளர்க்க, சர்க்கார் நேரடியாகக் கடன் கொடுக்கவேண்டும். இன்னும் அரிசன மக்களுக்கு, பாதி மானியமும், பாதி கடனும் கொடுத்து, அவர்கள் கால்நடைகளை வளர்க்கச் செய்யவேண்டும்.

என்னுடைய தொகுதியிலே கொருக்கையில் கால்நடைப் பண்ணை இருக்கிறது. சாதாரண ஏழை, எளிய விவசாயிகள் வைத்திருக்கிற மாடும் எலும்பும் தோலுமாக இருக்கிறது, இந்தப் பண்ணையிலே இருக்கிற மாடும் எலும்பும் தோலுமாக இருக்கிறது. காரணம், வைக்கோல் வாங்கிக்கொடுக்கிறேன் என்று, வைக்கோல் கொடுக்காமலே, பாதிப் பணத்தை மோசடி செய்கிறார்கள்.

அதே மாதிரி, பசும்புல் வளர்ப்பதாகக்கூறி பணத்தைச் சாப்பிடு கிறார்கள். தயவுசெய்து அமைச்சர்வர்கள் அங்கு வந்து பார்க்க வேண்டும். ஆனால், வந்து பார்க்கிறேன் என்று முன்னாலேயே சொல்லக்கூடாது. முன்னாலேயே சொல்லிவிட்டால், 10 பெண்களை விட்டு, புல்லுக்கெல்லாம் தண்ணீர் தெளித்து வைத்துவிடுவார்கள், பச்சையாக இருக்கவேண்டும் என்று. அதேபோல், வைக்கோலை வாங்கி அடுக்கி வைத்துவிடுவார்கள். ஆகவே, திடீரென்று வந்து பார்க்கவேண்டும். இப்படியெல்லாம் அரசாங்கப் பணம் விரயம் ஆகிறது. அரசு இதுபற்றி தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டு மென்று கேட்டுக்கெள்கிறேன்.

அமைச்சருக்கு நல்ல பொறுப்பு கிடைத்திருக்கிறது. ஆடு, மாடு, கோழி, வாத்து இவைகளை வளர்ப்பதிலே தீவிரமாக இருப்பவர்கள் பெண்கள். பெண்கள் பொறுப்பில் இருக்கக்கூடிய இவற்றிற்கு பொறுப்பேற்றுள்ள அமைச்சர் பெண் அமைச்சர். பத்திரிகைகளிலே பார்க்கிறோம், பிரமாதமாக அறிக்கை விடுக்கிறார்கள். ஆனால், கிராமங்களிலே அந்த ஜனங்களுக்குப் பயன் அளிக்கிறதா என்றால் இல்லை. அந்த மாடு, கோழி, ஆடு இவைகளை யெல்லாம் முக்கியமாகக் கருதி, கிராமங்களை நகரங்களாக்க வேண்டுமென்றால், அந்தப் பொருளாதாரத்தை மேம்படுத்த, இவைகளை வளர்க்க அரசு தீவிரமாகக் கவனம் செலுத்த வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து புயல், வெள்ளத்தாலே ஆடு, மாடு இவைகளெல்லாம் இறந்து விட்டால், அதற்காக உதவி கொடுப்பதாக அரசு அறிவித்திருக்கிறது. என்னுடைய தொகுதியிலே கோட்டூரிலே, ஆடு, கால் நடை பறிகொடுத்தவர்களுக்கு உதவி செய்வதற்காகக் குலுக்குச் சீட்டு மூலமாக கால்நடைகளைப் பறிகொடுத்த, எல்லோருக்கும் கொடுக்க ஏற்பாடு செய்கிறார்கள். ஆனால், அதற்குப் பதிலாக, யாருடைய மாடு, ஆடு சாகவில்லையோ, அவர்களுக்குக் குலுக்குச் சீட்டுக் கொடுத்து, தகராறு நடந்து கொண்டிருக்கிறது, என் தொகுதியிலே. அதைக் கவனித்து, எத்தனை பேருக்கு ஆடு மாடு செத்திருந்தாலும் அவர்களுக்கு உதவி கொடுக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

கிராமப் புற பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமென்றால், ஆடு, மாடு, கோழி, வாத்து, இவைகளையெல்லாம் வாங்க, அரசே, நேரடியாக, மானியமும் கடனும் கொடுத்து, கிராமத்தை அபி விருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல் பென்ஷன். 1957-லே கனம் காமராஜ் அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அப்பொழுது, பென்ஷன் ரூ. 20. 27 ஆண்டுகளுக்குப் பிறகும் ரூ. 1 கோடி சொச்சம்தான் ஒதுக்கியிருக்கிறார்கள். எந்த ஆட்சி வந்தாலும் அதை உயர்த்தவில்லை. காமராஜர் ஆட்சிக்குப் பிறகு நாங்கள் நிறைய செய்தோம் என்று சொல்கிறார்கள். ஆனால், 1 கோடி சொச்சத்தை விட அதிகமாக ஒதுக்கவில்லை. இப்பொழுதும் அதே தொகைதான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை அதிகமாக ஒதுக்கிட வேண்டும்.





இப்பொழுது 100 பேர் மனு போட்டால் 20 பேருக்குக் கிடைக்கிறது. வேறு 20 பேருக்குக் கிடைக்கவேண்டுமென்றால், ஏற்கனவே வாங்கிக்கொண்டிருக்கிற 20 பேர் செத்தால்தான் சாங்க்ஷன் கிடைக்கிறது. அதில், ஆணுக்கு 65 வயதுக்கு மேலும், பெண்ணுக்கு 60 வயதுக்கு மேலும் என்று கொடுக்கிறார்கள். இங்கே 65, 60 வயதுக்கு யார் இருக்கிறார்கள்? சோவியத் நாட்டில் வேண்டுமானால், 100 ஆண்டுகள் சர்வ சாதாரணமாக இருக்கிறார்கள். இங்கே நம்முடைய நாட்டிலே, 40 வயது வரை இருப்பதே பெரிய காரியம்.

ஆகவே 65 வயது என்று இல்லாமல் அவர்களுக்கும் வயதைக் குறைத்து, சாக சாக கொடுக்காமல் உயிரோடு இருக்கும்போதே பென்ஷன் கொடுக்கவேண்டும்.

நகரத்தில் பயரிகள் என்று இருப்பவர்கள் தார் வைத்திருந்தால் சார்ஜ் பண்ணுகிறார்கள். அது தார் வைத்திருந்து குத்தினால், சார்ஜ் பண்ணினால் பரவாயில்லை. ஆனால் தார் இல்லாமல் இருந்தாலும் சார்ஜ் பண்ணுவார்கள் என்று பயந்து கொண்டு 10 ரூபாய் கொடுத்துவிடுகிறார்கள். தினமும் அவனுக்குக் கிடைப்பதோ 10 ரூபாய்தான். அதை அவர்களிடம் கொடுத்துவிட்டு போக வேண்டியிருக்கிறது. அரசு இதிலே தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல இந்தக் கால்நடை மருத்துவமனை என்று ஒன்று இருக்கிறது. மருத்துவமனையில் ஆடுமாடுகளை அழைத்துச் செல்லுபவர்கள் நாள் முழுவதும் உட்கார்ந்திருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. ஒரு நாளைக்கு அவனுக்கு 6 அல்லது 5 ரூபாய் கிடைக்கும், அதைவிட்டு விட்டு அவன் நாள் முழுவதும் மருத்துவ மனையில் உட்கார்ந்திருக்கிற சூழ்நிலை இருக்கிறது. அதுமட்டும் அல்ல. அங்கே மருந்தும் இல்லை. என்னுடைய தொகுதியான கோட்டூரில் இருந்து மருந்து வாங்கப் போக வேண்டுமானால் திருத்துறைப்பூண்டிக்கும் மன்னார்குடிக்கும் செல்ல வேண்டும். இரண்டும் 10 மைல் தூரத்தில் இருக்கின்றன. அப்படி அவர்கள் செலவு செய்வதற்கும் அவர்களிடம் பணம் இல்லை. வீட்டுக்குப் போனால் மாடு செத்துப் போகிறது. 1,000 ரூபாய், 1,500 ரூபாய் கொடுத்து வாங்கிய மாடுகளை ஒரு விவசாயி இழந்துவிட்டால்

மீண்டும் வாங்க ஓராண்டாவது ஆகும். எனவே இந்த மருத்துவ மனைகளுக்கு மருந்து அதிகம் கொடுக்க வேண்டும், நல்ல முறையில் கவனிக்க வேண்டும் என்று அரசு உத்தரவு அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடை மருத்துவமனையில் பணிபுரிகின்ற ஊழியர்கள் பணம் வாங்குகிறார்கள். ஏனென்றால் அவர்களுக்குச் சம்பளம் குறைவாகக் கிடைக்கிறது. அவர்களுக்கு 4, 5 பிள்ளைகள். அதனாலே அவர்கள் 5, 10 ரூபாய் வாங்குகிறார்கள். அப்படி அவர்கள் வாங்கி ஊழலும் பண்ணக்கூடாது, அவர்கள் குடும்பமும் பாதுகாக்கப்பட வேண்டும்.

மதுரை மாவட்டத்தில் வாத்துப் பண்ணையில் இருந்த அனைத்தும் இறந்துவிட்டதாம். அவர்கள் கடன் வாங்கியிருக்கிறார்கள். வாத்து இருந்தால்தான் முட்டையிடும். அதன் மூலமாகக் கடன் அடைக்க முடியும். இதிலே அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கிராமத்தை நகரமாக ஆக்க வேண்டும் என்று எண்ணங்கொண்ட இந்த அரசு இந்த முறையில் தீவிரமாக கவனம் செலுத்த வேண்டும்.

கடைசியாக தாயையும் பிள்ளையையும் பிரிப்பது போன்று, பால் இலாகாவையும் கால்நடை இலாகாவையும் தனித்தனி அமைச்சர்கள் பார்க்கிறார்கள். 4 மாத குழந்தையை தாயிடம் இருந்து பிரித்துவிட்டால் அது எப்படி வளரும். இதனைக் கவனத்தில் எடுத்துக்கொண்டு பால் ஒரு பக்கம், மாடு ஒரு பக்கம் என்று பார்க்காமல் இரண்டையும் ஒரே இடத்தில் வைத்து இருந்தால் வசதியாக இருக்கும் என்று கேட்டுக்கொண்டு, வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி.

(முற்பகல் 11.40)

**திரு. கூ. சு. முருகேசன் :** மாண்புமிகு தலைவரவர்களே, இந்த கால்நடை சமூக நல மானியத்தின் பேரிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைக் கூறிக்கொள்கிறேன்

முதலில், இந்த கால்நடை மருத்துவத் துறை, விவசாயத் துறை இரண்டும் நெருக்கடி காலத்திற்கு முன்பு தனித்தனியாக இருந்தன. அதை நெருக்கடி காலத்தில்—அந்த இரண்டு





இலாக்காக்களையும்—ஒன்றாக சேர்த்ததன் பலனை அங்கே பணி புரிகின்றவர்களுக்கும், நிர்வாகத்திலே சில சிக்கலும், சிரமங்களும் ஏற்பட்டு இருப்பதால், அந்த இரண்டு இலாக்காவையும் தனித்தனியாக முன்பு இருந்ததுபோல் இயங்கச் செய்ய வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இப்போது நடந்து கொண்டு இருக்கும் போராட்டத்திலே கால்நடை ஆய்வாளர்கள் சாதாரண கோரிக்கைகளைத்தான் வைத்து இருக்கிறார்கள். அவர்கள் 3-ம் தேதி அடையாள உண்ணாவிரதம் இருந்தார்கள். 6-ம் தேதி அமைச்சர் அவர்களோடு பேசுவதாக இருந்து அது முடிவுபெறாமல் போய்விட்டதால், அந்தக் கோரிக்கைகளை வைத்து இருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றாவிட்டால் அவர்கள் சாகும் வரையில் உண்ணாவிரதம் இருப்பதாகக் கூறிக்கொண்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** பேரவைத் தலைவரவர்களே, அதைப்பற்றிய அறிவிப்பு நான் பேசுகின்ற நேரத்தில் குறிப்பிட இருக்கிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

**திரு. கூ. சு. முருகேசன் :** அந்தக் காரியத்தை சீக்கிரத்தில் முடித்துக் கொடுத்தால் நல்லது. தங்கள் அறிவிப்புக்கு நன்றி.

கால்நடை மருத்துவ மனைகள் ஊராட்சி ஒன்றியங்களை ஒட்டித்தான் இருக்கின்றன. அப்படியிருக்கிற காரணத்தால் பல கிராமங்களில் உள்ள மக்கள் அந்த மருத்துவ மனைக்கு வரவேண்டும் என்று சொன்னால் 10, 12 மைல் நடந்து வரக்கூடிய நிலை இருக்கிறது. முன்பு சப்-சென்டர்கள் வைத்து இருந்தார்கள். ஆனால் எந்த காரணத்தினாலேயோ அதை எடுத்து விட்டார்கள். அந்த துணை நிலையங்களை பழையபடி கொண்டு வந்து, அங்கேயுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் அந்த மருத்துவ மனை மூலமாக அந்தக் கால் நடைகளுக்கு மருத்துவம் பார்த்துக்கொள்ள உதவி புரிய வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த சமுதாய நலனிற்காக இந்த அரசு ரூ. 4 கோடிக்கு மேல் ஒதுக்கியிருக்கின்றது. பேரறிஞர் அண்ணா அவர்களும், தந்தை பெரியார் அவர்களும் ஏழை எளிய மக்கள் தாழ்த்தப் பட்ட சமுதாயத்தினரின் பேரில் எத்தகைய அக்கறை

கொண்டிருந்தார்கள் என்பது இந்த அரசுக்கு நன்றாகத் தெரியும். எந்த சமுதாய நலனுக்காக, எந்த சமுதாயத்தின் ஆதரவைப் பெற்றுக்கொண்டு இங்கே ஆட்சியில் அமர்ந்து இருக்கிறார்களோ, அவர்களின் நன்மைக்காக இந்த அரசு பாடுபடும் என்று அடிக்கடி சொல்லி வருகிறார்கள்.

அப்படியிருக்கையில், இங்கே அகதிகளாக, பர்மாவிலிருந்தும், இலங்கையில் இருந்தும், பாகிஸ்தானிலிருந்தும். நம்மை நம்பி வந்து இருப்பவர்களுக்கு நல்ல வசதி வாய்ப்புகளை, அவர்களுக்குக் குடியிருக்க வீடுகளை, தண்ணீர் வசதியை, மின்சார வசதியை, மற்ற வசதிகளை செய்து கொடுக்கவேண்டும். அதேபோல் அவர்களுக்குக் கிடைக்கும் கடன்கள் மற்றும் வீடு கட்டிக்கொள்ள கடன் போன்றவற்றையும் அளிக்கவேண்டும்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** பேரவைத் தலைவரவர்களே, இந்த அவைமுன் உள்ள மானியக் கோரிக்கை சமூக நலன் பற்றியதாகும். அகதிகள் மறுவாழ்வு பற்றியது அல்ல என்பதை மெத்தப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கூ. சு. முருகேசன்:** தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்காக முன்பு இருந்த அரசு 10 இல்லங்களை அமைத்துத் தந்தது. ஆனால் அப்படி இருந்தும் அவர்கள் நிலை சீர்படவில்லை. ஆகவே, அந்த 10-க்கும் மேற்பட்டு இல்லங்களை அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

முதியோர் ஊதியம் பெறுவதில் கிராமப்புறத்தில் இருப்பவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்கள் அந்த ஊதியத்தைப் பெறுவதற்காக கிராம கணக்கர், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், தாசில்தார், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரை அணுகி, அவர்களிடமிருந்து ஆணையைப் பெற்றுத்தான் அந்த ஊதியத்தைப் பெற முடிகிறது. இதன் காரணமாக அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

ஆகவே, ஒவ்வொரு கிராமத்திலும், சமூக நலனிலே அக்கறையுள்ள இந்த அரசு, யார் யார் முதியோர்கள் இருக்கிறார்கள் என்று [illegible]கை எடுத்து, ஆங்காங்கு அவர்களுக்கு அந்த ஊதியம்



கொடுக்க ஏற்பாடு செய்தால் நல்ல பயனை அவர்கள் அடைய முடியும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, பழங்குடி மக்களைப் பற்றிச் சொல்லும்போது, எங்கள் பகுதியில் தேவராயனேரி, பழங்கனுங்குடி போன்ற இடங்களில் நரிக் குறவர்கள் இருக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி:** பழங்குடியினர் பற்றியது அரிசன நல இலாகா அமைச்சர் அவர்களைச் சார்ந்தது என்று நான் கருதுகிறேன்.

**திரு. கூ. சு. முருகேசன்:** அடுத்தபடியாக, கருணை இல்லத்தைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். முன்பு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு 50-க்கு மேற்பட்ட கருணை இல்லங்களை அமைத்திருந்தது. ஆனால் இப்போது அதைக் குறைத்திருக்கிறார்கள் என்பதை இந்தப் புத்தகத்தில் பார்த்தேன். அந்த கருணை இல்லங்களை மீண்டும் அதிகமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு சைக்கிள் ரிக்சா போன்றவைகளை முந்தைய அரசு கொடுத்து வந்தது. அதை நம்முடைய முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் கொடுத்தார்கள். இப்போது இருக்கும் முதலமைச்சர் புரட்சிகரமாக அந்த சைக்கிள் ரிக்சாக்களுக்கு மோட்டார் வைத்து, மோட்டார் சைக்கிள் ரிக்சாவாக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, ஊனமுற்ற பட்டதாரிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுக்கு என்று முன்பிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசில் ஒரு இயக்குநரை நியமித்து, அந்த இயக்குநர் மூலம் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வளிக்கப்பட்டது. அந்த பிச்சைக்காரர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட இல்லங்கள் இலக்கைப் பார்க்கும்போது முன்பு இருந்ததைவிட இப்போது குறைவாக காட்டியிருக்கிறார்கள். பிச்சைக்

[திரு. கூ. சு. முருகேசன்] [1978 மார்ச் 7

காரர்களுக்கு ஏற்படுத்தப்பட்ட வசதி இப்போது குறைந்து விட்டதோ என்ற ஒரு அச்சம் அதனால் ஏற்பட்டிருக்கிறது. உண்மையிலேயே பிச்சைக்காரர்கள் எங்கு பார்த்தாலும் தெருக் களிலே அலைந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, கூடுதலாக இல்லங்களை அமைத்து, தெருவிலே திரிபவர்களை அந்த இல்லங் களிலே வைத்து, அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கோழி வளர்ப்பு பற்றி வரும்போது, உண்மையிலேயே கோழி வளர்ப்பவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஊராட்சி ஒன்றியங் களிலிருந்து கோழிகளைக் கொடுக்கிறார்கள். அதை வளர்த்து, கணக்கைப் பார்க்கும்போது நஷ்டம்தான் ஏற்படுகிறது. அதனால் மீண்டும் கோழி வளர்க்கும்படி கேட்டால் அவர்கள் அச்சப்படுகி றார்கள். அதற்காக, இத்திட்டத்தைத் தீவிரப்படுத்த கோழியை வளர்த்து முட்டையிடும் வரையில் கோழி தீவனத்தை மானிய மாகக் கொடுக்கும் ஒரு தீவிரத் திட்டத்தைக் கொண்டுவர வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கால்நடை அபிவிருத்தித் திட்டத்தில் முன்னேற வேண்டுமென்றால் உழவர்களுக்கு மாட்டுத் தீவனத்தை மானிய மாக கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பால் வளத்தைப் பெருக்க வேண்டுமென்றால் நமது விவசாயக் கடன் வழங்கும் சங்கங்கள் மூலமாக பால் வழங்கும் மாடுகளை விவசாயிகளுக்குக் கொடுக்கலாம். அது கொடுக்கப்பட்டு வந்தாலும் மீண்டும் அதிகமாகக் கொடுப்பதற்கு முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, விதவைகளுக்கு உதவியளிக்க இப்போது வைத் திருக்கும் வயது வரம்பை எடுத்துவிட்டு, விதவைகள் எல்லோ ருக்கும் உதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்,

கலப்புத் திருமணம் செய்வதற்கு இந்த அரசு—இந்த அரசு மட்டுமல்ல, எந்த அரசாக இருந்தாலும்—கலப்புத் திருமணம் செய்து கொள்வதற்கு ஊக்கமளிக்கும் வகையில் நல்ல பல திட்டங் [illegible] செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 மார்ச் 7] [திரு. கூ. சு. முருகேசன்]

அதைப்போல கண் இழந்தவர்கள், கால் இழந்தவர்கள் இருக்கி றார்கள். அவர்களுக்கும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, அவர் களும் நல்ல முறையிலே வாழ வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாய கடன் வழங்கும் சங்கங்கள் மூலமாக நல்ல தரமான கால்நடைகளை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள் கிறேன். வணக்கம்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மக்களையும் மாக்களையும் ஒன்றாக இணைத்துள்ள ஒரு மானியத்தை மக்களிடமும் மாக்களிடமும் இயற்கையிலேயே பரிவுடைய ஒரு அம்மையார் அவர்களிடம் ஒப்படைத்திருப்பது இந்தத் துறை மேலும் வளர்ச்சியடையும் என்பதற்கு அறிகுறி என்பதை எடுத்துச் சொல்லி, அவர்களும் இந்தத் துறையை நன்றாக செம்மைப்படுத்தி, மக்கள் வாழவும் மாக்கள் செம்மைப் படவும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, நன்கு செய்ய வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11.50)

பொதுவாக இந்த மானியத்திலே பல விஷயங்களை அமைச்சர வர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் விரிவாக இங்கே ஆய்வு செய்ய நேரம் இல்லை.

இருந்தாலும் மலைப் பகுதிகளைப்பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்வது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். பழங்குடி மக்கள் மேம்பாட்டுக்கு அவர்களுடைய முன்னேற்றத்தின் அடிப் படையிலே கறவை மாடுகள் வாங்கவும், மற்ற மேம்பாட்டுத் திட்டங்களையும் வழங்க சுமார் 11.5 இலட்சம் ரூபாயை ஒதுக்கி இருப்பதை நான் வரவேற்கிறேன். அந்தப் பழங்குடி மக்கள் அபிவிருத்தி அடைய இந்த திட்டங்களை மேற்கொள்ளவேண்டு மென்று கூறுவது என்னுடைய கடமையாகும். அவ்வாறு குறிப் பிடுகையிலே குறிப்பாக மலைப்பகுதியான ஜவ்வாது மலைப் பகுதி யைப் பற்றி ஒரு சில வார்த்தைகளைச் சொல்லிக்கொள்வது

என்னுடைய கடமையாகும். ஏனென்று சொன்னால் ஜவ்வாது மலையிலே கால்நடை அபிவிருத்தித் திட்டம் நிறைவேற்றப்படவேண்டுமென்று எத்தனை தடவை சொல்லி இருக்கிறேன். இங்கே இருக்கும் பல உறுப்பினர்கள் அதை நன்றாக அறிவார்கள்.

நான் இப்போது இந்த ஜவ்வாது மலையைப் பற்றிச் சொன்னால் பழைய பல்லவி ஆரம்பித்து விட்டது என்று உறுப்பினர்கள் எல்லாம் நினைக்கும் அளவுக்கு பல முறை பேசி இருக்கிறேன். அந்த பகுதியிலே என்ன மேம்பாட்டுத் திட்டம் மேற்கொண்டிருக்கிறார்கள் என்று தெரியவில்லை. நடைமுறையிலே எதுவும் செய்யவில்லை. 1972-லே இங்கே நம்முடைய எஸ்டிமேட் கமிட்டி உறுப்பினர்களை எல்லாம் அழைத்துச் சென்று அங்கே இருக்கின்ற நிலைமைகளைப்பற்றி எடுத்துக் கூறப் பட்டது. அது அந்தக் குழுவின் அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது.

ஜவ்வாது மலையிலே கால்நடை அபிவிருத்திக்கான முறையான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கூறி இருந்தும் இன அபிவிருத்தி ஏற்பாடு ஜவ்வாது மலையின் நுழைவாயிலிலே இருக்கின்ற ஆலங்காயம் என்ற பகுதியிலே இது வரையில் எதுவுமே செய்யவில்லை. செயற்கரு தரிக்கின்ற ஆர்டிஃபிஷியல் இன்செமினேசன் முறைகளை மேற்கொள்ள வசதிகள் செய்ய வேண்டுமென்று அந்தக் குழு பரிந்துரை செய்தும் அங்கு எதுவும் செய்யவில்லை என்பதை மன வருத்தத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வாணியம்பாடியிலே கீழ்நிலை மருத்துவமனையை ஹாஸ்பிடலாக உயர்த்தி இருக்கிறார்கள். முன்பு நிதிநிலை அறிக்கையிலே இந்த ஐந்து இடங்களை, கீழ்நிலை கால்நடை மருத்துவமனைகள்—ஹாஸ்பிடல் ஆக உயர்த்தப்படும் என்று கூறினார்கள். அதிலே வாணியம்பாடி கீழ்நிலை மருத்துவமனை ஒன்றாகும். ஆனால் இதுவரையில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அதற்கான இடத்தை அறிவிக்கவில்லை. கட்டட ஏற்பாடுகளையும் செய்யவில்லை. எப்போது துவக்கப் போகிறார்கள் என்று அறிய முடியவில்லை.

இன அபிவிருத்திக்கான காளை மாடுகளைக் கட்டி வைத்திருக்கிறார்கள். அது எப்போது போனாலும் தலையை கீழேயே சாய்த்துக்கொண்டு நிற்கிறது. நல்ல பசு மாடுகளைக்கொண்டு போனாலும் அவைகள் தலையை நிமிர்த்துவதில்லை. காளை மாடுகள்





காலி மாடுகளாக இருக்கின்றன. இந்த நிலையை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த காளை மாடுகளை அங்கேயே வைத்திருக்கிற காரணம் என்னவென்று புரியவில்லை. காளை மாடுகளை இனவிருத்தி செய்ய வேண்டுமென்ற நிலை இருக்கும்போது வீரியம் இல்லாத மாடுகளை வைத்துக் கொண்டிருப்பது என்ன காரணம் என்று தெரியவில்லை. அதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். தயவுசெய்து அமைச்சரவர்கள் இதில் கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாணியம்பாடி ஒரு முக்கியமான சென்டர். அது தாலுக்கா ஹெட்குவார்ட்டாஸ் ஆகும். அங்கே உள்ள மலைப்பகுதியிலே இருக்கின்ற அந்த சுற்றுப்புறத்திலே உள்ளவர்கள் எல்லாம் வாணியம்பாடிக்கு வரவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. தயவுசெய்து அமைச்சரவர்கள் அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமூக நலம் பற்றி பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஜவ்வாது மலை ஒரு காட்டுப் பகுதியாகும். குறிஞ்சி, முல்லை போன்ற பகுதிகளில் நோய்வாய்ப்பட்ட மக்கள் அதிகமாக இருப்பதோடு அவர்களுக்கு முறையான சிகிச்சை அளிக்கப்படுகிறதா என்பதை அரசு நினைத்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நோய்வாய்ப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு சரியான முறையிலே மருத்துவ வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

ஜவ்வாது மலையிலே ஊனமுற்றோருக்கு என்று பயிற்சி நிலையம் அமைத்துத் தருமாறும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

விதவைகளைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். விதவைகள் விதவைகளாகி விடுகிறார்கள். அவர்களுக்கு ஏன் 40 வயது என்று வரம்பு இருக்க வேண்டும்? 20 ஆவது வயதில் விதவையாகிவிட்டால் 20 ஆண்டுகள் கழிந்த பிறகுதான் உதவித் தொகை ரூபாய் 20 கொடுக்க வேண்டும் என்று சொல்வது அவ்வளவு நல்லதாக இருக்காது. அரசின் நிதிப் பற்றாக்குறை எனக்குத் தெரிகிறது. நிதிப் பற்றாக்குறை காரணமாகத்தான்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 7

சய்திருக்கிறார்களே தவிர பரிவு இல்லை, பாசம் இல்லை என்று பாருள் அல்ல. நிதிப் பற்றாக்குறை காரணமாகத்தான் செய்திருக்கிறார்கள் என்பதை உணருகிறேன். ஆனால் மற்ற ட்டங்களில் கொஞ்சம் குறைத்துக்கொண்டாலும் இத்தகைய சமுதாயத்தில் பலகீனமாக உள்ள இந்த விதவைகளுக்கு— விதவையானவுடனே அவர்கள் மறுமணம் செய்து கொண்டால் பரவாயில்லை, இல்லாவிட்டால் எல்லா விதவைகளுக்கும் உதவித் தொகை கிடைக்கக்கூடிய அளவில் வகை செய்ய வேண்டும்.

பல வீடுகளில் விதவைகள் என்ன பாடுபடுகிறார்கள் என்பதை நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். சொந்தத் தாயார், சகோதரர்களே, தாலி அறுத்துவிட்டு வந்து உட்கார்ந்திருக்கிறாயே என்ற ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாகி அவர்கள் இன்று கண்ணீர் விடும் காட்சி நம்மையெல்லாம் கதறி அழக்கூடிய நிலையில் செய்து விடுகிறது. ஆகவே அந்த விதவைகளின் மீது கொஞ்சம் பரிவோடு தங்கள் கனிவான பார்வையைச் செலுத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்வது என் கடமை. நமது முதல் அமைச்சர் அவர்கள் இந்த விஷயங்களில் எல்லாம் மிகவும் கனிவு உள்ளவர்கள். ஆகவே இந்த பலகீனமான சாரார்மீது அவர்களுக்கு தனி அக்கறை உண்டு. ஆகவே அவர்கள் மீது தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனாதை விடுதிகளை நிறைய நடத்துகிறார்கள். அதேமாதிரி தனியார்களும் நம் மாநிலத்தில் நிறைய அனாதை விடுதிகளை நடத்தி வருகிறார்கள். அனாதை விடுதிகளை நடத்துவதை ஒரு லாபகரமாகக் கருதாது அனாதைகளைப் பராமரிப்பது தர்மம் என்ற அடிப்படையிலும், அது தன்னுடைய ஆத்மீக வளர்ச்சிக்கு வித்திடும் என்று கருதியுந்தான் பலர் நடத்துகிறார்கள். தங்கள் வாழ்க்கை வசதிகளைத் துறந்துவிட்டு பலர் இத்தகைய அனாதை விடுதிகளை நடத்துகிறார்கள், தங்கள் பணத்தைப் போட்டு நடத்துகிறார்கள். அவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு குறிப்பிட்ட அளவிற்கு மானியம் வழங்கப்பட்டபோதிலும் இன்னும் சிறிது அதிகமாக அவர்களுக்கு மானியம் வழங்குவோமானால் மேலும் செம்மையாக அந்த அனாதை விடுதிகளை நடத்த அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும். ஆகவே தனியார் நடத்துகின்ற அனாதை விடுதிகளுக்கு வழங்கப்படுகிற மானியத் தொகையை இன்னும் சிறிது அதிகமாக வழங்குவதற்கு அரசு முன்வர வேண்டும்.



[1978 மார்ச் 7] [திரு. எம். ஏ. லத்தீப்]

அனாதை இல்லங்களிலேயே கல்விச் சாலைகளை நடத்தினால் அந்தக் கல்விச் சாலைகள் நல்லமுறையில் பயன்படும். அதற்காக மேலும் சில வசதிகளை, இப்போது கல்வி மானியம் கொடுக்கப்பட்டு வந்தாலும், சிறிது அதிக வசதியைச் செய்து கொடுக்க வேண்டும்.

அகதிகள் பற்றி இந்த மானியத்தில் பேச முடியாது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய குறிப்புப் புத்தகங்களில் பர்மா அகதிகள் பற்றியும், சிலோன் அகதிகள் பற்றியும், வியட்நாம் அகதிகள் பற்றியும் கூட குறிப்புகள் இருக்கின்றன. அது முதல் அமைச்சர் அவர்களுக்கு மாற்றப்பட்டு விட்டது என்று சொல்லப்படுகிறது. ஆனால் அது எனக்குத் தெரியாது. ஆகவே, குறிப்புகளில் இருப்பதை வைத்துத்தான் நாங்கள் பேசக்கூடியவர்களாக இருக்கிறோம்.

இந்த அரசினிடம் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இந்தத் துறையிலிருந்து அகதிகளுக்குப் பெற வேண்டிய பல நன்மைகளை நாம் பெறுவதற்கு கொஞ்சம் சுணக்கம் காட்டி விட்டோம் என்பது என்னுடைய கருத்தாகும். ஏனென்றால், இத்துறையைப் பற்றி இரண்டு மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக எந்தக் குழு இதை ஆய்வு செய்யவேண்டுமோ அந்தக் குழுவில் இருந்து ஆய்வு செய்து பார்த்திருக்கிறேன். குறிப்பாக ஸ்ரீமாவோ பண்டாரநாயகா—சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப் படையில் சில வாக்குறுதிகளை மத்திய அரசு நமக்கு தந்திருக்கிறது. இந்த ஒப்பந்தத்தால் பாதிக்கப்பட்டிருப்பது— இந்த ஒப்பந்தம் இந்தியாவிற்கும் ஸ்ரீலங்காவிற்கும் இடையே ஏற்பட்டதாக இருந்தாலும்—நேரடியாகப் பாதிக்கப்பட்டிருப்பது தமிழ்நாடுதான் என்பதை யாரும் மறுத்திட முடியாது.

ஸ்ரீலங்காவில் நல்ல வசதியோடு வாழ்ந்து வந்தவர்கள், பர்மாவில் நல்ல வசதியோடு வாழ்ந்து வந்தவர்கள், மிகப் பெரிய வியாபாரிகளாக, பெருந்தனக்காரர்களாக, பெரிய நிலக்கிழார் களாக இருந்து வந்தவர்கள், வியட்நாமில் இந்திய வம்சாவளி யினராக இருந்து வந்தவர்கள் இன்று ஒன்றுமேயில்லாமல் ஏழை பாழைகளாக வாழ வழியில்லாமல் அவர்கள் தங்கள் குழந்தை குட்டிகளோடு இந்தியாவிற்கு திடீரென்று திருப்பி அனுப்பப் பட்டிருக்கிறார்கள். இது இரு நாடுகளுக்கிடையே ஏற்பட்டிருக்கிற

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 7

ஒரு ஒப்பந்தமாக இருந்தாலும் தமிழ்நாடு பாதிக்கப்பட்டிருக்கிற காரணத்தால் இந்திய அரசின் அன்றைய பிரதமர் சாஸ்திரி அவர்கள் கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில் நாம் பெற வேண்டிய பல வசதிகளை, பல மானியங்களை நாம் பெறாமல் விட்டு விட்டோம். அதற்கான விளக்கங்கள் அரசாங்கக் குறிப்பில் இருக்கிறதா என்று தயவு செய்து அமைச்சர் அவர்கள் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வருகிற ஒவ்வொரு அகதிக்கும் முதல் மானியம் ரூ. 5,000 கொடுக்கப்பட்டது. அதில் பாதி அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. மீண்டும் அந்தப் பணத்தைப் பெறுவதற்கு எந்தவிதமான முனைப்பான ஒரு நடவடிக்கையும் தமிழக அரசு எடுக்கவில்லை என்பதைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது. நம் மாநிலப் பணத்தை அவர்களிடமிருந்து திருப்பிப் பெற எவ்வளவு முனைப்பு காட்டினோமோ, சுறுசுறுப்பு காட்டினோமோ, அப்பணம் திரும்பிவந்து ரீஇம்பேஸ் செய்யப்பட மத்திய அரசுக்கு திருப்பியனுப்ப எவ்வளவு கவனம் செலுத்தினோமோ, அதே அளவு கவனம் மத்திய அரசிடமிருந்து நாம் பெற வேண்டிய மானியங்களை மீண்டும் பெற நம் அரசு இலாகாவினர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லை என்ற ஒரு ஐயப்பாடு நிச்சயமாக இருக்கிறது. ஐயப்பாடு மட்டுமல்ல, உண்மை நிலையும் அதுதான்.

[நண்பகல் 12-00]

ஆகவே இதையெல்லாம் ஆய்ந்து மத்திய அரசோடு, நம்முடைய உரிமைகளைப் பெற—மேற்கொண்டு நமக்கு என்னென்ன உதவிகள் கிடைக்கவேண்டுமோ அவைகளைப் பெற—ஸ்ரீமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின் அடிப்படையில் என்னென்ன சொல்லப்பட்டிருக்கிறதோ—அவைகளை நிறைவேற்ற மத்திய அரசு கடமைப் பட்டிருக்கிறார்கள். அவைகளை எல்லாம் வற்புறுத்துகின்ற முறையில் மத்திய அரசாங்கத்தின் முறையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வளத்தோடு வாழ்ந்த மக்கள் இன்றைக்கு இந்த நாட்டில் வந்து ஏழை மக்களாக இருந்துகொண்டு, கும்மிடிப் பூண்டியில் இருப்பதா இராமநாதபுரத்தில் இருப்பதா என்று அவர்களை கொண்டுபோய், அந்த கேம்பிலிருந்து இந்த கேம்பிற்கும், இந்தக் கேம்பிலிருந்து அந்த கேம்பிற்கும் 'பிட்பால்' அடிப்பதைப்போல [illegible]



1978 மார்ச் 7] [திரு. எம். ஏ. லத்தீப்]

செய்து கொண்டிருக்கின்ற அந்த அங்கும் இங்கும் அலையச் வாழ்வதற்குரியத் மக்களுக்கு நல்ல முறையில் அவர்கள் நிவாரணம் அளிப் திட்டங்களைத் திட்டுவதற்கும் அதற்கான அந்த முறையில் இவர் பதற்கும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். திட்டங்களைத் தீட்டி, மத்திய அரசாங் களுக்கென்று முனைப்பான பெறுவதற்கும்— கத்தோடு வாதாடி அதற்கான உதவிகளைப் வேண்டும் என்று அதற்கான உதவிகளையும் நாம் செய்து கொடுக்க காரணத்தால், கேட்டுக்கொண்டு, நேரம் அதிகமாக இல்லாத குறிப்பிட்டிருக்கின்ற என்னுடைய வெட்டுத் தீர்மானங்களில் ஆவன செய்ய பிரச்னைகளை எல்லாம் பரிவோடு கவனித்து கேட்டுக்கொண்டு வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் அமைகிறேன்.

* திரு. சொ. ந. பழனிச்சாமி: மதிப்பிற்குரிய உதவி சபாநாயகர் அவர்களே, இந்த சமூகநலத் துறையில் பேசுகின்ற வாய்ப்பைத் தந்தமைக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள் கிறேன். மகளிர் நலப்பணிகள், சத்துணவுத் திட்டங்கள், உடல் ஊனமுற்றோருக்குப் பயிற்சி அளித்தல், மறுவாழ்வு அளித்தல், பிச்சைக்காரர்களுக்கு இல்லம் அமைத்தல் போன்ற பணிகளை சமூக நலம் மேற்கொண்டு வருகின்றது. வருகின்ற நடப்பு ஆண்டில் ரூபாய் 4 கோடி 92 லட்சத்து 13,000 நிதி இதற்காக ஒதுக்கீடு செய்துள்ளார். இதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இத் துறை 18 வயது முதல் 40 வயது வரை உள்ள ஆதரவற்ற பெண்களுக்கு கோவை ஜில்லாவில் பணி இல்லம் ஒன்றும் திறக்க வேண்டும். அப்பணி இல்லங்களில் கொடுக்கப்படுகின்ற உதவித் தொகையை இன்னும் அதிகரிக்க வேண்டும். அங்கு தொழிற் கல்வி சொல்லிக்கொடுக்க வேண்டும். அப்பணி நிலையங் களில் நூல் நூற்றல் ஒரு முக்கியப் பணியாக வைக்க வேண்டும்.

அங்கு பணிபுரியும் பெண்களுக்கு உணவு உறைவிட வசதிகள் அளிக்க சென்னை நகரில் இருப்பது போல் ஒவ்வொரு ஜில்லா விலும் பெண்கள் விடுதி அமைக்க வேண்டும். அந்த மாணவ [illegible] முறைகேடுகள் இல்லாமல் உண்மை [illegible] சேர்த்துக் கொள்வதில் [illegible] பெண்களுக்குத்தான் இட [illegible] குறைந்த வருவாய் உள்ள [illegible] பயிற்சி நிலையங்களும் உற்பத்தி நிலைய [illegible] அப்பயிற்சி நிலைய களும் இன்னும் [illegible] வேண்டும்.

[திரு. சொ. ந. பழனிச்சாமி] [1978 மார்ச் 7

களில் அதிகப் பேர்களுக்கு இடம் ஒதுக்கவேண்டும். இது குறித்து மத்திய அரசிடம் கூட மானியம் கோரலாம். சாக்குத்துண்டு செய்யும் பயிற்சி நிலையங்கள் நிறையத் தொடங்கினால் நிறைய பெண்களுக்கு வேலை கொடுக்க முடியும். அதே சமயத்தில், அது அவர்களுக்கும், அரசுக்கும் வருமானம் உடையதாக இருக்கும்.

ஒவ்வொரு ஊராட்சியிலும் குறைந்தது ஒரு சிறார் பள்ளியாவது இருக்க அரசு உடனடியாக ஆவன செய்ய வேண்டும். இங்கு பயிற்சி பெற்ற பாலசேவிகைகளை நியமிக்க வேண்டும். எங்கள் மாவட்டத்தில் ஒரு சிறார் பள்ளி கூட இருப்பதாகத் தெரியவில்லை. எனவே உடனடியாக எங்கள் மாவட்டத்திலும் சிறார் பள்ளிகளைத் திறக்க வேண்டும். குறிப்பாக அவனாசி தாலுகாவில் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(பேரவைத் தலைவர்—தலைமை)

சத்துணவு பற்றி கிராம மக்களுக்கு தெளிவுபடுத்துவதற்காக அவர்களுக்கு சத்துணவைப்பற்றி எடுத்துச் சொல்ல வேண்டும். தினசரி உபயோகிக்கும் உப்போடு இரும்புச் சத்துக்கள் சேர்த்து வீரியப்படுத்தினால் அது மிக்க பலனைக் கொடுக்கும் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவைகளை இச்சமூகநல வாரியம் மக்களிடத்திலே எடுத்துச் சொல்ல வேண்டும். கிராமப் புறங்களில் மக்கள் அநாகரிகம் என்று நினைத்து சத்துள்ள உணவாகிய கேழ்வரகு, சோளம் போன்றவற்றை ஒதுக்கி வருகின்றார்கள். இந்நிலையை மக்களிடத்திலே மகளிர் மன்றங்கள் எடுத்துச்சொல்லி மாற்றவேண்டும்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு இச்சமூக நலத்துறை பல உதவிகளைச் செய்து வருகின்றது. அவ்வுதவிகள் எல்லாம் கிராம மக்களுக்கு கிடைப்பதில்லை. பெரும்பாலும் சென்னை போன்ற நகரங்களில் உள்ளவர்கள்தான் பயன்படுகின்றார்கள். எனவே அது சென்னையை விட்டு தமிழகத்தில் உள்ள எல்லா உடல் ஊனமுற்றவர்களுக்கும் பயன்படுமாறு இருக்கவேண்டும்.

உடல் ஊனமுற்றவர்களுக்கு கல்வி நிலையங்களில் அவர்களுக்கு என்று ஒரு குறிப்பிட்ட இடம் ஒதுக்கவேண்டும். அரசுப் பணித் தேர்வுகளிலும் அவர்களுக்கு மத்திய அரசு ஒதுக்குவது போன்று ஒரு குறிப்பிட்ட விகிதாச்சார இடம் ஒதுக்கவேண்டும்.



1978 மார்ச் 7] [திரு. எஸ். என். பழனிச்சாமி]

ஒவ்வொரு தாலுகாவிலும் ஒரு அனாதை இல்லம் திறக்கப்பட வேண்டும். அனாதை இல்லங்களில் குழந்தைகளுக்கு நல்ல உணவு, உடை முதலியவை கொடுக்கப்பட வேண்டும். எனவே, இங்கு ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 12-50 கொடுக்கிறார்கள். இது போதாது. இன்னும் அதிகமாக கொடுக்கவேண்டும். ஒவ்வொரு கோவில்களிலும் கருணை இல்லங்களைத் தொடங்கி, அதற்கு ஆகும் செலவை அக்கோயில்களின் வருமானத்திலிருந்து கொடுக்கிறார்கள். இதை இன்னும் அதிகப்படுத்துவதன் மூலம், அதிகப்படியான அனாதைக் குழந்தைகளை மேலும் பராமரிக்க முடியும். எனவே, அதைச் செய்யவேண்டும்.

ஆதரவற்றப் பெண்களுக்கு ஓய்வூதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 20 கொடுக்கின்றார்கள். இது அந்தப் பெண்களுக்கு போதாது. அதை ரூ. 30 ஆக உயர்த்திக் கொடுத்தால்தான், அவர்கள் ஒருவேளை சாப்பாடாவது சாப்பிடுவதற்கு வழி வகுக்கும். தயவுசெய்து வயது வரம்பு பாராது, ஆதரவற்ற அனைத்துப் பெண்களுக்கும் கொடுக்கவேண்டும்.

கைம்பெண்களை மறு
கலப்புத் திருமணம் செய்தவர்களையும்,
மணம் செய்கின்றவர்களையும் ஊக்குவிக்க அரசு சேமிப்புப் பத்திரங்களைக் கொடுப்பதோடு மட்டுமல்லாது, அவர்களுக்கு வேலை வாய்ப்பும் கொடுக்க ஆவன செய்யவேண்டும்.

கால்நடை பராமரிப்பு சம்பந்தமாக ஒரு நிலையத்தை அவினாசி தாலுகாவிலே புகளூரில் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமைகிறேன். வணக்கம்.

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் தலைவர் அவர்களே, மனித வாழ்க்கையோடு இணைந்திருக்கிற ஒரு பிரச்னைபற்றி இன்று மானியம் வைக்கப்பட்டு, அதன்மீது நாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வந்திருக்கிறோம். நான் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்தபோது, அமைச்சர் அவர்கள் உறுதியளித்திருக்கிறார்கள். இந்தக் கருத்துக்களை இங்கே அறிவிக்க இருப்பதாகத் தெரிவித்தார்கள். அதற்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 மார்ச் 7

சட்டை செய்யவில்லையாதலால், சட்டடையில்லாத போராட்டம் என்ற ஒரு போராட்டத்தை நேற்று ஆரம்பிப்பதாக லைவ்-ஸ்டாக் இன்ஸ்பெக்டர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் ஆரம்பித்தார்கள். அவர்கள் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதிலே ஒன்றை நான் குறிப்பிடுகிறேன்.

குறிப்பாக, என்ன கோரிக்கை என்று சொன்னால், 'பி' கிளாஸ் வெடர்னரி பிராக்டிஷனர்ஸ் உரிமையைத் தங்களுக்குத் தரவேண்டுமென்று கேட்கிறார்கள். அவர்களும் ஏறக்குறை அவர்களைப்போல் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அதற்கான பயிற்சியைப் பெற்று, அவர்கள் பொதுவாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு மேலாக இருக்கின்ற வெடர்னரி அசிஸ்டெண்ட் சர்ஜன்களுடைய விருப்பு வெறுப்புக்களுக்கு ஆளாகின்ற நிலைமையில் அவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் எல்லாவிதமான வேலைகளையும், குறிப்பாக, தடுப்பு ஊசி போடுதல், செயற்கை இன விருத்தி செய்தல், ஆண்மை இழக்கச் செய்தல் போன்ற காரியங்களுக்கு முழு பொறுப்பேற்றுக்கொண்டு வேலை செய்கின்றார்கள். இப்படிச் செய்கின்ற இடத்திலே அவர்களுக்கு மேலாக பணியாற்றுகின்ற அசிஸ்டெண்ட் வெடர்னரி சர்ஜன்களுடைய விருப்பு வெறுப்புக்களுக்கு அவர்கள் ஆளாகின்ற நிலைமை இருக்கிற காரணத்தால், அதை மாற்றியமைப்பது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற குடியரசுத் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே ஏராளமான பேர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். promotion of Livestock Inspectors from Grade II to Grade I என்கிற முறையில் புரமோஷன் வந்திருக்கிறது. குடியரசுத் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே அது மாற்றப்பட்டிருக்கிறது. அதை ரத்து செய்து, ஏற்கனவே புரமோஷன் கொடுக்கப்பட்டதை அவர்களுக்குத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த பாரபட்சத்திற்கு முக்கியமான காரணமாக இருப்பது, இந்த டைரக்டர் ஆப் அனிமல் ஹஸ்பெண்டரி என்று சொல்லக்கூடியவர், இந்த வெடர்னரி அசிஸ்டென்ட் சர்ஜனிலே இருந்து வரக்கூடியவர்களைப் போடுகிறார்கள் என்பதால். ஆகவே, இந்த



1978 மார்ச் 7] [திரு. ரா. மார்க்கபந்து]

பாரபட்சம் ஏற்படுகின்றது. ஆகவே, இந்தத் துறைக்கு டைரக்டர்
சம்பந்தப்பட்ட வரையில் ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இருக்க
வேண்டுமென்ற நிலைமையை அவர்கள் சொல்கிறார்கள்.

அதேபோன்று, இவர்கள் 25 ஆண்டுக் காலமாக வேலை செய்து
வந்தபோதும், ஈ.ஓ.க்களாக வேலை செய்தாலும், இவர்களுக்கு
வெடர்னரி அசிஸ்டெண்ட் சர்ஜன் போன்ற பதவிகளில், இவர்
களுடைய சீனியாரிடியை ஓவர்-லுக் செய்கிறார்கள். இதனால்
இவர்களுக்கு பதவி முடக்கம் ஏற்படுகின்றது. இந்தப் பதவி
முடக்கத்தை நீக்கவேண்டும்.

குறிப்பாக, இந்த லைவ்-ஸ்டாக் இன்ஸ்பெக்டர்களுக்கு 300
ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகின்றது. ஆனால், வெடர்னரி
அசிஸ்டெண்ட் சர்ஜன்களுக்கு 600 ரூபாய் மாதச் சம்பளம் தரு
கின்ற நிலைமை இருக்கின்றது. அதனால், இந்த லைவ்-ஸ்டாக்
இன்ஸ்பெக்டர்களை, இவர்கள் எல்லா வேலைகளையும் செய்கிறார்கள்
என்பதால், இவர்களை இதிலே நியமிப்பதன் மூலம், இதிலே மிச்சம்
பிடித்து, எப்படி நாம் நிதி நிலையிலே செலவைக் குறைக்க வேண்டு
மென்று சொல்லியிருப்பதால், இந்தக் குறைந்த செலவின் மூலமாக
நிறைய லாபத்தை, பயனை பெறலாம், நன்மைகளைப் பெறலாம் என்
பதால் இதுபோன்ற நிலைமைகளை மாற்றியமைப்பதன் மூலமாக
ஏற்கனவே பல ஆண்டுகளாக உழைத்துக்கொண்டிருக்கிற இந்த
லைவ்-ஸ்டாக் இன்ஸ்பெக்டர்களுக்கு பதவி உயர்வு தரமுடியும்
என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-10]

மூன்று வகையானவர்களுக்கு ட்ரெயினிங் கொடுக்கப்படுகிறது.
இன்செமினேஷன், வாக்சினேஷன், காஸ்ட்ரேஷன் என்பதற்கு
இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை ட்ரெயினிங் கொடுத்து
அவர்களைப் போடுகிறார்கள். ஒருவர் ஒரு மாட்டை அழைத்துக்
கொண்டு இன்செமினேஷனுக்கு ஓரிடத்திலும், வாக்சினேஷனுக்கு
ஓரிடத்திலும், காஸ்ட்ரேஷனுக்கு ஓரிடத்திலும் எடுத்துச் செல்ல
வேண்டிய காரணத்தால் மாடுகளை வைத்துக்கொண்டிருப்பவர்கள்
ஏராளமான தொல்லைகளுக்கு உள்ளாகிறார்கள். ஆகவே, லைவ்
ஸ்டாக் இன்ஸ்பெக்டர்கள் என்று இருப்பவர்களிடம் இதை ஒப்
படைக்கலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற முறையே தெரிவித்தேன். 200 சப் சென்டர்கள் மூடப் பட்டிருக்கின்றன. ஒரு சப்சென்டர் ஆறுமாத காலம் பணியாற்ற வில்லை என்று சொன்னால் அதை நிரந்தரமாக மூடிவிட வேண்டு மென்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அந்த வகை யில் 200 சப் சென்டர்கள் மூடப்பட்டிருக்கின்றன. அவற்றைத் திறக்க வழிவகை செய்யவேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் ஒரு சப் சென்டர் அமைப்பது சாலச் சிறந்ததாக இருக்கும்.

வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரை நான்கு அசிஸ் டெண்ட் டைரக்டர்கள் இருக்கிறார்கள். இப்படி அதிகாரிகளே இருக்கும் காரணத்தால் கீழே பணிபுரிபவர்களுக்கு வாய்ப்பு இல் லாமல் இருக்கும் நிலைமை இருக்கிறது. Sheep rearing societies, Cattle rearing societies எங்கள் பகுதியில் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னேன்.

யாதவர்கள் என்ற சமுதாயம் இருக்கிறது. ஆடுகளை நம்பி யிருக்கும் சமுதாயம் அது. ஆடுகள் அழிந்துவிட்டால் அவர் களுக்கு வாழ்வில்லை என்ற நிலைமை இருக்கிறது. நோய் மூலம் ஆடுகள் அழிந்து விட்டால் அவர்களுக்குப் பாதுகாப்புத் தரும் வகையில் ஒரு திட்டத்தை அமைப்பது சிறப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக நலத்துறை பற்றி ஒரு வார்த்தை. விதவைகளுக்கு 40 வயதுக்கு மேல்தான் பென்ஷன் தரப்படும் என்று சொல்லு கிறார்கள். இந்தச் சட்டத்தில் ஒன்று சொல்லப்பட்டிருக்கிறது. விதவைகள் ஆகிவிட்டால் devolution of the property right என்று இருக்கிற முறையில் உரிமைகளைப் பெறுகிறார்கள். எந்த வயதில் விதவைகள் ஆனாலும் அவர்களுக்கு பென்ஷன் கொடுக்கவேண்டும். They should not go astray அவர்கள் மறுமணம் செய்து கொள்ளுகிறவரை இளம் விதவை களாக இருந்தாலும் பென்ஷன் கொடுக்கவேண்டும்.

ஓல்டு ஏஜ் பென்ஷன் வாங்குவதில் சிரமங்கள் இருக்கின்றன. ஓல்டு ஏஜ் பென்ஷன் அதிகச் சிரமமின்றி உடனடியாகத் தரப்பட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். Handicapped widows and women இவர்களுக்கு வேலை





வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்க வேண்டும். (மணி அடிக்கப் பட்டது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. கே. கந்தசாமி மூன்று நிமிஷத்தில் முடித்துக் கொள்ளவேண்டும்.

**திரு. க. கந்தசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று நிமிஷத்தில் பேச பணித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கால்நடைப் பராமரிப்புத் துறை, சமூக நலத் துறை சார்பாக அளித்துள்ள மானியக் கோரிக்கைகளை வரவேற்று சில கருத்துக்களை கூறுகிறேன்.

கால்நடைப் பராமரிப்புத் துறைக்கு அரசு இன்னும் கணிசமான தொகையை ஒதுக்க வேண்டும். விவசாயம் பெரிய தொழில். அந்த விவசாயத்திற்கு உறுதுணையாக இருப்பது கால்நடை. கால் நடைகள் உரம் கொடுக்கும் 'நியூக்ளியஸ்' ஆக இருப்பது. ஆகவே, அதிலே அதிகக் கவனம் செலுத்த வேண்டும், அதிக நிதி ஒதுக்க வேண்டுமென்று முதல் வேண்டுகோளாக வைக்கிறேன்.

ஆடுமாடுகளுக்கு ஏற்படுகின்ற நோய்களைத் தடுக்கும் முறை களைத் தீவிரப்படுத்த வேண்டும். அவை வெப்ப நோய்களால் தாக்கப்படுகின்றன. காளை மாடுகளுக்கு குடல் நோய் வருகிறது. வெப்ப நோயை காணை நோய் என்று கிராமத்தில் சொல்லுவார்கள். செக்கானூரணியிலே, அமைச்சர் அவர்களுடைய தொகுதியிலே எனக்கும் தோட்டம் இருக்கிறது. நான் பார்த்தேன். வெப்ப நோய் தாக்கிப் பல மாடுகள் இறந்துவிட்டன, உழுவதற்குகூட மாடுகள் அந்தப் பகுதியில் கிடைக்காத துர்பாக்கியமான நிலைமை இருக்கிறது, மருத்துவர்கள் மருந்துகளைப் பயன்படுத்தி அதைத் தடுக்க முடியவில்லை. அந்த நோயைத் தடுப்பதற்கும் ஊசிகள் போடுவதன் மூலமாக சொஸ்தப்படுத்துவதற்கும் ஆஸ்பத்திரிகளை அமைத்துத் தரவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பாடர் கிராப்ஸ் என்ற முறையிலே பல வகைகள் இருக்கின்றன. 10 சென்டில் போட்டால் அநேக ஜோடி மாடு களுக்குப் போடலாம் என்று அதிகாரிகள் சொல்கிறார்கள். அதை நல்ல முறையிலே பாபுலரைஸ் பண்ணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த வசதியை ஏற்படுத்தித்தர வேண்டும்.

ஆண்டிபட்டியில் ஒரே ஒரு இடம் தான் இந்த கால்நடை மருத்துவ வசதிக்காக இருக்கிறது. வேறு எந்த தொகுதியிலேயும் இப்படி இருக்காது. கடமலைக்குண்டு, மயில்காடு, போன்ற கடைநிலைப் பகுதிகளில் உள்ள இடங்களில் இரண்டு இடங்களிலேயாவது அந்த மருத்துவ வசதி நிலையங்களை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து செக்கானூரணியிலே—அமைச்சர் அவர்களுடைய தொகுதி அது—அதிர்ஷ்டவசமாக அங்கே நல்லமுறையிலே மருத்துவர்கள் செயல்படுகிறார்கள். (மணியடிக்கப்பட்டது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 12½ மணிக்குள் வாக்கெடுப்பு நடைபெற வேண்டும். எனவே மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் எவ்வளவு சீக்கிரம் முடிக்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 12-20)

**மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :** பேரவைத் தலைவரவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையேற்ற பிறகு கால்நடை பராமரிப்புத் துறையைப் பொறுத்தவரையில் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது என்பதை நாடு நிச்சயமாக அறிந்திருக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

நவீன அறிவியல் முறைகளைப் பின்பற்றி கால்நடைகளின் தரத்தை மேம்படுத்துவதே கால்நடை பராமரிப்புத் துறையின் நோக்கமாகும். எனவேதான் பெரிய அளவில் திட்டங்களை உருவாக்கி, சமுதாயத்தில் நலிவுற்றவர்கள் தங்களுடைய வருவாயினைப் பெருக்கிட வாய்ப்பளிக்கப்படுகிறது. 1977-78 ஆம் ஆண்டில் ஏற்கனவே நடைமுறையிலிருக்கும் மையக் கிராமத் திட்டம், தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம், வேளாண்மை மறுநிதிக் கழக





உதவியுடன் கூடிய ஆடு வளர்ப்புத் திட்டம், வறட்சிப் பாங்கான பகுதித் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத் தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சிறப்பு கால்நடை வளர்ப்புத் திட்டத்துடன் 1977-78-ம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன :

பதினைந்து மையக் கிராம நிலையங்களை நிறுவுதல் மற்றும் விரிவுபடுத்துதல், ஐந்து கால்நடை மருந்தகங்கள் திறப்பு, மூன்று கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் வேலூரிலும், மதுரையிலும், திருநெல்வேலியிலும் செயல்பட்டுக் கொண்டு வருகின்றன. ஐந்து கால்நடை மருந்தகங்கள் கால்நடை மருத்துவமனைகளாக மாற்றப்பட்டன.

இம்மாநிலத்தில், இத்துறையின் கொள்கையின்படி கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்கு எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. காங்கேயம், உம்பளாச்சேரி, ஹலிகார் போன்ற வேலைக்குகந்த கால்நடைகள் அந்தந்தப் பகுதிகளிலும், மற்றுமுள்ள இடங்களில் பாலின் தரத்தையும், உற்பத்தியையும் உயர்த்தும் பொருட்டு, உயரின கால்நடைகளான ஜெர்சி, பிரீசியன், செட்டேன் காளைகள், சிவப்பு சிந்தி தார்பார்கர் காளைகள் ஆகியவை பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்த உயரினக் காளைகள், இம்மாநிலத்தில் உள்ள கால்நடைகளின் தரத்தை உயர்த்த உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

கேந்திர கிராமத் திட்டம், தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் குறிப்பிட்ட இடங்களில் தீவிர கால்நடை அபிவிருத்தி செயல்பட்டு வருகிறது. தற்பொழுது 39 கேந்திர கிராம நிலையங்களும், 4 தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டங்களும் செயல்பட்டு வருகின்றன. இத்துறையின் கீழ் 59 காளை நிலையங்கள் இம்மாநிலத்தில் இயங்கி வருகின்றன.

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜே. இராமசாமி அவர்கள் மெத்த வருத்தப்பட்டுச் சொன்னார்கள், இராணிப்பேட்டைக்கு ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை என்று. இராணிப்பேட்டையில் தொற்றுநோய் தடுப்பு மருந்து தயாரிப்பிற்கு மத்திய அரசு ஆதரவுடன் மாநில அரசால் ரூபாய் 22 இலட்சம் செலவிட ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தஞ்சை மாவட்டம் ஈச்சங்கோட்டையில் ஜெர்ஸி இன விருத்திக்காக மத்திய அரசு ஆதரவுடன் மாநில அரசு 93 இலட்சத்துக்கான திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. அண்மையில் ஆஸ்திரேலியா நாட்டிலிருந்து 109 பசுக்களும், 2 காளைகளும் வந்தது சபைக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

ஈச்சங்கோட்டையிலுள்ள பண்ணைக்கு, டென்மார்க் நாட்டிலிருந்து சுமார் 18 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள செயற்கை இனஅபிவிருத்திக்கான உபகரணங்களைத் தருவிக்க உத்தரவு இடப்பட்டுள்ளது.

தர்மபுரி மாவட்டம் ஓசூரில் மேல்நாடுகள் அபிவிருத்தி முகமையின் உதவியுடன் அயலின கால்நடைப்பண்ணை ஒன்று உருவாக்க அரசின் பரிசீலனையில் உள்ளது. ஏறக்குறைய அதன் தொகை நாலரைக் கோடி அளவிலே அந்தத் திட்டம் உருவாக இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம் முழுமையாகப் பயன் அளிக்கத் தொடங்கும்போது ஓசூர் கலப்பின ஜெர்சி, சிந்தி காளைகளை அங்கே நாம் வழங்க முடியும்.

ஜெர்சி, பிரைசியன் போன்ற பால்வளமிக்க அயலின வகைகளை அறிமுகப்படுத்தி அதன்மூலம் திட்டப் பகுதிகளில் ஐந்தாண்டுக் காலத்திற்குள் பால் உற்பத்தியை 351/3 சதவீதத்திற்கு நிச்சயமாக அதிகரிக்க முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் மார்க்கபந்து அவர்களும், மணிமாறன் அவர்களும், வரதராசன் அவர்களும் கால்நடை ஆய்வாளர்களின் கோரிக்கைகளைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். கால்நடை ஆய்வாளர்களின் கோரிக்கைகளில் இரண்டினை ஏற்கனவே அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. இவைகளில் ஒன்று, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் பணியாற்றுவதற்குப் பதில் விடுப்பு நாள், இரண்டாவது கால்நடை உதவியாளர் (லைவ்ஸ்டாக் அசிஸ்டண்ட்) என்று வழங்கி வந்த பெயரினை மாற்றி கால்நடை ஆய்வாளர் (லைவ்ஸ்டாக் இன்ஸ்பெக்டர்) என்று பெயர் வழங்குதல்.

கீழ்க்கண்ட கோரிக்கைகள் ஊதியக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளன :—

அதாவது, கேந்திர கிராமத்திட்டம் மற்றும் கால்நடை மேம்பாட்டுத் திட்டங்களில் பணியாற்றும் ஆய்வாளர்களுக்கு நிலையான பயணப்படி (ஃபிக்ஸட் டிராவலிங் அலவன்ஸ்) அளித்தல்.



கீழ்க்கண்ட கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது :—

இவர்களுக்குப் பால்வள அறிவியல் மற்றும் கால்நடை மருத்துவம் இவற்றில் டிப்ளோமா பயிற்சி அளித்தல்.

கால்நடைத் துறையில் கம்பவுண்டர்களை நியமிக்கக் கூடாது என்ற கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ள இயலாது.

பஞ்சாயத்து ஒன்றியங்களில் விஸ்தரிப்பு அதிகாரிகளாக பட்டதாரிகளை நியமிக்கும் உத்தேசத்தைக் கைவிட வேண்டுமென்ற கோரிக்கைக்குத் தற்பொழுது இடமில்லை. ஏனெனில் அப்படியொரு செயற்குறிப்பு அரசினிடம் இல்லை.

முக்கிய கோரிக்கை, நிலை 2-இல் இருந்து நிலை 1-க்கு பதவி உயர்வு பற்றியது. காலியாக உள்ள 314 கால்நடை மருந்தகங்களில் நிலை 1-ல் நியமிப்பதென அரசு இன்று முடிவெடுத்துள்ளது என்பதை மெத்த மகிழ்ச்சியுடன் அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதனால் 1,953 இரண்டாம் நிலை கால்நடை ஆய்வாளர்களில் 314 பேர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் மார்க்கபந்து அவர்கள் ஆடுவளர்ப்புத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். தமிழகத்தைப் பொறுத்த அளவிலே, விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத் திட்டம், சிறப்புக் கால்நடை பராமரிப்புத் திட்டம், வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய பல்வேறு திட்டங்களிருக்கின்றன. விவசாய மறுநிதி வளர்ச்சிக் கழகத் திட்டத்தின்கீழ் தமிழ்நாடு முழுவதும் 7 மாவட்டங்களில் 39 ஆடு வளர்ப்புக் கூட்டுறவு சங்கங்களின் மூலம் 2,029 விவசாயிகளுக்கு ரூ. 50.57 இலட்சம் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளது. இது தவிர, சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டத்தின்கீழ் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் உதவியுடன், பல மாவட்டங்களில், வட ஆற்காடு, தர்மபுரி, சேலம், இராமநாதபுரம், திருநெல்வேலி—செம்மறியாடுகள் வழங்கப்பட்டு, தற்சமயம் தீவிரமாக, நன்கு செயல்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் வாணியம்பாடியிலே மருத்துவமனை இயங்கவில்லையென்று குறிப்பிட்டார்கள். It is already functioning. அவர்கள் குறிப்பிட்டது புதுக் கட்டிடம் இல்லையென்று குறிப்பிடுகிறார்கள் என்று கருதுகிறேன். ஏனென்றால், சென்ற நிதிநிலை அறிக்கையின்

பொழுது அந்த மருந்தகம் தரம் உயர்த்தப்பட்டு,
மருத்துவமனையாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அந்த மருத்துவ
மனை இப்பொழுது பழைய கட்டிடத்திலே இயங்கிக் கொண்டிருக்
கிறது. கூடிய விரைவிலே வேறு கட்டிடத்திற்கு அந்த மருத்துவ
மனையை மாற்றியமைக்கவிருக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்
கிறேன்.

மேலும் பல குறைகளை எடுத்துச் சொன்னார்கள். அவைபற்றி
நிச்சயமாகக் கவனித்து நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரி
வித்துக் கொள்கிறேன். செயற்கைக் கருத்தரிப்பு நிலையம் ஒன்று
வேண்டுமென்று கேட்டார்கள். வாணியம்பாடி தொகுதியைச்
சார்ந்த ஆம்பூரில் ஏற்கனவே செயற்கைக் கருத்தரிப்பு நிலையம்
இருப்பதாலே, புதிதாக ஒன்று ஏற்படுத்த முடியாது என்பதை
வருத்தத்தோடு அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே, மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் சொன்
னார்கள், வரதராஜன் அவர்களும் சொன்னார்கள். நகராட்சி எல்லை
யிலே செயற்கை கருத்தரிப்பு ஊசி போட ரூ. 5-ம் கிராமங்களிலே
ரூ. 2-ம் வாங்குகிறார்கள். அதைக் குறைக்க வேண்டுமென்று சொன்
னார்கள். சென்ற தடவை கூடச் சொன்னோம் என்று சொன்
னார்கள். அந்த ரூ. 5 ரூ. 2-ஐ, ரூ. 1 ஆகக் குறைக்கும் செயற்
குறிப்பு அரசின் தீவிரப் பரிசீலனையில் இருக்கிறது என்பதைச்
சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, மருந்துகள் கிடைக்கவில்லையென்று சொன்னார்கள்.
மருந்துகள் தாராளமாகக் கிடைப்பதற்காக, மருந்துகள் மற்றும்
உபகரணங்கள் வாங்க, குழு அமைத்து, அங்கீகரிக்கப்பட்ட விலை
யிலே, அங்கீகரிக்கப்பட்ட கிடங்குகளிலேயிருந்தும், மத்திய அரசு
கிடங்குகளிலேயிருந்தும் மருந்துகள் வாங்கப்பட்டு அனைத்து மருந்
தகங்களுக்கும் நாங்கள் சீராக வழங்குகின்றோம் என்பதை இங்கே
எடுத்துச் சொல்லவிரும்புகிறேன்.

இன்னும் சில பிரிவுகளிலே, மொபைல் டிஸ்பென்சரி மூலம்,
நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்தி மூலம், கால்நடைகள்
நோய்வாய்ப்பட்டுள்ளதைப் பற்றி, கால்நடை மருத்துவர்களுக்குச்
செய்தி வந்தவுடனே, அந்த இடங்களுக்குச் சென்று தக்க
நடவடிக்கை எடுக்கிறார்கள் என்பதை நான் எடுத்துச் சொல்ல
விரும்புகிறேன்.



மாண்புமிகு உறுப்பினர் மணிமாறன் அவர்கள் இங்கே இருந்து,
வெளி மாநிலங்களுக்கு—குறிப்பாக, கேரள மாநிலத்திற்கு
கால்நடைகள் அனுப்பப்பட்டு, அங்கிருந்து மாமிசமாக, வெளி
நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது என்று சொன்னார்கள். மற்ற
மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிற கால்நடைகளில் 90 சதவிகிதம்,
வயதானவைகளும், பாதிக்கப்பட்டவைகளும்தான். அவைகளைத்
தான் நாம் அனுப்புகிறோம். ஏனென்றால், இந்த மாநிலத்திலே
பசுவதைத் தடுப்புச் சட்டம் இருப்பது இங்கேயுள்ள மாண்புமிகு
உறுப்பினர்களுக்குத் தெரியும் என்று நான் கருதுகிறேன். இந்த
மாடுகளை இங்கு வைத்திருப்பதால், தீவனப் பற்றாக்குறை வேறு
ஏற்படுகிறது.

மேலும், மாநிலங்களைப் பொறுத்தவரையிலே, ஒரு
மாநிலத்திலிருந்து இன்னொரு மாநிலத்திற்குக் கால்நடைகள்
போக தடை இருக்கக் கூடாது என்று மத்திய அரசுச் சட்டம்
இருப்பதால் அங்கே அனுப்பப்படுகின்றன. அங்கே
அனுப்பப்படுபவையும், தரம் குறைந்த, வயதானவை என்று நான்
எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

மாட்டுத் தீவன விலையைக் குறைக்க வேண்டுமென்று
மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்களும் சொன்னார்கள்,
முருகேசன் அவர்களும் சொன்னார்கள். கால்நடைப் பராமரிப்புத்
துறை, கால்நடை தீவனத்தைத் தயாரிப்பதில்லை. என்றாலும்,
சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியிலே கால்நடை
தீவனம் பற்றி ஆராய்ச்சி நடத்துகிறார்கள். சுலபமாக, திப்பி,
மொலேசஸ் இவைகளைக் கொண்டு, தரமான தீவனத்தைக்
குறைந்த விலையில் கிடைக்கச் செய்ய அக்கல்லூரியில் ஆராய்ச்சி
நடைபெற்று வருகிறது. அத்தோடு, முந்திரிப் பழம், கடல் பாசி
இவைகளைக் கொண்டு தீவனம் செய்ய ஆராய்ச்சி நடைபெறுகிறது
என்று சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் கந்தசாமி அவர்கள் பல கருத்துக்களை
என்னிடத்திலே சொல்லியிருக்கிறார்கள். அவற்றை நிச்சயமாகத்
தீவிரமாகப் பரிசீலனை செய்வேன் என்பதை நான் தெரிவிக்க
விரும்புகிறேன்.

[செல்வி பி. டி. சரஸ்வதி] [1978 மார்ச் 7

1978-79-ல் தீவிரமாக, இந்த இலாகாவைச் சேர்ந்தவர்கள் செயல்பட வேண்டுமென்பதற்காக, தர்மபுரியிலும், தஞ்சாவூரிலும் உள்ள கால்நடை மருத்துவ மனைகளைப் பிரதம மருத்துவ மனைகளாக உயர்த்த இருக்கிறோம்.

[பிற்பகல் 12.30]

அதைப்போல வடார்க்காடு மாவட்டத்தில் கலசபாக்கம் ஒன்றியத்தில் உள்ள ஆதமங்கலம் கிராமத்திலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள தியாகதுர்க்கம் தியாக துருவத்திலும், திருச்சி மாவட்டத்தில் உள்ள திருமானூர் ஒன்றியத்தில் உள்ள கீழ்ப்பழூர் கிராமத்திலும், மதுரை மாவட்டத்தில் உள்ள வாடிப்பட்டி ஒன்றியத்திலுள்ள சி. புதூர் கிராமத்திலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கடலாடி ஒன்றியத்தில் உள்ள சிக்கல் கிராமத்திலும், இராமநாதபுரம் மாவட்டம் கல்லல் ஒன்றியத்தில் உள்ள குன்றக்குடி கிராமத்திலும், சேலம் மாவட்டம் இடப்பாடி ஒன்றியத்திலுள்ள கூறட்டுப்புதூர் கிராமத்திலும், கோவை மாவட்டத்தில் சத்தியமங்கலம் ஒன்றியத்தில் உள்ள காசிப்பாளையம் கிராமத்திலும், கோவை மாவட்டத்தில் பெருந்துறை ஒன்றியத்தில் உள்ள காஞ்சிக்குடி என்ற கிராமத்திலும், தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் ஒன்றியத்தில் உள்ள சுவாமிமலை கிராமத்திலும், கால்நடை மருந்தகங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நெல்லை மாவட்டத்தில் உள்ள பாளையங்கோட்டையிலும் செங்கற்பட்டு மாவட்டத்தில் சிட்லபாக்கத்திலும், கோவை மாவட்டத்தில் கோபிசெட்டிப்பாளையத்திலும், சேலம் மாவட்டத்தில் நாமக்கல்லிலும், வடார்க்காடு மாவட்டத்தில் ஆரணியிலும் கால்நடை மருந்தகங்களை, கால்நடை மருத்துவ மனைகளாக உயர்த்தவிருக்கிறோம்.

அடுத்து கால்நடை நோய்ப் புலன் ஆய்வுப் பிரிவுகள் கடலூரிலும், கோயம்புத்தூரிலும் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன. தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம் திருச்சியிலே செயல்படுத்தப்படும்.

அடுத்து, சமூக நலத் துறையைப் பொறுத்த அளவில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், வருத்தத்தோடு, அருமைச் சகோதரிகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், விதவைகள்



1978 மார்ச் 7] [செல்வி பி. டி. சரஸ்வதி]

இவர்களைப் பற்றி மெத்த வருத்தத்தோடு எடுத்துச் சொன்னார்கள். உடல் ஊனமுற்றவர்களைப் பற்றியும் வேதனையோடு எடுத்துச் சொன்னார்கள்.

தமிழக அரசு அனாதை விதவைகளுக்காக சில மறுவாழ்வுத் திட்டங்களைத் தீட்டியுள்ளது. அவைகளில் முக்கியமானவை தையல் இயந்திரங்கள் வழங்குதல், விதவைத் திருமணம் புரிந்து கொண்ட தம்பதிகளுக்கு ரூ. 5,000 மதிப்புள்ள 7 வருட கால சேமிப்புப் பத்திரங்கள் வழங்குதல் ஆகும்.

20 வயதில் இருந்து 40 வயது வரை அனாதை விதவைகள் தாமே சொந்தமாக தொழில் செய்து வாழ வழி செய்யும்பொருட்டு அவர்களுக்கு தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

மேலும் இங்கே பல உறுப்பினர்கள் குறிப்பாகச் சொன்னார்கள். அந்த வாய்ப்பு 40 வயதுக்கு பிறகுதான் இருக்கிறது என்று சொன்னார்கள். இதற்கு முன்னால் அது 45 வயதாக இருந்தது. இப்போது 40 வயதாக வயது வரம்பைக் குறைத்திருக்கிறோம். 0 வயதிலிருந்தே கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதற்காகத்தான் அந்த சகோதரிகளுக்குப் பயன்படுகின்ற வகையில் புலன் பெறத்தக்க வகையில் பல குடிசைத் தொழில்களையும் கைத் தொழில்களையும் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்கிறோம். கறவை மாடுகள் வழங்குதல் கோழிப் பண்ணை வைக்க உதவுதல், இவைகளுக்கு தேசியமயமாக ஆக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெற ஏற்பாடு செய்கிறோம். 1978-79 இல் 0 வயது உடைய விதவைகளும் இச்சலுகையை பெறுவார்கள். இதுவரை 10,000 பெண்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர். 1978-79 இல் மேலும் 5,000 பேர்கள் பயனடைவார்கள்.

அரசாங்க வேலைக்கு அரசு பணியாளர் தேர்வுக் கழகம் மூலமோ அல்லது வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மூலமாகவோ எல்லோரும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். விதவைகளும் இந்த தேர்வின் மூலமே வேலையில் அமர்த்தப்படுவார்கள். எனினும் அனாதை விதவைகளை கடைநிலை ஊழியர்களாக (எல். ஜி. ஜி. எஸ்.

(L. G. G. S.) நியமிக்க அவர்களுக்குத் தனிச் சலுகை கொடுக்கலாம் என்ற குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

உடல் ஊனமுற்றவர்களைப் பற்றி வேதனையோடு எடுத்துச் சொன்னார்கள். அவர்களுக்கு அரசுப் பொறுப்பிலே பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக பொதுப் பணிகளுக்கு மேல் வயது வரம்பினை 10 வருடங்களுக்கு உயர்த்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தட்டச்சர்கள், தொலைபேசி இயக்குபவர், அனுப்புகை எழுத்தர் மற்றும் விசைத் தூக்கி இயக்குபவர் போன்ற பதவிகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்குங்கால் உடல் ஊனமுற்றோர் மனுக்களைப் பரிவுடன் கவனிக்கும்படி நியமன அதிகாரிகள் அறிவுறுத்தப் பட்டுள்ளார்கள்.

இது தவிர, உடல் ஊனமுற்றோருக்கென சிறப்பு வேலை வாய்ப்பகங்கள் சென்னை, மதுரை, கோவை ஆகிய நகரங்களில் நிறுவப்பட்டு, செம்மையாகப் பணி செய்து வருகின்றன.

மாநிலத்திலுள்ள, வேலைவாய்ப்பகங்களின் மூலம் நியமனங்கள் செய்யப்படும் காலியிடங்களைப் பூர்த்தி செய்வதில் உடல் ஊனமுற்றோருக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. தலைமைச் செயலகத்திலேயும் கூட உடல் ஊனமுற்ற 7 மின்விசைத் தூக்கி இயக்குபவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 40 கண் பார்வை யற்ற பெண்கள் தங்கி வேலை பயிலும் இல்லம் ஒன்று சென்னையில் துவங்கப்பட உள்ளது. பயிற்சிக்குப் பிறகு இவர்கள் அங்கேயே உள்ள தொழிற்பட்டறையில் வேலையில் அமர்த்தப்படுவர்.

நவீன பயிற்சி மற்றும் உற்பத்தித் தொழிற்பட்டறை ஒன்று 30 லட்சம் ரூபாய் செலவில் சென்னைக்கருகில் உள்ள முட்டுக்காட்டில் துவங்கி, நல்லமுறையில் நடைபெற்று வருகின்றது. இதுவரை இந்தத் தொழில் பட்டறையில் 28 உடல் ஊனமுற்றோர் பயிற்றுவிக்கப்பட்டு அங்கேயே [illegible] எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். மேலும் தற்போது 43 உடல் ஊனமுற்றோர், பயிற்சி பெற்று வருகின்றனர்.



கண் பார்வையற்றவர்களை பள்ளி ஆசிரியர்கள், உதவிப் பேராசிரியர்கள், பேராசிரியர்கள், விளக்குநர், உதவி ஆசிரியர் போன்ற பதவிகளுக்கு நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பளிக்கும் பொறுப் பினில் அரசு பெரும் பங்கு பெற்றாலும், முழுப் பொறுப்பினையும் அரசு ஏற்றுக்கொள்வதென்பது கடினமானது. தனியார்த் துறை களும் இதில் முக்கிய பங்கினை வகிக்க வேண்டும். உடல் ஊன முற்றோருக்கு வேலை வாய்ப்பளிக்க முன்வருமாறு தனியார்த் துறை நிறுவனங்களுக்கு அவ்வப்போது அரசினால் வேண்டு கோள் விடப்பட்டு வருகின்றது. உடல் ஊனமுற்றோர் பலர் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் நல்ல முறையில் நியமனம் பெற்று இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் மகிழ்ச்சி யோடு எடுத்துக் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் குழந்தை களுக்கு பாலர் பள்ளி ஏற்படுத்தவேண்டுமென்று சொன்னார்கள். அவை மாநிலம் பூராவும் ஏற்படுத்தப்பட்டு இயங்கிக்கொண்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் பெண்கள் வேலைக்குச் செல்கிற நேரத்தில் குழந்தைகளை விட்டுச்செல்ல குழந்தைகள் காப்பகங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள். சென்னையைப் பொறுத்தவரையில், அப்படிப்பட்ட காப்பகங்கள் தனியார் நிறுவனங்கள் மூலமாக நிறைய இருக்கின்றன. அதற்கு மத்திய அரசாங்கம் 90% செலவை மானியமாக அளித்து வருகிறது என்பதையும் உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். வெகு சீக்கிரத்தில் தலைமைச் செயலகத்தில் அப்படிப்பட்ட ஒரு காப்பகம் திறக்க இருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்கள் ஆதரவற்ற குழந்தைகளை பராமரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டார்கள். தமிழ் நாட்டில் தற்போது ஏறத்தாழ 43 நிறுவனங் கள் அனாதைக் குழந்தைகளை பராமரித்தலுக்காக அத்திட்டத்தின்

கீழ் உதவி பெறுகின்றன. பராமரிப்பு செலவு வகையிலும் மற்றும் கட்டிட செலவு வகையிலும் ஆகும் மொத்த செலவில் 90% மத்திய அரசு மானியமாக அந் நிறுவனங்களுக்கு வழங்குகிறது. இத்திட்டம் மாநில அரசின் மூலம் செயல்படுத்தப்படுகிறது.

மத்திய அரசு மொத்தமாக ஒவ்வொரு காலாண்டிற்கும் வழங்குகின்ற நிதியினின்று மாநில அரசு அந்நிறுவனங்கள் ஒவ்வொன்றுக்கும் நிதி உதவி அளித்து வருகிறது. இவ்வகையில் நடப்பு ஆண்டில் ரூ. 21,45,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அது மட்டுமல்லாமல் தமிழ் நாடு அரசின் உதவியுடன் கோயில்கள் அறநிலையங்கள் நடத்தும் 36 கருணை இல்லங்கள், இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் கண்காணிப்பில் நல்ல முறையில் இயங்குகின்றன. அவற்றிற்காகும் செலவில் 25% அல்லது (நபர் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு) ரூ. 12.50 வரை மானியமாக இத்துறை மூலம் வழங்கப்படுகிறது.

பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு பற்றிச்சொன்னார்கள். அந்தப் பிரச்னை பற்றி முடிவு எடுப்பதற்காக நான் ஏற்கனவே அதிகாரிகளை கலந்து ஆலோசித்து இருக்கிறேன். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் இது பற்றி சொல்லியிருக்கிறேன். அதைத் தொடர்ந்து, சீப் மெட்ராபாலிடன் மாஜிஸ்டிரேட் அவர்களிடத்திலும் பிச்சைக்காரர்களாக வீதியில் இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கிற நோக்கில் அவர்களை, பிச்சைக்காரர்கள் இல்லத்திற்கு தண்டனை என்ற பெயரில் அனுப்ப வேண்டும் என்று கேட்டதற்கிணங்க, இப்போது சைதாப்பேட்டை கோர்ட்டில் பிச்சைக்காரர்கள் விசாரிக்கப்படும் வழக்கு தினமும் நடந்து கொண்டு இருக்கிறது.

நான் மெட்ரோபாலிடன் மாஜிஸ்டிரேட் அவர்களிடம் கேட்டு இருக்கிறேன். அப்படிப்பட்ட வழக்குகள். ஜியார்ஜ் டவுன் வட்டத்தில் உள்ள கோர்ட்டிலும், எழும்பூர் கோர்ட்டிலும் விசாரிக்கப் படவேண்டும் என்று. பிச்சைக்காரர்களுக்கு சட்டத்தின் மூலம் தண்டனை கொடுத்து, அவர்களை அந்த இல்லங்களுக்கு அனுப்பி வைத்தால், அங்கே அவர்களுக்கு தகுந்த வேலை கொடுத்து அவர்களை மறுவாழ்வுக்குக் கொண்டு வர அரசு முயற்சி எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



மேல்பாக்கத்தில் இருக்கும் இல்லத்தில் இருக்கும் நபர்களின் எண்ணிக்கை 900-லிருந்து 138-க்குக் குறைந்து இருப்பதால், அந்த இல்லத்தில் பிச்சைக்காரர்களை வைத்து, அவர்களுக்கு மறு வாழ்வு தர தக்க நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்காக 10 இல்லங்கள் தமிழ் நாட்டில் இருக்கின்றன. அவர்கள் நல்ல சூழ்நிலையில் வைத்து பராமரிக்கப்பட்டு வருகிறார்கள். வீதியில் இருக்கும் தொழு நோய்ப் பிச்சைக்காரர்கள், மற்றவர்களின் கண்ணுக்கு அருவருப் பாக இருப்பவர்கள், இவர்களையும் பராமரிக்க வேண்டிய நடவடிக் கைகளை எடுக்க முடிவு எடுக்க இருக்கிறோம் என்பதை எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்ததாக, மகளிர் மேம்பாட்டிற்காக, குறிப்பாக, ஆதரவு அற்ற விதைவைகளுக்கும், பிற மகளிருக்கும் உதவி செய்வதற்கு, இந்த அரசு முன்னுரிமை அளித்துள்ளது. கடந்த நிதி நிலை அறிக்கையில் ஆதரவு அற்ற விதவைகளுக்காகச் சில புதிய திட்டங்களைக் கொண்டு வந்தோம். இவை தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

தற்போது 45 வயதிற்கு மேற்பட்டுள்ள, ஆதரவற்ற விதவை களுக்கு மட்டுமே உதவித் தொகை கொடுக்கப்பெறுகிறது. இந்த வரம்பு 40 வயதாகக் குறைக்கப்பட்டு, ஆண்டொன்றுக்கு 12 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 5,000 பேருக்கு உதவித் தொகை வழங்கப்படும் என்று ஏற்கெனவே சொன்னேன். சேலத்தில் பணி இல்லம் ஒன்று தொடங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூரிலும், கடலூரிலும் உள்ள பணி இல்லங்களில் பள்ளி இறுதித் தேர்வுக்கு இரண்டாண்டு படிப்பு ஏற்படுத்தப் படும். கன்னியாகுமரியிலும், மதுரையிலும் தையல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

சமூக நலத் துறையின் கீழ், மகளிருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் சாக்கட்டி தயாரிக்கும் தொழிற்கூடங்கள் மூன்றும், மெழுகுவர்த்தி தயாரிக்கும் தொழிற்கூடங்கள் மூன்றும்

தொடங்கப்படும். நெல்லை மாவட்டத்தில் பாளையங்கோட்டையிலும், குமரி மாவட்டத்தில் நாகர்கோயிலிலும், தஞ்சை மாவட்டத்தில் வேளாங்கண்ணியிலும் மெழுகுவர்த்தித் தொழிற்சாலை ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

முகவை மாவட்டத்தில் பரமக்குடி, தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம், மதுரை மாவட்டத்தில் திருமங்கலம் ஆகிய இடங்களில் சாக்கட்டி தயாரிக்கும் தொழிற்கூடங்கள் ஏற்படுத்தப்படும்.

குழந்தைகளுக்கான சத்துணவு, சுகாதாரக் கவனிப்பு, பாலர் கல்வி ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குழந்தைக் காப்பகங்கள் நம் மாநிலத்தில் ஏறக்குறைய 3,000 இருக்கின்றன. அடுத்த ஆண்டில், மேலும் 200 குழந்தைக் காப்பகங்களை ஏற்படுத்த நிதி ஒதுக்கியுள்ளோம்.

உடல் ஊனமுற்றோர்களின் மறுவாழ்வுக்கான பல்வேறு திட்டங்களுக்கு வரவு-செலவுத்திட்டத்தில் மொத்தம் 83 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. 300 பள்ளிச் சிறார்களுக்கு காது கேட்க உதவும் கருவிகள் வழங்குதல், உதவி பெறுவதற்கு தகுதியுடைய 500 உடல் ஊனமுற்றோருக்கு மூன்று சக்கர வண்டி வழங்குதல் ஆகிய திட்டங்களுக்கான நிதி ஒதுக்கங்கள் இதில் அடங்கும்.

பேசுவதிலும் கேட்பதிலும் ஊனமுற்றோருக்கு சிகிச்சையும் பயிற்சியும் அளிக்க நிலையம் ஒன்று சென்னையில் வரும் ஆண்டில் நிறுவப்படும்.

கண்பார்வை இல்லாதவர்களுக்கு நெசவுத் தொழிலில் பயிற்சி அளித்து அவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்க நெசவுக் கூட்டுறவுச் சங்கம் ஒன்று கோவையில் ஏற்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ் 100 விழி இழந்தோர் பயன்பெறுவர்.





1978-79-ல் மூன்று பணி இல்லங்களுக்கும் 3 தமிழ் தட்டச்சுப் பொறியும், 2 ஆங்கில தட்டச்சுப் பொறியும் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது. கடலூரில் பணி இல்லக் கட்டடத்தில் வகுப்பு அறைகளுக்காக ரூபாய் 1.05 லட்சம் செலவில் கூடுதலான அறைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. 150 சிறார் பள்ளிகள் 1978-79-ல் தொடங்கப்பட இருக்கின்றன. இதுவன்றி மேலும் 50 சிறார் பள்ளிகள் அரிசனக் காலனிகளில் திறக்கப்படவிருக்கின்றன. மலைவாழ் மக்களுக்கு 30 சிறார் பள்ளிகள் திறக்கப்படும்.

உலக வங்கி நிதியுடன் செயல்படும் சென்னை நகர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1978-79-ல் 70 சிறார் நிலையங்கள் தொடங்கப்பட உள்ளன.

நான் இங்கே கூறிய கருத்துக்களையும் விளக்கங்களையும் மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டு, பலரும் இங்கே குறிப்பிட்டதைப்போல இது விவசாயிகளின் உற்ற நண்பனை கால்நடைகள், ஆடுகள் பற்றிய மானியமாக இருப்பதால் ஜீவ காருண்யத்தோடு தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

அதைப்போல சமூக நலனைப் பொறுத்த அளவில் அருமைச் சகோதரிகள், விதவைகள், ஆதரவற்ற, திக்கற்ற சகோதரிகள், உடல் ஊனமுற்றவர்கள், காலை இழந்தவர்கள், கண்ணை இழந்தவர்கள், வயோதிகர்கள், தாய் முகம் தெரியாத, தந்தை முகம் தெரியாத அனாதைக் குழந்தைகள், ஆதரவற்ற வயது முதிர்ந்தவர்கள் பற்றிய மானியமாக இருப்பதால் அதிலும் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தாமல், பாசத்தோடு, பண்போடு, அன்போடு, அக்கறையோடு, ஆர்வத்தோடு, அனுதாபத்தோடு அவர்களுக்கு நற்பணியாற்ற வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியங்களை நிறைவேற்றித் தரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்களை மெத்தப் பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. அடுத்து வாக்கெடுப்பு.

திருவாளர்கள் க. வேணுகோபால், ரெ. வீ. சவுந்திரராஜன், வி. கே. கோதண்டராமன், எ. சுவாமிதாஸ், மு. அம்பிகாபதி,

[1978 மார்ச் 7

ரா. மார்க்கபந்து, எம். ஏ. லத்தீப் ஆகியவர்கள் மானியக் கோரிக்கை எண் 22-க்குக் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள **கேள்வி:** மானியக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,87,59,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திருவாளர்கள் சு. பாலன், ரெ. வீ. சவுந்திரராஜன், எம். அண்ணாமலை, எம். ஆறுமுகம், சோ. அழகர்சாமி, ரா. மார்க்கபந்து, எம். ஏ. லத்தீப் ஆகியவர்கள் மானியக் கோரிக்கை எண் 30-க்குக் கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : "மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,92,13,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(இ) கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:



1978 மார்ச் 7]

"மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத்தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,22,22,000 க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

**திரு. ஏ. இராமலிங்கம்:** தலைவரவர்களே, தென் ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில், மருதூர் கிராமத்தில், வள்ளல் இராமலிங்க அடிகளார் பிறந்த இடமானதால் வெளி மாவட்டங்களில் இருந்து பக்தர்கள் நிறைய அவ்விடத்தை கண்டு தரிசிக்க வருவதால், வரும் பக்தர்கட்கும், பயணிகட்கும் தங்குவதற்கு இடவசதி இல்லாததால் சுற்றுலா துறை மூலம் சிறு தொகை செலவில் தங்கும் விடுதி அமைத்தல் குறித்து விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,22,22,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்:** தலைவரவர்களே, சுற்றுலாப் பயணிகளுக்குக் கூடுதல் வசதிகள் செய்து கொடுப்பது பற்றியும், சுற்றுலாப் பயணிகள் மகிழ்விடங்கள் அதிகரிக்க வேண்டும் என்பது பற்றியும் விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 47—செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,22,22,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

**திரு. என். வரதராஜன் :** தலைவரவர்களே, வீரபாண்டிய கட்டபொம்மன் இளவல் ஊமைத்துரையின் பெயர் விளங்கும் திண்டுக்கல் மலைக் கோட்டையில் கட்டபொம்மன் வரலாற்றையும், திப்புசுல்தான் வரலாற்றையும் சித்தரிக்கும் கண்காட்சியை நிறுவ மத்திய அரசின் அனுமதி பெற வேண்டுவதுபற்றி விவாதிக்க—

"மானியக் கோரிக்கை எண் 47-செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,22,22,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்." என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[1978 மார்ச் 7

THIRU M. A. LATHEEF: Sir, to discuss the need to have the films for public exhibition freed from obscene items opposed to public policy and decency, I move—

'That the allotment of Rs. 1,22,22,000 under Demand No. 47—Information, Tourism and Film Technology be reduced by Rs. 100'.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மானிய கோரிக்கையின் மீது விவாதிப்ப தற்கு செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பப் பிரிவி னுடைய கொள்கை விளக்கக் குறிப்பு* ஒன்று அச்சடிக்கப் பெற்று அவையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிறது. தமிழில் உள்ள அந்த அறிக்கையை இந்த அவையில் நான் படித்ததாகக் கருதி அவை அதனைத்தையும் அவை நடவடிக்கைக் குறிப்பேட்டில் பதிவு செய்யுமாறு வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் விவா தத்திலே தருகிற கருத்துக்களைப் பரிசீலித்து இறுதியில் நான் என்னுடைய கருத்தைத் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் தயவு செய்து சுருக்கமாக முடித்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். கணேசன்:** பேரவைத் தலைவரவர்களே, செய்தி, சுற்றுலாத் துறை மானியக்கோரிக்கையின் மீது என்னுடைய கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல முற்படுகி றேன்.

இன்றைய தினம் செய்தி சுற்றுலாத் துறை ஊழல் நிறைந்து இருக்கிற, ஆளும் கட்சியின் நிர்வாகக் குறைபாடுகள் மலிந்து இருக்கின்ற, ஒரு துறையாகச் செயல்பட்டு வருகிறது என்பதை நான் வருத்தத்தோடு இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

*429-444-ம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1978 மார்ச் 7] [திரு. எஸ். கணேசன்]

இன்றைக்குச் செய்தித் துறையின் மிகப் பெரிய அந்தஸ்திலே இருக்கக்கூடிய இயக்குநராக இருக்கக் கூடியவர்கள் ஒருதலைப் பட்சமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். நெருக்கடி காலத் திலே வேண்டுமென்றே பத்திரிகைத் துறையிலே அத்துமீறி செயல்பட்டார், இன்னும் சொல்லப்போனால் அண்ணா அவர்க ளுடைய கொள்கைக்கு முரண்பட்ட எண்ணத்தைக் கொண்டிருப் பவர், குறிப்பாகச் சொல்லப்போனால் கலைவாணர் அரங்கம் என்ற பெயரையே மாற்ற வேண்டுமென்ற கருத்துக்கு உடன்பாடாக இருந்த ஒருவர், இன்றைக்குச் செய்தித் துறையிலே மிகப் பெரிய அந்தஸ்த்திலே இயக்குநராக இருந்துகொண்டிருப்பது வருந்தத் தக்கது. அவர் உடனடியாக மாற்றப்பட வேண்டுமென்று நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்று முன் தினம் மாண்புமிகு செய்தி, சுற்றுலாத்துறை அமைச்சரவர்கள் இதே மன்றத்திலே சொன்னார்கள்—பத்திரிகைத் துறையிலே பாரபட்சம் காட்டப்படுகிறது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்—விளம்பரம் கொடுப்பதில் பத்திரிகைகளின் விற்பனை, பத்திரிகைகளின் தரம் ஆகியவற்றைப் பார்த்துப் பத்திரி கைகளுக்கு விளம்பரம் கொடுப்பதாக மாண்புமிகு செய்தி, சுற்று லாத் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். நான் உங்கள் மூல மாக அமைச்சரவர்களைக் கேட்க ஆசைப்படுகிறேன். 'அலை ஓசை' என்ன பாவம் செய்திருக்கிறது? 'அலை ஓசை' க்கு விளம்பரங்களை அரசு கொடுக்க முன்வரவேண்டுமென்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில் செய்தித் துறையின் வாயிலாக நேற்றைய தினம் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சரவர்களுடைய கடி தத்தை இங்கே படித்தார்கள். செய்தித் துறையின் மூலமாக அது ஸ்டென்சில் செய்யப்பட்டு நிருபர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆனால் எந்தத் துறையின் மூலமாக இது வழங்கப்பட்டது என்று குறிப்பிடவில்லை. செய்தித் துறையின் மூலமாகப் பல செய்திகள் நிருபர்களுக்கு அளிக்கப்படுகிறது. நிதியமைச்சரவர்கள் படித்த

[திரு. எஸ். கணேசன்] [1978 மார்ச் 7

கடிதத்தின் நகல் நிருபர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இது எந்தத் துறையிலே இருந்து கொடுக்கப்பட்டது என்று குறிப்பிட வில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50 மணி)

ஆனால் நம் நிதி அமைச்சர் அவர்கள் படித்த கடிதத்தின் நகல் நிருபர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் எந்தத் துறை அதைக் கொடுத்தது என்பதற்கு இதில் எந்தவிதமான குறிப்பும் இல்லை என்பதை மெத்த வருத்தத்தோடு குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இங்கே ஊழல், ஊழல் என்று கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி பற்றி வானளாவப் பேசப்பட்டு வருகிறது. ஆனால் இன்று ஆளும் கட்சியில் இருக்கக் கூடிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில்—நிருபர் களுக்கு பஸ் பாஸ் கடந்த ஆட்சிக்காலத்திலே கொடுக்கப்பட்டிருக் கிறது—ஆனால் நெடுந்தூர பேருந்துகளில் செல்வதற்கும் பஸ் பாஸ் கொடுக்க வேண்டும் என்று இந்த மன்றத்தில் இருக்கிற எதிர்கட்சித் தலைவர்கள் அத்தனை பேர்களும் கையெழுத்து இட்டு அமைச்சர் அவர்களிடம் கொடுத்திருந்தும் இன்னும் நிருபர் களுக்கு அத்தகைய பாஸ் வழங்கப்படவில்லை. நிருபர்களுக்கு வழங்கப்படும் பஸ் பாஸ் பொறுத்தவரையில், இன்றைய ஆளும் கட்சிப் பத்திரிகையின் நிருபராக இருந்த ஒருவர் அவர் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவி யாளராக ஆகிவிட்ட பிறகும்—ஏப்ரல் 30-ஆம் தேதி வரையில் அந்த பஸ் பாஸின் காலம் இருக்கிறது—அதைத் தவறாக இன்று உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள், அரசாங்க உத்தியோகத் திற்கு சென்றுவிட்ட பிறகும். அதே போல் தி.மு.க. ஆட்சிக் காலத்தில், தி.மு.க. அரசு இருந்த காலத்தில் செய்யப்பட்டிருந்தால் இது ஊழல் அல்லவா என்றெல்லாம் இன்றுள்ள ஆளும்கட்சித்



1978 மார்ச் 7] [திரு. எஸ். கணேசன்]

தரப்பினரால் கேட்கப்பட்டிருக்கக்கூடும். ஆனால் தென்னகம்
பத்திரிகையில் நிருபராக இருந்த பாண்டியன் என்பவர் இன்றைய
தினம் உள்ளாட்சித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளராக
ஆக்கப்பட்டும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த பாஸை-பாஸ்
413 இன்று அவர்கள் அரசாங்க அலுவலராகப் பணிபுரிந்து
கொண்டிருக்கிறார்கள் என்றாலும் இன்னும் அந்தப் பாஸை
தவறான முறையில் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்
என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன்.
அதேபோல் ஆளும்கட்சிப் பத்திரிகைகளைச் சார்ந்திருக்கிற நிருபர்
கள் அரசாங்கத் தொலைபேசியை உபயோகித்துக் கொண்டிருக்
கிறார்கள் என்று இந்த மன்றத்தில் கூட பல மாண்புமிகு
உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். கடந்த காலத்தில் கழக
ஆட்சியில் தொலைபேசி தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது
என்றெல்லாம் குற்றஞ்சாட்டிப் பேசப்பட்டிருக்கிறது. ஆனால்
இன்று ஆளும்கட்சியில் இருப்பவர்கள்கூட, அந்தக் கட்சிப்
பத்திரிகை நிருபர்களாக இருக்கக் கூடியவர்கள்
அரசாங்கத் தொலைபேசியைப் பயன்படுத்திச் செய்தி
களைத் தருகிற விந்தையை நாம் இன்று கண்டு
கொண்டிருக்கிறோம் என்பதை மெத்த வருத்தத்தோடு மாண்பு
மிகு அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்
கிறேன். இன்னும், இந்த சட்டசபையில் நிருபர்களுக்கு இடங்கள்
ஒதுக்கப்படுகின்றன. தற்சமயம் அது மியூசிக்கல் செயர் போன்ற
தொரு நிலைமையில் இருந்துகொண்டிருக்கிறது. இங்கே பழம்
பெரும் பத்திரிகைகளாக இருக்கக்கூடிய ஹிந்துஸ்தான் டைம்ஸ்,
டைம்ஸ் ஆப் இந்தியா போன்ற பத்திரிகைகளுக்கு ஒரு குறிப்
பிட்ட நாற்காலி, இந்த இடத்தில்தான் அமரவேண்டும் என்று
வரையறுத்துத் தரப்படவில்லை. ஆளும் கட்சியைச் சார்ந்திருக்கக்
கூடிய பத்திரிகை நிருபர்களைக் கொண்ட ஒரு குழு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கணேசன் அவர்கள் எழுப்புகிற பிரச்னைக்கும் சுற்றுலா செய்தித் துறைக்கும் சம்பந்தமேயில்லை. இது பேரவைத் தலைவர் துறை சம்பந்தப்பட்ட விவகாரம். அதைப் பற்றிப் பேசக்கூடாது.

கின்றன. சாதாரணமாக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இலவச அனுமதிபாஸ் வழங்குவது வழக்கமாக இருந்து வந்தது. இப்போது இந்த பொருட்காட்சிக்குச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

தனியார்களுக்கு வேலை கொடுப்பதில்லை. வேண்டியவர்களுக்கு சலுகை காட்டுவதில்லை என்று மட்டும் சொல்கிறார்கள். ஆனால் இந்தப் பொருட்காட்சியில் டெண்டர்கள் விடப்பட்டன. தங்களுக்கு வேண்டியவர்களுக்கு டெண்டர்கள் கிடைக்கவில்லை என்பதற்காக முறைகள் மாற்றப்பட்டு, சிறு சிறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டிய ஆர்ட் டைரக்டர் ஒருவருக்கு இறுதியில் வேலை கொடுக்கின்ற நிலைமை உருவாக்கப்பட்டது என்பதை என்னால் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது. இதில் ஊழல் மலிந்திருக்கிறது என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சொல்ல முடியாதா என்பதைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

அதைப்போலவே, தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தின் சார்பில், தியேட்டர்களுக்குக் கடன் உதவி அளிக்கின்ற நிலை இருந்து வருகிறது. இதிலிருந்து திரையரங்கம் அமைப்பதற்கு கடன் கொடுக்கப்பட்டு வருகிறது என்றால், இதற்காக 17% வட்டி விகிதம் வாங்குகிறார்கள். அதிலும் குறிப்பிட்ட காலத்தில் இதற்கு செலுத்தவேண்டிய பணத்தைச் செலுத்தவில்லையென்றால், அதிகப்படியான அளவில், அபராத வட்டி என்ற அளவில், வட்டி போடப்பட்டுச் செலுத்த வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், 30 ஆயிரம் ரூபாய் அசல் கொடுக்க வேண்டும் என்று இருந்தால், குறிப்பிட்ட காலத்திற்குள் செலுத்தவில்லை என்றால், இதற்காக வட்டி, அதன் மீது போடப்படும் அபராத வட்டி என்று கணக்கிட்டு 38 ஆயிரம் ரூபாய் வருகிறது. அசல் 30 ஆயிரம் என்றால், வட்டி 38 ஆயிரம் வருகிறது. இப்படியிருக்கின்ற வட்டி விகிதத்தைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பூம்புகாரில் இருக்கின்ற விடுதிகள், பூம்புகார் இவை எல்லாம் பராமரிப்பு மிக மோசமாக இருக்கிறது. (மணியடிக்கப்பட்டது) இந்த பூம்புகார், கட்டபொம்மன் கோட்டை



இந்த இடங்களை எல்லாம் நல்ல முறையில் பராமரிப்புச் செய்வ தற்கு இந்த அரசு நாட்டம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டுபேச்சு முடித்துக் கொள்ளப் பட்டது.)

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, மாண்புமிகு கணேசன் அவர்கள் பேசும்போது, தென்னகம் நிருபர் பாண்டியன்—அரசாங்க உத்தியோகத்திற்கு வந்தபின்பும் பாஸ் வைத்துக்கொண்டு தவறாக உபயோகித்துக்கொண்டிருக் கிறார் என்று சபையில் இல்லாத ஒருவரைப்பற்றி ஒரு குற்றச் சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி பாஸ் இருக்கிறதா. அப்படியிருந்தாலும் அது தவறாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக் கிறதா அல்லது சரண்டர் செய்தாகிவிட்டதா இதைப்பற்றி எதுவும் நிரூபிக்க முடியாத நிலைமையில் உறுப்பினர் அவர்கள் இப்படிப் பட்ட குற்றச்சாட்டைச் சொல்வது சரிதானா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

திரு. எஸ். கணேசன் : பாண்டியன் அவர்கள் வைத்துக் காண்டிருந்த பாசின் நம்பர் 413. அது தவறாகப் பயன்படுத்தப் ட்டிருக்கிறது என்று நான் சொல்லுகிறேன். அது தவறு ப்படிப் பயன்படுத்தவில்லை என்று சொல்வதாக இருந்தால் ரி.

திரு. எஸ். ஆர். இராதா : நான் சொல்வது சபையில் இல்லாத ஒருவரைப் பற்றி, அவர் இப்போது அரசாங்க உத்தியோகத்தில் இருக்கிறார், அவர் பாஸைத் தவறாகப் பயன்படுத்தியிருக் கிறார்கள் என்று சொன்னால் அதை எந்த ஆதாரத்தைக்கொண்டு சொல்லுகிறார் என்பதை நிரூபிக்க வேண்டும். அப்படிச் சொல் வதாக இருந்தால், பழைய எம்.எல்.ஏ.க்கள் இன்னும் தங்களுடைய பாஸைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று நான் ஒரு குற்றச்சாட்டைச் சொல்லிவிட முடியுமா? பாஸ் இருக்கிறது, அதை தவறாக பயன்படுத்தியிருக்கிறார் என்றால் அதைக் கவனித்துக்கொள்வதற்கு செக்கிங் இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்கள் இருக்கிறார்கள் அப்படியிருக்கும்போது சபையில் இல்லாத ஒருவரைப்பற்றிக் குறிப்பிட்டு

[1978 மார்ச் 7

திரு. எஸ். கணேசன்: திரைப்படப் பிரிவு இந்தத் துறையில் இயங்கி வருகிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் மீது இன்றைக்கு ஆளும் கட்சித் தரப்பினராக இருப்பவர்கள் சாட்டிய குற்றச்சாட்டு, அரசால் வெளியிடப்படுகிற செய்திப் படங்கள் அல்லது தமிழரசு பத்திரிகையாக இருந்தாலும் அல்லது செய்தித் துறையிலுள்ள இன்னின்ன பிற வெளியீடுகளிலும் அன்றைக்கு முதல் அமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் படங்களே அவற்றில் முழுக்க முழுக்க வந்திருக்கிறது என்ற குற்றச்சாட்டு இந்த மன்றத்திலும் வெளியேயும் பரவலாக எடுத்துப் பேசப்பட்டது. ஆனால் இன்றைய நிலை என்ன? நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் படம்தான் இன்று எல்லாச் செய்தி திரைப் படங்களிலும் இருந்து கொண்டிருக்கிறது. உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், இந்த வார தமிழரசு பத்திரிகையில்

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

17 பக்கங்களில் நமது மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் திருவுருவப் படம்தான் அதில் இருக்கிறது. இந்த நிலைகளை கழக அரசு செய்தது அல்லது கழகம் செய்தது என்று சொல்லிக்கொண்டு இன்று அதை களையப் போகிறோம் என்று சொல்லிக்கொண்டிருக்கிற இன்றைய அண்ணா தி.மு.க. அரசு செய்வது உள்ளபடியே வேதனைக்குரிய செயல் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக இருக் கிறேன்.

கழக ஆட்சிபற்றிக் குறிப்பிட்டார்கள். வேண்டியவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்றெல்லாம் பரவலாகப் பேசப்பட்டது. ஆனால் இன்று இந்தத் துறையில் பொறுப்பேற்று கொண்டிருக்கிற மாண்புமிகு செய்தித்துறை அமைச்ச அவர்களும் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும் திரைப்படத் துறையில் மிகுந்த நிபுணத்துவம் பெற்றிருப்பவர்கள். அரசாங்க சார்பில் திரைப்பட பிரிவு ஒன்று இயங்கி வந்துகொண்டிரு



8 மார்ச் 7] [திரு. எஸ். கணேசன்]

து. ஆனால் கைத்தறி முன்னேற்றம்பற்றிய ஒரு துண்டுப்படம், ய்திப்படம் வெளியிட தனியார் ஒருவருக்கு அதுவும் ஆளும் சியைச் சார்ந்திருக்கக்கூடிய, அதிலும் அரசில் பணி புரிந்து ாண்டு இருக்கக்கூடிய ஒருவரின் இளவலுக்கு—கைத்தறி துணி ற்றி செய்திப் படங்கள் தயாரித்துக் கொடுக்க—தேவதாஸ்க்கு ர்சை குத்திக்கொள்ள வெட்கப்படாது குத்திக்கொண்டிருக்கும் மதாஸின் இளவலுக்கு அந்த வாய்ப்பு கொடுக்கப் டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டவனாக ருக்கிறேன்.

செய்தித் துறையில் பணியாற்றிய பி. ஆர். ஓ.-க்கள் விளம்பர தவியாளர்கள், போன்ற இன்ன பிற அலுவலர்கள் எல்லாம் நருக்கடி காலத்தில் வேலை நீக்கம் செய்யப்பட்டிருந்தார்கள். தைப் பற்றிக் கேட்டால் காரணம் சொல்வார்கள், இவர்கள் ல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், அது ட்டுமல்ல அவர்களுக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் வேலை ழங்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்த ராமதாஸ் அவர்கள், பி. சி. ணேசன் அவர்கள் இவர்கள் எல்லாம் யார் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஆனால் இன்றைக்கு வேலையிழந்து நிற்கக்கூடிய பி. ஆர்.ஓ.-க் கள், பப்ளிஸிட்டி அஸிஸ்டன்கள் இவர்கள் எல்லாம் நேற்றைக்கு அமைச்சரவர்களைச் சந்தித்திருக்கிறார்கள். அவர்கள் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் கூறியிருப்பதாகத் தெரிகிறது. அதனை களாக—இன்றைக்கு வேலையற்றிருக்கும் இந்த பி.ஆர்ஓ.-களுக்கும், அவர்களோடு சேர்ந்த அலுவலர்களுக்கும் உடனடியாக வேலை தர வேண்டும் என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள் கிறேன்.

கழகத்தினுடைய ஆட்சியில் வேண்டியவர்களுக்குச் சலுகை காட்டப்பட்டது என்று சொல்லப்பட்டது. இங்கு செய்தி-சுற் றுலா இலாக்கா சார்பில் பொருட்காட்சி நடத்தப்பட்டது. வழக்கம் போல் அரசுத்துறைகளும் இதில் பங்கு கொண்டிருக்

[திரு. எஸ். ஆர். இராதா] [1978 மார்ச் 7

அரசாங்க உத்தியோகத்தில் இருப்பவர் பாஸைத் தவறாகப் பயன் படுத்தினார் என்று சொல்வது முறைதானா? அப்படிப்பட்ட ஒரு குற்றச்சாட்டை எப்படி ஆதாரமில்லாமல் சொல்ல முடியும்?

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது மட்டுமல்ல, இந்தச் சபையிலே விளக்கம் அளிக்க முடியாத, சபையிலே உறுப்பினராக இல்லாத ஒருவரைப் பற்றி, அவருடைய பெயரைக் குறிப்பிட்டோ அல்லது அவர்மீது குற்றம்சாட்டுவதோ கூடாது என்ற மரபு நடைமுறையில் இருந்து வருகிறது. அந்த மரபைக் காப்பாற்றுகின்ற வகையில் இங்கே பேசுகின்ற உறுப்பினர்கள் பேச வேண்டும்.

திரு. எஸ். கணேசன்: அவர் வைத்திருக்கின்ற இந்தப் பாஸை அரசிடம் சரண்டர் செய்யவில்லை. அப்படி இருக்கும்போது, அவர் ஏன் அதைத் தவறாகப் பயன்படுத்தி இருக்கக் கூடாது என்பது தான் கேள்வி. அவரிடமுள்ள 413 எண்ணுள்ள பாஸை சரண்டர் செய்தாரா?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: அது தொலைந்து போன காரணத்தினால்தான் சரண்டர் செய்யப்படவில்லை. தவறாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது தவறு.

திரு. ஏ. ரகுமான்கன்: ஆன் எ பாயிண்ட் ஆப் எக்ஸ்பிளனேஷன். . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: என்ன எக்ஸ்பிளனேஷன்?

திரு ஏ. ரகுமான்கான்: அமைச்சர் அவர்கள் தவறான . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேசிய உறுப்பினர் சபையில் இருக்கிறார். நீங்கள் அவருக்குப் பதில் சொல்வது தப்பு.



1978 மார்ச் 7]

திரு. ஏ. ரகுமான்கான்: என்ன தப்பு? அவர் கேட்ட கேள்விக்கு அமைச்சர் பதில் சொல்லியிருக்கிறார். அதைப்பற்றித் திருப்பி விளக்கம் சொல்வதற்கு எனக்கு உரிமை உண்டு.

It is in the discretlon of the Hon. Minister to refuse to answer. But as a Member I am entitled to ask for an explanation from the Hon. Minister. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எந்த ரூலின்கீழ் இப்போது நீங்கள் எக்ஸ்பிளனேஷன் கேட்கிறீர்கள்? நீங்கள் இப்போது உட்காருங்கள்.

திரு. ஏ. ரகுமான்கான்: உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொல்லிய விளக்கத்தின்மீது நான் எக்ஸ்பிளனேஷன் கேட்கிறேன். அப்படிக் கேட்க எனக்கு உரிமை இருக்கிறது. இல்லை என்று சொல்கிறீர்களா? இல்லை என்று சொல்லுங்கள் உட்காருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டசபையிலே ரூலை மட்டும் வைத்துக்கொண்டு பேசக் கூடாது. நடைமுறைகளை வைத்துக் கொண்டும் மரபுகளை வைத்துக் கொண்டும் பேச வேண்டும்.

திரு ஏ. ரகுமான்கான்: என்ன மரபு சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எந்த உறுப்பினர் கேள்வி கேட்டாரோ, அந்த உறுப்பினர் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று சொல்லிவிட்டுக் கேள்வி கேட்டார். பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டவுடன் பேச அனுமதித்தேன். அவர் என்ன என்று பாயிண்ட் ஆப் ஆர்டரில் சொல்லுகிறார் என்பதைக் கேட்டுவிட்டுத் தானே நான் பதில் சொல்ல முடியும். நீங்கள் எக்ஸ்பிளனேஷன் என்று சொல்லிவிட்டு எழுந்தீர்கள். அதனால்தான் உட்காருங்கள் என்று சொன்னேன்.

திரு. எஸ். கணேசன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய நேர்முக உதவியாளராக அவர் இருக்கின்றார் என்ற முறையிலே நான் இந்தக் குற்றச்சாட்டைச் சொன்னேன். அந்த அமைச்சர் இந்த அவையிலே இருக்கிறார். எனக்கு பதிலளிக்கின்ற வகையிலே, அந்தக் குற்றச்சாட்டிற்குப்

பதில் அளிக்கின்ற வகையிலே ஆளுங்கட்சி உறுப்பினர் அவர்கள் பதில் சொன்னார்கள். அதை நீங்கள் அனுமதித்திருக்கிறீர்கள். அமைச்சர் அவர்கள் பதில் கூறியபிறகு, என்னுடைய கட்சியைச் சார்ந்த ஒரு உறுப்பினர் எழுந்து விளக்கம் கேட்பதில் எந்தத் தவறும் இருக்க முடியாது என்று கருதுகிறேன்.

**திரு ஆ. நடராசன்:** ஆளும் கட்சியைச் சேர்ந்தவரை மட்டும் நீங்கள் பேச அனுமதிக்கலாமா?

(இதுசமயம் தி.மு.கவைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து உட்காருங்கள். அவர் என்ன பேசினார் என்பது எனக்குத் தெரியும். என்ன பேசினார் என்பதைக் கேட்டபிறகுதான், நான் ரூலிங் கொடுக்க முடியும் என்று ஏற்கனவே சொன்னேன். அவர் பாயின்ட் ஆப் ஆர்டர் ரெயிஸ் பண்ணினார். நீங்கள் எக்ஸ்பிளனேஷன் என்று சொன்னீர்கள். இப்போது எக்ஸ்பிளனேஷன் சொல்ல முடியாது.

**திரு. ஏ. ரகுமான்கான் :** எந்த விதியிலும் அம்மாதிரி கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எனக்கு விதிகள் தெரியும். உட்காருங்கள். நீங்கள் எந்த விதியின்கீழ் பேச உரிமை கேட்கிறீர்கள்?

**திரு ஏ. ரகுமான்கான்:** ஆன் எ பாயின்ட் ஆப் எக்ஸ்பிளனேஷன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதைத்தான் நான் சொன்னேன். எக்ஸ்பிளனேஷன் இப்போது கேட்க முடியாது. நீங்கள் உட்காருங்கள். மரபை ஒட்டி, சந்தர்ப்ப சூழ்நிலையைப் பொறுத்து, எனக்கு ஒரு உறுப்பினரைப் பேச அனுமதிப்பதற்கும், அனுமதிக்காமல் இருப்பதற்கும் உரிமை இருக்கிறது. அப்படித்தான் சொல்லவேண்டும், இப்படித்தான் சொல்லவேண்டும் என்று என்னை கட்டுப்படுத்த முடியாது.





(திரு. எஸ். ஆர். இராதா எழுந்திருந்தார்)

நீங்களும் உட்காருங்கள். நான் இப்போது தீர்ப்பு கூறுகிறேன். திரு. பாண்டியன் அவர்கள் வைத்திருந்த பாலை தவறாக உபயோகப்படுத்தினார் என்ற அந்த வாக்கியங்களை சபைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன். *

**திரு. எச். ஜி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திராவிட இயக்கத்தின் பேறிஞரும், புரட்சிக் கவிஞருமான அண்ணா, பாரதிதாசன் விழாக்களை அரசு விழாக்களாக ஆக்கியுள்ளதற்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் அந்தத் தமிழ்ச் சான்றோர்களின் இலக்கிய எழுத்துப் படைப்புகள் மக்களுக்குக் கிடைக்கவில்லை. சாதி மத பேதமற்ற பகுத்தறிவு சமுதாயம் அமைப்பதைக் கொள்கையாகக் கொண்டுள்ள நமது அரசு அமைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, இவர்களின் எழுத்துக்களை, எளிதாக மக்களுக்குக் கிடைக்கும்படி செய்தால், மக்களின் மனம் மாற்றம் ஏற்பட்டு சமுதாய மறுமலர்ச்சி ஏற்படும்.

இவர்களுடைய இலக்கிய படைப்புகள் சரிவர வெளிவருவதில்லை. வெளிவருவனவும் மக்களுக்குப் போய்ச் சேரும் வகையில் எளிய விலைக்குக் கிடைப்பதில்லை. எனவே, பேறிஞர் அண்ணா, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகியோரது இலக்கிய படைப்புகளை அரசுடைமை ஆக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தீண்டாமை ஒழிப்புத் திட்டத்தைப் பற்றிய இசை மற்றும் நாடக நிகழ்ச்சிகளை மாவட்டத் தலைநகர்களில் நடத்தத் திட்டமிட்டுள்ளதைப் பாராட்டுகிறேன். அந்த நாடகங்களில் தீண்டாமை ஒழிப்பு கொள்கை கொண்ட பாரதிதாசன், அண்ணா அவர்களின் நாடகங்களையும் இந்த நாடக நிகழ்ச்சிகளோடு சேர்க்க

---

*இதே பொருள் குறித்து உரிமைப் பிரச்சினை எழுப்பப்பட்டிருப்பதால், பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெறவில்லை.

பணிவுடன் வேண்டுகிறேன். அண்ணா அவர்கள் பேச்சுக்களையும், எழுத்துக்களையும் நாடக மூலமாகத் தந்தால் நம்முடைய மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்குப் புரியும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பனைக் கலையில் சான்றிதழ் பயிற்சி படிப்புத் திட்டத்தை ஏற்படுத்தி அக்கலையை ஊக்கப்படுத்துகின்ற முயற்சிகளைப் பாராட்டுகின்றேன்.

படச்சுருள் காப்பகம் ஏற்படுத்தி சமுதாய மறுமலர்ச்சி ஊட்டும் பழைய திரைப்படங்களைப் பாதுகாக்க ரூ. 140 இலட்சம் ஒதுக்கியுள்ளதைப் பாராட்டுகிறேன். பழைய திரைப்படங்கள் பாதுகாக்கப்படுவது நம் சந்ததியர்கள், வருங்காலச் சந்ததியர்கள் அதைப் பார்ப்பதற்கு ஏற்றதொரு திட்டமாகும். முன்பு எப்படி எல்லாம் நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ள அது ஏற்றதொரு திட்டமாகும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மத்திய பிரதேசத்திலுள்ள கஜோராஹோ என்ற இடம் சுற்றுலாத்துறையின் தொடர்பினால் அழகுபுரியாக இன்று அமைக்கப்பட்டிருக்கிறது; அதன் மூலம் ஆண்டு ஒன்றுக்கு 60 லட்சம் ரூபாய் வருமானம் வருகிறது என்று குறிப்பேட்டில் கூறப்பட்டிருக்கிறது. அதைப்போலவே தர்மபுரி மாவட்டம், ஹரூர் தாலுகாவிலுள்ள தீர்த்தமலையில் ஒரு நீர்வீழ்ச்சி இருக்கிறது; நான் பல இடங்களில், பல மாவட்டங்களில், பல மாநிலங்களில் சுற்றியிருக்கிறேன். அது போன்ற ஒரு நீர்வீழ்ச்சியை இன்று வரை பார்த்தது இல்லை. நான் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது-மத்திய பிரதேசத்திலுள்ள கஜோராஹோவைப்போல் தீர்த்தமலை நீர்வீழ்ச்சியை நல்ல முறையில் பயன்படுத்தி, வெளிநாட்டுக்காரர்களும் வருவதற்கான ஏற்பாடுகளுடன் அதனைச் சுற்றுலாத்துறை ஏற்றுக் கொண்டால் வருஷத்திற்கு 20 லட்சம் ரூபாய் வருமானம் வரும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு வருகிற நேரத்தில் அவர்களை அந்த இடத்திற்கு அழைத்துச்சென்று காண்பிக்க இருக்கிறேன் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



தருமபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரி அணைப் பகுதியைச் சுற்றுலா மையமாக அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சாத்தனூர், மைசூர் பிருந்தாவனம் பார்க்கைப் போல் கிருஷ்ணகிரி அணைப் பகுதியிலும் பார்க்கை விரிவுபடுத்த சுற்றுலாத்துறை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கு ஒரு சுற்றுலா மாளிகை அமைத்திட வேண்டும். அப்படி அமைப்பதன் மூலம் வெளி நாடுகளிலிருந்தும், வெளி மாநிலங்களில் இருந்தும் அங்கு வந்து அதனைப் பார்ப்பதற்கு நல்லதொரு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்தில் ஹொகனேகல் நீர்வீழ்ச்சி இருக்கிறது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு அங்கு நல்லதொரு சூழ்நிலை அமைந்திருக்கிறது. அங்கு சுற்றுலாத் துறையின் சார்பில் ஏற்கனவே ஒரு பங்களா இருக்கிறது. ஆனால் ஏழை எளியவர்கள் வந்து தங்கி பார்க்க இன்னும் குறைவான கட்டணத்தில் பல கட்டடங்களைக் கட்டித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் நகரம் பல கோயில்கள் நிறைந்த நகரம். தினசரி ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். ஆண்டு தோறும் 'மகம்' என்ற விழாவும், 12 ஆண்டுக்கு ஒரு முறை மாசி மகப் பெருவிழாவும் வருகிறது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் மாசி மகப் பெருவிழா வருவதால் அங்கு சுற்றுலா விடுதி ஏற்படுத்தி பயணிகளைக் கவருகிற வகையில் சுற்றுலாத்துறை செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் மறுபடியும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். தருமபுரி மாவட்டம் தீர்த்தமலைப் பகுதியை அமைச்சர் அவர்கள் சுற்றுலாப் பகுதியாக அமைத்துத் தருவதன் மூலம் கண்டிப்பாக 20 லட்சம் ரூபாய் வருமானம் வரும் என்று தெரிவித்து செய்தி சுற்றுலா மானியத்தின் பேரில் பேச வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

[பிற்பகல் 1-10]

* திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் லைவர் அவர்களே, இன்றைய தினம், செய்தி, சுற்றுலா மற்றும் திரைப்படம் அது சம்பந்தமான மானியக் கோரிக்கைகளின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்வதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அந்த வகையிலே இந்தத் துறையை ஏற்று இருக்கிற அமைச்சர் அவர்கள் இந்தத் துறையிலே ஓரளவிற்கு நல்ல அனுபவம் பெற்றிருக்கிறார் என்று நம்பலாம். அதுமட்டுமல்ல, இந்தத் துறையைத் திறம்பட நன்றாக நடத்துவதற்கான ஆற்றலும் அவருக்கு உண்டு என்ற நிலைமையிலே, கடந்த காலத்திலே பல்வேறு குறைகள் இந்தத் துறையிலே ஏற்பட்டதன் காரணமாக ஆட்சியில் உள்ளவர்களுக்கு எவ்வளவு அவப்பெயர் ஏற்பட்டது என்பதையெல்லாம் அவர்கள் நன்றாக அறிந்தவர்கள் என்ற முறையிலே தொடர்ந்து அதுபோன்று ஏற்படாதவண்ணம் அவர் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காரணம், தி.மு.க. ஆட்சியிலே மாவட்டங்களிலே பணிபுரிந்த செய்தித் தொடர்பு அதிகாரிகள் மாவட்டச் செயலாளர்கள் போன்று அரசு அலுவலகங்களுடைய தொலைபேசிகளைப் பயன்படுத்தி ஆளுங்கட்சியினுடைய பத்திரிகைக்கு லைட்னிங் கால்களைப் போட்டு செய்தி அளித்தார்கள் என்பதை நாடு நன்றாக அறியும். அதுபோல் இல்லாமல் பாரபட்சமற்ற முறையிலே அரசாங்கத்தினுடைய நல்ல கொள்கைகளையும் இலட்சியங்களையும் காந்தியடிகள் கண்ட கனவாகிய தீண்டாமை ஒழிப்பு பற்றியும், மதுவிலக்கு பற்றியும் பிரச்சாரம் நல்ல முறையிலே செய்வதற்கு செய்தித் துறை பாடுபட வேண்டு மென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராம மக்கள் மத்தியிலே இந்த சட்டசபை எப்படி நடக்கிறது என்று தெரியாமல் இருக்கிறது. ஆகவே இந்த சட்டசபையின் நடவடிக்கைகளை எங்கே எப்படி யார் யார் இருக்கிறார்கள், என்ன பேசுகிறார்கள் என்பதைப் பொதுமக்கள்



கிராமங்களிலே உள்ள மக்கள் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் ஒரு திரைப்படமாக எடுத்து மக்களுக்கு காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமேஸ்வரத்திற்கு வட நாட்டிலிருந்து ஏராளமான பாத்ரீகர்கள் வருகிறார்கள், அவர்களுக்கு எந்தவிதமான சலுகையோ, வசதியோ அங்கே அளிக்கப்படாதது குறையாக இருக்கிறது. அவர்கள் வெளியிலிருந்து இராமேஸ்வரத்தில் உள்ள ராமபிரானை வணங்குவதற்காக வருகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய சலுகைகளையும் வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்பது நம்முடைய அரசாங்கத்தின் கடமை, ஆகவே அதை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய பெரும் தலைவர் திரு. காமராஜ் அவர்களுடைய நினைவாலயம் இன்று கேட்பாரற்ற நிலையிலே மோசமான நிலைமையிலே பராமரிக்கப்படுகிறது என்பதைப் பார்க்கும்போது மிகவும் வேதனையாக இருக்கிறது. அதை நல்லமுறையிலே பாராமரிப்பதற்கும் சீர்திருத்தம் செய்வதற்கும் அதோடு திருமலைப் பிள்ளை ரோடிலுள்ள அவர்களுடைய வீட்டை அரசாங்கமே எடுத்து அதை நினைவாலயமாக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்த திருமயத்தைச் சேர்ந்த பகுதியில் உள்ள ஊமைத்துரை கோட்டை, சத்தியமூர்த்தி அவர்கள் தங்கி இருந்த வீடு, சத்தியமூர்த்தி கோயில் எல்லாம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடங் களாக இருக்கின்றன. ஆகவே அந்தப் பகுதியிலே அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய வகையிலே ஒரு சுற்றுலா இல்லத்தைக் கட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திருக்களம்பூர் என்ற ஊரிலே தண்ணீர் இல்லாமலே வாழை மரங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன கூரையிலே. அது ஏதோ தெய்வ சக்தி என்று சொல்கிறார்கள். ஆனால் அந்த வாழைப் பழத்தை யாராவது சாப்பிட்டால் அவர்களுக்கு வெண்குஷ்டம் வந்துவிடுகிறதாம். ஆகவே சாமிக்கு அபிஷேகம் செய்துவிட்டுச் சாப்பிட்டால்தான் நல்லமுறையிலே இருக்கிறது.

[திரு. நா. சுந்தரராஜ்] [1978 மார்ச் 7

அங்கேயுள்ள எலிகள் வெள்ளவெளேரென்று இருக்கும் நிலைமை இருக்கிறது, அங்கேயும் ஒரு சுற்றுலா இல்லத்தை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டையிலே ஒரு மியூசியம் இருக்கிறது, அங்கே ஏராளமான பொருட்கள் இருந்தாலும்கூட வசதியில்லாத இடத்தில் இருக்கிறது, ஆகவே அதை வேறு ஒரு இடத்திற்கு மாற்றி பெரிய அளவிலே அதை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டையிலே அமரர் சத்தியமூர்த்தியினுடைய சிலையை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர் இந்த நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர், அதிலே தீவிரப் பங்கு ஆற்றியவர், இந்த நாட்டிலே பெரிய தீர்க்கதரிசியாக இருந்தவர் என்ற முறையிலே அவருடைய சிலையை அங்கே வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நாட்டிலே மறுமலர்ச்சி வேண்டும், மறுமலர்ச்சி வரவேண்டும் என்று சொல்லி மறுமலர்ச்சி, மறுமலர்ச்சி என்று சொல்லி கூக்குரலிட்ட பெரியவர்கள் இன்று மத்திய ஆட்சியில் இருக்கிற நிலைமையிலே சினிமாவிலே முத்தக்காட்சி வருகிறது, மறுமலர்ச்சியின் ஆரம்பம்தான் முத்தக்காட்சியா? திரைப்படங்களிலே முத்தக்காட்சி இடம் பெறக்கூடாது என்ற முறையிலே இந்த அரசு எச்சரிக்கை செய்து திரைப்படங்களிலே முத்தக்காட்சிகள் இடம்பெறாத நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆபாசப் படங்களை ஒழிப்பது என்ற முறையிலே எடுத்துக் கொண்டால் சென்னை நகரத்திலே நியூ எல்பின்ஸ்டன் தியேட்டரில் பெரிய போர்டு வைத்திருக்கிறார்கள். அதைப் பார்க்கும்பொழுது அந்தப் படத்தின் கதையைப் பற்றிச் சொல்ல முடியும், அவ்வளவு ஆபாசமாக அந்தத் தியேட்டர் முன்னால் வைத்திருக்கிறார்கள். நிச்சயமாக அதைப் பார்க்கின்ற எந்தப் பெண்ணோ அல்லது சிறு குழந்தைகளோ பெரிதும் அருவருக்கக் கூடிய முறையிலே அது இருக்கிறது. அதை உடனடியாக அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1978 மார்ச் 7] [திரு. நா. சுந்தரராஜ்]

சென்னை நகரில் சினிமா ஸ்டுடியோக்களில் பணியாற்றும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் முதலாளிகளுக்கும் அவர்களுக்கும் ஏகப்பட்ட தகராறுகள் இருப்பதாக நான் அறிகிறேன். அதைத் தீர்ப்பதற்கு அமைச்சரவர்கள் வேகமாக நடவடிக்கைகள் எடுத்துக் காரியமாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சேலம் வெற்றி வேந்தன் நாடகக் கலைக் குழு தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம், மதுவிலக்குப் பிரச்சாரம் ஆகியவற்றைப்பற்றி நடத்திக் கொண்டிருக்கிறது. இப்பொழுது அந்தக் குழுவை நீக்கிவிட்டு வேறொரு நாடகக் குழுவிற்கு அனுமதி கொடுத்திருப்பதாகத் தெரிகிறது. உடனடியாக அமைச்சரவர்கள், வெற்றி வேந்தன் நாடகக் கலைக் குழுவிற்கு அனுமதி வழங்கி பிரச்சாரம் செய்ய அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரிகை நிருபர்களுக்கு மாநிலம் முழுவதும் பஸ்ஸிலே செல்வதற்கான பாஸ் வழங்க வேண்டுமென்று சர்வ கட்சியினரும் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அது ஏற்கப்பட்டிருக்கிறதா என்பது தெரியவில்லை. இல்லையென்றால், அதை உடனடியாக ஏற்றுக்கொண்டு தமிழ்நாடு பூராவும் செல்வதற்கான அனுமதியை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சிறிய பத்திரிகைகளுக்கு விளம்பரங்கள் கொடுத்து அவற்றை ஊக்குவிக்க வேண்டும். கிராமப்புறங்களில் உள்ள ஏழை மக்களின் வாழ்க்கையை உயர்த்த வேண்டுமென்று அரசுக்கு எண்ணம் இருக்கிறது. இப்படிப்பட்ட நேரத்தில் நலிந்த சிறிய பத்திரிகைகளை ஊக்குவிக்க வேண்டுமென்றால் அவர்களை விளம்பரத்தின் மூலம்தான் ஊக்குவிக்க முடியும். பல இலட்சக் கணக்கான ரூபாய்களைப் பெரிய பத்திரிகைகளுக்குக் கொடுப்பதன் மூலம் மேலும் மேலும் பணக்காரர்கள் பணக்காரர்கள் ஆகத்தான் வழி வகுக்கும். அதனால் ஏழைகளை வாழவைக்கும் நிலைமை இல்லை.

ஆகவே, சமதர்ம சமுதாயம் அமைய வேண்டுமென்றால், ஏழைப் பத்திரிகைகளுக்கு, சாதாரண சிறிய பத்திரிகைகளுக்கு அரசாங்கம் விளம்பரம் கொடுக்க வேண்டும். குறிப்பாக

[திரு. நா. சுந்தரராஜ்] [1978 மார்ச் 7

நவசக்தி பத்திரிகை நலிந்து கொண்டிருக்கிற பத்திரிகை அந்தப் பத்திரிகைக்கு பெருவாரியான அளவில் விளம்பரங்களைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், பத்திரிகையாளர்களுக்கு பீட்டர்ஸ் காலனியில் வீடுகள் ஒதுக்கப்பட்டு வந்தன, ஆனால் இப்பொழுது கே. கே. நகரில் ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. பாரபட்சம் இல்லாமல், பெங்களூர் போன்ற நகரங்களில் ஜர்னலிஸ்ட் காலனி என்று இருப்பதைப் போல் பீட்டர்ஸ் காலனியில் தனியாக ஒதுக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது)

திரு. என். வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, செய்தி-சுற்றுலாத் துறை என்பது நவீன உலகத்திலுள்ள மிக முக்கியமான துறையாகும். அதற்குக் குறைவான நிதி ஒதுக்கியிருந்தாலும் அது கூடுதலான பணியாற்ற வேண்டிய காலத்தில் இருக்கிறது. இன்றைக்கு அகில இந்திய வானொலித் துறை நம்முடைய ஆதிக்கத்திலே இல்லாவிட்டாலும் நம்முடைய செய்தி-சுற்றுலாத் துறை அல்லது மாநில அரசு ஒரு முக்கியமான கருத்தை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வற்புறுத்த விரும்புகிறேன். இன்றைக்கு நம் நாட்டில் பல கருத்துக்கள் மோதிக் கொண்டிருக்கும் காலம்.

அதுமட்டுமல்ல. 20, 30 ஆண்டுக் கால வளர்ச்சியில் மாநிலங்களில் பல்வேறு ஆட்சிகள் உருவாகியிருக்கும் காலம். ஒவ்வொரு மாநில அரசுக்கும் வெவ்வேறு விதமான கருத்துக்கள் இருக்கும்படியான காலம். வானொலித் துறை இன்றைக்கு ஒரே கருத்தைப் பிரதிபலிக்கும் நிலையில்தான் இருக்கிறது என்பதுதான் எங்களைப் போன்ற கட்சிக்காரர்கள் அபிப்பிராயம். மொழிப் பிரச்சினையில் மத்திய சர்க்காருக்கும், மாநில சர்க்காருக்கும் வேறு கருத்துக்கள் இருக்கின்றன.

இதைப் போலவே வேறு சில துறைகளிலேயும் கருத்து வித்தியாசம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஆஸ்திகம், நாத்திகம் என்ற மிக முக்கியமான பிரச்சினையில் கருத்துக்கள் மக்கள் மத்தியில் முன்வந்து



1978 மார்ச் 7] [திரு. என். வரதராஜன்]

கொண்டிருக்கும் காலம். ஆனால் அகில இந்திய வானொலி ஓயாமல் 24 மணி நேரமும் ஆஸ்திகக் கருத்துக்களைப் பரப்பும் துறையாகத்தான் இருக்கிறது.

ஆகவே, நம்முடைய மாநில செய்தி-சுற்றுலாத் துறை இது சம்பந்தமாக தன்னுடைய ஆழமான கருத்துக்களைச் சொல்ல வேண்டும். மாநிலத்தில் உள்ள நிலைமைகளைப் பரப்பும் செய்திகளில் நம்முடைய அரசின் ஆலோசனையை அவர்கள் பெற வேண்டும் அல்லது இந்தப் பேரவையின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அழுத்தம் திருத்தமாகச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நான் சொல்ல வேண்டியது, நாடகக் கலை நலிந்து கொண்டு வருகிறது. இவைகளுக்குப் புத்துணர்ச்சி ஊட்டுகின்ற வகையில் ஏதாவது முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் பலயிடங்களில் அறிந்தவரையிலும் ஏற்கனவே விளம்பரமாகியிருக்கும் நாடகக் கதைகளைக்கூட எழுதிக் கொடுத்தால்தான் லைசென்ஸ் கொடுக்கிறார்கள். இதனால் நாடகம் நடத்துகின்றவர்களுக்குப் பெரிய தொல்லை ஏற்படுகிறது. இராஜா தேசிங்கு கட்டபொம்மன் போன்ற கதைகளைக் கூட மீண்டும் எழுதிக் கொடுங்கள் என்று மாவட்டந்தோறும் இருக்கின்ற அதிகாரிகள் நிர்ப்பந்திருக்கிறார்கள். நாடகங்கள் நடத்துவதில் ஏதாவது தவறுகள் இருந்தால் அவைகளைக் குறிப்பாக போலீஸ் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள் கண்காணித்து அவைகளைக் கட்டுப்படுத்த முயற்சிக்க வேண்டுமே தவிர, இம்மாதிரி முக்கியமான நாடகங்களைக்கூட எழுதிக்கொடுக்க வேண்டுமென்று கேட்கின்ற முயற்சியைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஓய்வு பெற்றுள்ள நாடக கலைஞர்களுக்கு உதவிகள் செய்ய வேண்டுகிறேன். நாடகக் கலைக்கு அதிக சலுகைகள்வழங்கவேண்டுகிறேன்.

[பிற்பகல் 1.20]

மதுரை மாவட்டத்தில் இருக்கும்படியான பழனி நகரம் பெரிய சுற்றுலா நகரத்திற்குரிய தகுதிகளைப் பெற்றிருக்கிறது. ஆகவே, அதற்குரிய நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்து அதைச் சீரிய சுற்றுலா நகரமாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். வரதராஜன்] [1978 மார்ச் 7

நாம், அரசின் சார்பாக தமிழரசு என்ற பத்திரிகையை
நடத்துகிறோம். அது அரசு கெசட்டாக வெளிவராமல்
பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
கருத்துக்களைக் கண்டு பயப்படலாகாது என்று நான் தெரிவித்
துக்கொள்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள்,
ஆளுங்கட்சித் தலைவர்கள், மற்ற எதிர்க் கட்சித் தலைவர்கள்,
பொதுவான தலைவர்கள் இவர்கள் அனைவரும் எழுதப்படக்
கூடிய பொதுவான கட்டுரைகள் அதில் இடம் பெறவேண்டும்.
பொதுவான கட்டுரைகள் என்று சொல்லும்போது, நான் சில
வற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நாஸ்திகம், ஆஸ்திகம்
பற்றிய கட்டுரைகள், தீண்டாமை, நாட்டின் முன்னேற்றம் இந்த
வகையிலே கட்டுரைகள் இடம் பெறுகின்ற வகையிலே நாம்
பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மாதம் 11-ந் தேதி, குன்றக்குடி அடிகளார் தலைமையிலே,
மதுரையில் பிள்ளையார் கோவிலிலே ஒரு நிகழ்ச்சி நடை
பெறுகிறது, அதற்குக் கொடுத்து இருக்கும் தலைப்பு, நாட்டு
வறுமையை அகற்றுவதற்கு, கீதை வழியில் செல்ல வேண்டுமா,
மார்க்ஸ் வழியில் செல்ல வேண்டுமா என்று பெரிய விவாதம்.
பட்டிமன்றமாக நடைபெற இருக்கிறது. நாம் பொதுக்
கருத்துக்களை மோத விடுவதிலே சங்கடப்படலாகாது. அது
நல்லது.

அதே போல், செய்தித் துறையின் படங்களில் கூட, தமிழகத்
தின் பெரும் நிகழ்ச்சிகளை படமாக்க வேண்டும். பல கட்சி
மாநாடுகள் நடைபெறுகின்றன. அது ஆளுங்கட்சி மாநாடாக
இருந்தாலும், திராவிட முன்னேற்றக் கழக மாநாடாக இருந்
தாலும், காங்கிரஸ் கட்சி மாநாடாக இருந்தாலும், ஜனதா கட்சி
மாநாடாக இருந்தாலும், மார்க்சிஸ்ட் கட்சி மாநாடாக இருந்
தாலும் எந்தக் கட்சி மாநாடாக இருந்தாலும், இந்தக் கட்சி,
அந்தக் கட்சி என்று பேதம் பார்க்காமல், படம் பிடித்துக் காட்ட
வேண்டும். அப்படிப்பட்ட முறையிலும் நம்முடைய செய்தித்
துறை வளர்ச்சி அடைய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்
கிறேன்.



1978 மார்ச் 7] [திரு. என். வரதராஜன்]

அதுபோல்தான், நிருபர்களுக்கு இன்றைக்கு இருக்கிற பலதரப்பட்ட சங்கடங்களை நாம் கவனிக்க வேண்டும். ஏதோ மாற்றாந்தாய் போல் இடம் பிடிக்கவும், அல்லது, மாவட்டங்களில் தலைவர்கள் செல்கின்றபொழுது, அவர்களது கார்களிலே தொத்திக் கொண்டு போவது போன்ற நிலை இப்பொழுது இருக்கிறது. நான் கூடப் பார்த்திருக்கிறேன். மாவட்டங்களிலே, நிருபர்கள் கலெக்டர்களை கெஞ்சிக் கொண்டிருக்கிறார்கள், எங்களுக்கு ஏதாவது ஒரு ஜீப் பார்த்துத் தயார் பண்ணிக் கொடுங்கள் என்று. செய்திகளைப் பரப்புவதிலே நிருபர்களுக்கு முக்கியமான பங்கு இருக்கிறது. ஏற்கனவே, சில தவறுகள் நடந்திருக்கின்றன. அதைத் தவிர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது, சினிமாக்களிலே, இருக்கும்படியான உழைக்கும் மக்களைப் பற்றி ஆழ்ந்த அக்கறை தேவைப்படுகிறது. சென்னையிலே இருக்கிற கோல்டன் ஸ்டுடியோவிலே 500 பேர் வேலையில்லாமல் பல ஆண்டுகளாக இருக்கிறார்கள். உடனடியாக, நீங்கள் என்ன செய்ய முடியும் என்பதல்ல கேள்வி. அந்தத் துறையிலே கவனம் செலுத்துகிறோமா என்பதுதான் என்னுடைய கேள்வி. அவர்கள் வேண்டுகோளைக் கவனிக்க வேண்டும்.

அதேபோல், திரை அரங்குகளிலே இருக்கும் ஊழியர்களுக்குக் குறைந்தபட்சச் சம்பளம் வழங்கும் முறையை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். இப்பொழுது, அவர்கள், எப்படி வாழ்கிறார்கள். கழிவு நீர்—சாக்கடைக்குப் பக்கத்தில்தான் அவர்கள் வாழ்கிறார்கள். ரூ. 40, ரூ. 50-க்கு மேல் அவர்களுக்கு மாதச் சம்பளம் கிடையாது. இது மிகவும் முக்கியமான துறை. நமது முதலமைச்சரவர்கள் உட்பட செய்தி-சுற்றுலாத் துறை அமைச்சருக்கு அதிகமான விவரங்கள் தெரிந்திருக்கும். ஆகவே, அவர்கள் பேரில் அதிகமான அக்கறை எடுக்க நாம் முயற்சிக்க வேண்டும்.

அடுத்தாற்போல், ஒன்றே ஒன்று தான் சொல்ல வேண்டியது. விளம்பரங்களைப் பற்றி. அதை அலட்சியப்படுத்த வேண்டாம். ஏற்கனவே, விளம்பரத் துறையை வைத்துக் கொண்டு, மத்தியில் உள்ளவர்கள் என்னென்ன செய்தார்கள்? ரூ. 80 கோடிக்கு வசூல் செய்து, விளம்பரமே செய்யவில்லையென்ற மோசடி

[திரு. என். வரதராஜன்] [1978 மார்ச் 7

எல்லாம் நாட்டிலே நடந்து இருக்கிறது. ஆகவே, எந்தக் கட்சியைச் சார்ந்தது என்று பாராமல், எல்லாக் கட்சியைச் சேர்ந்த பத்திரிகைகளுக்கும் அரசு விளம்பரம் கொடுக்க முன்வர வேண்டும்.

அதேபோல், கருத்துப் படங்கள் தயாரிக்கப்பட வேண்டும். தீண்டாமையைப் பற்றி, கேள்வி நேரத்தில் அதன் கொடுமை காண முடிந்தது. ஆனால், சொல்லத் தகாத முறையில் வெளியே நடக்கின்ற அந்தச் சண்டாளத்தனத்தை எதிர்த்துத்தான் தீர வேண்டும். அவைகளை எல்லாவிதத்திலும் எதிர்த்துத்தான் தீர வேண்டும். அவைகளை எதிர்த்துக் குறிப்பிட்ட செய்திகளின் மூலமாகவும், படங்கள் மூலமாகவும், நம்முடைய கிராமப் புறங்களில் பரப்ப வேண்டும். அவைகளையெல்லாம் ஒழித்தாக வேண்டும். இதிலே கருத்து வித்தியாசங்கள் ஏற்பட இடமிருக்காது. ஆகவே, அப்படிப்பட்ட கருத்துப்படங்களை இந்தத் துறையே தயாரிக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* **திரு. அ. சுவாமிதாஸ் :** தலைவர் அவர்களே, செய்தி-சுற்றுலா திரைப்படங்கள் ஆகிய துறைகளின் மானியத்தின் மீது ஒரு சில வார்த்தைகளை இந்த நேரத்திலே கூற விரும்புகிறேன்.

கலைவாணர் அரங்கத்தைப் பற்றி இங்கே குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது. புனரமைப்பு செய்யப்பட்டு பொலிவோடு விளங்குவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். முன்னால் இருந்த கட்டடத்தை அப்படியே வைத்துக் கொண்டு, வேறு புதிய கட்டடத்தை கட்டியிருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். இதிலே பல இழப்புகள் ஏற்பட்டன. அதைப்போலவே இனிமேல் புனரமைப்பு செய்யும்போது இந்தக் கருத்தை மனதிலே வைத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரசு தமிழரசு இதழை தமிழரசு அச்சகத்திலேயே வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. அது வரவேற்கத் தக்க ஒன்று. இந்த பத்திரிகையில் அரசைச் சார்ந்த விளம்பரங்கள் மிகுதியாக தரப்பட வேண்டும். குறிப்பாக பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுகளைப் பற்றியும், தேர்ந்தெடுத்தவர்கள் முடிவுகளைப்



1978 மார்ச் 7] [திரு. அ. சுவாமிதாஸ்]

பற்றியும் விளம்பரங்கள் செய்தால் பத்திரிகைகளும் கூடுதலாக விற்பனையாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். எல்லோரும் விரும்பிப் படிப்பார்கள். வேலை வாய்ப்புத் தேடுபவர்களும், மற்றவர்களும் இந்த விளம்பரங்களை படிப்பதன் மூலம் பயனடைவார்கள் என்ற கருத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக பிற பத்திரிகைகளுக்குக் கொடுக்கப்படும் விளம்பரங்களை விட இந்தப் பத்திரிகைக்கு அதிகமாக, கொடுக்க வேண்டும். இதனால் பொருளும் மிச்சமாகிறது. அதோடு இந்தப் பத்திரிகையின் மதிப்பையும் உயர்த்துவதற்கு இது ஏதுவாக இருக்கும் என்ற கருத்தை சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பத்திரிகை நிருபர்களைப் பற்றி சொன்னார்கள். சென்னையில் உள்ள பத்திரிகை நிருபர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பல சலுகைகள், மாவட்டத்தில் உள்ள பத்திரிகை நிருபர்களுக்கு அளிக்கப்படவில்லை. அதுவும் மாவட்டங்களுக்கு அமைச்சர்கள் வரும்போது அவரைப் பின்தொடர்ந்து செய்திகளை சேகரிக்க எண்ணுகின்ற நிருபர்கள் வாகன வசதி இல்லாமல் மிகவும் திண்டாடிப் போகிறார்கள். மாவட்ட கலெக்டரையோ அல்லது மற்ற அதிகாரிகளையோ அணுக வேண்டிய கட்டாயத்திலே இருக்கிறார்கள். மேலும் செய்திகளை சேகரிப்பதற்காக அந்த மாவட்டத்தின் உள்ளே அரசு பேருந்துகளில் பயணம் செய்வதற்கு, பாஸ் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனாலே அரசுக்கு எந்தவிதமான சங்கடமும் இல்லை.

இப்போது திரையரங்குக் கழகம் செயல்பட்டு வருகிறது. உதவி தனியார், கிராமங்களில் திரை அரங்குகள் கட்டுவதற்கு [illegible] செய்வதாக அறிவிக்கப்பட்டிருக்கிற ஒரு கருத்து இருக்கிறது. ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். நகராட்சிகளிலும், பஞ்சாயத்துக்களிலும் எங்கெங்கே திரை அரங்குகளைக் கட்டினால் வருவாய் வரும் என்று பார்த்து அத்தகைய இடங்களில் திரை அரங்குகளைக் கட்டுவதற்கு ஊக்கம் அளிக்க வேண்டும். அந்த

பணிகளை பஞ்சாயத்துக்களே ஏன் நடத்தக் கூடாது? ஏன் திரை அரங்குகளை அமைக்கக் கூடாது? நல்ல வருவாய் உள்ள கிராம நகர பஞ்சாயத்துகளுக்கு இந்தப் பொறுப்பை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரையில், அமைச்சர் அவர்களுக்கு இந்தத் துறையை விரிவுபடுத்த, அழகுபடுத்த வேண்டும், அபிவிருத்திபடுத்த வேண்டும் என்ற கருத்து இருப்பதாக உணர்ந்து அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்தத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற பணம் போதாது. கோளத்திலே சுற்றுலா துறையிலே எடுத்துக் கொண்டால் அவர்கள் செய்கிற செலவைப் பார்த்தால், அந்த அளவுக்கு இங்கு செயல்படவில்லை. அங்கே கோவளம், ஒரு பெரிய டூரிஸ்ட் சென்டராக இருக்கிறது. அதை அப்படி அமைத்ததாலேயே வெளி நாட்டிலே இருந்து வருகிற அத்தனை பேர்களும் கோவளத்திற்குத்தான் செல்கிறார்களே தவிர, அருகில் உள்ள கன்னியாகுமரிக்கு வருவது இல்லை.

கோவளத்திலே தங்கிவிட்டு, ஒரு மணி நேரம், அல்லது இரண்டு மணி நேரம் தங்குவதற்காகத்தான் கன்னியாகுமரிக்கு வருகிறார்கள். எனவே கன்னியாகுமரியை ஒரு பெரிய டூரிஸ்ட் சென்டராக அமைக்க ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே முன்னே கேப் ஓட்டல் என்று இருந்தது. இப்போது சுற்றுலாத் துறை வந்த பிறகு செயல்படவில்லை. அங்கு ஒரேயடியாக அறைகளின் வாடகையைக் கூட்டிவிட்டார்கள். நல்ல சாப்பாடும் கிடையாது. ஒழுங்காகப் பராமரிப்பதும் கிடையாது. இதையும் அரசு கவனத்தில் கொண்டு, ஏழை எளியவர்கள், நடுத்தர அதிகாரிகள், கீழ் மட்டத்தில் பணியாற்றும் அரசாங்க குமாஸ்தாக்கள் போன்றவர்கள் தங்குவதற்கு வசதியை கொடுக்க, இந்த சுற்றுலாத் துறை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



[பிற்பகல் 1-30]

கன்னியாகுமரிக்கு தினசரி கிட்டத்தட்ட 100 பஸ்கள் வருகின்றன. கோவளத்தில் இருந்து கூட வருகிறது. அப்படி வருகிறவர்களுக்குப் போதிய தண்ணீர் வசதிகள் அங்கே இல்லை. சாப்பிடுவதற்கு வசதி இல்லை. ஆகவே, அங்கேயொரு ஜனதா ஓட்டல் சுற்றுலாத் துறை மூலம் நடத்தலாம். அது மக்களுக்குப் பயன்பெறத்தக்க வகையில் இருக்கும். அரசாங்கத்திற்கும் நல்ல வருவாய் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்த கன்னியாகுமரி கடலில் முன்னாலே ஒரு "பேத்திங் காட்." குளிக்குமிடம் இருந்தது. அது அழிந்து விட்டது. அந்தத் துறையைச் சேர்ந்தவர்களிடத்தில் விசாரித்ததில் 'அதைப் பெரிய துறையாகக் கட்ட வேண்டும் என்றும், ஆண்களுக்கு என்று ஒன்றும், பெண்களுக்கு ஒன்றும் தனித்தனியே குளிக்குமிடம் கட்ட வேண்டும் என்றும் சொன்னார்கள். கன்னியாகுமரியைப் பொறுத்தவரையில் மற்ற இடங்களில் குளிப்பதுபோல் கடலில் இறங்கி குளித்து விட முடியாது. ஆகவே, அங்கே ஒரு பேத்திங் காட் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே ஒரு ஸ்விம்மிங் பூல் இருக்கிறது. அதை விரிவுபடுத்தி, அக்குவாட்டிக் ஸ்விம்மிங் பூலாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அங்கே ஒரு மீன் காட்சி சாலையும் ஏற்படுத்தலாம். பலவிதமான மீன்கள் அங்கே கிடைக்கின்றன. ஆகவே, அங்கே கிடைக்கின்ற மீன்களை வைத்து ஒரு காட்சி சாலை அமைத்தால் அங்கு வந்து செல்கிற மக்கள் பார்த்து ரசிப்பதற்கு வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அங்கேயொரு மீன் காட்சி சாலை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி ஒரு சிறந்த இடம், சுற்றுலாப் பயணிகளுக்கு. அங்கே அழகான கோவில் இருக்கிறது, காலையில் சூரிய உதயத்தையும், மாலையில் சூரிய அஸ்தமனத்தையும் பார்க்க

மக்கள் ஆசைப்பட்டு அங்கே வருகிறார்கள். அங்கே தங்கிச் செல்லப் போதிய வசதி இல்லை. ஆகவே, அதை ஒரு டூரிஸ்ட் சென்டராக மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பெரும தலைவர் காமராஜர் இருந்தபோது, அவர் அப்பா கோதையாறு லோயர் கோதையாறு இரண்டையும் பார்வையிட்ட போது ஒரு கருத்தைச் சொன்னார்கள், அங்கேயிருக்கிற அணைக்கட்டுகளை எல்லாம் திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கும் அணைக்கட்டுப் பகுதிகளோடு சேர்த்து, போக்குவரத்து வசதி செய்து கொடுத்து, இடையில் தங்குவதற்கு மாளிகைகள் கட்டி வைத்தால், அந்தப் பாதையில் பயணம் செய்பவர்கள் பெருஞ்சாணி, பேச்சிப்பாறை, கோதையாறு, மணிமுத்தாறு, பாபநாசம், குத்தாலம் வழியில் இருக்கும் மலைகளின் அழகையும், அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிற காட்டு மிருகங்களையும் கண்டு ரசிக்க முடியும் என்று சொன்னார்கள். ஆகவே, அரசு இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதையெல்லாம் செய்வதற்கு அந்தத் துறைக்குப் பணம் போதாது. பணம் அதிகம் வேண்டும். இந்தத் துறை இவைகளை செய்தால் அதிக வருமானம் வரும் என்பதாலும், வெளி நாட்டில் இருந்து பயணிகள் இங்கே வருவதால் அந்நிய செலாவணி அதிகம் கிடைக்கும் என்பதாலும், இதற்கு அதிகமான நிதி ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டு, இந்தத் துறையை அந்த வகையில் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. சிவசாமி:** மாண்புமிகு தலைவரவர்களே, இன்றைக்கு இந்தத் துறைக்கு ரூ. 1 கோடி 22 இலட்சம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இந்தத் துறையானது நல்ல பிரகாசமாக எதிர் காலத்தில் நல்லபடியாக முன்னேற வேண்டும் என்று சொல்லிக் கொண்டு, இந்தத் துறையில்—சுற்றுலாத் துறை பெரும்பகுதி வசதிக்காரர்களுக்குத்தான் உபயோகப்படுகிறது; ஆகவே, சாதாரண மக்கள் அந்த சுற்றுலாத் துறை மூலமாக வெளியிடங்களுக்குச் சென்று, தங்கி, பலயிடங்களைச் சுற்றிப் பார்க்க சௌகரியமான வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



முகவை மாவட்டத்தில் மருதுபாண்டியர்களைத் தூக்கில் இட்ட இடம் மிகவும் முக்கியமான இடம். நெல்லை மாவட்டத்தில கட்டபொம்மனை தூக்கிலிட்ட இடம் முக்கியமான இடம். இப்படிப் பட்ட இடங்களை முக்கியமாக சுற்றுலாத் துறை மூலம் முன்னேற்றம் செய்ய எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. கிழக்குக் கடற்கரையை ஒட்டி, உப்பூர் பிள்ளையார் கோயில் இருக்கிறது. ஸ்ரீ இராமச்சந்திரன் இலங்கைக்குச் செல்லக்கூடிய நேரத்தில் அந்த பிள்ளையார் கோயிலுக்கு வந்து சாமி கும்பிட்டுச் சென்றார் என்பதாக சரித்திரம் இருக்கிறது. அத்தகையச் சிறப்பு வாய்ந்த அந்தக் கோயிலைப் பிரதானப்படுத்த வேண்டும். இப்போது அங்கே ஒரே ஒரு போர்டு மட்டும் இருக்கிறது. "ஸ்ரீ இராமச்சந்திர பிரபு இந்த பிள்ளையார் கோயிலில் சாமி கும்பிட்ட சிறப்பு பெற்றது. பொது மக்களும் ஆர்வத்தோடு வழிபட்டு, பயனடைய வேண்டும்" என்று போக்குவரத்துத்துறை போர்டில் எழுதி வைத்திருக்கிறார்கள். சுற்றுலாத் துறையில் மூலம் அதை நல்லபடியாக பிரபலப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல இளையான்குடியில் மாறநாயனார் கோவில் ஒன்று இருக்கிறது. அதுமட்டுமல்ல; விதைத்த விதை அரித்துவந்த நாற்றங்கால் இருக்கிறது; அவர்கள் குடியிருந்த வீடு இருக்கிறது. அந்த இடமெல்லாம் இப்போது கவனிப்பாரற்று இருக்கிறது. சுற்றுலாத் துறை அதைக் கவனித்து, மேம்பாடு செய்து, பிரதானப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தாசில்தார் அவர்களிடம் ரிப்போர்ட் கேட்டால் கூட அந்தப் பகுதியை குறிப்பாக எடுத்துச் சொல்வார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப்போன்று மிகவும் முக்கியமான இடங்களை எல்லாம் சுற்றுலாத் துறை பிரதானப்படுத்தி, சுற்றுலாப் பிரயாணிகளுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இராமேஸ்வரம், கன்னியாகுமரி, மதுரை போன்ற சுற்றுலா சிறப்புப் பெற்ற இடங்களில் ஹிப்பி-ஹிப்பி காட்சிகள் அதிகரிக்கிறது. சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. செ. சிவசாமி] [1978 மார்ச் 7

சுற்றுலாத் துறையின் மூலமாக மேலும் மேலும் சிறப்பு வாய்ந்த பல்வேறு இடங்களைத் தேர்ந்தெடுத்து அபிவிருத்தி செய்து, சுற்றுலாத் தலமாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு எல்லா சுற்றுலாத் தலங்களையும் ஏழை எளிய மக்கள் குறைந்த செலவில் கண்டுகளிக்க வசதிகள் செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. மி. வின்சென்ட்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, செய்தி, சுற்றுலா, திரைப்பட நுட்பவியல் மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற வாய்ப்பு பெற்றமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆரம்பத்தில் பேசிய ஒரு உறுப்பினர் ஒரு பத்திரிகையின் பெயரைச் சொல்லி, 'என்ன பாவம் செய்தது. அதற்கு ஏன் விளம்பரம் கொடுக்கவில்லை' என்று சொன்னார்கள். 1973 முதல் 1976 வரை "மக்கள் குரல்" பத்திரிகை என்ன பாவம் செய்தது, அதற்கு ஒரு ரூபாய்க்கான விளம்பரம் கூட கொடுக்காதவர்கள் இன்று என்ன அடிப்படையில் பேசுகிறார்கள் என்ற எண்ணம் எனக்கு அச்சரியத்தைத் தருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். கணேசன்: நாங்கள் தவறு செய்தோம் என்று திரு. வின்சென்ட் அவர்கள் சொல்கிறார்கள். நாங்கள்தான் தவறு செய்தவர்களாயிற்றே; அதே தவறை நீங்கள் ஏன் செய்கிறீர்கள் என்பதுதான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். ஒவ்வொருவரும் பேசும்போது கேள்வி கேட்க ஆரம்பித்தால் குறிப்பிட்ட நேரத்திற்குள் நிகழ்ச்சிகளை முடிக்க முடியாது; நேரமில்லை.

திரு. மி. வின்சென்ட்: வடக்கே காஷ்மீருக்கு கிடைக்கின்ற முக்கியத்துவம், முக்கடல் சங்கமமாகி முத்தமிடும் தென் கோடியிலிருக்கும் குமரி முனைக்கு கிடைத்திட வேண்டுமென்று



1978 மார்ச் 7] [திரு. மி. வின்சென்ட்]

வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஏனென்றால் அகில உலகத்தி லேயும் காண முடியாத காட்சிகள் குமரி முனையில் காணக் கிடைக் கின்றன. சூரிய உதயமும், சூரிய மறைவும், சந்திர உதயமும் இந்த உலகிலே ஒரே இடத்தில் பார்க்கக் கூடிய இடம் குமரி முனை என்பதை நாடறியும்.

அதைப்போல ஏழு நிறங்களும் கொண்ட பல நிற மணல் குமரி கடற்கரையில் கிடைக்கின்றது. மூன்று கடலும் சந்திப்பதால் இந்துக்கள் ஒரு புனித இடமாக ஏற்று, குளித்து வருகிறார்கள். ஆகையால் இதை ஒரு 'இன்டர்நேஷனல் டூரிஸ்ட் சென்டர்' ஆக ஆக்குவதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1-40]

அதுமட்டுமல்ல, குமரிமுனையிலிருந்து ஒரு கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வரக்கூடிய ஒரு திட்டத்தை இதுவரையில் அரசாங்கம் செய்யாமல் இருந்திருக்கிறது என்பது குமரி மாவட்ட மக்கள் மீது கொண்ட காழ்ப்புணர்ச்சிதான் காரணம் என்பதை நான் சொல்வதற்கு கடுகளவும் தயங்கவில்லை.

ஏனென்றால் இன்று ஆண்டு ஒன்றுக்கு 15 லட்சத்திற்கு மேல் குமரி முனையைப் பார்வையிடுவதற்காக பயணிகள் வருகிறார்கள். விவேகானந்தா மண்டபத்தினைப் பார்ப்பதற்கு நன்கொடையாக ஒரு ரூபாய் வீதம் இன்று பிரிக்கப்பட்டு அதனால் ஆண்டு ஒன்றுக்கு 12 லட்சம் ரூபாய் அவர்களுக்கு வருமானம் வருகிறது. ஆனால் படகுகளைக் கொடுப்பது தமிழக அரசு, பணத்தை எடுத்துக் செல்பவர்கள் மற்ற அரசாக இருப்பதை நான் ஒத்துக்கொள்ள இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்திய பிரஜைகளும் வெளி நாட்டினரும் குமரி முனையில் மிக முக்கியத்துவம் கொடுப்பது முக்கடல் சந்திப்பைக்காண். எனவே, வெளிநாட்டினரும் மற்றவர்களும் முதலில் கேட்க விரும்புவது முக்கடலைச் சுற்றிவர ஒரு உல்லாச விசைப் படகு வைத்திருக்கிறார்களா என்ற கேள்வியைத் தான் இவர்கள் கேட்கிறார்கள் ஏனென்றால், வங்காள விரிகுடாவில் இருந்து புறப்பட்டு இந்து மகாசமுத்திரம் வழி அரபிக் கடலில் கரை எல்லையின் ஓரம்—ஒரு இடத்திற்குச் செல்பவர்கள் முதலில் அந்த இடத்தைக் காண வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். கண்டு

களித்ததற்குப் பிறகு—தங்கள் வாழ்நாள் முழுவதும் அதை எண்ணி எண்ணிப் பார்த்து மகிழ்ந்து ஆனந்தம் கொள்கிறார்கள் ஒரு படகில் ஏறி முக்கடலையும் சுற்றி வந்தேன் என்று பெருமைப்படுவதற்காக ரூ. 25 முதல் ரூ. 50 வரையில், கொடுப்பதற்கு இந்தியப் பிரஜைகளும் வெளி நாட்டினரும் தயாராயிருக்கிறார்கள். இதன் மூலம் அன்னிய நாட்டின் அன்னிய செலாவணி குமரி முனையில் குவியும். ஆதலால் ஒரு உல்லாசப் படகு முக்கடலைச் சுற்றிவர, கரையோரங்களில் சுற்றி வர ஏற்பாடு செய்தால் ஆண்டு ஒன்றுக்கு இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் வருமானம் வர காத்துக் கொண்டிருக்கிறது என்ற நல்ல திட்டத்தை நான் இந்த அரசுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

குமரி மாவட்டத்தில் மருத்துவாமலையில் அப்ஸர்வேட்டரி டவர், பார்வைக்கான கோபுரம் ஒன்று அமைத்து தொலைநோக்காடி அமைத்தால் pan[illegible]romic view of the l[illegible]ndscape முக்கடலும் சந்திக்கும் முனைப் பார்வை கிடைக்கும். பார்வைக்கான கோபுரத்தில் ஏறும் பயணிகளும் பக்தர்களும் சுசீந்திரம் கோவில், நாகர்கோவில் நாகராஜா கோவில், புனித சவேரியார் கோவில், திருச்செந்தூர் கோவில் ஆகியவற்றைக் காண முடியும். அதேபோல் முக்கடலும் சந்திக்கும் முனைப்பார்வையையும் பார்த்து மகிழவும் ஏதுவாகயிருக்கும்.

இந்த அப்ஸர்வேட்டரி டவர் கட்டிக் கொடுத்தால் ஆண்டு ஒன்றுக்கு 50 லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் வரும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே இதில் அரசு அக்கறை செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தேங்காய்பட்டணம் தென்னைமரச் சோலைகள் அடங்கிய கடற்கரை காயலோடு அமைந்திருக்கிறது. அதை சுற்றுலா மையமாக்க [illegible] [illegible] ஆக்க வேண்டும். ஒரு [illegible] ( [illegible] ) குமரி முனையில் அமைக்கப்பட வேண்டும். நாகர்கோவிலில் [illegible] [illegible] சுற்றுலாப் பயணிகள் சுற்றிவர ஒரு [illegible] [illegible] அமைக்கப்பட வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொண்டு இந்த வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.



## (5) உரிமைப் பிரச்னை.

உள்ளாட்சித் துறை அமைச்சர் உதவியாளர் பஸ் பாஸைத் தவறாக உபயோகித்ததாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டு பற்றி உள்ளாட்சித் துறை அமைச்சர் அவைக்கு அளித்த தகவல் குறித்து.

Thiru A. RAHMANKHAN : Sir I want to raise a matter of privilege. Rule 184 of our Rules says:

"A member wishing to raise a matter of privilege shall before the commencement of the sitting of the day on which he proposes to raise the point leave with the Speaker a written notice of the matter proposed to be raised."

But there is a proviso to that rule which says:-

"Provided that in respect of a matter of privilege arising during the sitting of the House the Speaker may waive such notice".

ஆகவே நோட்டீஸ் தேவையில்லை.

Rule 186 says :

"A matter of privilege must be raised after the question hour and before the list of the business of the day is entered upon.

But proviso to that rule says :

"Provided that a matter of privilege arising during the sitting of the House shall be entitled to immediate precedence over all other business.

ஆகவே உரிமைப் பிரச்னை எழுப்புவதற்கு தாங்கள் அனுமதி தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே ஒரு தகவல் வெளியிட்டார்கள். அந்தத் தகவலை வெளியிடுகிறபோது 413 எண் உள்ள பாஸ் அவரது P. A. யால்

தவருக பயன்படுத்தப்படுகிறது என்ற குற்றச்சாட்டை மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் சொல்கிறபோது அவர்கள் சொன்னுர்கள் அந்த பாஸ் தொலைந்து விட்டது என தகவல் சொன்னுர்கள். அருமை நண்பர் ராதா அவர்கள் கூட ஆதாரம் இருக்கிறதா என்று கேட்டார்கள். இப்படி ஒரு தவருன தகவலை அமைச்சர் அவர்கள் தந்திருக்கிருர்கள் இந்தச் சபைக்கு இது உரிமை மீறல் ஆகும் என்பது முதல் குற்றச்சாட்டு. இப்படி தவருன தகவலைத் தந்திருக்கிருர்கள். அந்தப் பாஸில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டு கண்டிஷன் குறிப்பிடப்பட்டிருக்கிறது. முதல் கண்டிஷன். . . .

Loss of pass shou'd be reportəd to the Managing Director of the the Pallavan Transport Corporation, Madras with in 24 hours.

24 மணி நேரத்திற்குள் மானேஜிங் டைரக்டரிடத்தில்—பாஸ் தொலைந்து போனுல் தெரிவிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனுல் அமைச்சர் அவர்கள் அது தொலைந்துவிட்டதாக அறிவித்திருக்கிருர். எந்தத் தகவலின் மீது அதை இங்கு தெரிவித்தார்? எனக்குக் கிடைத்த தகவலின்படி அப்படி 24 மணி நேரத்தில் தொலைந்து போனதாக தெரிவிக்கப்படவில்லை என்பது. அப்படியிருக்கும்போது, எந்த சூழ்நிலையில் அமைச்சர் அவர்கள் அப்படி சொன்னுர்கள்? இது ஒரு முக்கியமான பிரச்னை, அமைச்சர் அவர்களுக்கு வேண்டியவர்களாக இருக்கலாம். அது வேறு. ஆனுல் இது முக்கியமான பிரச்னையாதலால், இது பிரிவிலேஜ் என்ற அடிப்படையில் நான் இந்தப் பிரச்னையை எழுப்புகிறேன். . .

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டுக்கு. இதில் சம்பந்தப்பட்ட பாண்டியன் அவர்கள் எழுதியிருக்கும் விளக்கத்தில்—'நான் தென்னகம் செய்தியாளராக இருந்த நேரத்திலேயே பாஸ் தொலைந்து போய்விட்ட காரணத்தால், அதை அரசுக்கோ 'தென்னகம்' பத்திரிகைக்கோ திருப்பித்தர இயலவில்லை. உள்ளாட்சித் துறை அமைச்சர் அலுவலகத்தில்





பணியில் சேரும்போதே அந்தப் பாஸ் என் கைவசமில்லை. அதற்குப் பின் நான் அதை உபயோகப்படுத்தியதே இல்லை'...... என்று விளக்கம் அளித்திருக்கிருர்கள். இது தான் நிலைமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. ரகுமான்கான் :** நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புவது. அப்படி அந்த பாஸ் தொலைந்துவிட்டது என்று எதன் அடிப்படையில் அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள் என்பது தான்....

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** அமைச்சர் அவர்கள் அது தவறிவிட்டது என்று சொன்னுர்கள், அது 24 மணி நேரத்திற்குள் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றி டிரான்ஸ்போர்ட் டிப்பார்ட்மென்டிடம் தான் கேட்க வேண்டும். அதை அங்குதான் கேட்டு தெரிந்து கொள்ள வேண்டும்....

**திரு. ஏ. ரகுமான்கான் :** தொலைந்துவிட்டது என்ற தகவல் அமைச்சருக்கு எப்படி வந்தது? அவருக்கு அதுபற்றி தெரியாது. அமைச்சர் தவருக சொல்லுகிருர் என்று நான் சொல்லுகிறேன். . .

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, பாஸ் சம்மந்தமான பிரச்சினையில்.. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், ஒரு தகவலைத் தந்தார்கள். அந்தத் தகவல் தவருன தகவல். பாஸ் என்னிடத்தில் இருக்கிறது, அல்லது பாஸ் இதோ இருக்கிறது, இதோ வைத்திருக்கிறேன் என்று சொல்லுவார்களேயானுல் அப்போது தான் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன தகவல், தவருன தகவல் என்ற சந்தேகத்திற்கே இடம் வரும். அதல்லாமல் பாஸில் சந்தேகத்திற்கே இடம் வரும். அதல்லாமல் பாஸில் கூறப்பட்டிருக்கிற நிபந்தனைகள், தொலைந்துவிட்டால் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்ற கண்டிஷன்கள், நிறைவேற்றப்பட்டனவா என்றெல்லாம் கேட்பது தவறு. அவ்விதம் கேட்பது சரியுமல்ல,

[திரு. ச. இராமச்சந்திரன்] [1978 மார்ச் 7

மன்றத்தைப் பொறுத்தவரையில், அமைச்சர் அவர்கள் தவறான தகவல் தந்தார் என்பதற்கோ, அல்லது தவறான தகவல் தந்ததற்கு ஆதாரம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கோ இதில் இடமே இல்லை. ஆகவே, இதில் உரிமைப் பிரச்னை என்பதற்கே இடமில்லை. கன்டிஷன் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா இல்லையா என்பது வேறு பிரச்னை என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர் பதவியில் இருக்கிறவர்கள் என்பது பொறுப்பான இடத்தில் இருக்கிறவர்கள். அவர்களுக்கெல்லாம் விதிமுறைகள் தெரியாது என்று சொல்ல முடியாது. Ignorance of law is no excuse இந்த விதிமுறைகளை படிக்காமல் இருக்க முடியாது. 24 மணி நேரத்தில் தொலைந்து போனது பற்றி தெரிவிக்க வேண்டும் என்று தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையிலேயே தொலைந்து போயிருந்தால் அப்படி தெரிவித்திருக்க முடியும். அப்படி யில்லாமல் தொலைந்துவிட்டது சொல்லாமல் இருந்தால், அதை வேறு நபர்கள் கூட 'மிஸ் யூஸ்' செய்யக்கூடும். இதில் யார் மிஸ் யூஸ் செய்தார்கள் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், அமைச்சர் அவர்கள் இங்கு சொன்ன விளக்கம் சரியல்ல.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** யார் உரிமை மீறல் பிரச்னை கொடுத்திருக்கிறார்களோ அவர்கள் தான் அந்தப் பிரச்னையைப் பற்றி பேச வேண்டும். . . .

**திரு. க. சுப்பு :** அவையில் உரிமை மீறல் பிரச்னை என்று வந்தால் அதில் எல்லோருக்கும்தான் பொறுப்பு இருக்கிறது.... It concerns all the Members of the House. (திரு. கே. கந்தசாமி அவர்கள் பேசுவதற்கு எழுந்திருந்தார்...)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு சுப்பு அவர்களுக்கு என்ன சொன்னேனோ அது உங்களுக்கும் பொருந்தும்....

**(திரு. கே. கந்தசாமி** அவர்கள் மீண்டும் பேசுவதற்கு எழுந்திருந்தார். . .



1978 மார்ச் 7]

[பிற்பகல் 1.50]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பிரிவிலெஜ் மோஷனை மூவ் பண்ணி அனுமதித்து அது டிஸ்கஷனுக்கு வந்த பிறகுதான், எந்த மெம்பர் வேண்டுமானாலும் அதன் மீது பேசலாம் என்பதிலே மாற்றுக் கருத்து கிடையாது. ஆனால், பிரிவிலெஜ் மாட்டரைக் கொண்டுவந்து அனுமதி கோரி பேசும்போது, அந்த மாட்டரைக் கொண்டு வந்த உறுப்பினர் மட்டும் தான் பேச வேண்டும். மோஷன் மூவ் பண்ணின பிறகு எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் வேண்டுமானாலும், யார் வேண்டுமானாலும் பேசலாம். இதிலே எந்தவிதமான ஆட்சேபணையும் கிடையாது.

**திரு. க. சுப்பு :** பிரிவிலெஜ் பற்றிய புரொசிஜர் சம்பந்தமாக மினிஸ்டர் குறுக்கிட்டு விளக்கம் சொல்லியிருப்பதால், நாங்களும் அதன்மீது பேச கடமைப்பட்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் வேறு இடத்திற்குப் போகிறார். மிஸ்-யூஸ் ஆகியிருக்கிறதா, இல்லையா என்பது வேறு பிரச்னை. But, what the Hon. Minister has informed the House is correct.

**திரு. ஏ. ரகுமான் கான் :** நான் இந்தப் பிரச்னையை எழுப்பி யிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விதி 40 (1)-ன் கீழ் ஏற்கனவே நீங்கள் ஒரு நோட்டீஸ் கொடுத்திருக்கிறீர்கள். அதை அனுப்பிய பிறகு, இங்கே திரும்பவும் ஒரு உரிமை மீறல் பிரச்னையை எழுப்பியிருக்கிறீர்கள். முதல் கடிதம் கொடுத்த ½ மணி நேரத்திற்குள், அது ஆய்வில் இருக்கின்ற நேரத்திலேயே, திரும்பவும் உரிமை மீறல் பிரச்னையை எழுப்பியிருக்கிறீர்கள்.

**திரு. ஏ. ரகுமான்கான் :** பிரிவிலெஜ் மேட்டர் எழுப்பக் கூடாது என்று சொல்கிறீர்களா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** உரிமை மீறல் பிரச்னையின் மீது நான் தீர்ப்பளிக்கிறேன்.

[1978 மார்ச் 7

**திரு. ரகுமான்கான் :** நான் சொல்வதை இன்னும் நீங்கள் கேட்கவில்லையே ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நீங்கள் ரெயிஸ் பண்ணியது என்னவென்ருல், அமைச்சர் கொடுத்த தகவல் தவருனத் தகவல் என்பது. அப்படித் தவருனத் தகவல் என்பதை நிரூபிப்பதற்கு உங்களிடம் ஆதாரம் இருக்கின்றது என்று சொல்லியிருந்தால், உங்களிடம் ஆதாரம் இருக்கிறது, ஆகவே தவருன தகவலை அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிருர்கள் என்ற நிலைமையிருந்தால், அது இந்த அவையின் உரிமையை மீறிய பிரச்சினையாகலாம். தவறு இருக்கலாம், தவறு நடந்திருக்கலாம் என்ற ஊகத்தின் அடிப்படையிலே இந்த உரிமை மீறல் பிரச்னையை எழுப்பி யிருக்கிறீர்கள். ஆகவே, இந்த உரிமைப் பிரச்னையை நான் தள்ளுபடி செய்கிறேன்.

**திரு. ஏ. ரகுமான்கான் :** தங்கள் தீர்ப்பை ஒத்துக் கொள்கிறேன். தவறு செய்யவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்வதற்கு என்ன ஆதாரம் ?

(திரு. கே. கந்தசாமி எழுந்திருந்தார்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தயவுசெய்து அமருங்கள். அடுத்து, மாண்புமிகு செய்தி, சுற்றுலாத் துறை அமைச்சர்.

## (4) மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

* **மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பப் பிரிவின் மானியக் கோரிக்கையின் மீது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்து வைத்திருக்கிருர்கள். எல்லாவற்றுக்கும் விளக்கமாக பதில் சொல்லிக் கொண்டிருப்பதற்கு அவையின் நோம்



1978 மார்ச் 7] [திரு. ஆர். எம். வீரப்பன்]

அனுமதிக்கவில்லை என்பதை நீங்கள் உணர்வீர்கள். என்ருலும், ஒன்றிரண்டு முக்கியமான கருத்துக்களுக்கு விளக்கம் அளித்து விட்டு, என்னுடைய வேண்டுகோளை இந்த அவையின் முன்னுலே வைக்க, அனுமதி அளிக்க வேண்டுகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசிய திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் மாண்புமிகு கணேசன் அவர்கள் அவர்களுடைய உள்ளத்திலே நீண்ட நாட்களாக, நீண்ட காலமாகக் குமுறிக் கொண்டிருந்த ஒரு உணர்வை பேசத் துவங்குகின்றபோதே எடுத்து முன்னுலே வைத்துவிட்டார்கள். விவரங்களை எடுத்துச் சொல்லி, சில குற்றங்களைச் சொல்லி, இவைகளிலே ஊழல் இருக்கின்றது என்று சொல்வதற்கு பதிலாக, அவர்கள் இந்த அரசின் மீது, இந்த இலாகாவின் மீது, இந்தத் துறையின் மீது ஊழல் என்று சொல்ல வேண்டுமென்ற ஆசையின் காரணமாக, எடுத்தவுடனேயே அவர்கள் ஊழல் பல்லவியை ஆரம்பித்தார்கள்.

அவர்கள் ஊழல் என்று சொன்னவுடனே, நான்கூட அதிர்ச்சி அடைந்துவிட்டேன். பின்னுலே பெரிய குற்றச்சாட்டுக்களைச் சொல்வார்கள் என்று எண்ணினேன். கடைசியிலே அவர்கள், குடியரசுத் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்திலே இருந்த அதிகாரியை வைத்துக் கொண்டிருக்கிறீர்களே, அது ஊழல் இல்லையா என்கிருர்கள். அப்படியெல்லாம் பார்த்தால், ஒவ்வொரு ஆட்சியிலேயும் உள்ள எல்லா அதிகாரிகளையும் மாற்றிக் கொண்டே இருக்க வேண்டும். புதிய அரசு வந்தால் கூண்டோடு புதிய அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்ற நடைமுறைப் பழக்கம் இந்த நாட்டின் அரசியல் சட்ட ரீதியாக வந்தால், அதைப் பற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

அடுத்தபடியாக, 'தென்னகம்' நிருபராக இருந்தவர் பஸ் பாசைப் பற்றிச் சொன்னுர்கள். அந்த பஸ் பாஸ் என்னிடம் இல்லை, தொலைந்துவிட்டது என்று எழுதி அனுப்பியிருக்கிருர். உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களின் உதவியாளராக வருவதற்கு முன்பே அது தொலைந்து விட்டது என்று சொல்லி யிருக்கிருர். அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டியது டிரான்ஸ்போர்ட் நிர்வாகம். அது வேறு விஷயம். அதற்குள்ளே நுழைய நான் விரும்பவில்லை.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1978 மார்ச் 7

அதற்கு அடுத்தாற்போல் ஏதோ டாக்குமெண்டரி படம் எடுப்பதைப் பற்றிச் சொன்னார்கள். இந்த செய்தி சுற்றுலாத் துறையைப் பொறுத்தவரை யாருக்கும் தனிப்பட்டவர்களுக்கு எந்தவிதமான படங்களையும் எடுப்பதற்கு அனுமதி வழங்குவது இல்லை என்பதை மிகத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் டாக்குமெண்டரி—கருத்து விளக்கப் படங்கள் எடுப்பதற்குச் சில விதிமுறைகளை வகுத்திருக்கிறோம். அதற்கான அடிப்படைக் கதை—சீனாரியோ, ஸ்க்ரிப்ட்—தருவதற்கு பல எழுத்தாளர்களிடத்திலிருந்து, டைரக்டர்களிடத்திலிருந்து ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது. அவர்களிடத்தில் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறதே தவிர, மொத்தமாகப் படம் எடுக்கும் உரிமையை இன்னும் இந்தத் திரைப்படத் துறைதான், அரசு திரைப்படத் துறைதான் வைத்திருக்கிறது. வேறு தனிப்பட்ட வாரியங்கள், கைத்தறித் துறை போன்ற வாரியங்கள் அவர்களுடைய விளம்பரத்திற்காக ஒரு நிமிஷப் படங்கள், விளம்பரத்திற்காக எடுக்கப்படுகிற படங்கள் இந்தத் துறைக்கு அப்பாற்பட்டது, எங்களுடைய கவனத்திற்கு வராதது என்பதால் அங்கே என்ன நடந்தது என்று தெரியாது என்பதை மறுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, விளம்பரத்தைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு நாஞ்சில் வின்சென்ட் பேசும்போது 'நீங்கள் செய்யவில்லையா ?' என்று கேட்டதற்கு மாண்புமிகு கணேசன் அவர்கள் 'நாங்கள்தான் தவறு செய்தோம்; அந்தத் தவறை நீங்கள் ஏன் செய்தீர்கள் ?' என்று கூறி அதை ஒப்புக் கொண்டதற்கு நன்றி. ஆனால் அந்தத் தவறையும் இந்த அரசு செய்யவில்லை என்பதை இந்த மன்றத்திற்கு உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நேற்று முன்தினம் ஒரு கேள்விக்குப் பதிலளித்தேன். முரசொலிக்கு ஒரு ஆண்டில் எவ்வளவு விளம்பரச் செலவு என்று கேட்டார்கள். நான் அதை வெளியிட வேண்டாமென்றுதான் வைத்திருந்தேன். இன்றைக்குக் கேட்பதால் சில உண்மைகளை வெளியிடலாம் என்று விரும்புகிறேன். ஒரு ஆண்டில் பத்தே மாதத்தில் 3,46,000 ரூபாய்; அதற்கு முந்திய ஆண்டு



[திரு. ஆர். எம். வீரப்பன்] [1978 மார்ச் 7

3,75,000 ரூபாய்; அதற்கும் முந்திய ஆண்டு 2,56,000 ரூபாய். ஒரு குறிப்பிட்ட மூன்றாண்டுக் காலத்தில் 2 ஆண்டு 10 மாத காலத்திற்குள் ஒரு பத்திரிகை சுமார் 10 லட்சம் ரூபாயை விளம்பரக் கட்டணமாகப் பெற்றிருக்கிறது. தரப்பட்டிருக்கும் கணக்குப்படி பத்திரிகையின் விநியோக எண்ணிக்கை இருபதாயிரத்து நூற்றுச் சொச்சம். ஆனால் அதே காலத்தில் கழகத்தின் பத்திரிகையான, கட்சிப் பத்திரிகையான 'நம் நாடு' பத்திரிகைக்கு எதுவுமே கொடுக்கவில்லை. அதே நேரத்திலே வேறு சில பத்திரிகைகளுடைய பெயரே அங்கே இல்லை. மக்கள் குரல் போன்ற பத்திரிகைகளுக்கு விளம்பரமே கொடுக்கப்படவில்லை என்றெல்லாம் சொன்னார்கள்.

ஆனால் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைக்கு இந்த அரசு எந்தப் பத்திரிகையையும் விளம்பரப் பட்டியலில் இருந்து நீக்கவில்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் குறிப்பாகச் சொல்லுகிறேன்—1976 ஆம் ஆண்டு இங்கே ஆளுநர் ஆட்சி நடைபெற்றபோது அரசு விளம்பரம் தருவதற்கான பட்டியலில் இருந்து 'முரசொலி', 'விடுதலை' போன்ற பத்திரிகைகள் நீக்கப்பட்டிருந்தன. இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் 'முரசொலி', 'விடுதலை' பத்திரிகைகள் இணைக்கப்பட்டு இன்றைக்கு விளம்பரங்கள் தந்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக 'அலை ஓசை' பத்திரிகை பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர் அலை ஓசையைப் பார்க்கிறவர். அவ்வாறு பார்க்கும்போது அவருக்கு வேறு விஷயங்கள் கண்ணில் படுகின்றனவே தவிர, அரசு விளம்பரங்கள் அவர் கண்ணில் படவில்லை என்று தெரிகிறது. எனவே அரசு விளம்பரங்கள் அதில் பான் அளிக்கவில்லை என்பதாகத் தெரிகிறது. என்றாலும் அதற்கு விளம்பரம் தருகிறோம். இரண்டு நாள் முன்பு கூட தமிழக அரசு பரிசு சீட்டு விளம்பரம் கிட்டத்தட்ட அரைப் பக்கத்திற்கு அதிலே வந்திருக்கிறது. அதைப் பார்க்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே, இந்த அரசுக்கு எந்தப் பத்திரிகைகள் எந்தக் கருத்தைச் சொல்லுகிறது என்பதில் பயம் இல்லை; அதற்காக அஞ்சவில்லை. எல்லாப் பத்திரிகைகளுக்கும், அரசு வைத்திருக்கும் இலக்கணத்திற்கு உட்பட்டால் அதற்கு விளம்பரம் தருவதில் தயக்கம் இல்லை. எந்த விளம்பரத்தை, எப்போது, எந்தப் பத்திரிகைக்கு, எந்தத் தொகையின் அடிப்படையில் தருவது என்று பரிசீலிக்கப்பட்டு தரப்படுகிறது என்பதிலே தெளிவான கொள்கை இருக்கிறது. எந்தப் பத்திரிகையையும் நாங்கள் அலட்சியப்படுத்தவில்லை. கடந்த காலத்தில் செய்யப்பட்ட, பத்திரிகை தர்மத்தை மீறிச் செய்யப்பட்ட, நியாயத்தை மீறிச் செய்யப்பட்ட அந்தக் கருத்துக்கள், அந்தக் கொள்கைகள் இப்போது அரசுக்கு இல்லை - என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுற்றுலாப் பொருட்காட்சியைப் பற்றிச் சொன்னார்கள். ஊரெல்லாம் புகழ்ந்தது. மத்திய அரசிலிருந்து வந்த அமைச்சர்கள் எல்லாம் பாராட்டினார்கள்; குடியரசுத் துணைத் தலைவர் பாராட்டினார்; வெளி மாநிலங்களிலிருந்து வந்த அமைச்சர்கள் எல்லாம் பாராட்டினார்கள். சென்னை மாநகரத்தில், தமிழகத்தில் இருந்து வந்த மக்கள் எல்லாம் பாராட்டினார்கள். பொருட்காட்சிக்கு கண்டவர்கள் எண்ணிக்கை அதிகரித்தது. அதை எல்லாம் பாராட்ட அவர்களுக்கு மனம் இடம் தராது; இடம் தரவில்லை; பொறுத்துக் கொள்கிறேன். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலவச அனுமதிச் சீட்டுகள் வழங்கப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒருவேளை வெளியூர்களில் இருக்கும் சட்டமன்ற உறுப்பினர் களுக்குத் தரவில்லையா என்பது தெரியாது. முறைப்படி ஒரு நாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நானே கையெழுத்திட்டு அழைத்து, விருந்து கொடுத்து சுற்றிக் காண்பித்திருக்கிறேன். அதைத் தவிர சட்டமன்ற உறுப்பினர்களுக்கு குடும்பத்தோடு பார்க்க இலவச அனுமதிச் சீட்டு தனியாக பாஸ், கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். ஆகவே அங்கே எதையும்



[பிற்பகல் 2.00]

நாங்கள் வேண்டாம் என்று தடைப்படுத்தவில்லை. இன்னும் சொல்லப் போனால் ஏலம் விடுதல், டெண்டர் விடுதல் போன்ற காரியங்களிலே மிக அக்கறையோடு மிகத் தெளிவாக கடந்த ஆண்டுகள் நடைபெற்ற தவறுகள் நீக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆர்ட் டைரக்டர் பற்றிச் சொன்னார்கள், அங்கமுத்து என்று பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். புதிதாக எங்களுக்கு வேண்டியவர் மட்டுமில்லை, அவர்களுக்கும் வேண்டியவர் தான். அவர் மிகச் சிறந்த கலைத் துறை நிபுணர். அந்த ஆட்சிக் காலத்திலேயே ஓவியர்களைத் தேர்ந்தெடுக்கின்ற குழுவிலே அவரைப் போட்டிருக்கிறார்கள். மாமல்லபுரத்தை அப்படியே கொண்டுவந்து முன்னாலே நிறுத்த வேண்டும், அதற்குத் தகுதியானவரைத் தாருங்கள் என்று நாங்கள் கேட்டோம். வழக்கமாகக் கொள்ளை அடித்துக் கொண்டிருந்தவர்கள் இப்போது கொள்ளை அடிக்க முடியவில்லை, அதற்காக எதாவது சொல்லி யிருக்கலாம், ஆனால் அதைப் பார்த்தவர்கள் அத்தனை பேருமே மாமல்லபுரத்தை நேரிலே அப்படியே பார்ப்பது போல் இருக்கிறது என்று தான் சொன்னார்கள். ஆகவே இப்படிப்பட்ட திறமையாளர் களுக்கு இழுக்குத் தேட வேண்டாம் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

நிருபர்களுக்கு பாஸ்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள், அதைப் பற்றி நான் கடைசியிலே சொல்கிறேன்.

தியேட்டர் கார்ப்பரேஷன் வட்டி விகிதத்தைப் பற்றிச் சொன்னார்கள். தியேட்டர் கார்ப்பரேஷன் சர்க்காருடைய மூலதனத்திலிருந்தும் வங்கிகளிடமிருந்து வட்டிக்கு வாங்கும் மூலதனத்திலிருந்தும் வழங்குகிற கடன். அப்படி வாங்கிய கடனை வைத்து 58 பேர்கள் தியேட்டர்களை கட்டி முடித்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வாங்குகிற கடனைத் திருப்பிக் கொடுக்கவில்லையென்றால் திருப்பிக் கொடுக்காதவர்களுக்கு வட்டி விகிதம் ஏன் அதிகமாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்கிறார்கள் என்றால் திருப்பிக் கொடுக்காதவர்களை எப்படிக் கொடுக்கச் செய்வது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தான் சொல்ல வேண்டும்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1978 மார்ச் 7

இப்படித் திருப்பிக் கொடுக்கப்படாத காரணத்தால் கடன் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. தியேட்டர்களை கட்டி முடித்தவர்கள் திருப்பித் தராத காரணத்தாலே இன்றைக்கு கடன் கேட்டு வந்துள்ள மனுக்களை ஏற்றுக்கொள்ள முடியாமல் அவையெல்லாம் தேங்கி நிற்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய காங்கிரஸ் உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் காமராஜர் நினைவாலயத்தைப் பற்றிச் சொன்னார்கள். காமராஜர் நினைவாலயத்தை மிக முக்கியமான ஒரு இடமாக, தலைநகருக்கு வருகின்ற எல்லா மக்களும் பார்த்து அதை வணங்குகின்ற ஒரு இடமாக, அதை மிகச் சிறந்த இடமாக மாற்றியமைப்பதற்காக தமிழக அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சில திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்திற்கு நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைச் சொல்கிறபோது ஈரோட்டிலே பெரியார்—அண்ணா நினைவு இல்லம், பெரியார் வீட்டை முந்தைய அரசு வாங்கி பெரியார்—அண்ணா நினைவு இல்லமாக மாற்றினார்கள். மாற்றியவர்கள் எப்படி அதை வைத்திருந்தார்கள்? அங்கே இரண்டு காவலர்களை நியமித்து அந்த இடத்தைப் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் எப்படி பாதுகாக்கப்படும் என்பதை நீங்களே கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எதிலே மிகுந்த அக்கறை காட்டப்பட்டிருக்கிறது என்றால் மின்சார ஒளி அமைப்பு ஏற்படுத்தி, பெரியார், அண்ணா, இன்றைய எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருணாநிதி ஆகியவர்களின் உருவப் படங்கள் மாறி மாறித் தெரிவதைப் போல் ஒருவரிலே மூவர் என்று போட்டு, பெரியார்—அண்ணா இல்லத்திலே பெரியார், அண்ணா இவர்களோடு முன்னாள் முதலமைச்சர் தன்னையும் இணைத்துக் கொண்டதில் எடுத்துக் கொண்ட அக்கறை நினைவு இல்லத்தைப் பாதுகாப்பில் எடுத்துக் கொள்ளப்படவில்லை. அந்த இல்லத்தை நல்ல முறையிலே பாதுகாத்து விளங்கச் செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1978 மார்ச் 7] [திரு. ஆர். எம். வீரப்பன்]

நாடகக் குழுக்கள்பற்றி காங்கிரஸ் உறுப்பினர் திரு. சுந்தரராஜ் அவர்கள் சொன்னார்கள். இந்த மாதத்திற்கு 20 நாடகக் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த ஆண்டு எல்லா நாடகக் குழுக்களையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்தக் காட்சி பற்றிச் சொன்னார்கள். முன்பே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் அறிவித்திருக்கிறார்கள். மத்திய செய்தி, ஒலிபரப்புத் துறை அமைச்சருக்கு நேரிலே கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தத் தணிக்கைக் குழுவிலே நம்முடைய அரசினுடைய அதிகாரம் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அது மத்திய சர்க்காருடைய இலாகாவைப் பொறுத்த விஷயம். நாம் நிச்சயமாக அதற்காகப் போராடுவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. வரதராஜன் அவர்கள் வானொலித் துறையைப் பற்றிச் சொன்னார்கள். வானொலித் துறையும் மத்திய அரசினுடைய அதிகாரத்திற்கு உட்பட்டதுதான். ஆகவே, நம்முடைய விருப்பங்களை அங்கே நிறைவேற்ற முடியாது. அதற்காக முன்பு இருந்தவர்கள் செய்ததைப் போல மிரட்டுகின்ற பழக்கம் எங்களுக்குக் கிடையாது. இதைச் செய்கிறாயா என்று கேட்டு, பத்திரிகைக் காரர்கள் ஆதரித்து எழுதவில்லையென்றால் நூறு பேர், இருநூறு பேர்களை அனுப்பி கலவரம் செய்வது, கல்லெறிவது போன்ற பழக்கங்கள் எங்களுக்குக் கிடையாது. ஆனால் முறையாக, நிச்சயமாகக் கண்டிப்பாக இந்த மாநில மக்களுடைய நலன், இந்த அரசினுடைய கொள்கைகள், இந்த மாநில மக்களுக்குத் தேவையான கொள்கைகள் வானொலியிலே ஒலிபரப்பச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழரசு பத்திரிகையைப் பற்றிச் சொன்னார்கள், சுவாமிதாஸ் அவர்களும் சொன்னார்கள். தமிழரசு என்றால் எப்படி நடந்தது என்பது எனக்குத் தெரியாது. இன்றைக்குப் பல்வேறு கருத்துக்களையும் அதிலே வெளியிட வேண்டுமென்ற முயற்சியிலே

தான் நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். ஆகவே, எந்தக் கட்சியைச் சார்ந்தவர்களும் மக்களுக்கு நன்மை பயக்கின்ற கருத்துக்களை, கட்டுரைகளை அனுப்பினால் தமிழரசு அதை வெளியிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, சுவாமிதாஸ் அவர்கள் சொன்ன ஒரு கருத்து, சர்வீஸ் கமிஷன் விளம்பரங்கள், அதனுடைய ரிசல்ட், டெண்டர்கள் ஆகியவைகளைப் பற்றியது. இதுபோல் முன்னாலே முயற்சி செய்து, தமிழரசு பத்திரிகையிலே விளம்பரங்களாக வெளியிடுவதற்காக முயற்சித்தார்கள். அதிலே ஏதோ பல சிக்கல்கள் வந்ததன் காரணமாக அது நிறுத்தப்பட்டு விட்ட தாகச் சொல்லி இருக்கிறார்கள். அதைப் பரிசீலித்துக்கொண்டி ருக்கிறோம். அது எந்த அளவிற்கு முடியுமோ அந்த அளவிற்கு முயன்று நிறைவேற்றுவோம் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரையரங்குகளிலே உள்ள சம்பளத்தைப்பற்றிச் சொல்லி யிருக்கிறார்கள். நேற்றுகூட திரையரங்கு நிறுவனத்தைச் சேர்ந்த தொழிற்சங்கப் பொறுப்பாளர்கள் வந்து சந்தித்தார்கள். தென்னிந்திய வர்த்தக சபையினிடத்தில் போய் பேசி அதற்கான முடிவையெடுக்க அரசு முன்வரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

விளம்பரங்களைப் பற்றி நான் முன்பே தெரிவித்து விட்டேன். அதைப்போல கருத்துப் படங்களையும் இன்றைக்கு அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த அரசு அந்தத் துறையிலே வேகமாக மட்டும் நடவடிக்கை எடுக்காமல் முறையாகவும், ஒழுங் காகவும் செய்ய வேண்டுமென்று இருக்கிறது. கருத்துப்படங் களை வெளியிடும்பொழுது தவறான முறையிலே வெளியிடப்பட்டு விடக்கூடாது என்று இந்த அரசு நினைக்கிறது. தீண்டாமை பற்றிய படமும் தயாரிப்பில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்னொரு படத்தையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் படத்தைப்பற்றி நான் இப்பொழுதே சொல்லிவிடுகிறேன். முகவை மாவட்டத்தில், அருப்புக்





கோட்டையில், இராமநாதபுரம் மற்ற பகுதிகளிலே ஏழ்மை நிலையிலுள்ள கிராம மக்கள் குடிக்கத் தண்ணீர் எடுக்க எப்படியெல்லாம் கஷ்டப்படுகிறார்கள் என்ற காட்சிகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. எப்படி, எத்தனை மைல்கள் நடந்து போய் தாய்மார்கள் தலையில் குடத்தை வைத்துக்கொண்டு செல்கிறார்கள் என்று ஒரு காட்சி. ஆற்று மணலைத் தோண்டித் தோண்டி ஊறுகின்ற தண்ணீரை எப்படி எடுத்து வருகிறார்கள் என்று ஒரு காட்சி. இன்னொரு காட்சி, வயல் வெளியிலே உள்ள பம்பு செட்டி லேயிருந்து வரும் தண்ணீரைப் போய் பிடிக்கிறார்கள், அந்தத் தண்ணீரைப் பிடிக்க விடாமல் காவல்காரன் அந்தச் சகோதரிகளை விரட்டுகிறான். இப்படி குடிக்கும் தண்ணீருக்குக்கூட கிராமப்புற மக்கள் எப்படித் தொல்லைப்படுகிறார்கள் என்ற காட்சி எடுக்கப்படுகிறது. அதைத்தொடர்ந்து அந்த மக்களுக் காக குழாய் மூலம், தரைக்கு அடியிலே, பூமிக்கு அடியிலேயும் உள்ள தண்ணீரைக் கொண்டுவர எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு எப்படி விவசாயிகள் என்ற பெயரால் எதிர்ப்புகளைத் தெரிவிக்கி றார்கள், குடிக்கத் தண்ணீர் கொடுக்கக்கூடத் தடை வருகிறது என்றெல்லாம் செய்திப்படங்களை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு கலைவாணர் அரங்கத்தைப்பற்றி சுவாமிதாஸ் அவர்கள் சொன்னார்கள். அதைப் புதுப்பித்தது இந்த ஆட்சிக் காலத்தில் அல்ல. முன்பே நடந்து விட்ட விஷயம். இருப்பதைப் பாதுகாப்பது என்பதுதான் எங்களுக்கு உள்ள பிரச்னை.

மற்றபடி திரையரங்கு நடத்துவது பற்றிச் சொன்னார்கள். திரையரங்குகள் வியாபார ஸ்தாபனங்கள் பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள் அவைகளை நடத்துவதில் எவ்வளவு சிக்கல் வருகிறது என்பது இன்றைக்கு நகராட்சிகளே தியேட்டர் களை தஞ்சையிலும், திருச்சியிலும் கட்டி குத்தகைக்கு விட்டி ருக்கிறார்கள் என்பதிலிருந்து தெரியும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்றபடி செய்தித் துறையைப் பொறுத்தவரையில் மாண்புமிகு கணேசன் அவர்கள் தான் மிகுந்த உணர்ச்சியோடும், பரபரப்போடும் ஊழலை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1978 மார்ச் 7

துடித்துக்கொண்டிருந்து சொல்லிவிட்டார்கள். ஆகவே, ஊழல்
எங்கேயிருக்கிறது என்பதை நாட்டுமக்கள் தெரிந்து கொள்
வார்கள்.

சுற்றுலா அபிவிருத்தித் திட்டங்கள் எடுத்துக்கொள்ள
வேண்டியது அவசியம்தான். ஏனென்றால் எல்லோரும் சுற்றுலாத்
திட்டத்தை வளர்க்க வேண்டுமென்றுதான் கேட்டுக் கொண்டிருக்
கிறார்கள். எனவே இதற்கு விடையளித்து விளக்கம் சொல்ல
வேண்டியதில்லை. இந்த முறைதான் சுற்றுலாத் துறைக்கு
என்று தனியாகக் கருதி மானியக் கோரிக்கை வைக்கப்பட்டி
ருக்கிறது. அந்த அளவிற்கு வெற்றி பெற்றிருக்கிறோம்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும்
சுற்றுலா மையங்களை ஏற்படுத்த வேண்டுமென்று கருதிக்கொண்டி
ருக்கிறார்கள். எனவே அது வளரும். ஒன்றை மட்டும் வேண்டு
கோளாக விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 2-10)

கன்னியாகுமரியைப் பற்றி நம்முடைய மாண்புமிகு
உறுப்பினர் சுவாமிதாஸ் அவர்கள் சொன்னார்கள். கன்னியா
குமரிக்குப் போடப்பட்டிருக்கிற அந்த மாவட்ட சுற்றுலாக்
குழுவிலே, நம்முடைய சுவாமிதாஸ் அவர்களும் போடப்பட்டி
ருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அது
மாத்திரமல்ல, நாடாளுமன்ற உறுப்பினர் குமரி அனந்தனையும்
போட்டிருக்கிறோம். ஆனால், கேட்க வேண்டிய இடம், தட்ட
வேண்டிய கதவு இது அல்ல—மத்திய சர்க்கார். தயவு செய்து,
அதற்கு உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் கோவளத்தைப் பற்றிச் சொன்னீர்கள். யுனைட்டட்
நேஷன்ஸில் இருந்து வந்த குழு, இந்தியாவிலே 3 இடங்களைத்
தேர்ந்தெடுத்துச் சொன்னது. ஒன்று, கோவளம். இன்னொன்று,
கோவா. மற்றொன்று, நம்முடைய மாமல்லபுரம். உலகத்திலேயே
மிகச் சிறந்த கடற்கரை வாசஸ்தலமாக மாற்றுவதற்கு மற்ற



1978 மார்ச் 7] [திரு. ஆர். எம். வீரப்பன்]

எல்லா இடங்களையும் விட அதிகத் தகுதியைக் கொண்டது
நம்முடைய மாமல்லபுரம். மாமல்லபுரத்தில் வெறும் கடற்கரை
மாத்திரம் அல்ல ஆயிரமாயிரம் ஆண்டுகாலமாக கற்களிலே
செய்த சிற்பங்களெல்லாம் நம் பெருமையைச் சொல்லும்
அளவில், அங்கு சிற்பங்கள் உள்ளன. உங்களுக்கெல்லாம்
தெரியும். கோவளத்திற்கு ரூ. 2 கோடிக்கு மேல் செலவு செய்
திருக்கிறார்கள், மத்திய அரசினர்.

நம்முடைய நாஞ்சில் வின்சென்ட் அவர்கள், அவருக்கே உரிய
பாணியில் அழகாகச் சொன்னார்கள், கன்னியாகுமரி எப்படி
இருக்கிறது என்றால், நம்முடைய மூன்று கடல்களும் முத்த
மிடுகிற இடம், குமரிமுனை; அங்கே விவேகானந்தர் பாறை புகழ்
பெற்ற பாறையாக இருக்கிறது; காந்தியார் மண்டபம் இருக்
கிறது. இன்னும் அற்புதமான இடங்களெல்லாம் இருக்கின்றன.
நிச்சயமாக, அதை அகில இந்திய அளவிலே, மிகச் சிறந்த
சுற்றுலா தலமாக மாற்றியாக வேண்டும். அதற்காக
உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, மத்திய சர்க்காரிடம்
தெரிவிக்க வேண்டும்.

இதை ஏன் சொல்கிறேன் என்றால், ஒலி—ஒளி காட்சிக்கு
முந்தைய மத்திய அரசு அனுமதி தந்தது. மதுரையிலே, ஒலி—
ஒளி காட்சிக்கு அனுமதி கொடுத்தார்கள். ஆனால், ஆஸ்திகப்
பெருமக்கள் கருத்து மாறுபாடு கொண்ட காரணத்தாலே,
மாமல்லபுரத்திலே வைக்கலாம் என்று சொன்னார்கள்.
இப்பொழுது உள்ள அரசு அதுவும் கிடையாது, வேண்டுமானால்
திரைப்படம் எடுத்துத் தருகிறோம் என்று சொல்கிறார்கள்.
இன்னொரு செய்தி என்னவென்றால், கலைநிகழ்ச்சி நடத்தலாம்
என்று சொல்கிறார்கள். தயவு செய்து, ரூ. 2 கோடி, 3 கோடி
இல்லாவிட்டாலும், ரூ. 1 கோடியாவது மாமல்லபுரத்திற்கு
ஒதுக்கவேண்டும். கன்னியாகுமரியை நிச்சயமாகப் புகழ்
பெற்ற சுற்றுலா தலமாக மாற்றியாக வேண்டும். அதை
சுற்றுலாத் துறை அமைச்சர்கள் மாநாட்டிலே எடுத்துச் சொல்லி
யிருக்கிறேன். உறுப்பினர் சுவாமிதாஸ் போன்றவர்கள்,
கன்னியாகுமரியிலேயிருந்து வந்தவர்கள் என்ற அந்த உரிமைக்

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1978 மார்ச் 7

காக மத்திய அரசிடம் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்த
வேண்டும். மாமல்லபுரத்தை விட்டுவிடுங்கள். அதை மற்றவர்
களிடத்திலே நான் பார்த்துக்கொள்கிறேன் என்று சொல்லி,
உங்களிடத்திலே வேண்டுகோளாக விடுக்க விரும்புகிறேன்.

மற்றபடி இங்கே நிருபர்களுடைய பாஸ் வசதியைப் பற்றிச்
சொன்னார்கள். நிருபர்கள்மேல், மாண்புமிகு உறுப்பினர்
கணேசன் அவர்கள் எவ்வளவு அக்கறை கொண்டிருக்கிறார்களோ,
அதைவிட அதிகமான அக்கறையை இந்த அரசு கொண்டி
ருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன், அல்லது
இந்த அரசை நடத்துகிற கட்சியும் கொண்டிருக்கிறது என்பதை
நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் பற்றிய பரிசிலனைகள்
நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது இங்கே ஒரு
அறிவிப்பையும் தெரிவிக்க இருக்கிறோம்—பத்திரிகையாளர்
களுக்காக என்பதையும் நான் தெரிவித்துக் கொண்டு, இந்த
பஸ் பாஸ் பொறுத்த அளவில், ஒவ்வொரு மாவட்டத்திற்கு
உள்ளேயும் செல்ல—அக்ரெடிட்டேஷன் இருக்கிற, உறுப்பினர்கள்
சொல்கிறபடி ஏற்றுக்கொள்ளப்பட்டு, பத்திரிகை நிருபர்
களுக்கு, இலவச பாஸ் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு
முதல்வர் அவர்களுடைய அனுமதியோடு இங்கே நான்
தெரிவித்துக்கொள்கிறேன். (ஆரவாரம்.)

அது மாத்திரமல்ல, நீண்ட காலம் பணியாற்றி உடல் நலம்
குன்றிய—ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்கள் மற்றும் எதிர்
பாராமல் இயற்கை எய்திய பத்திரிகையாளர்களின் குடும்பங்கள்
வறுமையில் வாடுவதைப் போக்கி அவர்கள் நலனுக்கான வழி
வகைகள் காண அரசு முயற்சி எடுத்து வருகிறது.

இந்த முயற்சியின் முதற்கட்டமாக குறைந்த பட்சம் ரூ. 5
இலட்சம் கொண்ட "பத்திரிகையாளர்கள் உதவி நிதி"
ஒன்றினை ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது. அரசு கொடுக்கும்
ஆரம்பத் தொகை பத்திரிகை நிர்வாகங்களும், பத்திரிகை
யாளர்களும் வழங்கும் பங்கு மூன்றையும் அடிப்படையாக
வைத்து, இந்த நிதி ஆரம்பிக்கப்படும். இந்த உதவி நிதியின்
முதலீட்டுத் தொகைக்கு அரசின் பங்காக ரூ. 2 இலட்சம் ஒதுக்கீடு



1978 மார்ச் 7] [திரு. ஆர். எம். வீரப்பன்]

தெரிவித்துக்கொள்
செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் கிடைக்கும் வரு
கிறேன். (ஆரவாரம்) இந்த நிதியிலிருந்து ரூ. 100-க்கு குறை
மானத்தைக் கொண்டு மாதம் ஒன்றுக்கு உதவித்தொகை வழங்கப்
யாமலும் ரூ. 250-க்கு மேற்படாமலும்
படும்.

இந்த திட்டத்தின் விவரங்கள் பத்திரிகை நிர்வாகத்தின
ருடனும் பத்திரிகையாளர் பிரதிநிதிகளுடனும் பேசி முடிவு
செய்யப்படும். இத்திட்டத்தை நிர்வகிக்க ஒரு குழுவும் நியமிக்கப்
படும்.

இந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
இங்கே அறிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள். அறிவித்து இருக்
கிறேன். அது மாத்திரம் அல்ல. எழுத்தாளர்களை வாழ வைக்க
பத்திரிக்கைகள் வாழவேண்டும். பத்திரிக்கைகள் வாழவேண்டு
மென்றால் சிறு பத்திரிகைகளும் வாழவேண்டும். இதற்கும் ஒரு
திட்டம் அறிவிக்கப்படுகிறது.

"குறைவான பிரதிகள் விற்பனையாகும் தரமுள்ள நாளி
தழ்கள், வார, மாத இதழ்கள் அது மட்டுமல்ல தமிழ் இலக்கியப்
பதிப்புக்கள் பல, தமிழ்நாட்டிலிருந்து பிரசுரிக்கப்படுகின்றன.
இவைகளுக்குத் தேவைப்படும் காகிதம் News Print பெரும்பாலும்
வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகின்றது. இவர்களுக்குக்
காகிதம் இறக்குமதி செய்வதில் பல சங்கடங்கள் இருக்கின்றன.
மொத்தமாக வாங்குவதால் செலவு குறையும் ஆனால் அப்படி
வாங்க அவர்களுக்குப் போதிய நிதி வசதி இருப்பதில்லை. இதைக்
கருத்தில் கொண்டு காகிதம் வாங்குவதற்கு உதவி செய்ய
வேண்டும் என்று அரசு எண்ணுகிறது. தமிழக அரசின் சார்பில்
Small Industries Development Corporation (SIDCO) மூலமாக காகிதம்
இறக்குமதி செய்து சிறு பத்திரிகைகளுக்கும், புத்தகங்களுக்கும்
கொடுக்க ஒரு திட்டம் பரிசீலிக்கப்படும். இதனால் குறைந்த
விலையில் காகிதம் வழங்க முடியும் என்று எதிர்பார்க்கப்
படுகிறது". இங்கு பத்திரிகைகளுக்கும், பத்திரிகையாளர்
களுக்கும் விளம்பரம் மாத்திரம் கேட்டார்கள். நாங்கள்
விளம்பரம் மாத்திரம் அல்ல, இந்த உதவியையும் செய்வோம்
என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஆர். எம். வீரப்பன்] [1978 மார்ச்

அடுத்தபடியாக, மருதுபாண்டியன் நினைவு சின்னத்தைப் பற்றி இங்க பேசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சிவசாய அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே மருதுபாண்டியர்களுக்குப் புகழ் மிக்க நிரந்தரமான, சிறந்த நினைவுச் சின்னம் வேண்டும் என்று மாண்புமிகு முதல் அமைச்ச அறிவித்து அதற்கென்று ஒரு குழு அமைச்சர் அவர்கள் அதனுடைய ஆலோசனையை ஏற்று மிக அமைக்கப்பட்டிருக்கிறது. நினைவுச் சின்னத்தை அமைக்க விரைவிலே அந்த என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். முயற்சிகள் மேற்கொள்ளப்படும்

திரு. க. சுப்பு: மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இந்த அறிவிப்பு மிகவும் மகிழ்ச்சியான ஒன்று. வரவேற்கிறேன். இன்று மருதுபாண்டியனுடைய ஒரே மகன் துரைசாமி என்பவர் 1802-லே, கப்பலிலே ஏற்றப்பட்டு, அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது. அதனைப் பற்றிய குறிப்புகள், தகவல்கள் நிறைய இருக்கின்றன. அந்த வாரிசு இப்போது பினாங்கில் இருப்பதாக தகவல் இருக்கிறது. அதை எல்லாம் கண்டுபிடித்து, அவர்களைப் பற்றி அறிமுகம் செய்வதற்கும், அவைகளை எல்லாம் பெருமை யோடு பரப்புவதற்கும் இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: நிச்சயமாக இது சம்பந்தமான தகவலை தந்தால், தொடர்பு கொண்டு வேண்டிய வசதிகளை, முறையான வசதிகளை, செய்வதற்கு, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் நிச்சயமாக அனுமதிப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த ஒலி ஒளிக் காட்சியைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். அது கழுதை தேய்ந்து கட்டெறும்பாக மாறி விட்டதுபோல, நாடகம் நடத்துவதற்கு அனுமதி தருகிறோம், அல்லது திரைப்படம் எடுத்துத் தருகிறோம், என்று சொல்கி னார்கள். அந்த அளவுக்கு நிலைமை இருக்கிறது.

மாமல்லபுரத்தைப் பற்றியும் மற்ற சுற்றுலா தலங்களைப் பற்றியும் உலகம் முழுவதும் இருந்து வருபவர்கள் பார்த்துப் பாராட்டுகின்ற அந்த முயற்சிகளுக்கு ஊக்கம் அளித்தாக வேண்டும். அதற்காக மாநில அரசு மாத்திரம் அந்த



1978 மார்ச் 7] [திரு. ஆர். எம். வீரப்பன்]

முயற்சியிலே ஈடுபட முடியாது. ஏனென்றால் நான் முன்னாலேயே சொன்னேன். கேரளாவில் 2 கோடி ரூபாய் செலவு செய்யப் பட்டிருக்கிறது. மத்திய அரசால். மாமல்லபுரத்திலே ஒரு ஐ.டி.டி.சி. "Temple Bay" என்ற அரசாங்க விடுதிகட்ட 30 இலட்சம் ரூபாய்தான் செலவிடப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்காக நான் குறை சொல்ல வில்லை. அவர்களுக்கு எத்தனையோ பொறுப்புகள் இருக்கின்றன. இருந்தாலும் மாமல்லபுரத்தை கவனத்திலே எடுத்துக் கொள்ள வேண்டும். கன்னியாகுமரியை மறந்துவிடக் கூடாது, கைவிட்டு விடக்கூடாது என்று வேண்டுகோள்விட நான் கடமைப்பட்டிருக் கிறேன்.

மற்றபடி வேறு பெரிய குற்றச்சாட்டுகள், குறைகளைச் சொல்ல வில்லை. பல்வேறு மாவட்டங்களில் சுற்றுலாவை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். முன்னாலே சொன்னபடி இப்போதுதான் ஒரு மானியக் கோரிக்கையை நிறைவேற்றுகிற நிலைமைக்கு வந்திருக்கிறது. இது வளரும். நிதிநிலைமையும் மத்திய அரசும் மனமுவந்து ஏற்றுக்கொண்டால் இன்னும் மாவட்டங்களில் உள்ள பல்வேறு நிலையங்களை உருவாக்க முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். கணேசன்:** நம்முடைய மாண்புமிகு செய்தி—சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் நான் ஏதோ நீண்ட நாட்களாக இருந்த உணர்வை வெளிப்படுத்தினேன், என்று சொன்னார்கள். எந்த ஒரு சிறு தவறும் நடந்துவிட விட மாட்டோம் என்ற அந்தத் தரப்பிலே சொல்லப்படுகிறது. இங்கேகூட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொருட்காட்சிக்கு அழைப்பிதழ் அனுப்பியதாகச் சொன்னார்கள். நான் கூட எல்லா உறுப்பினர்களையும், வெளியூர் உறுப்பினர்களை, கேட்டேன் அவர்கள் வரவில்லை என்று சொன்னார்கள். நான் கூட நினைத்தேன் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களை ஒதுக்கி விட்டார்களோ என்று, ஆனால் காங்கிரஸ் உறுப்பினர்களுக்குக் கூட கிடைக்கவில்லை.

(பிற்பகல் 2-20)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : நான் முன்னமேயே தெரிவித்து விட்டேன். சென்னையில் இருப்பவர்களுக்கு அனுப்பி விட்டு, வெளியூரில் இருப்பவர்களுக்கு அனுப்பாமல் விட்டு விட்டார்களா என்று தெரியவில்லை, நான் பரிசீலிக்கிறேன் என்று முன்னமேயே சொல்லியிருக்கிறேன். என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் சுவாமிதாஸ் அவர்கள் வந்து இருப்பதாகச் சொல் கிறார்கள். ஆகவே, வெளியூருக்கும் போய் இருக்கிறது. ஒரு வேளை தபால்காரர் வேண்டுமென்றே மாண்புமிகு உறுப்பின கணேசனுக்குக் கொண்டு வந்து தரவில்லையோ என்னவோ எனக்குத் தெரியவில்லை. அதை விசாரிக்கிறேன்.

**திரு. நா. சுந்தரராஜ்** : திரு. சத்தியமூர்த்தி அவர்களுக் புதுக்கோட்டையில் ஒரு நினைவுச் சின்னம் அமைக்க அர முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்** : அதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறுதியாக நான் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள இன்னொரு துறையைப் பற்றிய அறிவிப்பை தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் கணேசன், போன்றவர்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும். அதாவது, நடமாடும் திரையரங்கம்—டூரிங் சினிமா—பற்றி நீண்டகாலமாக ஒரு வேண்டுகோள் இருக்கிறது. அவர்களுக்கு லைசென்சு மூன்றாண்டுகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள் 1933-ல் 3 மாதம் என்று ஆரம்பித்து, பிறகு 4 மாதம், பிறகு 6 மாதம் என்று ஆகி, 1949-ல் ஒரு வருஷமாக அது மாற்றப்பட்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் அதை 2 வருஷமாக மாற்றியிரு கிறார்கள். அதற்குப் பிறகு 1976 ஆம் ஆண்டில் அது 2 வருஷ 3 மாதம் என்று தந்து இருக்கிறார்கள். இதை இந்த அர 3 வருஷமாக நீடித்துத் தருவது என்ற முடிவை எடுத் இருக்கிறது என்பதையும், அதனுடைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மாவட்ட ஆட்சித் தலைவருடைய நிபந்தனைக்கு உட்பட்டு இருக்குமானால் மூன்றாண்டுகளுக்குத் தருவதாக முடிவு எடுத்து இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தாலே மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் முன்பே இதற்கு மிகக் குறைந்த தொகையைத்தான் கேட்டு இருக்கிறோம் என்று சொன்னார்கள். ரூ. 1,22,22,000—தான் வேண்டும் என்று கேட்டு இருக்கிறோம். இருப்பினும், இங்கே மேலும் அதிகம் செலவாகக்கூடிய வகையில் தான் மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் ஆலோசனையைக் கூறியிருக்கிறார்கள். ஆகவே, வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்த மாட்டார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, நீங்கள் அந்த வெட்டுத் தீர்மானங்களை பின்வாங்கிக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : விவாதம் முடிவுற்றது.

திரு. செ. இராமலிங்கம், திரு. என். வரதராஜன் ஆகியோ ருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன், திரு. எம். ஏ. லத்தீப் ஆகியோ ருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கள்வி : "மானியக் கோரிக்கை எண். 47. செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல்" என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,22,22,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று நாளைக்காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-24 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[1978 மார்ச் 7

(6) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

எதுவுமில்லை.

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

%92. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கான கொள்கை விளக்கக் குறிப்பு—கைத்தறி பஞ்சாலை, 1978-79 (ஆங்கிலம், தமிழ்)

% 93. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்கான கொள்கை விளக்கக் குறிப்பு—தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் வாரியம், 1978-79 (ஆங்கிலம், தமிழ்)

%% 94. கைத்தறி—துணி நூல் துறையின் 1978-79 ஆம் ஆண்டின் செயல்முறை வரவு-செலவுத்திட்டம் (ஆங்கிலம், தமிழ்).

% 95. கோரிக்கை எண். 22—கால்நடை பராமரிப்புக்கான கொள்கை விளக்கக் குறிப்பு, 1978-79 (ஆங்கிலம், தமிழ்).

% 96. 1977-78 ஆம் ஆண்டு தமிழ்நாடு கோழி அபிவிருத்தி நிறுவனத்தின் செயலாக்கம் பற்றிய மதிப்புரை (ஆங்கிலம், தமிழ்)

%% 97. சமூக நலத்துறையின் 1978-79 ஆண்டின் செயல் வினை முறைத் திட்டம் (ஆங்கிலம்)

% % 98. "மூப்புகால உதவித் தொகை" குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்)

% %99.கால்நடை பராமரிப்புத் துறையின் 1978-79 ஆம் ஆண்டின் செயல்வினை முறைத் திட்டம் (ஆங்கிலம், தமிழ்)

% % 100. தமிழ்நாட்டில் வேளாண்மை வளர்ச்சி பற்றிய ஆய்வுரை—தமிழ்நாடு வேளாண்மைப் பண்ணைக் கழகம், 1977-78.

% % 101. தமிழ்நாடு பால்வள நிறுவனம் பற்றிய ஆய்வுரை 1977-78 (ஆங்கிலம், தமிழ்)





% % 102. 1978-79 ஆம் ஆண்டு வேளாண்மைத் துறைக் ...ான கொள்கை விளக்கக் குறிப்பு (ஆங்கிலம், தமிழ்)

% % 103. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் ...ற்றிய ஆய்வுரை 1977-78 (ஆங்கிலம், தமிழ்)

% % 104. பால்பண்ணை வளர்ச்சித் துறை, பால் வழங்குத் ...திட்டம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1978-79 (ஆங்கிலம், தமிழ்)

% % 105. வேளாண்மைத் துறையின் 1978-79 ஆம் ஆண்டின் செயல்வினைமுறைத் திட்டம் (ஆங்கிலம், தமிழ்)

** 106. கோரிக்கை எண் 47. செய்தி, சுற்றுலா, திரைப்படத் ...தொழில் நுட்பப் பிரிவின் கொள்கை விளக்கக் குறிப்பு 1978 ...ஆங்கிலம், தமிழ்)

---

% 4-3-1978 அன்று பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்ப... பெற்றன.

% 5-3-1978 அன்று பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்ப... பெற்றன.

** 6-3-1978 அன்று பேரவை உறுப்பினர்களுக்கு அனுப்ப... பெற்றன.

## இணைப்பு I

[237-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 439-க்கான விடையைக் காண்க.]

(அ) துறையூர் கந்தசாரி கரும்பு சர்க்கரை உற்பத்தித் தொழிலாளர்கள் கூட்டுறவு சங்கத்தின்கீழ் துறையூரில் இயங்கி வந்த கந்தசாரி சர்க்கரை ஆலையின் இயந்திரங்களில் அடிக்கடி கோளாறு ஏற்பட்டதால் அதைப் பராமரிக்க பெரும் பொருள் செலவிட நேர்ந்தது. இதனால் இவ்வாலையில் உற்பத்தியாகும் சர்க்கரையின் அடக்க விலை வெளிச் சந்தையில் விற்கும் விற்பனை விலையை விட மிக அதிகமாக இருந்தது. கோத்தாரி சர்க்கரை ஆலை, சேலம் கூட்டுறவு ஆலை, தென் இந்திய எஃகு மற்றும் சர்க்கரை ஆலை முதலியவை துறையூருக்கு மிக அருகாமையில் இருப்பதால் இந்த ஆலைக்குத் தேவையான கரும்பு கிடைப்பதில்லை. மாநில சர்க்கரை இயக்குநர் அலுவலகத்தைச் சேர்ந்த தொழில் நிபுணர் ஒருவர் இந்த ஆலையைப் பார்வையிட்டு கந்தசாரி சர்க்கரை தொழிலில் கரும்புச்சாறு மற்ற பெரிய ஆலைகளில் பிழியப்படுவது போன்று பிழியப்படாமல் சாறு வீணாக்கப்படுகின்றது என்றும், இது ஒரு தேசிய இழப்பு என்றும் கருத்துத் தெரிவித்து தமிழ் நாட்டுக்கு கந்தசாரி சர்க்கரை உற்பத்தி உகந்ததல்ல என்றும் கூறியுள்ளார். மேலும், கரும்பு ஆலையை லாபகரமாக இயக்குவதற்கு சாத்தியக் கூறுகள் இருப்பினும் கரும்பு கொள்முதல் செய்யும் சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை சுட்டிக்காட்டி இந்த ஆலையை மேலும் பணம் செலவு செய்து எப்படியாவது நடத்த வேண்டும் என முயற்சிப்பது விரும்பத்தக்கதல்ல என்று திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளார். இதற்கிடையில், சங்க நிர்வாக இயக்குநர்கள் மேலும் ஆலையை தொடர்ந்து நடத்துவதில் ஆர்வம் இழந்து விட்டார்கள். மேற்கூறிய காரணங்களினாலும் சங்கம் 31-3-197 முடிய ரூ. 3,31,373.37 நட்டத்தில் இயங்கியதாலும் மேற்கொண் தொடர்ந்து நடத்தினால் நட்டம் மேன்மேலும் ஏற்படும் என்றும்



இதனைத் தடுக்கவே சங்கத்தை முடிவு கட்டுவதென அரசின் ஒப்புதலைப் பெற்று முடிவு எடுக்கப்பட்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயலர் அலுவலரால் மேல் நடவடிக்கை தொடரப்பட்டு வருகின்றது.

(ஆ) கூட்டுறவுச் சங்கத்தையே கலைப்பதற்கு முடிவு எடுக்கப்பட்டு மேல் நடவடிக்கை தொடரப்பட்டு வருவதால், இத்தொழிற்சாலையை மீண்டும் திறக்கும் பிரச்சினை எழவில்லை.

இணைப்பு II

(252ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கால்நடை பராமரிப்பு

### கோரிக்கை எண் 22.

### கொள்கை விளக்கம்.

I. முகவுரை.

பசு, எருமை, கோழி ஆகியவை சத்துள்ள உணவு உற்பத்தியை பன்மடங்கு பெருக்க, உழவுக்கு எருதுகளை அளிக்க உதவும் கால்நடை வளர்ச்சி, வேளாண்மையைப் பெரும்பாலும் சார்ந்துள்ள தமிழ்நாட்டில் பெரும் பங்கேற்கின்றது. நவீன இனவிருத்தி, பராமரிப்பு, கால்நடை மருத்துவம் ஆகியவற்றால் புதிய முறைகளைக் கையாண்டும், தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டங்களின் மூலமும் கடந்த பல ஆண்டுகளில் நல்லதொரு முன்னேற்றத்தைக் கால்நடை வளர்ப்பில் கண்டுள்ளோம்.

இத்துடன், கிராமப்புற மக்களின் வேலை வாய்ப்பு நிலைமை விரிவாக்கவும், ஊதியத்தைக் கூட்டுவதற்கும், ஊட்ட உணவுகள் வழங்குவதற்கும் கால்நடை வளர்ச்சித் திட்டம் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. கிராமப்புறங்களில் கால்நடைகளை வளர்ப்போரில் பெரும்பான்மையோர் சிறிய அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகள், ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகள், மற்றும் நிலமற்ற தொழிலாளர்கள் ஆவர். இத்தகைய ஏழை மக்கள் பயன் பெற மாநில அரசு, சிறப்பு கால்நடை வளர்ப்புத் திட்டம், ஆடு வளர்ப்புத் திட்டம் (வேளாண்மை மறுநிதி வளர்ச்சிக் கழகத்தின் மூலம்), மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத்தொடர்ச்சி மேம்பாட்டுத் திட்டம், வறட்சிப் பாங்கான பகுதித் திட்டம், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம், தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்டம், கேந்திர கிராமத் திட்டம் மற்றும் கால்நடை இன வளர்ச்சி, சுகாதாரப் பணிகளுக்கான பல சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.



II. முன்னேற்றத் திட்டங்கள்.

1. பொதுவானது :

உள்நாட்டுக் கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்காக கால்நடை பராமரிப்புத் துறை பல்வேறு திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. தற்பொழுது நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்களுள் சிலவும் அவற்றின் முக்கியத்துவமும் முன்னேற்றமும் வரும் பத்திகளில் சுருக்கமாக விவரிக்கப்படுகின்றன.

2 கேந்திர கிராமத் திட்டம் :

பால்வளம், உழவு மற்றும் இதர இழுவை வேலைகளுக்காக அந்தந்தப் பகுதிகளில் கலப்பின விருத்தி அல்லது தர உயர்வு படுத்துவதன் மூலமாகவும் அல்லது இன விருத்தி செய்வதன் மூலமாகவும் கால்நடைகள், எருமைகள் இவற்றின் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஒவ்வொரு கேந்திர கிராம வளர்ச்சி வட்டாரமும் ஒரு முக்கிய நிலையமும் பத்து கிளை நிலையங்களையும் கொண்டு ஒருங்கிணைந்த பகுதியில் இனவிருத்தி மூலம் பால் உற்பத்திக்கு பொருத்தமான மொத்தம் 10,000 பசுக்களையும், எருமைகளையும் கொண்டதாகும். தற்பொழுது மதுரை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 39 கேந்திர கிராம நிலையங்கள் உள்ளன.

3 தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம் :

தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம் கேந்திர கிராமத் திட்டத்தின் மீது மேம்பாடடைந்த ஒன்றாகும். கேந்திரக் கிராமத் திட்டம் மையமாக அமைந்த முக்கிய நிலையத்துடன் 10 கிளை நிலையங்களைக் கொண்டு, 12-லிருந்து 15 கிலோ மீட்டர் பரப்பளவிலுள்ள ஒரு செறிவுமிக்கப் பகுதியில் செயல்படுகையில், தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம், 50 கிளை நிலையங்களுடன் திருநெல்வேலி, தஞ்சாவூர், புதுக்கோட்டை

ஆகிய இடங்களிலும், 100 கிளை நிலையங்களோடு, மதுரையி
லும், பரந்த அளவில் பால் உற்பத்தி பெருக்கும் பொருட்டு
செயல்பட்டு வருகிறது. தற்போது, மதுரை, திருநெல்வேலி,
தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் 4 தீவிர
கால்நடைவளர்ப்பு நிலையங்கள் உள்ளன.

4. பொலிகாளை நிலையம் மற்றும் உறைவிந்து வங்கி:

தற்போது கறவை மாடுகளின் இன வளர்ச்சி செயல்
முறைகளில் கண்டுள்ள முன்னேற்றம், பெரும்பாலும் வம்சா
வழித்துறையில் அடைந்துள்ள முன்னேற்றத்தையே சாரும்.
இதன் முக்கியத்துவம் கருதி, தமிழ்நாட்டில் உயர் அயலினங்
களான பிரிசியன், ஜெர்சி, பிரவுன்ஸ்விஸ், ரெட்டேன்
போன்ற இனங்களும், உயர்ந்த இந்திய பால் இனங்களான
சிந்தி, தார்பார்க்கர், முர்ரா, காங்கேயம் மற்றும் உயர்
அயல் கலப்பினங்களும் மாவட்டங்களில் உள்ள பொலிகாளை
நிலையங்களில் பராமரிக்கப்படுகின்றன. இனவிருத்திக்குத்
தேவைப்படும் உயர்ந்த இன காளைகளின் விந்து தொடர்ந்து
போதிய அளவு இத்துறை நிலையங்களுக்கு அளிக்கும் வகை
யில், பொலிகாளை நிலையங்கள் செயல்படுகின்றன. தமிழ்
நாட்டில் தற்போது 59 பொலிகாளை நிலையங்கள் உள்ளன.

செயற்கை முறை இனவிருத்தி முறையில், உறைவிந்து
உபயோகித்தல் மிக்கப் பலன் தரக்கூடியதாகும். வம்சா
வழியில் சிறந்த இனப்பெருக்க ஆற்றல் மிக்க தேர்ந்தெடுக்கப்
பட்ட பொலிகாளைகளின் விந்தினை இம்முறையில் மட்டுமே
மிக அதிக அளவில் பயன்படுத்த இயலும். இத்தகைய உறை
விந்து நிலையங்கள் ஏற்படுத்த துவக்க காலத்தில் அதிக நிதி
ஒதுக்கீடு தேவைப்பட்டாலும், இம்முறையில் விந்து விரயம்
ஆகுதல் மிகவும் குறைவு. தமிழ்நாட்டில் முன்னோடித் திட்ட
மாக காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, வேலூர் ஆகிய இடங்
களில் உள்ள கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கேந்திர
கிராம நிலையங்கள், கால்நடை மருத்துவமனை, சைதாப்
பேட்டை, கால்நடை மருந்தக மற்றும் கேந்திர கிராம



நிலையம், செங்கல்பட்டு ஆகிய நிலையங்களுக்கு உறைவிந்து
வசதியுடன் கூடிய செயற்கை முறை இனவிருத்தி வசதிகள்
செய்யப்பட்டுள்ளன.

5. ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்புத் திட்டம்—வம்சாவழி ஆய்வுத்
திட்டம்:

வம்சாவழி ஆய்வு என்பது ஒரு பொலிகாளை ஒரு குறிப்
பிட்ட வகைப் பசுவுடன் சேருவதால் அப்பசு ஈனுகின்ற
கன்றுகளைக் கொண்டு அந்தப் பொலிகாளையின் இனப்பெருக்க
ஆற்றலை மதிப்பிட்டு. இந்த வழியில் அதுபோன்ற பொலி
காளைகளை வரிசைப்படுத்துகின்ற ஒரு முறை ஆகும்.

வம்சாவழி ஆய்வுத் திட்டம் மத்திய அரசு பொறுப்
பேற்கும் திட்டமாகும். இது சிவப்பு சிந்தி இனத்தைச்
சேர்ந்த பொலிகாளைகளை (இனப்பெருக்க ஆற்றல் குறித்துச்
சோதனை நடத்துவதற்கான காளைகள்) முறைப்படி அமை
யும் ஏற்பாட்டின்கீழ் உற்பத்தி செய்வதற்கான ஒருங்
கிணைந்த கால்நடை வளர்ப்புத் திட்டமாகும். இத்திட்டம்
ஹோசூரிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில்
1972ஆம் ஆண்டு முதல் செயற்பட்டு வருகிறது.

6. ஆநிரைக் காப்பகங்கள்:

தனிப்பட்ட அறக்கொடை நிறுவனங்களில் சிறிய அள
விலமைந்த பால் பண்ணைகள் நிறுவுவதற்காக அவற்றுக்கு
உதவித் தொகை அளிப்பதோடு தொழில் நுட்ப அறிவுரை
வழங்குவதே ஆநிரைக் காப்பகங்கள் திட்டத்தின் முக்கிய
நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு பண்ணைக்கும் உயர்
இனத்தைச் சேர்ந்த 10 பசுக்களும், 1 பொலிகாளையும் வழங்
குதல், கட்டிடங்களைப் புதுப்பித்தல், கால்நடைக் கொட்ட
கைகள் அமைக்க மானிய உதவித் தொகை ரூ. 5,000,
கால்நடை தீவனச் செலவுக்காக பத்து ஆண்டுகளுக்கு
தொடர் இன ஆண்டு பராமரிப்பு மானியமாக ரூ. 2,000

முதலிய உதவிகள் வழங்கப்படுகின்றன. இவ்வுதவியைப் பெற ஒவ்வொரு ஆநிரைக் காப்பகமும், அரசு உதவிக்குச் சம மான 10 பசுக்களை கொண்டிருக்க வேண்டும். தமிழ்நாட்டில் ஐந்து ஆநிரைக் காப்பகங்கள் உள்ளன. தற்போது

7. கால்நடை கண்காட்சிகளும் கால்நடை விளக்கக் காட்சிகளும் :

சிறந்த கால்நடை வளர்ப்பு முறைகளை மக்களிடையே பரப்புவதற்கும், கால்நடைகளை விஞ்ஞான முறையில் பாது காக்கவும் இம்மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கால்நடை கண்காட்சிகள் மற்றும் விளக்கக் காட்சிகள் நடத்தப்படு கின்றன. கேந்திர கிராமம் மற்றும் தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டப் பிராந்தியங்களில் கடந்த இரண் டாண்டுகளில் 14 கால்நடைக் கண்காட்சிகளும், கன்று பேரணிகளும் நடைபெற்றுள்ளன. தென் மண்டல கால் நடைக் கண்காட்சி மற்றும் அனைத்திந்திய கால்நடை கோழி கண்காட்சிகளில் நடைபெற்ற போட்டிகளில் நமது பண்ணை கால்நடைகள் போட்டியிட்டு பாராட்டுகள் பெற்றுள்ளன.

8. ஆடு வளர்ப்பு :

கிராமப் புறங்களில் முழு நேர வேலையற்றவர்களுக்கு ஆடு வளர்ப்பு சார்நிலைத் தொழிலாக அமைகின்றது. கிராமப் புறங்களிலும், மலைப்பகுதிகளிலுமுள்ள தாழ்த்தப் பட்ட சமுதாயத்தினர் தங்களின் வாழ்க்கைக்கான வருமானத்தைக் கணிசமாக அதிகரிக்கும் பொருட்டு அதிக வாய்ப்புகளை அளிக்கும் நோக்குடன் ஆடு வளர்ப்புத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. நாட்டுடைமையாக்கப் பட்ட வங்கிகள், வேளாண்மை மறுநிதி உதவி வளர்ச்சிக் கழகம், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலமாக நிதி உதவி பெறுவதற்கு வழிகள் வகுக்கப்பட் டுள்ளன. குறைந்த வட்டியில் கடன் உதவி அளிக்கப்படு கிறது. ஆடு வளர்ப்போருக்கு விஞ்ஞான முறையில் ஆடு வளர்க்க தொழில் முறை உதவியும் அளிக்கப்படுகிறது. தமிழகத்தில் சாத்தூர், சின்னசேலம் ஆகிய இடங்களில்



ஆட்டுப் பண்ணைகளும், மாவட்ட கால்நடைப் பண்ணை ஓசூர், செட்டி நாடு, அபிஷேகப்பட்டி, புதுக்கோட்டை ஆகிய இடங்களில் நான்கு ஆடு வளர்ப்பு நிலையங்களும் உள்ளன. மாண்டியா, மேச்சேரி, சென்னை சிவப்பு ஆடு, கீழக்கரிசல் மற்றும் அயலின ஆடுகளான காரிடேல், காரிடேல் கலப் பினம், ரோம்னிமேஷ் கலப்பினம் இந்நிலையங்களில் பரா மரிக்கப்படுகின்றன.

ஆடு வளர்ப்போரும் மற்றும் பிற முற்போக்கு விவசாயி களும் ஆடு வளர்ப்புத் தொழிலில் அதிக ஆதாயம் பெறவும், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துத் தங் களது பொருளாதார நிலைமையை மேம்படுத்திக் கொள்ளவும் வேளாண்மை மறுநிதி உதவி வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன் ஆடு வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டம் ஒன்று செயற்பட்டு வருகிறது. இம்மாநிலத்தில் 39 ஆடு வளர்ப் புக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன.

வேளாண்மை மறுநிதி உதவி வளர்ச்சிக் கழகத்தின் உதவி யுடன் இயங்கும் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள உபரியான செம்மறிக் கிடாக்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு விற்கப் படுகின்றன. இது தவிர, வட ஆற்காடு, தர்மபுரி, சேலம், இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்களிலுள்ள சங் கங்கள் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்கும், வறட் சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கும், சிறப்புக் கால் நடைத் திட்டங்களின் கீழ் இயங்கும் சங்கங்களிலுள்ள அங் கத்தினர்களுக்கும் செம்மறியாடுகள் வழங்கியுள்ளன.

9. கோழி வளர்ப்பு:

தற்சமயம் கால்நடைப் பராமரிப்புத்துறையின் கீழ் 39 கோழி விரிவாக்க நிலையங்களும், 2 குஞ்சு பொரிக்கும் நிலையங்கள், ஒன்று ஓசூரிலும் மற்றது காட்டுப்பாக்கத்திலும் இருக்கின்றன. இந்நிலையங்களின் முக்கிய நோக்கம் கோழி வளர்ப்பைத் தீவிரப்படுத்தவும், தடுப்பூசிகள் போடுவதன்

மூலம் நோய் நீக்க திட்டத்தைச் செயல்படுத்தவும், கோழி வளர்ப்பில் ஊக்கமளிக்கும் வகையில் கோழி வளர்ப்போருக்குக் கடன் வசதிகள் பெற உதவி செய்வதும் ஆகும். ஓசூர், ஒரத்தநாடு, புதுக்கோட்டை, செட்டிநாடு, திருநெல்வேலி மாவட்ட கால்நடை பண்ணைகளுடனும், சாத்தூர், சின்ன சேலம் ஆட்டுப் பண்ணைகளுடனும் கோழி வளர்ப்பு நிலையங்கள் இணைக்கப்பட்டு உள்ளன. கோழி விரிவாக்க நிலையங்களைச் சுற்றிலும் முட்டை உற்பத்திக்காக 956 கொல்லைப் புற கோழி வளர்ப்பு பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தரமுள்ள சத்துணவு கிடைப்பதுடன் கோழி வளர்ப்போரின் வருமானமும் அதிகரிக்க ஏதுவாகிறது.

தற்சமயம் தமிழ்நாட்டில் 11 கோழி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களும், 1 கோழி வளர்ப்பு கூட்டு விற்பனைச் சங்கமும் இருக்கின்றன. இதிலுள்ள அங்கத்தினர்கள் தரமான கோழிகள் வாங்கவும், வளர்க்கவும், நவீன முறைகளைப் பின்பற்றி கோழி வளர்ப்பில் அபிவிருத்தி காணவும் இச்சங்கங்கள் உதவுகின்றன. கோழி வளர்ப்புத் தொடர்பான வணிக முறைக் கூறுகளை அரசால் ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு கோழி வளர்ச்சி நிறுவனம் கவனிக்கிறது.

10. தமிழ்நாடு கோழிப்பண்ணை வளர்ச்சி நிறுவனம், சென்னை:

மாநிலத்தில், கோழிப்பண்ணை வளர்ச்சி குறித்த பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதும், அதே சமயத்தில் பொருளாதார வகையில் தனித்தியங்கக்கூடியதாக இருப்பதற்கு வகை செய்து கொள்வதுமே இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். கோழிப்பண்ணைப் பொருட்களுக்கு வணிக முறையில் விற்பனை வசதிகளை செய்து கொடுத்தல், நுகர்வோரின் நலனை முன்னிட்டு விலைகள் உயராமல் பார்த்துக் கொள்வதும் மற்றும் கோழி வளர்ப்போரின் பொருளாதாரத் தரத்தை உறுதிப்படுத்துவதும் இதன் இரு நோக்கங்களாகும்.

இந்நிறுவனத்தின்கீழ், தீவனப் பிரிவுகள், சென்னை மாவட்டத்தில் நந்தனம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில்



கோட்டப்பட்டு ; மதுரை மாவட்டத்தில் கல்லுப்பட்டி ; கோயம்புத்தூர் மாவட்டத்தில் திருப்பூர் மற்றும் சேலம் மாவட்டத்தில் சேஷஞ்சாவடி ஆகிய ஐந்து இடங்களில் உள்ளன. தமிழ்நாடு கோழிப்பண்ணை வளர்ச்சி நிறுவனத்தின் கோழித் தீவனத்திற்கு மக்களிடையே நாளும் வளர்ந்து வரும் தேவையை கருத்திற்கொண்டு மணிக்கு 4 மெட்ரிக் டன் அளவு தீவனம் உற்பத்தி செய்யும் திறன் கொண்ட பெரிய அளவிலான தீவனக் கலவை நிலையம் ஒன்று நந்தனத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அந்நிலையம் விரைவில் உற்பத்தியினைத் துவக்கும்.

இந்நிறுவனத்தின் கீழ் விற்பனைப் பிரிவுகள் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், சேலம், செங்கல்பட்டு, திருநெல்வேலி மற்றும் வேலூர் ஆகிய எட்டு இடங்களில் உள்ளன. இந்நிறுவனம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் அரசூரிலும், மதுரை மாவட்டத்தில் கப்பலூரிலும் குஞ்சு பொரிப்பு நிலையங்களை நடத்தி வருகின்றது.

முன்னால் கோழி விரிவாக்க நிலையங்கள் என்ற பெயரால் இயங்கி வந்த நிலையங்கள் தற்பொழுது பெயர் மாற்றம் செய்யப்பட்டு கோழிக்குஞ்சு வளர்க்கும் பண்ணைகள் மற்றும் விரிவாக்க நிலையங்கள் என்ற பெயரில் இயங்குகின்றன. தற்போது இந்நிறுவனத்தின் கீழ் அடையாறு, செங்கல்பட்டு, கோட்டப்பட்டு, கல்லுப்பட்டி, பெருந்துறை மற்றும் சேஷஞ்சாவடி ஆகிய ஆறு இடங்களில் இப்பண்ணைகள் உள்ளன. இந்நிலையங்களில், மிக அதிக அளவில் வீரிய கோழிக் குஞ்சுகள் வளர்த்து கால்நடை வளர்ப்புச் சிறப்புத் திட்டம், சத்துணவு ஊட்டத்திட்டம், ஊராட்சி ஒன்றிய திட்டங்கள் போன்ற வளர்ச்சித் திட்டங்களுக்கு வழங்கப்படுவதுடன், கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோருக்கும் நேரடியாக விற்கப்படுகின்றன. அடையாரில் இருக்கும் கோழிக்குஞ்ச வளர்ப்பு நிலையம், சென்னை வாழ் மக்களின் இறைச்சித் தேவைக்காக மட்டுமே கோழிக் குஞ்சுகளை வளர்க்கின்றது.

[1978 மார்ச் 7

இந்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட கால்நடை வளர்ப்புச் சிறப்புத் திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்புத் திட்டத்தினை இந்நிறுவனம் மதுரை, செங்கற்பட்டு, சேலம், வடஆற்காடு ஆகிய நான்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தி வருகின்றது. இத் திட்டம் சிறிய அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கும், ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கும் மற்றும் நிலமற்ற விவசாய தொழிலாளர்களுக்கும் உதவி செய்வதற்காகவுமே தீட்டப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் பலன் பெறுவதற்காக, இதுவரை 1,707 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்நிறுவனமானது, இத்திட்டத்தின்கீழ் பங்கேற்பவர்களுக்குக் கோழிக் குஞ்சுகள், தீவனம் மற்றும் தொழில் நுட்ப அறிவுரையும் வழங்குவதுடன் அல்லாமல், கிடைக்கும் முட்டைகளையும், கழிக்கப்பட்ட கோழிகளையும் பங்கேற்பவர்களுக்கு நன்மை பயக்கும் வகையில் விற்பனை செய்யவும் உதவும்.

1978–79 ஆம் ஆண்டிற்கான மூலதனச் செலவிற்காக தமிழ்நாடு கோழிப் பண்ணை வளர்ச்சி நிறுவனத்திற்கு மூலதனப் பங்குத் தொகையாக கூடுதலாக ரூ. 15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

11. பன்றி வளர்ப்பு :

இம்மாநிலத்தில் தற்போது பன்றி வளர்ப்புப் பண்ணை என்று தனியாக ஏதுமில்லை. 9 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஓசூர், புதுக்கோட்டை, ஒரத்தநாடு, திருநெல்வேலி, உதகமண்டலம், செட்டிநாடு ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணைகளிலும், சின்னசேலம், சாத்தூர் ஆட்டுப் பண்ணைகளிலும், சைதாப்பேட்டை கால்நடை மருத்துவமனைப் பகுதியிலும் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் செய்முறை விளக்கப் பிரிவுகளாகவும், உழவர்கள் பன்றி வளர்ப்புப் பிரிவுகள் தொடங்குவதற்காக குட்டி ஈனும் பன்றிகளை வாங்கவும் பயன்படுகின்றன. இப்



1978 மார்ச் 7]

பிரிவுகளில் பெரிய வெள்ளை யார்க்ஷயர் பன்றிகள் பராமரிக்கப்படுகின்றன.

12. தீவனப் பயிர் அபிவிருத்தி:

கலப்பின முறை மூலம் செயற்படுத்தப்படும் கால்நடை வளர்ப்பின் வெற்றி, அதே சமயத்தில் செயல்படுத்தப்படும் தீவனப் பயிர் அபிவிருத்தியைச் சார்ந்துள்ளது. பச்சை, உலர்ந்த தீவன தேவையில் தமிழகம் பின்தங்கியுள்ளது. கால்நடைத் தீவனப் பயிர் உற்பத்திப் பிரிவுகள் செங்கற்பட்டு மாவட்டத்தில் படப்பை, தென்னாற்காடு மாவட்டத்தில் சின்னசேலம், திருநெல்வேலி, புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணைகளிலும் செயல்பட்டு வருகின்றன.

'மினி கிட்' அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் தஞ்சாவூர் மற்றும் மதுரை தீவிர கால்நடைத் திட்டப் பரப்பில் விவசாயிகளுக்கு தீவன விதைப்பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன. இதுவரையில் இத்திட்டத்தின் மூலம் 450 விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

13. சிறப்புத் திட்டங்கள்:

(1) கால்நடை வளர்ப்புச் சிறப்புத் திட்டம்.—இந்திய அரசு கேட்டுக்கொண்டதன் பேரில் இம்மாநிலத்தில் சில மாவட்டங்களில் கால்நடை வளர்ப்புச் சிறப்புத் திட்டத்தினை செயல்படுத்துவதற்காக, கால்நடை வளர்ப்புத் துறை, இத் திட்டத்தை உருவாக்கியது. 25,000 கலப்பின இளம் பசுங் கன்றுகளை வளர்த்தல், 6,000 கோழி வளர்ப்புப் பிரிவுகளையும், 9,000 செம்மறி ஆடு வளர்ப்புப் பிரிவுகளையும் தொடங்குதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.

கீழ்க்காணும் மாவட்டங்களில் தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சி நிறுவனம் கன்றுகள் வளர்த்தல் திட்டத்தினையும், தமிழ்நாடு கோழியின வளர்ச்சி நிறுவனம் கோழியினப்

பெருக்குத் திட்டத்தினையும், கால்நடை வளர்ப்புத்துறை செம்மறி ஆட்டு இனப் பெருக்குத் திட்டத்தினையும் செயல் படுத்தி வருகின்றன :

| மாவட்டம். (1) | திட்டங்கள். (2) |
|---|---|
| 1. சேலம் .. .. | கன்று வளர்த்தல், கோழி வளர்த்தல், செம்மறி ஆடு வளர்த்தல். |
| 2. வட ஆற்காடு .. | கன்று வளர்த்தல், கோழி வளர்த்தல், செம்மறி ஆடு வளர்த்தல். |
| 3. மதுரை .. .. | கன்று வளர்த்தல், கோழி வளர்த்தல். |
| 4. தென் ஆற்காடு .. | கன்று வளர்த்தல். |
| 5. கோயமுத்தூர் .. | கன்று வளர்த்தல். |
| 6. திருநெல்வேலி .. | செம்மறி ஆடு வளர்த்தல். |
| 7. செங்கல்பட்டு .. | கோழி வளர்த்தல். |

(i) கன்று வளர்த்தல்.—மூன்றும் மாதம் முதல் 28 ஆம் மாதம் வரையில் தேவையான உதவியை மானியமாக தீவன வடிவில், தேர்ந்தெடுக்கப்பட்ட சிறிய அளவு நிலம் வைத்திருக்கும்/ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கும், வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் இத்திட்டத்தின்கீழ் அளிக்கப்படும். சிறிய அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயி/ஓரளவு நிலம் வைக்



திருக்கும் விவசாயி, உதவித் தொகையாக 800 ரூபாயையும், கடனாக 800 ரூபாயையும் பெறுவார். வேளாண்மைத் தொழிலாளர், உதவித் தொகையாக 1,066 ரூபாயையும், கடனாக 534 ரூபாயையும் பெறுவார். 28ஆம் மாதம் வரையில் கன்று ஒன்றினை வளர்ப்பதற்கு ஆகும் மொத்த செலவு ரூ. 1,600 ஆகும்.

(ii) செம்மறி ஆட்டு இனப்பெருக்குத் திட்டம்.—செம்மறி ஆட்டுப்பிரிவு ஒவ்வொன்றிலும் 20 செம்மறி ஆடுகளும் ஒரு ஆட்டுக்கிடாவும் இருக்கும். அப்பிரிவில் மொத்த மூலதனச் செலவு ரூ. 3,000 ஆகிறது. அத்தொகையில், சிறிய அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு ரூ. 750 உதவித் தொகையாகவும், ஓரளவு நிலம் வைத்து இருப்போர்களும் வேளாண்மைத் தொழிலாளர்களும் உதவித் தொகையாக 1,000 ரூபாயும் பெறுவர். நெல்லை மாவட்டத்தில் 33 ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கங்களும், சேலத்தில் 25-ம், வட ஆற்காட்டில் 18-ம், இத்திட்டத்தின் கீழ் தற்சமயம் இயங்கிவருகின்றன. இம்மாவட்டங்களில் 930 செம்மறியாட்டு பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன. 3,939 விவசாயிகள் பயன் பெற்றனர்.

(iii) கோழியினப் பெருக்குத் திட்டம்.—கோழி வளர்ப்புப் பண்ணை ஒவ்வொன்றிலும், முட்டையிடும் 100 கோழிகள் இருக்கும். ஒரு பண்ணைக்கு ஆகும் மொத்த மூலதன செலவு சுமார் ரூ. 5,330 ஆகும். சிறிய அளவு நிலம் வைத்திருக்கும் ஒவ்வொரு விவசாயியும், உதவித் தொகையாக 1,330 ரூபாயும், ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயியும் வேளாண்மைத் தொழிலாளரும் உதவித் தொகையாக 1,776 ரூபாயும் பெறுவர். இத்திட்டத்தின் கீழ் 1,707 விவசாயிகள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(2) மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் : [1978 மார்

சிறப்பு மத்திய உதவியின் மூலம் நிதியுதவி பெறும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 500 தேர்ந்தெடுக்கப்பட்ட உழவர்கள், சிறு உழவர்களுக்கும் மற்றும் 500 வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும், 1977-78 ஆம் ஆண்டில் உதவித் தொகை வழங்கும் பொருட்டு ரூ. 4.5 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது. உற்பத்தி நிலை வரை, 1,000 கலப்பின கன்றுகளை வளர்ப்பதற்காக தீவன உதவித் தொகை வடிவில் உழவர்கள் உதவி பெறுவர்.

(3) மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம் :

இந்திய அரசு ஆதரவு பெற்ற மலைப்பகுதி வளர்ச்சித் திட்டத்தின்கீழ், நீலகிரி மாவட்டம், கால்நடை வளர்ப்ப வளர்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

செம்மறி ஆடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 200 செம்மறி ஆடு வளர்ப்புப் பிரிவுகள் அமைப்பதற்காக 1977-78 ஆம் ஆண்டில் ரூபாய் 4 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. உதகமண்டலம் மாவட்டக் கால்நடை வளர்ப்பு பண்ணையை விரிவுபடுத்தும் திட்டத்தின்கீழ், கால்நடை கொட்டகைகள், கிணறுகள் வெட்டுதல், தெளிப்பு நீர்ப்பாசன வசதிப் பிரிவு, தடுப்பு அணை, பசுந்தீவன பதன அறை, பால்பண்ணை சாதனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்காக 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 3·63 இலட்சம் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

(4) பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் :

தமிழ்நாட்டில் சேலம், தென்னாற்காடு, திருச்சிராப் பள்ளி, தருமபுரி, வட ஆற்காடு ஆகிய ஐந்து மாவட்டங் களில் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகள் ஒன்பது உள்ளன. மேற்கூறியவற்றில் சேலம் மாவட்டமும் அதற்கு அடுத்த படியாக தென்னாற்காடு மாவட்டமும் பெருவாரியான பழங்குடியினர்களைக் கொண்டுள்ளன. கறவை மாடுகளை வளர்த்தல், கோழி வளர்ப்பு நிலையங்களை அமைத்தல், பன்றி வளர்ப்பு நிலையங்களை அமைத்தல், தீவன



புல் நாற்றுக்களை வழங்குதல், சுகாதார வசதிகளை வழங்குதல் போன்றவற்றில் பழங்குடி மக்களுக்கு உதவ அரசு முன்வந்துள்ளது.

ரூ. 16·50 இலட்சம் செலவில், 1977-78 ஆம் ஆண்டில் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் கால்நடை வளர்ப்பு வளர்ச்சிக்காக துணைத் திட்டம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

(5) வறட்சிப்பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

தமிழ்நாட்டில் வறட்சிப்பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில், தருமபுரி மாவட்டமும், இராமநாதபுரம் மாவட்டமும் அடங்குகின்றன. மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான வருமானத்தை அளித்தல், சுற்றுப்புறப் பகுதி களில் தரம் வாய்ந்த கால் நடைச் செல்வத்தைப் பெருக்குதல் ஆகிய இவ்விரண்டும் இத்திட்டத்தின் நோக்கமாகிறது. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்குத் துணைத் தொழில் வாய்ப்பினை அளிப்பதற்கும் வகை செய்கிறது.

(i) இராமநாதபுரம் மாவட்டம்: 1977-78 ஆம் ஆண்டில், 325 கறவை மாடுகள் வழங்குவதற்காகவும், 750 செம்மறி ஆடு பிரிவுகளைத் தொடங்குவதற்காகவும், பால்பண்ணை வளர்ச்சிக்கு நிதியுதவி அளிப்பதற்காகவும், ரூ. 13.23 இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ii) தருமபுரி மாவட்டம்.—1977—78 ஆம் ஆண்டில் 400 செம்மறி ஆடு வளர்ப்புப் பிரிவுகளைத் தொடங்குவதற்காகவும் மற்றும் 300 செம்மறி ஆடு வளர்ப்புப் பிரிவுகளைக் கொண்ட 6 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கவும், ரூ. 7.38 இலட்சம் ஒதுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

### (6) ஒருங்கிணைந்த மாதிரிப் பொருள் ஆய்வுத் திட்டம் :

தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த மாதிரி ஆய்வுத் திட்டம் என்னும் மத்திய அரசு ஆதரவு திட்டத்திற்குத் தமிழ்நாடு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பால், முட்டை, கம்பளி, இறைச்சி போன்ற கால்நடை உற்பத்தி பொருட்களின் விவரங்களைத் தொகுத்து சேகரிப்பதற்காக, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் முழுவதிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### III. கால்நடைப் பண்ணைகள் :

கால்நடைப் பராமரிப்புத் துறையின்கீழ் ஒசூர், ஒரத்தநாடு, கொற்கை, செட்டிநாடு, அபிஷேகப்பட்டி, உதகமண்டலம், புதுக்கோட்டை ஆகிய ஏழு இடங்களில் கால்நடைப் பண்ணைகள் இயங்கி வருகின்றன. உயரினப் பொலி காளைகள் கிடைக்கச் செய்வதற்காக, இக் கால்நடைப் பண்ணைகள் ''மூலப் பண்ணை''களாகச் செயல்படுகின்றன. இப் பண்ணைகளில், இந்திய இனக் கால்நடைகளும், அயல் இனக் கால்நடைகளும் பராமரிக்கப்படுகின்றன.

கால்நடைப் பண்ணைகளில் செம்மறி ஆடுகள், கன்றுகள், கோழிகள் போன்ற இதர கால்நடைகளும் வளர்க்கப்படுகின்றன. இக் கால்நடைப் பண்ணைகளில், 6 கோழி அபிவிருத்திப் பகுதிகளும், 4 ஆடு அபிவிருத்திப் பகுதிகளும், 6 பன்றி அபிவிருத்திப் பகுதிகளும் இணைக்கப்பட்டுள்ளன. பொது மக்கள் தங்கள் நிலங்களில் பசுந்தீவனம் பயிரிட்டு பெருக்குவதற்காக, கால்நடைப் பண்ணைகளில் பலவகையான, நமது பருவகால சூழ்நிலைக்கேற்ற தீவனப் புல் பயிர்கள் உற்பத்தி செய்ய, விதை நாற்றுகள் விநியோகிக்க விதைப் பண்ணைகள் இயங்குகின்றன. மேலும் இந்த கால்நடைப் பண்ணைகள் கால்நடை மருத்துவக் கல்லூரியில் பயிலும் பட்டதாரி மாணவர்களுக்கு, பண்ணை பராமரிப்பு முறைகளில் நேரடிப் பயிற்சி அளிக்கும் நிலையங்களாகப் பயன்படுகின்றன.



**அயல் இன கால்நடைப் பண்ணை, ஈச்சங்கோட்டை.**

தஞ்சை மாவட்டத்திலுள்ள ஈச்சங்கோட்டையில் உயர் அயல் இனமான ஜெர்சி இன கால்நடைகள் வளர்க்க, அயல் இன கால்நடைப் பண்ணை ஒன்று துவக்கப்பட்டுள்ளது. டென்மார்க் உதவியுடன் ஈச்சங்கோட்டையில் ஓர் உறை விந்து நிலையமும் நிறுவப்பட்டு வருகிறது. இதன் மூலம் இனவிருத்தி வசதிகளை தஞ்சை மாவட்டம் முழுமையும், எல்லாப் பகுதிகளிலும் செயற்கை இனவிருத்தி கிளை நிலையங்கள் மூலம், முதற்கட்டமாக உறை விந்து விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, இப்பண்ணைக்கு ஆஸ்திரேலியாவிலிருந்து 111 ஜெர்சி இன மாடுகள் அண்மையில் வந்துள்ளன.

### IV. கால்நடை நோய் நீக்கப் பணிகள் :

ஆற்றலுடன் நோய்களைக் கட்டுப்படுத்துவதும் அவைகளை முற்றிலும் ஒழிப்பதும் கால்நடை நோய் நீக்கப் பணியின் முக்கிய குறிக்கோளாகும். இதற்கான சகல சாத்தியக் கூறுகளையும் மேற்கொள்ளுவது அரசின் கடமையாகும்.

தற்சமயம் தமிழகத்தில் நோய் நீக்குப் பணிகளை மேற்கொள்ளுவதற்காக 38 கால்நடை மருத்துவ மனைகளும், 10 கால் நடை மருத்துவ கேந்திர கிராம நிலையங்களும், 509 கால்நடை மருந்தகங்களும், 78 கால்நடை மருந்தக கேந்திர கிராம நிலையங்களும் ஆக மொத்தம் 635 நிலையங்கள் உள்ளன.

(i) பிரதம மருத்துவ நிலையங்கள்.—

மாவட்ட தலைமையிடங்களில் இயங்கும் கால்நடை மருத்துவ மனைகளில், நோய்களைக் கண்டுபிடிப்பதற்கும், மருத்துவம் அளிப்பதற்குமான நவீன வசதிகளுடன் கூடிய பரிசோதனைச் சாலைகளை ஏற்படுத்தி, பிரதம மருத்துவர் ஒருவரின்கீழ் இயங்கும் பிரதம மருத்துவ மனைகளாக உயர்த்தப்பட்டுள்ளன. இத்தகைய மருத்துவ மனைகள் சென்னை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு இடங்களில் இயங்கி வருகின்றன.

[1978 மார்ச் 7

(ii) கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள்.—

கவனத்துடன், விரைவாகவும் நவீன முறைகளில் நோய்களைக் கண்டு பிடிக்கவும், புதிய மருந்துகள் புகுத்தவும், 1977–78 ஆம் ஆண்டு ஒரு புதிய திட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ், வேலூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் மூன்று கால்நடை நோ புலனாய்வுப் பிரிவுகள் செயல்படுகின்றன். ஒவ்வொரு விலும் (1) நுண்மை ஆய்வு-ஒட்டுயிர் ஆய்வு, (2) இய முறை-நோய்க்குறி ஆய்வு, (3) தடுப்பு மருந்து ஆகிய 3 பிரி கொண்ட ஒரு மருத்துவ பரிசோதனைக் கூடம் இரு மருத்துவ பரிசோதனைகளைக் கொண்ட நடமாடும் ஊ இந்நிலையங்களுடன் இணைக்கப்பட்டு, சாதாரண நோய்களை மட்டுமின்றி கொடிய குடற்புழுக்களையும் கண்டுபிடிக்கும் அளவீடும் மேற்கொள்ளப்படும்.

(iii) வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்.—

வெக்கைநோய் மிகக் கொடுமையான தொத்து நோய். இந்நோய் கொண்ட மாடுகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள் ஆகியவை மந்தை மந்தையாக இறப்பதனால் பெரும் இழப்பு ஏற்படுகின்றது. மேலும், பால் உற்பத்தி, இறைச்சி உற்பத்தி முதலியனவும் குறைந்து விடுகின்றன. இந்நோய் கால்நடைகளுக்கு ஆண்டின் எல்லாக் காலத்திலும், எந்த வயதிலும் பால் வேறுபாடின்றி ஏற்படுகின்றது. இந்நோய் ஒழிப்பிற்காக மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமொன்று தமிழ்நாட்டில் செயலில் இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் கீழ்க்காணும் பிரிவுகளின் மூலமாக வெக்கை நோய்த் தடுப்பு ஊசி குத்தும் பணி நடைபெற்று வருகிறது :—

(1) வெக்கைநோய்த் தடுப்பூசி குத்தும் மாவட்டக் குழுக்கள். .. 14

(2) கண்காணிப்புப் பிரிவுகள் .. 10

(3) சோதனைச் சாவடிகள் .. 13



1978 மார்ச் 7]

மேலும் அரசு இம்மாநிலத்திலுள்ள தொற்று நோய் பரவக் கூடிய சூழ்நிலைகளைக்கொண்ட இடங்களைச் சீராக கண்டறிந்து ஆங்கு அந்நோயினைக் கட்டுப்படுத்துவதற்காக, தடுப்பூசிகள் போடுவதற்காக ‘ வெக்கை நோய் கண்காணிப்பு மற்றும் தடுப்பதற்கான திட்டம் ’ ஒன்றிற்கு அண்மையில் ஒப்புதல் வழங்கியுள்ளது.

(iv) இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு நிலையம்.—

கடும் தொற்று நோயினால் பெருவாரியான கால்நடைகள் இறந்துவிடுவதன் காரணமாக, இத்தகைய நோய்களைக் கட்டுப்படுத்துவது குறித்து கவனம் செலுத்துவது இன்றியமையாததாகும். பல்வேறு தொற்றுநோய்கள் பரவாவண்ணம் கால்நடைகள் உரியவாறு பாதுகாக்கப்பட்டால்தான் கால்நடைகளை பெருமளவுக்கு உற்பத்தி செய்ய முடியும். இராணிப்பேட்டையிலுள்ள இந்நிலையம் தற்போது நோய்த் தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்வதோடு நோய்த் தடுப்பு மருந்தின் தரத்தை உயர்த்துதல், நோய்த் தடுப்பு மருந்துகளைப் புதிதாகக்கண்டுபிடித்தல், பல்வேறு நோய்க்கான காரணங்கள், அவற்றைத் தடுப்பதற்கான முறைகள் ஆகியவை குறித்து ஆய்வு செய்தல் முதலிய ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுள்ளது. இந்நிலையத்திலிருந்து பல ஆராய்ச்சிக் குறிப்புகளும் வெளியிடப்படுகின்றன. இந்நிலையத்தில் 23 உயிரியல் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றைக் கொண்டு நமது மாநிலத்தின் தேவைகளை நிறைவு செய்வதோடு மட்டுமல்லாது அண்டை மாநிலங்களுக்கும் வழங்கப்படுகின்றன. சென்னை கால்நடைக் கல்லூரி, கால்நடை மருத்துவ பட்ட மேற்படிப்பு மாணவர்கள், பட்டப் படிப்பு இறுதியாண்டு மாணவர்கள் கொண்ட குழுவினர் பல்வேறு உயிரியல் பொருட்களைத் தயாரிக்கும் முறையையும் அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பதுபற்றியும் அறிந்து கொண்டு அவற்றில் பயிற்சி பெற ஒவ்வொராண்டும் முகமையில் அனுப்பப்படுகின்றனர். அண்மையில் இந்நிறுவனத்தினை விரிவாக்குவதற்கும், வலுப்படுத்துவதற்கும் ரூ. 21·81 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

[1978 மார்ச் 7

(v) வெறிநோய்த் தடுப்பு மருந்து (ஒரு ஊசி).—

தற்சமயம் வெறிநோய்த் தடுப்பூசி மாடுகளுக்கு 14 நாட்களுக்கும், ஆடுகளுக்கு 10 நாட்களுக்கும், நாய்களுக்கு 7 நாட்களுக்கும் போடப்படுகின்றன. நாய்களுக்கு நீண்டகாலத் தேவையான ''ஒரு ஊசி'' வெறிநோய்த் தடுப்பு மருந்தை இந்நிலையம் உற்பத்தி செய்வதின் மூலம் மக்களுக்கு பெரிதும் உதவியுள்ளது.

(vi) பரிசோதனைக்கூடங்கள்.—

தமிழகத்தில் 13 மாவட்டங்களில் 13 பரிசோதனைக் கூடங்கள் இயங்கி வருகின்றன. இவைகளின் மூலம், நோய்க்கான காரணம் உடனடியாகக் கண்டுபிடிக்கப்படுவதுடன் தகுந்த சிகிச்சையும், தடுப்புப் பணியும் மேற்கொள்ள துறைஅலுவலர்களுக்கு உதவுகின்றன.

vii) நடமாடும் நிலையங்கள்.—

தமிழகத்தில் சென்னை, விருதுநகர், சிவகங்கை ஆகிய இடங்களில் மூன்று நடமாடும் கால்நடை நிலையங்கள் இயங்கி வருகின்றன.

V. கால்நடைப் பராமரிப்புத்துறையின் நிர்வாக அமைப்பு

கால்நடை பராமரிப்புத்துறை மண்டல அடிப்படையில், செயல்படுகிறது. கால்நடை பராமரிப்பு இயக்குநரின் மேற்பார்வையின்கீழ் துறையின் அனைத்து நடவடிக்கைகளும் கால்நடை பராமரிப்பு இயக்குநர் அலுவலகத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இம்மாநிலம் எட்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் கால்நடை பராமரிப்புத் துணை இயக்குநர் ஒருவரின் பொறுப்பில் உள்ளது.



கால்நடை பராமரிப்பு இணை இயக்குநர் இருவரும் கால்நடை பராமரிப்பு துணை இயக்குநர் ஒருவரும் கால்நடை பராமரிப்பு இயக்குநருக்கு உதவி புரிகின்றனர். இந்த அலுவலகத்தில் வெக்கை நோய் அலுவலர் ஒருவரும் இருக்கிறார். இந்த மாநிலத்தில் வெக்கை நோய் ஒழிப்புத் திட்டத்திற்கு அவர் பொறுப்பு ஏற்றுள்ளார். ஆடு, கோழி மற்றும் பிற இனம் வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், மேற்பார்வையிடுதல், கட்டுப்படுத்தல் முதலியவற்றிற்கு கால்நடை பராமரிப்பு இயக்குநருக்கு கூட்டுறவுச் சங்கங்களின் துணைப்பதிவாளர் உதவி புரிகிறார். இயக்குநர் அலுவலகத்தில் கால்நடைப்பண்ணை பராமரிப்பு விவரங்களைப் பராமரிப்புச் செய்வதற்கும், இந்திய அரசு ஒருங்கிணைப்பு மாதிரி ஆய்வுத் திட்டப் பொறுப்புக்கும், இரண்டு கால்நடைப் பராமரிப்பு புள்ளிவிவர இயலாளர் உள்ளனர். மாநிலம் முழுவதும் கால்நடைத்தீவன வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, வேளாண்மைத் துறையைச் சேர்ந்த தீவன வளர்ச்சி அதிகாரி ஒருவர் இயக்குநர் அலுவலகத்தில் இருக்கிறார்.

தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள கால்நடை பராமரிப்பு மண்டலத் துணை இயக்குநர்களுக்கு, ஒருவர் கால்நடைப் பராமரிப்புக்கும், மற்றொருவர் நோய் ஆய்விற்குமாக இரண்டு சிறப்பறிஞர்கள் உதவி புரிகின்றனர். மற்ற கால்நடை பராமரிப்பு மண்டலத் துணை இயக்குநர்களுக்கு ஒரு சிறப்பறிஞர் உதவி புரிகிறார். நோயினைக் கட்டுப்படுத்துவதே சிறப்பறிஞரின் (நோய் ஆய்வாளர்) முக்கிய திட்டப் பணியாகும். ஒவ்வொரு மண்டலமும் மீண்டும் ஒரு வருவாய்த் துறை வட்டாரம் மற்றும் தாலுக்காவினை உள்ளடக்கிய கால்நடைப் பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு கால்நடைப் பகுதியும் ஒரு கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநரின் பொறுப்பிலுள்ளது.

தொழில் நுட்ப உதவி அளிப்பதுடன், அவர்களால் உற்பத்தி செய்யப்படும் கோழிப்பண்ணைப் பொருட்களான முட்டைகள், கழிக்கப்பட்ட கோழிகளை அவர்களிடமிருந்து பெற்று விற்பனை செய்ய உதவி புரிகின்றன.

கோழிப் பண்ணைக்குத் தேவையான பொருள்கள் அளித்து அவைகளின் உற்பத்திப் பொருள்களை விற்பனை செய்யும் பொறுப் பேற்று, இந்நிறுவனத்தால் செய்யப்படும் உதவியானது கோழி வளர்ப்புத் தொழில் இம்மாநிலத்தில் ஒரு பெரிய திருப்புமுனையை அடைய ஏதுவாயிற்று. இடைத்தரகர்கள் இடையில் புகாமல் தடுக்கப்பட்டு, உற்பத்தியாளர்களுக்கு அவர்கள் செய்யும் உற்பத்திப் பொருட்களுக்கு நியாய விலைகள் கிடைக்கும்படி செய்கிறது. அதே சமயத்தில் நுகர்வோர் உற்பத்திப் பொருட்களை நியாய விலையில் அடையவும் உதவி செய்துள்ளது. இந்நிறுவனத்தினால் உறுதியான விற்பனை வசதி அளிப்பது கண்டு கோழி வளர்ப்பிற்கு இதுவரை நிதியுதவி அளிக்க முன்வராத தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் தற்போது நிதியுதவியளிக்க முன்வந்துள்ளன.

விற்பனைப் பிரிவின்கீழ் எய்தியுள்ள சாதனைகள் கீழே தரப் பட்டுள்ளன.

(1) ஒவ்வொரு பிரிவிற்கும் விற்பனை உத்தி தரமாகப் பாகு படுத்தப்பட்டு முட்டை கொள்முதல் பலவித அடிப்படையில் எவ்விடம் வாங்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டு, பலவித நிலைகள் கொண்ட நுகர்வோரின் தரம் பாகுபடுத்தப்பட்டு, தேவையை எவ்விதம் பூர்த்தி செய்ய வேண்டும் என்று நிர்ணயிக் கப்பட்டுள்ளது. இந்த விற்பனை உத்தி 1½ ஆண்டு காலத்திற்கு நடப்பிலிருக்க தயாரிக்கப்பட்டுள்ளது.

(2) சென்னை மாநகரத்தில் முட்டை விற்பனை விலை ஒவ்வொரு நாளும் ஏற்ற இறக்கத்திற்கு உட்பட்டிருக்கிறது. இதை நீக்கும் பொருட்டு இந்நிறுவனம் முதன்முறையாக வியாபாரிகளிடம் முட்டை கொள்முதல் விலையை ஓராண்டு காலத்திற்கு நிர்ணயித்



சென்னையில் அங்கீகரிக்கப்பட்ட நிலையங்கள், அதாவது மாணவர் விடுதிகள், மருத்துவ மனைகள் முதலியவற்றிற்கு இந் நிறுவனத்தினால் ஆண்டு முழுவதும் நிர்ணயிக்கப்பட்ட விலையில் முட்டை விநியோகம் செய்ய முடிகிறது. இம்மாதிரியான முட்டை கொள்முதல் விலை நிர்ணயம் குறித்து நாமக்கல்லிலிருக்கும் முட்டை வியாபாரிகளுடன் உடன்பாடு செய்து கொள்ள இந்நிறுவனம் கருத்தில் கொண்டு கலந்துறையில் ஆழ்ந்துள்ளது.

(3) பொது, மற்றும் தனியார் துறையில் இயங்கும் மாணவர் விடுதிகளுக்கும் மற்றும் உணவு விடுதிகளுக்கும் முட்டை மற்றும் கோழி இறைச்சி முதலியவைகளை விநியோகிக்கும் பொறுப்பை இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது. சென்னை மற்றும் அதைச் சுற்றியுள்ள பாதுகாப்புத் துறையின் முப்படையைச் சார்ந்த நிலையங்களுக்கும் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக முட்டைகள் விநியோகம் செய்யும் பொறுப்பை இந்நிறுவனம் மேற் கொண்டுள்ளது.

(4) இவ்விற்பனைப் பிரிவானது இறைச்சிக் கோழிக்குஞ்சு உற்பத்தியை இம்மாநிலத்தில் பெருக்கும் பொருட்டு இறைச்சிக் கோழிக்குஞ்சு வளர்ப்பின் முக்கியத்துவத்தையும் லாபத்தன்மையையும் மக்களுக்கு எடுத்துரைத்துள்ளது. சென்னை நகரத்தில் இவ்வித இறைச்சிக்கோழி அறிமுகப்படுத்தப்பட்டு அது பிரபலமடைந்துள்ளது. மேலும் இத்தொழிலால் குறைந்த முதலீட்டைக் கொண்டு சீக்கிரத்தில் லாபம் கிட்டும் என்ற நோக்கத்தை அனேக விவசாயிகள் உணர்ந்துள்ளனர்.

(5) மேலும் மக்கள் இறைச்சிக் கோழிக்குஞ்சுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் அதிகமாக விரும்பி ஈடுபடும் நோக்கத்துடன் இந் நிறுவனமானது சென்னை மற்றும் சுற்றுப்புறங்களில் தொடர்பினைக் கொண்டு அவ்வித இறைச்சிக் கோழிக்குஞ்சு வளர்ப்பிற்கு வேண்டிய பண்ணைப் பொருட்களும், அவ்விதமாக உற்பத்தியாகும் பொருட்களை விற்பனை செய்யவும் ஏற்பாடு செய்துள்ளது. இந்நிறுவனம் விவசாயிகளுக்கு வருவாய் பெருக்கத்துடன் உணவு உற்பத்திக்கு வழிவகையும் செய்கிறது.

(6) இந்நிறுவனமானது வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும்பொருட்டு தொழில் வணிக நிறுவனத்துடன் ( State Trading Corporation ) தொடர்பு கொண்டுள்ளது.

(7) கோழி வளர்ப்பில் ஈடுபட்டோர்க்கு கோழி வைத்தியத்திற்குத் தேவையான மருந்துகளைக் குறைந்த விலையில் வழங்கும்பொருட்டு முக்கியமான கோழி வைத்திய மருந்துகளை இருப்பில் வைத்துக்கொள்ள உத்தேசித்துள்ளது.

(8) உடைந்த, சிறிய, கன்னிக் கோழி முட்டைகளை வீணாக்காமல் இதர முட்டையைச் சார்ந்த உற்பத்திப் பொருட்களுக்குப் பயன்படுத்த உத்தேசித்துள்ளது. ஆரம்ப கட்டமாக சென்னையில் முட்டை ஊறுகாய் தயார் செய்து விற்பனை துவக்கப்பட்டுள்ளது. இதனால் கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு அவர்களுடைய கோழிப் பண்ணை உற்பத்திப் பொருள்கள் எல்லாவற்றையும் விற்க உதவி புரியும் வகையில் உள்ளது.

(அ) (2) **தீவனக் கலவை நிலையங்கள் :** (1) நந்தனம் (சென்னை), (2) கொட்டப்பட்டு (திருச்சி), (3) கப்பலூர் (மதுரை), (4) திருப்பூர் (கோவை) மற்றும் சேலம் அருகே (5) சேஷந்சாவடி ஆகிய இடங்களில் உள்ளன.

இத் தீவனக் கலவை நிலையங்களில் சரிவிகிதக் கோழித் தீவனம், தொழிற்கூடம் மற்றும் விவசாய சார்நிலை உற்பத்திப் பொருள்களைக் கொண்டும் மற்றும் மனித உணவிற்கு தேவையற்றது என்று கருதப்படும் பொருட்களைக் கொண்டும் தயாரிக்கப்படுகிறது. தீவனத்தின் தரத்தை ஒரே சீரான நிலையில் வைத்துக் கொள்ளத் தேவையான கலவை விகிதம் பின்பற்றப் படுகிறது. மேலும் தீவனத்தின் தரத்தை ஒரு கோழியின ஊட்டச் சத்து நிபுணர் கண்காணித்து வருகிறார்.

நியாய விலையில் இந்தத் தீவனக் கலவை நிலையங்கள் கோழித் தீவனத்தை விற்பனை செய்கின்றன. வளரும் கோழித் தீவனத்தின் தேவையைக் கருத்திற்கொண்டு, இத் தீவனக் கலவை நிலையங்களில் உற்பத்தித் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது.



**(அ) 3. அரசூர் குஞ்சுபொரிப்பு நிலையம்**

அதிக முட்டையிடும் "பேர்ல் ரூபாலி" என்ற வெள்ளை முட்டையிடும் கோழிக்குஞ்சுகள், "பேர்ல் சோனலி" என்ற தங்கநிற முட்டையிடும் கோழிக் குஞ்சுகள் உற்பத்தி அரசூரில் உள்ள வீரிய குஞ்சு பொரிப்பு நிலையத்தில் தொடங்கப்பட்டுள்ளது. "பேர்ல் ப்ரோ சாம்ராட்" என்ற உண்பதற்கேற்ற இறைச்சிக் கோழிக் குஞ்சு உற்பத்தியும் இந்நிலையத்தில் தொடங்கப் பட்டுள்ளது.

இவ்விதமான கோழிக்குஞ்சு உற்பத்தியும், விற்பனையும் இந்நிறுவனத்தால் தொடங்கப்பட்டதனால் வணிக முறையில் கோழி வளர்ப்பினால் லாபம் அடைய முடியும் என்று நிரூபித்துள்ளது. மேலும் வேண்டிய நேரத்தில் போதுமான அளவு தரமான கோழிக்குஞ்சுகள் கோழி வளர்ப்பில் ஈடுபட்டோருக்கு அளிக்க முடியும் என்ற உறுதித் தன்மை யமைந்துள்ளது. இந்தியாவிலேயே பொதுத் துறையில் இயங்கும் இந்த ஒரே வீரிய இனக் குஞ்சு பொரிப்பு நிலையமானது இம்மாநிலத்தின் கோழி வளர்ச்சி அபிவிருத்திக்காக மேற்கொண்ட ஒரு முக்கிய செயலாகும்.

## ஆ. விரிவாக்கப் பணி

மதுரை மாவட்டத்தில் கப்பலூரில் உள்ள குஞ்சு பொரிப்பு நிலையம், இந்நிறுவனத்தின் கீழ் இயங்கும் கோழி வளர்க்கும் நிலையங்களுக்கும் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் இயங்கும் கோழி விஸ்தரிப்பு நிலையங்களுக்கும் இனக் கோழிக் குஞ்சுகள் அளிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

கோழிப் பண்ணைகளின் வணிகத் தன்மையுடைய மாற்றத்தினால், இனக் கோழிக் குஞ்சுகள் தேவை தற்பொழுது குறைந்துவிட்டது. மேலும், அரசூரில் உள்ள வீரிய இனக் கோழிக் குஞ்சு பொரிப்பு நிலையத்தில் உண்பதற்கேற்ற கோழிக் குஞ்சுகள் உற்பத்தித் திறன் வளரும் தேவையை சமாளிக்க முடியாத

நிலையிலுள்ளதால் கப்பலூர் குஞ்சு பொரிப்பு நிலையத்தை உண்பதற்கேற்ற கோழிக் குஞ்சு தயாரிப்பு நிலையமாக மாற்ற உத்தேசிக்கப்பட்டு அதற்கேற்ற நடவடிக்கைகளில் இந் நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

## வளர்க்கும் நிலையங்கள்

இந்நிறுவனத்தின் கீழ் ஆறு வளர்க்கும் நிலையங்கள் அடையாறு (சென்னை), செங்கல்பட்டு (செங்கல்பட்டு), கொட்டப்பட்டு (திருச்சிராப்பள்ளி), தே. கல்லுப்பட்டி (மதுரை), பெருந்துறை (கோவை), சேலம் அருகே சேஷஞ்சாவடி ஆகிய இடங்களில் இயங்குகின்றன. இவ் வளர்க்கும் நிலையங்களில் பொதுமக்கள் மற்றும் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு கோழிகள் அளிக்கும்பொருட்டு, கோழிக் குஞ்சுகள் வளர்க்கப் படுகின்றன.

## 9. செயல்படுத்தப்படும் திட்டங்கள்

1. தேர்ந்தெடுக்கப்பட்ட மதுரை, செங்கற்பட்டு, வட ஆற்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் கால்நடை வளர்ப்பு சிறப்புத் திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்புத் திட்டத்தை செயற்படுத்த இந் நிறுவனம் ஏற்றுக் கொண்டுள்ளது.

கோழிப் பண்ணைகளுக்கு வேண்டிய கோழிப் பண்ணைப் பொருட்கள் மற்றும் விற்பனை செய்யும் வாய்ப்பை இந் நிறுவனம் ஏற்கும் தயார் நிலையைக் கண்டு, முதலில் தயங்கிய தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் தற்பொழுது இத்திட்டத்திற்கு நிதியுதவி செய்ய முன்வந்துள்ளன. சிண்டிகேட் வங்கி இத்திட்டத்திற்கு நிதி உதவி செய்ய முன்வந்துள்ளது. சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயத் தொழிலாளர் களுக்கு உதவி புரிவதற்காக தீட்டப்பட்ட இத்திட்டம் இந்நிறுவனத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை, இத்திட்டத்தின்கீழ் 1,707 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். முழுமையாக இத்திட்டம் செயல்படும்பொழுது, இம் மாநிலத்தின் முட்டை உற்பத்தி நாள் ஒன்றுக்கு ஏறக்குறைய



3,60,000 வீதம் பெருகுவதோடல்லாமல், முட்டை குறித்த தேவைக்கு அண்டை மாநிலத்திலிருந்து முட்டை இறக்குமதியைத் தடுக்க வழி வகுக்கும். தமிழ்நாட்டில் இத்திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்படும் கோழிப் பண்ணைகள் 6,000 ஆக இருக்கும்.

2. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளரின் நலனுக்காக கோழி வளர்ப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டு, இத்திட்டம் வளர்ந்து வரும் நிலையிலுள்ளது.

3. "கூண்டுகளில் கோழி வளர்த்தல்" என்ற திட்டத்தை நகர்ப்புற மற்றும் கிராமங்களில் செயற்படுத்த இந்நிறுவனம் தொடங்கியுள்ளது.

4. ஸ்ரீலங்கா அகதிகள் புனர்வாழ்விற்காக ஒரு கோழி வளர்ப்புத் திட்டம் செயற்படுத்த வேண்டி இந்நிறுவனம் வேண்டிய மூலப் பொருட்களும் தொழில் நுட்ப வசதியும் அளிக்கும்.

## நிதி நிலை

இந்நிறுவனம் தனது நிதிநிலை விவகாரத்திலும் முன்னேற்றத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளது. 1973-74 ஆம் ஆண்டில் (8 மாத நடப்பில்) ஏற்பட்ட ரூபாய் 24.06 இலட்சம் நஷ்டம், 1976-77 இல் ரூபாய் 7.11 இலட்சமாகக் குறைந்துவிட்டது. வணிகத் தன்மையில்லாத விஸ்தரிப்புப் பணிகளுக்குச் செய்யப்பட்ட செலவுகளும் இதில் அடங்குவதால் இவ்வாறுள்ளது. மேலும் நஷ்டத்தைக் குறைக்கும் நோக்கத்தோடு குஞ்சு பொரிப்பு நிலையம் மற்றும் வளர்க்கும் நிலையங்களை வர்த்தக ரீதியில் மாற்றியமைக்கவும், இந்நிறுவனம் உற்பத்திப் பொருட்களை அதிக அளவில் விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது.

1977-78 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் இலாபமோ நஷ்டமோ இல்லாத நிலையை அடைந்தபின் சிறிது இலாபத்துடன் இயங்குமென நம்பப்படுகிறது.

[1978 மார்ச்

## இணைப்பு

(252-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### கொள்கை விளக்கக் குறிப்பு

### 1978-79.

**கோரிக்கை எண் 30.**

சமூக நலம் என்ற தலைப்பின்கீழ் 1978-79 ஆம் ஆண்டிற்கான ரூபாய் 4,92,13,000 நிதி ஒதுக்கீடு செய்ய அவையின் ஒப்புதலை கோருகிறேன்.

**முன்னுரை.**

தமிழ்நாடு, சமூக பொருளாதார முன்னேற்றத்தின் நுழைவு வாயிலில் உள்ளது. திட்டக்காலத்தில் செயல் படுத்தப்பட்ட பல்வகை திட்டங்கள், பெண்களின் சமூக பொருளாதார நிலையை உயர்த்தும் நோக்குடையது. அவர்களுக்கு உதவவும், வழிக்காட்டவும், ஊக்குவிக்கவும், மாறி வருகின்ற காலத்தையும் சமூக [illegible]யும் உணர்ந்து சிறப்பான பங்காற்றவும் பற்பல [illegible] திட்டங்களை அவர்கள் அறியும்படி செய்து அத்திட்டங் களால் உண்டாகிய முன்னேற்றத்தை உணரவும் 1947 ஆம் ஆண்டு ஒரு தனி அரசுத்துறை ஏற்படுத்தப்பட்டு, அத்துறை 1955 ஆம் ஆண்டில் ஓர் இயக்குநரை தலைவராகக் கொண்ட துறையாக மாற்றி அமைக்கப்பட்டது. தமிழ்நாடு சமூக, நல வாரியம் 1954 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. மகளிர் நலத் துறை, மாநில சமூகநல வாரியம், சமுதாய வளர்ச்சித் துறையின் மகளிர் நலப்பிரிவு ஆகிய மூன்று அமைப்புகளும் 1961 ஆம் ஆண்டில் ஒருங்கிணைக்கப்பட்டு தனிப்பட்டதோர் மகளிர் நலத் துறையாக உருவாக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டில் மகளிர் நலத் துறையின் பெயரை, சமூக நலத்துறை என்று மாற்றப்பட்டது.

2. மகளிர் நலப் பணிகளை மேற்கொள்ளுவதுடன், இத்துறை பள்ளியில் சேரும் வயதடையாத சிறார்களுக்கும், கருவுற்றிருக்கும் மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் ஆகி யோருக்கும் பல்வேறு சத்துணவுத் திட்டங்கள், உடல் ஊன



1978 மார்ச் 7]

முற்றோருக்குப் பயிற்சியளித்தல், மறுவாழ்வளித்தல், சட்டப்படி காவலில் வைக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்களுக்காக இல்லம் ஒன்றை நடத்துதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

### நிர்வாக அமைப்பு

3. மாநில் அளவில் சமூக நலத்துறை இயக்குனரே இத் துறையின் தலைவராவார். இணை இயக்குநர் ஒருவரும், துணை இயக்குநர் ஒருவரும், நேர்முக உதவியாளர் ஒருவரும், நிர்வாக நேர்முக உதவியாளர் ஒருவரும், சிறப்பு அலுவலர் இருவரும் (சிறார் நலத்திற்கு ஒருவர், சிறப்புச் சத்துணவுத் திட்டத்திற்கு ஒருவர்), உடலூனமுற்றோரின் மறுவாழ்வுக்குப் பொறுப்பு வகிக்கும் உதவி இயக்குநர் ஒருவரும், [illegible] கணக்கு அலுவலர் ஒருவரும் சமூக நலத்துறை இயக்குநருக்கு உதவி புரிகின்றனர்.

4. மாவட்ட அளவில், மாவட்ட சமூக நல அதிகாரியே துறைத் திட்டப்பணிகள் அனைத்திற்கும் பொறுப்புள்ளவராவார். ஊராட்சி ஒன்றியங்களுடன் இணைக்கப்பட்ட விரிவாக்கப் பணி யாளர்கள் (சமூக நலம்), ஊர் நலப் பணியாளர்கள், சிறார் நல மையங்களில் சிறார் நல அமைப்பாளர்கள், நகர்ப்பகுதிகளில் சமூக நல அமைப்பாளர்கள், ஆகியோர்கள் களப்பணியாளர் களாவார்கள்.

### 1. மகளிர் நலன்

5. பணி இல்லங்கள்—இத்துறை 18 வயது முதல் 40 வயது வரை உள்ள சமூகத்தில் ஆதரவற்ற, கைவிடப்பட்ட பெண்களுக்கு தாம்பரத்திலும், கடலூரிலும், தஞ்சாவூரிலும் ஆக மூன்று பணி இல்லங்களை நடத்தி வருகிறது. மேலும் தென் மாவட்டங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு திருநெல்வேலியில் ஒரு பணி இல்லம் 1977-78 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் மற்றுமொரு பணி இல்லம் தொடங்கப்பட இருக்கிறது. பணி இல்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் பெண் களுடன் அவர்களின் இரு குழந்தைகளும் அனுமதிக்கப் படுகின்றனர். அவர்களுக்கு எஸ்.எஸ்.எல்.சி. வரை கல்வி கற்பிக்கப்

படுகிறது. முதியோர் ஒருவருக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 விதமும், சிறுர் ஒருவருக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 36 விதமும் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இந்த இல்லங்களில் இருப்பதற்கு அனுமதிக்கப்படுகின்ற காலம் மூன்றாண்டுகளாகும். முதியோர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 60-ம், சிறுர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 25-ம் உடைகளுக்காக மானியம் வழங்கப்படுகிறது.

6. தாம்பரத்திலுள்ள பணி இல்லத்தின் பொதுப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள முதியோர் 200 பேரும், சிறுர் 100 பேருமாவர். கடலூர், தஞ்சாவூர், பணி இல்லங்கள் ஒவ்வொன்றிலும் அனுமதிக்கப்பட்ட முதியோரின் எண்ணிக்கை 50-ம், சிறுரின் எண்ணிக்கை 25-ம் ஆகும். திருநெல்வேலி இல்லத்தில் பொதுப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை முதியோர் 40 பேரும், சிறுர் 15 பேரும் ஆவர்.

7. தாம்பரம் பணி இல்லத்தில் உடலூனமுற்ற மகளிர், சிறுர் முதியோருக்காக தனிப்பிரிவு ஒன்றும் உள்ளது. இதில் அனுமதிக்கப்படும் எண்ணிக்கை முதியோர் 30 பேரும், சிறுர் 20 பேரும் ஆகும்.

8. பணி இல்லங்களில் முன்பு தங்கியிருந்தவர்களின் மறு வாழ்விற்கான கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன:—

(அ) தாம்பரம் பணி இல்லத்திலுள்ள பொதுப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை 200-க்கு உட்பட்டு, உதவித் தொகையுடன் இரண்டாண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேறிய பாடமுறை வகுப்பும் நடத்தப்பட்டு வருகிறது. 1978-79 ஆம் ஆண்டில் கடலூர், தஞ்சை ஆகிய பணி இல்லங்கள் ஒவ்வொன்றிலும் 25 பேர்களுடன் இரண்டாண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேறிய பாடமுறை வகுப்பு நடத்தப்பட இருக்கின்றது. புதிதாக திருநெல்வேலியில் தொடங்கியுள்ள பணி இல்லத்திலும், 1978-79 ஆம் ஆண்டு தொடங்கப்பட இருக்கும் இல்லத்திலும் மேற்கண்ட வகுப்பு நடத்தப்பட இருக்கின்றது.



(ஆ) அரசாங்கத் தொழில் நுட்பத் தேர்வுகளுக்கு அனுப்புவதற்காக 65 பெண்களுக்கு தையல் தொழிலில் பயிற்சியளிக்கும் பொருட்டு, தையல் பயிற்சி நிலையம் ஒன்று தாம்பரத்திலுள்ள பணி இல்லத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதுபோன்ற தையல் பயிற்சி நிலையங்கள் கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி ஆகிய பணி இல்லங்களுடனும் இணைக்கப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றிலும் 15 பேர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

(இ) மூன்று பணி இல்லங்களிலும், ஸ்திரி சேவா மந்திரில் ஒன்றுமாக நான்கு சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பயிற்சி நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு இல்லத்திலும் 20 பேர் பயிற்சி பெற அனுமதிக்கப்படுகின்றனர். பயிற்சி பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 உதவித் தொகை வழங்கப்படுகின்றது. 1978-79-ஆம் ஆண்டில் மூன்று பணி இல்லங்களுக்கும், 3 தமிழ் தட்டச்சுப் பொறியும் 2 ஆங்கில தட்டச்சுப் பொறியும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ஈ) இடைநிலை ஆசிரியர்கள் பயிற்சிப் பாடமுறை வகுப்பு ஒன்றும் பல்லாவரத்தில் நடத்தப்பட்டு வருகிறது. முழுநிலைப் பிரிவில் 40 பேர், இளநிலைப் பிரிவில் 40 பேர் ஆக 80 பேர்கள் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப்பிரிவைச் சேர்ந்த ஒவ்வொருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 உதவித்தொகை வழங்கப்படுகிறது.

(உ) ஆயத்த உடைகள் தைக்கும் பயிற்சி நிலையம் ஒன்று தாம்பரத்தில் அன்றாடக் கூலி பெறும் 15 பணியாளர்களுடன், நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு பணியாளருக்கும் நாளொன்றுக்கு ரூ. 3 கூலி வழங்கப்படுகிறது.

(ஊ) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் (1974-75-ம் ஆண்டுத் திட்டம்) எட்டாம் வகுப்பு படித்துத் தேறிய பெண்கள் வீட்டைக் கவனித்துக் கொள்பவராகவும், வேலைக்காரிகளாகவும் பணியில் சேரும் பொருட்டு அவர்களுக்கு பயிற்சி அளிப்பது குறித்த திட்டம் ஒன்றிற்கு அனுமதி வழங்கப்பட்டு, தாம்பரத்திலுள்ள பணி இல்லத்தில் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த

பயிற்சிப்பிரிவில் 25 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.
பயிற்சி பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு
ரூ. 50 உதவித்தொகை அளிக்கப்படுகிறது.

(எ) 6—10—77 முதல் கடலூரில் பணி இல்லம் அரசுக்குச்
சொந்தமான புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டு அங்கு நடை
பெற்று வருகின்றது. 1978-79-ல் மேற்கண்ட புதிய கட்டிடத்தில்
வகுப்பு அறைகளுக்காக ரூ. 1.05 இலட்சம் செலவில் கூடுதலாக
அறைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளன.

9. 1978-ம் ஆண்டு சனவரித்திங்கள் முதல் ரூ. 3,000-க்கு
குறைவான ஆண்டு வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள 1
முதல் 30 வயதுள்ள 1,000 ஏழைப் பெண்கள் தட்டச்சு பயிற்
பெற ஆண்டு உதவித் தொகை ரூ. 150 வழங்கப்பட்டு வருகின்றது.

## பணிபுரியும் பெண்களுக்குரிய விடுதிகள்

10. குறைந்த வருவாய், நடுத்தர வருவாய் உள்ள
புரியும் பெண்களுக்கு உணவு, உறைவிட வசதிகள்
1967-ல் 25 பெண்கள் கொண்ட பணிபுரியும் பெண்கள் விடுதி
ஒன்று சென்னை மாநகரில் இத்துறை வாயிலாக தொடங்கி
நடத்தப்பட்டு வருகிறது. உணவிற்காக 80 ரூபாயும் வாடகைக்
காக 25 ரூபாயும் மின்கட்டணத்திற்காக 5 ரூபாயும் இவ்விடுதியில்
தங்குவோரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

இவ்விடுதியில் பயன் பெறுவோரின் எண்ணிக்கையை கூடு
லாக்க செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

11. பணிபுரியும் பெண்கள் விடுதிகளை நடத்துவதற்கு தொண்
நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்காக மாநி
அரசின் பரிந்துரையின் பேரில், பெண்கள் நலனில் ஈடுபட்டுள்
தொண்டு நிறுவனங்களால் கட்டப்படுகின்ற விடுதிக் கட்டிடத்தின்
கட்டுமான விரிவாக்க மதிப்பீட்டுச் செலவில் 75 சதவீதம் வ
மத்திய அரசு மானியம் வழங்குகிறது. அந்த தொண்டு நி
வனங்களுக்கு மத்திய அரசால் வழங்கப்படுகின்ற மானிய



தொகைக்குக் கூடுதலாக மாநில அரசும், தகுதி வாய்ந்த
தொண்டு நிறுவனங்களுக்கு 15 சதவீதம் வரையில் அல்லது
ரூ. 35,000 (இவற்றில் எது குறைவோ அத்தொகையினை) மானிய
மாக வழங்கி வருகின்றது.

இதுவரை இம்மாநிலத்தில் 17 தொண்டு நிறுவனங்கள் மேற்
கண்ட மான்ய உதவித் தொகையைப் பயன்படுத்திக் கொண்
டுள்ளன.

## பயிற்சி நிலையங்களும் உற்பத்தி நிலையங்களும்.

12. கிராமப்புற மகளிர்க்கு, தையல் பயிற்சி, கம்பளி நெசவு,
பனை ஓலை, பாய் முடைதல், சமுக்காளம் நெய்தல் போன்ற எளிய
குடிசைத் தொழில்களின் வாயிலாக, ஆழ்ந்த பயிற்சி அளிக்கும்
பொருட்டு பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டன; அதனால்
அவர்கள் தங்கள் குடும்ப வருவாயைக் கூட்டிக் கொள்ள முடி
கிறது. இதற்குரிய பயிற்சிக்காலம் ஓராண்டாகும். பயிற்சிக்
காலத்தில், பயிற்சி பெறுவோரின் வண்டிச் செலவுகள் போன்ற
தற்செயல் செலவுகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, அவர்கள்
ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 உதவித்தொகை
வழங்கப்படுகிறது. மூன்று அல்லது நான்கு பிரிவு முடிந்த
பின்னர் பயிற்சி நிலையம் உற்பத்தி நிலையமாக மாற்றப்பட்டு
பயிற்சி பெற்ற பெண்களுக்கு அவர்களால் முடிக்கப்படும்
பொருட்களுக்குத் தகுந்தாற்போல் கூலி வழங்கப்பட்டு
வருகின்றது.

13. தற்போது 25 பயிற்சி நிலையங்களுக்கும் 5 உற்பத்திப்
பிரிவுகளும் உள்ளன. இவை சமூக நலத்துறையின் நிதியிலிருந்து
நடத்தப்படுகின்றன.

14. 1978-79 ஆம் ஆண்டில் இரண்டு தையல் பயிற்சி நிலையங்கள்
தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒன்று கன்னியாகுமரி
மாவட்டத்திலும், மற்றொன்று மதுரை மாவட்டத்திலும்.

15. இவைகளைத் தவிர, அரிசன நலத்துறை, பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை, தொழிலாளர் நலக்குழு, மறுவாழ்வுத் துறை ஆகியவற்றின் நிதியுதவியுடன் கீழ்க்கண்ட பயிற்சி நிலையங்களும் இத்துறையால் நடத்தப்படுகின்றன :—

| | பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| 1. அரிசன நலத்துறை நிதி | 12 |
| 2. பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை நிதி | 4 |
| 3. தொழிலாளர் நலக்குழு நிதி | 10 |
| 4. மறுவாழ்வுத்துறை நிதி | 3 |

16. பழங்குடியினரைச் சேர்ந்த மகளிருக்காக வட ஆற்காடு மாவட்டத்தில் தையற் பயிற்சி நிலையம் ஒன்று திறக்கப் பட்டது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

17. 1978-79 ஆம் ஆண்டு மூன்று சாக்குத் துண்டு ( Chalk Crayon ) செய்யும் பயிற்சி நிலையங்களும் மூன்று மெழுகு வர்த்தி செய்யும் பயிற்சி நிலையங்களும் தொடங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

சமூக நலக் கிளைகள்.

18. மாநிலம் முழுவதிலும் 50 சமூக நலக் கிளைகள் உள்ளன. சமூக நலக் கிளைகளைப் பொறுப்பேற்றுள்ள சமூக நலத்திட்ட அமைப்பாளர்கள் காலையில் புகுமுக ஆதாரக் கல்வி வகுப்புகள் நடத்துகின்றனர். மாலையில் குடும்பக்கலை, சத்துணவு, குழந்தை வளர்ப்பு, உடல்நலம், சுகாதாரம், உடலை நல்ல நிலையில் வைத்துக் கொள்ளுதல் போன்ற கலைகளைப் பெண்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றனர். குடும்ப வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் பொருட்டு தையற் பயிற்சி, பாய் முடைதல், தைத்தல் போன்ற குடிசைத் தொழில்களை முதிய மகளிருக்குக் கற்றுக் கொடுக்கின்றனர்.



தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மானியம் அளித்தல்.

19. சமூகத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கியிருக்கும் மகளிர் நலனுக்காகவும், உடல் ஊனமுற்றவர்களின் நலனுக்காகவும் உள்ள தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு, கீழ்க்காணும் பணிகளுக்கு அரசு மானியம் வழங்குகிறது.

(அ) அனாதைப் பெண்டிர்க்காக பணி இல்லங்கள் நடத்த மானியம்.

(ஆ) இளம்பிள்ளை வாதம், மூளை வாதநோய், மன வளர்ச்சிக் குறைவு நோய் இவற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பராமரிக்கும் தொண்டு நிறுவனங்கள் தவிர, தொழுநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோர்களின் தொழுநோய்க் குழந்தைகளையும் அந்நோய் இல்லாத ஆரோக்கியமான குழந்தைகளையும் பராமரிக்கும் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம்.

(இ) மன வளர்ச்சி குன்றிய சிறார்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக சிறப்பாசிரியர் பயிற்சிக்காக உள்ள சென்னை பாலவிகார் பயிற்சிப் பள்ளிக்கு மானியம்.

20. கிராமப் புறங்களில், மகளிர் நலத்திற்காகவும், 6 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் நலத்திற்காகவும், உடல் ஊனமுற்றோரின் நலத்திற்காகவும், பாடுபடுகின்ற தொண்டு நிறுவனங்களுக்கு உதவி செய்து, ஊக்குவிப்பது அவசியமென கருதப்படுகிறது. அரசே இப்பணிகளை கிராமப் புறங்களிலுள்ள மேற்கூறியவர்களுக்கு நேரிடையாக உதவி செய்வதென்றால், அதற்கு மிகவும் அதிகச் செலவாகும். அரசு உதவியுடன், தொண்டு நிறுவனங்கள் இப்பணியைச் செய்தால், அரசின் சார்பில் பணியாளர்களுக்கும், இதர செலவுகளுக்கும் ஆகின்ற செலவினைத் தவிர்க்கலாம். இந்தக் குறிக்கோளுடன், கிராமப் புறங்களிலுள்ள தொண்டு நிறுவனங்களுக்கு சமூகப் பணி செய்வதற்கு ரூபாய் ஒரு இலட்சம் மானியமாக 1978—79-ல்

வழங்கப்பட இருக்கிறது. இந்த மானியம் கீழ்க்கண்ட பணிகளில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனங்களுக்கு மாநில சமூக நல வாரியத்தின் மூலமாக வழங்கப்படும் :—

(1) கைக் குழந்தைகளுக்கான குழந்தைகள் காப்பகம்.

(2) குழந்தைகள் காப்பகம்.

(3) குழந்தைகளுக்கான மனமகிழ் மையம்.

(4) குழந்தைகளுக்கான வழிகாட்டி மையம்.

(5) மகளிருக்கான தாய்-சேய் பராமரிப்பு, சுகாதாரம், சத்துணவு, கைத்தொழில்கள் ஆகியவற்றில் பயிற்சி.

(6) மகப்பேறு மற்றும் நல்வாழ்வுப் பணிகள்.

(7) மகளிருக்கு மணமகிழ்வூட்டும் பணிகள்.

(8) வயதானவர்களுக்கும் ஊனமுற்றோருக்கும் நல்வாழ்வுப் பணிகள்.

(9) தொழுநோய் மற்றும் எலும்புருக்கி, நோயிலிருந்து குணமாகியவர்களுக்கு மறு வாழ்வுப் பணிகள்.

(10) உடல் ஊனமுற்றோருக்கான நல்வாழ்வுப் பணிகள்.

(11) மகளிருக்கான கல்வித் திட்டங்கள்.

### மகளிர்—குழந்தைகளுக்கான குறைந்தளவுத் திட்டம்.

21. இத்திட்டம், கிராமப் பகுதிகளில் உள்ள பெண்கள், பற்பல சமூக, பொருளாதார வேற்றுமைகளை மறந்து மகளிர் மன்றங்களில் ஒன்று கூடுவதற்காக வகுக்கப்பட்ட ஒரு திட்டமாகும். மூன்றாவது திட்டக் காலத்தில் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 30 மன்றங்கள் வீதம் 11,220 மகளிர் மன்றங்கள் அமைக்கப்பட்டன. இவை தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. ஆண்டு தோறும் ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் இத்திட்டத்திற்காக சுமார் ரூ. 4,000 ஒதுக்கப்படுகிறது.





### மகளிர் மன்றம் மூலமாகப் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

22. பல்வேறு வகையான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள மகளிர் மன்றங்களை ஊக்குவிப்பதற்காக, பொருளாதார நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ள சிறந்த மகளிர் மன்றங்களுக்கு ரொக்கப் பரிசுகள் கொடுக்கப்படுகின்றன. மகளிர் மன்றங்கள் மூன்று வகைகளாகத் தரம் பிரிக்கப்பட்டு, ரொக்கப் பரிசாக முறையே ரூ. 1,000, ரூ. 600, ரூ. 400 என்று வழங்கப்படுகிறது. இது மத்திய அரசுத்திட்டமாகும். இதற்காக ஆண்டுக்கு ரூ. 21,200 செலவாகிறது.

### மகளிர் மன்ற அமைப்பாளர் பயிற்சி.

23. தலைமை தாங்கி நடத்தும் தகுதியுள்ள உள்ளூர் மகளிர் ஒவ்வொரு ஊராட்சியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, டி. கல்லுப்பட்டி (மதுரை), எஸ். வி. நகரம் (வட ஆற்காடு) ஆகிய இடங்களில் உள்ள கிராம விரிவாக்க பயிற்சி நிலையத்திலும், தாம்பரம் பணி இல்லத்திலும் ஒரு மாத கால அளவிற்கு அமைப்பாளர் பயிற்சி பெற அனுப்பப்படுகின்றனர். அத்தகைய பயிற்சி பெற்ற அமைப்பாளர்கள் அவரவர் தொடர்பு கொண்டுள்ள மகளிர் மன்றங்களில் மகளிரை கூட்டி, குழந்தை நலன், மனைக்கலைகள், மனைப்பொருளியல், காய்கறித் தோட்டம் வைத்து வளர்த்தல், சுற்றுப்புற சுகாதாரம், துப்புரவு போன்ற ஆர்வமும், பயனும் மிக்க பல்வேறு பொருள் குறித்து உள்ளூர் மகளிருடன் விவாதிக்கின்றனர். இது மத்திய அரசுத் திட்டமாகும். இதற்கு ஆண்டுக்கு ரூ. 27,000 செலவாகிறது.

### மகளிர் மன்றங்களின் முன்னேற்றமும் வளர்ச்சியும்.

24. மகளிர் மன்றங்களின் வளர்ச்சியை மேம்படுத்த இத்திட்டம் முத்துப்பேட்டை, உசிலம்பட்டி, தளி ஆகிய மூன்று வட்டாரங்களில் செயற்படுத்தப்படுகிறது. இதுவும் மத்திய அரசுத் திட்டங்களில் ஒன்றாகும். இதற்கு ரூ. 20,000 செலவாகிறது.

## 2. குழந்தைகள் நலன்.

25. சிறுர் பள்ளிகள்—

(அ) இம்மாநிலத்தில் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து தொடங்கி தற்போது 3,154 சிறுர் பள்ளிகள் இயங்கி வருகின்றன. பூவிருந்தவல்லி வட்டாரத்தில் உள்ள 50 சிறுர் பள்ளிகள், அரிசனக் குடியிருப்பில் உள்ள 150 சிறுர் பள்ளிகள், நீலகிரியைச் சேர்ந்த பனியா குழந்தைகளுக்கான 10 சிறுர் பள்ளிகள், தென்னுற்காடு, வடஆற்காடு, சேலம், தர்மபுரி, திருச்சி ஆகிய மாவட்டங்களில் உள்ள பழங்குடியினருக்கான 49 சிறுர் பள்ளிகள், ஸ்ரீலங்கா அகதிகளுக்கான 4 சிறுர் பள்ளிகள், ஒருங்கிணைந்த சிறுர் நல மேம்பாட்டுத் திட்ட பள்ளிகள் 300 ஆகியவை இதில் அடங்கும்.

(ஆ) எல்லா சிறுர் பள்ளிகளிலும், ஒருங்கிணைந்த சிறுர் நல மேம்பாட்டுத் திட்டம் தவிர, பாலாகார் ("கேர்" நிறுவனம் இலவசமாக வழங்கும் உணவுப் பொருள்) வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சுமார் 2,10,000 சிறுர் பள்ளி குழந்தைகளும், கருவுற்ற மகளிரும், பாலூட்டும் தாய்மார்களும் பயனடைகின்றனர். இந்த சிறுர் பள்ளிகளில் நோய்த் தடுப்பு ஊசி குத்தும் திட்டமும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(இ) இந்தச் சிறுர் பள்ளிகளில் நேரடிக் கல்வி பயிற்சி அளிப்பதைவிட விளையாட்டுக் கருவிகளின் வாயிலாக பயிற்சி அளிப்பதற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆகவே, ஒவ்வொரு சிறுர் பள்ளியிலும், கல்விச் சாதனங்களும், பொது விளையாட்டுச் சாதனங்களும் உள்ளன. அந்த விளையாட்டுச் சாதனங்கள் எந்த அளவுக்குப் பழையதாகிவிட்டது என்பதைக் கருத்தில் கொண்டு, ஐந்தாண்டுக்குப் பிறகு அவற்றுக்குப் பதிலாக புதிய விளையாட்டுச் சாதனங்கள் வாங்கப்படும். 1962 ஆம் ஆண்டி லிருந்து தொடங்கப்பட்ட சிறுர் பள்ளிகளைப் பொறுத்த வரையில் பழைய விளையாட்டுச் சாதனங்களுக்குப் பதிலாக புதிய விளையாட்டுச் சாதனங்கள் வழங்குவது படிப்படியாக நிறைவேற்றப் பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் 1.20 இலட்சம் ரூபாய் செலவிட இருக்கிறது.





(ஈ) ஒவ்வொரு ஊராட்சியிலும் குறைந்தது ஒரு சிறுர் பள்ளியாவது இருக்க வேண்டும் என்பது கொள்கை ஆதலின் படிப்படியாக மேலும் பல சிறுர் பள்ளிகளைத் திறக்கக் கருதப் பட்டுள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் அத்தகைய 100 பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 1978-79 ஆம் ஆண்டில் இம்மாதிரியான 150 பள்ளிகள் தொடங்கப்பட இருக்கின்றன.

(உ) இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து பால சேவிகைகள் பலர் சொந்தக் காரணங்களுக்காக வேலையிலிருந்து விலகி விட்டனர். அவர்களுக்குப் பதிலாக பயிற்சி பெருத பால சேவிகைகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பயிற்சி பெருத பால சேவிகைகளுக்கு உதவியாக பயிற்சித் திட்டம் ஒன்று வகுக்கப் பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 200 பால சேவிகாக்கள் பயிற்சி பெறுவர். இதற்காக ரூ. 64,000 செலவாகும்.

(ஊ) முன்னோடித் திட்டமாக 1962-63 ஆம் ஆண்டில் குழந்தைகள் நல்வாழ்வு ஒருங்கிணைந்த திட்டம் பூவிருந்த வல்லியில் ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சராசரி 40 சிறுர்கள் உள்ள 50 குழந்தைகள் காப்பகங்களும், சராசரி 10 கைக்குழந்தைகள் உள்ள 10 குழந்தைகள் காப்பகங்களும் செயல்பட்டு வருகின்றன. முழு பயிற்சி பெற்ற பால சேவிகாக்கள் இச்சிறுர் பள்ளிகளை நடத்தி வருகிருர்கள். இக் குழந்தைகளுக்கு பாலாகார் உணவு கொடுக்கப்படுகிறது. விரிவான நோய் தடுப்பு, சுகாதாரத் திட்டங்களும் மேற்கொள்ளப் படுகின்றன.

(எ) 1975-76-ம் ஆண்டில் ஒருங்கிணைந்த சிறுர் நல மேம் பாட்டு வளர்ச்சிப் பணிகள் (மத்திய அரசு) திட்டத்தின் கீழ் மூன்று இடங்களில் செயல்பட்டு வருகிறது. இவை, சென்னை, தர்மபுரி மாவட்டத்தில் தளி ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் ஆகிய மூன்று பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பகுதியிலும் 100 சிறுர் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. துணைச் சத்துணவு, உடல் நலப் பரிசோதனை, நோய்த்தடுப்பு ஆலோசனை கூறும் பணிகள், 0—5 வயதுக்குட்பட்ட சிறுர்களுக்கு கல்வி, கர்ப்பிணி,

பாலூட்டும் தாய்களை சிறப்பு மருத்துவத்திற்கு அனுப்பி வைக்கும் பணிகளை வழங்க, இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் சத்துணவுப் பொருள்களை வழங்குவது மாநில அரசின் பொறுப்பாகும். 'கேர்' நிறுவனத்தினர் இலவசமாக வழங்கும் பாலாகார் 1977 டிசம்பர் முடிய இத்திட்டத்திற்கு துணை சத்துணவாக உபயோகிக்கப்பட்டு வந்தது. 1978 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் முதல் நம் நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சத்துணவு வழங்கப்பட்டு வருகிறது. 15—44 வயதுத் தொகுதியைச் சேர்ந்த மகளிருக்குப் பயனளிக்கும் பொருட்டு இம் மூன்று திட்டங்களிலும் செயல்முறைக் கல்வி கற்பிக்கும் புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்நாட்டில் தொடங்கப்பட்ட 33 ஒன்றியங்களில் மூன்று மாநிலங்களுக்குத் தலா மூன்று ஒன்றியங்கள் ஒதுக்கப்பட்டன. அதில் தமிழ்நாடும் ஒன்று. இத்திட்டத்தின் வெற்றியைக் கண்டு 1978-79 ஆம் ஆண்டு மேலும் 4 ஒன்றியங்களில் இத்திட்டத்தை செயல்படுத்த உதவியளிக்கப்படலாமென மத்திய அரசு அறிவித்திருக்கிறது.

(ஏ) பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் தென் ஆற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் பழங்குடியினர் பகுதிகளில் 1976-77 ஆம் ஆண்டில் 10 சிறார் பள்ளிகள் தொடங்கப்பட்டன. நீலகிரி மாவட்டத்தில் பணியா சிறார்களுக்காக 10 சிறார் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 1977-78-ம் ஆண்டில் கல்ராயன், பச்சை மலை, சித்தேரி, அரனூத்துமலை ஆகிய ஏனைய பழங்குடியினர் பகுதி களில் 30 சிறார் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஸ்ரீலங்கா அகதிகளின் சிறார்கள் பயனுக்கென்று நான்கு சிறார் பள்ளிகளைத் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அட்டவணையிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினருக்காக அமைந்த பகுதியில் ஐந்து சிறார் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. அரிசன நலத் துறையின் கீழ் 1977-78-ல் 50 சிறார் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன



## சிறார் பள்ளி கட்டிடங்கள்—

26. 0—6 வயது வரம்பிற்குட்பட்ட சிறார்களுக்கான சத்துணவுத் திட்டம் 1962 ஆம் ஆண்டு முதல் அமுலில் இருந்து வருகிறது. சிறார் பள்ளிகள் தொடக்க காலத்தில் மரங் களின் கீழும், திண்ணைகளிலும் இயங்கி வந்தன. சிறுகச் சிறுக, இப்பள்ளிகள் ஊராட்சிகளின் உதவியுடனும், அந்தந்த ஊர் மக்களின் உதவியாலும் கூரைக் கொட்டகைகளுக்கோ, வாடகை இல்லாத கட்டடங்களுக்கோ மாற்றப்பட்டன. 1974 முதல் 1979 வரையான ஐந்து ஆண்டு காலத்தில் "கேர்" நிறுவனம் சிறார் பள்ளிகளுக்கு கட்டடம் கட்ட உதவி செய்ய முன்வந்தது. 1974-75 ஆம் ஆண்டு தொடங்கி ஆண்டொன்றுக்கு 200 கட்டடங்கள் வீதம் கட்ட ஒப்பளிக்கப்பட்டது. 1978-79 ஆம் ஆண்டும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படும்.

இருநூறு கட்டடங்களில், 50 அரிசன குடியிருப்புகளிலும், 50 ஒருங்கிணைந்த சிறார் நல மேம்பாட்டுத் திட்டம் இயங்கும் இடங்களிலும், 100 ஏற்கனவே சிறார் பள்ளிகள் இயங்கும் பகுதிகளிலும் கட்டப்படும். இதற்காக, 1978-79 ஆம் ஆண்டு மூலதன ஒதுக்கீடு மானியத்தில் ரூ. 10.48 இலட்சம் மானிய எண் 57 மூலதன ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

27. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படவிருக்கும் சென்னை நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தாய்-சிறார் நலத்திட்டம் ஒரு பகுதியாகும். வில்லிவாக்கம், அரும்பாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொருட்டு, இத் திட்டத்தின் கீழ் 200 சிறார் நிலையங்கள் 1977—80-ல் தொடங்கப் படவுள்ளன. ஒவ்வொரு நிலையத்திலும் 70 குழந்தைகள் (சிறார் பள்ளிகளில் 40 குழந்தைகளும் மற்றும் காப்பகங்களில் 30 குழந் தைகளும்) அனுமதிக்கப்படுவர். 1977-78 ஆம் ஆண்டில் 30 நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இந்த நிலையங்களுக்கான கட்டிடங்களைக் கட்டுதல் குறித்து இத்திட்டத்தில் கருத்து தெரி விக்கப்பட்டுள்ளது. 1978-79-ல் 70 சிறார் நிலையங்கள் தொடங்கப் படவுள்ளன.

[1978 மார்ச் 7

28. இத்திட்டத்தில் கீழ்க்கண்ட பணிகள் வழங்கப்படும் :—

1. துணைச் சத்துணவு ;
2. உடல் நலப் பரிசோதனை, ஆலோசனை கூறும் பணிகள் ;
3. நோய்த் தடுப்பு ;
4. சிறுர் கல்வி ;
5. சத்துணவு, உடல் நலக் கல்வி ;
6. செயல்முறைக் கல்வி.

29. இத்திட்டம் சமூக நலத்துறை இயக்குநரால் செயல்படுத்தப் படும். உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படும் திட்டங்கள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் பொறுப்பு, சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திடம் விடப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நடப்பாண்டில் (1978-79) ரூ. 40 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

## சிறப்புச் சத்துணவுத் திட்டம்.

30. சிறப்புச் சத்துணவுத் திட்டம் முதன் முதலில் 1970-71 ஆம் ஆண்டில் மத்திய அரசுத் திட்டமாக தொடங்கப்பட்டது. 1974-75 ஆம் ஆண்டில் இத்திட்டம் மாநில அரசுக்கு மாற்றப் பட்டது. ஊட்டச் சத்துக் குறைவினால் நலிவுற்ற சிறுர்கள் குறிப்பாக நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் பள்ளி செல்லும் வயது அடையாத சிறுர்களுக்குச் சத்துணவு வழங்குவதும், மாடர்ன் ரொட்டி வழங்கி ஊட்டச் சத்து குறைவினால் ஏற்படும் நோயினை ஒழிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். மாடர்ன் ரொட்டி வழங்கும் திட்டம் 1975 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் வரை செயலில் இருந்தது. பின்னர், இத்திட்டம் பாலாகார் உணவு வழங்கும் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது.

31. 100 கிராம் பாலாகார் உணவில் 360 கலோரிகளும், 21 கிராம் புரதமும் அடங்கியுள்ளது. சென்னை மாநகரத்தின் எல்லோராப் பகுதிகளிலும், வெளியூர்களிலும் இவ்வுணவைப் பயன்படுத்துபவர் களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு 80 கிராம் வீதம்



1978 மார்ச் 7]

பாலாகார் சமைத்த உணவு வழங்கப்படுகிறது. உடல் நலப் பரிசோதனையுடன் பரிசோதனையும் செய்யப்படுகிறது. மருத்துவப் பரிசோதனையுடன் நோய்த் சிறப்புச் சத்துணவுத் திட்டத்தின் கீழ் தேவையான பணிகள் தடுப்புப் பணிகள், மதிப்பீட்டுப் பணிகள் ஆகிய மாநகரங்களிலும், சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மேற்கொள்ளப்படுகின்றன. புதுக்கோட்டை மாநகராட்சியிலும் ஒருவருக்கு 700 கிராம் இந்த இடங்களில் வாரத்திற்கு ஒரு தடவை சிறப்புச் சத்துணவுத் பாலாகார் மாவு தரப்படுகின்றது. அடைந்துள்ளார்கள். திட்டத்தின் கீழ் 2,76,530 பேர் பயன் இச்சத்துணவு ஓராண்டில் 300 நாட்களுக்கு இவர்களுக்கு வழங்கப்படுகிறது.

## சத்தூட்ட உப்பு.

32. சத்துணவுக் குறைவை எதிர்த்துப் போராட சாதாரணமாக தினசரி உபயோகத்தில் இருந்துவரும் உணவுப் பண்டங்கள் மூலம் வீரிய சத்துணவை மக்களிடையே பரப்ப ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன.

33. ஆராய்ச்சிகளில், தினசரி உபயோகிக்கப்படும் உப்போடு இரும்புச் சத்துகள் சேர்த்து வீரியப்படுத்தினால் அது மிக்க பலனைக் கொடுக்கும் என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஐதராபாத்திலுள்ள தேசிய சத்துணவு ஆராய்ச்சி நிலையத்தினர் சாதாரண உப்பை வீரியப்படுத்துவதால் சமைத்த பின்னரோ அல்லது சேமித்து வைப்பதாலோ அதன் நிறமோ சுவையோ மாறுவதில்லை என்றும், சமைத்த பின் அதன் இயல்பான தன்மையில் மாறுதல் எதும் இல்லை என்றும் தெளிவுபடுத்தி யிருக்கிறார்கள். இதன் தொடர்ச்சியாக, மத்திய அரசு கீழ்க்கண்ட நான்கு ஆராய்ச்சி நிலையங்கள் மூலம் மேலும் நடைமுறை சோதனைகள் செய்ய உத்தேசித்திருக்கிறது :—

1. தேசிய சத்துணவு நிலையம், ஐதராபாத்து ;
2. அனைத்திந்திய மருத்துவ விஞ்ஞான நிலையம், புதுடில்லி
3. அனைத்திந்திய உடல் நல மற்றும் பொதுச் சுகாதா நிலையம், கல்கத்தா ;
4. சிறுர் நல நிலையம், சென்னை.

34. இந்திய அரசு ஒரு முன்னோடித் திட்டத்தை தமிழ் நாட்டுக்கு ஒப்பளித்திருக்கிறது. சத்தூட்டப்பட்ட உப்பு சென்னையில் ஒரு கூட்டுத் துறை நிறுவனம் மூலம் தயாரிக்கப்பட்டு மேற்கூறப்பட்ட நான்கு நிலையங்களுக்கும் விநியோகிக்கப்படும். இயந்திர சாதனங்களை நிறுவுதல், தலப் பரிசோதனைகள் நடத்துதல், மேலும் அது சம்பந்தப்பட்ட செலவினங்களை மத்திய அரசு ஏற்கும். தலப் பரிசோதனைகள் கீழ்க்கண்ட பிராந்தியங்களில் நடத்தப்படும்.

(அ) சென்னையில் குளோப் பிரிவில் சற்றேறக்குறைய 3,000 பேர் ;

(ஆ) ஐதராபாத் அருகே சில கிராமங்கள் ;

(இ) கல்கத்தா அருகே சில கிராமங்கள் ;

(ஈ) டில்லிக்கு அருகே சில கிராமங்கள்.

35. தலப் பரிசோதனைகள் இரண்டாண்டு காலம் நீடிக்கும். அதன் பின்னர் இப்பரிசோதனைகள் மூலம் ஏற்படும் பலன்களை உத்தேசித்து சத்தூட்டப்பட்ட உப்பை வியாபார ரீதியில் தயாரித்து நாட்டு மக்கள் அனைவரும் பயனடையச் செய்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்.

### 3. உடல் ஊனமுற்றோர்.

உடல் ஊனமுற்றோருக்காக கீழ்க்கண்ட திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன ;

36. நவீன முறைப் பயிற்சி—உற்பத்தி தொழிற்சாலை முட்டுக்காடு—உடல் ஊனமுற்றோர் மறுவாழ்விற்காக தமிழக அரசு நவீன முறைப் பயிற்சி உற்பத்தித் தொழிற்பட்டறை ஒன்று சென்னை—மாமல்லபுரம் சாலையில் முட்டுக்காடு என்ற இடத்தில் அமைந்துள்ளது. 1975 ஆம் ஆண்டு ஜுன் திங்களில் இத்தொழிற்பட்டறை செயல்படத் தொடங்கியது. 1976 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இத்தொழிற்பட்டறையில் சேர்க்கப்பட்ட 28 பேர் முதல் குழுவில் தமது பயிற்சியினை முடித்து இத்தொழிற்பட்டறையிலே தற்போது தினக் கூலி பணியாட்களாக சேர்த்துக்



கொள்ளப்பட்டுள்ளனர். தற்போது இரண்டாம் குழுவினரில் 27 பேரும் மூன்றாம் குழுவில் 20 பேரும் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும், இலேசான பொறியியல் ரகங்கள், கட்டுமானப் பணிகள், உதிரிப் பாகங்கள் செய்தல் போன்ற உற்பத்திப் பணிகள் இத்தொழிற்பட்டறையில் செய்யப் படுகின்றன. இத்தொழிற்சாலை ஒரு வணிக நிறுவனமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

37. உடல் ஊனமுற்ற 29 மகளிருக்கு ஸ்திரி சேவா மந்திரில் பயிற்சி அளிக்கப்படுகிறது. செவிடு, ஊமைப் பெண்களுக்கு, பொம்மை செய்தல், பூ வேலை, ஆடை தைத்தல் ஆகியவற்றில் பயிற்சியளிக்கப்படுகிறது. கண் பார்வையற்ற மகளிருக்குப் பாய் முடைதல், ஆடை நெய்தல் ஆகிய தொழில்களில் பயிற்சியளிக்கப் படுகிறது. ஊனமுற்ற மகளிருக்குச் சுருக்கெழுத்து தட்டச்சுப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

38. இதுவரை 3,500 மூன்று சக்கர வண்டிகளும், 1,325 கேட்பு உதவிச் சாதனங்களும் (Hearing aids) கொடுக்கப்பட்டுள்ளன.

39. இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், மூளைக் கோளாறினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், செவிடு, ஊமை, தொழு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், மேலும் கண் பார்வையற்ற உடல் ஊனமுற்ற குழந்தைகள், 8—16 வயது வரம்பிற்குட்பட்ட குழந்தைகளைப் பராமரிக்க தொண்டு நிறுவனங்களுக்கு மானியமாக ரூ. 40,000 கொடுக்கப் பட்டுள்ளது. தொழு நோயால் துன்புறும் குழந்தைகள், தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகளைப் பராமரிக்க மேலும் ரூ. 40,000 கொடுக்கப்பட்டுள்ளது.

40. மனநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குப் பயிற்சி யளிக்கும் பொருட்டு, ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்காக பாலவிகாருக்கு ரூ. 45,600 மானியத் தொகை வழங்கப் பட்டுள்ளது.

41. செவிட்டுக் குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்கும் பொருட்டு ஆசிரியர்களின் பயிற்சிக்காக, சென்னையிலுள்ள செவிடர்கள் பள்ளிக்கு ரூ. 65,000 மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

42. 1977-78 இல் 40 கண் பார்வையற்ற பெண்களுக்காக கூரை வேய்ந்த தொழிற்கூடம் ஒன்று சென்னையில் தொடங்கப் பட்டுள்ளது.

43. சென்னை நகரத்திலுள்ள கண் பார்வையற்றவர்கள் நகரத்தினுள் பல்லவன் போக்குவரத்துக் கழக (பெருநகர் பிரிவு) பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

44. பள்ளி செல்லும் காது கேளாத ஏழை மாணவர்களுக்கு 300 காது கேட்கும் கருவிகள் 1978-79 இல் வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

45. 1978-79 ஆம் ஆண்டு கால் ஊனமுற்றவர்களுக்காக 500 மூன்று சக்கர வண்டிகள் தயாரித்து வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

## உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு உதவித் தொகை.

46. இந்திய அரசு, 14—30 வயது வரம்பிற்குட்பட்ட உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு 9 ஆவது வகுப்பிலிருந்து தொடங்கி மேல் படிப்புக்கு 31—3—1977 வரை உதவித் தொகை அளித்து வந்தது. 1—4—1977 முதல் இந்தத் திட்டம் மாநில அரசின் சமூக நல இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. 1—4—1977 தேதிக்கு முன் மாநில அரசும் கல்லூரிப் படிப்பு படிக்கும் 112 உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு உதவித் தொகை அளித்து வந்தது. 1—4—1977 முதல் உதவித் தொகை திட்டம் மாநில அரசால் செயல்படுத்தப்படுவதால் 1—4—1977-க்கு முன் இருந்த மாநில அரசுத் திட்டம் கைவிடப்பட்டது.

47. பள்ளிகளில் உடல் ஊனமுள்ள சிறார்களின் ஒருங்கிணைப்பு—மத்திய அரசுத் திட்டத்தின் கீழ், மாநில அரசு 1977-78 ஆம் ஆண்டு பள்ளிகளில் படிக்கும் சிறார்களின் ஒருங்கிணைப்புக்காக ரூ. 1,63,200 ஒப்பளித்தது. இத்திட்டம் எட்டு சாதாரண பள்ளிகளில் ஒரு சோதனைத் திட்டமாக செயல்படுத்தப்படும். அரைகுறைப் பார்வையுள்ள, சிறிதே காது



கேளாத, உணர்ச்சி வசப்படுவதால் பாதிக்கப்பட்ட, காக்காய் வலிப்பால் அவதியுறும், மற்றும் உடல் ஊனமுற்ற பிள்ளைகள் சாதாரண பள்ளிகளில் கல்வி வசதி அளிக்கப்படுவர். அவர்களுக்கு மூக்கு கண்ணாடிகள், கேட்பு சாதனம், படிக்க உதவும் கருவிகள் முதலியனவையும், பயணச் செலவுகள், புத்தகங்கள், சிலேட்டுகள் ஆகியவையும் அளிக்கப்படும். 80 சிறார்கள் இத்திட்டத்தால் பயன் பெறுவர்.

48. **உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியம்.**—உடல் ஊனமுற்றோருக்கான மாநில வாரியம் மூன்று ஆண்டுகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதன் நோக்கங்களாவன :—

(1) உடல் ஊனமுற்றோரின் மறுவாழ்வுக்காக அவர்களின் பிரச்சினைகளை ஆராய்வது ;

(2) அரசுடன் கலந்தாலோசித்து உடல் ஊனமுற்றோரின் முன்னேற்றத்திற்காக வேலை வாய்ப்புத் திட்டங்களை உருவாக்குதல் ;

(3) உடல் ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பை ஊக்குவித்தல் ;

(4) உடல் ஊனமுற்றோருக்கும், நலப் பணிகளிலும் ஈடுபடும் தனியார் நிறுவனங்களுக்கும் நிதியுதவி அளிப்பது பற்றி ஆராய்தல் ;

(5) உடல் ஊனமுற்றோரின் கல்வி, பயிற்சி மற்றும் மறுவாழ்வுப் பணிகளில் ஈடுபடும் நிறுவனங்கள் புரியும் பணிகளை ஒருங்கிணைத்தல்.

## உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு உதவித் தொகை.

49. இந்த வாரியத்தின் முதல் கூட்டம் 26—10—1977 ஆம் நாளன்று நடந்தது. வாரியத்திற்கான சட்ட திட்டங்கள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. உடல் ஊனமுற்றோருக்கும் அவர்களின் நலன்களுக்காக பாடுபடும் நிறுவனங்களுக்கும், மானியம்/கடன் வசதியளிக்க ரூ. 50,000 இந்த வாரியத்திற்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த வாரியம் ஒரு தனி நபருக்கு

ரூ. 1,000 வரை மானியம்/கடன் வழங்கலாம். ஒரு நிறுவனத்திற்கு ரூ. 10,000 வரை மானியம்/கடன் வழங்கலாம். ரூ. 10,000-க்கு மேல் உள்ள மானியம்/கடன் ஒப்பளிப்பது, [illegible] தீர்மானிக்கப்படும்.

50. முதியோர் ஓய்வூதியம்.—இத்திட்டத்தின்கீழ் [illegible] வயதிற்கு மேற்பட்ட, ஆதரவற்ற, உடல் ஊனமுற்றோர், திங்களொன்றுக்கு ரூ. 20 ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவராவர். மேற்படி வயது வரம்பை தகுதியுள்ளவர்களுக்குத் தளர்த்த, மாவட்ட ஆட்சியாளர் களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை வருவாய்த் துறை செயல்படுத்தி வருகிறது. நடைமுறையில் முதியோர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கு பொருந்தக்கூடிய விதிகள் இதற்கும் பொருந்தும். இத்திட்டத்தில் இதுவரை ஆதரவற்ற 5,768 உடல் ஊனமுற்றோர் பயனடைந்துள்ளனர். இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டு வருகிறது.

### 4. அனாதைக் குழந்தைகளுக்கு இந்திய அரசின் திட்டம்.

51. இத்திட்டத்தின்கீழ் இம்மாநிலத்திலுள்ள ஆதரவற்ற அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்கும் தொண்டு நிறுவனங் களுக்கு மானியம் வழங்க இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 5 முதல் 18 வயது வரையுள்ள ஆதரவற்ற ஏழைக் குழந்தைகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்திய அரசு, கட்டுமானப் பணிக்கும் பராமரிப்புக்கும் ஆகும் செலவுத் தொகையின் 90 சதவீதத்தை மானியமாக வழங்குகிறது. தொடர், தொடரா இனச் செலவுகளில் 10 சதவீதத்தினை தொண்டு நிறுவனங்கள் ஏற்க வேண்டும். இத்திட்டத்தின்கீழ் 43 நிறுவனங்கள் இம்மானியத் தொகையினைப் பெறுகின்றன. 1,975 குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்.

### 5. கருணை இல்லங்கள்.

52. 1975 ஆம் ஆண்டில் 53 இடங்களில் கருணை இல்லங்கள் (அனாதை இல்லங்கள்) தொடங்கப்பட்டுள்ளன. இவ்வில்லங்கள் இவை கோயில்களின் கூடுதல் நிதியினால் நடத்தப்படுகின்றன.





5 முதல் 18 வயது வரையுள்ள ஆதரவற்ற அனாதைக் குழந்தைகள் இவ்வில்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 12-50 வீதம், இக்குழந்தைகளைப் பராமரிப்பதற்காகும் செலவில் 25 சதவீதத்தை, மானியமாக வழங்குகிறது. மேலும் கட்டிடம், மரச் சாமான்கள் முதலியவற்றிற்கென ஒரு குழந்தைக்கு ரூ. 1,000 வீதம் ஒப்பளிக்கப்படும். 1977-78 ஆம் ஆண்டு குழந்தைகளைப் பராமரிக்க அரசு மானியமாக ரூ. 2,41,000 வழங்கப்பட்டுள்ளது. 53 இல்லங்கள் தற்போது 36 இல்லங்களாகத் தொகுக்கப் பட்டுள்ளன. சுமார் 2,700 குழந்தைகள் இதில் பயன் பெறுகின்றனர். இத்திட்டம், இந்து சமய அறக்கட்டளைத் துறையின் ஆணையரால் நிர்வகிக்கப்படுகிறது. இதற்கான மானியம் இத்துறையின் மூலம் வழங்கப்படுகிறது.

### 6. பிச்சைக்காரர்கள் இல்லம்.

### அரசு பாதுகாப்பு முகாம், மேல்பாக்கம்.

53. மேல்பாக்கத்திலுள்ள பாதுகாப்பு முகாம் பிச்சைக்காரர் களுக்கான ஓர் இல்லமாகும். தமிழ்நாடு 1945 ஆம் ஆண்டு பிச்சையெடுத்தல் தடுப்புச் சட்டத்தின்கீழ் மூன்றாண்டுகள் வரை தண்டனை விதிக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்களுக்காக இந்த இல்லத்தை அரசு நடத்துகிறது. இந்த இல்லத்தை காவல் துறை நிர்வகித்து வந்தது. 1973 ஆம் ஆண்டில் இவ்வில்லத்தின் நிர்வாகப் பொறுப்பு சமூக நலத்துறை இயக்குநருக்கு மாற்றப் பட்டது. இதன் பணியாளர் அமைப்பு முறை தற்போது மாற்றப்பட்டு சமூக நலம் பணியாளர்கள் மேற்பார்வையாளர்களாக பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். துணை இயக்குநர் பதவித் தரத்தில் ஓர் அலுவலர் இவ்வில்லத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். இவ்வில்லத்தில், 770 ஆடவரும், 180 பெண்டிரும் தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டது. இப்போது 129 ஆடவரும், 31 பெண்டிரும் மட்டுமே உள்ளனர். இல்லத்தில் தங்கியிருப்போருக்கு நெசவு, தச்சு வேலை, தையற்கலை முதலிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

### 7. ஆதரவற்ற கைம்பெண்களுக்கு மறுவாழ்வு

54. 1975-76 ஆம் ஆண்டில் ஆதரவற்ற கைம்பெண்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக கீழ்க்காணும் திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறது :—

(1) முதியோர் ஓய்வூதியம்.—இத்திட்டத்தின் கீழ் ஆதரவற்றவர்களும், 40 வயதிற்குக் குறையாமல் இருப்பவர்களுமான கைம்பெண்கள் திங்களொன்றுக்கு ரூ. 20 ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவராவர். இத்திட்டத்தை வருவாய்த் துறை செயல்படுத்தி வருகிறது. நடைமுறையில் முதியோர்களுக்கு உதவித்தொகை வழங்கு திட்டத்திற்குப் பொருந்தக் கூடிய விதிகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். ஆதரவற்ற கைம்பெண்கள் 9,869 பேர் இதுவரை இத்திட்டத்தின்கீழ் பயன் அடைந்துள்ளனர். இத்திட்டம் ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(2) தையல் இயந்திரங்கள்.—ஆதரவற்ற கைம்பெண்கள், உடல் அளவிலும், ஊனமுற்றுள்ள மகளிர் (20 முதல் 40 வயது வரை உள்ளவர்கள்) தையற் கலையில் பயிற்சி பெற்றிருந்தால் ஆதரவற்ற மகளிர், சமூகத்திலும், பொருளாதார வகையிலும், அவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. இதனால், அவர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான வருவாயினை ஈட்டிக் கொள்ள இயலும். இத்திட்டத்தின்கீழ் இதுவரை 2,000 தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1978-79 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தை தொடர்ந்து செயற்படுத்தவும், 500 தையல் இயந்திரங்களை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(3) கைம்பெண்களுக்கு மறுமணம்.—கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்வதற்கு ஊக்கமளிக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதியளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 18—30 வயது வரம்பிற்குட்பட்ட கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்வார்களானால் அந்த மணமக்கள் இருவர் பெயரிலும் கூட்டாக முதலீடு செய்யப்படுகின்ற ஏழாண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வடிவில் அவர்களுக்கு ரூ. 5,000 நிதியுதவி வழங்கப்படுகிறது. 1975 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3 ஆம் நாளுக்குப் பிறகு மணம் செய்து கொள்ளும் தம்பதிகளே இத்திட்டத்தின்



கீழ் பயனடையத் தகுதியுள்ளவர்கள் ஆவார்கள். 1975-76, 1976-77 ஆம் ஆண்டுகளில் முறையே 90, 46 தம்பதியினர் பயனடைந்தனர். 1977-78 ஆம் ஆண்டிலும் 100 தம்பதியினர் இத்திட்டத்தால் பயனடைய இருக்கின்றனர்.

(4) ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்கும் குறைவாக உள்ள விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசமாக புத்தகம், நோட்டுப் புத்தகம் ஆகியவை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் 3,000 குழந்தைகள் இதன் மூலம் பயன் பெறுவார்கள்.

55. ஆயுள் ஈட்டுறுதிப் பயன்களையும், வருங்கால வைப்பு நிதிப் பயன்களையும் பெறுதல், குழந்தைகளை அனாதை இல்லங்களிலும், கல்வி நிலையங்களிலும் சேர்த்துக் கொள்வது தொடர்பாகவும், கல்வி—வேலை வாய்ப்புகள் பெறுதல் தொடர்பாகவும் விதவைகளுக்கு உதவும் பொருட்டு ஆலோசனை நல்கும் வழிகாட்டி இம்மாநிலத்தில் தஞ்சை, மதுரை, கோவை ஆகிய இடங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அண்மையில் சென்னையிலும் வழிகாட்டி அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது.

### 8. தமிழ்நாடு மாநில சமூக நல வாரியம்.

56. 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தமிழ்நாடு மாநில சமூக நல வாரியம், தனியார் நிறுவனங்களை உருவாக்கி, அவற்றை ஊக்குவித்து வளர்ச்சி பெறச் செய்வதில் முக்கிய பங்காற்றி வருகிறது. இந்த வாரியம் மூன்றாண்டுகளுக்கொரு முறை திருத்தியமைக்கப்படுகிறது. அதன் முக்கிய பணிகள் :—

(அ) சமூக நல நிறுவனங்களைத் தோற்றுவித்து ஊக்குவித்தல் ;

(ஆ) தொண்டு நிறுவனங்களின் பணிகளின் தரத்தையும், தன்மையையும் உயர்த்தல், பொருளாதார மற்றும் தொழில் நுட்பம் போன்றவற்றிற்கு உதவுதல் ;

(இ) மானியம் பெறும் தொண்டு நிறுவனங்களில் பணிகளைப் பரிசீலனை செய்தல் ;

(ஈ) களப் பணியில் உள்ள தொண்டு நிறுவனங்களுக்கும், மத்திய சமூக நல வாரியத்திற்கும் நடுவராக இருந்து திட்டங்களை செயலாற்ற இவ்வாரியம் உதவுகிறது.

முக்கியமாக மகளிர், குழந்தைகள் மற்றும் ஊனமுற்றோர் நலனுக்காக பரவலாக, பணி புரியும் தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு உதவ, இவ்வாரியம் பணி புரிந்து வருகிறது.

1976-77 ஆம் ஆண்டில் 618 நிறுவனங்களுக்கு பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற ரூ. 27.35 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1977-78 ஆம் ஆண்டில் இதுவரை 768 நிறுவனங்களுக்கு ரூ. 46.02 இலட்சம் ஒதுக்கீடு செய்து கீழ்க்கண்ட பணிகளைச் செய்திட வகை செய்யப்பட்டுள்ளது :—

| வரிசை எண்ணும், தொண்டின் இனமும். (1) | நிறுவனங்களின் எண்ணிக்கை. (2) | அனுமதிக்கப்பட்ட மானியம். (3) |
|---|---|---|
| 1. ஆண்டு மானியம் .. .. | | ரூ. |
| 2. திட்டகால மானியம் .. .. | 299 | 3,58,770 |
| 3. மகிளா மண்டல் .. .. | 80 | 4,55,875 |
| 4. விடுமுறை முகாம் .. .. | 15 | 1,31,610 |
| 5. ஓராண்டு குறுகிய காலக் கல்விப் பயிற்சி. .. | 33 | 99,000 |
| | 13 | 1,89,100 |
| 6. மகளிர் தொழிற்பயிற்சித் திட்டம். | | |
| 7. பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள் | 48 | 6,63,596 |
| 8. விரிவாக்க நலத்திட்டம் (புற நகர்). | 3 | 18,100 |
| | 2 | 13,200 |
| 9. குழந்தைகள் குடும்பங்களில் பராமரிக்கும் திட்டம். | 1 | 29,400 |
| 10 ஊட்டச் சத்துணவு .. | | |
| 11. சமூகப் பொருளாதாரம் .. | 105 | 3,80,640 |
| 12. பால் பண்ணைத் திட்டம் .. | 1 | 50,000 |
| 13. குழந்தை வளர்ப்பு காப்பகங்கள், | 152 | 21,28,000 |
| | 16 | 84,537 |
| மொத்தம் .. | 768 | 46,01,828 |





## இணைப்பு

318-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

### கோரிக்கை எண் 47.

### செய்தி-மக்கள் தொடர்புத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை, அரசுக்கும் பொதுமக்கள் மற்றும் பத்திரிகை உலகுக்கும் இடையே தொடர்புகளை ஏற்படுத்தும் ஒரு பொதுத் தொடர்பு அமைப்பாக இயங்கி வருகிறது. அரசின் கொள்கைகள், திட்டங்கள், செயல்கள், சாதனைகள் ஆகியவை பத்திரிகைகளுக்கான செய்திக் குறிப்புகள் மற்றும் அறிவிப்புகளாக இத்துறையின் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன. பொது மக்களின், குறைகளை, தேவைகளை, அரசுக்கும், அரசின் நிர்வாகத் துறைகளுக்கும் எடுத்து விளக்கும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாறு, அரசின் கண்ணாகவும், காதாகவும் இத்துறை விளங்கி வருகிறது.

அரசின் பல்வேறு துறைகளும், அரசின்கீழ் உள்ள பல்வேறு கழகங்கள், வாரியங்கள் நிறுவனங்கள் ஆகியவைகளும் தருகின்ற விளம்பரங்கள் அனைத்தும் இந்தத் துறையின் வாயிலாக பத்திரிக்கைகளுக்கு ஒருமுகப்படுத்தப் பெற்று வழங்கப் படுகின்றன. மற்ற அரசுத் துறை விளம்பரங்களை வெளியிடும் ஒரு சாதனமாக இயங்குவது மட்டுமல்லாமல், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தானே பல விளம்பரங்களைத் தயாரித்து வெளியிடுகிறது. இந்த விளம்பரங்கள் பொதுவாக அரசின் கொள்கைகளை, திட்டங்களைப் பொதுமக்களுக்கு விளக்கும் முறையில் அமைகின்றன.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களையும், தேசியப் பெருந்தலைவர்களின் பிறந்த நாள், நினைவு நாள் கூட்டங்களையும் நடத்தி, பொதுமக்கள் நாட்டுப் பணியில் ஈடுபாடு கொள்ளத்தக்க வகையிலும், நாட்டுக்காக உழைத்தவர்களை அறிந்து பாராட்டும் வகையிலும் இத்துறை ஊக்கமளித்து வருகிறது.

நமது மாநிலத்திலும், பிற மாநிலங்களிலும் நடைபெறுகிற பொருட்காட்சிகளில் அரசின் சார்பாக இத்துறை பங்கு பெற்று அரசின் பல்வேறு துறைகளின் செயற்பாடுகளையும் சாதனங்களையும்

விளக்குகிறது. 1977-78 ஆம் ஆண்டில் பங்கு பெற்ற பொருட்காட்சிகளில் குறிப்பிடத்தக்கது பு[illegible] நடைபெற்ற தேசிய விவசாயப் பொருட்காட்சியாகும். அரசுக்கும், உள்ளாட்சி அமைப்புக்களுக்கும் சொந்தமான பொதுவிடங்களில், தனி நபர்களோ, தனி நிறுவனங்களோ பொருட்காட்சி நடத்த அனுமதி அளிப்பதில்லையென்று அரசு அண்மையில் முடிவெடுத்துள்ளது. மேலும், தனியார் மற்றும் தனி நிறுவனங்கள் நடத்தும் பொருட்காட்சிகளில் அரசுச் சார்பில் பங்கு பெறுவதில்லை என்ற முடிவும் எடுக்கப்பட்டுள்ளது. எனினும், அரசின் முன் அனுமதி பெற்று பொது இடங்களில் உள்ளாட்சி அமைப்புகளும், அங்கீகாரம் பெற்ற தொழில் வர்த்தக நிறுவனங்களும் பொருட்காட்சிகளை நடத்தலாம்.

அரசின் நல்வாழ்வுத் திட்டங்களையும், குடிப் பழக்கத்தினால் விளையும் கேடுகளையும், தீண்டாமை ஒழிப்புப் பற்றியும் பொது மக்களுக்கு எடுத்துக்கூற மாவட்டங்களிலும் தலைநகரிலும் 1978-79 ஆம் ஆண்டில் 100 இசை மற்றும் நாடக நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சிகள் தேர்ந்தெடுக்கப் பட்ட கலைக் குழுவினரால் நடத்தப் பெறும்.

சென்னை, மதுரை, தஞ்சை ஆகிய இடங்களிலுள்ள இத்துறையைச் சார்ந்த செய்தி நிலையங்கள் பல்வேறு பொருள்கள் குறித்தும், மற்றும் அரசின் கொள்கைகள், சாதனைகள் பற்றிய செய்திகளையும் விளக்கங்களையும் பொதுமக்களுக்குத் தந்து உதவுகின்றன. தவிர, ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்துறையின் சார்பில் விளம்பரப் பணிகள், விழாக்கள், பொருட்காட்சிகள் நடத்த அலுவலகம் ஒன்று உள்ளது.

சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கம், காந்தி இல்லம், இராஜாஜி மண்டபம், சீரணி அரங்கம், வள்ளுவர் கோட்டம், வேலூரிலுள்ள அண்ணா கலை அரங்கம் ஆகியவை இத்துறையின் மேற்பார்வையில் உள்ளன. பொதுமக்களுக்கான வசதிகளைப் பெருக்க, கலைவாணர் அரங்கத்துக்கு அண்மையில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இப்போது அரங்கம் புதுப் பொலிவுடன் விளங்குகிறது. வேலூர் அண்ணா கலை அரங்கமும் இதுபோன்றே புதுப்பிக்கப்பட்டு விரைவில் திறக்கப்பட





இருக்கிறது. வள்ளுவர் கோட்ட அரங்கில் ஒலியமைப்பினைச் சீராக மாற்றி செம்மைப்படுத்த அரசு அண்மையில் ரூ. 2.20 லட்சம் அனுமதி வழங்கியுள்ளது. இதற்கான வேலை விரைவில் தொடங்கும்.

(1) "தமிழரசு" இதழ், (2) திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி, (3) தமிழ்நாடு திரைப்படப் பிரிவு ஆகியவை மேற்பார்வையில் நடத்தப்பட்டு வருகின்றன.

## "தமிழரசு"

"தமிழரசு" இதழ் (தமிழ்-ஆங்கிலம்) அரசின் அதிகாரப் பூர்வமான ஒரே இதழாகும். இந்து அறநிலையத் துறையால் வெளியிடப்படுகிற "திருக்கோயில்" எனும் பத்திரிகையைத் தவிர, அரசாங்கத்தின் மற்றப் பத்திரிகைகளையெல்லாம் இணைத்து "தமிழரசு" 1970 ஆம் ஆண்டு ஜூலையில் துவக்கப்பட்டது. திங்கள் இருமுறை வெளிவரும் தமிழ் இதழில் 35,000 பிரதிகளும மாதம் ஒரு முறை வெளிவரும் ஆங்கில இதழில் 2,750 பிரதிகளும் வெளியிடப்படுகின்றன. இவை இத்துறையின் கீழுள்ள "தமிழரசு" அச்சகத்தில் அச்சிடப்படுகின்றன. இந்த அச்சகத்தில் மத்திய அரசு வெளியீடான "திட்டமும்", அறநிலையத் துறையின் "திருக்கோயிலும்" அச்சிடப்படுகின்றன. மேலும் அரசுக்குத் தேவையான சுவரொட்டிகள், சிறு கையேடுகள், துண்டு வெளியீடுகள் முதலியனவும் இதில் அச்சிடப்படுகின்றன.

## திரைப்படத் தொழில்நுட்பக் கல்லூரி.

திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி 1948 ஆம் ஆண்டு துவக்கப்பட்டு, கணிசமாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது. திரைப்படத் தயாரிப்பு சம்பந்தப்பட்ட அனைத்துப் பிரிவுகளிலும் பயிற்சியளித்து, தேர்வு நடத்தி வெற்றி பெற்றோர்க்குச் சான்றிதழ் வழங்குதல், கல்வியை வளர்ப்பதிலும் கலையின்பத்தை நல்குவதிலும் திரைப்படத்திற்குள்ள சக்தியை மக்களுக்கு உணர்த்துதல், திரைப்படத் தொழில் பற்றிய ஆய்வு நிகழ்த்துதல் ஆகியவை இக்கல்லூரியின் குறிக்கோள்களாகும். அரசு அலுவலர்களையும், திரைப்படத் தொழில் தொடர்புடைய அரசு

சார்பற்ற தொழில்நுட்ப வல்லுநர்களையும் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று இக்கல்லூரிக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகிறது. படப்பிடிப்பு, ஒலிப்பதிவு மற்றும் ஒலிப் பொறியியல், படச்சுருள் கழுவுதல், படம் இயக்குதல், திரைக்கதை வசனம் எழுதுதல், படத் தொகுப்பு, நடிப்பு ஆகியவற்றில் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. தொலைக்காட்சிக்கான திரைக்கதை வசனம் எழுதுதல், படப்பிடிப்பு, ஒலி பொறியியல் ஆகியவற்றில் பயிற்சியளிக்கும் திட்டமொன்று ஆய்வில் உள்ளது. மேலும், ஒப்பனைக் கலையில் ஒரு சான்று இதழ்ப் பயிற்சி (டிப்ளமா) பாடப் பிரிவு துவக்குவதற்கும் ஒரு திட்டம் உள்ளது. இக்கல்லூரியில் பயிலும் மாணவர்கள் திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்களிலும், ஆய்வுக் கூடங்களிலும், தொலைக்காட்சி நிலையங்களிலும் வேலை வாய்ப்புப் பெறலாம்.

1977-78 ஆம் ஆண்டில் படச்சுருள் காப்பகம் ஒன்று நிறுவுவதற்காக ரூ. 1.40 இலட்சம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. பல நல்ல தரமான பழைய படங்கள் பழுதுபட்டதாலும், பாதுகாக்கப்படாததாலும் சேதமடைந்துவிடுகின்றன. ஆகவே, அப்பழைய படங்களை விலைக்கு வாங்கியும் இலவசமாகக் கிடைத்தால் அவற்றையும் சேர்த்து, வருங்காலத்தினருக்காகப் பாதுகாத்து வைக்கும் நோக்குடன் இக்காப்பகம் அமைக்கப் படுகிறது.

இக்கல்லூரியிலுள்ள படப்பிடிப்பு வசதிகளும், படப்பிடிப்புத் தளமும், படம் தயாரிக்கும் தனியாருக்கு வாடகைக்கு வழங்கப் படுகின்றன. இப்படி வழங்குவதால், அரசுக்கு வருவாய் கிடைப்பதுடன், புகழ்பெற்ற படத் தொழில் வல்லுநர்களின் செயல்திறன்களை நேரில் அறியவும், அவர்களுடன் படப்பிடிப்பில் பங்கு கொள்ளவும் மாணவர்களுக்கு வாய்ப்பும் கிடைக்கிறது படத் தயாரிப்பாளர்களுக்குத் தேவைப்படும் இப்படப்பிடிப்புத் தளம், முழுமையாகப் பயன்படுத்தப்படுவதற்குரிய வகையில் வசதிகளை பெருக்குவது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

குடிப் பழக்கத்தினால் விளையும் கேடுகள், தேசிய ஒருமைப்பாடு நாட்டுப் பற்று போன்ற தேசிய அளவில் நலன் தரும் பொருள்கள் பற்றிய தரமான படங்கள் தயாரிப்பதை ஊக்கப்படுத்துவதற்காக.



இப்படிப்பட்ட தமிழ்ப் படம் ஒவ்வொன்றுக்கும் ஒரு இலட்சம் ரூபாய் வீதம் ஐந்து தமிழ்ப் படங்களுக்கு ஆண்டுதோறும் உதவித் தொகை வழங்க அரசு தீர்மானித்துள்ளது. முதற்கட்டமாக, 1976-77 இல் தயாரிக்கப்பட்டு தணிக்கை செய்யப்பட்ட படங்கள் இது தொடர்பான தேர்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. இதற்கென அமைக்கப்படும் தேர்வுக் குழு, அரசின் நிதி உதவியைப் பெறத்தக்க தயாரிப்பாளர்களின் தகுதிகளை ஆராய்ந்து, அரசுக்கு ஆலோசனை வழங்கும்.

மேலும், சிறந்த படங்களுக்கும், சிறந்த நடிகர்கள், சிறந்த படத் தொழில்நுட்ப வல்லுநர்கள். ஆகியோருக்கும் பரிசு வழங்கும் திட்டத்தை மீண்டும் செயற்படுத்துவது குறித்தும் அரசு ஆலோசித்து வருகிறது.

## தமிழ்நாடு திரைப்படப் பிரிவு.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மாநிலத்தில் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளைத் தேர்ந்தெடுத்துப் படமாக்கி செய்திப் படங்களாக மத்திய அரசின் திரைப்படப் பிரிவின் மூலம் வெளியிடுகிறது.

இத்துடன் அரசின் பல்வேறு துறைகளின் செயல்களை. கருத்து விளக்கப் படங்களாக (டாகுமெண்டரி) எடுத்து இத்திரைப்படப் பிரிவு வெளியிடுகிறது. இப்படங்கள் (35 மில்லிமீட்டர் அளவில்) திரையரங்கங்களுக்கும், (16 மில்லி மீட்டர் அளவில்) அரசின் செய்தி, விளம்பரப் பிரிவுகளுக்கும் அனுப்பப்பட்டு பொது மக்களுக்குக் காட்டப்படுகின்றன. பல்வேறு அரசுத் துறைகளுக்கான கருத்து விளக்கப் படங்களை (டாகுமெண்டரி) தயாரிப்பதற்காக 1978-79 ஆம் ஆண்டில் இரண்டு இலட்சம் ரூபாய் இத்துறைக்கு ஒதுக்கீடு செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

முக்கிய அரசு விழாக்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றைப் புகைப்படம் எடுப்பதற்கான பிரிவு ஒன்று இத்துறையில் இருக்கிறது. இப்பிரிவு எடுக்கும் புகைப்படங்களை பத்திரிகை களுக்கும் பல்வேறு நிறுவனங்களுக்கும் வழங்குகிறது. சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய இடங்களில் எற்கெனவே

இருக்கின்ற புகைப்படப் பிடிப்பாளர்கள் தவிர, மேலும் ஒரு புகைப்படக்காரரைக் கூடுதலாக மதுரையில் நியமித்து, தக்க வசதிகளுடன் கருவிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்நாடு திரையரங்குக் கழகம், சென்னை.

1972 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட தமிழ்நாடு திரையரங்குக் கழகம் பொறுப்பு வரையறுக்கப்பட்ட முற்றிலும், அரசுசார் நிறுவனமாகும். தமிழ்நாட்டில் பகுதி நிலைத் திரையரங்கங்களைக் கட்டவும், நிலையான புதிய திரையரங்குகளாக அவற்றை மாற்றி அமைத்திடவும், நிலையான புதிய திரையரங்கங்களைக் கட்டவும், அத்தகைய திரையரங்கங்களுக்குத் தேவையான கருவிகள் முதலியவற்றை வாங்கவும் நிதியுதவியளிப்பதே இக்கழகத்தின் தலையாய நோக்கமாகும். செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 25 இலட்சம், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மூலம் கடனாகக் கிடைக்கும் ரூ. 50 இலட்சம் ஆகியவை இக்கழகத்தின் நிதி ஆதாரங்களாகும்.

இன்றைய நிலையில், சட்டப்படி செல்லக்கூடிய ஒப்பளிப்புகள் 77 ஆகும். இவற்றில் 58 நபர்கள் திரையரங்கங்களைக் கட்டி முடித்து, படங்களைத் திரையிட்டு வருகின்றனர். திரையரங்கம் ஒன்றுக்குக் கடன் உதவியின் உச்சவரம்பு ரூ. 1.20 இலட்சமாகும். தமிழ்நாடு திரையரங்குக் கழகம் இதுவரையில் ரூ. 93.90 இலட்சம் கடன் தொகை அனுமதித்துள்ளது. அத்தொகையில் ரூ. 75.30 இலட்சம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது.

கிராமப்புரங்களில் திரையரங்கங்களைக் கட்டும் பணியை ஊக்குவிப்பதில் திரையரங்கக் கழகம் வெற்றி கண்டுள்ளது.

## சுற்றுலாத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு.

நாட்டுக்குப் பொருள் வருவாயை ஈட்டுவதாகவும், மக்களுக்குப் பரந்த மனப்பான்மையை ஊட்டுவதாகவும் சுற்றுலாக் கலை உலக அரங்கில் சிறப்போடு ஓங்கி வருவதோடு தொழில் துறையாகவும் செழித்து வருகிறது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்", "நாடும் நகரமும் நல்திருக்கோயிலும் பாடிப் பணியின்" என்னும் தமிழ்ச் சான்றோர்களின் கருத்துக்கள் சுற்றுலாக் கலையின் பெருமையைச் சுட்டிக் காட்டுவதோடு, அதை மேலும் வளர்ப்பதற்கான ஊக்க உரைகளாகவும் நமக்கு அமைகின்றன. விருந்தினர்களை



வரவேற்பதையும், சுற்றுலாக்களை மேற்கொள்வதையும் நாடுகாண் காதை, ஊர்காண் காதை என்றெல்லாம் பழைய இலக்கியங்களிலே காணலாம்.

மேலை நாடுகளில் சுற்றுலா மிகப் பெரிய அளவில் வளர்ந்து வருகிறது. ஆசிரியர்கள், மாணவர்கள், வணிகர்கள், தொழிலாளர்கள், மகளிர் என எல்லா நிலையினரும் வெளிநாடுகளில் ஆண்டுதோறும் உலகப் பயணத்தை மேற்கொள்கிறார்கள். மாதந்தோறும் தங்கள் ஊதியத்தில் ஒரு பகுதியை உலகப் பயணத்துக்காக இளைஞர்கள் ஒதுக்கி சேமித்து வைக்கிறார்கள். அயல்நாட்டு விருந்தினர்களின் பயணங்களோடு, செல்வம் படைத்தவர்கள் உல்லாசமாகப் பயணம் செய்கின்ற வழக்கமும் உண்டு. வணிகர்கள், அறிஞர்கள், அலுவலர்கள் தங்கள் பணிகளின் காரணமாகப் பயணம் மேற்கொள்வதும் உண்டு.

"சாமானியர்களின் சகாப்தம் என்று இந்தக் காலத்தை நாம் அழைக்க வேண்டும். ஏழைகளின் கரங்களுக்கு எட்டும்படியாக எல்லாவற்றையும் இழுக்க வேண்டும்", என்ற பேரறிஞர் அண்ணாவின் கருத்திற்கேற்ப நடுத்தர, எளிய மக்களும் சுற்றுலாக் கலையின் வாய்ப்புக்களையும், வசதிகளையும் பெற்றாக வேண்டும் என்பதே மாண்புமிகு முதல்வர் அவர்களின் விருப்பமாகும். சுற்றுலாத் திட்டங்களை அந்த அடிப்படையில் வகுக்க இந்த அரசு கருதியுள்ளது. வடக்கே காசியில் விஸ்வநாதர், தெற்கே இராமேஸ்வரத்தில் இராமநாதர், மேற்கே சோமநாதர், கிழக்கே ஜெகன்நாதர் என்ற நான்கு நாதர்களையும் வழிபட வேண்டுமென்றெல்லாம் சமய உணர்வினைக் காட்டுவதன் மூலம் ஒருமைப்பாட்டை நமது மக்கள் பல காலமாகக் கருதியும் வந்திருக்கிறார்கள். என்றாலும், இந்நாவில் எல்லா நிலையினரும் எல்லாத் தரப்பினரும் சுற்றுலாச் செல்லும் வாய்ப்புக்களைப் பெறும் நிலைமைகள் உருவாக்கப்பட வேண்டும்.

ஏராளமான சுற்றுலா மையங்களையும் எழில் குலுங்கும் இடங்களையும் தமிழகம் கொண்டு விளங்குகிறது. வான் முட்டும் கோபுரங்களைக் கொண்ட வழிபாட்டு ஆலயங்களும், அற்புதச் சிற்பக் கலைக் கூடங்களும், வண்ணக் களஞ்சியங்களாக அருவிகளும், அடவிகளும், வாழும் வன விலங்குகளும், கோல எழில் கொழிக்கும் குறிஞ்சி நகர்களும், நலப் புகலிடங்களும், நெஞ்சைக் கவரும் நீண்ட கடற்கரைப் பகுதிகளும், வளம் கொழிய நம் தமிழகத்தை அலங்கரிக்கிறது.

[1978 மார்ச் 7

மேலை நாட்டினரைப் போலவே சுற்றுலாப் பலன்களையும் அனுபவ வளர்ச்சியையும் நம் நாட்டினரும் பெற வேண்டும். மாவட்டந் தோறும் சுற்றுலா மையங்களை ஏற்படுத்தி வார விடுமுறைகளை நமது மக்களில் எல்லா நிலையினரும் அந்த மகிழ்விடங்களுக்குச் செல்வதன் மூலம் ஓய்வைப் பயனுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும். நம்மோடு ஒரு மாவட்டத்தில் பல ஆண்டுகளாக வாழ்பவர்களில் பலர் கூட இன்னொரு மாவட்டத்தின் சிறப்புக்களையோ இயல்புகளையோ கூட அறிந்துகொள்ளாமல் இருக்கின்ற நிலைமைகளை மாற்ற வேண்டும். நாம் அறியாத இடங்கள் தெரியாத தலங்கள், விளம்பரப்படுத்தாமற் போன கலைக்கூடங்கள் என்று விடுபட்டுள்ள பல இடங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியையும் அரசு செய்ய கருதியுள்ளது. சிற்பங்களைக் கொண்ட சிற்றூராகப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் வெளி உலகிற்குத் தெரியாதிருந்த மத்திய பிரதேசத்திலுள்ள கஜோராஹோ சுற்றுலாத் துறையின் தொடர்பினால் இலட்சக்கணக்கான அயல்நாட்டுப் பயணிகளைக் கவரும் அழகு புரியாக அமைந்ததோடு ஆண்டுக்கு ரூ. 60 இலட்சம் வருவாயையும் ஈட்டித் தருகிறது. இதனால் சுற்று வட்டாரத்தில் பொது மக்களுக்குப் பெரும் பயன்களும் வாழ்க்கைக்கான வேலை வாய்ப்புக்களும் விளைந்துள்ளன. இந்த வகையில் இதுவரை அறிமுகமாகாத தமிழகத்தில் உள்ள இடங்களைக் கண்டறிந்து சுற்றுலாத் துறை ஆவன செய்ய உள்ளது. அவ்வகையில் தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரத்தை அடுத்துள்ளதும் பேரறிஞர் அண்ணாவின் சிந்தை கவர்ந்த காட்சியைப் பகுதியான பிச்சாவரத்தையும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஏலகிரியையும் தமிழகச் சுற்றுலாத் துறை மேம்படுத்த முற்பட்டுள்ளது.

இனிவரும் ஆண்டுகளில் சுற்றுலாவைப் பெருக்கவும், உள்நாட்டு வெளிநாட்டு பயணிகள் வந்திறங்கும் பகுதியாகத் தமிழகத்தை வளர்ச்சியுறச் செய்யும் வகையில் திட்டங்களை வகுக்க வேண்டும். 1980-ல் 10 இலட்சம் (1 மில்லியன்) வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வருகை தருவார்கள் என்று இந்திய அரசு கணித்துள்ளது. இப்போதைய சுற்றுலா வளர்ச்சிப் பாங்கின் அடிப்படையில் இதில் 3 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் நாம் இவர்களோடு கருத்திற்கொள்ள வேண்டும்.



78 மார்ச் 7]

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்தவும் சுற்றுலாப் பயணி ளுக்கு அதிக வசதிகளைச் செய்து கொடுக்கவும் வசதிகளை மேலும் ரிவுபடுத்தவும், பரந்த கண்ணோட்டத்தில் திட்டமிடுதல் வண்டும்.

நமது மாநிலத்தில் 1971 மே திங்களில் சுற்றுலாத் துறை அமைக்கப்பட்டது. சுற்றுலா இயக்குநர் அலுவலகமும், சுற்று ாச் செயலகத் துறையும் இணைந்து தலைமைச் செயலகத்தின் குதியாகப் பணி ஆற்றிவருகிறது. சுற்றுலா மாளிகைகள், ற்றுலா சொகுசுப் பேருந்துகள் நிருவகிக்கும் பணி முதலிய ணிக முறை நடவடிக்கைகள் 1971 ஜூலையில் அமைக்கப்பட்ட மிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட் ள்ளது.

செயலகத்தோடு இணைந்து செயல்படும் சுற்றுலாத் துறையின் ழ் மதுரை, உதகை, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, சேலம், மாமல்லபுரம், சென்னை ஆகிய இடங்களில் சுற்றுலா அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சுற்றுலா அலுவலகங்கள் பயணி களுக்குச் சுற்றுலாத் தகவல்களை அளிப்பதோடு சுற்றுலா மேம் பாட்டிற்கான விளம்பரத்திலும் வளர்ச்சிப் பணிகளிலும் களப் பிரிவுகளாகச் செயல்பட்டு வருகின்றன. மதுரை, திருச்சிராப் பள்ளி, இராமேஸ்வரம் இரயில் நிலையங்களிலும் மற்றும் கொடைக் கானலிலும் சுற்றுலாத் தகவல் நிலையங்கள் பணியாற்றி வருகின்றன. சென்னை சென்ட்ரல் நிலையத்திலும், கோயமுத்தூர் இரயில் நிலையத்திலும், புதுடில்லியிலும், சுற்றுலாத் தகவல் நிலையங்கள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

## இளைஞர் விடுதி.

இளைஞர்கட்குக் குறைந்த செலவில் தங்குமிட வசதியை அளிக் கும் நோக்கத்துடன் மத்திய அரசு அடையாறில் ஓர் இளைஞர் விடுதி கட்டுவதற்கு ரூ. 5.25 இலட்சம் வழங்கியது. மாநில அரசு ரூ. 1.5 இலட்சம் மதிப்புள்ள நிலத்தை அதற்கு அளித்தது. மத்திய அரசின் நோக்கப்படி உள் நிர்வாகக் குழுவினரின் வழிகாட்டுதலுடன் 1975 ஜூலையிலிருந்து இவ்விளைஞர் விடுதியை வருவாயோ இழப்போ இன்றி மாநில அரசு நடத்தி வருகின்றது. இளஞ்சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு உதகையில் இளைஞர் விடுதியினைத் திறப்பதற்கான வாய்ப்பு வசதிகளை அரசு ஆய்வு செய்து வருகிறது.

A. 274—33.

## சுற்றுலா மாளிகைகள்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உதகையில் படகு வீடு நடத்துவதுடன், கீழ்க்கண்ட சுற்றுலா மாளிகைகளையும் நடத்தி வருகின்றது.

1. சுற்றுலா மாளிகை, உதகை.
2. சுற்றுலா மாளிகை, திருச்சி.
3. சுற்றுலா மாளிகை, மதுரை.
4. சுற்றுலா மாளிகை, கன்னியாகுமரி.
5. கேப் விடுதி, கன்னியாகுமரி.
6. சுற்றுலா மாளிகை, திருச்செந்தூர்.
7. சுற்றுலா மாளிகை, கொடைக்கானல்.
8. சுற்றுலா மாளிகை, ஏற்காடு.
9. சுற்றுலா மாளிகை, ஓகேனக்கல்.
10. சுற்றுலா மாளிகை, இராமேஸ்வரம்.
11. கடற்கரை மையம், மாமல்லபுரம்.
12. இராஜா ஓய்வு விடுதி, தஞ்சாவூர்.
13. சுற்றுலா மாளிகை, சிதம்பரம்.

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் பின்வரும் இடங்களில் வி... சுற்றுலா மாளிகைகளை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளது.

1. கோயம்புத்தூர்.
2. நாகப்பட்டினம்.
3. குற்றாலம்.
4. காஞ்சிபுரம்.
5. பிச்சாவரம்.
6. முதுமலை.

தேசிய நெடுஞ்சாலைகளில் வட ஆற்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டையிலும், தென்னார்காடு மாவட்டத்தில் உளுந்தூர்ப் பேட்டையிலும் சாலை விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. ஓசூரில் இத்தகைய ஒரு சாலை விடுதி (Motal) விரைவில் கட்டு வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.



இந்தியச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் காஞ்சிபுரம், திருச்சி, தஞ்சாவூர் முதலிய நகரங்களிலுள்ள சுற்றுலா விடுதிகளையும், மாநில அரசுக்கு ஏட்டு மதிப்பீட்டின்படி (Bock Value) அளிப்பதற்குத் தயாராக உள்ளது. மாநில அரசு அச்சுற்றுலா விடுதிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது.

### பூம்புகாரும், கட்டபொம்மன் நினைவிடமும்.

பூம்புகார் அமைப்பும், காவிரிப்பூம்பட்டினத்தில் உள்ள பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள கட்டபொம்மன் நினைவிடமும் செய்தி மக்கட் தொடர்புத் துறையிலிருந்து இத்துறையின் பொறுப்புக்கு மாற்றப்பட்டுள்ளன. உள்ளூர்ச் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் இவை ஈர்த்து வருகின்றன.

### உதகை ஏரி.

கவரக்கூடிய வகையில் உதகையின் ஏரிப் பகுதியை மேலும் மேம்படுத்தி அழகுபடுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டிடக்கலையில் முன்னணியில் உள்ள சென்னை நிறுவனம் ஒன்றை இவ் ஏரியை அழகு படுத்துவதற்கான பெருந் திட்டம் ஒன்றைத் (Mesler Plan) தயாரிக்க அரசு அமர்த்தி உள்ளது. இவ் ஏரிப் பகுதியை மேம்படுத்தும் திட்டத்திற்கு 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 16 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 1.56 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் நடப்பு ஆண்டில் ரூ. 2.5 இலட்சம் செலவு செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ரூ. 6.69 இலட்சமும் 1978-79 ஆம் ஆண்டில் மீதித் தொகையையும் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### ஏற்காடு ஏரி.

ஏற்காட்டில் உள்ள ஏரியையும் அதன் சுற்றுப்புறத்தையும் அழகுபடுத்தி சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நோக்கத்தோடு கட்டிடக்கலை திட்ட மதிப்பீட்டுடன் அறிக்கை ஒன்று தயாரிக்க பல்வேறு நிறுவனம் ஒன்று அமர்த்தப்பட்டது. இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களையும் படிப்படியாகச் செயல்படுத்த ரூ. 36.35 இலட்சம் தோராய மதிப்பீட்டில் அறிக்கை ஒன்றை அரசுக்கு வழங்கி யுள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் முதல் கட்டப்பணியாக மேற்கொள்ள ரூ. 2.60 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. 1978-79 ஆம் ஆண்டில் இரண்டாம் கட்டப்பணியாக ரூ. 1.5 இலட்சம் அனுமதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1978 மார்ச் 7

## கொடைக்கானல் ஏரி.

கொடைக்கானல் ஏரியை மேம்படுத்தி அதிக அளவில் சுற்றுலா
பயணிகளை ஈர்க்கும் பொருட்டு கவர்ச்சியுள்ள வகையில் அப்
பகுதியைக் கவினுள்ளதாக்கத் திட்டங்களும் மதிப்பீடும் அடங்கிய
திட்ட அறிக்கையைத் தயாரித்து கொடுப்பதற்கு வேறொரு
கட்டிடக்கலை நிறுவனம் அமர்த்தப்பட்டது. மூன்று கட்டங்
களில் செயலாக்கும் வகையில் ரூ. 25,64,100-க்கான தோராய மதிப்
பீட்டில் ஒரு விரிவான அறிக்கையை திட்ட மதிப்பீட்டுடன் இந்
நிறுவனம் அளித்தது. முதல் கட்டமாகச் சில சிறு பணிகளை
மேற்கொண்டு இவ் ஏரியை அழகுபடுத்துவதற்காக ரூ. 58,100
1977-78 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. இரண்டாவது கட்டத்
தில் இன்னும் சில பெரிய பணிகளைச் செயலாக்குவதற்கு ரூ. 2.01
இலட்சம் 1978-79 ஆம் ஆண்டில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## உதகை, கொடைக்கானலில் மேலும் வசதிகள்.

கொடைக்கானலில் "கோக்கர்ஸ் வாக்" என்னும் இடத்திலும்,
"குறிஞ்சி ஆண்டவர் கோயில்" அருகாமையிலும் ஆக இரண்டு
தொலை நோக்காடிகள் ரூ. 1,60,000 செலவில் அமைக்கப்பட்டன.
கொடைக்கானல் செல்லும் சுற்றுலாப் பயணிகள் இத் தொலை
நோக்காடிகளின் உதவியால் பழனி ஆலயத்தின் வடக்குப் பகுதி
யையும், வைகை அணையின் பொலிவான காட்சியினையும் கண்டு
களிக்கலாம். இத் தொலைநோக்காடிக் கருவிகளை அங்கே அமைத்
ததின் மூலம் கொடைக்கானலுக்கு அதிக அளவில் சுற்றுலாப்
பயணிகள் வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. நீலகிரி
மாவட்டத்தில் 1978-79 ஆம் ஆண்டில் இத்தகைய தொலை நோக்
காடிகள் இரண்டு ரூ. 2.14 இலட்சம் செலவில் நிறுவ உத்தேசிக்கப்
பட்டுள்ளது. உதகை வரும் சுற்றுலாப் பயணிகளின் தேவையை
ஈடு செய்யும் வகையில் பல படுக்கைகள் கொண்ட கூடமும், ஓய்வு
விடுதி ஒன்றும் ரூ. 10 இலட்சம் செலவில் கட்டும் திட்டமும் உத்
தேசத்தில் உள்ளது.

## மாமல்லபுரம் மேம்பாடு.

ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட நிபுணர் குழுவினர்
அளித்த பரிந்துரைகளைச் செயல்படுத்தி மாமல்லபுரத்தின் சுற்று
லாச் சிறப்பினைப் பேணிக்காத்து மேலும் மேம்படுத்த இவ்வரசு
முழு முயற்சி எடுத்து வருகின்றது. மாமல்லபுரம் மேம்பாட்டிற்



1978 மார்ச் 7]

காக ஏற்படுத்தப்பட்ட இயக்குநர் குழு, ஐக்கிய நாடுகள் மேம்
பாட்டுத் திட்ட நிபுணர்கள் அளித்த பரிந்துரைகளைச் செயல்
படுத்துவதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளது. புதுடெல்லியில்
1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் நடைபெற்ற மாநிலச்
சுற்றுலா அமைச்சர்கள் மாநாட்டில் மாமல்லபுரத்தை அனைத்துலக
(சுற்றுலா)க் கடற்கரை மையமாக ஆக்குவதற்காக மத்திய
உதவிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. 1977 ஆம் ஆண்டு
செப்டம்பர் திங்களில் மத்திய அரசின் சுற்றுலா, சிவில் விமானப்
போக்குவரத்து அமச்சர் மாமல்லபுரத்தைப் பார்வையிடுகையில்
இக்கோரிக்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டது. அதற்கு அவர்
பதிலளிக்கையில் விரிவான மதிப்பீடுகளுடன் குறிப்பிட்ட திட்டங்
களைத் தீட்டி மத்திய அரசின் ஆய்வுக்கு அனுப்பி வைக்கும்படி
கூறினார். இதைத் தொடர்ந்து மாமல்லபுர மேம்பாட்டிற்கான
திட்டங்கள் தீட்டித்தர தமிழக அரசு கட்டிடக்கலை நிறுவனம்
ஒன்றை அமர்த்தியுள்ளது.

இடைக்காலத்தில் கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்ற ஆண்
டின் நிதிநிலை அறிக்கை மதிப்பீட்டில் ரூபாய் 3.10 இலட்சம் வழங்க
முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடற்கரைக் கோயிலை அடுத்துள்ள நிலத்தைக் கையகப்படுத்தி,
காற்றுத் தடுப்பாக பசுமையான சவுக்குத் தோப்புகளை எழிலுற
வளர்த்தலும், எளிய குறைந்த வருமானமுள்ள சுற்றுலாப் பயணி
களுக்கேற்ற வகையில், பெரிய அளவில் தகுந்த வசதிகளுடன் ஓய்
விடம் ஒன்றை அமைத்தலுமாகும்.

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குப் பங்கு மூலதன உதவி.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு பங்கு மூலதன
மாக 1977--78 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 20 இலட்சம் வழங்கப்பட்
டுள்ளது. 1978—79 ஆம் ஆண்டிற்கும் ரூபாய் 20 இலட்சம்
சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்குக் கொடுக்க உத்தேசிக்கப்
பட்டுள்ளது.

## சுற்றுலாத் திட்டங்கள்.

இம் மாநிலத்தின் எல்லாச் சுற்றுலா மையங்களிலும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு இத் துறை பல செயற்குறிப்புகளை ஆய்வு செய்து வருகின்றது. உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசு மிகவும் ஆவலாக உள்ளது. தொடக்கத்திலேயே நான் குறிப்பிட்டது போல பொது மக்கள் பார்வையில் படாத, சிறப்பு மிக்க பல இடங்கள் தமிழகத்திலுள்ளன. அத்தகைய இடங்களாகிய தென்னாற்காடு மாவட்டம் சிதம்பரத்திற்கு அருகாமையிலுள்ள பிச்சாவரம், வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஏலகிரி, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆவுடையார் கோயில் ஆகிய இடங்களை மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## விளம்பரம்.

இம்மாநிலத்திற்குச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பொருட்டு விளம்பரங்கள் அளித்தல், பொருட்காட்சிகள் நடத்துதல், திரைப் படங்கள் திரையிடுதல், சுற்றுலாக் கையேடுகளை அச்சிட்டு வழங்குதல் ஆகிய பணிகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்புக்களை விளக்கும் வகையிலும், சுற்றுலாப் பயணிகளுக்குத் தமிழகத்தில் உள்ள வசதிகளை பரப்பும் வகையிலும் சுற்றுலாத் தொடர்பான இதழ்களிலும், நாளிதழ்களிலும் விளம்பரம் கொடுத்து வருகிறது. சுற்றுலாவின் முக்கியத்துவத்தை நமது மாநில மக்கள் உணரும் வகையிலும் தமிழகச் செய்தித் தாள்களிலும், இதழ்களிலும் விளம்பரம் வழங்கப்படுகிறது.

## பொருட்காட்சிகள்.

சென்னையிலும் மற்ற மாநிலங்களிலும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் தமிழகத்தின் சிறப்பு அம்சங்களை எடுத்துக் காட்டும் வகையில் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் சனவரி—பிப்ரவரி மாதங்களில் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் சுற்றுலாத் துறையும் பங்



கேற்று வருகின்றது. 1977 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் புது டில்லியில் நடைபெற்ற தேசிய வேளாண்மைப் பொருட் காட்சியில் சுற்றுலாத் துறை பங்கு கொண்டது. 1978 சனவரியில் புது டில்லியில் நடைபெற்ற பசிபிக் கடற்கரை நாடுகளைச் சார்ந்த பயண முகவர்களின் மாநாட்டிலும் இத்துறை பங்கேற்றது. 1978 ஏப்ரல் மாதத்தில் பெங்களூரில் நடைபெறவிருக்கும் வருடாந்திர இந்தியப் பயண முகவர்களின் மாநாட்டில் இத்துறை கலந்து கொள்வதற்காகத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. சென்ற ஆண்டு ஆக்ராவில் நடைபெற்ற இந்தியப் பயண முகவர் குழுவினரின் கூட்டத்தில் சிறிய பொருட் காட்சியை அமைத்ததின் வாயிலாக 'ஆலன் கரீம்பாய் சுழற் கோப்பையை' இத்துறை வென்றது என்பது இங்குக் குறிப்பிடத் தக்கது.

## திரைப்படங்கள்.

இத்துறை பெல்ஜிய நாட்டு நிபுணர் ஒருவரை நியமித்து ஒரு வண்ணத் திரைப்படம் எடுத்துள்ளது. வெளிநாடுகளிலுள்ள இந்தியச் சுற்றுலா அலுவலகங்களுக்கு அப்படம் வழங்கப்பட்டுள்ளது. கேரளா, கர்நாடக மாநில அரசுகளின் கூட்டுடன் மற்றொரு வண்ணப்படமும் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் வாயிலாக சில படங்களைத் தயாரிப்பதற்கு இத்துறை திட்டமிட்டுள்ளது.

## நிழற்படம்.

இத்துறையின் நிழற்படப் பிரிவில் சுற்றுலாத் தொடர்பான முக்கிய இடங்களைப் பற்றிய சாதாரண நிழற்படங்கள், வண்ணப் படங்கள் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. நிழற்படங்கள் தமிழ்நாட்டைப் பற்றிய கட்டுரைகளுடன் பத்திரிகைகளில் வெளியிடுவதற்காக கொடுக்கப்படுகின்றன. இத்துறை வெளியிடும் சுற்றுலாக் கையேடுகளிலும் இப்படங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. சிறப்பு விருந்தினர்களுக்கும், பயண முகவர்களுக்கும், பயண எழுத்தாளர்களுக்கும் காண்பிப்பதற்காகச் சிலேடு தொகுப்பும் இத்துறையிடம் உள்ளது.

### சுற்றுலாக் கையேடு.

பலதரப்பட்ட சுற்றுலாக் கையேடுகள், வண்ண அஞ்சலட்டைகள், சுவரொட்டிகள் முதலியன ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்பெற்று அவைகள் இந்தியாவிலும் வெளிநாடுகளிலுள்ள இந்தியச் சுற்றுலா அலுவலகங்களிலும், ஏர் இந்தியா முதலிய பிற விமான அலுவலகங்கள், பயண முகவர்கள் ஆகியோருக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

### விருந்தோம்பல்.

பயண எழுத்தாளர்கள், பயண முகவர்கள் ஆகியோரை வரவேற்று விருந்தோம்புவது சுற்றுலா வளர்ச்சியின் மிக முக்கிய அம்சமாகும். எனவே, இத்திட்டத்தில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. "தென்னகத்தை நோக்கி" என்னும் திட்டத்தின் கீழ் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் உலகில் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த 60-க்கும் மேற்பட்ட பயண எழுத்தாளர்கள் தென்னகத்துக்கு வருகை தந்தார்கள். சென்னையில் இந்தப் பயண எழுத்தாளர்களுக்கு இத்துறை சிறப்பான வரவேற்பு அளித்தது. 1978 சனவரியில் பசிபிக் கடற்கரை நாடுகளைச் சார்ந்த முகவர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளச் சென்னை வழியாகச் சென்ற சார்பாளர்களுக்கும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழகத்தின் பல்வேறு பண்பாட்டுச் சிறப்புகளை நேரடியாகக் கண்டு செல்லும் இவ்விருந்தினர்கள் தங்கள் நாட்டுச் செய்தித்தாள்கள், இதழ்கள் ஆகியவற்றில் தமிழகத்தைப் பற்றி எழுதி பலரும் அறிந்து நம்நாடு வர வழிசெய்கின்றனர். இவ்வகையில் செலவானதைக் காட்டிலும் நமக்குக் கிட்டும் விளம்பரம் பெரியதாகும்.

கண்ணுக்கும் கருத்துக்கும் கவர்ச்சியூட்டுவதோடு நாட்டின் கருவூலத்திற்குப் பொருளும் சேர்க்கின்ற சுற்றுலாத் துறையில் இவ்வாறு பல்வேறு திட்டங்களை இணைத்துச் சுற்றுலாத் துறையை விரிவுபடுத்த அரசு கருதுகிறது. எல்லாத் தரப்பினரும் நிறைந்த ஓய்வை நுகரவும், நெஞ்சுக்கு நிம்மதியைத் தேடிக் கொள்ளவும் உணர்வுகளால் உயர்வடையவும், தாயகத்தின் வரலாற்றுப் பெருமைகளையும், தனிப் பெரும் கலைக்கூறுகளையும், அறிந்து அனுபவித்து எழுச்சியும் ஏற்றமும் பெற சுற்றுலாத்துறை செயல்பட்டு வருகிறது.

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை.

### புதன்கிழமை, 1978 மார்ச் 8.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### HARIJAN AND BACKWARD CLASSES STUDENTS' HOSTELS

S.N.Q. No. 3.—Thiru R. E. CHANDRAN JAYAPAL and Thiru K. KANDASAMY:— Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :—

(a) whether there is any proposal to provide meals with mutton or eggs or fish or any other non-vegetarian items to the inmates of the Harijan and Backward Classes Students' Hostels in Madras as well as in other places in the State of Tamil Nadu ;

(b) if so, when was it implemented ; and

(c) if not, when will the necessary arrangements be made for its implementation ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : (அ) தலைவரவர்களே, தமிழ்நாட்டில் சென்னையிலும் ஏனைய இடங்களிலும் உள்ள அரிசன, பிற்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதிகளில் தங்கிப் படிக்கின்றவர்களுக்கு உணவுடன் இறைச்சி, முட்டை போன்ற அசைவ உணவும் வழங்க அரசு 4—3—1978 அன்று ஆணை பிறப்பித்துள்ளது.

(ஆ) இந்த ஆணை உடனடியாக நடைமுறைக்கு வருகிறது.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. வே. இரா. ஜெயராமன் : தலைவரவர்களே, சென்னையில் அரசு நடத்தும் கல்லூரி மாணவர் விடுதிகளில் தினந்தோறும் வழங்கும் உணவு விவரத்தை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா ?

[1978 மார்ச் 8

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே,

ஞாயிறு காலை—பொங்கல் ; மதியம்—சோறு, சாம்பார், பொரியல் ; இரவு—சப்பாத்தி, ஆட்டு இறைச்சி, குருமா.

திங்கள் காலை—எலுமிச்சை சாதம் ; மதியம்—சோறு, சாம்பார், பொரியல் ; இரவு—சோறு, சாம்பார், ரசம், மோர், காய்கறி.

செவ்வாய் காலை—இட்டலி ; மதியம்—சோறு, சாம்பார், பொரியல் ; இரவு—சோறு, சாம்பார், ரசம், மோர், காய் கறி.

புதன் காலை—ஊத்தப்பம் அல்லது தோசை ; நண்பகல்—சோறு, சாம்பார், பொரியல் ; இரவு—சோறு, சாம்பார், ரசம், மோர், காய்கறி மற்றும் ஒரு அவித்த முட்டை.

வியாழன் காலை—இட்டலி, வடை ; மதியம்—சோறு, சாம் பார், பொரியல் ; இரவு—சோறு, சாம்பார், ரசம், மோர், காய்கறி.

வெள்ளி காலை—உப்புமா ; மதியம்—சோறு, சாம்பார், பொரியல் ; இரவு—சோறு, சாம்பார், ரசம், மோர், காய்கறி.

சனி காலை—எலுமிச்சை சாதம் ; மதியம்—சோறு, சாம் பார், பொரியல் ; இரவு—சோறு, சாம்பார், ரசம், மோர் காய்கறி.

திரு. கோ. இளங்கோவன் : தலைவ்ரவர்களே, அமைச்சரவர் களின் பதிலிலிருந்து ஒரு நாள் மட்டும் தான் இறைச்சி வழங்கப் படுவதாகத் தெரிகிறது ; வாரத்திற்கு 2 அல்லது 3 நாட்கள் இறைச்சி வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே, இதற்கு முன்பு அந்த மாணவர்கள் இறைச்சியையே பார்க்கவில்லை. இப்போதுதான் அதை பார்க்க வைத்திருக் கிறோம்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, இறைச்சி, முட்டை அதிகம் போடவில்லை ; புதிதாக அவர்கள் இறைச்சியைப் பார்ப் பதால் ஆசையாக இருக்கும் ; ஆகையால் அரசாங்கத்தின் நிதி [illegible] வாரத்திற்கு இரண்டு முறையாவது மாணவர்களுக்கு இறைச்சி, முட்டை வழங்கப்படுமா ?



1978 மார்ச் 8]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே, மாணவர்கள் வாரத்தில் ஒருநாள் மட்டன் மட்டும்தான் கேட்டார்கள். இந்த அரசு மட்டன் மட்டும் கொடுக்கவில்லை ; ஒரு நாள் முட்டையும் சேர்த்துக் கொடுக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மாணவர்களுக்கு இறைச்சி கொடுக்கப்பட்டதா ? அது சம்பந்தமான குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மட்டன் தரவேண்டுமென்று ஆணை எதுவும் பிறப்பிக்கவில்லை. ஆனால் 1975-76-ல் மாணவர்கள் கோரிக்கையை ஏற்று சில நாட்கள் மட்டன் கொடுக்கப்பட்டது. பிறகு அது தொடர்ந்து நிறுத்தப்பட்டது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லுபோது வெறும் சோறும், சாம்பார், பொரியல், ரசம் என்று சொன்னார்கள், மாணவர்களுக்கு மீன், முட்டை, பன்றி இறைச்சி, கறி போன்ற உணவு வகைகளைக் கொடுத்து அவர்களைத் தெம்பூட்டும் திட்டம் அரசிடம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே, நான் படித்த பட்டியலில் முட்டையும் மட்டனும் இருக் கிறது. அவர்கள் சரியாகக் கவனிக்கவில்லை என்று நினைக்கிறேன். மாணவர்களுக்குத் தெம்பூட்டும் வகையில்தான் இந்த புதிய அரசு இந்தப் புதிய திட்டத்தை உருவாக்கி இருக்கிறது.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் விடுதியிலும் முட்டை, கறி கொடுக்கப்படுகிறதா ? இல்லை என்றால் கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கும் இந்த மட்டன், முட்டை கொடுப்பதை விரிவுபடுத்தும் எண்ணம் இருக்கிறது, அதைப் பரிசீலித்து நிறைவேற்றுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : பேரவைத் தலைவரவர்களே, அரிசன நல இலாகா நடத்துகின்ற விடுதிகளில் தங்கிப் படிக்கின்ற மாணவர்களுக்குச் சாதாரணமாக வாய்ப்புண் போன்ற சில நோய்களால் பாதிக்கப்படுகிறார்கள். அதற்குக் காரணம் வைட்டமின் சத்துள்ள உணவு அவர்களுக்குக் கொடுக்கப்பட அதோடு அவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற அரசு வில்லை.

உதவிப் பணமும் மிகவும் குறைவாக இருக்கிறது என்று சொல்லப் படுகிறது. இப்போது இருக்கின்ற அவசியப் பண்டங்களின் விலை வாசியைப் பார்க்கின்றபோது அரசு கொடுக்கின்ற அந்த உதவித் தொகை போதாத காரணத்தினால் இன்னும் மானியத்தைக் கூட்டிக்கொடுப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே 1948ஆம் ஆண்டு முதல் 1977ஆம் ஆண்டு வரை படிப்படியாக மாதம் ஒன்றுக்கு ஒரு மாணவனுக்கு உணவுச் செலவுக்கு வழங்கப் பட்ட தொகை ரூ. 65 தான். இப்போது புதிய அரசு பொறுப்பேற்ற 6, 7 மாதத்தில் ரூ. 15 ரூபாயைக் கூட்டிக் கொடுத்திருக்கிறது. சென்னையில் முன்பு ரூ. 65. இப்போது 80 ரூபாயாகக் கொடுக்கிறோம். வெளியூர்களில் முன்பு 55 ரூபாய். இப்போது 65 ரூபாய் கொடுக்கிறோம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், மட்டன் முட்டை, சோறு, சாம்பார் என்று அமைச்சரவர்கள் கூறும்போது மிகவும் ருசியாகத்தான் இருக்கிறது. ஆனால் அந்த மாணவர்கள் எந்த அளவுக்குச் சாப்பிடுகிறார்களோ அந்த அளவுக்குப் போடு கிறார்களா அல்லது அளவுச் சாப்பாடுதான் போடப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே, கேட்பதற்கு மட்டும் ருசியாக இல்லை. சாப்பிடுவதற்கும் ருசியாகத்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நாள் அந்த விடுதிக்குச் சென்று சாப்பிட்டுப் பார்த்தால் தெரியும். திருப்திகரமாகத்தான் போடப்படுகிறது.

திரு. வெ. கருணாமூர்த்தி : தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளி விடுதி மாணவர்களுக்கும் இந்த மாதிரி அசைவ உணவு வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இந்த யோசனை பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்லும்போது ஆஸ்டல்களில் கறி, முட்டை, சாம்பார் ரசம் இவை பற்றித்தான் சொன்னார்கள். மாணவர்களுக்கு மிக அவசியமான பால், தயிர், மோர் முதலியவைகளையும் சேர்த்துக் கொடுப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே, மோர் வழங்கப்படுகிறது. பால் வழங்குவது பற்றி பரிசீலிக்கலாம்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதுதான் எல்லோரும் சாப்பிட்டுவிட்டு வந்திருக்கிறார்கள். பசி இருந்தால் கூட பல கேள்விகள் கேட்கலாம். ஆகவே, கேள்விகளைச் சுருக்கமாக முடித்துக்கொண்டால் நல்லது.

திரு எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மட்டன், முட்டை என்று வாசித்து விட்டு சோறு, சாம்பார், சோறு, சாம்பார் என்று சொல்லி இருந்தார்கள். அதைப் பார்க்கும்போது சோறு, சாம்பார் போடுவது மாதிரியே இருந்தது. என்றாலும் மாணவர்களுக்கு ஒரு திருப்தி தருகின்ற வகையில் ஒரு நாளைக்கு குருமா போடு வதும் இன்னொரு நாளைக்கு பிரியாணி போடுவதும் இப்படி அவர்களுக்குத் தெம்பாகப் போய் சாப்பிடுகின்ற அளவுக்கு கவர்ச்சிகரமாக அந்த உணவு வகையை மாற்றுவது நல்லது என்று தெரிவித்துக்கொள்வதோடு, இந்த சைவ உணவு, அசைவ உணவு சாப்பாட்டுக்கு எவ்வளவு செலவாகும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர் களே, சோறு, சாம்பார் என்று மட்டும் சொல்லவில்லை. இட்லி, வடை, உப்புமா, சப்பாத்தி போன்றவற்றையும் போடுவதாக நான் குறிப்பிட்டிருக்கிறேன். அதையும் மாண்புமிகு உறுப்பினர் கவனித்து இருக்க வேண்டும்.

திரு கெ. சொக்கலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, திருப்போரூர் ஒன்றியத்தில் இருக்கின்ற தையூர் ஹரிஜனப் பள்ளியில் மூன்று மாத காலமாக பகல் உணவு போடப்படுவதில்லை என்பது பற்றி இந்த அரசுக்குத் தெரியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன் : தலைரவர்களே, கேள்வி மாணவர் விடுதியில் மட்டன் வழங்குவது பற்றி. மதிய உணவு வழங்குவது பற்றியல்ல.

## சினிமா டிக்கட்டுகள் அதிக விலைக்கு விற்பனை.

* வினா 161—திரு எஸ். கணேசன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னை நகரில் கடந்த ஓராண்டில் சினிமா டிக்கட்டுகளை அதிக விலைக்கு விற்க முனைந்து தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு கி. மனோகரன் : சென்னை நகரில் கடந்த ஆண்டில் சினிமா டிக்கட்டுகளை அதிக விலைக்கு விற்க முனைந்தவர்களில் தண்டனை பெற்றவர்கள் 1,469.

[1978 மார்ச் 8

திரு எஸ். கணேசன் : பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கள்ளச் சினிமா டிக்கெட்டுகள் விற்பனையில் திரையரங்கு நிர்வாகிகளுக்கும், அங்கே பாதுகாப்புக்காகச் செல்லுகின்ற சில காவலர்களுக்கும் ஈடுபாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ரசிகர் மன்றத்தின் தலைவர்களுக்கும் தொடர்பு இருப்பதாக நம்பப்படுகிறது. இதுபற்றி அரசு அறியுமா ? இதன் மீது நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு என்னிடத்தில் முழுத் தகவல் இல்லை. ஆனாலும் சில தகவல்களை அவைக்குத் தர விரும்புகிறேன்.

தமிழ் நாடு படக்காட்சி விதி 52-ஏ-யின் கீழ் உரிமம் பெற்றவர் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட ஏஜன்ட் இவர்களைத் தவிர வேறு எவரும் படக்காட்சி டிக்கட்டுகள் விற்கவோ, கொடுக்கவோ விற்பனைக்காக வைத்திருப்பதோ கூடாது. படக்காட்சி கொட்டகைகளில் விற்பனை அலுவலகத்தில் மட்டும்தான் விற்கப் பட வேண்டும். மேலும், வரிசையில் நிற்கும் நபர்களுக்குத்தான் கொடுக்கப்பட வேண்டும்.

பொது நன்மைக்காக காட்டப்படும் காட்சிகளுக்கு விற்பனை அலுவலகத்தைத் தவிர வெளியில் விற்க, உரிமை வழங்கும் அதிகாரம் உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு உண்டு.

இது போதும் என்று கருதுகிறேன், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆரம்பத்தில் கேட்ட கேள்விக்கு என்னிடத்தில் பதில் இல்லை.

## தீயணைப்பு நிலையங்கள்.

* வினா 162—திரு ரெ. வீ. சவுந்திரராஜன் : மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பாபநாசம் வட்டம், பாபநாசத்தில் தீயணைப்புப் படையின் பிரிவு ஒன்றை ஏற்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு கி. மனோகரன் : இல்லை.

* வினா 163—திரு கே. சுப்பிரவேலு : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சீர்காழி நகரத்தில் தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

மாண்புமிகு திரு கி. மனோகரன் : சீர்காழி உள்பட 52 நகரங் களில் தீயணைப்பு நிலையங்கள் அமைக்க தீயணைப்புத்துறை இயக்குநரால் அனுப்பப்பட்ட பட்டியல் ஒன்று அரசின் பரிசீலனை யில் உள்ளது.



1978 மார்ச் 8]

திரு ரெ. வீ. சவுந்திரராஜன் : சாதாரணமாக எங்கள் பகுதியில் தீ பிடித்துக்கொண்டால் அதை பொதுமக்கள் அணைத்த பிறகுதான் தீயணைப்புப் படை வருவது வழக்கம். ஆகவே மிக முக்கியமான தாலுக்கா தலைநகராக பாபநாசம் இருப் பதால் அங்கே ஒரு தீயணைப்புப் படை அமைப்பதற்கு இந்த அரசு இனிமேலாவது ஏற்பாடு செய்யுமா ?

[முற்பகல் 9-10]

மாண்புமிகு திரு கி. மனோகரன் : அரசினர் தமது 19—3—73 ஆம் தேதிய உள்துறை ஆணை 762இல் ஓர் முதன்மைப் பட்டியலை அங்கீகரித்துள்ளனர். இம்முதன்மை பட்டியலானது நகரின் மக்கள் தொகை, தீ அபாயம் உள்ள இடங்கள், அருகாமையி லுள்ள தீ அணைப்பு நிலையத்தின் தொலைவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பட்டியலில் உள்ள 59 நகரங்களில் 29 நகரங்களில் ஏற்கெனவே தீயணைப்பு நிலையங்கள் நிறுவப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ள 30 நகரங் களோடு மேலும் 22 நகரங்களின் பெயர்களையும் சேர்த்து 52 நகரங்கள் கொண்ட ஒரு புதிய பட்டியலை தயாரித்து அரசினரது ஒப்புதலுக்கு தீயணைப்புத் துறை இயக்குநரால் அனுப்பப் பட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு என். கிட்டப்பா : ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட நகரங்கள் தவிர எஞ்சியுள்ள நகரங்களின் பட்டியல் இருப்பதாகத் தெரிவித்தார்கள், அதில் எந்தெந்த ஊர்கள் அடங்கியிருக் கின்றன ? குறிப்பாக, சீர்காழியில் தீயணைப்பு நிலையம் உரு வாக்கப்படுமா ?

மாண்புமிகு திரு கி. மனோகரன் : அந்தப் பட்டியல் என்னிடம் இல்லை. இப்போது. இரண்டாவது கேள்விக்குப் பதிலளிக் கிறேன். சீர்காழி 19ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இதன் முறை வரும்போது ஒரு தீயணைப்பு நிலையம் திறப்பதற்கு தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

## புயலால் பாதிக்கப்பட்டவர்கள்:

* வினா 441—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

12-11-1977ல் வீசிய கடும் புயல் காரணமாக மரணமடைந்தோர் குடும்பத்திற்கு அளிக்கப்படும் உதவித் தொகை ரூ. 1000 என்பதை உயர்த்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இல்லை.

[1978 மார்ச் 8

திரு. மு. அம்பிகாபதி : மோட்டார் விபத்தில் இறக்கிற அனைவருக்கும் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. புயல், வெள்ளத்தால் இறந்த அனைவருக்கும் 'தலா ஆயிரம் ரூபாய் என்று அவர்கள் வருமானம் வருகிறவர்களா சம்பாதிக்கிறார்களா என்று பார்க்காமல் வழங்குவதற்கு அரசாங்கம் முன்வருமா? எவ்வளவு பேர்கள் இறந்தார்கள் என்ற தகவலை அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இப்போதைய முறைப்படி தீ, வெள்ளம் இவைகளால் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்கள் குடும்பத்தின் தலைவராகவும் பொருளீட்டுபவராகவும், மிகவும் ஏழ்மை நிலையிலும் இருந்திருந்தாலோ அல்லது நிரந்தரமான உடல் ஊனமுற்று வேலை செய்ய இயலாத நிலையை அடைந்தாலும் அன்னாரின் குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் முதல்வரின் பொது நிவாரண நிதியில் இருந்து அளிக்கலாம் என அரசு உத்தரவிட்டுள்ளது. இதுபோன்ற நிகழ்வுகளில் விபத்து நடந்த 15 நாட்களுக்குள் நிதி உதவி அளிப்பதற்கான செயற் குறிப்பினை அரசுக்கு அனுப்பும்படி மாவட்ட ஆட்சியாளர்களுக்கு ஆணையிடப்பட்டுள்ளது. ஆனால் சமீபத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தினால் உயிரிழந்தவர்கள் குடும்பத்தின் பொருளீட்டுபவர்களாக இருந்தால் அக் குடும்பத்திற்கு ரூ. 1,000 மட்டும் முதல்வரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க மாவட்ட ஆட்சித் தலைவரே அனுமதி வழங்கலாம் என்று நிதித் துறை ஆணை பிறப்பித்துள்ளது.

ஆனால் திரு. அம்பிகாபதி கேட்ட கேள்வி எல்லோருக்கும் வழங்கப்படுமா என்பதாகும். அது இப்போது சாத்தியமில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சதாசிவம் : மதிப்பிற்குரிய தலைவர் அவர் களே, இந்த வெள்ளத்தால் இறந்தவர்களின் எண்ணிக்கை என் னுடைய தொகுதியில் மட்டும் 30 என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் இந்த எண்ணிக்கையில் தொகை கிடைத்திருப்பது 5 பேர்களுக்கு மட்டும் தான். பொருள் ஈட்டுபவர்கள், குடும்பத்தின் தலைவன் என்கின்ற முறைகளை எல் லாம் மாற்றி பாதிக்கப்பட்டவர்கள் ஏழை எளிய மக்கள் என் பதை கருத்திற்கொண்டு, எல்லோருக்கும் இந்த உதவி கிடைக்க கூடிய வழியில், ஒரு குடும்பத்திற்கு ஒருவருக்காவது இந் தொகை கிடைக்கின்ற அளவில் அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : ஏற்கனவே முதலமைச்ச நிவாரண நிதியிலிருந்து யார் யாருக்கு எவ்வளவு கொடுக்கப்படு என்பதைப்பற்றி குறிப்பிட்டுவிட்டேன். அதையொட்டி திரு. அம் பதி அவர்கள் கேட்ட கேள்விக்கும் பதில் சொல்லி விட்டேன்



1978 மார்ச், 8]

மற்றபடி இப்போது இருக்கின்ற முறைகளை மாற்றுகின்ற உத் தேசம் தற்போது அரசிடம் எதுவும் இல்லை. தேவைப்பட்டால் அது பற்றி பரிசீலிக்கப்படும். 30 பேர்கள் இறந்து போனார்கள் என்றும், ஐந்து பேர்களுக்குத்தான் இந்தத் தொகை கொடுக்கப் பட்டது என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தகவல் தந் திருக்கிறார்கள். அதைத் தெரிந்து கொண்டு, இதில் உண்மை என்ன என்று கண்டுபிடித்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : இந்தப் புயலால் பாதிக்கப்பட்ட வர்களைப்பற்றிச் சரியான கணக்கு எடுக்கப்படவில்லை. எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அப்போது வெளியூரில்— பொது நிறுவனங்கள் குழு சுற்றுப்பயணத்தில் இருந்தோம். எங்கள் பகுதியில் இரண்டு பேர் ஆற்றில் அடித்துச் செல்லப் பட்டு இறந்து விட்டார்கள். இதற்கு எந்தவித உதவியும் கிடைக்கவில்லை. இதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர் களிடமும் மனுக் கொடுத்திருக்கிறேன். அரசாங்க அதிகாரி களிடமும் மனுக் கொடுத்திருக்கிறேன். அரசாங்கத்தினிட மிருந்தோ அதிகாரிகளிடமிருந்தோ இதற்கு எந்தவிதமான பதிலும் வரவில்லை. ஆகவே, இதைப்பற்றி விசாரித்து உடனடியாக நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அது பற்றி பரிசீலித்து ஆவன செய்யப்படும் என்ற உறுதிமொழியைத் தருகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, புயல் வீசுகின்ற நேரத்தில், சம்பாதிக்கின்றவர்களா இல்லையா என்று பார்த்து வீசுவதில்லை. புயலால் இறந்தவர்களும், அவர்களுடைய தவறால் இறந்துவிட வில்லை. ஆகவே, இறந்தவர்கள் அனைவருக்கும் இந்த உதவி கிடைக்க ஆவன செய்யப்படுமா? மேலும் இப்படி இறந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர்கள், இதில் எத்தனை பேர்களுக்கு இந்த உதவி வழங்கப்படுகிறது என்கின்ற விவரத்தை அரசு தெரிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு திரு. அம்பி காபதி அவர்கள் தெரிவித்தது ஒரு புதிய தத்துவம் என்று நான் கருதவில்லை. அது எல்லோருக்கும் தெரிந்த விஷயம் தான். புயல் வீசும்போது யார் என்று பார்த்து வீசுவதில்லை. அப்படி புயலுக்கு வீசத் தெரியாது. இரண்டாவது எத்தனை பேர்கள் மாண்டு போனார்கள் என்கின்ற செய்திக்கும் இதில் எத்தனை பேர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது என் கின்ற செய்திக்கும் என்னிடம் இப்போது விவரம் இல்லை. தனி யாக இதற்குக் கேள்வி போட வேண்டும்.

* வினா 442—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாக வீடிழந்தவர்கள் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அதற்குப் பட்டுவாடா செய்யப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் :

(அ) 2,84,815 குடிசைகள்.

(ஆ) 6—3—1978 வரை ரூ. 5,63,82,300.

திரு. எஸ். கணேசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணம் விரைவாக கொடுக்கப்பட வேண்டும் என்று அதிகாரிகள் மிக அவசரஅவசரமாகச் செயல்பட்டதின் காரணமாக உண்மையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த உதவி கிடைக்காமலும், பாதிப்பு இல்லாதவர்கள் பெரும்பான்மையோர் இந்தப் பலனை பெற்றதும் அரசுக்குத் தெரியுமா? இதுபற்றி புகார்கள் வந்தனவா? அப்படியானால் அவை மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அரசுக்கு இப்படிப்பட்ட புகார்கள் வரவில்லை. புகார் இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து தான் வந்திருக்கிறது. அதை இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன் : வீடு இழந்தவர்களுக்கு 200 ரூபாயும், துணிமணி இழந்தவர்களுக்கு 300 ரூபாயும் கொடுக்கப்படும் என்று அரசு அறிவித்து இருந்தும், இதிலுள்ள முழுத் தொகையும் சிதம்பரம் வட்டத்திலும், நெல்லிக்குப்பம் பகுதியிலும் கொடுக்கப்படவில்லை. இதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்திருக்கிறேன். இதைப்பற்றி அரசு கவனிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு கோவிந்தராசன் அவர்கள் இது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இந்த புகார் தரப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அவருக்கு மட்டும் தரப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராசன் அவர்கள் என்னிடத்திலும் மனு தந்திருக்கிறார்கள். அதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



[முற்பகல் 9-20]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே ஏற்பட்ட புயல் வெள்ளத்தின் காரணமாக வீடு இழந்தவர்கள் மொத்த எண்ணிக்கையை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே, தாலூகா வாரியாக, எந்தெந்த தாலூகாவிலே எவ்வளவு பேர்கள் வீடுகள் இழந்தார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா ? அதைப் போல், தாலூகா வாரியாக எவ்வளவு தொகை பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : என்னிடம் இருக்கின்ற குறிப்பு அடித்துச் செல்லப்பட்ட குடிசைகள் எண்ணிக்கை; எவ்வளவு தொகை செலவழிக்கப்பட்டது என்பதைப் பற்றிய எண்ணிக்கை. அதைத் தவிர, மற்றத் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட கேட்டுக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, புயலால் பாதிக்கப்பட்ட கைத்தறித் தொழிலாளர்கள் எத்தனை பேர் ? அவர்களுக்கு என்ன நிவாரணம் கொடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : சிவசாமி அவர்கள் ஒரு தனிக் கேள்வி போட்டால் உதவியாக இருக்கும்.

## விற்பனை வரி விதிப்பு.

* வினா 443—

திரு. எஸ். ஜே. இராமசாமி :

திரு. என். கிட்டப்பா :

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விற்பனை வரியை எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக எக்சைஸ் தீர்வை விதிப்பது குறித்து மத்திய அரசு நமது மாநில அரசை கருத்து ஏதேனும் கேட்டு இருந்தார்களா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் :

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தின் அமைச்சர்களிடையே இந்தச் விற்பனை வரியை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக எக்சைஸ் வரியைப் போடலாம் என்ற ஒரு பேச்சு அடிபட்டுக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி என்ன என்று கேட்டதற்கு, அதை இந்தச் சர்க்கார் ஆதரிக்கவில்லை என்று சொன்னார். ஆனால், அவர்கள் அப்படிச் சொல்வதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவர்கள் ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றிய காரணத்தை நான் இங்கே தெரிவிக்க வேண்டுமென்று விரும்பவில்லை. நம்மைப் பொறுத்தவரையில் நம்முடைய நிலைமையை மத்திய சர்க்காருக்கு விளக்கியிருக்கிறோம். அதோடு, பொதுவாக மத்திய அரசு, மாநில அரசு உள்ளாட்சி மன்றங்களுக்கு விதிக்கும் மறைமுக வரிகளின் தற்போதைய அமைப்பைப் பற்றி ஆராய்ந்து, இந்த வரிகளை சீரமைப்பது பற்றி அரசுக்கு எடுத்துக் கூறுவதற்கு 1976-லே காஷ்மீர் மாநிலத்தின் ஆளுநராக இருந்த திரு. எல். கே. ஜா அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு தனது பரிந்துரையை இந்தியத் துணைக் கண்ட சர்க்காருக்கு தந்திருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ். ஜே. இராமசாமி அவர்கள் எடுத்துச் சொன்னது போல், விற்பனை வரியை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக எக்சைஸ் வரியைப் போடுவது குறித்து பல செய்திகள் பத்திரிகைகளிலே வெளிவந்திருக்கிறது. எனவே, விற்பனை வரியை எடுத்துவிடுவதற்கான ஒப்புதலை நமது அரசு அளிக்காது என்பதற்கு நமது நிதி அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பல முறை இந்த உறுதியை இந்த அரசு அறிவித்திருக்கிறது என்பது மட்டுமல்ல. முறையாக மத்திய சர்க்காருக்கு இந்த அரசு எடுத்துச் சொல்லியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, இப்போது நமது மாநிலத்தின் நிதி நெருக்கடியைப் பற்றி எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். இந்த நிதி வசதியைப் பெருக்குவதற்கு, மத்திய அரசாங்கத்தில் எந்த அளவிற்காவது நிதி பெற்றுத் தரக்கூடிய அளவிற்கு நமது அரசு என்ன முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் என்னுடைய கேள்வி.





மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவரது கேள்வி அதுவல்ல என்று நான் கருதுகிறேன். அவர் போட்ட கேள்வி, சேல்ஸ் டாக்சை மாற்றிவிட்டு, எக்சைஸ் டியூடி கொண்டு வருவதற்கு மத்திய சர்க்கார் ஒரு யோசனை சொல்லிக் கொண்டிருக்கிறது, இதைப் பற்றி இந்த அரசின் கருத்து என்னவென்று கேட்டார். இப்போது புதுக் கேள்வி போட்டிருக்கிறார். அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

## மின் வாரிய ஊழியர்கள் இடமாற்றம்.

* வினா 444—

திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மின் வாரியத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி காலத்தில் ஒரு இடத்தில் மூன்று ஆண்டு காலம் நிலையாகப் பணி புரிந்த பிறகு தான் விருப்ப மாற்றுதலுக்கு விண்ணப்பம் செய்யலாம் என ஆணை பிறப்பித்து உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதுபோன்ற விண்ணப்பங்களை இந்த அரசில் பரிசீலனை செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) இல்லை. மின் வாரிய பணியாளர்களை இடமாற்றம் செய்வது மின் வாரியத்தின் அதிகாரத்திற்குட்பட்டது.

திரு. அ. செல்லப்பா : மூன்று ஆண்டுகளுக்கு மேல், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கூட, கோவையைச் சார்ந்தவர்கள் தஞ்சாவூரிலும், தஞ்சையைச் சேர்ந்தவர்கள் கோவையிலும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அவர்களை அவர்களுடைய சொந்த மாவட்டத்திற்கு மாற்ற அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு : திரு. ச. இராமச்சந்திரன் மின் வாரியம் என்பது தனி அமைப்பு. அதனால் அதனுடைய தொழிலாளர்களை மாற்றுவது சம்பந்தமாக அரசு எந்தவித ஆணையும் பிறப்பிக்க முடியாது. மின் வாரியத்தில் 1976 ஆம் ஆண்டு அளவில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஓரிடத்தில் பணியாற்றியவர்களை பல்வேறு

(1978 மார்ச் 8

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்தின் அமைச்சர்களிடையே இந்தச் விற்பனை வரியை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக எக்சைஸ் வரியைப் போடலாம் என்ற ஒரு பேச்சு அடிபட்டுக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி என்ன என்று கேட்டதற்கு, அதை இந்தச் சர்க்கார் ஆதரிக்கவில்லை என்று சொன்னார். ஆனால், அவர்கள் அப்படிச் சொல்வதற்கான காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவர்கள் ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றிய காரணத்தை நான் இங்கே தெரிவிக்க வேண்டுமென்று விரும்பவில்லை. நம்மைப் பொறுத்தவரையில் நம்முடைய நிலைமையை மத்திய சர்க்காருக்கு விளக்கியிருக்கிறோம். அதோடு, பொதுவாக மத்திய அரசு, மாநில அரசு உள்ளாட்சி மன்றங்களுக்கு விதிக்கும் மறைமுக வரிகளின் தற்போதைய அமைப்பைப் பற்றி ஆராய்ந்து, இந்த வரிகளை சீரமைப்பது பற்றி அரசுக்கு எடுத்துக் கூறுவதற்கு 1976-லே காஷ்மீர் மாநிலத்தின் ஆளுநராக இருந்த திரு. எல். கே. ஜா அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழு தனது பரிந்துரையை இந்தியத் துணைக் கண்ட சர்க்காருக்கு தந்திருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எஸ். ஜே. இராமசாமி அவர்கள் எடுத்துச் சொன்னது போல், விற்பனை வரியை எடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக எக்சைஸ் வரியைப் போடுவது குறித்து பல செய்திகள் பத்திரிகைகளிலே வெளிவந்திருக்கிறது. எனவே, விற்பனை வரியை எடுத்துவிடுவதற்கான ஒப்புதலை நமது அரசு அளிக்காது என்பதற்கு நமது நிதி அமைச்சர் அவர்கள் உறுதி அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பல முறை இந்த உறுதியை இந்த அரசு அறிவித்திருக்கிறது என்பது மட்டுமல்ல. முறையாக மத்திய சர்க்காருக்கு இந்த அரசு எடுத்துச் சொல்லியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, இப்போது நமது மாநிலத்தின் நிதி நெருக்கடியைப் பற்றி எல்லோரும் உணர்ந்திருக்கிறார்கள். இந்த நிதி வசதியைப் பெருக்குவதற்கு, மத்திய அரசாங்கத்தில் எந்த அளவிற்காவது நிதி பெற்றுத் தரக்கூடிய அளவிற்கு நமது அரசு என்ன முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் என்னுடைய [illegible]



1978 மார்ச் 8]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அவரது கேள்வி அதுவல்ல என்று நான் கருதுகிறேன். அவர் போட்ட கேள்வி, சேல்ஸ் டாக்சை மாற்றிவிட்டு, எக்சைஸ் டியூடி கொண்டு வருவதற்கு மத்திய சார்க்கார் ஒரு யோசனை சொல்லிக் கொண்டிருக்கிறது, இதைப் பற்றி இந்த அரசின் கருத்து என்னவென்று கேட்டார். இப்போது புதுக் கேள்வி போட்டிருக்கிறார். அதற்குத் தனிக் கேள்வி போடவும்.

## மின் வாரிய ஊழியர்கள் இடமாற்றம்.

* வினா 444—

திரு. அ. செல்லப்பா : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மின் வாரியத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி காலத்தில் ஒரு இடத்தில் மூன்று ஆண்டு காலம் நிலையாகப் பணி புரிந்த பிறகு தான் விருப்ப மாற்றுதலுக்கு விண்ணப்பம் செய்யலாம் என ஆணை பிறப்பித்து உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதுபோன்ற விண்ணப்பங்களை இந்த அரசில் பரிசீலனை செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) ஆம்.

(ஆ) இல்லை. மின் வாரிய பணியாளர்களை இடமாற்றம் செய்வது மின் வாரியத்தின் அதிகாரத்திற்குட்பட்டது.

திரு. அ. செல்லப்பா : மூன்று ஆண்டுகளுக்கு மேல், ஐந்து ஆண்டுகளுக்கு மேல் கூட, கோவையைச் சார்ந்தவர்கள் தஞ்சாவூரிலும், தஞ்சையைச் சேர்ந்தவர்கள் கோவையிலும் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா ? அவர்களை அவர்களுடைய சொந்த மாவட்டத்திற்கு மாற்ற அரசு ஆணை பிறப்பிக்குமா ?

மாண்புமிகு : திரு. ச. இராமச்சந்திரன் : மின் வாரியம் என்பது தனி அமைப்பு. அதனால் அதனுடைய தொழிலாளர்களை மாற்றுவது சம்பந்தமாக அரசு எந்தவித ஆணையும் பிறப்பிக்க முடியாது. மின் வாரியத்தில் 1976 ஆம் ஆண்டு அளவில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஓரிடத்தில் பணியாற்றியவர்களை பல்வேறு

இடங்களுக்கு மாற்றினார்கள். மின் வாரியத்தில் இருக்கும் தொழிலாளர் அமைப்புகள் நிர்வாகத்தோடு பேசி ஓராண்டு அவர்கள் அப்படி வெளியூரில் தங்கியிருப்பார்களேயானால் அதற்குப் பிறகு பொது முதன்மை பட்டியல் அடிப்படையில் திரும்பவும் அவர்கள் வேண்டுகின்ற இடத்திற்குப் போடலாம் என்று தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

## மின் வாரியத்தில் கண்காணிப்புப் பிரிவு.

*வினா 445—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மின் வாரியத்தில் லஞ்சக் குற்றச் சாட்டுகள், மற்றும் இதர குற்றங்களைக் கண்டுபிடிக்கச் செய்யப்பட்டுள்ள விஜிலன்ஸ் இலாகாவால் இது வரை கண்டுபிடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் எத்தனை ?

(ஆ) இதனால் மின் வாரியம் அடைந்த நன்மைகள் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) (i) 1977 நவம்பர் மாதம் வரை பெறப்பட்ட புகார்களின் எண்ணிக்கை—2,224.

(ii) விசாரணைக்கு எடுத்துக் கொண்ட புகார்கள்—695

(iii) விசாரணையின் பேரில் விழிப்புப் பணி மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்கத்திற்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள்—34.

(iv) இது வரை விழிப்புப் பணி மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்கத்தினால் லஞ்சக் குற்றத்திற்காக பிடிபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை—9.

(ஆ) மின் வாரியத்தில் ஒழுக்கம் ஓங்கியிருக்கிறது.

திரு. வீ. கே. கோதண்டராமன் : எந்தெந்த விதமான லஞ்சக் குற்றசாட்டுகள் இன்றைக்குக் கண்டு பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ? இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட குற்றச்சாட்டுகளில் 695 குற்றச்சாட்டுகள் மீதுதான் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மற்றக் குற்றச்சாட்டுகள் [illegible] நடவடிக்கை எடுக்கப்படவில்லை ?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மீதி கேஸ்களில் நடவடிக்கைகள் பல்வேறு நிலைகளில் இருந்து வருகின்றன. எந்தெந்த விதமான குற்றச்சாட்டுகள் என்று கேட்டார்கள். லஞ்சம் வாங்குவதுதான் குற்றச்சாட்டு. ட்ராப்பிங், கம்ப்ளெயின்ட் வந்தால் அதைப் பற்றி விசாரிக்கப்படுகிறது. அது போன்று பல்வேறு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. சோ. அழகர்சாமி : இந்த மின் வாரியத்திலிருந்து பழைய பம்ப் செட்டுகளுக்குக் கூட 400, 500 ரூபாய் பெறுமான கபாசிடர்கள் பொருத்தப்படவில்லை என்றால் மின் இணைப்பைத் துண்டித்து விடுவோம் என்று சொல்லுகிறார்கள். இத்தகைய நிலைமைகள் மேலும் லஞ்சப் புகார்கள் ஏற்பட ஏதுவாக இருக்கிறது. ஆகவே, இந்த உத்தரவை உடனடியாக நிறுத்தி வைத்து பழைய பம்ப் செட்டுகளுக்கு கபாசிடர்கள் தேவையில்லை என்று கூற அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பம்ப் செட்டுகளுக்கு கபாசிடர் பொருத்தினால் அது மின்சார இழப்பைத் தவிர்க்கப் பயன்படும் என்பது ஒரு தொழில் நுட்பக் கருத்து. ஆனால் ஏற்கனவே இருக்கிற பம்ப் செட்டுகளைப் பொறுத்த வரை கபாசிடர்கள் வைக்க வேண்டுமென்ற தேவையில்லை என்று மின் வாரியத்திற்கு அரசு எடுத்துச் சொல்லியிருக்கிறது. ஆனால் புதிதாக பம்ப் செட்டுக்கு மின் இணைப்புக் கோரி வருகிறவர்கள் கபாசிட்டர்கள் பொருத்த வேண்டும்.

திரு. இ. தமிழரசன் : மின் வாரியத் துறையில் மின் இணைப்புக்கு மனுக் கொடுப்பதிலிருந்து இணைப்புக் கொடுக்கிற வரை கமிஷன் கொடுக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. பெரும்பாலும் மின் இணைப்புக்கு உத்தரவிட்ட பின் மின் வாரியம் கொடுக்க வேண்டிய பொருள்களில் பாதியைக் கொடுத்து விட்டு அவசர நிலை காரணமாக மீதியை சம்பந்தப்பட்டவர்களையே வாங்கிக் கொடுக்கச் சொல்லுகிறார்கள். அப்படி மின் வாரியத்தால் கொடுக்கப்படாத மீதிப் பொருள்கள் கணக்கில் காட்டப் படுகிறதா? மின் இணைப்பு பம்ப் செட்டுகளுக்குக் கொடுக்கிற நேரத்தில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய பவருக்குப் பதிலாக அதிகமான பவர் பம்ப் செட்டுகள் வாங்கி வைக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. இதை மின்சாரத் துறை ஏற்றுக் கொள்கிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று விதமான குறைகளைச் சொன்னார்கள்: ஓரளவுக்கு அது அரசுக்கும் தெரிந்துதான் இருக்கிறது. ஒன்று, பம்ப் செட்டுகளுக்கு மனுப் போடுகிறவர்கள் மின்சாரம் பெறுகிற வரை அவர்கள் சுயநலம் கருதி கமிஷன் கொடுக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இப்படி

[1978 மார்ச் 8

கமிஷன் கொடுப்பதால் தான் இன்றைக்குக் கமிஷன்கள் எல்லாம் வந்து விடுகின்றன. இருந்தாலும் கூட அந்த முறையைச் சீராக்குவதற்காக எந்தத் தேதியில் இருந்து பம்ப் செட்டுகளுக்கு மனுக் கொடுத்திருக்கிறார்களோ அந்தத் தேதியின் அடிப்படையில் தான் மின்சாரம் வழங்கப்பட வேண்டுமென்ற விதி மின்சார வாரியத்திலிருந்து பிறப்பிக்கப்படவிருக்கிறது. ஆகவே, கீழ் மட்டத்தில் இருக்கும் அதிகாரியோ, பணியாளரோ இப்போது இருக்கும் பல்வேறு விதி முறைகளைப் பயன்படுத்திக் கொண்டு மின் இணைப்புக் கோருகிறவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படாதவாறு செயல்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-30]

இரண்டாவதாக பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் வழங்கு வதற்குப் போதுமான மெட்டிரியல்ஸ், சாமான்கள் உரிய நேரத் தில் வாங்கி வைக்காத காரணத்தாலேயும் இப்படிப்பட்ட நிலைமை வருகிறது. உரிய காலத்திலே அவைகளை வாங்கி வைப்பதற்குத் தனி நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

மூன்றாவதாக அவர்கள் போடுகிற பம்பு செட்டுகளுக்கு அதி மான மின்சாரத்தைப் பயன்படுத்துகிற அளவில் ஹார்ஸ் பவரை அதிகப்படுத்திக் கொள்கிறார்கள் என்று சொன்னார்கள் அப்படிப்பட்ட புகார் ஏதேனும் வருமானால், அது பற்றியும் சர்ப்ரைஸ் செக்ஸ் மூலமும் இத்தகைய தவறான முறையில் பய படுத்துகிறவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். லஞ்ச ஒழிப்பு என்ப பொது மக்களும் விழிப்போடு இருக்க வேண்டிய காரியம் ஆகும்

<u>டாக்டர் கே. சமரசம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவ அவர்களே, மின் துறையிலே அரசு அச்சகம் இருந்தும் கூ அங்கே அச்சடிக்காமல் வேறு தனியார் துறைகளிலே அச்சடிக்க படுவதன் காரணமாகவும், மின் துறையிலே பல்புகள் தயாரிக்க கூடிய துறை இருந்தும் பல்புகளை வெளியே வாங்குவதன் காரண மாகவும் இப்படிப்பட்ட பலவித தவறுகள் ஏற்படுகின்றன என் சொல்லப்படுகிறது. ஆகவே, அவைகளை நீக்குவதற்கான முன யிலே அரசே, அவைகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமா

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> மின் துறையிலே இருக்கிற அச்சகம் மின் துறையின் தேவைக்குப் போதுமானதல்ல— மின்சார வாரியம் மின்சாரத்தை உற்பத்தி செய்து வழங்க வேண்டுமே தவிர பல்புகளை உற்பத்தி செய்ய வேண்டியது இல்லை.



1978 மார்ச் 8]

## மணிமுத்தாறு பாசனத் திட்டம்.

<u>*வினா—446 திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :</u>— மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) மணிமுத்தாறு பக்கமுள்ள முக்கவர் பக்கத்தில் வேறு பாசனத்திற்கு மேலும் ஒரு தனிக்கால் ஏற்படுத்தியதால் முக் கவர் பாசன விவசாயம் தீய்வு ஏற்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தீய்வு ஏற்படுவதைத் தவிர்க்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> (அ) மணிமுத்தாறு பக்கமுள்ள முக்கவர் பக்கத்தில் வேறு பாசனத்திற்காக இதுவரை மேலும் ஒரு தனிக்கால் வெட்டப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

<u>திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :</u> தலைவர் அவர்களே, ஏற்கனவே மூன்று விதமான கால்வாய்கள் போய்க் கொண்டு இருக்கின்றன. இப்போது நான்காவது கால்வாய் என்ற முறையில் தண்ணீர் திருப்பி விடப்படுகிறது. தவறான தகவலை மந்திரிக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, மந்திரி அவர்கள் மீண்டும் 'சரியான தகவலை அறிந்து கொடுக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> தலைவர் அவர் களே, தவறான தகவல் அல்ல. திருநெல்வேலி மாவட்டம், மணிமுத்தாறு பக்கமுள்ள முக்கவர் பக்கத்தில் வேறு பாசனத் திற்கு மேலும் ஒரு தனிக்கால் வெட்டப்பட வில்லை என்று சொன்னேன். பெருங்கால் வாய்க்காலின் குளத்துப் பாசன மான குட்டிக்கரடி குளத்திற்கு நேரடிப் பாசனத்தின் மூலம் தண்ணீர் கொடுப்பதற்காக முக்கவரின் தள மட்டத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் திருநெல்வேலி மற்றும் பெருங்கால் குளத்துப் பாசனத்தார்கள் ஆகியோரின் ஒப்புதலின் பேரில் 1 அடி உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் முக்கவருக்குக் கீழுள்ள பாசனம் இதுவரை பாதிக்கப்படவில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர்
அவர்களே, அந்தக் குளத்திற்கு வேறு ஒரு கால்வாய் வழியாகத்
தண்ணீர் போய்க் கொண்டிருந்தது. அணையிலே தண்ணீர்
குறைந்து விட்ட காரணத்தாலே இப்போது இப்படி ஏற்பாடு
செயய்யப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக ஏற்கனவே முக்கவர்
பக்கத்தில் பாசனத்திற்குத் தண்ணீர் கிடைத்துக் கொண்டிருந்த
நிலைமை மாறி இப்போது அங்கே பாசனத்திற்குத் தண்ணீர் கிடைக்
காமல் இருக்கிறது என்றும் பழைய முறையில் தண்ணீர் வேண்டு
மென்றும் தெற்குப் பாப்பாங்குளம் பொது மக்கள் ஒரு மனு
கொடுத்திருக்கிறார்கள், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை
எடுத்திருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
நான் ஏற்கனவே எடுத்துச் சொன்னதைப் போன்று திருநெல்
வேலி மற்றும் பெருங்கால் குளத்துப் பாசனத்தார்கள் ஆகியோ
ரின் ஒப்புதலின் பேரில் 1 அடி உயர்த்தப்பட்டிருக்கிறது. மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் அங்குள்ள பாசனம் பாதிக்கப்
பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது பற்றிய
தகவலை அரசு ஆராயும்.

## பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா.

* வின 447 திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு செய்தி-
சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா —

பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்த நாளை அரசு சார்பில்
கொண்டாட அரசு எண்ணியுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, புரட்சிக்கவிஞர்
பாரதிதாசன் பிறந்த நாளை அரசு சார்பிலே கொண்டாட
இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்காக
நான் எனது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
அத்தோடு புரட்சிக் கவிஞர் அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும்
நாட்டிற்குப் புரட்சிகரமான கவிதைகளையும் எழுச்சி மிக்க
கவிதைகளையும் எழுதித் தந்திருக்கிறார்கள். அவைகள்
எல்லாம் ஒருசேரக் கிடைக்காவிட்டாலும், அதற்காகப் பலர்
முயற்சிகளை எடுத்தும், தனியார்களுக்கு அவைகள் எல்லாம்
கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே புரட்சிக் கவிஞர்
பாரதிதாசன் அவர்கள் ஆதிமுதல் இறுதி மூச்சு வரை எழுதி
யுள்ள கவிதைகளையெல்லாம் திரட்டி நமது மாநில அரசே அதை
மலிவுப் புத்தகமாக வெளியிட்டு எல்லோருக்கும் அவை கிடைக்
கும்படி ஏற்பாடுகளைச் செய்யுமா ?



மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,
இது ஏற்கனவே அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிற
ஒரு பிரச்சினை ஆகும். இது பற்றித் தனிக் கேள்வி போட்டால்
விவரமாக பதில் சொல்லப்படும்.

திரு. மி. வின்சென்ட் : தலைவரவர்களே, பாவேந்தர் பாரதி
தாசனின் கவிதைப் படைப்புக்கள் அரிதாக உள்ளன. எளிதாக
அந்தப் புத்தகங்களை வாங்குவதற்கு புதிய பிரதிகளை அச்சிட்டு
பாரதிதாசனின் பிறந்த நாளில் விநியோகப்படுத்தப்படுமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே,
இது போன்ற கேள்விக்குத்தான் முன்னாலே நான் பதில் சொல்லி
யிருக்கின்றேன். இப்பொழுது பிறந்த நாளன்று அதை பதிப்பகத்
தார்கள் வெளியிடுவதற்கு அரசு ஏற்பாடு செய்யும்.

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவர
வர்களே, புரட்சிப் புலவன் பாரதிதாசனுடைய பிறந்த நாளை
முன்னிட்டு அவர் எழுதிய கவிதைகளில் போட்டியை வைத்து,
அனைத்துக் கல்லூரி மாணவர்களுக்குமிடையில் அந்தப் போட்
டியை நடத்தி, பரிசுகள் வழங்குவதற்கு ஏதாவது உத்தேசம்
உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே,
இதுபோன்ற விழா- நாட்களில் இப்படிப்பட்ட திட்டங்கள் நிறை
வேற்றப்பட்டு வருகின்றன- பாரதிதாசன் அவர்களுடைய பிறந்த
நாள் விழாவிலும் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

## பிச்சாவரத்தை சுற்றுலா மையமாக்கல்.

* வின-448 திரு. துரை. கலியமூர்த்தி : மாண்புமிகு செய்தி—
சுற்றுலாத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை
யளிப்பாரா?

சிதம்பரம் வட்டம், பிச்சாவரத்தை சுற்றுலா மையமாக ஏற்
படுத்த அதிகாரிகள் பார்வையிட்டுச் சென்றுள்ளதை அடுத்து
எப்போது வேலை ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பிச்சாவரத்தை
சுற்றுலா மையமாக மேம்படுத்த அங்கு சுற்றுலாப் பயணி
களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள், படகுவீடு,
தோணித்துறை ஆகியவற்றை அமைக்கலாம் என்ற திட்டம் பரி
சீலனையில் உள்ளது.

திரு. துரை. கலியமூர்த்தி : தலைவரவர்களே, பிச்சா
வரத்தை சுற்றுலா மையமாக ஏற்படுத்த அங்கே எல்லா வசதி
களையும் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. ரோடு,
வசதியை முதலில் செய்ய வேண்டும். அடுத்து இருல் உற்பத்தித்
தொழிலைப் பெருக்குவதற்காக மத்திய சர்க்கார் மூலம் ஏற்
படுத்தினார்கள். அது விரைவில் முடிக்கப்படுமா, தமிழக அரசு
அதற்கு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :—தலைவரவர்களே,
இருல் உற்பத்தியைப்பற்றிய கேள்வியை மீன் வளத்துறை அமைச்
சரிடத்தில் கேட்டால் தகுந்த பதில் கிடைக்கும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

## வட ஆற்காடு மாவட்டத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள்.

*வினு—449— திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு
கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்கு விடையளிப்பாரா:

வட ஆற்காடு மாவட்டத்தில் பணி நீக்கம் செய்யப்பட்ட 120
ஆசிரியர்களில் இன்னும் 78 ஆசிரியர்களுக்கு ஜி. ஓ. நெ. 1395,
கல்வி, நாள் 17—6—1977-படி வேலை கொடுக்கப்படாததற்
கான காரணம் யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : வட ஆற்காடு
மாவட்டத்தில் 1976-77 கல்வியாண்டின் இறுதியில் அரசுப் பள்ளி
களிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட 131 தற்காலிக பட்டதாரி
ஆசிரியர்கள் அனைவரும் 1977 செப்டம்பர் திங்கள் இறுதிக்குள்
மீண்டும் பணியில் அமர்த்தப்பட்டு விட்டனர்.

திரு. ப. சந்திரன் : தலைவரவர்களே அப்படிப் பணி நீக்கம்
செய்யப்பட்டு மீண்டும் சேர்க்கப்பட்ட ஆசிரியர்கள் மீண்டும்
பணி நீக்கம் செய்யப்படாமல் அவர்கள் தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ்
கமிஷன் மூலமாகத் தகுதித் தேர்வு எழுதி அவர்களுடைய
வேலையை நிரந்தரமாக்க அரசுக்கு உத்தேசம் உள்ளதா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே
அதுபற்றித் தனிக் கேள்வி போடவும்.



## புலவர்களுக்கு நிதி உதவி.

*வினு—450— திரு. தாழை மு. கருணநிதி : மாண்புமிகு
கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடை
யளிப்பாரா.

ஏழைப் புலவர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 75 உதவித்
தொகை வழங்கும் திட்டம் எப்பொழுதிலிருந்து, எந்த அடிப்படை
யில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஏழைத் தமிழறிஞர்
களுக்கு மாதந்தோறும் ரூபாய் 100 (ரூபாய் 75 அல்ல) உதவித்
தொகை வழங்கும் திட்டம் 15—1—1978 (திருவள்ளுவர் நாள்)
முதற்கொண்டு நடைமுறைக்கு வந்துள்ளது.

(2) மாதம் ரூபாய் 150-க்கும் குறைவாய் வருமானமுள்ள,
பலரும் அறிந்த தமிழ் மொழிக்கும் தமிழ் இலக்கியத்திற்கும்
வகையில் தொண்டு செய்ததாகக் கருதப்படும் ஏழைத் தமிழறி
ஞர்களே இந்நிதியுதவிக்குத் தகுதியானவர்களாவர். இத்தகைய
விளம்பரம் செய்தித் தாளில் செய்து தமிழ் வளர்ச்சி இயக்குநர்
விண்ணப்பங்கள் வரிடமிருந்து பெறுவார். விண்ணப்பதாரரின்
நிதி நிலைமை பற்றிய அறிக்கை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சி
யரிடமிருந்து பெறப்படும். மற்ற தகுதிகள் குறித்து அரசால்
நியமனம் செய்யப்பட்டுள்ள வல்லுநர் குழுவினர் (Experts
Committee) பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தகுதி
யான விண்ணப்பதாரரின் பெயர்கள் உயர் அதிகாரக் குழு
(High Power Committee) வுக்கு பரிந்துரை செய்யப்
படும். உயர் அதிகாரிக் குழு தகுதி பெற்றவர்கள் குறித்து
இறுதியாக முடிவெடுக்கும். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும்
ஏழைத் தமிழறிஞர்கள் உதவித் தொகை பெற்று பயனடைவர்.

திரு. தாழை மு. கருணநிதி : பேரவைத் தலைவர் அவர்களே,
மொத்தம் எத்தனை விண்ணப்பங்கள் இதுவரையில் வந்திருக்கின்
றன. அதிலே ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை விண்ணப்
பங்கள் வந்திருக்கின்றன என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே,
இது பற்றித் தனிக் கேள்வி போட்டால் அந்த முடிவு தேதிக்குள்
வந்த விண்ணப்பங்களைப்பற்றி தகவல் சேகரித்துத் தருவதற்கு
வசதியாக இருக்கும்

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே,
ஏழைப் புலவர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை வழங்கு
வதைப் போல ஏழைப் பட்டதாரிகள், முதுநிலைப் பட்டதாரிகள்
ஆகியவர்களுக்கு நிதியுதவி வழங்க இந்த அரசு ஏற்பாடு செய்
யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே அப்படியொரு யோசனை இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, நெருக்கடி நிலைப் பிரகடனத்திற்கு முன்பு தமிழ்நாட்டில் மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. அது இடைக்காலத்தில் நெருக்கடி நிலை ஏற்பட்டு நிறுத்தப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து வழங்க இன்றைய நமது அரசு முற்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-40.]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, தமிழ் மொழிக்கு ஆதரவாக நடத்திய போராட்டங்களில் பங்கு கொண்ட நண்பர்களுக்கு உதவித் தொகை அளிப்பது குறித்து முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

**உடல் ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ளவர்கள்.**

*வினா 451 திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோருக்கான வேலை வாய்ப்பகங்களில் இது வரை பதிவு செய்து கொண்டுள்ளவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களுள் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:

(அ) இதுவரை 9,701 உடல் ஊனமுற்றவர்கள் சென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோர் சிறப்பு வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்துகொண்டுள்ளனர்.

(ஆ) 2,650 உடல் ஊனமுற்றோர்களை சென்னையிலுள்ள உடல் ஊனமுற்றோர் சிறப்பு வேலை வாய்ப்பகம் 31-10-77 வரை வேலையில் அமர்த்தியுள்ளது.





திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, உடல் ஊனமுற்றோருக்காக வேலை வாய்ப்பு அளிப்பது பற்றி அமைச்சரவர்கள் சொன்னார்கள். அவர்களுக்காக எந்தெந்தப் பணிகளை வைத்திருக்கிறார்கள்? அவர்களை என்னென்ன பணிகளில் வைக்கிறார்கள்? கையில்லாதவர்களுக்கு என்ன பணி கொடுக்கப்படுகிறது? கால் இல்லாதவர்களுக்கு என்ன பணி கொடுக்கப்படுகிறது? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, கண் இல்லாதவர்கள் 189 பேர், காது கேளாதவர்கள் 348 பேர், வேறு வகையாக உடல் ஊனமுற்றவர்கள் 2,113 பேர்.

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவரவர்களே, இந்த உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையிலே இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்ட போதிலும் ஒரு சில அதிகாரிகள் அதற்கு மாறாக நடந்து கொள்கிற சூழ்நிலை இருப்பதால், அந்த அதிகாரிகள் மேல் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அது பற்றி அரசின் கவனத்திற்குத் தகவல் வந்தால் அரசு பரிசீலிக்கும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்களை வேலையிலே அமர்த்துவதற்கு இப்பொழுதிருக்கிற விதிமுறைகள் காரணமாக, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வழியில்லாமலிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வேலை தேடித் தரும் நிறுவனங்களில் பதிவு செய்துள்ள உடல் ஊனமுற்ற அனைவருக்கும் அதிகக் காலதாமதமின்றி வேலை வாய்ப்பு அளிக்க அரசு ஆலோசிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, வேலை என்கின்ற நிலையில், உடல் ஊனமுற்றவர்களும் உடல் ஊனமுறாதவர்களும் எல்லோருமே ஒரே நிலையில் தானிருக்கிறார்கள் ஒரே நிலையில் தான் பாவிக்கப்படுகிறார்கள். ஆனால், உடல் ஊனமுற்றோருக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியாத நிலைமையில் சில விதிமுறைகள் இருக்கின்றன. அவற்றைத் தளர்த்தி அவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவரவர்களே, அரசாங்க வேலைகளிலே நியமிப்பதற்கு 'டெபார்மிட்டி' என்பதை வைத்து, அவர்களை 'ரிஜக்ஷன்' செய்கிறார்கள். அந்த விதி தளர்த்தப்படுமா? தளர்த்தப்பட்டு, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1978 மார்ச் 8

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அது குறித்து அரசு நிச்சயம் பரிசீலிக்கும்.

திரு. அ. க. அரங்கநாதன் : தலைவரவர்களே, உடல் ஊன முற்றோருக்கு அங்கே என்னென்ன வேலையைக் கற்றுத் தருகிறார்கள். கற்றுக் கொள்பவர்களுக்கு என்ன வேலை வாய்ப்பு—குருடர்களுக்கு என்ன வேலை வாய்ப்பு—செவிடர்களுக்கு என்ன வேலை வாய்ப்பு—அதே போல் உடல் ஊனமுற்றோருக்கு என்ன வேலை வாய்ப்பு என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே கேள்வி, அவர்களுக்கு எப்படிப்பட்ட வேலை வாய்ப்பைத் தருகிறார்கள் என்பது பற்றி. உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை கற்றுத் தருவதைப் பற்றி அல்ல. அவர்கள் எந்தெந்த வேலைகளுக்குத் தகுதி பெற்றிருக்கிறார்களோ, அந்த வேலைகள் தரப்படும்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, உடல் ஊனமுற்ற பட்டதாரிகள், முதுகலைப் பட்டதாரிகள் கூட வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ? அவர்களுக்கு வேலை வாய்ப்பில் உடனடியாக முன்னுரிமை கொடுக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, வேலையில்லாதவர்கள் என்ற நிலைமையில் உடல் ஊனமுற்றவர்களும் இருந்து வருகிறார்கள். உடல் ஊனமுற்றதன் காரணமாக, வேலை கிடைக்காத நிலைமையை நாம் தவிர்ப்பதற்குத்தான் முயற்சிகள் எடுத்துக் கொண்டு வருகிறோம். முடிந்த அளவு வேலை தரப்பட்டு வருகிறது.

திரு. கே. சௌந்தரராசன் : தலைவரவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்கு வேலை தருகின்ற நேரத்தில், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் இத்தனை சதவீதம் வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்று அரசு அளித்துள்ளதே; அதே போல், உடல் ஊனமுற்றோர்களுக்கு இத்தனை சதவீதம் வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணையிடுமா என, அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்த யோசனை கவனத்திலே எடுத்துக்கொள்ளப்படும் என்று நான் சொல்கிற நேரத்தில், இதிலே உள்ள சில கஷ்டங்களை நான் சொல்லியாக வேண்டும். ஒரு பேராசிரியர் பதவிக்குக் கண் தெரியாத ஒருவரை நாம் நியமித்து, அவர்கள் வகுப்புக்குச் செல்லக் கூடிய நேரத்தில், மாணவர்கள் இல்லாத நிலையில் பாடம்



1978 மார்ச் 8]

சொல்லிக் கொடுக்கிற சூழ்நிலைகள் ஏற்பட்டு அதனால் அந்த மாணவர்கள் பயன்படாத நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, இருக்கிற நிலைமைகளுக்குத் தகுந்தவாறு அவர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகிற முயற்சிகளை நாம் எடுத்துக்கொள்ளலாம்.

திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஊனம் உற்றோர் மறுவாழ்வுத் திட்டம் என்று திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கால் ஊனம் உற்றவர்களுக்கு மூன்று கால் சக்கர வண்டிகள் கொடுத்தார்களே, அப்படி எவ்வளவு வண்டிகள் கொடுக்கப்பட்டன. கிராமங்களிலும், நகரங்களிலும் கால், கை ஊனம் உற்றவர்கள் லட்சக்கணக்காக இருக்கிறார்கள். பதிவு செய்துள்ள 9,000 பேர்களில் இப்போது 2,000 பேர்களுக்குத்தான் வேலை அளிப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே உடல் ஊனம் உற்று 10 வருடம் படித்து விட்டு, பெண்களும் ஆண்களும் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எவ்வளவு காலத்திற்குள்ளாக பூரா பேருக்கும் வேலை கொடுக்க அரசு முன் வரும் என்று கேட்க விரும்புகிறேன். அத்தோடு இந்த உடல் ஊனம் உற்றோர்களுக்கு கிராமத்தில் அவர்களுக்குப் பயன்படும் விதத்தில் சிறுதொழில் வைத்து அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இந்த அருமையான யோசனையை சர்க்கார் கவனத்தில் ஏற்றுக் கொள்கிறது.

## சென்னைக்கு குடிநீர் வழங்கல்.

* வினா 452—திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தற்போது செயல்பட்டுவரும் சென்னை குடிநீர்த் திட்டத்தில் உள்ள குறைபாடுகளைப் பற்றி ஐ.நா. நிபுணர்கள் அரசுக்கு அறிக்கை கொடுத்திருக்கிறார்களா ?

(ஆ) ஆம் எனில், அந்தக் குறைபாடுகள் யாவை ?

(இ) அவைகளை நிவர்த்திக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) (1) பூண்டி மற்றும் புழலேரி ஆகிய நீர்த்தேக்கங்களில் தற்போது 60 சதவீதத்திற்கு மேல் தண்ணீர் ஆவியாவதன் மூலமும், கசிவுகள் மூலமும் வீணாகின்றது.

[1978 மார்ச் 8

(2) நீர்ப்பங்கீடு அமைப்பில் குழாய்களும் மற்றும் வால்வுகளும் சரியாக பராமரிக்கப்படாமல் மிகவும் சீர்குலைந்த நிலையில் இருப்பதால், மிகுந்த அளவு நீர் கசிவினால் வீணாகிறது.

(3) வீட்டுக்குழாய் அமைப்புகளில் பழுதடைந்த குழாய்கள் மற்றும் வால்வுகள் இருப்பதாலும், அளவுடன் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கான மீட்டர்கள் மிகக் குறைந்த அளவிலே பொருத்தப்பட்டிருப்பதாலும், பொருத்தப்பட்ட மீட்டர்கள் சரிவர இயங்காததாலும் மிகுந்த தண்ணீர் வீணாகிறது.

(இ) மேலே கூறிய குறைபாடுகளை நீக்க உலக வங்கியின் உதவியுடன் உடனடி சீரமைப்புத் திட்டம் ஒன்றைச் செயற்படுத்த அரசு எண்ணியுள்ளது. இத் திட்டத்தின்படி குழாய்கள் மற்றும் கட்டுப்பாடு வால்வுகளைச் சீரமைத்தும் புதுப்பித்தும், தற்போதுள்ள மீட்டர்களைத் திருத்தியும், புதிய மீட்டர்களைப் பொருத்தியும் தண்ணீர் வீணாவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படும். பூண்டி, புழலேரி நீர்த்தேக்கங்களில் தண்ணீர் ஆவியாகி வீணாவதைத் தடுக்க நிலத்தடியில் நீரைத் தேக்கும் யோசனை குறித்து விரிவான பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நடவடிக்கைகளை சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்றும் வாரியத்தின் வாயிலாக விரைவாகவும் செம்மையாகவும் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. பொ. சிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்குக் குடிநீர் புழலேரியிலிருந்து வருவதால் அந்தப் புழலேரியைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குத் தண்ணீர் கிடைப்பது இல்லை. இந்த அரசு, குறிப்பாக தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள், கிராமங்களுக்குக் குடிநீர் கிடைக்க வழி காணுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: அதைப் பற்றியும் அரசு பரிசீலிக்கும்.

திரு. மு. அரங்கநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியிலிருந்து சென்னை தனி வாரியமாகப் பிரிக்கப்படும். குடிநீர் வடிகால் திட்டத்திற்கு, உலக வங்கியிலிருந்து எவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறார்கள்? அந்தத் திட்டத்திற்கான முழுச் செலவும் ஏற்கிறார்களா? அல்லது குறிப்பிட்ட சதவிகிதம் மட்டும் தருகிறார்களா? தனி போர்டாக நியமிக்க மொத்த செலவீட்டுத் தொகை எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.



1978 மார்ச் 8]

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, ஆவியாவதைத் தடுப்பதற்கு நிலத்தின் அடியில் நீரைத் தேக்குகிற திட்டம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். புழலேரியில் உள்ள அவ்வளவு நீரையும் தேக்கப் போகிறார்களா? இதை எப்படிச் செயல்படுத்தப் போகிறார்கள் என்ற விவரத்தை அமைச்சர் அவர்கள் சொன்னால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எஸ். இராகாவானந்தம்: நிபுணர்கள் பரிந்துரை வழங்கியிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்காக வீராணம் திட்டம் ஒன்று இருந்தது. அதற்காகத் தயாரிக்கப்பட்ட குழாய்கள் வரிசை வரிசையாக வடலூரில் இருந்து ரோடுகளில் கிடப்பது அரசுக்குத் தெரியுமா? அந்தத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது, கைவிடப்பட்டு விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்; பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த கேள்வி அதைப்பற்றித்தான் வருகிறது.

[முற்பகல் 9.50]

திரு. மு. அரங்கநாதன்; தலைவரர்களே, சென்னை நகருக்கு குடிநீர் தொடர்புகள் கொடுப்பதற்காக உலக வங்கியில் இருந்து கடன் கொடுப்பதாகச் சொன்னார்கள். இப்போது சென்னை நகருக்கு எவ்வளவு குடிநீர் தொடர்புகள் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, இது உள்துறை அமைச்சர் அவர்களிடம் கேட்கப்பட வேண்டிய கேள்வி.

* Q. 453 Thiru K. KANDASAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) When the Veeranam project is expected to be completed?

(b) the expenditure incurred on the scheme till 30-6-1977; and

(c) the additional amount expected to comp'ete the scheme?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) வீராணம் திட்டத்தை மீண்டும் செயற்படுத்துவது குறித்த பிரச்சினைகள் யாவும் அரசின் பரிசீலனையில் உள்ளன.

(ஆ) ரூபாய் 22·64 கோடி.

(இ) இத் திட்டத்தினை முடிப்பதற்கு இன்னும் எவ்வளவு
ரூபாய் கூடுதலாகத் தேவைப்படும் என்பதை வீராணம் திட்
டத்தை மீண்டும் செயற்படுத்துவது குறித்த அனைத்துப் பிரச்சினை
களிலும் திட்டவட்டமான முடிவுகள் எடுத்த பின்னரே கணக்கிட
முடியும்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவரவர்களே வீராணம்
திட்டத்தை நிறைவேற்றும் திட்டம் இருக்கிறது என்று சொல்
கிறார்கள். அதே மாதிரி கிருஷ்ணா குடிநீர் திட்டமும் நிறை
வேற்றப்படும் என்று சொல்கிறார்கள். எந்தத் திட்டத்தை
நிறைவேற்றுவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அதைப் பற்றி
நான்கு கருத்துக்கள் பரிசீலனையில் உள்ளன.

(1) வீராணம் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த
வேண்டுமா அல்லது அதைக் கைவிட்டு விடலாமா.

(2) மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்றால் எத்தகைய
தொழில் நுட்பத்தைக் கையாள்வது ; வேலைகளை யார் நிறை
வேற்றுவது .

(3) வீராணம்-நெய்வேலி திட்டம் மற்றும் நிலத்தடி நீர்
ஆராய்ச்சித் திட்டங்களைத் தேர்ந்தெடுத்து ஐக்கிய நாட்டு
வளர்ச்சித் திட்ட ஆலோசகர்களிடம் வடிவமைப்பிற்கு விட்டு
எவ்வகைக் குழாய்களை உபயோகிக்கலாம் என்பது குறித்து முடி
வெடுக்குமுன் அவர்களது பரிந்துரையினைப் பெறலாமா.

(4) திருவாளர்கள் சத்யநாராயணா சகோதரர்கள் நிறு
வனத்தாரிடமிருந்து நிலுவைகளை வசூலிக்க என்ன வழிமுறை
களை மேற்கொள்ளலாம் என்பவைகளை அரசு பரிசீலித்துக்
கொண்டு இருக்கிறது.

திரு. பாக்கூர் சு. உ. சுப்பிரமணியம் : தலைவரவர்களே
வீராணம் திட்டம் முன்பு இருந்த ஆட்சி முடிவு கட்டிய திட்டம்.
அது முற்றுப் பெற்றாலும் எதிர்பார்க்கும் பலன் கிடைக்காது
என்று மக்கள் மத்தியில் எண்ணம் நிலவுகிறது. அது உண்மையா?
அப்படியானால் அதற்கு மாற்றுத் திட்டம் வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவ
ரவர்களே நிபுணர்கள் கருத்து வேண்டும் என்று நான் முன்பே
கூறிவிட்டேன்.

திரு மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே காவிரியும்
கொள்ளிடமும் கரைபுரண்டு விட்டாலும் வீராணம் ஏரி விதை
முதலுக்கு ஆகாது என்பார்கள். ஆனால் தற்போது காவிரியில்



தண்ணீர் வரவேண்டும் என்றால் கருநாடகத்தோடு ஒப்பந்தம்
செய்து கொள்ள வேண்டும். ஆகவே அது வருமா என்பது
சந்தேகமாக இருக்கிறது. காவிரியில் தண்ணீர் வரவில்லை
என்றால் கொள்ளிடத்திற்குத் தண்ணீர் வராது. கொள்ளிடத்
ற்குத் தண்ணீர் வரவில்லை என்றால் வீராணம் ஏரிக்குத்
ண்ணீர் வராது. ஆகவே அந்தத் திட்டத்தை கைவிட்டு விட்டு
வேறு முறையில் தண்ணீர் கொண்டு வர தமிழக அரசு முன்
வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : எல்லாப் பிரச்சினை
களையும் பற்றி அமைச்சரவை முடிவு எடுக்க வேண்டும்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, அந்த வீராணம்
திட்டம் பற்றி ஆராய்ந்து 'பீசிபிலிடி' சாத்தியக் கூறான திட்டமா
என்பதை ஆராய கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு குடியரசுத்
தலைவர் ஆட்சியில் ஒரு கமிட்டி போடப்பட்டு அந்தக் கமிட்டி
தன்னுடைய அறிக்கையில் சாத்தியக்கூறான திட்டம் என்று
அறிவித்து இருப்பதாக எல்லா ஏடுகளிலும் செய்தி வந்ததே,
அதையும் அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறதா?

மாண்புமிகு. திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவ
ரவர்களே, அரசு அதையும் பரிசீலனை செய்கிறது. * *

* * * *

திரு. க. அன்பழகன் : * *

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : * * *

திரு. மு. கருணாநிதி : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியை ஒட்டி பதில்
சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் பேசும்
போது எல்லாப் பிரச்சினைகளைப்பற்றியும் ஆராய்வதோடு *

* * என்று மட்டும் தான் தெரிவித்தார்களே தவிர
* * என்று
அதைத்தான் சொன்னாரே தவிர * * *
சுட்டிக்காட்டிப் பேசவில்லை.

* * * *

திரு. மு. கருணாநிதி :

மாண்புமிகு திரு. கி. மனோகரன் * * *

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.

[1978 மார்ச் 8

திரு. மு. கருணாநிதி : * * * *

மாண்புமிகு திரு. கி, மனோகரன் : * * *

[முற்பகல் 10-00]

திரு மு. கருணாநிதி : தலைவர் அவர்களே மன்னிக்கவேண்டும். நான் அமைச்சர் அவர்களைப் பார்த்து கேட்ட கேள்வி கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு குடியரசுத் தலைவர் ஆட்சியில் ஒரு குழு போடப்பட்டு வீராணம் திட்டத்திற்கு 'பீஸிபிலிட்டி' உண்டா அது ஒரு சாத்தியக்கூறான திட்டம்தானா என்று ஆராய ஒரு குழு போடப்பட்டது தொழில் நுட்பப்படி. அந்தக் குழுவின் ரிப்போர்ட்படி அது சாத்தியக்கூறான திட்டம் தான் என்று அறிவித்ததாக பத்திரிகைகளில் ஒரு செய்தி வந்தது. அதுபற்றி அரசு ஆராய்கிறதா என்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் பதில் அளித்தது வேறுவிதத்தில் என்பதை தாங்கள் அறிவீர்கள். அந்தப் பதிலை தாங்கள் பார்த்து அதை நீக்கிவிட தாங்கள் உத்தரவிட வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து நான் மன்ற உறுப்பினர்களை மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பக்கத்திலிருந்து வந்தாலும் சரி அல்லது அந்தப் பக்கத்திலிருந்து வந்தாலும் சரி கேள்விகள் கேட்கப்படுகின்றன. இந்த மன்றத்தின் மூலம் பல தகவல்களைத் தெரிந்து கொள்ளக்கூடிய அளவிற்குச் சொல்லி சுமுகமாக அவையை நடத்திச் செல்வதுதான் நல்லது. கேட்ட கேள்விகளுக்கு முறையாகப் பதில் சொல்வ தோடு அமைய வேண்டும். (குறுக்கீடு) * * *

திரு. மு. கருணாநிதி: மறுபடியும் மன்னித்துக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். நான் கேட்பது அந்தக் குழுவின் ரிப்போர்ட்படி அது பீஸிபில் சாத்தியக்கூறான திட்டம் என்று அறிவித்ததாக ஏடுகளில் வந்ததே அது பற்றி அரசு ஆராய்ந் ததா என்று கேட்டேன். அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் கேள்வியில் நான் ஒரு குறையும் சொல்லவில்லை. கேள்வியை நல்லவிதமாகக் கேட்டிருக்கிறீர்கள். இல்லை என்று சொல்லவில்லை. பதில் சொல்கிறபோது யாரையும் புண்படுத்துகிற அளவிற்கு இருக்கக் கூடாது. கேள்வியையொட்டி முறையாகப் பதில் சொல்ல வேண்டும் அப்போது இப்படிப்பட்ட பிரச்னை வரவேண்டிய அவசியமில்லை என்றுநான் சொல்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9-55 முதல் 10-00 மணி வரை உள்ள பகுதிகள் நீக்கப் பெற்றுள்ளன.



1978 மார்ச் 8]

திரு. க. அன்பழகன் : அமைச்சர் அவர்கள் கேள்விக்குப் அப்பால் சென்று சில கருத்துக்களைச் சொன்னார்கள். அதைத் தாங்கள் அவைக் குறிப்பிலிருந்து எடுப்பதாக இருந்தால் இந்த அவையில் நாங்கள் ஒத்துழைக்கத் தயாராயிருக்கிறோம். அதை எடுக்க முடியாது என்று தாங்கள் அறிவித்துவிடுவீர்களானால் எங்களுக்கு இங்கு வேலை இல்லை. கேள்வியை ஒட்டியதாக அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * *

திரு. துரை முருகன்: * * * *

திரு. க. அன்பழகன் : தங்களோடு ஒத்துழைப்பதற்காகத்தான் நான் மறுமுறையும் சொல்கிறேன். விடை கேள்விக்குத் தொடர்புடையதாக இருக்க வேண்டும் இல்லை என்றால் எடுத்து விட வேண்டும். அப்போது பிரச்சனை எழாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வார்த்தையை உப யோகப்படுத்த வேண்டிய அவசியமில்லை என்றுதான் சொன்னேன். குறிப்பாக * * * யாரையும் சொல்லவில்லை. மொத்தமாகத்தான் சொன்னார்கள் பதில்.

திரு. க. அன்பழகன் : தயவு செய்து விடையை படித்துப் பாருங்கள். படித்துப் பார்த்துவிட்டு கேள்விக்குச் சம்பந்த மில்லாமலிருந்தால் அதை எடுத்து விடுங்கள். பிரச்சனை இல்லை. பிரச்னைக்கு சம்பந்தமிருந்தால் அனுமதியுங்கள். கேள்வி நேரத் தில் குற்றச்சாட்டுகள் சொல்லக் கூடாது என்று தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள். தாங்கள் சொன்னதற்கு மாறாக இருக்கு மானால் எடுக்கலாம் அல்லவா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறிப்பைப் பார்த்து அரை மணி நேரத்தில் முடிவு சொல்கிறேன்.

திரு. துரை. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(திரு. என். கிட்டப்பா அவர்கள் எழுந்திருந்தார்......)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கிட்டப்பா அவர்கள் உட்காருங்கள். திரு. முத்துசாமி அவர்களும் உட்காருங்கள். இது பற்றி நான் சொல்லி முடிவாகி விட்டது. உட்காருங்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1978 மார்ச் 8

நான் இது சம்பந்தமாக முடிவு சொல்லும் வரையிலும் இக்கேள்வி சம்பந்தமான தகவல்கள் எதுவும் பத்திரிகையில் வெளிவரக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : பாயின்ட் ஆப் ஆர்டர்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் முடிவு சொல்லியாகி விட்டது. தயவுசெய்து உட்காருங்கள். அடுத்த கேள்வி 454.

மாஞ்சோலைத் தோட்ட தொழிலாளர் குடியிருப்புகள்.

* 454 வினா— திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லை மாவட்டம் மாஞ்சோலை எஸ்டேட்டில் தொழிலாளர்களுக்கு வீடுகள் (Quarters) கட்டப்பட்டுப் பலகாலமாக மின் விளக்குப் போடப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில் அது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) மற்றும் (ஆ) :—மின்விளக்கு வசதி இல்லாத வீடுகளுக்கு உடனடியாக மின்வசதி செய்து கொடுக்கும்படி மாஞ்சோலை தோட்ட நிறுவனத்திற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திரு. ரா. கிருஷ்ணன் : ஏற்கனவே இந்த வீடுகளில் எல்லாம் வயரிங் செய்யப்பட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டது. இதற்குரிய டெப்பாசிட் எல்லாம் கட்டி பல மாதங்கள் ஆகிவிட்டது. பக்கத்தில் ஐந்து கிலோ தூரத்தில் கோதையாறு பவர் பிராஜக்ட் இருக்கிறது. ஆகவே இன்னும் காலதாமதம் ஆவதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே இங்கு 54 வீடுகளுக்கு கம்பி இணைப்பு எல்லாம் கொடுக்கப்பட்டு முடிக்கப்பட்டிருக்கிறது. 30 வீடுகளுக்கு இன்னும் கொடுக்கப்பட வேண்டும். எல்லா வீடுகளுக்கும் செப்டம்பர் (1978) மாதத்திற்குள் இணைப்பு கொடுக்கப்பட்டு முடிந்துவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1978 மார்ச் 8]

பாடி டி. வி. எஸ். நிறுவனங்களில் தொழில் தகராறுகள்.

* வினா. 455— திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாடியிலுள்ள டி. வி. எஸ். நிறுவனங்களில் ஏற்பட்ட தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன ?

(ஆ) அந்த நடவடிக்கைகள் மூலம் மேற்படி தொழில் தகராறுகள் தீர்க்கப்பட்டுவிட்டனவா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) பாடியிலுள்ள சுந்தரம் கிளேட்டன் லிமிடெட், லூகாஸ், டி. வி. எஸ். லிமிடெட், பிரேக்ஸ் இந்திய லிமிடெட் ஆகிய நிறுவனங்களில் ஏற்பட்ட தொழில் தகராறுகளைத் தீர்ப்பதற்கு சமரச பேச்சு வார்த்தைகள் சென்னை 2-வது வட்டத் தொழிலாளர் துறை துணை ஆணையாளர், தொழிலாளர் துறை ஆணையாளர், தொழிலாளர் நல அமைச்சர், போக்குவரத்துத் துறை அமைச்சர் மற்றும் முதலமைச்சர் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

(ஆ) அரசினர் எடுத்த நடவடிக்கைகளின் பயனாக இத்தொழிற் தகராறுகள் தீர்க்கப்பட்டு தொழிற்சாலைகள் தற்போது அமைதியாக இயங்குகின்றன.

திரு. சி. கோவிந்த்ராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் மீது குற்றச் சாட்டுகளைப் பற்றி விசாரித்து முடிவு எடுத்து அந்த முடிவை முதலமைச்சர் அவர்களுக்கு முன் விடுவது என்றும், சஸ்பென்ஷன் பற்றி இறுதி முடிவு எடுக்க வேண்டும் என்றும், உடனடியாக தொழிலாளர் நலத்துறை மூலமாக தொழிற்சங்கத் தேர்தல்கள் நடத்த வேண்டும் என்றும், கிளேட்டன் தொழிற்சாலையின் உற்பத்தியை ஆராய்ந்து ஊதியம் கொடுப்பது என்றும், அதற்காக ஒரு குழு அமைக்கப்பட வேண்டும் என்றும் முதலமைச்சர் அவர்கள் முன் ஒரு ஒப்பந்தம் செய்யப்பட்டதே, அது என்ன வாயிற்று ? சஸ்பென்ஷன் செய்யப்பட்டுள்ள

[1978, மார்ச் 8

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அதற்குப் பின்னால்
ஏற்பட்ட சூழ்நிலையை யொட்டி அமைதியாக தொழிற்சாலைகள்
நடந்துகொண்டு வருகின்றன.

திரு. சி. கோவிந்தராஜன் : இன்றைக்குத் தொழிற்சாலைகள்
அமைதியாக நடந்து கொண்டிருக்கின்றன என்று சொன்னால்
அது சுடுகாட்டு அமைதி தான். அங்கேயுள்ள தொழிலாளர்
களிடம் வற்புறுத்தி எழுதி வாங்கிக் கொண்டு அவர்கள் மீது
போடப்பட்டுள்ள வழக்குகளை எல்லாம் வாபஸ் பெறாமல் 15
தொழிலாளர்களையும் டிஸ்மிஸ் செய்திருக்கிறார்கள் என்பதும்
அரசுக்குத் தெரியுமா ? இது பற்றி அரசு என்ன நடவடிக்கை
எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : அங்கே அமைதி
நிலவுவதாக எனக்குத் தகவல் வந்துள்ளது. மேலும் அங்கு எடுக்
கப்பட்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றி நான் விவரம் தரமுடியும்.
சுந்தரம் கிளேட்டனில் 61 பேர்கள் சஸ்பென்ஷன் செய்யப்
பட்டார்கள், 29 பேர்கள் மீது நடவடிக்கை முடிவு செய்யப்
பட்டுள்ளது, 8 பேர்கள் வேலைக்கு (ஜனவரி 13-ம் தேதி)
திரும்பி வந்து விட்டார்கள், 8 பேர்கள் ரிசைன் செய்து விட்
டார்கள், 2 பேர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார்கள், 11 பேர்கள்
டிஸ்மிஸ் செய்யப்பட்டார்கள், 8 பேர்கள் 'எக்ஸானரேட்'
செய்யப்பட்டார்கள், 6 பேர்களுக்கு இன்கிரிமென்ட் கட்
செய்யப்பட்டது, ஒருவருக்கு பனிஷ்மென்ட் என்ன என்று
இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

ஹராகாஸ்.டி. வி. எஸ். தொழிற்சாலையில் 67 பேர்கள் சஸ்
பென்ஷன் செய்யப்பட்டதில் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்
படவில்லை, அடுத்ததாக பிரேக்ஸ்-இந்தியா நிறுவனத்தில்
பாதிக்கப்பட்ட 107 பேர்களில் 19 பேர்கள் மீது விசாரணை
முடிந்திருக்கிறது. இரண்டு நாட்கள் சஸ்பென்ஷன் என்று
இருந்ததே தண்டனை என்று முடிவு எடுக்கப்பட்டது. எண்பத்தி
எட்டு பேர்கள் மீது நடவடிக்கை முடிவாகவில்லை.

## Taxis and Auto-rickshaws in Madras City.

* Q. 456. **Thiru S. GANESAN** : Will the Hon. the Minister for Transport be pleased to state :

(a) the total number of taxis and Auto-rickshaws now in Madras City; and

(b) whether they are in proportion to the population of Madras City ?



1978 மார்ச் 8]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :—

(அ) 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் நாள்
நிலவரப்படி சென்னை மாநகரில் 2,434 வாடகை மோட்டார்
வண்டிகளும் (டாக்சி) 1,521 ஆட்டோ ரிக்ஷாக்களும் உள்ளன.

(இ) குறிப்பிட்ட ஒரு வகை வண்டிகளின் எண்ணிக்கை
யோடு மாநகர மக்கள் தொகையைத் தொடர்பு படுத்துவது
இயலாது.

(முற்பகல் 10-10.)

திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் : பேரவைத் தலைவ
ரவர்களே வாடகைக்கார் ஓட்டுநர்களும் ஆட்டோ ரிக்ஷா ஓட்டு
நர்களும் பல ஆண்டுகளாக தங்களுடைய வாழ்க்கைக்கு உத்தர
வாதம் வேண்டுமென்று கோரியும் "எங்களுக்கு எந்தவிதமான
பாதுகாப்பும் தரப்படவில்லை. இந்த அரசாவது எங்களுடைய
வாழ்க்கைக்கு பாதுகாப்பு அளிக்குமா" என்றும் கேட்கிறார்கள்.
அது பற்றி ஏதாவது திட்டம் அரசிடம் இருக்கிறதா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவ
ரவர்களே வாடகைக்கார் ஓட்டுநர்களும் ஆட்டோ ரிக்ஷா
ஓட்டுநர்களும் அவர்களுடைய வேலைக்கு உத்தரவாதம் வேண்டும்
என்பதிலிருந்து ஊதியம் நிரந்தரமாகக் கிடைப்பதற்கு வழி
செய்ய வேண்டும் என்பது வரை பலவித கோரிக்கைகளும் அரசின்
முன் வைத்திருக்கிறார்கள். அவைகள் அரசின் பரிசீலனையில்
இருந்து வருகிறது. ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் அந்த வாகனத்
திற்கு உரிமையாளர்களாகவே ஆக வேண்டும் என்பதை நடை
முறைப்படுத்துவதற்கு இந்த அரசு ஆலோசித்துக் கொண்டு
வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, சட்ட மன்ற
உறுப்பினர்கள் ஊரிலே இருந்து எக்மோர் ஸ்டேஷனுக்கு வந்து
பிறகு அங்கிருந்து சட்ட மன்ற உறுப்பினர் விடுதிக்கு வரவேண்டு
மென்றால் டாக்சி டிரைவர்கள் ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள்
வர மறுக்கிறார்கள். ஆகவே, இதற்கு அரசு ஏதாவது நட
வடிக்கை எடுக்குமா அல்லது அவர்கள் உறுப்பினர் விடுதிக்கு
வந்து சேர வேறு ஏதாவது வழிவகை செய்யப்படுமா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவரவர்களே, சட்ட
மன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, பொது மக்களுக்கும் கூட
ஆட்டோ ரிக்ஷா டிரைவர்கள், டாக்சி டிரைவர்கள் ஆகியோர்

[திரு. சி. பொன்னையன்] [1978 மார்ச் 8

வர மறுப்பார்களேயானால் அவர்கள் மீது கண்டிப்பாக நட
வடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதோடு
மட்டுமின்றி அங்கு காவல் துறையினர் மூலமாக இவற்றை
ஒழுங்கு படுத்தி கண்டிப்பாக நடை முறைப்படுத்த வேண்டும்
என்ற உத்தரவும் இடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே'
சென்னையில் இருக்கின்ற டாக்சிகளுக்கு அதிகமாகக் கட்டணம்
செலுத்த வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, டாக்சிகள்
பெட்ரோலில் ஓடுவதற்குப் பதிலாக டீசலில் ஓடுவதற்கு ஏதுவாக
மாற்றுவதற்கு அரசு கடனுதவி அளித்தால் பல டாக்சிகள் டீசலில்
ஓடுவதாக ஆக்குவதற்கு வசதியாக இருக்கும். அப்படி அனை
வருக்கும் தர முடியவில்லை என்று சொன்னாலும் கூட்டுறவுத்
துறையில் ஓடும் டாக்சிகளுக்காவது இந்த மாதிரி டீசலில்
ஓடுமாறு மாற்றுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவ
ரவர்களே, ஒரு டீசல் என்ஜின் விலை 18 ஆயிரம் ரூபாய் என்று
சொல்லப்படுகிறது. இதிலே பல சிரமங்கள் இருக்கும் கார
ணத்தால் நடைமுறைப்படுத்துவதில் சிரமம் இருக்கும். மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல் கூட்டுறவுத் துறை
யின் மூலம் தனியாக இயங்கும் டாக்சி என்று இல்லை. கடனைக்
கட்டும் வரைதான் அது கூட்டுறவு சொஸைட்டிகள் என்று
சொல்லப்படுகிறது. கடன் கொடுத்து முடிக்கப்பட்ட பிறகு
தனித்து இயங்குகிறார்கள். எனவே இதில் பல சிக்கல்கள்
இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஆட்டோ ரிக்ஷா மீட்டர்கள்.

* வினா 457— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்கு
வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை
யளிப்பாரா :

(அ) ஆட்டோ ரிக்ஷாக்களில் தவறான முறையில் மீட்டரைப்
பொருத்தி முறைகேடு செய்வதைத் தடுக்க அரசு ஏதேனும் நட
வடிக்கை எடுத்துக் கொண்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?



1978 மார்ச் 8]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) ஆம்.

(ஆ) மீட்டர்களில் வட்டாரப் போக்குவரத்து அதிகாரியின்
(ஆ) மீட்டர்களில் ஏதாவது ஒரு விதத்தில்
முத்திரை இருக்கும். இந்த முத்திரையை ஏதாவது ஒரு விதத்தில்
ஒருவர் உடைத்தாலோ அல்லது கிழித்தாலோ அவர் விதிகளை
மீறியுள்ளதாகக் கருதப்படுகிறது. போக்குவரத்துத் துறையின்
அமலாக்கப் பணியாளர்கள் திடீரென்றும், அடிக்கடியும் சோதனைகளை
நடத்தி வருகின்றனர். 1977 ஆம் ஆண்டு ஜனவரி மாதம்
ஆம் தேதி முதல் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம்
0 ஆம் தேதி வரை உள்ள கால அளவில், மீட்டர்களில் உள்ள
முத்திரைகளை உடைத்தது குறித்தும், பயணிகளிடமிருந்து
கூடுதல் கட்டணங்களை வசூலித்ததற்காகவும் 110 உரிமதாரர்கள்
மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு
சற்றுத் தொடர்பு இல்லை என்றாலும் ஆட்டோ ரிக்ஷாக்களுக்கு
உரிமம் வழங்குவதன் காரணமாக மாயூரம், கும்பகோணம், தஞ்
சாவூர் போன்ற பகுதிகளில் இதற்கு முன்னால் இத்தகைய வாகனத்
தொழில் புரிந்து வந்த குதிரை வண்டிக்காரர்களும், மாட்டு
வண்டிக்காரர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது
குறித்து அடிக்கடி அரசுக்கு அவர்கள் மனுக்கள் அனுப்பிக் கொண்
டிருக்கிறார்கள். ஆகவே, ஆட்டோ ரிக்ஷா போன்றவற்றுக்கு
உரிமம் வழங்கும்போது மாட்டு வண்டி, குதிரை வண்டிக்காரர்
களுக்கு முன்னுரிமை கொடுத்து உரிமம் வழங்கப்பட வேண்டும்
என்ற ஆலோசனையை மேற்கொள்ள அரசு முன் வருமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்
பினர் அவர்களின் இந்த நல்ல யோசனை பரிசீலிக்கப்படும்.

## கோவை அருகே மாற்றுப் பாதை.

* வினா 458— திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு :
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை நகரத்தின் வழியாகக் கேராளவிற்குச் செல்
லும் வாகனங்களின் மூலம் ஏற்படும் நெரிசலைக் குறைக்க
தேசிய நெடுஞ்சாலை எண். 47-ல் கோவைக்கு அருகில் பை-
பாஸ் ரோடு அமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்பொழுது நிறைவேற்றப்
படும் ?

[1978 மார்ச் 8

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) மற்றும் (ஆ) ஆம். முதல் கட்டமாகிய நிலம் ஆர்ஜிதம் செய்ய ரூ. 36,42,500 பொறுமான மதிப்பீட்டிற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணி செயலில் உள்ளது.

தரமான சாலை அமைப்புப் பணியை உடனடியாக ஏற்க, மத்திய அரசின் அனுமதியும், நிதி ஒதுக்கீடும் எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : நெடுஞ்சாலை எண் 47-ல் கோவை—சென்னியம்பாளையம், இருகூர்—மதுக்கரை வழியாக எட்டிமலை வரை ஓடும் இந்த ரோடிற்கான வேலையைத் துரிதமாக எடுத்து முடிக்க இந்த அரசு உடனடியான நடவடிக்கை களை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசைப் பொறுத்தவரை நில ஆர்ஜிதப் பணிக் காக ரூ. 36,42,500 செலவிட்டு இந்தப் பணி துவங்கப்பட்டது. மேற்கொண்டு வேலைகள் 2 மேம்பாலங்கள், ஆற்றின் குறுக்கே ஒரு பாலம், மேற்கொண்டு 7 சிறிய பாலங்கள் போட வேண்டிய பணி முதற்கொண்டு, மற்ற பணிகளுக்காக இரண்டு கோடிக்கு மேற்பட்ட பணம் தேவைப்படுகிறது. மத்திய அரசு நடப்பு ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்வதாக அறிவித்துள்ளது. எனவே மத்திய அரசிடமிருந்து நிதி ஒதுக்கீடு கிடைத்தவுடன் மேற் கொண்டு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

## மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள்.

* வினா 459—திரு. எஸ். கணேசன், திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு கைத்தறி—பஞ்சாலைகள் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் மூடப்பட்டுள்ள பஞ்சாலைகள் எத்தனை ? அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாநிலத்தில் கீழ் குறிப்பிட்டுள்ள 3 நூற்பாலைகள் நிதி நெருக்கடி காரணமாகவும் வேறு காரணங்களுக்காகவும் இயங்கவில்லை.

1. பத்மா ஆலை, கோயம்புத்தூர்.
2. தமிழ்நாடு நூற்பாலை, கோயம்புத்தூர்.
3. ராஜா ஆலை, மதுரை.



1978 மார்ச் 8]

## நூல்களின் விலை.

* வினா 460—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு கைத்தறி—பஞ்சாலைகள்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலைகளில், கூட்டுறவு, தனியார்துறை, அரசு எடுத்து நடத்தும் மில்களில் உற்பத்தி ஆகும் நூல்களின் விலைகளில் வித்தியாசமுள்ளனவா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணமென்ன ?

(இ) 20, 40, 60 கவுண்ட் நூல்களின் விலை எவ்வளவு, 1975, 1976, 1977-ஆம் ஆண்டுகளில் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: விவரமான அறிக்கை* சட்டமன்ற பேரவையில் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்த விவர அறிக்கையிலே பார்க்கக்கூடிய நேரத்திலே 75-ஆவது ஆண்டிற்கும், 77-வது ஆண்டு கடைசிக்கும் பார்க்கும்போது, 20, 40, 60 கவுண்டு நூல்களின் விலை 50 ரூபாய் வரையிலும் அதிகப்படியாக உயர்ந்திருக்கிறது. அதேபோன்று கூட்டுறவு நூற்பாலைகளின் நூலுக்கும், தனியார்துறையிலே உள்ள நூலுக்கும் உள்ள விலையைப் பார்க்கின்ற நேரத்தில் அதிக வித்தியாசம் இருக்கிறது. தேசீய நூற்பாலையின் நூல்கள் அதைவிட அதிகமாக இருப்பதற்கான காரணம் என்ன? ஒரே பருத்தியில் உற்பத்தி செய்யக்கூடிய நூலை, இந்த அளவிற்கு வித்தியாசமான விலையிலே விற்பதற்கான அடிப்படைக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, இணைப்பு I-ல் 75-ஆம் ஆண்டு, 76-ஆம் ஆண்டு, 77-ம் ஆண்டு வரையிலே உள்ள பல்வேறு வகையான நூல்களின் விலைப் பட்டியலை நாங்கள் இணைத்திருக்கிறோம். இதிலிருந்து ஒன்று தெளிவாகிறது. கூட்டுறவு நூற்பாலைகளிலே அடக்க விலைக்கு நூல்களை கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பதால் விலை குறைவாக இருக்கிறது. இதனால் பொதுச் சந்தையிலே விற்கப் படுகின்ற விலையைவிட, இது குறைந்த விலைக்கு விற்கப்படுவதைப் பார்க்கிறோம். சில நேரங்களில் இந்த விலை சற்று வேறுபடுமே தவிர, எப்போதும் கூட்டுறவு நூற்பாலைகளில் நூல்கள் அடக்க விலைக்கு விற்கப்படுகின்றது. அதனால்தான், தனியார் துறையிலே தயாரிக்கப்படுகின்ற நூலுக்கும், இதற்கும் இவ்வளவு வேறுபாடு இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*577-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1978 மார்ச் 8

புலவர் கா. கோவிந்தன் : தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலைகளிலேகூட இந்த விலை 1976 மார்ச் மாதத்திற்கும் 77-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கும் இடையிலே 20 நெம்பர் 28 ரூபாயும், 40 நெம்பர் 26 ரூபாயும், 60 நெம்பர் 43 ரூபாயும் விலை கூடியிருக்கிறதே, இப்படி கூட்டுறவுத் துறையிலேயே இருப்பதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : கூட்டுறவுத் துறையிலே விலை வேறுபாடு இருப்பதற்குக் காரணம், அவ்வப்போது பருத்தியை நாம் விலைக்கு வாங்குகிறோம். அதைப் பொறுத்து இந்த விலை நிர்ணயிக்கப்படுகிறது. இன்றைக்கு மத்திய அரசு மல்டி பைபர் பாலிசியை அறிவித்ததற்குப் பின்னால், எம்.சி. பருத்திக்குக் குறைந்த விலை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு முன்பு அப்படி நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே தான், இந்த வேறுபாடுகள். மூலப்பொருள்கள் வாங்கக் கூடியதைப் பொறுத்து, அதற்கு என்ன விலை கொடுக்கப்படுகின்றதோ அதைப் பொறுத்து அடக்க விலையும் நிர்ணயம் செய்கிறோம். எனவேதான் இந்த வேறுபாடு வந்திருக்கிறது.

திரு. ரா. க. சு. தண்டபாணி : தலைவர் அவர்களே, இந்த துணைக் கேள்வி முன்பே தர வேண்டும். இது முந்திய கேள்விக்குச் சம்பந்தப்பட்டது. முந்திய கேள்வியின்போதே நான் கையைத் தூக்கினேன். ஆனால், தங்கள் கவனத்தை ஈர்க்கத் தவறி விட்டேன்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் துணைக் கேள்வியைப் போடுங்கள். தலைவர்மீது குறை சொல்ல வேண்டிய அவசியமில்லை. நீங்கள் கையைத் தூக்கினாலும், நேரத்தையும் கவனத்தில் கொண்டுதான் நான் கூப்பிட முடியுமே தவிர, கையைத்தூக்கினால் கூப்பிட வேண்டுமென்ற அவசியமில்லை. தயவுசெய்து கேள்வியைப் போடுங்கள்.

[முற்பகல் 10—20]

திரு. ரா. க. சு. தண்டபாணி : தலைவர் அவர்களே, நான் தான் தவறிவிட்டேன்.

இப்படி மூடப்பட்ட சிக் மில்களை தனியார் அரசோடு சேர்ந்து நடத்த முன்வந்தால் அரசு உதவ முன்வருமா ? மானேஜ்மென்ட் அதிகாரம் தனியார் வசம் ஒப்படைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலாவது கேள்விக்குச் சென்றிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இருந்தாலும் இந்த மன்றத்திற்குச் சில தகவல்களைத் தர வேண்டுமென்பதற்காக அதற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன்.



1978 மார்ச் 8]

இதற்கு முன்பு வரை தொழிலாளர்கள் உற்பத்தி, உற்பத்தித் திறன் ஆகியவை பற்றி ஆலோசனை வழங்கத்தக்க அளவுக்குத்தான் அவர்களுடைய ஆற்றலும், அனுபவமும் பயன்படுத்தப்பட்டு வந்தது. இந்த அரசு வந்ததற்குப் பிறகு நிர்வாகத்திலே அவர்கள் பங்கு பெற வேண்டுமென்று விரும்புகிறது. அப்படி அந்த ஆலையை மேற்கொண்டிருக்கும் நிர்வாகமும் தொழிலாளர்களும் சேர்ந்து அந்த ஆலையை நடத்தும் திட்டங்களோடு வந்தால் நிச்சயமாக இந்த அரசு தக்க உதவிகள் செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## (2) தகவல் கோரல்.

### அரசிதழ் பதிவில்லா ஊழியர்களின் வேலை நிறுத்தம் குறித்து.

திரு. என். சங்கரய்யா : பாயின்ட் ஆப் ஆர்டர். உங்கள் மூலமாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசு ஊழியர்கள் பிரச்சினை குறித்து வெகு சீக்கிரத்தில் அறிக்கை வெளியிடுவதாகக் கூறினார்கள். ஆனால்...................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று காலையில்தான் நீங்கள் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். அதிலே நான் முடிவு எடுப்பதற்கு முன்னால் நீங்கள் எழுந்து அதைப் பற்றிப் பேசுவது என்றால் அது எப்படி அவையின் மரபுக்கு உட்பட்டதாகும் ? தங்களுக்குத் தெரியாதது அல்ல. நீங்கள் கொடுத்ததை எல்லாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். அதைப் பற்றி நான் கூறும் வரையில் பிரச்சினையை எழுப்பிப் பேசாமல் இருந்தால் நல்லது.

திரு. என். சங்கரய்யா : நான் அந்தத் தீர்மானத்தைப் பற்றிச் சொல்லப் போவதில்லை. நான் சொல்வது வேறு. அரசாங்கம் அன்றைக்கு ஒரு அறிவிப்புக் கொடுத்தது. 7-3-1978-ம் தேதி அவர்கள் அறிக்கையில் 'அரசு ஊழியர்கள் வேலைக்கு வராவிட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்' என்று கூறியிருக்கிறார்கள். இது பிரச்சினையைத் தீர்க்க உதவி

செய்யாது. மேலும் சிக்கலாக்கும். அது அவர்கள் உரிமையைப் பறிப்பதாகும். ஆகவே, இந்தப் பிரச்சினை பற்றி விவாதிக்க வாய்ப்பு இல்லாத காரணத்தால், அவர்களுடைய பொருளாதாரக் கோரிக்கையை வற்புறுத்தி எங்கள் கட்சியின் சார்பில் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளி நடப்புச் செய்தனர்).

திரு. மு. அம்பிகாபதி : 126 யூனியன்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றன. சட்டமன்றம் அமைந்திருக்கும் செகரடேரியேட் செயலகம்,.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவரங்களைப் பேச அனுமதிக்கத் தயாராக இல்லை. அந்தப் பிரச்சினை ஆய்வில் இருக்கிறது. அதைப் பற்றித் தாங்கள் பேசக் கூடாது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, ஒரு சீரியஸ் சிச்சுவேஷன் அரைஸ் ஆகியிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் அது பற்றிப் பேசக் கூடாது.

திரு. மு. அம்பிகாபதி : ஒரு சீரியஸ் சிச்சுவேஷன் அரைஸ் ஆகியிருக்கிறது. இந்தச் சபை அதைப் பற்றி விவாதிக்காமல் வேறு அலுவல்களுக்குச் சென்று கொண்டிருக்கிறது. இப்படிப் பட்ட நிலையில் சபையை நடத்துவது சரியல்ல. அவர்களை அழைத்துப் பேசுவது சரியாக இருக்கும் என்பது எங்கள் கருத்து. நீங்கள் தீர்மானத்தை எடுத்திருக்கலாம் ...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தீர்மானத்தைக் கொடுத்தது இன்று காலை 8—55 மணிக்கு. நான் ஏற்கெனவே எனக்கு இருக்கிற சிக்கலைப் பற்றிச் சொல்லியிருக்கிறேன். நீங்கள் கொடுத்ததை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம் என்று சொன்னேன். ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது ; அரசின் கவனத்திற்குக் கொண்டு போயிருக்கிறேன். எனக்கும் அவகாசம் தர வேண்டும். ஆகவே, அந்தப் பிரச்சினை பற்றிப் பேசாமல் வேறு பிரச்சினைகள் இருந்தால் திரு. அம்பிகாபதி அவர்கள் பேசலாம்.

திரு. மு. அம்பிகாபதி : ஒரு சீரியஸ் சிச்சுவேஷன் அரைஸ் ஆகியிருக்கிறது..............





மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அம்பிகாபதி அந்தப் பிரச்சினைப் பற்றிப் பேசுவது சரியல்ல ; அதற்கு அனுமதி கிடையாது.

திரு. சோ. அழகர்சாமி : கிளப்பப்பட்ட பிரச்சினை முக்கியமான பிரச்சினை. அரசாங்கத்தின் பல வேலைகள் மட்டுமல்லாமல் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையும் ஸ்தம்பிக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. பத்திரிகையில் வந்திருக்கும் செய்தி தெரியும் — மாநகராட்சியிலுள்ள துப்புரவுத் தொழிலாளர்கள் உட்பட அவ்வளவு பேரும் வேலை நிறுத்தம் செய்கிற பெரிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

ஆகவே, அதைப்பற்றி விவாதிப்பதற்குத் இன்றைக்கு தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது, இன்றைக்கு அது பின்னுக்குத் தள்ளப் படக் கூடிய நிலைமையிலே வேறு விவாதங்களுக்குப் போகிற நிலைமை இருக்கிற காரணத்தாலே நாங்களும் வெளிநடப்புச் செய் கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. ஜே. ஜேம்ஸ் : இன்றைய தினம் இங்கே எழுப்பப் பட்டிருக்கிற பிரச்சினை எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம்.

Now the administration of this Government has been paralysed and the business of this House also has been paralysed.

என்று சொன்னால்..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து பேரவைத் தலைவருக்குத் தாங்கள் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. இந்தப் பேரவையின் நடவடிக்கைகள் எதுவும் குந்தகமாக இல்லை, உங்கள் முடிவை நீங்கள் சொல்லிவிட்டுச் செல்லலாம். ஆனால் பேரவை நடவடிக்கைகளை பற்றிச் சொல்ல வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்ன சொல்லப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும். செல்லலாம் என்று சொன்னதை நான் திருத்திக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் ; தாங்களே இப்படி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மன்னிக்கவும். இருக்கிற தோரணையை வைத்துச் சொன்னேன். அவர்கள் இங்கேயே இருப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அவர்கள் செல்லலாம் என்று நான் சொல்லி இருக்கக் கூடாது. நான் திருத்திக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : 42-வது விதிப்படி நாங்கள் கொடுத்திருக்கிறோம். என்.ஜி.ஓக்களின் வேலை நிறுத்தத்தால் அந்த 42-வது விதியின்படி உள்ள காரியத்திற்கு பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் தகவல்கள் வந்து சேரவில்லை என்று எனக்குச் சொல்லப்படுகிறது: இதனால் சட்டமன்ற நடவடிக்கைகளை நடத்த முடியாத சூழ்நிலையில் என்.ஜி.ஓக்களின் பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டும், ஆனால் முதலமைச்சர் வெளியிட்டிருக்கிற அறிக்கையைப் பார்க்கிறபோது இந்தப் பிரச்னையை இன்னும் அதிகப்படுத்துகிற நிலைமை தான் இருக்கிறதே தவிர தீர்க்கப்படும் நிலை இல்லை. இதையெல்லாம் எதிர்க்கின்ற முறையில் எங்கள் கட்சியின் சார்பாக நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(ஜனதா கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்)

திரு. து. ராமசாமி : என். ஜி. ஓக்களுடைய கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை எங்களுடைய கட்சி முழுமையாக ஆதரிக்கின்றது. இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதனால் ஏற்படுகின்ற நிதி பற்றுக்குறையை மத்திய அரசு ஈடு செய்ய வேண்டியது கடமை என்பதை வலியுறுத்துவதோடு, மாநில ஆட்சி இதற்காக மத்திய அரசை இணங்க வைக்க எடுக்கின்ற எவ்வித நடவடிக்கைக்கும் எங்கள் கட்சி முழுமையான ஆதரவளிக்கின்றது.

என்.ஜி.ஓ.க்கள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகளில் எங்கள் கட்சிக்கு பூரண உடன்பாடு கிடையாது என்றாலும் இந்தப் பிரச்சினையை மாநில அரசு, 'என்.ஜி.ஓக்களும் தங்கள் இரு தரப்பாரது பிரச்சினையாக மட்டும் கருதக் கூடாது. அவர்களைத் தாண்டி நாட்டு மக்கள் நலனையும் மனதில் கொள்ள வேண்டும். அந்த வகையில் இந்தப் பிரச்சினை இவ்விரு தரப்பினருக்கும் உள்ள கௌரவப் பிரச்சினையாக கருதக் கூடாது என முதல்வருக்கு என் கட்சியின் சார்பில் கூறக் கடமைப்பட்டுள்ளேன். இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் என்.ஜி.ஓ. க்களின் கோரிக்கைகளில் உள்ள நியாயத்தை வலியுறுத்தும் வகையிலும் மாநில அரசு இந்தப் பிரச்சினையை சஸ்பென்ஷன் போன்ற தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என்பதைத் தெரி



க்கின்ற வகையில் எங்களுடைய கட்சி சபையிலிருந்து வெளி டப்பு செய்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[காங்கிரஸ் (இ) கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் வெளி டப்புச் செய்தனர்].

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த என்.ஜி.ஓக்களின் பிரச்னை நாடு தழுவிய பிரச்சினையாக இருக்கிறது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சகல வழிகளையும் நான் சார்ந்திருக்கிற உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக கருத்துரைகளை இங்கே எடுத்து வைத்தோம். இன்னும் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி ஒரு சகஜநிலையை ஏற்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை அரசு உடனடியாக எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த நேரத்திலே விட்டு, தேர்ட் பே கமிஷன் அறிக்கை வரும்வரையில் என்.ஜி.ஓக்கள் தங்களுடைய நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்ளுங்கள் என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற பத்திரிகைகளிலே வேண்டுகோள் விடப்பட்டதற்கு இணங்க அவர்கள் நாட்டு மக்களின் நலனைக் கருதி, மனிதாபிமான உணர்வோடு இந்தப் பிரச்சினையால் நாட்டின் நடைமுறைக்கு எந்தவிதமான குந்தகமும் விளையாத முறையிலே அவர்கள் நடக்கக்கூடிய முறையிலே அவர்களுடைய கோரிக்கைகளை அரசு கவனிக்க வேண்டுமென்று இந்த அரசுக்கு நாங்கள் எங்களுடைய கட்சியின் சார்பாக வேண்டுகோளை விடுத்து அமைகிறேன்.

[முற்பகல் 10-30].

திரு. எம்.ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இந்தப் பிரச்னையினுடைய முக்கியத்துவத்தைப்பற்றி ஏற்கனவே நாம் சபையிலே விரிவாக விவாதித்து இருக்கிறோம். மாண்புமிகு முதல்வரவர்கள்கூட விரிவான ஒரு பதிலைத் தந்திருக்கிறார்கள். அந்தப் பதிலிலேயிருந்து நான் தெரிந்து கொண்டது, பேச்சுவார்த்தைகளை நாம் தொடர்ந்து நடத்துவோம், நடத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்ற அடிப்படையிலேதான் மன்றம் மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய பேச்சிலேயிலிருந்து ஒரு கருத்தை மேற்கொண்டது. ஆனால் இன்றைக்கு அவர்களெல்லாம் சஸ்பெண்ட் செய்யப்படுவார்கள், பேச்சுவார்த்தைகளுக்கும் மேலும் வாய்ப்பில்லை என்ற அளவிற்குச் சில சூழ்நிலைகள் உருவாக்கியிருப்பது உண்மையிலேயே துரதிருஷ்டவசமானதாகும்.

இதேமாதிரியான அரசிதழ் பதிவு பெறாத அரசு பணியாளர்கள் மகாராஷ்டிரா மாநிலத்திலே மூன்று மாதங்கள் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்து வந்தார்கள். அந்த நேரத்தில் ஒரு தேர்தல் கூட நடைபெற இருக்கிறது, ஆகவே, தேர்தலைக்கூட தள்ளி வைக்க வேண்டுமா என்ற ஐயப்பாடுகள் கூட எழுப்பப்பட்டன.

ஆனால் இறுதியில், மூன்று மாதங்கள் நடந்தாலும், சுமுகமான பேச்சுவார்த்தைகள் மூலம் அது முடிவு பெற்றது என்று நமக்குத் தெரிகிறது.

ஆகவே, இரண்டு தரப்பிலும், அரசுத் தரப்பிலும் பேச்சுவார்த்தைகள் மூலமாகத் தீர்க்க வேண்டுமென்ற ஒரு நிலையை மேற்கொள்ள வேண்டும். அந்தப் பேச்சுவார்த்தைகள் மூலமாக நம்முடைய பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண வேண்டுமென்று பணியாளர்களும் நினைப்பது சாலச்சிறந்ததாகும். ஆகவே, எங்களைப் பொறுத்தவரையில் பணியாளர்களின் கோரிக்கைகளை அரசு பரிசீலிக்க வேண்டும். காலம் எவ்வளவு ஆனாலும் அதைப்பற்றிக் கவலையில்லை, ஆனால் பேச்சுவார்த்தைகள் மூலமாகத் தீர்க்க வேண்டும். ஆனால் அதற்காக இம்மாதிரி தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொள்வது எவ்வளவு தூரம் சிறந்தது என்பதை அரசு கவனித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, உடனடியாக அந்த என்.ஜி.ஓ. பிரதிநிதிகளை மட்டும் அல்லாமல், எல்லோரையும் சேர்ந்த அரசியல் கட்சித் தலைவர்களை மட்டுமல்ல சர்வ கட்சித் தலைவர்களின் கூட்டத்தை முதலமைச்சரவர்கள் கூட்டினார்கள். ஆனால், இந்த சர்வ கட்சிக் கூட்டத்தில் அரசாங்கப் பணியாளர்களுடைய பிரதிநிதிகளையும் வைத்து, அரசுப் பிரதிநிதிகளையும் வைத்து, சர்வ கட்சி பிரதிநிதிகளையும் வைத்து இப்படி முக்கூட்டுப் பிரதிநிதிகளை வைத்து ஒரு கூட்டத்தை உடனடியாக, 24 மணி நேரத்திலோ அல்லது இரண்டு மூன்று தினங்களிலோ கூட்டி அரசு ஏதாவது நல்ல முடிவுக்கு வர வேண்டுமென்று என்னுடைய கட்சியின் சார்பில் வலியுறுத்தி நான் அமர்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, முதல்வரவர்களால் என்.ஜி. ஓக்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குறுதி மட்டுமல்ல, எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்களுக்கும் கொடுத்த வாக்குறுதியும் மீறப்பட்டிருக்கிறது என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எதிர்க்கட்சிகளின் தலைவர்களைப் பார்த்து முதலமைச்சரவர்கள், வெகு விரைவில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணுகின்ற வகையில் அரசின் சார்பில் அறிக்கை வெளியிடுவதற்கான முடிவு மேற்கொள்ளப்படும் என்று கூறிவிட்டு அதற்குமாறாக கடும் தண்டனை நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்கின்ற அறிக்கை நேற்றையதினம் வெளியிடப்பட்டு இன்று எல்லா ஏடுகளிலும் வானொலியிலும் வெளியிடப்பட்டு ஒலிபரப்பப்பட்டிருக்கின்றது.

தவறான கணக்குகள் என்.ஜி. ஓக்களுக்குத் தரப்படுகின்ற ஊதியங்களைப்பற்றித் தரப்படுகின்றன. முதலமைச்சர், 310 கோடி செலவழிக்கப்படுவதாகச் சொல்கிறார். என்.ஜி.ஓ. சங்கத்தின் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில் 212 கோடிதான்



என்று சொல்கிறார். காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசிய நண்பரவர்கள்கூட மத்திய சர்க்கார் இதற்கு உதவி செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். மத்திய சர்க்கார் உதவியிலும் நிதிக் கமிஷன் சார்பில் ''நான்-பிளானிங்'' எக்ஸ்பெண்டிச்சர்'' என்ற வகையில் திட்டம் சாராச் செலவுகளுக்காக நிதிக் கமிஷன் நாம் கூறுகின்ற தொகையில் 'கேப் விழும் தொகையைச் சரிக்கட்டக் கடமைப்பட்டிருக்கிறது. அதையும் நாம் பயன்படுத்தி என்.ஜி. ஓக்களுடைய கோரிக்கைகளைத் தீர்க்க முனைந்து முன் வரலாம். அதையும் ஏற்றுக்கொள்ள இந்த அரசு தயாராக இல்லை.

இப்படிப்பட்ட கடுமையான நிலைமைகள் நாட்டிலே ஏற்பட்டு, பத்திரிகைகளிலே வருகின்ற நேரத்தில் மிக நெருக்கடி, பயங்கரம் தமிழ்நாட்டிலே உருவாக இருக்கிறது என்ற திகில் நிறைந்த சூழ்நிலை இருக்கிற இந்த நிலைமையிலும்கூட இவைகளைப்பற்றி விவாதிக்க அல்லது கருத்துக்களை அறிவிக்க முதலமைச்சர் இந்த அவைக்கு வராமல் இருப்பதும் மற்றுமொரு வருந்தத்தக்க நிலையாகும் என்பதையும் எடுத்துக் கூறி, என்.ஜி.ஓக்களுக்கு மட்டுமல்லாமல் எதிர்க்கட்சிகளுக்குத் தந்த வாக்குறுதியும் மீறப்பட்டிருக்கின்ற காரணத்தால் எங்கள் கட்சியின் சார்பாக நாங்களும் வெளிநடப்பிலே ஈடுபடுகிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்).

(3) ஒத்திவைப்புத் தீர்மானம்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பதவி இறக்கம் செய்யப்பட்ட தமிழாசிரியர்களை மீண்டும் தமிழாசிரியர் பதவி புரிய வேண்டி தலைமைச் செயலகத்திற்கு முன்பு நடக்க இருக்கும் உண்ணா நோன்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம்.

''இராமநாதபுரம் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகத்தினால் இடப்பட்ட பதவி இறக்க ஆணையை நீக்கி, பதவி உயர்வு அளிக்கப்பட்ட நாளிலிருந்து பதவி இறக்கம் செய்யப்பட்ட 13 தமிழ் ஆசிரியர்களையும் தொடர்ந்து தமிழாசிரியர் பணி புரிய உடனடியாக ஆணையிட வேண்டி 6—3—1978 முதல் தலைமைச் செயலகத்திற்கு முன்பு உண்ணா நோன்பு இருக்க இருப்பதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று திரு. ஆர். கிருஷ்ணன், திரு. எம். அண்ணாமலை, திரு. என். பழனிவேல், திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. செ. சிவசாமி, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள்.

[1978 மார்ச் 8

[பேரவைத் தலைவர்]

இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்துச் சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணன், திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் இருக்கையில் இல்லை. ஆகவே, தள்ளப்படுகிறது.''

## (4) அமைச்சரின் அறிக்கைகள்.

**(அ) 9—1—78-ம் நாளன்று ஒரு துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடைக்கு உள்ளாட்சித்துறை அமைச்சரின் திருத்த அறிக்கை**

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரவர்கள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 82-ஏ (1) விதியின்கீழ் ஓர் அறிக்கை வெளியிடுவார்கள்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 82-ஏ(1) விதியின்கீழ் அவைக்கு ஓர் அறிக்கை அளிக்கின்றேன்.

9—1—1978 அன்று சட்டமன்ற குறுகிய கால வினா எண். 1 விடையளிக்கப்பட்டது. அப்போது உறுப்பினர் திரு. கிட்டப்பா வினால் எழுப்பப்பட்ட துணை வினா ஒன்றுக்கு விடையளிக்கையில் ஊராட்சி ஒன்றிய குழுக்களை அமைக்க வேண்டுமென்று கடந்த 29-ம் தேதி டிசம்பரில் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதே போல், நகராட்சி மன்றங்களுக்கும் இப்படி ஒரு குழு அமைக்க வேண்டுமென்றும் 31-ம் தேதி ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று கூறினேன். நகராட்சியைப் பொறுத்த அளவில் அரசு ஆணை 29—12—1977-ல் பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அது நிறுத்தி வைக்கப்பட்டு திருத்தப்பெற்ற ஆணையாக 8—2—1978-ல் பிறப்பிக்கப்பட்டது. இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## (5) கவன ஈர்ப்பு.

**முதுகுளத்தூர் தாலுகா, சாயல்குடி கிராமம், காந்திநகர், வி. வி. ஆர் காலனியில் வீடுகள் தீப்பற்றி எரிந்ததால் ஏற்பட்ட சேதம் குறித்து.**



1978 மார்ச் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, விதி 41-ன் கீழ் கவன ஈர்ப்பு. அறிவிப்பு கொடுத்த திரு. சோ. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை. திரு, ஆர். சி. சுப்பிரமணியம்,

திரு. ஆர். சி. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, ''முதுகுளத்தூர் தாலுகா, சாயல்குடி கிராமத்தைச் சேர்ந்த காந்தி நகர், வி.வி.ஆர். காலனியில் 26—2—1978 பகல் நேரத்தில் 100-க்கு மேற்பட்ட வீடுகள் தீப்பற்றி நாசமாகியதன் காரணமாக ரூபாய் 2 இலட்சம் சொத்து சேதம் ஏற்பட்டுள்ளது. அத்தனை பேர்களும் பனைமரத் தொழிலாளிகள் அவர்கள் வீடு இழந்து, உடைமைகள அனைத்தும் இழந்து நடுத்தெருவில் நிற்கின்ற நிலை குறித்து 'மாண்புமிகு நிதியமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டத்திலுள்ள சாயல்குடி கிராமத்தில் வி.வி.ஆர். காலனியில் 26—2—1978-ம் தேதி, பிற்பகல் சுமார் 1-45 மணிக்கு ஏற்பட்ட தீ விபத்தில் 64 கூரை வீடுகள் முற்றிலும் சேதமடைந்தன. முதுகுளத்தூர் வட்டாட்சியர் தீ விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டு, தீ விபத்து தற்செயலாக ஏற்பட்டது என்றும், உயிர்ச்சேதம் எதுவுமில்லை என்றும், பொருள் சேதத்தின் மதிப்பு ரூ. 19,170 இருக்கும் என்றும் அறிக்கை அனுப்பியுள்ளார். கால்நடைகள் சேதம் எதுவும் இல்லை. பரமக்குடியிலிருந்து தீயணைப்புப் படையினர் 26—2—1978-ம் தேதி பிற்பகல் 3-15 மணிக்கு வந்து தீயை அணைத்தார்கள்.

தீ விபத்தினால் வீடுகளை இழந்த 150 பேர்களும், மேற்படி ஊரிலுள்ள பள்ளிக்கூடத்திலும், பக்கத்திலுள்ள வீடுகளிலும் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் எல்லோரும் பனையேறிகள். அவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் உடனடியாக வழங்கப்பட்டன. நிலைமை அமைதியாக உள்ளது, ஒரு குடும்பத்திற்கு ரூ. 80 வீதம் ஆக ரூ. 5,120 உடனடியாக நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் ஒரு குடும்பத்திற்கு ஒரு வேட்டி, ஒரு சேலை வீதம் விநியோகிக்கப்பட்டுள்ளது. அவர்களுடைய வீடுகளைத் திரும்பக் கட்ட விரைவில் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஆர். சி. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, 26—2—1978 அன்று சாயல்குடியில் 64 வீடுகள் எரிந்து சாம்பலாகிவிட்டன. அந்தப் பகுதியில் தீயணைப்புப் படை, கிட்டத்தட்ட 30 மைலுக்கு அப்பாலிருக்கிறது. அங்கு தகவல் அனுப்பி, அவர்கள் தாமதமாக வந்த காரணத்தாலே, அந்தத் தீயை அணைக்க

முடியாமல் போய்விட்டது. அந்தச் சூழ்நிலையில் 64 வீடுகள் எரிந்த நிலையில், அந்தப் பனைமரத் தொழிலாளர்கள் வீடற்ற நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் குடியிருக்கக்கூடிய இடமானது, சாயல்குடி பனைமரத் தொழிலாளர் கூட்டுறவு சங்கத்திற்குச் சொந்தமான இடம். அவர்கள் அதை கிட்டத்தட்ட 7 வருடத்திற்கு முன்பு ரூ. 2,000-க்கு வாங்கியிருக்கிறார்கள். இன்றைக்கு 3 சென்ட் இடம், ரூ. 400 கொடுத்தால்தான் தரப்படும் என்று தொழிலாளர்களை வற்புறுத்துகிறார்கள். வீடு கட்டுவதற்கு ரூ. 400 கொடுத்து, நிலம் வாங்கக் கூடிய நிலையில் அவர்கள் இல்லை. ஆகவே, அந்த ஏழை ஜனங்களுடைய நன்மையைக் கருதி, நியாயமான விலையில் அந்த வீட்டு நிலங்களை அவர்களுக்கு ஜாரி செய்து கொடுக்க வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-40].

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சி. சுப்பிரமணியம் அவர்கள் தனது கருத்தைத் தெளிவாக எனக்கு எழுதி மனுவாகத் தருவார்களானால், அது குறித்து என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமோ அது பற்றி இந்த அரசு ஆராயும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## (6) 1978-79 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.

### (அ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் —

'' மானியக் கோரிக்கை எண் 10—பால்வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 84,68,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, நாடு முழுவதும் அதிகமான பால் உற்பத்தி சங்கங்கள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

'' மானியக் கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 84,68,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.



### (ஆ) கோரிக்கை எண் 20—வேளாண்மை.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

'' மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 39,32,56,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும். ''

திரு. ரா மார்க்கபந்து: தலைவர் அவர்களே. பயிர்பாதுகாப்பு இன்ஷூரன்ஸ் அமுலாக்கப்பட வேண்டியதின் அவசியம் குறித்து விவாதிக்க—

,,மானிய கோரிக்கை எண். 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,32,56,000/- இல் ரூ.100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

### (இ) கோரிக்கை எண்.50-வேளாண்மை குறித்த மூலதனச்செலவு

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு, என்ற தலைப்பின் கீழ் ரூ. 11,94,640'00-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு ஒதுக்கப்பட்ட மூலதனம் போதாது என்பதைப்பற்றி விவாதிக்க—

''மானியக் கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,94,64,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்கின்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளின் கொள்கை விளக்கப் புத்தகங்கள்* அச்சடித்து மாண்புமிகு உறுப்பினர்களுக்குக் கொடுக்

* 137, 159ம் பக்கங்களில் இணைப்புகள் II, III ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

கப்பட்டிருக்கின்றன. அவர்கள் அந்தக் கொள்கை விளக்கப் புத்தகங்களைப் படித்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். அவர்களுடைய மேலான கருத்துக்களை எல்லாம் கேட்ட பின்னல் நான் பதில் சொல்கிறேன். அதே நேரத்தில் இந்தக் கொள்கை விளக்கப் புத்தகங்களை எல்லாம் நான் படித்ததாக எடுத்துக் கொண்டு, அவற்றை குறிப்பேட்டில் ஏற்றுக் கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, வெட்டுப் பிரேரணையைப் பொறுத்தவரையில், குறிப்பாக ஒரு வெட்டுப் பிரேரணையை எடுத்துக்கொளள வேண்டும் என்று உறுப்பினர்கள் எழுதிக் கொடுத்தால் தான் முடியும் என்று சொல் கிறார்கள். சில நேரங்களில் அது சாத்திய ம் இல்லாமல் போய் விடுகிறது. அம்மாதிரி எழுதிக் கொடுக்காவிட்டால், உறுப்பின களை அந்த வெட்டுத் தீர்மானங்களைப் பற்றி பேசுவதற்கு அழைப் பதில்லை. ஆகவே, தயவுசெய்து கேட்டுக் கொள்கிறேன், அப்படி எழுதிக் கொடுக்காவிட்டாலும்—என் கட்சியைப் 'பொறுத்த வரையில் நான் ஒருவன்தான் இருக்கிறேன். நானே எழுதிக் கொடுக்க வேண்டும் என்பதால் அது சில நேரங்களில் முடிவது இல்லை—தாங்களே ஏதாவது ஒன்றைப் பற்றிப் பேசும்போது, அங்கத்தினரை அழைத்துப் பேசச் சொல்லலாம், எழுதிக் கொடுக்கத் தேவையில்லை என்று அறிவித்தால் நல்லது என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் எழுதிக் கொடுத்தால் தான் பரிசீலனை செய்ய முடியும். எழுதிக் கொடுக் காததைப் பற்றி எடுத்துக்கொள்ள முடியாது.

திரு. ரா. மார்க்கபந்து : பேரவைத் தலைவரவர்களே, இன்று விவாதத்துக்கு வைக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக் கைகள் ஒரு மனித வாழ்க்கையோடு சேர்ந்த ஒன்ருக இருக்கிறது. காரணம், தமிழகத்திலே—ஏன் இந்தியத் துணைக் கண்டத்திலேயே —மனித சமுதாயத்திற்கும், அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய பொருள்கள், நாட்டின் அரசாங்கத்திற்கு, அரசாங்கம் செய்யும் செயல்களுக்கு எல்லாம் எந்தெந்த பகுதியில், எந்தெந்த நாட்டு மக்களுக்குப் பயன் கிடைக்க வேண்டும் என்ற வகையில் பொரு ளாதாரத் திட்டங்களைத் தீட்டி அதன் அடிப்படையில் நாம் திட்டங்களைப் போடுகிறோம். அதற்கான மானியக் கோரிக்கை களை எல்லாம் இங்கே கொண்டு வருகிறோம்.

நான் சென்ற முறை பேசுகிறபோது கூடச் சொன்னேன் குறிப்பாக பெரும் பெரும் தொழில்களை ஏற்படுத்துவதன் மூல தனிப்பட்ட நபர்களுக்கு வாய்ப்புகள் தர முடியாத நி





இருக்கிறது. ஒரு சிறு தொழிலாக இருந்தால், அங்கே சாதாரண மாக 1,000—500 பேர்களுக்குத்தான் வேலை அளிக்கும் நிலைமை இருக்கிறது.

இன்றைக்கு, வேலை இல்லாத நிலைமை, வேலையில்லாத் திண் டாட்டம் என்று நாட்டிலே பிரச்னைகள் தலைவிரித்தாடிக்கொண்டு இருக்கிற நேரத்தில், படித்த இளைஞர்கள் முதல் பாமர மக்கள் இருக்கிற நேரத்தில் வேலை இல்லை என்று கூச்சல் போட்டுக் கொண் டுதற்கொண்டு வேலை இல்லை என்று கூச்சல் போட்டுக் கொண் டிருக்கிற நேரத்தில், அவைகளையெல்லாம் நாம் நீக்க வேண்டும் என்று சொன்னல், இந்த பால் வழங்கு திட்டத்தின் மூலமாக அதைச் செய்ய முடியும், அந்த வகையில் இந்த நாட்டு முன்னேற் றத்தில், அந்தப் பிரச்னைகளைத் தீர்ப்பதில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிகப்பெரும் பொறுப்பு இந்த நாட்டிலே இருக் கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, பால் வழங்கு திட்டத்திற்காக அதிகமான முக்கியத்துவம் தந்து, அதிகமான மானியத்தையும் ஒதுக்கித் தருவது நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அந்தப் பாலின் வளத்தையும் பாலையும் பற்றிச் சொல்லும் போது, "It contains all sorts of vitamins" என்று சொல்வார்கள்.

ஆகவே, ஒரு மனிதனின் வாழ்க்கைக்கு மிக மிகத் தேவையான ஒன்று பால். ஆகவே, அதை நாம் அதிகமான அளவிற்கு பெருக்கித் தருவது சிறப்பாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

விதவைகளுக்கு, மகளிருக்கு வேலைவாய்ப்புத் தரவேண்டும் என்று சொன்னார்கள். அதிகமான வேலை வாய்ப்பு இல்லாத வர்களுக்கு வேலை வாய்ப்புத் தரும் முறையில் இந்தப் பால் வளத் துறை இருக்கிறது. ஆகவே, இதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எந்தெந்தப் பகுதியில் பால் வழங்குவதற்குச் சங்கங்கள் இல்லையோ அங்கெல்லாம் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும். கறவை மாடுகள் எங்கெல்லாம் அதிகமாக இருக்கிறதோ அந்தப் பகுதிகளிலும் பால் வழங்கு திட்டங்கள், அந்த சொசைடிகள் ஆரம்பிக்கச் செய்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று தெரி வித்துக் கொள்கிறேன். நான் கூட பல முறை பல மனுக்கள் கொடுத்து இருக்கிறேன். எந்தெந்தப் பகுதியில் பால் சொசைடிகள் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டு இருக்கிறேன் சில கவனிக்கப்பட்டன. சிலவற்றை அனுமதிக்கவில்லை.

இதற்கான காரணங்களைச் சொல்கையில் ஒன்றைச் சொல் கிறார்கள். அதிகமான பால் உற்பத்தி செய்யப்பட்டால், செல வுக்குக் கஷ்டம் இருக்கும் என்பதால் சொசைடிகள் அதிகமாக

[திரு. ரா. மார்க்கபந்து] [8 மார்ச் 1978

ஆக்காமல் இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால், நான் ஒன்று சொல்வேன், எந்த அளவுக்கு ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கிறவர்கள் பால் உற்பத்தி செய்கிறார்களோ, அவர்கள் தேவைக்குப்போக மிகுதியை அரசாங்கம் வாங்கிக் கொள்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். அந்தப் பகுதிகளில் சொசைடிகளை ஆரம்பிக்கவேண்டும். அப்படி எந்தெந்தப் பகுதிகளில் கேட்கிறார்களோ அந்தந்தப் பகுதிகளில் சொசைடிகள் ஆரம்பிக்க வேண்டிய ஒரு முயற்சியினை இந்த அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அதிகமாகப் பால் உற்பத்தி செய்யப்படுமானால், அவைகளைப் பால் பவுடர் ஆக்குவதன் மூலமும், மற்றும் பேபி புட் போன்றவை தயாரிப்பதன் மூலமாகவும் சரியான வகையில் பயன்படுத்திக் கொள்ள முடியும். ஆகவே, அந்த வகையில் தமிழக அரசு முயற்சிகளையும், நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10–50]

தமிழ் நாட்டை பொறுத்த மட்டிலும் பால் பௌடர் தொழிற்சாலை இருக்கிறதா என்றால், இல்லை. அல்லது பேபி புட் தயாரிக்கின்ற வேறு தொழிற்சாலை ஏதாவது இருக்கிறதா என்றால், இல்லை என்றுதான் எனக்குத் தெரிந்தவரை இருக்கிறது. ஆகையால் இந்தக் குறைகளைப் போக்குகின்ற வகையில் பால் பௌடர் தொழிற்சாலையை தமிழ்நாட்டில் நிறுவுவதன் மூலம் நமக்கு மட்டுமல்ல, இந்த நாட்டில் இருக்கிற அனைவருக்கும் உதவி செய்தவர்கள் ஆவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் பால் வழங்கு துறையிலிருந்து புட் அடல்ட்ரேஷன் ஆக்ட்' என்ற சட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். அதை சரியான முறையில் செயல்படுத்த வேண்டும். பாலை தண்ணீரில் கலக்கிறார்கள். அதன் மூலம் கொழுப்புச் சத்து இல்லாமல் செய்கிறார்கள். அதன் காரணமாகப் பல வழக்குகள் இன்றைக்கு கோர்ட்டிலே இருக்கிறது. இந்த கலப்படம் தடுக்கப்பட வேண்டும் என்றால் தனிப்பட்ட வியாபாரிகள் பாலை விநியோகம் செய்வதைத் தடுத்து நிறுத்தி, அதை அரசாங்கமே ஏற்று, சுத்தமான பாலை மக்களுக்குத் தரவேண்டும்.

நான் எஸ்டிமேட் கமிட்டி உறுப்பினர் என்ற முறையில் பம்பாய்க்குச் சென்றிருந்தேன். அங்கே, ஆரே பால் பண்ணை என்ற நிறுவனத்திற்கு சென்றபோது அங்கு பாலைப் பதபப்டுத்தும் விதம் பற்றிக்காட்டினார்கள். அங்கே பம்பாய் சிட்டிக்குத்தேவை 14,000 லிட்டர் பாலில் பாதியை அதாவது 7,000 லிட்டர் பாலைத் தயார் செய்கிறார்கள் மற்றவை வெளியே வாங்குகிறார்கள். அதைப் போல இங்கும் நிலைமைகளை உருவாக்க வேண்டும்.



8 மார்ச் 1978]

நமக்குத் தேவையான பாலை அரசாங்கமே உற்பத்தி செய்து, சுத்தமான பாலாக விநியோகம் செய்ய வேண்டும். தனியார் விநியோக முறையைத் தடுக்க வேண்டும். குழந்தைகள் உணவு சத்துள்ள பால் எல்லாம் அரசாங்கமே தயாரித்து, வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தின்போது அமைச்சர் இராசுவானந்தம் அவர்கள் * * *– என்று கூறியதிலிருந்து, அதை ஒட்டியிருக்கிற, அந்த கருத்து வெளிப்படுகிற வார்த்தைகள் எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பெற வேண்டும் என்று நான் உத்தரவிடுகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : இந்த விவாதம் முழுவதையுமா ? அதில்எதிர்கட்சித் தலைவர் பேசியதும் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை ஒட்டிய கருத்துக்கள் எல்லாம் நீக்கப்படும்.

திரு. ரா. மார்க்கபந்து : நான் இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதிகாரிகள் யாரும் அதைத் தவறாகக் கருத வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1940, 1947-ஆம் ஆண்டிலிருந்தே தமிழ் நாட்டிலே தந்தை பெரியார் அவர்கள் தாயகத்திற்குச் சொந்த மானவர்களுக்கே வேலைவாய்ப்பு தரவேண்டுமென்று தீவிரமாக வலியுறுத்தி வந்தார்கள். அது கடைபிடிக்கப்பட்டு வந்து, குடியரசுத் தலைவர் ஆட்சி காலத்தில் மாற்றப்பட்டிருக்கிறது. இந்தத் துறையிலே இருக்கிற மேல் பொறுப்பில் இருக்கிறவர்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அந்தக் குறிப்பிட்ட இனத்தைப்பற்றிச் சொலலும் போது அதிகாரிகள் தவறாகக் கருதக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே இருக்கிற மானேஜிங் டைரக்டர், சீனியர் மானேஜர் (பிளானிங்) சீனியர் மானேஜர் ( பினான்ஸ்), ஜெனரல் மானேஜர், அம்பத்தூர், ஜெனரல் மானேஜர், மதுரை. போர்டு ஆஃப் டைரக்டர்ஸ் இவர்கள் எல்லாம் எந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்று சற்று கவனிக்க வேண்டும். காரணம், இந்த பால் விநியோகத் துறையிலே அவர்களுக்கு கீழே வேலை செய்கிற சிப்பந்திகளை நியமிப்பதும், நீக்குவதும் அவர்கள் கையில் இருக்கிறது. அந்த அந்த அதிகாரிகள் ஆட்களை நியமிக்கும்போது பாரபட்சம் காட்டுகிறார்கள். யார் யாருக்கு உண்மையிலே வாய்ப்பு கிடைக்க வேண்டுமோ அவர்களுக்கு கிடைக்காமல் பபாய்விடுகிறது. இந்த மாறி நிலை கீழ் நிலைகளில் வேலைசெய்கின்றவர்களுக்கு ஒரு பாதுகாப்பு ஏற்பட வேண்டும்.

* மாண்புமிகு பேரவத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்!

[திரு. ரா. மார்க்கப்பந்து] [1978 மார்ச் 8

டெம்பரரி ஊழியர்களும் அங்கே வேலை செய்கிறார்கள்.
2, 3 மாதம் வேலை செய்கிறார்கள், அப்போதே அவர்கள் தங்கள்
நம்பிக்கைக்கு பாத்திரமாக இல்லை என்று தெரிந்தால் உடனே
அவர்களை ப்பதவியிலிருந்து நீக்கி விடுகிறார்கள். அவர்களை இப்படி
நீக்குவதற்கு அதிகாரம் படைத்தவர்களாக இருப்பதால் பல
ஊழியர்கள் அங்கே பழிவாங்கப்படுகிறார்கள். பழிவாங்கும் எண்
ணத்தோடு பலர் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அப்படி
வெளியேற்றப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலைக்கு வரக்கூடிய
வாய்ப்பு இல்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் இருப்பதால் இந்
- ஹைரார்க்கி ஆஃப் அபிஷியல்ஸ்' முறையில் மாற்றங்கள்
தேவை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

காரணம், அவர்கள் அந்தத் தொழில் பற்றி கொஞ்சமாவது
தெரிந்த வர்களாக இருந்தால் இப்படி செய்ய மாட்டார்கள்.
கொஞ்சமாவது இதிலே ஏற்படுகின்ற கஷ்டங்களைப் பற்றி தெரிந்த
வர்களாக இருந்தால் இந்த அளவுக்கு தங்கள் இஷ்டம்போல்
கீழ்நிலைப் பணியாளர்களை நீக்க மாட்டார்கள். நடைமுறையில்
இருக்கிற கஷ்டங்களை உணர்ந்து அவர்களுக்கு பாதுகாப்பு தரு
வதற்கு இந்த -ஹைரார்க்கி ஆஃப் அஃபிஷியல்ஸ்' என்பதிலே
நீங்கள் மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

போர்ட் ஆப் டைரக்டர்ஸ் என்று வைத்திருக்கிறார்கள்.
தப் பால் உற்பத்தியாளர்களுடைய பிரதிநிதிகள் அந்
வகிக்கவில்லை. காரணம், பால் உற்பத்தி செய்கின்றவர்கள் அங்கம்
கம் வகிப்பார்களேயானால் தான் அவர்களுக்கு அந்தப் பாலை
ப்ரொட்யூஸ் செய்வதிலும், விற்பனை செய்வதிலும் இருக்கின்ற
கஷ்ட நஷ்டங்களை உணர்ந்து அதற்கான முறைகளைப் பற்றி
அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லவும், அதற்கு வேண்டிய ஒரு
பரிகாரத்தைத் தேடிக் கொள்ளவும் வசதியாக இருக்கும். ஆகை
யால் பால் உற்ப்பத்தியாளர்களுடைய பிரதிநிதிகளை போர்ட் ஆப்
டைரக்டர்ஸ்—இல் அங்கம் வகிக்கும் வகையில் நிச்சயமாக ஏற்
படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் பி. வி. எஸ். ஸி. படித்தவர்கள் வேட்டர்னரி
சர்ஜன்களாக அந்த நிறுவனங்களின் பணியாற்றி வக்கிறார்கள்
ஒரு இன்சென்ட்டிவ் இல்லாத காரணத்தால் அவர்கள் அடிக்கடி
அவைகளை விட்டு வெளியேறி விடுகிறார்கள். ஆகவே இப்போது
துள்ள நிலைமையில் ஜாப் செக்யூரிட்டி இல்லாத நிலைமை இருக்கிறது
அப்படிப்பட்ட பி. வி. எஸ். ஸி. பட்டதாரிகளுக்கு அவர்கள்
பணியாற்றுவதற்கு அவர்களுக்கு ஜாப் செக்யூரிட்டியை ஏற்
படுத்திக் கொடுக்க வேண்டும்மென்று கெட்டுக் கொள்கிறேன்.



1978 மார்ச் 8] [திரு. ரா. மார்க்கப்பந்து]

குறிப்பாக , பீடர் டெய்ரியைப் பற்றிச் சென்ற முறை நான்
சொன்னேன். நானும் நண்பர் லத்தீப் அவர்களும் இதை எங்கள்
அவர்களுக்குபதவிஉயர்வு கிடைக்கவழியில்லை அவர்களுக்கு அவ்வாறு
பகுதியில் வைக்க வேண்டுமென்று எத்தனையோ முறை கேட்டுக்
கொண்டோம். வட ஆற்காடு மாவட்டத்தில் ஜோலார்ப் பேட்
டையில் இந்த பீடர் டெயரியை ஏற்ப்படுத்த வேண்டுமென்று
கேட்டுக் கொண்டோம். அங்கே இரயில் போக்குவரத்து வசதி
இருக்கிறது. பஸ் போக்குவரத்து வசதி இருக்கிறது. இவ்வளவு
வசதிகள் இருந்தும் இதையெல்லாம் விட்டுவிட்டு எந்த காரணத்
தாலோ அதை மற்ற மாவட்டத்திற்கு மாற்றினார்கள் என்பதை
வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். என்ன காரணத்
திற்காக இங்கிருந்து மாற்றப்பட்டது. என்பதை நான்
அமைச்சரவர்களிடம் இருந்து அறிய விரும்புகிகிறேன்.

அதே நேரத்தில் எங்கள் வட ஆற்காடு மாவட்டத்திற்கென்று
ஒதுக்கியதை மாற்ற வேண்டிய அவசியம் என்ன வந்தது என்று
கேட்கிறேன். எங்கள் மாவட்டத்திற்கு இது கண்டிப்பாகத்
தேவை. அழுகின்ற பிள்ளைதான் பால் குடிக்கும். அந்த முறை
யில் தான் நாங்கள் அழுகிறோம். மற்ற மாவட்டத்திற்குக்
கொண்டு போனதைப்பற்றி எங்களுக்கு ஒன்றும் இல்லை. ஆனால்
எங்கள் வட ஆற்காடு மாவட்டத்திற்கு இது தேவை. அதே
போன்றுதான் சில்லிங் சென்டர் ஒன்றை ஜவ்வாது மலையில்
ஏற்படுத்த வேண்டும். அது கூல் அட்மாஸ் ஃபையர் உள்ள இடம்.
அங்கு அதை ஏற்படுத்துவது கைவிடப்பட்ட நிலையில் இருக்கிறது.
ஆகவே, இந்த மலைவாழ் பகுதியிலுள்ள பழங்குடி மக்களுக்கு
உதவுகின்ற முறையில் ஜவ்வாது மலையில் சில்லிங் சென்டர்,
ஃபீடர் டெய்ரி இவைகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதே நேரத்தில், பால் உற்பத்தியாளர்களுக்குக் கட்டுப்படி
யாகக்கூடிய விலை கிடைக்கின்ற முறையில் அரசாங்கமே எடுத்துக்
கொள்ளும் முறையை வகுக்க வேண்டும். சில வறட்சியான
காலங்களில் அவைகளுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் இல்
லாத வேதனையான நிலைமை இருக்கிறது. அவைகளை எல்லாம்
சரியான முறையில் நிவர்த்தி செய்து குறைந்த விலையில் கிடைப்
பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்தபடியாக, வேளாண்மைத் துறை அமைச்சர் இந்தச்
சபையில் ஒரு இனிப்பான செய்தியை இந்த நாட்டுக்கு அளித்தார்.
அது என்னவென்று சொன்னால் விவசாயிகள் ஈடுபட்டுள்ள விவ
சாயத்திற்கு பாதுகாப்புப் இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமல் நடத்து
வேன் என்று சொன்னார். 1974-ஆம் ஆண்டு பாட்டுவில் ஒரு
மாநாட்டில் நான் கலந்துகொண்டு பேசினேன். அப்போது
தமிழ்நாட்டிலும் சரி, இந்தியாவிலும் சரி இருக்கின்ற

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 மார்ச் 8

விவசாயிகளுக்கு சட்டப்படி பாதுகாப்பு தரப்படுகின்ற நிலைமை இருக்க வேண்டும் என்று பேசினேன். சாதாரணமாக ஒரு பஸ் முதலாளி ஒரு லட்சம் ரூபாய் மூலதனம் போட்டு பஸ் வாங்கி ஓட்டிக்கொண்டு அதன் மூலம் நாள் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வருமானம் அடைகிறார்.

(முற்பகல் 11—00)

அது உடைந்துவிட்டால் நஷ்டயீடு தரப்படுகிறது. தொழிற் சாலை வைத்திருந்தால் அல்லது எந்தத் தொழிலில் ஈடுபட்டிருந் தாலும் அவற்றில் போடப்பட்டுள்ள மூலதனத்திற்குக் குந்தகம் இல்லாத அளவில் அவர்களுக்கு நஷ்டயீடு தரப்படுகிறது. ஆனால் பயிரை நம்பியிருக்கிற விவசாயிகளை எடுத்துக் கொண்டால், வீட்டில் இருக்கிற அனைவரும் நிலத்தில் உழைத்து அதிலிருந்து வருகிற வருமானத்தை வைத்துத்தான், ஆறு மாத காலத்திற்குப் பின்னால், அறுவடை ஆக்கப்பட்டு அந்த அறுவடை வீட்டுக்கு வந்த பின்னால்தான் நல்லது செய்ய முடியும் என்று நினைத்துக் கொண்டிருக்கிற விவசாயிகளை எடுத்துக்கொண்டால் மழை காரண மாகப் பயிர் அழிந்து விட்டால் அல்லது பூச்சித் தொல்லை காரண மாகப் பயிர் அழிந்துவிட்டால் கைக்கு வருகிற சோறு வாய்க்கு எட்டாத வகையில் குழந்தை குட்டிகளோடு வயிற்றில் ஈரத் துணியைக் கட்டிக்கொண்டு கிடக்கும் கோரக் காட்சியைதான் காண முடியும். அந்தக் கோரத்தைப் பார்த்து என்ன என்று கேட்க நாட்டில் நாதி இல்லை என்ற ஒரு நிலை இருக்கிறது.

விவசாயத்தை நம்பியிருக்கிற, விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற கோடிக்கணக்கான மக்களுக்குப் பாதுகாப்பு இருக்கவேண்டும். அவர்கள் துயர் துடைக்கப் படவேண்டும் என்று பாட்னா மாநாட் டில் இப் பிரச்னையை வைத்து விவாதித்தோம். எங்கள் கட்சியின் முதுகெலும்பான கொள்கையே விவசாய முன்னேற்றம்தான் அதைப்பற்றித்தான் நாங்கள் தமிழ்நாடு எங்கிலும் சொல்லி அதற்காகப் பாடுபட்டும் வருகிறோம். அண்ணா திராவிட முன் னேற்றக் கழக அரசு ஆட்சிப் பொறுப்பேற்றபோது பயிர் பாது காப்பு இன்ஷூரன்ஸ் திட்டத்தை அமலாக்குவோம் என்று சொன் னார்கள். அதை நாங்கள் மனதார உரவேற்றோம், பாராட்டினோம். ஆனால் இதுவரைஅது அமுலுக்குக் கொண்டுவரப்படவில்லையென்ற நிலை இருக்கும் போது நான் இந்த அரசைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். இந்த நாட்டில் எல்லாத் தரப்பட்ட உழைக்கிற வர்க்கத்திற்கும் பாதுகாப்பு தரப்பட்டிருக்கிறது. ஆனால் விவசாயி களுக்கு மட்டும் பாதுகாப்பு இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இந்தப் பாதுகாப்பைத் தருவதற்கு இந்த அரசு முன் நிற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் கை முடங்கி விட்டால் நாடே முடங்கிவிடும் என்று சொல்வார்கள். ஆகவே விவசாயிகளின் கையை முடக்கி விடாதீர்கள். நாட்டில் விவசாயிகள் வளம் பெற்றால்தான்



[திரு. ரா. மார்க்கபந்து.]

1978 மார்ச் 8]

நாடு வளம் பெறும், நாடு செழிக்கும். ஆகவே நாட்டின் நலத்தைப் பெருக்க வேண்டுமென்றால் விவசாயிகளை அரசாங்கம் தனது முதல்பிள்ளைகளாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

விவசாயிகள் பிரச்னை என்பது நாடு தழுவிய பிரச்னையாகும். இப்போது என்.ஜீ.ஓ.-க்கள் போராட்டம் நடத்துகிறார்கள். ரூ. 300. ரூ. 400 சம்பளம் வாங்குபவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை, ரூ. 10, ரூ. 15 வேண்டும் என்று கேட்கிறார்கள். கேட் பதில் தவறு இல்லை. ஆனால் பசித்த உள்ளங்கள் நாட்டில் இருக்கின்றனவே, அந்தப் பசித்த உள்ளங்களுக்கு, பசிக்கொடுமை யினால் வாடிக் கொண்டிருக்கிற ஏழை விவசாயிகளுக்கு என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள் ? திருநெல்வேலி மாவட்டத்தில் பசிக் கொடுமை காரணமாக விஷக் கிழங்குகளை உண்டு செத்தவர் கள் எவ்வளவு பேர்கள் ? கிழங்கைப் பிடுங்கிச் சாப்பிட்டு, மற்றவற்றைச் சாப்பிட்டு மடிந்தவர்கள் எத்தனை பேர்கள் ? ஆக, விவசாய மக்களுக்குப் பாதுகாப்பு இல்லை.

பசுமைப் புரட்சி என்று சொல்கிறோம். சென்ற முறை கூட நான் சொன்னேன். நீர் வளம் குறைவாக இருக்கிறது, ஆகவே, அதிக உற்பத்தி செய்ய பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புத் தரமாட்டோம் என்று சொல்கிறார்கள். ஆனால் பணம் படைத்தவர்கள், செல்வம் படைத்தவர்கள், ஒரு கிணற்றுக்குப் பக்கத்தில் பத்து பதினைந்து அடி தூரத்தில் இன்னொரு கிணறு வைத்து பம்ப் செட்டை மாற்றிவிடுகிறார்கள். இல்லையென்றால், ஆயில் என்ஜின் வைத்து தண்ணீரை வெளியேற்றுகிறார்கள்.

ஆனால் பஞ்சை பராரியாக இருக்கிற அரை ஏக்கர் ஒரு ஏக்கர் என்று வைத்திருப்பவர்கள், அதையே நம்பி வாழ்பவர்கள், தங்கள் நிலத்தில் பயிரிட வேண்டுமென்றால், அதற்காக பம்ப் செட்டு களுக்கு மின் இணைப்பு வேண்டும் என்று கேட்டால் க்ளியரன்ஸ் சர்டிபிகேட், சான்றிதழ் வாங்க வேண்டியிருக்கிறது. மின் இணைப்புத் தரமறுக்கப்படுகிறது. நான் வழக்கறிஞராகப் பணி யாற்றுகிற காரணத்தால், ஐந்தாறு ஆண்டுகளாகப் பார்க்கிறேன். அரசாங்க லாண்ட் டெவலப்மெண்ட் பேங்கில் கடன் வாங்கு கிறார்கள். வாங்கி பம்ப் செட் வாங்கி வைத்துக் கொள்கிறார்கள். ஆனால் மின் இணைப்புக் கிடைப்பதில்லை. வாங்கிய கடனைத் திருப் பிச்செலுத்த முடியவில்லை, திருப்பிச் செலுத்தாத காரணத்தால் பம்ப் செட் ஏலத்திற்கு வருகிறது. இளிச்சவாயனாக தமிழகத் தில் விவசாயிகள் தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதப் பாதுகாப்பும் இல்லை.

சென்ற தேர்தல் காலத்தில் நான் பல கிராமங்களுக்குச் சென்றிருந்தேன். அரிசன மக்கள் வசிக்கின்ற இடத்தில், அவர்கள் எல்லாம் ஆண்டான் அடிமை என்ற முறையிலே பல இடங்களிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள்

[திரு. ரா. மார்க்கபந்து] [1978 மார்ச் 8

செய்கின்ற வேலைக்குத் தகுந்த கூலி பெறுவதில்லை. கிடைக்கின்ற கூலியைக் கொண்டு வாழ வேண்டும். கூலி கிடைக்காத நாட்களில், வயிற்றில் ஈரத்துணியைப் போட்டுக்கொண்டு வாழக் கூடிய நிலைதான் இருந்துவருகிறது. அங்கே என்னை எதிர்த்துப் போட்டியிட்ட பண முதலையாக இருந்தவர், அவர்களோடு சேர்ந்தவர்கள் சொன்னார்கள், எங்களுக்கு ஓட்டுப் போடவில்லை என்று சொன்னால், அரசாங்கம் கொடுக்கின்ற கூலியைக் கொடுக்க மாட்டோம் என்றும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கு ஓட்டு போட்டால், உங்களுக்கு கூலியும் கிடையாது, கட்டியிருக்கின்ற புடவையும் மாட்டோம் என்று சொல்லக்கூடிய நிலைமைக்கு அதிகார வர்க்கங்கள் செயல்பட்டுக் கொண்டிருந்தன.

எத்தனையோ சட்டங்கள் போடுகிறோம், ஆனால் அவை எல்லாம் அமுலுக்கு வருகிறதா என்று பார்த்தால், பல சட்டங்களும் அமுலுக்கு வருவதில்லை. அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதையும் நாம் பார்க்க வேண்டும். இப்படிப் போடுகின்ற சட்டங்கள் எல்லாம் அமுலுக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, நான் சென்ற முறை வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் கேட்டுக்கொண்டேன், அதாவது விவசாய இலாகாவை நம்பி, விவசாயி, கரும்பைப் பயிரிடுகிறான். ஆனால், வெல்லத்திற்குப் போதிய அளவில் விலை இல்லை. ஆனால் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகின்ற பொருட்களுக்கு எல்லாம் சரியான விலை கிடைக்கவில்லை என்றால் அவற்றை ஸ்டாக் வைக்கின்ற நிலைமையில், சேமித்து வைத்துக் கொள்கின்ற நிலைமையில் உற்பத்திப் பொருட்களை வைத்து, பின்னால் அதிகமான விலை வரும்போது விற்கக் கூடிய வசதி அவர்களுக்கு இருக்கிறது. ஆனால், விவசாயி உற்பத்தி செய்கின்ற வெல்லத்திற்கு அந்த நிலைமை இல்லை. கரும்பை அறுவடை செய்து வைத்திருக்க முடியாமலும், வெல்லத்தைத் தயார் செய்து கொண்டிருக்கின்ற நேரத்தில், வெல்லத்திற்கு நல்ல விலை கிடைக்காமல், குறைந்த விலைக்கு கொடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். இந்த நிலைமையை மாற்ற அரசாங்கமே இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, அரசாங்கமே கொள்முதல் செய்து விவசாயிகளைப் பாதுகாக்க ஆவன செய்யவேண்டும் என்று நான் விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன். அதற்கான கொள்முதல் ஆபீஸ்களை, அதாவது ப்ரொக்யூர்மெண்ட் ஆபீஸ்களைத் திறக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்றுதான் மார்க்கட்டிங் சொஸைட்டி இருக்கிறது. அங்கே அதிகாரிகள் விவசாயிகளை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக திருவண்ணாமலையில் நடந்ததைப்பற்றி அமைச்சர் அவர்களிடம் புகார் மனு ஒன்றைக் கொடுத்தேன்.



1978 மார்ச் 8] [ருதி. ரா. மார்க்கபந்து.]

திருவண்ணாமலையில் கொடுக்கப்பட்ட கடலைக்காய் கணக்கில் வந்திருக்கிறது. ஆனால் ஸ்டாக்கில் வந்திருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. இதைப்பற்றி புகார் கொடுத்து 3 மாதங்கள் ஆகின்றன. இதைப்பற்றி விசாரித்து அனுப்புமாறு இங்கேயிருந்து அமைச்சர் அபீசிலிருந்து அனுப்பியும் அங்கேயிருக்கின்ற அதிகாரிகள் இதுவரை எந்தவிதமான தகவலையும் சொல்லவில்லை என்று சொன்னால் இந்த ஆட்சியை, அமைச்சர்களை இந்த அதிகாரிகள் எந்த அளவுக்கு அடக்கிக்கொண்டிருக்கிறார்கள், எந்த அளவுக்கு இவர்கள் வேலை வாங்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் பார்க்க வேண்டும். இத்தனை நாட்களுக்குள் விசாரித்து குறிப்புத் தரவேண்டும் என்று சொல்லி அனுப்பி இன்னும் ரிப்போர்ட் தரவில்லை என்று சொன்னால், இந்த அரசாங்கம் அதிகாரிகளுடைய கைப்பாவையாக இருந்து கொண்டிருக்கிறது என்றுதான் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

எந்தெந்த காலத்திலும் அரசாங்கத்தை அதிகாரிகளின் கைப்பாவையாக வைத்துக்கொண்டிருக்கலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தால், அதை எப்படிப் பொறுத்துக்கொண்டிருக்க முடியும், ஒரு சாதாரண விவசாயினுடைய மனு எந்தவிதத்திலும் கவனிக்கப்படாமல் Redetapism is prevalent at all levels என்று சொல்லுகின்ற அளவுக்கு தேக்கமான நிலையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போன்று மற்றவர்களுக்கு வேலையில்லாத நேரத்தில் வேறு வேலைகள் கிடைக்கின்றன. ஆனால் விவசாயக் கூலிகளுக்கு வேலையில்லாத நேரத்தில் வேலை கிடைக்கும் என்ற உத்தரவாதத்தைக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மேலும் பல கருத்துக்களைக்கூற வாய்ப்பு இல்லாத காரணத்தால் இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11–10].

திரு. வெ. கருணாமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின்மீது, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கலந்த வணக்கத்தை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையை நான் ஆதரித்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

மாண்புமிகு முதல் அமைச்சர், புரட்சித்தலைவர் அவர்கள் இந்த வேளாண்மைப் பெருங்குடி மக்களின் மீது எவ்வளவு பற்றும், பாசமும் வைத்துள்ளார்கள் என்பதற்கு ஒரு சில உதாரணங்களைச் சுட்டிக்காட்ட நான் விரும்புகிறேன்.

[திரு. வெ. கருணமூர்த்தி] [1978 மார்ச் 8

சென்ற ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் கர்நாடக மாநில அரசோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி, காவிரியிலே தண்ணீர் கொண்டு வந்து, குறுவை சாகுபடிக்கு உதவியது மிகவும் பாராட்டுவதற்குரிய ஒன்றாகும். அதே போல் மின் கட்டணத்தை 16 பைசாவிலிருந்து 14 பைசாவாகக் குறைத்ததும் பாராட்டுதற்குரியதாகும். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், இன்றையதினம் விவசாயிகளுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கின்றவர்கள், அன்றையத் தினம் மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று அவர்கள் ஆட்சிக் காலத்திலே கோரிக்கைகள் விடுத்தபோது, ஐயம்பாளையத்திலும், பெருமாநல்லூரிலும் 42 பேர்களைச் சுட்டுத் தள்ளியதையும், இன்றையத்தினம் அதே விவசாயிகளுக்காகத் தாங்கள் பரிதாப வார்த்தைகளை சொல்லுவதும் விவசாயிகளை முன்னேற்றுவதுதான் எங்கள் கொள்கை, எங்கள் கடமை என்று கூறுகின்றவர்களைப் பார்த்து நான் உள்ளபடியே மிகவும் வேதனைப்படுகிறேன் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒரு சில சலுகைகளை இந்த அரசு அறிவித்துள்ளது பாராட்டுதற்குரிய ஒன்றாகும். சிறு விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இலவசமாக விதைகள் வழங்கியிருக்கிறார்கள். அதுபோல் தாளடிப் பயிர்களுக்கு உரங்களும், சம்பாப் பயிருக்கு மேல் உரத்திற்கு 25 சதவிகிதம் மானியம் வழங்கி, பாதுகாப்பு மருந்துக்காக 25 சதவிகிதம் மானியம் வழங்கியிருக்கிறார்கள். அதேபோல் மண் மேடிட்டு இருக்கக்கூடிய நிலங்களை சிறு விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் இலவசமாகவும், ஏனைய விவசாயிகளுக்கு 50 சதவிகிதம் மானியமாகவும் செலவிட்டு நிலங்களைச் செப்பனிட்டுத் தந்துள்ளமை பாராட்டுவதற்குரிய ஒன்றாகும்.

1975–76-லே இருந்ததைவிட, இந்தக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு கொள்முதல் அதிகமாகி உள்ளதும், அதேபோல் உற்பத்தி அதிகமாகி உள்ளதும் பாராட்டுதற்குரியதாகும். அதேபோல், மண்வள ஆராய்ச்சிக் கூடத்தை அனைத்து மாவட்டங்களிலும் துவக்க உள்ளதும் பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

1977–78 ஆம் ஆண்டு உரங்கள் அதிகமாக விற்பனையாகி இருக்கிறது. அதேசமயம் அதன் விலையை டன்னுக்கு 10 ரூபாய் குறைத்திருப்பதும் மிகவும் பாராட்டுதற்குரிய ஒன்றாகும்.

இதுபோன்ற திட்டங்களைப் பார்க்கின்றபோது, விவசாயிகள் மீது இந்த அரசு கொண்டுள்ள பற்று வெளிப்படுகிறது. எனவே, இதுபோன்ற சலுகைகள் வழங்கியிருப்பது பாராட்டுதற்குரிய ஒன்றாகும் என்பதை நான் ஆணித்தரமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்றால் இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஒரு சிலர் இந்த நிதி நிலை அறிக்கையிலே புரட்சிகர



மார்ச் 8] [திரு. வெ. கருணமூர்த்தி]

வறட்சிதான் இருக்கின்றது
மான திட்டங்கள் எதுவும் இல்லை, அதற்காகத்தான் இந்தக் கருத்துக்களை
என்று கூறுகின்றார்கள்.
யெல்லாம் நான் கூற விழைந்தேன்.

அதுபோல், கரும்பு ஆலைகளுக்குச் செல்கின்ற சாலைகளைச் சரி
செய்வதற்காக 110 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பது பாராட்டு
வதற்குரிய ஒன்றாகும். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நெல்லைக்
கொள்முதல் செய்கின்ற விலை 77 ரூபாயாக இருந்தது. அதை
நமது கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, மோட்டா ரகத்
திற்கு 90 ரூபாய் என்றும், நடுத்தர ரகத்திற்கு 95 ரூபாய்
என்றும் உயர்த்தியுள்ள திட்டம் மிகவும் பாராட்டுவதற்குரிய
திட்டம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதே
நேரத்திலே மத்திய அரசு வடமாநிலங்களிலே விளைகின்ற
கோதுமைக்கு விலையை 110 ரூபாயாக அதிகமாக உயர்த்தி
யிருக்கிறது. ஆனால், நம்முடைய விவசாயிகள் விளைவிக்கின்ற
நெல்லுக்கு விலை அதிகரிக்காமல் இருப்பது மிகவும் வருந்தத்
தக்கது. எனவே, நமது அரசு மத்திய அரசுடன் பேச்சுவார்த்
தைகள் நடத்தி, இங்கே விளைகின்ற நெல்லுக்கும் கொள்முதல்
விலையை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று வற்புறுத்த வேண்டு
மென்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், கிணறுகள் வெட்டுவதற்கும், ஆழ் குழாய்க்
கிணறுகள் அமைப்பதற்கும் ஒரு குறிப்பிட்ட தொலைவில்தான்
அமைக்கப்பட வேண்டுமென்கின்ற ஒரு நிலைமையை மாற்றி,
யார் வேண்டுமானாலும் அவர்களுடைய நிலத்திலே கிணறுகளோ
அல்லது ஆழ் குழாய்க் கிணறுகளோ அமைத்துக் கொள்ள
லாம் என்பதற்கு இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஒரு நிலைமையை ஏற்படுத்தித்
தந்தால், சிறு விவசாயிகள் மிகவும் நன்மை அடைவார்கள்
என்பதை நான் மிகவும் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், மின் இணைப்புகள் தருகின்றதையும் விரைவிலே
தர வேண்டுமென்றும், அப்படித் தந்தால்தான் விவசாயிகள்
பல நன்மைகளை அடைவார்கள் என்பதையும் நான் கூறிக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோல், இந்த நெல்லுக்கு கருணா, பத்மா, சாரதா
என்று தங்களுடைய குடும்பத்திலே உள்ளவர்களின் பெயரை
வைத்துக் கொண்டிருக்கின்ற ஒரு நிலைமையை மாற்றியமைக்க
வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இனிமேல் அப்படிப்
புதிதாகக் கண்டுபிடிக்கப்படுகின்ற இந்தத் தானியங்களுக்கு,
யார் ஆராய்ச்சி செய்து அதைக் கண்டுபிடித்தார்களோ, அவர்
களுடைய பெயரையோ அல்லது கூட்டு முயற்சியில் கண்டுபிடிக்கப்

பட்டிருந்தால், அந்தக் கூட்டு முயற்சியில் கண்டுபிடித்த அந்த ஆராய்ச்சி நிலையத்தின் பெயரையோ வைக்க வேண்டும் என்பதையும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சிறு உழவர்கள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் இதுவரை முன்பு நடந்த அரசு காலத்தில் வழங்கப்பட்ட உறுப்பினர் கார்டுகள் சரியான முறையில் வழங்கப்படவில்லை. ஆங்காங்கு இருக்கும் பெரும் பணக்காரர்கள் தங்கள் நிலங்களில் ஒருசிலவற்றைக் குறிப்பிட்டுக் காட்டி சிறு உழவன் என்று கூறி உறுப்பினர் கார்டுகளைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள்தான் கடன், மற்றச் சலுகைகளைப் பெறுகிறார்களே தவிர, உண்மையான சிறு விவசாயிகள் சலுகைகள் பெற முடியவில்லை. ஆகவே, கழக அரசு ஏற்கனவே சிறு விவசாயிகள் என்று கொடுக்கப்பட்ட கார்டுகள் அனைத்தையும் ரத்து செய்து உண்மையான சிறு விவசாயிகளுக்கு கார்டுகள் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு என்னுடைய தொகுதியில் ஆழ் குழாய்க் கிணறுகளை அதிகமாக ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொண்டு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1978–79-ஆம் ஆண்டு வேளாண்மைத்துறை மானியத்தில் பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்ற பெருமொழிக்கேற்ப இந்த அரசு வேளாண்மைத் துறையில், பல புதிய உத்திகளைக் கையாண்டிருப்பது வரவேற்கத்தக்கது. மண்ணைப் பொன்னாக்கி, ஊரைச் சீராக்கி, நாட்டை மேம்படுத்தும் ஆற்றல் மிகு செயல் திறம் விவசாயிக்குச் சொந்தமானது. அண்ணா அவர்கள், கிராமங்களில் உள்ள விவசாயிகள் ஏரோட்டம் நின்றால் நகரங்களில் காரோட்டம் நின்று விடும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த விவசாயிகளின் குறையை நன்கு உணர்ந்த இந்த அரசு மின்சாரக் கட்டணத்தைக் குறைத்திருக்கிறது. குறைகளைப் போக்கிட ஏழை சிறு விவசாயிகள் உரிமைக் குரல் கொடுத்தபோது துப்பாக்கி முனையைக் காட்டியது பழைய அரசு. அதுபோல இல்லாமல் விவசாயிகளின் இதயக் குமுறல் வெடிக்குமுன் அவர்கள் இதயத்தில் இன்பத்தேன் பாய இழைய விட்டது இவ்வரசு.

மேற்கே போகும் நதிகளைக் கிழக்கே திருப்பி ஓர் அரிய பெரிய சாதனையை ஏற்படுத்த கேரள சர்க்காரோடு நமது முதல்வர் அவர்கள் ஏற்படுத்திய உடன்பாடு, எதிர்காலத் தமிழகத்தில் [illegible] பாயச்செய்வதாக இருக்கிறது.



விவசாயத் துறைக்காக 44.6 கோடி ரூபாயை ஒதுக்கி கிராமப் புறங்களில் இருக்கிற சிறு விவசாயிகளுக்கு நல்ல திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள்.

சமயநல்லூர் மின் நிலையத்தை விற்றவர்கள் அல்ல இந்தக் கழக அரசு. அதற்குப் பதிலாக 630 மெகா வாட் உற்பத்தித் திறன் கொண்ட அனல் மின்நிலையத்தை அமைக்கும் பொருட்டு நெய்வேலியில் இரண்டாவது சுரங்கம் வெட்டும் பணியை மத்திய அரசு விரைவில் மேற்கொள்ளவிருப்பது தமிழ்நாடு மின் உற்பத்தி வளர்ச்சியில் உற்சாகம் அளிக்கும் நல்ல திருப்பமாகும். இதன் மூலம் கிராமப் புறங்களில் விவசாயிகள் வெட்டியிருக்கும் கிணறுகளுக்கான பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புத் தருவதற்கு ஏதுவாக இருக்கும்.

விவசாயிகளின் மூலப்பொருளான வைக்கோல், பருத்திமார், வாழைத்தண்டு, சோமலை இலைகள் அதிகமாகக் கிடைக்கும் இடத்தில், அத்தகைய கிராமப் பகுதிகளில் பேப்பர் தயார் செய்ய உதவும் அந்தப் பொருள்களைக் கொண்டு பேப்பர் தொழிற்சாலையை ஏற்படுத்துவதன் மூலம் கிராமங்களில் இருக்கும் வேலையற்றோருக்கு வேலை வாய்ப்புக்கொடுக்கும் நல்ல திட்டத்தை அரசு உருவாக்கியிருக்கிறது.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரை தாளவாடி, [illegible]ம்பூர், குன்றி, குத்தியாத்தூர் போன்ற பகுதிகளில் விவசாயி[illegible]ர் பயிர் செய்கிற நேரத்தில் பன்றி, யானை போன்ற மிருகங்கள் [illegible]ந்து பயிரை அழித்து விடுகின்றன. "யானை இருந்தாலும் ஆயிரம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன்" என்று சொல்வார்கள். [illegible]ம் பொன், இறந்தாலும் ஆயிரம் பொன், [illegible] யானைக் கால்களால் ஏழை விவசாயிகள் மிதித்துக் [illegible]னால் அங்கு யானைக் கால்களால் [illegible] மீனவர்கள் விபத்தில் இறந்து கொல்லப்படுகிறார்கள். எப்படி மீனவர்கள் விபத்தில் இறந்து [illegible]ட்டால் அரசு உதவித் தொகை கொடுக்கிறதோ, பனையேறுபவர் [illegible]ள் இறந்துவிட்டால் எப்படி அரசு உதவித் தொகை கொடுக்[illegible]றதோ அதே போன்று இந்த ஏழை விவசாயிகள் யானைக் [illegible]கால்களால் மிதித்துக் கொல்லப்படுகிறவர்களின் குடும்பங்களுக்[illegible]கும் நிதி உதவி செய்ய அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று [illegible]கேட்டுக்கொள்கிறேன்.

சத்தியமங்கலம் பகுதி விவசாயிகள் வாழ்கின்ற பகுதி. பின் தங்கிய மலைவாழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயரும் வகையில், ஏழை விவசாயிகளுக்கு அன்றாடம் வருமானம் வரும் வகையில் அங்கு பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றினை அமைத்து அங்கு பால் உற்பத்தியை அதிகப்படுத்த அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கு. அ. செங்கோட்டையன்] [1978 மார்ச் 8]

[முற்பகல் 11-20]

எங்களுடைய பகுதியில் தடப்பள்ளி அரக்கன்கோட்டைப் பாசனப் பகுதியில் 25 ஆயிரம் ஏக்கரில் இரண்டு போகம் நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாகப் புகையான் பூச்சியின் தாக்குதல் ஏற்பட்டு விவசாயிகளுக்குப் பெருமளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்த புகையான் நோயால் கடந்த இரண்டு வருடங்களாக மகசூல பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த நோயைத் தடுப்பதற்காக அரசே வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தும்கூட உடனடியாக அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகளுக்கு மருந்துகள் எல்லாம் சப்ஸிடி முறையிலே கொடுத்தும்கூட அந்தப் புகையான் பூச்சிகளைத் தடுக்க முடியவில்லை. ஆகவே, அந்தப் பகுதிக்கு நம்முடைய அரசாங்கம் வழக்கமாக ஏப்ரல் 15-ஆம் தேதியிலிருந்து தண்ணீர் விடுகிறது. அதை ஏப்ரல் முதல் தேதியிலிருந்தே விட்டால் இந்தப் புகையான் பூச்சிகளின் தாக்குதல் இருக்காது என்பதையும், அதன் காரணத்தால் மிகுந்த மகசூல் ஏற்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவ்வாறு திறந்துவிட்டால் ஆடுதுறை 31, வைகை 1444 2222 ஆகிய நெல் பயிர்கள் அந்தப் பகுதியில் உள்ள விவசாயி களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது, அவர்கள் தங்களுடைய பயிர் களை ஜூன் மாதத்திலே அறுவடை செய்ய முடியும். அதன் மூலமாக அந்தப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரம் உயரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் தாளவாடி, மற்றும் குன்று குதியாத்தூர் மலைப் பகுதியில் மல்பெரிச் செடி அதிகமாகப் பயிரிடுகிறார்கள். அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் மழையை நம்பி இருக்கிறார்கள். இந்தப் பகுதியில் உள்ள விவசாய மக்களின் நிலை உயராமல் இருக்கிறது, அவர்கள் கர்நாடக மாநிலத்தின் பக்கத்துப் பகுதியிலே இருக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற முறையிலே மல்பெரிச் செடிகளைப் போடுவதற்கு சப்ஸிடி மூலம் உரங்களையும், கடன் வசதிகளையும் அந்தப் பகுதி மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்களுடைய சத்தியமங்கலம் பகுதியிலே சிறு ஏரிகளைக் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு எஸ்டிமேட்கள் எல்லாம் தயாரிக்கப்பட்டு அது அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. கணக்கம்பாளையம் வற்றுக்கரைகுளம், கெம்மநாயக்கன் பாளையம் பெரும்பள்ளம், சஞ்சிவிராயன் கோயில் குளம் தூர் எடுத்தல் (பெருமுகை) பெரியகுளம், சத்தி, சிக்கரா சம்பாளையம் குளம், புதுப்பீர்கடவு குளம் ஆகிய இந்தக் குளங்களிலே எல்லாம் மழைக்காலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து ஆற்றிலே கலந்து விழுந்துவிடுகிறது. அந்தத் தண்ணீரை எல்லாம் தேக்கி



[1978 மார்ச் 8] [திரு. கு. அ. செங்கோட்டையன்]

விவசாயத்திற்குப் பயன்படுத்த வேண்டும். அதன் மூலமாக விவசாயிகளுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய பாசனத் திட்டங்களை எல்லாம் தருகிறோம். அவர்கள் அவைகளைப் பரிசீலித்து அந்தப் பகுதியிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பாராட்டிப் பேச வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

திரு. துரை கோவிந்தராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் வைக்கப்பட்டு இருக்கிற வேளாண்மை கொள்கை விளக்கத்தின் அடிப்படையில் என்னுடைய கருத்துக்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் தமிழகத்தினுடைய நல்லபல புதிய திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு அடித்தளத்திலே இருக்கின்ற மக்களுடைய எண்ணங்கள் ஈடேறுகின்ற அளவிலே விவசாயப் பெருங்குடி பக்களுடைய இல்லங்கள் மகிழ்வோடு எண்ணிப்பார்க்கத் தக்க அளவிற்கு, பட்டணங்களிலே இருக்கிறவர்கள் பட்டிக்காடு என்று சொல்லிக் கொண்டிருக்கின்ற அளவிலே வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் என்ற எண்ணத்தை மாற்றி இன்றைக்கு அவர்கள் வளர்ந்து வருகிறார்கள் என்று எண்ணுகிற அடிப்படையிலே விவசாயப் பெருங்குடி மக்களுக்காகப் பல்வேறு திட்டங்களை இந்த அறிக்கையிலே தந்திருப்பதற்காக உள்ளபடியே நான் மனப்பூர்வமான பாராட்டை, வாழ்த்தைத் தெரிவித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பழைய காலத்தை நினைத்துப் பார்த்துச் சொல்ல வேண்டுமானால் ஒரு ஆட்சி வளம்பெற்று இருக்க வேண்டுமானால் விவசாயப் பெருங்குடி மக்கள் வளம் பெற்றிருக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும், நெல்லுயர குடியுயரும், குடியுயர கோன் உயரும் என்று சொல்கின்ற பழமொழிக்கு ஏற்ப இந்த அரசு விவசாயப் பெருங்குடி மக்களை உயர்த்த வேண்டுமென்ற முறையிலே திட்டங்களைத் தீட்டி அதன் மூலம் அரசும் உயர்ந்த இடத்திலே வீற்றிருக்கிறது.

நல்ல அரசினுடைய நல்ல பல திட்டங்கள் உயர்ந்து வருகின்ற அந்தக் குடிக்கு அமைக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பல்வேறு திட்டங்களைத் தீட்டியிருக்கிறது. புரட்சித் தலைவர் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் வள்ளுவருடைய கூற்றுக்கு இணங்க,

[திரு. துரை கோவிந்தராசன்] [1978 மார்ச் 8]

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழு
துண்டு பின் செல்பவர்'' என்கின்ற குறளுக்கு ஒப்ப இன்றைக்கு
உழுது வாழ்பவர்களுடைய உள்ளங்களெல்லாம், அவர்களுடைய
இல்லங்களெல்லாம் சிரிக்கத்தக்க வகையில் பல சாதனைகளைச்
செய்திருக்கிறார்கள். இதையெல்லாம் பல்வேறு கட்சிகளைச் சார்ந்த
நண்பர்கள் நிதிநிலை அறிக்கையிலும் சரி, பல மானியக் கோரிக்கை
களிலும் சரி வாழ்த்துவதற்கு மனமில்லை என்றாலும், செய்த
காரியங்களைப் பாராட்டவில்லை என்றாலும், மாறாக இப்படிப்பட்ட
துறைகளிலே ஏற்பட்ட முற்போக்கான செயல்களை இந்த நேரத்
தில் சிந்தித்துப் பார்க்கின்றபொழுது மனம் வரவில்லையே தவிர
இதை. வாழ்த்த வேண்டுமென்ற எண்ணம் அவர்களிடத்தில் இல்
லாமல் இல்லை.

அப்படிப்பட்ட நிலையை எண்ணிப் பார்க்கின்றபொழுது,
இந்த அரசினுடைய சாதனைகளைச் சொல்கின்றபொழுது ஆண்
டாண்டுக் காலமாகக் கட்டியழுது கொண்டிருந்த போர்டு ஸ்டாண்
டிங் ஆர்டர் 1386-வது ஆண்டு அணா, பைசாக்கள் இருந்த
காலத்தில், 16 அணா என்று சொல்கிற ஒரு ரூபாய் என்று இருந்த
அந்தக் காலகட்டத்தில் ஒரு விவசாயிக்கு நஷ்டம் ஏற்படுகின்ற
பொழுது ஒன்றேமுக்கால் கலம் விளைந்திருந்தால்தான் வரிவஜா
செய்ய வேண்டுமென்று இருந்தது. ஆனால் இன்றைக்கு 50
சதவிகிதம் உயர்த்தி, 1386-வது ஆண்டு உத்தரவை மாற்றி
புதிய உத்தரவைப் பிறப்பித்து, ஏறக்குறைய 8 கலங்கள் அதற்
குக் குறைவாக இருந்தாலும் விவசாயிகளுக்கு வரிவஜா செய்ய
வேண்டுமென்ற நிலையை இந்த அரசு அறிவித்திருப்பதை
யும், மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் இந்த மன்றத்தில் தெரி
வித்திருப்பதையும் பார்த்து விவசாயப் பெருங்குடி மக்கள்,
குறிப்பாக சோழ மண்டலத்திலே வாழ்கின்ற விவசாயப் பெருங்
குடி மக்கள், சோழநாடு சோறுடைத்து என்று சொல்லுகின்ற
அந்த மண்ணுக்குச் சொந்தக்காரர்கள் இந்த நிதிநிலை அறிக்
கையை உள்ளபடியே பாராட்டுகிறார்கள்.

1924 ஆம் ஆண்டினுடைய மேட்டூர் அணையின்
ஒப்பந்தம், 1974 ஆம் ஆண்டுவரையில் இருந்த நேரத்தில்
ஆண்டுகொண்டிருந்த முதலமைச்சரெல்லாம் அந்த ஒப்
பந்தத்தைப் புதுப்பித்துக்கொள்ளாமலும், ஒப்பந்தம் கழ
ந்தமாகத் தொடரப்பட்ட வழக்கை உச்ச நீதிமன்றத்தில்
வைத்து விட்ட நிலைமையிலும் இடையில் பல்வேறு காரணங்
களினால் ஒப்பந்தத்தைத் திருத்த முடியாமல், வழக்கையும் திரும்
பப் பெற்றுக் கொண்டார்கள்.

[illegible]நாடக அரசோடு சுமுகமாகப் பேசி தமிழகத்திற்குத்
[illegible]டைக்கின்ற வகையில் மாற்றுகின்ற வகையில் இல்லா
[illegible] அரசுக்குப் போட்டியாகத் தமிழ்நாட்டிலே தமி
[illegible]க்கி அந்த அரசுக்கும் நமக்கும் இருக்கின்ற



1978 மார்ச் 8] [திரு. துரை கோவிந்தராசன்]

கருத்து வேறுபாடுகளைக் கூட்டியதன் காரணமாகக் கர்நாடக
அரசுடன் சுமுகமான உறவு இல்லாமல் தமிழ்நாட்டிற்குத் தண்
ணீர் கிடைக்காத நிலைமை ஏற்பட்டது. அந்த நிலைமையை
மாற்றி இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்
றக் கழக அரசு, புரட்சித் தலைவருடைய தலைமையிலே அமைந்
திருக்கின்ற இந்த அரசு, 'நீரின்றி அமையாது உலகு' என்று
சொல்வதற்கு ஏற்ப, கர்நாடக அரசோடு தொடர்பு கொண்டு
முதன்முதலாகத் தண்ணீர் பெற்று அதனால் குறிப்பாக சோழ
மண்டலம் செழித்து இருக்கிறது, இன்றைக்கு விவசாயம்
செழித்தது என்று சொல்லத்தக்க அளவிற்குச் செய்திருக்கிறது.

தீவிர விவசாயத் திட்டத்தை, தீவிர விவசாய சாகுபடியை
மேற்கொண்டு இதுகால்வரையில் விவசாயிகள் பயன்படுத்தாத
அளவிற்கு உச்சக் கட்டத்தை அடைந்து 2·5 இலட்சம் டன்
உரங்களை இந்த ஆண்டுதான் விவசாயத் துறையிலே இருக்கின்ற
அதிகாரிகளிடம் விவசாயத்தை மேற்கொண்டுள்ள விவசாயிகள்
அவ்வளவு அதிகமான உரங்களைப் பெற்றார்கள். அப்படிப்
பெற்ற உரங்களையும் மிகுதியான விலையில் அல்லாமல் குறை
வான விலைக்குப் பெற்று, 25 சதவிகிதத்தை ஏழை விவசாயி
களுக்கு இனாமாகவும், 25 சதவிகிதத்தைக் குறைவான விலைக்
கும் உரங்களைத் தந்து விவசாயிகளுக்குப் பல்வேறு வகைகளிலும்
உதவி செய்திருக்கிறது. முன்னால் இருந்த அரசில் யூரியா
மூட்டை 100 ரூபாய் விலை என்றால், அதை வாங்கக்கூடிய
நேரத்தில் அந்த மூட்டையின் விலை 150 ரூபாய், 200 ரூபாய்
என்று வெளிமார்க்கெட்டிலே விற்கக்கூடிய அளவிற்கு ஆகி உரம்
கிடைக்காத நிலை இருந்தது. ஆனால் இப்பொழுது அந்த
நிலைமையை மாற்றி விட்டு மிகவும் எளிதாகக் கிடைக்கத்
தக்க அளவிற்கு இப்படிப்பட்ட சாதனையைச் செய்த இந்த
அரசை உள்ளபடியே விவசாயப் பெருங்குடி மக்கள்
பாராட்டுகிறார்கள்.

இயற்கையின் சீற்றத்தால் கன்றுகளை இழந்து தவித்துக்
கொண்டிருந்த குடிமக்களுக்கு இனாமாக அந்தக் கன்றுகளை—
கன்றுகள் என்று நான் சொல்வது தென்னங்கன்றுகளை—தந்து
அவைகளை வளர்த்து அதன்மூலம் பயன்பெறத் தக்க அளவிற்கு
ஒரு இலட்சம் தென்னங்கன்றுகளை ஏழை எளிய விவசாயிகளுக்
குத் தந்து வளர்க்கின்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறது என்று
சொன்னால் எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்கள் அதைப்
பாராட்ட மாட்டார்கள்.

[முற்பகல் 11–30]

அந்த ஒரு இலட்சம் தென்னங்கன்றுகளை பிள்ளைகளைப்போல்
வளர்ப்பதற்கு வழிவகை செய்த இந்த அரசை விவசாயப்
பெருங்குடி மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத்
தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. துரை கோவிந்தராசன்] [1978 மார்ச் 8

அது மட்டுமல்ல, பல புதிய திட்டங்களையும் நாம் காணுகின்றோம். விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக, மத்திய அரசு துணையோடு விவசாயப் பாதுகாப்புத் திட்டம் என்பதை விரைவிலே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தத் திட்டம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நன்மை பயக்கும் என்கிற அடிப்படையில் அதைச் செய்து தரவேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாலிருந்தவர்கள், தங்கள் அரசினுடைய சாதனை, சாதனை என்று சொல்கின்றபொழுது, நெல்லினுடைய விலையைச் சொல்லுவார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், நெல்லினுடைய விலையை நாங்கள் கூட்டித் தந்திருககிறோம், இடையிலே வந்த குடியரசுத் தலைவர் ஆட்சியில் அது குறைக்கப்பட்டது ; குறைக்கப்பட்ட விலை இப்போதைய ஆட்சியால் ஏற்றப்படவில்லையென்று சொல்வார்கள்.

ஆனால், ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு இந்த விலை உயர்ந்திருந்தாலும், முன்னாலே நடத்திக் கொண்டிருந்த அரசுக்குச் சொந்தக்காரர்கள், தங்கள் ஆட்சியின்போது இருந்த நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். நெல்லினுடைய விலை எந்த அளவிற்கு விற்கப்படுகிறதோ, அதைவிட வாங்கிச் சாப்பிடுபவர்கள்— இந்தச் சென்னை மாநகரில், கோவை நகரில் வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் பல தொல்லைகளுக்கிடையே, நிர்ணயிக்கப்பட்ட விலையைவிட அதிக விலைகொடுத்து வாங்கிச் சாப்பிட்டார்கள். ஆனால், இன்றைக்கு விலை குறைவாக இருக்கிறது என்று சொன்னாலும், உழைத்து உழைத்து உற்பத்தி செய்கிற அந்த விவசாயிகளுக்குப் பல சலுகைகளைச் செய்திருக்கிறோம். என்றாலும் விவசாயிகளுக்குக் கொடுத்த அளவுக்கு கோடிட்டுக் குறியிட்டுக் காட்டுகிற அந்த விலையிலே அவனுக்குக் கிடைக்காத அளவுக்கு, எல்லோரும் பெறத்தக்க அளவுக்கு வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்குக் குறியீட்டைவிடக் குறைந்த விலையில் கொடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறதென்றால் அது இந்த அரசின் சாதனை இல்லையா? சென்னை, கோவை போன்ற பெருநகரங்களில் வாங்கிச் சாப்பிடுபவர்களுக்குக் குறியீட்டு விலையைவிடக் குறைந்த விலையில் கொடுப்பது பெரிய சாதனையில்லையா?

ஏதோ, பசுமைப் புரட்சி என்பதை முன்னாலேயிருந்து தொடர்ந்து கடைபிடித்து வந்திருக்கிறார்கள், இந்த அரசு கவனம் செலுத்தவில்லையென்று சொல்லுகிறார்கள். ஆனால், 1975-76-இல் 57 லட்சம் டன் கொள்முதலுக்கு மாறாக, இந்த ஆண்டு 4 லட்சம் டன்னைக் கொள்முதல் செய்யவில்லை. மாறாக 64 லட்சம் 70 லட்சம் டன் என்கிற அளவு உயர்த்தி குறியீட்டை நிர்ண



1978 மார்ச் 8] [திரு. துரை கோவிந்தராசன்]

பெருக்கிக் கொண்டிருப்பது, பல்வேறு சாதனைகளைச் செய்வதன்மூலம் பல உற்பத்திகளை, பயிர் வகைகள் பலவற்றை உற்பத்தி செய்கின்ற வகையில் இந்த அரசு செயலாற்றிக் கொண்டிருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த மாநிலத்தில், 24 இடங்களில், தரமான ஆதார விதைகளையும் சான்றிதழ் பெற்ற விதைகளையும் உற்பத்தி செய்ய, இப்போதுமான பாசனம் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. உற்பத்தி பெருகும் என்படி ஊக்கப்படுத்துவதன் மூலம், 80,000 ஹெக்டேர் பயறு வகைப் பயிர் பரப்பில் ஒட்டுமொத்த மருந்து தூவியும், 20,000 ஹெக்டேர் பரப்பில் டை அமோனியம் பாஸ்பேட் தெளித்தும் பயறு வகைகளின் உற்பத்தியை அதிகரிக்கத் திட்டமிட்டு, உற்பத்தியைப் பெருக்குகிற நிலையை இந்த அரசு செய்ய விருப்பதென்றால் அது பாராட்டத்தக்கதல்லவா? என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடு, இன்றைக்கு அரசின் மேல் பல்வேறு குறைகளை எடுத்துச் சொல்கின்றவர்கள், இயற்கையினுடைய கொடுமையால் தமிழகம் பாதிக்கப்பட்ட நேரத்தில், புயலாலும், வெள்ளத்தாலும், தமிழகமே பாதிக்கப்பட்ட நேரத்தில், முழு மானியமாக ரூ. 150 கொடுத்தால் போதும் என்று சிறையிலேயிருந்து கட்டுரை எழுதிய பெரியவர்கள்— ரூ. 200 தாராளமாகத் தந்து, 5 கிலோ அரிசியும், அதே நேரத்தில், சேலையும் கொடுத்து, வேட்டியும் கொடுத்து, மண்ணெண்ணெயும் தந்ததற்காக இந்த அரசை விவசாயப் பெருங்குடி மக்கள் போற்றிக்கொண்டிருக்கிறார்கள், மகிழ்ச்சியோடு பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இந்த அரசைப் பாராட்ட மனமில்லாமல்— விவசாயப் போராட்டத்தைத் தொடர்ந்தார்கள். வாய்வீரம் பேசுகிற அந்தச் சொந்தக்காரர்கள், மீசை துடிக்கப் பேசுகிற அந்தச் சொந்தக்காரர்கள் எல்லாம் ஒரு கால கட்டத்திலே எண்ணிப் பார்க்கவேண்டும்; மின்சார வரியை ஒரு பைசா குறைக்க வேண்டுமென்ற குரலை விவசாயிகள் எழுப்பிய நேரத்தில் கோயம்புத்தூரில் 42 பேர் உயிரைக் குடித்த சொந்தக்காரர்கள்தான் இன்றைக்கு விவசாயிகள் போராட்டம் நடத்துகிறார்கள்.

ஆனால் இயற்கையின் சீற்றத்தால் ஏற்பட்டிருந்த விளைவை சமாளிக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்த நேரத்தில் உள்வேலை இருந்து கொண்டு அறிக்கை விட்டுக்கொண்டு, அரசு கொடுக்கிற சலுகைகள் மக்களுக்குக் கிடைக்காத வகையில், அரசு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்கிற வகையில் நடந்து

கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லாம் விவசாயிகளுக்கு ஒன்றுமே கொடுக்கவில்லை, இன்றைக்கு கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். எதுவுமே

விமானம் மூலம் பூச்சி மருந்து தூவுகிறோம் என்ற பேரில் தூவி, ஊர் பூராவும் தூவினார்கள். இன்றைக்குக் கூட விவசாயிகள் அவர்களுக்குப் போட்டிருக்கின்ற கட்டணத்தைச் சமாளிக்க முடியாத அளவுக்குக் கணக்குகளைத் தந்திருக்கிறார்கள். யார் யாரோ இடையிலே இருந்தவர்கள் முறைகேடாகச் செய்துவிட்டு, இந்த அரசுக்கும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கும், பல்வேறு கஷ்டங்களை ஏற்படுத்தினார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

அதே நேரத்தில் பல புதிய திட்டங்களை விவசாயப் பல்கலைக் கழகத்தின் மூலமாக நிறைவேற்றியிருக்கிறார்கள். இதற்கு முன்னாலே இருந்த 7 திட்டங்கள், பயிற்சி நிலையங்கள் இருந் தாலும், இந்த அரசு வந்ததற்குப் பிறகு 4 புதிய நிலையங்களை உருவாக்கியிருக்கிறது. வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 75–76 வரை புதிய ரகங்களாகக் கண்டுபிடிக்கப்பட்ட நெற்களின் எண்ணிக்கை 37 ஆகும்.

ஆனால் இந்த ஒரே ஆண்டிலே மட்டும் 8 வகையான வீரிய சக்தி உள்ள விதைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதோடு விவசாயத் துறையில் 16-க்கும் மேற்பட்ட ரகங்கள் இருக்கின்றன. 1977–78-லே புதிதாக மீன் வளர்ச்சிக்காக ஒரு கல்லூரியை இந்த அரசு நிறுவும் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக் கொள்வதோடு, 1978–79-ல் விவசாயிகள் பட்ட மேற்படிப்புப் படிப்பதற்காக 5 புதிய பட்டப்படிப்புகளை தொடங்க இருக் கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், இது வரையில் இல்லாத 5 திட்டங்களைத் தொடங்க இருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பாயின்ட் ஆப் ஆர்டர். முந்தைய ஆட்சியாளர்களால் எவ்வளவு நெற்கள் கண்டுபிடிக்கப் பட்டன?

திரு. துரை கோவிந்தராசன் : முன்னாலே எவ்வளவு நெற் [illegible] கண்டுபிடித்தார்கள் என்று கேட்டார்கள். [illegible] பத்மா என்ற பெயர்களை எல்லாம் [illegible] அதிலே [illegible] நெற்கள் 1975 வரையிலும் [illegible] 37 [illegible] இந்த அரசு மேலும் 8 புதிய ரக [illegible]



[illegible]டித்து இருக்கிறார்கள். விவசாயத் துறையின் மூலமாக 16-க்கு [illegible]மற்பட்ட நெற்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த அரசு [illegible]ச்சயமாக அந்தத் துறையிலே இருக்கிற அமைச்சர்கள் பெயர் [illegible]ளை வைக்காது என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் [illegible]காள்கிறேன்.

தமிழ்நாட்டு விவசாயத் தொழில் கழகம் புதிய திட்டங்கள் [illegible]ன்கிற பெயரால் 1975–76-ஆம் ஆண்டில் மீன் வலைத் தயா[illegible]க்கும் நிறுவனம் 5 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கப் [illegible]ட்டிருக்கிறது. ஆனால் இந்த ஒரு ஆண்டில் மட்டும் விவசாயத் [illegible]றையின் மூலமாக 5 திட்டங்கள் தொழில் கழகம் மூலமாக [illegible]றைவேற்றப்பட்டு 11 புதிய திட்டங்கள், செங்கற்பட்டு, புதுக் [illegible]காட்டை போன்ற இடங்களிலும் கால்நடைத் தீவனம் தயா[illegible]க்கின்ற நிறுவனம் போன்ற 11 வகையான புதிய திட்டங்களை [illegible]ந்த அரசு மேற்கொண்டு இருக்கிறது என்பதையும் நான் [illegible]ந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கி[illegible]றன்.

பால்வழங்கும் நிறுவனத்தினை மேலும் ஊக்குவிக்கின்ற [illegible]கையில் குளிர்பதப்படுத்தும் நிலையங்களை இங்கே அமைத்திருக்கி[illegible]றோம். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இன்றைக்குக் கூட்டுறவு [illegible]ணயச் சங்கத்தின் மூலமாகக் கடன் தந்திருப்பவர்களுக்கு, [illegible]ந்தக் கடன்களை நீண்டகாலக் கடன்களாக ஆக்கித் தருகிற [illegible]கையில், முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டதற்கு [illegible]ணங்க தஞ்சை, புதுக்கோட்டை போன்ற பகுதிகளிலே இருக்கிற [illegible]விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இந்த ஆண்டு கூட்டுறவு [illegible]ணயச் சங்கங்களின் மூலமாக வாங்கிய கடன்கள் நீண்டகாலக் [illegible]டன்களாக ஆக்கப்படுகிற நிலைமை உருவாகி இருப்பதற்கு [illegible]ண்மையிலேயே விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த அரசைப் [illegible]ாராட்டுகிறார்கள்.

[முற்பகல் 11-40]

அதே நேரத்தில், இன்று வெளி நடப்பு செய்து இருக்கின்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மதிப்பிற்குரிய கருணாநிதி அவர்கள், வெளி நடப்பு செய்கிற நேரத்தில் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். நான் அந்தக் கருணாநிதியோடு நீண்ட காலம் பழக்கப்பட்டவன் என்ற முறையில், அந்த மாவட் டத்தைச் சேர்ந்தவன் என்ற வகையில் சொல்லிக்கொள்வேன், அவர் 1970–71-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வைக்கிற நேரத் தில் கூறியதை படித்துப் பார்த்தேன். என்.ஜி.ஓ.-க்களுக்கு அவர் எந்த அளவிற்குச் சலுகை காட்டியிருக்கிறார் என்று. அவர் [illegible]களுக்காக இன்று கோரிக்கை வைத்து இருக்கும் அவர் அன்று எவ்வளவு ஒதுக்கி இருக்கிறார் என்று பார்த்தேன். அந்த

[திரு. துரை கோவிந்தராசன்] 1978 மார்ச் 8]

நேரத்தில் அவர் என்.ஜி.ஓ.விடம் சொல்லி இருக்கிறார், நான்
அவசரமாக ஒரு கலியாணத்திற்குப் புறப்பட்டுக் கொண்டு இருக்கி
றேன். வேண்டுமானால், மத்திய அரசிலிருந்து நிதி பெற்றுத்
தாருங்கள் என்று அன்று சொன்ன அந்தக் கருணாநிதி, இன்றைக்கு
எதிர் வரிசையில் அமர்ந்து கொண்டு, உங்களுக்குச் சாதகமாக
நான் இருக்கிறேன், கிளர்ந்து எழுங்கள் என்று கூறி, தன்னை
விளம்பரப்படுத்திக் கொண்டு இருக்கிற காட்சியைக் காண்கிறோம்.

தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் விவசாயிகள் நிலையைப்
பார்க்கிறபோது, இந்த மானியக் கோரிக்கை மீது பேசுகிற
நேரத்தில் நான் மிகவும் வேதனைப்படுகிறேன். இன்றைக்குக்கூட
தஞ்சை மாவட்டத்தில், உற்பத்திக்கேற்ற ஊதியம் கிடைக்கவில்லை,
வடமாநிலத்தில் இருப்பவர்களுக்கு மத்திய அரசு கோதுமைக்காக
நிர்ணயித்துள்ள விலை ரூ. 110 என்றால், உற்பத்திச் செலவு
அங்கே மிகக் குறைவு. ஆனால், தமிழகத்தில் நெல்லின் உற்பத்திச்
செலவு மிகவும் அதிகம், ஆனால் நிர்ணயிக்கப்பட்டு இருக்கும்
விலை மிகக் குறைவாக இருக்கிறது. இதை எல்லாம் எண்ணிப்
பார்க்கிறபோது, இப்படிக் கேட்டுக் கொண்டு இருப்பதைப்
பார்க்கிற போது, உழைத்து உழைத்து உயிரைக் கொடுத்துக்
கொண்டு இருக்கும் உழவனுக்கு உற்பத்திக்கேற்ற ஊதியம் இல்லை,
ஆனால் அதே நகரத்தில் வாழ்கிற அரசு அலுவலர்களுக்கு அவ்
வளவு பேருக்கும் எளிதாக, சுலபமாக, குறைவான விலையில்
எல்லாப் பொருள்களும் உற்பத்தி செய்யும் பொறுப்பை அந்த
விவசாயி ஏற்றுக்கொள்ளவேண்டும். ஆகவே, அந்த விவசாயி
களின் வறுமை நீங்க, அவர்கள் உற்பத்திக்கு ஏற்ற ஊதியம்
கிடைக்க வழி செய்யும் வகையில் இந்த நிதி நிலை அறிக்கை
அமைந்து இருக்கிறது என்று கூறி பாராட்டி, வரவேற்று, என்
உரையை முடிக்கிறேன். வணக்கம்.

(திரு. ஆர். முத்தையா தலைமை.)

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :</u> பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஒரு அறிவிப்பைத்
தெரிவிக்க ஆசைப்படுகிறேன். உங்களுக்காக இங்கே பால் வள
நிறுவனத்தின் சார்பாக பால், பால்கோவா, தயிர், மோர்
போன்றவைகள் சட்டமன்றத்திற்கு வெளியே இருக்கும் லவுஞ்சில்
கிடைக்கும். அதைப் பருகி சுவைத்துவிட்டு, பின்னர் அதன்
மீது மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்லலாம்
என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. ஆர். முத்தையா)</u>
...நேகமாக பெரும்பாலான உறுப்பினர்கள் சாப்பிட்டு விட்டார்
... என்று கருதுகிறேன். யாராவது சாப்பிடாமல் இருந்தால்
அவர்கள் சாப்பிட்டுவிட்டு வரலாம்.



1978 மார்ச் 3]

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> தலைவர் அவர்களே, இந்திய
நாட்டிலே உள்ள முக்கியமான ஜீவாதாரத் தொழிலாக இருக்
கின்ற விவசாயத் தொழிலை அடிப்படையாகக் கொண்டு அமைக்
கப்பட்டுள்ள இந்த மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச்
சொல்ல ஆசைப்படுகிறேன்.

தமிழ்நாட்டிலே மட்டுமல்ல ; இந்திய நாட்டிலேயே சுமார்
70 சதவீதம் அல்லது 75 சதவீதம் மக்கள் ஈடுபட்டிருக்கின்ற
விவசாய மானியத்தின்மீது இன்றைக்கு விவாதம் நடைபெற்றுக்
கொண்டிருக்கிறது. ஆனால் 75 சதவீதம் மக்கள் தொடர்
புடைய ஒரு மானியத்தின்மீது இந்த அவையிலே கலந்துகொண்டு
தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி, 75 சதவீதம் மக்களுக்கு
என்னென்ன நன்மைகளை நாம் தேட வேண்டும் ; அவர்களுக்கு
என்னென்ன நன்மைகள் ஏற்பட வேண்டும் என்பதை எல்லாம்
எடுத்துச் சொல்லாமல்

'His Majesty's Opposition is respreseı ted by a sole representative
of the Government supporter'

என்ற முறையில் இன்றைக்கு

His Opposition is out of control and it has completely forgotten
its basic responsibility that it has to discharge towards 75 per cent of
the population of Tamil Nadu.

என்ற அளவுக்கு இன்றைக்கு 75 சதவீதம் மக்களுக்குத் தாங்கள்
செய்ய வேண்டிய கடமையை மறந்து, நம்முடைய எதிர்க்கட்சி
நண்பர்கள் வெளியே இருப்பது நாட்டு மக்களுக்கும் நல்லதல்ல;
நாட்டுக்கும் நல்லதல்ல. இது இந்த நாட்டின் முதுகெலும்பு,
இந்தச் சமுதாயத்தின் முதுகெலும்பு என்று சொல்லக்கூடிய விவ
சாயப் பெருங்குடி மக்களுக்கும் நன்மை பயக்கவில்லை ; ஏன்,
அவர்களுக்கே கூட நன்மை பயக்கவில்லை (ஆளும் கட்சியினர்
ஆரவாரம்) என்பதை நம்முடைய எதிர்க்கட்சி நண்பர்களுக்குத்
தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் இந்த மன்றத்திற்கு
வந்து, இந்த விவாதத்திலே கலந்து கொள்ள வேண்டும் என்
பதற்காகத்தான் சொல்கிறேனே தவிர வேறல்ல என்பதையும்
தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சரவர்கள் தன்னுடைய கொள்கை விளக்க
நூலிலே இன்றைக்கு விவசாயத் துறையிலே நாம் கையாள
வேண்டிய நிலைமைகளைப்பற்றியும் கடந்த ஆண்டு இந்தத் துறை
சந்தித்த சாதனைகளைப் பற்றியும், வேதனைகளைப்பற்றியும் விளக்க
மாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே முக்கியமாக கடந்த
நவம்பர் மாதத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட புயல், வெள்ளம்
இவைகளினால் நிகழ்ந்த சோதனைகளையும் வேதனைகளையும் குறிப்
பிட்டுச் சுமார் இரண்டு இலட்சம் டன் நெல்லும், ஒரு லட்சம்
டன் மற்ற தானியங்களும் தண்ணீரால் அடித்துச் செல்லப்பட்டு,

[திரு. எம். ஏ. லத்தீப்] 1978 மார்ச் 8]

நஷ்டம் உண்டாகி இருக்கிறது அல்லது அழிக்கப்பட்டிருக்கிறது
என்ற விவரத்தைத் தந்திருக்கிறார்கள். அப்படி இந்தத் தானி
யங்கள் நஷ்டம் அடைந்து, முழுமையாக நமக்குக் கிடைக்காமல்
போயிருக்குமானால் அந்தத் தானியத்தை உற்பத்தி செய்த விவ
சாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது பொருள்.
ஆகையால் அரசு நிவாரணமாக, அவர்களுக்கெல்லாம் 200
ரூபாய் அல்லது தேவையான நிவாரணத்தைத் தந்திருந்தாலும்
மீண்டும் அவர்கள் இந்தத் தொழிலைச் செம்மையாகச் செய்வதற்கு
அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற நஷ்டம் மிகப்பெரிய கஷ்டமாக,
தடங்கலாக இருக்குமானால் அதற்குத் தனியாக ஒரு நிதியைக்கூட
இந்த அவையிலே கோரி அவர்களுக்கு வேண்டிய திட்டங்களைப்
போட்டு உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

முக்கியமாக இன்றைக்குத் தமிழ்நாட்டிலே நம்முடைய விவ
சாயிகளைப் பொறுத்தவரை, அவர்கள் மிகவும் ஊக்கமுள்ளவர்கள்.
நம்முடைய விவசாயிகள் சாதாரணமாக மருத நிலத்தில் மட்டு
மல்ல; குறிஞ்சி, முல்லை நிலம் என்றாலும், வன்மையான பாறை
யான நிலம் என்றாலும், அந்தப் பாறைகளை எல்லாம் உடைத்து
கரடுமுரடான காடுகளை எல்லாம் அழித்து நாடாக மாற்றி,
நமக்குத் தேவையான உணவை அவர்களுடைய ஊக்கத்தாலும்
உழைப்பாலும் பெற்றுத்தரக்கூடிய ஆற்றல் உள்ளவர்கள். அதற்கு
முக்கியமாகத் தேவைப்படுவது பாசன வசதி. பாசன வசதியை
நம் விவசாயிகளுக்குத் தந்து பாருங்கள். அவர்கள் சாதாரணமாக
எதுவுமே விளையாத பொட்டல் காடாக இருந்தாலும், அந்தப்
பொட்டல் காட்டிலேகூட நல்ல முறையில் பயிர் செய்து, தானியங்
களை நமக்குப் பெற்றுத் தருவார்கள். இந்தத் தமிழ் நாட்டைப்
பொறுத்தவரையில், ஆற்று நீர் ஆதாரம் முழுமையாகப் பயன்
படுத்தப்பட்டுவிட்டது. மேற்கொண்டு ஜீவாதார நதிகளிலும்,
6 அல்லது 3 மாதம் தண்ணீர் ஓடுகிற ஆறுகளிலும்கூட நாம்
நீர்த் தேக்கங்களைக் கட்டி, தண்ணீரைப் பயன்படுத்திக் கொண்டு
இருக்கிறோம். இப்போது நமக்கு இருப்பது நிலத்தடி நீர்
ஒன்றுதான. அதை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்ற
ஒரு முறையான திட்டம் நமக்குத் தேவை. அந்தத் திட்டத்தை
எப்படித் தயாரிக்கப் போகிறோம் என்பதுபற்றியும் தெரிவித்திருக்
கிறார்கள். அதனை நான் பாராட்டுகிறேன்.

[முற்பகல் 11-50]

குறிப்பாக சில மாவட்டங்களில் அதாவது தர்மபுரி
மாவட்டம், வடாற்காடு மாவட்டம் இப்பேர்ப்பட்ட மாவட்டங்
களில் எல்லாம் ஜீவநதி எனபது கிடையாது. பாலாறு இருக்
கிறதென்று சொன்னாலும் பாலாற்றிலே நிலத்திற்கு [illegible]
[illegible] நிலத்தடி நீர்தான் இருக்கிறது என்று [illegible]
[illegible] இருக்கிறார்கள். இப்போது அதைக்கூட நாம்



1978 மார்ச் 8] [திரு. எம். ஏ. லத்தீப்]

குடிநீருக்காகப் பாலாற்றுப் படுகைகளிலே இருக்கக்கூடிய
அத்துணை நகரங்களுக்கும் அந்த நிலத்தடி நீரைப் பயன்படுத்திக்
கொள்வதற்குத் திட்டங்கள் ஆரம்பித்து இருக்கிறார்கள்.

இதைத் தவிர அங்கே பல தொழிற்சாலைகள் ஏற்பட்டு
வருகின்றன. சர்க்கரைத் தொழிற்சாலை, தோல் பதனிடும்
தொழிற்சாலை போன்றவை மட்டுமல்லாமல் வேறு பலவிதமான
தொழிற்சாலைகளும் அங்கே ஏற்பட்டுவிட்ட காரணத்தால்
பாலாற்றிலே இருக்கக்கூடிய அந்த நிலத்தடி நீர்கூட குறைந்
துகொண்டு வருகிறது. அந்தத் தொழிற்சாலைகளுக்கெல்
லாம் அநத நீரைப் பயன்படுத்துவதால் நீண்ட காலத்திற்கு
அந்த நிலத்தடி நீர்கூட இருக்குமா என்பது சந்தேகம்தான்.
இது ஒரு அபாயகரமான சூழ்நிலையை ஏற்படுத்தும். அதைத்
தவிர்க்க திட்டம் தீட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய முன்னோர்கள் தீர்க்கதரிசனமாக நல்ல பல
காரியங்களைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் பாலாற்றுப்
படுகைகளில் நீர்த் தேக்கங்களையும் ஏரிகளையும் கட்டி வைத்
திருக்கிறார்கள். மழை அதிகமாகப் பெய்கின்ற காலங்களில்
ஒரு ஏரியிலே நீர் நிறைந்து விட்டால் மற்றொரு ஏரிக்குச்
செல்லக்கூடிய அளவிலே அமைத்திருக்கிறார்கள். அந்த அள
விற்கு நம்மால் அமைக்க முடியுமா என்றால் அது சந்தேகம்
தான். அவ்வாறு அவர்கள் இவ்வளவு சிறப்பாக
அமைத்திருப்பது பிரமிக்கத்தக்க வகையிலும் மகிழ்ச்சி
யுறத்தக்க வகையிலும் இருக்கிறது. அந்த மிகப்
பெரிய ஏரிகளை எல்லாம் இப்போது யாரும் கைப்
பற்றி ஆக்கிரமிப்பு செய்யாமல் இருக்கிறார்களா என்றால்
இல்லை என்ற பதில்தான் வருகிறது. இதை மிக்க வருத்தத்
தோடு தெரிவித்துக்கொள்கிறேன். பல மாவட்டங்களிலே
இந்த நிலைமை இருக்கிறது. ஏரிகளை இன்றைக்கு நீங்கள்
பார்த்தால் பெரிய மழை பெய்து பூதாகரமாக நீர் வந்து
படுகைகளிலே நீர் தேங்குகிறது. அந்த நிலைதான் இருக்
கிறது. அவைகளினால் வாய்க்கால் வெள்ளமாக ஓடி பயிர்கள்
எல்லாம் பாதிக்கப்படுகின்றன.

ஏரிகளின் படுகைகளில் எல்லாம் ஆக்கிரமிப்பு செய்யப்
பட்டு அங்கே வீடுகளெல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. பொது
மக்கள் அவ்வளவு துணிச்சலாகச் செய்திருப்பார்களா என்று
சொன்னால், அப்படிப் பொதுமக்கள் செய்தால்கூட பின்னணி
யாக இருந்து, அதைப் பொறுப்போடு கவனிக்க வேண்டிய
அதிகாரிகள்தான் பொதுமக்களோடு தொடர்பு கொண்டு
செய்திருக்கிறார்கள்

[திரு. எம். ஏ. லத்தீப்] 1978 மார்ச் 8]

பல ஏரிகளிலே வில்லேஜ் கர்ணம், வில்லேஜ் முன்சீப்கள் அவர்களுடைய தொடாபுடன் வில்லேஜ் ஆபீஸர்ஸ், ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது. ஏரிகளிலே அடிப்படையான பரிகாரம் இதைத் தவிர்க்க துறை, பொதுப்பணித்துறை அவர்கள் தயவுசெய்து விவசாயத் சேர்ந்து வாட்டர்-டைட் கம்பார்ட்மெண்ட் இருவரும் ஒன்று துறைகள் கருதாமல் பொறுப்போடு இரு துறைகளும் சேர்ந்து செயல்பட வேண்டும். மாதிரி இந்தத்

There should be co-ordination and judicious co-operation between various departments.

இந்த விவசாயத் துறையை அணுகினுல் இணைப்புக் கொடுப்பதற்கு இது பொதுப்பணித்துறை அவர்கள் மின் தப்பட்டது என்று சொல்கிருர்கள். துறையை அணுகினுல் அது விவசாயத் பொதுப்பணித் வடிக்கை எடுக்க வேண்டுமென்று துறைதான் நட டிப்பார்ட்மெண்ட்கள் ஒன்ருெடொன்று சொல்கிருர்கள். இந்த வேண்டும். எந்த எந்த இடங்களில் இணைந்து செயல்பட தெந்த இடங்களில் மின்சார மின்சாரம் தேவை எந் என்பதைப் பரிசீலித்து சரிவர இணைப்பு கொடுக்க வேண்டும் பராமரிக்க வேண்டும்.

Inter departmental co-ordinatd activities வேண்டும். இல்லாவிட்டால் நிச்சயமாக முன்னேற்றம் இருக்க காது. பொதுப்பணித்துறையும் விவசாயத் துறையும் இருக் டும் சேர்ந்து எந்தெந்த வகையிலே நடவடிக்கை இரண் வேண்டுமோ அந்தந்த வகையில் நடவடிக்கை எடுக்க டும். ஏதாவது சிக்கல் இருந்தால் அவற்றை எடுக்க வேண் டும். ஆக்கிரமிப்புகளைத் தடுக்க வேண்டும். அகற்ற வேண் வடிக்கைகள் எடுக்கவில்லை என்ருல் இனிமேல் சரியான நட பாசன வசதிக்கு முறையான, விரிவான வாய்ப்பு தமிழ்நாட்டுக்குப் என்று அரசுக்குச் சொல்லிக்காட்டுவதோடு இருக்காது வருங்காலத்தில் நீடிக்குமானுல் பாதகமான இதே நிலைமை என்பதையும் சொல்ல விரும்புகிறேன். நிலைமை ஏற்படும் துறைகள் முயற்சிகளை எடுக்க வேண்டுமென்றும் சம்பந்தப்பட்ட பரிசீலிக்க ஒரு கமிஷன் அல்லது ஒரு கமிட்டி இவைகளைப் விலே கூட ஏற்படுத்தலாம் அல்லது மாநில அள கமிஷன் அமைக்கலாம் அல்லது அவசியமானுல் ஒரு டெவலப்மெண்ட் என்ற அமைப்பை ஏற்படுத்தி இரிகேஷன் சோர்சஸ் இரிகேஷன் சோர்ஸ், ஏரிகள், கண்மாய்கள் ஆகியவைகளைச் சரிவர பராமரிப்பதற்கு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1978 மார்ச் 8] [திரு. எம். ஏ. லத்தீப்]

அதோடு அந்தப் படுகைகளிலே ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருந்தால் யாராக இருந்தாலும் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். அது லத்தீபாக இருந்தாலும், மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலுவாக இருந்தாலும் அல்லது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதியாக இருந்தாலும் அல்லது துரை கோவிந்தராஜனுக இருந்தாலும் வேறு யாராக இருந்தாலும் நிர்த்தாட்சண்யமாக அந்தப் பகுதியிலே ஆக்கிரமிப்புகள் செய்து கொண்டிருந்தால் அகற்றப்பட வேண்டும். அப்போதுதான் வருங்காலத்தில் நிலைமை சீர்படும்.

யாராக இருந்தாலும் சரி, இங்கே எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞராக இருந்தாலும் சரி யாராக இருந்தாலும் சரி நிர்தாட்சண்யமாக ஏரிப் படுகைகளிலிருந்து அல்லது கால்வாய்களிலிருந்து ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட வேண்டும். அதற்கு இந்த அரசுக்குத் துணிவு வேண்டும்.

எனவே ஆக்கிரமிப்புகளை, யார் செய்திருந்தாலும் அங்கிருந்து அவர்கள் அகற்றப்பட வேண்டும். அப்படிச் செய்யவில்லை என்ருல் அரசு அதைப்பற்றிக் கவலைப்படவில்லை என்ற குற்றச் சாட்டுக்கு நீங்களும் ஆளாவீர்கள், நாங்களும் ஆளாவோம் என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு வட ஆர்க்காடு மாவட்டத்தில் திரு. ஆறுமுகம் ஐ.ஏ.எஸ்., அவர்கள் கலக்டராக இருந்த போது நான் அவர்களை அழைத்துக் கொண்டுபோய் பல இடங்களை காட்டினேன். அந்த ஆக்கிரமிப்புகளை எல்லாம் உடனே அகற்ற வேண்டும் என்று அவர்கள் அங்கேயே உத்தரவு பிறப்பித்தார்கள். என் தொகுதியில் மட்டுமல்ல, எல்லா இடங்களிலும். ஆனுல் இன்றுவரை அவை அகற்றப்படவில்லை. கீழேயுள்ள அதிகாரிகள் அவர் என்ன சொல்வது, வேலூரில் உட்கார்ந்து கொண்டு சொல்வது அதை நாங்கள் நடத்துவதா என்று கிராம ராஜாக்கள் என்று முறையில் சிலர் நடந்து கொண்டிருப்பதும், பலவித டெக்னிக்கல் டிபிகல்ட்டீஸ் இருப்பதாகவும் சொல்கிருர்கள் — ஆண்டவனுக்குத்தான் தெரியும் அந்த டெக்னிக்காலிட்டீஸ் என்ன என்று, பீஸிபிலிட்டி இல்லை, பாஸிபிலிட்டி இல்லை என்று கூறி ஏற்பட வேண்டிய முன்னேற்றங்களை யெல்லாம் தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தால்

"There is only one possibility, and that is the possibilities feasibilities and technicalities will be shattered to the ground and thrown to the dust bin."

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 8

என்ற முறையில் நாட்டின் நிலைமைகள் உருவாகுமே தவிர
நிச்சயமாக பொதுமக்கள் இதைப் பொறுத்துக் கொள்ளமாட்
டார்கள் என்று சொல்லத்தான் இதை சற்று விளக்கமாகக்
குறிப்பிட்டேன். பேசுவதற்கு ஆள் இல்லாத காரணத்தால்
இதை விரிவாகப் பேசலாம் என்றும், மற்றவர்கள் செய்ய
வேண்டிய கடமையை நானே செய்ய வேண்டியிருக்கிறது
என்பதால் சொல்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : இந்த அவையில் பேசுவதற்
காக எங்கள் கட்சி உறுப்பினர்கள் பலபேர்கள் இருக்கிறார்கள்.
நாங்கள் நேரம் கொடுக்காமல் இருக்கிறோம். அவர்களுக்கும்
கொஞ்சம் வாய்ப்புக் கொடுத்தால் மிகவும் நலமாகயிருக்கும்.

திரு. எம். ஏ. லத்தீப் : பலர் பேசியிருப்பதாகச் சொல்
கிறார்கள். நான்கூடக் கொஞ்சம் வெளியே போக வேண்டும்.
இன்றைக்குப் பேசுவதாக இல்லை. இங்கு வந்ததால் இந்தச்
சூழ்நிலை பேச வைத்தது. விவசாயத் துறை பற்றி எனக்கு
மேலெழுந்தவாரியாகத் தெரியுமே தவிர திரு. ராதா அவர்களைப்
போல் அவ்வளவு ஆழமாக எனக்குத் தெரியாது என்பதை
ஒப்புக்கொள்கிறேன்.

அடுத்து, ஒருசில திட்டங்கள். குறிப்பாக என் தொகுதி
அல்ல, என் பகுதி பற்றிச் சொல்கிறேன் : பாலாற்றில்
புல்லூர் என்ற இடத்தில் ஒரு நீர்த் தேக்கம் கட்ட
வேண்டும், அதன் மூலம் நீர் ஆதாரத்தைப் பெருக்க வேண்
டும் என்று 1952-ல் அரசு குறிப்பு அதை ஒத்துக்
கொண்டது. அதில் சில வெஸ்டட் இன்டரஸ்ட்ஸ்
அந்த புல்லூர் அணை கட்டுவதினால் நம் நிலத்திற்கு நீர் நின்று
விடுமே என்று அரசியல் செல்வாக்கு உடையவர்கள் எவ்வளவோ
நல்ல காரியங்களைச் செய்வதைப்போல் இந்த நல்ல காரியத்தை
யும் செய்து அதை இதுவரை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். கடந்த
சட்ட சபையில், அதாவது ப. உ. ச. அவர்கள் அமைச்சராக
இருந்தபோது கூட நிதிநிலை அறிக்கையின் மேல் பேசும்போது
பேசப்பட்டது. இப்போது அதற்கு ஆந்திரா அரசின் க்ளியரன்ஸ்
வேண்டும் என்று சொல்கிறார்கள். ஹைதராபாத் சென்று கேட்
டால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், இந்த அரசாங்
கத்திலிருந்து ஒரு குறிப்பும் வரவில்லை என்று சொல்கிறார்கள்.
நான் உரியவர்களிடம் இது பற்றிப் பேசினேன். எனவே தயவு
செய்து இதையும் கவனிக்க வேண்டும்.

அடுத்து, 1973–74-ல் ஆண்டியப்பனூர் அணைக்கட்டுத் திட்
டத்திற்கு ஒப்புதல் அளித்து இந்தச் சபையில் கூட நிதிநிலை அறிக்
கையில் சேர்த்து பிரகடனம் செய்யப்பட்டது. அந்தத் திட்டம்



1978 மார்ச் 8] [திரு எம். ஏ. லத்தீப்]

இதுவரை எடுத்துக் கொள்ளப்படவில்லை. காரணம் என்னவென்று
தெரியவில்லை. அமைச்சர் அவர்கள் இதுபற்றிச் சிந்தித்துப் பார்க்க
வேண்டும்.

அடுத்து ஆலங்காயம் பெரிய ஏரி திட்டத்திற்கு; ஒரு இலட்சம்
ரூபாய் திட்டத்திற்கு, 1973–74-ல் ஒப்புதல் கொடுக்கப்பட்டிருந்
தாலும் இதுவரை எடுத்துக் கொள்ளப்படவில்லை. காரணம் என்ன
வென்றால் There are certain technical difficulties
அதுதான் பதில். இதை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்
சர் அவர்களிடம் சொல்ல வேண்டுமென்று வேளாண்மைத் துறை
அமைச்சர் அவர்கள் சொல்லலாம். நான் பொதுப்பணித்துறை
அமைச்சர் அவர்களிடம் உங்கள் துறைக்காக வாதாடுகிறேன்
உங்களுக்கும் அவர்களுக்கும் தொடர்பு இருப்பதால்தான்
சொல்கிறேன்.

(நண்பகல் 12·00)

அடுத்து காவிரி பிரச்னை மிக முக்கியமான பிரச்சனையாக
இருந்து கொண்டிருக்கிறது. எப்படி இதைத் தீர்த்துக் கொள்வது
என்பதுதான் இப்போது பிரச்சனையாக இருந்து கொண்டிருக்
கிறது. இப்போது புதிய அரசு ஏற்பட்டிருக்கிறது. அதாவது
கர்நாடகத்தில் புதிய அரசு ஏற்பட்டிருக்கிறது. இப்போது,
பொறுப்பேற்றுள்ள அரசிடம் இதுபற்றி, பேச நல்ல வாய்ப்புகள்
இருப்பதாக, அரசாங்கத் தரப்பிலிருந்து அல்ல— இந்த மாநிலத்
தின் ஆளுநர் அவர்கள் கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு
உள்ளே நான் நுழைய விரும்பவில்லை. எப்படியும் இந்தப் பிரச்
சனையைத் தீர்ப்பதற்கு வழிகாண வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

மேலும், தஞ்சை மாவட்டத்தில் காவேரி டெல்டா பிரதேசங்
களில் அதிகமாகத் தண்ணீர் வருகின்ற காரணத்தால், விவசாய
உற்பத்தி செய்வதில், தரமான உற்பத்தி செய்ய முடிவதில்லை
என்றும், தண்ணீர் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் பலவித
மான கோளாறுகள் விவசாயத் துறையில் ஏற்படுகின்றன என்றும்
சொல்லுகிறார்கள். பருவ காலத்தில் அதிகமாகத் தண்ணீர் வரு
கின்ற நேரத்தில், இந்தத் தண்ணீரை இராமநாதபுரம் மாவட்
டத்திற்குத் திருப்பிவிடக் கூடாதா? தஞ்சையிலே இருக்கின்ற
குளங்கள், குட்டைகள், தடாகங்கள் இவைகளிலே தண்ணீரை
நிரப்பி வைப்பதால் எந்த விதமான பிரயோசனமும் இல்லை. இதில்
வளருகின்ற வெறும் தாமரை மலர்களைப் பார்த்து மகிழ்ச்சி அடை
ந்து கொண்டிருப்பதில் எந்தவிதமான பிரயோசனமும் இல்லை.

இப்படிக் குளங்கள், தடாகங்கள் என்றிருப்பதில் தேக்கி வைக்
கப்படுகின்ற தண்ணீரை, ஒரு அடி அல்லது இரண்டு அடி என்று,
பக்கத்திலுள்ள புதுக்கோட்டை மாவட்டத்திற்குக் கொடுக்கக்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச் 8

கூடாதா? வறட்சியால் இருக்கும் இராமநாதபுரம் மாவட்டத்திற்கு ஏன் கொடுக்கக் கூடாது? திருச்சி மாவட்டத்திலுள்ள வறட்சியான பகுதிகளுக்கு ஏன் திருப்பி விடக் கூடாது? அப்படிக் கொடுப்பது நல்லதாக இருக்கும் என்பதில் அரசு அதிகமான கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, விவசாயிகளுக்குத் தரமான விதைகள் கொடுக்கப்பட வேண்டும். எந்த விவசாயிகளுக்கு தரமான விதைகள் கொடுக்கப்பட வேண்டுமோ அவர்களுக்கு அந்த விதைகள் கொடுக்க வேண்டும். அதில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஒரு சில மாவட்டங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதைத் தெரிவிக்காமல் இருக்க முடியாது. குறிப்பாக, எங்கள் மாவட்டத்தைப்பற்றிச் சொல்வதற்கு அங்கேயும் ஆட்கள் இல்லை. காரணம் மந்திரி சபையில் எங்கள் மாவட்டத்திற்கு பிரதிநிதித்துவம் இல்லையே என்ற எண்ணம் எங்கள் உள்ளத்தில் இருந்து கொண்டிருக்கிறது. எந்தப் பொருளாக இருந்தாலும், எங்கள் மாவட்டம் புறக்கணிக்கப்பட்டு வருவதை நண்பர் திரு. மார்க்கபந்து அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

ஜோலார்ப்பேட்டையில் ஒரு பால் பண்ணை ஏற்படுத்தப் போவதாகச் சொல்லி, அதற்காகத் திட்டம் வகுத்து அதற்கான ஒப்புதல் எல்லாம் பெற்ற பிறகும், பின்னால் என்ன காரணத்தாலோ அது வேறு மாவட்டத்திற்குச் சென்று விட்டது. அமைச்சர் அவர்கள் இதற்கு என்ன தான் விளக்கத்தைக் கொடுத்தாலும், ஜோலார்ப்பேட்டையில் ஏற்படவிருந்த அந்தப் பால் பண்ணை என்ன காரணத்திற்காக வேறு மாவட்டத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் எடுத்து விளக்கினாலும் எங்கள் மாவட்ட மக்களுக்கு அது திருப்தியளிக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் கேட்டுக்கொள்வது எங்கள் மாவட்டத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட ஒரு திட்டம் எப்படியாவது எங்கள் மாவட்டத்தில் ஏற்பட வேண்டும் என்பதுதான். ஜோலார்பேட்டையில் இருந்தாலும் சரி, பேரணாம்பேட்டையில் இருந்தாலும் சரி, அதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை.

நாம் எப்போது பல திட்டங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறோம். மலைப்பாங்கான இடத்திற்கு எல்லாம் சாலை வசதியில்லை, போதுமான வசதிகள் இல்லை. அவைகளை எல்லாம் முன்னேற்ற வேண்டும் என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இப்படிப்பட்ட முன்னேற்றத்தை 20 மைல், 30 மைல் அளவுக்கு சாலை வசதி போன்ற முன்னேற்ற வசதிகளை எல்லாம் செய்து கொடுக்க வேண்டும் என்று அடிக்கடி எடுத்துச் சொல்லியும்



1978 மார்ச் 8] [திரு. எம். ஏ. லத்தீப்]

எந்த ஒரு பெரும் திட்டமும் அங்கு நடைபெறவில்லை. ஒரு ரிசர்ச் சென்டர் ஏற்படுத்தலாம் என்றால், அது ஜவ்வாது மலையிலோ ஆலங்காயத்திலோ வாணியம்பாடியிலோ உண்டா என்றால் இல்லை. ஒரு விதைப் பண்ணை இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. அரசாங்கப் பண்ணை ஏதாவது இருக்கிறதா என்றால் இல்லை.

எங்களுடைய மாவட்டத்தில் நல்ல மாம்பழம் கிடைக்கிறது. மற்ற இடங்களில் எல்லாம் கிடைப்பதை விட மிகவும் சிறப்பான நல்ல மாம்பழம். எங்கள் மாவட்டத்தில் இதை உற்பத்தி செய்கின்றவர்கள் இந்த மாம்பழங்களைக் குறைந்த விலைக்கு விற்கிறார்கள். குறைந்த விலைக்கு வெளி மாவட்டங்களுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இந்த நல்ல மாம்பழத்தைப் பயன்படுத்தி அங்கேயே ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறோம்.... ஆனால். இதுவரை........

**திரு. துரை கோவிந்தராஜன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்கள் மாவட்டத்திலுள்ள மாம்பழம்தான் மிகச் சிறந்தது என்று சொல்லுகிறார்கள். ஆனால், சேலத்து மாம்பழம் தான் சிறந்தது என்று சொல்வார்கள், எது சரி என்று தெரியவில்லை......

**திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் :** சேலத்து மாம்பழத்தை ட எங்கள் ஸ்ரீரங்கத்தில் கிடைக்கும் மாம்பழம்தான் மிகச் றந்தது. எங்கள் பகுதியிலுள்ள மாம் ழங்கள் வெளிநாடுகளுக்குக்கூட ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக் காள்கிறேன்.

**திரு. எம். ஏ. லத்தீப் :** திரு. துரை கோவிந்தராஜன் அவர் ளுக்கு திரு. சௌந்தரராஜன் அவர்களே பதில் சொல்லிவிட் டார்கள். நான் சொல்வது எங்களுடைய பிள்ளை நல்ல பிள்ளை என்று சொன்னேனே தவிர, உங்கள் பிள்ளை நல்ல பிள்ளை இல்லை என்று நான் சொல்லவில்லையே. எங்களுடைய மாவட்டத்திலிருந்து தான் மற்ற மாவட்டங்களுக்கு இது பரவியிருக்கிறது. அதிலே எந்தவிதமான சந்தேகத்திற்கும் இடமில்லை.

நான் சொல்வது என்னவென்றால், இந்த இடத்திலே பழத் தைச் சாராக்கி, அதிலேயிருந்து ஜாம் போன்ற அம் மாதிரியான பொருள்களைச் செய்வதற்கு ஒரு பழத் தோட்டத்தை இங்கே ஏன் வைக்கக் கூடாது என்பதுதான்.

அடுத்து, இந்தப் பாலைப் பற்றிச் சொல்கிறேன். இந்த பால் துறை நல்லதுதான. ரொம்ப நல்ல முறையிலே விருத்தி அடைந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வந்தபிறகு, எல்லா

[திரு எம். ஏ. லத்தீப்] [1978 மார்ச்

இடங்களிலும் '' ஆவின், ஆவின் '' என்று சொல்லக்கூடிய, ''ஆ
ஆ '' என்று சொல்லக்கூடிய மங்களத்தைக் குறிக்கின்ற, உருது
மொழியிலே ''ஆ, ஆ '' என்று சொன்னால், '' வா, வா '' என்று
அர்த்தம், அந்த வகையிலே எல்லோரும் இதிலே போய், பா
குடிக்காதவர்கள் கூட பால் குடிக்கின்ற மனப்பாங்கைப் பெற்று
விடுகிறார்கள். அது சரிதான்.

ஆனால், இதிலே குறைபாடுகளும் இருக்கின்றன.
குறைபாடுகள் எல்லா இடங்களிலும் இருக்கின்றன. இந்த
இருப்பதைப் போல். '' அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
என்பதைப்போல், இன்றைக்கு இதிலே ஊழல்கள் நிறைந்திரு
கின்றன. அதிகாரிகள் என்ன செய்கிறார்கள் என்று கேட்டால்
அவர்கள் கவனிக்காமல் இல்லை. அவர்கள் என்ன செய்வார்கள்
ஒவ்வொருவருக்கும் பின்னாலே ஒரு ஆளை அனுப்ப முடியுமா
இதிலே ''லாட் அப் பில்பரேஜ்'' நடக்கிறது. அதை முடிந்த
வரைத் தடுக்க வேண்டும். அதேபோல் இதிலே ''அ
ரேஷ''னும் நடக்கிறது. பழங்காலத்திலே
சென்னை நகரத்திலே பால் வாங்கினால், அதிலே பாதி தெரு
குழாய்த் தண்ணீர் இருக்குமென்பார்கள். சொல்வார்கள்
இதிலே அடல்ட்ரேஷன் செய்வது நல்லதல்ல. எனவே, இப்ப
பாலை கலந்து அளிப்பதிலே கொஞ்சம் ஜாக்கிரதை காட்ட வேண்
டும். சில இடங்களிலே, குப்பை, செத்தை போன்றவைகள்
இந்தப் பாலிலே இருக்கிறது. அது பார்ப்பதற்கு [illegible]
கூட இருக்கிறது. எனவே, இதையும் நல்ல முறையிலே செய்
வேண்டும்.

எல்லா இடங்களிலும் இந்தப் பால் கிடைக்கும் வகையிலே
திட்டங்கள் தீட்ட வேண்டும். குறிப்பாக, அரிசனங்களிடையே
கூட்டுறவுத் துறையில் இந்தப் பால் உற்பத்தி செய்வதை அமை
பதற்கு இந்த அரசாங்கம் முன் வரவேண்டும்.

அரிசனங்கள் முன்னுக்கு வரவேண்டும் என்று சொல்
விட்டால் மட்டும் போதாது? அவர்களை எப்படி முன்னுக்குக்
கொண்டு வர முடியும்? அவர்களுடைய பொருளாதாரத்தை
நாம் உயர்த்தினால்தான் நாம் அவர்களை முன்னேற்ற முடியும்.
பொருளாதாரத்தில் அவர்கள் உயர்ந்துவிட்டால், மற்ற எல்
லாமே உயர்ந்து விடும். இன்றைக்கு இருக்கிற ஜாதி வித்தியாசம்,
அரிசன், தாழ்த்தப்பட்டவன் என்ற குறையெல்லாம் கூட,
அவர்கள் பணக்காரர்களாகிவிட்டால் போய்விடும். பெரிய தொழி
லதிபராகிவிட்டால் போய்விடும். அமைச்சராகிவிட்டால் போய்
விடும். அப்போது அவர்கள் பின்னாலே அத்தனை பேரும் போவார்
கள். பெரிய தொழிலதிபராகிவிட்டால், அவர் பின்னாலே அத்தனை
[illegible] போவார்கள். நான் கூடப் போவேன். எனவே,
[illegible] வேண்டுமென்று சொன்னால், அவர்க



1978 மார்ச் 8] [திரு. எம். ஏ. லத்தீப்]

வாழ்க்கை நிலையிலே, பொருளாதாரத் துறையிலே முன்னேறு
வதற்கான முன்னுரிமையை அவர்களுக்குத் தர வேண்டுமென்
பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொண்டு, இந்த மானியக்
கோரிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி
கூறி அமைகிறேன்.

*திரு. ரா. அய்யாசாமி: சட்டப் பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையை
ஆதரித்து என்னுடைய தொகுதியைப் பற்றி சில வார்த்தைகள்
பேச ஆசைப்படுகிறேன்.

இருபது ஆண்டுக் காலமாக காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும்
என்னுடைய தாராபுரம் தொகுதி புறக்கணிக்கப்பட்டது. 9
ஆண்டுக் காலமாக ஆண்ட திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்
காலத்திலேயும் என்னுடைய தாராபுரம் தொகுதி புறக்கணிக்கப்
பட்டது. தாராபுரம் முனிசிபாலிடியாகி 50 ஆண்டுகளுக்கு
மேலாகிறது. அங்கே இதுவரை புதிதாக ஆஸ்பத்திரி அமைக்கப்
படவில்லை. இன்னும் அங்கே விவசாயிகளுக்கு முக்கியமாக
தண்ணீர் வசதி செய்து கொடுக்கப்படவில்லை. பி.ஏ.பி. பரம்பிக்
குளம் முதல் மடையிலே இருந்து 25 மைலுக்கு ஒரு அளவு
எடுக்கப்பட்டது. அது 19 மைலோடு நின்றுவிட்டது. எனவே,
மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் இதை
தயவு செய்து மேலும் 6 மைல்களுக்கு விரிவுபடுத்தித் தரவேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன்.

சின்னக்கரை ஓடைத் திட்டம் என்று ஒரு திட்டம் போடப்
பட்டு, 30 ஆண்டுக் காலமாகியும் இன்னும் நிறைவேற்றப் படா
மல் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரும்படி
நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். தாராபுரம் தொகுதி
யிலே விவசாயிகள் இருக்கிறார்கள். அங்கே இதுவரையிலும்
வேறு எந்தவிதமான தொழில் வசதியும் ஏற்படுத்தித் தரவில்லை.
ஒரு பால் சில்லிங் சென்டரை, தாராபுரத்திலே அமைத்துத்
தரும்படி கேட்டுக் கொள்கிறேன் விவசாயிகள் பெரும்பாலும்
மாடு, எருமைகளை வைத்து . . . . . . .

திரு. ரா. க. சு. தண்டபாணி: பாயின்ட் ஆப் ஆர்டர்,
மாண்புமிகு
தலைவர் அவர்களே, சிறிது நேரத்திற்கு முன்பு
வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் உறுப்பினர்களுக்கு
பாலோ, தயிரோ அல்லது பால் கோவாவோ வழங்குவதற்கு
ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். ஆனால்,
இங்கே நிலைமை அப்படியில்லை. எங்களுக்கெல்லாம் அப்படிச்
சரியாக, சமமாக வழங்கப்பட வில்லை. எங்களுடைய கட்சியைச்

[திரு. ரா. க. சு. தண்டபாணி] [1978 மார்ச் 8

சேர்ந்த பெரும்பாலான உறுப்பினர்களுக்கு பாலோ, தயிரோ அல்லது பால் கோவாவோ கிடைக்கவில்லை. இந்த நிலைமை எப்படி ஏற்பட்டது ?

* * *

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. ஆர். முத்தையா) இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை. தயவு செய்து உட்காருங்கள்.

[பிற்பகல் 12–10]

திரு. ரா. அய்யாசாமி : 92 லட்சம் ரூபாயில் போடப்பட்ட அந்தத் திட்டம் நிறைவேற்றப்படாமலே இருக்கிறது. அதை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தாராபுரம் தொகுதியிலிருந்து பட்டப் படிப்புக்காக மாணவர்கள் வெளியூர் செல்லுகிற சூழ்நிலை இருக்கிறது. கோவை, ஈரோடு, உடுமலைப்பேட்டை, பழனி ஆகிய ஊர்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, தாராபுரத்திலேயே ஒரு கலைக் கல்லூரியை ஏற்படுத்தித் தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மன்றத்தில் பேச வாய்ப்பளித்த மாற்றுத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

*திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, விவசாய அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையின்மீது பேச வாய்ப்புக் கொடுத்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது இதய தெய்வமாம் புரட்சித் தலைவரின் புரட்சிகரமான திட்டங்களில் ஒரு சிலவற்றை அவையில் சொல்ல விரும்புகிறேன்.

எதிர்க்கட்சியைச் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் புரட்சித் தலைவரின் புரட்சித் திட்டங்களைப் பற்றிக் குறை கூறிவருவது எப்படி இருக்கிறது என்றால்—மாமியார் உடைத்தால் மண் குடம் ; மருமகள் உடைத்தால் பொன்குடம் என்ற வாக்கியத்திற்கு இணங்க இருக்கிறது. அவர்கள் எவ்வாறு குறை கூறினாலும் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சொன்னது போல்—

"தூற்றுவோர் தூற்றட்டும்—
போற்றுவோர் போற்றட்டும்".

என்ற வகையில் நாம் ஒன்றுபட்டுச் செயல்படக் காத்திருக்கிறோம்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



978 மார்ச் 8] [திரு. ரா. கு. பெருமாள்]

விவசாயிகளுக்குத் தரமான விதை விநியோகம் செய்தல்,
25 சதவிகிதம் மானியத்தில் பூச்சி மருந்துகள் விநியோகம்
செய்தல் நெல்லை மாவட்டத்துக்குப் புதிதாக 13 லட்சம்
தென்னை வளர்த்தல், நடப்பு ஆண்டில் தமிழகத்தில் பால்—
குளிர் சாதன நிலையங்கள் 5-ஐ ரூ. 45 லட்சம் செலவில் அமைத்
தல் ; 1976–77-ல் 51 லட்சம் டன் உற்பத்தியை 1977–78-ல்
62 லட்சம் டன்னுக்கு உயர்த்தியது ; ஏறத்தாழ 9 லட்சம் டன்
அதிகமாக் உற்பத்தி செய்து தன்னிறைவு கண்டுள்ளது. அதை
நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

அதே நேரத்தில் கிணறுகளை ஆழப்படுத்துதல், கிணற்றைத்
தொளை போடுதல், வடிமுனைக் குழாய் போடுதல் ஆகியவற்றில்
முன்பு இருந்ததை விட நடப்பு ஆண்டில் ஓரளவு குறியீடு கூடி
யுள்ளது. இதையும் நான் மனமாரப் பாராட்டுகிறேன்.

முன்பு இருந்த தி.மு.க. அரசு 'கருணா நெல்', 'அஞ்சுகம்
பாசி பயிர்' என்று புதிய ரக விதைகளுக்குத் தங்களது பெயரை
யும், குடும்பத்தில் உள்ளவர்களது பெயர்களையும் வைத்திருந்
தார்கள். அதே நேரத்தில் நமது புரட்சித் தலைவர் ஆட்சி
அமைத்த பிறகு எத்தனை புதிய ரக விதைகள் கண்டு பிடித்துள்
ளீர்கள், அவ்வாறு கண்டு பிடித்து இருந்தால், முன்பு இருந்த
தி.மு.க. அரசைப் போல் இல்லாமல் விதைகளைக் கண்டு பிடித்த
வர்களது பெயரை அவ்விதைகளுக்குச் சூட்ட வேண்டுமென்ற
எனது கருத்தை அவையில் தெரிவிக்கிறேன். எனது கருத்
எனது விருப்பத்தை அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் தருமாறு
துக்கு அவையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் தருமாறு
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, எனது தொகுதியின் கோரிக்கைகளில் ஒரு சிலவற்றை
இங்கே நான் தெரிவிக்கிறேன். எனது விளாத்திகுளம் தொகுதி
மிகவும் பின்தங்கிய தொகுதி. மானாவாரி விவசாய விளை நிலங்
கள் நிறைய உள்ளன. மழை பெய்யும் காலங்களில், மழை பெய்
தாலும் அந்நீரானது விவசாயத்துக்குப் பயன்படாமல் கடலில்
கலக்கிறது. அதை மறித்து சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்
அமைத்து அதன்மூலம் பாசன வசதி செய்து தர வேண்டுகிறேன்.

அதே நேரத்தில் 'நென்மேனி' அணைக்கட்டு என்ற திட்டம்
முன்பு ஆய்வு செய்யப்பட்டு, அத்திட்டம் எகனாமிகலாக இல்லை
என்று முன்பு இருந்த அரசு நிறுத்திவிட்டது. ஆனால் நமது
புரட்சித் தலைவரின் ஆட்சிக்குப் பிறகு திரும்பவும் அதை ஆய்வு
நடத்தி விவரம் கேட்டிருந்தார்கள். அதனுடைய மதிப்பீடு,
சுமார் 1 கோடி 55 லட்சம் என்று கருதுகிறேன். இந்தத்திட்
டத்தை எகனாமிகல்—அன்—எகனாமிகல் என்று பாராமல், நடப்பு
ஆண்டில் நிறைவேற்றித் தந்தால் எனது தொகுதியில் உள்ள

[திரு ரா. கு. பெருமாள்] 1978 மார்ச் 8]

சுமார் 20,000 ஏக்கர் புன்செய் நிலம், நன்செய் நிலமாக மாற ஏதுவாகும். எனவே, இத்திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டில் மழை அதிகமாகப் பெய்த காரணத்தால் முளைத்த பயிர் அழுகியும், பல நிலங்களில் விதைக்க முடியாமலும் தரிசாக ஏற்பட்ட காரணத்தால் விவசாயிகளுக்கு வருமானமே இல்லை. எனவே, அரசு கடன் தவணைகளை ஒத்தி வைத்தும் நிலத் தீர்வைகளை ரத்து செய்தும் உத்தரவிட வேண்டுகிறேன்.

இதற்கு முதல் முக்கிய காரணம் கிராம விளைநிலங்களில் மேனி என்ற அவுடன் அல்லது அனுவாரி 30க்கும் குறைவாக பத்து அதிகாரிகள் மறுக்கிறார்கள். இதை உடனடியாக அமல் படுத்த அதிகாரிகளுக்கு அரசு ஆணையிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாய வருமானவரி வரம்பு ரூ. 10 ஆயிரமாக உயர்த்தியதைப் பாராட்டுவதோடு, காம்பவுண்டிங் முறையில் 10 முதல் 12 ஸ்டாண்டர்டு ஏக்கர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 30 என்றும் அதன்பின்பு 50, 70, 90 என்பதைக் கணிசமாகக் குறைக்க வேண்டும். ஏனெனில் விவசாய நிலங்கள் பெரும்பகுதி மழையையே நம்பி இருப்பதால் 'இந்தச் சலுகையை எனது தொகுதி மக்களுக்குச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வெள்ளம் வந்து பெரும்பகுதி மழையால் பாதிக்கப்பட்டுள்ள எங்கள் பகுதிக்கு இதைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

தற்போது பாசனத்தில் உள்ள சிறு பாசனத் திட்ட குளங்களின் நீர்பாய்ச்சி நிலங்களை ஆயக்கட்டு நிலங்களாக மாற்றாமல் புன்செய நிலங்களாக வைத்து அதிக தண்ணீர் வரி விதிக்கப்படுகிறது. இது விவசாயிகள் தாங்கமுடியாத ஒன்று. எனவே அவைகளை ஆயக்கட்டு நிலங்களாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பாசனக் குளங்களில் நீர்ப்பிடிப்பு ஆக்கிரமிப்பு செயதுகொண்டு வீணாகத் தண்ணீரைத் திறந்துவிட்டு, நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் விவசாயம் செய்துகொண்டு வருகிறார்கள். மாண்புமிகு திரு. [illegible] அவர்கள் சொன்னதைப்போன்று நானும் இதை [illegible] சொல்ல விரும்புகிறேன். அப்படி ஆக்கிரமிப்பு [illegible] பனை அகற்றுவதற்கு அரசாங்கம் [illegible] பெருமாள் அதிகாரிகளுடன் தொடர்பு [illegible] கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டு [illegible]



[திரு. ரா. கு. பெருமாள்]

1978 மார்ச் 8]

மழை பெய்து நிறைய
இந்த ஆண்டு அந்தப் பகுதிகளிலே அந்தத் தண்ணீரைத்
தண்ணீர் இருக்கின்ற காரணத்தினாலே தி.மு.க. வைச் சேர்ந்த
திறந்துவிட வேண்டுமென்ற முறையிலே விவசாய நிலங்களுக்கு
ரௌடிகள் 10, 60 பேர்கள் சேர்ந்து அதிகாரிகளிடமும் அமைச்சர்
கேடு ஏற்படுத்திவிட்டார்கள். நானும் நடவடிக்கை எடுத்தேன்.
அவர்களிடமும் தொடர்புகொண்டு லத்தீப் அவர்கள்
ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒத்துவராமல்
கூறியதைப்போன்று அது நடைமுறைக்கு இதில் தனி
போய்விட்டது, ஆகவே அமைச்சர் அவர்கள் கொள்கிறேன்.
கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் பாதிக்கப்படு
இந்த ஆக்கிரமிப்பால் நன்செய் விவசாயிகள் எல்லா குளங்
கிறார்கள். என் தொகுதியிலே பொதுவாக தலையிட்டு அந்த
களிலும் இப்படி நடக்கிறது. இதில் அரசு ஆக்கிரமிப்பைத்
அதிகாரிகளுக்கு ஆணையிட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.
தடுத்து நிறுத்த வேண்டும் என்றும்

வங்கியில் கடன்பெற்று வெட்டிய
கூட்டுறவு நில வள அந்தக் கடனுக்கு
சாயக் கிணறுகள் கெட்டுப்போனால் தேதிக்குப் பிறகு
1ம் ஆண்டு நவம்பர் திங்கள் 2ம் நீக்கம் செய்து சட்ட
ாரணம் அளிப்பதை, இந்தத் தேதியை விவசாயிகளை
ந்தம் செய்து பாதிக்கப்பட்ட நலிந்த
ங்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்தை நம்பி வாழுகின்ற
எனது பகுதியில் மேல் இருக்கின்றன. நெல்லை
ாமங்கள் 300க்கும் இருக்கும் அவரி இலையில்
வட்டத்திலே அமைக்கப்பட ஏற்படுத்தல் ஆகிய
பில் , எடுத்தல், பஞ்சாலை விளாத்திகுளத்தில் ஏற்படுத்திக்
ரண்டு திட்டங்களையும் கேட்டுக் கொள்கிறேன்.
ாடுக்க வேண்டுமென்று அதற்குத் தேவையான
க்கியமான காரணம் அதிகமாக விளைவதுதான்.
லப்பொருட்கள் அந்த பகுதியிலே வேண்டுமென்று நான் அரசை
கவே அதைச் செய்து கொடுக்க கொள்கிறேன்.
ந்த நேரத்திலே கேட்டுக்

என் தொகுதியிலே
விவசாயத்தையே நம்பி வாழும் செய்து வாழவேண்டு
ள்ள மக்கள் நல்ல தொழில்களைச் ஒன்றும், கூட்டுறவுத்
மன்றால் அங்கே சில்லிஸ் ஆயில் மில்ஸ் தொழில் கூடங்களையும்
றையிலே நூற்பு ஆலை ஒன்றும், சிறு அந்தப் பகுதியிலே
மைத்துத்தர வேண்டும். அதன் மூலமாக வாழ வகைசெய்ய
ள்ள ஏழை எளிய விவசாய மக்களுக்கு தமிழக அரசையும்
வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க
புரட்சித் தலைவர் அவர்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன்

இந்த ஆண்டிலே 50 சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டு இருக்கிறது. இப்படி 50 என்று ஆரம்பித்தால் அதிலே 500 பேர்கள் தான் வேலை செய்ய முடியும். ஆகவே 50 என்று இருப்பதை 1,000 என்று மாற்றினால் குறைந்தது 10 ஆயிரம் பேர்களாவது வேலைசெய்யக்கூடிய நிலைமை ஏற்படும், ஆகவே இதில் தனி கவனம் செலுத்த வேண்டுமென்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே விவசாயத்தையே நம்பி வாழும் ஏழை எளிய மக்கள் ரெட்டியார், கம்மார் என்ற வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருந்து வந்தார்கள். ஆனால் தி.மு.க. அரசாங்கத்தை டிஸ்மிஸ் செய்வதற்கு சில நாட்களுக்கு முன்பாக அந்தப் பட்டியலிலிருந்து அந்த வகுப்பார்களை நீக்கிவிட்டார் இன்றைய எதிர்கட்சித் தலைவரும் முன்னாள் முதமைச்சரும் ஆன கருணாநிதி அவர்கள். இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்து ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விளாத்திகுளம் தொகுயில் விளாத்திகுளத்திற்குத் தெற்கே, அர்சுண நதியும், வைப்பாறும் சேர்ந்து ஒன்றாகப் பெரிய ஆறாக ஓடுகிறது. மழை காலங்களில் இந்த ஆற்றில் பெருவாரியான வெள்ளம் வருகின்ற காரணத்தால், திருநெல்வேலி, தூத்துக்குடி, கோவில்பட்டி போன்ற பெரிய நகரங்களிலிருந்து வரும் பேருந்துகள், விளாத்திகுளம் வந்து மதுரை இராமநாதபுரம், அருப்புக்கோட்டை, வேம்பார் போன்ற பெரும் நகரங்களுக்கு விளாத்திகுளம் வழியாகச் செல்லத் தடை ஏற்படுகிறது. வருடா வருடம் மூன்று மாதங்களுக்கு மேலாக தொடர்ந்து மழை இருப்பதால் எவ்விதத் தொடர்பும் இன்றி மக்கள் அவதிப்படுகிறார்கள். மழைக் காலங்களில் காய்கறிகள் கொண்டு செல்ல முடியாமலும், தந்திக் கம்பங்கள் பழுதடைந்தும், மின்கம்பங்கள் மற்றும் தொலைபேசிக் கம்பங்கள் சாய்ந்தும் விடுவதால் மக்கள் ஒரு தீவில் வாழ்வதைப் போல வசிக்க நேரிடுகிறது.

[பிற்பகல் 12-20]

விளாத்திகுளம் தொகுதியில் சுமார் 300-க்கும் மேற்பட்ட கிராமங்கள் இருந்தும், தொழிற்கூடங்களோ, கல்வி ஸ்தாபனங்களோ ஸ்தம்பித்துப் பின்தங்கியிருப்பதற்கு இதுவே முக்கிய காரணம். ஆகவே, எனது தொகுதி மக்களின் முன்னேற்றத்திற்காக ஒரு பெரிய மேம்பாலம் கட்டி தொழில் வளத்தைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்து நன்றி கூறி அமருகிறேன், வணக்கம்.





திரு. டி. பி. மு. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரர்களே, இந்த வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீது தேசிய பார்வட் பிளாக் கட்சியின் கருத்துக்களைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

வேளாண்மைத்துறை அமைச்சரவர்கள் வேளாண்மை பற்றி 20-ஆம் எண் மானியக் கோரிக்கைக்காக கிட்டத்தட்ட 40 கோடி ரூபாய்க்கும், வேளாண்மை குறித்த மூலதனச் செலவுக்காக கிட்டத்தட்ட 12 கோடி ரூபாய்க்கும் மானியக் கோரிக்கைகளை முன் வைத்து இந்த அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

இன்றைய தினம் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன் வேளாண்மைத்துறை எந்த அளவிற்கு முன்னேறியிருக்கிறது என்பதையும், எந்த அளவிற்கு முன்னேற்றப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்புதையும் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள், அதைப்போல எனக்குப் பின்னால் பேசயிருக்கின்றவர்களும் சொன்னாலும் நான் சார்ந்திருக்கின்ற கட்சியின் சார்பாகச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

வேளாண்மை உற்பத்திப் பெருக்கம் நல்லமுறையில் இருக்கிறது என்பதை நம் முன்னால் வைத்திருக்கின்ற குறிப்புகளிலிருந்து காண முடிகின்றது. அதைப்போல தமிழ்நாட்டில் உணவு நிலைமை, உணவு தானியங்களின் கையிருப்பும் நல்ல முறையில் இருக்கிறது என்று குறிப்பிட்டிருப்பது மெத்த மகிழ்ச்சியான செய்தியாகும். அதைப்போல இந்த அளவிற்கு உற்பத்தியும், விநியோகமும் தமிழகத்தில் நல்ல முறையில் நடைபெற்றுவருகிறது என்பதைக் காணும்பொழுது புரட்சித் தலைவரவர்களின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசுக்கு இந்திய தேசிய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாகவும் நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் இன்றையதினம் வேளாண்மைத் துறையைப் பற்றி நாம் விவாதித்துக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில், வேளாண்மைத்துறை எவ்வளவு பெரிய துறை என்பதையும், அந்த வேளாண்மைத் துறையில் ஈடுபட்டிருக்கின்ற மக்கள் 75 சதவிகிதம் என்பதையும் நாட்டிலுள்ள நல்லவர்கள், நல்ல மனம் படைத்தவர்கள், ஆன்றோர்கள், அறிவு படைத்தவர்கள் அனைவரும் அறிவார்கள்.

ஆனால் 75 சதவிகிதம் மக்கள் ஈடுபட்டிருக்கின்ற வேளாண்மைத் துறையைப் பற்றிய பிரச்சினையை விவாதித்துக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்

[திரு. டி. பி. மு. பெரியசாமி] [1978 மார்ச் 8

கள் இன்றைக்கு நம்மிடமிருந்து ஆக்க பூர்வமான கருத்துக்களை அள்ளி வீசுவதற்குப் பதிலாக இன்றைக்கு வெளிநடப்பு செய்த தன் மூலமாக விவாதத்தில் பங்கு கொள்ளாமல் இருந்தாலும், 75 சதவிகித விவசாயப் பெருங்குடி மக்களின் ஒரே பிரதிநிதியாக இருக்கக் கூடியவர் புரட்சித் தலைவர் என்பதைத்தான் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஏன் ஒரே தலைவர் என்று சொல்கிறேன் என்றால், கடந்த இருபதாண்டுக் காலமாக காங்கிரஸ் கட்சி ஆட்சிபீடத்தில் இருந்தது. அதற்குப் பிறகு ஒன்பதாண்டுக் காலம் கலைஞர் கருணாநிதி தலைமையில் தமிழகத்துல் ஆட்சி பீடத்தில் இருந்தார்கள், அப்பொழுதெல்லாம் ஒதுக்கப்பட்டிருந்த விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்திற்காக எந்த அளவிற்குப் போராட்ட உணர்வைப் பெற்றிருந்தார்கள் என்ற உணர்வைத் தமிழக முதலமைச்சர் புரிந்து வைத்துத்தான் இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முற்பட்டிருக்கிறார்கள்.

உதாரணத்திற்காகச் சொல்கிறேன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறது என்றால் கிராமப் புறத்து மக்களின் வாக்குகளை வாங்கித்தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார்கள் என்ற பேச்சு தமிழகம் பூராவும் மட்டுமல்ல, பிரதான எதிர்க்கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் உறுப்பினர்களும் சொல்கிறார்கள். பாமர மக்களின் ஓட்டுக்களை வாங்கித்தான் ஆட்சிபீடத்திற்கு வந்திருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.

அந்த பாமர மக்கள் எங்கே வாழ்கிறார்கள் என்றால் கிராமப் புறங்களில் மட்டுமல்ல, எங்குமே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாமர மக்கள் எப்படிப் பாமர மக்கள் ஆனார்கள் என்று பார்த்தால் இதுபோன்று ஒரு மைனாரிட்டி வகுப்பினர் அல்லது மைனாரிட்டியினர் இந்த நாட்டை ஆண்டுகொண்டிருந்த காரணத்தினால்தான் மெஜாரிட்டி வகுப்பைச் சார்ந்தவர்கள் புறக்கணிக்கப் பட்டிருக்கிறார்கள், விவசாயப் பெருங்குடி மக்கள் புறக்கணிக்கப் பட்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை 1952-ஆம் ஆண்டு அன்றைய தினம் இதே சபையில் வீற்றிருந்த 'எங்கள் தலைவர் முத்துராமலிங்கத்தேவர் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் மீது குற்றச்சாட்டை சுமத்தினார்கள்.

அதுமட்டுமல்லாமல் விவசாயிகள் உற்பத்திசெய்யும் பொருட்களுக்கு விவசாயிகள்தான் விலைநிர்ணயம் செய்வதற்கு உரிமை வேண்டுமே தவிர விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லுக்கும், மற்றப் பொருட்களுக்கும் வேறு ஒருவர் விலை நிர்ணயம் செய்யும் உரிமை இருக்கக் கூடாது என்று 1937முல் 1959 ஆம் ஆண்டு வரையில் இந்தச் சட்டமன்றத்தில் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள்.



1978 மார்ச் 8] [திரு. டி. பி. மு. பெரியசாமி]

அதிலே ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன், விவசாயிகள் உற்பத்தி பண்ணக்கூடிய ஊற்பத்திப் பொருள்களுக்கு விலை நிர்ணயிக்கக்கூடிய உரிமை விவசாயிகளுக்கு இருக்க வேண்டுமே தவிர, மற்றவர்களுக்கு இருக்கக் கூடாது என்பதை இந்த மாமன்றத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்திருக்கிற ஆட்சியில், நெல் உற்பத்திப் பெருக்கம் அடைந் திருப்பதற்குக் காரணம், நெல் விதைகள், உரங்கள் ஆகியவை தாராளமான அளவில், சப்ளை செய்யப்படுகிறது என்பதைச் சொல்ல ஆசைப்படுகிறேன். அதே போல், மருந்துகளும் நல்ல முறையில் சப்ளை செய்யப்படுகிறது. ஆனால், விலை உயர்ந்த மருந்துகள் கிடைப்பதில், சில நேரங்களில் தடங்கலாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மொத்த முள்ள 70 சதவிகிதம் விவசாயிகளில், 90 சதவீதத்தின மிகவும் பின் தங்கிய, ஏழை விவசாயிகள், அவர்கள் உற்பத் பண்ணக்கூடிய பொருள்களுக்கு விலை நிர்ணயிக்கக்கூடிய நிலை அவர்களுக்கு அளிக்க வேண்டும். வாங்குகிற பொருள்கள் வி அதிகமாக இருக்கிறது. விற்கிற பொருள் விலை மிகவும் குறை வாக இருக்கிறதென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, விவசாயிகள் என்னென்ன வாங்குகிறார்களோ, அவ தேவையோ, அவற்றை நியாய விலையி களுக்கு என்னென்ன வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறே அவசியம். கொடுக்க வேண்டுமென்று கொடுக்கக் கூடிய நேரத்தில், விவசா விவசாயிக்கு அதைக் கொடுக்கக் கூடிய மருந்து போன்றவற்றின் விலை எந்த அ களுக்குத் தேவையான மருந்து போன்றவற்றின் விலை எந்த அ உயர்ந்திருக்கிறது என்பதையும் கிராமப்புற மக்கள் எவ்வ தூரம் அல்லல்படுகிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் நா சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எனவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர செய்யக் கூடிய நேரத் கள், இந்த நிலையைப் போக்க ஆவன செய்யக் கூடிய நேரத் உயர்ரக நெல் விளைச்சல் என்று பேசுகிறோம். பயிர் பாதுகா இன்ஷூரன்ஸ் இல்லாமல், உயர்ரக நெல் இருப்பது மிக நல்லதல்ல என்று சொல்ல ஆசைப்படுகிறேன்..

உயர் ரக நெல்லுக்கு நாம் நவீன மருந்துகளை அடிக்க வேண்டியிருக்கிறது. அந்த மருந்துகளை அடிக்கும் போது, புதுப் புது விதமான நோய்கள் பயிர்களுக்கு வருகின்றன. அம்மாதிரி நோய்களால், பயிர்கள் ஏன் தாக்கப்படுகின்றன என்பது பற்றி இன்னும் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் இன்னும் உத்தரவாதம் இல்லையென்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

[திரு. டி. பி. மு. பெரியசாமி] 1978 மார்ச் 8]

எனவே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரவர்கள் பொறுப்பேற்ற பிறகு நல்லமுறையில் மருந்துகள் விநியோகம் செய்யப்பட்டிருந்தாலும், கூட, சில நேரங்களில், கிராமப் புறங்களில் விநியோகிக்கப்படவில்லை யென்று சொல்லப்படுகிறது. அந்தக் குறைபாடுகளைப் போக்க வேண்டுமென்று விவசாயத் துறை அமைச்சரவர்களை நான் கேட்டுககொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே, நிதிநிலை அறிக்கையில், பயிர் பாதுகாப்பு இன்ஸ்யூரன்ஸ் செய்வதற்கும், கால்நடை இன்ஸ்யூரன்ஸ் செய்வதற்கும் உத்தரவாதம் கொடுத்திருந்தார்கள். ஆகவே, உடனடியாகப் பயிர் பாதுகாப்பு இன்ஸ்யூரன்ஸ், கால்நடை இன்ஸ்யூரன்ஸ் ஆகியவற்றிற்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று மிக்கப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில், ஒன்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். 1937-ம் ஆண்டு முதல், 1967-ம் ஆண்டு வரை இந்த மன்றத்தை அழகுபடுத்தியது காங்கிரஸ் மந்திரிசபை, அதற்குப் பின்னால் நடந்த ஆட்சியிலே மதுரை, இராமநாதபுரம் மிகவும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, முதுகுளத்தூர் மிகவும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொண்டு, இனிமேல், வேளாண்மைத் துறை பற்றிய கல்லூரியை முதுகுளத்தூர் வட்டத்தில் அமைத்து, அந்த முகவை மாவட்டத்தை ஆண்டாண்டுக் காலமாக புறக்கணித்ததற்குப் பரிகாரம் காணவேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அங்கு ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைப்பதன் மூலமாக அங்கு வாழக்கூடிய வேளாண்மைப் பெருங்குடி மக்களின் துயரைப் போக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிற அதே நேரத்தில், வேலை வாய்ப்புகளில், படித்த விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு, மேற்கே ஓடுகிற கேரள ஆற்றுத் தண்ணீரைத் தமிழகத்திற்குக் கொண்டு வர மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பேச்சு வார்த்தை நடத்தி, நல்ல சுமுகமான நிலை ஏற்பட்டிருக்கிறது என்று இங்கு சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-30.]

அப்படி ஒரு நல்ல முயற்சியை எடுத்துக் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நேரத்தில் அந்தக் கேரள ஆற்று நீர் வருமேயானால் இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை பகுதியிலே உள்ள மக்கள் எங்கள் தலைவர் தேவர் அவர்களை எப்படி பூஜிக்கிறார்களோ, அதைப்போல உங்களையும் என்றென்றும் தங்கள் இதயத்தில்



1978 மார்ச் 8] [திரு. டி. பி. மு. பெரியசாமி]

வைத்து பூஜிப்பார்கள் என்று சொல்லிக் கொண்டு, அந்தக் கேரள ஆற்று நீரைக் கொண்டு வரும்படி வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

விலை நிர்ணய கமிட்டி என்று ஒன்றிருக்குமானால் அதிலே உண்மையான விவசாயிகளைப் போட வேண்டும். விவசாயிகள் என்ற பெயரிலும், தொழிலதிபர்களான டி. வி. எஸ்., பொள்ளாச்சி மகாலிங்கம் போன்றவர்கள் இந்தக் கமிட்டியிலே இருந்தால், விவசாயிகளுக்கு எந்த விதமான நன்மையும் இருக்காது. இதைத் தடுத்து விவசாயிகளுக்கு நியாயமான உதவிசெய்து அவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் எங்கு பார்த்தாலும் பேசப்படுகிறது.

'' உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர் ''. என்று

அந்தப் பாட்டைப் பாடிய வள்ளுவரைப் படமாக்கிப் போட்டு தங்களைக் காப்பாற்றிக் கொண்டார்களே தவிர, அந்த வள்ளுவர் சொன்னதைச் செய்யவில்லை என்று சுட்டிக்காட்டி, இந்திய தேசிய பார்வார்டு பிளாக் கட்சிக்கு, யார் ஆட்சி செய்கிறார்கள் என்பது பிரச்சினை அல்ல, யார் நாட்டுக்கு நன்மை செய்கிறார்களோ, அவர்களை வாழ்த்தி, வரவேற்று நன்றிகூறி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது என்று கூறி, பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. தா. சாமிக்கண்ணு: பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மானியக் கோரிக்கையின் மீது விவசாய முன்னேற்றத்திற்காக சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு விவசாயிகளுக்கு வேண்டிய உரம், பூச்சி மருந்துகள் ஆகியவைகள் தாராளமாகக் கிடைக்கின்றன. விவசாயிகள் மிகவும் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள். பயிர்கள் அதிகமான அளவில் விளைந்திருக்கிற காரணத்தினாலே, விலைவாசிகள் இன்றைக்கு நாட்டிலே குறைந்திருக்கின்றன. ஆகவே, புரட்சித் தலைவருடைய ஆட்சியை நாட்டு மக்கள் மிகவும் பாராட்டுகின்றார்கள். என்னுடைய தொகுதியில் இன்றைக்கு அரிசன மக்கள் கூலி வேலை கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அங்கிருக்கும் காட்டிலாகா புறம்போக்கு நிலங்களை, நத்தம்புறம்போக்கு நிலங்களை அரிசனங்களுக்குப் பட்டா செய்து கொடுத்தால் அரிசன மக்கள் நம்முடைய புரட்சித் தலைவருடைய ஆட்சியை காலம் எல்லாம் மறக்கமாட்டார்கள். ஆகவே, இதனை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே கப்பநத்தம் பகுதியிலே அணை கட்ட வேண்டும். அந்த அணையைக் கட்டினால் பல ஏக்கர் நிலங்கள் விவசாயிகளுக்குப் பயன்படும். ஆகவே, இந்த அணையைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், என்னுடைய தொகுதியில் 40, 50 வருடங்களாக ஏழை எளிய மக்கள் புறம்போக்கு நிலங்களை ஒட்டிக் கொண்டி ருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த நிலத்தைப் பட்டா செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொண்டு மானியக் கோரிக்கையை வர வேற்று முடித்துக் கொள்கிறேன்.

*<u>திரு. வி. கொ. சின்னசாமி</u>: பேரவைத் தலைவரவர்களே, உலகத்திற்கே சோறு போடுகின்ற, உழவுத் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிற உழவர் பெருமக்களுக்கு பேருதவி செய்யும் வகையிலே குறிப்பாக சிறு விவசாயிகளை வாழ வைக்கின்ற வகை யிலே பெரும் திட்டங்களை உள்ளடக்கிய இந்த வேளாண்மைத் துறை மானியத்தை நான் பாராட்டி, வரவேற்று ஒரு சில கருத் துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய கோவை மாவட்டத்தைச் சேர்ந்த பவானிசாகர் தொகுதியில் ஏராளமான தரிசு நிலங்கள் இருக்கின்றன. அங்கே ஆடுகள் மேய்வதற்கு வசதியாக புல்வெளிகள் இருக்கின்றன. ஆகவே, அங்கே ஒரு மிகப்பெரிய ஆட்டுப்பண்ணை ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டால் அது நல்ல திட்டமாக இருக்கும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அவ்வாறு ஒரு ஆட்டுப் பண்ணை ஏற்படுத்தினால், அங்கே ஆட்டு இறைச்சி ஆட்டு ரோமத்தால் கம்பளி போன்றவற்றை உற்பத்தி செய்ய உதவியாக இருக்கும். அந்தப் பகுதியில் இருக் கும் மக்களுக்கும் வேலை வாய்ப்புத் தருவதற்கு உதவியாக இருக் கும் எனபதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படித் துவக்கப்படும் ஆட்டுப் பண்ணையை பவானிசாகரிலேயே ஏற் படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், 23 இலட்சம் செலவில் 3,000 ஹெக்டர் பரப்பில் தோப்புகள் ஏற்படுத்துவதாக இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்கள். அந்தக் குறிப்பைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். அந்தத் திட்டத்தை பவானி சாகர் தொகுதியில் ஏற்படுத்திக் கொடுத்தால் நன்மையாக இருக் கும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில், கடந்த மாதத்தில் அமைச்சர் அவர்கள் பவானிசாகர் தொகுதியில் சுற்றுப் பயணம் செய்தார்கள். பவானிசாகர் பகுதிக்கு அவருடன் நானும் சென்று [illegible]. அந்தப் பகுதி எப்படிப்பட்ட பகுதி என்பதை அமைச்



சர் அவர்கள் நன்ருக அறிவார்கள். பவானிசாகரில் அதிகாரிகள் ஒரு அழகான விவசாயக் கருத்தரங்கை ஏற்பாடு செய்து இருந்தார்கள். அந்தக் கருத்தரங்கிலே பல பிரச்னைகளை விவ சாயிகள் தெரிவித்தார்கள். நான் கூட அமைச்சர் முன்னிலை யிலே கூறினேன், அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வதாக அந்த மக்கள் முன்னிலையிலேயே வாக்குறுதி கொடுத்தார்கள். அதை நிச்சயமாக நிறைவேற்றுவார்கள் என்று நான் அந்த விவ சாயப்பெருங்குடி மக்களிடம் கூறினேன். அமைச்சர் அவர்கள் கூறியதை நிச்சயம் நிறைவேற்றித் தரவேண்டும் என்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அங்கு தெங்குமராடா பகுதியில் இருக்கும் விவசாயிகளுக்கு ஒரு கூட்டுறவுப் பண்ணை கூட்டுறவுத் துறையில் அரசு நிறுவி யுள்ளது, அதேபோல் மங்களப்பட்டியில் ஒரு கூட்டுறவுப் பண் ணையை ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அந்தக் கோரிக்கை குறித்து அவ்ர்களும் நானும் விண்ணப்பங் கள் அரசுக்கு அனுப்பி இருக்கிறோம். தெங்குமராடாவில் அமைச் சர் அவர்களிடத்தில் அந்தப் பிரச்னை பற்றி மக்கள் பேசினார்கள். கூட்டுறவு அமைச்சர் அவர்களிடத்திலும், வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் விண்ணப்பம் நான் கொடுத்து அந்த விண்ணப்பத்தின் காரணமாக கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவுத் துறை துணைப்பதிவாளர் அந்த விண்ணப்பத்தை ஆய்வு செய்து, மங்களபட்டியில் கூட்டுறவுப் பண்ணை அமைக்கச் சாத்தியக்கூறுகள் இருக்கிறது என அரசுக்கு அனுப்பி இருப்ப தாகவும் தெரிகிறது. ஆகவே, அங்கேயொரு கூட்டுறவுப் பண் ணையை, தமிழக அரசு, புரட்சித் தலைவர் அரசு, ஆரம்பித்துக் கொடுத்து உதவ வேண்டும் எனறு தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12–40)

அதோடு பல்லாயிரக்கணக்கான தரிசு நிலங்கள் பவானிசாக ரில் உள்ளன. அங்கே முந்திரி பயிர் அரசாங்கத்தால் செய்ய பட்டு வருகிறது. இன்னும் அங்கே முந்திரி பயிரிடும் திட்டத்தை விரிவுபடுத்தினால் நூற்றுக்கணக்கான மக்களுக்கு வேலையும் கிடைக்கும். அரசாங்கத்திற்கும் நல்ல லாபம் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, பவானிசாகர் ஆயக்கட்டு பகுதியிலே கடந்த நெல் போகத்தில் மிகவும் பயங்கரமான பூச்சிகளால் பயிர் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. எத்தனையோ பூச்சிக்கொல்லி மருந்து களைப் போட்டும், அடித்தும் அந்த பயங்கரமான புகையான் பூச்சி களை அழிக்க முடியவில்லை. இதை அங்கே நடைபெற்ற விவ சாயக் கருத்தரங்கிலும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்; என்வே,

[திரு. வி. கெ. சின்னசாமி] [1978 மார்ச் 8

டமும் சொன்னார்கள். விவசாயத்தில் நாம் முன்னேறியிருந்
தாலும் எவ்வளவு மருந்துகள் கண்டுபிடிக்கபட்டிருந்தும் இந்த
புகையான் பூச்சிகளை அழிக்க முடியவில்லை என்பது வருந்தத்
தக்கது. புகையான் பூச்சிகளை ஒழிக்கவில்லை என்றால் நிச்சயமாக
உணவுப் பஞ்சம் ஏற்பட்டுவிடும். ஆகவே, இதில் அக்கறை
கொண்டு வெளிநாட்டிலிருந்தாவது மருந்துகளை இறக்குமதி
செய்து அல்லது அறிஞர்களை வரவழைத்து, இந்தப் புகையான்
பூச்சிகளை ஒழித்தே ஆகவேண்டும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான பவானிசாகரில் ஒரு பகுதி மிகவும்
வறட்சியான பகுதி. அங்கே நிலக்கடலை பயிர் செய்யும்போது அர
சாங்கத்திலிருந்து மானியமாக மருந்து அடிக்கப்படுகிறது. அது
ஏதோ ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு மட்டும்தான் அடிக்கிறார்கள்
என்று சொல்கிறார்கள். அப்படியில்லாமல் எல்லா இடங்களிலும்
சிறு விவசாயிகள் எல்லாம் பயனடையும் வகையில் மருந்தை
மானியமாக அடித்து, விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னும் ஒரே ஒரு கருத்தைச் சொல்லி..........
(மணியடிக்கப்பட்டது,

திரு. மொ. பெரியசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு
வேளாண்மை அமைச்சரவர்கள் அளித்துள்ள மானியக் கோரிக்
கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு
கிறேன்.

''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்''

என்ற வள்ளுவர் வாக்குப்படியும்,

''ஓதுவா னெல்லாம் உழுவான் தலைக்கடை''

என்ற ஔவையார் சொற்படியும்,

''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்''

''தனி ஒருவனுக்கு உணவில்லை யெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்''

என்ற பாரதியின் கனவுகளை நனவாக்கவும் எங்களது புரட்சித்
தலைவரின் ஆட்சி ஏழை விவசாயிகளுக்கும் உற்பத்தியாளர்களுக்
கும் பல நன்மைகளைச் செய்து வருகிறது.



1978 மார்ச் 8] [திரு. மொ. பெரியசாமி]

சமீப காலத்தில் இயற்கையின் சீற்றத்தால் வெள்ளத்தில்
சேதமடைந்த விவசாயிகளுக்குத் தாளடி பயிர் செய்வதற்கு இலவச
நெல் விதை வழங்கல், விவசாயிக்குத் தேவையான தாளடி சம்பா
பயிருக்கு 25 சதவிகிதம் மானியத்தில் உரம் வழங்குதல், பயிர்
பாதுகாப்பு மருந்துகள் அனைவருக்கும் 25 சதவீதம் மானியத்தில்
வழங்குதல், மண்மேடிட்ட பஞ்திகளுக்கு குத்தகைதாரர்களுக்கு
இலவசமாகவும் நிலச் சொந்தக்காரர்களுக்கு 50 சதவிகிதம் மானிய
மும் வழங்குதல், வெற்றிலை, கரும்பு போன்ற பயிர்களுக்கு ரூ. 500
வரை உதவித் தொகை வழங்குதல் போன்ற நல்ல பல காரியங்
களைச் செய்துவரும் இந்த அரசை மனமாரப் பாராட்டுகிறேன்.
விவசாயிகள் அனைவரும் பாராட்டுவர் என்பது திண்ணம்.

நாட்டின் பற்றாக்குறை
வருங்கால தேவையை அனுசரித்தும் கண்டுபிடித்து அவற்றைத்
யைப் போக்கவும் புதிய ரக விளைச்சலைக் வரவேற்கத்தக்கதாகும்.
தீவிரப்படுத்தி அமுல்படுத்தி வருவது

விவசாயத்தில்
இவ்வரசு மேடான நிலங்களை சமன்படுத்தி குறைந்த வாடகைக்கு
உற்பத்தியைப் பெருக்க நவீன கருவிகளை சிறப்பான அம்ச
ஏற்பாடு செய்து வழங்கிவருவது ஒரு
மாகும்.

வீட்டுத் தோட்டத்தில்
நகர்ப்புறத்திலும் கிராமத்திலும் தேவைகளைப் பூர்த்தி செய்து
காய்கறிகள் பயிர் செய்து சொந்தத் வழங்குவது பாராட்டத்
கொள்ள அரசு உயர்ந்த ரக விதைகளை
தக்கதாகும்.

விவசாயத்தில் பழமையைப் போக்கி நவீன முறையைப்
புகுத்தி உற்பத்தியை அதிகரிக்க பயிற்சி அளிக்க இருப்பதும்
அதற்காக இத் திட்டத்தில் பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்க இருப்
பதும் விவசாயிகளின் வாழ்வில் மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்கும்
என்பது திண்ணம்.

வேளாண்மை பொறியியல் பிரிவு பல்வேறுவிதமான கருவி
களைக் கொண்டு நில அபிவிருத்தி, மண் மற்றும் நீர்வள பாது
காப்பு, நீர் பராமரிப்பு, சிறுபாசனப் பணிகள் போன்றவற்றை
மேற்கொள்வது சிறப்பான அம்சங்களாகும்.

பிற்பட்ட பகுதிகள் மற்றும் மலைவாழ்வு மக்களின் நலனில்
அக்கறை கொண்டு அரசு பல நல்ல திட்டங்களைத் தீட்டி, செயல்
பட்டு வருகிறது. பொதுமக்களுக்குப் பால் உற்பத்திச் சங்கங்
கள் அமைத்திட வேண்டும். விருத்தாசலத்தில் ஒரு பால் பதனி
டும் குளிர் சாதனம் அமைத்திட வேண்டும்.

எனது மங்களூர் தொகுதியில் ஆழ்கிணறு திட்டத்தில் கிணறு
வெட்டுதல், நிலச் சீர்திருத்தம் செய்தல் போன்ற பணிகளை மேற்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. மொ. பெரியசாமி] [1978 மார்ச் 8

என்னுடைய மங்களூர் தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. அங்கே பஸ்போக்குவரத்து அதிகமாக இல்லாததால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதனால் குறிப்பிடும் ஊரிலிருந்தது திட்டக்குடி-புலிவலம்-கி. கீரனூர், மேல் ஆதனூர், ஆவட்டி-புடையூர் போன்ற ஊர்களுக்கு மினி பஸ்கள் விட ஏற்பாடு செய்யப்பட்டும், இதுநாள்வரை செயல்படவில்லை. ஆகவே, அங்கே உடனடியாக மினி பஸ்கள் விட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கள்ளக்குறிச்சி-சின்னசேலம்-தோட்டப்பாடி-கருந்தலா குறிச்சி வழியாக பனையாத்தூர்-லட்சுமணபுரத்தை இணைத்து திட்டக்குடி அடைவதற்கு பஸ் விட்டால் சுமார் 30 ஆயிரம் மக்கள் பயன் அடைவார்கள்.

அதேபோல சின்னசேலம் தொகுதியைச் சேர்ந்த கள்ளக்குறிச்சியிலும், அதைச் சுற்றிலுமுள்ள பகுதிகளிலும் மரவள்ளிக்கிழங்கு நிறைய விளைகிறது. எனவே கள்ளக்குறிச்சியில் 'சேகோ' பேக்டரி ஒன்று ஏற்படுத்தித்தர இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு. அ.மா. பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர், கொண்டு வந்திருக்கக்கூடிய வேளாண்மைத் துறை மானியத்தை வரவேற்றுப் பேசுவதில் உள்ளபடியே மகிழ்ச்சியடைகிறேன்.

வேளாண்மைத் துறையிலும் வேளாண்மைப் பல்கலைக் கழகத்திலும் பல்வேறு பயிர்களுக்குப் புதிய இரகங்களைக் கண்டுபிடித்து உணவு உற்பத்தியைப் பெருக்க நமது புரட்சித் தலைவர் அரசு கொண்டு வந்திருக்கக்கூடிய நல்லபல திட்டங்களை உள்ளபடியே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சிறு விவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் சிறு விவசாயிகளுக்குத் தாளடிப் பயிருக்கு இலவச விதை, நெல் அளித்தல், நெற்பயிருக்கு இடவேண்டிய ரசாயன உரத்திற்கும், பூச்சி, பூஞ்சாள மருந்துகளுக்கும் 25 விழுக்காடு மானியமாகக் கொடுத்து சிறு விவசாயிகளுக்கு நன்மை செய்திருக்கின்ற நமது புரட்சித் தலைவர் அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றும் சிறு விவசாயிகளுக்கு இலவசமாகத் தென்னை நாற்றுகள் அளித்தலும், கரும்பு, வாழை போன்ற பணப்பயிர்கள் பயிரிட ரூ. 100-ம் வெற்றிலைக் கொடிக்கால் பயிரிட ரூ. 500-ம் கொடுத்து சிறு விவசாயிகளை ஊக்குவித்து, அவர்களது நலனைக் காத்து மேம்பாடு அடையச் செய்து இருக்கிறது.



[திரு. அ. மா. பரமசிவன்.]
1978 மார்ச் 8]

2 லட்சம் டன் அரிசி உற்பத்தியும் 1 லட்சம் டன் சிறு தானிய
உற்பத்தியும் உயர் விளைச்சல் ரகங்கள் பயிரிடுவதன் மூலம் நிச்சய
மாகக் கிடைக்குமென நமது அனைத்திந்திய அண்ணா திராவிட 40
முன்னேற்றக் கழக அரசு திட்டம் கொடுத்திருக்கிறது.
ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் புதிய நெல் ரகங்களைப்
பயிரிட்டு உற்பத்தியைப் பெருக்குவதோடு குறிப்பாக தண்ணீர்
கிடைக்காத பகுதியில் வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய நெல்
ரகங்களைப் பயிரிட நமது அரசு மேற்கொண்டு உற்பத்தியைப்
பெருக்க நல்ல திட்டங்களை அறிவித்துள்ளதை நான் பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன். நெல் விளைச்சலைக் குறைவைப் பரு
வத்தில் அதிகம் பாதிக்கக்கூடிய புகையான் என்ற பூச்சியைக்
கட்டுப்படுத்தி உற்பத்தியைப் பெருக்கவும் திட்டமிடப்பட்
டுள்ளது.

எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதிகரித்து தற்
போதுள்ள எண்ணெய்ப் பற்றாக்குறையை நீக்க, புதிய
மணிலாப் பயிர் இரகங்களான டி.எம்.7, டி.எம்.9 டி.எம்.10 மற்றும்
கே. 4, சூரியகாந்தி பயிரிடுவதின் மூலமும் கிட்டத்தட்ட 2.8
லட்சம் டன் எண்ணெய் வித்துக்கள் கிடைக்க வழி செய்யும்
வகையிலே இந்த அரசு திட்டம் தீட்டியுள்ளது.

சர்க்கரை உற்பத்தியைப் பெருக்க நமது மாநிலத்தில், நோய்
தாக்காத நல்லபல கரும்பு இரகங்களைப் பயிரிட்டு ஏக்கருக்கு
40 டன் மகசூல் எடுக்கவும் நல்ல திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது.

கோவை, மதுரை, முகவை, சேலம், திருச்சி ஆகிய மாவட்டங்
களில் மானாவாரி இறவைப் பருத்திப் பயிர் செய்வதற்கு பல
நல்ல திட்டங்கள் காணப்படுகிறது. புதுரகப் பருத்தி விதை
களைப் பெருக்கி விவசாயிகளுக்குக் கொடுப்பதோடு பயிர்ப் பாது
காப்புக் கருவிகள் வாங்க 25 விழுக்காடு அரசு மானியமும் தரு
கின்றது.

மேலும், உளுந்து, பயறு, துவரை போன்ற பருப்பு வகை
களின் உற்பத்தியைப் பெருக்க நல்ல திட்டம் தீட்டி, பயறு
வகைகளின் மகசூலை அதிகரிக்க புரட்சித் தலைவர் அரசு நட
வடிக்கை எடுத்துள்ளது.

காய்கறி உற்பத்திப் பெருக்கம், இராசயன உர விநியோகம்,
பயிர்ப் பாதுகாப்பு, முந்திரிப் பயிர் வளர்ச்சித் திட்டம், புகை
யிலைப் பயிர் வளர்ச்சித் திட்டம், பழத்தோட்டப் பயிர்கள்,
வளர்ச்சி பெற பழனிமலை, கொடைக்கானல், நெல்லை, குமரி
மாவட்டங்களில் பல திட்டங்கள் இடம் பெற்றுள்ளன.

மானாவாரிப் பயிர் உற்பத்தியை அதிகரிக்க "Integrated
Dryland Agriculture Development Project" கோவில்பட்டியிலும்,
புதுக்கோட்டையிலும் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது பாராட்டத்

[திரு. அ. மா. பாமசிவன்] [1979 மார்ச் 8

தக்கது. இராமநாதபுரம், சேலம், உதகமண்டலம் ஆகிய இடங்களில் உழவர் பயிற்சி நிலையங்களை நிறுவி அதன் மூலம் விவசாயிகள் புதிய உழவியல் முறைகளைத் தெரிந்து உற்பத்தியைப் பெருக்க ஏற்பாடு செய்துள்ளது.

[பிற்பகல் 12-50].

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் மீன்வளக் கல்லூரி நிறுவப்பட்டுள்ளது. வேளாண்மைப் பல்கலைக் கழகம் 1971-ல் நிறுவப்பட்டுள்ளதிலிருந்து 37 புதிய இரகங்களை உருவாக்கியுள்ளது. இந்த ஆண்டு எட்டு ரகங்களைத் தந்துள்ளது. வேளாண்மை வணிக நிர்வாகத்தில் மேல்பட்டப் படிப்பு, வேளாண்மை விரிவாக்கம், விதைப் பெருக்கம் போன்ற பாடங்களில் கலாநிதி பட்டம் பெற கல்வி வசதி இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பயிர்களுக்கு ஆட்சி செய்தவர்களுடைய பெயர்களையும், குடும்பத்தில் உள்ளவர்கள் பெயர்களையும் வைத்து வந்தனர். அதை மாற்றி ஆராய்ச்சி செய்து இரகங்களைக் கண்டுப் பிடித்தவர்களின் பெயர்களை அல்லது ஆராய்ச்சி நிலையத்தின் பெயர்களை இட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).

<u>திரு. பி. எம். கிருஷ்ணன் :</u> தலைவர் அவர்களே,

'' சுழன்றும் ஏர்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை ''.

என வள்ளுவர் கூறியுள்ளார். இத்தகு சிறப்புடைய வேளாண்மை மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் இங்கே சில வார்த்தைகள் பேச அனுமதித்ததற்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில், முக்கிய தொழிலாக வேளாண்மை இருப்பதும் அத்துறை மூலமே பரவலான வேலைவாய்ப்புகள் கிடைக்கப் பெறுகின்றன என்பதையும் எல்லோரும் அறிவார்கள். அதற்காக இந்த அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து பாசன வசதிகளைப் பெருக்க நல்ல பல திட்டங்களைத் தீட்டியுள்ளதை நான் மனமார வரவேற்கிறேன்.

பொதுவாக இதற்கு முந்தைய அரசுகள் வேளாண்மைக்காக பல திட்டங்கள் தீட்டியிருப்பினும் அவை நாட்டின் முதுகெலும்பான கிராம விவசாயிகளுக்கு நல்ல பலன் கொடுக்கும்படியான, திட்டங்களின் பயன்களை நேரடியாகத் அடைய அவ்வளவாக வாய்ப்புகள் அதிகம் இல்லை என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.



1978 மார்ச் 8] [திரு. பி. எம். கிருஷ்ணன்]

அதற்காகத்தான் நமது மதிப்பிற்குரிய புரட்சித் தலைவரின்
அரசு கிராமப் பகுதியினருக்கும் நலிந்த மக்களுக்கும் முன்னுரிமை
கொடுத்து திட்டங்கள் தீட்டி, வளர்ச்சிப் பணிகளுக்கான நிதி
ஒதுக்கீடுகளைச் செய்துள்ளது, செய்து வருகிறது.

அடுத்து, 1977–78-ம் ஆண்டில் வெள்ளத்தால் பாதிக்கப்
பட்ட நிவாரணப் பணிகளுக்காக அரசால் பல தீவிரமான நட
வடிக்கை எடுக்கப்பட்டு செயலாக்கப்பட்டிருக்கின்றன.

சிறு விவசாயிகள், மற்றும் தாளடிப் பயிர்களுக்கான இலவச
மான நெல்விதைகள் வழங்கப்படுகின்றன.

பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் எவ்விதப் பாகுபாடும் இன்றி
எல்லா விவசாயிகளுக்கும் தமிழ்நாடு முழுவதும் 25 சதவிகித
மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளன.

கரும்பு, வாழை பயிரிட்டிருந்த சிறு விவசாயிகள் மற்றும்
குத்தகைதாரர்க்கு இப்பயிர்களைப் புதுப்பிக்க ஏக்கர் ஒன்றுக்கு
ரூ. 100 வீதம் உதவித் தொகை வழங்கப்படுகிறது. இப்படி
1977–78-ஆம் ஆண்டு சாதனைகளை அடுக்கிக் கொண்டே போக
ம்.

கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்பினைப் பெருக்கும் மண்வளப்
துகாப்புத் திட்டங்களுக்கான முக்கியத்துவம் அளித்து ரூ. 3.34
ாடி நிதி ஒதுக்கியுள்ளது. விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்
ற்காக உழவர் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட உள்ளன.

குறிப்பாக, விவசாய வருமான வரி செலுத்துவோருக்கு வரி
பக்கு வரம்பு ரூ. 5,000-த்தில் இருந்து ரூ. 10,000 ஆக
ர்த்தியுள்ளதையும், கீழ் மட்டங்களிலான வருமான வரியை
றைக்க ரூ. 10,000-க்கு மேலிருந்து ரூ. 15,000 வரையுள்ள
நமானங்களுக்கு 20 சதவிகிதத்தில் இருந்து 15 சதவிகிதம் ஆக
ம், ரூ. 15,000-லிருந்து ரூ. 20,000 வரையுள்ள வருமானங்
ளுக்கு 30 சதவிகிதத்திலிருந்து 20 சதவிகிதமாகவும் குறைத்து
ள்ளதையும் நான் மனமார வரவேற்கிறேன். இதனால் சிறு
ான்மை விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைத்த மாதிரி இருக்கும்.

வயற்காடுகளில் நெற்றிவேர்வை நிலத்தில் விழப் பாடுபடும்
விவசாயிகளுக்காக பலவகை முன்னேற்றத் திட்டங்கள், வளர்ச்சிப்
பணிகள் மேற்கொண்டாலும் இதுவரை முழுமையாகப் பயன்
பெற்று உள்ளார்கள் என நம்மால் கூறிவிட முடியாது. பொது
வாக கிராமீய வளர்ச்சிகளுக்காக விவசாயப் பணிகளுக்காக
ஒதுக்கப்படும் நிதிகள், மானியங்கள் கடைநிலையில் இருக்கும் அந்
தப் பரிதாபத்திற்குரிய விவசாயிகளுக்கு முறையாகப் போய் சேருவ
தில்லை என்பது நாம் பரவலாகப் பார்க்கிற, கண்கூடான உண்மை
என்பதை என்னால் குறிப்பிடாமல் இருக்க இயலவில்லை. இந்த

நிலை மாற்றிட, மாறிட மக்களின், ஏழை மக்களின், கிராம மக்களின் வளர்ச்சியே தனது வாழ்நாளின் பணியாக ஏற்றுள்ள, முழு மூச்சாகக் கொண்டுள்ள வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்களின் ஆட்சி ஆவன செய்து வருவதை, செய்யப்போவதை நான் உளமாறப் பாராட்டுகின்றேன்.

மேலும் இம்மாதிரி நடைமுறையிலுள்ள குறைகளைப் போக்கிட இந்த அரசு தீவிரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வது என் கடமை எனக் கருதுகிறேன்.

அடுத்தபடியாக தர்மபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்பது அனைவருக்கும் தெரியும். கடும் வரட்சி மிகுந்த மாவட்டம் என்பதை இந்த அரசு அறியும். அம்மாவட்டத்தின் வறட்சிப் பணிகளுக்காக மத்திய அரசு ரூபாய் 600 இலட்சத்தை ஐந்தாவது திட்ட காலத்துக்கு ஒதுக்கியுள்ளது. 1977–78-ஆம் ஆண்டில் ரூபாய் 190 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதி எங்கள் மாவட்டத்திற்குப் போதாது என்பதுடன் அதனைக் கணிசமான அளவு உயர்த்திட மத்திய அரசை மாநில அரசு கேட்டுக்கொள்ள வேண்டும் என நான் தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையிலும் அம் மாவட்ட வளர்ச்சியில் எனக்கு அக்கறையும் பங்கும் உள்ளது என்ற முறையிலும் விரும்பிக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

அடுத்தபடியாக, தர்மபுரி மாவட்டம் பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 15.84 இலட்சம் மதிப்பீட்டில் 30 ஹெக்டேர் நிலப் பரப்பை தென்னை வளர்ப்புத் தோப்பாக உருவாக்கத் திட்டம் தீட்டியுள்ளதையும், திராட்சை சாகுபடி செய்வதற்காக தர்மபுரி மாவட்டத்திற்கு ரூ. 24.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து உள்ளதையும் வேளாண்மை இயந்திரங்களைப் பாதுகாக்க ஓசூரில் கூரையுடன் கூடிய கூடத்தைக் கட்டிடத் திட்டம் இடப்பட்டுள்ளதையும், ஓசூர் மாவட்டக் கால்நடைப் பண்ணையில் குதிரை வளர்ப்பதற்கான திட்டமொன்றுள்ளதையும் நான் விரும்பி வரவேற்கிறேன். அத் திட்டங்கள் விரைவினில் செயல்முறைப்படுத்த வேண்டுகின்றேன்.

அத்துடன் தருமபுரி மாவட்டத்தில், என்னுடைய தொகுதியில், பூலாப்பட்டி ஆற்றின் குறுக்கே ரூபாய் 1·2 இலட்சம் செலவில் நீர்த்தேக்கம் கட்டிட முடிவு செய்துள்ள திட்டத்துக்காக, என் தொகுதி மக்களின் சார்பாகவும், குறிப்பாக விவசாயப் பெருமக்களின் சார்பாகவும், நான் அத் தொகுதியின் உறுப்பினர் என்பதை விட ஒரு விவசாயக் குடிமகன் என்பதாலும் மனப்பூர்வமான நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இத் திட்ட ஆக்கப் பணிகளை விரைவில் தொடங்கிட அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.



அடுத்ததாக, தர்மபுரி மாவட்டத்தில் காடுகள் அதிகமாக உள்ளதால் நிறைய மூங்கில்கள் கிடைக்கின்றன. சர்க்கரை ஆலையும் உள்ளதால் கரும்புச் சக்கைகளும் அதிகமாக கிடைப்பதால், ஒரு காகிதத் தொழிற்சாலை ஆரம்பித்திட ஆவன செய்யுமாறு நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியிலுள்ள கம்பைநல்லூரில் சரியான மருத்துவ வசதியில்லை என்பதுடன், அங்கு இதுவரையில் சிறிய மருத்துவமனை கூட நிறுவப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் இதனால் விவசாயிகள் ஏழைகள் வைத்திய வசதிக்காக பல மைல்கள் கடந்து தருமபுரிக்கு வரவேண்டியுள்ளது. ஆகவே அருள்கூர்ந்து அப் பகுதி மக்களுக்காக ஒரு மருத்துவ மனையொன்றை உடனே ஏற்படுத்த ஆவன செய்யுமாறு இந்த அரசினைக் கேட்கக் கடமைப்பட்டுள்ளேன்.

(மணியடிக்கப்பட்டது)

* **திரு. கே. வடிவேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, விவசாய மான்யம், பால்வழங்குத் திட்டங்களுக்கான மானியம் இவற்றின் மீது பேச வாய்ப்புக் கிடைத்தமைக்காக முதற் கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க நான் கடமைப்பட்டுள்ளேன்.

நம்முடைய புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியில் கடந்த நவம்பர் மாதத்தில் தமிழகத்தில் ஏற்பட்ட புயலால் —மிகவும் அதிகமாகப் பாதிக்கப்பட்ட வட்டம் கரூர் வட்டம் என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. அது மட்டுமல்ல, அங்கு ஏறத்தாழ ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாதிக்கப்பட்டது ஒன்று, ஆயிரக்கணக்கான பேர்கள் வீடுகளையும் இழந்து தங்கள் சொந்த உடமைகளையும் இழந்து கஷ்டமான சூழ்நிலையில் மிகவும் துன்பத்தை அனுபவித்தார்கள் என்பதைச் சொல்லிக் கொள்வதோடு, அதற்காக வருத்தப் படவேண்டியவனாக இருக்கிறேன்.

அங்கு பாதிக்கப்பட்ட ஏழைகளுக்கும், விவசாய மக்களுக்கும் புரட்சித் தலைவருடைய ஆட்சியில் ஒரு குடும்பத்திற்கு 200 ரூபாய் வீதமும், அதே நேரத்தில் அவர்களுக்குச் சேலைகளும் வேஷ்டிகளும், எண்ணெய், அரிசி போன்ற பொருட்கள் வழங்கியதையும் நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

அதேபோல், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், பாதிக்கப்பட்ட நிலங்களை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்து, வாழை கரும்பு போன்றவைகள் பாதித்திருந்தால், ஏக்கருக்கு 100 ரூபாய் வீதமும், கொடிக்கால் போன்ற பாதிப்புகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 500 ரூபாய் வீதமும் கொடுத்ததை நான் உண்மையிலேயே பாராட்ட வேண்டியவனாகவும், வரவேற்க வேண்டியவனாகவும் இருக்கிறேன்.

அடுத்து, அங்கு நெல் விதை, மஞ்சள் விதை, போன்றவை இலவசமாகவும், 50 சதவிகிதம் மான்யமாகவும், கொடுத்ததற்காக அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, என்னுடைய கரூர் தொகுதியில் அதிகமாக—தமிழகத்திலேயே—கரும்பு உற்பத்தியாகிறது என்பதை நான் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். எங்களுடைய பகுதியில் புகலூர் டெக்கான் சுகர்ஸ் நிறுவனம் ஒரு சர்க்கரை ஆலையை நிறுவியிருக்கிறது. எங்கள் பகுதியிலுள்ள விவசாயிகள் இந்த கரும்பாலைக்குத்தான் தங்கள் கரும்புகளை அளித்துக் கொண்டிருந்தார்கள். அதில் ஆலை அதிபர்களுக்கும் கரும்பு விவசாயிகளுக்கும் பிரச்னைகள் ஏற்பட்டு போராட்டம் நடைபெற்றபோது, அதற்காக அமைச்சரிடம் அணுகியபோது, அமைச்சர் அவர்கள் ஆலை நிர்வாகத்தினரோடு பேச்சு வார்த்தை நடத்தி, நிர்வாகத்தோடும், விவசாயிகளிடமும் நல்ல முறையில் பேசி போராட்டத்தைத் தவிர்ப்பதற்கு முயற்சி செய்த அமைச்சர் அவர்களுக்கு என் பாராட்டையும், வாழ்த்தையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 1–00]

அடுத்து, இங்கே கரும்பு அதிகம் பயிரிடுவதால், அங்கே அதிக நோய்கள் காணப்படுகின்றது. விவசாயத் துறையை எடுத்துக் கொண்டாலும், கரும்பிலே அதிக நோய்கள் இருக்கின்றன. எனவே, இந்த விவசாயத் துறை மூலம் நமது அரசாங்கம் ஏழை எளிய விவசாயிகளுக்கு எளிதான முறையிலே, விரைவில் மருந்து கிடைக்கக் கூடிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்வது இந்த நேரத்தில் என் கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கரூர் தொகுதியைப் பொறுத்தவரையில் இன்றைக்குத் தமிழகத்திலேயே வெற்றிலை உற்பத்தி செய்கின்ற பகுதி எங்கள் பகுதிதான் என்று நான் சொல்லிக் கொள்வதிலே மிகவும் பெருமைப்படுகிறேன். அது மட்டுமல்ல; வெளி மாநிலங்களுக்கும் என்னுடைய பகுதியிலே இருந்து வெற்றிலை ஏற்றுமதி ஆகின்றது என்பதைச் சொல்லிக் கொள்வதிலே நான் பெருமைப்படுகிறேன்.

அப்படிப்பட்ட அந்தப் பகுதியில், வெற்றிலைக்கு நோய் வருகின்ற நேரத்தில், அங்குள்ள விவசாயிகள் இன்றைய தினம் மருந்து கிடைக்காமல் மிகவும் அவதிப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல. புதிய நோய்கள் ஏற்படுகின்றன. அந்த நோய்களைத் தீர்ப்பதற்கு அந்தப் பகுதிகளிலே, கரூர்ப் பகுதியிலே ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்ற வேண்டுகோளை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து, என்னுடைய தொகுதியைப் பற்றிப் பேச வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். பேரவைத் தலைவர் அவர்கள் 2, 3 நிமிஷங்கள் அனுமதிக்க வேண்டும், காரணம், என்னுடைய தொகுதியிலே, சுதந்திரம் பெற்ற ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதைத்தான் இதுவரை பேசினீர்கள்? தொகுதியைப் பற்றி இனிமேல்தான் ஆரம்பிக்கப் போகிறீர்களா? இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

* திரு. கே. வடிவேலு : சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு இருக்கக்கூடிய மிக முக்கியமான பிரச்சினை இந்த நொய்யலாற்றுத் திட்டம். இந்தத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இந்தத் திட்டத்தைப் பற்றி இதுவரையிலே சட்டமன்றத்திலே பலமுறை பேசப்பட்டும், அந்தப் பகுதி மக்கள் இந்த அரசாங்கத்திற்குப் பல பிரதிநிதிகள் மூலமாக மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், இதுவரையிலும் அந்தத் திட்டத்தைப் பற்றிய ஒரு பிரச்சினையும் கிளம்பவில்லை. காரணம் காவேரி ஆற்றின் உப நதிகளிலே எல்லாம் அணைக்கட்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன

ஆனால், காவேரியின் உப நதியான இந்த நொய்யலாற்றில் எந்தவிதமான அணைக்கட்டும் இதுவரை கட்டப்படவில்லை. எனவே, இங்கு அணைக்கட்டு கட்டினால் ஏறக்குறைய 20,000 ஏக்கர் நிலப் பகுதி பாசன வசதி பெறும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, புகலூர் நதி நீரேற்றுப் பாசனத் திட்டத்தை கடந்த அரசு, திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்தது. இந்தத் திட்டம் புதிய தெளிப்பான் முறை என்பதாகும். இந்தத் திட்டம் அப்போது ஏற்றுக் கொள்ளப்படாமையால், அப்போது நிறைவேற்றப்படவில்லை. எனவே, தெளிப்பான் முறையை மாற்றி இந்தத் திட்டத்தைக் கூடிய விரைவிலே கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கடுத்து, நம்முடைய நிதி நிலை அறிக்கையிலே காகித தொழிற்சாலை ஒன்று 100 கோடி ரூபாய்ச் செலவிலே அமைக்கப்பட இருப்பதாக புரட்சித் தலைவர் அவர்கள் சார்பிலே நமது அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்தக் காகிதத் தொழிற்சாலையை அமைப்பதற்காக கல்கத்தாவிலிருந்து தஸ்தூர் கம்பெனி என்ற ஒரு நிறுவனம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வந்து பார்வையிட்டது.

அப்படி பார்வையிட்டது மட்டும் அல்ல. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய புகலூர் சர்க்கரை ஆலையிலே இருந்த

[திரு. கே. வடிவேலு] [1978 மார்ச் 8

கிடைக்கக்கூடிய கரும்புச் சக்கைகள், மோகனூர் சர்க்கரை ஆலை
யிலேயிருந்து கிடைக்கக்கூடிய கரும்புச் சக்கைகள், பெட்டவாய்த்
தலையிலிருந்து கிடைக்கக்கூடிய கரும்புச் சக்கைகள்,
சர்க்கரை ஆலையிலிருந்து கிடைக்கக்கூடிய சக்கைகள், சக்தி
ஆகியவைகளை வைத்துக்கொண்டு ஒரு நல்ல கரும்புச் சக்கைகள்
சாலையை ஆரம்பிக்கலாம் என்று எடுத்துச் காகித தொழிற்
சொன்னார்கள்.

அது மட்டுமல்ல, என்னுடைய பகுதியில் புகளூர் என்னும்
இடத்தையும் தேர்ந்தெடுத்தார்கள். அதற்குக் காரணம்,
அருகிலே காவேரி ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. ரயில்வே
ஸ்டேஷனும் அருகாமையில் இருக்கின்றது. இதுபோன்ற வசதி
களெல்லாம் இருப்பதால், அங்கே இந்த காகிதத் தொழிற்
சாலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, (மணி
யடிக்கப்பட்டது) என்னுடைய உரையை இத்துடன் முடித்துக்
கொள்கிறேன்.

* திரு. ஆனூர் ஜகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே,
வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீது சில கருத்
துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு நான் தங்களுக்கு நன்றி
தெரிவித்துக்கொள்கிறேன்.

உச்சவரம்பு சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்ட உபரி நிலங்கள்
அந்தந்த கிராமங்களிலே இருக்கக்கூடிய ஏழை விவசாயிகளுக்கு
பகிர்ந்தளிக்கப்பட்டு இருக்கிறது. அப்படிக் கொடுக்கப்பட்ட
நிலங்களுக்கான மதிப்புத் தொகையை அந்த மக்களாலே 20
ஆண்டுகளில், 20 தவணைகளில் திருப்பிச் செலுத்த வேண்டு
மென்ற கட்டாயத்தோடு கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரிய
நிலச்சுவான்தார்களிடமிருந்து அப்படி பெறப்பட்ட அந்த நிலங்
கள் கையகப்படுத்துவதற்கு மூன்று ஆண்டுகள் ஆகக்கூடிய ஒரு
சிக்கல் காரணமாக, இந்த மூன்று ஆண்டுகளுக்கான தவணைகளையும்
குத்தகைக்காரர்கள் இந்த 20 ஆண்டுத் தவணையோடுசேர்த்துக்
கட்டச் சொல்லக்கூடிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.
தவணையைய திருப்பிச் செலுத்த முடியாமல் வாடிக் கொண்டி
ருக்கும் ஏழை விவசாயிகள், மேலும் இந்த மூன்று ஆண்டுகளுக்
கான குத்தகை நிலுவைத் தொகையையும் சேர்த்து, இந்தக்
குத்தகைதாரர்களிடமிருந்து வசூலிப்பது என்பது சாத்தியக்
கூறானதல்ல. ஆகவே, இந்தப் பணத்தை வசூலிப்பதற்காக
போடப்பட்டுள்ள நடவடிக்கைகளை ரத்து செய்யவேண்டுமென்று
நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் எடுக்கப்
பட்ட நிலங்கள், உபரி நிலங்களை யார் இதுவரை பயிரிட்டு
வந்தார்களோ, யார் நிலச் சொந்தக்காரர்களாக இருந்தார்
களோ அவர்களுடைய வாரிசுகளுக்கு பினாமியாகக் கொடுக்கப்
பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட உரிமையை ரத்து செய்து



1978 மார்ச் 8] [திரு. ஆனூர் ஜகதீசன்]

அதை ஏழை எளியவர்களுக்குக் கொடுக்க இந்த அரசு முன்வர
வேண்டும்.

புறம்போக்கு நிலங்களை, தரிசு, அனாதீனம் போன்றவற்றை
அங்கிருக்கும் பெரிய நிலச்சுவான்தார்கள் அனுபவித்து வருகிறார்
கள். பல பேர் இதற்கு முன்னால் இருந்த ஆட்சியினுடைய முறை
கேடான நடவடிக்கை காரணமாக வேளாண்மையே தெரியாத
பலருக்கு தரிசு நிலங்கள். புறம்போக்கு நிலங்கள் கொடுக்கப்
பட்டிருக்கின்றன. இந்த அரசு உடனடியாக அதுபற்றி விசா
ரணை நடத்தி அந்த நிலங்களைக் கைப்பற்றி ஏழை விவசாயிகளுக்கு
வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் கோவில்களுக்கும் மடங்களுக்கும் ஏரா
ளமான சொத்துக்கள், நிலங்கள் இருக்கின்றன. அத்தனைக்கும்
முறைப்படி குத்தகை வசூலிக்கப்படுவதில்லை. காரணம் குத்த
கைக்கு அந்த நிலங்கள் அங்கிருக்கிற ஏழை விவசாயிகளுக்குக்
கொடுக்கப்படாமல் பினாமியாக பெரிய பெரிய நிலச்சுவான்தார்
கள் அனுபவித்து வருகிறார்கள். அவர்களிடமிருந்து கட்ட
வேண்டிய பாக்கி குத்தகை பாக்கியை விரைவாக வசூல் செய்ய
வேண்டும். கட்டாமல் விட்டு விட்டால் சம்பந்தப்பட்ட நிலத்தை
அங்கிருக்கும் ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்ளுகிறேன்.

கோவில் நிலங்களை அங்கிருக்கும் நபர்களுக்குக் கொடுப்பதன்
மூலமாக அவர்கள் கட்டுகின்ற தவணைப் பணத்தை ஒருமொத்த
மாக சேர்த்து பிக்செட் டெபாசிட்டில் போட்டு வருவாய்
தரத்தக்க வகையில் செய்யவேண்டும்.

பூதான இயக்கத்தின்போது பூதானத்திற்காக நிலம் கொடுத்
தார்கள். பூதானம் கொடுத்த நபர்களே இன்று அந் நிலங்களைப்
பயன்படுத்துகிறார்கள். அந்த நிலங்களைக் கையகப்படுத்தி
சம்பந்தப்பட்ட ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

புஞ்சைப் பயிர் பயிரிடப்படுகின்ற நிலங்களை ஏழெட்டு ஆண்டு
களுக்கு முன்பு மண்வளப் பாதுகாப்பு, நிலத்தடி நீர் மட்டம் என்ற
வகையில் சீர் செய்வதாகச் சொல்லி காண்டிராக்ட் விட்டு
நிலத்தில் பள்ளங்களை எடுத்து ஏராளமான பணத்தைச் செலவு
செய்திருக்கிறார்கள். அவ்வாறு செலவு செய்யப்பட்ட பணம்
விவசாயிகளிடமிருந்து வற்புறுத்தி வாங்கப்படுகிறது. விவசாயி
களுக்குத் தெரியாமல் செய்யப்பட்ட அந்த விவகாரத்தில்
பணத்தை விவசாயிகளிடமிருந்து வசூல் செய்வதை ரத்து செய்து
அந்தப் பணத்தை வசூலிப்பதை தடுத்து நிறுத்த வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

[திரு· ஆனூர் ஜகதீசன்] [1978 மார்ச் 8

கரும்பு பயிரிடும் விவசாயிகள் ஒவ்வொரு வேலை நிறுத்தத்தின் போதும் வேதனைக்குள்ளாகிறார்கள். கரும்பு பயிரிடும் அத் துணை நபர்களும் மிகுந்த பாடுபட்டு குறைந்த வருவாயில்தான் விவசாயத் தொழிலைச் செய்து வருகிறார்கள். அதிலே வேலை செய்யும் சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்குத் தேவையான ஊதியம் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக கரும்பு அரைக்கிற காலத்தில் திடீர் திடீரென்று வேலை நிறுத்தம் செய்கிறார்கள். வேலை நிறுத்தம் நியாயமானதாக இருந்தாலும்கூட, அதனால் பாதிக்கப்படுகிற விவசாயிகள் பெரிதும் வேதனைப்படுகிறார்கள். அதற்காக விவசாயிகளுக்கு ஆதரவான முறையில், கரும்பு பயிரிடுகிற அந்தப் பெருமக்களுக்கு ஆதரவாக இருக்கும் அதே நேரத்தில் வேலை செய்யும் தொழிலாளர்கள் சார்பாகவும் தனி யாக ஒரு சட்டத்தை ஏற்படுத்தி கரும்பு அரைக்கும் காலத்தில் வேலை நிறுத்தம் செய்யக்கூடாது என்ற சட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்:

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் டிராக்டர்கள் வழங்கப் பட்டன. இப்போது ஓரிடத்தில்கூட பயன்படுத்தவில்லை. உடனடியாக அவை எங்கே இருக்கிறது என்று கண்டுபிடித்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு ஏரியிலும் உள்வாயில், எதிர்வாயில் நீர் பிடிப்பு பகுதிகளில் ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண் டும் அவ்விடம் உழுவதன் காரணமாக அந்த மண் பள்ளத்தில் வந்து சேர்ந்து நீர்ப்பிடிப்பு பாதிக்கப்படுகிறது. அதுபற்றி நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு முன்பு ரெவின்யூ டிபார்ட்மென்ட் டில் இருந்து வந்தது. இப்போது அது ஒவ்வொரு சம்பந்தப் பட்ட துறையிடத்தில் ஒப்படைக்கப்பட்டு விட்டது. ஒப்படைத்த பிறகு ஒரு ஆட்சேபணையைக்கூட நிவர்த்தி செய்யப் படமுடியாத காரணத்தால் அதை மறுபடியும் ரெவின்யூ டிபார்ட் மென்டுக்கு மாற்ற வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அறுவடை செய்த நெல்லைக் கொள்முதல் செய்யவோ, வாங் கவோ ஒருவரும் இல்லாத காரணத்தால் விவசாய மக்கள் அந்த நெல்லை வைத்துக் கொண்டு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார் கள். வாங்கிய கடனைச் செலுத்தவோ, கிஸ்தியைக் கட்டவோ முடியாத நிலையில், தண்டோராப் போட்டு அவர்களுடைய கறவை மாடுகளையும், கால்நடைகளையும் ஜப்தி செய்யக்கூடிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய நெல்லுக்கு உரிய விலை கொடுத்து கொள்முதல் செய்து இந்த ஜப்தி நடவடிக்கையை நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பூச்சி மருந்து தெளிப்பதற்காக அந்தந்த ஊர் தலைவர்களிடத் [illegible] அப்போது ஒப்புதல் பெற்றார்கள். அதற்கும் விவசாயம் [illegible]குடி மக்களுக்கும் எந்த விதச் சம்பந்தமும் இல்லாது



திரு· ஆனூர் ஜகதீசன்

78 மார்ச் 8]

காரணத்திற்காக பூச்சி லைவர்கள் ஒப்புதல் கொடுத்த ஒரே அடிக்கப்பட்டதாகச் சொல்லி ருந்து அடிக்காமலே கூட நிர்பந்திக்கப்படுகிறது. அதை உடனடி ணத்தை வசூலிக்க வேண்டுமென்று விவசாயிகள் சார்பாகக் ாகத் தடுத்து நிறுத்த விடைபெறுகிறேன்: வணக்கம். கட்டுக் கொண்டு

(பிற்பகல் 1-10)

திரு. கா.ந. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று வேளாண்மைத் துறை மானியத்தின் மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்தமைக்காக என்னுடைய நன்றி கலந்த வணக் கத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு விவசாயி கள் காலையில் எழுந்தவுடன் தங்கள் வயல்களுக்குச் சென்று தாங்கள் இட்ட பயிர்களைப் பார்க்கிறபோது எப்படி மகிழ்ச்சியடைகிறார் களோ அதைப்போன்று அவர்கள் நம்முடைய வேளாண்மைத் துறையின் அமைச்சர் அவர்களை அணுகுகிறபோது அவர்களுடைய குறைகளை சிரித்த முகத்தோடு கேட்டுத் தீர்த்துவைக்கின்றபோது அவர்கள் அந்த மகிழ்ச்சியை அடைகிறார்கள் என்பதை சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு கோத்தாரி சர்க்கரை ஆலைக்கு கரும்பு கொடுத்து ந்த விவசாயிகள் 16 வருடங்களாக அங்கே தொல்லைகளை அனுப த்து வந்தார்கள். இன்றைக்கு அமைச்சர் அவர்கள் பேச்சு ார்த்தைகளின் மூலமாக முடித்துக் கொடுத்ததற்காக என் டைய தொகுதியின் விவ்சாயிகள் சார்பாகவும், என்னுடைய ர்பாகவும நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்து, புள்ளம்பாடி வாய்க்காலில் பாசனத்திற்கு உரிய ண்ணீர் தாமதமாகச் சென்ற காரணத்தால் விவசாயிகள் பயிர் ளை அறுவடை செய்யாமல் இருப்பதால் இந்த நிலையிலே மார்ச் ாதம் இறுதி வரையில் பாசனத்திற்கு உரிய தண்ணீரைக் கொடுத்து உதவ வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய நிதி நிலை அறிக்கையிலே ஏரிகளைச் சீர்படுத்து வதற்காக திட்டங்கள் பல போடப்பட்டு பல கோடி ரூபாய்கள் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டங்களின் பிரகாரம் செயல் படவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முன்னால் இருந்த ஆட்சிக் காலத்திலே 18 லட்சம் ரூபாய், 20 லட்சம் ரூபாய் என்று திட்டம் ஒதுக்கப்பட்ட பிறகும் கூட, இதற்கு முன்னே இருந்த தி.மு.க. ஆட்சியிலே 33 லட்சம் ரூபாய் வரையிலும் இந்தத் திட்டங்களுக்காகச் செலவிடச் சொன்னதும் அப்ப இருந்தும் கூட அந்த ஏரிகள் பயனில்லாமல் இருக்கின்றன. ந முடைய அரசு உடனடியாக இதுபற்றி நடவடிக்கை எடுக்கவேண் மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மதிக்காமல், அவர்களது மனக் கொதிப்பைப் பற்றிப் புரியாமல் விவசாயிகள் கவலிப்பாரற்று இருந்தார்கள்.

கிராமப்புறங்களில் விவசாயப் பெருமக்கள் சேற்றில் இறங்கினால் தான் நகர் புறங்களிலுள்ளவர்கள எல்லாம் சோற்றில் கை வைக்க முடியும். கிராமப் புறங்களிலுள்ள விவசாயப் பெருமக்கள், இன்னும் வானம் பார்த்து விவசாயத்தைச் செய்ய வேண்டிய நிலை உள்ளது. பெரியாறு, வைகை பாசனத்திலுள்ள மதுரை, முகவை மாவட்டங்களில் உள்ள ஏராளமான நிலங்கள் போதுமான அளவிற்குத் தண்ணீர் கிடைக்காததால் கதிர் முற்றி செந்நெல் ஆகக்கூடிய நிலையில் கதிர் பதராகும் நிலைமை உள்ளது. ஆகவே, நிலத்தடி நீரை விவசாயிகள் பயன்டடுத்தும் அளவிற்குப் போதுமான நீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

என்னுடைய தொகுதியிலே. குன்னத்தூர், களிமங்கலம் போன்ற பகுதிகளில் விவசாயம் செய்துவிட்ட ஏழை விவசாயிகள் வானத்தைப் பார்க்கிறார்கள். மழை என்று வரும் என்று ஏங்கி கிடப்பதைப் போன்று அதிகாரிகளை அணுகுகிறார்கள். அணைக் கட்டிலிருந்து தண்ணீர் என்று வரும் என்று. ஆகவே, அந்தப் பகுதியில் அறுவடை செய்ய தண்ணீர் திறந்து விட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மூன்றாண்டுக் காலமாக மழைத் தண்ணீர் இல்லாமல் விவசாயம் பாதிக்கப்பட்டு விவசாயிகள் வேதனைக் கண்ணீர் வடிக்கின்றார்கள். எத்தனையோ சோதனைகளைச் சந்தித்து சமாளித்து சாதனை புரிந்து வரும் சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் ஆட்சியில் என்னுடைய தொகுதியிலுள்ள கள்ளந்திரி 11-வது மடை பாசனத்திலும், குன்னத்தூர், அனைஞ்சியூர் பகுதிகளுக்கு தண்ணீர் திறந்துவிடவும் வேண்டுவதற்கு முயற்சி எடுத்துக் கொள்வதோடு, வெள்ளியங்குன்றம், பூதூர், அனைஞ்சியூர் கண்மாய்க்கு தனியாகக் கால்வாய் வெட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஔவை கிழவி அருந்தமிழ்ச் செல்வி சொல்லிச் சென்றதைப் போன்று, 'வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும்' என்பதற்கேற்ப விவசாயிகள் நிலை உயர நெல் விலையை மேலும் உயர்த்திக் கொடுக்க மத்திய அரசை நாட வேண்டுகின்ற நேரத்திலே நெல் விலையைக் குவிண்டாலுக்கு மத்திய அரசாங்கம் அறிவித்த விலையைக் காட்டிலும் கூடுதலாக 17 ரூபாய் அறிவித்ததற்கு விவசாயிகளின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

சிறப்புச் சிறுபாசனத்தின்கீழ் ஏரி குளங்களை தூர் வாரி சீரமைக்க நிதிநிலையில் 4.21 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆகவே



என்னுடைய தொகுதியில் நீண்ட நெடுங்காலமாகத் தூர் வாராமல் இருக்கும் வண்டியூர், தோடனேரி, கீழநெடுங்குளம், குன்னத்தூர், தேனூர், சமயநல்லூர் போன்ற கண்மாய்களைத் தூர்வாரிக் கொடுக்க ஆவன செய்யும்படி வேண்டிக்கொள்கிறேன்.

மேலும், அரசியல் வானிலே அன்று அனல் கக்கிய பிரச்சனையான சமயநல்லூர் அனல் மின் நிலையத்தை விலைகூறி விற்றவர்கள் விலை பேசி விலை வாங்கிச் சென்றதனால் இருந்த மின் நிலையத்தை இழந்து, பறிகொடுத்து, வேலையிழந்த தவிக்கின்ற என் தொகுதி மக்களுக்கு 630 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட அனல் மின் நிலையம் ஒன்றை அரசு அமைக்கும் முயற்சியை என்னுடைய தொகுதியில் விரைவில் ஆரம்பிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழக அரசு மேலும் ஆரம்பிக்க இருக்கும் காகிதத் தொழிற்சாலையை என்னுடைய தொகுதியில் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், கயிறு தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிப்பதற்குப் போதுமான அளவிற்கு மூலப் பொருட்கள் கிடைப்பதால் கயிறு தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் மதுரை பால் பண்ணை ஒன்று உள்ளது. இருந்தும் கிராமப்புறங்களிலுள்ளவர்கள் குளிர் ஊட்டு நிலையம் ஒன்று இல்லாமல் கஷ்டப்படுகின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாக்கியையெல்லாம் இன்னொரு நாளைக்குச் சொல்லுங்கள்.

[பிற்பகல் 1-20.]

* திரு. கோ. தனுஷ்கோடி : தலைவரவர்களே, வேளாண்மைத் துறை நிதிநிலை அறிக்கைமீது எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறிக் கொள்கிறேன்.

வாடிக்கொண்டிருக்கிற பயிர்களுக்கு ஓடிப் பாய்கிற தண்ணீர் எவ்வாறு வளத்தை அளிக்கிறதோ, அதைப்போல, புரட்சித் தலைவர் தலைமையிலே அமைந்திருக்கிற அரசு, வாடிக் கிடக்கின்ற மக்களின் துயரைப் போக்க ஓடி வருகின்ற நிதிநிலை அறிக்கையை அளித்துள்ளது.

எனது முகவை மாவட்டத்தில், மேற்கு தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் ஓடிவருகிற தண்ணீர் வழியிலுள்ள குளங்களில்

ிரம்பும், இடையில் தடுக்கப்படாலிருந்தால். ஆனால், எப்படி வர இடமில்லாமல், இடையே பெரிய நிலக்கிழார்களால் நிறுத்தப் பட்டு, திருப்பிவிடப்படுகிறபடியால், குளங்களுக்குப் போதுமான அளவு தண்ணீர் வந்து சேரவில்லையென்ற நிலையிருக்கிறது. அவ்வாறு இடையில் ஆக்கிரமிப்பு செய்த நிலங்கள் அத்தனையையும் அகற்றி, குளங்கள், கண்மாய்களுக்குத் தண்ணீர் வர ஏற்பாடு செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

அங்குள்ள கண்மாய்கள் சீர்செய்யப்படாமலிருப்பதால், இரு ோக சாகுபடிக்குப் பதிலாக, ஒருபோக பாசனத்திற்குத்தான் அந்த நீர் பயன்படுகிறது. அந்தக் கண்மாய்களையும், குளங்களையும், கருவேல மரங்கள் வைத்துத் தடுத்து வருகின்றனர். அதை எடுத்து, தூர் வாரி, ஆழப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கண்மாய்களுக்கு நீர்பிடிப்பு நிலங்களிலே, பெரிய நிலச் சொந்தக்காரர்கள், 100 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள், மேலும் 20 ஏக்கர், 25 ஏக்கர் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள். அந்த நிலங்களையும் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேற்குத் தொடர்ச்சிமலை நிலங்களில், ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களில், விளைகின்ற விளைபொருள்களை கீழே கொண்டுவரமுடியாமல், இடையிலே பாறைகள் இருக்கின்றன. ஆகவே, அந்த விளைபொருள்கள் வீணாகாமல், கீழே கொண்டுவரப்பட, பாறைகள் அகற்றப்பட்டு, பாதைகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு சங்கங்களிலே, ஏழை மக்களுக்குப் பால் மாடு வாங்கவும், உழவு மாடு வாங்கவும் கடன் வழங்கும் திட்டமிருக்கிறது. ஆனால், அங்கே கூட்டுறவு துறையில், நிர்வாகிகளாக இருக்கிற பெரிய நிலச்சுவான்தார்கள், அந்த ஏழை எளிய மக்களுக்குப் பால் மாடும், உழவு மாடும் கொடுத்தால், விவசாய நிலத்திற்குக் கூலிக்கு ஆட்கள் கிடைக்க மாட்டார்கள் என்ற காரணத்தால், ஏழை எளியவர்களுக்குக் கடன் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே, அப்பேர்ப்பட்ட கூட்டுறவு சங்கங்களில், தாழ்த்தப்பட்ட மக்களையும் ஏழைகளையும் நிர்வாகிகளாக நியமிக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

முகவையிலே உள்ள தேவதானத்தில் அரசுக்குச் சொந்தமான விதைப்பண்ணை 52 ஏக்கர் நிலத்திலேயிருக்கிறது. அந்த விதைப் பண்ணைக்காக மேலும் 30 ஏக்கர், நிலத்தை அரசு எடுக்கிறது. முகவை மாவட்டத்தில் இந்த ஆண்டு ஏற்படுத்தும் உழவர் பயிற்சி நிலையத்தை தேவதானத்தில் ஏற்படுத்தி, இந்த ஆண்டு முகவை மாவட்டத்தில் உழவர் பயிற்சி நிலையம் ஏற்படுத்துவதெனில், அங்கு, பயிற்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். அந்த விதைப் பண்ணையிலே ஒரே ஒரு டிராக்டர்தான் இருக்கிறது. மேலும் ஒரு டிராக்டரை அந்த



விவசாயப் பண்ணைக்கு வாங்கி, ஆயிரக் கணக்கான ஏழை மக்கள் உழுதுகொண்டிருக்கிற கோயில் நிலங்களுக்கு பயன்படுத்தினால், அவர்களுக்கு வழங்கினால், அவர்கள் அந்த டிராக்டர்களைப் பயன் படுத்தி உழவுத் தொழிலிலே பயனடைவார்கள் என்று அரசுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சேத்தூரில் ஒரு மின்நிலையம் அமைக்க, ரூ. 20 இலட்சத்துக்கு – பகரணங்கள் வந்து இறக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், |வற்றைப் பொருத்தாமல் இருப்பதற்குக் காரணம், நில ஆர்ஜிதம் சய்த நிலத்தைத் தனியார் ஒப்படைக்கவில்லையென்பதுதான். ரசு அந்த நிலத்தை எடுத்து, உடனடியாக அந்த லையத்தை நிறுவி, இயக்கினால், அந்தப் பகுதியில் தாராளமாக மின்சக்தி கிடைக்கும் என்று பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து மேற்காகச் செல்கிற நதிகளை இந்திய அரசின் மூலமாக ஒப்பந்தம் ஏற்படுத்தி, கிழக்குப் பகுதிக்குத் திருப்பிவிட்டால், பச்சையாறு, பசுமலை அணைக்கட்டு, அழகர் அணைத்திட்டம் போன்றவற்றால், இராமநாதபுரம் முழுவதற்கும் குடி தண்ணீர் கிடைக்கும். விவசாயத்திற்கும் பயன் படுத்த ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தொகுதியான இராஜபாளையத்தில், சனவரி 31-ந் தேதி ன்று அரசுத் துறையினால் ஒரு விவசாயக் கருத்தரங்கு நடத்தப் பெற்றது. அந்தக் கருத்தரங்கிற்கு முகவை மாவட்டத்தைச் சேர்ந்த பலதரப்பட்ட விவசாயிகள் வந்து, தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கருத்துக்களை அதிகாரிகள் பதிவுசெய்து வந்திருக்கிறார்கள். அப்படிப் பதிவுசெய்து வந்திருக்கிற அத்தனை கருத்துக்களையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலனை செய்து எங்களுடைய தொகுதிக்குத் தேவையான விவசாயத்திற்குத் தேவையான உதவிகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. கி. அப்துல் லத்தீப்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்துள்ள மானியக் கோரிக்கையின்மீது எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

1977-78ஆம் ஆண்டு 5·10 லட்சம் ஹெக்டேராக இருந்த உயர் விளைச்சல் சிறுதானியங்களின் பரப்பு 1978–79-ல் 5·60 லட்சம் ஹெக்டேராக உயர்த்தப்பட்டிருப்பதில் பாராட்டப்பட வேண்டிய முக்கிய அம்சமாகும். கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு கரும்பைப் போன்று இனிப்பான ஒரு செய்தியை நமது அமைச்சர் அவர்கள் இங்கு வெளியிட்டிருக்கிறார்கள். கரும்பு சாகுபடியின் மொத்த பரப்பு 1·45 லட்சம் ஹெக்டேராக இருக்கும் பொருட்டு கூடுதலாக 1,000 ஹெக்டேரில் கரும்பு பயிரிட வகை செய்யப்பட்டிருக்கின்றது.

அதுபோல ஆண்டி ஓடைத் திட்டம், நத்தம்பாரி ஏரித் திட்டம் இவையெல்லாம் அப்படியே இருந்துகொண்டிருக்கின்றன. அவைகளை நிறைவேற்ற நம்முடைய அரசு முயற்சியெடுத்து வேளாண்மையைப் பெருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கிற நேரத்திலே அந்தத் தொழிற்சாலைக்கு எவ்வளவு மின்சாரம் தேவைப்படுகிறதோ அதைவிட விவசாயிகளுக்கு கோடை காலத்திலே பயிர் செய்வதற்கு ஏற்றவகையில் தண்ணீர் கிடைக்குமாறு திட்டமிட்டால் அதற்கு செலவழியும் மின்சாரத்தினால் நாட்டிலே அபிவிருத்தி ஏற்படும். ஒரு தொழிற்சாலைக்குக் கொடுக்கும் மின்சாரத்தைவிட 35 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கின்ற திட்டத்தின் மூலமாகச் செலவிடப்படும் மின்சாரமானது நாட்டிலே நல்ல பொருளாதார வசதிகளை ஏற்படுத்தும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பு, முதுகெலும்பு என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். முன்னாலே இருந்த அமைச்சர் என்னுடைய தொகுதியைச் சேர்ந்தவர் என்றாலும் கூட விவசாயிகளுடைய குறைகளை அவர் கவனிக்கவில்லை, தீர்க்கவில்லை. விவசாயிகள் இந்த நாட்டின் நரம்புகள் என்று சொல்லி அவர்களிடமிருந்து வாக்குகளைத் தான் வாங்கினார்களே தவிர அவர்கள் ஒன்றுமே அவர்களுக்காகச் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகள் இடுகின்ற பயிர்களுக்கு உரிய விலையை அரசாங்கம் அதிகமாக்கிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே புள்ளம்பாடியிலே தொழில் கல்லூரி நிறுவுவதற்காக 60 ஆயிரம் ரூபாய் வசூல் செய்து வைத்திருக்கிறது. அந்தக் கல்லூரிக்காக 40 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. அந்தக் கல்லூரியை உடன் ஏற்படுத்த வேண்டுமென்று பல முயற்சிகள் எடுக்கப்பட்டும், முந்தைய அரசு ஏற்படுத்தவில்லை. அதற்காக வாங்கப்பட்ட புஞ்சை நிலங்கள் பயன் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, நம்முடைய அரசு அந்தக் கல்லூரியை நிறுவுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கோத்தாரி சர்க்கரை ஆலைக்காக 60 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு அது வீணாகக் கிடக்கிறது. அதை அங்கே உள்ள தொழிலாளர்களுக்கு அங்கே தொழிலாளர்கள் கூட்டு செயல் கமிட்டி இருக்கிறது. அவர்கள் மூலமாக அந்த தொழிலாளர் நண்பர்களுக்கு அந்த நிலத்தைக் கொடுத்தால் அவர்கள் தங்கள் குடும்பத்தோடு விவசாயத்தைப் பெருக்க வசதியாக இருக்கும் என்பதை





தெரிவித்து எனக்குப் பேச வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி விடை பெறுகிறேன்.

திரு. சீனி. செல்வராஜ் : மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் வேளாண்மைத் துறை மானியத்தின் மீது எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்தமைக்காக நான் என்னுடைய நன்றியையும் நன்றி கலந்த வணக்கத்தையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

நடந்து முடிந்த தேர்தலில் நாட்டின் நலனைக் கருத்திற்கொண்டு நல்லோரின் இதயத்தில் நர்த்தனமாடும் நல்ல கொள்கையாம், பேரறிஞர் அண்ணாவின் கொள்கையினை அரியணை ஏற்றிட ஆட்சி பீடத்தில் அமர்த்திட அவர்தம் இதயக் கனியாம் புரட்சித் தலைவருடைய ஆட்சி என்று வரும், என்று வரும் என்று ஏங்கிட்ட ஏழைகளுக்கு நல்லதைச் செய்வதற்கு, நன்மைகள் புரிவதற்கு, அண்ணாவின் கட்டளையை அரச கட்டளையாக ஏற்று நிறைவேற்றுவதற்கு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையிலே ஆட்சி அமைந்திருக்கிறது.

இந்த ஆட்சி அமைந்த ஆறு மாத காலத்திற்குள் எத்தனையோ போராட்டங்களைச் சந்தித்து அவைகளைச் சமாளித்து வெற்றி பெற்றிருக்கிறது. இயற்கையின் சீற்றத்தாலும், கடும்புயலினாலும், பெரும் மழையினாலும் பாதிக்கப்பட்டிருக்கும் நேரத்தில் புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் அமைந்த இந்த ஆட்சியின் சார்பில் நாஞ்சிலார் தந்த நிதிநிலை அறிக்கையில் ஏழை எளிய மக்கள், விவசாயப் பெருங்குடி மக்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியப் பெருமக்கள் ஆகியவர்களுக்கு நன்மை தரும் நிலையில் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அதிக நன்மைகள் உள்ளது என்று வரவேற்று வாழ்த்திப் பேசுகின்றேன்.

தாய்ப் பாலுக்கப்பால் தமிழ்ப்பாலாய் வாய்ப்பால் நமக்குக் கிடைத்த வள்ளுவ முப்பாலில் 'தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டு', 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி', 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்', 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' என்ற குறள் பிறந்த தமிழ்நாட்டில் 'கை கட்டி வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் கை கட்டி வாழ்வார்' என்று கூறக் கூடிய அளவிற்கு விவசாயிகள் நிலைமை பரிதாபமாக, படுமோசமாக ஆகிவிட்டது.

அதனால் கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகள் கண்ணீர் விட வேண்டிய நிலைமை இருந்தது. அந்த அளவிற்கு முன்னால் தமிழ் நாட்டை ஆண்ட சர்க்கார் விவசாயிகளின் நிலைமையைக் கவனிக்காமல் இருந்து, கேட்பாரற்ற நிலைமையிலே இருந்தார்கள். விவசாயிகளின் குரலைக் கேட்காமல், அவர்களின் உரிமைக் குரலை